என் வாழ்விலே வந்தீரைய்யா
புது வாழ்வு தந்தீரைய்யா

1. தாய் தன் பாலனை மறந்தாலும்
நான் உன்னை மறவேன் என்றவரே
உள்ளங்கையில் என்னை வரைந்தீரே
எந்தன் மதில்கள் உமக்கு முன்னே

2. இமைப்பொழுதும் என்னை மறந்தாலும்
இரக்கத்தாலே என்னை சேர்த்துக் கொள்வீர்
உந்தன் அன்பை நான் மறப்பேனோ
ஜீவ நாளெல்லாம் பாடிடுவேன்

3. மலைகள் பர்வதங்கள் விலகினாலும்
இரக்கத்தாலே என்னை சேர்த்துக் கொள்வீர்
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
உந்தன் வாக்குகள் மாறாதது

பாடல் - 0840
(C-Min/s.Rock/T-140)

**இயேசப்பா உங்க நாமத்தில்**
இன்றும் அற்புதங்கள் நடக்குது
பேய்கள் ஓடுது நோய்கள் தீருது
பாவங்கள் பறந்தோடுது – 2

உந்தன் வல்லமைகள் குறைந்து போகவில்லை
உந்தன் உயிர்தெழுதல் மகிமை மாறவில்லை

1. துன்பங்கள் தொல்லைகள் வியாதிகள் வறுமைகள்
வந்தாலும் என் இயேசு குணமாக்குவார் –2
விசுவாசம் நமக்குள் இருந்தால் போதும்
தேவமகிமையை கண்டிடுவோம்

2. மந்திரம், சூனியம், செய்வினைக் கட்டுகள்
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
ஆவியானவர் நமக்குள் இருப்பதால்
உலகத்தை நாம் கலக்கிடுவோம்

3. சாத்தானின் சதிகளா பாவத்தின் வாழ்க்கையா
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
துதியின் ஆயுதம் நமக்குள் இருப்பதால்
அசுத்த ஆவியை துரத்திடுவோம்

பாடல் - 0841
(F-Min/70's DISCO/T-125)

**தேவா உம் நாமத்தை பாடி புகழ்வேன்**
ஆனந்தம் ஆனந்தம் – 2
நீர் செய்த நன்மைகள் ஆயிரம்
ஆயிரம் ஆனந்தம் ஆனந்தமே – 2

ஏழைகளின் தேவனே
எளியோரின் இராஜனே
திக்கற்ற பிள்ளைகளின் தேவனே

1. கேரூபீன்கள் சேராபீன்கள்
ஓய்வின்றி பாடி போற்ற
துதிக்கு பாத்திரரே
துதிகளின் மத்தியில் வாசம் செய்திடும்
மகிமைக்கு பாத்திரரே

2. காற்றையும் கடலையும் அடக்கி அமர்த்திய
அற்புத தேவன் நீரே
அக்கினி மதிலாய் நடுவில் வாசம் செய்யும்
அதிசய தேவன் நீரே

3. ஜாதிகள் முழங் கால்கள் முடங்கி பணிந்திடும்
உன்னத தேவன் நீரே
நாவுகள் யாவும் அறிக்கை செய்திடும்
உத்தம தேவன் நீரே

## பாடல் - 0842
## (G-Min/R-6/8/T-125)

**ஆண்டவர் இயேசுவின் நாமத்தில்**
அற்புதங்கள் நடக்குது

நேற்று அல்ல நாளை அல்ல
இன்றே நடக்குது

1. பாவம் செய்த பாவிகள் எல்லாம்
நீதிமானாய் மாறுகின்றாறே - நேற்று

2. கேன்சர் நோய்கள் மறைந்ததே
தீராத நோய்கள் நீங்குகின்றதே - நேற்று

3. மரண ஆவி ஓடுகின்றதே
மதுவின் ஆவி நீங்குகின்றதே - நேற்று

## பாடல் - 0843
## (F-Min/s. Rock/T-130)

**உம்மைப்போல் மாறிட**
உலகம் எல்லாம் சென்றிட - 2
அப்பனே ஆசீர்வாதம்
ஈந்திடும் ஐயா (2)

1. உலகின் பாவம் சுமந்த
உன்னத தேவகுமாரரே
உமது சபையை நடத்த
உமது கிருபை வேண்டுமே - 3

2. நித்தமும் சத்தியத்தாலே
உமது சபையை நடத்திட
சத்திய ஆவியாலே
சாட்சியோடு நடத்துமே - 3

3. கோடா கோடி ஜனம்
உந்தன் சபையில் சேர்ந்திடணும்
மறுரூபமாகிடணும்
மகிமையிலே சேர்ந்திடணும் - 3

## பாடல் - 0844
## (D-Maj/DISCO/T-130)

**கர்த்தாவே தேவர்களில் உமக்கொப்பானவர் யார்**
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பானவர் யார்

உமக்கொப்பானவர் யார், உமக்கொப்பானவர் யார்
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பானவர் யார்

1. செங்கடலை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களை நடத்தி சென்றீர்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
என்றும் வாக்கு மாறாதவர் - உமக்கொப்பானவர்

2. தூதர்கள் உண்ணும் உணவால்
உந்தன் ஜனங்களை போஷித்தீரே
உம்மைப் போல யாருண்டு
இந்த ஜனங்களை நேசித்திட - உமக்கொப்பானவர்

3. கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களின் தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம்
இன்னும் அற்புதம் செய்திடுவீர் - உமக்கொப்பானவர்

## பாடல் - 0845
(DM/6/8/R-slow Rock/T-95)

**என் தலையெல்லாம் தண்ணீராகனும்**
என் கண்கள் எல்லாம் கண்ணீராகனும்
நான் கதறி ஜெபித்திட
கண்ணீரோடு ஜெபித்திட

1. கழுதைகூட தன் எஜமானை அறியும்
என் நேசத்தின் ஜனங்கள்
உம்மை மறந்தார்கள்
இதோ அழியும் என் ஜனங்களுக்காய்
தினம் அழுது ஜெபிக்கணுமே - என்

2. தேடிச் சென்றேன் ஒருவனை
தேசம் எங்கும் திறப்பில் நிற்க
ஒருவனை கானேன் என்றீர்
இதோ அடியேன் நான் இருக்கின்றேன்
ஜெப ஆவியை ஊற்றிடுமே - என்

3. தேசம் எல்லாம் இரத்த வெள்ளம் கண்டு
என் ஜனங்கள் சிதறி சிறையானார்கள்
ஐயோ அழகான என் தேசமே
நீ அலங்கோலமானது ஏன்? - என்

## பாடல் - 0846

**மேலே வானத்திலும் கீழே பூமியிலும்**
அதிகாரம் நமக்கு உண்டு
அவர் நாமம் இயேசு ராஜா ஆமென்
அவர் நாமம் இயேசு ராஜா

1. புறப்பட்டுப் போங்கள் என்றார்
புறப்படுவோம் தேவ ஜனமே
ஜனங்களை ஆதாயம் செய்து
அவரண்டை நடத்திடுவோம்

அதிகாரம் நமக்கு தந்தார் இயேசு
அதிகாரம் நமக்கு தந்தார்

2. உலகின் இறுதி நாள் வரைக்கும்
நம்மை நடத்திடுவார்
வாக்குகள் உறைத்த நம் தேவன்
வார்த்தையை காத்திடுவார்

3. பரிசுத்த ஆவியில நிறைந்து
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்
உலகம் முழுவதும் சென்று
ஊழியம் செய்திடுவோம்

## பாடல் - 0847
## (D-Min/Jazz pop/T-125)

**கர்த்தரை நம்பு உன் வாழ்வு மாறும்**
கர்த்தரை நம்பு உன் வாழ்வு செழித்திடும்
கவலை எல்லாம் கர்த்தரின் மேலே
வைத்திடு நீ கலங்காதே

எல்லா ஜாதிகளிலும்
உன்னை உயர்த்துவார்

1. கர்ப்பத்தின் கனியும் நிலத்தின் கனியும்
ஆசீர்வாதம் அடைந்திடுமே
கூடையும் மா பிசையும் தொட்டியும்
ஆசீர்வாதம் அடைந்திடுமே

2. போகும் போதும் வருகின்ற போதும்
ஆசீர்வாதம் உன்னை தொடரும்
சத்துருவை என்றும் துரத்தும் தேவன்
உனக்கு முன்னே சென்றிடுவார்

3. கையிடும் எல்லா வேலைகள்
அனைத்திலும் கர்த்தரின்
ஆசீர் உனக்கு உண்டு
பூமியில் வாழும் ஜாதிகள் எல்லாம்
உனக்குள் ஆசீர் பெற்றிடுவார்

## பாடல் - 0848
## (E-Min/6/8 soul/T-140)

**துதிப்பதற்கு சோர்ந்து போகாதே**
நீ ஜெபிப்பதற்கு மறந்து விடாதே
சமயம் வாய்த்தாலும் வாய்காகவிட்டாலும்
தேவ செய்தியை சொல்லிடு
சமயம் வாய்த்தாலும் வாங்க்காவிட்டாலும்
தேவனுக்கு நன்றி சொல்லிடு

1. ஜெபிக்கின்ற மனிதன் தேவனிடமிருந்து
நல்ல பதில் கொண்டு வருவான்
ஜெபிப்பதினால் தேவனிடமிருந்து
ஜெயத்தை கொண்டு வருவான்

2. போதிக்கின்ற மனிதன் இயேசுவிடமிருந்து
நல்ல செய்தி கொண்டு வருவான்
போதிப்பதினால் தன் தேவனுக்காய்
ஆத்தும அறுவடை செய்வான்

3. துதிக்கின்ற மனிதன் பரத்தில் இருந்து
தேவனையே கொண்டு வருவான்
துதிக்கும் போது சிறையிருப்பை
உன் தேவன் உடைத்தெறிவார்

## பாடல் - 0849

**மகிழ்ச்சியின் நாளிதே மகிழ்ந்திட வாருமே**
ஆனந்தம் ஆனந்தம் பாடி போற்றிடுவோம்

1. விண்ணின் தூதர்களே
மண்ணின் மனுமக்களே
மீட்பர் உதித்தாரென்று
மகிழ்ந்து பாடுங்களேன்
வாழ்வில் பிறந்தார் இயேசு - ஆனந்தம்

2. மரண இருள் நீங்கிட
மகிழ்ச்சி தொனி கேட்கட்டும்
துயர நிலை மாறிட
இறைவன் அருள் கூறட்டும்
இரட்சண்ய நாளிதே - ஆனந்தம்

3. சாத்தானின் வல்லமை
உடைந்திடும் நாளிதே
சாப பாவங்களும்
அகன்றிடும் நாளிதே
இரட்சிப்பின் நாளிதே - ஆனந்தம்

## பாடல் - 0850
## (DM/6/8/R-slow Rock/T-115)

**எனக்காகவே யாவையும்**
செய்து முடித்தீர் நன்றி நன்றி ஐயா
என் பாவங்கள் யாவுமே
சுமந்து கொண்டீரே நன்றி நன்றி ஐயா

நினைப்பதற்கும் ஜெயிப்பதற்கும்
அதிகமாக தருபவரே

1. நான் எனது பிள்ளைக்கு
நல்ல ஈவை கொடுக்கிறேன்
பரம பிதா அதை பார்க்கிலும் கொடுத்திடுவாரே

2. அன்றாடம் வேண்டிய ஆகாரம் தாருமே
தீமை என்னை அணுகாமல்
காக்கும் தேவனே

3. ஆபிரகாமை அழைத்தீரே
ஆசீர்வாதம் கொடுத்தீரே
அதுபோல் என்னையும் ஆசீர்வதியும்

## பாடல் - 0851

**தூய ஆவியை ஊற்றுங்கப்பா**
அபிஷேகத்தால் நிரப்புங்கப்பா

1. எதிரியின் சேனையை எதிர்த்து நின்று
என் இயேசுவின் நாமத்தை உயர்த்தணுமே

தூய ஆவியை ஊற்றுங்கப்பா
அபிஷேகத்தால் நிரப்புங்கப்பா

2. எலியாவைப் போல் நான் ஜெபிக்கணுமே
பூமியில் அக்கினியை இறக்கணுமே

3. சுவிசேஷ பாரத்தில் நிறையணுமே
ஆத்தும அறுவடை செய்யணுமே

4. உந்தனின் வருகை நாள் வரைக்கும்
சாட்சியாக நான் வாழணுமே

## பாடல் - 0852
(D-Maj/Euro Beat/T-123)

**கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே**
துதி மகிமைக்கெல்லாம் என்றென்றும் பாத்திரரே
உந்தன் நாமம் உயர்த்தியே பாடி ஆராதிப்பேன்

ஆராதனை ஆராதனை உந்தன் நாமம்
உயர்த்தியே பாடி ஆராதிப்பேன்

1. மகத்துவமும் பேர் புகழும்
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும்
மேன்மைப்படுத்த உம்மால் ஆகுமே

2. ஐசுவரியமும் ஆனந்தமும்
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் உயர்த்திடவே
உம்மால் ஆகுமே - ஆராதனை

3. சத்தியமும் ஜீவனுமே
உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் விடுவித்திட
உம்மால் ஆகுமே - ஆராதனை

## பாடல் - 0853

**சமாதான பிரபுவாம் வல்லமையின் தேவன்**
அதிசயமானவர் நித்திய பிதா

1. நித்தியானந்த ஏக சக்கராதிபதியாம்
சம்பூரண ஆசீர்வாதம் தருபவராம்
யோசனையில் மிக பெரியவராம்
செயலில் மகத்துவமானவராம்

2. ஆலோசனை கர்த்தர் அல்பா ஒமேகாவாம்
அதரிசனமான வல்ல தேவனாம்
மகிமையின் தேவன் யாக்கோபின் தேவன்
சர்வ வல்ல சேனைகளின் கர்த்தராம்

3. கர்த்தத்துவம் தோளின் மேல் உள்ளவராம்
புகழ் கனம் மகிமைக்கு பாத்திரராம்
சத்துருவுக்கு எதிராய் கொடி ஏற்றியே
சதாகாலம் கிருபை செய்பவராம்

## பாடல் - 0854

**காலை மாலை நேரத்தில்**
கர்த்தர் இயேசு பாதத்தில் –2
கருத்தாய் ஜெபித்திடுவோம்
நாம் என் நேரமும் துதித்திடுவோம்

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம் அகமகிழ்வோமே
இயேசு நாமம் சொல்லி சொல்லி துதித்திடுவோமே – 2

1. கூப்பிடும் யாவருக்கும்
இயேசு அருகினில் இருப்பாரே – 2
விடுதலை தந்திடுவார்
புது பெலத்தால் நிரப்பிடுவார் – 2

2. துயரங்கள் நீக்கிடுவார்
ஆறுதல் அளித்திடுவார் – 2
கவலையை மாற்றிடுவார்
அவர் கரத்தால் அணைத்திடுவார் – 2

3. இயேசுவை நோக்கி பார்த்து
பிரகாசம் அடைந்தேனே – 2
வெட்கம் எனக்கில்லையே
எந்தன் நெருக்கங்கள் மாற்றினாரே – 2

## பாடல் - 0855

**துதி துதி துதி துதி என் மனமே**
துள்ளி துள்ளி துள்ளி துள்ளி பொங்கு உள்ளமே

ஆத்துமாவின் நேசராம் இயேசுவை பாடு
அளவில்லா ஆனந்தம் கொண்டு ஆடிடு

1. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரை
தரிசித்து தரிசித்து மகிழலாம் வா - 2
வாக்குகளை பற்றிக் கொண்டு பாதம் ஓடி வா
வருஷத்தை நன்மையினால் முடி சூட்டுவார் - 2

2. யெகோவா ராபாவில் சுகமாய் இரு
யெகோவா நிசியினால் வெற்றி முழங்கு - 2
யெகோவாயீரேவால் நிறைவாய் இரு
யெகோவா ஷம்மாவினால் நிரம்பி வழி - 2

3. கிருபையும் சத்தியமும் நிறைந்தவரே
இரக்கமும் உருக்கமும் மிகுந்தவரே - 2
எனக்காக சிலுவையில் மரித்தவரே
உயிர்த்தெழுந்த வல்லமையால் நிரப்புகிறீர் - 2

## பாடல் - 0856

**இயேசு வாழ்வு கொடுக்கிறார்**
இன்றே அவரிடம் நம்பி வா

1. ஆறுதல் இல்லையோ
அலைந்து தவிக்கின்றாயோ
ஆறுதல் தந்திடும் இயேசு
அன்பாய் உன்னை அழைக்கிறார்

அழைக்கிறார் அழைக்கிறார் இயேசு உன்னை அழைக்கிறார்

2. சமாதானம் தருவாரே
கவலைகள் நீக்குவாரே
தேவைகள் சந்திக்கும் இயேசு
அன்பாய் உன்னை அழைக்கின்றாரே

3. வியாதியின் கொடுமையே
நம்பிக்கை இழந்தாயோ
சுகத்தை தந்திடும் இயேசு
அன்பாய் உன்னை அழைக்கின்றாரே

## பாடல் - 0857
(EM/R-GUITAR Ballad/T-90)

**வந்தருளும் தூய ஆவியே**
தந்தருளும் தேவ மகிமையே
ஆவியே தூய ஆவியே - 2

1. அபிஷேகியும் தூய ஆவியே
அனல் மூட்டும் தூய ஆவியே

2. ஆட்கொள்ளும் தூய ஆவியே
அரவணைக்கும் தூய ஆவியே

3. ஊற்றிடுமே தூய ஆவியே
உணர்த்திடுமே தூய ஆவியே

4. வழி காட்டும் தூய ஆவியே
வழி நடத்தும் தூய ஆவியே

**பாடல் - 0858**
**(D-Maj/waltz/T-146)**

***பல்லவி***

**லேசான காரியம் எதுவும் லேசான காரியம்**
பெலன் உள்ளவன், பெலன் அற்றவன்
பெலன் உள்ளவன், பெலன் இல்லாதவன்
யாராய் இருந்தாலும் உதவிகள் செய்வது
லேசான காரியம், உமக்கது லேசான காரியம்

***சரணங்கள்***

1. மண்ணைப் பிசைந்து மனிதனைப் படைப்பது லேசான காரியம் -2
மண்ணான மனிதர்க்கு மன்னாவை தருவது லேசான காரியம் -2

2. கூழாங் கல்லாலே கோலியாத் வீழ்ந்தது லேசான காரியம் -2
ஆழ்கடல் மீனதில் வரிப்பணம் பெறுவது லேசான காரியம் -2

3. கற்பாறை போலே கடல் மேல் நடப்பது லேசான காரியம் -2
கற்சாடி நீரையும் கனிரசமாக்குதல் லேசான காரியம் -2

4. குருடரின் கண்களை வார்த்தையால் திறப்பது லேசான காரியம் -2
மரித்த மனிதரை உயர்த்திட செய்வதும் லேசான காரியம் -2
- என் இயேசுவுக்கு லேசான காரியம்

5. உயிரற்ற சடலத்தை உயிர் பெற செய்வது லேசான காரியம் -2
தீராத நோய்களை வார்த்தையால் தீர்ப்பதும் லேசான காரியம் -2
உமக்கது, லேசான காரியம் - பெலன் உள்ளவன்

## பாடல் - 0859

(F-Min/R-16 Beat/T-90)

**நீர் என் சொந்தம் நீர் என் பக்கம்**
துன்ப வேளைகளில் - ஆழியின்
ஆழங்களில் ஆனந்தம் நீர் எனக்கு
சூரைச் செடியின் கீழிலும்
உம் சமுகம் என்னைத் தேற்றுமே

1. வறண்ட பாலைவன வாழ்க்கையில்
தாகத்தால் என் நாவு வறண்டாலும்
ஆகாரின் பிள்ளையின் அழுகுரல் கேட்டவர்
என் தாகம் தீர்க்கும் வல்லவர்

2. நெரிந்த நாணலை முறியாதவர்
மங்கியெரியும் திரியை அணையார்
புலம்பலை களிப்பாய் மாற்றியவர்
விடுதலை தேவன் இயேசு பரன்

## பாடல் - 0860

**மாறிடாதோர் நேச மீட்பர்**
மாற்றுவார் உன் வேதனை
பாவத்தாலும் நோயினாலும்
வருந்துவானேன் நம்பி வா

நம்பி வா நீ நம்பி வா
இயேசு உன்னை அழைக்கிறார்

1. லோக மாந்தர் கைவிடுவார்
துரோகம் கூறி தூற்றுவார்
தூய இயேசு மெய் நேசமாய்
துன்பம் தீர்ப்பார் நம்பி வா

2. வல்ல மீட்பர் கண்ணீர் யாவும்
வற்றிப் போகச் செய்குவார்
வற்றா ஜீவ ஊற்றாய் உன்மேல்
என்றும் ஊறும் நம்பி வா

## பாடல் - 0861

**துதி செய்யும் வேளை**
உந்தன் பாதம் எனக்கு வேண்டுமே

என் ஆத்மரே என் நேசரே
உம்மை பாடி போற்றுவேன் - துதி

1. காலங்கள் வீணானதே
நான் செய்த வினைகளால்
காலங்கள் மா சமீபமே
கல் நெஞ்சம் கரையாதோ - துதி

2. வாழ்வும் தாழ்வும் சதமில்லை
பொன்னும் பொருளும் நிலையில்லை
தந்தையின் அடைக்கலம் உண்டு
மந்தையில் சேராயோ - துதி

3. பெற்ற தாயும் தந்தையும்
உன்னை கைவிட்டாலும்
மாறாத தேவ கரம் உன்னை
வாரி அணைக்குதே - துதி

## பாடல் - 0862
(F-Maj/Piano Ballad/T-95)

**அல்லேலூயா அல்லேலூயா – 2**
அல்லேலூயா அல்லேலூயா – 2

1. யெகோவா ஷாலோம் அல்லேலூயா
யெகோவா நிசியே அல்லேலூயா
யெகோவா யீரே அல்லேலூயா
பரிசுத்த பிதாவே அல்லேலூயா

2. சாரோனின் ரோஜாவே அல்லேலூயா
லீலி புஷ்பம் அல்லேலூயா
அழகில் சிறந்தவரே அல்லேலூயா
இயேசு கிறிஸ்துவே அல்லேலூயா

3. தேற்றரவாளனே அல்லேலூயா
பெலத்தின் ஆவியே அல்லேலூயா
சத்திய ஆவியே அல்லேலூயா
பரிசுத்த ஆவியே அல்லேலூயா

## பாடல் - 0863

**சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே**
பரலோக சந்தோஷமே
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
அவர் சமூகத்தில் சந்தோஷமே
இயேசுவின் சமூகத்தில் சந்தோஷமே

1. கர்த்தரின் யுத்தத்தில் நாம் நிற்கும்போது
கலங்கிடத் தேவையில்லை
கைகளை உயர்த்தி ஆராதித்தால்
பெரும் வெற்றியைத் தந்திடுவார்

2. போராட்டம் பாடுகள் நம் வாழ்வில் வந்தாலும்
சோர்ந்திடவே வேண்டாம்
உலகத்தை ஜெயித்தவர் நம்முடன் இருக்கையில்
ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கே

## பாடல் - 0864

**எங்கள் பிதாவே**
இயேசு இரட்சகரே
தூய ஆவியானவரே
உம்மைத் தொழுகிறோம்

1. சர்வத்தையும் படைத்தவர் நீர்தானே
சாவாமை உள்ளவர் நீர்தானே - 2
ஆதியும் அந்தமும் நீர்தானே - 2
ஆராதனைக்குரியவர் நீர்தானே - 2

2. சர்வ வல்ல தேவன் நீர்தானே
சாரோனின் ரோஜா நீர்தானே
சேனைகளின் கர்த்தர் நீர்தானே
திரியேக தேவனும் நீர்தானே

3. அதிசயமானவர் நீர்தானே
ஆலோசனைக்கர்த்தர் நீர்தானே
மகிமையின் இராஜா நீர்தானே
மாறாத நேசர் நீர்தானே

## பாடல் - 0865

**இயேசுவின் இரண்டாம் வருகை**
அதி வேகமாய் நெருங்கி வருதே
ஆயத்தமாகிடுவோம்
அன்பர் இயேசுவை சந்திக்கவே

1. நித்திரையை விட்டு நாம் எழும்புவோம்
நம் நீதியின் சூரியன் வருகிறார்
இரட்சிப்பின் வஸ்திரம் காத்துக் கொள்வோம்
நம் இரட்சகர் வருகிறார்

2. பரிசுத்தமாய் நம்மை காத்துக் கொள்வோம்
நம் பரிசுத்தர் வருகிறார்
நீதியாய் நியாயந்தீர்த்திடவே
நியாயாதிபதியாக வருகிறார்

3. மரணத்தை வென்ற நம் ஆண்டவர்
மணவாளனாகவே வருகிறார்
கறைதிரையற்ற சபையினை
தம்மோடு சேர்க்கவே வருகிறார்

## பாடல் - 0866
## (G-Min/EURO Beat/T-120)

**இயேசுவே ஆண்டவர்**
இயேசுவே ஆண்டவர்

1. வானம் பூமி யாவையும்
தம் வார்த்தையாலே படைத்தார்
சர்வ சிருஷ்டியின் நாயகன்
சர்வ லோகத்தின் ஆண்டவர்

2. நம் இயேசுவால் கூடாதது
ஒன்றுமே இல்லையே
அவரையே நம்புவோம்
என்றென்றும் ஆராதிப்போம்

3. இயேசு நீதி நிறைந்தவர்
சமாதான காரணர்
சர்வ வல்லவர்
சகல அதிகாரம் உடையவர்

4. நம் இயேசுவைப் போலவே
வேறே இரட்சகர் இல்லையே
நம் இரட்சண்ய கன்மலை
அவரே நம் தஞ்சமே

### பாடல் - 0867

**இயேசுவே! கல்வாரியில்**
என்னை வைத்துக்கொள்ளும்;
பாவம் போக்கும் ரத்தமாம்
திவ்விய ஊற்றைக் காட்டும்.

*மீட்பரே! மீட்பரே!*
*எந்தன் மேன்மை நீரே;*
*விண்ணில் வாழுமளவும்*
*நன்மை செய்குவீரே.*

2. பாவியேன் கல்வாரியில்
ரட்சிப்பைப் பெற்றேனே
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே.

3. ரட்சகா! கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக.

4. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே;
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே.

### பாடல் - 0868
### (E-Maj/16 Ballad/T-110)

**திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா**
கேட்டு உம்மை அண்டினேன்
இன்னும் கிட்டி சேர என் ஆண்டவா
ஆவல் கொண்டிதோ வந்தேன்

இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்கொள்ளுமேன்
பாடுபட்ட நாயகா
இன்னும் கிட்ட கிட்ட சேர்த்துக்கொள்ளுமேன்
ஜீவன் தந்த இரட்சகா

2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்
உம்மை வாஞ்சையோடெந்தன்
உள்ளத்தில் நாடி தேடச் செய்யும்



அட்டவணை

3. திருப்பாதத்தில் தங்கும்போதெல்லாம்
பேரானந்தம் காண்கின்றேன்
உம்மை நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய்ச் சந்தோஷ மாகிறேன்

4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்

## பாடல் - 0869
## (F-Min/EURO/T-120)

**உயிரோடு எழுந்தவர் நம் தேவனே**
பாதாளம் ஜெயித்தவர் நம் இயேசுவே

ஜெயித்தார் மரணம் ஜெயித்தார்
உயிர்த்தார் உயிரோடெழுந்தார் - 2

1. கல்லறை திறந்திட
காவலர் நடுங்கிட
சாத்தானை ஜெயித்தவர்
உயிருடன் எழுந்தாரே - ஜெயித்தார்

2. வல்லமை உடையவர்
சாபத்தை முறித்திட
நோய்களை தீர்த்திட
வீரமாய் எழுந்தாரே - ஜெயித்தார்

3. புதுபெலன் அடைந்திட
சாட்சியாய் மாறிட
அபிஷேகம் செய்பவர்
மகிமையாய் எழுந்தாரே - ஜெயித்தார்

## பாடல் - 0870
## (A-Maj/Party pop/T-125)

**நன்றி சொல்லி பாடுவேன்**
நாதன் இயேசுவின் நாமத்தையே
நன்றியால் என் உள்ளம் நிறைந்தே
நாதன் இயேசுவைப் போற்றிடுவேன்

நல்லவரே வல்லவரே
நன்மைகள் என் வாழ்வில் செய்பவரே

1. கடந்த நாட்கள் முழுவதும் என்னை
கண்ணின் மணி போல் காத்தாரே
கரத்தைப் பிடித்துக் கைவிடாமல்
கனிவாய் என்னை நடத்தினாரே

2. துன்பங்கள் எந்தன் வாழ்வினிலே
சூழ்ந்து என்னை நெருக்கினாலும்
கன்மலை தேவன் என்னோடு இருக்க
கலக்கமில்லை என் வாழ்விலே

3. மேகங்கள் மீது மன்னவன் இயேசு
வேகம் வருவார் ஆனந்தமே
கண்ணீர் துடைத்து பலனைக் கொடுக்க
கர்த்தாதி கர்த்தர் வருகின்றாரே

## பாடல் - 0871
(E-Min/Original pop/T-130)

**நன்றி நிறைந்த இதயத்தோடு**
நாதன் இயேசுவை பாடிடுவேன்
நன்றி பலிகள் செலுத்தியே நான்
வாழ்நாள் எல்லாம் உம்மை ஆராதிப்பேன்

1. நான் நடந்து வந்த பாதைகள்
கரடு முரடானவை
என்னை தோளில் தூக்கி சுமந்தார்
அவர் அன்பை மறப்பேனோ

என் இயேசு நல்லவர் என் இயேசு வல்லவர்
என் இயேசு பெரியவர் என் இயேசு பரிசுத்தர்

2. என் போக்கிலும் வரத்தினிலும்
என் இயேசுவே பாதுகாப்பு
என் கால்கள் சறுக்கிடும் நேரம்
அவர் கிருபை தாங்குதே - என் இயேசுவே

3. என் கரம் பிடித்த இயேசு
என்னை கைவிடவே இல்லை
அவர் நேசம் எந்தன் இன்பம்
அவர் நாமம் போற்றுவேன் - என் இயேசுவே

## பாடல் - 0872

**பரிசுத்த ஆவியே வாருமையா**
அபிஷேகத்தால் என்னை நிரப்புமையா
புது எண்ணையால் புது பெலத்தால்
பாத்திரம் நிரம்பி வழியட்டுமே

1. ஆத்தும ஆதாயம் செய்திடவே
அழியும் மக்களை மீட்டிடவே
அனுப்பும் தேவ ஆவியினை
உம் அற்புதம் இன்று விளங்கட்டுமே

2. சிம்சோனுக்கு நீர் இறங்கினீர்
புதிய பெலத்தை கொடுத்தீரே
சோர்ந்து போன ஊழியரே உன்னை
உயிர்ப்பிக்கச் செய்யும் அபிஷேகமே

3. உலர்ந்த எலும்புகள் உயிரடைய
உன்னத ஆவியை அனுப்பினீரே
சபைகள் வளர காலூன்றி நிற்க
எழுப்புதல் இன்று அனுப்பிடுமே

## பாடல் - 0873

**ஆராதிக்கின்றோம் உம்மை ஆராதிக்கின்றோம்**
இரட்சக தேவா உம்மை ஆராதிக்கின்றோம்

1. மாட்சிமை உள்ளவரே
எல்லா மகிமைக்கும் பாத்திரரே
மாறிடாத என் நேசரே
துதிக்குப் பாத்திரரே

2. என் பெலவீன நேரங்களில்
உந்தன் பெலன் என்னைத் தாங்கினதே
ஆத்துமாவைத் தேற்றினீரே
கிருபை கூர்ந்தவரே

3. வாழ்க்கையின் பாதையிலே
எனக்கு உதவின மா தயவே
கெஞ்சுகிறேன் கிருபையினை
உமக்காய் வாழ்ந்திடவே

## பாடல் - 0874
## (G-Min/R6/8 Blues/T-125)

**கரம் பிடித்து உன்னை என்றும் நடத்திடுவார்**
கண்மணிப் போல் உன்னை என்றும் காத்திடுவார்

கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்குண்டு பயந்திடாதே

1. படுகுழியில் நீ விழுந்தாலும்
பரத்திலிருந்து வந்து உன்னைத் தூக்கிடுவார்
அக்கினியில் நீ நடந்தாலும்
எதுவும் உன்னை சேதப்படுத்த முடியாதே - கலங்கிடாதே

2. ஆறுகளை நீ கடந்தாலும்
அவைகள் என்றும் உன் மீது புரள்வதில்லை
காரிருளில் நீ நடந்தாலும்
பாதைக்கு வெளிச்சமாக இருப்பாரே - கலங்கிடாதே

3. சுழல் காற்று உன்னை சூழ்ந்தாலும்
அவர் கிருபை உன்னை என்றும் தாங்கிடுமே
சோதனையில் நீ அமிழ்ந்தாலும்
சோர்ந்திடாதே உன்னை அவர் அணைப்பாரே - கலங்கிடாதே

## பாடல் - 0875
## (G-Maj/DISCO/T-120)

**எந்தன் கன்மலை ஆனவரே**
என்னை காக்கும் தெய்வம் நீரே
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே

ஆராதனை உமக்கே - 4

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என் நெஞ்சம் மகிழச் செய்தீர் - 2
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே - ஆராதனை

2. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரைய்யா - 2
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயம் இல்லையே - ஆராதனை



அட்டவணை

3. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
என்றென்றும் மகிழச் செய்தீர்
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே - ஆராதனை

## பாடல் - 0876
## (C-Maj/slow Rock/T-120)

**யெகோவா நிசியே எந்தன்**
ஜெயக் கொடியே உமக்கே ஆராதனை
யெகோவா யீரே தேவைகளை
சந்தீப்பீர் உமக்கே ஆராதனை

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா - அல்லேலூயா - 2

1. ஜெபத்தின் காரணரே ஆராதனை
ஜெபிக்க வைப்பவரே ஆராதனை
ஜெபமே சுவாசமே ஜெபமே தூபமே
ஜெபத்தின் வீரரே ஆராதனை

2. அழகில் சிறந்தவரே ஆராதனை
அணைக்கும் ஆறுதலே ஆராதனை
அன்பின் இராஜனே ஆத்ம நேசரே
சரோனின் ரோஜாவே ஆராதனை

## பாடல் - 0877

**எக்காலும் இயேசுவே சகாயராயிரும்**
அன்பான சத்தத்தால் என் ஏக்கம் நீங்கிடும்

எந்நாளும் நீரே வேண்டும் இந்த நாளும் வேண்டும்
நீர் என்னை நோக்கிப் பாரும் பேரன்பரே!

1. எப்போதும் இயேசுவே இப்பாவியோடிரும்
தீயோனின் சோதனை ஓயாமல் விலக்கும் - எந்நாளும்

2. எக்காலும் இயேசுவே இக்கட்டு வாழ்விலும்
அன்பாகத் தங்குவீர் என் நீச நெஞ்சிலும் - எந்நாளும்

3. எப்போதும் இயேசுவே இப்பேதைக் கிரங்கும்
மெய்ஞானம் சத்தியம் செய் நன்றி போதியும் - எந்நாளும்

4. எக்காலும் இயேசுவே எக்கேடும் நீக்குமேன்
காருண்ய நாயகா நீர் என்னை ஆளுமேன் - எந்நாளும்

## பாடல் - 0878

**அல்லேலூயா ஆராதனை**
துதித்துப் பாடி இயேசுவை போற்றி
என்றும் ஆராதிப்பேன் - 2

1. சேனைகளின் கர்த்தர் நீரே
யாக்கோபின் வல்லவரே - 2
அடைக்கலமானவரே அதிசயமானவரே
உமக்கே ஆராதனை - 2

2. நன்மைகளின் ஊற்று நீரே
தீமைகளை வென்றவரே - 2
வல்லமையானவரே மாட்சிமை உள்ளவரே
உமக்கே ஆராதனை - 2

3. வாக்குத்தத்தம் செய்தவரே
வாக்கினைக் காப்பவரே - 2
மேன்மையானவரே மகிமையானவரே
உமக்கே ஆராதனை - 2

## பாடல் - 0879
## (C-Maj/slow Rock/T-120)

**நம்புவேன் இயேசுவை நம்புவேன்**
இயேசு என் பெலனும் மீட்புமானார்
இயேசு என் கன்மலை கோட்டையுமானார்

1. நேசிப்பேன் இயேசுவை நேசிப்பேன்
ஒப்பற்ற என் செல்வம் இயேசு தானே
ஓயாமல் அவர் புகழ் பாடிடுவேன்

2. வாழுவேன் இயேசுக்காகவே
ஆவியின் வல்லமையில் நிரம்பிடுவேன்
அல்லேலுயா துதி பாடி ஆர்ப்பரிப்பேன்

3. வெல்லுவேன் சாத்தானை வெல்லுவேன்
சாத்தானின் சேனைகளை வென்றிடுவேன்
வெற்றி கீதம் பாடி பாடி மகிழ்ந்திருப்பேன்

## பாடல் - 0880
## (G3/4/R-waltz/T-145)

**உம் பிரசன்னம் என்ன ஆனந்தம்**
உம் சமூகம் எந்தன் வாஞ்சை - 2

ஸ்தோத்திரம் என் தேவனே
ஸ்தோத்திரம் என் தூயோனே - 2

1. அபிஷேகத் தைலம் ஆண்டவரே
அடியோர்களுக்கு அருளுமே - 2
பகைவர் மத்தியில் மகிழ்ந்திருக்க - 2
பரிசுத்த தேவா அபிஷேகியும்

2. மாமிசமான யாவர் மேலும்
உன்னத ஆவியை ஊற்றிடுமே - 2
தாகமுள்ள அடியார்மேல் - 2
ஊற்றிடுமே உந்தன் அபிஷேகமே

3. அபிஷேகத்தால் என்னை நிரப்பிடும்
தேவா உம் அன்பினால் பெலப்படுத்தும் - 2
உம் சித்தம் போல் நடத்திடும் - 2
உந்தன் பாதையில் வழிநடத்தும்

## பாடல் - 0881
## (F-Min/Oriental pop/T-125)

**சந்தோஷம் என்னுள்ளில் சந்தோஷம்**
என் இயேசு வந்ததால் சந்தோஷம்
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் - 2

1. பாவம் போக்கினதால் சந்தோஷம்
என் சாபம் நீக்கினதால் சந்தோஷம்

துதித்து பாடிடு கை தட்டி ஆடிடு
எல்லோரும் கொண்டாடுவோம்

2. கண்ணீரை மாற்றினதால் சந்தோஷம்
எனக்கு களிப்பை தந்ததால் சந்தோஷம்

3. என்னையும் அழைத்தார் சந்தோஷம்
புதிய வாழ்வை கொடுத்தார் சந்தோஷம்

4. பரலோகம் செல்வேன் சந்தோஷம்
என் பரனோடு வாழ்வேன் சந்தோஷம்

## பாடல் - 0882

**இகபரமதிலே அகபரனவரை**
துதிக்க வைத்ததால் ஸ்தோத்திரம்
அற்ப நாவிலே அற்புதர் அவரை
பாட வைத்ததால் ஸ்தோத்திரம்

அல்லேலூயா ஸ்தோத்திரம் - 4

1. பார்வோன் சேனையை கடலில் மூழ்கடித்த
தேவாதி தேவனை துதியுங்கள்
எரிகோ கோட்டை இடித்து தகர்த்திய
ராஜாதி ராஜனை துதியுங்கள்

2. அக்கினி நடுவே உலாவி தம்மை
வெளிப்படுத்தினவரை துதியுங்கள்
தண்ணீரின் மேலே நடந்த அற்புதர்
இயேசு ராஜனை துதியுங்கள்

3. வார்த்தையினாலே அகிலம் படைத்த
அனாதி தேவனை துதியுங்கள்
மண்ணினாலே மனிதனைப் படைத்த
மன்னாதி மன்னனை துதியுங்கள்

## பாடல் - 0883
(G-Min/DISCO hands/T-125)

**எல்லையில்லா உந்தன் அன்பால்**
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட
மன்னவா உமக்கு நன்றி - இயேசு

1. கள்ளமில்லா உந்தன் அன்பினால்
எனக்குள்ளதெல்லாம் மறந்தேன்
கல்லும் முள்ளும் எந்தன் வாழ்வில்
என்னை நடத்தின விதம் தன்னை
மறவேன் நான் மறவேன்

2. தொல்லை மிகுந்த உலகில்
இல்லை ஆறுதல் எனக்கு
அல்லல் நிறைந்த எந்தன் வாழ்வில்
என்னை அணைத்திட்ட விதம்
தன்னை மறவேன் நான் மறவேன்

3. சொல்லி முடியாது நாதா
உம் அன்பு அள்ளி தீராது தேவா
உள்ள உறுதியுடன் நானும்
உம் சமூகம் சேரும் வரை துதிப்பேன்
நான் துதிப்பேன் என்றென்றும் துதிப்பேன்

**பாடல் - 0884**
**(F-Min/6/8 soul/T-100)**

**எங்களைக் கடந்து போகாதீங்க**
தகப்பனே நீங்க கடந்து போனா
கலங்கிப் போவோம் தகப்பனே

உங்க கிருபை தான் எங்களை தாங்கணும் - 2
உங்க சமூகம் தான் எங்களை நடத்தணும் - 2

1. பகலில் மேக ஸ்தம்பம்
இரவில் அக்கினி ஸ்தம்பம்
இஸ்ரவேல் ஜனங்களை
நடத்தினதல்லவோ
எங்களை நடத்திடும்
எங்கள் அன்பு தெய்வமே
இப்போது வழி நடத்த வாரும் என் ராஜனே

2. நண்பர் என்னை மறந்திடலாம்
நம்பினோரும் கைவிடலாம்
பெற்றோரும் வெறுத்திடலாம்
உற்றாரும் என்னை துரத்திடலாம்
நம்பிக்கையின் நங்கூரமே
ஆபத்தில் என் கேடகமே
அரணாண கோட்டையும் நீர்
காத்திடும் என் துருகமும் நீர்

3. எத்தனையோ நிந்தனைகள்
தாங்கொண்ணா அவமொழிகள்
பக்தன் எந்தன் பாதையை
பதற வைத்த படு குழிகள்
அத்தனையும் தாங்கிடுவேன்
அப்பா நீர் என்னோடிருந்தால்
தேற்றரவாளனே தேற்றிட வாருமையா



அட்டவணை

## பாடல் - 0885

**வான மண்டல பொல்லாத சேனைகள்**
எரிந்து சாம்பலாகிடும் நேரமே
ஜெபத்தின் வல்லமை ஜெபத்தின் வல்லமை
பூதங்களை எரித்து சாம்பலாக்கிடும்
ஆ... ஆ... அல்லேலூயா – 2

1. நுகங்களை முறிக்கும் வல்லமை
கட்டுகளை அறுத்திடும் வல்லமை
நோய்களை விரட்டும் பேய்களை துரத்தும்
தெய்வீக வல்லமை இறங்கட்டும் ஆ... ஆ...

2. சாத்தானை துரத்திடும் வல்லமை
அவனை மின்னலைப் போல்
கீழே தள்ளும் வல்லமை
பாவங்களை போக்கி சாபங்களை நீக்கும்
பரலோக வல்லமை இறங்கட்டுமே
ஆ... ஆ... அல்லேலூயா

3. சிங்கத்தின் மேல் நடந்திடும் வல்லமை
வலு சர்ப்பத்தையும் மிதித்திடும் வல்லமை
எத்தனை என்னையே
உத்தமனாய் மாற்றி
சித்தம் செய்யும் வல்லமை இறங்கிடுமே
ஆ... ஆ... அல்லேலூயா

## பாடல் - 0886
(E2/4/R-Blue grass/T-125)

**இன்று கண்ட எகிப்தியனை காண்பதில்லை**
இன்று கண்ட துன்பம் இனி வருவதில்லை
வாதை உந்தன் கூடாரத்தை அணுகிடாது
உம் பாதம் கல்லில் இடறாது

1. செங்கடல் பிளந்து வழி கொடுக்கும்
யோர்தான் இரண்டாக பிரிந்து விடும்
எரிகோ தூளாக இடிந்து விழும்
கர்த்தர் தெய்வம் என்று முழங்கிடுவாய்

2. நோய்கள் உன்னை நெருங்குவதில்லை
பேய்கள் உன்னை அணுகுவதில்லை
யாக்கோபுக்கு விரோதமான மந்திரமில்லை
இஸ்ரவேலுக்கெதிரான குறியுமில்லை

3. மலைகளை மிதித்து நொறுக்கிடுவாய்
குன்றுகளை தவிடு பொடியாக்குவாய்
சேனைகளின் தேவன் உன்னோடு இருக்கும் போது
மனித சக்தி உன்னை ஒன்றும் செய்யாது

## பாடல் - 0887
## (E-Min/HIP groove/T-95)

**காலையில் தோத்திர கீதம்**
இந்த வேளையில் வேதத்தின் தியானம்
மாலையில் சங்கீத ராகம்
எங்கள் மன்னவன் இயேசுவைப் பாடும்

1. வாழ்நாளில் ஒன்றைக் கூட்டித் தந்து
என்னை வாழ வைத்தீரே ஸ்தோத்திரம்

2. வேடனின் கண்ணிக்கு தப்புவித்து
என்னை சிறகால் மூடிக் காத்தீர் ஸ்தோத்திரம்

3. ஊண் உடை தந்து ஆதரித்து
எனக்கு உதவி செய்தீரே ஸ்தோத்திரம்

4. பலவித நன்மைகள் தந்து
என்னை பலவானாக்கினீர் ஸ்தோத்திரம்

## பாடல் - 0888
## (F-Min/Mambo/T-115)

**தேனிலும் இனிமையே இயேசுவின் நாமமே**
தெளி தேனிலும் மதுரமே
அதற்கிணையில்லை உலகிலே

1. கூனரை நிமிரச் செய்யும்
குருடரை பார்க்கச்செய்யும்
கேளாத செவிடரை கேட்கச் செய்யும்
மாறாத நல் நாமம் இயேசுவின் நாமம்

2. காணக் கிடைக்காத தங்கம்
அவர் வெண்மையும் சிவப்புமான தேவன்
தலைத்தங்க மயமான தேவன் -2
இந்த தரணியில் இணையில்லா இயேசுவின் நாமம்

3. ஆகாரம் தரும் அதிமதுரம்
உன் சரும வியாதிகளை தீர்க்கும் நல் உதிரம்
கலங்கிய உள்ளங்களைத் தேற்றும் -2
ஜீவ கானானாம் பரலோகம் கொண்டு நம்மை சேர்க்கும்.

### பாடல் - 0889

**அக்கினி அக்கினி அக்கினி**
உன்னத தேவனின் அக்கினி
பரமதிலிருந்து பூமியில் இறங்கின அக்கினி
பீடமதிலே பற்றி எரிகின்ற அக்கினி

1. பரலோக அக்கினி பரிசுத்த அக்கினி
தெய்வீக அக்கினி தேவனின் அக்கினி

2. மோசே கால முட்செடி அக்கினி
எலியா கால பலிபீட அக்கினி

3. ஆவியின் அக்கினி அபிஷேக அக்கினி
எரிகிற அக்கினி இயேசுவின் அக்கினி

### பாடல் - 0890

**மேசியா மேசியா மேசியா இயேசு ராஜா**
ஓசையுள்ள கைத்தாளத்தோடு
இசையுள்ள மேளதாளத்தோடு
ஆசையுடன் நான் பாடும் பாட்டு
அல்லேலூயா அல்லேலூயா...

1. வரப் போகும் ராஜா மேசியா
வந்து விட்ட ராஜா மேசியா - 2
உயிர்த்தெழுந்த ராஜா மேசியா - 2
நம்மை வருகையில் சேர்த்திடும் மேசியா - 2 ஓசை

2. மேகங்களின் மீதே மேசியா
ராகதாளத் தொனியோடே வருகிறார் - 2
காற்றின் செட்டைகளுடன் மேசியா - 2
நம்மை மார்போடு அணைத்திட வருகிறார் - ஓசை

3. அன்பே உருவான மேசியா
நம்மை ஆளுகின்ற தெய்வம் மேசியா - 2
ஆத்ம மணாளன் மேசியா - 2
என்னை அரவணைக்கும் நேசர் மேசியா - 2

**பாடல் - 0891**
**(F-Min/pop flenco/T-110)**

**அற்புத இயேசுராஜனே உத்தம மணாளனே**
நீரே என் ஆறுதல் ஓ... ஓ... நீரே என் ஆறுதல் - 2
என் கோட்டை என் துருகம்
நான் நம்பினவர் என் அடைக்கலம் -4

1. கனவிலும் மறவேன் நீர் செய்த நன்மைகள்
நனவிலும் மறவேன் நீர் செய்த அதிசயங்கள் - 2
என் இராஜா என் ரோஜா
என் தெய்வம் என் இயேசு - 4

2. நேற்றும் இன்றும் என்றும் மாறா தேவன்
நான் போற்றிப் பாடும் சர்வ வல்ல தேவன் - 2
என் அன்பர் என் இன்பர்
என் நண்பர் என் இயேசு - 4

3. ஒருவராய்ப் பெரிய காரியங்களைச் செய்பவர்
இருளில் இருந்து புதையலைக் கொண்டு வருபவர் - 2
நீர் பெரியவர் துதிக்குப் பாத்திரர்
எனக்கு உரியவர் என் இயேசு - 4

**பாடல் - 0892**
**(E-Min/country Ballad/T-125)**

**வாருங்க என் நேசரே**
வயல் வெளிக்குப் போவோம்
அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை
உமக்கு கனியாய் கொடுப்பேன்

1. ஆராதனையில் கலந்து கொள்வேன்
அபிஷேகத்தால் நிறைந்திடுவேன்
உம்மை துதித்து துதித்து
தினம் பாடி பாடி தினம் நடனமாடி மகிழ்வேன்



அட்டவணை

2. நேசத்தால் சோகமானேன்
உம் பாசத்தால் நெகிழ்ந்து போனேன்
உம் அன்பு கடலிலே தினமும் மூழ்கியே
நீந்தி நீந்தி மகிழ்வேன்

3. நீர் செய்த நன்மைகட்காய்
என்ன நான் செலுத்திடுவேன்
ரட்சிப்பின் பாத்திரத்தை
என் கையில் ஏந்தி ரட்சகா உம்மைத் தொழுவேன்

## பாடல் - 0893
## (DM6/8/R-slow Rock/T-100)

**சீறிவரும் புயலினிலும் கர்த்தாவே**
உம் சிரித்த முகம் தெரியுதய்யா கர்த்தாவே
மாறி வரும் வாழ்விலும் கர்த்தாவே
உம் மலர்ந்த முகம் தெரியுதய்யா கர்த்தாவே

காற்றடிக்குது கடல் பொங்குது
அலை பாயுது புயல் அடிக்குது
கர்த்தரின் கரம் என்னை தாங்குது
ஆனால் கர்த்தரின்...

1. பாடுகள் மத்தியிலும் கர்த்தாவே
உம் பாச முகம் தெரியுதய்யா கர்த்தாவே
வியாதி படுக்கையிலும் கர்த்தாவே
உம் விரித்த கரம்
அணைக்குதய்யா கர்த்தாவே

2. ஆபத்து நேரத்திலும் கர்த்தாவே
உம் அழகு முகம்
தெரியுதய்யா கர்த்தாவே
கண்ணீர் கவலையிலும் கர்த்தாவே
உம் கனிந்த முகம் தெரியுதய்யா கர்த்தாவே

## பாடல் - 0894
## (F-Min/DISCO/T-120)

**கிருபாசனபதியே**
உம் கிருபைகள் தர வேணுமே
ஏழையின் புகலிடமே
பக்தர்களின் மறைவிடமே

1. உந்தனின் பாதம் பணிந்தால்
முட்கள் கூட பூவாகும்
சிங்கத்தின் கெபி கூட
இன்ப வீடாய் மாறிடும்

2. வேகத்தை நாம் சுமந்தால்
சத்திய வேதம் நம்மை சுமக்கும்
பாதைக்கு வழி காட்டும்
சோதனையில் ஜெயம் கொடுக்கும்

3. சந்தோஷ விண்ணொளியே
சாந்தத்தின் சொரூபியே
பொறுமைக்கு அதிபதியே
என் அருமை இரட்சகரே

பாடல் - 0895
(C-Min/6/8soul/T-95)

**என்ன எனக்கு இல்லாமற் போனாலும்**
உம் கிருபை எனக்கு போதுமய்யா
அன்னம் தண்ணீர் ஆகாரம்
இல்லாமற் போனாலும்
மகிமை எனக்கு போதுமய்யா
என் இயேசு நாதா

1. சுற்றத்தாரும் உற்றத்தாரும்
என்னை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லையே
தாய் மறந்தாலும் தந்தை மறந்தாலும்
உள்ளங்கையில் என்னை வரைந்தீரே
உம் மகனாய் மாற்றி விட்டீரே

2. சிங்க குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாய் கிடக்கும்
உம்மை நம்பினோருக்கு
குறைவு இல்லையே
எளியவனை நீர் மறப்பது இல்லை
நம்பினோரை கைவிடுவதில்லை
அவன் உம்மை விட்டு விலகுவதில்லை

3. உயர்வே ஆனாலும் தாழ்வே ஆனாலும்
அன்பை என்னில் பிரிப்பதில்லையே
மரணமே ஆனாலும் ஜீவனே ஆனாலும்
நீரின்றி எவருமில்லை
உம் துணையின்றி வாழ்வு இல்லையே

## பாடல் - 0896
## (A-Min/country ballad/T-90)

**ஜெபிக்க ஜெபிக்க மனம் புத்தம் புதிய**
நல்ல இருதயமாய் மாறும்
துதிக்க துதிக்க மனம் பாரம் நீங்கி
நம் துக்கமெல்லாம் தீரும்
கவலையெல்லாம் நீங்கும்
கண்ணீர் எல்லாம் மறையும்
கழுகு போல் புது பெலனடைந்து
நம்மை பெலவானாய் மாற்றும்

1. இடைவிடா ஜெபத்தினால்
வரும் தடைகளை தகர்த்திடலாம்
நாம் கருத்துடன் ஜெபிப்பதினால்
நம் கண்ணீரை துடைத்திடலாம்
ஊக்கமான ஜெபம் ஏக்கங்கள் நீக்கிடும்
வெற்றியை தந்திடும்
புது மனிதனாக்கி நல் கிருபைகள் தந்து
மகிமையில் சேர்த்திடும்
பெலவானாய் மாற்றிடும் சுகமதை தந்திடும்

2. ஜெபத்தின் வல்லமையால்
நாம் சாத்தானை வென்றிடலாம்
துதியின் வல்லமையால்
பெரும் சதிகளை முறித்திடலாம்
ஜெபிக்கிற மனிதன் வெற்றியை பெறுவான்
தோல்விக்கு அஞ்சிடான்
கரடு முரடான வாழ்வைக் கூட
இலகுவாய் கடந்திடுவான்
கலங்கி நின்றிடான் கர்த்தரை மறந்திடான்

3. வேதம் சத்தியம் நமக்கு விடுதலை நிச்சயம்
நமக்கு விடுதலை நிச்சயம்
ஆவியின் பாடல்கள்
நம்மை ஆற்றி தேற்றிடும்
கட்டுகள் உடைக்கும் கவலைகள் தீர்க்கும்
கண்ணீரை துடைத்திடும்
நித்திய சத்திய சுத்த மகத்துவ
வழிதனை காட்டிடும்
வேதமே தீபம் ஜெபமே ஜெயம்

**பாடல் - 0897**

**இந்த நாளை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்**
நல் வாழ்வு தந்த இறைவனுக்கு ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் உமக்கு ஸ்தோத்திரம்

1. நல்ல ஆராதனை தந்ததாலே ஸ்தோத்திரம்
ஆடிப்பாடி மகிழச் செய்தீர் ஸ்தோத்திரம்
(சபையை) சத்தியத்தால் நிரப்பினதால் ஸ்தோத்திரம்
பொல்லாத சத்துருவை விரட்டினதால் ஸ்தோத்திரம்

2. அன்பின் ஆவி எனக்குத் தந்தீர் ஸ்தோத்திரம்
சந்தோஷத்தால் நிரப்பினதால் ஸ்தோத்திரம்
(ஆவியின்) கனிகளாலே நிரப்பினதால் ஸ்தோத்திரம்
நல்ல மனிதனாக வாழ வைத்தீர் ஸ்தோத்திரம்

3. ஆவியிலே நிறைவு தந்தீர் ஸ்தோத்திரம்
அபிஷேகத்திலே நிரப்பினதால் ஸ்தோத்திரம்
என்னை பரிசுத்தமாக்கினதால் ஸ்தோத்திரம்
எனக்கு பரலோகத்தில் இடம் தந்தீர் ஸ்தோத்திரம்

**பாடல் - 0898**
**(F2/4/R-DISCO hands/T-115)**

**யாக்கோபு என்னும் சிறு பூச்சியே**
நீ ஒன்றுக்கும் கலங்கி விடாதே
இஸ்ரவேலின் சிறு கூட்டமே
நீ எதற்கும் பயந்து விடாதே

உன்னை உண்டாக்கினவர்
உன்னை சிருஷ்டித்தவர்
உன் முன்னே நடந்து செல்கிறார்
தீங்கு உன்னை ஒன்றும் செய்யாதே

1. அழைத்தவர் கைவிடுவாரோ இல்லை
தெரிந்தவர் விட்டிடுவாரோ இல்லை
பேர் சொல்லி அழைத்த தேவன்
உன்னை மகிமைப்படுத்திடுவார்

2. பெலவீனன் ஆவதில்லை இல்லை
சுகவீனன் தொடங்குவதில்லை இல்லை
சாத்தான் உன்னை ஜெயிப்பதில்லை
சாபம் உன்னை அணுகுவதில்லை

3. வியாதிகள் வருவதில்லை இல்லை
வாதைகள் தொடர்வதில்லை இல்லை
உன் ஆண்டுகள் முடிவதில்லை
அவர் கிருபையும் விலகுவதில்லை

## பாடல் - 0899

**கோடி கோடி நன்மைகள்**
பெற்றதை நினைத்திடுவேன்
ஆடிப்பாடி அகமகிழ்ந்து
அன்பரைத் துதித்தடுவேன்

1. அன்பை எனக்கு தந்ததால்
அறிவை எனக்கு தந்ததால்
கிருபை எனக்கு தந்ததால்
மகிமையில் என்னை நடத்தியதால்

2. வாழ்வு எனக்கு தந்ததால்
தாழ்வில் என்னை நினைத்ததால்
உள்ளம் நிறைந்த துதியுடன்
உன்னதர் உம்மை புகழ்ந்திடுவேன்

3. உன்னதர் உந்தன் மறைவிலே
வல்லவர் செட்டைகளின் நிழலிலே
ஏற்ற காலத்தில் உயர்த்திடும்
அற்புதர் கரத்தில் அடங்கிடுவேன்

## பாடல் - 0900
## (D-Min/6/8 soul/T-125)

**சாத்தானுக்கு சவால் விடும் சந்ததி நாங்க**
சேனைகளின் தேவனின் போர் வீரர்கள் நாங்க-2

சவாலே சமாளி சாத்தானே நீ ஏமாளி-(2)
நாங்க பவுலைப்போல் சவால் விடுவோம் சவாலே - சாத்தானுக்கு

1. சாவுக்கு ஏதுவான எதுவும் ஒன்றும் செய்வதில்லையே
ஆவியானவர் எங்களோடு பயம் இல்லையே
சவால் சவால் சவால் சவால் சவாலே-நாங்க
தாவீதைப்போல் சவால் விடுவோம் சவாலே - சாத்தானுக்கு

2. சாத்ராக் மேஷாக் ஆபத்நேகோ ஆவி எனக்குள்ளே
ஏழு மடங்கு எரியும் சூளை எனக்குப் பயமில்லை
சவால் சவால் சவால் சவால் சவாலே-நாங்க
தானியேல்போல் சவால் விடுவோம் சவாலே - சாத்தானுக்கு

3. பாலியத்தின் இச்சைகளுக்கு விலகி ஓடியே
எங்கள் வாலிபத்தை இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்-2
சவால் சவால் சவால் சவால் சவாலே-நாங்க
யோசேப்பைப்போல் சவால் விடுவோம் சவாலே - சாத்தானுக்கு

4. என் இயேசுவாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்
என் இயேசுவாலே நான் ஒரு மதிலைத் தாண்டுவேன்
சவால் சவால் சவால் சவால் சவாலே-நாங்க
இயேசுவைப் போல் சவால் விடுவோம் சவாலே - சாத்தானுக்கு

## பாடல் - 0901
## (E-Maj/DISCO hands/T-130)

**நான் ஆராதிக்கும் தேவன் இயேசு**
என்னை தப்புவிக்க வல்லவர்
அவர் ஜீவனுள்ளவர் வல்லமையுள்ளவர்
நேற்றும் இன்றும் மாறதவர்

அல்லேலூயா ... அல்லேலூயா

1. எரியும் சூளையே ஏழு மடங்கு எரிந்திடு
என் தேவன் தப்புவிக்க வல்லவர் (2)
சிங்க கெபியே என்னை பட்சிக்க வந்திடு
என் தேவன் தப்புவிக்க வல்லவர் (2)

2. யோர்தான் நதியே என் முன் வந்திடு
உன்னை பிளந்து நடத்த தேவன் வல்லவர் (2)
எரிகோ கோட்டையே தடையாய் நின்றிடு
உன்னை இடித்து நொறுக்க தேவன் வல்லவர்

3. பொல்லா சாத்தானே என்னை எதிர்த்து நின்றிடு
உன்னை விரட்டி அடிக்க தேவன் வல்லவர்
வறுமை வியாதியே என்னை தாக்க வந்திடு
என்னை விடுவித்து காக்க தேவன் வல்லவர்

## பாடல் - 0902
## (D-Maj/6/8Beat/T-16)

**மகிழ்ச்சியோடு துதிக்கிறோம்**
மனம் மகிழ்ந்து துதிக்கிறோம்
மன்னவனே இயேசு ராஜா
மனதில் பூத்து மணம் வீசும் ரோஜா
இயேசு ராஜா சாரோன் ரோஜா

1. நாற்றமாக இருந்த என்னை வாசமாக மாற்றினீரே
பாவியாக இருந்த என்னை பரிசுத்தமாய் மாற்றினீரே
நல்லவரே வல்லவரே
எங்களை வாழ வைக்கும் அன்பு தெய்வம் நீரே

2. நெருக்கத்திலே இருந்த என்னை விசாலத்தில் வைத்தீரே
சேற்றிலிருந்து தூக்கி எடுத்து கன்மலைமேல் நிறுத்தினீரே
அற்புதரே அதிசயமே
ஆனந்தமே பரம ஆனந்தமே இயேசு ஆனந்தமே பரம ஆனந்தமே

3. நான் அடுப்புக்கரி போலிருந்தேன் பொன் சிறகாய் மாற்றினீரே
திரு இரத்தத்தாலே கழுவி என்னை சுத்தமாக ஆக்கினீரே
உன்னதரே உயர்ந்தவரே
இருள் நீக்கும் ஒளி விளக்கே உள்ளத்தின் இருள் நீக்கும் ஒளி விளக்கே

4. தாயைப்போல என்னை அவர் சேர்த்தணைத்துக் கொண்டாரே
நல்ல தந்தை போல என்னை அவர் தோளில் தூக்கிச் சுமந்தாரே
அப்பாவல்லோ அப்பாவல்லோ
பிள்ளையல்லோ செல்லப் பிள்ளையல்லோ

## பாடல் - 0903
(E-Maj/slow Rock/T-120)

**வாருங்கள் வாருங்கள் வாருங்கள்**
தேவனை ஆராதிப்போம்
வானமும் பூமியை படைத்த
இயேசுவை ஆராதிப்போம்

ஆராதிப்போம் நாம் ஆராதிப்போம்
வானமும் பூமியும் படைத்த
இயேசுவை ஆராதிப்போம்

1. வாக்குகள் மாறா வல்லவர்
இயேசுவை ஆராதிப்போம்
வல்லமை மிக்கவர் நன்மைகள் செய்தார்
ஆராதிப்போம் - ஆராதிப்போம்

2. நேசத்தை நெஞ்சில்
மூட்டி விட்டாரே ஆராதிப்போம்
நெருங்கிச் சென்று நேசர்
இயேசுவை ஆராதிப்போம் - ஆராதிப்போம்

3. பாவங்கள் எல்லாம்
மன்னித்தாரய்யா ஆராதிப்போம்
பகையை சிலுவையில்
கொன்றாரய்யா ஆராதிப்போம் - ஆராதிப்போம்

## பாடல் - 0904
(D-Min/slow Rock/T-110)

**நீங்க தான் இயேசப்பா**
எங்களுக்கு போதும்
உங்க மகிமை எங்களை மூடும்
உங்க கிருபை உங்க இரக்கம்
உங்க தயவு எங்களுக்கு போதும்

1. தாய் மறந்தாலும் நான் மறவேன்
என்று சொன்னீரே எனது இயேசுவே
இரக்கம் நிறைந்த எங்களது தாயே
உந்தன் சேய் என்னை நீர் மறவீரே

2. உமது வாக்குகளில் உண்மையுள்ளவரே
ஒரு வார்த்தையும் தரையில் விழவில்லையே
வாக்கு செய்ததை நிறைவேற்ற வல்லவர்
வழுவாது காக்கும் தூயாதி தூயவர்

3. என் வாழ்க்கை படகிலே வாழுகின்ற இயேசுவே
எதிர்படும் புயலை எல்லாம் அடக்கிடுவீரே
காற்றையும் அதட்டி கடலையும் அமர்த்தி
ஜெயமாய் வாழ கற்றுத் தந்தீர்

## பாடல் - 0905
## (D-Maj/8Beat/T-95)

**என் உயிரான உயிரான உயிரான இயேசு**
என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன் - 2

1. உலகமெல்லாம் மறக்குதையா!
உணர்வு எல்லாம் இனிக்குதையா
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா!
உம் வசனம் தியானிக்கிறேன்

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பானே

## பாடல் - 0906

**சத்தமா துதிப்போம் சாத்தானை மதிப்போம்**
இயேசு நாமத்தினால் இயேசு நாமத்தினால்
இயேசு இரத்தத்தினால்
இயேசு வார்த்தையினால்
இயேசுவின் கிருபையினால்

ஆஹா ஹா அல்லேலூயா ஓ ஹோ ஓசன்னா

1. மின்னலைப் போல் சாத்தான்
கீழே விழுந்தானே
விழுந்து போன சாத்தான்
இனிமேல் நிற்க முடியாது

2. வானத்திலும் பூமியிலும்
அதிகாரம் தந்தாரே
ஒன்றுமே நம்மை
சேதப்படுத்த முடியாது

3. ஒரு வழியாய் வந்த துன்பம்
ஏழு வழியாய் ஓடிவிடும்
உலகில் இருக்கும் சாத்தானை விடவும்
நம் இயேசு பெரியவரே அதினால் மதி... மதி...

## பாடல் - 0907
## (E-Maj/8Beat/T-100)

**இயேசு ராஜா இதயத்தின் ரோஜா**
உம்மை நான் பாடிடுவேன்
ஓயாமல் துதித்திடுவேன்

1. செய்த நன்மைகள் நினைக்கும் போது
கண்களில் கண்ணீர் நிறைகிறதே
செந்நீர் வழிந்த பாதம் பணிந்து
தொழுதிட உள்ளம் துடிக்கிறது
வல்ல பிதாவே உமக்கு ஆராதனை
வான் புறாவே உமக்கு ஆராதனை
ஆராதனை (4)

2. எந்தன் பாவம் எந்தன் சாபம் யாவையும்
சிலுவையில் சுமந்திட்டீரே
உந்தன் காயம் என்னை சுகமாய்
ஆக்கிட வழியும் திறந்திட்டீரே
சுகமாக்கும் தெய்வமே ஆராதனை
வியாதி முற்றும் நீக்கிடுவீர் – ஆராதனை (4)

3. எனக்குள் வந்து எனக்குள் வாழ்ந்து
என்னையும் உம்மைப் போல் மாற்றினீரே
இதய பலகையில் உந்தன் வசனம்
எழுதி என் உயிரில் கலந்திட்டீரே
வார்த்தையின் வடிவே ஆராதனை
வானம் பூமி படைத்தவரே ஆராதனை

4. பொங்கும் நதி நீர் புதிய ஆவியால்
எந்தன் உள்ளம் நிறைந்திட்டீரே
பாய்ந்து சென்று இயேசு அன்பை
உலகமெங்கும் சொல்லிட
அருள் செய்திட்டீரே
ஊற்றுண்ட தைலமே ஆராதனை
உதவிடும் கன்மலையே ஆராதனை

பாடல் - 0908
(C-Maj/16 Beat/T-90)

**உம்மை ஆராதிப்பதே என் ஆசை – 4**
உம்மை ஆராதிக்கிறேன்

இயேசு ராஜா உம்மை - என்
இயேசு ராஜா உம்மை

1. ஆதி அந்தமில்லா அனாதி தேவா
அனைத்தையும் படைத்தவரே

உம்மை ஆராதிக்கிறேன்
இயேசு ராஜா உம்மை

2. துக்கத்தை கலைத்து துதி உடை
தந்தீர் தூயாதி தூயவரே

3. சாம்பலுக்கு பதிலாய் சிங்காரம்
தந்தீர் இயேசு ராஜாவே

பாடல் - 0909

**மரித்து உயிரோடு எழுந்தவரே**
(இயேசு ராஜா –3)
எங்கள் உயிரோடு கலந்தவரே
(இயேசு ராஜா –3)

1. பாதாளம் நடுங்கிட பேய்களும் அலறிட
மரணத்தின் தலை நசுக்கி
ஜெயம் முழங்க எழுந்தவரே
அல்லேலூயா (3) உமக்கு ஆராதனை (3)

2. பர்வதம் யாவுமே
மெழுகு போல் உருகிடுதே
உந்தனின் பிரசன்னத்தில்
உலகமே மறந்திடுதே

3. துரைத்தனங்கள் அதிகாரங்கள்
முகத்திரையை கிழித்தெடுத்து
சிலுவையிலே ஆணி அடித்து
சிம்மாசனம் அமர்ந்தவரே

## பாடல் - 0910

**துதியின் சத்தத்தோடு ஆராதிப்போம்**
நாம் துதியின் சத்தத்தோடு பலியிடுவோம்
உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி
செலுத்தி ஆராதிப்போம்

ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி ஸ்தோத்திர பலி
செலுத்தி ஆராதிப்போம்

1. துதியின் சத்தம் அலங்கத்தை அதிரப் பண்ணும்
துதியின் சத்தம் அற்புதம் நடக்கச் செய்யும்

2. துதியின் சத்தம் இரும்பு கதவை தகர்க்கும்
துதியின் சத்தம் அந்தகார இருள் அகற்றும்

3. துதியின் சத்தம் சாத்தானை கலங்கப் பண்ணும்
துதியின் சத்தம் சத்துருவின் சதி முறிக்கும்

## பாடல் - 0911

**ஆயிரம் நாவுகள் இருந்தாலும் போதாது**
அப்பா நீர் செய்த நன்மை சொல்லிட
இயேசப்பா உமக்கு ஸ்தோத்திரம்

1. தனிமையின் நேரத்தில் துணையாக வந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

2. தடுமாறும் நேரத்தில் தாங்கி சுமந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

3. அவமான நேரத்தில் ஆறுதல் தந்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

4. சோர்வான நேரத்தில் பெலன் தந்து காத்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

5. இதயத்தின் வேதனையை இதமாக மாற்றினீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

6. அவதிப்படும் நேரத்தில் அடைக்கலம் கொடுத்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

7. சத்துருவின் சதி வலையில் விழாமல் தடுத்தீரே
இயேசப்பா உமக்கு என்றும் ஸ்தோத்திரம்

## பாடல் - 0912

**ஆராதனை ஆராதனை**
அப்பா என் இயேசுவுக்கே
அப்பா என் இயேசுவுக்கே

1. எங்கள் ஜெயகிறிஸ்துவே ஆராதனை
எங்கள் சேனை அதிபதியே ஆராதனை

ஆராதனை துதி ஆராதனை
ஆராதனை ஸ்தோத்திர ஆராதனை

2. பிராண சிநேகிதரே ஆராதனை
பரிந்து பேசும் கிறிஸ்துவே ஆராதனை

3. இஸ்ரவேலின் நம்பிக்கையே ஆராதனை
இஸ்ரவேலின் ஆறுதலே ஆராதனை

4. நித்தியானந்த தேவனே ஆராதனை
நித்திய கன்மலையே ஆராதனை

## பாடல் - 0913
(F6/8/ R-slow Rock/T-95)

**பிரார்த்தனை கேட்கணும்**
என் அன்பு இயேசப்பா
கண்ணீரின் ஜெபத்திற்கு
பதில் தாங்க இயேசப்பா

தாங்கப்பா இப்போ தாங்கப்பா
தாங்கப்பா பதிலை தாங்கப்பா

1. எலியா என்னை கேட்டருளும்
என்று ஜெபித்தாரே
எளியவன் நானும் இன்று
ஜெபிக்கின்றேனப்பா

2. ஆகாரின் அழுகைக்கு
பதில் கொடுத்தீங்க
அடிமையின் கதறுதலுக்கு
செவி சாய்ங்கப்பா

3. பர்த்திமேயு கூக்குரலை
கேட்டீங்களேயப்பா
என் பரிதாப நிலையையெல்லாம்
மாற்றுங்களேயப்பா

## பாடல் - 0914

**நான் ஆராதிக்க வெட்கப்பட மாட்டேன்**
நான் ஆராதிக்க தயங்கவும் மாட்டேன்
ஆராதித்து ஆராதித்து
ஆராதனையின் ஆழம் சென்று
ஆவியில் களிகூர்ந்து மகிழுவேன்

கைதட்டி பாடுவேன் நடனமாடுவேன்
கெம்பீர சத்தமாய் மகிழுவேன்

1. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ வல்லமை உண்டு உண்டு

2. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ மகிமை உண்டு உண்டு

3. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ பிரச்சன்னம் உண்டு உண்டு

4. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ அபிஷேகம் உண்டு உண்டு

5. நான் துதிக்கும் ஆராதனையில்
தேவ அக்கினி உண்டு உண்டு

## பாடல் - 0915

**நிரப்புங்கப்பா என்னை நிரப்புங்கப்பா**
பரலோக தைலம் ஊற்றி நிரப்புங்கப்பா

1. நுகங்கள் முறியனும்
நிமிர்ந்து நடக்கனும்
சாபங்கள் மாறனும்
சமாதானம் அடையனும்

2. பாத்திரம் நிரம்பனும்
பரவசம் அடையனும்
பரலோக மகிமையால்
நிறைந்து துதிக்கனும்

3. ஆவியில் நிறையனும்
அதிகமா ஜெபிக்கனும்
அந்நிய பாஷையில்
பாடி துதிக்கனும்

## பாடல் - 0916
(CM3/4/R-waltz/T-140)

**மறவார் இயேசு மறவார் – உன்னை**
ஒரு இமைப் பொழுதிலும்

மறவார் இயேசு மறவார் – உன்னை
உருவாக்கிய இயேசு மறவார்

1. அழைத்தவர் உன்னை மறவார்
அபிஷேகம் செய்தவர் மறவார்
மனிதனின் அன்பு நிலை மாறினாலும்
மகிமையின் தேவன் உன்னை மறவார்

2. தரிசனம் தந்தவர் மறவார்
தாங்கியே நடத்திட மறவார் – எப்பக்கம்
நெருக்கங்கள் உன்னை சூழ்ந்திட்டாலும்
எலியாவின் தேவன் உன்னை மறவார்

3. வாக்குத்தத்தம் தந்தவர் மறவார்
வழிகாட்டி நடத்திட மறவார்
வானமும் பூமியும் நிலை மாறினாலும்
வார்த்தையை நிறைவேற்ற மறவார் – தம்

## பாடல் - 0917

**ஆராதிக்க உம்மை ஆராதிக்க இன்று**
ஆராதிக்க கூடியுள்ளோம்
ஊற்றும்மைய்யா நிரம்பும்மைய்யா
உன்னத பரலோக அபிஷேகத்தால் – 2

1. உன்னதரே உம்மை ஆராதிப்போம்
உயர்ந்தவரே உம்மை ஆராதிப்போம்
வல்லவரே உம்மை ஆராதிப்போம்
வழிகாட்டியே உம்மை ஆராதிப்போம்

2. நம்பிக்கையே உம்மை ஆராதிப்போம்
நங்கூரமே உம்மை ஆராதிப்போம்
புகலிடமே உம்மை ஆராதிப்போம்
புகழ்ச்சி நீரே உம்மை ஆராதிப்போம்

3. அற்புதரே உம்மை ஆராதிப்போம்
அடைக்கலமே உம்மை ஆராதிப்போம்
பரிசுத்தரே உம்மை ஆராதிப்போம்
பரிகாரியே உம்மை ஆராதிப்போம்

## பாடல் - 0918

**ஆராதனைக்குரியவரே உம்மை**
உயர்த்தி ஆராதிப்பேன்

பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
பரிசுத்தர் நீர் பரிசுத்தரே! – 2

1. என்னை நேசிப்பவர் நீரல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான்

2. என்னை மன்னித்தவர் நீரல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான்

3. என்னை ஆட்கொண்டவர் நீரல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான்

## பாடல் - 0919
## (G-Maj/slow Rock/T-115)

**என் நம்பிக்கையே உமக்கு ஸ்தோத்திரம்**
என் புகலிடமே உமக்கு ஸ்தோத்திரம்

உம்மைத்தான் நான் நம்பியிருக்கிறேன்
அற்புதங்கள் எனக்கு செய்யுங்கப்பா

1. நூற்றுக்கு நூறு உம்மை நம்புவேன்
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
மனிதர்கள் முன்பாக தலைகுனிந்து போகாமல்
உதவி செய்திடுங்க உயர்த்தி வெச்சிடுங்க - உம்மைத்தான்

2. ஆராய்ந்து முடியாத அதிசயங்கள் செய்பவரே
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
இரட்டிப்பான நன்மைகளை தருவேன்னு சொன்னீரே
இன்றைக்கே தந்திடுங்க இப்பவே தந்திடுங்க - உம்மைத்தான்

3. உம்மையல்லாமல் யார் என்னை உயர்த்தக் கூடும்
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
ஐசுவரியம் கனமுமே உம்மாலே தான் வருகிறது
ஆளுகை செய்யுங்கப்பா மேன்மை படுத்துங்கப்பா - உம்மைத்தான்

## பாடல் - 0920
## (E-Min/country/T-125)

**ஜெபமே ஜெபமே ஜெயத்தை தந்திடும் ஜெபமே**

முடியாதது ஒன்றுமில்லை
ஜெபம் தான் ஜெயம் தருமே
முடியாதது ஒன்றுமில்லை
ஜெபத்து ஜெயம் பெறுவேன்

1. இருப்பு தாழ்ப்பாள்களை
முறித்துப் போடும் ஜெபம்
வெண்கல கதவை உடைத்து நொறுக்கும்
வல்லமையுள்ள ஜெபம் - 2

2. சர்ப்பங்கள் தேள்களையும்
மிதித்துப் போடும் ஜெபம்
சிங்கத்தின் வாயை அடைக்கும் ஜெபமே
வல்லமையுள்ள ஜெபம்

3. போராடி ஜெபிக்கும் போது
ஜெயத்தை தந்திடும் ஜெபம்
பேய்களை விரட்டி நோய்களை அகற்றும்
ஜெபம் வல்லமையுள்ள ஜெபம்

## பாடல் - 0921
## (F2/4/R-80's FUSION/T-120)

**உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை** - 3
எல்லாமே உமால் ஆகும் - அல்லேலுயா
எல்லாமே உம்மால் ஆகும்

ஆகும் எல்லாம் ஆகும், உம்மாலேதான் எல்லாம் ஆகும் - 2

1. சொல்லி முடியாத அற்புதம் செய்பவர் நீரே - ஐயா நீரே
எண்ணி முடியாத அதிசயம் செய்பவர் நீரே - ஐயா நீரே - 2
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் - 2

2. எனக்கு குறித்ததை நிறைவேற்றி முடிப்பவர் நீரே - ஐயா நீரே
எனக்காக யாவையும் செய்து முடிப்பவர் நீரே - ஐயா நீரே - 2
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் - 2

3. வறண்ட நிலத்தை நீருற்றாய் மாற்றுபவர் நீரே - ஐயா நீரே
அவாந்தர வெளியை தண்ணீராய் மாற்றுபவர் நீரே - ஐயா நீரே - 2
அப்பா உமக்கு ஸ்தோத்திரம், அன்பே உமக்கு ஸ்தோத்திரம் - 2

## பாடல் - 0922

**உடைத்து உருவாக்கும் என் இயேசுவே**
உமக்குத்தான் ஆராதனை - 2

We Worship you Oh Lord
We Glorify Oh Lord We Magnify Oh Lord
We Adore you Oh Lord

துதிக்கு பாத்திரரே We Worship...
துதிகளின் உன்னதரே We Glorify...

போற்றுதற்குரியவரே We Worship...
கனத்துக்குரியவரே We Glorify...

ஆத்தும மணவாளனே We Worship...
ஆத்தும நேசரே We Glorify...

மன்னுயிரை காப்பவரே We Worship...
மனதுருக்கம் நிறைந்தவரே We Glorify...

## பாடல் - 0923

**தேவாதி தேவன் இராஜாதி ராஜன்**
இயேசு என் தேவன் - 2
இயேசு... 3 இயேசு என் தேவன் - 2

1. உன்னதத்தில் வாசம் செய்யும் உத்தமரே
நீர் என் உள்ளத்தில் இருப்பதால் ஸ்தோத்திரம்
வானாதி வானங்களின் சிருஷ்டிகரே
உந்தன் வார்த்தையினால்
தேற்றுவதால் ஸ்தோத்திரம் - 2 - தேவாதி

2. யோர்தானின் பெருவெள்ளம் நேரத்திலே
என்னைக் காத்திட
அன்புக்காய் ஸ்தோத்திரம்
எரிகோவின் மதில்களை தகர்த்திட்டீரே
என்றும் என்னோடிருப்பதற்காய் ஸ்தோத்திரம் - தேவாதி

3. தந்தை தாய் ஜனங்கள் கைவிட்டாலும்
என்னை கைவிடா நேசரே ஸ்தோத்திரம்
உலகத்தின் முடிவு பரியந்தம்
உந்தன் விலகாத அன்புக்காய் ஸ்தோத்திரம் - தேவாதி

4. சீக்கிரமாய் வரப்போகும் ஆத்ம நேசரே
உம்மை வருகையில் காண்பேனே ஸ்தோத்திரம்
என்றென்றும் உம்மோடு வாழ்வதற்கு
நித்திய ஜீவனை தந்ததால் ஸ்தோத்திரம் - தேவாதி

## பாடல் - 0924

**சந்தியும் சந்தியும் இந்தியாவை சந்தியும்**
சிறியோரையும் பெரியோரையும்
அனைவரையும் சந்தியும்
அந்தகார வல்லமை தேசம் விட்டு நீங்கவே
இந்த நாளில் இப்போதே இந்தியாவை சந்தியும்

என் இந்தியா இயேசுவுக்கே
என் ஜனங்கள் இயேசுவுக்கே

2. மீட்டிடும் மீட்டிடும் இந்தியாவை மீட்டிடும்
பாதாளமாம்ம சாத்தானின்
கையினின்று மீட்டிடும்
வலது கைக்கும் இடது கைக்கும்
வித்தியாசம் அறியாத
பேதை மக்கள் ஏழை மக்கள்
அனைவரையும் மீட்டிடும்

3. ஏற்றிடும் ஏற்றிடும் சிலுவைக் கொடி ஏற்றிடும்
இமயம் முதல் குமரி வரை
கிராமமெல்லாம் ஏற்றிடும்
மகிமையான வருகையில்
இயேசுவை நாம் சந்திக்க
கோடி கோடி மக்களின்
ஆத்துமாவில் ஏற்றிடும்

4. ஊற்றிடும் ஊற்றிடும்
அபிஷேகத்தை ஊற்றிடும்
மாம்சமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றிடும்
கொழுந்து விட்டு எரியவே
பற்றி பிடித்து பரவவே
உன்னதத்தின் ஆவியை
உள்ளமதில் ஊற்றிடும்

பாடல் - 0925
(F-Maj/DISCO/T-122)

**மகிமையின் ராஜா மகிமையோடு**
வருகின்றார் மேகமதில்
ஆ... ஆனந்தமே ஆனந்தமே ஆனந்தமே பேரானந்தமே

1. பூமி அதிசயிக்க வானோர் ஆர்ப்பரிக்க
தூதர் தொனியுடனே மேகமீதில் வருவார்
அன்பர்கள் நாங்கள்
இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

2. ஆசை மகிபனவர் பிதாவின் மகிமையோடு
நேச மணவாட்டியை மறுரூபமாக்க வருவார்
ஆவலாய் நாமும் இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

3. சுத்த பிரகாசமாய் சித்திர தையலாடை
தூய நீதியுடனே
வெண் வஸ்திரம் தரிப்போம்
விண்ணவர் சாயலில்
இயேசுவை சந்திப்போம்
ஆனந்தம் ஆனந்தமே

4. ஆவியும் மணவாட்டியும்
அழைத்திடும் நேரமல்லோ
ஆயத்த விழிப்புடனே
பூரணமடைந்திடுவோம்
காலமும் சென்றது நேரமும் வந்தது
ஆனந்தமே ஆனந்தமே

**பாடல் - 0926**

**நேசரே நேச உச்சிதமே விரைந்து வாருமே**
ஏங்குதென் உள்ளமே

1. வருகையின் அடையாளங்கள் ஏராளமே
காலத்தின் தோற்றங்கள் தெளிவானதே
காத்திருக்க நேரமில்லை கர்த்தரே
வாருமே நீர் விரைவாகவே

2. மேகத்தின் மீதினில் இயேசு ராஜனும்
ஆயிரம் ஆயிரமாம் தூதருடன்
பார்த்திருக்கும் பரிசுத்தர் கூட்டமும்
வானிலே நாம் ஆடிப் பாடுவோம்

3. நேசரின் சாயலை கண்டு களித்து
அன்பரின் மார்பிலே சாய்ந்திருப்பேன்
கவலை துன்பம் ஒன்றுமில்லை என்றுமே
விண்ணில் நானும் வாழ்ந்து சுகிப்பேன்

**பாடல் - 0927**
**(F-Min/Tabla/T-95)**

***பல்லவி***

**அழகானவர் அருமையானவர் இனிமையானவர்**
மகிமையானவர் மீட்பரானவர் – 2
அவர் இயேசு இயேசு இயேசு – 2

***சரணங்கள்***

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் இராஜா
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலர்
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர்
என்னுடையவர் என் ஆத்ம நேசரே

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானவர்
ஆற்றித் தேற்றிக் காத்திடும் தாயுமானவர்
என்றென்றும் நடத்திடும் எந்தன் இராஜா – 2
என்னுடையவர் என் நேச கர்த்தரே

3. கல்வாரி மேட்டினில் கொல்கொதாவிலே
நேசர் இரத்தம் சிந்தியே என்னை மீட்டார்
பாசத்தின் எல்லைதான் இயேசு இராஜா – 2
என்னுடையவர் என் அன்பு இரட்சகர்

## பாடல் - 0928

**மகிமை மறுரூபமலையின் மகிமை**
இனிமை தேவனின் சமூகத்தின் இனிமை

நிறைவாக இறங்கட்டுமே - மகிமை
நிறைவாக இறங்கட்டுமே - 2

1. சாலமோன் ஆலயத்தை
அன்று நிரப்பிய உம் மகிமை
உள்ளமாம் ஆலயத்தை நிரப்ப
இன்று அழைக்கின்றோம் ஆவலோடு

2. மோசேயின் ஜெபம் கேட்டு
அன்று காண்பித்த உம் மகிமை
ஏங்கிடும் எங்களை சூழ்ந்து
நிரப்பட்டும் இப்பொழுதே - 2

3. சூரியன் மகிமையிலும்
மா பெரிதான உம் மகிமை
மண்பாண்டம் பொக்கிஷமாய் ஜொலிக்க
ஊற்றிடும் எங்கள் மீது - 2

## பாடல் - 0929
(E3/4/R-waltz/T-135)

**அபிஷேக நாதரே அக்கினி நேசரே**
வல்லமையோடு எங்கள் நடுவில்
உலாவி வாருமே - 2

1. ஆரோன் சிரசினிலே ஊற்றப்பட்டவரே
ஆசாரியராக ராஜாக்களாக - 2
அபிஷேகத்திடுமே அபிஷேகித்திடுமே

2. ஆனந்த தைலத்தினால்
அபிஷேகனாக தீர்க்கதரிசியாய் - 2
அபிஷேகித்திடுமே அபிஷேகித்திடுமே

3. தாவீதின் குமாரனாய் இறங்கி வந்தவரே - 2
வரங்களினாலும் வல்லமையினாலும் - 2
அபிஷேகித்திடுமே அபிஷேகித்திடுமே

4. உன்னத பெலத்தினால் உள்ளத்தை நிரப்புமே
உம்மைப் போலாக்குமே
மறுரூபமாகவே அபிஷேகித்திடுமே அபிஷேகித்திடுமே



அட்டவணை

## பாடல் - 0930
## (A-Maj/6/8 soul/T-115)

**ஆனந்தம் அனந்த ஆனந்தம்**
ஆத்துமாவின் நேசரில் என்றும் ஆனந்தம்

1. இப்புவியில் ஆனந்தம்
எப்போதும் ஆனந்தம்
பாவங்களை மன்னித்தார்
சாபங்களை நீக்கினார்
என்னுடன் வருகிறார் என்றுமே வருகிறார்
வழியெல்லாம் ஆனந்தம்
வாழ்க்கையெல்லாம் ஆனந்தம்

2. ஆவியிலே ஆனந்தம்
பாஷையாலே ஆனந்தம்
உள்ளத்தை நிறைத்திட்டார்
தேவ பெலன் தந்திட்டார்
ஆவி வரம் தருகிறார் அனல் மூட்டி விடுகிறார்
ஆராதனை ஆனந்தம்
துதி ஸ்தோத்திரம் ஆனந்தம்

3. நேசரன்பு ஆனந்தம் நித்ய நித்ய ஆனந்தம்
ஜீவ தண்ணீர் தந்திட்டார்
தாகமதை தீர்த்திட்டார்
ஜீவநதி ஓரமாய் ஜீவகிரீடம் தரித்தே
ஆடுவேன் பாடுவேன்
என்றென்றுமாய் ஆனந்தம்

## பாடல் - 0931

**உன்னதரே உன்னத பெலன் தாருமே**
உன்னதங்களில் உம்மோடுறவாடிட
உள்ளம் ஏங்கிடுதே

1. ஆயிரங்களில் சிறந்தோரே
ஆத்துமாவின் நேசர் அவரே
ஆபத்தில் என் தோழரும் நீரே
ஆடிப்பாடி துதிப்பேன் என்றும்

2. ஏழை என்னை ஆசையுடனே
நேசர் இயேசு தேடி வந்தாரே
அளவற்ற கிருபையினாலே
அளவின்றி நிரப்பினாரே

3. தேவ சாயலாக மாறியே
தேவ அன்பால் நிறைந்திருப்பேனே - 2
ஆத்தும நேச உச்சிதங்களை
நேசருக்கே ஈந்திடுவேன் - 2

4. எண்ணிறந்த தூதர்களோடு
விண்ணில் நின்று போற்றி மகிழ்வேன்
கோடி கோடி ஆண்டுகளாக
தேவலோகில் வாழ்ந்து சுகிப்பேன்

பாடல் - 0932
(D-Maj/slow Rock/T-115)

**யாவும் செய்து முடிப்பார் எனக்காக**
யுத்தம் செய்து ஜெயிப்பார் என் இயேசு

1. உலகத் தோற்ற முன்னே எனக்காக
தம்மையே தானமாக தந்தார் - 2
உலக சிருஷ்டிப்பில் எனக்காக
யாவையும் செய்து முடித்தார்

2. கல்வாரி சிலுவையில் எனக்காக
இரத்தத்தையே தியாகமாக ஈந்தார் - 2
பாடுகள் வேதனைகள் எனக்காக
பொறுமையாய் சகித்தாரே

3. நித்திய ராஜியத்தில் எனக்காக
யாவையும் செய்துமே முடித்தார்
வானவரோ டென்றும் வாழ்ந்திடவே
கிருபையின் வாசலைத் திறந்தார்

பாடல் - 0933
(E2/4/R-polka/T-120)

**பிதாவுக்கு ஸ்தோத்திரம்**
தேவ குமாரனுக்கு ஸ்தோத்திரம்
ஆவியானவர்க்கு ஸ்தோத்திரம்
இன்றும் என்றுமே

1. பாவ பாரத்தினின்று என்னை மீட்டிட்டார்
சாப வல்லமையினின்று என்னைக் காத்திட்டார் - 2

2. ஜீவ புத்தகத்தில் எந்தன் பேர் எழுதவே
தம் ஜீவனைக் கல்வாரியிலே ஊற்றி விட்டாரே - 2

3. இரட்சகராம் இயேசு என் உள்ளம் உள்ளாரே
ஆவியின் அபிஷேகத்தை ஊற்றி விட்டாரே

4. சேனைகளின் தேவன் என் சொந்தமானாரே
சேனை தூதர்களை தந்து விட்டாரே

5. சீக்கிரமாய் வரப் போகும் ஆத்ம நேசரே
சீக்கரமாய் காண்பேனே பொன் முகத்தையே - 2

## பாடல் - 0934
## (D2/R-70's DISCO/T-110)

**புதுப்பாடல் புண்ணியரை**
போற்றிடுவேன் புகழ்ந்திடுவேன்
(பத்து) நரம்பு வீணை மீட்டி மீட்டி
நடனமாடியே மகிழ்ந்திடுவேன்

அற்புதமே அவர் நாமம்
அதிசயமே அவர் நாளும் - 2
அல்லேலூயா அவர் கீதம் - 2

1. தாயின் மேலாய் நேசித்தாரே
தந்தையைப் போல் போஷித்தாரே - 2
(என்றும்) தேவ அன்பால் நிறைந்து நானும்
தேவாதி தேவனைத் துதித்திடுவேன் - அற்புதமே

2. நெரிந்த நாணல் முறிந்திடாமல்
மங்கிய திரியை அணைத்திடாமல்
(தூய) எண்ணெய் ஊற்றி என்னை மாற்றி
புதிதான அபிஷேகம் தந்திட்டாரே - அற்புதமே

3. சீக்கிரமாய் வந்திடுவார்
கண்டிடுவேன் நான் களித்திடுவேன்
(அவர்) நேச மார்பில் சாய்ந்து என்றும்
ஒளிமய தேசத்தில் சுகித்திருப்பேன் - அற்புதமே

## பாடல் - 0935
(DM4/4/R-Jazz Rock/T-105)

**உம்மைத் தஞ்சமாக கொண்டவர்கள் பாக்கியவான்கள் – 2**
என்றென்றும் பாக்கியவான்கள்
அல்லேலூயா பாக்கியம் – 4

1. ஆவியில் எளிமை தாழ்மையுமாய்
ஜீவிப்பார் என்றும் பாக்கியவான்கள்

2. சத்திய வேதத்தை கைக்கொண்டு
போதிப்பவர் என்றும் பாக்கியவான்கள்

3. தேவ வழிகளில் உத்தமமாய்
நடப்பவர் என்றும் பாக்கியவான்கள்

4. கிறிஸ்துவுக்குள்ளாய் மரிப்பவர்கள்
இது முதலாய் என்றும் பாக்கியவான்கள்

## பாடல் - 0936

**அலை அலையாய் தேவ நதி**
ஜீவ நதி அது தூய நதி
நிரப்பிடுதே என்னை நிரப்பிடுதே

1. சுத்தமும் தூய்மையுமான ஜீவநதி
ஆட்டுக்குட்டி சிங்காசனத்தினின்று
என்னில் பாயுதே என்னை நிரப்புதே

2. மகிழ்வும் சந்தோஷம் தரும் ஜீவநதி
ஆவியான கர்த்தரிடமிருந்து
உள்ளம் பொங்குதே நிரம்பி வழியுதே

3. புது துருத்தி முதலராய் பீறப்பண்ணும்
நேசத்தின் உச்சித அபிஷேகமே
பூரிப்படைந்தேன் துதித்து மகிழ்வேன்

## பாடல் - 0937
(DM6/8 Blues/T-125)

**எல்லைகளை பெரிதாக்கும் விரிவாக்குமே**
எல்லையில்லா கிருபைகளை பொழிந்தருளுமே
எல்லைகளை ஜெபத்தின் எல்லைகளை
எல்லைகளை வரத்தின் எல்லைகளை
எல்லைகளை ஊழிய எல்லைகளை

1. தொல்லை தரும் சத்துருவின்
தலையை மிதித்து
சொல்லி வரும் சுவிசேஷம்
எங்கும் கேட்கவே

2. வெற்றி கொடி ஏந்தி இந்த
தேசமெங்கிலும்
வல்ல இயேசு நாதர் நாமம்
புகழ்ந்து போற்றவே

3. ஐந்து கண்ட மக்களையும்
சிலுவை அன்பிடம்
கூட்டிச் சேர்க்க உன்னதத்தின்
பெலன் தாருமே

## பாடல் - 0938

**சந்தோஷமே ஆஹா சந்தோஷமே**
பரலோகத்தின் மஹா சந்தோஷமே
சந்தோஷம் நிரப்பிடுதே
என் உள்ளத்தை நிரப்பிடுதே

1. புசிப்பும் குடிப்புமல்ல பரலோக இராஜ்யம்
பரிசுத்த ஆவியின் சந்தோஷமே
பொன்னல்ல வெள்ளியல்ல எங்களின் ஆசை
இயேசு கிறிஸ்துவின் சந்தோஷமே

2. சினிமா, களியாட்டு வேண்டாமே எமக்கு
நேசரின் பிரசன்னம் சந்தோஷமே
உள்ளத்தின் ஆழங்கள் எல்லாமே நிரப்பும்
தெய்வீக சமூகத்தில் சந்தோஷமே

3. உலகத்தின் முடிவும் எம்மோடு இருப்பார்
ஒருபோதும் ஒரு நாளும் விலகிடாரே
ஆற்றியே தேற்றிடும் அன்பரின் அன்பு
ஆனந்த கூத்தாடச் செய்திடுதே

## பாடல் - 0939

**உன்னதத்தின் பெலனே**
உயர் ஸ்தலத்தின் நிழலே

உத்தமரின் துணையே என் அரும் இயேசு நாதா
வாழ்த்துகிறேன் உம்மைப் போற்றுகிறேன்
வாழ்நாளெல்லாம் உம்மில் மகிழுகிறேன்

1. ஆவியால் நிறைத்திடுமே
அபிஷேகம் ஈந்திடுமே
அளவில்லா அக்கினியால்
கொழுந்து விட்டெரிந்திடவே

2. ஆத்தும தாகத்தினால்
ஊழியம் செய்திடவே
ஆவியின் வரங்களினால்
அடியேனை நிரப்பிடுமே

3. விண்ணப்ப ஆவியோடு
மன்றாடி ஜெபித்திடவே
எண்ணெயை ஊற்றிடுமே
எழும்பி நான் துலங்கிடவே

### பாடல் - 0940

**வானத்தின் பலகனிகள் திறக்கட்டும்**
தேசத்தில் பின்மாரி மொழியட்டும்
காட்டுப் புறா சத்தமும் கேட்கட்டும்
அபிஷேக பெருமழை பொழியட்டும்

ஊற்றிடும் ஊற்றிடும் உந்தன் ஆவியை
இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஊற்றிடுமே

1. ஜெபவீரர் ஜெயசேனை கூடட்டும்
ஒருமனம் ஒருமைப்பாடு விளங்கட்டும்
சீயோனில் எக்காளம் ஊதட்டும்
லேவியர் ஆசாரியர் எழும்பட்டும்

2. எழுப்புதல் எதிரொலி சத்தத்தால்
எழும்பிடும் வாலிபரே வாருங்கள்
எலிசாவும் எலியாவும் நீயல்லோ
இந்த தேசம் இயேசுவை அறியட்டும்

### பாடல் - 0941

**ராஜாவின் ஜெய கெம்பீரம் – அல்லேலூயா**
பொல்லாத சாத்தானை சிதறடிப்போம்
சிதறடிப்போம் நாம் சிதறடிப்போம்
இயேசுவின் நாமத்தில் முறியடிப்போம்

1. ராஜாதி ராஜாவும் எங்களுடனே
கர்த்தாதி கர்த்தரும் எங்களுடனே
தேவாதி தேவனும் எங்களுடனே
வெற்றி மேல் வெற்றி என்றும் பெற்றிடுவோமே

2. இரட்சண்ய தலைச்சீரா எமக்கு உண்டு
ஆவியின் பட்டயமும் எமக்கு உண்டு
ஆயத்த பாதரட்சை எமக்கு உண்டு
அந்தகார வல்லமையை விரட்டிடுவோம்

3. பாதாள ஆவிகளும் விலகிடுதே
பாதாள சாத்தானும் ஓடிடுதே
தெய்வீக வெளிச்சம் வீசிடுதே
தேவதூதர் கூட்டமும் வந்திடுதே

## பாடல் - 0942

**எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் இயேசுவே**
எல்லோருக்கும் அன்பு செய்யும் நேசரே
நல்லோரையும் பொல்லாரையும்
இல்லோரையும் உள்ளோரையும்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் இயேசுவே
எங்க எல்லோரையும்
ஏற்றுக் கொள்ளும் இயேசவே

1. தம்மண்டை வந்தோரை தள்ளாரே
தம் அன்பால் நம்மைத் தேடி வந்தாரே
தாமாக ஜீவ தண்ணீர் தந்தாரே – 2
நம்ம தாகத்தையே தீர்ப்பேன்
என்று சொன்னாரே – 2

2. பாவபாரம் சுமப்பவரே வாருங்க
நீங்க வருத்தப்பட்டு பயன் என்ன கூறுங்க
பாவ சாபம் நான் சுமப்பேன் என்றுங்க – 2
உங்க பாரம் நீக்கி வாழ்பளிப்பார் இன்றுங்க – 2

3. கண்ணீர் கவலை ஒன்றும் வேண்டாமே
அந்த காட்டுப் பறவைகளைப் பாருமே
உடுத்துவித்து உணவளிப்பார் என்றுமே – 2
அதனால் வந்திடுங்க இயேசு கிட்ட இன்றுங்க – 2

## பாடல் - 0943

**ஆஹா வானில் ஓர் சத்தம் சத்தம்**
எக்காள சத்தம் சத்தம்
எம்மையும் உயிர்ப்பிக்கும் சத்தம் சத்தம்
என் நேசரின் சத்தம் அல்லோ அல்லேலூயா - 8

1. சித்தம் செய்தோர் சத்தம் கேட்டு உயிர்த்தெழுவார்
நித்தம் அவர் சமூகத்தில் அகமகிழ்வார் - ஆஹா

2. எக்காளங்கள் தொனித்திடும் வேளை வந்ததே
எங்கள் ராஜா இயேசு ராஜா வந்திடுவாரே - ஆஹா

3. காத்திருப்போர் எதிர்கொண்டு ஏறிச் செல்வாரே
எண்ணையுடன் தீவெட்டியும் கொண்டு செல்வாரே- ஆஹா

## பாடல் - 0944

**வாக்களித்தீர் வாக்கின்படியே**
வாரும் ஆண்டவரே
பிதாவின் வாக்கு உன்னத பெலனை
தாரும் ஆண்டவரே

எல்லார் மேலும் வல்லமை ஊற்றும்
எல்லார் மேலும் வந்திறங்கும்
அல்லேலூயா வாரும் தேவா
அல்லேலூயா அழைக்கின்றோம்

2. மேல் வீட்டறையில் சீஷர்கள் மீது
பொழிந்த அருள் மழையை
எங்கள் மீதும் பின்மாரி மழையை
பொழியும் ஆண்டவரே

3. மகிமையின் மேல்
மகிமையடைந்து மறுரூபமாகட்டுமே
பெலத்தின் மேலே பெலனடைய
நிரப்பும் ஆண்டவரே

4. விண்ணப்ப ஆவி மன்றாட்டு ஆவி
வேண்டும் ஆண்டவரே
கண்ணீர் நதியாய் கண்களும் மாற
ஜெபத்தை தந்திடுமே

## பாடல் - 0945

**உள்ளம் உருக்கும் நேசம் கல்வாரி நேசமே**
செந்நீர் கலந்து பாயும் குருதி எனக்காகவே

அளவற்ற அந்த அன்பு
அளவற்ற அந்த நேசம்
அளவற்ற கிருபையே

1. கள்ளம் இல்லாத தூய்மை
என்னுள்ளம் நிறைக்கின்றதே
கள்ளன் கெஞ்சிட்ட போது
கருணை விளங்கிட்டதே

2. மேன்மை எல்லாம் துறந்தார்
அடிமை ரூபமானார்
விண்ணகம் என்னை உயர்த்த
மண்ணகம் மடிந்திட்டாரே

3. சவுக்கால் அடிக்கப்பட்டார்
முள்முடி சுமந்திட்டார்
ஆணி துளைத்ததைய்யோ
குருதி எனக்காகவே

## பாடல் - 0946

**ஜீவநதி வருகின்றது என்னை நோக்கி**
ஜீவநதி வருகின்றது
பரலோகத்தின் சிங்காசனத்தினின்று
ஜீவநதி வருகின்றது
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. ஜீவநதி அவரே
எந்தனுக்காய் ஜீவனை தந்தாரே
ஜீவன் பெற்றிட ஜீவனில் வளர்ந்திட
ஆத்ம நேசர் அருள் செய்தாரே

2. ஜீவகனி மரங்களுண்டே
நதியோரம் ஜீவகனி மதுரமாமே
ஜீவ ஊற்றிலே தாகம் தீர்ந்து மகிழ்ந்திட
ஜீவ பாதை திறந்திட்டாரே

3. ஜீவ புஸ்தகமதிலே என் பெயரையும்
கிருபையாய் எழுதினாரே
ஆணி பாய்ந்திட்ட கரங்களில் கண்ணீரை
ஆனந்தமாய் ஊற்றிடுவேனே

## பாடல் - 0947

**கிறிஸ்து இயேசு நாமத்தாலே**
வெற்றிக் கொடி ஏற்றுவோம்
ராஜாதி ராஜாவாலே
சத்துருவை வெல்லுவோம்

1. வானத்திலும் பூமியிலும்
இயேசு நாமமல்லாமல்
சத்துருவை வெற்றி கொள்ள
வேறு நாமம் இல்லையே

2. பாதாளத்தின் கூர்
ஒடித்த பரிசுத்த நாமமே
வேதாளங்கள் நடுங்கிட
வெற்றி பெற்ற நாமமே

3. மரண பயம் எனக்கு
என்றும் இனி இல்லையே
மரணத்தை ஜெயமாக
விழுங்கினார் அல்லவோ

4. பாவமோ, சாபமோ,
வியாதியோ செய்வினையோ
மந்திர தந்திரங்கள்
மேற்கொள்வதில்லையே

## பாடல் - 0948

**வாரும் என் நேசரே நேசத்தின் உச்சிதம்**
தாருமே எந்தனுக்காய்

1. உளையான சேற்றினில் தூக்கி எடுத்தீரே
இரத்தத்தால் கழுவினீரே
மார்போடணைத்தீர் மகனாக ஏற்றீர்
மன்னவா உன் தயவே

2. இருள் சூழ்ந்த வேளையில் தீபமாய் வந்ததீரே
மகிமையாய் மாற்றினீரே
உம் சாயலில் நான் மறுரூபமாகிட
எத்தனை அன்பு வைத்தீர்

3. விண்ணை மறந்து வழி தப்பி திரிந்து
மனம் போல வாழ்ந்தேனய்யோ
செங்குருதி சிந்தி எனக்காக ஊற்றுண்டீர்
உள்ளம் உருகிடுதே

**பாடல் - 0949**

**இயேசுவின் சமூகம் ஆனந்தமே**
நேசரின் பிரசன்னம் ஆச்சரியமே

1. துக்கங்கள் மாறிடுமே
நீ கூப்பிடும் வேளையிலே
கண்ணீர் மறைந்திடுமே
கர்த்தர் கரமதை நீட்டுவாரே
அற்புதங்கள் நடத்திடும்
அதிசயங்கள் நடந்திடும்
இயேசுவை விசுவாசிப்பாய்

2. கொந்தளிக்கும் கடலோ
வீசும் புயல் காற்றோ
இரையாரே அமைதலாயிரு,
என்றவர் அமர்த்துவாரே
கடல் அலை அமர்ந்திடும்
புயலோ தூர நின்றிடும்
இயேசுவை விசுவாசிப்பாய்

3. மாராவின் கசப்பெல்லாம்
மதுரமாய் மாறிவிடும்
தோல்வியின் புலம்பலெல்லாம்
வெற்றி முழக்கமாய் மாற்றுவாரே
பாவத்தின் மேல் ஜெயித்தாரே
சாபத்தின் கூர் ஒடித்தாரே
இயேசுவை விசுவாசிப்பாய்

4. கர்த்தரின் கருணையிரே
அளவேதுமே இல்லையே
கல்வாரி அன்பினாலே
உள்ளமது உருகிடுதே
இயேசுவின் இரத்தம் ஜெயம் - 2
இயேசுவை விசுவாசிப்பாய்

### பாடல் - 0950

**அறிந்தவரும் என்னை புரிந்தவரும்**
ஆன்மாவை மீட்பவரும்
இயேசு ஜெபத்தை எல்லாம் கேட்பவரும்
கண்ணீர் யாவு துடைப்பவரும்

1. இயேசு என்னும் இரட்சகராம்
இம்மானுவேலாய் கூட நிற்பவர்
ஆபத்திலே அனுகூலமாய்
ஆற்றி தேற்றி ஆதரிப்பாரே

2. தேற்றரவாளன் தேற்றுவாரே
துக்கத்தை எல்லாம் மாற்றுவாரே
வல்லமையால் நிரப்பிடுவார்
வரங்களையே பொழிந்திடுவார்

3. பாசம் வைத்தவர் நேசம் வைத்தவர்
பாவி என் மேல் கிருபை வைத்தவர்
மாறிடாத மா நேசராய்
மனக் குறைகள் தீர்த்திடுவாரே

4. கவலை கண்ணீர் துயரமெல்லாம்
கல்வாரி குருசில் சுமந்தனரே
பாரம் ஏனோ? வருத்தம் ஏனோ?
வந்திடுவாய் இயேசு வண்டையில்

### பாடல் - 0951

**அறுவடைக்காலம் அவசரமே**
அறுவடை செய்ய விரைந்திடுவீர்
விளைந்த வயல் வெளிகள்
வருந்தி அழைக்கின்றதே

1. நெருங்கி ஏவிடுதே கல்வாரி தூய அன்பே
நொறுக்கப்பட்டார், பிழியப்பட்டார்
எடுத்துரைப்பாயா தேவ அன்பை

2. காலங்களோ கடைசி நாட்களோ இல்லையே
அழிவினின்று தப்பும் வழி
அறிவிப்பார்கள் யாருமுணடோ?

3. பாதாள ஜுவாலையிலே புழுவாய் துடிக்கின்றாரே
உடன் பிறந்தோர் ஐவர் உண்டே
தடுத்திடுவார் இங்கே யாருமுண்டோ

4. மேய்ப்பனில்லா ஆடுகள் திகைத்து திரிகின்றதே
வழி சத்தியம் ஜீவனான
கிறிஸ்துவை சொல்ல யாருமுண்டோ?

## பாடல் - 0952

**எக்காள சத்தத்தால்**
வீறு கொண்டு நீ எழும்பு
இக்கால எலியாவே
கர்த்தருக்காய் நீ எழும்பு
சீயோனே உன் வல்லமையை
தரித்தெழும்பு

1. கோலியாத்தை வீழ்த்திடவும்
தேவ ஜனம் மகிழ்ந்திடவும்
கர்த்தருக்காய் நீ எழும்பு
ஜீவனுள்ள தேவன் உண்டு
கல்லும் உண்டு கவணும் உண்டு
வைராக்கியமாய் நீ எழும்பு

2. கிதியோயே எழும்புவாயே
அடிமைத்தனம் முறித்திடவே
உனக்குள்ள பெலன் போதுமே
எதிர்த்து நிற்கக் கூடாத
வாக்கினையும் வல்லமையும்
பெற்றிடவே நீ எழும்பு

3. தெபோராக்கள் எழும்ப வேண்டும்
எஸ்தர்கள் ஜெபிக்க வேண்டும்
தேசத்திற்காய் நீ எழும்பு
எரிகோக்கள் தகர்க்க வேண்டும்
பாகால்கள் அழிய வேண்டும்
வெற்றி வாகை சூட நீ எழும்பு

## பாடல் - 0953
## (CM2/4/R-DISCO/T-125)

**வாழ்க வாழ்க வளமுடன் வாழ்க**
வாழ்க இயேசுவில் வாழ்கவே

1. கையின் பிரயாசங்கள் வாய்க்கவே
களஞ்சியம் நிரம்பி வழியவே
குடும்பம் பிள்ளைகள் செழிக்கவே
இயேசுவில் என்றென்றும் வாழ்கவே

2. கூடையும் மா பிசையும் தொட்டியும்
கையிடும் வேலையும் வாழ்கவே
போக்கிலும் வரத்திலும் மேன்மையே
இயேசுவில் என்றென்றும் வாழ்கவே

3. பொழிந்திடும் மழையும் காலத்தில்
விளைந்திடும் நிலமும் வேளையில்
ஜெபத்துடன் முயற்சியும் ஓங்கவே
இயேசுவில் என்றென்றும் வாழ்கவே

4. வீட்டோரம் திராட்சை செடி போல
மனைவியும் கனி தந்து விளங்குவாள்
பிள்ளைகள் ஒலிவக் கன்று போல்
இயேசுவின் என்றென்றும் வாழ்கவே

## பாடல் - 0954

**யெகோவாநிசி யெகோவா ஷாலோம்**
யுத்தத்தில் ஜெயக் கொடியானவர்
உலகம் மாமிசம் பிசாசு யாவையும்
ஜெயித்தாரே கல்வாரியில்

ஜெய ஜெய வேந்தனாய் சேனை அதிபதியாய்
எந்தன் நேசர் இயேசு வந்திடுவார்
அல்லேலூயா ஓசன்னா யூதராஜ சிங்கமே
துதி கனம் மகிமை என்றென்றும்

1. சர்ப்பங்கள் தேள்கள் மதித்திடவே
சாத்தானின் சதி அழித்திடவே
சிங்கம் மேல் நடந்து சர்ப்பங்கள் அழிந்திடும்
அதிகாரம் தந்திட்டாரே

2. சோதனை போராட்டம் வந்தாலும்
சோர்ந்து போகா நேசர் உண்டல்லோ
வழக்காடிடுவார் யுத்தம் செய்திடுவார்
வெற்றி மேல் நான் வெற்றி பெறுவேன்

3. ஜெயங் கொண்ட தேவகுமாரன்
விண்ணொளி வீசும் பிதா அருகில்
சிங்காசனம் மீது வீற்றிருக்கவே
அழைக்கிறார் சத்தம் கேளாயோ

**பாடல் - 0955**
**(E-Maj/DISCO hands/T-135)**

**கோடி கோடி ஸ்தோத்திரமே**
கோடா கோடி என் இயேசுவுக்கே

1. ஆயிரம் பேரிலும் சிறந்தவரே
ஆத்தும நேசர் என் இயேசுவே
அல்லும் பகலும் பாடிடுவேன்
ஆயுள் முழுவதும் உன் நாமமே

2. தாழ்வில் இருந்து தூக்கினீரே
தாவீதைப் போல் பாடிடுவேன்
தாங்கி என்னை நடத்தினீரே
தற்பரனே துதி பாடிடுவேன்

3. பகலில் பறக்கும் அம்புகட்கும்
பாழும் கொள்ளை நோய்களுக்கும்
பறந்து காக்கும் பட்ஷி நீரே
பாடுவேன் துதி அல்லேலூயா

**பாடல் - 0956**
**(G-Maj/16 Beat/T-100)**

**வானங்களும் வானங்களும்**
வானாதி வானங்களும்
தேவாதி தேவனே ராஜாதி ராஜனே
உம்மையே கொள்ளாதே - 2

1. உன்னதமானவர் நீரே நீரே
உண்மையுமானவர் நீரே நீரே
உண்மையிலேயே தேடுவோரை
உன்னத பலன் தந்து உயர்த்துவீரே

2. ஆவியோடு உம்மை நான் பாடுவேனே
ஆவியான அருள் மாஜோதியே
ஆண்டிடும் என்னையும் உம் அன்பினால்
ஆர்ப்பரிப்பேனே நான் உம் ஆவியால்

3. ஆடிப்பாடி போற்றுவேனே என் ஏசுவே
ஆயிரம் நாவு போதா உம்மை ஏற்றவே
ஆதியிலே ஜலத்தின் மீது அசைவாடினீர்
ஆவியாக ஜனத்தின் மீது அமர்ந்திடுமே

பாடல் - 0957
(G-Maj/16 Beat/T-100)

**சேனைகளின் கர்த்தாவே**
உமது வாசஸ்தலங்கள்
எவ்வளவு இன்பமானவைகள்

1. ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உமது பிரகாரத்தில் ஒரு நாள் நல்லது
ஆகாமிய கூடாரங்கள் அழியுமே
எந்தன் தேவா உந்தன் வாசலில்
காத்திருந்தால் போதுமே

2. சாலமோன் தேவ ஆலயம்
உந்தனின் மகிமையால்
நிறைந்தது போலவே
எந்தனை நிரப்பிடும் இயேசுவே
நான் உந்தனின் நன்மையை
ஊருக்கெல்லாம் சொல்லுவேன்

3. ஊற்றிடுமே உந்தன ஆவியை
உந்தனின் பிள்ளைகள் எங்களின் மீதிலே
அனல் மூட்டி எழுப்பிடும் தேவனே
நான் ஆவியாலே நிறைந்து
உமக்காக வாழ்ந்திட

4. அற்புதம் செய்திடும் தேவனே
இப்போதே எங்களில் இறங்கியே வாருமே
அபிஷேகம் தந்திட வேண்டுமே
உம் தரிசனம் கண்டிட
எந்தன் உள்ளம் நாடுதே

பாடல் - 0958
(C-Maj/16 Beat/T-100)

**யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்**
நீர் மாத்திரம் போதும் எனக்கு
யெகோவா ரஃப்பா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்
யெகோவா ஷம்மா என் கூட இருப்பீர்
என் தேவையெல்லாம் சந்தீப்பீர்

நீர் மாத்ரம் போதும் (3) - எனக்கு - 2

1. யெகோவா ஏலோஹிம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யெகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப்போல் வேறு தேவன் இல்லை
யெகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில் - நீர்

2. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்மேல் எவ்வளவன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுவதும்
உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும் - நீர்

பாடல் - 0959

**கலக்கமில்லை கலக்கமில்லை**
உம்மை நம்பினோர்க்கு கலக்கமில்லை

1. சிங்கக் குகையில் தள்ளினாலும்
தீச்சூளையில் போட்டாலும்
வல்ல தேவன் எனக்குள் இரப்பதனால்
சிங்கம் நெருப்பும் என்ன செய்திடும்

2. சிறைச்சாலையில் தள்ளினாலும்
சங்கிலியால் கட்டிப் போட்டாலும்
வல்ல தேவன் எனக்குள் இருப்பதனால்
சிறையும் சங்கிலியும் என்ன செய்திடும்

3. செங்கடல்கள் சூழ்ந்து வந்தாலும்
எரிகோ மதில் தடை செய்தாலும்
வல்ல தேவன் எனக்குள் இருப்பதனால்
செங்கடலும் எரிகோவும் என்ன செய்திடும்

## பாடல் - 0960
## (R-DISCO-125/F2/4)

**தினம் தினம் நம் தேவனையே**
மனம் மனம் மகிழ்ந்து துதித்திடுவோம்

1. இரக்கம் உருக்கம் நிறைந்தவரே
மறவாமல் நம்மை காப்பவரே
சிறந்த நாமம் உடையவரே
அரணான துணையாய் இருப்பவரே

2. அன்பின் உருவம் உடையவரே
ஆண்டவர் அகிலத்தை சிருஷ்டித்தாரே
ஆறுதல் எல்லோருக்கும் தருபவரே
அன்னையை போல அணைப்பவரே

3. விண்ணில் மகிமை உடையவரே
மண்ணில் சமாதானம் தருபவரே
என்னில் தினமும் வாழ்பவரே
உன்னில் அழைத்தால் வருபவரே - 2

## பாடல் - 0961

**கர்த்தர் என் நம்பிக்கை துருகமானவர்**
கன்மலை கோட்டையும் ரட்சிப்புமானவர்
அடைக்கலம் புகலிடம் கேடகம் என்றார்
ஆபத்து நாளில் என் அபயமுமாவார்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. வானம் அசைந்தது பூமி அதிர்ந்தது
பாதாள கட்டுகள் கழன்று போனது
பார்தலத்தின் ராஜன் உயிர்த்தெழுந்தாரே
கர்த்தர் கர்த்தர் என்று பூமி முழங்குதே

2. சமுத்திரத்தின் மேல் அதிகாரமுடையவர்
சந்ததி பிரகாரத்தில் அக்கினியானவர்
சிங்காசனம் என்றுமாய் வீற்றிருக்கவே
சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தாரே

## பாடல் - 0962

**மீட்பரின் சத்தம் என் நேசரின் சத்தம்**
மேகத்தின் மீது வருவேன் என்றார்
எக்காளம் முழங்கிடும் வேளையில்தான்
தூதர்கள் சூழ்ந்திட வந்திடுவார்

1. அவர் வரும் வேளையை அறிந்திடாமல்
அழிந்திடும் பாதையில் செல்கின்றாரே
ஆவியின் அச்சாரம் பெற்றிடாமல்
அழுது புலம்பி திரிகின்றாரே

2. உலக கவலை மதியீனத்தால்
உள்ளங்கள் உடைந்து வாழ்கின்றாரே
உன்னதர் இயேசுவை நேசியாமல்
உல்லாச வாழ்வினில் மடிகின்றாரே

3. உன்னை நேசிக்கும் அன்பர் உண்டு
இயேசு என்னும் நேசர் உண்டு
உள்ளத்தை அவரண்டை தந்திடு இன்று
உண்மையில் நித்திய ஜீவன் உண்டு

## பாடல் - 0963

**ஆராதனை இந்த வேளை**
ஆண்டவரைத் தொழும் காலை
துதியுடனே ஸ்தோத்தரிப்போம்
தூயவரே தொழுதிடுவோம்

1. ஆவியுடன் நல் உண்மையுடன்
ஆராதிப்போம் அவர் நாமத்தையே
கூடிடுவோம் பணிந்திடுவோம்
கல்வாரி அன்பினை பாடிடுவோம்

2. திரு ரத்தத்தால் மீட்பர் சம்பாதித்த
திருச்சபையில் தினம் கூடிடுவோம்
தவறாமல் வேதம் ருசி பார்த்திட
திருப்பாதம் சேர்ந்து ஜெபித்திடுவோம்

3. மெய் சமாதானம் கிருபையோடு
மாறாத மீட்பர் மகிமையோடு
மாசற்ற பேரின்ப அன்பினிலே
மறுரூபமடைந்து பறந்திடுவோம்

## பாடல் - 0964

**இரட்சிப்பின் தேவன்**
நாம் அவரை துதிப்போம்
ஆனந்த கீதம் நாம் என்றும் பாடுவோம்

1. நீதிமான்கள் கூடாரத்தில்
ரட்சிப்பின் சத்தம் உண்டு
நீதியின் வாசல் திறந்து
கர்த்தரை துதித்து பாடிடுவோம்

2. மனுஷரில் நம்பிக்கை வேண்டாம்
கர்த்தர் பேரில் நம்பிக்கை வைப்போம்
அனுகூலம் கர்த்தர் செய்வார்
சத்துருவை தேவன் முறியடிப்பார்

3. கர்த்தரின் நாமத்தினால்
ஆசீர்வாதம் என்றும் உண்டு
அவர் பாதம் என்றும் பணிவோம்
ஆசீர்வாதம் சபையில் வெற்றிடுவோம்

## பாடல் - 0965

**மதுர கீதம் பாடிடுவோம் – மன்னன்**
இயேசுவின் நாமத்தை போற்றிடுவோம்
ஆனந்தமாக கீதங்கள் பாடி
ஆண்டவர் நாமத்தை உயர்த்திடுவோம்

1. வானங்கள் மேலாக உயர்ந்தவரை
வாழ்த்தி புகழ்ந்து துதித்திடுவோம்
இயேசுவே வாரும் வாஞ்சையை தீரும்
வார்த்தையை பேசும் வல்லமை தாரும்

2. தூதர்கள் போற்றும் தேவன் நீரே
தீங்கென்றும் செய்யா ராஜன் நீரே
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்று
தம்மிடம் வருவோரை தள்ளாத நேசர்

3. மாந்தர்கள் போற்றும் ராஜன் நீரே
மரணத்தை ஜெயமாக வென்றவரே
மன்னிப்பை அளிப்பீர் மாந்தரை மீட்பீர்
மறுரூபமாக்கி மகிமையில் சேர்ப்பீர்



அட்டவணை

## பாடல் - 0966

**தரிசனம் தாருமையா**
உம்மைத் தரிசிக்க உம்மில் ஜெபித்திட
அருள் மாரியைத் தாருமையா
தரிசனம் தாருமையா

1. யாக்கோபை போல முழு இரவில் நாம்
முழங்காலில் நின்று தனிமையில் ஜெபிக்க
நன்மைகள் அடைந்திடவே
தேவா உம்மையே தரிசிக்கவே

2. தானியேல் போல தவறாமல் ஜெபிக்க
தடை பல வந்தும் உம்மையே நோக்க
ஜெயம் பெற்று வாழ்ந்திடவே
இந்த உலகத்தை ஜெயித்திடவே

3. இயேசுவே உம் போல் என்றென்றும் ஜெபிக்க
ஜெப ஆவியாலே எங்களை நிரப்பும்
பரிசுத்த ஆவியிலே
பரன் இயேசுவின் சமூகத்திலே – 2

## பாடல் - 0967
(F-Min/70's DISCO-125/T-98)

**வல்லமை தேவன் நன்மைகள்**
செய்தார் ஸ்தோத்தரி
வாக்குகள் மாறா கிருபைகள்
தந்தார் ஸ்தோத்தரி

ஸ்தோத்தரி தினமே ஸ்தோத்தரி
ஸ்தோத்தரி மனமே ஸ்தோத்தரி
அல்லேலூயா (5) அல்லேலூயா – 2

1. வறண்ட பாதையில் வழியை காட்டினார் ஸ்தோத்தரி
வாதை நேரத்தில் வைத்தியர் ஆனார் ஸ்தோத்தரி

2. துன்பத்தின் நடுவில் இன்பமாகினார் ஸ்தோத்தரி
துயரத்தின் வேளையில் ஆறுதல் தந்தார் ஸ்தோத்தரி

3. தாழ்மையில் நம்மை தயவாய் நினைத்தார் ஸ்தோத்தரி
கண்ணீர் யாவையும் கனிவாய் துடைத்தார் ஸ்தோத்தரி



அட்டவணை

4. கூப்பிடும் வேளையில் செவி கொடுத்தாரே ஸ்தோத்தரி
ஆபத்து காலத்தில் அடைக்கலமானார் ஸ்தோத்தரி

5. பாவங்கள் நோய்களை சிலுவையில் சுமந்தார் ஸ்தோத்தரி
பரிசுத்த வாழ்வை நமக்களித்தாரே ஸ்தோத்தரி

6. நித்திய ஜீவனை வாக்களித்தாரே ஸ்தோத்தரி
நித்தமும் அவரது கிருபையை எண்ணி ஸ்தோத்தரி

## பாடல் - 0968

**நம்மை அழைத்தவர் இயேசு வல்லவர்**
அனுதினமும் நடதுதுவார்
கரம் பிடித்து கர்த்தர் காப்பார்
கனிவோடு நடத்திடுவார்

நல்லவர் இயேசு வல்லவர்
நன்மையினால் நம்மை நடத்திடுவார்

1. வலக்கரம் அவரின் வல்லமை மகத்துவமானது
வானத்தில் அவரின் கிரியை மகிமையானது

2. அற்புதர் அவரின் வார்த்தை அதிசயமானது
ஆசாரியர் கடந்த யோர்தான் வழியை திறந்தது

3. பூமியில் உமது நாமம் இரட்சிக்க வல்லது
சமுத்திரம் உமது வார்த்தைக்கு கீழ்படிய வல்லது

## பாடல் - 0969

**என் உள்ளம் பொங்கும் துதியின் சத்தங்கள்**
என் இயேசு ராஜா புகழைச் சொல்லுமே
கர்த்தர் செய்த நன்மைகள்
என்னால் மறக்க கூடுமோ
நாள்தோறும் நன்றி சொல்லுவேன்

1. (கர்த்தர்) வலது கரமே என்றும் நன்மை செய்வாரே
பயங்கரங்கள் சூழ்ந்தாலும் பாதுகாப்பாரே
கூர்மையான அம்புகள் சத்துரு எய்தாலும் - 2
கவனமாக பாதுகாத்து என்னைக் காப்பாரே - 2

2. (கர்த்தர்) சொல்ல ஆகுமே அருள் ஆசி தந்தாரே
வெல்லும் வல்லமை அவர் தேவ வசனமே
சர்வ வல்லவர் நிழலில் என்றும் தங்குவேன் – 2
சந்தோஷ கீதங்களை என்றும் பாடுவேன் – 2

3. ஆத்ம நேசரே உம்மை அண்டிக் கொள்வேனே
அன்பு கொண்டு எந்தனை அரவணைப்பாரே
நித்திய கன்மலை அவர் நாமம் பாடுவேன் – 2
நன்மையினால் என்னை அவர் என்றும் நடத்துவார்

## பாடல் - 0970
## (F-Maj/6/8 soul/T-115)

**வானமீதில் ஏறிப் போன இயேசுவானவர்**
வருகை நாளில் திரும்பி வருவார் தூதர்களுடன்
ஆர்ப்பரிப்பின் சத்தமும் எங்கும் கேட்குமே
ஆரவார எக்காளம் வானில் முழங்குமே

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா – 2

1. பரிசுத்தத்தை காத்துக் கொண்ட பக்தர் யாவரும்
பறந்து செல்லும் பரவச நாள் நெருங்கி வருகுதே
பாடு கஷ்டங்கள் சகித்து வாழ்ந்தோர்கள் – 2
பரமன் பாதம் பாடல் பாடி என்றும் மகிழ்வார்கள்

2. மாம்சம் இரத்தம் லோக ஆசை அழிந்து போகுமே
பாவ சாபம் ரோகம் யாவும் மறைந்து போகுமே
இமைப் பொழுதிலே மறுரூபம் பெறுவோமே – 2
மன்னன் இயேசு அழைத்து செல்வார் மா சந்தோஷமே

3. இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் எங்கும் தொனிக்குதே
சாட்சி கூறி செய்தி சொல்ல தருணம் தந்தாரே
ஆத்துமாக்களை சேகரிப்போமே – 2
ஆண்டவரின் வருகை நாளில் ஆனந்திப்போமே

## பாடல் - 0971

**கர்த்தாவே காலையில்**
உம் சத்தத்தை கேட்கப் பண்ணுவீர்
உமக்கு நேரே ஆயத்தமாகி
தினம் காத்திருப்பேனே

1. என் கால்களை வழுவாதபடிக்கு
என் நடைகளை உமது வழிகளிலே
தினம் நடத்தும் பாதுகாத்திடுமே - 2

2. என் கன்மலை மீட்பரும் நீரே
என் வார்த்தையும் ஜீவனும் நீரே
உம் சமூகமே என் பிரியமே - 2

3. உன் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மை
உம் கிருபை என்னை தொடர்ந்திடுமே
நானும் நிலைத்திடுவேன் தினம் காத்திருப்பேன் - 2

## பாடல் - 0972
## (E2/4/R-80's FUSION/T-100)

**பரிமள தைலமாம் பரிசுத்தராம்**
என் இன்பமான இயேசு ராஜனாம்

1. காட்டுக்குள்ளே சிச்சிலி மரம்
என் நேசர் அன்பு வாசம் வீசிடும்

2. குருவி சத்தம் கூட்டமாய் பாடும்
என் நேசர் சத்தம் எங்கும் தொனிக்கும்

3. தீவிரிக்கும் புறாவைப் போல
என் நேசர் வர காலமாய்ச்சுதே

## பாடல் - 0973
## (FM-Beat 6/8 Tempo 120)

**ஆர்ப்பரிப்போம்! ஆர்ப்பரிப்போம்!!**
அலங்கம் இடியும் வரை ஆர்ப்பரிப்போம்!!!
எக்காளம் ஊதி எரிகோவைப் பிடிப்போம்
ஆரவாரத் துதியோடு கானானுக்குள் நுழைவோம்

எழுப்புதலின் நேரமல்லோ இது
யோசுவாவின் காலமல்லோ

1. துதிக்கும் நமக்கோ தோல்வி இல்லை
வெற்றி நிச்சயமே
பலங்கொண்டு திடமனதாயிருப்போமே
இந்த தேசத்தை சுற்றி சுற்றி சுதந்தரிப்போம் - இது

2. கர்த்தர் நாமம் சொல்ல சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர்கள் மதுரமாகுமே
யோர்தானின் தடையெல்லாம் விலகி போகுமே - இது

3. வாழும் இந்த தேசமெல்லாம்
நமக்கு சொந்தமாமே
வாக்களித்த வல்லவரை துதிப்போமே
அறிக்கை செய்து அனைத்தையும் ஆள்வோமோ - இது

4. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு யுத்தம் இல்லை
சர்வ வல்லவரின் ஆயுதத்தை ஏந்திடுவோமே
சாத்தானின் ராஜ்ஜியத்தை அழித்திடுவோமே - இது

## பாடல் - 0974
## (E-Maj/slow Rock/T-115)

**உம்மோடு செலவிடும் ஒவ்வொரு நிமிடமும்**
வீணாக போகாதையா - என்னை
பெலவானாய் மாற்றுதையா

ஓ தேவ பிரசன்னம் ஆ என்ன ஆனந்தம்
ஆகாயம் கொண்டு செல்லுதே

1. வானத்திலே தூதரெல்லாம்
பரிசுத்தரே என்று பணிகிறார்களே
பூமியிலே மண்ணான நான் - உம் நாமம்
வாழ்கவென்று தொழுகிறேனையா

2. தாயானவள் தன் பாலகனை மறந்தாலும்
என்னை மறவாதவர்
தகப்பனைப் போல் இரக்கமுள்ள பரிசுத்தரே
உம்மை பணிகிறேனய்யா

3. என் இயேசுவே உம் ஆவியால்
ஒருவிசையாய் என்னை நிரப்பிடுமையா
உலகத்திலே உமக்காக நான்
உயிருள்ளநாள் வரையில் உழைக்கணுமையா



அட்டவணை

## பாடல் - 0975

**தூய தூய தேவனை**
துதிகள் நடுவில் வசிப்போரை
தூய்மை கொண்ட இதயத்துடன்
துதிகள் செலுத்தி போற்றுங்கள்
அல்லேலூயா அல்லேலூயா

உன்னதர் உன்னதர் உன்னதரே
உலகினை காக்கும் உயர்ந்தவரே

1. ஒளியும் வழியும் ஆனவரே
ஒருவராய் அதிசயம் செய்பவரே
உலகை மீட்க பலிப் பொருளாய்
உன்னதம் துறந்த தூயவரே
அல்லேலூயா அல்லேலூயா

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
பாவியை நேசிக்கும் நல்லவரே

2. ஆதியும் அந்தமும் ஆனவரே
ஆறுதல் தேறுதல் அளிப்பவரே
ஆவியின் ரூபமாய் எங்களிடம்
வசித்திடும் ஆவியானவரே
அல்லேலூயா அல்லேலூயா

சத்திய ஆவியை வாழ்த்துகிறோம்
நித்திய தேவனை போற்றுகிறோம்

3. துதிக்கின்றோம் நம் தேவனை
துதிக்கின்றோம் நம் இயேசுவை
துதிக்கின்றோம் ஆவியானவரை
துதிக்கின்றோம் திரியேகரை
அல்லேலூயா அல்லேலூயா

மகிமை உமக்கே செலுத்துகிறோம்
மாட்சிமை உமக்கே படைக்கின்றோம்

## பாடல் - 0976

**நம் வாழ்வை நன்மையாலே நிறைத்திடுவார்**
இயேசு துணை நடப்பார்
ஏந்திக் கொள்வார் நம்மை தாங்கிக் கொள்வார்
நாளெல்லாம் அவர் தோளில் சுமந்து செல்வார்

1. வானம் பூமி ஆளும் தேவன் நம்மை நேசித்தார்
வாடி நின்ற நேரமெல்லாம் நம்மை தேற்றினார்
வாழும் வழிகாட்டி நம்மை நித்தம் போதித்தார்
வனாந்திர வாழ்க்கையிலே நம்மை போஷித்தார்
இருள் நீக்கினார் வாழ்வின் துயர் மாற்றினார்
வருங் காலங்களில் நம் துணையாய் நிற்பார்

2. உள்ளத்திலே கள்ளம் நீக்கி தூய்மை அளிப்பார்
நம் எண்ணங்களில் செயல்களில் ஆளுகை செய்வார்
பள்ளங்களை நிரப்பி நல் வளமருள்வார்
பாடுகளை எதிர் கொள்ள பெலனளிப்பார்
வரும் காலத்தை அவர் நலமாக்குவார்
வழிகாட்டியே நல் அரணாகுவார்

3. பாலும் தேனும் ஓடி வரும் புது வாழ்க்கையில்
பாவ இருள் நீங்கிவிடும் அவர் நாமத்தில்
பாதைகளில் தடைகளும் உடைந்து விழும்
பாழ் மரமும் செழித்து நல்கனி கொடுக்கும்
துதி கீதமும் வல்ல ஜெப தியானமும்
தினந்தோறும் நம் வாழ்வில் நிறைவாகிடும்

4. கண்ணின் மணி போல் நம்மை காத்துக் கொள்வதால்
கண்ணில் வைத்து ஆலோசனை நித்தம் சொல்வதால்
கானம் கோடி பாடி அவர் புகழ் சொல்லுவோம்
கைகள் தட்டி கெம்பீரமாய் துதித்திடுவோம்
வழியானவர் ஜீவன் அளிப்பாரென்று
அழிகின்ற ஜனத்திற்கு தினம் கூறுவோம்

## பாடல் - 0977
## (F-Min/Mambo/T-120)

**வானம் பூமியும் மாறிடினும்**
உம் வார்த்தை மாறாதது
வாழ்வின் தீபமாய் வழி நடத்தும்
உம் வசனம் நிலையானது

1. கண்கள் காணும் யாவும் ஓர்நாள் மாறும்
இந்த மண்ணிலுள்ள மகிமையெல்லாம் மாறும்
விண்ணில் காணும் நட்சத்திரம் மாறும்
என் எண்ணங்களும் சிந்தைகளும் மாறும்
கடல் மாறும் மலை மாறும்
உம் வார்த்தை மாறாதது

2. காலங்களும் சூழ்நிலையும் மாறும்
நம் கால்கள் செல்லும் பாதைகளும் மாறும்
காற்று வீசும் திசைகளும் மாறும்
கடும் காரிருள் காலையாக மாறும்
மனம் மாறும் குணம் மாறும்
உம் வார்த்தை மாறாதது

3. பந்தங்களும் பாசங்களும் மாறும்
நம் நம்பியுள்ள நட்பும் கூட மாறும்
இந்த வளம் நிறைந்த வாழ்க்கை கூட மாறும்
இந்த வாலிபத்தின் அழகும் ஓர்நாள் மாறும்
நிலை மாறும் நிறம் மாறும்
உம் வார்த்தை மாறாதது

## பாடல் - 0978

**துதி துதி துதி உன் ஆண்டவரை நீ துதி**

1. உன்னத தேவனை துதி
உதவிடும் தேவனை துதி
உயிருள்ளவரையிலும் துதி
உலகம் அறிந்திட துதி

2. பரலோக தேவனை துதி
பரிசுத்த தேவனை துதி
பலமுள்ள வரையிலும் துதி
பரலோகம் மகிழ துதி

3. மகிமையின் தேவனை துதி
மகத்துவ தேவனை துதி
மன்னவன் இயேசுவை துதி
மகிமையில் சேர துதி

4. அன்பின் தேவனை துதி
அதிசய தேவனை துதி
அல்லும் பகலும் துதி
அல்லேலூயா என்று துதி

## பாடல் - 0979

**ஜீவனுள்ள ஆராதனை உமக்குத்தானே**
ஜீவிக்கின்ற தெய்வம் நீர் ஒருவர் தானே

ஏக தெய்வமே உமக்கு ஆராதனை
திரியேக தெய்வமே உமக்கு ஆராதனை

1. சுத்தமுள்ள ஆராதனை உமக்குத்தானே
பரிசுத்தமுள்ள தெய்வம் நீர் ஒருவர் தானே

2. அதிகாலை ஆராதனை உமக்குத்தானே
தினம் அதிசயம் செய்ய நீர் ஒருவர் தானே

3. இரவிலும் ஆராதனை உமக்குத் தானே
எனக்கு இரக்கம் காட்ட நீர் ஒருவர் தானே

4. எப்பொழுதும் ஆராதனை உமக்குத் தானே
இப்பொழுதும் ஆராதனை உமக்கு செய்வேன்

பாடல் - 0980
(F-Maj/waltz/T-165)

**போற்றுவோம் தேவனை இன்றும் என்றுமாய்**
ஆவியுடன் உண்மையுடன்
ஆராதிப்போம் இயேசுவை

1. சென்ற நாளினில் சுகமுடன்
காத்த தேவனை ஸ்தோத்தரிப்போம்
தந்தேன் எந்தனை வந்தேன் பாதமே
என்றும் சொந்தமாய்

2. தேவ ஜனத்தின் ஆகாரமாய்
மன்னா புசித்து ஜீவித்தாரே
என்றும் ஜீவித்திட கர்த்தர் இயேசுவில்
என்றும் வளருவோம்

3. தேவ கிருபை தங்கிடவே
தேவ தேவனை ஆராதிப்போம்
உள்ளம் நொறுங்கியே உண்மை மனதுடன்
என்றும் தொழுகுவோம்

4. தேவ ஆலயம் மகிமையால்
நிரம்பி தங்கிட ஆராதிப்போம்
துதி பலியுடன் போற்றி புகழ்ந்துமே
சாற்றி ஆர்ப்பரிப்போம்

**பாடல் - 0981**
**(E-Min/DISCO Fox/T-115)**

**உம்மை நேசிக்கிறேன் இயேசுவே**
என் இரட்சகா என் தேவா - 2
உம்மை ஆராதிப்பேன் போற்றுவேன் தேவா
நீரே என்றும் என் வாழ்வினில் தேவன்

1. பெலவீனம் வியாதி எனை சூழும்போது
பரிகாரி நீர் போதுமே
பரிசுத்தர் நீரே பாரில் வந்ததால்
பாவங்கள் பறந்தோடுதே
பரலோகில் நான் சேர வழியானீரே

2. நிழல் தேடி அலைந்தேன் நிழலானீர் தேவா
நிதம் உம்மை நான் பாடுவேன்
நிலையில்லா வாழ்வில் நீர்தானே என்னை
நினைவில் கொள்ளும் நாதனே
நீரன்றி யாருண்டு நான் பாடி மகிழ

**பாடல் - 0982**
**(F-Min/Orient Pop/T-110)**

**நான் உனக்கு துணை நிற்கிறேன்**
என்றவரே ஸ்தோத்திரம்
வலக்கரம் பிடித்து துணையாய் நிற்பவரே
வல்ல தேவனே ஸ்தோத்திரம்

1. பாவத்தை ஜெயிக்க பரிசுத்தமாய் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
இரத்தத்தால் கழுவி ஆவியினால் நிரப்பி
அரவணைத்தவரே ஸ்தோத்திரம்

2. பாடுகள் சகிக்க மகிழ்ச்சியாய் நாம் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
வார்த்தையால் தேற்றிவல்லமையால் நிரப்பி
நடத்துபவரே என்றும் ஸ்தோத்திரம்

3. சாத்தானை ஜெயிக்க வெற்றியாய் என்றும் வாழ
துணை நிற்பவரே ஸ்தோத்திரம்
அன்பினால் அணைத்து அபிஷேகத்தால் நிரப்பி
ஆதரிப்பவரே என்றும் ஸ்தோத்திரம்

## பாடல் - 0983

**உன்னை சிருஷ்டித்தவர்**
உன்னை மறப்பாரோ
உன்னை உண்டாக்கினவர்
உன்னை விடுவாரோ

கலங்கிடும் மாந்தரே கண்ணீரே துடைத்திடு
கவலையை விட்டு விட்டு வா
இயேசுவை பின்பற்றிவா

1. காற்றும் கடலும் எதற்காக?
கனி மரமெல்லாம் எதற்காக?
ஓடும் நதிகள் எதற்காக?
அத்தனையும் அது உனக்காக

2. மலையும் மலர்கள் எதற்காக?
நிலமும் நீரும் எதற்காக?
பாடும் பறவைகள் எதற்காக?
அத்தனையும் அது உனக்காக

3. சிலுவை சுமந்தது எதற்காக?
சிந்தின ரத்தம் எதற்காக?
ஜீவனை கொடுத்தது எதற்காக?
அத்தனையும் அது உனக்காக

## பாடல் - 0984
## (E-Min/6/8 soul/T-126)

**ஆராதனை உமக்குத்தான்**
அப்பா அப்பா உமக்குத்தான் – 2
எஜமான் நீரிருக்க
அடிமை நான் ஆராதிக்க
இரத்தத்தால் கழுவி என்னை
சுத்தமாக மாற்றினீரே

1. சாரோனின் ரோஜாவே
பூத்து குலுங்கும் வாசனையே
உம்மைப் போல் மணம் வீச
யாருண்டு உலகினிலே

2. சீலோவாம் குளத்தினிலே
கழுவும் போது கண் திறந்தீர்
எப்பத்தா என்று சொல்லி
செவிகளை திறந்து விட்டீர்

3. அப்பாவின் பாதத்தில் நான்
அமர்ந்திருந்து பெலனடைந்து
கழுகு போல் சிறகடித்து
உயர உயர பறந்திடுவேன்

4. அக்கினி அபிஷேகம்
தலை மேல் இறங்கனுமே
தூபமாய் நறுமணமாய்
துதிகளை நான் செலுத்தணுமே

## பாடல் - 0985

**நன்றி இயேசுவே நல்ல இயேசுவே**
நாதா உம்மை துதித்திடுவேன்
நீரே எந்தன் துணை நீரே எந்தன் வழி

1. துன்பங்கள் சூழ்ந்தாலும் இன்பங்கள் மறைந்தாலும்
கர்த்தரின் கிருபையால் மகிழ்ந்தே செல்லுவேன்

2. பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்பிற்கு பயப்படேன்
சேனையின் கர்த்தரால் ஜெயமாய் செல்லுவேன்

3. கலங்கரை தீபங்கள் ஒளித்தரா போயினும்
உம் திரு வார்த்தையால் வளர்ந்தே செல்லுவேன்

4. தாய் தந்தை மறந்தாலும் நண்பர்கள் பகைத்தாலும்
நலல்லவர் இயேசுவால் நலமாய் செல்லுவேன்

## பாடல் - 0986

**அல்லேலூயா ஸ்தோத்திரம்**
துதிகளிலே பாத்திரம்
இயேசு நாதர் புகழையே போற்றிப் பாடிடு
பாடிடு பாடிடு இயேசு ராஜன் புகழ் பாடிடு

1. தூதர்கள் போற்றும் தேவன்
துதிகளிலே வாசம் செய்யும் தூய நேசன்
மாந்தர்கள் உள்ளத்தில்
வேந்தனாய் வாழ்ந்திடும்
மகிமையின் தேவனை வாழ்த்திப் பாடிடு

2. தாழ்வில் நம்மை நினைத்தவர்
வாழ்விற்கு வழிதனை திறந்து தந்தார்
கர்த்தர் நல்லவர் என்றும் பெரியவர்
காலமெல்லாம் அவர் புகழை போற்றிப் பாடிடு

3. சேதமின்றி காத்தார்
தாங்கி ஏந்தி சுமந்து தப்புவித்தார்
அன்பின் தேவனை ஆத்தும நேசரை
ஆவியில் நிறைந்து மகிழ்ந்து பாடிடு

## பாடல் - 0987

**என் சமூகம் உன் முன் சென்றிடும்**
இளைப்பாறுதல் நான் தந்திடுவேன்
கலங்கிடாதே பயப்படாதே
கரம் பிடித்து உன்னை நடத்திடுவேன்

1. செங்கடல் உனக்காய் வழி திறக்கும்
சாத்தானின் சேனைகள் அழிந்து போகும்
யோர்தான் நதியும் விலகி ஓடும்
ஜீவ வாசல் உன்னை வரவேற்கும்

2. மாராவும் உனக்காய் மதுரமாகும்
எரிகோ கோட்டையும் இடிந்து விடும்
சூரியன் சந்திரன் தரித்து நிற்கும்
ஜீவ ஒளி உன்னை நடத்தி செல்லும்

3. வாதை உன் கூடாரம் அனுகிடாது
வழிகளெல்லாம் தூதர் காத்திடுவார்
பாதங்கள் கல்லில் இடறிடாது
தூதர்கள் கைகளில் ஏந்திச் செல்வார்

4. பகைவர்கள் நல்லோராய் மாறிடுவார்
வெறுத்தோர் என்னை வரவேற்பார்
கோணலான எல்லாம் செவ்வையாகும்
மகிழ்வுடன் என்றும் வாழ்ந்திருப்பாய்

## பாடல் - 0988

**பூமியின் குடிகளே நீங்கள் எல்லோரும்**
தேவனுக்கு முன்பாக கெம்பீரமாய் பாடுங்கள்

பாடுங்கள் நம் தேவனை
போற்றுங்கள் நம் ராஜனை

1. துதியின் சத்தத்தோடு சேர்ந்து பாடுங்கள்
ஸ்தோத்திர கீதங்கள் தொனிக்க பாடுங்கள்
வல்லவரை நல்லவரை போற்றிப் பாடுங்கள்
வாழ வைக்கும் தெய்வத்தை வாழ்த்திப் பாடுங்கள்

2. ஆனந்த சத்தத்தோடு மகிழ்ந்து பாடுங்கள்
ஆர்ப்பரித்து அல்லேலூயா சொல்லி பாடுங்கள்
பெரியவரை பரிசுத்தரை துதித்துப் பாடுங்கள்
பத்து நரம்பு வீணைதனை இசைத்துப் பாடுங்கள்5

3. இன்னிசைக் கருவிகள் இசைத்துப் பாடுங்கள்
இனிமையான குரலினிலே இனிதாய் பாடுங்கள்
ஆவியோடும் கருத்தோடும் பாட்டுப் பாடுங்கள்
ஆண்டவர் இயேசுவையே என்றும் பாடுங்கள்

4. ஓசன்னா கீதத்தால் ஓயாமல் பாடுங்கள்
ஒருமனமாய் ஆவியிலே நிறைந்து பாடுங்கள்
நம்மை மீட்ட இரட்சகரை என்றும் பாடுங்கள்
நாளெல்லாம் காப்பவரை புகழ்ந்து பாடுங்கள்

## பாடல் - 0989

**அப்பா உந்தன் பாதம்**
அமர்ந்திருக்கும் நேரம்
அன்பாலே உள்ளம் பொங்குதே
உந்தன் அன்பாலே உள்ளம் பொங்குதே

1. பாவம் சாயம் போக்கி
நோய்களெல்லாம் நீக்கி
சுகமான வாழ்வை தந்தீரே - எனக்கு

2. அன்பின் ஆவியாலே
அபிஷேகித்து நிறைத்தீர்
அன்பரே உம்மைத் துதிப்பேன் - என்றும்

3. கிருபை வசனத்தாலே
மகிமை வாழ்வை தந்தீர்
இராஜாவே உம்மை புகழ்வேன் - இயேசு

4. கருணையுள்ள தேவா
அருளைப் பொழியும் நாதா
உமக்காக என்றும் வாழ்வேன் - இனி



அட்டவணை

## பாடல் - 0990

**அப்பா உந்தன் இளைய மகன்**
உம்மை தேடி வந்திருக்கிறேன்
உம் மகன் என்று சொல்ல தகுதியில்லை
உம் பணி செய்ய என்னை வைத்துக் கொள்ளும்

1. தூரமாய் பிரிந்து போனேன்
துன்மார்க்கமாய் அலைந்து சென்றேன்
ஆஸ்தியை அழித்து வந்தேன் - உம்
அன்பை மறந்து சென்றேன்

2. பஞ்சத்தால் குறைவு பட்டேன்
பசியோடு வாடி நின்றேன்
பரத்திற்கு விரோதமாக - பல
பாவங்கள் செய்து வந்தேன்

3. உம் அன்பை உணர்ந்து வந்தேன்
உம் பாதம் சரணடைந்தேன்
மனந்திரும்பி வந்துவிட்டேன் - என்னை
மன்னித்து ஏற்றுக் கொள்ளும்

4. ஜீவன் இருக்கும் வரை
இனி உமக்காய் வாழ்ந்திருப்பேன்
மரணம் பிரிக்கும் வரை
மன நிறைவாய் பணி செய்வேன்

## பாடல் - 0991

**எண்ணில்லா நன்மைகள்**
இயேசுவே செய்திட்டார்
பாவ சாபம் நீக்கி தூய வாழ்வை தந்தார்

1. உடைந்து போன பாத்திரம் போல
உருவம் இழந்து நின்றேன்
குயவனாக அருகில் வந்து
புதிதாய் வனைந்து விட்டார்

2. காணாமல் போன ஆட்டினைப் போல
கானக பாதை சென்றேன்
மேய்ப்பனாக தேடி வந்து
மந்தையில் சேர்த்துக் கொண்டார்

3. காணாமல் போன காசினைப் போல
இருளில் மறைந்து வாழ்ந்தேன்
தேவ ஆவியின் ஒளியினாலே
தேடி எடுத்துக் கொண்டார்

4. இளைய மகன் போல தூரமாய் போனேன்
இரக்கம் என்மேல் கொண்டார்
தகப்பனாக மனது உருகி
மார்பில் அணைத்துக் கொண்டார்

### பாடல் - 0992

**தேவ ஆவியே என்னை தேற்றும் ஆவியே**
தூய ஆவியே தூய்மையாக்கும் ஆவியே

1. பரிசுத்த ஆவியே பாவம் போக்குமே
பரலோக ஆவியே பெலப்படுத்திடுமே

2. கிருபையின் ஆவியே கிருபை தாருமே
வல்லமை ஆவியே வரங்கள் தந்திடுமே

3. சத்திய ஆவியே உண்மை தாருமே
நித்திய ஆவியே ஜீவன் தந்திடுமே

4. புதிய ஆவியே புது சிருஷ்டியாக்குமோ
சிசேஷித்த ஆவியே வெளிப்படுத்திடுமே

5. அன்பின் ஆவியே அன்பைத் தாருமே
நல்ல ஆவியே நன்மை தந்திடுமே

6. உன்னத ஆவியே அன்பைத் தாருமே
மகிமையின் ஆவியே மருரூபமாக்குமே

### பாடல் - 0993

**எருசலேமே கர்த்தரை ஸ்தோத்தரி**
சீயோனே உன் தேவனைத் துதி

துதித்தாலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது

1. துதிகளிலே வாசம் செய்யும் இயேசு பெரியவர்
துதிப்பதினால் எரிகோ கோட்டை இடிந்து விழுமே
சத்துருவை மேற்கொள்ளும் துதியின் வல்லமை
சாத்தானை ஓட வைக்கும் துதியின் ஆயுதம்

2. துதிப்பதினால் பயமெல்லாம் பறந்து போகுமே
துதிக்கின்ற உள்ளம் எல்லாம் ஜெயம் கொள்ளுமே
துதியுடனே வாசல் முன்னே சென்றிடுங்கள்
துதியினால் மகிமையினை கண்டிடுங்கள்

3. துதியுடனே கர்த்தரை பாடி மகிழ்ந்திடு
சுரமண்டலத்தால் கீர்த்தனம் சொல்லி புகழ்ந்திடு
வார்த்தையினால் வானம் பூமி படைத்த தேவனை
வாழுகின்ற நாளெல்லாம் போற்றி துதித்திடு

4. துதி நிறைந்த உள்ளம் மகிழ்ந்து பாடுமே
துதிக்கின்ற குடும்பம் செழித்து வாழுமே
துதி நிறைந்த ஆராதனை ஆசீர்வாதமே
துதியுள்ள சபைகள் வளர்ந்து பெருகுமே

## பாடல் - 0994

**ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் பாடிடுவோம்**
இயேசுவின் நாமத்தில் கூடிடுவோம்

1. கண்ணுறங்காமலே இரா முழுவதும்
கண்மணி போல் நம்மை காத்தனரே
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கூப்பிடும் ஏழை எளியவர்க்கும்
மாறாமல் பதிலை தருபவரே
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
ஓசன்னா கீதங்கள் முழங்கிடுவோம்

3. ஆபத்து காலத்து அடைக்கலமும்
அனுகூலமான துணையவரே
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
மகிழ்ந்து தினமும் போற்றிடுவோம்

4. நன்மை கிருபையால் தினம் நிரப்பி
வழுவாமல் நம்மைகாப்பவரே
இயேசு நல்லவர் என்றும் வல்லவர்
நன்றியுடன் துதி பாடிடுவோம்

## பாடல் - 0995

**ஆகாமிய கூடாரம் வேண்டாம் வேண்டாம்**
ஆலயம் ஒன்றே போதும் தேவா
அநீதியின் வாசஸ்தலம் வேண்டாம் வேண்டாம்
நீதியின் வாசஸ்தலம் போதும் தேவா

தேவா இயேசு தேவா நீரே போதும் நாதா - 2

1. பொய்யான உலக வாழ்வு வேண்டாம் வேண்டாம்
மெய்யான ஜீவ வாழ்வு போதும் தேவா
உலகத்தின் ஆசைகள் வேண்டாம் வேண்டாம்
ஊழியத்தின் வாஞ்சை ஒன்றே போதும் தேவா

2. துன்மார்க்க ஆலோசனை வேண்டாம் வேண்டாம்
வேதத்தின் தியானம் ஒன்றே போதும் தேவா
பாவியின் வழிகள் வேண்டாம் வேண்டாம்
பரிசுத்த பாதை ஒன்றே போதும் தேவா

3. உலகத்தின் இச்சைகள் வேண்டாம் வேண்டாம்
தேவனின் சித்தம் ஒன்றே போதும் தேவா
மாயையான இன்பங்கள் வேண்டாம் வேண்டாம்
மகிமையின் மகிழ்ச்சி போதும் தேவா

4. பாவத்தின் சந்தோஷங்கள் வேண்டாம் வேண்டாம்
பரிசுத்த ஜீவியம் போதும் தேவா
எகிப்தின் பொக்கிஷங்கள் வேண்டாம் வேண்டாம்
இனிவரும் பலன் ஒன்றே போதும் தேவா

## பாடல் - 0996

**இனிமையான நேரம் இன்பமான நேரம்**
உம் திருபாதம் அமர்வதே - இசையப்பா

1. பாதம் அமர்ந்தால் பயங்கள் நீங்கிடும்
வேதம் அறிந்தால் வேதனை மாறிடும்
உம் அன்பு பெரிதல்லவோ இயேசைய்யா - 2
உமது அன்பிலே அடிமை வாழ்ந்திட வேண்டும்

2. காலை தோறும் உம் கிருபை பெருகிடும்
மாலை முழுவதும் உம் மகிமை நிறைந்திடும்
உம் கிருபை பெரிதல்லவோ இயேசைய்யா - 2
உமது கிருபையில் அடிமை வளர்ந்திட வேண்டும்

3. பாவ சாபங்கள் ஓடி மறைந்திடும்
புதிய இதயமே துதிகள் பாடிடும்
உம் இரக்கங்கள் பெரிதல்லவோ இயேசைய்யா - 2
உமது இரகக்கத்தில் அடிமை சென்றிட வேண்டும்

4. கவலை கண்ணிகள் களிப்பாய் மாறிடும்
கஷ்ட நஷ்டங்கள் கரைந்து ஓடிடும்
உமது உண்மை பெரிதல்லவோ இயேசைய்யா - 2
உம் உண்மையில் அடிமை நின்றிட வேண்டும்

5. நன்மை கிருபையே தொடரும் நாளெல்லாம்
புல்லுள்ள இடம் நல்ல மேய்ச்சலே
நல் மேய்ப்பர் நீரல்லவோ இயேசைய்யா - 2
உமது மேய்ச்சலின் அடிமை செழித்திட வேண்டும்

## பாடல் - 0997
## (D-Maj/DISCO/T-110)

**உனக்குள்ளே இருக்கின்ற - உன்**
இயேசு என்றும் பெரியவரே
நீ அறியாததும் உனக்கெட்டாததுமான
பெரிய காரியங்கள் செய்திடுவார்

1. பெருவெள்ளம் மோதி அடிக்கின்றதோ
பெருங்காற்றில் படகு தவிக்கின்றதோ
பெரியவர் உனக்குள்ளே இருக்கின்றார்
பார்த்துக்கொள்வார் நீ கலங்காதே

2. நம்பிக்கை இல்லா நிலையானதோ
விசுவாசம் உன்னில் குறைவானதோ
அற்புதர் உனக்குள்ளே இருக்கின்றார்
அதிசயம் செய்வார் நீ கலங்காதே

3. சூழ்நிலை எல்லாம் எதிரானதோ
சுற்றத்தார் உன்னில் பகையானாரோ
வல்லவர் உனக்குள்ளே இருக்கின்றார்
வலக்கரம் தாங்குவார் கலங்காதே

4. செங்கடல் உனக்கு முன்னானதோ
சேனைகள் எல்லாம் பின்னானதோ
சேனையின் கர்த்தர் இருக்கின்றார்
சேதமின்றி காப்பார் கலங்காதே

5. மதுரமான வாழ்வு கசப்பானதோ
ஒளி வரும் நேரம் இருளானதோ
ஜீவனுள்ள தேவன் இருக்கின்றார்
யாவையும் செய்வார் கலங்காதே

பாடல் - 0998

**இராஜா இராஜா என் இயேசு இராஜா**
என்னை நீர் ஆண்டு கொண்டீர்

1. வாயின் வார்த்தைகளும் என் இதயத்தின் தியானங்களும்
உமது சமூகத்திலே பிரியமாகட்டும்

2. காலை மாலையிலும் இரவு நேரத்திலும்
எந்தன் நினைவெல்லாம் பிரியமாகட்டும்

3. பரிசுத்தம் நீதி உண்மை பரலோக தேவனே
எந்தன் வாழ்வினிலே என்றும் காணட்டும்

4. செல்லும் இடமெல்லாம் என் கண்ணின் பார்வைகள்
உமது பார்வைக்கு பிரியமாகட்டும்

5. கண்ணீர் ஜெபமெல்லாம் உமது சமூகத்திலே
பதில் தரும் ஜெபமாக என்றும் விளங்கட்டும்

6. பாடும் பாட்டெல்லாம் உமது நாமத்திற்கே
மகிமையுண்டாக என்று சொல்லட்டும்

7. செய்யும் வேலையெல்லாம் நிறைவாய் செய்திடவே
உமது கிருபை எண்ணில் என்றும் தங்கட்டும்

பாடல் - 0999

**சீயோன் தேசத்தில் நான் மகிழ்ந்திருந்து**
சேனைகளின் கர்த்தரோடு வாழ்ந்திருப்பேன்

1. கவலையில்லை அங்கு கண்ணீரில்லை
வருத்தமும் பசியும் அங்கு இல்லை
ஆட்டுக்குட்டியானவர் என்னை மேய்த்து
ஜீவத்தண்ணீர் ஊற்றண்டை நடத்திடுவார்

2. மரணம் இல்லை அங்கு துக்கம் இல்லை
அலறுதல் சத்தமும் அங்கு இல்லை
கர்த்தர் இயேசு எந்தன் கண்ணீர் துடைத்து
ஜீவ விருட்ச கனி தந்து நடத்திடுவார்

3. பாவம் இல்லை அங்கு சாபம் இல்லை
சூரியன் சந்திரன் அங்கு இல்லை
ஆட்டுக்குட்டியானவர் வெளிச்சத்திலே
ஆடிப் பாடி என்றும் மகிழ்ந்திருப்பேன்

4. அல்லேலூயா கீதம் பாடி
ஆண்டவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்
பொன்னாக மின்னிடும் பரலோகத்தில்
பொன் இயேசுவை நிதம் பணிந்திடுவேன்

## பாடல் - 1000

**நல்ல உள்ளம் தரவேண்டும் நாதா**
உம்மை நன்றியோடு பாடித் துதிக்க தேவா
துதிகளிலே வாசம் செய்யும் மூவா
உம்மை துதித்தாலே இதயம் மகிழும் தேவா

1. பரிசுத்த தூதர்கள் பணிந்தும்மை துதிக்க
பரலோகம் மகிமையால் நிறைந்துமே ஜொலிக்க
கர்த்தரின் வாக்குகள் என்னிலே பலிக்க
சுத்தரின் பங்கிலே மகிமையாக நிலைக்க5

2. எரிகோ கோட்டைகள் இடிந்துமே வீழ்ந்திட
தாகோன் சிலைகளும் பொடி பொடியாய் நொறுங்கிட
தீமையான எண்ணங்கள் வேரோடு அகன்றிட
நன்மையான ஈவுகள் நாள்தோறும் பெருகிட

3. சத்தியத்தின் பாதையில் நாள்தோறும் நடந்திட
நித்தியத்தின் தேவனை நீங்காமல் தொழுதிட
பக்தியிலே உண்மையாய் என் உள்ளம் வளர்ந்திட
முக்தியிலே உம்மோடு சேர்ந்துமே வாழ்ந்திட

## பாடல் - 1001

**நல்லவரே எங்கள் இயேசைய்யா**
வல்லவரே எங்கள் இயேசைய்யா
ஆராதித்து ஆராதித்து மகிழ்ந்திருப்பேன்
ஆனந்த சத்தத்தோடு புகழ்ந்திடுவேன்

1. பாவங்களை மன்னித்து என்னில் பாசம் கொண்டீரே
பரிசுத்த பாதை தினம் நடத்துகின்றீரே

2. ஒவ்வொரு நாளும் நன்மைகளை அள்ளித் தந்தீரே
ஓயாமல் உம்மைப் பாட கிருபை தந்தீரே

3. மாசற்ற அன்பினாலே அணைத்துக் கொண்டீரே
மந்தையாம் சபைதனில் சேர்த்துக் கொண்டீரே

4. பரிசுத்த ஆவியாலே நிறைத்து விட்டீரே
பரலோக வாழ்வினிலே இணைத்து விட்டீரே

5. நீதியின் வலக்கரத்தால் தாங்குகின்றீரே
நித்தமும் நல் வழி நடத்துகின்றீரே

6. புல்லுள்ள இடங்கள் மேய்க்கும் நல்ல மேய்ப்பரே
அமர்ந்த தண்ணீரண்டை நடத்தும் நேசரே

7. கிருபை வரங்களையும் எமக்குத் தந்தீரே
கிருபாசனம் செல்ல தகுதி தந்தீரே

## பாடல் - 1002
(D-Min/party Pop/T-115)

**தேவன் அருளிய சொல்லி முடியாத**
ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
கோடா கோடி ஸ்தோத்திரம்

1. கிருபையினாலே விசுவாசம் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்களே
இது உங்களாலே உண்டானதல்ல தேவன் தந்த ஈவே

2. தாகமுள்ளோரின் தாகம் தீர்த்திடும் ஜீவத்தண்ணீர் இயேசு கிறிஸ்துவே
இது நித்திய ஜீவன் தரும் வார்த்தையே தேவன் தந்த நல்ல ஈவே

3. உலர்ந்து போன எலும்புகளெல்லாம் உயிர்ப்பிக்கும் வல்ல ஆவியே
இது இருதயத்தின் அன்பின் ஆவியே தேவன் தந்த நல்ல ஈவே

4. அந்தகார இருளிலிருந்து ஆச்சரிய ஒளிக்குள் அழைத்தாரே
இது தேவன் நம்மேல் வைத்த இரக்கமே தேவன் தந்த நல்ல ஈவே

5. குடும்ப வாழ்விலும் சந்தோஷமாய் குறைவில்லாது நடத்துகின்றாரே
நல்ல புத்தியுள்ள மனைவி எல்லாம் தேவன் தந்த நல்ல ஈவே

6. ஒவ்வொரு நாளும் நாம் அனுபவித்திட நன்மைகளைத் தருகின்றாரே
இது தேவன் தரும் ஆசீர்வாதமே தேவன் தந்த நல்ல ஈவே

### பாடல் - 1003

**வானம் பூமி படைத்த இந்த இயேசுவே – உம்மை**
வாழ்த்தி நாங்கள் ஆராதிக்கின்றோம்
ஆராதிக்கின்றோம் ஆராதிக்கின்றோம்
ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கின்றோம்

1. வல்லவரும் நல்லவரும் நீரே – உம்மை
வணங்கி நாங்கள் ஆராதிக்கின்றோம்

2. பரிசுத்தரும் பெரியவரும் நீரே – உம்மை
பணிந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்

3. உயர்ந்தவரும் சிறந்தவரும் நீரே – உம்மை
உயர்த்தி நாங்கள் ஆராதிக்கின்றோம்

4. ஆறுதலும் தேறுதலும் நீரே – உம்மை
அன்பில் நாங்கள் ஆராதிக்கின்றோம்

5. மகிமையும் மாட்சிமையும் நீரே – உம்மை
மகிழ்ந்து நாங்கள் ஆராதிக்கின்றோம்

6. இனிமையும் இன்பமும் நீரே – உம்மை
என்றும் நாங்கள் ஆராதிக்கின்றோம்

7. கிருபையும் சத்தியமும் நீரே – உம்மை
கரம் உயர்த்தி ஆராதிக்கின்றோம்

8. வழியும் ஒளியும் நீரே – உம்மை
வேண்டி நாங்கள் ஆராதிக்கின்றோம்

### பாடல் - 1004

**ஆசீர்வாத ஊற்றாய்**
என்னை மாற்றும் இயேசுவே
பேசிட அருள் வாக்கை
எந்தன் நாவில் தாருமே

1. நைந்த உள்ளங்கள் ஆயிரங்கள்
ஐந்து காய இரத்தம் ஔஷதமே
நோய்கள் நீங்கிட பேய்கள் ஓடிட
பாவம் நீங்கிட புதிய சிருஷ்டி ஆகிட

2. திறப்பில் நின்று நான் அழுதிடவே
அழியும் மாந்தர்க்காய் புலம்பி நின்றேன்
விழித்தெழும்பியே ஜெபித்தழுதிட
தந்தேன் என்னையே இயேசுவே

## பாடல் - 1005

**நன்றி இயேசைய்யா உமக்கு**
நன்றி இயேசைய்யா

1. தாயின் கருவில் தெரிந்தவரே நன்றி இயேசைய்யா
தாங்கி ஏந்தி சுமப்பவரே நன்றி இயேசைய்யா

2. இருளை ஒளியாய் மாற்றினீரே நன்றி இயேசைய்யா
அருளை தினமும் தந்தீரே நன்றி இயேசைய்யா

3. கண்மணி போல் காப்பவரே நன்றி இயேசைய்யா
கண்ணீரெல்லாம் துடைத்தவரே நன்றி இயேசைய்யா

4. குடும்ப வாழ்வை தந்தீரே நன்றி இயேசைய்யா
குறைவை நிறைவாய் மாற்றினீரே நன்றி இயேசைய்யா

5. அன்பால் இதயம் நிறைத்தீரே நன்றி இயேசைய்யா
ஆவியில் அனலை தந்தீரே நன்றி இயேசைய்யா

6. தூய வாழ்வை தந்தீரே நன்றி இயேசைய்யா
துதியில் ஜெயத்தை தந்தீரே நன்றி இயேசைய்யா

7. சத்திய பாதையை காட்டினீரே நன்றி இயேசைய்யா
நித்திய ஜீவனை தந்தீரே நன்றி இயேசைய்யா

8. பழைய குணத்தை மாற்றினீரே நன்றி இயேசைய்யா
பரலோக வாழ்வை தந்தீரே நன்றி இயேசைய்யா

9. ஊழியம் செய்ய அழைத்தீரே நன்றி இயேசைய்யா
கூடவே இருந்து நடத்துகின்றீர் நன்றி இயேசைய்யா

## பாடல் - 1006

**கிருபையில்லாமல் என்னிலே ஒன்றுமில்லை நாதா**
கிருபையில்லாமல் என்னிலே ஒன்றுமில்லை தேவா

1. தாழ்மையில் இருந்த என்னை நினைத்தது கிருபை
தயவுடன் அனுதினமும் நடத்தி செல்லும் கிருபை

2. பாவத்தில் இருந்த என்னைப் பார்த்து கிருபை
பரிசுத்தமாக்கியே பாட வைத்ததும் கிருபை

3. சேற்றினிலிருந்து என்னை தூக்கினது கிருபை
கன்மலை மேலாய் நிறுத்தினதும் கிருபை

4. பெலவீன நேரத்திலே பெலன் தந்த கிருபை
சுகவீன நேரத்தில் சுகம் தந்த கிருபை

5. பயப்படும் நேரத்திலே பாதுகாக்கும் கிருபை
தடுமாறும் நேரத்தில் தாங்கி நடத்தும் கிருபை

6. கஷ்டப்பட்ட நேரத்திலே கரம் தந்த கிருபை
நஷ்டப்பட்ட நேரத்தில் உதவி செய்த கிருபை

## பாடல் - 1007

**அன்புத் தந்தையே என் இறைவா**
அனுதினம் போற்றுகிறேன்
நீரல்லால் எனக்கு வாழ்வு இல்லை
நீரல்லால் வேறு வழியுமில்லை

1. அநாதி சிநேகத்தால் அன்பு கூர்ந்தீர்
காருண்யத்தால் என்னை இழுத்துக் கொண்டீர்
முடிவு வரையும் அன்பு கூர்ந்ததால்
சிலுவையில் எனக்காக பலியானீரே

2. எனது பெலவீனம் ஏற்றுக் கொண்டு
பெலவானாய் என்னை மாற்றினீரே
உம்மாலே சேனைக்குள் பாய்ந்து சென்றிட
உன்னத ஆவியை கொடுத்தீரய்யா

3. உமது காயத்தால் என் நோய்களை
சுகமாக்கி என்னை மீட்டுக் கொண்டீர்
உலகின் ஒளியே உத்தமர் துணையே
உம்மையே துதித்து தினம் பாடுவேன்

4. மெய்யாகவே என் பாடுகள் ஏற்றுக் கொண்டு
துக்கங்களை நீரே சுமந்தீரைய்யா
எனக்காக காயப்பட்டு நொறுக்கப்பட்டீரே
இயேசுவே உமதன்பு என்றும் போதுமே

## பாடல் - 1008

**கடமைக்காக கர்த்தரை ஆராதிக்காமல்**
உண்மையாக கர்த்தரை ஆராதிப்போம்

ஆராதிப்போம் நாம் ஆராதிப்போம்
இயேசு ராஜனை நாம் ஆராதிப்போம்

1. உதட்டளவில் கர்த்தரை ஆராதியாமல்
முழு உள்ளத்தோடு கர்த்தரை ஆராதிப்போம்

2. அசதியாக கர்த்தரை ஆராதிக்காமல்
முழு ஆத்துமாவோடு கர்த்தரை ஆராதிப்போம்

3. பலவித எண்ணத்தோடு ஆராதிக்காமல்
முழு மனதோடு கர்த்தரை ஆராதிப்போம்

4. பகையுடனே கர்த்தரை ஆராதிக்காமல்
பிறரிடம் அன்பு கூர்ந்து கர்த்தரை ஆராதிப்போம்

## பாடல் - 1009

**என் மனமெல்லாம்**
நிறைந்திருக்கும் மன்னவா
என் எண்ணமெல்லாம் கலந்திருக்கும்
இயேசைய்யா இயேசைய்யா

1. என்னை ஆள்பவர் நீர்தானைய்யா
எனக்குள் வாழ்பவரும் நீர்தானைய்யா

2. நல்ல மேய்ப்பன் நீர்தானைய்யா
மந்தையின் ஆட்டுக்குட்டி நான் தானைய்யா

3. தாயும் தந்தையும் நீர்தானைய்யா
தாங்கி நடத்துபவர் நீர்தானைய்யா

4. ஜீவ தண்ணீர் நீர்தானைய்யா
தாகம் தீர்ப்பவரும் நீர்தானைய்யா

5. எந்தன் கோட்டை நீர்தானைய்யா
அடைக்கலம் கேடகமும் நீர்தானைய்யா

6. என்னை அழைத்தவர் நீர்தானைய்யா
ஊழியம் தந்தவரும் நீர்தானைய்யா

## பாடல் - 1010

**ஆவியின் அருள்மழை பொழியட்டும்**
அபிஷேகத்தால் உள்ளம் நிரம்பட்டும்

நிரப்பும் தேவா நிரப்பும் தேவா
இப்போதே என்னையும் நிரப்பும் தேவா

1. ஜலத்தின் மேல் அசைவாடின ஆவியே
நீச்சல் ஆழத்தில் என்னை அழைத்து செல்லுமே

2. அன்னிய பாஷை தருகின்ற ஆவியே
ஆண்டவரோடு பேசிட அழைத்துச் செல்லுமே

3. எனக்காக வேண்டுதல் செய்யும் ஆவியே
என் விண்ணப்பத்தை எடுத்து சொல்லி பதில் தாருமே

4. பெந்தேகொஸ்தே நாளில் வந்த ஆவியே
என் பாவங்களை சுட்டெரித்து தூய்மையாக்குமே

5. உலர்ந்த எலும்பை ஒன்று சேர்க்கும் ஆவியே
சேனையாய் நின்றிட வல்லமை தாருமே

6. மண்ணான சாயல் கொண்ட சரீரம்
மகிமையின் சாயலாய் மாற வேண்டுமே

## பாடல் - 1011
(C-Min/8 Beat/T-90)

**உம்மை ஆராதிக்கின்றோம்**
இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம்மைப் போல் வேறு தேவனில்லை

அல்லேலூயா அல்லேலூயா

1. பாவியான என்னையும்
உம் பிள்ளையாய் மாற்றினீர் – நீர்

2. என்னை அழைத்தவரே
நீர் உண்மை உள்ளவரே – நீர்

3. உந்தன் பரிசுத்த ஆவியால்
என்னையும் நிறைத்தீரே – நீர்

4. என்னையும் முன் குறித்தீரே
நீர் கைவிடவே மாட்டீர்

5. என்னை மறுரூபமாக்கிடும்
உந்தன் மகிமையில் சேர்த்திடும்

## பாடல் - 1012
## (D-Maj/Pop Polka/T-125)

**கர்த்தர் கிருபை என்றும் உள்ளது**
என்றென்றும் மாறாதது
ஆண்டுகள் தோறும் ஆண்டவர் கிருபை
ஆண்டு நடத்திடுதே

கர்த்தர் நல்லவர் நம் தேவன் பெரியவர்
பெரியவர் பெரியவர் கிருபைகள் நிறைந்தவர்
உண்மை உள்ளவர்

1. கடந்த ஆண்டு முழுவதும் நம்மை
கரம் பிடித்து நடத்தினாரே
தகப்பன் பிள்ளையை சுமப்பது போல
தோளில் சுமந்து நடத்தினாரே

2. வியாதி படுக்கை மரண நேரம்
பெலனற்ற வேளையில் தாங்கினாரே
விடுதலை தந்தார் பெலனும் ஈந்தார்
சாட்சியாய் நம்மை நிறுத்தினாரே

3. சோதனை நம்மை சூழ்ந்திட்ட நேரம்
வலக்கரத்தால் நம்மை தேற்றினாரே
வார்த்தையை அனுப்பி நம்மோடு பேசி
தைரியப்படுத்தி நடத்தினாரே

## பாடல் - 1013
## (F-Min/s. Rock Swing/T-125)

**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்**
யாக்கோபின் தேவன் நம் உயர்ந்த அடைக்கலம்

பூமி நிலை மாறினாலும்
மலைகள் பெயர்ந்து போனாலும்
பர்வதங்கள் அதிர்ந்தாலும்
நாம் பயப்படோம்

1. தேவன் பூமி அனைத்திற்கும் ராஜா
கருத்துடனே போற்றி பாடுவோம்
யூத ராஜ சிங்கம் நம் கர்த்தர்
தாழ வீழ்ந்து பணிந்து கொள்ளுவோம்

2. கர்த்தர் துதிகளில் பயப்படத்தக்கவர்
பயத்துடனே போற்றி பாடுவோம்
தமக்கு பயந்த பிள்ளைகளை காப்பவர்
அவர் கிருபையை நினைத்து போற்றி பாடுவோம்

3. தேவன் நமது ரட்சண்ய கன்மலை
ஆர்ப்பரித்து போற்றி பாடுவோம்
கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர்
ஆனந்தமாய் ஆர்ப்பரித்து பாடுவோம்

## பாடல் - 1014
(Em/R-16 Beat/T-120)

**அதிசயங்கள் செய்கிறவர்**
நம் அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர்
என்றும் நமக்குள் வசிக்கிறார்

1. (எகிப்து) தண்ணீரை இரத்தமாய் மாற்றினார் அதிசயம்
வெறும் தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றினார் அதிசயம்

2. செங்கடலை இரண்டாக பிரித்திட்டார் அதிசயம்
புயல் காற்றை தம் ஆணையாலே அடக்கினார் அதிசயம்

3. குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம்
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார் அதிசயம்

4. பாவியான என்னையும் உயர்த்தினார் அதிசயம்
ஏழை என் மீதும் நேசக் கரம் நீட்டினார் அதிசயம்

## பாடல் - 1015

**இயேசுவின் பாதையை கண்டுக் கொண்டோம்**
இனி பயம் இல்லை – நாங்கள்
பயணத்தை தொடர்ந்திடுவோம்

1. கடும் புயல் வந்தாலும் பெரும் மழை வந்தாலும்
கர்த்தர் நம்மை காத்திடுவார்

2. இனி என்ன வந்தாலும் இடர் எது நேர்ந்தாலும்
என் தேவன் நம்மை மீட்பர்

3. துயர் தூர ஓடும் துன்பம் மறைந்தே போகும்
தூயவர் அருகில் இருக்கின்றார்

4. நம் ஜீவனும் அவரே நம் பாதையும் அவரே
இனி என்றும் ஆனந்தமே

## பாடல் - 1016

**இயேசு ராஜாவே உம்மைத் தேடி வந்தோமே**
பாவ மன்னிப்பு உம்மிடம் உண்டு
பரலோக இராஜ்ஜியமும் உண்டு உண்டு உண்டு

1. பாவத்தை மன்னிக்க அதிகாரம் உள்ளவரே
பாவியான எங்கள் மேல் இரக்கம் கொண்டவரே

2. நோயுற்ற போது மருத்துவர் நீர் தானே
துயர் கொண்ட எங்களுக்கு விடுதலை நீர் தானே

3. சமாதானமின்றி தவித்து நின்றோமே
உள்ளமதில் நீர் வந்து உற்ற துணையானீரே

4. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீரே
தாகம் கொண்டேன் உம்மேல் தாய் போல் காத்தீரே

## பாடல் - 1017

**தெய்வீக அன்பை எனக்கு தாரும்**
தெய்வீக அன்பால் என்னை நிரப்பும்

அன்பெனும் நீருற்றே ஆனந்த பூங்காற்றே
அதிசய தேவனே அருளின் நாதனே

1. உந்தன் பெயரை சொல்வதாலே வாழ்கிறேன்
உம்மை தினம் துதிப்பதாலே மகிழ்கிறேன்
எத்தனை நன்மை செய்தீர் இயேசுவே
எண்ணிலடங்காத ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

2. மனிதன் வாழும் வாழ்க்கை யாவும் வேஷமே
அறிந்து கொள்ள உதவி செய்தீர் தேவனே
சாத்தானை ஜெயித்த என் இயேசுவே
சரித்திர நாயகனே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

3. தாயும் தந்தையும் நீர் தேவனே
தாங்கி வழி நடத்தும் நாதனே
உம்மிடம் வந்து விட்டேன் இயேசுவே
உள்ளம் திறந்து சொல்வேன் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

## பாடல் - 1018

**உம்மைக் காண எந்தன் உள்ளம் ஏங்குதே**
உலகம் யாவும் உம் வரவை நாடுதே
குருவே ரபியே போதகரே எங்கள் ராஜாவே

1. காலத்தை பாவத்திலே செலவழித்தோம்
சாபத்தின் வாழ்வினிலே மூழ்கிவிட்டோம்
பாவிகளை இரட்சித்திட பரமனே வாருமைய்யா

2. நேசத்தை நெஞ்சகத்திலே விதைத்தவரே
பாசத்தை பூமியிலே பொழிந்தவரே
புதுவாழ்வு காத்திட புண்ணியரே வாருமைய்யா

3. நோயாலே வாடும் போது சுகம் தருவீர்
நோக்கி உம்மை வேண்டுகிறோம்
ஆரோக்கியம் தந்திடவே இயேசுவே வாருமைய்யா

## பாடல் - 1019
## (C-Maj/Dance Pop/T-130)

**யேகோவா தேவனுக்கு ஆயிரம் நாமங்கள்**
எதை சொல்லி பாடிடுவேன் – என்
கர்த்தாதி கர்த்தர் செய்த நன்மைகள் ஆயிரம்
கரம் தட்டி பாடிடுவேன்

**பல்லவி**

யேகோவா ஷாலோம் யேகோவா ஷம்மா
யேகோவா ரூவா யேகோவா ரவ்ப்பா

1. எல்ரோயீருக்கு அல்லேலூயா
என்னை நீரே கண்டீரையா
ஏக்கம் எல்லாம் தீர்த்தீரையா
நான் தாகத்தோடு வந்த போது
ஜீவ தண்ணீர் எனக்கு தந்து
தாகமெல்லாம் தீர்த்தீரையா –2 - யேகோவா

2. எல்ஷடாயும் நீங்க தாங்க
சர்வ வல்ல தேவனாக
என்னை என்றும் நடத்துனீங்க
எபிநேசரும் நீங்க தாங்க
உதவி செய்யும் தேவனாக
என்னை என்றும் தாங்குவீங்க –2 - யேகோவா



அட்டவணை

3. எல்லோகியும் நீங்க தாங்க
என்றும் உள்ள தேவனாக
எந்த நாளும் பாடுவீங்க
இம்மானுவேல் நீங்க தாங்க
மண்ணில் வந்த தேவன் நீங்க
இன்றும் என்றும் பாடுவீங்க -2 - யேகோவா

பாடல் - 1020

**தொட்டு சுகமாக்குமைய்யா இயேசுவே**
நீர் தொட்டால் போதும்
எந்தன் வாழ்க்கை மாறுமே

1. எட்டிக்காய் போல் கசக்கும் எந்தன் வாழ்க்கையை
உம் பாசக் கைகள் நீட்டி இன்று தொடனுமே
கட்டிப் பிடித்தேன் உந்தன் பாதம்
கர்த்தர் எந்தன் கதறல் கேளும்
தொடனுமே என்னை தொடனுமே

2. கடனும் முடனும் என்னை முடக்க முடியாதே
கடல் மேல் நடந்த கர்த்தர் என்னோடிருக்கின்றார்
கடல் மேல் என்னை நடக்கச் செய்வார்
கடனை எல்லாம் மாறச் செய்வார்
மாறுமே எல்லாம் மாறுமே

3. குறைவை எண்ணி புலம்புவதை நிறுத்துவேன்
நிறைவாய் என்னை நடத்துபவர் இருப்பதால்
இல்லை என்பது எனக்கு இல்லை
தொல்லை என்பது துளியும் இல்லை
இல்லையே தொல்லை இல்லையே

பாடல் - 1021
(D-Maj/16 Beat/T-90)

**வாரும் தூய ஆவியே**
உம் பிரசன்னத்தை வாஞ்சிக்கிறேன்
உம் வல்லமையால் என்னை நிறைத்து – நீர்
ஆளுகை செய்யும்

1. ஜீவ தண்ணீர் நீரே தாகம் தீர்க்கும் ஊற்றே
ஆலோசனை கர்த்தரே ஆளுகை செய்யும்

2. அக்கினியும் நீரே பெருங்காற்றும் நீரே
பெருமழை போலவே ஆவியை ஊற்றும்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
நல்லவரே நல்லவரே அல்லேலூயா அல்லேலூயா

## பாடல் - 1022
## (F-Maj/Hip Hop/T-120)

**பாடுவேன் நான் நல்லவரை**
வாழ்த்துவேன் நான் வல்லவரை

நீரே என் நீதியின் தேவன்
நீரே என் இரட்சிப்பின் தேவன்
நீரே என்னை காண்கின்ற தேவன்
நீரே என்னை காக்கின்ற தேவன்

1. யேயோவாயீரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்
யேகோவா நிசியே ஜெயம் தருவீர்

2. யேகோவா ஷாலோம் எனக்கு சமாதானமே
யேகோவா ஷம்மா என் துணையாளரே

3. யேகோவா ரூபா நல் மேய்ப்பரே
யேகோவா ரப்பா சுகமளிப்பீர்

## பாடல் - 1023
## (G-Maj/16 Beat/T-85)

**சுகம் உண்டு பெலன் உண்டு**
ஜீவன் உண்டு உம் பாதத்தில்
நேசம் உண்டு பாசம் உண்டு
இரக்கம் உண்டு உம் பாதத்தில்
நேசிக்கிறேன் உம்மைத் தானே
என் தெய்வமே என் இயேசுவே

1. அடைக்கலமே அதிசயமே
அண்டி வந்தோம் உம் பாதமே

2. துன்பம் நீங்கும் துயரம் நீங்கும்
உம் பாதத்தில்

3. வியாதி நீங்கும் வறுமை நீங்கும்
பாரம் நீங்கும் உம் பாதத்தில்

4. உயர்த்துகிறேன் உம்மைத்தானே
என் தெய்வமே என் இயேசுவே

5. சுகப்படுத்தும் பெலப்படுத்தும்
திடப்படுத்தும் இந்நேரத்தில்

6. சுகம் பெற்றோம் பெலன் பெற்றோம்
ஜீவன் பெற்றோம் நன்றி ஐயா!

## பாடல் - 1024

**நம்பிக்கை நங்கூரம்**
நான் நம்பும் தெய்வமே
நம்பினோரைக் காக்கும் இயேசுவே – பரம
பரிசுத்த தேவனை, பரலோக ராஜனை
பாடல் பாடி கொண்டாடிடுவோம் (2)
நம்பிக்கை நீர் தானே, நங்கூரம் நீர் தானே
நாங்கள் நம்பும் தெய்வம் நீர்தானே! (2) நீர்தானே

1. பார்வோனை வென்றவரை துதிப்போம்
எகிப்தியரை வென்றவரைத் துதிப்போம் – ஆயிரம்
பார்வோன்கள் வந்தாலும், எகிப்தியர் வந்தாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம் – நம்பிக்கை

2. கன்மலையைப் பிளந்தவரைத் துதிப்போம்
நீரூற்றைத் தந்தவரைத் துதிப்போம் – பஞ்சம்
பட்டினியே வந்தாலும், வறட்சிகள் என்றாலும்
பாடல் பாடி முன்னேறிடுவோம் – நம்பிக்கை

3. கல்லறையைப் பிளந்தவரைத் துதிப்போம்
மரணத்தை வென்றவரைத் துதிப்போம் – மரண
இருளுள்ள பள்ளத்தாக்கின், சூழ்நிலைகள் வந்தாலும்
பயமின்றி முன்னேறிடுவோம் – நம்பிக்கை

## பாடல் - 1025

**பரம பிதாவை துதித்திடுவோம்**
இரட்சகர் இயேசுவை துதித்திடுவோம்
பரிசுத்த ஆவியை துதித்திடுவோம்
திரியேக தேவனை துதித்திடுவோம்

துதிப்போம் அல்லேலூயா – 4
இரட்சகர் இயேசுவின் நாமத்தை உயர்த்தி

1. செங்கடல் முன்னே சீறினாலும்
பார்வோனின் சேனைகள் தொடர்ந்தாலும்
சத்துரு வெள்ளம் போல் சூழ்ந்தாலும்
கர்த்தரோ ஜெயக்கொடி ஏற்றிடுவார்

2. ஆறுகளை நீ கடக்கும் போது
அற்புத தேவன் உன் உடன் வருவார்
அக்கினியில் நீ நடக்கும் போது
வெந்து மடிந்து போவதில்லை

3. ஆயிரம் ஆயுதங்கள் எதிர்த்தாலும்
அத்தனையும் இனி வாய்த்திடாதே
அற்புதர் உன் பக்கம் இருக்கும் போது
எதிர்பவர் யார் உன்னை வெல்பவர் யார்

## பாடல் - 1026

**ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே அப்பா அப்பா**
உம் கிருபை எனக்கு போது அப்பா அப்பா

நல்லவரே வல்லவரே – 2

1. கர்த்தரே என் கன்மலையும் கோட்டையுமானார்
இரட்சகரும் தேவனுமானார் – நான்
நம்பின என் துருகமும் கேடகமானார்
ரட்சணிய கொம்புமானார்

2. தேவரீர் என் இருளையெல்லாம் வெளிச்சமாக்கினீர்
எனது விளக்கை ஏற்றி வைத்தீர் – ஒரு
சேனைக்குள்ளே பாயச்செய்து போரிடச் செய்தீர்
மதிலையெல்லாம் தாண்டிடச் செய்தீர்

3. உம்முடைய வலக்கரத்தால் என்னை தாங்கினீர் – உம்
காருணியத்தால் பெரியவனானேன்
நான் செல்லுகின்ற பாதையெல்லாம் அகலமாக்கினீர்
வழுவாமல் நடந்து செல்கிறேன்



அட்டவணை

## பாடல் - 1027
(C-Maj/Raggae/T-85)

**வாக்குப் பண்ணினவர் மாறிடார்**
வாக்குத்தத்தம் நிறைவேற்றுவார்

சோர்ந்து போகாதே – நீ சோர்ந்து போகாதே
உன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்

1. அவர் மனிதனல்லவே
பொய் சொல்வதில்லையே
அவர் உண்மையுள்ளவர்
வாக்கு மறப்பதில்லையே

வாக்குத் தந்தவர் சிறந்தவர்
சிறந்ததைத் தருபவர்
ஏமாற்றங்கள் இல்லையே

2. காலங்கள் கடந்ததோ
தாமதம் ஆனதோ
வாக்குத் தத்தங்கள் – உன்
வாழ்வினில் தொலைந்ததோ

வாக்குத் தந்தவர் சிறந்தவர்
சிறந்ததைத் தருபவர்
ஏமாற்றங்கள் இல்லையே

## பாடல் - 1028

**நீர் மாத்ரம் எனக்கு** (4)
நீரல்லால் உலகில் யாருண்டு எனக்கு

1. மாயையான உலகில் நீர் மாத்ரம் எனக்கு
மாறிடும் உலகில் நீர் மாத்ரம் எனக்கு (2) – நீர் மாத்ரம்

2. அரணும் என் கோட்டையும் நீர் மாத்ரம் எனக்கு
கோட்டையும் என் துருகமும் நீர் மாத்ரம் எனக்கு (2)
துருகமும் கேடகமும் நீர் மாத்ரம் எனக்கு
கேடகமும் கன்மலையும் நீர் மாத்ரம் எனக்கு – நீர் மாத்ரம்

3. ஆசை வேறு உம்மையன்றி யாருமில்லை எனக்கு
ஆதரவு உம்மையன்றி யாருமில்லை எனக்கு (2)
ஆனந்தம் உம்மையன்றி ஒன்றுமில்லை எனக்கு
எண்ணங்களில் உம்மையன்றி யாருமில்லை எனக்கு – நீர் மாத்ரம்

## பாடல் - 1029
(Dm4/4/R-slow Ballad/T-95)

**நீங்க மட்டும் போதும் இயேசுப்பா**
வேறொன்றும் இங்கு வேண்டாம் ஐயா
ஆயிரம் கோடி செல்வம் என்றாலும்
உந்தனின் மதிப்புக்கு ஈடாகிடுமோ – 2

நீங்க மட்டும் போதும் இயேசப்பா
நீங்க மட்டும் போதும் இயேசப்பா

1. அழியும் உலக செல்வத்திற்காக
அழியா செல்வத்தை விட்டுவிடுவேனோ – 2

2. சிந்தையைக் கெடுக்கும் மோகங்கள் வேண்டாம்
தந்தையே உந்தன் அன்பே போதும் – 2

3. சிற்றின்ப மோகம் வேண்டவே வேண்டாம்
மகிமையின் மேகம் ஒன்றே போதும் – 2

## பாடல் - 1030
(C-Min/8 Beat /T-100)

**நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது**
பல நன்மை செய்த இயேசுவுக்கே
நன்றி நன்றி நன்றி என்று சொல்லி நான் துதிப்பேன்
நாள்தோறும் போற்றுவேன்

1. எத்தனையோ நன்மைகளை என் வாழ்வில் செய்தாரே
ஏராளமாய் நன்றி சொல்வேன்
அத்தனையும் நினைத்து நினைத்து நான் துதிப்பேன்
ஆண்டவரை போற்றுவேன் – நன்றி

2. மரண பள்ளத்தாக்கில் நான் நடக்கும் போதெல்லாம்
பாதுகாத்தீரைய்யா
மீண்டும் ஜீவனை கொடுத்து நீர் என்னை
வாழ வைத்தீரையா – நன்றி

3. தேவன் அருளிய சொல்லி முடியாத
ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம்
அளவில்லா அவரின் கிருபைகளுக்காய்
ஆயுள் முழுதும் ஸ்தோத்திரம் – நன்றி

### பாடல் - 1031

**எந்தன் தேவனால் எந்தன் தேவனால்**
நிச்சயம் நான் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுவேன்

உந்தன் வசனம் கைக்கொள்ளுவேன் நான்
உந்தன் வழிகளில் நடந்திடுவேன்

1. தேசத்தில் நான் ஆசீர்வாதமாயிருப்பேன்
வேலையிலும் ஆசீர்வாதமாயிருப்பேன்
என் வீட்டில் ஆகாரக் குறைவில்லையே
என் தேவைகள் ஒன்றும் தடையில்லையே - எந்தன்

2. எனக்கெதிராய் வரும் ஆயுதமெல்லாம்
நிர்மூலமாய் போய்விடும் எந்தன் தேவனால்
என் பெலன் ஆரோக்கியம் தேவதானமே
எந்தன் சரீரம் ஆசீர்வதிக்கப்படும் - எந்தன்

3. வாழ்கைத் துணையும் என் பிள்ளைகளும்
எந்தன் சம்பத்தும் ஆசீர்வதிக்கப்படும்
எந்தன் நன்மைக்காய் செழித்தோங்கிடச் செய்வார்
என்னையவர் பரிசுத்த ஜனம் ஆக்குவார் - எந்தன்

4. இனி என்றும் கடன் வாங்க விடமாட்டார்
கொடுத்ததை செழித்தோங்கச் செய்திடுவார்
உயர்வடைவேன் என் வாழ்க்கையிலே
உன்னதங்களில் என்னை உயர்த்திடுவார் - எந்தன்

### பாடல் - 1032

**ஆபிரகாமின் தேவனே ஈசாக்கின் தேவனே**
யாக்கோபின் தேவனே ஆசீர்வதியும்

ஆசீர்வதியுமே ஆசீர்வதியுமே
சீயோனில் இருந்து ஆசீர்வதியுமே

1. சின்னவரெல்லாம் ஆயிரம் ஆகட்டும்
சிறியவரெலலாம் பெரிய ஜாதியாகட்டும்
மகா பெரிய மனிதனாய் பெயரை பெருமைப்படுத்துமே
என்னை ஆசீர்வதிப்பவரை ஆசீர்வதித்திடும் - ஆசீர்வதியுமே

2. வியாதி நோய் எல்லாம் விலகிப் போகவே
அப்பம் தண்ணீரை நீர் ஆசீர்வதியுமே
நூறு மடங்கு பலனை நான் கொடுக்க வேண்டும் தெய்வமே
ஆயிரம் மடங்கு அதிகமாய் விருத்தியடையவே - ஆசீர்வதியுமே

3. கோடா கோடியாய் பலுகிப் பெருகவே
சத்துரு வாசலை நான் சுதந்தரிக்கவே
ஒருவழியாய் வருபவன் ஏழு வழியாய் ஓடிட
பெலன் தாரும் தேவனே ஜெயமெடுக்கவே - ஆசீர்வதியுமே

## பாடல் - 1033

**காக்கைகளை கவனித்துப் பாருங்க**
வானத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்க
அவை விதைக்கிறதும் இல்லை
அவை அறுக்கிறதும் இல்லை
பரம பிதா போஷிக்கிறார்!

1. ஆகாயத்துப் பறவைகளைப் போஷிக்கும் தேவன்
உன்னையும் என்னையும் நடத்திடுவார் - 2
கலங்காதே நீ கலங்காதே - 2
உனக்காக யாவையும் செய்திடுவார்.

2. பறவைகளைக் காட்டிலும் நீ விசேஷமானவன்
பரலோக பொக்கிஷத்தை
உனக்குத் தருவார்
பயப்படாதே பயப்படாதே - 4

3. எலியாவைப் போஷித்தவர் உன்னையும் போஷிப்பார்
யோசேப்பை நடத்தினவர்,
உன்னையும் நடத்துவார்.

4. புசிப்பதும் குடிப்பதும் தேவ ராஜ்ஜியமல்ல
இயேசுவுக்காய் அனுதினமும் உழைத்திடுவோம் செயல்படுவோம்
இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்

## பாடல் - 1034
(F-Maj/Gospal Shuffle/T-85)

**துதியுங்கள் நம் தேவனை**
போற்றுங்கள் நம் இராஜனை
வாழ்த்துங்கள் நம் கர்த்தனை
இன்றும் என்றும்

ஆ..ஆ..ஆ.. அல்லேலூயா ஓ..ஓ...ஓ.... ஓசன்னா

1. அதிசயம் செய்யும் தேவன் பெரியவர்
நாம் ஆராதிக்கும் தேவன் என்றும் சிறந்தவர்
நமக்காய் யாவும் செய்து முடித்தார்
நன்றியோடு ஆராதிப்போம் - ஆ..ஆ..ஆ..

2. நம் பாவம் போக்கும் ஜீவ தேவன் நல்லவர்
நம் பாவம் போக்கும் வல்ல தேவன் சிறந்தவர்
கண்ணீர் கவலை வியாதி யாவும் மாற்றுவார்
கரங்களை தட்டி ஆர்ப்பரிப்போம் - ஆ..ஆ..ஆ..

3. நமக்காய் இரத்தம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார்
நேற்றும் இன்றும் மாறிடா நம் இயேசுவை
கைகள் உயர்த்தி ஆராதிப்போம் - ஆ..ஆ..ஆ..

## பாடல் - 1035
## (D-Min/Rumpa/T-95)

**கருணை பிதாவே கல்வாரி அன்பே ஆஆஆ**
உம்மையல்லால் எனக்காருமில்லை

1. கிருபை தாருமே கிருபாநிதியே (3)
அன்பின் வடிவமே (2) ஆஆஆ
ஏழைக்கிறங்கும் ஏசையா - கருணை

2. தேவனின் சித்தம் செய்திடச் செய்யும் (3)
தியாகமானீரே (2) ஆஆஆ
தேடின உள்ளம் களித்திடுமே... - கருணை

3. ஆ இன்பநாதா ஆத்தும நேசா (3)
அன்பின் கடலே (3) ஆஆஆ
அன்பினால் என்னை உருவாக்கினீரே - கருணை

4. கஷ்டங்கள் விலக கை கொடுத்தீரே (3)
நேசர் முகம் காண (2) ஆஆஆ
தேம்பிடுதே ஆசை என் உள்ளிலே - கருணை

5. எந்தன் கண்ணீரை போக்கிடும் காலம் (3)
வேகம் வரும் என்று (2) ஆஆஆ
காத்திருந்து நான் வாடுகின்றேன் - கருணை

6. யாத்திரை முடிந்து இயேசு ராஜனை (3)
மேகத்தில் சந்தித்து (2) ஆஆஆ
நித்திய காலமாய் வாழ்ந்திடுவேன் - கருணை

## பாடல் - 1036
## (G-Min/Euro Beat/T-140)

**இயேசு நல்லவர் – நம்**
இயேசு பெரியவர்
இயேசு உன்னதர்
சர்வ லோகத்தின் ஆண்டவர்

நல்லவர் பெரியவர் சர்வ வல்லவர்

1. வியாதியால் வருந்திடும் உனக்கு
சுகம் தரும் தெய்வம் நம் இயேசு
சாபங்கள் யாவையும் நீக்கி – உன்னை
வாழ வைக்கும் தெய்வம் இயேசு -இயேசு

2. மரண பயம் சூழ்ந்த உன்னை
விடுவிக்க வல்லவர் இயேசு
இருண்டு போன உந்தன் வாழ்வில் – ஜீவ
ஒளியை ஏற்றுவார் இயேசு -இயேசு

3. ஏமாற்றம் நிறைந்த உன் வாழ்வில்
புது நம்பிக்கை கொடுப்பவர் இயேசு
தோல்வியை சந்தித்த உனக்கு
ஜெயத்தைத் தருபவர் இயேசு -இயேசு

## பாடல் - 1037
## (D-Maj/Reggae/T-95)

**கர்த்தர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது**
தடைகளை நீக்குவார் ஜெயத்தை தந்திடுவார் (2)
ஜெயமாய் நடத்துவார் – உன்னை
ஜெயமாய் நடத்துவார்

அல்லேலூயா... அல்லேலூயா... (8)

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே – நம்
கர்த்தருக்கு பிரியமானதே
ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
உன்னையும் இன்று ஆசீர்வதிப்பார்
சூழ்நிலைகளை பார்த்து நீ
சோர்ந்து போகாதே
கர்த்தர் உன்னை உயர்த்திடுவார் – அல்லேலூயா...



அட்டவணை

2. வழியே இல்லா இடங்களிலும் - புது
வழியை உனக்கு உண்டாக்குவார்
இருண்டு போன உந்தன் வாழ்க்கையில்
ஜீவ ஒளியை இன்று ஏற்றிடுவார்
வாசல்கள் எல்லாம் அடைக்கப்பட்டாலும்
புது வாசல் உனக்கு திறந்திடுவார் - அல்லேலூயா...

## பாடல் - 1038

**என் அஸ்திபாரம் கிறிஸ்துவின் மேல் இருப்பதினால்**
அசைவதில்லை நான் அசைவதில்லை
அல்லேலூயா - ஆனந்தமே
இயேசு கிறிஸ்துவினால் ஜெயம் பெறுவேன்

1. யேசேப்பை அறியாத பார்வோன்கள் வரலாம்
போஷித்த காகங்கள் பறந்து போகலாம்
யோர்தானின் கரைகளை தாண்டி போன பின்
வானத்தின் மன்னாவும் ஒழிந்து போகலாம்

கவலையில்லை கலக்கமில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதால் தோல்வியில்லை

2. மாராவின் நீரூற்று கசந்து போகலாம்
சாராளின் அடிமைப்பெண் இகழ்ந்து பேசலாம்
ஆரோனும் மிரியாமும் எழும்பி எதிர்க்கலாம்
கோராஹின் கூட்டங்கள் கலைந்து போகலாம்

கவலையில்லை கலக்கமில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதால் தோல்வியில்லை

## பாடல் - 1039

**உம்மைப் போல யாருமில்லை**
என்னை என்றும் நேசிக்க
இரத்தம் சிந்தி ஜீவன் தந்தீர்
உம்மை என்றும் நேசிக்க

1. கோர பாடு சுமந்த தேவா
கொல்கதாவில் மரித்த நாதா
எண்ணிலடங்கா வேதனைகளுடனே
எந்தன் பாவங்கள் போக்கினீர்
எந்தன் சாபங்கள் மாற்றினீர்

2. பாவக் கறைகள் நம்மை விட்டு மாற
தேவ கோபம் நம்மை விட்டு நீங்க
கோர சிலுவை பாரமாக சுமந்து
உம் இரத்தத்தால் கழுவினீர்
உம் பிள்ளையாய் மாற்றினீர்

## பாடல் - 1039 A

**நீரே என் பெலன் நீர் என் அடைக்கலம்**
ஆபத்துக் காலத்தில் என் துணை
சுற்றி நின்று என்னைக் காக்கும் கன்மலை-2

1. யாக்கோபின் தேவன் என் அடைக்கலம்
யேகோவா தேவனே என் பெலன்
கலக்கமில்லை பயங்கள் இல்லை வாழ்விலே
நான் இருப்பதோ கர்த்தரின் கரத்திலே - நீரே

2. அமர்ந்திருந்து தேவனை நான் அறிகிறேன்
அவர் கரத்தில் வலிமை நிமித்தம் பார்க்கிறேன்
தாய் பறவை செட்டை கொண்டு மூடியே
கண்மணிபோல் என்னைப் பாதுகாக்கிறீர் - நீரே

3. பசும்புல் வெளியில் என்னைத் தினம் மேய்கிறீர்
அமர்ந்த தண்ணீர் ஊற்றில் தாகம் தீர்க்கிறீர்
சத்துருவின் கண்கள் காண எண்ணெயால்
என் தலையை அபிஷேகம் செய்கிறீர் - நீரே

4. காலைதோறும் புதிய கிருபை தருகிறீர்
காலமெல்லாம் கருத்தாய் என்னைக் காக்கிறீர்
வலப்புறம் இடப்புறம் நான் விலகினால்
வார்த்தையாலே என்னைத் திருத்தி நடத்துவீர் - நீரே

## பாடல் - 1040

**ஆழ்கடலிலே மீன்கள் பலவுண்டு**
அதையும் பிடித்திட மீனவர் பலவுண்டு
அழியும் ஆத்துமாக்கள் உலகில் பலவுண்டு
அதற்காய் பரிதவிக்க இங்கே யாருண்டு

யாரை அனுப்புவேன்
யார் என் வேலையாய் போவான்

1. அலையைப் போலவே அலைந்து திரிந்திடும்
அமைதியை இழந்து அதிருப்தி அடைந்திட
அநேகம் பேருண்டு அழைத்திட யாருண்டு
அநேகம் பேருண்டு மீட்டிட யாருண்டு
அநேகம் பேருண்டு மீட்டிட நீ உண்டு

2. சிலுவை அன்பினை சற்றும் அறியாமல்
சிந்திய ரத்தத்தின் மகத்துவம் உணராமல்
ஜீவிக்கும் மக்களை நேசிக்க யாருண்டு
ஜீவனைக் கொடுத்தவர் இயேசுவே தானுண்டு
ஆண்டவர் இயேசுவை அறிவிக்க யாருண்டு
ஆண்டவர் தேடிடும் மனிதன் நீ உண்டு

## பாடல் - 1041

**இயேசு நல்லவரு போதுமானவரு**
அற்புதம் செய்பவரு அதிசயமானவரு
ஆலோசனை கர்த்தர் பெரியவரு

1. துன்பம் வரும் வேளையிலே
தேடி வந்து தேற்றிடுவார்
துக்கம் நம்மை வாட்டும் போது
பக்கம் வந்து ஆற்றிடுவார் - 2
ஜீவனுள்ள தேவனுக்கு
ஜீவராகங்கள் பாடிடுங்கள் - 2

2. இரண்டு மீனும் ஐந்து அப்பமும்
இயேசுவுக்கு போதுமையா
கோடி ஜனம் கூடினாலும்
குறைவில்லாமல் கொடுப்பாரையா - 2
நம்பி வந்தால் நன்மை உண்டு
நன்மை செய்கின்ற இயேசு உண்டு - 2

3. கடலைக் கண்டு பயந்திடாதே - உன்
கடனை எண்ணி கலங்கிடாதே
கடலை இரண்டாய் பிளந்திட்டவர்
உன் கடனை எல்லாம் தொலைத்திடுவார் - 2
கடல் மேல் நடந்து புயலை நிறுத்தி
கடலின் எல்லையை குறித்திட்டவர்

## பாடல் - 1042

**எல்லோரும் இயேசுவை கொண்டாடுவோமா**
ஒன்றாகக் கூடி ஆடிப் பாடிடுவோமா (2)
நடனமாடி ஸ்தோத்தரித்து ஆராதிப்போமா – 2
நன்றி நிறைந்த உள்ளத்தோடு ஆர்ப்பரிப்போமா

பாடு பாடு கை தட்டிப்பாடு
ஆடு ஆடு மேளதாளத்தோடு

1. அனாதையாய் நின்ற போது இயேசு வந்தார்
நம்மை அழ வேண்டாம் என்று சொல்லி அரவணைத்தார்
அப்பாவுக்கு நன்றி என்று சொல்வோமா
இயேசுவுக்கு ஆராதனை செய்வோமா

2. இல்லை என்று சொல்லிப் பாரு இயேசு வருவார்
தேவ பிள்ளைகளின் குறைகளை கிள்ளி எறிவார்
உனக்கொருவர் இருக்கிறாரு தெரியுமா
இயேசு உள்ளவரை கவலையில்லை புரியுமா

3. நீ நம்பும் மனிதர் உன்னைக் கைவிடலாம்
உன் நெருக்கத்திலே உன்னை விட்டு ஓடிடலாம்
தான் வாழ பிறரைக் கெடுக்கும் மனிதனே
நீ உயிர் வாழ ஜீவன் தந்தார் தேவனே

4. நமக்காக சிலுவையினை சுமந்தாரப்பா
நம்மை இரட்சிக்க இரத்தம் சிந்தி மரித்தாரப்பா
மரித்த இயேசு உயிர்த்தெழுந்து வந்தாரப்பா
ஏசு மரணத்தை ஜெயித்து நம்மை மீட்டாரப்பா

எக்காள சத்தம் வானில் கேட்குமே
இயேசு மேக மீதில் வந்திடும் நாள் சமீபமே

## பாடல் - 1043
## (E-Maj/6/8 soul/T-100)

**என் ஜெபத்தைக் கேட்கிறார் எனக்கு அருள்கிறார்**
கன்மலையில் என்னை வைத்துப் பாதுகாக்கிறார்
அலைகள் என்மேல் புரண்டாலும் அஞ்சிடமாட்டேன்
மலைகள் என்மேல் விழுந்தாலும் பயப்படமாட்டேன்

1. வறண்ட நிலத்தில் நான் நடந்து சென்றாலும்
வழியறியாமல் திகைத்து நின்றாலும்
வருத்தம் தாகம் பசியும் என்னை நெருங்கவில்லையே
வழி நடத்தும் தேவன் கரம் குறுகவில்லையே

2. வியாதி வறுமையால் சோர்ந்து விட்டாலும்
வாசல் கதவுகள் எல்லாம் அடைத்துக் கொண்டாலும்
ஒன்றும் என்னைக் கலங்க வைக்க முடியவில்லையே
கர்த்தர் கிருபை என்னை விட்டு விலக வில்லையே

3. கடலின் அலையில் நான் பயணம் செய்தாலும்
காற்றும் புயலுமாய் என்னை எதிர்த்து வந்தாலும்
எதுவும் என்னைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே
கர்த்தர் முன்னே செல்வதாலே கவலையில்லையே

4. அத்தி மரங்களில் இலையுதிர்ந்தாலும்
திராட்சைக் கொடிகளில் கனி அழிந்தாலும்
சுற்றிப் பஞ்சம் நேர்ந்த போதும் கலக்கமில்லையே
கர்த்தர் கருணை என்னைத் தாங்கும் வருத்தமில்லையே

## பாடல் - 1044
## (F2/4/R-DISCH hands/T-130)

**அபிஷேகியும் என்னை அபிஷேகியும்**
எலியாவை போல அபிஷேகியும் - 2
பயன்படுத்தும் என்னை பயன்படுத்தும்
எலியா போல் பயன்படுத்தும்

1. அக்கினியாக்கும் என்னை அக்கினியாக்கும்
எலிசாவை போல அக்கினியாக்கும்
பயன்படுத்தும் என்னை பயன்படுத்தும்
ஒரு அக்கினி ஜுவாலையாய் பயன்படுத்தும்

2. வல்லமை தாரும் இன்று வல்லமை தாரும்
சீமோன் பேதுரு போல வல்லமை தாரும்
சுகமாக்கும் இன்று சுகமாக்கும்
எந்தன் நிழல் பட சுகம்தர வேண்டும்

3. அபிஷேகியும் என்னை அபிஷேகியும்
உந்தன் பரிசுத்த ஆவியால் அபிஷேகியும்
வரங்கள் தாரும் வல்ல வரங்கள் தாரும்
உந்தன் ஆவியின் வரங்களால் என்னை நிரப்பும்

## பாடல் - 1045

**நீர் செய்த நன்மைகளை நினைக்கின்றேன்**
கருத்தோடு நன்றி சொல்கிறேன் – 2
என் தாயின் கருவில் நான் உருவான நாள்முதல்
நாள்தோறும் காத்து வந்தீரே
என் நாசியாலே நான் சுவாசித்த நாள்முதல்
நாள்தோறும் காத்து வந்தீரே – 2

நன்றி நன்றிபலி செலுத்தியே
நாதன் இயேசுவையே பாடுவேன்
கோடி நன்றிபலி செலுத்தியே
ஜீவன் தந்தவரை பாடுவேன் – 2

1. பாவியாக நான் வாழ்ந்து
பாவம் செய்த நாட்களிலும்
நாள்தோறும் காத்து வந்தீரே
நான் உம்மைவிட்டு தூரம் சென்று
துரோகம் செய்த நாட்களிலும்
நாள்தோறும் காத்து வந்தீரே – 2

2. நான் திக்கற்று துணையின்றி
திகைத்திட்ட நேரத்தில்
துணையாக தேடி வந்தீரே
நான் துக்கத்தால் மனம்நொந்து
மடிகின்ற நேரத்தில்
மகன் என்னைத் தேடி வந்தீரே

3. நான் மனதார நேசித்த
மனிதர்கள் மறந்தாலும்
மறவாத நேசர் நீரையா
சூழ்நிலைகள் மாறிட்டாலும்
மாறிடா உம் கிருபையாலே
நாள்தோறும் தாங்கினீரையா

## பாடல் - 1046
## (Em/4/R-DISCO/T-120)

**கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார்**
பக்தி வைராக்கியம் காட்டுவோம் எழுந்து வா

நானும் என் வீட்டாருமோ வென்றால்
கர்த்தரையே தினம் ஆராதிப்போம்5

1. எலியாவை போல கர்த்தரே தெய்வம் என்று
உலகெங்கும் நிரூபிக்க வா
சாபங்களை நீக்கிட்ட பினகாசைப் போல
துணிவுடன் எழுந்து வா - நானும்

2. கிதியோனை போல எதிரியை வீழ்த்திட
இருக்கின்ற பெலத்தோடு வா
மோசேயை போல விசுவாச வீரனாய்
வாழ்ந்து நிரூபிக்க வா - நானும்

3. பவுலை போல துணிவுடன் எழுந்து
இறைவாக்கு அறிவிக்க வா
கிறிஸ்து என் ஜீவன் சாவு என் ஆதாயமாய்
வாழ்ந்திட எழுந்து வா - நானும்

## பாடல் - 1047
## (E-Min/EURO/T-120)

**நம்முடைய தெய்வம் இயேசுவல்லால் - இந்த**
நானிலத்தில் வேறு தெய்வமில்லை - நம்

1. கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம்
பாக்கியமுள்ளது எனப்படுமாம் - நம்

2. பாவமறியாத பரிசுத்தராம் இயேசு
பாவிகளை இரட்சிக்க வந்தவராம் - நம்

3. பற்பல கிருபைகள் பகருகின்றார் - நாம்
கற்புடன் அவர் பணி செய்திடவே - நம்

4. கற்சிலை பேசுமோ வாய்திறந்து - நம்
கர்த்தர் இயேசு இன்றும் ஜீவிக்கிறார் - நம்

5. மறப்பாளோ தாய் தன் பாலகனை - நான்
மறப்பதில்லை என்றும் அன்பு தெய்வம் - நம்

6. ஏறெடுக்கும் நம் தேவைகட்கு - அவர்
மாறாமல் பதில் தரும் மகிபனவர் - நம்

7. சகலமும் படைத்த சர்வாதிகாரி - இயேசு
சகலமும் ஜெயித்திட்ட சர்தாரி - நம்

## பாடல் - 1048
(Dm/6/8 Rock/T-125)

**கர்த்தர் சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பார்**
நன்மையும் கிருபையும் அளித்திடுவார்
செழிப்பான இடத்தை கொடுத்திடுவார்
இந்த நாளை மகிழ்ச்சியாக்கிடுவார்

1. இனி தீங்கை காண்பதில்லை
உன்னை ஒருவரும் எதிர்ப்பதில்லை
இரத்தத்தால் உன்னை மூடிடுவார்
எல்லா தீங்கிற்கும் உன்னை விலக்கிடுவார்

2. துதியின் ஆவி ஊற்றப்படும்
சாத்தானின் கோட்டைகள் தகர்க்கப்படும்
குறைவுகள் எல்லாம் நிறைவாகி விடும்
வானத்தை திறப்பார் உனக்காக

3. வார்த்தை இன்று கொடுத்திடுவார்
நம்பிக்கை உனக்கு அளித்திடுவார்
நிச்சயமாகவே முடிவு உண்டு
ஜெயத்தை இன்றே சுதந்தரிப்பாய்

## பாடல் - 1049

**நன்றி சொல்லி இயேசுவைப் பாடுவோம்**
நன்மை செய்த அவரை நினைப்போம்
நன்றி சொல்லுவோம் (2)
நாள்தோறும் அவரை துதிப்போம்

ஆ...ஆ... அல்லேலூயா (3)

1. சமாதானம் சந்தோஷம் தந்தீர் உமக்கு நன்றி
சாத்தானை மேற்கொள்ளச் செய்தீர் உமக்கு நன்றி
துன்பம் அதில் காத்தீர் உமக்கு நன்றி
துயரம் அதை நீக்கினீர் உமக்கு நன்றி

2. பாதம் இடறாமல் காத்தீர் உமக்கு நன்றி
பரிசுத்த வாழ்வை கொடுத்தீர் உமக்கு நன்றி
ஜெபிக்க உதவி செய்தீர் உமக்கு நன்றி
கொடுக்க உதவி செய்தீர் உமக்கு நன்றி

3. புதிய பாடலை தந்தீர் உமக்கு நன்றி
புதிய கிருபைகள் தந்தீர் உமக்கு நன்றி
பெலவீனம் அதை நீக்கினீர் உமக்கு நன்றி
பெலனை தினம் கொடுத்தீர் உமக்கு நன்றி

## பாடல் - 1050

**ஆராதனை நேரம் இது ஆனந்தமான நேரம்**
ஆடிப் பாடி நடனமாடி ஆர்ப்பரிக்கும் நேரம்

1. ஆராதனை நேரத்தில் நம்மை மறக்கனும்
அப்பாவோடே பிரசன்னத்தில் நல்லா நிரம்பனும்

2. கர்த்தர் செய்த நன்மைகளை நெனச்சிடனும்
கவலையெல்லாம் எடுத்துப் போட்டு துதித்திடும் நேரம்

3. ஆராதிக்கும் நம்ம தேவன் தப்புவிப்பாரு
அக்கினியிலே போட்டாலும் ஒன்னும் வேகாது

4. சுவைக்க சுவைக்க தெவிட்டிடாத தேன் நீங்கப்பா
சுற்றி சுற்றி வந்திடுவேன் தேனீ நானய்யா

5. நீதிமானின் கூடாரத்தில் கெம்பீர சத்தம்
நீதியுள்ள தேவனை நாம் துதிக்கனும் நித்தம்

## பாடல் - 1051
## (Maj/DISCO/T-125)

**இயேசு ராஜாவுக்கு ஜே ஜே – எங்கள்**
இயேசு ராஜாவுக்கு ஜே ஜே

1. இகமதில் வாழ்பவர் அல்லேலூயா
அகமதில் வாழ்பவர் அல்லேலூயா
சுகமதை தருபவர் அல்லேலூயா
பரலோகம் சேர்ப்பவர் அல்லேலூயா

2. சத்திய பரனவர் அல்லேலூயா
சந்தோஷம் தருபவர் அல்லேலூயா
மன்னாதி மன்னனவர் அல்லேலூயா
மகிமையில் சேர்ப்பவர் அல்லேலூயா

3. சாத்தானை வீழ்த்தியவர் அல்லேலூயா
சாவினை வென்றவர் அல்லேலூயா
சீக்கிரம் வந்திடுவார் அல்லேலூயா
சீயோனில் சேர்த்திடுவார் அல்லேலூயா

## பாடல் - 1052
(F-Min/DISCO/T-130)

**நீர் என்னோடு இருக்கும் போது**
எந்நாளும் வெற்றி வெற்றியே – 2
தோல்வி எனக்கில்லையே – நான்
தோற்றுப் போவதில்லையே – 2

1. மலைகளைத் தாண்டிடுவேன் – கடும்
பள்ளங்களைக் கடந்திடுவேன் – 2
சதிகளை முறியடிப்பேன்
சாத்தானை ஜெயித்திடுவென் – 2

2. சிறைச்சாலைக் கதவுகளும் – என்
துதியினால் உடைந்திடுமே – 2
அபிஷேகம் எனக்குள்ளே – நான்
ஆடிப்பாடி மகிழ்ந்திடுவேன் – 2

3. மரணமே கூர் எங்கே
பாதாளமே ஜெயம் எங்கே?
கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவெனக்கு ஆதாயமே

## பாடல் - 1053
(F-Maj/8 Beat/T-90)

**நானும் என் வீட்டாரும்**
உம்மையே நேசிப்போம்
உமக்காய் ஓடுவோம்
உந்தன் நாமம் சொல்லுவோம்

1. கைவிடா தெய்வமே கருணையின் சிகரமே
மெய்யான தீபமே என் வாழ்வின் பாக்கியமே

முழந்தாழ் படியிட்டு
முழுவதும் தருகிறேன் – நான்

2. எபிநேசர் எபிநேசர் இதுவரை உதவினீர்
யேகோவா ஈரே எல்லாம் பார்த்துக் கொள்வீர்

3. யேகோவா ஷம்மா கூடவே இருக்கிறீர்
யேகோவா ஷாலோம் சமாதானம் தருகிறீர்

4. எல்ஷடாய் எல்ஷடாய் எல்லாம் வல்லவரே
எல்ரோயீ எல்ரோயீ என்னைக் காண்பவரே

5. பரிசுத்தர் பரிசுத்தர் பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே இனிமேலும் வருபவரே

## பாடல் - 1054

**ஆத்துமாவே நீ துதித்திடுவாய்**
நம் தேவனை என்றுமாய்
பாவங்களை மன்னித்தாரே
நம் நோய்களை நீக்கினாரே

1. விண்ணில் உன்னை சேர்த்திடவே
மண்ணில் உதித்தார்
கண்ணீர் யாவும் போக்கிடவே
செந்நீர் வடித்தார் - அல்லேலூயா
பாலைவனமாம் பாரில் உன்னை
சோலைவனம் ஆக்கினாரே

2. தாகமான நேரம்
ஜீவ தண்ணீர் கொடுத்திடுவார்
சோகமான நேரம் அவர்
தோளில் சுமந்தார் அல்லேலூயா
பெலவீன நேரம் வைத்தியரானார்
என் வாழ்வில் அவர் போதுமே

3. சத்தியத்தின் பாதையிலே
நித்தம் நடத்துவார்
நீதிபரர் இயேசுவை
நித்தம் துதிப்பாய் - அல்லேலூயா
வழுவாமலே காத்திடுவார்
வாழ்நாள் எல்லாம் துதிப்பேன்

## பாடல் - 1055
(D-Beat-3/4/Temp-85)

**ஆராதனை ஆராதனை அப்பா ஆராதனை**
ஆராதனை ஆராதனை அப்பா ஆராதனை

ஒரு வாழ்வு தான் அது உமக்காகத்தான்
வாழ்நாளெல்லாம் ஆராதிப்பேன்

1. சாரோனின் ரோஜா சர்வ சிருஷ்டிக்கு ராஜா
உமக்கே ஆராதனை
வாசனை வீசும் வானப் பிதாவே
உமக்கே ஆராதனை

2. எல்லா கனத்துக்கும் எல்லா மகிமைக்கும்
பாத்திரர் ஆனவரே
தூதர்கள் போற்றும் மூப்பர்கள் வாழ்த்தும்
தூயாதி தூயவரே

3. நல்ல ஈவும் பூரண வரமும் நிறைந்தவர் நீர் தானே
கோடான கோடி நன்றிகள் பாடி
உந்தன் பாதம் பணிந்திடுவேன்

## பாடல் - 1056

**ஆராதனைக்கு உரியவர்**
ஆராதனைக்கு பாத்திரர் – 2
மாறாதவர் நல் நாயகர் – 2
நான் ஆராதிப்பேன் என் இயேசுவை

1. செங்கடல் பிளந்து வழி கொடுத்தார்
சத்தமாய் துதித்திடுவேன்
யோர்தானை உடைத்து காணானைத் தந்தார்
யேகோவாவை துதித்திடுவேன்

2. மகிமை மறந்து மண்ணில் வந்தார்
மன்னனை துதித்திடுவேன்
என் வாழ்வின் பிரச்சனைகள் புரிந்துகொள்வார்
பிரதான ஆசாரியரே (மகா)

3. கல்லறை திறந்து உயிர்த்தெழுந்தார்
கர்த்தரை துதித்திடுவேன்
பிதாவின் வலப்பக்கம் சென்றமர்ந்தார்
ராஜாவை துதித்திடுவேன் (இயேசு)

## பாடல் - 1057

**அன்பே உமக்கு ஆராதனை**
என் அழகே உமக்கு ஆராதனை
கர்த்தர் உமக்கு ஆராதனை
கல்வாரி நாதா ஆராதனை



அட்டவணை

ஆராதனை ஆராதனை ஆவியில் ஆராதனை
ஆராதனை ஆராதனை அனுதின ஆராதனை

1. பாவி என்மேல் பாசம் வைத்தீர்
பலகோடி ஸ்தோத்திரமைய்யா (2)
கள்ளன் என்மேல் கருணை வைத்தீர்
கணக்கில்லா ஸ்தோத்திரமைய்யா

2. உள்ளம் எல்லாம் கொள்ளை கொண்ட
உன்னதரே ஸ்தோத்திரமைய்யா
கள்ளம் எல்லாம் நீக்கி விட்டார்
காலமெல்லாம் ஸ்தோத்திரமைய்யா

பாடல் - 1058
(D-Min/6/8 Modern/T-110)

**பலியிடு துதி பலியிடு**
வலி விலகும் வாழ வழி பிறக்கும்
துதி பலி அது சுகந்த வாசனை
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. துதி பலி செலுத்திட
பொருத்தனை செய்ததும்
மீன் அன்று கக்கியது கரையிலே
யோனாவை கக்கியது கரையிலே - அன்று

2. நோவாவின் பலிதனை
நுகர்ந்தார் நம் கர்த்தர்
சுகந்த வாசனையாய்
பலுகிப் பெருகச் செய்தார் - அன்று

3. நல்லவர் கர்த்தர் என்று
எல்லாரும் துதிக்கையில்
ஆலயத்தை மேகம் மூடியது
கண்டார்கள் கர்த்தர் மகிமையை

4. சீலாவும் பவுலும் சிறையிலே துதித்ததால்
கட்டுக்கள் கழன்று போயின
ஜெயிலர் இரட்சிக்கப்பட்டான்
அந்த அதிகாரி இரட்சிக்கப்பட்டான்

5. துதி செய்யாத் தொடங்கினதும்
எதிரிகள் தங்களுக்குள்
வெட்டுண்டு மடிந்து போயினர்
எல்லாரும் பிரேதமானார்கள்

### பாடல் - 1059

**என் செல்லம் நீங்கதான் இயேசய்யா**
என் செல்வம் நீங்கதான் இயேசய்யா

விலையேறப் பெற்றவரே
என்னை ஆளும் பரிசுத்தரே
ஆராதனை ஆராதனை – 2

1. பாவியான என்னை நேசித்தீரே
துரோகியான என்னை அணைத்தீரே

2. உடைந்து போன என்னை உருவாக்கியே
வெறுமையான என்னை உயர்த்தினீரே

### பாடல் - 1060
(Em2/4/R-70's DISCO/T-120)

**இரட்சண்யம் மகிமை**
துதி கன வல்லமை
இயேசுவுக்கு சொந்தமல்லவோ
ஆவியின் வல்லமை
கிருபை மேல் கிருபை
தருகின்ற தேவன் அல்லவா

பாடி ஸ்தோத்தரிப்பேன்
சங்கீர்த்தனம் பண்ணிடுவேன்
உம்மில் என்றும் மகிழ்ந்திடுவேன்

1. சாரோனின் ரோஜா நீரே
சீயோனில் பெரியவரே
சாத்தானை ஜெயிக்க
சத்துவம் அளிப்பீர்
பாடுவேன் அல்லேலூயா

2. காருண்யம் உள்ளவரே
கரம் பற்றி நடத்திடுமே
கண்மணி போல
காத்திட்டதாலே
பாடுவேன் அல்லேலூயா

3. சாலேமின் ராஜா நீரே
சமாதான காரணரே
ஷாலோம் என்றாலே
சமாதானம் தானே
பாடுவேன் அல்லேலூயா

4. மரணத்தை வென்றவரே
மறைவிடமானவரே
வசனத்தை அனுப்பி
குணமாக்குவீரே
பாடுவேன் அல்லேலூயா

## பாடல் - 1061

**உம்மை மறந்து என்னால் வாழ முடியுமா?**
உம்மை பிரிந்து என்னால் ஜீவிக்க முடியுமா?

இயேசையா சொல்லுங்கையா
இயேசையா அது முடியாதையா

1. பாவங்கள் மன்னித்தீரே மறக்க முடியுமா?
பரிசுத்தம் தந்தீரே மறக்க முடியுமா?
மறக்க முடியுமா? மறக்க முடியுமா?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா?

2. வியாதிகள் நீக்கினீரே மறக்க முடியுமா?
விடுதலையாக்கினீரே மறக்க முடியுமா?
மறக்க முடியுமா? மறக்க முடியுமா?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா?

3. ஆபத்தில் காத்தீரே மறக்க முடியுமா?
அதிசயம் செய்தீரே மறக்க முடியுமா?
மறக்க முடியுமா? மறக்க முடியுமா?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா?

4. வேண்டுதல் கேட்டீரே மறக்க முடியுமா?
கேட்டதை தந்தீரே மறக்க முடியுமா?
மறக்க முடியுமா? மறக்க முடியுமா?
நீர் செய்த நன்மைகளை மறக்க முடியுமா?



அட்டவணை

பாடல் - 1062

(F-Maj/8 Beat/T-125)

**பரிசுத்தமான பரனே என்னை**
பாத்திரன் ஆக்கிடுமே (2)
பரம தரிசனம் தாருமே தேவா
பரிசுத்தமாக்கிடுமே

கர்த்தருக்கு பரிசுத்தம்
கருத்துடன் நெற்றியிலே
பதித்திட உதவி செய்யும்
பரமனே சுத்தமாக்கும்

2. அந்தகார வாழ்க்கையில் பரிசுத்தம் காண
அடிமைக்கு உதவி செய்யும்
ரகசிய பாவங்கள் வெறுத்திட எனக்கு
இரங்கிடுமே இந்நேரமே

3. பொது வாழ்வில் என்னை பரிசுத்தமாக்க
காத்திட உதவி செய்யும்
நாள்தோறும் என் வாழ்வில்
உம்மையே உயர்த்த பரிசுத்தம் தந்திடுமே5

4. தூசியை உதறி விட்டெழுந்திட எனக்கு
தூயனே துணை செய்வீர்
வல்லமை தரித்து வாழ்ந்திட இன்று
உம் ஆவியை தந்திடுமே

பாடல் - 1063

(C-Min/s. Rock/T-95)

**தாய்கூட பிள்ளைகளை மறந்து போகலாம்**
சிங்கம்கூட குட்டிகளைப் பட்டினி போடலாம்

தாயினும் மேலாக அன்பு வைத்தவர்
இரத்தத்தையே சிலுவையிலே
உனக்குத் தந்தவர் மறந்திடுவாரோ
உன்னை வெறுத்திடுவாரோ – 2
நம்பிக்கையை விட்டு விடாதே – நீ
நம்பினவர் கைவிடமாட்டார்

1. நீ அவரை தெரிந்து கொள்ளவில்லை
அவரல்லவோ உன்னைத்
தெரிந்து கொண்டார்
நேற்று அல்ல இன்று அல்ல
தாயின் கருவில் தோன்றும் முன்னே

2. தேவன் உனக்குச் சொன்ன வார்த்தையெல்லாம்
ஒன்றுகூட மாறிப் போவதில்லை
நேற்றும் இன்றும் என்றும் மாறா
தேவன் இயேசு மாறிடாரே – 2

3. நீ அவரின் முகத்தை நோக்கிப் பார்த்தால்
உந்தன் வாழ்வு வெளிச்சமாக மாறும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை – 2

4. உன்னை என்றும் நேசிக்கின்ற தேவன்
உன்னை விட்டு விலகிப்போவதில்லை
நித்தம் உன்னை நடத்திடுவார்
நித்தியத்தில் சேர்த்திடுவார் – 2

## பாடல் - 1064

**அற்புதங்கள் செய்பவர் இன்றும் வாழ்கிறார்**
அதிசயங்கள் செய்பவர் நமக்குள் வாழ்கிறார்
என்றும் வாழ்கிறார் துதித்துப் பாடிடுவோம்
புகழ்ந்து நாம் போற்றிடுவோம்

1. கலங்காதே என் மகனே
நீ சோர்ந்திடாதே என் மகளே – 2
கன்மலையைப் பிளந்து தண்ணீரைத் தந்தவர்
உன் கண்ணீரைத் துடைத்திடுவார் – 2

2. நீ விசுவாசித்தால்
தேவ மகிமையை கண்டிடலாம்
மாராவின் தண்ணீரைத் தேனாக மாற்றினவர்
உன் வாழ்வை வளமாக்குவார் – 2

3. நீ போகும் பாதையிலே
வனாந்தரம் வந்தாலும்
ஆகாரின் கண்ணீரைக் கண்ட தேவன்
நீரூற்றை உனக்கருள்வார் – 2

## பாடல் - 1065
## (C-Maj/DISCO/T-120)

**பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே**
பூலோகம் வந்தாரைய்யா
மனிதனை மீட்கவே பரலோகம் திறக்கவே
சிலுவையை சுமந்தாரைய்யா - 2

கண்ணீரை துடைத்தாரைய்யா
சந்தோஷம் தந்தாரைய்யா -2

எந்தன் இயேசுவே -4

2. தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா
ஆஸ்தியை கேட்கவில்லை அந்தஸ்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா

நான் தேடி போகவில்லை
என்னைத் தேடி வந்தாரைய்யா -2

எந்தன் இயேசுவே - 4

3. தாய் உன்னை மறந்தாலும் தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பர் உன்னை மறந்தாலும் உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்

கரம் பிடித்து நடத்திடுவார்
கன்மலை மேல் நிறுத்திடுவார் - 2

எந்தன் இயேசுவே - 4

## பாடல் - 1066
## (F-Min/party pop/T-115)

**இந்த மட்டும் காத்த எபிநேசரே**
இனிமேலும் காத்த யெகோவாயீரே
எந்தன் வாழ்க்கையின் இம்மானுவேலரே
இந்த வருடத்தின் நாட்களிலே

ஸ்தோத்திரிப்போம் நாமே துதிகளுடனே
ஆர்ப்பரிப்போம் அன்பர் இயேசுவை அல்லேலூயா

1. யோர்தானும் செங்கடலும் நம் எதிரில்
எழும்பி வந்த போதிலும் காத்தவர்
சாபப்பிசாசின் சோதனை போதிலும்
இயேசு நாமத்தில் அகற்றியவர் -2

2. சேயைக் காக்கும் ஒரு தாயைப்போலவே
இந்த மாய லோகில் என்னைக் காக்கும் தேவனே
மகத்தான கிருபை என்மேலே
மகிபா நீர் ஊற்றிடுமே -2

3. பழமை எல்லாம் ஒழிந்து போனதே
எல்லாம் புதிதாக தேவனே ஆனதே
உந்தன் மகிமையில் இறங்கியே வாருமே
நாங்கள் மறுரூபமடைந்திடவே

## பாடல் - 1067

**வல்லமை வல்லமை தாரமே**
அபிஷேகம் அபிஷேகம் ஊற்றுமே
துதிக்கிறோம் துதிக்கிறோம் தேவனே
மகிமை மகிமையாய் வாருமே

சேர்ந்து பாடுவோம் கரங்கள் தட்டுவோம்
இயேசு ராஜாவை கொண்டாடுவோம்

1. அற்புதம் அற்புதம் செய்பவரே
அற்புதம் செய்யும் இயேசு ராஜனே
விடுதலை விடுதலை தருபவரே
விடுவிக்கும் வல்ல இயேசு ராஜனே

2. பரிசுத்தம் பரிசுத்தமாக்குமே
பரிசுத்தமாக்கும் நல்ல மேய்ப்பரே
சுகத்தை பெலத்தை தருபவரே
சுகமாய் மாற்றும் எங்கள் இயேசு ராஜனே

3. அதிசயம் அதிசயம் செய்பவரே
அதிசயமான எங்கள் தேவனே
கிருபை இரக்கம் உள்ளவரே
அன்பினால் என்னை அணைப்பவரே

## பாடல் - 1068
(C-Min/6/8 soul/T-115)

**உள்ளம் எல்லாம் உருகுதய்யா உந்தன்**
அன்பை நினைக்கையிலே
தன்னாலே கண்ணு கலங்குது
கர்த்தாவே உம்மை நினைக்குது

இந்த தெள்ளுப் பூச்சிக்கும்
நல்ல வாழ்க்கையை தந்தீரே – என்னை
நல்லவனாக்கி அல்லையில் வைத்துக் கொண்டீரே

1. கருவினில் அநாதையானேன்
தெருவினில் நான் கிடந்தேன்
அருகினில் வந்து என்னை
அணைத்த அன்பு தெய்வமே
அற்புதமே அதிசயமே உம்மை
நான் என்றும் மறவேன்

2. தேற்றிட ஒருவரில்லை
ஆற்றிட யாருமில்லை
தூற்றிட பலருண்டு
சேற்றை வீசும் மனிதருண்டு
ஏற்றிடும் என் விளக்கை
தேற்றும் எந்தன் தெய்வமே
சற்பரனே பொற்பரனே உம்மை
நான் என்றும் துதிப்பேன்

3. ஊரெல்லாம் சென்றிடுவேன்
உந்தன் நாமம் பறை சாற்றிடுவேன்
தெருவெல்லாம் ஏசுவே என்று
உம் நாமம் உயர்த்திடுவேன்
ஆளுகை செய்யும் என்னை
எந்தன் அன்பு தெய்வமே
உம்மையன்றி இவ்வுலகில்
ஆறுதல் எனக்கு யாருமில்லை

## பாடல் - 1069

**ஆராதனைக்குரிய என் ஆண்டவரே**
என் ஆண்டவவரே ஆராதனை! ஆராதனை!!

1. இரக்கத்தின் தேவனே
யெகோவா ராஜனே
ஆறுதல் அனைத்திற்கும்
வற்றாத நீரூற்றே

2. பாடுகள் பெருகும் போது
ஆறுதல் பெருகுதையா
மரணத்தின் பிடியினின்று
விடுவித்துக் காக்கின்றீரே

3. எல்லா இடங்களிலும்
வெற்றியை தருகின்றீர்
உம்மை வெளிப்படுத்தி
உதவி செய்யுமைய்யா

பாடல் - 1070
(G2/4 R-Polka/T-125)

**இயேசுவின் நாமத்தில் அற்புதமே**
இன்றும் நடந்திடுமே - என்
இயேசுவின் நாமத்தில் விடுதலையே
என்றும் நடத்திடுமே

1. அடைக்கப்பட்ட வாசல் திறந்திடும்
இயேசுவின் நாமத்திலே
இயேசுவின் நாமத்தில் திறந்தால்
அதை அடைக்கவும் முடியாதே

2. வியாதிகள் அனைத்தும் நீங்கிடுமே
இயேசுவின் நாமத்திலே
இயேசுவின் நாமத்தில் நீங்கினால்
வியாதி மீண்டும் வராது

3. ஆயிரம் பேர் உன்னை எதிர்த்தாலும்
அது உன்னை அணுகிடாதே
இயேசுவின் நாமத்தில் ஜெயித்திடுவாய்
அதை மிதித்தே தகர்த்திடுவாய்

4. வறுமைகள் அனைத்தும் நீங்கிடும்
இயேசுவின் நாமத்தினால்
ஆசீர்வாதம் பெருகி
புது மகிழ்ச்சியும் பொங்கிடுமே



அட்டவணை

## பாடல் - 1071
## (D-Maj/calipsc/T-92)

**மனம் சுத்தி சுத்தி வருதே தானா**
இயேசு ராஜாவ - 3
நான் உம்மை விட்டு தூரம் போனா
மனம் நல்லால்ல என் மனம் நல்லால்ல

1. இயேசு தானே ஜீவன் பெலனும்
யாருக்கு நான் இனி அஞ்சி அஞ்சி வாழணும் - 2

2. உந்தன் வேதம் உடலுக்கு ஜீவன்
அதுவே எனக்கு அனுதின கீதம் - 2

3. தேனை போல பாவம் வந்தாலும்
இயேசு திருப்தியில் எட்டி எட்டி உதைப்பேன் - 2

4. அற்புதர் இயேசு எனக்குள் இருக்க
அனுதின தேவையின் பயமெனக்கில்ல - 2

5. இயேசுவும் நானும் ரொம்ப ரொம்ப பொருத்தம்
சாத்தானுக்கோ இனி ரொம்ப ரொம்ப வருத்தம்

6. இயேசுவும் நானும் ஜாடிக்கேத்த மூடி
இனி எனக்கு இல்ல வேற ஒரு ஜோடி

## பாடல் - 1072

### *பல்லவி*

**எங்கும் புகழ் யேசு ராசனுக்கே**
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

### *அனுபல்லவி*

உங்களையல்லவோ உண்மை வேதங் காக்கும்
உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார் - எங்கும்

### *சரணங்கள்*

1. ஆயிரத் தொருவர் ஆவிரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்குசதம் அன்புடைய
சாமி யேசுவிக்கிதயம் தந்திடுவீர் - எங்கும்



அட்டவணை

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன்பட்டவர்கள் கண்திறக்கவே,
பல்வழி அலையும் பாதை தப்பினோரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர் - எங்கும்

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி?
பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ? - எங்கும்

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன்வீரரே
கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர் - எங்கும்

*-ல. பொன்னுசுவாமி*

## பாடல் - 1073
## (D-Maj/JIVE/T-165)

**கர்த்தர் நல்லவர் துதியுங்கள்**
அவர் கிருபை என்றுமுள்ளது
தேவாதி தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தாதி கர்த்தரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அற்புதம் செய்பவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

மகிழ்ந்து பாடு அல்லேலூயா
புகழ்ந்து பாடு அல்லேலூயா
சேர்ந்து பாடு அல்லேலூயா
போற்றி பாடு அல்லேலூயா
அல்லேலூயா ஆமென்
களித்து பாடு அல்லேலூயா
துதித்து பாடு அல்லேலூயா
அல்லேலூயா ஆமென்

2. வானங்களை விரித்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பூமியை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சூரியனை நிறுத்தியவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சந்திரனை படைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

3. செங்கடலை பிளந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அரசர்களை அழித்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சேனைகளை கவிழ்த்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தேசத்தை தந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

4. தாழ்வில் நினைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
விடுதலை தந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
ஆகாரம் தருபவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பரத்தின் தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

## பாடல் - 1074

**யெகோவாயீரே என் கர்த்தரே – உம்**
கிருபை எனக்குப் போதுமே
தேவையெல்லம் தந்திடுவாரே
தம் மகிமை ஐசுவரியப்படியே
தம்முடைய தூதருக்குக் கட்டளையிட்டு
யெகோவாயீரே காத்துக் கொள்வார்

## பாடல் - 1075

**உங்க முகத்தை பார்க்கனுமே இயேசையா** – 4
அல்லேலூயா – 4

1. எந்தன் பாடுகள் வேதனை மறைந்து விடும்
எந்தன் துயரங்கள் கலக்கங்கள் மாறிவிடும்

2. யோர்தானின் வெள்ளங்கள் விலகிவிடும்
எரிகோவின் மதில்களும் இடிந்துவிடும்

3. எங்கள் தேசத்தில் கட்டுகள் முறிந்து விடும்
எங்கள் சபைகளில் எழுப்புதல் பரவிவிடும்

## பாடல் - 1076
(C-Min/DISCO/T-125)

**உம் நாமம் வாழ்க ராஜா விண் தந்தையே**
உம் அரசு வருக ராஜா என் தந்தையே

வாழ்க ராஜா அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா – 4

1. யெகோவாயீரே உம் நாமம் பரிசுத்தப்படுவதாக
யெகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர்

2. யெகோவாரூவா உம் நாமம் பரிசுத்தப்படுவதாக
யெகோவா ரஃப்பா சுகம் தருபவர் நீர்

3. ராஜாதி ராஜா நீரே உம் நாமம் பரிசுத்தப்படுவதாக
உயிரோடு எழுந்தவரே வேகமாய் வாருமையா

மாரநாதா அல்லேலூயா
அல்லேலூயா ஓசன்னா

## பாடல் - 1077

**கையளவு மேகம் கனமழை**
கொடுக்கும் அதிசயம் அதிசயம்
காற்று இல்லாமல் மழை இல்லாமல்
பள்ளங்கள் நிரம்புது அற்புதம்

1. நீ விசுவாசிக்கும் தேவன்
யார் என்று தெரியாதா
பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி
பர்வதங்களை தராசில் நிறுத்தி
தண்ணீரை கையால் அளப்பவர்
என்று புரியாதா
வானத்தை வசமாய் வளைப்பவர்
தீவை அனுவாய் தூக்குபவர்

2. சீயோனே ஆண்டவர் என்னை
மறந்தார் என்று நீ சொல்லாதே
இமைப்பொழுது கைவிட்டாலும்
உருக்கமாய் இரக்கமாய் சேர்ந்து கொண்டு
நித்திய கிருபை உன்மேல்
பொழிவார் மறவாதே
அன்பின் கயிற்றால் இழுப்பவர்
ஆண்டவரே உன் நாயகர்

## பாடல் - 1078

**மன்னாதி மன்னனுக்கு ஜெயகே**
மாறாத தேவனுக்கு ஜெயகே – 2
கர்த்தாதி கர்த்தருக்கு ஜெயகே
ராஜாதி ராஜனுக்கு ஜெயகே – 2
ஜெயகே ஓ ஜெயகே – 4

என்னை வாழ வைக்கும் தேவனுக்கு ஜெயகே – 2
என்னை நடத்துகின்ற தேவனுக்கு ஜெயகே

1. இந்தியாவின் தேவனுக்கு ஜெயகே
இலங்கை ஆளும் தேவனுக்கு ஜெயகே
அமெரிக்காவின் தேவனுக்கு ஜெயகே
ஆப்பிரிக்காவின் தேவனுக்கு ஜெயகே

2. உன்னை ஆளும் தேவனுக்கு ஜெயகே
உன்னை ஆளும் தேவனுக்கு ஜெயகே
நம்மை ஆளும் தேவனுக்கு ஜெயகே
அகிலம் ஆளும் தேவனுக்கு ஜெயகே

3. பறவைகளின் தேவனுக்கு ஜெயகே
பிராணிகளின் தேவனுக்கு ஜெயகே
மீன்களின் தேவனுக்கு ஜெயகே
விண் சுடர்களின் தேவனுக்கு ஜெயகே

## பாடல் - 1079
(F-Maj/waltz/T-135)

**உம் நாமம் உயரணுமே**
உம் அரசு வரணுமே
உம் விருப்பம் நடக்கணுமே
அப்பா பிதாவே அப்பா (4)

1. அன்றாட உணவை ஒவ்வொரு நாளும்
எனக்குத் தாரும் ஐயா

2. பிறர் குற்றம் மன்னித்தோம்
அதனால் எங்கள் குறைகளை மன்னியுமே

3. சோதிக்கும் சாத்தானின் சூழ்ச்சியிலிருந்து
விடுதலை தாருமையா

4. ஆட்சியும் வல்லமை மாட்சியும் மகிமை
என்றென்றும் உமக்கே சொந்தம்

5. ஜாதிகள் ஒழியணும் சண்டைகள் ஓயணும்
சமாதானம் வரணுமே

6. ஊழியம் எழும்பணும் ஓடி உழைக்கணும்
உம் வசனம் சொல்லணுமே

## பாடல் - 1080
## (D-Min/6/8 soul/T-134)

**உயர்ந்த லட்சியம் இங்கு தேவை நிச்சயம்**
புதுமை ஜீவிதம் என்றும் நமது லட்சியம்
தேவ வாக்குகள் நிறைவேறும் சத்தியம்
தேவ ராஜ்ஜியம் உதயமாகும் நிச்சயம்

ஹமாராவதன் இந்தியா
சகாராகே பியார மஸி

1. தேசம் தேடும் இயேசுவை
நாம் காட்ட வேண்டுமே
பாவ வாழ்வு களைந்த
தூய வாழ்வு வேண்டுமே
கவலையற்ற தூய மனம் சீர் பொருந்துமே
இனி பகைமைகளும் பிரிவுகளும்
மறைந்து போகுமே

2. வேதம் தேடும் தூய மனிதன் நீயும் ஓடிவா
தேவனோடு உடன்படிக்கை
செய்ய விரைந்து வா
போதும் என்ற பக்தி கொண்டே
நீயும் ஓடிவா
உன் சிறந்த வாழ்வை
இயேசுவுக்கு பரிசளிக்க வா

## பாடல் - 1081
## (F4/4/R-Pop Ballad/T-90)

**தென்றல் காற்றாக**
என்னைத் தொட்டு தழுவுமையா
புதுப் பாட்டாக என்னை சூழும்
ஆவியானவரே

1. உம் தெய்வீக பிரசன்னத்தினால்
என்னை மெய் மறக்கச் செய்திடுமே

2. தேனாக தித்தித்திடுமே - உம்மை
நாவாலே துதித்திடுவேன்

3. உம் செட்டையின் கீழ் வந்து சேருவேன்
உம் சிறகுகளால் என்னை மூடுமே

4. உம் இடதுகை என்னை தாங்கட்டும்
உம் பலத்தினால அணைத்துக் கொள்ளும்

5. பசுமையான மேய்ச்சல் தாருமே - எனக்கு
அமைதியான தண்ணீர் (வாழ்க்கை) வேண்டுமே

## பாடல் - 1082

*பல்லவி*

**கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்.

*அனுபல்லவி*

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்-து
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும் - கண்களை

*சரணங்கள்*

1. காலைத் தள்ளாட வொட்டார் - உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் - கண்களை

2. பக்க நிழல் அவரே - எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே
எக்கால நிலைமையும் எனைச் சேதப்படுத்தா-து
முக்காலம் நின்றென்னை நற்காவல் புரியவே - கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் - என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் - கண்களை

*- த. ஐயாத்துரை பாகவதர் -த.ஐ.*

## பாடல் - 1083
(E-Maj/DISCO/T-125)

**இசையாலே இயேசுவைப் பாடுவோம்**
இன்னிசையாலே இயேசுவைப் பாடுவோம்

நல்லவர் அவர் செய்த நன்மைகளை
நாள்தோறும் நாள்தோறும் பாடுவோம்

1. எக்காள தொனியுடன் பாடுவோம்
கைத்தாள ஓசையுடன் பாடுவோம்
வீணை கொண்டு பாடுவோம்
விடுதலை ஈந்தவரைப் பாடுவோம்

2. தம்புரு நடனத்தால் பாடுவோம்
தயை மிக வைத்தவரைப் பாடுவோம்
தாளங்கள் முழங்கிடப் பாடுவோம்
தற்பரன் இயேசுவைப் பாடுவோம்

3. ஸ்தோத்திர பலியிட்டுப் பாடுவோம்
துதிகள் செலுத்தியே பாடுவோம்
யாழோடும் குழலோடும் பாடுவோம்
யாத்திரைக் களைப்பினிலே பாடுவோம்

## பாடல் - 1084

**இயேசுவைப் பாடுவோம் இனிதாய் பாடுவோம்**
எண்ணில்லா நன்மைகள் செய்வதால் பாடுவோம்
போஷிப்பதால் பாடுவோம் நேசிப்பதால் பாடுவோம்
சுவாசிப்பதால் பாடுவோம் சுகராகம் பாடுவோம்

1. கீழாக்காமல் மேலாக்குவேன் என்பதாலே பாடுவோம்
வாலாக்காமல் தலையாக்குவேன் என்பதாலே பாடுவோம்
நன்றி சொல்லிப் பாடுவோம் நாவலிக்கப் பாடுவோம்
நடனமாடிப் பாடுவோம் நாள்முழுக்கப் பாடுவோம்

2. பாவங்களை மன்னிப்பதால் மகிழ்வுடனே பாடுவோம்
வியாதிகளை விலக்குவதால் வீறுகொண்டு பாடுவோம்
அல்லேலூயா பாடுவோம் ஆனந்தமாய் பாடுவோம்
துதிகீதம் பாடுவோம் ஸ்தோத்திரம் பாடுவோம்

3. சீக்கிரமாய் வருவேனென்று சொன்னவரைப் பாடுவோம்
ஆம் கர்த்தாவே வாருமென்று சொல்லிப் செல்லிப் பாடுவோம்
வந்ததாலே பாடுவோம் வருவதாலே பாடுவோம்
வானவரைப் பாடுவோம் வாழ்த்தியே பாடுவோம்

## பாடல் - 1085

**தேன் தமிழில் பாட்டெடுத்து**
தேவா உன்னைப் பாடுகின்றேன்
தேடி வந்த தெய்வம் நீரே
தினந்தோறும் வாழ்த்துகிறேன் உம்மை

1. நான் வாழுகின்ற வீடவரே
நான் உண்ணுகின்ற உணவவரே
நான் அருந்தும் நல் நீரே தேவா
வருகின்றேன் வாழ்வளியும்
தருகின்றேன் ஏற்றருளும்

2. என் வாழ்வினிலே விடியவில்லை
என் பயணமதும் முடியவில்லை
தினந்தோறும் சாகின்றேனே தேவா
மண்ணானேன் மரமாக்கும்
வெயிலானேன் நிழலாக்கும்

3. என் வியாதியிலே வாடுகின்றேன்
என் படுக்கையிலும் பாடுகின்றேன்
பிணி தீர்க்கும் நல் மருந்தே தேவா
வார்த்தையதை அனுப்பிடுமே
வாதையதை போக்கிடுமே

## பாடல் - 1086
(D-Maj/6/8 soul/T-125)

**எங்கும் நிறை இயேசு தேவனே**
எந்நாளும் உம்மையே போற்றிப் பாடுவோம்
பாடல்களில் பிரியம் நீர்
பாட்டுக்கெல்லாம் தலைவன் நீர்
எழுச்சியோடே பாடுவோம் இயேசுவைப் பாடுவோம்

1. பூமியின் குடிகளே
கெம்பீரமாய்ப் பாடுங்கள்
இயேசுவைப் பாடுங்கள்
மகிழ்வுடனே துதித்து ஆராதனை செய்து
ஆனந்த சத்தத்தோடே
சன்னதி முன் வாருங்கள்

2. இரட்சண்யக் கூட்டத்தார்
பாட்டுப் பாடுகின்றார்
அவர் நடனமாடுகின்றார்
நித்திய மகிழ்ச்சி தலையின் மேல் இருக்கும்
சஞ்சலமும் தவிப்பும் ஓடியே போகும்

3. இயேசுவே இரக்கமும் உருக்கமான தேவன்
அவர் ஆசீர்வதிக்கும் தேவன்
அவரையே பணிந்து ஆவியிலே நிறைந்து
ஆபிரகாம் மடிக்கு
சென்றிடுவோம் வாருங்கள்

பாடல் - 1087
(D-Maj/DISCO Fox/T-122)

**பாடச் சொல்லித் தந்தவர் இயேசு அல்லவா**
பாடல் வரிகளும் அவர் அல்லவா
பல்லவிச் சரணம் அவர் அல்லவா
பாடுவதே என்றும் சுகமல்லவா

1. மண்ணுக்குள்ளே மறைந்திருந்து
மரத்தினைக் காக்கும் வேர் போலவே
நமக்குள்ளே நிறைந்திருந்து
காக்கும் தேவனைத் துதித்திடுவோம்

2. ஒன்றும் ஒன்றும் என்றும் இரண்டல்ல
ஒன்றொடு ஒன்று சேர்ந்து ஒன்றானதே
வாழ்வது இனி நான் அல்ல
இயேசுவே என்னில் வாழ்கிறார்

3. தனிமையிலே ஒன்றும் இனிமை இல்லை
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கிறிஸ்துவின் வீரர்கள் ஒன்று கூடுவோம்
உலகத்தை தலை கீழாய் மாற்றிடுவோம்

பாடல் - 1088

**குரல் கொடுப்பேன் நான் குரல் கொடுப்பேன்**
குரல் வளம் தந்தவர்க்குக் குரல் கொடுப்பேன்

கும்பிடுகிவேன் நான் கும்பிடுவேன்
குரலோசை முழங்கியே கும்பிடுவேன்

1. கொன்னை வாயன் எனக்கு வாய் கொடுத்தார்
கொடியவன் என்னைச் சேர்த்துக் கொண்டார்
பயந்திருந்தேன் என்னைப் பாடச் செய்தார்
பணிந்தே நாளும் குரல் கொடுப்பேன்

2. அனுதின உணவுடன் ஆடை தந்தார்
அரக்கனை அழித்திட ஆற்றல் தந்தார்
புலன்களை அடக்கிட ஆவி தந்தார்
புகழ்ந்தே நாளும் குரல் கொடுப்பேன்

3. இசையிலும் இனியது மேனாமன்றோ
மோனத்தின் விளைவிடம் இயேசுவன்றோ
தொழுதிடுவோர் பெரும் ஜாதியன்றோ
தொழுதே நாளும் குரல் கொடுப்பேன்

பாடல் - 1089

**பொன் மங்கி நிறமும் மாறி**
அழிந்து போகுமானால்
இரும்பின் நிலை என்ன - ஐயோ
இரும்பின் நிலை என்ன
நீதிமானே இரட்சிக்கப்படுதல்
அரிய செயல் என்றால்
துரோகியின் நிலை என்ன - தேவ
துரோகியின் நிலை என்ன

1. மோசே என்னும் தேவ மனிதன்
பசும் பொன் போலவே விளங்கிடினும்
கானான் போகவில்லையே - அவன்
கானான் போகவில்லையே
நீயும் உன்னையே தேவப் பிள்ளையே
நிற்கிறதாக எண்ணுகிறாயோ
நியாயத்தீர்ப்பிலே கோதுமை பறக்க
பதர் எம்மாத்திரம்

2. காலம் இனியும் செல்லாதே
கடைசி செய்தியை அறிவிப்பாயே
சோர்ந்து போகாமலே - மனம்
சோர்ந்து போகாமலே
ஆவியானவர் துணை செய்வார்
ஆத்தும ஆதாயம் செய்திடுவோம்
கிறிஸ்துவை உடையவன்
பேசாவிட்டால் கல்கள் கூப்பிடுமே

### பாடல் - 1090

**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல**
இயேசுவும் எனக்குள்ளே நிறைந்திருக்கட்டும்

1. நீரின்றி மீன்கள் வாழ்ந்திருக்குமோ
நீர் இன்றி நானும் வாழ்ந்திருப்பேனோ
கரையின்றி நதி தான் கடல் சேருமோ
கரையாக்கிக் கர்த்தனே கதிசேருமே

2. பூவின்றி நார் தான் மணம் பெறுமோ
பூவனில்லா வாழ்வும் வாழ்வாகுமோ
செடியின்றிக் கொடியும் நிலை நிற்குமோ
செடியோடே கொடியாய் இணைந்திடுமே

3. ஆயிரம் மலர்கள் மலர்ந்தாலும்
ஆதவன் மகிழ்வது ஒரு மலரால்
ஆயிரம் பேர்கள் வாழ்ந்தாலும்
ஆண்டவன் மகிழ்வது ஒரு சிலரால்

### பாடல் - 1091

**எத்தனைப் பாதகம் புரிந்தேனையா**
எதற்கு என்மேல் இத்தனை அன்பேசையா

1. பாடுகள் மறந்தேன் பாவத்தில் அமிழ்ந்தேன்
பாழாகிப் போனேன் பாவி நான் வாரேன்
வந்தென்னைத் தாரேன் தகனமாய்த் தாரேன்

2. விழிகள் இருந்தும் வாசலைக் காணாமல்
செவிகள் இருந்தும் ஜீவனைக் கேளாமல்
உம்முகம் பாராமல் பரத்தை நாடாமல்

3. மகனே என்றீர் மனம் மாறவில்லை
மன்னிப்பு தந்தீர் மனம் ஏற்கவில்லை
மன்னனே என்னில் உமதன்பு இல்லை

### பாடல் - 1092

**கீதங்கள் பாடுவோம் சங்கீதங்கள் பாடுவோம்**
சந்தோஷ ராஜனாம் இயேசுவை பாடுவோம்
சமாதான தேவன் இயேசுவை பாடுவோம்
சாவாமை உடையவர் இயேசுவை பாடுவோம்

1. பகலில் மேக ஸ்தம்பம் இயேசுவை பாடுவோம்
இரவில் வாழ்வு தரும் இயேசுவை பாடுவோம்
எருசலேம் வாழ்வு தரும் இயேசுவை பாடுவோம்
ஏழைகள் தெய்வம் இயேசுவை பாடுவோம்

2. பசி தீர்க்கும் ஜீவ அப்பம் இயேசுவை பாடுவோம்
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர் இயேசுவை பாடுவோம்
நாசியில் சுவாசம் தரும் இயேசுவை பாடுவோம்
நமஸ்காரம் சொல்லிச் சொல்லி இயேசுவை பாடுவோம்

3. ஆயுள் நாளை நீட்டிக்கும் இயேசுவை பாடுவோம்
அகமதில் சுகம் தரும் இயேசுவை பாடுவோம்
அற்புதங்கள் செய்திடும் இயேசுவை பாடுவோம்
அல்லேலூயா சொல்லிச் சொல்லி இயேசுவை பாடுவோம்

## பாடல் - 1093

**சேனைகளின் தேவனை**
சிங்காரமாய் பாடுவோம்
செங்குருதி சிந்தி நம்மை
மீட்டவரை பாடுவோம்

பாடுவோம் ராகதேவன்
இயேசுவை பாடுவோம்
பாடுவோம் பாவேந்தன்
இயேசுவை பாடுவோம்

1. ஒருவராய் பெரிய அதிசயம் செய்யும்
ஆண்டவர் இயேசுவை பாடுவோம்
ஒன்றும் இல்லாமல் உலகத்தை படைத்த
உன்னதர் இயேசுவை பாடுவோம்

2. சூரியனை ஒரு நாள் மறைய விடாமல்
இறுத்திய இயேசுவை பாடுவோம்
இடியோசைக்கும் மின்னல் மழைகளுக்கும்
வழி சொல்லும் இயேசுவை பாடுவோம்

3. எவருமே பூட்டக் கூடாதபடிக்கு
திறக்கிற தேவனைப் பாடுவோம்
ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு
பூட்டுகிற வேந்தனைப் பாடுவோம்

### பாடல் - 1094

**உயர்ந்த அடைக்கலமே**
தேவன் உயர்ந்த அடைக்கலமே
ஆபத்துக் காலத்திலே தேவன்
அரணான கோட்டையாமே

1. பூமி மாறினாலும்
மலைகள் சாய்ந்தாலும்
அலைகள் கொந்தளித்தாலும்
பர்வதங்கள் அழிந்தாலும்
பாழ்கடிப்பு வந்தாலும்
பயப்படவே மாட்டேன் - நான்

2. ஜாதிகள் கொந்தளித்து
ராஜ்யங்கள் தத்தளித்து
பூமியே உருகிப் போனாலும்
யாக்கோபின் தேவன் நம்மோடிருப்பதால்
எதற்கும் துணிந்திடலாம் - நாம்

3. பூமியிலே பாழ்க்கடிப்பை நடப்பிக்கும்
தேவனின் செயல்களை வந்து பாருங்கள்
வில்லை ஒடிக்கிறார் ஈட்டியை முறிக்கிறார்
இரதங்களை சுட்டெரிக்கிறார் - இயேசு

### பாடல் - 1095
(F-Min/DISCO /T-125/CD)

**கிருபை மேலானதே - உம்**
கிருபை மேலானதே

ஜீவனை பார்க்கிலும் - உம்
கிருபை மேலானதே
இவ் வாழ்க்கையை பார்க்கிலும்
உம் கிருபை மேலானதே

1. போக்கிலும் வரத்திலும் என்னை
காத்தது கிருபையே - என்
கால்கள் இடறாமல் என்னை
காத்தது கிருபையே

2. பலவீன நேரங்களில் - உம்
கிருபை என் பெலனானதே
சோர்வுற்ற வேளைகளில் - உம்
கிருபை என்னை தாங்கிற்றே

3. கஷ்டத்தின் நேரங்களில் - உம்
கிருபை என்னை காத்ததே
கண்ணீரின் மத்தியிலும் - உம்
கிருபை என்னை தேற்றுதே

## பாடல் - 1096
(Fm/4/R-Polka Pop/T-130)

**ஊற்றிடுமே உம் வல்லமையை**
இந்த நாளில் எங்கள் மேலே
ஊற்றிடுமே உம் அக்கினியை
இந்த நாளில் எங்கள் மீது வல்லமையோடே

வல்லமை வல்லமை தாருமே
தேசத்தை உமக்காய் கலக்கிட
அபிஷேகம் அபிஷேகம் ஊற்றுமே
அனல் கொண்டு உமக்காய் எழும்பிட

1. பெந்தேகோஸ்தே நாளில் செய்தது போல
அக்கினியின் நாவுகள் பொழிந்திடுமே
அப்போஸ்தலர் நாளில் செய்தது போல
இன்றும் செய்ய வேண்டும் - ஊற்றிடுமே

2. மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவேனென்று
வாக்கு தந்த ஆவியை ஊற்ற வேண்டுமே
நீச்சல் ஆழம் கொண்டு சென்று நீந்த செய்யுமே
நதியாய் பாய்ந்திடுமே - ஊற்றிடுமே

3. அற்புதங்கள் திரளாய் நடந்திடவே
அற்புதத்தின் ஆவியே வந்திடுமே
அந்தகார சங்கிலிகள் அறுந்திடவே
அக்கினியை ஊற்றிடுமே - ஊற்றிடுமே

## பாடல் - 1097

**உம்மை ஆராதிக்கும் நேரமெல்லாம்**
என்னை அரவணைத்து நிற்கின்றீரே
உம்மை ஆராதிக்கும் நேரமெல்லாம்
ஒரு தந்தையைப் போல் காக்கின்றீரே

ஆராதனை ஆராதனை – 4

1. அதிகாலையில் உம்மைத் தேட வேண்டும்
அப்பா பிதாவே என்று பாட வேண்டுமே

2. உம்மோடு நான் என்றும் வாழ வேண்டும்
உம் தோளிலே கொஞ்சம் சாய வேண்டுமே

3. மறுரூபமாய் நான் மாற வேண்டுமே
மணவாளன் உம்மைக் கண்டு சேர வேண்டுமே

## பாடல் - 1098
## (D-Min/calypso/T-105)

**வானம் மீதிலே என் மன்னன் வருவார்**
மகிமையோடு என்னை ஏற்றுக் கொள்வார்
நான் அங்கே போவேன் ஆர்ப்பரிப்பேன்
என் ஆண்டவரின் துதியை சொல்லி மகிழ்வேன்

1. துன்பம் இல்லை அங்கே தொல்லைகள் இல்லை
பஞ்சம் இல்லை அங்கே பசியும் இல்லை
தூதர்கள் போல நான் கானம் பாடுவேன்
என் தூயவரை தரிசித்து தொழுதிடுவேன்

2. நான் நடக்கும் இடமோ தங்க மயமாம்
நான் தங்கும் ஸ்தலமோ தேவனின் இல்லம்
தூதர்கள் போல நானும் இருப்பேன்
என் தூயவரின் கட்டளையை செய்து முடிப்பேன்

## பாடல் - 1099
## (E-Maj/8 Beat/T-110)

**கர்த்தர் நம்மை நடத்திய வழிகள்**
எந்நாளும் நினைத்திடுவோம்
நன்றியாலே நிறைந்தவர் நாமம்
எந்நாளும் துதித்திடுவோம்

1. அன்றொரு நாளில் அழைத்தவர் அவரே
இன்று வரையிலும் நடத்தி வந்தாரே
சென்ற இடமெல்லாம் நம்முடன் இருந்தே
ஜெயமுடன் நம்மையும் நடத்தினாரே

2. ஞானிகள் வல்லவர் நல்லோர்கள் இருந்தும்
எதுவுமில்லா நம்மைத் தெரிந்தெடுத்தாரே
நம்மையும் நம்பியே கிருபைகள் அளித்தார்
என்றுமே அவர்க்காய் வாழ்ந்திடுவோம்

3. எத்தனை குறைகள் நம்மிலே இருந்தும்
எத்தனை முறையோ மன்னித்து மறந்தே
நம் பெலவீனத்தில் தம் பெலனளித்தே
நம்மையும் தயவாய் நடத்தினாரே

4. எத்தனை நன்மைகள் எத்தனை நண்பர்கள்
எத்தனை மேன்மைகள் நமக்களித்தாரே
எண்ணிடும் வேளையில் கண்ணீர் பெருகுதே
எண்ணில்லா துதியும் ஏறெடுப்போம்

## பாடல் - 1100
## (C-Min/8 Beat/T-96)

**கலங்காதே கலங்காதே**
கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டர் - கலங்காதே

1. முள்முடி உனக்காக
இரத்தமெல்லாம் உனக்காக
பாவங்களை அறிக்கையிடு
பரிசுத்தமாகிவிடு - நீ - கலங்காதே

2. கல்வாரி மலைமேலே
காயப்பட்ட இயேசுவைப்பார்
கரம் விரித்து அழைக்கின்றார்
கண்ணீரோடு ஓடி வா - நீ - கலங்காதே

3. காலமெல்லாம் உடனிருந்து
கரம்பிடித்து நடத்திச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்
கண்மணிபோல் காத்திடுவார் -கலங்காதே

4. உலகத்தின் வெளிச்சம்
நீ எழுந்து ஒளி வீசு
மலைமேல் உள்ள பட்டணம் - நீ
மறைவாக இருக்காதே - கலங்காதே

5. உலகம் உன்னை வெறுத்திடலாம்
உற்றார் உன்னை துரத்திடலாம்
உன்னை அழைத்தவரோ
உள்ளங் கையில் ஏந்திடுவார் - கலங்காதே

6. உன் நோய்கள் சுமந்து கொண்டார்
உன் பிணிகள் ஏற்றுக் கொண்டார்
நீ சுமக்கத் தேவையில்லை
விசுவாசி அது போதும் - கலங்காதே

பாடல் - 1101
(C-Min/slow Rock/T-94)

**உங்க ஊழியம் நான் ஏன் கலங்கணும்**
அழைச்சது நீங்க நடத்திச் செல்வீங்க

1. திட்டங்கள் தருபவரும் நீர்தானையா
செயல்படுத்தி மகிழ்பவரும் நீர்தானையா
எஜமானனே என் ராஜனே
எஜமானன் நீர் இருக்க
வேலைக்காரனுக்கு ஏன் கவலை

2. எலியாவை காகம் கொண்டு போஷத்தீரே
சூரைச்செடி சோர்வு நீங்க பேசினீரே
தெய்வமே பேசும் தெய்வமே
எலியாவின் தேவன் இருக்க
எதுவும் என்னை அசைப்பதில்லை

3. பவுலையும் சீலாவையும் பாடவைத்தீரே
சிறையிலே நள்ளிரவில் ஜெபிக்க வைத்தீரே
கதவு திறந்தன கட்டுகள் உடைந்தன
காக்கும் தெய்வம் நீர்இருக்க
கவலை பயம் எனக்கெதற்கு

4. ஆயன் நான் ஆடுகளை அறிந்திருக்கின்றேன்
ஒருவராலும் பறித்துக் கொள்ள முடியாதென்றீர்
நல் ஆயனே என் மேய்ப்பரே
என் ஆயன் நீர் இருக்க
ஆட்டுக்குட்டிக்கு ஏன் கவலை

5. தகப்பன் தன் பிள்ளைகளை சுமப்பதுபோல
இறுதிவரை உங்களை நான் சுமப்பேன் என்றீர்
தகப்பனே தாங்கும் தெய்வமே
தகப்பன் நீர் இருக்கையிலே
பிள்ளை எனக்கு ஏன் கவலை

## பாடல் - 1102
## (E-Min/EURO Beat/T-135)

**எழுந்து பெத்தேலுக்கு போ**
அதுதான் தகப்பன் வீடு
நன்மைகள் பல செய்த
நல்லவர் இயேசுவுக்கு
நன்றி பாடல் பாடணும்
துதி பலிபீடம் கட்டணும்

1. ஆபத்து நாளிலே பதில் தந்தாரே
அதற்கு நன்றி சொல்வோம்
நடந்த பாதையெல்லாம் கூட வந்தாரே
அதற்கு நன்றி சொல்வோம்

அப்பா தகப்பனே நன்றி நன்றி -2
எழுந்து பெத்தேல் செல்வோம்

2. போகுமிடமெல்லாம் கூடயிருந்து
காத்துக் கொள்வேனென்றீர்
சொன்னதைச் செய்து முடிக்கும் வரைக்கும்
கைவிட மாட்டேனென்றீர்

3. பிறந்தநாள் முதல் இந்நாள் வரைக்கும்
ஆதரித்த ஆயரே
ஆபிரகாம் ஈசாக்கு வழிபட்டு
வணங்கிய எங்கள் தெய்வமே

4. எல்லா தீமைக்கும் நீங்கலாக்கி
என்னை மீட்டீரையா
வாழ்நாள் முழுவதும் மேய்ப்பனாயிருந்து
நடத்தி வந்தீரையா

5. படுத்திருக்கும் இந்த பூமி சொந்தமாகும்
என்று வாக்குரைத்தீரையா
பலுகிப் பெருகி தேசமாய் மாறுவோம்
என்று வாக்குரைத்தீரையா

6. அந்நிய தெய்வங்கள் அருவருப்புகள்
அகற்றி புதைத்திடுவோம்
ஆடை மாற்றுவோம் தூய்மையாக்கும்வோம்
பாடிக் கொண்டாடுவோம்

7. வெறுங்கையோடு பயந்து ஓடிய யாக்கோபை
தெரிந்து கொண்டீர்
இஸ்ராயேல் இனமாய் ஆசீர்வதித்து
பலுகிப்பெருகச் செய்தீர்

## பாடல் - 1103
(D-Maj/8 Beat/T-95)

**உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு?**
உம்மைத்தவிர விருப்பம் எதுண்டு?

ஆசையெல்லாம் நீர்தானைய்யா
தேவையெல்லாம் நீர்தானைய்யா
இரட்சகரே...... இயேசுநாதா....
தேவையெல்லாம் நீர்தானைய்யா

1. இதயக்கன்மலை நீர்தானைய்யா
உரிய பங்கும் நீர்தானைய்யா
எப்போதும் உம்மோடு இருக்கின்றேன்
வலக்கரம் பிடித்து தாங்குகிறீர் -ஆசை

2. உம்மோடு வாழ்வதே என் பாக்கியம்
நீரே எனது உயிர்த் துடிப்பு
உமது விருப்பம்போல் நடத்துகிறீர்
முடிவிலே மகிமையில் ஏற்றுக்கொள்வீர்

3. உலகில் வாழும் நாட்களெல்லாம்
உமது செயல்கள் சொல்லி மகிழ்வேன்
உம்மைத்தான் அடைக்கலமாய்க் கொண்டுள்ளேன்
உம்மையே நம்பி வாழ்ந்துருப்பேன்

## பாடல் - 1104
(E-Maj/16 Beat shuffle/T-105)

**மகளே சீயோன் மகிழ்ச்சியாலே ஆர்ப்பரி**
இஸ்ராயேலே ஆரவாரம் செய்திடு - 2
முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து களிகூறு
கெம்பீரித்து பாடி பாடி மகிழ்ந்திரு

அகமகிழ்ந்து களிகூறு ஆரவாரம் செய்திடு

1. தள்ளிவிட்டார் உன் தண்டனையை
அகற்றி விட்டார் உன் பகைவர்களை
வந்து விட்டார் அவர் உன் நடுவில்
இனி நீ தீங்கை காணமாட்டாய் - அகமகிழ்ந்து

2. உன் பொருட்டு அவர் மகிழ்கின்றார்
உன்னை குறித்து அவர் பாடுகின்றார்
அனுதினமும் அவர் அன்பினாலே
புது உயிர் உனக்குத் தருகின்றார் - அகமகிழ்ந்து

3. தளரவிடாதே உன் கைகளை
பயப்படாதே நீ அஞ்சாதே
இனி நீ இழிவு அடைய மாட்டாய்
உனது துன்பம் நீக்கி விட்டார் - அகமகிழ்ந்து

4. உலகமெங்கும் பெயர் புகழ் பெறச் செய்வேன்
அவமானம் நீக்கி ஆசீர்வதிப்பேன்
ஒதுக்கப்பட்ட உன்னை சேர்த்துக் கொள்வேன்
ஊனமுற்ற உன்னை காப்பாற்றுவேன் - அகமகிழ்ந்து

### பாடல் - 1105
### (D-Maj/waltz/T-135)

**பகல்நேரப் பாடல் நீரே**
இரவெல்லாம் கனவும் நீரே
மேலான சந்தோஷம் நீரே
நாளெல்லாம் உமைப் பாடுவேன்

1. எருசலேமே உனை மறந்தால்
என் வலக்கரம் செயலிழக்கும்
மகிழ்ச்சியின் மகுடமாய் கருதாவிடில்
நாவு ஒட்டிக்கொள்ளும்

மகிழ்ச்சியின் மகுடம் நீர்தானையா
மணவாளனே உமை மறவேன்

2. தாய்மடி தவழும் குழந்தைப்போல்
மகிழ்ச்சியாய் இருக்கின்றேன்
இப்போதும் எப்போதும் நம்பியுள்ளேன்
உம்மைத்தான் நம்பியுள்ளேன்



அட்டவணை

3. கவலை பெருகி கலங்கும்போதும்
மகிழ்வித்தீர் உம் அன்பினால்
கால்கள் சறுக்கி தடுமாறும்போது
தாங்கினீர் கிருபையினால்

4. பார்வையில் செருக்கு எனக்கில்லை
இறுமாப்பு உள்ளத்தில் என்றுமில்லை
பயனற்ற உலகத்தின் செயல்களிலே
பங்கு பெறுவதில்லை

## பாடல் - 1106
(D-Maj/8 Beat/T-80)

**என்னை நடத்தும் இயேசு நாதா**
உமக்கு நன்றி ஐயா
எனக்குள் வாழும் எந்தன் நேசா
உமக்கு நன்றி ஐயா

1. ஒளியாய் வந்தீர் வழியைத் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
அழிவில் நின்று பாதுகாத்தீர்
உமக்கு நன்றி ஐயா

2. தேடி வந்தீர் பாட வைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
ஓடி ஓடி உழைக்கச் செய்தீர்
உமக்கு நன்றி ஐயா

3. பாவமில்லா தூயவாழ்வு
வாழச் செய்பவரே
பூவாய் வளர்ந்து பூத்துக் குலுங்கி
மலரச் செய்பவரே

4. துயரம் நீக்கி ஆறுதல் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா
புலம்பல் மாற்றி ஆனந்தம் தந்தீர்
உமக்கு நன்றி ஐயா

5. கலக்கம் நீக்கி கண்ணீர் துடைத்தீர்
உமக்கு நன்றி ஐயா
கவலை மாற்றி கரத்தால் அணைத்தீர்
உமக்கு நன்றி ஐயா

6. உலகம் மாயை எல்லாம் மாயை
உணர்ந்தேன் உணர்ந்துக் கொண்டேன்
உறவு பாசம் குப்பையென்றறிந்து
உணர்ந்தேன் உணர்ந்து கொண்டேன்

7. யெகோவாயீரே பார்த்துக் கொள்வீர்
உமக்கு ஆராதனை
யெகோவா நிசியே வெற்றி தருவீர்
உமக்கு ஆராதனை

8. யெகோவா ரூவா நல்ல ஆயன்
உமக்கு ஆராதனை
யெகோவா ரஃப்பா சுகம் தந்தீரே
உமக்கு ஆராதனை

## பாடல் - 1107
## (C-Maj/16 Beat/T-95)

**இராஜா உம்மைப் பார்க்கணும்**
இராப்பகலாய் துதிக்கணும்
வருகைக்காய் காத்திருக்கின்றேன்
எப்போது வருவீர் ஐயா

1. இறுதிக்காலம் இதுவே என
அறிந்து கொண்டேன் நிச்சயமாய்
உறக்கத்தில் இருந்து நான்
உமைக்காண விழித்துக் கொண்டேன்

வரவேண்டும் வரவேண்டும் விரைவாகவே
வழிமேலே விழி வைத்துக் காத்திருக்கின்றேன்

2. மணமகனை வரவேற்கும்,
மதி உடைய கன்னிகை போல
விளக்கோடு ஆயில் ஏந்தி,
உமக்காக வெளிச்சமானேன் - வரவேண்டும்

3. உண்மையுள்ள ஊழியனாய்,
நீர் கொடுத்த தாலந்தை - உம்
பயன்படுத்தி பெருக்கிடுவேன்
மகிழ்ச்சியில் பங்கடைவேன்

4. தாராளமாய்க் கொடுத்திடுவேன்,
தாங்கிடுவேன் ஊழியங்கள்
அனாதை ஆதரவற்றோர்
கண்ணீரைத் துடைத்திடுவேன்

### பாடல் - 1108
### (E-Maj/Techno Beat/T-100)

**கர்த்தரை தேடின நாட்களெல்லாம்**
காரியம் வாய்க்கச் செய்தாரே
எத்தனை எத்தனை நன்மைகளோ
இயேசப்பா செய்தாரே - நான்

இறுதிவரை என் வாழ்வு
இயேசப்பா உமக்குத்தானே

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்க மாட்டார்
இஸ்ராயேலைக் காக்கிறவர்
எந்நாளும் தூங்க மாட்டார் - இறுதி

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும், இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும் போதும் காக்கின்றார்
இப்போதும், எப்போதும்
எந்நாளும் காத்திடுவார்

### பாடல் - 1109
### (F-Maj/16 Beat/T-90)

**இயேசு ராஜனே நேசிக்கிறேன் உம்மையே**
உயிருள்ள நாளெல்லாம்
உம்மைத்தான் நேசிக்கிறேன்

நேசிக்கிறேன் -(4)

1. அதிசயமானவரே, ஆறுதல் நாயகரே
சந்தோஷமே, சமாதானமே
உம்மைத்தான் நேசிக்கிறேன் - நேசிக்கிறேன்



அட்டவணை

2. இம்மானுவேல் நீர்தானே, எப்போதும் இருப்பவரே
ஜீவன் தரும், திருவார்த்தையே - உம்மை

3. திராட்சைச் செடி நீரே, தாவீதின் வேர் நீரே
விடிவெள்ளியே, நட்சத்திரமே

4. யோனாவிலும் பெரியவரே, சாலமோனிலும் பெரியவரே
ரபூனியே போதகரே

5. பாவங்கள் நிவர்த்தி செய்யும், கிருபாதார பலி நீரே
பரிந்து பேசும் ஆசாரியரே

### பாடல் - 1110
### (F-Maj/DISCO/T-120)

**உம் சித்தம் செய்வதில்தான் - நான்**
மகிழ்ச்சி அடைகின்றேன்
உம் வசனம் இதயத்திலே
தினம் தியானமாய்க் கொண்டுள்ளேன்

அல்லேலூயா அல்லேலூயா மகிமை உமக்குத்தான்
அல்லேலூயா அல்லேலூயா மாட்சிமை உமக்குத்தான்

1. காத்திருந்தேன் பொறுமையுடன்
கேட்டீரே என் வேண்டுதலை
குழியிலிருந்து தூக்கி
கன்மலையில் நிறுத்தினீரே

2. துதிக்கும் புதிய பாடல்
நாவில் எழச் செய்தீரே உம்மை
பலரும் இதைப் பார்த்துப் பார்த்து
நம்புவார்கள் உம்மையே

3. எத்தனை எத்தனை நன்மைகளோ
என் வாழ்வில் நீர் செய்தீர்
எண்ண இயலாதைய்யா
விவரிக்க முடியாதைய்யா

4. மாபெரும் சபை நடுவில்
உம் புகழை நான் அறிவிப்பேன்
மௌனமாய் இருக்கமாட்டேன்
மனக் கண் திறந்தீரே

## பாடல் - 1111
(D-Maj/slow Rock/T-128)

**கடினமானது உமக்கு எதுவுமில்லை**
முடியாதது உமக்கு எதுவுமில்லை
எதுவுமில்லை இயேசப்பா எதுவுமில்லை
முடியாதது எதுவுமில்லை

1. ஓங்கிய உம் புயத்தாலே
வானம் பூமி உண்டாக்கினீர்
நீட்டப்பட்ட உம் கரத்தாலே
அகிலத்தையே ஆட்சி செய்கின்றீர்

2. உம்மாலே செய்ய முடியாத
அதிசயங்கள் ஒன்றுமில்லை
ஆயிரமாயிரம் தலைமுறைக்கும்
அன்பு காட்டும் ஆல் மைட்டி காட்

3. மனிதர்களின் செயல்களையெல்லாம்
உற்று நோக்கிப் பார்க்கின்றீர்
அவனவன் செயல்களுக்கேற்ப
தகுந்த பரிசு தருகின்றீர்

4. யோசனையில் பெரியவர் நீர்
செயல்களிலே வல்லவர் நீர்
சேனைகளின் கர்த்தர் நீர்
எல்ஷடாய் உம் நாமமே

5. எகிப்து நாட்டில் செய்த அதிசயம்
இன்றும் செய்ய வல்லவர் நீர்
அற்புத அடையாளங்களினால்
உம் ஜனங்கள் புறப்படச் செய்தீர்

## பாடல் - 1112
(C-Maj/8 Beat/T-82)

**பரலோக தேவனே**
பாரக்கிரமம் உள்ளவரே
அகிலத்தை ஆள்பவரே
உம்மால் ஆகாதது ஏதுவுமில்லை - இந்த

1. எல்ஷடாய் -2 சர்வ வல்ல தெய்வமே

உயர்த்துகிறோம் வாழ்த்துகிறோம்
வணங்குகிறோம் - உம்மை

2. யேகோவா நிசியே
வெற்றி தந்த தெய்வமே

3. யேகோவா ரஃப்பா சுகம்
தந்த தெய்வமே

4. எல்ரோயீ எல்ரோயீ
என்னைக் கண்ட தெய்வமே

5. யெகோவா யீரே எல்லாம்
நீர் பார்த்துக் கொள்வீர்

6. யெகோவா ரூவா
எங்கள் நல்ல மேய்ப்பரே

7. யெகோவா ஷாலோம்
சமாதானம் தருபவரே

## பாடல் - 1113
## (D-Maj/waltz/T-133)

**அப்பா அல்பா ஒமெகா**
புகழ் உமக்கே எப்போதும்
தொடக்கமும் முடிவும் நீரே
துதிக்குப் பாத்திரரே - அப்பா

1. பரிசுத்த வாழ்வு நான் வாழ
பிரித்தீரே பிறக்கும் முன்னாலே

புகழ் உமக்கே புகழ் உமக்கே (2) -தொடக்க

2. மறுபடி பிறக்கச் செய்தீரே
கிருபையால் இரட்சித்தீரே - புகழ்

3. உம் அன்பை ஊற்றினீர் என்னில்
உன்னத அபிஷேகத்தாலே

4. இரக்கத்தில் செல்வந்தர் நீரே
இதயத்தில் தீபமானீரே

5. இறை இயேசு அரசுக்குள் அழைத்தீர்
இருளின் ஆட்சியைக் கலைத்தீர்

## பாடல் - 1114
(D-Maj/8 Beat Ballad/T-92)

**அப்பா உம் பாதம் அமர்ந்துவிட்டேன்**
அன்பின் தகப்பன் நீர்தானைய்யா
செய்த பாவங்கள் கண்முன்னே
வருந்துகிறேன் நான் கண்ணீரோடு

என்னைக் கழுவி கழுவி தூய்மையாக்கும்
கல்வாரி இரத்தத்தாலே
நான் பனியைப் போல வெண்மையாவேன்
முற்றிலும் வெண்மையாவேன்
இயேசையா(4)

1. துணிகரமாய் நான் தவறு செய்தேன்
துணிந்து பாவம் செய்தேன்
நோக்கிப் பார்க்க பெலனில்லையே
தூக்கி நிறுத்தும் என் தெய்வமே – என்னைக்

2. கிழக்கு மேற்கு உள்ள தூரம்
உந்தன் இரக்கம் உயர்ந்ததையா
இல்லையே எல்லை உம் அன்பிற்கு
இரக்கத்தின் செல்வந்தர் நீர்தானைய்யா

3. என் குற்றங்கள் நீர் நினைவு கூர்ந்தால்
உம்முன்னே நிற்க முடியாதையா
தகப்பன் மகனை மன்னிப்பதுபோல்
மன்னிக்கும் தெய்வம் நீர்தானையா

4. முள்முடி கிரீடம் பார்க்கின்றேன்
முகமெல்லாம் இரத்தம் காண்கின்றேன்
ஜீவன் தந்தல்லோ மீட்டீரையா
தேவனே நான் என்ன சொல்வேன்

அப்பா உம் பாதம் அமர்ந்துவிட்டேன்
அன்பின் தகப்பன் நீர்தானையா
கிருபையின்படியே மனமிரங்கி
மீட்பின் மகிழ்ச்சி தந்தீரையா

## பாடல் - 1115
(D-Min/Rumbo/T-115)

**மனமிரங்கும் தெய்வம் இயேசு**
சுகம் தந்து நடத்திச் செல்வார்

யெகோவா ரஃப்பா இன்றும் வாழ்கிறார்
சுகம் தரும் தெய்வம் இயேசு
சுகம் இன்று தருகிறார்

1. பேதுரு வீட்டுக்குள் நுழைந்தார் மாமி
கரத்தைப் பிடித்து தூக்கினார்
காய்ச்சல் உடனே அன்று நீங்கிற்று அவள்
கர்த்தர் தொண்டு செய்து மகிழ்ந்தாள்

2. குஷ்டரோகியைக் கண்டார் இயேசு
கரங்கள் நீட்டித் தொட்டார்
சித்தமுண்டு சுத்தமாகு என்று
சொல்லி சுகத்தைத் தந்தார்

3. நிமர முடியாத கூனி அன்று
இயேசு அவளைக் கண்டார்
கைகள் அவள் மேலே வைத்தார் உடன்
நிமிர்ந்து துதிக்கச் வைத்தார் உடன்

4. பிறவிக் குருடன் பர்த்திமேயு அன்று
இயேசுவே இரங்கும் என்றான்
பார்வையடைந்து மகிழ்ந்தான் உடன்
இயேசு பின்னே நடந்தான்

5. கதறும் பேதுருவைக் கண்டு இயேசு
கரங்கள் நீட்டிப் பிடித்தார்
படகில் ஏறச் செய்து அவர்
கரையில் கொண்டு போய்ச் சேர்த்தார்

## பாடல் - 1116
## (F-Min/8 Beat/T-100)

**கட்டப்பட்ட மனிதரெல்லாம்**
கட்டவிழ்க்கப்பட வேண்டும்
காயப்பட்ட மனிதரெல்லாம்
கல்வாரி வர வேண்டும்

கர்த்தர் உம்மை காண வேண்டும் தேவா......தேவா

1. எழுப்புதல் தீ பரவட்டுமே
எங்கும் பற்றி எரியட்டுமே

2. அறியாமை இருள் விலகி
அதிசய தேவனை காண வேண்டும்

3. பாவங்கள் சாபங்கள்
பாரத தேசத்தில் மறைய வேண்டும் - எங்கள்

4. இமயம் முதல் குமரி வரை - என்
இயேசுவின் இரத்தம் பாய வேண்டும்

5. உண்மையான ஊழியர்கள்
உலகம் எங்கும் செல்ல வேண்டும்

6. சபைகளெல்லாம் துய்மையாகி
சாட்சி வாழ்வு வாழ வேண்டும்

## பாடல் - 1117
## (G-Maj/8 Beat/T-82)

**பரலோகமே உம்மைத் துதிப்பதால்**
கர்த்தாவே அங்கே வாழ்கிறீர்
உம் ஆலயத்தில் உம்மைத் துதிக்கிறோம்
கர்த்தாவே எழுந்தருளும்

துதிக்கிறோம் துதிக்கிறோம்
ஒன்றாக கூடித் துதிக்கிறோம் (2) - அல்லேலூயா

1. உந்தன் நாமம் உயர்த்தும் இடத்தில்
அங்கே வாசம் செய்வீர் (2) - துதிக்கிறோம்

2. உம்மைப்போல் ஒரு தெய்வமில்லை
சர்வ சிருஷ்டிகரே (2) - துதிக்கிறோம்

3. துதியும் கனமும் மகிமையெல்லாம்
உமக்கே செலுத்துகிறோம் (2) - துதிக்கிறோம்

## பாடல் - 1118

**யூதாவின் ராஜ சிங்கம் நீரே**
அல்பாவும் ஓமேகாவும் நீரே
வல்லமை பெலன் ஞானம்
மகிமையும் துதியையும்
பெற்றுக் கொள்ள பாத்திரர் நீரே

பாவமானீரே எம்மை நீதியாக்கிட
சாபமானீரே எங்கள் சாபம் போக்கிட
காயமானீரே எங்கள் நோய்கள் தீர்த்திட
ஏழையானீரே எங்கள் ஏழ்மை நீக்கிட

1. நீர் என்றும் நல்ல மேய்ப்பர்
எந்நாளும் தாழ்ச்சியடையேனே
அமர்ந்த தண்ணீர் பசும்புல் வெளியில்
என்னை மேய்த்து நித்தம்
பகைவர் முன்பாக பந்தி ஆயத்தம் செய்தீர்
என் தலையை எண்ணெயால்
அபிஷேகம் செய்தீர்
ஜீவ நாளெல்லாம்
நன்மை கிருபை தொடருமே
நான் கர்த்தர் வீட்டிலே நீடித்து வாழ்வேன்

2. என் நாவு உந்தன் நீதியையும்
நாளெல்லாம் உந்தன் துதியையும்
ஓயாமல் போற்றிப் பாடும்
குறைவையெல்லாம் நீக்கிப் போடும்
கைவிடாத நல்ல தேவன் நீயே
உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி
குறைவுகளெல்லாம் நிறைவாக்கும் தேவனே
யேகோவாயீரே நீர் எந்தன் எல்ஷடாய்
போதுமானவரிலும்
மிகவும் அதிசயமானவர்

### பாடல் - 1119

**துதி பாடுவாய் நெஞ்சமே இயேசுவை**
அவர் துதி சொல்லி வரவே
தேவன் தந்திட்ட வாழ்வு இதுவே

முன் அறிந்தார் முன் குறித்தார்
நம்மை அழைத்தார் மகிமைப்படுத்தினார்
இன்னும் மகிமைப்படுத்துவார்

1. பூமியின் மண்ணை மரக்காலாள்
அளந்தவரும் அவரே
வானங்களை திரைப் போலாய்
விரித்தவரும் அவரே
நட்சத்திரங்களை பெயர் சொல்லி
அழைத்தவரும் அவரே
உன்னையும் என்னையும்
உள்ளங்கையில் வரைந்தவரும் அவரே

2. வானம் திறந்து மன்னாவால்
போஷிப்பவரும் அவரே
செங்கடல்தனை இரண்டாக
பிளந்தவரும் அவரே
மோசேயின் கைக்கோலால்
அற்புதங்கள் செய்தவரே
உலகம் முடியும் வரை துணையாய்
நம்முடன் இருப்பவரே

## பாடல் - 1120

**அஞ்சு கல்லு கையில அற்புதந்தான் பையில**
அதிசயந்தான் நடக்க போகுது
ஜனங்க ஆடிப்பாடி துதிக்கப் போகுது
அடிச்சானய்யா தாவீது நெத்தியடி
அதில் விழுந்தானய்யா
கோலியாத்து செத்தபடி
ஒரு உருட்டு கல்லுல ஒரு சுருட்டு கவனுல
முரட்டி அடி விரட்டி அடி நெத்தி

1. எதிரிகளை தோற்கடிக்கும் பட்டயம் - அது
கிதியோனின் கர்த்தருடைய பட்டயம்
கத்தி படை சுத்தி நிற்க வேண்டாமே (2)
ஒரு சட்டி குள்ள தீவட்டி போதுமே (2)
சட்டியத்தான் கீழே தூக்கி போட்டு உடை
தீவட்டிக்குத்தான் பயந்து ஓடும் எதிரி படை

2. சிம்சோனின் வைராக்கியம் இருந்தால்
நீ சீறிவரும் சிங்கத்தையும் கிழிக்கலாம்
பட்சியின் பட்சணமும் கிடைக்குமே (2)
பலவானின் மதுரமும் கிடைக்குமே (2)
கழுதையின் பச்சை தாடை எலும்பு
எதிரிகளை முறியடிக்கும் இரும்பு

3. சாத்தானை ஓட ஓட விரட்டணும்
அவன் சேனைகளை
ஒரு நொடியில் முறிக்கணும்
சேனைகளின் போர் வீரனாய் நிற்கணும்
ஜெயம் எடுத்த இயேசுவுக்காய் வாழணும்
மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார்
தோல்வியில்லை இனி என்றும் வெற்றியே

## பாடல் - 1121
(B-Min/16 Beat/T-105)

**ஜெபம் கேட்டீரையா ஜெயம் தந்தீரையா**
தள்ளாட விடவில்லையே தாங்கியே நடத்தினீரே

புகழ்கின்றேன் பாட்டுப்பாடி
புயல் இன்று ஓய்ந்தது
புதுராகம் பிறந்தது
நன்றி அப்பா நல்லவரே
இன்றும் என்றும் வல்லவரே

1. கண்ணீரைக் கண்டீரையா கரம் பிடித்தீரையா
விண்ணப்பம் கேட்டீரையா விடுதலை தந்தீரையா

2. எபிநேசர் நீர்தானையா இதுவரை உதவினீரே
எல்ரோயீ நீர்தானையா என்னையும் கண்டீரையா

3. உறுதியாய் பற்றிக்கொண்டேன் உம்மையே நம்பி உள்ளேன்
பூரண சமாதானரே போதுமே உம் சமூகமே

## பாடல் - 1122

**பாரத தேசத்தின் ராஜா நீரே ஆ... அல்லேலூயா**
பார் போற்றும் எங்கள் தெய்வம் நீரே
ஆ... அல்லேலூயா
இந்திய தேசத்தின் இரட்சகரே
அல்லேலூயா... அல்லேலூயா
இந்தியர் எங்களைக் காப்பவரே

அல்லேலூயா அல்லேலூயா...(3)
அலே அல்லே அல்லேலூயா

1. பெருமழையின் சத்தம் கேட்டிடுதே
எழுப்புதல் எங்கும் பற்றிடுதே - 2
இரட்சிப்பு பெருகிட சபை நிரம்பிடுது
அல்லே... அல்லேலூயா

2. சாத்தானின் முகத்திரை கிழிந்திட்டதே
சாபங்கள் யாவும் தொலைந்திட்டதே
கர்த்தரே தெய்வமென்று தேசமே கண்டது
அல்லே... அல்லேலூயா

3. செவிடர்கள் யாவரும் கேட்கின்றாரே
குருடர்கள் யாவரும் பார்க்கின்றாரே
இயேசுவின் நாமத்தில் அற்புதம் நடக்குது
அல்லே... அல்லேலூயா

## பாடல் - 1123

**ராஜாதி ராஜாவாக அரசாளும் தெய்வமே**
உம்மை போன்ற தெய்வம் இல்லை
உம்மை போன்ற கர்த்தர் இல்லை
ராஜ்யம் வல்லமை மாட்சிமை உமதே(2)

1. உலகிலுள்ள யாவற்றிற்கும் சொந்தகாரரே
நதிகள் கூட கைகள் தட்டி
உம்மைப் பாடுதே

2. நீதியுள்ள ராஜாவாக ஆளும் தெய்வமே
இரக்கம் உருக்கம் தயவு எல்லாம்
உம்மில் தான் உண்டே

3. பாவம் போக்க பாலானாக
மண்ணில் வந்தவரே உலகை ஆளும்
ராஜாவாக மீண்டும் வருவீரே

4. கண்ணீர் கவலை கஷ்டம் யாவும்
நீக்கிப் போட்டீரே - சந்தோஷமும்
சமாதானமும் நிறைவாய்த் தந்தீரே

## பாடல் - 1124

**உம் நாமம் தேனிலும் மதுரமைய்யா**
சொல்ல சொல்ல இனிக்குதைய்யா

1. அடோனாய் எங்கள் தெய்வமே
ரபூனி நல்ல போதகரே
எல்ஷடாய் சர்வ வல்லவரே
எல்ரோயி என்னைக் காண்பவரே
தந்தையே ஏசுவே ஆவியானவரே

ஆராதனை உமக்கு ஆராதனை -4
பாத்திரரே பாத்திரரே பாத்திரரே
மகிமைக்கு பாத்திரரே

2. எல் எலியோன் உன்னதரே
இம்மானுவேல் கூட இருப்பவரே
மேசியா எங்கள் இயேசுவே
கிறிஸ்துவாய் எனக்குள் வாழ்பவரே

3. நியூமா தூய ஆவியே
ஷெக்கீனா தேவ மகிமையே
துணையாளரே எங்கள் பாரக்பீட்டரஸ்
எங்களின் தேற்றவாளனே

### பாடல் - 1125

**திக்கற்ற பிள்ளைகளுக்கு**
சகாயர் நீரே அல்லவோ
எக்காலம் துணையவர்க்கு
நிற்பவரும் நீரே அல்லவோ

தனிமையான எனக்கு
சகாயர் நீரே அல்லவோ
ஆதரவற்ற எனக்கு
பக்க பலம் நீரே அல்லவோ

1. என்றைக்கும் மறைந்திருப்பீரோ
தூரத்தில் நின்று விடுவீரோ
பேதைகளை மறப்பீரோ
இயேசுவே மனமிரங்கும்

2. கர்த்தாவே எழுந்தருளும்
கை தூக்கி என்னை நிறுத்தும்
தீமைகள் என்னை சூழும் நேரம்
தூயவரே இரட்சியும்

3. தாய் என்னை மறந்தாலும்
நீர் என்னை மறப்பதில்லை
ஏழையின் ஜெபம் கேளும்
இயேசுவே மனமிரங்கும்

### பாடல் - 1126

**உன்னத அனுபவத்தில் என்னை**
அழைத்து சென்றிடுவீர்
தேவனே என் இயேசுவே ஆராதிப்பேன்

பெலனே என் கோட்டையே
ஆராதிப்பேன் (2) அல்லேலூயா (4)

1. கருவில் என்னை தெரிந்து கொண்டு
முன் குறித்தீரே
இரத்தத்தினாலே நீதிமானாக்கி
மகிமைப்படுத்தினீரே
கர்த்தாவே உந்தன் கிருபைகளாலே
என்றும் என்னை சூழ்ந்திடுவீர்
கர்த்தாவே உந்தன் இரக்கங்களாலே
நன்மையினால் என்னை
நிறைத்திடுவீர் அல்லேலூயா (4)

2. மூன்றாம் வானம் வரையில்
என்னை எடுத்து சென்றிடுவீர்
தூதர்கள் பேசும் பாஷைகள் பேசி
ஆராதிக்கச் செய்திடுவீர்
கேரூபீன்கள் சேராபீன்கள் பாடிடும்
பாடலைக் கேட்டிடுவேன்
அவர்களோடு நானும் சேர்ந்து
ஆவியில் நிறைந்து பாடிடுவேன்
அல்லேலூயா (4)

3. ஆபிரகாமை அழைத்து
ஆசீர்வதித்தவரே
ரெகோபோத்தாக ஈசாக்கை பலுகி
பெருகச் செய்தவரே
யாக்கோபை ஆசீர்வதித்தது போல
என்னையும் ஆசீர்வதித்திடுவீர்
யோசேப்பை உயர்த்தி மகிழ்ந்தது போல
என்னையும் உயர்த்தி மகிழ்ந்திடுவீர்
அல்லேலூயா (4)

## பாடல் - 1127

**வானாதி வானவர் நம் இயேசுவை**
வாத்தியங்கள் முழுங்கிட பாடுவோம்
தேவாதி தேவன் நம் இயேசுவை
நாட்டியங்கள் ஆடி கொண்டாடுவோம்

1. வானங்களை விரித்தவரை பாடுவோம்
வானபரன் இயேசுவைக் கொண்டாடுவோம்

2. வாக்குத்தத்தம் தந்தவரை பாடுவோம்
வாக்குமாறா தேவனைக் கொண்டாடுவோம்

3. பாடுவோம் நம் பரலோக நாயகன்
பலியாகி என்னை மீட்டுக் கொண்டாரே

3. பாவச் சேற்றில் வாழ்ந்து வந்த என்னையே
பாசக்கரம் நீட்டி என்னை தூக்கினார்

**பாடல் - 1128**

**நீர் சொன்னால் போதும் செய்வேன்**
நீர் காட்டும் வழியில் நடப்பேன்
உம் பாதம் ஒன்றே பிடிப்பேன்
என் அன்பு இயேசுவே
ஆராதனை இயேசுவுக்கே! (4)

1. கடலின் மீது நடந்திட்ட உம் அற்புத பாதங்கள்
எனக்கு முன்னே செல்வதால் எனக்கில்ல கவலை
காற்றையும் கடலையும் அதட்டிய உம் அற்புத வார்த்தைகள்
எந்தன் துணையாய் நிற்பதால் எனக்கு ஏது கவலை - ஆராதனை

2. பாதை எல்லாம் அந்தகாரம் சூழ்ந்து கொண்டாலும்
பாதை காட்ட நேசர் உண்டு பயமே இல்லையே
பார்வோன் சேனை தொடர்ந்து வந்து சூழ்ந்து கொண்டாலும்
பாதுகாக்க கர்த்தர் உண்டு பயமே இல்லையே - ஆராதனை

**பாடல் - 1129**

**நன்றி நன்றி நன்றி இராஜா**
நன்றி நன்றி நன்றி தேவா (2)
உமக்கு நன்றி சொல்வதைத் தவிர
வேறே மகிமை என் வாழ்வில் இல்லை

1. கண்ணின் மணி போல் என்னைக் காத்தீர்
காலமெல்லாம் நடத்துகின்றீர்
உமது அன்பால் நித்தம் மகிழ்வேன்
உமது தயவால் தினமும் வாழ்வேன்

2. ஆபத்தில் என்னோடே இருப்பவர் நீரே
கேடகமாய் என்னைக் காப்பவர் நீரே
உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேனே
உம்மாலே மதிலைத் தாண்டிடுவேனே

3. அன்போடு என்னை அணைக்கின்றீரே
ஆறுதலாகத் தேற்றுகின்றீரே
தகப்பனைப் போல ஆற்றுகின்றீர்
தாயைப் போலத் தேற்றுகின்றீர்

## பாடல் - 1130

**என் ஆவியை நான் ஊற்றிடுவேன்**
உன் சந்ததியின் மேல் நான் ஊற்றிடுவேன்
என் ஆசீர்வாதம் நான் பொழிந்திடுவேன்
உன் பிள்ளைகள் மீதே நான் பொழிந்திடுவேன்

நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (4)

1. வல்லமை வரங்களைத் தந்திடுவேன்
ஆவியின் கனியால் நிரப்பிடுவேன்
எனக்கு சாட்சியாய் வாழ்ந்திடுவாய்
எனக்கு கனிகள் தந்திடுவாய் – 2 – நீ

2. நோய்கள் யாவும் விலக்கிடுவேன்
சந்தோஷ வாழ்வு நல்கிடுவேன்
பெலவீனம் யாவும் போக்கிடுவேன்
புது பெலன் உனக்குத் தந்திடுவேன் – 2 – நீ

3. கையின் பிரயாசம் பெருகச் செய்வேன்
கடன் தொல்லை யாவும் நீக்கிடுவேன்
வறுமையின் நாட்கள் முடிந்து விடும்
செழிப்பான நாட்கள் வந்துவிடும் – 2 – நீ

## பாடல் - 1131

**இராஜாவாகிய என் தேவனே**
உம்மை உயர்த்தி ஸ்தோத்தரிப்பேனே (2)
உம் சிறந்த மகிமை பிரதாபத்தையும்
வல்லமையையும் நான் விவரிப்பேன் – 2
இராஜாவாகிய என் தேவனே

1. உம் அதிசயங்கள் எல்லாம் நினைத்தே
உம்மில் நான் களிகூறுவேன் - 2
உன்னதமான உமது நாமத்தை
உண்மையாய் நித்தம் துதிப்பென் - 2

2. காலையிலே உம் கிருபையும்
இராவிலே உம் சத்தியத்தையும் - 2
நாள்தோறும் உமது நீதியை
தியானம் செய்து உம்மை போற்றுவேன்

3. ஓசையுள்ள கைத்தாளத்தோடும்
தேவ சபை நடுவினிலே - 2
பரிசுத்த அலங்காரத்தோடே
சர்வ சேனையோடே போற்றுவேன் - 2

## பாடல் - 1132

**யார் உன்னை மறந்தாலும்**
இயேசு உன்னை மறப்பதில்லை
உன் தந்தை தாயும் மறந்தாலும்
இயேசு உன்னை மறப்பதில்லை (2)

1. துன்ப துயரங்கள் வாழ்வில் வந்தாலும்
துளியும் பயமில்லையே
நிந்தை நாள்தோறும் நெருங்கி வந்தாலும்
இதயத்தில் கலக்கமில்லை

உன் கண்ணீர் களிப்பாக மாறுமே
உன் கவலை எல்லாமே தீருமே
நம் ஏசுவின் நாமத்திலே - யார்

2. பாடு பலவீனம் எதுவும் வந்தாலும்
விடுதலை தந்திடுவார்
மனது பாரங்கள் நெருக்கும் வேலையில்
வேண்டுதல் கேட்டிடுவார்

உன் தோல்வி ஜெயமாக மாறுமே
உன் வாழ்வு சந்தோசம் ஆகுமே
நம் ஏசுவின் நாமத்திலே - யார்

3. நமது எதிர் காலம் நேசர் இயேசுவின்
கரங்களில் இருகின்றது
மனது தேவனின் தூய ஆவியால்
மகிழ்ந்தே துதிக்கிறது

இனி வாதை நம் வாழ்வில் இல்லையே
நாம் பயந்து வாழ்வதும் இல்லையே
நம் ஏசுவின் நாமத்திலே - யார்

## பாடல் - 1133

**கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்**
இறைவா இயேசு உம்மை கும்பிடுகிறேன்
கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
இறைவா இறைவா கும்பிடுகிறேன்

1. சர்வத்தையும் படைத்த
சர்வ வியாபியே - 2
சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
உம்மை நான் கும்பிடுகிறேன் - 2

2. மகிமையின் மன்னவனே
மகத்வ ராஜனே - 2
மாறாத தேவன் மரித்து உயிர்த்தீர்
உம்மை நான் கும்பிடுகிறேன் - 2

3. வல்லமையின் தெய்வமே
வாழவைக்கும் வள்ளலே - 2
வானத்து மன்னா வாழ்வின் ஜோதி
உம்மை நான் கும்பிடுகிறேன் - 2

## பாடல் - 1134

**புதிய ஆவி புதிய இருதயம்**
புதிய வாழ்வு புதிய ஜீவன்
புதிய வாசல் புதிய கிருபை
புதிய நம்பிக்கை புதிய பாடல்

1. கடந்ததை நீ நினைக்காதே
முடிந்ததை நீ சிந்திக்காதே
அழைத்தவர் என்றும் நடத்துவார்
உயர்த்தி உன்னை தாங்குவார்

2. கண்ணின் மணி போல் காக்கும் தேவன்
உன்னை அவர் தினம் நடத்துவார்
தினமும் தாங்கி சுமந்த தேவன்
உன்னை காத்து நடத்துவார்

3. நானே உனக்கு தேவன் என்று
வாக்களித்த தேவனே
நடத்துவேன் உன்னை தாங்குவேன்
உன்னை பெலப்படுத்தி உயர்த்துவேன்

## பாடல் - 1135

**வானாதி வானமே போற்று**
உன்னதங்களில் அவரை போற்று
வானத்தின் சேனையே போற்று
சூரிய சந்திரனே போற்று
வானத்தின் விண்மீனே போற்று
மேகத்தின் மேலுள்ள தண்ணீரே போற்று

போற்று அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

2. ஆழ்கடலின் மச்சமே போற்று
ஆழத்தின் ஆழமே போற்று
அக்கினியே கல் மழையே போற்று
பெருங்காற்றே மலையே போற்று
கனிதரும் மரமே போற்று

3. மிருகங்களின் கூட்டமே போற்று
ஊரும் பிராணிகளின் கூட்டமே போற்று
பறவைகளின் கூட்டமே போற்று
பரிசுத்த ஜனமே போற்று
பூமியின் குடியே போற்று - இளம்
வாலிபனே கன்னிகையே போற்று
உறைந்த மழையே பனியே போற்று

## பாடல் - 1136

**இராஜாதி ராஜாவே கர்த்தாதி கர்த்தாவே**
அழகில் சிறந்தவரே ஆராதனை செய்கிறோம்

1. துதிக்கு பாத்திரரே கிருபை நிறைந்தவரே
ஆராதனை... ஆராதனை (2)

2. வெண்ணங்கி தரித்தவரே வெண்மையானவரே
ஆராதனை... ஆராதனை (2)

3. பரலோகம் திறந்தவரே பாதாளம் வென்றவரே
ஆராதனை... ஆராதனை (2)

4. எங்களை படைத்தவரே உயிருள்ள தேவன் நீரே
ஆராதனை... ஆராதனை (2)

5. உண்மையும் சத்தியமும் நீதியும் நிறைந்தவரே
ஆராதனை... ஆராதனை (2)

6. வார்த்தைகள் போதாதையா உம் நாமம் உயர்த்திடவே
ஆராதனை... ஆராதனை (2)

## பாடல் - 1137

**யேகோவா தேவன் சிருஷ்டி கர்த்தர் அவர்**
யேகோவா தேவன் சர்வ வல்லவரே
கிலேயாத் தைலமாம் கன்மலையானவர்
ஆ... அல்லேலூயா (4)
யேகோவா தேவன் வல்லமையுள்ளவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

2. ஆபிரகாம் தேவன் என்றென்றும் உள்ளவர்
யேகோவா ஷாலோம் சமாதான தேவன்
இஸ்ரவேல் தேவனாம் நித்தியமானவர்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

3. போதுமானவரே யெகோவாயீரே
இரட்சண்ய தேவனாம் மேசியா தேவனே
இரட்சகர் வந்திட்டார் சாட்சி கொடுத்திட்டார்
என்னை முற்றும் சுகமாக்கும் தேவனாம்

## பாடல் - 1138

**என்னோடு கூட இருப்பார் - இயேசு**
என்னோடு கூட இருப்பார்
எந்நாளும் கூட இருப்பார் - இயேசு
எந்நாளும் கூட இருப்பார்

கலங்கிட மாட்டேன் நான் கலங்கிட மாட்டேன்
கைவிட மாட்டார் இயேசு கைவிட மாட்டார்

1. சோதனை நேரத்தில் கூட இருப்பார்
சோர்ந்திடும் வேளையில் தாங்கி நடத்துவார்
சாத்தானை ஜெயிக்கப் பெலன் தருவார்
சாய்ந்து இளைப்பாற மார்பில அணைப்பார்

2. செய்திடும் காரியம் வாய்த்திடச் செய்வார்
சேனையின் கர்த்தராய் கூட இருப்பார்
மனுஷரின் தயவை உண்டு பண்ணுவார்
நானிலம் போற்றிட உயர்த்தி மகிழ்வார்

3. ஆவியின் கனியால் அலங்கரிப்பார்
வல்லமை வரங்களை பெருகப் பண்ணுவார்
போக்கிலும் வரத்திலும் கூட இருப்பார்
பரலோக வாழ்வை எனக்குத் தருவார்

## பாடல் - 1139

**புதுப் பாட்டு பாடு ஜெபத்தோடு பாடு**
பரலோகம் இரங்கிடுமே
சந்தோஷத்தோடு கர்த்தருக்காய் பாடு
கவலைகள் நீங்கிடுமே!

ஆஹா... ஹா... ஆஹா... ஹா...

1. பெயர் சொல்லி அழைத்தார்
கரத்தினால் அணைத்தார்
அக்கினியின் ஜுவாலை அழிக்காது காத்தார்
தண்ணீரைக் கடந்தாலும்
என்னைத் தாங்கினார்
கண்ணீரில் நனைந்தாலும்
என்னைத் தாங்கினார் - ஆஹா... ஹா...

2. காரிருள் சூழ்ந்தும் பயம் ஒன்றும் இல்லை
நெரிந்த என் வாழ்வு முறிவதுமில்லை
அவர் நாம மகிமைக்காக உயர்த்திடுவார்
களிமண் நான் அவர் நாமம்
உயர்த்திடுவேன் - ஆஹா... ஹா...

3. நாற்றமுள்ள வாழ்க்கை நறுமணமாகும்
அக்கிரமம் நீங்கி பசும் பொன்னாய் மாறும்
புது எண்ணெய் அபிஷேகம் ஊற்றிடுவார்
கனியுள்ள வாழ்க்கையாய் மாற்றிடுவார்

## பாடல் - 1140

**அற்புதர் இயேசு அற்புதரே**
ஆண்டவர் இயேசு அற்புதரே

அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர்
அற்புதர் அற்புதர் என்று சொல்லிப் பாடுங்கள்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
அற்புதர் இயேசு அற்புதர் - 2

1. செங்கடலைப் பிளந்தவர் அற்புதரே
சேனைகளின் கர்த்தர் அற்புதரே
தெற்கத்தி வெள்ளங்களைத்
திசை திருப்பும் தேவன்

2. திருடரைத் திருத்தினார் அற்புதரே
தீயப் பழக்கங்கள் மாற்றினார் அற்புதரே
கொலைக்காரனையும் குடிகாரரையும்
கொல்கொதா இரத்தத்தால் இரட்சித்தார் இயேசு

## பாடல் - 1141

**இமய முதல் குமரி வரை**
சென்றிடுவோம் நாம்
இயேசுவின் சிலுவையை
உயர்த்திடுவோம் நாம் (2)

1. அல்லேலூயா கீதம் பாடி
இரட்சிப்பின் செய்தியைக் கூறி
இயேசுவின் நாமத்தை உயர்த்தி
துதிகள் செலுத்திடுவோம் ஆ ஆ ஆ (2)

சாட்சிகளாய் வாழ்ந்திடுவோம்
உன்னத வாழ்வினிலே (2) - இமய முதல்

2. உலகமெங்கும் சென்று
இயேசுவின் வார்த்தையைக் கூறி
சீஷரை யாவரும் மாற
இயேசுவின் வழிநடப்போம் ஆ ஆ ஆ - சாட்சி



அட்டவணை

3. விசுவாச வாழ்வில் உயர
விசுவாச ஜீவியம் செய்து
சத்தியத்தில் நாம் நிலைத்து
சிறந்து வாழ்ந்திடுவோம் ஆ ஆ ஆ ஆ - சாட்சி

4. அற்புதம் செய்வார் இயேசு
அதிசயம் செய்வார் இயேசு
இயேசுவின் நாமத்தில் எங்கும்
சீஷராய் மாற்றிடுவோம் ஆ ஆ ஆ - சாட்சி

## பாடல் - 1142

**பல்லவி**

**உம் நாமம் சொல்ல சொல்ல**
என் உள்ளம் மகிழுதையா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உம் இன்பம் பெருகுதையா

***சரணங்கள்***

1. மாணிக்க தேரோடு, காணிக்கை தந்தாலும்
உமக்கது இணையாகுமா
உலகமே வந்தாலும், உறவுகள் நின்றாலும்
உமக்கு அது ஈடாகுமா - உம் நாமம்

2. பாலென்பேன் தேனென்பேன், தெவிட்டாத அமுதென்பேன்
உம் நாமம் என்னவென்பேன்
மறையென்பேன் நிறையென்பேன், நீங்காத நினைவென்பேன்
உம் நாமம் என்னவென்பேன் - உம் நாமம்

3. முதலென்பேன் முடிவென்பேன், மூன்றில் ஓர் வடிவென்பேன்
முன்னவர் நீரே என்பேன்
மொழியென்பேன் மொழியென்பேன், வற்றாத ஊற்றென்பேன்
வாழ்க உம் நாமம் என்பேன் - உம் நாமம்

## பாடல் - 1143

**வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள்**
வானபரனை வாழ்த்திப் பாடும்
பூமியின் சிருஷ்டிகள் புகழ் பாடுவோம்
காற்றும் மழையும் கவிபாடும்
நமது உள்ளம் துதி பாடட்டும்



அட்டவணை

1. காடுகளே மேடுகளே தேவனை துதியுங்கள்
கைவிடாமல் காக்கும்
நமது கர்த்தரை துதியுங்கள்
வாலிபர் கன்னியர் பிள்ளைகள் யாவரும்
வாழ்த்திப் பாடுங்கள்
வல்லவர் இயேசு நம் சொந்தமானார்
அவரில் மகிழுங்கள்

2. அக்கினியே கல்மழையே
உறைந்த பெருமழையே
மூடுபனியே வாடைக் காற்றே
அவரைத் துதியுங்கள்
இயேசுவின் நாமம் உயர்ந்ததென்று
வாழ்த்திப் பாடுங்கள்
இயேசு வல்லாமல் மீட்பில்லையென்று
உலகுக்கு சொல்லுங்கள்

3. ஆழ்கடலே சமுத்திரமே
தேவனை துதியுங்கள்
அன்பினாலே உலகில் பிறந்த
கர்த்தரை துதியுங்கள்
தம்முடன் நம்மை ஒன்றாய் இணைக்க
அழைத்தோரை துதியுங்கள்
சிலுவையில் நமக்காய்
மரித்துயிர்த்தெழுந்த
இயேசுவை துதியுங்கள்

## பாடல் - 1144

**துதிப்போம் துதிப்போம் நம் தேவ தேவனை**
நினைப்போம் நினைப்போம் அவர் செய்த நன்மையை
உன்னதத்தின் ஆவி தந்து
நம்மை தூய்மையாக்கிய
இயேசுவை நாம் போற்றுவோம்

1. வானம் பூமி படைத்து ஆளும் தேவனை
வல்ல கிரியை செய்யும் இயேசு ராஜனை
பரிசுத்த மனத்தில் பரமன் தன் புகழை
போற்றி புகழ்ந்து பாடியே மகிமை காணுவோம்

2. தூய இரத்தம் சிந்தி நம்மை மீட்டவர்
பாவ சேற்றிலிருந்து தூக்கி எடுத்தவர்
அன்பினால் நிறைந்து பரலோகம் துறந்து
நம்மை தேடி வந்தவர் அன்பைச் சொல்லியே

3. துன்பம் வாழ்வில் சூழ்ந்து வந்த நேரத்தில்
தூய ஆவி கொண்டு நம்மை தேற்றினார்
கைவிடா என்றும் கருத்தாக காக்கும்
கர்த்தர் புகழைப் பாடுவோம் காலம் தோறுமே

## பாடல் - 1145

**சோதனைகள் சூழ்கின்ற நேரத்தில்**
சோர்ந்திடாத உள்ளத்தோடு நின்றிடு
இயேசு என்னும் நாமம் கொண்டு வென்றிடு

1. பசித்த சிங்கம் எழும்பி நின்ற போதிலும்
தானியேலின் உள்ளம் கலங்கவில்லையே
ஆணையிட்ட கர்த்தர்
வாயின் வார்த்தையால்
வலிய சிங்கம் வாய் திறக்கவில்லையே
வாயை கட்டும் கர்த்தர் நம் பட்சத்தில் நிற்க
சீறிவரும் சிங்கம் கண்டு மிரள்வதா
சோதனைக்கு தலை வணங்கி செல்வதா

2. செங்கடலும் வழி மறித்து நின்றிட
சீறிவரும் பார்வோன் படை சூழ்ந்திட
வலிய தேவன் எளிமையான கோலினால
கடல் பிளந்து வழி அமைக்கவில்லையா
யுத்தம் செய்யும் கர்த்தர் நமக்கு முன்னே செல்ல
சத்தம் கண்டு தேவபடை திகைப்பதா
விசுவாசத்தில் தளந்து விலகிச் செல்வதா

3. தேசமெங்கும் பஞ்சம் சூழ்ந்த போதிலும்
தேவ மனிதன் எலியா வயிறு காய்ந்ததா
தேவஜனம் பயணம் செய்து போகையில்
அடைத்து நின்ற அரங்கு உடைந்ததில்லையா
வாக்குத்தத்தம் செய்த வலிமையுள்ள கர்த்தர்
வழி நடத்தி செல்லும் போது கலக்கம் ஏன்
அவர் வழி நடக்க இன்னும் தயக்கம் ஏன்

## பாடல் - 1146

**பிதாவைப் போற்றி! குமாரனைப் போற்றி!**
ஆவியைப் போற்றி! போற்றி! போற்றி! (2)

1. யெகோவாயீரே! போற்றி! போற்றி!
எல்லாமே பார்த்துக் கொள்வீர் - பிதாவைப்

2. யெகோவாநிசியே! போற்றி! போற்றி!
எங்களுக்கு வெற்றி தருவீர் - பிதாவைப்

3. யெகோவா ஷாலோம்! போற்றி! போற்றி!
சமாதானம் தருகின்றீர்! - பிதாவைப்

4. யெகோவா ராஃபா! போற்றி! போற்றி!
எங்களுக்கு சுகம் தருவீர் - பிதாவைப்

5. யெகோவா ஷம்மா! போற்றி! போற்றி!
கூடவே இருக்கின்றீர்! - பிதாவைப்

## பாடல் - 1147

**நீரே வழி நீரே சத்தியம் நீரே ஜீவன்- வேறே**
ஒரு தெய்வம் இல்லை நீரே தேவன்

விண்ணிலும் மண்ணிலும் மெய்
நாமம் உந்தன் நாமம் ஐயா
உமக்கு நிகர் என்றும் நீர் தானைய்யா

1. கல்லும் அல்ல மண்ணும் அல்ல கல்லான
ஓர் சிற்பமல்ல ஜீவனுள்ள தேவன்
என்றால் நீர் தானைய்யா-ரூபமும்
உமக்கில்லை சொருபமும் உமக்கில்லை
ஆவியாய் இருக்கிறீர் ஆண்டவரே

2. உண்டானது எல்லாமே உம்மாலே
உண்டானது உம் நாம மகிமைக்கே
உண்டாக்கினீர்- படைப்பு தெய்வமல்ல
பார்ப்பதெல்லாம் தெய்வமல்ல
கர்த்தர் நீர் ஒருவரே கடவுளய்யா

3. எல்லாம் வல்ல தெய்வம் நீரே
எல்லையில்லாதவரே
உம்மாலே ஆகாதது ஒன்றுமில்லையே
வானம் உம் சிங்காசனம் பூமி உந்தன் பாதபடி
நடப்பதெல்லாம் உம் விருப்பப்படி

## பாடல் - 1148

**வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே**
வாழ்வின் முழுமையும் இயேசுவுக்கே
நானும் என் எலலாமும்
இயேசுவுக்கே சுவிசேஷத்துக்கே

1. உயிருள்ளளவும் உண்மையாக
மரணம் வரினும் மலையாய் நிற்க

2. எண்ணற்ற ஜனங்கட்கு மேய்ப்பனில்லை
அறிந்தோர் அவரை சொல்லவில்லை

3. இயேசுவை அறியாதோர் மனம் மாற
சகல ஜாதியும் அடி பணிய

4. சபைகள் பெருகி வளர்ந்தோங்க
மீட்பை அடைந்தோர் இணைந்து வாழ

5. இந்தியா இயேசுவை கண்டிடவே
சுவிசேஷக் கொடி பறந்திடவே

## பாடல் - 1149

**நமது இயேசு கர்த்தரென்று**
நாவுகள் யாவும் அறிக்கையிடும்
முழங்கால் யாவும் முடங்கிடும்
அவர் முன் முழங்கால் முடங்கிடும்

ஆமென் அல்லேலூயா – 4

1. சர்வத்தை ஆண்டிடும் தேவனவர்
அனைத்து சிருஷ்டிக்கும் முந்தினவர்
வல்லமை தேவனை நித்திய தேவனை
ஜாதிகள் யாவும் அறிந்திடுமே - ஆமென்

2. ஊற்றுண்ட பரிமள தைலமவர்
உலகில் வாசனை வீசுபவர்
ஆதியும் அவரே அந்தமும் அவரே
நித்திய நாமம் உடையவரே - ஆமென்

3. வேதாளம் பாதாளம் நடுங்கிடுதே
வானோர் பூதலத்தோர் பணிந்திடுவார்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
பூமியின் கீழானோர் பணிந்திடுவார் - ஆமென்



அட்டவணை

## பாடல் - 1150

**ஆத்துமாவே ஸ்தோத்தரி**
**முழு உள்ளமே ஸ்தோத்தரி**
ஜீவனுள்ள தேவனைத் துதி – அல்லேலுயா

1. ஒன்று இரண்டு என்றல்ல
தேவன் தந்த நன்மைகள்
கோடா கோடா கோடியாகுமே
ஒன்று இரண்டு என்றல்ல
நீ செலுத்தும் நன்றிகள்
கோடா கோடா கோடியாகட்டும் – அல்லேலூயா - ஆத்துமாவே

2. நாட்டிலுள்ள மக்களே
பூமியின் குடிகளே
என்னுடனே தேவனைத் துதி
கூட்டிலுள்ள பறவைப் போல்
சிக்கிக் கொண்ட நம்மையே
விடுவித்த தேவனைத் துதி – அல்லேலூயா - ஆத்துமாவே

3. பெத்தலேகேம் வந்தாரே
கல்வாரிக்குச் சென்றாரே
இயேசு எனக்காய் ஜீவன் விட்டாரே
இம்மகா சிநேகத்தை
ஆத்துமாவே சிந்திப்பாய்
நெஞ்சமே நீ மறக்கக் கூடுமோ – அல்லேலூயா - ஆத்துமாவே

4. நானும் என் வீட்டாருமோ
போற்றுவோம் ஆராதிப்போம்
இயேசுவை என்றுமே சேவிப்போம்
எங்கள் பாவம் மன்னித்தார்
எங்கள் தேவை சந்தித்தார்
வருகை வரை நடத்திச் செல்லுவார் – அல்லேலூயா - ஆத்துமாவே

## பாடல் - 1151

**தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்**
இயேசுவே உம்மை நான் போற்றுகிறேன் – 2

1. உம் கரம் வல்லமை அறிந்தோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா - 2
இரத்தமான தண்ணீர் இரசமானதுவே - 2
அச்செயல் செய்தவர் இன்று என் இரட்சகர் - தேவனே

2. உம் கரம் காயங்கள் கண்டோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா - 2
காணக் கூடாதவர் கல்வாரி தோன்றினார் - 2
ருசித்தோர் கூறுவார் இயேசுவே ஆண்டவர் - தேவனே

3. உம் கரம் இவ்வேளை உணர்வோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் அல்லேலூயா - 2
மாறிடும் உலகில் மாறாதவர் நீரே - 2
உம்மை அறிந்தவர் கூறுவார் ஸ்தோத்திரம் - தேவனே

## பாடல் - 1152

**கெஞ்சும் கிருபை தாரும் தேவா - 2**
நெஞ்சுருகி கண்ணீர் சிந்தி - 2
கெஞ்சும் கிருபை தரும் தேவா - தேவா

1. கெத்சமனே தோட்டத்தில்
முத்து முத்தாய் ரத்த வேர்வை
எங்களுக்காய் கண்ணீர் விட்டீர்
ஆவியில் கலக்கம் கொண்டீர்
நாங்களும் அவ்வண்ணமே
வாஞ்சையாய் ஜெபிக்க

2. உம் சந்நிதி சேரவும்
உம் சிந்தையை நாடவும்
உம் வல்லமை தரிக்கவும்
விண் மகிமையை வெளிப்படுத்தவும்
உம்மை போலாகவும்
தேவராஜ்ஜியம் விரைந்து பரவிட

3. காவல் புரியும் ஜாமக்காரன்
உப்பரிகை மேல் அமர்ந்து
இராப்பகலாய் திறப்பிலே
ஊக்கமாய் வேண்டவுமே
அழிவையே தடுத்திடவும்
நாங்களும் உபவாசம் ஆசையாய் செய்ய

4. துதி முழக்கம் ஸ்தோத்திரம்
கர்த்தர் பேரில் திடமனம்
நம்பிக்கையில் பெருகவும்
உம் வார்த்தைக்கு நடுங்கவும்
போராடி ஜெயம் பெறவும்
தேவனின் கூரிய ஆயுதமாகவும்

## பாடல் - 1153

**அனுதின வாழ்க்கையிலே**
கர்த்தருக்குப் பயப்படுவோம்
நீதியின் தேவனவர் அதிசயமானவராம்
சேனையின் கர்த்தரின் தேவ வைராக்கியம்
நீதியை நிலைப்படுத்தும்
தேசத்தை சீர்படுத்தும்

1. கர்த்தரின் பார்வைக்கு விலகின நினிவே
நகருக்காய் தேவன் பரிதவித்தார்
நினிவே அல்ல தர்ஷீஸ் போன
யோனாவை கடலில் வழி மறித்தார்
மூன்று நாள் இரவுமாய் பகலுமாய் கதறியே அழுதான்
நினிவேயின் ஜனங்களும் ராஜாவும் திருந்தவே
சுவிசேஷம் அறிவித்தான்
தேவ வைராக்கியம்
நினிவேயை காத்தது அல்லவோ

2. பலிகளை பார்க்கிலும் தேவனுக்கே
நாம் பணிவது தானே உத்தமமாம்
கீழ்ப்படியாத சவுல் என்னும் ராஜா
பதவியை அன்று இழந்தானே
தாவீது சிறுவனாய் இருந்தாலும்
கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டார்
கோலியாத் பலவானாய் எண்ணப்பட்டும்
தாவீது பெற்றார் வெற்றியே

## பாடல் - 1154

**ஆவியானவரே! அறுவடை நாயகரே!**
ஆத்தும ஆதாய ஊழியம் செய்ய
வல்லமை தருபவரே ஆண்டு நடத்திடுமே

வாரும் தேவ ஆவியே விரைந்தாளும் எங்களையே
அனுதினமும் நிறைத்திடுமே ஜெபஊழியம் செய்திடவே

1. என் சபையை நான் கட்டுகிறேன் என்று சொன்னவரே
பதினேழு ஆயிரம் கிராமங்களில் சபைகளை எழுப்பிடுமே
சத்தியம் நிலைத்திடவே சமுதாயம் தழைத்திடவே

2. ஆத்தும தரிசனம் அளித்திடுமே இதயத்தை ஆட்கொள்ளுமே
துதி, வேண்டுதல்இவிண்ணப்பஆவிதனைசபைகளில்ஊற்றிடுமே
தேவஜனம் ஆர்த்தெழவே பலவானை கட்டிடவே

3. கசப்பின் வேரை அகற்றிவிடும் அன்பை பொழிந்தருளும்
சபைபேதங்கள் யாவும் நீக்கிவிடும் ஒற்றுமைஓங்கச் செய்யும்
அன்பே மொழி உறவின் வழி உலகத்தை வெல்லும் இனி

4. வரங்கள் உமது வல்லமையை வெளிப்படச் செய்திடுமே
கனியுள்ள வாழ்வு உம் அழகை காட்டும் அடையாளமே
இயேசுவையே ஆண்டவராய் இந்தியர் ஏற்றிடவே

5. கடைமுனை மட்டும் செல்லும்படி கட்டளை தந்தவரே
உயிர்த்தெழுதலின் வல்லமை தரித்தவராய் அகிலத்தை வென்றிடவே
உலகின் முடிவுரை எங்களோடிருப்பவரே

## பாடல் - 1155

**என்னைப் பலப்படுத்தும் இயேசுவால்**
நான் எல்லாமே செய்து முடிப்பேன்
தரணியில் நற்செய்தி ஊழியம் பரவிட
விரைவினில் பலமக்கள் மீட்டிடவே

1. சின்னஞ்சிறு கிராமங்களில் சீர் மிகுந்த நகர்களில்
பன் நெடுங் காலமாய் மக்கள்
பக்தி தாகம் வாடுகிறார் தாகம் தீர ஜீவ நீர்
வேகம் வா இயேசு என்பேன்

2. சொந்த மக்கள் நான் துறப்பேன்
லோக ஆசை தான் வெறுப்பேன்
எத்திசை சென்றிடவும்
இயேசுவுக்காய் முன் வருவேன்

## பாடல் - 1156

**தேசமெங்கும் மோசம் போக்கும்**
சத்துருவின் கைகளில் நாசமாகி
ஆத்துமாக்கள் நரகம் நோக்கி செல்லுதே
விசுவாச வீரரே நாம் அமர்ந்திருப்பதோ
சோர்வு நீக்கி போர் புரிய எழும்பக் கூடாதோ

செல்லுவோம் சொல்லுவோம்
இயேசு ஆண்டவர் முழங்குவோம்

1. எல்லை காக்கும் ஜாமக்காரன்
மனம் தளர்ந்து போவானோ
இரவு பகல் இருபொழுதும்
மௌனமாக இருப்பானோ
சுவிசேஷ வீரரே எக்காளம் ஊதுவோம்
எச்சரிப்பின் செய்தியை
எடுத்து சொல்லுவோம்

2. இருள் நிறைந்த இடங்களெல்லாம்
ஒளியின் வாசல் திறந்திட
இதய ஜோதி இயேசு என்று
இந்தியர்கள் தொழுதிட
தீபம் ஏற்று வீரனே தேவனின் புதல்வனே
உறுதியோடு தேவனுக்காய்ப்
பணிபுரிவோம்

## பாடல் - 1157

**நீயும் நானும் ஜாமக்காரர்கள்**
இயேசுவை கூறிடும் செயல்வீரர்கள்
சிறிதேனும் இதை மறவாமல்
சிந்தித்து செயல்பட வா

1. இரவும் பகலும் தூங்காமலே
நதியளவு கண்ணீர் சிந்திடுவோம்
ஜாமக்காரர் நாம் ஜாமக்காரர்
இரவும் பகலும் தூங்காமலே
பரிந்து பேசும் ஊழியம் செய்வோம்
இருளினிலே வாழ்வோர்
இயேசு என்னும் ஒளி காண உதவிடுவோம்

2. சத்திய வசனத்தை விதைத்திடுவோம்
தரிசு நிலத்திலும் பயிர் செய்குவோம்
விளைச்சலையே நாம் அறுத்திடவே
விரைவாக செயல்படுவோம்

3. மனிதரை பிடிப்போம் பூலோகிலே
மணிகளாய் சேர்ப்போம் பரலோகிலே
ஜாமக்காரர் நாம் ஜாமக்காரர்
மனிதரை பிடிப்போம் பூலோகிலே
வருகை மட்டும் நாம் ஓயாது
விழிப்போடு உழைத்திடுவோம்

## பாடல் - 1158

**ஆதியும் அந்தமுமானீர்**
அனாதையின் சொந்தமுமானீர்
அநாதி சிநேகத்தால் சிநேகித்தீர்
அப்பா - உம் (2)

போற்றுவேன் புகழுவேன்
வாழ்த்துவேன் துதித்திடுவேன்

1. உள்ளங்கையில் எம்மை வரைய
நீட்டிக் கொடுத்தீர் உம் கரத்தை
உள்ளமெல்லாம் நேசங்கொண்டு
உன்னதரே உம்மைத் துதிப்பேன் - ஆதியும்

2. ஆத்துமாவைக் கவர்ந்து கொண்டீர்
ஊற்றிக் கொடுத்தீர் உம் இரத்தத்தை
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
பரிசுத்தரே பாதம் பணிவேன் - ஆதியும்

3. நேசத்தினால் சோகமானேன்
கிச்சிலிப் பழத்தால் தேற்றிடுவீர்
ஆவி உடல் அத்தனையும்
ஆர்ப்பணித்தேன் இயேசுவுக்கே - ஆதியும்

## பாடல் - 1159

**கிருபை தேவ கிருபை**
எமக்களிப்பீர் புதிய கிருபை

1. எத்தனையோ பல நன்மைகள் செய்தீர்
இத்தனை ஆண்டுகளாய்
ஆதரை மீதினில் ஆறுதல் அளித்தீர்
அல்லேலூயா துதி பாடிடுவோம்

2. கலங்கிடும் வேளையில்
கருணையாய் எம்மை
கண்மணி போல் காத்தீர்
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தீர்
கருத்துடன் போற்றியே துதித்திடுவோம்

3. அக்கினி ஊடாய் நடந்திட்ட நேரம்
அற்புதமாய் காத்தீர்
ஆழியின் நடுவில் அமிழ்ந்திடும் வேளையில்
அன்பின் கரம் கொண்டு
அணைத்திடுவீர்

## பாடல் - 1160

**தேவனையே துதித்திடுவோம்**
தினமும் அவர் துதி சாற்றிடுவோம்
திருரத்தம் சிந்தி மீட்டெடுத்தார்
தூயவர் பாதம் பணிந்திடுவோம்

ஆர்ப்பரித்தே நாம் ஆனந்திப்போம்
அல்லேலூயா பாடுவோம்
அல்லும் பகலும் அன்பர் இயேசுவின்
அன்பதை எண்ணியே வாழ்ந்திடுவோம்

2. சென்ற காலம் முழுவதிலும் சேதம்
அணுகாமல் பாதுகாத்தார்
கூப்பிடும் வேளையில் செவி கொடுத்தார்
தேவைகள் யாவும் ஈந்தளித்தார்

3. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
உமக்காய் வாழ்ந்திட கிருபை செய்வீர்
தூய வழிதனில் நடந்திடவே
உம் அருள் ஈந்தே ஆதரிப்பீர்

## பாடல் - 1161

**சேனையின் கர்த்தர் இயேசு**
என்றும் ஜெயமாய் நடத்துவார்
சோதனை வேதனை சூழ்ந்திடும் வேளை
ஆற்றியே தேற்றிடுவார்

இயேசு நல்லவரே இயேசு வல்லவரே
ஜீவன் ஈந்தவரே
என் உள்ளம் ஜீவிக்கின்றார்

2. காடானாலும் மேடானாலும்
கர்த்தரே நடத்துவார்
போக்கிலும் வரத்திலும்
பாதுகாத்திடுவார் - இயேசு நல்லவரே

2. வியாதியிலும் ஆபத்திலும்
வந்து என்னை காத்திடுவார்
நெருக்கத்தின் மத்தியிலும்
ஆறுதல் அளிப்பார் - இயேசு நல்லவரே

## பாடல் - 1162

**வாக்குத்தத்தம் ஆயிரம் ஆயிரம்**
வழங்கிய வள்ளலே ஸ்தோத்திரம்
வாக்கு மாறா வல்ல தேவன் இயேசுவே
வலக்கரம் பிடித்தீர் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

1. விலகுவதில்லை கைவிடுவதில்லை
உன்னோடு இருப்பேன் என்றீரே ஸ்தோத்திரம்
உலகமே முடிந்து போயினும் நீரோ
என்றென்றும் என்னுடன் ஆமென் ஸ்தோத்திரம்

2. வாய்க்காதே போகும் எந்த ஆயுதமும்
உன்னைக் காத்திடுவேன் என்றீரே ஸ்தோத்திரம்
ஒரு வழி வந்து ஏழு வழி ஓடிட
யுத்தம் செய்யும் இயேசுவே ஆமென் ஸ்தோத்திரம்

3. வல்ல நம் கிருபைகள் நல்ல காருண்யங்கள்
அள்ளித் தந்தீர் தேவனே என்றும் ஸ்தோத்திரம்
இத்தனை அன்பு என் மீது வைத்தீர்
என்றென்றும் தொழுவேன் ஆமென் ஸ்தோத்திரம்


அட்டவணை

## பாடல் - 1163

**வாக்குமாறா வல்லவரை வாழ்த்தி பாடிடுவேன்**
வானத்தின் வாசல்களை திறந்திடுமே நிரப்பிடுவார்

1. ஆழமான காயங்களை
ஆற்றிடும் தேவ அன்பு
எண்ணெயும் தைலமும்
சிரிசில் வார்த்திடுவார்

2. பாரமான யாவற்றையும்
நீக்கிடும் தூய ஆவி
சுத்தமும் நீதியும்
பெருகச் செய்திடுவார்

3. மாறிடாத மாநேசரை
எப்படி போற்றிடுவேன்
நன்றியால் நிறைந்தே
நாதனைப் பணிந்திடுவேன்

4. ஆழமான சேற்றினின்று
உயிர்ப்பித்து ஜீவன் தந்தார்
இம்மட்டும் காத்தவர்
இனிமேலும் காத்திடுவார்

## பாடல் - 1164

**கர்த்தரையே நம்பிடுவாய்**
அவரே உந்தன் துணையாவார்
கன்மலையாம் மீட்பர் அவர்
கைவிடா நேசர் அவர்

நம்பிடுவேன் இயேசுவையே
என்றென்றும் நம்பிடுவேன்

1. ஜீவன் சுகங்கள் தந்தருள்வார்
ஜீவிய பாதையிலே
சேனைகளின் கர்த்தர் இயேசு
ஜெயம் ஈந்து உன்னையும் காப்பார்

2. சஞ்சலங்கள் மத்தியிலே
தஞ்சம் அளிப்பாரே
அஞ்சிடாதே நம்பிடுவாய்
என்றும் உன் வேண்டுதல் கேட்பார்



அட்டவணை

3. கால்கள் சறுக்கும் வேளைகளில்
கிருபை தாங்கிடுதே
கர்த்தரை நம்பி நன்மை செய்வாய்
வாஞ்சைகள் வாய்த்திடச் செய்வார்

## பாடல் - 1165

**கோடி கோடி துதிகள் ஆடி பாடி துதிப்பேன்**
துதிக்கு பாத்திரர் அன்பின் நேசரே
அல்லேலூயா மகிமை

கனத்துக்கும் மகிமைக்கும் பாத்திரரே
ராஜாதி ராஜாவாம் அவருக்கே

1. தூக்கினார் சேற்றினின்று
கழுவினார் இரத்தத்தினால்
மாற்றினார் கந்தலாடை
உடுத்தினார் நீதி ஆடை

2. நீங்கிற்றே பாவச்சுமை
நிரம்பிற்றே நேச அன்பு
நீசனை தள்ளாமலே
தேற்றினார் ஆவியாலே

3. காண்பேனே கண்குளிர
மார்பினில் சாய்ந்திருப்பேன்
மகிமை மேல் மகிமை பெற்று
மகிழ்வேன் என்றென்றுமே

## பாடல் - 1166

**ஆராதிப்பேன் ஆண்டவரை**
ஆவியோடும் உண்மையோடும்
மாறாத ஆனந்தம் குன்றாத பேரின்பம்
இயேசுவில் என்றும் உண்டு
நேசரண்டை வாருங்கள்
நேசத்தை ருசியுங்கள்
ஆவலாய் அழைக்கிறார் இதோ

1. ஆகாமியக் கூடாரம் வேண்டாம்
ஆலய வாசற்படியிலே
ஆனந்தம் பாடி நேசரைத் தேடி
ஆண்டவர் பாதம் பணிவோம்

2. ஆலோசனைக் கர்த்தர் அவரே
ஆலோசனை தந்திடுவாரே
பாதையைக் காட்டி கரம் பிடித்து
நேர் வழி நடத்திடுவார்

3. ஆட்டுக்குட்டி திரு ரத்தமே
பாவமற கழுவிடுமே
பாவங்கள் போக்கி சாபங்கள் மாற்றி
பரலோகம் சேர்த்திடுமே

## பாடல் - 1167

**துதியின் ஆவியை ஊற்றும்**
இயேசுவே நீர் என்னில் வாரும் - 2
ஜெபத்தின் ஆவியை ஊற்றும்
ஜெயத்தொனியோடே
பாடுவோம் முன்னேறுவோம் - 2

1. வேதத்தினால் மெய்ஞானம் அடைந்தோம்
இயேசு அருளிய வார்த்தையினால் புத்துயிர் பெற்றோம் - 2
எங்கள் தேசத்தில் தேவ ஆவியைப் பெற்றோம்
தேவன் தேசத்திலே நாங்கள் குடியேறுவோம் - 2 - துதி

2. பயத்தின் ஆவியை நீக்கும் தேவா
உந்தன் பரிசுத்த ஆவியைத் தாரும் தேவா
தேவ கிருபையின் ஆவியால் நிரப்பிடுமே
அன்பு இயேசுவே உம்மைப் போல் மாற்றிடுமே

## பாடல் - 1168

**ஆவியோடு ஆராதிக்க**
சுத்தம் தாரும் சுத்திகரியும்
சுத்திகரியும் சுத்திகரியும்
அனலாய் உம்மை ஆராதிக்க

1. ஆதி அன்பில் நிலைத்திருக்க
அக்கினி அபிஷேகம் தந்திடுமே
சுட்டெரியும் தூய ஆவியினால்
தூய்மைப்படுத்தி துலங்கச் செய்யும்

2. ஏங்கும் உள்ளம் மகிழ்ந்திடவே
கல்வாரி நதியால் சுத்திகரியும்
கழுவிடுமே எம்மை கழுவிடுமே
பரிசுத்தமுள்ள பாத்திரமாய்

3. ஊழிய எல்லை விரிவடைய
உத்தமரே நீர் உதவி செய்யும்
கரை திரை அற்ற மணவாட்டியாய்
மகிமையாய் என்னை சேர்த்து கொள்ளும்

## பாடல் - 1169

**கிருபை கிருபை கிருபை கிருபை ஏழை பாவி என் மேல்**
ஆத்ம நேசர் உம் கிருபையே
என் உள்ளம் பொங்குதே
அல்லேலூயா ஆமென்

1. துரோகி பாவி அசுத்தன் நான்
கல்வாரி கிருபையால்
சந்தித்து மீட்டு ரட்சித்தீர்
உம் நேச கரத்தால்

2. ஆனந்த கண்ணீர் தேசத்தில்
ஆண்டுகள் ஆயிரம்
ஒளிவீசும் சேதம் என் தேசம்
ஓய்வின்றி பாடுவேன்

## பாடல் - 1170

**இயேசு இயேசு ராஜா இயேசு நேச தேவா**
இயேசு எனக்கெல்லாமே
அல்லேலூயா ஆமென் 3

1. இயேசு பாவங்கள் போக்குவார்
இயேசு சாபங்கள் நீக்குவார் – 2
இயேசு எந்தன் நேசரே
இணையற்ற என் இயேசுவே
ஆமென் ஆமென் இயேசு – 4

2. நீச பாவியை நேசித்தார்
நாச வழி நின்று மீட்டிட்டார்
நேச கரம் நீட்டி காத்தாரே
இணையற்ற என் இயேசுவே
ஓசன்னா இயேசு– 4

## பாடல் - 1171

**இயேசுவைப் போலாகவும்**
நேசரின் சாயலாகவும்
ஏழை நான் ஏக்கமுற்றேன்
பாரிலே தேடினேன் பாசத்தை நாடினேன்
ஆயிரம் பேரில் சிறந்த
இயேசுவே என்னை நேசித்தீர்

2. ஆவியால் நிறைந்திடவும்
ஆவியில் களித்திடவும்
ஆவலாய் ஓடி வந்தேன்
தாகத்தை தீர்த்திடுமே
இயேசுவே உம்மைப் போலவே
யாருண்டு பாரினில் - 2
அன்பிலே நிறைந்தென்றுமே
உம் சாயலாய் மாறுவேன் - 2

3. வல்லமை பெற்றிடவும்
கனிகளால் நிறைந்திடவும்
கிச்சிலி மர நிழலில்
நேசரில் சாய்ந்திடுவேன்
சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே - 2
வாசனை வீசவே நேசரே என்னோடிரும் - 2

## பாடல் - 1172

**இன்ப துன்ப நேரத்திலும்**
அப்பா என்னை நடத்தும்
இன்ப துன்ப நேரத்திலும்
இயேசப்பா என்னை நடத்தும்

நேசர் மார்பினில் சாய்ந்துமே
வாழவே பெலன் தாருமே - 2

1. போதும் உந்தன் நேசம் எனக்கு
போதும் உந்தன் அன்பு மட்டுமே - 2
நேசத்தால் சோகமாயினேன்
பாசத்தாலே பாடிப் போற்றுவேன் - இன்ப

2. கொல்கதாவின் தியாக அன்புக்கு
ஈடு இணை எங்கு உண்டு -2
ஆ... அந்த அன்பின் மேன்மையை
நன்றியுடன் போற்றிப் பாடுவேன் - இன்ப

3. நேசர் உமக்காய் வாழுவேன்
என்றும் சாட்சியாக ஜீவிப்பேன் - 2
வெற்றியுடன் ஓட்டம் முடித்து
அப்பாவின் பாதம் சேருவேன் - 2 - இன்ப

## பாடல் - 1173

**இயேசுவின் நேசமும் எப்போ காண்பேனோ**
பாசத்தின் வார்த்தைகளை எப்போ கேட்பேனோ

நேசத்துடன் உறவாடி மகிழ்ந்திட
காத்திருப்பேன் அவர் வருகைக்காய்

என் நேசம் என் தாகம் அவரே
என் ஜீவன் அவரே என் எல்லாம் அவரே

2. கல்வாரி மேட்டினிலே எனக்காய் மரித்தீரே
சொல்லொன்னா துயரங்களை எனக்காய் சந்தித்தீரே - 2
பாசத்துடன் என்னை தூக்கி எடுத்திட்ட
நேசரை துதிப்பேன் என் காலமெல்லாம்

3. தீர்த்தீர் என் நோய்களெல்லாம் முறித்தீர் சாபத்தினை
சாத்தானின் முதுகெலும்பை தகர்த்தீர் உம் இரத்தத்தினால் - 2
விடுதலையாக்கின உந்தன் தயவினை
போற்றிடுவேன் முழு இதயத்துடன்

4. வருவீரே மகிமையுடன் ஆயிரம் தூதருடன்
காண்பேனே கண்குளிர நேசரை அணைத்திடுவேன் - 2
பொன் முக சாயலைப் பாடிப் போற்றியே
களித்திடுவேன் கோடி ஆண்டுகளாய் - 2

## பாடல் - 1174

**வழுவாது காத்திட்ட வல்லவரே**
வலக்கரம் பிடித்திட்ட நல்லவரே - 2
நேசத்தை பொழிந்திடும் நேசரே
நடனத்துடன் ஆடிப் பாடித் துதிப்பேன்

ஆ... ஆ... ஆனந்த நடத்துடன்
ஆடிப்பாடி என்றும் துதித்திடுவேன் - 2

2. கால்கள் சறுக்கிட வேளையிலே
உம் கிருபையல்லோ தாங்கியது - 2
யோர்தானின் வெள்ள நேரத்திலே
உம் புயமல்லோ நடத்தியது ஆ... ஆ...

3. நிந்தை அவமான சூழ்நிலையில்
தேற்றியே காத்தீரே என் நேசரே - 2
பாதாள இச்சைகள் மோதிடினும்
தோல்விக்கு இடமே கொடுக்கவில்லை

4. உலகத்தின் ஓட்டம் முடித்த பின்பு
ஒளிமய சேசத்தை சுதந்தரிப்பேன் - 2
ஆயிரம் ஆயிரம் தூதருடன்
ஓய்வின்றி ஆடிப்பாடித் துதிப்பேன் - 2

## பாடல் - 1175

**இந்தியா வேண்டும் இந்தியா வேண்டும்**
இரத்தத்தால் கழுவப்பட்ட இந்தியா வேண்டும்
இமய முதல் குமரி வரை இந்தியா வேண்டும்
இயேசுவை கண்டு கொண்ட இந்தியா வேண்டும்

இந்தியா இந்தியா எங்கள் இந்தியா
இயேசுவுக்கே சொந்தம் எங்கள் இந்தியா

1. ஜாதிகள் வேண்டும் கிராமங்கள் வேண்டும்
ஆவியால் நிரப்பப்பட்ட சேனைகள் வேண்டும்
கர்த்தரே தெய்வமென்று போற்றி பாடிடும்
கருத்துள்ள கன்னியர்கள் வாலிபர் வேண்டும்

2. ஏழைகள் வேண்டும் செல்வந்தர் வேண்டும்
ஊழியர்கள் ஆயிரமாயிரமாய் எழும்பிட வேண்டும்
பரலோகத்தின் அக்கினி பற்றி பிடித்திட
எண்ணெயாய் மாறிடும் தியாகிகள் வேண்டும்

3. ஒரே இரத்தத்தால ஒரே ஆவியால்
ஒரே மனதாய் நின்றிடும் உள்ளங்கள் வேண்டும்
உன்னதராம் இயேசுவின் கொடியை ஏந்தியே
முன்செல்லும் யோசுவாக்கள் இப்போதே வேண்டும்

## பாடல் - 1176

**சுவிசேஷ கொடி பறக்கும்**
பட்டி தொட்டிகளெல்லாம்
தேவசேனை எழுந்திடும்
தேசம் கிராமமெல்லாம்

வாரும் வாலிபரே வாரும் முதியோரே
வாரும் கன்னியரே
இயேசுவண்டை வாருமே

2. சுவிசேஷ ஒளி வீசிடும்
இருளுள்ள இடங்களெல்லாம்
அந்தகாரம் விலகிடும்
மகிமை நிரம்பிடும்

3. சுவிசேஷ வல்லமையாலே
சாத்தானை ஜெயித்திடுவோம்
தலை நசுக்கி கூர் ஒடித்து
ஜெயத்தை பெற்றிடுவோம்

4. சுவிசேஷ நல்ல செய்தியால்
தேசத்தை சுதந்தரிப்போம்
நன்மை செய்து விதை விதைத்து
அறுவடை எதிர்நோக்குவோம்

## பாடல் - 1177

**வானமே வையமே பூமியிலே நிறைவே**
செவி கொடு – நீ இயேசுவுக்கே

1. மேய்ப்பருமானவரே மீட்பரும் ஆனவரே
கூப்பிடும் வேளையில் ஒத்தாசை அவரே
போராட்டம் மத்தியில் தேற்றுதல்5

2. வல்லமையானவரே நல்லாயனும் அவரே
கல்லான உள்ளத்தை கனிவாக மாற்றியே
கனிதரச் செய்திடும் காருண்யரே

3. உன்னதமானவரே தன்னையே தந்தவரே
உத்தமத்தில் என்றும் சுத்தனாய் நிலைக்க
உன்னத பெலனை தந்தவரே

## பாடல் - 1178

**விதைக்க ஒரு காலம் உண்டானால்**
அறுக்க ஒரு காலம் உண்டல்லோ
கண்ணீரோடு விதைப்பாயானால்
கெம்பீரமாய் அறுத்திடுவாயே

விதைப்பும் அறுப்பும் ஒழிவதில்லையே
அல்லேலூயா அல்லேலூயா

1. துன்மார்க்கத்தை விதைப்பாயானால்
தீவினையை அறுத்திடுவாயே
நன்மைகளை விதைப்பாயானால்
ஆசீர்வாதம் வந்து சேருமே

2. கண்ணீருடன் இரத்த வேர்வை
இயேசு நாதர் விதைத்திட்டாரே
அறுவடைக்கு விளைந்து நிற்கும்
வயல் நிலங்கள் மிகுதி அல்லவோ

3. ஈசாக்கு விதைத்த போது
நூறு பங்கு விளைந்திட்டதே
இந்த நேரம் அறுவடை நேரம்
களஞ்சியத்தில் சேர்த்திடுவாயே

## பாடல் - 1179

**விண் தூதர் ஆர்ப்பரிக்கவே**
பண்பாடி மகிழ்ந்திடவே
வெண்ணாடை தரித்து இயேசுவோடு
ஆடிப் பாடி அகமகிழ்வேன்

துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
மகிழுவேன் ராஜாதி ராஜாவுடனே

2. பளிங்கு நதியோரத்தில்
ஒளிவீசும் மகிமையோடு
தூதர் தொனியுடன் நானும் சேர்ந்து
ஆடிப்பாடி அகமகிழ்வேன்

3. ஜெயம் கொண்ட பரிசுத்தனாய்
ஜெயம் கொண்ட கிறிஸ்துவோடு
பிதாவின் சிங்காசனத்திலே
ஆடிப்பாடி அகமகிழ்வேன்

4. ஜீவ விருட்சம் அங்க உண்டு
ஜீவ நதியில் தாகம் தீர்ப்பேன்
ஜீவ கிரீடத்தை நான் பெறும் நாளில்
ஆடிப்பாடி அகமகிழ்வேன்

### பாடல் - 1180

**மகிமையின் மேகங்கள் சூழுதே**
ராஜா வருகை சமீபமே அல்லேலூயா

1. வாசலே தலைகளை உயர்த்துங்கள்
வானவர் இயேசுவை வாழ்த்துங்கள்
விண்ணக தூதரும் மண்ணக தாசரும்
இணைந்திடுவார் விரைவில்

2. வருகையின் அடையாளம் ஏராளமே
தீர்க்கரின் உரைகளும் நிறைவேறுதே
மன்னாதி மன்னவர் தூயாதி தூயவர்
கிறிஸ்து வருகின்றார் – ஆஹா

3. தூதரின் எக்காளம் முழங்கிடவே
நித்திரை அடைந்தோர் எழுந்திடவே
மண்ணான சரீரம் விண்ணானதாக
உன்னதர் வருகின்றாரே – ஆஹா

### பாடல் - 1181

**கல்வாரி நேசரே மீட்பரே இயேசுவே**
கருணை நாயகா உமதன்பை மறவேன்
என் பாவம் சுமந்தீர்
நொறுங்குண்டு மரித்தீர்
என் உள்ளம் உடையுதே

ஆ இயேசுவின் அன்பு ஆ நேசரை நம்பு
ஆ இயேசுவின் அன்பு கல் மனம் உருகுதே

2. அக்கிரமமம் யாவையும் தயவாய் மன்னித்தீர்
நோய்களை நீக்கினீர் சாபங்கள் சுமந்தீர்
ஜீவாதிபதியே ஜீவன் தந்த ரட்சகா
யாருண்டு உம்மைப் போல

3. அழகான உம் முகம் சிதையுண்டு போனதோ
சௌந்தர்யம் இழந்தீர் அந்த கேடடைந்தீர்
பரலோக பாசத்தை பாங்காக கொடுத்தீர்
பாதத்தை பணிகின்றேன்

4. கல் மனம் நொறுங்கி நல் மனம் என்னிலே
தூய்மையாய் துதிக்க நீதிமானாய் மாற்றினீர்
மன்னிப்பின் வஸ்திரம் துதியின் உடைகள்
வேண்டும் நீர் எனக்கு

## பாடல் - 1182

**கண்ணில் அருவியாய் கண்ணீரோடு**
கல்வாரி நொக்குகின்றேன்
உள்ளம் உருகி செந்நீர்ப் பாய
கொல்கதா காண்கின்றேன்

1. சாபங்கள் யாவையும் சுமந்து தீர்க்க
முள் முடி சூட்டி உம்மை ஈந்தீர்
எந்தனின் பாவங்கள் ஆணிகளாய்
உந்தனின் பொற்கரம் துளைத்திட்டதோ

2. ஈட்டியால் விலாவினை குத்திடவும்
தண்ணீரும் இரத்தமும் பாய்ந்ததுவே
தேவ சாயலாக என்னை மாற்ற
தேவா உம் ஜீவனை ஊற்றினீரே

3. கர்த்தர் செய்த உபகாரத்திற்கு
என்ன பதில் நான் செய்திடுவேன்
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரை என்றும் தொழுதிடுவேன்

## பாடல் - 1183

**கல்வாரி குருசடியில் கண்ணீருடன் அமர்ந்து**
ஊற்றுவேன் உள்ளத்தை உத்தமர்க்காய்
ஆற்றுவேன் அன்பரின் காயங்களை

இரத்த ஊற்றே இயேசு ராஜா
இரத்த கோட்டையல்லோ
இரத்தத்தினால் என்னை கழுவிடுமே

2. அழகற்று மேன்மையற்று அநாதையாய் தொய்கினீரே
உளையான சேற்றினின்று தூக்கிடவே
ஊற்றுவேன் கண்ணீரை பாதத்திலே

3. சாபங்களை முறித்து பாவங்களை கழுவி
ரோகங்கள் நீக்கினீரே உம் தயவால்
பாடுவேன் நன்றியுடன் கானங்களை

4. உழப்பட்ட நிலம் போல முதுகெல்லாம் வாரடிகள்
மறப்பேனா உம் அன்பை என்றென்றுமாய்
உயர்த்துவேன் போற்றுவேன் உந்தன் நாமம்

## பாடல் - 1184

**செந்நிற கயிறு போல ஊற்றும் செந்நிற குருதி**
கொல்கதா மேட்டில் வழியுதே
எந்தனின் பாவ சாபங்கள் போக்கும்
தூயரின் ரத்தம் வழியுதே

ஊற்றும் அன்பு சிந்தும் அன்பு
நிரப்பி வழியும் அன்பு

1. சிலுவை சுமந்த தோள்களிலே
சுமந்தீர் என்னையுமே
இனியும் சுமப்பீர் இறுதிவரை
நீரே என் தஞ்சம்

2. அழகுமில்லை சௌந்தர்யமுமில்லை
அந்த கேடடைந்தீர்
தேவ சாயலை தந்திடவே
நீரே என் ராஜா

3. நொறுக்கப்பட்டீர் பிழியப்பட்டீர்
நேசத்தின் உச்சிதமே
ஏற்றீர் காயங்கள் எந்தனுக்காய்
ஆயிரம் ஸ்தோத்திரம்

## பாடல் - 1185

**அன்பு கூறுவேன் இயேசுவே அன்பு கூறுவேன்**
முழு மனதோடும் முழு உள்ளத்தோடும்
முழு பெலத்தோடும் உம்மில் அன்பு கூறுவேன்



அட்டவணை

1. விண்ணகம் துறந்தீர் மண்ணகம் நடந்தீர்
என்னகம் வந்தீர் ஐயா அன்பு கூறுவேன்

2. பாடுகள் அடைந்தீர் காயங்கள் ஏற்றீர்
நோய்களை சுமந்தீர் அன்பு கூறுவேன்

3. வெண்ணங்கி தரித்து பண்ணங்கு இசைத்து
விண்ணக வீட்டில் என்றும் அன்பு கூறுவேன்

## பாடல் - 1186

**பொன்முகத்தின் இனிய நேசரே**
உம்மை கண்குளிர கண்டு மகிழ்வேன் - ஆஹா
அன்பின் ஆழம் நீளமும் அகலம் இல்லையே
உந்தன் நேசம் குறைவதில்லையே

அல்லேலூயா அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. இஸ்ரவேலின் ஜெய கெம்பீரமே
சேனை அதிபராக முன் நடந்தீரே
வெற்றி ஜெய வேந்தனே ஜீவ தேவனே
எங்களுக்கு தோல்வி இல்லையே -அல்லேலூயா

2. மரணம் சாவு கூர் ஒடித்தீரே
எல்லா பயத்தினின்றும் பாது காத்தீரே
கன்மலையும் கோட்டையும் துணையுமானீரே
வெற்றி மேல் வெற்றி தந்தீரே -அல்லேலூயா

3. பொற்தளத்தின் முத்து வீதிகள்
ஐயா நற்கனிகள் ஜீவ ஆறுகள்
ஜீவ கிரீடம் சூடியே ஜீவ தேவனை
ஆடிப்பாடி ஸ்தோத்தரிப்பேனே -அல்லேலூயா

## பாடல் - 1187

**அன்பு தேவ அன்பு உன்னைத் தேடும் அன்பு**
உருக்கும் நதி போல உள்ளம் நிறையுமே
கல்மனம் உருகுமே கல்வாரிர அன்பிலே

1. பரலோகம் துறந்தாரே பூலோகம் வந்தாரே
உன் நண்பனாய் உன் தோழனாய்
உம் மேய்ப்பனாய் உன் மீட்பராய்
ஜீவன் தந்த அன்பை மறப்பாயோ
உனக்கு ஜீவன் தந்த அன்பை மறப்பாயோ

2. சிலுவை சுமந்தாரே வாரடி ஏற்றாரே
எல்லா பாவங்கள் எல்லா சாபங்கள்
முற்றும் நீக்கினார் சுத்தமாக்கினார்
ஜீவ புஸ்தகத்தில் பெயரை எழுதவே
என்றும் ஜீவ புஸ்தகத்தில் பெயரை ஏழுதவே

3. அன்பின் எண்ணெயால் அபிஷேகம் செய்வாரே
உன்னை அழைக்கிறார் சேவை செய்யவே
மிக அன்புடன் பின் செல்வாயே
அன்பு அன்பை கேட்கிறதே - அந்த
அன்பு அன்பை கேட்கின்றதே

## பாடல் - 1188

**அசைக்கப்படுவதில்லை நான்**
அசைக்கப்படுவதில்லை
கர்த்தரை என் முன்பாக வைத்துவிட்டேன்
நான் அசைக்கப்படுவதில்லை.

1. ஜீவனுள்ள தேவனை பற்றிக்கொண்டேன்
கறை திறை ஒன்றும் நெருங்காது
இரட்சகரை என்னோடு அணைத்துக் கொண்டேன்
சாத்தானின் சேனை என்னை அணுகாது

2. தேவ தூதர் சேனைகள் என்னோடு
செல்லுகின்ற வல்லமையால் நிரப்பப்பட்டேன்
பாதங்கள் கல்லின் மேலே இடறாமல்
கரங்களில் ஏந்தி என்னை நடத்திடுவார்

3. இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டேன்
ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டேன்
வாக்குத்தத்த வசனங்கள் பெற்றுக்கொண்டேன்
நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்

## பாடல் - 1189

**ஊற்றும் ஊற்றும் உன்னத ஆவியை ஊற்றும்**
நேச அக்கினி பற்றிப் பிடிக்கவே ஊற்றும்
உள்ளத்தின் ஆழம் ஏங்கிடுதே ஆவிக்காய்
நிரம்பி வழிய வழிய ஊற்றிடும் - 2

அல்லேலூயா நிரம்புதே என் பாத்திரம்
அல்லேலூயா பொங்குதே என் உள்ளம்

2. ஊற்றும் ஊற்றும் வல்லமையை ஊற்றும்
வெற்றி சிறக்கும் ஊழியம் செய்யவே ஊற்றும்
உலகத்தில் ஒளியை ஏற்றிடவே ஊற்றும்
பொங்கி வழிய வழிய ஊற்றிடும் - அல்லே

3. ஊற்றும் ஊற்றும் அபிஷேகத்தை ஊற்றும்
ஆரோன் சிரசில் ஊற்றியது போல் ஊற்றும் 2
எலியாவின் வரமும் வல்லமையைப் பெறவே
எங்கள் மீதே இப்போ ஊற்றிடும்

4. ஊற்றும் ஊற்றும் பின்மாரியை ஊற்றும்
தாகமுள்ளோர் எல்லோர் மேலும் ஊற்றும்
அலை அலையாய் ஆவியின் மழை பொழிய
இந்த வேளை வந்தே ஊற்றிடும்

**பாடல் - 1190**

**ஆவியின் அனல் கொண்டு ஆனந்திக்க**
ஆத்தும நேசரே வந்திடுமே
நேசத்தை என்மீது பொழிந்திடவே
பின்மாரி மழையினை ஊற்றிடுமே

நிரப்பட்டும் நிரப்பட்டும் தூய ஆவியே
பரவட்டும் பரவட்டும் தேவ நதியே

2. இயேசுவின் நேசத்தால் நிரப்பப்பட
கல்வாரி தரிசனம் தந்திடுமே
மண்பாண்ட பொக்கிஷம் நிறைந்திடவே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
ஊற்றட்டும் ஊற்றட்டும் பின் மாரியே
தேசமெல்லாம் கரை புரண்டோடட்டுமே

3. தாவீதைப் போல ஆடிப்பாடி துள்ளிடவே
தெய்வீக அக்கினி ஊற்றிடுமே
தீப்பிடித்து தேசமெங்கும் பரவிடவே
பரலோக வல்லமை ஊற்றிடுமே
பரவட்டும் பரவட்டும் வாய்க்காலெல்லாம்
கர்த்தரே தேவனென்று அறியட்டுமே

## பாடல் - 1191

**பெருமழை பெருமழை அக்கினி பெருமழை**
ஆவிக்குள்ளாக்கும் மறுரூபப்படுத்தும்
அக்கினி பெருமழை
வேண்டுமே ஊற்றுமே அக்கினி பெருமழை

அக்கினி பெருமழை (3)
வேண்டும் இப்போதே

1. தூவான துளிகள் அல்ல
அடைமழை பொழிதல் வேண்டும்
ஆத்துமாக்கள் கோடி கோடி
அன்பரண்டை வரவேண்டும்

2. சிறு சிறு ஓடை அல்ல
நதி வெள்ளம் ஓட வேண்டும்
தாகம் தீர்க்கும் ஜீவ நதிகள்
தேசம் எங்கும் தரவேண்டும்

3. எலியாவின் நாட்களிலே
அக்கினி இறங்கியதே
இந்த தேசம் இயேசுவைக் காண
வேண்டும் இப்போ அக்கினியே

## பாடல் - 1192

**அக்கினியின் காற்றை வீச செய்யுமே**
பின்மாரியின் மழையை பொழியச் செய்யுமே

1. மூப்பர்கள் சொப்பனத்தை காணச் செய்யுமே
வாலிபர்கள் தரிசனத்தை நோக்கச் செய்யுமே
எங்கள் குமாரரை எழும்பச் செய்யுமே - 2
தீர்க்க தரிசனங்களை சொல்லச் செய்யுமே - 2

2. ஆவியின் வல்லமையை ஊற்றச் செய்யுமே
ஆவியின் கனிகளால் நிறையச் செய்யுமே
காட்டுப் புறாக்கள் சப்தம் கேட்கச் செய்யுமே-2
தேசம் எங்கும் எழுப்புதல் காணச் செய்யுமே-2

3. இந்தியர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும்
கர்த்தாதி கர்த்தரைப் போற்றிப் பாடவும்
கல்வாரி இரத்தத்தால் மீட்கப் படவும்-2
இந்தவேளை இப்போதே சந்தித்தருளும்-2



அட்டவணை

## பாடல் - 1193

**அக்கினியின் காற்றை வீசச் செய்யுமே**
அபிஷேகத்தின் மழையை பொழியச் செய்யுமே

ஊற்றுமே ஆவியை
அக்கினியை ஊற்றச் செய்யுமே

1. வானங்களை கிழித்து வல்ல ஆவியால்
தாகமுள்ள உள்ளங்களை நிரப்பிடுமே
தெய்வமே வாருமே
அக்கினியை ஊற்றச் செய்யுமே

2. பாத்திரங்கள் எல்லாம் அபிஷேகத்தால்
பற்றிப் பிடித்தெரிய அனல் மூட்டுமே
தெய்வமே இறங்கும்
அக்கினியை ஊற்றச் செய்யுமே

3. மாம்சமான யாவர் மேலும் இறங்கிடுமே
வரங்களால் வல்லமையால் நிரப்பிடுமே
இன்றைக்கே இப்போதே
அக்கினியை ஊற்றச் செய்யுமே

## பாடல் - 1194

**அக்கினி ஊற்றும் தேவா அக்கினியாக்கும்**
அக்கினி நாதரே ஆவியின் அபிஷேக தேவனே

1. பாவம் நெருங்கா அக்கினி
சோதனை மேற்கொள்ளா அக்கினி
பற்றிப் பிடிக்கும் பரலோக அக்கினி (2)

இதுவே என் வாஞ்சையே
என்றும் இதுவே என் தாகமே

2. எலியாவின் நாட்களில் அக்கினி
பக்தி வைராக்கியத்தின் அக்கினி
கர்த்தரே தேவன் நிரூபிக்கும் அக்கினி

3. கொழுந்து விட்டெரியும் அக்கினி
ஆவியின் அபிஷேக அக்கினி
தேச முழுவதும் பரவிடும் அக்கினி (2)

## பாடல் - 1195

**ஆனந்த தைல அபிஷேகத்தால்**
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

1. கர்த்தருக்குள் மகிழ்ச்சியே எந்தனின் பெலன்
தேவனுக்குள் மகிழ்வதே எந்தனின் ஆவல்
எப்போதும் சந்தோஷம் சமாதானமே
திராட்சை ரசத்தின் நேசம் பொங்கி வழியுதே

2. ஸ்தோத்திரத்தின் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தால்
துன்பம் துக்கம் எல்லாமே ஓடிப் போகுமே
பரலோக சந்தோஷம் அனுபவிக்கவே
பரலோகத்தின் அன்பு ஊற்றப்பட்டதே

3. ஆட்டுக்குட்டி கலியாண நாளும் வந்தது
மணவாட்டி தன்னையே ஆயத்தம் செய்தாள்
களிகூர்ந்து துதிகள் போற்றிப் பாடுவோம்
நேசரவரின் மார்பில் நித்தம் மகிழுவோம்

## பாடல் - 1196

**போற்றிடுவோம் புகழ்ந்திடுவோம் தேவ தேவனை**
வாழ்த்திடுவோம் வணங்கிடுவோம் வருகையின் நாதரை

1. இரட்சிப்பை தந்தார் நம்மை மீட்டார்
சமாதானம் தந்தாரே
ஆறுதல் தந்தார் அனுதினம் காத்தார்
விலையின்றி மீட்டுக் கொண்டார்
கர்த்தரை தொழுது அவர் நாமம போற்றி
அவரில் நிலைத்து வாழ்ந்திடுவோம்

2. அடைக்கலம் தந்தார் நம்மைக் காத்தார்
கிருபைகள் தந்தாரே
பாவத்தில் வாழ்ந்த நம்மை மீட்டு
கழுவி சுத்தமாக்கினார்
நேசரை துதித்து அவர் பணி செய்து
இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்

3. விண்ணப்பம் கேட்டார் விடுதலை தந்தார்
அபிஷேகத்தால் நிறைத்தார்
விசுவாசம் என்னும் கேடகம் தந்து
அற்புதங்கள் செய்தாரே
தேவனை தொழுது அவரிடம் ஜெபித்து
தேசத்தில் ஊழியம் செய்திடுவோம்

## பாடல் - 1197

**பிதா குமாரன் பரிசுத்த ஆவியினாலே**
ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு

கோடி ஸ்தோத்திரம்
கோடி ஸ்தோத்திரம் கோடி ஸ்தோத்திரம்
ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி ஸ்தோத்திரம் – பிதா

1. தள்ளப்பட்ட கல்லாக இருந்தேன்
என்னை மூலைக்கு தலைக்கல்லாய் மாற்றினீர்

அந்த அன்பிற்கு ஈடு இல்லை
அன்பிற்கு ஈடு இல்லை
அன்பிற்கு ஈடில்லை - இயேசுவின்

2. வாலாக்காமல் தலையாக்கினீர்
என்னை கீழாக்காமல் மேலாக்கினீர்

3. சிறுமையில் இருந்து தூக்கினீர்
என்னை குப்பையில் இருந்து உயர்த்தினீர்

## பாடல் - 1198

**உள்ளம் மகிழ்ந்து துதி பாடுதே**
எந்நாளும் போற்றிடுவேன்
என் மேல் இரக்கம் கொண்டீர்
உம்மை பலியாய் தந்தீர்
உம் நாமம் உயர்த்திடுவேன்

1. சோர்ந்திட்ட நேரத்தில் கரம் நீட்டி அணைத்தீர்
சோர்ந்திடா பெலனைத் தந்தீர்

2. பாவங்கள் போக்கவே பிறந்தீரே பாரினில்
பாடுங்கள் ஏற்றுக் கொண்டீர்

3. எனக்காக மரித்த என் இயேசு ராஜா
உம் அன்பு மாறாதமே

4. வானவர் பணியும் சேனையின் கர்த்தர்
மகிமைப் பராபரனே

## பாடல் - 1199

**புதிய பாட்டுப் பாடுவோம் – 2**
குதித்து குதித்து பாட்டுப் பாடும்
குருவி கூட்டங்களே
தூய தேவனை துதித்து பாடும்
தூத கணங்களே
கை தட்டி பாடுவோம்
அல்லேலூயா சொல்லுவோம் (2)

1. அல்லும் பகலும் பாடி துதிக்கும்
அன்பர் கூட்டங்களே
அழியா ஜீவன் வாழ்வு அளித்த
வல்ல இயேசுவையே ....

2. வெள்ளையங்கி தரித்து நிற்கும்
திரள் திரள் கூட்டங்கள்
குருத்தோலைகள் பிடித்து நிற்கும்
சுத்தர் கூட்டங்கள்...

3. சுரமண்டல நாதம் கேட்கும்
ஓசை தானதுவே
மீட்கப்பட்டோர் பாடித் துதிக்கும்
புதிய பாட்டதுவே

## பாடல் - 1200

**சத்ய வேதம் வேதம் வேதம்**
நித்தியமாய் வாழவே தேவன் தந்த பாடம்
நித்தமும் தியானித்தால் தீய சிந்தை மாறும்

1. கர்த்தர் தந்தது களங்கம் அற்றது
மனிதன் வாழ வழியும் தந்து
(ஒளியுமானது 3)

2. பாக்கியமுள்ளது பரிசுத்தமானது –2
அன்பு தெய்வம் மைந்தன் இயேசு
(மொழியுமானது 3)

3. கண்ணைப் போன்றது விண் ஆட்சி தருவது
நம்மை காக்கும் கடவுள் அன்பை
(எடுத்துச் சொல்வது 3)

4. குறை இல்லாதது நிறை வாழ்வு தருவது
இறைவனின் மனிதன் உறவை என்றும்
(காத்துக் கொள்வது 3)

## பாடல் - 1201

**பாடத்தெரியாது பாடுகின்ற ராகம் புரியாது**
என்னை பாடச் சொன்ன இயேசு ராஜனை
மறந்து ஓடத் தெரியாது

1. துதிக்க துதிக்க பாட்டு வந்தது
துன்பம் பறந்திருச்சி
இயேசு உதிக்க உதிக்க
உள்ளத்தில் கிடந்த பாவம் பறந்திருச்சி
பாவம் பறந்திருச்சி இயேசுவின்
பாசம் கிடைச்சிருச்சி - என்னை

2. கள்ளம், கபடு, திருட்டு, பொய்வழி
கண்டு ஒதுங்கி சென்றேன்
என் உள்ளம் தேடி அலைந்த போதிலும்
உம்மை அறிந்து கொண்டேன்
உம்மை அறிந்து கொண்டேன்
அதில் பல நன்மை புரிந்து கொண்டேன்

3. ஸ்தோத்திரம் (3) என்று சொல்லி
துதிக்கச் சொன்னார்
அதற்கு பாத்திரவனாய் மாற்றி
என்னை பாடி மகிழச் சொன்னார்
பாடி மகிழச் சொன்னார்
அனுதினம் போற்றி புகழச் சொன்னார்

## பாடல் - 1202

**ஆனந்த பாடல்கள் பாடிடுவேன்**
ஆர்ப்பரித்து என்றும் மகிழ்ந்திடுவேன்
அல்லேலூயா (3) என்று பாடிடுவேன்

1. ஆண்டவர் செய்த அதிசயங்கள்
அற்புதம் அற்புதம் அற்புதமே
குருடர் கண்களைத் திறந்தாரே
செவிடர் கேட்கச் செய்தாரே
என்னையும் இரட்சித்தாரே
என் வாழ்வில் அற்புதமே



அட்டவணை

2. பாவச் சேற்றில் வாழ்ந்த என்னை
துாக்கி எடுத்து கழுவினாரே
கரத்தை பிடித்து கொண்டாரே
கரத்தால் தாங்குவேன் என்றாரே
புது சிருஷ்டியாய் மாற்றினார்
என் வாழ்வில் அற்புதமே

3. வானாதி வானங்கள் கொள்ளாத
வல்லவர் வாழ்வினில் வந்தாரே
வாசற்படியில் தட்டினாரே
இதயத்தில் வாசம் செய்திடவே
என்னுடன் ஜீவிக்கின்றார்
என் வாழ்வில் ஜீவிக்கின்றார்
என் வாழ்வில் அற்புதமே

## பாடல் - 1203

**பல்லவி**

**போற்றிப் புகழ்ந்திடுவோம், அல்லேலூயா – துதி**
சாற்றி மகிழ்ந்திடுவோம், அல்லேலூயா

***அனுபல்லவி***

கடந்திட்ட காலமெல்லாம் கண்ணின் மணியைப் போலக்
காத்தாரே தேவன் நம்மை அல்லேலூயா தினம் – போற்றி

***சரணங்கள்***

1. பாவத்தைப் போக்கினாரே அல்லேலூயா – பாவ
சாபத்தை மாற்றினாரே அல்லேலூயா!
பாவத்தினாலுண்டான ரோகத்தை மாற்றியவர்
சோகத்தைத் தீர்த்ததாலே அல்லேலூயா – தினம் – போற்றி

2. தாய் உன்னை மறந்தாலும், அல்லேலூயா – தம்
சேயைப்போல் காத்திடுவார், அல்லேலூயா
நேயன் நம் இயேசுகிறிஸ்து தாயினு மேலவராய்
தூயவரம் அளித்தார், அல்லேலூயா – தினம் – போற்றி

3. சோதனைக் காலத்திலே அல்லேலூயா – நாம்
வேதனைப் பட்டிட்டாலும் அல்லேலூயா!
நாதன் நம் இயேசுகிறிஸ்து வேதம் நமக்கிருக்க
சேதம் ஒன்றும் வராது அல்லேலூயா – தினம் – போற்றி

4. பயங்கரப் புயல் உன்மேல், அல்லேலூயா - வெகு
வேகமாக வீசினாலும் அல்லேலூயா
கப்பலிலுள்ள கிறிஸ்து கரங்கொண்டு காத்திடுவார்
தட்டியெழுப்பிடுவாய், அல்லேலூயா - தினம் - போற்றி

5. பூமி முழுவதிலும், அல்லேலூயா - உன்னை
சாட்சியாய் வைத்திடுவார் அல்லேலூயா
மறுதலித்தாலும் நீதான் மனங்கசந்தழுதுமே
அருகில் வந்தாலணைப்பார், அல்லேலூயா - தினம் - போற்றி

## பாடல் - 1204

**அல்லேலூயா அல்லேலூயா**
என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி

1. நான் உயிரோடு இருக்குமட்டும்
என் தேவனைத் துதிப்பேனே
நான் உள்ளளவும் என் இயேசுவையே
கீர்த்தனம் பண்ணிடுவேன்

2. நான் மனிதனை என்றும் நம்பிடேன்
அவன் யோசனை அழிந்திடுமே
யாக்கோபின் தேவன் என் துணையே
என்றென்றும் பாக்கியவான்

3. என் ஆத்தும தாகம் பெருக
என் கட்டுகள் அறுந்திடுமே
கர்த்தரின் கரம் என்னைத் காத்திடுமே
என்றென்றும் வாழ்ந்திடுவேன்

4. கர்த்தர் சதா காலமும்
சீயோனில் அரசாளுவார்
தலைமுறை தலைமுறையாய் அவரே
இராஜாங்கம் பண்ணிடுவார்

## பாடல் - 1205

**கரங்கள் தட்டி கர்த்தரைப்**
பாடுங்கள் அல்லேலூயா - 2
ஆண்டவரைப் பாடுங்கள்
ஆனந்தமாய் பாடுங்கள் - 2

1. வானம் பூமி உண்டாக்கின
தேவனைப் பாடுங்கள்
நம்மை வானுலகம் சேர்ப்பவரை
வாழ்த்திப் பாடுங்கள்

2. செங்கடலை பிரிந்தவரை
சேர்ந்து பாடுங்கள்
தினம் செம்மையான இதயத்தோடு
கர்த்தரைப் பாடுங்கள்

3. எரிகோ மதிலை உடைத்தவரை
எழுந்து பாடுங்கள்
தினம் எண்ணில்லாத நன்மை செய்த
கர்த்தரைப் பாடுங்கள்

4. பாவம் போக்க மரித்தவரை
புகழ்ந்து பாடுங்கள்
பரலோக வாசல் திறந்தவரை
போற்றிப் பாடுங்கள்

5. மரித்தெழுந்த மகிபனையே
மகிழ்ந்து பாடுங்கள்
நமக்காக பரிந்து பேசும் பரனை
பணிந்து பாடுங்கள்

6. தாயைப் போல காப்பவரை
துதித்துப் பாடுங்கள்
நம் தாழ்வில் நம்மை நினைத்தவரை
தினமும் பாடுங்கள்

7. காலை மதியம் மாலை எல்லாம்
கர்த்தரைப் பாடுங்கள்
நடுராவினிலே விழித்து எழுந்து
ஜெபித்து பாடுங்கள்

## பாடல் - 1206

**ஜாதிகளே எல்லோரும் கர்த்தரை**
ஏகமாய் துதித்தே போற்றிப்பாடுங்கள்

தேவன் அளித்த நன்மை பெரியதே
கர்த்தரின் உண்மை என்றும் மாறிடாதே

1. இன்றித் தினம் கூடி உம்மைப் போற்றிப் பாட
ஈந்தளித்தீர் உந்தன் கிருபை
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
என்றும் அவர் துதி பாடி மகிழ்வோம்

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் இயேசு தந்தார்
சேதமின்றி என்னைக் காத்தாரே
ஜீவியப் பாதையில் தேவை தந்து
ஜெயக்கீதம் பாட ஜெயமளிப்பார்

3. பாவ சாப ரோகம் முற்றும் என்னில் நீக்கி
சாவு பயம் யாவும் போக்கினார்
சோதனை வேதனை சூழ்கையில்
சோர்ந்திடாமல் தாங்கி பெலனளிப்பார்

4. எந்தன் பாவம் யாவும் மன்னித்து மறந்தார்
சொந்த பிள்ளைகளாக மாற்றினார்
நாடியே வந்தென்னை ஆதரித்து
வாக்களித்தார் நித்திய ஜீவன் ஈந்திட

5. வானம் பூமியாவும் மாறிப்போகும் ஓர் நாள்
வானவரின் வாக்கு மாறாதே
நீதியின் சூரியன் தோன்றிடும் நாள்
சேர்த்திடுவார் ஆவலாய் காத்திருப்போரை

## பாடல் - 1207

**துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதும்**
எங்கள் சந்தோஷம்
ஜெபிப்பதும் வேதம் வாசிப்பதும்
எங்கள் சந்தோஷமே

1. எங்கள் உள்ளமதில் இயேசு
வந்ததினால் எங்கள் சந்தோஷமே
இந்த லோகம் தராத சந்தோஷமே
எங்கள் சந்தோஷமே

2. காலை எழுவதும் பாடி மகிழ்வதும்
எங்கள் சந்தோஷமே
புது கிருபையால் தினம் நிறைவதும்
எங்கள் சந்தோஷமே

3. பரிசுத்த ஆவியில் ஜெபம் பண்ணுவதும்
எங்கள் சந்தோஷமே
பரன் இயேசுவிலே களிகூருவதும்
எங்கள் சந்தோஷமே

4. இயேசு ராஜனையே பாடி போற்றுவதும்
எங்கள் சந்தோஷமே
அவர் சுவிசேஷத்தை பறைசாற்றுவதும்
எங்கள் சந்தோஷமே

5. விசுவாசத்தில் நல்ல போராட்டமே
எங்கள் சந்தோஷமே
பெரும் வெற்றியுடன் பரம் சென்றிடவும்
எங்கள் சந்தோஷமே

6. கடைசி எக்காள தொனி கேட்டிடவே
எங்கள் சந்தோஷமே
கண்ணிமைப் பொழுதில்
மறுரூபமாவதும் எங்கள் சந்தோஷமே

## பாடல் - 1208

**பல்லவி**

**இன்ப இயேசுவின் இணையில்லா நாமத்தைப் புகழ்ந்து**
இகமதில் பாடிட தருணமிதே
இயேசுவைப் போல் நல்ல நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்

1. நித்தியமான பர்வதமே உந்தனில் நிலைத்திருப்பேன்
நீக்கிடாதென்னை தோளின் மேல் சுமந்தே நித்தம் நடத்துகிறீர்
என்னையும் உம் ஜனமாய் நினைத்தே – ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய் - இன்ப

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே ஆழ்ந்து நான் மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினைக் காட்டியே
பட்சமாய் பிரிந்தெடுத்தீர்
பாரில் பரிசுத்தராகுதற்காய் – மிக
பரலோக நன்மைகளால் நிறைந்தீர் - இன்ப

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே
வாஞ்சித்து கதறிடுதே
வானிலும் இந்தப் பூமிலும் நீர் – என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைத்தே - இன்ப

4. மானானது நீரோடைகளை
வாஞ்சித்து கதறுமாப் போல்
என் ஆத்துமா உன் பொன்முகம் காணவே
வாஞ்சித்துக் கதறிடுதே
வானிலும் இந்த பூவிலும்
நீர் என் வாஞ்சைகள்
தீர்ப்பவராய் நினைந்தே - இன்ப

5. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்திரிப்போம் அன்பரை உளம் கனிந்தே
அளவில்லாத ஜீவனை அளித்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே
அல்லேலூயா துதி கன மகிமை - உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம் - இன்ப

## பாடல் - 1209

**தேவனை துதியுங்கள் எப்பொழுதும்**
தேவனை துதியுங்கள் ஆ... ஆ...

1. அவர் வல்லமை விளங்கும்
ஆகாய விரிவைப் பார்த்துத் துதித்திடுங்கள் - எப்பொழுதும்

2. அவர் வல்லமையுள்ள கிரியைகட்காக
அவரை துதித்திடுங்கள் - எப்பொழுதும்

3. மாட்சிமையான மகத்துவத்திற்காக
அவரை துதித்திடுங்கள் - எப்பொழுதும்

4. எக்காள தொனியுடன் அவரைத் துதியுங்கள்
வீணை சுரத்துடனே - எப்பொழுதும்

5. தம்புரு நடனத்தோடும் துதியுங்கள்
யாழும் தீங்குழலோடும் - எப்பொழுதும்

6. ஓசையுள்ள கைத்தாளங்களோடும் துதியுங்கள்
பேரோசை கைத்தாளத்தோடும் - எப்பொழுதும்

7. சுவாசமுள்ள யாவும் கர்த்தரை துதியுங்கள்
அல்லேலூயா ஆமென் - எப்பொழுதும்

## பாடல் - 1210

**பரனேசுவை நாம் போற்றி துதித்திடவே**
பதினாயிரம் நாவுகள் போதா
கர்த்தர் நமக்குச் செய்த உபகாரங்களை
நாம் கணக்கிட்டால்
அவை எண்ணிலடங்கா
கோடா கோடி துதிபாடி
கர்த்தரை நாம் ஆராதிப்போம்

1. தேவ சபையில் இன்னிசை கீதங்கள்
துதிப் பாடல்கள் முழங்கிட
அளவற்ற தேவ அன்பை நினைத்து
நாம் அகமகிழ்ந்திடுவோம்
ஆனந்திப்போம்

2. ஏகமனதாய் ஏகசிந்தையாய்
இயேசுவின் பாதம் பணிகிறோம்
தேவப் பிரசன்னம் பனி போல் இறங்க
தேவ ஆசீர்வாதங்கள் பெருகுதே

3. ஆவியோடும் உண்மையுடனும்
அன்பின் தேவனை தொழுகிறோம்
பரிசுத்தம் என்னும் அலங்காரத்துடன்
பயபக்தியோடும் நாம் வணங்குவோம்

4. கர்த்தர் வார்த்தை உன் வாயில் அருளி
கரத்தில் நிழலால் மறைக்கின்றார்
என் ஜனமென்று
உன்னை அழைக்கின்றார்
எழும்பிடு சீயோனே பெலன் பெற்றாய்

5. காத்து தவிக்கும் கற்புள்ள கன்னிகை
கறை திறையற்ற சபையோரை
பிரதான மேய்ப்பன்
பேர் சொல்லி அழைப்பார்
பரலோகம் பறந்தே சேர்ந்திடுவோம்

## பாடல் - 1211

**கர்த்தரை நான் எக்காலமும்**
ஸ்தோத்தரிப்பேன்
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்

1. கர்த்தருக்குள் எந்தன் ஆத்துமாவும்
களித்து மேன்மை பாராட்டிடுதே
ஒருமித்தே நாம் உயர்த்திடுவோமே
கருத்தாய் அவர் நாமமே

2. தூய பரன் முகம் நோக்கிடுவார்
சூரிய சோபையாய் மாறிடுவார்
ருசிக்க இன்பமே இயேசுவின் அன்பே
சுகிக்க வல்லவரே

3. ஜீவனை ஈந்தார் தம் சாவினாலே
வேதனை நீக்கினார் நோவினாலே
அற்புதமாய் எந்தன் ஜீவியமதையே
தற்பரன் மாற்றுகிறார்

4. தேற்றி அப்போஸ்தல தூதுகளால்
மாற்றிடுவார் அவர் ரூபமதாய்
ஊற்றுவார் புது ஜீவன் எந்நாளும்
ஏற்றுவார் ஜெயக்கொடியே

5. அக்கினி ஊடே நடந்திடினும்
விக்கினமின்றி நான் துலங்க
ஆக்குவார் பொன்னிலும் என் விசுவாசம்
மிக்கதோர் மகிமையாய்

6. சீயோனே உன் பெலன் தரித்திடுவாய்
வீற்றிடுவாய் எழுந்தெருசலமே
உன் துயர் நீக்கிடும் இன்ப மணாளன்
வந்திடும் வேளையிலே

## பாடல் - 1212

**கர்த்தர் நாமம் என்றும் ஸ்தோத்தரிப்போம்**
கர்த்தர் நல்லவர் அதை ருசிப்போம்

கர்த்தர் நமக்காய் யாவையுமே
கனிவோடு செய்து முடித்தார் துதிப்போம்

1. எண்ணிலடங்கா நன்மைகள் செய்தார்
கண்மணி போல் நன்மைகள் காத்தாரே
நாவின் கனியே ஸ்தோத்திர பலி
நன்றி நிறைந்தே ஏறெடுப்போம்

2. ஆச்சர்யமான ஆலோசனைகள்
அதிசயமான கிரியைகள்
மகத்துவமான காரியங்கள்
மகிமையின் தேவன் நடத்திடுவார்

3. வெள்ளம் போல் சத்துரு வந்திடும் போது
வல்லவர் வாக்கை நம்பிடுவோம்
ஆவியானவர் கொடி ஏற்றுவார்
ஆர்ப்பரிப்போமே ஜெயம் நமக்கே

4. அவராலே ஓர் சேனைக்குள் பாய்வோம்
அவரால் மதிலையும் தாண்டிடுவோம்
வெண்கல வில்லையும் வளைத்திடுவோம்
வல்ல தேவாவியால் நிரம்பிடுவோம்

5. இயேசு நமது பட்சத்தில் இருப்பார்
என்கெதிரே நிற்பவன் யார்
நமக்குள் வசிப்பவர் பெரியவரே
நசுக்கிடுவார் சாத்தான் தலையை

6. கர்த்தர் வருவார் காலம் செல்லாதே
கண்டுணர்வோம் அடையாளங்களை
பாழாய்ப் போகும் பூவுலகம்
பறந்து செல்வோம் மேலுலகம்

## பாடல் - 1213

**கீத சத்தத்தாலே கெம்பீரமாகவே**
கீர்த்தனம் செய்வேன் கர்த்தரை என்றுமே
ஆனந்தமாகவே ஆர்ப்பரிப்புடனே
நித்தியானந்தரை நான் நிதமும் பாடுவேன்

1. வீணையிலும் தம்புருவிலும்
கிண்ணரத்தாலும் என் நாவினாலுமே
சுரமண்டல தொனியும் முழங்க
சீர் இயேசு நாதனை சிறப்பாய் பாடுவேன்

2. பத்து நரம்பும் போதாதென்றெண்ணியே
மெத்தவும் மனம் துதியால் நிறைந்தே
உத்தம ஆசீர் உள்ளத்தில் துதிப்பேன்
உன்னத தேவனை உயர்த்தி துதிப்பேன்

3. நானிலந்தன்னில் நல் இயேசுவின்
எல்லா நன்மைகளையும்
ஒவ்வொன்றாய் எண்ணியே
நன்றியினாலென் இதயம் பொங்கிட
நடனமாடியே ஆவியில் மகிழ்வேன்

4. தேவ ஆவியால் இன்னிசை நாதங்கள்
ஏக சத்தமாய் இசைத்திலங்கிட
தேவ மகிமை மேகமாய் இறங்க
தேவாதி தேவனை புகழ்ந்து போற்றுவேன்

5. ஜெயங்கொண்டோனாய்
சீயோன் சிகரத்தில் ஜெய வீரனாம்
இயேசுவுடனே நான்
தேவ சுரமண்டலம் கரத்தில் ஏந்தியே
ஜெயத்தின் கீதங்கள் களிப்பாய் பாடுவேன்

## பாடல் - 1214

**பல்லவி**

**பாடியே பரனை துதி மனமே, துதி மனமே**
கொண்டாடி துதி தினமே – (2)

***சரணங்கள்***

1. சென்ற நாளெல்லாம் கருத்துடன்
காத்த நாதனை துதி மனமே
நாளுக்கு நாளாய் செய்பல
நன்மைக்காய் நாதனை துதி மனமே
ஆதரவாய் எம்மை காத்ததினாலே
தேவனை துதி மனமே – பாடியே

2. நானிலந்தனிலெம் பாவங்கள் போக்கிய
நாதனை துதி மனமே
என்றும் எம்மேல் வைத்த மாறிடா அன்பிற்காய்
நாதனை துதி மனமே
கானகமதிலே ஜீவ ஊற்றான
தேவனை துதி மனமே – பாடியே

3. கிருபையால் ஈந்த திருப்பலிக்காக
நாதனை துதி மனமே
கோரமாய் வந்த நோய்களை
தீர்த்ததால் நாதனை துதி மனமே
தாபரமாய் எம்மை தாங்கியதாலே
தேவனை துதி மனமே - பாடியே

4. கஷ்டமானாலும் நஷ்டமானாலும்
நாதனை துதி மனமே
பஞ்சம் பசியுடன் பங்கம் வந்தாலும்
நாதனைத் துதி மனமே
ஜீவனானாலும் மரணமானாலும்
தேவனைத் துதி மனமே - பாடியே

5. ஏகமாய் எம்மை அன்பினால்
இணைத்த நாதனைத் துதி மனமே
அகமதை ஆவியால் ஆலயமாக்கிய
நாதனைத் துதி மனமே
தூதரிலும் எமை மேன்மையாய்
எண்ணிய தேவனைத் துதி மனமே - பாடியே

## பாடல் - 1215

**துதி அல்லேலூயா துதி துதி என்றுமே**
நீதி கர்த்தர் எங்கள் அதிபதி என்றுமே
கதி ஜீவ நதியவர்
கருணை கடாட்சிப்பதால்
துதி அல்லேலூயா துதி துதி என்றுமே

1. அலை நிலை உலகினில்
அடியார் நம்மை தொலையாது
துங்கவன் தம் துணையுமீந்தார்
விலையுயர் உதிரங்கொண்டுலகை
மீட்டதினால்
துதி அல்லேலூயா துதி துதி என்றுமே

2. நித்தம் நித்தம் பக்தர் பரிசுத்தமடைய
கர்த்தர் வாக்குத்தத்தம்
கொண்ட சத்தியமீந்தார்
வித்தகனின் சித்தப்படி இத்தரையில்
யுத்தம் செய்ய வேண்டி நின்று
அல்லேலூயா துதி என்றுமே

3. பல பல பாடுகள் பலுகிவரினும்
நிலைபெற நிமலன் தம் ஆவியுமீந்தார்
சில காலம் சிதையுங்கால்
சீர்திருத்தும்படி நம்மை செய்பவனும்
அல்லேலூயா துதி என்றுமே

4. கறை திறை குறை நீங்கி
கற்புள்ள நிறையுமுள்ள
மணவாட்டி ஆக்கிக் கொள்ள
மறையவன் அறைதனில்
அழைத்தேக வருவதால்
இயேசுவுக்கு அல்லேலூயா துதி என்றுமே

## பாடல் - 1216

**பல்லவி**

**அன்பின் தேவன் இயேசு உன்னை அழைக்கிறார்**
அவரின் குரல் கேட்ட பின்னும் தயக்கம் ஏன்?

மனிதர்கள் அன்பு மாறலாம்
மறைவாக தீது பேசலாம்
அன்பு காணா இதயமே
அன்பின் தேவனை அண்டிக்கொள் - அன்பின்

கல்வாரியின் மேட்டினில் கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
உன்னை எண்ணி உள்ளம் நொந்து
அணைக்க ஏசு துடிக்கிறார்
கவலையேன் கலக்கமேன் கர்த்தர் இயேசு அழைக்கிறார்

1. வியாதிகள் தொல்லையோ தோல்வியோ
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ
கண்ணீர்தான் உந்தன் படுக்கையோ
கலங்காதே மன்னன் ஏசு பார் - கல்வாரியின்

2. வேலை வசதிகள் இல்லையோ
வீட்டினில் வறுமை தொல்லையோ
மரண பயமும் நெருங்குதோ
மரணம் வென்ற ஏசு பார் - கல்வாரியின்

**பாடல் - 1217**

**ஜெயம் ஜெயம் அல்லேலூயா ஜெயம் ஜெயம் எப்போதும்**
யேசுநாதர் நாமத்திற்கு ஜெயம் ஜெயம் எப்போதும்.

1 உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நானிருப்பேன்.

2 பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரவா
பிராணநாதர் பாதத்தண்டை தாவியே ஓடிவா.

3 பாவ சஞ்சலத்தை விட நாளை வரக் காணாதே
ரட்சகரே அழைக்கிறார் பாவியே ஓடிவா.

4 நானே வழி சத்தியம் நானே ஜீவன் என்றாரே
நாதன் கிறிஸ்துவண்டை பாவியே ஓடி வா.

**பாடல் - 1218**

**எக்காள தொனியோடே மானிடரே வாரீர்**
எக்காலம் இயேசுவையே அறிவிக்கவே வாரீர்

1. என் இயேசு பொன் இயேசு
என்னை மாற்றியவரும் அவரே
அன்போடும் பண்போடும்
என்னை நடத்தியவரும் அவரே

2. சந்தோஷம் சந்தொஷம்
என்னை ஆவியில் நிறைந்தாரே
சங்கீதம் பாடிடுவேன்
நான் சபையில் சேர்ந்திடுவேன்

3. கல்வாரி நாயகனாம் இயேசு
மீண்டும் வந்திடுவார்
கைத்தட்டிப் பாடிடுவேன்
நான் அவருடன் சேர்ந்திடுவேன்

4. சாத்தான் என்னை அணுகும் போது
இயேசுவைக் கூப்பிடுவேன்
சாத்தானை ஜெயித்தவராம்
அவர் எனக்கும் ஜெயம் தருவார்

5. அன்பான மானிடரே நீங்கள்
அனைவரும் வாருங்கள்
அன்பான இரட்சகராம் நம்மை
அழைக்கிறார் வாருங்கள்

## பாடல் - 1219

**நான் உம்மைப் பற்றி ரட்சகா**
வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்.

**பல்லவி**

சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவப் பாரம் நீங்கி, வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் என துள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2. ஆ! உந்தன் வல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடீர் இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்

3. மா வல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய் பாக்கியம் அடைவேன்.

## பாடல் - 1220

**அன்பில் என்னை பரிசுத்தனாக்க**
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ

***பல்லவி***

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்



அட்டவணை

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாம் உம் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை - என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேராய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகத்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர - என்

4. வருங்காலங்களில் முதற்பேராய்
நீர் இருக்க நாம் சோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே - என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் எப்படி பதில் செய்குவேன்
உம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னை தந்தேன் நடத்திடுமே - என்

## பாடல் - 1221

**கானகப் பாதை காடும் மலையும்**
காரிருளே சூழ்ந்திடினும்
மேக ஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவாய்

பயப்படாதே கலங்கிடாதே
பாரில் ஏசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்

2. எகிப்தில் பாவ வாழ்க்கை வெறுத்தே
இயேசுவின் பின்னே நடந்தே
தூய பஸ்கா நீ புசித்தே
தேவ பெலனால் முன் செல்லுவாய்

3. கடலைப் பாரும் இரண்டாய் பிளக்கும்
கூட்டமாய் சென்றே கடப்பாய்
சத்ரு சேனை மூழ்கி மாளும்
ஜெயம் சிறந்தே முன் செல்லுவாய்

4. கசந்த மாரா உன்னைக் கலக்கும்
கஷ்டத்தால் உன் கண் சொரியும்
பின் திரும்பிச் சோர்ந்திடாதே
நன்மை அருள்வார் முன்செல்லுவாய்

5. கொடுமை யுத்தம் உன்னை மடக்கும்
கோர யோர்தான் வந்தெதிர்க்கும்
தாங்கும் கர்த்தர் ஓங்கும் கையால்
தூக்கிச் சுமப்பார் முன் செல்லுவாய்

6. புதுக்கனிகள் கானான் சிறப்பே
பாலும் தேனும் ஓடிடுமே
இந்தக் கானான் கால் மதித்து
சொந்தம் அடைய முன் செல்லுவாய்

## பாடல் - 1222

**எமைப் படைத்தவரே பாதுகாப்பவரே**
பிதாவே உமக்கு ஸ்தோத்திரம்
உந்தன் சமூகமதில் இந்த நேரமதில்
கூடினோம் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்!

எங்கள் இதயங்களில்
உந்தன் வசனம் தாரும்
பாதைக்கு வெளிச்சம் வசனம் - 2

2. சென்ற காலம் எல்லாம் கர்த்தரின் நன்மைகள்
எத்தனை அதிகம்! அதிகம்!
வரும் நாட்களிலும் வழி நடத்திடுவீர்
இயேசுவே ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்! (2) - எங்கள்

3. தூய பாதையினில் நாங்கள் நடந்து செல்ல
ஆவியின் கிருபை தந்திடும்
உண்மை அன்பு கொண்டு நாங்கள் வாழ இன்று
நிரப்பும், ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்! (2) - எங்கள்

## பாடல் - 1223

**பல்லவி**

**சாரோனின் ரோஜாவே**
பள்ளத்தாக்கின் லீலியே
உள்ளத்தின் நேசமே
இயேசு என் பிரியமே



அட்டவணை

**சரணங்கள்**

1. ஆத்தும நேசரே உம் நேசம் இன்பமே
பூரண ரூபமே பழுதொன்றும் இல்லையே - சாரோனின்

2. கன்மலை வெடிப்பினிலே தங்கிடும் புறாவே
உம் முக ரூபத்தை காண்பியும் எனக்கு - சாரோனின்

3. வருவேன் என்றுரைத்தவர் சீக்கிரம் வருகிறார்
வாக்கு மாறாதவர் தாமதம் செய்யாரே - சாரோனின்

## பாடல் - 1224

**கவிதை பாடுவேன் கானானின் தேசத்தில்**
காணக் கிடைக்காத தங்கம்
இயேசு ராஜன் நாமத்தை கவிதை பாடுவேன்

1. பாலும் தேனும் ஆறாய் ஓடுகின்ற தேசம்
பரிசுத்த பரமன் தந்த ஜீவ தேசம் -2
மீட்கப்பட்ட கூட்டம் மீட்பின் கீதம் பாடும் -2
மேசியா இயேசுவின் முகம் கண்டு ஆனந்தம்
பரலோகில் ஆனந்தம் - கவிதை

2. நகரத்தின் வாசல் சுத்த பசும் பொன்னாம்
நகரத்தின் அஸ்திபாரம் இரத்தின கற்களாம்
சந்திரன் சூரியன் வெளிச்சமாய் இல்லை -2
இரட்சிப்பின் ஜனங்களோ அதில் நடப்பார்களே
தேவனே வெளிச்சமாம் - கவிதை

3. பன்னிரெண்டு முத்துக்கள் பரலோகில் ஜொலிக்கும்
வச்சிரக்கல், இந்திர நீலம், சந்திரகாந்தம்,
மரகதம், கோமேதகம், பத்மராகம், சொர்ணரத்தினம்,
படிகப்பச்சை, புஷ்பராகம் வைடூரியம், பொன்னியும்
சுகந்தி ஆனந்தம் -2 - கவிதை

## பாடல் - 1225

**தேவப் பிதா தங்கும் சீயோனே**
தெரிந்தெடுக்கப்பட்ட தாபரமே
பிதாவின் மகிமை அடைந்தவர்கள்
சதா காலம் அங்கு வாழுவோம்

பரன் சீயோன் மலை உயர் சிகரம்
புது எருசலேம் தேவ நகரம்
அது இறங்கியே வருகின்றதே
அங்கு இயேசு எம் சுதந்திரமே

2. முன் குறித்தே எம்மை பேர் சொல்லி
முதற் பலனாய் சொந்த சம்பத்துமாய்
மாசில்லா மணவாட்டியாம் சபையாய்
நேசித்ததெம்மை ஏசு அழைத்தார் - பரன்

3. அஸ்திபார மூலைக்கல் இயேசு
அவரோடப் போஸ்தலர் மேல் சபையாய்
ஆவியால் எம்மை இசைவாய் இணைத்தே
ஆலயமாய் எழுப்புகின்றார் - பரன்

4. பன்னிரு நட்சத்திரங்கள் சூடி
புது கிருபை தேவ நீதியுடன்
சூரியனையும் அணிந்தாள் ஜெயமாய்
சந்திரன் மேல் நிற்கும் சபையே - பரன்

5. ஆதாம் இழந்ததாம் ஏதேனின்
அழியாமை நித்திய ஜீவனுடன்
மணாளன் கிறிஸ்துவின் சாயலுடன்
மறுமையில் விளங்கிடுவோம் - பரன்

6. சீயோனைக் கட்டி முடிப்பாரே
ஜெயமெடுத்தோரையும் சேர்த்திடவே
ஆகாயமீதில் ஆரவாரத்தோடே
அன்பர் இயேசு வருகின்றாரே - பரன்

7. மீட்கப்பட்டோர் ஆனந்தம் பாடி
அன சஞ்சலம் தவிப்பும் - அகற்றி
நித்திய மகிழ்ச்சியினால் நிரம்பி
நீடூழி சீயோனில் ஆளுவோம் - பரன்

## பாடல் - 1226

**இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை**
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதுன்னை ஆசீர்வதிப்பார்

**பல்லவி**

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திட
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதில்லை தம் ஆலோசனை
கோர பயங்கர காற்றடித்தும்
கன்மலைமேல் கட்டும் வீடு நிற்கும் - நெஞ்சமே

3. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தன் தாம் நிற்பதால் அசைந்திடான் - நெஞ்சமே

4. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப் பறந்திடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்த்திடும் ஐக்கியத்திலே
ஜெய கம்பீரமே உனக்குண்டே - நெஞ்சமே

5. அங்கே அநேக வாசஸ்தலங்கள்
அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே
நேர்த்தியான இடங்களில் உந்தன்
நித்திய பங்கு கிடைத்திடுமே - நெஞ்சமே

## பாடல் - 1227

## தேவன் தங்கும் உள்ளம் அது தேவாலயம்

1. அசுத்தம் இல்லா உள்ளம் அது தேவாலயம்
அதில் ஆணவம் இல்லா உள்ளம்
கறைகள் இல்லா உள்ளம் அது தேவாலயம்
வீண் பெருமைகள் இல்லா உள்ளம்
அது தேவாலயம்

2. துதிகள் உள்ள உள்ளம் அது தேவாலயம்
இயேசு துங்கவன் மகிழும் உள்ளம்
அது தேவாலயம்
இன்முகம் காட்டும் உள்ளம் அது தேவாலயம்
இயேசு என்றும் வாழும் உள்ளம்
அது தேவாலயம்

3. அன்பு நிறைந்த உள்ளம் அது தேவாலயம்
அதில் அமைதி வாழும் உள்ளம்
அது தேவாலயம்
அடக்கம் மிகுந்த இதயம் அது தேவாலயம்
இவை அனைத்தும் நிறைந்த மனிதன்
அவன் தேவாலயம்

## பாடல் - 1228

**உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்**
மன்னன் இயேசு நாதருக்கே வான்முடி சூட்டுங்கள்

ராஜாதி ராஜன் இயேசு இயேசு மகாராஜன் - அவர்
ராஜ்ஜியம் புவியெங்கும் மகா மாட்சியாய் விளங்க
அவர் திரு நாமமே விளங்க - (2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயாவே
அல்பா ஒமேகா அவர்க்கே அல்லேலூயாவே

2. நாலா தேசத்திலுள்ளோரே நடந்து வாருங்கள்
மேலோக நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்

3. நல்மனதோடே சொல்கிறேன் நாட்டார்களே நீங்கள்
புன்னகையோடு நிற்பானேன் பூ முடி சூட்டுங்கள்

4. இந்த நல் தேசத்தார்களே ஏகமாய்க்கூடுங்கள்
சிந்தனையை வைத்துக்கொண்டு செம்முடி சூட்டுங்கள்

5. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்
பொன்னகராம் சாலேமுக்குப் போய் முடி சூட்டுங்கள்

6. குற்றமில்லாப் பாலகரே கூடிக் குலாவுங்கள்
வெற்றி வேந்தர் இயேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்

7. இயேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்
ராசாதி ராசன் தலைக்கு நன்முடி சூட்டடங்கள்

## பாடல் - 1229

**எந்தன் பூமானைக்காண சிந்தை பெருகுதையோ**
என்றைக்குக் காண்பேனோ

1. சுந்தரத்தில் மிகுந்து அந்தரத்திலிருக்கும்
எந்தன் பூமானைக் காண – அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண – எந்தன்

2. விண்ணிலிருந்தவர் மண்ணின் மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர் – லாசருக்காக
கண்ணீரை விட்டழுதவர் – எந்தன்

3. இன்னும் வர என்ன தாமதம் செல்லுமோ
சொன்ன வாக்கை நினைத்து – அடியேனுந்தன்
பாதம் பணிந்து வந்தேன் – எந்தன்

4. பொல்லாதோரை இரட்சிக்க வல்ல பராபரன்
என்ன துயரடைந்தார் – அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை – எந்தன்

5. கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும் வேளை
என்னை நினைத்தீரோ நீர் – அதை நினைத்தால்
உம்மை மறப்பேனோ நான் – எந்தன்

### பாடல் - 1230

**அல்லேலூயா துதி மகிமை என்றும்**
இயேசுவுக்கு செலுத்திடுவோம் –2
ஆ… அல்லேலூயா–2

1. மோட்சத்தை அடைந்திடவே
பாடுகள் படவேண்டும் –2
பாடுகள் மத்தியில் பரமன் இயேசுவில்
நிலைத்து நிட்க வேண்டும் –2 – அல்லேலூயா

2. ஜெபத்திலே தரித்திருந்து
அவர் சித்தம் நிறைவேற்று
முடிவு பரியந்தம் அவரில் நிலைத்து
பலனை பெற்றுக் கொள்ளு –2 – அல்லேலூயா

3. சென்றவர் வந்திடுவார்
நம்மை அழைத்துச் சென்றிடுவார்
அவருடன் செல்ல ஆயத்தமாவோம்
அவருடன வாழ்ந்திடவே –2 – அல்லேலூயா

4. சிலுவையை சுமப்பாயா
உலகத்தை வெறுப்பாயா
உலகத்தை வெறுத்து
இயேசுவின் பின்னே ஓடி வருவாயா –2 – அல்லேலூயா

## பாடல் - 1231

**துதிகள் செலுத்தி போற்றியே**
தூயவர் புகழ் பாடுங்கள்
மகிமைக்கு பாத்திரர் இயேசுவை
மனதார தினம் வாழ்த்துங்கள்

அவர் அதிசயமானவர் அகிலம் படைத்தவர்
வானிலும் பூமியிலும் மேலானவர்

1. யோர்த்தானின் பெரு வெள்ளத்தில்
நம்மை காத்து நடத்தினவர்
பாசானின் எருதுகளை
தம் பலத்தினால் துரத்தினவர்
சேனைகளின் கர்த்தர் பெரியவரே
யுத்தத்தில் வல்லவரே
அவர் கிருபை உயர்ந்தது
அவர் மகிமை பெரியது
வானிலும் பூமியிலும் மேலானவர்

2. சோதனை பெலவீனத்தில்
நம்மை தூக்கி நிறுத்தினவர்
ஆவியில் பெலனளித்து
நம்மை ஆற்றி தேற்றினவர்
ஆதியும் அந்தமும் ஆனவரே
ஆசீர்வதித்தவரே
அவர் இரக்கம் மிகுந்தவர்
நம் இதயம் வாழ்பவர்
வானிலும் பூமியிலும் மேலானவர்

3. சகலமும் படைத்திட்டவர்
சத்திய வழியானவர்
சாத்தானின் விலங்கொடித்து
நம்மை நித்தியம் சேர்க்கிறவர்
வாழ்விலும் தாழ்விலும் துணை வருவார்
வாதைகள் போக்கிடுவார்
அவர் மகிமை நிறைந்தவர்
அவர் மகத்துவம் மிகுந்தவர்
வானிலும் பூமியிலும் மேலானவர்

## பாடல் - 1232

**காலம் இனி செல்லாது மனம் திரும்பு**
கர்த்தர் வரும் காலம் இது மனம் திரும்பு
நியாயத்தீர்ப்பின் நாள் சமீபம் மனம் திரும்பு
நித்திய வாழ்வில் பங்கு பெற மனம் திரும்பு
திரும்பிடு திரும்பிடு மனந்திரும்பிடு
நிலைத்திடு நிலைத்திடு சபையில் நிலைத்திடு

இயேசு வருகிறார் தேவன் வருகிறார்
மேகம் சூழ நியாயம் தீர்க்கும் ராஜன் வருகிறார்

1. புத்தியுள்ள கன்னி போல்
நீ வாழ வேண்டும்
உன்னில் ஒளி குறையாமல்
இருக்க வேண்டும்
சத்தியத்தில் நாளும் நீ வளர வேண்டும்
சாட்சியாக உந்தன் வாழ்க்கை
இருக்க வேண்டும்.

2. எண்ணத்திலும் செய்கையிலும்
இயேசுவைக் காட்டு - எதிர்த்து வரும்
சாத்தானை எதிர்கொண்டு ஓட்டு
சத்தியத்தை ஜனங்களுக்கு
உணவென ஊட்டு
சர்வவல்ல இயேசுவை வழியென காட்டு

3. அந்தகார கிரியைகளை
ஒழிக்க வேண்டும்
ஆடம்பர வாழ்க்கையை
நீ மறக்க வேண்டும்
அழிந்து போகும் மனிதர்களை
நினைக்க வேண்டும் - அடிமை போல
இயேசுவுக்காய் உழைக்க வேண்டும்

## பாடல் - 1233

**ஆராதனை உமக்குத்தான்**
ஆனந்த துதிபலி உமக்குத்தான்

மகிமையும் உமக்குத்தான்
மாட்சிமையும் உமக்குத்தான்
எல்லாம் உமக்குத்தான்
என் இயேசுவே உமக்குத்தான்



அட்டவணை

1. தாயுள்ளம் கொண்ட தயாபரரே
தாங்கி அணைத்தீர் என்னையுமே
இரக்கமும் உருக்கமும் நிறைந்தவரே
எனக்குள்ளே என்றென்றும் வாழ்பவரே

2. தந்தையை போலே தோள் மீது
தினமும் என்னை சுமந்தவரே
உள்ளங்கையில் என்னை வரைந்தவரே
ஒவ்வொரு நாளும் காப்பவரே

3. ஜீவ நதியாய் என் உள்ளத்தில்
தாகம் தீர்க்க வந்தவரே
கன்மலை தேனினால் என்வாழ்வை
திருப்தியாக்கி மகிழ்பவரே

## பாடல் - 1234

**உள்ளமெல்லாம் பொங்குதய்யா**
உந்தன் நாமம் சொல்ல சொல்ல
உள்ளமெல்லாம் துள்ளுதய்யா
உந்தன் நாமம் பாடப் பாட

1. இயேசு இயேசு இன்பமானவர்
இயேசு இயேசு இனிமையானவர்
இயேசு இயேசு வல்லமையுள்ளவர்
இயேசு இயேசு என்னை வாழ வைத்தவர்
எல்லாமே என் இயேசுதான்

2. இயேசு இயேசு அதிசயமானவர்
இயேசு இயேசு அற்புதமானவர்
இயேசு இயேசு மகிமையானவர்
இயேசு இயேசு மகத்துவமானவர்

3. இயேசு இயேசு உன்னதமானவர்
இயேசு இயேசு உயிர்த்தெழுந்தவர்
இயேசு இயேசு ஜீவனுள்ளவர்
இயேசு இயேசு ஜீவன் தந்தவர்

## பாடல் - 1235

**இராஜா வந்திருக்கிறார்**
நம் நடுவிலே - இயேசு
ஆராதிப்போம் ஆர்ப்பரிப்போம்
துதித்திடுவோம் தொழுதிடுவோம்

1. கண்ணீர் கவலை மாற்றிடுவார்
காண்கிற தேவனல்லவோ
யெகோவா எல்ரோயீ
காண்கிற தேவனல்லவோ

2. தோல்வி துயரம் மாற்றிடுவார்
ஜெயமதை தந்திடுவார்
யெகோவா நிசி அல்லவா
ஜெயமதை தந்திடுவார்

3. வியாதி வேதனை மாற்றிடுவார்
சுகமதை தந்திடுவார்
யெகோவா ராப்பா அல்லவோ
சுகமதை தந்திடுவார்

## பாடல் - 1236

**என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்**
எதையும் செய்வேன் – நான்

இயேசுவே என் வழி இயேசுவே என் சத்யம்
இயேசுவே என் ஜீவன் இயேசுவே என் பெலன்

1. கிறிஸ்து என்னில் வந்ததினாலே
கிருபையின் மேல் கிருபை பெற்றேனே
கிறிஸ்து என்னில் வாழ்வதினாலே
அந்த கிருபையிலே வளருகின்றேனே

2. வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியுமே
தாழ்ந்திருக்கவும் கற்றுக் கொண்டேனே
எந்த நிலையில் நானிருந்தாலும்
மனரம்பியமாய் வாழ்ந்திடுவேனே

3. கிறிஸ்துவுக்குள் மரித்துவிட்டேனே
தேவனுக்குள் மறைந்து கொண்டேனே
ஜீவன் கிறிஸ்து வெளிப்படும் நாளில்
மகிமையாய் வெளிப்படுவேனே

## பாடல் - 1237

**உம்மோடு நானிருந்தால்**
உம்மைப் போல் மாறிடுவேன் ஏசையா
உலக வாழ்வு மாயைதானய்யா
உம்மோடு வாழ்வு உண்மைதானய்யா (2)

1. பாவத்தின் சாயலில் நான் வளர்ந்தேன்
பரிசுத்தமின்றி நான் அலைந்தேன்
என்னையும் தேடி வந்தீரய்யா
உம்மைப் போல் என்னையும் மாற்றிடவே

2. மாம்சத்தின் கிரியைகள் மறைந்தே போகும்
ஆவியின் கனிகளோ வளர்ந்தே பெருகிடும்
அதிசயம் அனுதினம்
என் வாழ்வைத் தொடருமே
அன்பான தேவனே உமக்கே ஸ்தோத்திரம்

3. மகிமையின் சாயல் அடைந்திடவே
மறுரூபமாவேன் இமைப் பொழுதில்
முகமுகமாக உம்மை நான் காண்பேன்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவரே

4. கண்ணீர் யாவும் மாறியே போகும்
கவலைகள் யாவும் மறைந்தே போகும்
துன்பங்கள் துயரங்கள் இல்லாமல் போகும்
தூயவர் உம்மை துதித்திடுவேன்

## பாடல் - 1238

**அப்பா அப்பா இயேசு அப்பா**
எப்போதுமே உமக்கு ஸ்தோத்திரமப்பா

1. தப்பா தப்பா நான் நடந்தேனப்பா
தப்பாமல் என்னைத் தேடி வந்தீரப்பா

2. செத்தே செத்தே நான் வாழ்ந்தேனப்பா
சாகாத நித்திய ஜீவன் தந்தீரப்பா

3. நித்தம் நித்தம் எந்தன் கரம் பிடித்து
சத்திய வழிதனில் நடத்தீனீரப்பா - என்னை

4. அப்பா அப்பா எங்க அப்பா
புத்திர சுவவிகாரம் தந்தீரப்பா - எனக்கு

5. எந்தன் மேல் வைத்த அன்பினாலே
எத்தனையோ அற்புதங்கள் செய்தீரப்பா - எனக்கு

## பாடல் - 1239

**நன்றி சொல்லி பாடிடுவேன்**
நாள்தோறும் துதித்திடுவேன்

நல்லவரே இயேசு வல்லவரே -2
நன்மையால் என்னை என்றும் நிறைப்பவரே

1. உம் அன்பை நினைக்கையிலே
உள்ளமெல்லாம் உருகுதைய்யா
உம்மை நான் துதிக்கையிலே
கள்ளமெல்லாம் நீங்குதைய்யா - நல்லவரே

2. மேடுபள்ளம் கடந்து வந்தேன்
மேசியா கூட வந்தீர்
கண்ணீரின் பாதையிலே
கரம் பிடித்து நடத்தி வந்தீர் - நல்லவரே

3. அற்புதங்கள் அதிசயங்கள்
என் வாழ்வில் செய்தவரே
ஆவியின் வல்லமையால்
அனுதினமும் நிறைப்பவரே - நல்லவரே

4. பரிசுத்த வாழ்க்கையினை
பரிசாக தந்தவரே
பரலோக ஆவிதனை
எனக்குள் வைத்தவரே - நல்லவரே

## பாடல் - 1240

**ஸ்தோத்திரமய்யா ஸ்தோத்திரமய்யா**
கோடா கோடி ஸ்தோத்திரமய்யா

1. பாவங்களை மன்னித்தீர்
பரிசுத்த மாக்கினீர் - ஸ்தோத்திரமய்யா

2. தாயைப் போல் தேற்றினீர்
தந்தைப் போல சுமந்தீர் - ஸ்தோத்திரமய்யா

3. சேனைக்குள்ளே பாயச் செய்தீர்
மதிலையுமே தாண்ட வைத்தீர் - ஸ்தோத்திரமய்யா

4. வியாதிகளை போக்கினீர்
வேதனையை மாற்றினீர் - ஸ்தோத்திரமய்யா

5. உண்ண உணவு தந்தீரே
உடுக்க உணவும் தந்தீரே - ஸ்தோத்திரமய்யா

6. உமக்காக வாழும்
உள்ளம் ஒன்று தந்தீரே - ஸ்தோத்திரமய்யா

**பாடல் - 1241**

**வாழ்வு தந்த வள்ளலே வாழ்க வாழ்க**
என்னை வாழ வைத்த இயேசுவே வாழ்க

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க - 2
என்றும் வாழ்க நீர் இன்றும் வாழ்க

1. பாவம் போக்கிய பரிசுத்தரே வாழ்க வாழ்க
வியாதி தீர்த்த வைத்தியரே வாழ்க வாழ்க

2. வல்லமை தந்தவரே வாழ்க வாழ்க
வரங்களாலே நிறைத்தவரே வாழ்க வாழ்க

3. தேடி வந்த தெய்வமே வாழ்க வாழ்க
என்னை தேற்றுகின்ற தேவனே வாழ்க வாழ்க

4. கண்ணீரெல்லாம் துடைத்தவரே வாழ்க வாழ்க
கண்மணி போல் காத்தவரே வாழ்க வாழ்க

5. ஜீவன் தந்த தேவனே வாழ்க வாழ்க
ஜீவிக்கிற இயேசுவே வாழ்க வாழ்க

**பாடல் - 1242**

**நன்றி நிறைந்த உள்ளத்தோடு**
நாதன் இயேசுவை நான் பாடுவேன்

அல்லேலூயா அல்லேலூயா - 2

1. ஊதாரி மைந்தனாய்
உலகினில் அலைந்தேன்
உண்மையாய் தேடி வந்தீர்
உந்தன் மகனாக மாற்றி விட்டீர்

2. உளையான சேற்றில்
உருமாறி கிடந்தேன்
உண்மையாய் தூக்கி விட்டீர்
என்னை உம்மோடு அமரச் செய்தீர்

3. மண்ணான எனக்கு
மகிமையின் வாழ்வு
மன்னா நீர் கொடுத்தீரே
என்னை மார்போடு அணைத்தீரே

## பாடல் - 1243

**எந்தன் நேசரே உந்தன் மார்பினில்**
சாய்ந்து என்றுமே உறவாடுவேன்
அன்பினாலே என்னை கவர்ந்தவர்
அன்பினாலே அரவணைப்பவர்

1. பாசம் மிகுந்தவர் பழக துடிப்பவர்
நேசம் நிறைந்தவர் நெருக்கமானவர்

2. அருகில் வந்தவர் அணைத்துக் கொண்டவர்
தெரிந்து கொண்டவர் என்னை சேர்த்துக் கொண்டவர்

3. அன்பு கொண்டவர் அழகு நிறைந்தவர்
இன்பமானவர் இனிமையானவர்

4. மென்மையானவர் மேன்மையுள்ளவர்
மகிமையானவர் மதுரமானவர்

5. உண்மையானவர் உன்னதமானவர்
உயிர்த்தெழுந்தவர் உலகை ஆள்பவர்

## பாடல் - 1244

**எங்கள் தேவா நமஸ்காரம்**
இயேசு ரட்சகா நமஸ்காரம்
பரிசுத்த ஆவி நமஸ்காரம்
பரலோக தேவா நமஸ்காரம்

1. அகிலத்தை படைத்தவா நமஸ்காரம்
என்னை ஆட்கொண்ட தேவா நமஸ்காரம்
அரூபியே சொரூபியே நமஸ்காரம்
அல்லும் பகலும் நமஸ்காரம்

2. விந்தையாய் பிறந்தவா நமஸ்காரம்
என் சிந்தையை கவர்ந்தவா நமஸ்காரம்
நிந்தையை சுமந்தவா நமஸ்காரம்
என் தந்தையே உமக்கு நமஸ்காரம்

3. பாவத்தை ஏற்றவா நமஸ்காரம்
இந்த பாவியை மீட்டவா நமஸ்காரம்
ஜீவனை தந்தவா நமஸ்காரம்
என் ஜீவிய காலமெல்லாம் நமஸ்காரம்

## பாடல் - 1245

**ஒரே ஒரு வாழ்க்கை தானே - இயேசய்யா**
உம்மிடமே நான் தருகிறேன் - 2
ஏற்றுக் கொள்வீரே என் இயேசய்யா
உம் பாதத்தில் படைக்கின்றேன்

1. எந்தன் வாழ்க்கை உமக்காக
எந்தன் ஜீவன் உமக்காக
எந்தன் குடும்பம் உமக்காக
எந்தன் எல்லாம் உமக்காக

2. எந்தன் கல்வி உமக்காக
எந்தன் செல்வம் உமக்காக
எந்தன் ஞானம் உமக்காக
எந்தன் எல்லாம் உமக்காக

3. எந்தன் மூச்சும் உமக்காக
எந்தன் பேச்சும் உமக்காக
எந்தன் பெலனும் உமக்காக
எந்தன் எல்லாம் உமக்காக

## பாடல் - 1246

**அப்பா உம்மை ஆராதிக்கிறேன்**
இயேசப்பா உம்மை ஸ்தோத்தரிக்கின்றேன்

1. துதிகளின் நடுவில்
வாசம் செய்யும் தூய தேவனே
உம்மை துதித்து பாடுவேன்
உம்மை போற்றி பாடுவேன்

2. ஞானம் நீதி நிறைந்த
எங்கள் இயேசு ராஜனே
உம்மை பாடித் துதிப்பேன்
நடனம் ஆடித் துதிப்பேன்

3. சிங்காசனம் விட்டு வந்த
தூய தேவனே
ஈன சிலுவை சுமந்து
உந்தன் ஜீவன் ஈந்தீரே

## பாடல் - 1247

**உம்மோடு இருக்கனுமே இயேசு ராஜா**
உம்மையே துதிக்கனும் இயேசு ராஜா
உம்மை போல் மாறனும் இயேசு ராஜா
உமக்காய் வாழனும் இயேசு ராஜா

1. ஊரெல்லாம் உம் புகழ் ஓடி ஓடி சொல்லனும்
உலகுக்கு வெளிச்சமாக ஒவ்வொரு நாளும் வாழனும்
உத்தமரே உந்தனுக்காய் ஓயாம உழைக்கனும்

2. பாரெல்லாம் உம் புகழ் பாடி பாடி சொல்லனும்
பரிசுத்த வாழ்க்கையிலே நாள்தோறும் வளரனும்
பரமனே உந்தனுக்காய் பாடுகளை சகிக்கனும்

3. அதிகாலை எழும்பனும் அப்பா உம்மை துதிக்கனும்
அழிகின்ற மாந்தருக்காய் அழுது அழுது ஜெபிக்கனும்
இயேசப்பா உமது அன்பை அகிலமெல்லாம் சொல்லனும்

## பாடல் - 1248

**துதிகளின் பாத்திரனே தோத்திரம் தோத்திரமே**
தூயாதி தூயவரே துதித்தும்மை பாடுகிறேன்

1. வானம் பூமி யாவையுமே
வார்த்தையினாலே படைத்தவரே
வாழத்துகிறேன் வணங்குகிறேன்
வாழ்நாளெல்லாம் உம்மை போற்றுகிறேன்

2. தாய் தன் சேயை மறந்திடலாம்
நீரோ என்னை மறப்பதில்லை
பணிந்திடுவேன் தொழுதிடுவேன்
புவியெல்லாம் உம் நாமம் உயர்ந்திடுவேன்

3. வல்லமை ஞானம் நிறைந்தவரே
வழுவாது என்னை காத்தவரே
ஆராதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
ஆனந்த நடனம் ஆடிடுவேன்

## பாடல் - 1249

**இயேசுவின் ரத்தத்தில்**
மறைந்து கொண்டேன்
என் வாழ்விலே பயமே இல்லை
இயேசுவின் வசனத்தை
பிடித்துக் கொண்டேன்
என் வாழ்வில் தோல்வி இல்லை

கொண்டாடுவேன் கொண்டாடுவேன்
என் இயேசு இராஜாவைக் கொண்டாடுவேன்

1. மலைகள் விலகினாலும் பயமே இல்லை
பர்வதங்கள் பெயர்ந்தாலம் நடுக்கமில்லை
மனிதர்கள் மறந்தாலும் கண்ணீர் இல்லை
மரணத்தை ஜெயித்தவர் இருக்கையிலே

2. வியாதிகள் வந்தாலும் கவலையில்லை
வறுமைகள் வந்தாலும் வருத்தமில்லை
குறைகளை மகிமையில் நிறைவாக்கிடும்
யெகோவாயீரே இருக்கையிலே

3. பாடுகள் வந்தாலும் சகித்திடுவேன்
துன்பங்கள் வந்தாலும் துதித்திடுவேன்
பரமன் அழைத்த அழைப்பை எண்ணி
பபலகோடி ஸ்தோத்திரம் செலுத்திடுவேன்

## பாடல் - 1250

**ஒரு தந்தையைப் போல தன் தோளின் மேலே**
உன்னை தூக்கி சுமந்திடுவார்
இயேசு தூக்கி சுமந்திடுவார்
துணையாக நின்றிடுவார்
உன் துயரெல்லாம் துடைத்திடுவார்

1. உள்ளங்கையில் உன்னை வரைந்தவர்
ஒருபோதும் மறப்பதில்லையே
உனக்கெதிராய் வரும் தீமைகள்
ஒன்றுகூட வாய்ப்பதில்லையே

2. மனிதர் அன்பு மாறிப் போனதோ
மனிதா நீ சோர்ந்து போனாயோ
உன்னை மீட்க தன்னை தந்தவரின்
உண்மை அன்பு மாறிடாதே - அவர்

3. கண்ணீர்தான் உணவானதோ
கவலை தான் வாழ்க்கையானதோ
கலங்காதே சகோதரனே (சகோதரியே)
உனக்காக அவர் மரித்தாரே - அன்று

**பாடல் - 1251**

**இயேசுவே நீர் எனக்கு போதுமானவர்**
பொன்னைக் காட்டிலும் மண்ணைக் காட்டிலும்

இயேசுவே நீர் எனக்கு போதுமானவர்

1. வெள்ளியினாலுமல்ல பொன்னினாலுமல்ல
உந்தனின் இரத்தத்தாலே நீதிமானாக்கினீரே

2. கண்ணீரின் பாதையிலே நடந்த வேளைகளில்
அழாதே என்று சொல்லி கண்ணீரை துடைத்தவரே

3. நிந்தை அவமானங்கள் சூழ்ந்த நேரங்களில்
எந்தன் கரம் பிடித்து பாசமாய் தேற்றினீரே

**பாடல் - 1252**

**பாரச்சிலுவையிலே பரன்**
இயேசு உயிர்கொடுத்தார்
பாசம் நிறைந்தவராய் அவர்
உன்னைத்தான் கேட்கின்றார்

1. வியாதியினால் வந்த வேதனையோ
தோல்வியினால் வந்த துயரங்களோ
எந்த நிலையில் நீ இருந்தாலும்
சொந்த மகனாக மாற்றிடுவார்

2. காயங்கள் உனக்காய் அடைந்தவரே
கண்ணீர் உனக்காய் வடித்தவரே
கல்வாரியில் உயிர் கொடுத்தவரே
கரம் நீட்டி அழைக்கின்றார் ஓடி வா

3. சொந்த மகனென்று பாராமல்
அவரையே உனக்காய் கொடுத்திட்டவர்
எதை உனக்கு இன்று தர மாட்டார்
நம்பி வந்திடு ஓ மனிதா

**பாடல் - 1253**

**அசைவாடும் தேவ ஆவியே**
அனல் மூட்டும் தூய ஆவியே
உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை
ஊற்றிடும் தேவ ஆவியே
உயிர்ப்பிக்கும் ஜீவ ஆவியே

1. அறியாததை அறிய வைத்திடும்
புரியாததை புரிய வைத்திடும்
தெரியாததை தெரிய வைத்திடும்
தேவாதி தேவன் ஆவியே

2. உள்ளங்களை உற்றுப் பார்த்திடும்
உன்னதத்தின் தேவ ஆவியே
மறைவான காரியங்களை
வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியே

3. சாத்தானின் சதிகளையெல்லாம்
முறியடிக்கும் தேவ ஆவியே
சத்துருவின் செயல்களையெல்லாம்
சிதறடிக்கும் வல்ல ஆவியே

4. சோர்ந்து போன நேரங்களில்
பெலப்படுத்தும் ஜீவ ஆவியே
திசை தெரியா சமயங்களெல்லாம்
வழிகாட்டும் தேவ ஆவியே

**பாடல் - 1254**

**உனக்காக யாவையும் செய்திடுவார்**
உயிரோடு இருக்கின்றவர்
உன்னத பெலனால் நிரப்பிடுவார்
உனக்காக உயிர் தந்தவர்

கலங்காதே என் மனமே
திகையாதே என் உள்ளமே

1. ஆகாரின் கண்ணீரை கண்டிட்டவர்
அன்னாளின் ஜெபத்தை கேட்டிட்டவர்
தானியேலை சிங்க கெபியினிலே
சேதமின்றி அன்று காத்திட்டவர்

2. சிங்கக்குட்டிகள் பட்டினியாய்
இருக்கும் நிலையும் வந்திடலாம்
கர்த்தரை நம்பிடும் உந்தனையே
குறைவின்றி அவரே நடத்திடுவார்

3. கர்த்தருக்கு நீ காத்திருந்தால்
கழுகு போல எழும்பிடுவாய்
அவர் பாதம் நீ அமர்ந்திருந்தால்
செட்டைகள் அடித்து பறந்திடுவாய்

## பாடல் - 1255

**இராஜாதி ராஜா எங்கள் தேவாதி தேவா**
ஆராதனை செய்கின்றோம் - நாங்கள்
முழு உள்ளத்தோடு முழுமனதோடு
முழுபெலத்தோடு ஆராதனை செய்கின்றோம்

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதபடி
உந்தன் நாமத்தை உயர்த்துகிறோம்
உந்தன் பாதத்தை பணிகின்றோம்

2. கேருபீன்கள் உம்மை பாட
சேராபீன்களும் உம்மை துதிக்க
நாங்கள் உம்மை துதிக்கின்றோம்
நாதா உம்மை தொழுகின்றோம்

3. ஆதி அந்தமும் ஆனவரே
அல்பா ஒமேகா நீரே ஐயா
ஆனந்த சத்தத்தோடே
உம் சந்நிதியில் வருகின்றோம்

## பாடல் - 1256

**எண்ணி எண்ணி பார்க்கிறேன் இயேசப்பா**
உம் அன்பை எண்ணி எண்ணி பாடுகிறேன் இயேசய்யா



அட்டவணை

கள்ளமில்லா உந்தன் அன்பை
காலமெல்லாம் பாடுகின்றேன்

1. தூரமாய் திரிந்தவன்
துரோகியாய் வாழந்தவன்
ஆனாலும் தேடி வந்தீர் இயேசய்யா
அன்போடு அணைத்துக் கொண்டீர் இயேசய்யா

2. மறுதலித்து போனவன்
காட்டி உம்மை கொடுத்தவன்
ஆனாலும் நேசித்தீர் இயேசய்யா
அன்பான ஒழியம் தந்தீர் இயேசய்யா

3. கண்டதை தெய்வம் என்று
கண்மூடி தொழுதவன்
கண்களை திறந்துவிட்டீர் இயேசய்யா
கர்த்தர் உம்மை காணச் செய்தீர் இயேசய்யா

4. உம்மை விட்டு பிரிந்தவன்
ஆஸ்தியை அழித்தவன்
ஆனாலும் சேர்த்துக் கொண்டீர் இயேசய்யா
உந்தன் மகனாக மாற்றிவிட்டீர் இயேசய்யா

5. பாவத்தால் நிறைந்தவன்
பாவியாய் வாழ்ந்தவன்
பாவத்தை மன்னித்தீரே இயேசய்யா
பாசமாய் ஏற்றுக் கொண்டீர் இயேசய்யா

## பாடல் - 1257

**நான் தன்னந்தனியே நடந்து வந்தேன்**
தாங்கிடுவார் எவருமின்றி – 2
ஒரு தாயைப் போல தேற்றி
ஒரு தந்தை போல காத்து –2

தாங்கினீர் என்னை தப்புவித்தீர்
ஏந்தினீர் என்னை சுமந்திட்டீர் – 2

1. பாவியாக வாழ்ந்ததாலே
பாசம் கொள்வோர் இல்லை
தேவனின்றி வாழ்ந்ததாலே
தினமும் வாழ்வில் தொல்லை – 2
கதறினேன் நீரோ இறங்கினீர் – நான் –2
பாவங்களை கழுவியே
நிறுத்தினீர் நிலை நிறுத்தினீர் – தாங்கினீர்



அட்டவணை

2. உண்மை அன்பு எங்குமின்றி
மனமுடைந்து போனேன்
உம்மை தேட மறந்தாலே
நிம்மதியின்றி வாழ்ந்தேன் - 2
வாடினேன் நீரோ தேடினீர் - நான் -2
தனிமையிலே இனிமையாய்
வறுமையிலே அருமையாய்
நடத்தினீர் அன்பாய் நடத்தினீர் - தாங்கினீர்

3. பாவி என்னில் பாசம் வைத்த
எந்தன் இயேசுராஜா
நீசன் என்னை தேடி வந்த
இயேசு மகாராஜா -2
மீட்கவே ஜீவன் தந்தீரே - என்னை - 2
பாடுகளை சகித்துமே
நிந்தைகளை சுமத்துமே
ஓடுவேன் உமக்காய் ஓடுவேன்
வாழுவேன் உமக்காய் வாழுவேன்

## பாடல் - 1258

**உம் சமூகம் இன்பமானது**
உம் பிரசன்னம் ஆனந்தமே - 2
களிகூர்ந்து மகிழ்ந்திடுவேன்
கர்த்தர் உம் சமூகத்திலே - 2

1. கண்ணீரெல்லாம் மறையுது
கவலையெல்லாம் பறக்குது -2
சஞ்சலங்கள் நீங்குது
சந்தோஷந்தான் பெருகுது - 2

2. வியாதியெல்லாம் பெருகுது - 2
வேதனைகள் தீருது
பாவமெல்லாம் தொலையுது
பரிசுத்தந்தான் பெருகுது - 2

3. அற்புதங்கள் நடக்குது
அதிசயங்கள் நிகழுது
உன்னதரின் அன்பினால்
உள்ளமெல்லாம் நிறையுது -2

## பாடல் - 1259

**ஜெபத்தை கேட்பவரே ஜெயத்தை தருபவரே**
உமக்கு ஸ்தோத்திரமே - 2

1. காற்று வீசினாலும் அலைகள் மோதினாலும்
கவலை எனக்கில்லையே கர்த்தர் நீர் இருக்கையிலே -2

2. தண்ணீரை கடக்கையிலே என் மேலே புரளாதே -2
நீரில் நடக்கையிலே சேதப்படுத்தாதே -2

3. உயர்வு என்றாலும் தாழ்வு என்றாலும்
உமக்காய் வாழ்ந்திடவே என்னையே அர்ப்பணித்தேன் - 2

## பாடல் - 1260

**கண்மணி போல் காப்பவரே**
கோடான கோடி ஸ்தோத்திரமய்யா
காரிருளில் தீபம் நீரே
கடும் வெயிலில் நிழலும் நீரே

1. உம்மையன்றி வேறே விருப்பமில்லை
உம்மையன்றி யாரும் துணையுமில்லை
என் தேவனே என் தேவனே
அடைக்கலம் உம்மையன்றி யாருமில்லை

2. பெற்றவர்கள் என்னை மறந்தாலும்
சொந்தமானவர் எல்லாம் வெறுத்தாலும்
சொந்த இரத்தம் சிந்தி எந்தனையே
சொந்தமாக்கிக் கொண்டவரே இயேசய்யா

3. மரண இருளின் பள்ளத்தாக்கில்
நான் நடந்து வந்த நேரங்களில்
கோலும் தடியும் கொண்டு தேற்றினீரே
கொல்கதா நாயகனே - எந்தன்

4. உமக்காக பாடுகள் சகித்திடுவேன்
உமக்காக ஜீவனையும் கொடுத்திடுவேன்
உமக்காக யாவையும் இழந்திடுவேன்
உம்மோடு பறந்திடுவேன் - நான்

5. நிலையற்ற உலக இன்பங்களை
வெறுத்து உம்மோடு நடந்திடுவேன்
மகிமை மேல் மகிமை அடைந்திடுவேன்
மன்னா உம்மோடு வாழ்ந்திடுவேன்

## பாடல் - 1261

**என் ஆத்ம நேசரே உம் நேசம் இன்பமே**
இயேசு என் மணவாளனே
உம்மில் நான் மகிழ்ந்திடுவேன்

1. சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே
வெள்ளைப் போல பூச்செண்டே
மருதோன்றி பூங்கொத்தே

2. திராட்சை ரசம் பார்க்கிலும்
உம் நேசம் இன்பமே
உம் நாமம் ஊற்றுண்ட
பரிமள தைலமே

3. அத்திமரம் காய்த்தது
திராட்சை செடி பூத்தது
மலை மேலே குதித்து வரும்
நேசர் சத்தம் கேட்குது

4. கன்மலை வெடிப்பினில்
தங்கிடும் என் புறாவே
பிரியமே ரூபவதி
என்றழைக்கும் நேசரே

5. வாரும் என் நேசரே
வயல் வெளியில் சென்றிடுவோம்
கிச்சிலி மரத்தடியில்
வாஞ்சையாய் அமர்ந்திடுவோம்

## பாடல் - 1262

**உம்மைப் போல யாரும் இல்ல இந்த உலகிலே**
உம்மை தவிர விருப்பமே இல்ல எங்கள் வாழ்விலே

அப்பாவும் நீரே எங்க அம்மாவும் நீரே
ஆறுதல் நீரே தேறுதல் நீரே

1. ஓடி ஓடி தேடி பார்த்தேன்
உண்மை அன்பு எங்கும் இல்லை
இந்த உலகத்தை நான்
உற்றுப் பார்த்தேன்
மாய உலகத்திலே ஒன்றும் இல்ல

2. உம்மை விட்டு தூரம் போனாலும்
ஓடி ஓடி தேடி வருகிறீர் - நாள்
நான் உம்மை மறந்து தூங்கிவிட்டாலும்
நீர் தூங்காது என்னைக் காக்கிறீர்

3. (நான்) வானத்துக்கு ஏறி போனாலும்
அங்கேயும் நீர் இருக்கிறீர்
நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டாலும்
அங்கேயும் நீர் இருக்கிறீர்

4. மனிதரெல்லாம் வெறுத்த வேளையில்
மறவாது சேர்த்துக் கொண்டவரே
நான் கலங்கி அழுத நேரங்களெல்லாம்
கலங்காதே என்று சொன்னவரே

## பாடல் - 1263

**அப்பா உமக்கு மகிமையும்**
அப்பா உமக்கு கனத்தையும் செலுத்துகிறோம்
நாங்கள் செலுத்துகிறோம் - 2

எங்கள் நடுவிலே நீர் வந்ததற்காக - 2
எல்லா நேரமும் துதியை செலுத்துகிறோம் - 2

1. எண்ணில்லா நன்மை செய்த தேவனே
எண்ணி எண்ணி உந்தன் நாமம் பாடுவேன் -2
கண்மணி போல் என்னை காத்த நேசரே
காலமெல்லாம் உந்தன் புகழ் பாடுவேன் -2

2. வானம் பூமி படைத்த எங்கள் தேவனே
வழுவாது என்னைக் காத்த ராஜனே -2
கிருபை இரக்கம் நிறைந்த எங்கள் நேசரே
கீதங்களால் உந்தன் நாமம் புகழுவேன் -2

3. பாவம் போக்க பாரில் வந்த தெய்வமே
பணிந்திடுவேன் உந்தன் பாதம் என்றுமே
பாசத்துடன் சிலுவை சுமந்த நேசரே
பயத்துடனே உந்தன் நாமம் தொழுகுவேன் -2

## பாடல் - 1264

**பாவம் போக்கும் தெய்வம் தான்**
பரிசுத்த தெய்வம் தான் -2
இயேசு ராஜன் எங்கள் இயேசு ராஜன்

1. வாழ்க்கை என்னும் படகிலே இயேசு வந்திடுவார்
கலங்கரை தீபமாய் அவர் இருந்திடுவார் -2
கலங்கிட வேண்டாம் பயந்திட வேண்டாம் -2
கல்வாரி நாதன் உன்னை கைவிட மாட்டார் -2

2. சந்தோஷம் சமாதானம் உனக்கு தந்திடுவார்
சத்திய பாதையிலே தினம் நடத்திடுவார் -2
கூடி வந்திடு தேடி வந்திடு -2
ராஜாதி ராஜன் உன்னை பாதுகாப்பாரே -2

3. வறட்சியான காலத்திலே திருப்தியாக்குவார்
வளமிக்க தோட்டம் போல செழிப்பாக்குவார்
தாமதம் வேண்டாம் தயங்கிட வேண்டாம்
கர்த்தாதி கர்த்தர் உன்னை காத்திடுவாரே

## பாடல் - 1265

**யாரை நான் அனுப்புவேன்?**
யார் போவார் என் காரியமாய்?
என்ற உம் குரல் கேட்குதய்யா (2)
போகிறேன் உம் காரியமாய் - நான் (2)

1. கண்கள் இருந்தும் குருடர்களாய்
காதுகள் இருந்தும் செவிடர்களாய்
உள்ளம் இருந்தும் ஊமைகளாய்
வாழ்கின்ற ஜனத்தை மீட்டிடவே (2)

2. பணம் இருந்தும் பாமரராய்
பட்டம் இருந்தும் மூடர்களாய்
இரட்சகர் இருந்தும் பாவிகளாய்
வாழ்கின்ற ஜனத்தை மீட்டவே (2)

3. காணாமற் போன ஆடுகளாய்
தொலைந்து போன பாவிகளாய்
தகப்பனை இழந்த பிள்ளைகளாய்
தவிக்கின்ற ஜனத்தை மீட்டிடவே

## பாடல் - 1266

**ஜெப ஆவி ஊற்றுமைய்யா**
ஜெபத்தை கேட்பவரே

மாம்சமான யாவருமே உம்மிடம் வருவார்கள்
உள்ளத்தை தருவார்கள்

1. விண்ணப்பம் செய்ய ஆளில்லை
என்று ஆச்சர்யம் அடைந்தவரே
விண்ணப்ப வீரர்கள் எங்கும் எழும்பிட
விண்ணப்ப ஆவியை ஊற்றிடுமே

2. திறப்பிலே நின்று சுவரை அடைக்கும்
மனிதனை தேடினீரே
திறப்பிலே நின்று அழுது ஜெபித்திட
கிருபையின் ஆவியை ஊற்றிடுமே

3. நிர்மூலமானதை கட்டி எழுப்ப
பாழ் நிலம் பயிராக
மந்தையை போல மனிதர் பெருக
மன்றாட்டின் ஆவியை ஊற்றிடுமே

## பாடல் - 1267

**ஜெபமே ஜெயம் ஜெபம் ஜெயம்**
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜெபித்திட ஜெபித்திட ஜெயம் வருமே (2)
ஜெயம் ஜெயம் ஜெயம் அல்லேலூயா (2)

1. சத்துரு கோட்டை தகர்த்திடவே
நம் ஜெபமே பேராயுதம்
நித்திய வழியில் வெற்றி சிறந்திட
ஜெபமே பேராயுதம்
பேராயுதம் பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

2. அக்கினிச் சூளையில் அழியாமல் காத்தது
அனுதினம் ஜெப ஜீவியம்
ஆண்டவர் சமூகத்தில் வல்லமை பெற்றிட
ஜெபமே பேராயுதம்
பேராயுதம் பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

3. அற்புதம் அடையாளம் நடந்திடவே
நம் ஜெபமே பேராயுதம்
ஆண்டவர் வருகையில் நாமும் பறந்திட
ஜெபமே பேராயுதம்
பேராயுதம் பேராயுதம் ஜெபமே சர்வாயுதம்

## பாடல் - 1268

**அனுதினம் ஜெபிப்பதால் நீ சாத்தானின் எதிராளி**
ஜெபிப்பதை மறந்துவிட்டால்
நீ சாத்தானின் கூட்டாளி

நீ யோசித்துப் பார்! நீ யோசித்துப் பார்!

1. காலையில் எழுந்து நீ வேதத்தை படித்திடு
பேப்பரை படித்து விட்டால் சாத்தானின் கூட்டாளி

2. இரவில் தூங்கும் முன் குடும்பமாய் ஜெபித்திடு
டிவியில் மயங்கிவிட்டால் சாத்தானின் கூட்டாளி

3. காலமே எழும்பி நீ கர்த்தரை துதித்திடு
துதிப்பதை மறந்துவிட்டால் சாத்தானின் கூட்டாளி

4. படுக்கைக்கு செல்லுமுன் முழங்காலில் ஜெபித்திடு
சோம்பலாய் படுத்துவிட்டால் சாத்தானின் கூட்டாளி

5. வேலைகள் அனைத்திலும் கர்த்தரை துதித்திடு
மனிதனை உயர்த்திவிட்டால் சாத்தானின் கூட்டாளி

## பாடல் - 1269

**எலியாவின் தேவனும் நீர்தானய்யா**
கருத்தாக ஜெபித்திட கிருபை தாருமே
எலியாவைப் போல உந்தன் முன்பு
உறுதியாய் நின்றிட பெலன் தாருமே



அட்டவணை

1. பாகால் முன் உம்மை நான் உயர்த்திடவே
பலமான வல்லமை தாரும் தேவா
சத்துருக்கள் உம்முன் வீழ்ந்திடவே
வானத்தின் அக்கினி ஊற்றும் ஐயா

2. யோர்தானை போல் நிற்கும் பெரும் தடைகள்
அபிஷேகத்தால் இன்று விலகிடவே
அக்கினி அபிஷேகம் இப்பொழுதே
என்மீது ஊற்றிட வேண்டும் ஐயா

## பாடல் - 1270

**பிரே பார் இந்தியா பிரே பார் பிரே பார் இந்தியா**
உங்கள் இந்தியா எங்கள் இந்தியா நமது இந்தியா

1. இந்தியாவின் கஷ்டம் மாறுவதற்கு
மக்களின் வறுமை நீங்குவதற்கு
பிரிவினை எல்லாம் மாறுவதற்கு
எல்லோரும் ஒன்றாய் வாழ்வதற்கு

2. ஜாதி மதங்கள் ஒன்றாய் சேர
நிலங்கள் எல்லாம் கனிகளை கொடுக்க

3. ஆறுகள் எல்லாம் நிரம்பி வழிய
இந்தியா முழுவதும் செழிப்பாய் மாற

## பாடல் - 1271

**நான் ஜெபிக்கும் போதெல்லாம்**
உந்தன் சித்தம் செய்திட
உம்மைப் போல் மாற்றிடும்
வாஞ்சையோடு கதறுவேன் –2

1. கர்த்தருக்கு காத்திரு புதுபெலன் அடைவாய்
நீ பறந்து சென்றாலும் கர்த்தருக்கு காத்திரு – 2

புது பெலன் புது பெலன் அடைவாய் (நான்)

2. உம் வசனம் தியானிக்கையில் தேவஞானம் தாருமே
அப்பமாக மாற்றிடும் புசித்து நான் சந்தோஷிப்பேன் –2

3. நான் நடக்கும் பாதைகளில் தவறாமல் காத்திடும்
தூதர்களை அனுப்பி பாதையை நீர் செம்மைச் செய்யும்

## பாடல் - 1272

**ஜெபிக்கின்ற நேரம் நினைவும் மனமும் மதுரமாகின்றதே**
ஜெபம் கேட்கும் இயேசு நீர் பதில் பேசும் நேரம்

மாராவும் இனிக்கின்றதே
வனாந்திரம் செழிக்கின்றதே
வறண்ட நிலம் களிக்கின்றதே

1. தேன்கூடும் அதின் தெளி தேனும்
உம் வசனத்துக்குக் கிணையாகுமா
உகந்த பலியாய் உயிர் கொடுத்தாலும்
உம் அன்பிற்கு ஈடாகுமா – 2
உம் பேரன்புக்கிணையாகுமா

2. உம் மனதுருக்கம் உம் மா இரக்கம்
நான் வாழ போதுமையா
உயிர் உள்ளவரைக்கும் உம்மை பாட ஆசை
ஆயுள் தான் போதாதையா
ஆயிரம் ஆண்டுகள் போதாதையா

## பாடல் - 1273

**உறங்காத கண் என்னில் தாரும் தேவா**
வழிகின்ற கண்ணீரும் வேண்டும்
அழிகின்ற ஆத்தும பாரம் வேண்டும்
இரவும் பகலும் நான் புலம்ப வேண்டும் (2)

1. அறியாத மக்கள் பல கோடியாக
தினம் தோறும் அழகின்றாரே (2)
திறப்பின் வாயிலில் நின்று
நான் கதற என்னையே தந்தேன்
ஏற்றுக்கொள்ளும்

2. சாத்தானின் தந்திர வலையினில்
எங்கள் தேசத்தின் ஜனம் வீழுதே (2)
அடிமைகள் நுகத்தை முறித்திட
எந்தன் கைகளில் வலிமை தந்திடுமே

3. மேய்ப்பனில்லாத ஆடுகள் போல
ஜனக்கூட்டம் சிதறிடுதே (2)
மெய்யான ஆயன் உம்மை நான் காட்ட
எந்தனின் மீதில் கருணை கூறும் (2)



அட்டவணை

### பாடல் - 1274

**ஒரு மணி நேரம் ஒரு மணி நேரம்**
விழித்திருந்து ஜெபிக்கக் கூடாதா
ஆவி உற்சாகம் உள்ளதுதான்
மாமிசமோ பெலவீனமானது

1. ஜெபத்தினால் தீராத துன்பங்கள் ஏதுமில்லை
பின்பு ஏன் நீ இன்று ஜெபிக்கவில்லை?
ஜெபம் என்பது ஜீவன் போன்றது
ஜெபித்தால் ஜெயமாகும்
ஜெபித்தால் சுகமாகும்

2. கோரேஸின் காலத்தலும் தரியுவின் காலத்திலும்
தானியேலின் காரியம் ஜெயம் ஆனது
காரணம் என்ன? – 2
முழங்காலேயன்றி வேறென்ன – காரணம்

### பாடல் - 1275

**உள்ளம் உடைந்து உருகி ஜெபிக்கும்**
என்னை கண்ணோக்கிப் பாரும்
துன்பத்தை கண்ட வருடங்களுக்கு
சரியாய் இன்பத்தை தாரும்

1. இயேசு நாதா ஏழைக்கு நீர்
இரக்கம் காட்டுமேன்
எதுவரைக்கும் கோபமாய் இருப்பீர்
திரும்பி வாருமேன்

2. வாழ்க்கையிலே சோகமென்றால்
தாங்கிக் கொள்ளுவேன்
சோகமே தான் வாழ்க்கையென்றால்
என்ன செய்குவேன்

3. மரண இருளின் பள்ளத்தாக்கில்
நடந்து செல்கிறேன்
தேவரீர் என்னோடேகூட இருக்க
விண்ணப்பம் செய்கிறேன்

### பாடல் - 1276

**வானம் வெண்கலமாய் ஆவதேன்**
பூமியும் இரும்பாய் ஆவதேன்
கற்பனைகள் பத்து கற்பனைகள்
கடைப்பிடிக்காதே போவதால்

1. அடிமைத்தன வீடாம் எகிப்தை விட்டு
அழைத்துச் சென்றவர் தேவன் அல்லவா
அந்த தேவனை உந்தன் சொந்த தேவனாய்
ஆராதித்தால் ஆசி மழை பெய்யுமே

2. முற்றும் உயர்குலத் திராட்சையாக
இயேசு தேவன் உன்னை நாட்டினாரே
நீயோ அவருக்கு காட்டு திராட்சையின்
ஆகாத கொடியாய் மாறியதென்ன?

3. இயேசுவை விட்டு தூரப்பட்டு
மாயைப் பின்பற்றி அலைவதற்கு
வழிபோக்கன் போலவும் பரதேசி போலவும்
உன் வாழ்வில் இயேசு இருப்பாரே

## பாடல் - 1277

**இயேசு உன்னில் இருப்பதாலே**
அழகன் நீ அழகன்
கருப்பானாலும் அழகன்
சிவப்பானாலும் அழகன்
எப்படியாயினும் அழகன்
இயேசுவுக்கு அழகன்

1. கருப்பு என்றால் பாவம் என்று
எண்ணி எண்ணி வெம்பி வெம்பி
நொந்து நொந்து சோர்ந்திடாதே
நீ சோர்ந்திடாதே
இயேசு தேவன் இன்று செங்குருதி கொண்டு
உன்னை பொன்னாய் மாற்ற
நீயும் அழகன் ஆனாய்

2. வானம் அகலும் பூமி உருகும்
பூவும் உதிரும் புல்லும் உலரும்
வேத வசனம் நிலைத்து நிற்கும்
நீயும் நிலைத்து நிற்பாய்
தேகம் அழுகியப் போகும்
தேவ சாயல் அடைவாய்
இயேசுவோடு இருப்பாய்
என்றென்றும் வாழ்வாய்

## பாடல் - 1278

**தேவ ஜனமே சும்மாயிரு**
கர்த்தர் உனக்காய் யுத்தம் செய்கிறார்
அமர்ந்திருந்து அறிந்து கொள்ளு
அவரே தேவன் என்று

1. கிரியை கிரியை அபூர்வ கிரியை செய்திடவும்
அவருக்கே அன்றி எவருக்கும் தெரியா
நாமத்தில் வெளிப்படவும்
எல்ஷடாய் கடந்து செல்கிறார்
எதிரிகளை துவம்சம் செய்கிறார்
என்னையோ மீட்டுக் கொள்வார்

2. தேவனின் தேவனின் மவுனம் மவுனம் கலைகிறது
என் ஜனமே சீக்கிரமாய்
பேழைக்குள் பிரவேசி
சினம் கடந்து போகிறது
கொஞ்ச நேரம் ஒளித்துக் கொள்ளு
இயேசுவுக்குள் ஒளிந்து கொள்ளு

3. இராஜா இராஜா இராஜாதி ராஜா வருகின்றாரே
இருப்பு கோலால் ஆளுகை செய்ய
இரக்கத்தை கைவிட்டாரே
இன்னல் சிறகை விரிக்கிறது
எங்கும் பறந்து போகிறது
எல்லாம் புதிதாய் ஆகிறது

## பாடல் - 1279

**தேவன் செய்த நன்மை ஏராளம்**
அதை சொல்லி துதிப்பேன் எந்நாளும்
துதித்தலே என் இன்பமே
ஏற்றதுமாய் உள்ளதே

1. தாயின் வயிற்றில் உருவாக்கினீர்
கர்ப்பத்திலே என்னை ஆதரித்தீர்
நீரே என்னை பிறக்க வைத்தீர்
இன்று வரை என்னை நடத்தினீர்

2. சோதனையை தாங்குகின்ற
பெலனை எனக்கு தந்தீரே
சோதனைக்கெல்லாம்
தப்பித்துக் கொள்ளும்
வழியையும் நீர் காட்டினீர்

3. எனக்காய் யுத்தம் செய்தீரே
யுத்தத்தில் ஜெயமும் தந்தீரே
வில்லை ஒடித்து ஈட்டியை முறித்து
யுத்தங்களை ஓயப்பண்ணுகிறீர்

4. எத்தனை வருஷம் துன்பங்களோ
எத்தனை நாட்கள் சிறுமைகளோ
அதற்கு சரியாய் அதற்கு மேலாய்...
மகிழ்ச்சியை நீர் தந்துவிட்டீர்

5. வாலாய் அல்ல தலையாக்கினீர்
கீழாய் அல்ல மேலாக்கினீர்
மேன்மையான கனத்திற்குரிய
பாத்திரமாய் மாற்றினீர்

## பாடல் - 1280

**சந்தோஷமே சந்தோஷமே இயேசுவில் தானே**
இங்கு போல் சந்தோஷமே எங்குமில்லையே
உண்மையான நிலையான பெரிய சந்தோஷம்

1. இயேசுவோடு பேசுவதே நமக்கு சந்தோஷம்
இயேசுவோடு இருப்பதே நமக்கு சந்தோஷம்
அவரும் நம்மில் நாமும் அவரில்
இருந்துவிட்டாலே வாழ்க்கை முழுவதும்
சந்தோஷமே இன்ப மயமே

2. பரிசுத்தமாய் வாழ்வதுவே நமக்கு சந்தோஷம்
பாவமில்லா வாழ்க்கையதே நமக்கு சந்தோஷம்
இயேசுவுக்காய் பிரியமாக வாழ்வது தானே

3. இயேசுவையே துதிப்பதுவே நமக்கு சந்தோஷம்
தேவனையே உயர்த்துவதே நமக்கு சந்தோஷம்
ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதே
பரலோக தெய்வீக இன்ப சந்தோஷம்



அட்டவணை

4. வேதத்தையே ருசிப்பதுவே நமக்கு சந்தோஷம்
இராப் பகலாய் தியானிப்பதே நமக்கு சந்தோஷம்
அது சொன்னபடி நாம் என்றும் வாழ்ந்துவிட்டாலே
வாழ்க்கையிலே துன்பமில்லை சந்தோஷந்தானே

5. இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டோமே
அழியாத இரட்சிப்பை பெற்றுக் கொண்டோமே
உலகில் ஏதும் இருந்தாலும் இல்லாவிட்டாலும்
பரலோகில் இடமுண்டு போதும் போதுமே

6. உலகம் தரும் சந்தோஷமே எல்லாம் மாயையே
அதினாலே வேதனையும் துன்பமும் தானே
யாராலும் தந்திடா என்றும் அழியா
சந்தோஷம் சமாதானம் இயேசு தந்தாரே

## பாடல் - 1281

**எல்லோரும் கூடியே சங்கீதம் பாடியே**
ராஜாவை வாழ்த்துகிறோம்
உம் நாமம் உயர்த்துகிறோம்

1. இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும்
மூடினாலும் கர்த்தாவே நீர் என் மேல் உதிப்பீரே
இயேசப்பா ஸ்தோத்திரம் ஓசன்னா ஸ்தோத்திரம்

2. நீதியின் சூரியனே நித்திய வெளிச்சம் நீரே
தேவனே உம் மகிமையாலே என் துக்கம் முடிந்திட்டதே

3. நித்தியமாய் மகிழ்ச்சி தலைமேல் இறங்கிடுதே
சஞ்சலம் தவிப்பு எல்லாம் விலகி ஓடிடுதே

4. கூட இருப்பவரே விலகிடாதவரே
நிரந்தரமாய் வாசம் செய்ய எனக்குள் வந்தவரே

## பாடல் - 1282

**அல்லேலூயா அல்லேலூயா**
ஜீவனுள்ள தேவன் நீரே
ஆராதிக்கின்றோம் ஆர்ப்பரிக்கின்றோம்
உயிரோடிருப்பவரை

1. மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?
என்றே முழங்கி ஜெயித்தெழுந்தீர்
சாவை வென்றுவிட்டீர்

2. சாவாமை உள்ள தேவன் நீரே
சதா காலமும் ஜீவிக்கின்றீரே
நீண்ட ஆயுள் உள்ளவரே
நிரந்தரமானவரே

3. முதலும் முடிவும் இல்லாதவரே
ஆதி அந்தம் எல்லாம் நீரே
அநாதி தேவனாய் இருப்பவரே
அழிவில்லாதவரே

4. கல்லுமல்ல மண்ணும் அல்ல
ஆவியான தேவன் நீரே
மகிமையின் ராஜா ஜீவிக்கின்றீர்
என்னோடு இருக்கின்றீர்

5. உயிர்த்தெழுதலும் ஜீவனும் நீரே
உமக்குள் மரித்தோர் உயிர்த்தெழுவாரே
இயேசுவின் பின்னே வருவோருக்கு
மரணம் என்றும் இல்லையே

## பாடல் - 1283

**துதி கனம் செலுத்துகிறோம்**
திரியேக தேவனுக்கு
ஆராதனை நாயகரே
என்றென்றும் புகழ் உமக்கே
என்றென்றும் துதி உமக்கே

1. பரிசுத்தரே பரம பிதாவே
பரலோக ராஜாவே
இருள் ஏதும் பாவம் ஏதும்
இல்லாத தூயவரே

2. பேரறிவும் ஞானமும் நீரே
ஆலோசனை கர்த்தர் நீரே
யோசனையில் பெரியவரே
மறைபொருள் உமக்கில்லையே

3. சர்வலோக நீதிபதியே
பூமியில் ராஜாவே
நீதியோடும் நிதானத்தோடும்
நியாயங்கள் தீர்ப்பவரே

## பாடல் - 1284

**இயேசு ராஜா நன்றி என்று சொல்லுகிறேன்**
செய்த நன்மை நினைத்து
துதி சொல்லி பாடுகிறேன்

காலையும் மாலையும் எந்த வேளையிலும்
துதிபாடல் ஓய்வதில்லை
காலமே மாறினும் சூழ்நிலை மாறினும்
நாவில் துதி ஓய்வதில்லை

1. வானம் பூமி யாவும் ஆளுகின்றவரே
ராஜ்ஜியம் எல்லையில்லையே - உம்
என்னையாளும் ராஜாவே உம்
அன்பின் எல்லையில்லையே

2. வாக்கு மாறா தேவன் வாக்குத்தத்தம் தந்து
சொன்னதெல்லாம் செய்தீரே (நீர்)
பொய்யுரையா என் தேவனே நீர்
மனம் மாறுவதில்லையே

3. வாக்குக்கடங்காத பெருமூச்சோடு
வேண்டுதல் (எனக்காகவே) செய்கிறீர்
எனக்காக யாவையும் நீர்
செய்து முடிக்கின்றீர்

4. பாவங்களுக்கேற்ற தண்டனை தராமல்
மன்னிப்பையும் தந்தீரே - நீர்
இரக்கத்தில் ஐஸ்வர்யமே உம்
இரக்கத்தில் முடிவில்லையே

5. பாதாளத்தில் நானும் போய் சோர்ந்திடாமல்
பாதுகாத்துக் கொண்டீரே - நீர்
என் நீதியால் இல்லையே உம்
சுத்த கிருபையினாலே

## பாடல் - 1285

**இயேசு நல்லவர் இயேசு வல்லவர்**
இயேசு இரட்சகரே

அல்லேலுயா ஆராதனை ராஜ ராஜனுக்கே

1. வறண்ட நிலமாய் இருந்த வாழ்வை
வயலாய் மாற்றினாரே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்கை
களிப்பாய் மாற்றினாரே
குறைகள் எல்லாம் நிறைவாய் மாற்றி
கவலை தீர்த்தாரே
கண்ணீர் துடைத்தாரே – அவர்

2. சேற்றினின்றும் குழியினின்றும்
தூக்கி எடுத்தாரே
கன்மலைமேல் கால்கள் நிறுத்தி
உறுதிப்படுத்தினாரே
புதிய பாடல் நாவில் தந்து
பாட வைத்தாரே
துதிக்க செய்தாரே

3. பாவம் யாவும் மன்னித்தாரே
சாபம் நீக்கினாரே
கிருபையாலே நீதிமானாய்
என்னை மாற்றினாரே
பிள்ளையாக என்னை கூட
ஏற்றுக் கொண்டாரே (அப்பா இயேசுவே – 2)

4. பரலோகத்தில் எனது பெயரை
எழுதி வைத்தாரே
நானும் வாழ அங்கோர் இடத்தை
தெரிந்து வைத்தாரே
இயேசு வருவார் அழைத்துச் செல்வார்
பறந்து சென்றிடுவேன்

## பாடல் - 1286

**எந்தன் நெஞ்சமெல்லாம்**
நன்றி சொல்லிடுதே
உள்ளத்தின் ஆழத்திலே ஆராதனை செய்து
நன்றி என்றும் நான் மறவேன்
கண்ணீரோடு நன்றியை
காணிக்கையாய் ஆக்குகிறேன்

1. நோயின் கொடுமையிலே
மரண படுக்கையிலே
கைவிடப்பட்டு நம்பிக்கையிழந்து
கலங்கி தவித்த நேரத்திலே
இனி பிழைப்பேனோ என்ற நிலைமையிலும்
ஓடி வந்தீரே சுகம் கொடுத்தீரே
இயேசய்யா நீர் எனது வைத்தியரே

2. எதற்கும் உதவாத குப்பை நான் ஐயா
அற்பமான என்னையும் கூட
உமக்காய் தெரிந்து கொண்டீரே
எல்லோருமே என்னை வெறுக்கையிலே
உந்தன் பார்வைக்கோ
நான் அருமையானேன் - இயேசய்யா
நீர் என்னையும் அழைத்தீரே

3. சிரித்த போதெல்லாம் கூட சிரித்தனரே
அழுத போதோ யாரும் இல்லையே
நான் மட்டும் தானே அழுதேனே
என் வாழ்விலும் என் தாழ்விலுமே
இன்ப துன்பமோ எந்த நிலையிலுமே
பிரியாமல் நீர் கூட இருக்கின்றீரே

## பாடல் - 1287

**இராஜாதி இயேசு ராஜாவே**
சகல வானங்களின் சர்வ பூமியில் நீரே ராஜனே

1. பரலோக ராஜாவே
இந்த பூமியின் ராஜாவே
விண்ணுலக ராஜாவே
இந்த மண்ணுலக ராஜாவே
சகல ஜனங்களுக்கெல்லாம்
ஒரே ராஜா நீரே

2. மகிமையின் ராஜாவே
மகத்துவ ராஜாவே
சாலேமின் ராஜாவே சர்வ வல்ல ராஜாவே
ஜெய கெம்பீரமான மகா ராஜாவே

3. நீதியும் நேர்மையுமாய்
ஆளுகை செய்கிறீர்
உண்மையும் உத்தமுமாய்
நியாயம் செய்கிறீர்
சத்தியம் காக்கும் ராஜா
சத்திய தேவன் நீரே

4. உலகத்தின் ராஜாக்கள்
நிரந்தரம் இல்லையே
நீர் ஒருவரே இயேசுவே நிரந்தர ராஜாவே
உமது சிங்காசனம்ம அசைக்க முடியாதே

5. ராஜாவை போற்றுகிறோம்
ஆராதனை செய்கிறோம்
வாழ்த்தி வணங்குகிறோம்
உயர்த்தி மகிழ்கிறோம்
வாழ்க வாழ்க வாழ்க - இயேசு
ராஜா நாமம் வாழ்க

## பாடல் - 1288

**உம்மை போற்றி புகழ் தேடி வந்தோம்**
உம்மை மகிமைப் படுத்த
கூடி வந்தோம் அல்லேலூயா - (4)

1. ஒரே பேறான குமாரனை
எங்களுக்காக தந்தவரே
இவ்வளவாக அன்பு கூர்ந்த
பிதாவே உம்மை தொழுகிறோம்

2. உலக ஜனத்தின் பாவங்களை
சுமந்து தீர்க்க வந்தவரே
தேவ ஆட்டுக்குட்டியான இயேசையா
உம்மை தொழுகிறோம்

3. சத்தியத்தையே போதிக்கிற
சத்தியத்திலே நடத்துகிற
சத்திய ஆவியே தேற்றரவாளரே
பரிசுத்தாவியே தொழுகிறோம்

4. துதிகள் மத்தியில் அசைவாடும்
தூயவரே எங்கள் நாயகரே
மூன்றில் ஒன்றாய் இருப்பவரே
முழுமனதாய் தொழுகிறோம்

## பாடல் - 1289

**வல்லமை வல்லமை இயேசுவின் வல்லமை**
அது பெரிய வல்லமை அதிசய வல்லமை

பயங்கரமாய் பெரும்
காரியங்கள் செய்யும் வல்லமையே
அதினாலொன்றும்
செய்யமுடியாதது இல்லையே

1. பூமியையே அவர் பார்த்திடவே
அது நடுங்கி அதிருமே
பர்வதங்களை அவர் தொட்டிடவே
அது புகைந்து போகுமே

2. சாத்தானின் எந்த வல்லமையை
நொறுக்கிடும் வல்லமை
சாவினையும் பாதாளத்தையும்
ஜெயித்த வல்லமை

3. உலர்ந்து போன எலும்புகளை
உயிர்ப்பிக்கும் வல்லமை
எந்த அற்புதமும் எல்லா அதிசயமும்
நடத்தும் வல்லமை

4. நோய்களையும் எந்த பெலவீனமும்
சுகமாக்கும் வல்லமை
ஒரு வார்த்தையிலே எல்லாம் நடந்திடுமே
கடல் காற்றும் அடங்குமே

5. ஆர்ப்பரிப்போம் கெம்பீரிப்போம்
பயங்கர தேவனையே
குலுங்கிடுதே நொறுங்கிடுதே
எரிகோ கோட்டையே

6. அனல் பறக்க ஆராதிப்போம்
அக்கினி தேவனையே
எரிகிறதே பற்றி எரிகிறதே
அவர் அக்கினி வல்லமை

## பாடல் - 1290

**பெரியவரே ஆராதனை**
உயர்ந்தவரே ஆராதனை

1. நல்லதையே போதிக்கின்ற
போதகரே ஆராதனை
போதிப்பதில் யோனாவிலும்
பெரியவரே ஆராதனை

2. யோசனையில் பெரியவரே
சிறந்தவரே ஆராதனை
ஞானத்திலே சாலமோனிலும்
பெரியவரே ஆராதனை

3. விசுவாசத்தை தொடங்கினீரே
முடிப்பவரே ஆராதனை
விசுவாசத்தில் ஆபிரகாமிலும்
பெரியவரே ஆராதனை

4. பயபக்திக்கு உரியவரே
பாத்திரரே ஆராதனை
பயபக்தியில் ஆலயத்திலும்
பாத்திரரே ஆராதனை

5. சகலவித வல்லமையும்
உடையவரே ஆராதனை
வல்லமையில் சாத்தானிலும்
பெரியவரே ஆராதனை

## பாடல் - 1291

**இயேசு ராஜா நம்ம ராஜா ஜெயமே எடுத்தாரே – நாம்**
வெற்றி கொண்டாடுவோம்
இன்று பாடி கொண்டாடுவோம்

1. சர்ப்பங்களையும் தேள்களையும்
மிதிக்க வைத்தாரே
சகல சத்துருவின் சகல வல்லமையையும்
மேற்கொள்ள வைத்தாரே

2. பாவத்தின் மேலே பாடுகள் மேலே
ஜெயமே தந்தாரே
அவைகள் ஒன்றும் நம்மை
சேதப்படுத்தாதே இயேசு நம்முடனே

3. பொறுத்திருந்து கர்த்தர் செய்யும்
அதிசயம் பாருங்களேன்
இதுவரை கண்டிருந்த எகிப்தியர் ஒருவரையும்
இனிமேல் காண்பதில்லையே

4. மலை போல் இருந்த சோதனையெல்லாம்
மிதித்து நொறுக்கினாரே
பதரை போலாக்கி தூக்கி எறிந்தாரே

5. ஒரு வழியாய் நமக்கு எதிராய்
வந்தது எல்லாம்
ஒரு வழியாக துரத்தியடித்தாரே
ஆடிப்பாடிடுவோம்

## பாடல் - 1292

**எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்**
கண்களை ஏறெடுப்பேன்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்து
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன் - எனக்

2. மலைகள் பெயர்ந்தகன்றிடினும்
நிலைமாறி புவியகன்றிடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே - எனக்

3. என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன்
இராப்பகல் உறங்காரே - எனக்

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுவாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப்படுத்தாதே - எனக்

5. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்குமென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய் - எனக்

## பாடல் - 1293

**பயப்படாதே சிறு மந்தையே**
பரலோக இராஜ்ஜியம் உனக்குள்ளதே
தேடுங்கள் தேவனின் இராஜ்ஜியத்தை
கூட யாவும் கொடுப்பாரே

1. புசிப்பும் அல்ல குடிப்பும் அல்ல
தேவனின் இராஜ்ஜியமே
நீதி சமாதானம் நித்திய சந்தோஷம்
நிர்மலன் ஆவியாலே

2. ஐசுவரியமுள்ளோர் அடைவது அரிது
ஆண்டவர் இராஜ்ஜியத்தில்
ஆசையெல்லாம் தியாகம் செய்தோர்
ஆளுவார் இயேசுவோடு

3. கர்த்தாவே என்றும் கனியற்ற மனிதன்
கானான் இராஜ்ஜியத்தை
பிதாவின் சித்தம் நித்தம் செய்தால்
சேரலாம் இராஜ்ஜியத்தில்

## பாடல் - 1294

**அன்பரின் நேசம் பெரிதே**
அதை நினைந்தே மகிழ்வோம்

1. உலக தோற்றம் முன்னமே
உன்னத அன்பால் தெரிந்தோரே
இந்த அன்பு ஆச்சரியமே
இன்பம் இகத்தில் வேறு இல்லை

2. அன்பின் அகலம் நீளமும்
ஆழம் உயரம் அறிவேனோ
கைவிடாமல் காக்கும் அன்பு
தூக்கி எடுத்து தேற்றும் அன்பு

3. பாவ சேற்றில் எடுத்தென்னை
பாவமெல்லாம் தொலைத்தாரே
தூய இரத்தம் சிந்தி மீட்ட
தூய்மையான தேவ அன்பு

4. தந்தை தாயும் மறப்பினும்
தாங்கி சேர்ப்பேன் என்றாரே
உள்ளங்கையில் வரைந்தாரே
உன்னதர் அன்பை என்றும் மறவேன்

5. பர்வதங்கள் நிலை அதிர்ந்தாலும்
பூமியின் நிலையே மாறினாலும்
நீங்கா அன்பின் மேன்மையினையே
நீடூழியாய் நாம் பாடி மகிழ்வோம்

**பாடல் - 1295**

**எந்தன் ஜீவனிலும் மா அருமை**
உந்தன் கிருபை கிறிஸ்தேசுவே
அந்தமேயில்லாத அன்பின் ஆழமதை
எண்ணி நான் துதித்திடுவேன்

1. சந்தோஷமுடன் துதி சாற்றிடுவேன்
சந்ததம் நல்கிடும் நன்மைகட்காய்
நாவினாலே திரு நாமத்தை போற்றிட
நாட்களும் போதுமோ நானிலத்தில்

2. இகமதிலென் பெலன் குறைந்திடினும்
அக மதில் உம் பெலன் பெருகுவதால்
கழுகினைப் போல் புது வாலிபம் என்னுள்ளில்
கிருபையால் அனுதினம் வளர்ந்திடுதே

3. கோதுமை மணி மண்ணில் மாய்வது
போல் சேவையில் ஜீவனை ஊற்றிடினும்
தேவா நின் கிருபையின் ஊற்றென்னில்
பாய்வதால் சோராது நிறைபலன் ஈந்திடுவேன்

4. அற்புதமாய் என்னை அழைத்தவரே
அற்பமான எந்தன் சரீரத்தினை
தற்பரனே உந்தன் சாயலாய் மாற்றிடும்
ஒப்பற்ற சுவிசேசம் ஈந்திட்டீரே

5. கிருபையின் பூரணர் வெளிப்படும் நாள்
மகிமையாய் நெருங்கியே வந்திடுதே
சீர்பொருந்தி அவரோடு நாம் சீயோனில்
சேர்ந்தொன்றாய் வாழ்வோம் நித்தியமாய்

## பாடல் - 1296

**எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது**
கர்த்தர் மகிமை உன்மேல் உதித்தது
பூமியையும் ஜனங்களையும் காரிருள் மூடும்
ஆனாலும் உன் மேல் கர்த்தர் உதிப்பார்

1. உன் குமாரரும் குமாரத்திகளும்
உன் அருகினில் வளர்க்கப்படுவர்
உன் கண்ணால் கண்டு நீ ஓடி வருவாய்
உன் இருதயம் மகிழ்ந்து பூரிக்கும்

2. உன்னை சேவிக்கா ஜாதிகள் அழியும்
இராஜ்ஜியங்களும் பாழாகப் போய்விடும்
கர்த்தர் நகரம் பரிசுத்தரின் சீயோன்
என்று கூறி நீ அழைக்கப்படுவாய்

3. உன் தேசத்திலே கொடுமை கேட்காதே
உன் எல்லைகளில் நாசமும் வராதே
உன் மதில்களை இரட்சிப்பென்று சொல்வாய்
உன் வாசல்களை துதியென்று சொல்வாய்

4. சூரியன் இனி அஸ்தமிப்பதில்லை
சந்திரன் இனி மறைவதுமில்லை
கர்த்தரே நித்திய வெளிச்சமாவாரே
உன் துக்க நாட்கள் முடிந்து போயிற்றே

## பாடல் - 1297

**ஒரு நன்மையும் இனி குறைவுபடாது**
இயேசு நம்மோடிருப்பதால்
கிறிஸ்தேசு நம்மோடிருப்பதால்

1. அவரே நமக்கு பெலனானார்
அவரே நமக்கு சுகமானார்
அவரே நமது நீதியானார்
அவரே நமது ஞானமானார்

2. அவரே நமக்காய் சாபமானார்
அவரே நமக்காய் பாவமானார்
அவரே பேய்களையும் வென்றார்
அவரே சாவை மேற்கொண்டார்

3. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சி அடையலாம்
அவை பட்டினியாகவும் கிடக்கலாம்
தினம் கர்த்தரை தேடுவோர்க்கு
ஒரு நன்மையும் குறைவதில்லை

## பாடல் - 1298

**ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் இயேசு ரத்தம் ஜெயம்**
பயமில்லை பயமில்லை இயேசு இரத்தம் ஜெயம்

இரத்தம் ஜெயம்.....

1. இரத்தம் என்று சொன்னவுடன் பரலோகம் முழங்குவது
இரத்தம் என்று சொன்னவுடனே பாதாளம் நடுங்குது
இயேசுவின் இரத்தத்தை தெளிப்பதினாலே
சாத்தானின் ஆயுதங்கள் ஒன்றும் வாய்க்காதே

2. பரிந்து பேசும் இயேசு இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம்
பாதுகாக்கும் இயேசு இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம்
நீதிமானாக்கும் இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம்
பாவம் போக்கும் இயேசு இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம்

3. அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி நீரே
துதி கன மகிமையை செலுத்துகின்றோமே - 2
பரலோகம் பூலோகம் முழங்கால்கள் முடக்குது
மூவொரு தேவனே என் நாமம் புகழுது

4. என் மேல் கொண்ட அன்பினால் உம் ரத்தம் சிந்தினீர்
பாவமற நம்மை கழுவி பிதா முன்னே நிறுத்தினீர்
ராஜாக்களாய் ஆசாரியராய் என்னை நீர் மாற்றினீர்
உமக்கே வல்லமையும் மகிமையும் உடையதே

## பாடல் - 1299

**ஆளுகை செய்வோம் நாம் இயேசுவுடன்**

1. வானத்தின் மேலே ஆளுகை
பூமியின் மேலே ஆளுகை
வார்த்தையினாலே ஆளுகை
தேவ ஆவியினாலே ஆளுகை

2. இது இயேசு தந்த ஆளுகை
அவர் ரத்தம் தந்த ஆளுகை
அவர் சித்தம் செய்ய ஆளுகை
நாம் நித்தம் செய்வோம் ஆளுகை

3. இது பாவம் போக்கும் ஆளுகை
பயத்தை நீக்கும் ஆளுகை
சாபத்தை போக்கும் ஆளுகை
சாத்தானை விரட்டும் ஆளுகை

## பாடல் - 1300

**போதும் நீர் போதும்**
எந்தன் வாழ்வில் நீரே போதும்

1. நீர் எந்தன் மேய்ப்பராய் இருப்பதே போதும்
நான் உந்தன் ஆடாய் வாழ்வதே போதும்
என் பெலவீனத்தில் உம் பெலன் போதும்
உந்தன் கிருபை எனக்குப் போதும்

2. ஏழுமடங்கு நெருப்பு நடுவிலும்
இயேசு எம்மோடு அங்கு நடந்திடுவீரே
சிங்கத்தின் கெபியில் தள்ளப்பட்டாலும்
சீயோனின் நாதன் உடனிருப்பீரே

3. கர்த்தர் நீர் பெரியவர் என்றறிவேனே
யுத்தத்தில் வல்லோராய் விளங்குகின்றீரே
உன்னதரே உம்மால் செய்யக்கூடாத
அதிசயமான காரியம் உண்டோ

## பாடல் - 1301

**பேரின்ப நதியே ஸ்தோத்திரம்**
பேராசீர்வாதமே ஸ்தோத்திரம்
பொங்கி பாயும் நதியே ஸ்தோத்திரம்
புது பெலனால் நிரப்புகிறீர் ஸ்தோத்திரம்

1. ஆவியான தேவனே ஸ்தோத்திரம்
அச்சாரமானவரே ஸ்தோத்திரம்
ஆடிப்பாட பெலன் தந்தீரே ஸ்தோத்திரம்
ஆபத்திலும் துணையானீரே ஸ்தோத்திரம்

2. ஆயிரங்களில் சிறந்தவரே ஸ்தோத்திரம்
ஆத்துமாவின் நேசரே ஸ்தோத்திரம்
அன்பினாலே தேற்றுகிறீர் ஸ்தோத்திரம்
அரவணைத்து நேசிக்கிறீர் ஸ்தோத்திரம்

3. அள்ளி அள்ளி பருக வைத்தீர் ஸ்தோத்திரம்
அபிஷேகத்தால் நிரப்புகிறீர் ஸ்தோத்திரம்
குடும்பமாக தொழுகிறோமே ஸ்தோத்திரம்
குதூகலத்தால் நிரப்புகிறீர் ஸ்தோத்திரம்

## பாடல் - 1302

**கலங்காதே என்று கரம்பிடித்து என்னை**
அழைத்துச் செல்லும் இயேசு குரல்
தினமும் கேட்கிறேன் இயேசய்யா

1. நீர்தான் என் தந்தை நீர்தான் என் அன்னை
உம்மை நோக்கி நாள்தோறும்
ஓடி வருவேன்

2. பயப்படவும் மாட்டேன்
கலங்கிடவும் மாட்டேன்
பெரியவர் எனக்குள்ளே இருக்கின்றீரே

3. நீர்தான் என் அன்பர்
நீர்தான் என் நண்பர்
எப்பொழுதும் உதவி செய்ய கூட இருக்கிறீர்

## பாடல் - 1303

**கூடி ஜெபிக்க வந்தோம் இயேசு நாதா**
குடும்பமாய் தொழுவோம் கோடி ஸ்தோத்திரங்கள்

1. நோவா குடும்பம் அன்று
உம்மையே சேவித்ததால்
அழிவு பெரு வெள்ளத்தில்
அணைத்துக் காத்திட்டீரே

2. நானும் என் வீட்டாருமே
கர்த்தரையே சேவிப்போம்ம
யோசுவா தீர்மானித்தார்
தேசத்தை சுதந்தரித்தார்

3. பரலோக குடும்பத்திற்கும்
பூலோக குடும்பத்திற்கும்
நாம் காரணரே
நாடி பணிகின்றோம்

## பாடல் - 1304

**என் நெஞ்சில் நிறைந்தவரே**
நேசரே இயேசு ராஜா உமக்கே ஆராதனை
உயிருள்ள நாளெல்லாம்

1. உலக கவலைகள் மறக்கின்றேன்
உயிரே உம் பிரசன்னம் வருகின்றேன்
இணைந்து இசைந்திருப்போம்
என்றும் மகிழ்ந்திருப்போம்

2. ஆவி ஆத்துமா சரீரமெல்லாம்
அப்பனே இன்று அர்ப்பணித்தேன்
உம் விருப்பம் நிறைவேறட்டும்
எனது மறைந்திடட்டும்
எந்தன் விருப்பம் மறைந்திடட்டும்

3. சிலுவையில் சிந்தின திரு இரத்தம்
எனக்கு தருதே முழு சுத்தம்
ஆண்டு நடத்திடுமே
அரணாய் மாறிடுமே

## பாடல் - 1305

**ஆயத்தம் ஆயத்தம் ஆயத்தமாகிடு மகனே**
கர்த்தரின் சகல ஆசீர்வாதங்களும்
ஆயத்தமாயிரு
அதை சுதந்தரிக்க விசுவாசத்தோடு
ஆயத்தமாகிடுவோம்

1. பக்தியோடு ஜெபித்திடு
காலையில் ஆயத்தமாவோமே
பரவசத்தோடு பாடித் துதித்திட
ஆயத்தமாவோமே
ஆயத்தம் செய்திடும்
ஆண்டவர் இயேசு உடனிருக்கிறார்
ஆவியானவரின் துணையோடு
இன்று ஆயத்தமாகிடுவோம்

2. ஆயத்தம் என்னும் பாதரட்சையை
காலில் அணிந்திடுவோம்
ஆவியின் சேனைகளோடு போரிட
ஆயத்தமாகிடுவோம்
சேனையின் அதிபதி முன்னே செல்ல

ஆயத்தமாகிவிட்டார்
உருவின் பட்டயம் கையிலெடுத்து
உன்னுடன் வந்திடுவார்

3. ஆதியின் தேவன் ஆயத்தம் செய்ய
ஆசீர்வாதங்கள்
இன்று கண்டிட ஆவியானவர்
கண்களை திறந்தார்
ஆதாம் இழந்தான்
நமது இயேசு மீட்பு கொடுத்தார்
ஆசீர் பெற்றிட அசதியின்றி
ஆயத்தமாகிடுவோம்

## பாடல் - 1306

**உன்னதரே இயேசு ராஜா**
உயர்ந்த அடைக்கலமே
உமக்கே ஆராதனை -2

1. உம்மைத் தவிர உலகத்திலே
ஆதரிப்பார் யாரும் இல்லை ஐயா
ஒளிவீசும் திரு விளக்கே
எங்கள் இதயத்தின் மணிச்சுடரே

2. எண்ணி எண்ணி உம்மை ஏங்குகிறேன்
இயேசு உம் மகிமையில் மூழ்குகிறேன்
இரட்சிப்பின் நம்பிக்கையே
பட்சிக்கும் அக்கினியே

3. பரிசுத்த ஆவியின் வெள்ளத்திலே
பளிங்கு நதியில் நீந்துகின்றேன்
பரிசுத்தர் பரிசுத்தரே
பாலும் தேனும் ஓடும் கானானே

## பாடல் - 1307

**எண்ணங்கள் எல்லாம் ஈடேறும்**
இயேசு உனக்குள் இருப்பதால்
சொல்வது எல்லாம் நடந்துவிடும்
நீ இயேசு கூட இருப்பதால்

1. மலையைப் பார்த்து பேசிடுவோம்
அதுவும் பெயர்ந்து கடலில் விழும்
புயலைப் பார்த்து அதட்டிடுவோம்
அதுவும் அடங்கிப் போய்விடும்
சாத்தான் கூட்டத்தை விரட்டுவோம்
சத்திய வேதத்தை உயர்த்துவோம்
சாவு பயங்கள் நீக்குவோம்
சதா இயேசுவை உயர்த்துவோம்

2. இயேசு நாமத்தில் ஜெபிக்கும் போது
ஜெபத்தை தேவன் கேட்டிடுவார்
வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
மிகவும் அதிகமாய் செய்திடுவார்
சோர்வு இல்லாமல் ஜெபிப்போம்
வாக்குத்தத்தம் சுதந்தரிப்போம்
தடைகள் யாவும் முறிப்போம்
சதா இயேசுவை துதிப்போம்

3. தேவனைப் பார்த்து துதித்திடுவோம்
துதிகள் மத்தியில் வந்திடுவார்
துதிக்கும் மகிமைக்கும் பாத்திரரே
சதா காலமும் வாழந்திடுவார்
துதிக்கும் கர்த்தரின் பாட்டு
எதிரி சேனைக்கு வேட்டு
சர்வாயுதத்தை மாட்டு
சாத்தானை ஊரை விட்டு விரட்டு

## பாடல் - 1308

**கிறிஸ்துவுக்கு நான் புதுசிருஷ்டி**
தேவ ஆவியாலே பிறந்தவன்
கிறிஸ்துவினிடத்திலிருந்து
நான் ஜெபிக்கின்றேன்
கிறிஸ்துவைப் போல நானும் ஜெபிக்கின்றேன்

1. திறந்திட்ட வானம் எனக்கு உண்டு
அளவில்லா கிருபை அதிகம் உண்டு
என்னில் அப்பா இயேசுவை
இன்று காண்கின்றார்
இவனில் பிரியமாயிருக்கிறேன்
என்று சொல்கின்றார்

2. தூதர்கள் வானம் செல்கின்றனர்
ஜெப பதிலோடு வருகின்றனர்
ஆயிரம் பேர்கள் தேசத்தில்
என்னிடம் வர வேண்டும்
ஜெபத்திற்கு பதிலை
என் வழியாக பெறவேண்டும்

3. அவரோ கவிஞராயிருக்கிறார்
நான் அவர் கவிதையாயிருக்கின்றேன்
பதிலை பெறவே
அப்பா என்னை நியமித்தார்
என் ஜெபத்தை எடுத்தே
சாத்தானை முகத்தில் அறைந்திட்டார்

### பாடல் - 1309

**நீர்தானய்யா நல்ல மேய்ப்பன்**
உம்மைத்தான் பின் தொடர்வேன்

1. ரட்சண்ய நாளினிலே
என்னை இரட்சித்த தெய்வம் நீரே
தேனிலும் இனிய வார்த்தைகளாலே
தேற்றி என்றும் அணைப்பவரே

2. வாசலின் வழியாய் வந்தவரே
என்னை பேர் சொல்லி அழைத்தவரே
மந்தைகட்காகவும் ஜீவனைத் தந்து
ஜீவனை பெற்றவர் நீரே

3. போற்றுவார் போற்றட்டும்
தூற்றுவார் தூற்றட்டும்
புகழ் பாட தயங்கிடேனே
நித்தமும் உம்மை துதித்திடுவேன்
நிம்மதி என்றும் நிம்மதியே

### பாடல் - 1310

**கரம் கூப்பி நான் வணங்குவேன்**
உம்மை கைதட்டி நான் பாடுவேன்
இயேசுவே உம்மை நோக்கியே
விண்ணப்பம் நான் செய்கின்றேன்
என் வேண்டுதல் நீர் கேட்பதால



அட்டவணை

1. அப்பா என்றழைக்கும்
உரிமையைத் தந்தீர்
ஆவியோடு துதிக்க அபிஷேகித்தீர்
ஆயிரம் ஆயிரம் துதிகள் பாடியே
ஆண்டவரே உம்மை நான் ஆராதிப்பேன்

2. உலகத்தின் அமைதியை நான் தேடியே
துயரத்தால் கலங்கி தவிக்கும் போது
ஆறுதலும் அமைதியும்
என் உள்ளத்தில் தந்தீர்
அன்பரே உம் நாமம் அடைக்கலமே

3. தாயைப் போல் என்னை
அன்பாய் அணைத்தீர்
தந்தைப் போல் தோளில் தூக்கி சுமந்தீர்
வேதனை நோய்கள்
யாவும் குணமாக்கினீர்
வாழ்நாளெல்லாம் நன்மையால்
நிறைத்திடுவீர்

## பாடல் - 1311

**திறந்து விட்டோம் எங்கள் உள்ளம்**
திறந்து விட்டோம் எங்கள் இல்லம்
உள்ளே வாரும் என்னருமை இயேசுவே
நிரந்தரமாய் வாசம் செய்யும் தெய்வமே

1. கிறிஸ்துவுக்குள் ஒருவன் இருந்தால்
அவன் புதிய சிருஷ்டியாக மாறுவான்
பழையன ஒழிந்தன புதியன வந்தன
எல்லாம் புதிய சிருஷ்டியாக மாறின

2. ஞானிகளை வெட்கப்படுத்த
தேவன் பைத்தியங்களை
தெரிந்து கொண்டாரே
பெலவானை விட்டு விட்டு
பெலவீனனை தெரிந்தெடுத்தார்
எல்லாமே உமது கிருபை தானய்யா

3. தீமையை வெறுத்து தள்ளியே
நன்மை செய்பவர் இயேசு ஒருவரே
மேட்டிமை அழிந்திட
அசுத்தங்கள் நீங்கிட
தாழ்ந்தோரை நினைத்திடுமே தயவுடன்

## பாடல் - 1312

**இறைவா இயேசுவே**
உம்மை நான் அழைக்கிறேன்
என் உள்ளம் நீர் தங்கும் ஆலயம்

1. ஆலயத்தை ஒருவன் கெடுத்தால்
அவனை நான் கெடுப்பேன் என்றீர்
ஆலயத்திலே சுத்தம் நிலவ
ஆலயத்திலே ஜெபமும் பெருக
ஆவியாலே நிரப்பும் என்னை - உமது

2. அன்பு என்னும் தீபம் எரிய
இச்சை என்னும் தீமை விலக
தூப வர்க்கமாய் வெள்ளை போளமாய்
குங்கலியமாய் சாம்பிராணியாய்
ஜெபங்களை ஏறெடுப்பேன்

3. ஆவியின் கனிகள் பெருக
மாம்சத்தின் கிரியை ஒழிய
அன்பும் என்னும் தீபம் எரிய
பாசம் என்னும் ஒளியும் வீச
அபிஷேக தைலம் ஊற்றுமே

## பாடல் - 1313

**என்னை ஆட்கொண்ட இயேசு**
என் உள்ளத்திலிருந்து நல் வழி நடத்தி
நாளெல்லாம் காக்கிறார்
நன்மைகள் செய்கிறார்

1. அவர் காட்டிய பாதையில் நாளும் நடந்து
நற்செய்தி கொடுத்திடுவேன்
அவர் சுமந்த சிலுவை நானும் சுமந்து
அவர் பின் சென்றிடுவேன்

2. என் கர்த்தரின் கரத்தில் நானொரு களிமண்
அவரே குயவனாவார்
வனைகிறார் என்னை நல் பாத்திரமாக
மாசற்ற மணவாட்டியாய்

3. கெட்ட சாக்கடை நின்று தூக்கி எடுத்து
ரத்தத்தால் கழுவி விட்டார்
பாவங்கள் சாபங்கள் யாவையும் நீக்கி
மகனாய் (மகளாய்) ஏற்றுக் கொண்டார்

## பாடல் - 1314

**நீர் வாழும் தேசம் புது தேசம்**
அங்கே நான் நாங்களும் வர வேண்டும்
நீர் வரும் போது இயேசுவே
எங்களை உம்முடன் அழைத்துச் செல்வீர்

1. இரவும் பகலும் தூதர் கூட்டம்
பரிசுத்த பரிசுத்தர் என்று துதிக்க
நாங்களும் உம்மை வாழ்த்த வேண்டும்
தினமும் உம்மை போற்ற வேண்டும்

2. எங்கே பார்த்தாலும் பொற் தளவீதி
இருளே அங்கில்லை வெளிச்சமே உண்டு
ஆடலும் பாடலும் நிறைந்த இடம்
அருள்நாதர் இயேசு வாழுமிடம்

3. இவ்வுலக பாடுகள் எங்களிடத்தில்
நெருங்கி என்ன செய்ய முடியும்
லேசாய் வந்திடும் உபத்திரவம்
நித்திய கனமகிமை உண்டாக்குமே

## பாடல் - 1315

**தேற்றரவாளன் இயேசுவே**
என்னை தேடி வந்த அன்பு தெய்வமே
தாயைப் போல தேற்றுகின்றீர்
தந்தைப் போல தோளில் சுமக்கின்றீர்
நன்றி ஐயா உமக்கு நன்றி ஐயா

1. வனாந்திரமான வாழ்க்கையிலே
வழியின்றி தவிக்கும் நேரத்திலே
பகைவர்கள் சூழ்ந்திடும் நேரத்திலே
கடலினில் தரைவழி வந்தவர் நீர்
நன்றி ஐயா உமக்கு நன்றி ஐயா

2. இருண்ட வாழ்க்கை பாதையிலே
இன்னல்கள் சூழ்ந்த நேரத்திலே
இரவிலும் பகலிலும் நீர் எனக்கு
அக்கினி ஸ்தம்பம் மேகஸ்தம்பம்
நன்றி ஐயா உமக்கு நன்றி ஐயா

3. மனுஷரின் வார்த்தைகள் மாராவாகி
மனதினில் துயரங்கள் சூழ்கையில்
மாராவின் கசப்பை மதுரமாக்கி
மகிமையின் வார்த்தையால் மகிழ்ச்சி தந்தீர்
நன்றி ஐயா உமக்கு நன்றி ஐயா

## பாடல் - 1316

**அரபிக் கடல் வற்றினாலும்**
தேவன் அன்புக் கடல் வற்றாதம்மா
பசிபிக் கடல் வற்றினாலும்
தேவன் பாசக்கடல் வற்றாதம்மா

நேசமுள்ள நெஞ்சுக்குள்ளே தேவன் இருப்பார்
உன் நெஞ்சமதை உற்றுப்பார் தெரிந்திடுவார்

1. என் உள்ளம் இறைவன் இல்லம்
என் உயிரும் அவரின் வடிவம்
பார்வையினில் எந்தன் பாதையிலும்
என் கண்ணின் முன்னே
அவர் தோன்றுகிறார்
என் கூப்பிடுதலை அவர் கேட்டுக் கொண்டு
என் துன்பங்களை வந்து வாங்குகிறார்

2. என் நினைவில் அவரின் வருகை
அதை உணர்ந்தேன் மனதில் பெருமை
வாழுகின்ற அந்த காலம் வரை
என் தேவனவர் என்றும் எனக்கு துணை
பாழுகின்ற இந்த பாவிகளை என்று
மீட்க வந்த தேவன் அவரை நினை

## பாடல் - 1317

**அன்பின் தெய்வமே எனக்குள் வாழ்பவரே**
நீர் பேசினால் போதுமே ஆனந்தம் பொங்குதே
அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

1. பெருமழை போல் ஆவி ஊற்றணுமே
உம் பக்தரின் உள்ளத்திலே
(ஐயா) ஆவியால் நிரம்பி துதிக்கணுமே
உம் அன்பால் தாங்கணுமே

2. ஜெப ஆவி வரம் என்னில் வேண்டுமே
ஜெப வீரனாய் மாறணுமே (நாங்கள்)
விசுவாசத்தோடு ஜெபிக்கணுமே
ஜெயக்கொடி பறக்கணுமே

3. ஆத்துமாக்கள் ஓடி வரவேண்டுமே
உம் அன்பை காணணுமே
ஆடுகள் ஒன்றாய் கூடணுமே
உம் மந்தையில் சேரணுமே

## பாடல் - 1318

**ஜீவன் தந்த தேவா**
உம்மைப் போற்றிப் பாடுவேன்
என்றும் என்னை மறவா
எந்தன் தகப்பன் நீரல்லோ
என்றும் உந்தன் பிள்ளை நானே
மறவேன் உம்மையே

1. தாயின் கர்ப்பத்தில் நீர் முன் குறித்தீரே
பிள்ளையாய் வளர்ந்தவுடனே தேர்ந்தெடுத்தீரே
பாவம் அகற்ற ரத்தத்தினால் கழுவி
புதிய படைப்பாகிய தேவா
உம்மை போற்றுகின்ற நாவு வேண்டும் நாதா

2. தீராத நோய்களெல்லாம் தீர்த்து வைத்தீரே
உம் கரம் பட்டவுடன் சுகமடைந்தேனே
பரிசுத்த ஆவியும் பாஷையும் தந்து
புதிய படைப்பாகிய தேவா உம்மை
போன்றுகின்ற நாவு வேண்டும் நாதா



அட்டவணை

## பாடல் - 1319

**அறுவடை காலம் நெருங்கியாச்சு**
ஆத்தும அறுவடை மிகுதியாச்சு
அறுவடையின் தேவனை நோக்குவோம்
அறுவடைக்கு ஆயத்தமாகுவோம்

1. திறப்பின் வாசலிலே
தினமும் நின்றிடுவோம்
அழிகின்ற மக்களுக்காய்
அன்றாடம் ஜெபித்திடுவோம்

2. இருளில் வாழும் ஜனங்கள்
இரட்சிப்பை பெற வேண்டும்
இயேசு ஆண்டவர் என்று
நாவுகள் அறிக்கை செய்யணும்

3. உம் இராஜ்ஜியம் வரணும்
உம் சித்தம் நிறைவேறணும்
வசனமெல்லாம் பரவ வேண்டும்
அனைவரும் கேட்க வேண்டும்

## பாடல் - 1320

**எகிப்திலிருந்து கானானுக்கு**
கூட்டிச் சென்றீரே
உமக்கு கோடி நன்றி! ஐயா!
அல்லேலூயா! அல்லேலூயா! – 2

1. கடலும் பிரிந்தது மனமும் மகிழ்ந்தது
கர்த்தரை என்றும் மனது ஸ்தோத்தரித்தது – அல்லேலூயா!

2. பாறையினின்று தண்ணீர் சுரந்தது தாகம் தீர்ந்தது
கர்த்தரை மனமும் போற்றியது – அல்லேலூயா

3. வெண்கல சர்ப்பம் ஆனாரே நமக்காய் உயிர்க்கொடுத்தாரே
அவரை உயர்த்திடுவோமே! – அல்லேலூயா!

4. யோர்தானை கடந்தோம் எரிகோவை சூழ்ந்தோம்
ஜெயம் கொடுத்தாரே! அவரை துதித்திடுவோமே – அல்லேலூயா!

## பாடல் - 1321

**ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே இயேசுவே**
கோடா கோடி ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்தரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

1. அப்பா பிதாவே ஸ்தோத்திரம்
அன்பின் பிதாவே ஸ்தோத்திரம்
பரலோக பிதாவே ஸ்தோத்திரம்
நித்திய பிதாவே ஸ்தோத்திரம்

2. ஆபிரகாமின் தேவனே ஸ்தோத்திரம்
ஈசாக்கின் தேவனே ஸ்தோத்திரம்
யாக்கோபின் தேவனே ஸ்தோத்திரம்
தாவீதின் தேவனே ஸ்தோத்திரம்

3. துதிக்குப் பாத்திரரே ஸ்தோத்திரம்
துதியில் மகிழ்வோரே ஸ்தோத்திரம்
துதிகளில் உன்னதரே ஸ்தோத்திரம்
தூயாதி தூயவரே ஸ்தோத்திரம்

## பாடல் - 1322

**உங்க துதியிலே வல்லமை உண்டு வல்லமை உண்டு**
ஆர்ப்பரிப்பிலே ஜெயம் உண்டு ஜெயம் உண்டு
துதித்து பாருங்க ஆர்ப்பரித்து மகிழுங்க
வல்லமை உண்டு உண்டு ஜெயமும் உண்டு உண்டு

1. துதி தானே வல்லமையான ஆயுதமே
உங்க துதி தானே சத்துருவை துரத்திடுமே

2. துதி தானே வெற்றியின் ஆயுதமே
உங்க துதி தானே சாத்தானை ஜெயித்திடுமே

3. துதி தானே இடிமுழக்க ஆயுதமே
உங்க துதி தானே தடைகளை தகர்த்திடுமே

## பாடல் - 1323

**எத்தனை ஆச்சர்ய தேவன் நீர்**
வர்ணிக்க முடியாத அன்பர் நீர்
அற்புதம் செய்தே மகிழச் செய்தீர்
ஆனந்தம் கொண்டாடுவோம்

பாடுவோம் ஆடுவோம் பரவசமாகுவோம்
கரங்களை தூக்கியே
கர்த்தரை நாம் போற்றுவோம்

1. நெருக்கத்திலிருந்தே உம்மை அழைத்தோம்
உருக்கமாய் விசாலத்தில் அழைத்து வந்தீர்
எண்ணியே துதிப்போம் உம்மையே நினைத்து
என்றுமே பாடுவோம் லேவியர் நாங்கள்

2. மனிதர்கள் உதவியை விருதாவாக்கி
ஒத்தாசை தந்த கன்மலை நீர்
பூரண கிருபையும் இரக்கமும் ஈந்து
வழுவாமல் வருகைக்காய் காத்திடுமே

3. அறிவோ ஆற்றலோ திராணியோ
ஆண்டவர் உம்முன் சவால் விடுமோ
ஒருவராய் செய்தீர் மகத்துவ செயலை
ஒப்பில்லா உமக்கே ஓயா துதியே

## பாடல் - 1324

**இரத்தம் இயேசு இரத்தம்**
எல்லா பாவ அழுக்கையும் கழுவுமே
இரத்தம் இயேசு இரத்தம்
எல்லா அவயம் யாவையும் சுத்தம் செய்யும்

1. ஆதி காலத்தில் வியாதி யாவும்
அற்புதமாய் சொஸ்தப்படுத்தியவர்
ஆத்மா எல்லாம் இரட்சியும் ஐயா
ஆத்ம நாயகா இயேசய்யா

2. வியாதி நேரத்தில் பரிகாரி நீரே
பரம ஔஷதம் நீர்தானய்யா
பிசாசின் பிடியில் விடுதலை தாரும்
மாறாத உம் இரத்த வல்லமையால்

3. ஐந்து காயம் ஆறாக ஓட
இரத்த வெள்ளம் சொரிந்தீரைய்யா – 2
பாவியாம் என்னை மன்னியும் என்று
கெஞ்சும் இந்த வேளையிலே

4. வெள்ளி அல்ல பொன்னுமல்ல
விலையாக சிலுவையில் நீர் கொடுத்தீர்
விலையேறிய இரத்தம் எனக்காய் ஈந்து
சொந்தமாக என்னைக் கொண்டீர்

## பாடல் - 1325

**இராஜாதி இராஜாவே வாழ்க! வாழ்க!**
கர்த்தாதி கர்த்தாவே வாழ்க! வாழ்க!
இயேசு ராஜா ஜே! ஜே! -2
ஜேஜேஜே ஜேஜேஜே ஜேஜேஜே

1. உமக்கென்று நான் சீடரானேன் -2
இருபுறம் கருக்குள்ள பட்டயத்துடனே

2. இருளில் இருக்கின்ற மக்களுக்கு - 2
ஒளியே உம்மை காண்பிப்பேனே

3. சுவிசேஷ சேனைக்கு ஆள் சேர்ப்பேனே-2
சுத்தபரன் இயேசுராஜாவின் பணிக்கென

4. உபவாச சேனைக்கு ஆள் சேர்ப்பேன்-2
உத்தமர் இயேசு ஆசிதனை கொடுத்திட

5. பாவ மன்னிப்புக்கு இரத்தம் சிந்தினார்-2
பரகதி வாழ்வை நமக்கு அருளுவார்

6. இயேசு ஒருவரே ஒரே தெய்வம்-2
உயிர்த்த இயேசுவின் கல்லறையே சாட்சி

## பாடல் - 1326

**யெகோவாயீரே நீர் பார்த்துக் கொள்வீரே**
எதற்குமே நான் பயப்படமாட்டேன்

1. கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல் சாத்தான் வந்தாலும்
உம் நாமத்தினால் மிதித்து ஜெயித்திடுவேன்

2. நோய் நொடி வியாதிகள் வந்திட்டாலும்
உம் சித்தத்தினால் சுத்தமாகி சுகமாவேன்

3. கடல் போல் கடன் நஷ்டம் வந்திட்டாலும்
ஆபிரகாமைப் போல சீமானாவேன்

4. சோதனை வேதனை வந்திட்டாலும்
ஜெயித்து விசுவாச வீரராவேன்

5. துன்ப துக்க துயரம் வந்திட்டாலும்
துதித்தே நான் ஜெயித்திடுவேன்

6. குடும்பத்தில் பிரச்சனை வந்திட்டாலும்
குரு இயேசுவே நீர் வெற்றி தருகிறீர்

7. அநீதி வஞ்சனை வந்திட்டாலும்
ஆண்டவரே எனக்காய் யுத்தம் பண்ணுவீர்

## பாடல் - 1327

**தேற்றரவாளனே ஆறுதல் தாரும்**
சமாதான பிரபுவே சமாதானம் தாரும்
ஆறுதல் தாரும் அன்பனே தேற்றும்
என் தேவனே

1. கவலைகளை கரைந்து போக பண்ணுகிறீரே
காட்டுப் புஷ்பங்களைப் பார்க்கச் சொன்னீர்
கவலைகள் அதுக்கு உண்டோ என்றீர்
துக்கங்களை துடைத்து விட்டீரே
தூயாதி தூயவரே ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

2. உம்மிடத்தில் நான் பாரத்தை
எல்லாம் வைத்து விட்டேனே
ஆதரிக்கும் என் ஆண்டவரே
அற்புதம் செய்திடும் அற்புதரே
மன துயரை மறையச் செய்தீரே
மன்னாதி மன்னவரே
ஸ்தோத்திரம் தோத்திரமே

3. கண்ணீரை துடைத்து
களிப்பை உள்ளத்தில் தருகின்றீரே
கல்லான மனதை சதையாக மாற்றி
காலமெல்லாம் ஆசி தந்திடுவீரே
கலக்கங்களை களிப்பாக மாற்றினீரே
கர்த்தாதி கர்த்தரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

## பாடல் - 1328

**இரங்குமய்யா இரங்குமய்யா எலியாவின் தேவனே**
இரங்குமய்யா இரங்குமய்யா தாவீதின் மைந்தனே

1. ஓரேப் மலையிலே
முட்செடியின் அக்கினியே
மோசேக்கு அற்புத காட்சி
தந்த அக்கினியே

2. இரவில் இஸ்ரவேலுக்கு
முன் சென்ற அக்கினியே
இன்றே என் முன் செல்ல
வாரும் தேவ அக்கினியே

3. கர்மேல் பர்வதத்தில்
வந்த தூய அக்கினியே
கர்த்தாவே இக்கணமே
இன்று இங்கு வாருமே

4. பர்திமேயு குருடனுக்கு
பார்வையும் கொடுத்துவிட்டு
இரட்சிப்பை கொடுத்து
எங்கள் ஒளியே அக்கினியே

5. பெந்தெகொஸ்தே பெருநாளில்
வந்த தூய அக்கினியே
பெருமானே இக்கணமே
இன்று இங்கு வாருமே

## பாடல் - 1329

**நாங்க தெம்மாங்கு பாடுறவங்க**
ஓ அய்லேசா நல்ல கட்டுமரத்திலே
போய் வருவோங்க அட அய்யாஹோ
வலைகளினால் மீன் பிடிப்போம்
அலைகளினால் அலைபடுவோம்

1. ஆழ்கடல் செல்ல செல்ல
திரும்புதல் நிச்சயமல்ல
பழைய வலையை நம்பி நம்பி
பாடுபட்டு மீன் பிடித்தோம்

2. ஆண்டவர் வந்தாருங்க
ஆழம் போகச் சொன்னாருங்க
வலை கிழிஞ்சு போகும்படி
மலையாய் மீனு தந்தாருங்க

3. வல்ல இயேசு வந்தாருங்க
வா என சொன்னாருங்க
மனந்திரும்பி வலையை விட்டு
மனுஷங்களை பிடிக்க வாரோம்

4. நாங்க தெம்மாங்கு பாடுறவங்க
அல்லேலூயா
நல்ல தெவிட்டாத செய்தி சொல்றவங்க
ஆமென் அல்லேலூயா
அருட்தொண்டு செய்கின்றோம்
எல்லோருக்கும் பயன்படுவோம்

## பாடல் - 1330

**வா இயேசு அண்டை வா தா இதயத்தை தா**
மனந்திரும்பி மன்னவன் இயேசுவையே
இரட்சகராய் ஏற்றிடவா

1. மரம் தான் பூக்களை சுமக்கின்றதே
மரத்தை ஒரு பூ சுமந்ததே
சிலுவை மரத்தை சாரோனின் ரோஜா
சுமந்து நமக்காய் பலியானாரே

2. வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள
வேண்டும் என்பவனுக்கு
உன் அங்கியையும் விட்டுவிடு என்றாரே
லேகியோனுக்கு தன்
வஸ்திரத்தைக் கொடுத்தாரே
அங்கியை சீட்டு போட கொடுத்தாரே

3. ஒரு கன்னம் அறைந்தால்
மறு கன்னம் காட்ட சொன்ன இயேசு
முன்மாதிரி ஆனாரே
ஆணியால் ஒரு கை அறைந்தவுடனே
மறு கையை ஆணிக்கு நீட்டினாரே

## பாடல் - 1331

**அற்புதங்கள் செய்கிறவர் இயேசு**
ஆன்மாவை இரட்சிப்பவர் இயேசு
அகிலத்தையே போஷிப்பவர் இயேசு
அனுதினம் அவருடன் பேசுபேசு

1. ஐந்தப்பம் இரண்டு மீனையும் ஆண்டவர்
ஐயாயிரம் பேருக்கு கொடுத்தாருங்கோ
கானாவூரு கல்யாணத்தில் கர்த்தர்
கற்சாடி நீரை ரசமாக்கினார்

2. பன்னிரண்டு ஆண்டுகளாய் நோயுற்ற
பெண்மணிக்கு இயேசு சுகம் கொடுத்தாரு
பாடையில் வந்தவனை இயேசு
உயிரோட எழுப்பித் தந்தாரு

3. சிலுவையில் அறையுண்ட கள்வனுக்கு
சீரேசு நாதர் மீட்பளித்தாரு
நீரை தேடின சமாரியா பெண்ணுக்கு
ஜீவ தண்ணீர் கொடுத்து மீட்டாரு

## பாடல் - 1332

**தேவனே என் ஜீவனே எந்தன் கன்மலையே**
இயேசுவே என் நேசரே
என்றுமாய் நம்புவேன் அல்லேலூயா 4

1. தீமை ஏதும் சூழ்ந்திடா
என்னைக் காக்கும் தெய்வமே
சாபம் யாவும் நீக்கியே
சாந்தியே நல்கிடும் – அல்லேலூயா 4

2. என்னை முற்றும் தந்திட்டேன்
கிருபை சூழ தாங்குவீர்
எந்தன் மேன்மை நீரல்லோ
இயேசுவே பின் செல்வேன்

3. தாகம் தீர்க்கும் மீட்பரே
எந்தன் வாஞ்சை நீரல்லோ
உம்மைப் போல மாறிட
இயேசுவே செய்திடும் – அல்லேலூயா 4

4. உள்ளம் திறந்து வேண்டினேன்
என்னை கேட்டு இரங்குவீர்
தேவ நன்மை யாவையும்
தேவனே நல்கிடும் – அல்லேலூயா 4

5. பாரில் உம்மை தேடினேன்
பயங்கள் யாவும் நீக்கினீர்
தேவராஜ்யம் சேர்ந்திட
இயேசுவே செய்திடும் – அல்லேலூயா 4

**பாடல் - 1333**

**துதி கீதமே பாடியேவாழ்த்தி வணங்கிடுவோம்**
ஜோதியின் தேவனாம்
இயேசுவை பணிந்திடுவோம்

1. பஞ்சைப் போல் வெண்மை ஆகிட
பாவம் யாவும் நீங்கினதே
சொந்த இரத்தம் சிந்தி நம்மை
மீட்ட தேவனை துதித்திடுவோம்

2. தந்தை போல் எம்மை தாங்கியே
தோளில் ஏந்தி சுமந்தனரே
சேதம் ஏதும் அணுகிடாமல்
காத்த தேவனை துதித்திடுவோம்

3. காரிருள் போன்ற வேளையில்
பாரில் நம்மை தேற்றினாரே
நம்பினோரை தாங்கும் தேவன்
இன்றும் என்றுமாய் துதித்திடுவோம்

4. கட்டுகள் யாவும் அறுத்துமே
கண்ணீர் கவலை அகற்றினாரே
துதியின் ஆடை அருளி செய்த
தேவ தேவனை துதித்திடுவோம்

5. வானத்தில் இயேசு தோன்றிடுவார்
ஆயத்தமாகி ஏகிடுவோம்
அன்பர் இயேசு சாயல் அடைந்து
என்றும் மகிழ்ந்தே வாழ்ந்திடுவோம்

## பாடல் - 1334

**கர்த்தர் இயேசு வாக்கை நம்புவோம்**
என்றும் கர்த்தர் அவரில்
நிலைத்து ஓங்குவோம்
சுத்தராய் வாழ்ந்துமே தேவ சேவை செய்து
இயேசு ராஜன் பின் செல்லுவோம்

1. சுற்றி நிற்கும் பாவம் யாவும்
முற்றும் தள்ளியே
கர்த்தர் இராஜ்ஜியம் சேர்ந்திட
முன்னே செலுத்துவோம்
தேவ கிருபையில் நிலைத்து நின்றிட
தாழ்மையோடு தேவபாதம் சேர்ந்திடுவோம்

2. வானம் பூமி யாவும்
முற்றும் மாறி போயினும்
தேவ வார்த்தை என்றுமாய்
நிலைத்து நிற்குமே
சத்திய வாக்கினில் உறுதி அடைந்துமே
சத்திய தேவன் வாக்கை நம்பி
முன் செல்லுவோம்

3. வாக்குத்தத்தம் செய்த கர்த்தர்
உண்மையுள்ளவர்
முற்றுமாக நம்பியே முன்னே செல்லுவோம்
கிறிஸ்து இயேசுவே நமது நம்பிக்கை
பரம தேசம் சென்று ஏகி வாழ்ந்திடுவோம்

## பாடல் - 1335

**நம்பி வந்தேன் இயேசுவே**
என் ஜெபம் கேட்டு இரங்குவீர்
விண்ணப்பமும் வேண்டுதலை
கேட்டு பதில் செய்வீர்

1. என் சத்தம் கேட்கும் வல்லவரே
உருக்கமாக இரங்குவீர்
உம்மையல்லாமல் யாருண்டு
உந்தனின் பாதத்தை அண்டினேன்



அட்டவணை

2. இடைவிடாமல் ஜெபித்திட
தடைகள் யாவும் நீக்குவீர்
சோர்ந்திடாமல் ஜெபித்திட
ஜெபத்தின் ஆவியை நல்குவீர்

3. ஊக்கமாய் நானும் ஜெபித்திட
உன்னத ஆவி தந்திடுமே
உந்தன் வாக்கை நம்பினேன்
ஜெயமே அடைய செய்குவீர்

4. தேவனே உந்தன் சமூகத்தில்
கட்டுகள் யாவும் அறுந்திடும்
ஏகசிந்தை நல்கியே
அற்புதம் கண்டிட செய்குவீர்

5. அழியும் மாந்தர் யாவரும்
இயேசுவே உம்மை கண்டிட
ஆத்மபாரம் நிறைந்துமே
ஜெபிக்க கிருபை செய்குவீர்

## பாடல் - 1336

**வென்றனரே நம் இயேசுபரன்**
என்றென்றும் ஜெயித்தெழுந்தார்
ஜெயமே அடைந்துமே
இரட்சகரில் வளருவோம்

1. சேதம் ஏதும் நெருங்கிடா
தேவ தேவன் தாங்குவார்
துன்பம் யாவும் நீங்கிடும்
இன்பம் என்றும் தங்கிடும்

2. தீங்குநாளில் மறைத்துமே
சுகமாய் காத்து மூடுவார்
தகுந்த வேளை கரத்தினால்
உயர்த்தி ஜெயமே நல்குவார்

3. தேவனோடு செல்லுவேன்
மதிலை தாண்டி பாயுவேன்
உலகை ஜெயிக்கும் தேவனால்
யாவும் ஜெயித்து செல்லுவேன்

4. நீதிமானை உயர்த்துவார்
நீதிபரனாம் இயேசுவே
சத்துரு வீழ்ந்து அழிந்திட
தேவன் ஜெயமே தந்திடுவார்

## பாடல் - 1337

**என் இரட்சகா என் இயேசுவே**
என்னை அழைத்த நல் மீட்பரே
என் உள்ளத்தில் சந்தோஷத்தை
தந்தவர் உம்மை ஸ்தோத்தரிப்பேன்

1. தூரமாய் நானும் சென்ற போது
அன்பாய் என்னை அழைத்தீரே
காலமெல்லாம் நான் உந்தன் ஒளியில்
என்றும் நிலைத்து வாழ்ந்து சுகிப்பேன்
பாக்கிய நாள் பாக்கிய நாள்
இயேசு என் பாவம் தீர்த்த நாள்

2. சத்திய ஜீவன் வழியும் நீரே
கிருபை கூர்ந்து தெரிந்தீரே
தேவனே உம்மில் இணைந்து இருக்க
இன்றும் என்றும் அருள் செய்வீரே

3. இருளின்று ஒளியினிடமாய்
அழைத்த தேவனே போற்றுவேன்
உந்தனின் புண்ணியம் யாவும் சொல்லி
சாட்சியாக பூவில் திகழ்வேன் - பாக்கிய

4. எந்தன் கால்கள் தளரும் போது
தாங்கி என்னை மீட்டவா
உந்தனின் வாக்கு வெளிச்சம் தந்து
காத்து என்றும் நடத்துவீரே - பாக்கிய

5. மாமலை மீதினில் மகிமை அடைந்தீர்
மகிமை சொரூபா தொழுகுவேன்
உந்தனின் மகிமை நானும் அடைய
மீட்ட உம்மை என்றும் துதிப்பேன் - பாக்கிய

**பாடல் - 1338**

**எந்தன் சமூகம் முன்னே செல்லும்**
இளைப்பாறுதல் தந்திடுவேன்
நேற்றும் இன்றும் மாறாதவர்
நேசர் இயேசு வாக்கு தந்தார்

1. தேவ சமூகம் செல்லும் வேளை
தேவ வல்லமை தோன்றிடுதே
தேவைகளை சந்தித்திடும்
நித்திய தேவன் நம் துணையே

2. தேவதூதன் முன்சென்றுமே
தேவ இரட்சிப்பை தந்திடுவார்
சத்துருவை ஜெயித்திட
சத்துவம் யாவும் தந்திடுவார்

3. தேவ சமூகம் ஆனந்தமே
நித்திய பேரின்பம் தந்திடுமே
கர்த்தருக்குள் மகிழ்ந்திட
சத்திய தேவன் அருள் செய்வார்

4. உந்தன் மறைவில் சேரும் போது
உம்மில் ஒளித்து காத்திடுவீர்
ஆபத்தினில் அடைக்கலம்
அற்புத தேவன் துணையாவார்

5. பூமியை நியாயம் தீர்த்திடவே
இயேசு ராஜனாய் வந்திடுவார்
விழிப்புடன் ஜீவித்துமே
விண்ணவர் இயேசுவை சந்திப்போம்

**பாடல் - 1339**

**உன்னத தேவன் இயேசுவிலே**
பூரணராய் வளர்ந்திடுவோம்
ஆவியினாலே பெலன் அடைந்து
மறுரூபம் அடைந்திடுவோம்

1. கர்த்தர் நம் இயேசுவை ஆவியியால்
நிரப்பியே நிறைத்தனரே
அளவில்லாமல் ஆவியினால்
நிறைந்துமே பெலன் அடைவோம்

2. வானம் திறந்து தேவனுமே
சாட்சியும் அளித்தனரே
இயேசுவைப் போல் ஆவியினாலும்
சாட்சியை அடைந்திடுவோம்

3. ஆவியினாலே இயேசு பரன்
என்றுமாய் வழி நடந்தார்
ஆவியினால் நடத்தப்பட
நம்மையே படைத்திடுவோம்

4. தேவனின் சித்தம் செய்திடவே
இயேசுவே அடிபணிந்தார்
தேவ சித்தம் செய்திடவே
கர்த்தரில் அடங்குவோம்

5. உன்னத ஆவியின் பெலனடைந்து
ஜீவியம் செய்திடுவோம்
பயமில்லாமல் தைரியமாய்
துணிந்தே முன் செல்லுவோம்

## பாடல் - 1340

**மாறாத நல் விசுவாசம்**
பரன் நம் இயேசு தேவனில் வைத்திடுவோம்
அகன்றிடும் மலைகளும் அதிசயம் வெளிப்படும்

1. விசுவாச வார்த்தையினால்
இதயம் நிரம்பி வழிந்திடும்
அகமதினில் விசுவாசம்
என்றும் ஜெயம் தரும்

2. கிரியையில்லா விசுவாசம்
ஏதும் செய்திட உதவாது
செயல்படும் விசுவாசம்
என்றும் ஜெயம் தரும்

3. லோகமதின் இன்பங்களை
விரும்பி மனதில் தொடராமல்
விசுவாசத்தால் பெலனடைவோம்
நம் தேவன் தாங்குவார்

4. துன்பங்களோ நெருக்கங்களோ
இடறல்கள் வரினும் கலங்காமல்
விசுவாச ஆவியினால்
என்றும் மேற்கொள்ளுவோம்

5. மகிமையினை சுதந்தரிக்க
மகிபன் அவரில் நிலைத்திடுவோம்
விசுவாச பலனதனை
அடைந்தென்றும் மகிழுவோம்

## பாடல் - 1341

**வல்ல தேவனை இன்றே**
துதி சாற்றியே ஸ்தோத்தரிப்போம்
மாறாத இயேசுவின் கிருபையில்
என்றும் வளர்ந்திடுவோம்

1. பாவங்களில் உழன்றிருந்த
நம்மை இயேசு உயர்த்திடவே
கிருபையின் விடுதலை
அளித்துமே அன்பு செய்தார்

2. பூரணமாய் செயல்தனிலே
வளர்ந்து நாமே கிரியை செய்ய
கிருபையில் பெருகிட
அருள்தனை தந்திடுவார்

3. போதனையை பகுத்தறிந்து
வேதத்தை நாமே அறிந்திடுவோம்
கிருபையில் ஸ்திரப்பட
என்றுமாய் தாங்கிடுவார்

4. துன்பங்களோ சோதனையோ
சூழ்ந்திடினும் சோர்ந்திடாமல்
கிருபையே போதுமே
சொந்தமாய் தாங்கிடுவார்

5. நிர்மூலமாய் அழிந்திடாமல்
நிலைத்து நாமே கனிதரவே
கிருபையே போதுமே
என்றுமாய் அரவணைப்பார்

## பாடல் - 1342

**மகிமையின் தேவனை பணிந்திடுவோம்**
மகிழ்வுடன் நிதமே துதித்தே
கனிவுடன் பணிவுடன்
வணங்கி நாமே ஆர்ப்பரிப்போம்

1. வாசல்களில் நல் துதியுடனே
புகழ்ந்து பாடி வணங்கிடுவோம்
மகிபனை வல்லவரே
மகிழ்ந்து நாமே துதித்திடுவோம்

2. நன்றியுடன் உம் சந்நிதியில்
நன்மை யாவும் உணர்ந்திடுவோம்
உத்தமமாய் உண்மையுடன்
என்றென்றும் நாமே துதித்திடுவோம்

3. செடிதனையாம் நம் இயேசுவிலே
நிலைத்திருந்து வளர்ந்திடுவோம்
நற்கனியால் நிறைந்துமே
இரட்சகரை நாம் உயர்த்திடுவோம்

4. வானவரை நம் தேவனையே
நாவில் துதித்து மகிழ்ந்திடுவோம்
என்றுமவர் மாறாதவர்
துதிகள் சாற்றி ஆர்ப்பரிப்போம்

5. மகிமையுடன் நம் இயேசுதாமே
வானில் இறங்கி வந்திடுவார்
விழிப்புடன் ஜீவியத்துமே
ஆனந்தமாய் நாம் ஆர்ப்பரிப்போம்

## பாடல் - 1343

**தேவன் வாழ்ந்திடும் ஆலயத்தினில்**
தேவ வல்லமை தங்கும் என்றுமே
வெற்றி வேந்தர் இயேசுவின் தேவ சக்தியே
எந்நாளும் தோன்றிடுதே

1. சாத்தானை மேற்கொள்ளும் அதிகாரமும்
தேவாதி தேவனே தந்தனரே
தந்திர மந்திரங்கள் தீமையோ
முற்றும் அழிந்து ஒழிந்து போகுமே



அட்டவணை

2. பொல்லாத நோய்களும் வேதனையும்
இயேசுவின் வல்லமை நீக்கிடுமே
பாவங்கள் யாவையுமே மேற்கொண்டு
வெற்றியுடன் முன்னே செல்லுவோம்

3. பாதாளம் வேதாளம் வென்றவராய்
வல்லமை தந்தனர் வென்றிடவே
சாத்தானை மேற்கொண்டு நாமுமே
வெற்றி வாகை சூடி மகிழுவோம்

4. மாறாத இயேசுவின் வார்த்தையிலே
வல்லமை அதிகாரம் தங்கினதே
கர்த்தரின் பிள்ளைகளின் வார்த்தையில்
வல்லமையும் தங்க வேண்டுமே

## பாடல் - 1344

**உந்தன் துணையிவரே**
என்றும் காத்திடுவார் - இவர்
கலங்காதே பயப்படாதே
மீட்பர் தாங்கிடுவார்

பொன் இயேசு ராஜனிவர்
என்னாளும் துணையிவரே
அல்லேலுயா ஆமேன் (2)

2. உன்னைத் தெரிந்தவரே
உன்னை நடத்திடுவார் என்றும்
அழைப்பதனை அறிந்துணர்ந்து
கிரியை செய்திடுவார்

3. உன்னை பலப்படுத்தி
ஜெயமாய் நடத்திடுவார் இவர்
முன்னேறி சுத்தந்தரிப்பாய்
தேவ வாக்குகளை

4. அன்பின் தேவனிவர்
உயர்த்தித் தாங்கிடுவார் என்றும்
தவறியே நீ விழுந்திடாமல்
காத்து தாங்கிடுவார்

5. உந்தன் குரலதனை
கேட்டு செவி கொடுப்பார் இவர்
கூர்மையான யந்திரமாய்
மாற்றி உபயோகிப்பார்

## பாடல் - 1345

**கர்த்தர் நம் இயேசுவே நல் அஸ்திபாரமாம்**
இப்பூவினில் நம் வாழ்வினை
செம்மையாய் கட்டிடுவோம்

1. இப்புவியின் செல்வாக்குகள்
அழிந்திடுமே மறைந்திடுமே
அழியாத விசுவாசம் அன்பு நீதி
இவையாலே கட்டிடுவோம்

2. திட்டமில்லா கட்டிடமே
பயனற்றதாய் வீணாகுதே
நம் வாழ்வை தேவனின் திட்டமிட்டபடி
இனிதாக கட்டிடுவோம்

3. சபையானது தேவாலயம்
ஜீவகல்லாய் பொருந்திடுவோம்
இராஜாவின் மாளிகை எழுப்பிடவே
இசைவாக கட்டிடுவோம்

4. பரன் வாக்கையே நம்பியே நாம்
ஆதாரமாய் சார்ந்திடுவோம்
உத்தம போதனை சத்தியத்தில்
நம்மையே கட்டிடுவோம்

5. தேவாவியின் ஆலோசனை
சிரம் மேற்கொண்டு செய்திடுவோம்
அசையா அழியாத மாளிகையாய்
நாமே கட்டிடுவோம்

## பாடல் - 1346

**இயேசுவின் நாமம் எந்தன் தஞ்சம்**
வேதனை யாவும் நீக்கும் நாமம்

1. கலங்கும் நேரம் தள்ளாமல் ஏற்று
தேற்றிடும் நாமமே
சோதனை யாவும் நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே அடைக்கலம்

2. நேற்றும் இன்றும் என்றென்றும் மாறா
இயேசுவின் நாமமே
வியாதிகள் யாவும் நீக்கும் நாமம்
தேனிலும் இனிய நாமமே

3. தயங்கும் நேரம் எந்நாளும் தாங்கி
ஆற்றிடும் நாமமே
மீட்பதை தந்து காக்கும் நாமம்
மேலோக வாழ்வினை அளித்திடும்

4. பாவ சாப சாத்தானின் தீமை
யாவையும் நீக்கிடும்
அற்புதம் யாவும் ஓங்கச் செய்து
அதிசயம் செய்திடும் நாமமே

## பாடல் - 1347

**அழைத்தீரே எனதேசுவே!**
உம்மை எந்நாளும் பின்செல்லவே
வினை போக்கினீர் எனை தூக்கினீர்
துணையானதால் உம் பின் செல்லுவேன்

1. தூயாவி வல்லமையால்
பூவில் தோன்றின எம் இயேசுவே
உம் போல நானும் தேவாவியாலே
நிறைந்துமே மகிழ்ந்திடுவேன்
உம்மை என்றென்றும் பின் செல்லுவேன்

2. அயராது ஜெபித்தீரே நீர்
என்றும் அருள் யாவும் தங்கினதே
சோராது நானும் எந்நேரம் ஜெபித்து
திருப்பாதம் சேர்ந்திடுவேன்
உம்மை எந்நாளும் பின் செல்லுவேன்

3. பாவ மாந்தர் குரல் கேட்குதே
என்றும் செயல் மாறி அலை மோதுதே
தரிசனம் கண்டு திறப்பினில் நிற்க
அடியேனை அழைத்தீரய்யா
உம்மை எந்நாளும் பின் செல்லுவேன்

4. உம் வாழ்வில் எந்நாளுமே
தேவ சித்தமே செய்தீரய்யா
அது போல நானும் உம்சித்தம் செய்ய
முற்றுமாய் அர்ப்பணித்தேன்
பூவில் என்றென்றும் பின்செல்லுவேன்

5. கல்வாரி மலை மீதிலே
தம்மை பலியாக ஈந்தவரே
அனுதினம் நானும் சிலுவை எடுத்து
உந்தன் பின் செல்லுவேன்
பூவில் எந்நாளும் இன்பமிதே

### பாடல் - 1348

**என் நேசரே என் இயேசுவே**
என்றென்றுமாய் என் சொந்தமே
பூரணமாய் என்னையுமே
ஜீவபலியாய் தந்தேனே

1. தேவனே என்னையே
பானபலியாய் வார்த்தேனே
எமது ஜீவன் ஈந்துமே
உம் சேவை செய்து பணிகுவேன்

2. இயேசுவே எந்நாளுமே
உமது பிரியம் செய்திட
சுகந்த பலியாய் ஈந்துமே
உம் நாமம் என்றும் உயர்த்துவேன்

3. நொறுங்குண்ட பலியாக
நொறுக்கி என்னை படைக்கிறேன்
உமது ஆவி தாங்கிட
எம் ஜீவன் இன்றே படைக்கிறேன்

4. எந்தனின் சுயமெல்லாம்
அழிந்து யாவும் அகன்றிட
உமது மகிமை விளங்கிட
உம்பாதம் பணிந்து படைக்கிறேன்

5. நீதியின் பலியாக என்னை
உமக்கே அளிக்கிறேன்
உமது கிருபை தாங்கிட
உம் பாதை செல்ல வந்தேனே

### பாடல் - 1349

**உமது சேவை எமது இன்பம்**
அயர்ந்திடாது செய்திடுவேன்
ஆத்தும பாரமும் ஆவியின் நிறைவும்
தங்கிட நாமும் செய்குவோம்

1. பாவத்தில் மாளும் மாந்தர் குரலை
அழுகை தொனியின் அபல நிலையை
உணர்ந்தே எழும்பி விரைந்திடுவோமே
சேவை செய்ய புறப்படுவோம்

2. ஆறுதல் அளிக்கும் வார்த்தை கூறி
ஆத்தும ஆதாயம் செய்ய துணிவோம்
தனியாள் ஊழியம் அனுதினம் செய்வோம்
கருத்துடன் ஊழியம் செய்குவோம்

3. காடு மலையோ கிராமம் அனைத்தும்
விரைந்து சென்று சேவை புரிவோம்
உயர்த்தி இயேசுவை உலகில் நாமே
நற்செய்தி எங்கும் சாற்றிடுவோம்

4. பாரத்தால் நாமே அழுது ஜெபித்து
அழியும் மனுவை வழியில் திருப்பி
சபையில் என்றும் நிலைத்திட செய்வோம்
பொறுப்புடன் ஊழியம் செய்திடுவோம்

5. வியாதியில் வாடும் மாந்தர் தனையே
அன்பின் மொழியால் ஆற்றி தேற்றி
அயர்ந்திடாமல் ஜெபித்திடுவோமே
ஊழியம் என்றும் செய்திடுவோம்

## பாடல் - 1350

**வழியும் நீரே ஒளியும் நீரே**
ஜீவனும் நீரே தேவனும் நீரே
நம்பி வந்தேன் நாயகன் இயேசுவே
என்று எந்தனின் துணை நீரே

1. நானே வழியும் சத்தியம் ஜீவன்
என்று உரைத்த எந்தன் இயேசுவே
மனதின் இருளை போக்கிட வந்த
மகிமை நிறைந்த தேவ தேவனே

2. மாநிலம் போற்றும் மங்கிடா ஜோதி
மன்னவர் இயேசுவே மறைபொருள் ஞானமே
எங்கும் நிறைந்த என் அரும் செல்வமே
எந்தன் மேன்மை இயேசு தேவனே

3. உந்தன் வாக்கு எந்தனின் தீபம்
என்னை தந்துமே உம்மை சாருவேன்
உந்தனின் பாதை என்றும் செல்லுவேன்
நித்திய ராஜனே இயேசு தேவனே

4. மகிமை தங்கும் உந்தன் சமூகம்
என்றும் என்னை தேற்றி ஆற்றுதே
கலங்காமல் பதறாமல்
உந்தன் பாதை என்றும் செல்லுவேன்

## பாடல் - 1351

**இயேசு தேவனின் நாமம்**
என்றும் ஜெயமே அருளும்
உன்னைக் காத்திடும் நாமம்
என்றும் துணையே நாமம்

1. பாவம் போக்கும் நாமமே
சாபமே நீங்கிடும்
சாந்தியே நல்கிடும்
வாழ்வின் துணையே நாமமே

2. தேவ நாமம் இனிமையே
தேனிலும் மதுரமே
துன்பமே நீங்கிடும்
இன்பம் என்றும் தங்கிடும்

3. நோங்கள் யாவும் நீக்கிடும்
அதிசயம் வெளிப்படும்
வேதனை மாறிடும்
வேந்தன் இயேசு நாமமே

4. சாவின் கூரை ஜெயித்திடும்
பேயினை துரத்திடும்
வல்லமை வெளிப்படும்
ஓங்கி சிறக்கும் நாமமே

5. நாவு யாவும் துதித்திடும்
கால்களே முடங்கிடும்
இயேசுவின் நாமமே
பூவில் என்றும் உயர்ந்ததே

## பாடல் - 1352

**ஒளி தரும் தீபங்கள்**
சுடர் வீசும் தீபம் நாம்
கலங்கரை விளக்கைப் போல்
இயேசுவில் ஒளி பெறுவோம்

1. மலைமேல் ஜெலித்திடும் மாநகர் போலவே
மண்ணகம் காணவே
ஒளியினை வீசுவோம் ஆண்டவர் இயேசுவின்
உறவினில் நெருங்கிட
அணையாத ஜோதியாய் சுடரை வீசுவோம்

2. இருளை நீக்கிட ஒளியாய் வந்தவர்
அருள் நிறை ஒளியினை மேதினில் வீசுவோம்
வார்த்தையைப் பிடித்துமே
சுடர்களைப் போலவே
எழும்பிப் பாரினில் சுடரை வீசுவோம்

3. அழிவின் பாதையில் கல்லறை சென்றிடும்
ஆயிரம் ஆயிரம்
தரிசனம் காணுவோம் சுவிசேஷ ஒளியினை
யாவரும் கண்டிட
துணிந்து என்றென்றுமாய் சேவையை செய்குவோம்

4. பரிசுத்தவான்களே ஒளியில் வாசமே
சாட்சியின் ஜீவியம் எங்கும் வீசிட
இயேசுவின் ஒளியினை பாரில் வீசியே
ஒளியின் பிள்ளையைப் போல் சீராய் வாழுவோம்

5. நானே வெளிச்சமும் நானே வழி என்றார்
அனுதினம் அதிகமாய் அவரை சார்ந்துமே
இயேசுவின் வழியினில் என்றும் நடந்திட
மகிமை ஒளியினை அடைந்து செல்லுவோம்

## பாடல் - 1353

**மகிமை தேசமே எந்தனின் சொந்தமே**
விண்ணக குடிபோய் என்றும் ஜீவிப்பேன்

1. என்னையும் தேடி அன்பாக வந்தவர்
தன்னையும் பூவில் அன்பாக தந்தவர்
எந்நாளும் அஞ்சிடேன் என்றென்றும் வெல்லுவேன்
ஓயாமல் ஜெயமதைப் பிடித்திடுவேன்

2. தேவனின் வார்த்தை எந்நாளும் ஏற்றுமே
தேவனின் சேவை எந்நாளும் செய்திட
தூதர்கள் போலவே பிரமாணம் ஏற்றுமே
தேவாதி தேவனை என்றும் சேவிப்பேன்

3. உண்மையும் நேர்மையும் எந்நாளும் காத்துமே
என்னையே தந்து என்றென்றும் ஜீவிப்பேன்
தேவாதி தேவனை பின்பற்றி செல்லுவேன்
எந்நாளும் மகிழ்ச்சியை அடைந்திடுவேன்

4. வேதத்தின் சத்தியம் எந்நாளும் ஏற்றுமே
ஜீவியம் காத்து என்றென்றும் செல்லுவேன்
சுத்தாங்கம் விளங்க கர்த்தாவை சேருவேன்
எந்நாளும் மகிமையை செலுத்திடுவேன்

### பாடல் - 1354

**என்னையே கூப்பிடுவாய்**
மறுமொழி கொடுத்திடுவேன்
கடினமும் அறியாததும்
காரியம் அறிந்திடுவாய்

1. சகல வியாதி வேதனையும்
அகற்றி உன்னை குணப்படுத்தி
ஆரோக்கிய வாழ்வு அளித்திடுவேனே
உந்தன் பரிகாரியே

2. உந்தன் துக்கம் மாற்றிடுவேன்
களிப்பின் தொனியும் எழும்பிடுமே
துதியொலி கேட்கும் மகிழ்ச்சியும் தங்கும்
உன்னை விடுவிப்பேன் நான்

3. மேன்மையான வாக்குத்தத்தம்
அருமையான வார்த்தைகளை
நிறைவேற்றும் தேவன் நானே அறிவாய்
உனக்கு செவி கொடுப்பேன்

4. வேத சத்தியம் அறிவதினால்
தேவ நன்மை தங்கிடுமே
சமாதானம் அருளி சவுக்கியம் அருளி
உன்னை தாங்கிடுவேன்

5. வானில் மீன் போல ஜனமதையே
பூவில் நானே பெருக செய்வேன்
ஊழிய பாதையில் உயர்வினை காண்பாய்
உன்னை உயர்த்திடுவேன்

**பாடல் - 1355**

**தேவாதி தேவன் இயேசுவைப் போற்றி**
என்றென்றுமாய் வாழ்த்துவோம்
அல்லேலூயா அல்லேலூயா

1. காலமெல்லாம் அவரின் பின்னே
தொடர்ந்து சென்று பணிகுவோம்
துதியினாலே மகிமைப்படுத்தி
துதிப்போம் இவரை என்றுமாய்

2. தடைகள் யாவும் நீக்கும் தேவன்
பணிந்து இவரை போற்றுவோம்
தீமை ஒன்றும் அணுகிடாமல்
விலக்கி காக்கும் தேவனாம்

3. ஏற்ற வேளை உயர்த்தும் தேவன்
அவரின் கரத்தில் அடங்குவோம்
தேவ வழியில் சென்று நாமே
தேவன் இவரை புகழுவோம்

4. மகிமை தேவன் தமது சபையை
வானில் சேர்க்க வருகிறார்
தூய்மை காத்து ஆயத்தமாக
அன்பர் இவரை உயர்த்துவோம்

5. பாதுகாத்த தயவை எண்ணி
பாரில் இவரை உயர்த்துவோம்
மகிமை நாமமுடைய தேவன்
பூவில் இவரை உயர்த்துவோம்

**பாடல் - 1356**

**இயேசுவை காலையிலே**
துதி பலி செலுத்தியே தொழுதிடுவோம்
கிருபைகள் தங்கிடவே இயேசுவை தேடிடுவோம்

1. வல்லமை தங்கிடுதே
தேவனின் சமூகத்தில்
உதடுகள் துதித்திடவே
அதிகாலை வேளை கூப்பிடுவோம்

2. கர்த்தரில் காத்திருந்தால்
புதுபெலன் அடைந்திடலாம்
வெளிச்சமே உதித்திடுமே
எந்நாளும் ஜெயமே அடைந்திடுவோம்

3. தேவனின் பாதமதில்
நம்மையே படைத்திடுவொம்
தேவனின் சாயல்தனை
அதிகாலை அடைய நாடிடுவோம்

4. செட்டையின் நிழல்தனில்
மகிழ்ச்சியும் தங்கிடுதே
இரக்கங்கள் பெருகிடவே
அதிகாலை வேளை அழைத்திடுவோம்

5. தேவனை தேடி வந்தால்
தேவைகள் தந்திடுவார்
இயேசுவின் நாமத்திலே
எந்நாளும் குறைகள் நீங்கிடுமே

## பாடல் - 1357

**எந்தன் வாஞ்சை பரலோகமே**
என்று சேர்ந்திடுவேன்
என் நேசரை
என் ராஜனை என்று நான் கண்டிடுவேன்

1. நேசர் தேசமதில் என்றும் பேரின்பமே
கண்ணீர் எல்லாம் மாறிடுமே என்றும் ஆனந்தமே

2. சாவின் கூர்மை யாவும் அழிந்து ஒழிந்ததே
சஞ்சலமோ அங்கில்லையே நேசரை கண்டிடுவேன்

3. வீதி பொன்மயமே பாடியே மகிழுவேன்
இரா பகலோ அங்கில்லையே வெளிச்சம் இயேசு தானே

4. தேவ அன்பதுவே நெருக்கி ஏவிடுதே
பிரிக்கவோ ஏதுமில்லை அன்பரை சேர்ந்திடுவேன்

## பாடல் - 1358

**பயங்கர பராக்கிரமம்**
செய்யும் தேவன் இருப்பதினால்
அஞ்சிடேன் என்றுமே
ஜெயமே நான் அடைந்திடுவேன்

1. அவர் மா அன்பினால் என்னை மாற்றி நிதம்
அதிசயம் காட்டி இணங்கச் செய்தார்
ஜெயித்திடுவேன் வீழ்த்திடுவேன்
தேவாவி என் மீது தாங்குவார்

2. அவர் நல்லவரே அவர் வல்லவரே
சோதித்து அறியும் கர்த்தரிவர்
தேர்ச்சி என்றும் உண்டாகும்
காரியம் அவர் மீது சாட்டினேன்

3. அவர் நான் நம்பிடும் எந்தன் தேவனாவார்
உதவிகள் அவரால் கிடைத்திடுமே
உண்மையினை காத்திடுவேன்
எனக்காக யாவையும் செய்குவார்

4. அவர் வார்த்தை என்றும் எந்தன் உள்ளத்திலே
எரிந்திடும் தீ போல் பரவிடுதே
போதனையே பெற்றிடுவேன்
என்றென்றும் அவர் வாக்கை காப்பேனே

5. அவர் நல் நாமத்தை என்றும் நான் பாடுவேன்
அவரது கரமே எழும்பிடுமே
விடுதலையை அளித்திடுவார்
எந்நாளும் அவர் நாமம் போற்றுவேன்

## பாடல் - 1359

**மணவாட்டியே என் சபையே**
விழித்தெழு சீயோன் திருச்சபையே
உன்னில் மகிமை அடைந்திடவே
உன்னை பூவினில் கண்டெடுத்தேன்

1. உள்ளான அழகு என் பிரியம்
உபதேசத்தில் நிலைத்திருப்பாய்
என் பிரியமே ரூபவதி
உன்னில் நான் மகிழ்ந்திடுவேன்

2. கூர்மையும் புதிதும் எந்திரமாய்
மலைகளை நொறுக்கிடுவாய்
தகர்த்திடுவாய் குன்றுகளை
பாதாள வாசல்கள் மேற்கொள்ளாதே

3. உந்தனின் கிரியை நான் அறிவேன்
உண்மை ஊழியம் செய்திடுவாய்
ஜனம் தருவேன் ஜெயம் தருவேன்
உன்னை நான் கனம் பண்ணுவேன்

4. உன்னையே தோட்டத்தில் நாட்டினேன் நான்
என்றுமாய் கனி தரவே
படர்ந்திடுவாய் வளர்ந்திடுவாய்
என் வாசம் என்றும் இன்பமிதே

5. பரிசுத்தம் காத்து ஆயத்தமாய்
வானில் நீ பறந்திடவே
மகிமையிதே பரவசமே
உன்னை சந்திக்கும் நாளதனிலே

## பாடல் - 1360

**பரிசுத்த தேவன் நீரே**
வல்லமை தேவன் நீரே
என்றென்றும் தொழுதிடுவோம் நாம்
இயேசுவே உம் நாமத்தை
என்றென்றும்ம தொழுதிடுவோம் நாம்
நீர் தேவன் நீர் ராஜா என்றும்

1. கேரூபின்கள் சேராபீன்கள்
உந்தனை தொழுதிடுதே
வல்லமை இறங்கிடவே
உந்தனை தொழுதிடுவோம்

2. உம்மை போல் தேவன் இல்லை
பூமியின் பணிந்திடவே
அற்புத தேவன் நீரே
என்றென்றும் தொழுதிடுவோம்

3. மேலான தேவன் நீரே
மேலான நாமமிதே
மாந்தர்கள் பணிகின்றாரே
உம்மை தொழுதிடுவோம்

4. சத்திய பாதைதனில்
நித்தமும் நடந்திடவே
உத்தமர் தேவன் நீரே
உம்மையே தொழுதிடுவோம்

5. சேனையின் தேவன் நீரே
எந்நாளும் முன் செல்லுமே
நல்லவர் இயேசு நீரே
என்றென்றும் தொழுதிடுவோம்

## பாடல் - 1361

**இப்பூவினில் நம் இயேசுவே**
தேடியே மீட்க வந்தார்
விண்ணோர்களும் பண் பாடவே
விந்தையாய் இயேசுவே வந்துதித்தார்

1. அருணோதயம் பூவில் தோன்றினதே
பாதை காட்டிடவே
தாவீதின் வேரில் தோன்றினவர்
தேவ பாலனிவர்

2. ஆலோசனை கர்த்தர் நாமமிதே
வல்ல தேவனிவர்
கர்த்தத்துவம் அவர் தோளிலுண்டே
பாதம் போற்றிடுவோம்

3. அல்லேலூயா நாம் பாடுவோம்
மீட்பர் பாரில் வந்தார்
இம்மானுவேலரை நம் தேவனை
வாழ்த்தி போற்றிடுவோம்

## பாடல் - 1362

**இதயம் நன்றியுடன் நிரம்பி துதித்திடுவோம்**
மகிபன் இயேசுவையே தினமே துதித்திடுவோம்

1. சென்ற நாளில் நன்மை செய்த
மன்னன் இயேசு தேவனே
பாதுகாத்தார் துணை நின்றார்
நன்றியோடு பாடுவோம்

2. தேவ ராஜ்யம் தேடி வந்தால்
தேவ நன்மை தங்கிடும்
துதி செய்தால் தடை நீங்கும்
தேவ ஆசீர் தங்கிடும்

3. ஆவி ஆத்மா உடல் யாவும்
பரிசுத்தம் காத்துமே
பரன் பாதம் போற்றி வாழ்த்தி
எந்த நாளும் பணிகுவோம்

4. வஞ்சியாமல் பொருள் தந்து
தேவ சேவை தாங்குவோம்
அதினாலே நன்மை தங்கும்
என்றும் ஆசீர்வாதமே

5. கர்த்தர் சமூகம் காத்திருந்து
பெலன் பெற்று எழும்புவோம்
துதி செய்தால் சோர்வு நீங்கும்
கர்த்தர் நாமம் போற்றுவோம்

## பாடல் - 1363

**நானே மெய்யான திராட்சை செடி**
கனி தரவே நாம் கொடிகள் என்றார்
செழிப்புடன் படர்ந்து ஓங்கிடுவோம்
வார்த்தையில் நிலைத்து வளர்ந்திடுவோம்

1. தனித்திடும் கொடியில் கனிகள் இல்லை
செடியினில் நிலைத்தால் கனிகள் உண்டு
இயேசுவில் என்றும் நிலைத்திருந்தால்
குறைவில்லா கனிகள் மிகுந்திடுமே

2. நிறைவுடனே கனிகளை தந்திடவே
பரிவுடன் அவரே சுத்தம் செய்வார்
சத்திய உபதேசம் ஏற்பதினாலே
நித்திய சுத்தம் நிலைத்திடுமே

3. ஆவியின் கனியோ அன்பு சந்தோஷம்
நீடிய பொறுமை நற்குணமே
சாந்தம், தயவு, நல் விசுவாசம்,
இச்சையடக்கம் இவைகளாகும்

4. நன்றியின் ஜீவியம் காத்திடுவோம்
உதட்டின் கனியை செலுத்திடுவோம்
இயேசுவின் சொந்த சுதந்திரமாகி
நீதியின் கனிகளை அளித்திடுவோம்

5. ஆத்தும தரிசனம் கண்டிடுவோம்
ஆத்தும ஆதாயம் செய்திடுவோம்
ஜீவிய சாட்சியை காத்திடுவோம்
உயரிய கனிகள் ஈந்திடுவோம்

## பாடல் - 1364

**புறப்படுவோம் நாம் விரைவாய்**
யுத்தம் செய்திட புறப்படுவோம் நாம்
அரண்களை அழித்து நுழைந்திடுவோம்
என்றும் ஜெயமதை அடைந்திடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. கொள்ளைப் பொருளை சுதந்தரிக்க செல்லுவோம்
எல்லைத் தாண்டி சென்றுமே அழித்து வீழ்த்துவோம்
ஆத்துமாக்களை ஆயிரங்களாய்
தேவ ராஜ்ஜியம் கொண்டு வந்து சேர்ப்போமே

2. அந்தகார பேயினை அழித்துமே
வெற்றி வாகை சூடியே மகிழ்ந்து பாடியே
சர்வ வல்லவர் முன்னே செல்கின்றார்
தேவ சேனை வீரராக மாறுவோம்

3. நமது யுத்தம் கர்த்தர் செய்ய ஆயத்தம்
நமது முன்னே செல்லும் தேவன் தானே தலைவரே
பாளையம் எங்கும் ஜெயத்தின் கொடிகளே
மகிமை கனமும் துதியை என்றும் செலுத்துவோம்

4. ஆயுதங்கள் யாவையும் தரித்துமே
யுத்தம் செய்ய தைரியமாய்
நாம் முன்னே செல்லுவோம்
தாழ்மை வேண்டுமே தியாகம் வேண்டுமே
ஞானம் ஒழுக்கம் பயிற்சி யாவும் தேவையே

5. பொல்லா சாத்தான் வல்லமை அழிந்திட
வல்ல தேவன் இயேசுவே நம் முன்னே செல்கின்றார்
எல்லை சொந்தமாய் எடுத்து நிறுத்திட
இயேசு நாமம் என்றுமே உயர்த்துவோம்

## பாடல் - 1365

**துணை என்றும் இயேசு தேவா**
உம்மை நம்பினேன்
எம்மைக்காரும் தேவ மைந்தா
உம்மைச் சாருவேன்

1. இருள் யாவும் நீக்கி எம்மில் அருள் யாவும் தந்தீர் தேவா
கனிவாக வந்தீரே துணையாக நின்றீரே
தேவ தேவன் இயேசுவே அன்பு போதுமே

2. எனக்காக யாவும் செய்யும் பலமுள்ள தேவன் நீரே
விளக்கினை ஏற்றுவீர் அபிஷேகம் பண்ணுவீர்
எந்தன் கொம்பு உயர்ந்திடும் நம்பும் தேவனே

3. அலை போல பாயும் துன்பம் கடல் போல சீறும் காற்றோ
இரையாதே என்றீரே அமைதலை தந்தீரே
வார்த்தை ஒன்று சொல்லுமே வல்ல தேவனே

4. பயந்திடும் யாவர் மீதும் நன்மையை பொழியும் நாதா
நம்பினேன் உம்மையே நன்மையே ஈந்திடுமே
நீதிமானின் தேவனே நித்தம் நடத்துமே

5. வழி என்றும் காட்டும் தேவா விழி என்னில் வைத்த மூவா
தினம் தினம் போதியும் அருள் நிதம் காட்டிடும்
உம்மைப் போல் தெய்வத்தை பூவில் காணேன் நான்

## பாடல் - 1366

**நானே மெய் தேவனாம்**
மகிமை அருளிச் செய்வேன்
சீயோன் களிப்பாய்
எந்தன் இரட்சிப்பை கண்டிடுவாய்

1. தந்தை போலவே தாங்கி ஏந்துவேன்
சுமந்து காத்திடுவேன்
நம்பி ஏகுவாய் நன்மை செய்குவேன்
துணையே எந்நாளுமே

2. என்னையன்றியே வேறு எதனையும்
வணங்கிடவே வேண்டாம்
எந்தன் ஐக்கியம் உன்னில் பெருகிடும்
வளர்ந்தே முன் ஏகுவாய்

3. எந்தன் யோசனை என்றும் நிலைத்திடும்
எனக்கென்றும் செவி கொடுப்பாய்
உன்னை உயர்த்துவேன் மேன்மைப்படுத்துவேன்
நிலைப்பாய் என் வார்த்தையில்

4. எந்தன் இரட்சிப்பை என்றும் காணுவாய்
விடுதலை அளித்திடுவேன் மகிமை வெளிப்படும்
தெரிந்தேன் உன்னை நான்
களிப்பாய் எந்நாளுமே

5. அன்னை வயிற்றினில் தோன்றும் நாள் முதல்
தாங்கினேன் உன்னை நானே
என்னை மறவாமல் நன்றி செய்குவாய்
துதிப்பாய் எந்நாளுமே

## பாடல் - 1367

**வானமும் பூமியும் படைத்தவரே**
வல்ல தேவனே எனதரசே
எந்தன் ஒத்தாசை பர்வதமே
எந்தன் கண்களை ஏறெடுப்பேன்

1. மலைகள் பெயர்ந்து மாறிடினும்
நிலைகள் தகர்ந்து போயிடினும்
மாறாத உந்தன் கிருபையாலே
ஆறுதல் எனக்கு அளித்தவரே

2. என்னை காப்பவர் உறங்காரே
எந்தன் தேவன் துணையாவார்
எல்லா தீங்கும் காப்பாரே
சேதங்கள் ஒன்றும் அணுகாதே

3. வலப்பக்கம் எந்தன் நிழல் நீரே
வழுவா காத்திடும் கன்மலையே
அற்புத அதிசயம் செய்பவரே
என்றும் எந்தன் துணை நீரே

4. எந்தன் புகலிடம் நீர் தானே
அஞ்சிடும் நேரம் அணைப்பவரே
பயங்கள் யாவும் அகற்றினீரே
பாரில் எந்தன் துணை நீரே

5. அடைக்கலம் எனக்கு நீர் தானே
கோட்டை மதிலாய் நிற்பவரே
ஆயுதம் ஒன்றும் வாய்க்காதே
எந்த நேரமும் ஜெயம்தானே

**பாடல் - 1368**

**வல்லவரே நல்லவரே**
என்றுமாய் என் தஞ்சமே
உம்மைப் போல மாற்றிடுமே
எந்தனை தந்தேனைய்யா

1. உம்மைப் போல மாறிடவே
வார்த்தை என்றும் கைக்கொண்டு
உம் வழியில் நான் நடந்திடவே
போதனையை செய்தீரைய்யா
உம்மை நம்பினேன் நடத்தும் என் இயேசுவே

2. நம்பும் எந்தன் நங்கூரமே
நம்பி வந்தேன் உம் பாதை
நம்பிக்கையில் நான் பெருகிடவே
நல் விசுவாசம் அளித்திடும் தேவா
நாடி வந்தேனே சமூகம் நீர் தந்திடும்

3. உலக சிநேகம் பின்னே வைத்தே
உறுதியாக பின் செல்ல
உம்முடனே நான் இணைந்திடவே
உம் அருளை அளித்திடும் தேவா
ஏற்றுக் கொள்ளுவீர் பலியாக தந்தேனே

4. நம்மைப் போல ஒன்றாகவே
இணைய வேண்டி ஜெபித்தீரே
பரிசுத்தமாய் நான் வாழ்ந்திடவே
பரிந்துரைகள் செய்தவர் நீரே
காத்துக் கொள்ளுவீர் துணையே எந்நாளுமே

5. எந்தன் மேன்மை நீரல்லோ
எண்ணி நாளும் நான் வந்தேன்
இறுதிவரை நான் முடித்திடவே
அருள் தனையே பொழிந்திடும் தேவா
நம்பி வந்தேனே துணையே எந்நாளுமே

## பாடல் - 1369

**மரணத்தை வென்று உயிர்தெழுந்தார்**
இயேசு ராஜனே
சாவினை நோயினை பேயினை அழித்தார்
வல்லவர் அவரை தொழுதிடுவோம்

மகிமையின் தேவன்
இயேசு ஜெயமுடன் எழுந்தார்
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
ராஜாதி ராஜாவே ஓசன்னா

1. வேதாளம் பாதாளம் சென்றெழுந்தார்
மரணத்தின் கூரை ஜெயித்தெழுந்தார்
நம்பிக்கை அருளி பயங்கள் போக்கினார்

2. கல்லறை திறந்திட உயிர்த்தெழுந்தார்
வல்லவர் இயேசு ஜெயித்தெழுந்தார்
சமாதானம் நல்கி ஆசீர் அளித்தார்
உத்தமர் இயேசு உயிர்த்தெழுந்தார்

3. விசுவாசம் நம்பிக்கை நல்கிடவே
யூதாவின் சிங்கம் உயிர்த்தெழுந்தார்
முதற்பலன் இவரே துதிக்குப் பாத்திரர்
இரட்சகர் இயேசு உயிர்த்தெழுந்தார்

4. வானத்தின் சேனை துதித்திடவே
வானவர் இயேசு உயிர்த்தெழுந்தார்
ஜீவனை தந்து பாவம் போக்கினார்
ஜீவனின் அதிபதி உயிர்த்தெழுந்தார்

5. கர்த்தரின் வருகை நெருங்கிடுதே
சுத்தர்களாய் நாம் ஜீவிப்போமே
விண்ணவர் சாயல் அடைந்து ஏகுவோம்
கண்ணிமை நேரம் மாறிடுவோம்

## பாடல் - 1370

**ஆனந்தமாய் நம் தேவனை**
கீதங்கள் பாடி துதித்திடுவோம்
தொழுவோம் பணிந்திடுவோம்
அவர் தான் பாத்திரரே

1. மகிமையும் வல்லமை கனத்திற்கு பாத்திரர்
சகலமும் சிருஷ்டி தேவன் அதிபதி இயேசுவே
பரிசுத்தர் இயேசு பரிசுத்தர்
பாத்திரர் இயேசு பாத்திரரே

2. ஒளிதரும் கண்களோ சுடர்தரும் பாதங்கள்
பெருவெள்ள இரைச்சல் சத்தம்
வலக்கரம் வல்லமை சிறந்தவர் அழகில் சிறந்தவர்
துதிகளை செலுத்தி தொழுதிடுவோம்

3. ஜீவன்கள் மூப்பர்கள் தூதர்கள் யாவரும்
பணிந்திடும் தேவன் நீரே பரிசுத்தர் இயேசுவே
ஆவியில் நிறைந்து தொழுகுவோம்
ஆண்டவர் இவரை பணிந்திடுவோம்

4. ஆதியும் அந்தமும் நீர் ஞானத்தில் சிறந்தவர்
யூதாவின் சிங்கம் நீரே துதிகளின் பாத்திரர்
துதிகளை சாற்றி பணிகுவோம்
ஸ்தோத்திரம் செலுத்தி தொழுதிடுவோம்

5. நன்மைகள் யாவையும் அளித்திடும் தேவனாம்
உண்மையாய் நாமே என்றும் விழிப்புடன் ஜீவித்து
மகிமையில் சேர்ந்து புகழ்ந்திட
மகிபனை நாமே துதித்திடுவொம்

## பாடல் - 1371

**விழித்தெழும்பு சபையே**
விளைவினை அறுக்கவே
வயல்களை நோக்கிடுவோம்
அறுவடை செய்குவோம்

1. ஆறுதல் கூறிட யாரும் இல்லை
ஆத்தும ஆதாயம் செய்திடுவோம்
திறப்பில் நின்றிட ஆட்கள் இல்லை
இரவும் பகலும் உழைத்திடுவோம்

2. ஒருவரும் கிரியை செய்யக்கூடா
இருளின் வேளையும் நெருங்கிடுதே
ஒளியின் காலம் முடிந்திடும் முன்னே
உந்தனின் சேவை செய்திடுவாய்

3. இயேசுவின் ராஜ்ஜியமம் பெருக வரை
இயேசுவின் சேனையில் உழைத்திடுவோம்
பொறுப்பாய் ஊழியம் செய்து நாமே
சபையில் நிலைத்து தாங்கிடுவோம்

4. கால்களோ இல்லை அலைந்து திரிய
வாய்களோ வேண்டும் பேசிடவே
தரிசனம் நிறைந்த தாசர் தேவை
இயேசுவின் சேவை பாக்கியமே

5. வாழ்க்கையில் நிம்மதி அலைந்து தேடும்
மாந்தரை அணுகி கூறிடுவீர்
காடு மலைகள் கிராமம் தோறும்
எழும்பி சேவை செய்திடுவாய்

## பாடல் - 1372

**என் தேவனே என் துணையே**
என்றென்றுமாய் காப்பவரே
என் இயேசுவே என் நம்பிக்கை
எந்நாளுமே சார்ந்திடுவேன்

1. தீங்கு நாளில் கூடாரத்தின்
மறைவினிலே காத்திடுவீர்
கரத்தினாலே மூடிடுவீர்
எந்தன் தஞ்சம் இயேசு தேவனே

2. நம்பிடுவேன் என்றென்றுமாய்
நம்பிக்கையும் நீர்தானைய்யா
கைவிடாமல் காத்திடுவீர்
எந்தன் துருகம் இயேசு தேவனே

3. ஏற்றிடுவோம் எந்நாளுமே
ஜெயக்கொடியே உம் நாமமே
தோல்வி இல்லை முன்னேறுவேன்
எந்தன் கோட்டை இயேசு தேவனே

4. நீரே எந்தன் பங்கானவர்
நீரே எந்தன் பெலனானவர்
திட மனதாய் காத்திருப்பேன்
நம்பும் நன்மை வந்தடையும்

5. இறுதி வரை பின் செல்லுவேன்
முடிவினிலே சேர்த்திடுவீர்
முகமுகமாய் தரித்திட
நம்பி வந்தேன் இயேசு தேவனே

## பாடல் - 1373

**முன்னேறுவோம் நாம் நேசர் பாதையில்**
முன்னேறுவோம் நம் இயேசு செல்கிறார்
முன்னேற்றமே ஜீவியமே
முன் வைத்த காலை பின் நோக்கிடலாம்

1. லோக வேஷத்தை முற்றும் வெறுப்போம்
லோக இன்பத்தை பின்னே தள்ளுவோம்
ஆவியிலே நாமும் வளர்வோம்
இயேசுவின் நாமத்தை எங்கும் சாற்வோம்

2. ஜீவ வாக்கினை கையில் ஏந்துவோம்
தீயோர் மத்தியில் தீபமேற்றுவோம்
சத்தியமாம் கச்சை கட்டியே
சாத்தானின் சேனையை ஜெயமெடுப்போம்

3. தேவன் நியமித்த ஓட்டமதிலே நோக்கியே செல்லுவோம்
இயேசுவை நித்தம் பின் செல்லுவோம்
மீட்பர் செல்கிறார் ஜீவனை தியாகமாய்
வைத்து செல்லுவோம்

4. எண்ணிடலங்கா ஜாதிகளையே
இயேசுவின் பாதம் கொண்டு வருவோம்
தூண்களை போல் நாமும் தாங்குவோம்
தேவனின் சேவையில் சேர்ந்து உழைப்போம்

5. ஆதி சீரினை நாமும் அடைவோம்
பூர்வ நாட்களின் மேன்மை பெறுவோம்
கர்த்தரின் வாக்கினை சொந்தமாக்குவோம்
தேவனின் ஆசீரை நாமும் பெறுவோம்

## பாடல் - 1374

**என் தேவன் இயேசுவுக்கே**
எந்நாளும் ஸ்தோத்திரமே
என்னோடு இருப்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரமே

1. தேவனே நீர் நன்மை செய்தீர்
ஸ்தோத்திர பலியை செலுத்திடுவேன்
எந்தன் ஜெபத்தை கேட்டிடுவீர்
தேவனே உமக்கே ஸ்தோத்திரமே

2. கூப்பிட்ட நாளில் பதில் தந்தீர்
ஆத்துமாவில் பெலன் தந்தீர்
யாவையும் எனக்காய் முடித்திடுவீர்
தேவனே உமக்கே ஸ்தோத்திரமே

3. நெருக்கப்பட்ட வேளையிலும்
நெருங்கியே நீர் அணைத்தீரே
உறுதியாய் உம்மில் நிறுத்திடுவீர்
தேவனே உமக்கே ஸ்தோத்திரமே

4. வாழ்ந்திடும் வாழ்க்கை உமக்காக
உமது மகிமைக்காய் மாற்றிடுமே
உந்தன் சாட்சியாய் மாற்றிடுவீர்
தேவனே உமக்கே ஸ்தோத்திரமே

5. கன்மலை மீட்பும் உதவியுமாம்
நம்பிடும் தேவன் துணையானீர்
எந்தன் விளக்கை ஏற்றிடுவீர்
தேவனே உமக்கே ஸ்தோத்திரமே

## பாடல் - 1375

**சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசு என் ராஜனே**

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசு என் ராஜனே
உந்தன் ஆட்சி எம்மில் வேண்டும்
ஆளுகை செய்திடுமே

மூப்பர்கள் யாவரும் பணிந்திடும் தேவனே
உந்தனை உயர்த்தியே தொழுவோம்

1. எகிப்தின் ஜனம் மீட்க எழுந்தீர் எந்தன் தேவா
எழுப்பினீரே மோசே உடனிருந்து
என்றும் பெலத்தை நீர் தந்தீரைய்யா
என்னை நடத்திடுமே – என்றும்

2. சவுலை பவுலாக தமஸ்கு நடுத் தெருவில்
தரிசனம் தந்து மாற்றினீரே தேவா
உம்மையே என்றும் பணிகின்றேன்
முற்றும் படைக்கிறேன் - என்னை

3. இறுதிவரை இருப்பேன் வாக்குத் தந்தீர் தேவா
ஊழியம் செய்ய வல்லமை தாரும்
இன்றே உம்மை கெஞ்சுகிறேன்
ஜெயத்தை தந்திடுமே - என்றும்

4. தேவசத்தம் கேட்டு தேவசித்தம் செய்தான்
சாமுவேல் போல உம் சத்தம் கேட்க
எனக்கும் அருள் செய்திடுமே
சத்தம் கேட்பேனே - உந்தன்

5. தூரம் சென்ற சீஷன் சேவை செய்ய அழைத்தீர்
பார்வையினாலே பேதுரு வந்தான்
சபையை நீர் கட்டினீரே
ஆளுகை செய்திடுமே - என்றும்

## பாடல் - 1376

**வெற்றி வேந்தன் இயேசு ராஜன்**
ஜெயமே தந்திடுவார்
ஜெயமே அடைவோம் - 2

1. எதிரி படையினை வீழ்த்தி
எதிர்த்து யுத்தம் செய்வார்
யுத்தமில்லா இளைப்பாறுதல்
இயேசு தந்திடுவார்

2. நமது ஆயுதம் யாவும்
மாம்சம் அல்ல அறிவோம்
அரண்களையே நிர்மூலமாய்
மாற்றும் வல்லமையே

3. வான மண்டல ஆவி
சாத்தான் கிரியை அனைத்தும்
கடிந்திடுவோம் கட்டிடுவோம்
இயேசு நாமத்தினால்

4. இயேசு நாமத்தை உயர்த்தி
சிலுவைக் கொடியினை பிடிப்போம்
துதி நிறைந்த தொழுகையினால்
வெற்றி கிடைத்திடுமே

5. அவரை அறிந்து நாம் வளர்வோம்
வாசம் வீசியே மகிழ்வோம்
கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும்
எங்கும் வெற்றி உண்டே

## பாடல் - 1377

**நீதிமான் செழித்திடுவான்**
நீதிமான் உயர்ந்திடுவான்
நித்திய கீர்த்தி நித்திய வாழ்வு
நித்திய ஜீவன் கிடைத்திடுமே

1. இராஜ பாதையே தோல்வி இல்லையே
இடறாதே நடைகள் ஒன்றும்
அவனது கொம்பு உயர்ந்திடுமே
அவனது விருப்பம் நிறைவேறும்

2. சுத்த வெள்ளியாம் ஜீவ ஊற்றாகும்
நாவு மாறிடும் சுபாவம் மாறிடும்
உதடு பிரியம் பேசடும்
உத்தம வழியில் நடந்திடுவான்

3. சந்ததி என்றும் செழித்திடுமே
அப்பம் வீட்டினில் குறைவதில்லை
அவனது ஆஸ்தி பெருகிடுமே
அவனது தேவன் துணையாவார்

4. ஆசீர்வாதமாய் மலர்ந்திடுவான்
ஆர்ப்பரித்துமே மகிழ்ந்திடுவான்
அவனது வீட்டில் பொக்கிஷம்
அவனது வீட்டில் கெம்பீரம்

## பாடல் - 1378

**ஆட்கொண்ட நல் நேசர் இயேசு தேவா**
என்னையே தந்தேனே
எந்நாளும் பரிசுத்தம் காத்துமே
என்றென்றும் உம்மை சேவிப்பேன்



அட்டவணை

1. என்றும் உம்மை சேவித்திட
நல்ல பங்கை கண்டைந்தேன்
இயேசுவே பின்செல்வேன்
என்றுமாக தாங்கி என்னை வழி நடத்திடுவீர்

2. ஜீவப் பலியாய் ஒப்படைத்தேன்
மாம்சம் சாக அர்ப்பணித்தேன்
இயேசுவே தந்தேனே
என்னையே ஏற்றுக் கொள்ளும் அர்ப்பணம் செய்தேன்

3. உந்தன் நாமம் உயர்த்துவேன்
மகிழ்ச்சி பெலனை தந்தவரே
இயேசுவே நம்பிடுவேன்
உம்மிலே என்றுமாய் மகிழ்ந்திடுவேனே

4. உந்தன் வேலை ஊக்கத்துடன்
உறுதியாக செய்திடவே
அகத்தினில் எரிந்திடும்
அன்பின் நல் ஜுவாலைப் போல் எரிந்திட செய்வீர்

5. தேவ பயமே நிறைந்துமே
பக்தியோடு ஆராதிப்பேன்
ஆறுதல் பெருகிடும்
உம்மை என்றும் பாடியே உயர்த்திடுவேன்

## பாடல் - 1379

**அற்புதராம் இயேசு தேவன்**
வல்லமை வெளிப்படுதே
சுகம் அடைய பெலன் பெறவே
அவரையே அண்டிடுவோம்
அல்லேலூயா ஆர்ப்பரிப்போம் (2)

1. வியாதிகள் யாவும் நீங்கிடுமே
தழும்பினால் சுகமே தங்கிடுமே
வல்லமையே வெளிப்படுதே
பிணிகள் யாவும் நீங்கிடுதே

2. நொறுங்குண்ட இதயம் குணப்படுத்த
வல்லமை இன்றே வெளிப்படுதே
காயங்களை ஆற்றிடுவார்
எண்ணெய் இரசமும் வழிந்திடுதே

3. பாவத்தில் அமிழ்ந்த யாவரையும்
தூக்கியே நிறுத்தி காத்தனரே
ஆத்துமாவை குணப்படுத்தி
அகமதில் மகிழ்ச்சி அளித்தனரே

4. சோதனை கண்ணியில் சிக்கினோரை
சீர் திருத்தி குணமாக்கியே
தேவனையே அண்டிடுவோம்
சேர்ந்து ஆசீர் பெற்றிடுவோம்

5. பூரண சுகமே தந்திடுவார்
சபைதனை உயர்த்தி நிறுத்திடுவார்
ஆடல் பாடல் தொனியுடன்
ஆர்ப்பரித்தவரை உயர்த்திடுவோம்

## பாடல் - 1380

**சீயோன் சபையே மகிழ்ந்திடு**
சத்தமிட்டு கெம்பீரி
இஸ்ரவேலின் பரிசுத்தர்
உந்தன் நடுவில் பெரியவர்

1. கர்த்தர் பெலனும் கீதமும்
இரட்சிப்பாகி உயருவார்
பயப்பட்டால் நம்பி சேர்வோம்
பரமன் இயேசு பெரியவர்

2. கர்த்தர் இயேசுவை துதித்துமே
தொழுது நாமே பணிகுவோம்
அவரின் நாமம் உயர்த்தி பிடிப்போம்
இயேசு தேவன் பெரியவர்

3. அவரின் செயலை அறிவித்து
அவரின் நாமத்தை உயர்த்துவோம்
பூமியெங்கும் அறிவிப்போமே
கிறிஸ்து இயேசு பெரியவர்

4. புதிய ஆண்டின் நன்மைகள்
புதிய கிருபை அளிப்பவர்
ஆற்றி தேற்றி அன்பு செய்யும்
அன்பர் இயேசு பெரியவர்

## பாடல் - 1381

**நல்லவரே இயேசு தேவா**
நன்மையினால் முடிசூட்டி
கிருபைகளை பொழிந்திடுவீர்
என்றென்றுமாய் நடத்திடுவீர்

1. உம்முடைய பரிசுத்தமாம் வீட்டின் நன்மையால்
திருப்தியாக்கியே தினம் நடத்துமே
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன் - நல்லவரே

2. மனம் திரும்ப திரும்ப தயவினாலே
நன்மை கண்டேனே
கிருபையால் எம்மை அழைத்தீர் ஸ்தோத்திரம்
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன் - நல்லவரே

3. தடுமாறும் வேளையிலும் சித்தம் செய்திட
பாதை காட்டினீரே என்றும் ஸ்தோத்திரம்
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன் - நல்லவரே

4. உம்முடைய ஆலயத்தின் வேலை வளர்ந்திட
நன்மையாய் கரங்கள் எம்மை தாங்குதே
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன் - நல்லவரே

5. இதுவரையும் நடத்தி வந்த உமது நன்மையை
என்றும் மறவேனே நன்றி இயேசுவே
தேவா உம்மை நான் என்றும் துதிப்பேன் - நல்லவரே

## பாடல் - 1382

**கர்த்தரை நோக்கி காத்திருப்போர்க்கு**
வெட்கம் என்று இல்லையே
செவியை சாய்த்து பதிலை தந்தார்
மாமன்னர் இயேசுவை ஸ்தோத்தரிப்பேன்

1. இந்த ஏழை கூப்பிட்டான்
அவன் இடுக்கண் யாவும் நீக்கினீர்
தூதர் இறங்கி பாளையம்
துன்பங்கள் என் வாழ்வில் நீக்கினீர்

2. உம்மை துதிக்கும் ஸ்தோத்திரம்
எந்தன் வாயில் என்றும் தங்கிடும்
எந்தன் ஆத்மா மகிழ்ந்திடும்
என்றென்றும் எந்நாளும் ஸ்தோத்தரிப்பேன்

3. நீதிமானின் தேவன் நீர்
அவன் துன்பம் யாவும் நீக்குவீர்
அழைக்கும் போது பதில் வந்து
அன்பாக நீரே வந்தீரைய்யா

4. பயங்கள் யாவையும் மாற்றியே
எந்தன் துதியின் பலியை ஏற்பீரே
உமது நாமம் உயர்த்துவேன்
என்றென்றும் எந்நாளும் பாடிடுவேன்

5. சிங்கக்குட்டிகள் வாடிடும்
என்றும் தேவ ஜனங்கள் சோர்ந்திடார்
குறைவு என்றும் இல்லையே
நிறைவு எந்நாளும் தங்கிடுமே

## பாடல் - 1383

**இயேசுவின் அன்பை நினைத்திடுவேன்**
இறுதிவரை நான் பாடிடுவேன்
தூயரின் அன்பை மறவேனே
துதித்து மகிழ்ந்து களித்திடுவேன்

1. தாயினும் மேலாய் நினைத்த அன்பு
தாங்கியே எம்மை நிறுத்தும் அன்பு
தளராது என்னை அணைக்கும் அன்பு
தற்பரன் என்னில் பொழிந்த அன்பு

2. ஜீவனை எனக்காய் கொடுத்த அன்பு
தாழ்வினில் என்னை நினைத்த அன்பு
புத்திரராய் எம்மை மாற்றிய அன்பு
புனிதர் இயேசுவின் அழியா அன்பு

3. உலகத்திலிருந்து பிரிந்த அன்பு
சேற்றினிலிருந்து தூக்கிய அன்பு
உன்னத வாழ்வினை அளித்த அன்பு
உத்தமராய் எம்மை மாற்றிய அன்பு

4. சத்திய தேவனின் தனிப்பெரும் அன்பு
சுத்தராய் வாழ்ந்திட சேர்த்திட்ட அன்பு
சிலுவையிலே தம்மை கொடுத்த அன்பு
சித்தங்கொண்டு எம்மை மீட்டிடும் அன்பு



அட்டவணை

5. தவறிய என்னை தேடிய அன்பு
தயாளராய் என்னை தாங்கிய அன்பு
மறவாது என்னை நோக்கிய அன்பு
மகிபன் இயேசுவின் மாறா அன்பு

## பாடல் - 1384

**ஜெயித்திடும் இயேசு சேனை வீரர்**
என்றும் வெற்றி அளித்திடுவார்
இயேசுவுக்குள் வாழும் யாவருக்கும்
என்றும் வெற்றி அளித்திடுவார்

வெற்றி வெற்றி என்றும் ஆர்ப்பரிப்போமே
அல்லுலூயா என்றும் வெற்றியே

1. ஆவியின் பட்டயத்தால்
அழித்திடுவோம் அனைத்தையுமே
அச்சமில்லை தோல்வியில்லை
என்றும் வெற்றி உண்டே

2. ஆவியின் பெலத்தினால்
அரண்களை அழித்திடுவோம்
தேவ மக்கள் யாவருக்கும்
என்றும் வெற்றி உண்டே

3. சிங்கம் போல சத்துரு
சீறியே வந்திடினும்
இயேசுவின் நாமத்திலே
என்றும் வெற்றி உண்டே

4. தேவனையே சார்ந்திடுவோர்
பயப்படத் தேவையில்லை
இயேசுவின் ரத்தத்திலே
என்றும் வெற்றி உண்டே

5. ஆயிரம் பேர் எதிர்த்தாலும்
ஆண்டவரே அழித்திடுவார்
இயேசுவின் சேனையிலே
என்றும் வெற்றி உண்டே

## பாடல் - 1385

**கர்த்தர் பெரியவர் அவர் துதிக்கு பாத்திரர்**
தேவ நகரத்தில் பெரியவர்
சீயோனில் பெரியவர்



அட்டவணை

1. வடதிசை சீயோன் பர்வதமே
வடிப்புள்ள அவரது ஸ்தானமதே
மகாராஜா இயேசு ஆட்சி செய்யும்
மகிழ்ச்சி நிறைந்த நகரமிதே

2. அரண்மனைதனிலே அடைக்கலமாய்
அறியப்பட்டார் எங்கள் ஆண்டவரே
அவரின் செய்கையை பகைஞர் கண்டு
கலங்கி ஓடி மறைந்தனரே

3. தேவனே உமது ஆலயத்தில்
கிருபை என்றும் விளங்கச் செய்யும்
நீதி நிறைந்த உமது கரம்
பூமியில் என்றும் விளங்கிடுதே

4. தேவனே உமக்கு புகழ்ச்சி என்றும்
தேவனே உமக்கு மகிமை என்றும்
உமது கரமே உயர்த்திடுமே
ஜெயமாய் என்றும் நடத்திடுமே

5. இந்த தேவன் என்றென்றுமாய்
மரண பரியந்தம் நடத்திடுவார்
அதிசயம் அற்புதம் காணச்செய்வார்
ஜெயமாய் என்றும் நடத்திடுவார்

## பாடல் - 1386

**சேனைகளின் கர்த்தர் நீரே**
உம் ஆலயம் என் வாஞ்சையே
பேரின்பமே உந்தன் வாசஸ்தலம்
என் ஆத்துமா தினம் தேடிடும்
மீட்பரும் மகிமை நீர்தானையா

1. உம்முடனே வாசம் செய்யும்
வாசஸ்தலம் பாக்கியமே
என்றென்றுமாய் துதிப்பது
என் வாழ்வில் சேர்ந்திடும் சிலாக்கியமே

2. செம்மை வழி நடப்பவர்கள்
பாக்கியமே அடைந்திடுவார்
பெலத்தின் மேல் பெலன் பெற்று
சீயோனில் சீருடன் வாழுவார்

3. உத்தமமாய் நடப்பவர்க்கு
நன்மைகளை வழங்கிடுவீர்
கிருபை மகிமை அருளுவீர்
சூரியன் கேடகம் நீர்தானைய்யா

## பாடல் - 1387

**நம் இயேசுவை புகழ்ந்திடுவோம்**
எந்நாளும் ஸ்தோத்தரிப்போம்
அவர் வல்லவரே நல்லவரே
என்றும் துதித்திடுவோம்

1. ஆறுதல் செய்து ஆண்ட நடத்தினீரே 2
ஆயிரம் நன்மைகள் ஆண்டவர் அளித்தீர்

2. உந்தன் மறைவினிலே எம்மை காத்தவரே
தீமைகள் சேர்ந்திடா பாதுகாத்தவரே 2

3. உம்மை நம்பியதால் உண்மை சமாதானம்
தந்தீரே இயேசுவே என்றும் துதித்திடுவோம்

4. இருளை மாற்றினீரே ஒளியை தந்தவரே
தேவனே நீர் செய்திட்ட நன்மை பெரிதல்லவோ

5. கால்கள் வழுவிடாமல் பாதை காத்தவரே
உன்னத தேவனே உம்மை உயர்த்திடுவோம்

## பாடல் - 1388

**தேவன் எழுந்தருள்வார் தேவ சபைதனிலே**
வாசம் செய்திடுவார் தேவ சபையினிலே

1. சுத்தர்கள் கூடிடும் ஐக்கியமே
போதனை அறிந்து வாழுவோம்
துதிகள் பொருத்தனை
செலுத்தியே மகிழுவோம்

2. சபையின் தலைவர் இயேசுவே
சபையை நடத்தி செல்லுவார்
காவல் செய்துமே
காத்துமே நடத்துவார்

3. பரிசுத்தம் காத்து யாவரும்
ஆவியில் நிறைந்து வாழ்ந்துமே
எழுந்து கட்டிடுவோம்
இயேசுவின் சபையினை

4. மகிமை புகழ்ச்சி என்றுமே
சபையில் அவருக்காய் தோன்றிடும்
இயேசு உயர்ந்திட
அவருக்காய் வாழ்ந்திடுவோம்

5. மலைகளை மிதித்து போடுவாய்
குன்றுகள் பதராய் மாறிடும்
என்றும் வெற்றியே
தோல்வியே இல்லையே

## பாடல் - 1389

**அபிஷேக நாதரே பரிசுத்த ஆவியே**
பொழிந்திடுமே இதயமதில்
உன்னத ஆவியே

1. தூய நல் ஆவியால் உள்ளம்
நிரம்பிட ஊற்றிடுமே
ஆவியால் அனுதினமும்
நிறைந்து ஜெபித்திடுவேன்

2. தேவனின் ஆவியால் அன்பை
இதயத்தில் ஊற்றிடுமே
உம்முடனே நெருக்கமுடன்
இணைந்து வாழந்திடுவேன்

3. அக்கினி அபிஷேகம் தாரும்
மகிமையை கண்டிடவே
இறுதிவரை ஒளிகொடுத்து
உமக்காய் ஜொலித்திடுவேன்

4. தேற்றிடும் தேவனின் ஆவி
ஆற்றிடும் காயங்களை
நீர் செய்திட்ட நன்மைகளை
சாட்சியாய் பகிர்ந்திடுவேன்

5. ஆவியும் மணவாட்டியும் வாரும்
இயேசுவே அழைக்கின்றோம்
ஆவியினாலே அபிஷேகியும்
ஆயத்தம் அடைந்திடுவேன்

## பாடல் - 1390

**இயேசுவை ஏகமாய் உயர்த்திடுங்கள்**
தேவனை என்றென்றும் பண் பாடுங்கள்
வாசல்களே உயர்ந்திடுங்கள்
நல் வாஞ்சையால்
கதவுகளே உயர்ந்திடுங்கள்
உட் செல்லுவார்

1. உலகாளும் நம் தேவனே
மகிமையின் நம் தேவன்
சகலமும் சிருஷ்டித்த மகிமையின் கர்த்தனாம்
சேனை தேவனாம் அவர் வெற்றி சொந்தமே
அவர் முன்னே செல்கின்றார்
அதில் தோல்வி இல்லையே

2. உலகமும் குடியும் பூமியின் நிறைவும்
கர்த்தரின் சொந்தமே அதிபதி அவரே
கர்த்தர் பர்வதம் அதில் சுத்தன் ஏறுவான்
பரிசுத்தன் ஏறுவான்
அதில் என்றும் வாழுவான்

3. கைகளில் சுத்தமாய் இருதயம் மாசில்லா
ஆத்துமா மாயைக்கு ஒப்புக்கொடாமலும்
கபடாய் ஆணையாய்
அவன் நித்தம் தள்ளுவான்
அவன் தேவன் அருளிடும்
நல் ஆசீர் அடைகுவான்

## பாடல் - 1391

**என்னுள்ளம் தங்கும் என் இயேசு தேவா**
உம் நாமம் உயர்த்தியே பாடிடுவேன்
என் வாழ்வில் இன்பம் நீர்தானே ஐயா
என்னை இன்று அர்ப்பணித்தேன்

1. பாவத்தில் மாண்ட எம்மையே
தூக்கியே ஜீவன் தந்தீரே
உம்மை நோக்கியே நான் பார்த்ததில்
நன்மைகள் தந்தீரே நன்றி தேவா

2. உம்முடன் வாழும் ஜீவியம்
என்றென்றும் மகிழ்ச்சி தந்திடும்
துதி பாடுவேன் கவி பாடுவேன்
பாரினில் என்றென்றும் நம்பிடுவேன்

3. உந்தனின் சேவை செய்திட
எந்தனை இன்று தந்தேனே
ஜனம் தாருமே அருள் தாருமே
ஊழியம் உம்முடன் செய்திடவே

## பாடல் - 1392

**கர்த்தரே ஆண்டவர்**
துணை என்றும் செய்குவார்
வெட்கமே இல்லையே இயேசுவை நம்புவேன்

1. செவியினை திறந்த என் தேவனே
வார்த்தையை காத்து என்றென்றுமாய்
பந்தியினில் செல்ல கிருபை
அளிக்கும் எங்கள் தேவன்

2. விடுதலை ஆக்கினைத் தீர்ப்பில்லை
குற்றமாய் தீர்ப்பவன் இல்லையே
எந்தன் இயேசு துணையே
என்றும் அவரில் மகிழ்வேன்

3. கிருபையால் நீதிமானாக்கினார்
கிறிஸ்துவில் வளர்ச்சியைத் தந்தாரே
காக்கும் நல் விசுவாசம்
தந்தார் இயேசு தேவன்

## பாடல் - 1393

**பூமியின் குடிகளே நாம் யாவரும்**
கர்த்தரை என்றும் போற்றி பாடுவோம்
தேவனை ராஜனை கொண்டாடுவோம்

1. பாடுவோம் நம் தேவன் இயேசுவை
கூடுவோம் எந்நாளும் சந்நிதி
மகிழ்ச்சியோடே கர்த்தரின் முன்பினில்
சத்தமாய் போற்றி பாடுவோம்

2. கர்த்தரே நம் தேவன் நல்லவர்
அறியுங்கள் என்றென்றும் நல்லவர்
அவரின் ஜனங்கள் மேய்ச்சலின் ஆடுகள்
இயேசுவின் பின்னே செல்லுவோம்

3. வாசலில் எந்நாளும் துதியுடன்
புகழ்ந்துமே என்றென்றும்ம நுழையுங்கள்
அவரின் நாமம் புகழ்ந்து துதித்து பாடுங்கள்
இயேசுவை என்றும் உயர்த்துங்கள்

## பாடல் - 1394

**இயேசு நாமம் உயர்த்திடுவோம்**
இன்னல் நீக்கி வாழ்வளிக்கும்
மனதின் பாரம் நீக்கிடுமே
மாறாத இயேசு நாமமிதே

1. அற்புத அடையாளம் நடத்திடும்
அதிசயங்கள் பல புரிந்திடும்
நோய்களும் பேய்களும்
விரட்டி ஓட்டிடும் நாமமிதே

2. இரட்சண்யம் அளித்திடும் நாமமே
இரட்சகர் இயேசுவின் நாமமே
பாவங்கள் போக்கிடும்
பரமன் இயேசுவின் நாமமிதே

3. நேற்றும் இன்றும் மாறிடா
நேசர் இயேசுவின் நாமமே
தேனிலும் இனிமையாம்
தேவன் இயேசுவின் நாமமிதே

4. இருளின் பயங்கள் நீக்கிடும்
இனிமை வாழ்வினில் தந்திடும்
மகிழ்ச்சியும் தந்திடும்
மகிபன் இயேசு நாமமிதே

## பாடல் - 1395

**நான் உம்மை உறுதியாக**
என்றென்றும் பற்றிடுவேன்
சமாதானம் பூரணமாய்
அளித்து என்றும் நடத்திடுவீர்

1. என் ஆத்துமாவின் வாஞ்சை நீர்
என் ஆவி உம்மைத் தேடும்
உந்தனின் பாதையில்
செம்மையாய் நடத்துவீர் - நான்

2. நல் வாசல்கள் திறந்திட
உம் தாசர் உள்ளே செல்வார்
சத்தியம் காத்திட கர்த்தனே
அருள் செய்வீர் - நான்

3. என் கிரியைகள் அனைத்துமே
நீர் ஏற்று என்றும் காப்பீர்
நடத்தியே தாங்குவீர்
சமாதானம் அருளுவீர் - நான்

4. உம் கைகள் உமக்காய் ஓங்கிட
உம் வல்லமை விளங்கும்
உம்மையே சார்ந்துமே
உம் புகழ் சாற்றிடுவோம் - நான்

## பாடல் - 1396

**நிலையில்லாத உலகத்திலே**
அலை அலையாய் துன்பங்கள்
வாழ்க்கை என்னும் படகில் மோதினும்
கவலை எனக்கு இல்லையே
கர்த்தர் எந்தன் படகிலே இருப்பதாலே
தடைகள் இல்லையே

அலையை தாண்டுவேன் புயலை தாங்குவேன்
மலைகளை தகர்ப்பேன்
மரணத்தை ஜெயிப்பேன்
இயேசுவாலே எதையும் சாதிப்பேன்

1. வெள்ளம் போலவே சத்துரு கூட்டமாய்
சுற்றி நின்று என்னை தாக்கினும்
உள்ளந்தன்னிலே அச்சமில்லையே
வல்ல இயேசு என்னில் வாழ்வதால்
உலகம் எதிர்த்த போதிலும்
கலக்கம் எனக்கு இல்லையே
நண்பர் பிரிந்த போதிலும்
வருத்தம் எனக்கு இல்லையே
கர்த்தர் எந்தன் துணையிருப்பதால்

2. நம்பும் நன்மைகள் தீமையானாலும்
நான்கு திசையும் துன்பம் சூழ்ந்தாலும்
கண்ணின் இமைகளில்
எனக்கு ஈட்டியானாலும்
கால் தளர்ந்து நான் விழுந்தாலும்
கரங்கள் கொண்டு ஏந்துவார்
வாதை துன்பம் போக்குவார்
வருத்தம் மாற்றி தேற்றுவார்
கலக்கம் எனக்கு என்றும் இல்லையே

## பாடல் - 1397

**காவலாளி தூங்கி போனாயோ?**
கண் விழித்துப் பார் அழியும் ஜனங்களை
ஆத்துமாக்கள் அழியுதே தேவ ஜனம் சாகுதே
கண்விழித்துப் பாரேன் காவலாளியே

1. நீ நிற்கும் இடம் எது தெரியுமா?
திறப்பின் வாசல் அதை
மறந்து போகாதே (2)
நீ நகர்ந்தால் தேசம் அழியுமே (2)
அசையாமல் நிலைத்து நில்
காவலாளியே காவலாளியே காவலாளியே

2. கண் மூடாதே காவலாளியே
விளைந்திருக்கும் கதிர்களைக்
காக்க வேண்டுமே
கவனக்குறைவால் சேதமாகுமே (2)
பொறுப்போடு நடந்து கொள் காவலாளியே

3. எஜமான் வரும் நேரம் நெருங்குதே
உம் பேரில் சந்தோஷம் உருவாகுதே (2)
கடமையிலே நீ கண்ணும் கருத்துமாய்
உத்தமமாய் செயல்படு நீ காவலாளியே

## பாடல் - 1398

**இரவும் பகலும் நீரே உயிரும் உணர்வும் நீரே**
எனக்கெல்லாம் நீர்தானே (4) - ஆஹா

1. தண்ணீரில் நடக்கும் போது நீங்க வந்தீங்க
வனாந்திரம் போகும் போது நீங்க வந்தீங்க
பசியோடு இருக்கும் போது உணவு தந்தீங்க
கண்ணீரோடு அழுகும் போது கண்ணீர் துடைச்சீங்க

2. உம் மைகயில் குடியிருக்கும் மண்ணு நானுங்க
எந்நாளும் உம் சித்தம் போல் என்னை நடத்துங்க
உமக்காய் வாழ்வதே எனது ஆசைங்க
உம் சித்தம் செய்வதே எனது வாஞ்சைங்க

## பாடல் - 1399

**பிதாவே பிதாவே... உங்க பிள்ளை நான்**
உம்மை கேட்கிறேன்
நான் கேட்டாக்கா இல்ல சொல்ல மாட்டீங்க
நீங்க சொன்னாக்க வார்த்தை மீற மாட்டீங்க

1. என்றும் மாறாத அன்பை கேட்கிறேன்
உம் சேவை செய்ய கிருபை கேட்கிறேன்
பரிசுத்தமாய் நான் வாழ
பெலனைக் கேட்கிறேன்
பெருமை இல்லாத உள்ளம் கேட்கிறேன்

2. தீமை பேசாத நாவை தாங்கப்பா
இச்சை விரும்பாத கண்களை தாங்கப்பா
உமக்குள் இருக்கும் ஆத்ம பாரம் தாங்கப்பா
உம்மில் இருக்கும் அந்தத் தாழ்மையை தாங்கப்பா - நான்



அட்டவணை

**பாடல் - 1400**
**(D-Maj/2/4/T-130)**

**புதிய பாடல் பாடிப் பாடி**
இயேசு ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடிப் பாடி - இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே
சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே ... இயேசு (2)

3. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை உள்ள தேவா
வரங்களின் மன்னவனே ... இயேசு (2)

4. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே ... இயேசு (2)

5. மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு
கோபமோ ஒரு நிமிடம்
கிருபையோ நித்தம் நித்தம் ... அவர் (2)

**பாடல் - 1401**
**(F-Min/6/8/T-120)**

**கரம் பிடித்து வழி நடத்தும் கர்த்தரை**
களிப்போடு துதி பாடி போற்றுவோம் – 2
ஆமென் அல்லேலூயா

1. பசுமையான மேய்ச்சல் உள்ள இடத்திலே
இளைப்பாறச் செய்கின்றார் இயேசு
களைப்பாற்ற நீர் நிறைந்த அருவிக்கு
கர்த்தர் என்னை அழைத்துச் செல்கின்றார்

2. நாம் நடக்கும் பாதைகளைக் காட்டுவார்
நாள்தோறும் ஞானத்தாலே நிரப்புவார்
நீதியின் பாதையிலே நடத்துவார்
நிழல்போல நம் வாழ்வை தொடருவார்

3. எந்தப் பக்கம் போனாலும் உடனிருந்து
இதுதான் வழியென்றே பேசுவார்
இறுதிவரை எப்போதும் நடத்துவார்
இயேசு நாமம் வாழ்கவென்று வாழ்த்துவோம்

## பாடல் - 1402
## (D-Maj/2/4/T-135)

**என்னைத் தேடி இயேசு வந்தார்**
எந்தன் வாழ்வை மாற்றி விட்டார்
அல்லேலுயா நான் பாடுவேன்
ஆடிப்பாடித் துதித்திடுவேன் - என்னை

1. மகனானேன் நான் மகளானேன்
அப்பா பிதாவே என்றழைக்கும்
உரிமையை எனக்குத் தந்தார்

2. ஆவி தந்தார் - தூய ஆவி தந்தார்
வல்லமையும் அன்பும் ஞானமும் கொண்ட
பரிசுத்த ஆவி தந்தார்

3. சுகமானேன் நான் சுகமானேன்
இயேசு கிறிஸ்துவின் காயங்களால்
சுகமானேன் சுகமானேன்

4. தேர்ந்து கொண்டார் என்னைத்
தெரிந்து கொண்டார்
பரிசுத்தனும் புனிதனுமாய்
அவர் திருமுன் வாழ

## பாடல் - 1403
(E-Min/2/4/T-125)

**என்னை நிரப்பும் இயேசு தெய்வமே**
இன்று நிரப்பும் உந்தன் ஆவியால்

1. பேய்களை ஓட்டி நோய்களைப் போக்கும்
பெலனே வாருமே
பெலவீனம் நீங்கி பலவானாய் மாற்றும்
வல்லமையே வாருமே

2. தேற்றரவாளன் பரிசுத்த ஆவி
தேற்றிட வாருமே
ஆற்றலைக் கொடுத்து
அன்பால் நிரப்பும் ஆவியே வாருமே

3. வரங்களைக் கொடுத்து
வாழ்வை அளிக்கும் வள்ளலே வாருமே
கனிகளால் நிரப்பி காயங்கள் ஆற்றும்
கருணையே வாருமே

4. கோபங்கள் போக்கி சுபாவங்கள் மாற்றும்
சாந்தமே வாருமே
பாவங்கள் கழுவிப் பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமே

## பாடல் - 1404
(F-Maj/6/8/T-110)

**இம்மட்டும் கைவிடா தேவன்**
இனியும் கைவிடமாட்டார்
தாயின் வயிற்றில் தாங்கினார்
ஆயுள் முழுதும் தாங்குவார்
தாங்குவார் தப்புவிப்பார்
ஏந்துவார் என் தெய்வம்

1. ஆயன் இயேசு ஆடு நான்
ஆதலால் பயமில்லை
சாத்தான் பறிக்க முடியாது
சபிக்கின்றேன் இயேசு நாமத்தில்



அட்டவணை

2. இயேசு கிறிஸ்து வசனத்தால்
எல்லா நாளும் சந்தோஷம்
வியாதி வறுமை வேதனை
எது தான் பிரிக்க முடியுமோ

3. கர்த்தர் எனக்காய் யுத்தம் செய்வார்
கலக்கம் எனக்கு இனியில்லை
துதித்து துதித்து நாளெல்லாம்
துரத்திடுவேன் சத்துருவை

## பாடல் - 1405
(D-Maj/3/4/T-146)

**என் இயேசு ராஜாவுக்கே**
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கிறேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் - நான்

2. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர்... ஆ ... ஆ

3. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடுவேன் - நான்

4. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீர்
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே...ஆ ...ஆ

## பாடல் - 1406
## (F-Maj/4/4/T-105)

**கவர்ச்சி நாயகனே கண்களில் நிறைந்தவரே**
கரம் படித்தவரே கைவிடா கன்மலையே
உமக்கே ஸ்தோத்திரம் - 2
உயிருள்ள நாளெல்லாம்
உமக்கே ஸ்தோத்திரம்

1. என்னை இழுத்துக் கொள்ளும்
ஓடி வந்திடுவேன்
அறைக்குள் அழைத்துச் செல்லும்
அன்பில் களிகூறுவேன்

2. திராட்சை இரசம் பார்க்கிலும்
இனிமையானவரே
ஊற்றுண்ட பரிமளமே
ஊலகெல்லாம் உம் மனமே

3. இடக்கையால் தாங்குகிறீர்
வலக்கையால் தழுவுகிறீர்
எனக்கு உரியவரே
இதயம் ஆள்பவரே

4. உம் மீது கொண்ட நேசம்
அக்கினி ஜீவாலையன்றோ
தண்ணீரும் வெள்ளங்களும்
தணிக்க முடியாதையா

5. என் நாவில் உள்ளதெல்லாம்
உந்தன் புகழ் தானே
நான் பேசி மகிழ்வதெல்லாம்
உந்தன் பெருமை தானே

6. காட்டு மரங்களுக்குள்
கிச்சிலி மரம் நீரே
அன்பரே உம் நிழலில்
அமர்ந்து இன்புறுவேன்

7. வாரும் என் நேசரே வயல்
வெளியில் தங்கிடுவோம்
நேசத்தின் உச்சிதங்களை
நிறைவாய் பொழிவேன் ஐயா



அட்டவணை

## பாடல் - 1407
(F-Maj/4/4/T-96)

**நன்றி நன்றி நன்றி என்று**
நாள்தோறும் பாடிடுவோம்

1. வல்லவரே நல்லவரே

2. காண்பவரே காப்பவரே

3. பாவங்கள் போக்கிவிட்டீர்

4. நோய்களெல்லாம் சுமந்து கொண்டீர்

5. ஆவியினால் அபிஷேகம் செய்தீர்

6. புதுவாழ்வு எனக்குத் தந்தீர்
அல்லேலுயா (2) ஆமென்

## பாடல் - 1408
(E-Min/6/8/T-115)

**ஆறுதலின் தெய்வமே உம்முடைய**
திருச்சமூகம் எவ்வளவு இன்பமானது

1. உம்முடைய சந்நிதியில் தங்கியிருப்போர்
உண்மையிலே பாக்கியவான்கள்
தூய மனதுடன் துதிப்பார்கள்
துதித்துக் கொண்டிருப்பார்கள் - ஆமென்

2. உம்மிலே பெலன் கொள்ளும்
மனிதர்களெல்லாம்
உண்மையிலே பாக்கியவான்கள்
ஓடினாலும் களைப்படையார்
நடந்தாலும் சோர்வடையார் - ஆமென்

3. கண்ணீரின் பாதையில்
நடக்கும் போதெல்லாம்
களிப்பான் நீரூற்றாய் மாற்றிக் கொள்வார்கள்
வல்லமைமேலே வல்லமைகொண்டு
சீயோனைக் காண்பார்கள் - ஆமென்



அட்டவணை

4. வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட
உம்மிடத்தில் ஒரு நாள் மேலானது
ஒவ்வொரு நாளும் உமது இல்லத்தின்
வாசலில் காத்திருப்பேன் - ஆமென்

5. ஆத்துமா தேவனே உம்மையே நோக்கி
ஆர்வமுடன் கதறுகின்றன
உள்ளமும் உடலும் ஒவ்வொருநாளும்
கெம்பீரித்து சத்தமிடுது - ஆமென்

பாடல் - 1409
(F-Maj/4/4/T-122)

**உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்க்கின்றேன்**
வானமும் வையமும் படைத்தவரை நான் பார்க்கின்றேன்

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலைக் காக்கிறவர்
எந்நாளும் துங்க மாட்டார்

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும், இரவினிலும்
பாதுகாக்கின்றார்

3. கர்த்தர் எல்லாத் தீங்குக்கும்
விலக்கி என்னைக் காக்கின்றார்
அவர் எனது ஆத்துமாவை
அநுதினம் காத்திடுவார்

4. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காக்கின்றார்

பாடல் - 1410
(E-Maj/2/4/T-122)

**நடனமாடி ஸ்தோத்தரிப்பேன்**
நாதா நான் உம்மைத் துதிப்பேன்
கைத்தாள ஓசையுடன்
கர்த்தா நான் உம்மைத் துதிப்பேன் (2)

1. காண்பவரே காப்பவரே
கருணை உள்ளவரே
காலமெல்லாம் வழி நடத்தும்
கன்மலையே ஸ்தோத்திரம் – ஐயா (2)

2. வல்லவரே நல்லவரே
கிருபை உள்ளவரே (2)
வரங்களெல்லாம் தருபவரே
வாழ்வது உமக்காக – ஐயா (2)

3. ஆண்டவரே உம்மைப் பிரிந்து
யாரிடத்தில் போவோம்
வாழ்வு தரும் வசனமெல்லாம்
உம்மிடம்தான் உண்டு – ஐயா (2)

4. அற்புதமே அதிசயமே
ஆலோசனைக் கர்த்தரே
அண்டி வந்தோம் ஆறுதலே
அடைக்கலமானவரே – ஐயா (2)

## பாடல் - 1411
## (C-Min/4/4/T-92)

**அத்திமரம் துளிர்விடாமல் போனாலும்**
திராட்சை செடி பலன்கொடாமல் போனாலும்

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
என் தேவனுக்குள் களிகூருவேன்

1. ஒலிவ மரம் பலன் அற்றுப் போனாலும்
வயல்களிலே தானியமின்றிப் போனாலும் (2) – நான்

2. மந்தையிலே ஆடுகளின்றிப் போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும் (2) – நான்

3. எல்லாமே எதிராக இருந்தாலும்
சூழ்நிலைகள் தோல்வி போல தெரிந்தாலும் (2) – நான்

4. உயிர்நண்பன் என்னை விட்டுப் பிரிந்தாலும்
ஊரெல்லாம் என்னைத் தூற்றித்திரிந்தாலும் (2) – நான்

## பாடல் - 1412
(F-Maj/6/8/T-110)

**நன்மைகளின் நாயகனே**
நன்றி சொல்லி மகிழ்கிறேன்
உண்மையுள்ள தெய்வமே
உயிரோடு கலந்தவரே

நன்மைகளின் நாயகனே நன்றி நன்றி ஐயா!
உண்மையுள்ள தெய்வமே உயிரோடு கலந்தவரே

1. கடந்த ஆண்டெல்லாம் (நாட்களெல்லாம்)
கண்மணிபோல் காத்தீரே
புதிய ஆண்டு (நாள்) தந்து
புதியன (புதுமைகள்) செய்பவரே

2. உமக்காய் காத்திருந்து
புதுபெலன் அடைகின்றேன்
உம்மையே பற்றிக் கொண்டு
புதிய மனுஷனானேன்

3. கர்த்தர் கரம் என்னோடு
இருப்பதை உணர வைத்தீர்
அநேகர் அறிக்கையிட
அப்பா நீர் கிருபை செய்தீர்

4. எனக்கு எதிரானோர்
என் சார்பில் வரவைத்தீர்
சமாதானம் செய்ய வைத்தீர்
சர்வ வல்லவரே

5. எப்சிபா என்றழைத்து
என் மேலே பிரியமானீர்
பியூலா என்றழைத்து
மணமகளாக்கி விட்டீர்

## பாடல் - 1413
(E-Maj/3/4/T-135)

**உம்மோடு இருப்பதுதான்**
உள்ளத்தின் வாஞ்சையையா
உம் சித்தம் செய்வது தான்
இதயத்தின் ஏக்கமையா

இயேசையா உம்மைத்தானே
என் முன்னே நிறுத்தியுள்ளேன்

1. எனக்காக யாவையும் செய்பவரே
செய்து முடிப்பவரே
என் பாரங்கள் என் சுமைகள் - 2
உம் பாதத்தில் இறக்கி வைத்தேன் - 2

2. இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும்
கிருபையும் உள்ளவரே
என் ஜீவனை அழிவில் நின்று
மீட்டவரே என் மேய்ப்பரே

3. எபிநேசரே எல்எலியோன்
என்றுமே உயர்ந்தவரே
எல்ஷடாய் (சர்வ) வல்லவரே
எல்ரோயீ காண்பவரே

4. மன்னிப்பதில் வள்ளல் நீரே
சுகம் தரும் தெய்வம் நீரே
உம் அன்பையும் இரக்கத்தையும்
மணி முடியாய் சூட்டுகின்றீர்

## பாடல் - 1414
(E-Maj/4/4/T-100)

**உம்மை நினைக்கும் போதெல்லாம்**
நெஞ்சம் மகிழுதையா
நன்றி பெருகுதையா..

நன்றி நன்றி ராஜா
நன்றி இயேசு ராஜா

1. தள்ளப்பட்ட கல் நான்
எடுத்து நிறுத்தினீரே
உண்மை உள்ளவன் என்று கருதி
ஊழியம் தந்தீரையா

2. பாலை நிலத்தில் கிடந்தேன்
தேடி கண்டு பிடித்தீர்...
கண்ணின் மணிபோல காத்து வந்தீர்
கழுகு போல் சுமக்கின்றீர்

3. இரவும் பகலும் கூட
இருந்து நடத்துகின்றீர்
கலங்கும் நேரமெல்லாம் கரம் நீட்டி - என்
கண்ணீர் துடைக்கின்றீர்

4. பேரன்பினாலே என்னை
இழுத்துக் கொண்டீர்
பிரிந்திடாமலே அணைத்துக் கொண்டீர் - உம்
பிள்ளையாய் தெரிந்து கொண்டீர்

5. உந்தன் துதியைச் சொல்ல
என்னை தெரிந்து கொண்டீர்
உதடுகளைத் தினம் திறந்தருளும்
புது ராகம் தந்தருளும்

6. சிநேகம் பெற்றேன் ஐயா
கனம் பெற்றேன் ஐயா
உந்தன் பார்வைக்கு அருமையானேன்
உம் ஸ்தானாதிபதியானேன்

## பாடல் - 1415
## (E-Min/4/4/T-100)

**நித்திய நித்தியமாய்**
உம் நேம் (Name) நிலைத்திருக்கும்
தலைமுறை தலைமுறைக்கும்
உம் பேம் (Fame) பேசப்படும்

நித்தியமே என் சத்தியமே
நிரந்தரம் நீர்தானையா

1. யாக்கோபை உமக்கென்று தெரிந்தெடுத்தீரே
இஸ்ரவேலை பிரித்தெடுத்து துதிக்கச் செய்தீர்
வல்லவர் நீர்தானே நல்லவர் நீர்தானே
நான் பாடும் பாடல் நீர்தானே
தினம் தேடும் தேடல் நீர்தானே - நித்தியமே

2. வானத்திலும் பூமியிலும் உம் விருப்பம் செய்கின்றீர்
மேகங்கள் எழச்செய்து மழை பொழிகின்றீர்
பெரியவர் நீர்தானே - என்
பிரியமும் நீர்தானே - நான் பாடும்



அட்டவணை

3. வார்த்தையினால் வானங்கள் தோன்றச் செய்தீரே -உம்
சுவாசத்தினால் விண்மீன்கள் மிளிரச் செய்தீரே
சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே - நான் பாடும்

4. வருடத்தை நன்மையினால் முடிசூட்டுகிறீர்
பாதையெல்லாம் நெய்யாகப் பொழியச் செய்கின்றீர்
காண்பவர் நீர் தானே
தினம் காப்பவர் நீர்தானே - நான் பாடும்

5. மண்ணுலகை விசாரித்து மகிழச் செய்கின்றீர்
தானியங்கள் விளையச் செய்ய தண்ணீர் பாய்ச்சுகிறீர்
மீட்பர் நீர்தானே என்
மேய்ப்பர் நீர்தானே - நான் பாடும்

பாடல் - 1416
(E-Maj/4/4/T-90)

**என்ன நடந்தாலும் யார் கைவிட்டாலும்**
உமக்கு நன்றி சொல்வேன்
உமது புகழ் பாடுவேன்

1. தேடி வந்தீரே தெரிந்துக் கொண்டீரே
தூய மகனாக்கினீர் - 2
துதிக்கும் மகனாக்கினீர் - இராஜா - 2

இதயம் நிறைந்த நன்றி சொல்வேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன்

2. ஆவியினாலே அன்பை ஊற்றி
பாவங்கள் நீக்கினீரே - 2
சுவாபங்கள் மாற்றினீரே - இராஜா - 2

இதயம் நிறைந்த நன்றி சொல்வேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன்

3. இராஜாவின் திருமுகம் காண்கின்ற நாளை
எதிர்நோக்கி ஓடுகிறேன் - இயேசு - 2
நினைத்துப் பாடுகிறேன் - இராஜா

இதயம் நிறைந்த நன்றி சொல்வேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன்

4. இரத்தத்தினாலே ஒப்புரவாக்கி
உறவாடச் செய்தீரையா
உம்மோடு இணைத்தீரையா

இதயம் நிறைந்த நன்றி சொல்வேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன்

5. மரணத்தை அழித்து அழியா ஜீவன்
அறிமுகப்படுத்தினீரே
அறிவிக்க அழைத்தீரே - இதை

இதயம் நிறைந்த நன்றி சொல்வேன்
இரவும் பகலும் புகழ் பாடுவேன்

பாடல் - 1417
(D-Min/2/4/T-132)

**அபிஷேகம் என் தலைமேலே**
ஆவியானவர் எனக்குள்ளே
முழங்கிடுவேன் சுவிசேஷம்
சிறுமைப்பட்ட அனைவருக்கும்

அபிஷேகம் என் மேலே
ஆவியானவர் எனக்குள்ளே
அபிஷேகம் என் தலைமேலே
ஆவியானவர் எனக்குள்ளே

1. இதயங்கள் நொறுக்கப்பட்டோர்
ஏராளம் ஏராளம்
காயம் கட்டுவேன் தேசமெங்கும்
இயேசுவின் நாமத்தினால்

2. சிறையிலுள்ளோர் ஆயிரங்கள்
விடுதலை பெறணுமே
கட்டவிழ்க்கணும் கட்டவிழ்க்கணும்
கட்டுக்களை உடைக்கணும்

3. துதியின் உடை போர்த்தணுமே
ஒடுங்கின ஜனத்திற்கு
துயரத்திற்குப் பதிலாக
ஆனந்த தைலம் வேண்டுமே



அட்டவணை

4. கிருபையின் காலம் இதுவன்றோ
அறிவிக்கணும் மிகவேகமாய்
இரட்சகர் இயேசு வரப்போகிறார்
ஆயத்தமாகணுமே

பாடல் - 1418
(D-Maj/6/8/T-110)

**உடலைக் கொடு உள்ளத்தைக் கொடு**
உற்சாகமாய் உன்னைக் கொடு
ஒப்புக்கொடு சந்தோஷமாய்
இதிலே தேவன் பிரியமாய் இருக்கிறார்
இதிலே தான் மகிமை அடைகிறார்

1. ஒருமணி நேரம் கொடுத்துப் பாரு
உன்னை தேவன் உயர்த்துவாரு
பத்தில் ஒரு பங்கு கொடுத்துப்பாரு
கடனில்லாமல் நடத்துவாரு

2. நன்றிப் பாடல் தினமும் பாடு
நல்ல தேவன் வருவார் உன்னோடு
என்ன நடத்தாலும் நன்றி கூறிடு
தீமையை நன்மையால்
தினமும் வென்றிடு

3. தேசத்திற்காக தினம் மன்றாடு
பிறருக்காக பிரார்த்தனை செய்திடு
ஆளும் தலைவர்களை
ஜெபத்தில் நினைத்திடு
அமைதி பொங்கிடும் வன்முறை நீங்கிடும்

4. விசுவாசம் தானே உலகத்தை ஜெயிக்கும்
அறிக்கை செய்திடுவோம்
எரிகோ பிடித்திடுவோம்
செங்கடல் விலகிடும் யோர்தான் பிரிந்திடும்

5. நாடெங்கும் சென்றிடு நற்செய்தி சொல்லிடு
வீடுகள் தோறும் விடுதலை கூறிடு
சபைகளை நிரப்பிடு சாட்சிகள் எழுப்பிடு
இரட்சகர் வருகைக்கு ஆயத்தமாக்கிடு

## பாடல் - 1419
(E-Maj/2/4/T-120)

**நான் இயேசுவின் பிள்ளை பயமே இல்லை**
எந்நாளும் சந்தோஷமே

1. தெரிந்து கொண்டார் தெரிந்து கொண்டார்
மகனாக மகளாக தெரிந்து கொண்டார்

2. கழுவப்பட்டேன் கழுவப்பட்டேன்
இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டேன்

3. வென்று விட்டேன் வென்று விட்டேன்
எதிரியின் தடைகளை வென்று விட்டேன்

4. நிரப்பப்பட்டேன் நிரப்பப்பட்டேன்
ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டேன்

5. சுகமானேன் சுகமானேன்
இயேசுவின் காயங்களால் சுகமானேன்

6. முறியடிப்பேன் முறியடிப்பேன்
எதிரான ஆயுதத்தை முறியடிப்பேன்

## பாடல் - 1420
(E-Min/6/8/T-100)

**முகமலர்ந்து கொடுப்பவரை**
கர்த்தர் நேசிக்கிறார்
உற்சாக மனதுடனே கொடுத்திடுவோம்

1. வருத்தத்தோடல்ல, கட்டாயத்தாலல்ல
இருப்பதை விருப்பமுடன்,
கொடுத்திடுவோம்
விதை விதைத்திடுவோம்
அறுவடை செய்வோம்

2. அதிகமாய் விதைத்தால், அதிக அறுவடை
ஏழ்மை நிலையிலிருந்து இன்றே விடுதலை
அளவின்றி கொடுத்து, செல்வர்களாவோம்
அமுக்கி குலுக்கி மடியில் அளந்து போடுவார்

3. ஏழைக்கு இரங்கி கொடுக்கும் போதெல்லாம்
கர்த்தருக்கு கடன் கொடுத்து திரும்ப பெற்றிடுவோம்
எந்த நிலையிலும் தேவையானதெல்லாம்
எப்போதும் நமக்கு தந்திடுவாரே

4. நற்செயல் செய்ய வேண்டிய அனைத்தும்
மிகுதியாகவே தந்திடுவாரே
எல்லா நன்மைகளால் நிரப்ப வல்லவர்
குறைகளை நிறைவாக்கி நடத்திடுவார்

## பாடல் - 1421
## (G-Maj/4/4/T-92)

**துயரத்தில் கூப்பிட்டேன் உதவிக்காய் கதறினேன்**
அழுகுரல் கேட்டீரையா
குனிந்து தூக்கினீர் பெரியவனாக்கினீர்
உமது காருண்யத்தால்

1. எனது விளக்கு எரியச் செய்தீர்
இரவைப் பகலாக்கினீர்
எரிந்து கொண்டிருப்பேன் எப்போதும் உமக்காய்
என் ஜீவன் பிரியும் வரை
(எரிந்து கொண்டேயிருப்பேன்)

2. நான் நம்பும் கேடகம் விடுவிக்கும் தெய்வம்
நீர்தான் நீர்தானையா
தூயவர் தூயவர் துதிக்குப் பாத்திரர் (ரே)
ஆறுதல் நீர்தானையா

3. சேனைக்குள் பாய்ந்தேன் உந்தன் தயவாலே
மதிலைத் தாண்டிடுவேன்
புகழ்ந்து பாடுவேன் உம்மையே உயர்த்துவேன்
உயிர் வாழும் நாட்களெல்லாம்
(புகழ்ந்து பாடிடுவேன்)

## பாடல் - 1422
## (E-Maj/4/4/T-109)

**என் தகப்பன் நீர்தானையா**
எல்லாமே பார்த்துக்கொள்வீர்
எப்போதும் எவ்வேளையும் (உம்)
உம் கிருபை என்னைத் தொடரும்

1. மாண்புமிக்கவர் நீர்தானே
மிகவும் பெரியவர் நீர்தானே

உம்மையே புகழ்வேன் – ஓய்வின்றி
உம்மைத்தான் பாடுவேன் – பெலத்தோடு
உயிருள்ள நாளெல்லாம் (2) – என்

2. தாழ்ந்தோரை நீர் உயர்த்துகிறீர்
விழுந்தவரை நீர் தூக்குகிறீர்

3. ஏற்ற வேளையில் அனைவருக்கும்
ஆகாரம் நீர் தருகின்றீர்

4. சகல உயிர்களின் விருப்பங்களை
திருப்தியாக்கி நீர் நடத்துகிறீர்

5. நோக்கிக் கூப்பிடும் யாவருக்கும்
தகப்பன் அருகில் இருக்கின்றீர்

6. அன்பு கூறுகின்ற அனைவரையும்
காப்பாற்றும் தெய்வம் நீர்தானே

7. துதிக்குப் பாத்திரர் நீர்தானே
தூயவரும் நீர்தானே

8. இரக்கமும் கனிவும் உடையவரே
நீடிய சாந்தம் உமதன்றோ

## பாடல் - 1423
## (E-Min/4/4/T-125)

**கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்**
பண்டிகைகள் நாம் கொண்டாடுவோம்
எக்காளம் ஊதி ஏழு நாட்களும்
யெகோவா தேவனைக் கொண்டாடுவோம்

1. பலிகள் செலுத்தி பரிசுத்த சமூகத்தில்
பாடி கொண்டாடுவோம்
தீயவன் நடுவில் வருவதில்லை
கர்த்தரோ ஜெயம் எடுத்தார் – நம்

அகமகிழ்வோம் அக்களிப்போம்
ஆனந்த சத்தமிடுவோம்



அட்டவணை

2. நல்லவர் கர்த்தர் கிருபை உள்ளவர்
என்று நாம் உயர்த்திடுவோம்
கர்த்தரின் மகிமை மேகம்போல
இறங்கட்டும் இந்நாளிலே

3. அசைக்க முடியா கூடாரம் ஆவோம்
அமைதியின் இல்லமாவோம்
நோயாளி என்று சொல்வதில்லை
குற்றங்கள் நீங்கியதே

4. இஸ்ரவேல் ஜனத்துக்கு தேவன் தந்த
பிரமாணம் இதுதானே
எகிப்து தேசம் விட்டு புறப்படும் போது
கட்டளையாய் கொடுத்தார்

5. பழைய புளித்த மாவை அகற்றி
தூக்கி எறிந்திடுவோம்
துர்க்குணம் பொல்லாப்பு தவிர்த்திடுவோம்
அசுத்தம் அகற்றிடுவோம்

6. எல்லாம் முடிந்தது என்று இரட்சகர்
முழங்கினார் சிலுவையிலே
சாவுக்கு அதிபதி சாத்தானை
சாவாலே வெற்றுவிட்டார்

## பாடல் - 1424
## (E-Maj/4/4/T-95)

**உன்னதரே உம் பாதுகாப்பில் வாழ்கின்றேன்**
சர்வ வல்லவரே உம் நிழலில் தான் தங்கியுள்ளேன்

புகலிடமே அடைக்கலமே
கோட்டையே நம்பிக்கையே

1. பாழாக்கும் கொள்ளை நோய் அணுகாது
வேடனின் கண்ணி ஒன்றும் செய்யாது
காக்கும் அரண் நீரே என் கேடகமானீரே - புகலிடமே

2. படைத்தவரை புகலிடமாய்க் கொண்டுள்ளேன்
பரிசுத்தரே பாதுகாக்கும் மதிலானார்
தீங்கு நிகழாது (ஒரு) நோயும் அணுகாது - புகலிடமே



அட்டவணை

3. வழியெல்லாம் காக்கும் தூதன் எனக்குண்டு
பாதம் கல்லில் மோதாமல் தாங்கிடுவார்
மிதிப்பேன் சிங்கத்தையே நான்
நடப்பேன் சர்ப்பத்தின் மேல் - புகலிடமே

4. சிறகுகளால் அரவணைத்து மூடுகிறீர்
உம் சமூகம் தான் நிரந்தர நீரோடை
நிமிரச் செய்தீரே நிரந்தரமானீரே - தலை - புகலிடமே

5. இரவில் வரும் திகிலுக்கு நான் பயப்படேன்
பகலில் வரும் சோதனைகளை மேற்கொள்வேன்
ஆயிரம் எனக்கெதிராய் வந்தாலும் பயமில்லையே - புகலிடமே

6. கர்த்தரிடத்தில் வாஞ்சையாய் இருப்பதால்
விடுதலையும் ஜெய வாழ்வும் எனக்குண்டு
நாமம் அறிந்ததினால் உயர்வு உண்டெனக்கு - புகலிடமே

7. உம்மை நோக்கி மன்றாடும் போதெல்லாம்
பதில் தந்து கனப்படுத்தும் தகப்பன் நீரே
நீடிய ஆயுள் உண்டு நிச்சயம் வெற்றி உண்டு - புகலிடமே

## பாடல் - 1425
## (C-Maj/6/8/T-125)

**தேங்க் யூ (Thank you) சொல்லுவேன்**
தினமும் சொல்லுவேன்
தேங்க் யூ தேங்க் யூ பாதர்
(Thank you Thank you Father)

பாதர் தேங்க் யூ ஜீசஸ் தேங்க் யூ - ஹெவன்லி
(Jesus Thank you - Heavenly)

நன்றி சொல்லுவேன் நன்றி இயேசு ராஜா
தினமும் சொல்லுவேன் நன்றி இயேசு ராஜா

1. எல்ரோயீ எல்லோயீ
என்னையும் கண்டீரையா
எப்படி நான் நன்றி சொல்வேன்

அப்பா நன்றி அன்பே நன்றி - நன்றி

2. யேகோவாயீரே எல்லாமே
பார்த்துக் கொள்வீர் (2)
எல்லாமே பார்த்துக் கொள்வீர்
எப்படி நான் நன்றி சொல்வேன் (2) – அப்பா

3. யேகோவா ரஃப்பா இதுவரை
சுகம் தந்தீரே(2) இதுவரை சுகம் தந்தீரே
எப்படி நான் நன்றி சொல்வேன் (2) அப்பா

4. யேகோவா ஷாலோம் சமாதானம்
தந்தீரையா (2) சமாதானம் தந்தீரையா
சர்வ வல்லவரே (2) – அப்பா

**பாடல் - 1426**
**(E-Min/2/4/T-105)**

**வழியைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடு**
அவரையே நம்பியிரு – உன்
காரியத்தை வாய்க்கச் செய்வார்

1. தீயவன் செயல் குறித்து மனம் பதறாதே
புல்லைப் போல் உலர்ந்து
பூவைப் போல் உதிர்ந்து
இல்லாமல் போய்விடும் – காத்திரு

2. மகிழ்ந்து களி கூரு தொடர்ந்து துதிபாடு
உன் இதயத்தின் வாஞ்சை
விருப்பங்கள் எல்லாம்
விரைவில் நிறைவேற்றுவார்

3. நீதிமான் அனைவருக்கும்
வெற்றி உண்டு வெகு விரைவில்
துணை நின்று கர்த்தரோ
நடத்திச் செல்வார்
துரிதமாய் ஜெயம் தருவார்

4. உனது நேர்மையெல்லாம்
அதிகாலை வெளிச்சமாகும்
நண்பகல் போலாகும் உன் நீதி நியாயம்
நண்பா கலங்காதே



அட்டவணை

5. கோபத்தை விட்டுவிடு சினம் நீ கொள்ளாதே
பொறாமை எரிச்சல் ஒரு போதும் வேண்டாம்
அது தீமைக்கு வழி நடத்தும்

பாடல் - 1427
(E-Maj/4/4/T-95)

**நம்பத்தக்க தகப்பனே**
உம்மைத்தானே நம்பியுள்ளேன்
உம்மைத்தானே நம்பியுள்ளேன்
நம்பத்தக்க தகப்பனே

வாழ்வே வழியே வாழ்த்துகிறேன்
உம்மை வணங்குகிறேன்

1. உம் சமூகம் குடியிருந்து
சத்தியத்தை உணவாக்கினேன்
வசனம் தியானம் செய்து (உம்)
வார்த்தையால் வாழ்கின்றேன் - வாழ்வே

2. இதய விருப்பமெல்லாம்
எப்படியும் நிறைவேற்றுவீர் - என்
ஒப்படைத்தேன் வழிகளெல்லாம்
உம்மையே சார்ந்து கொண்டேன்

3. நீதி நேர்மையெல்லாம்
பட்டப்பகல் போலாகும் - என்
நீர் எனக்குள் இருப்பதனால்
எல்லாம் செய்து முடிப்பீர்

பாடல் - 1428
(F-Min/4/4/T-120)

**நம்பி வந்த மனிதர்க்கெல்லாம்**
நன்மைகள் ஏராளம் - 2

நம்புகிறேன் நம்புகிறேன்
நம்பத்தக்க தகப்பனே - 2

1. மனிதரின் சூழ்ச்சியினின்று
மறைத்துக் காத்துக்கொள்வீர் - 2
நாவுகளின் சண்டைகள் அவதூறு பேச்சுகள்
அணுகாமல் காப்பாற்றுவீர் - 2



அட்டவணை

2. என் பெலன் நீர்தானே
கேடகமும் நீர்தானே
சகாயம் பெற்றேன் உதவி பெற்றேன்
பாட்டினால் உம்மைத் துதிப்பேன் – நான்

3. கானானிய பெண் ஒருத்தி
கத்திக்கொண்டே பின்தொடர்ந்தாள்
அம்மா உன் விசுவாசம் பெரியது என்று
பாராட்டி புதுமை செய்தீர்

4. கிருபை சூழ்ந்து கொள்ளும்
உம் பேரன்பு பின் தொடரும்
கர்த்தருக்குள் இதயம் களிகூர்ந்து தினமும்
காலமெல்லாம் புகழ் பாடும்

5. குருடன் பர்த்திமேயு
கூப்பிட்டான் நம்பிக்கையோடு
தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று
ஜெபித்து பார்வை பெற்றான்

6. நம்பி வந்த குஷ்டரோகியை
நலமாக்கி அனுப்பினீரே
மரித்த மகளையே உயிர் பெறச் செய்தீர்
யவீர் உம்மை நம்பினதால்

7. இக்கட்டு துன்ப வேளையில்
காக்கும் அரணாநீர்
பூரண சமாதானம் பூரண அமைதி
தினம் தினம் நிரப்புகிறீர்

## பாடல் - 1429
## (D-Min/6/8/T-95)

**சுகம் பெலன் எனக்குள்ளே பாய்ந்து செல்லுதே**
வல்லமை நதியாய் பரவி பாயுதே
இரத்தக் குழாய்கள் கண்கள் செவி வாய்
தமனி எங்கும் பாய்கின்றதே

உம் வல்லமையால் சுகமானேன்
உம் வார்த்தையால் சுகமானேன்
உம் தழும்புகளால் சுகமானேன்
உம் தயவினால் சுகமானேன் – சுகம்

1. முதுகுத்தண்டு இதயம் மூளை
நரம்பு இரத்தம் வல்லமை பாய்கின்றதே
குடல் தோல் கணையம் இரைப்பை வயிறு
சதை எங்கும் பாய்கின்றதே - இயேசையா

2. முட்டு ஈரடல் மூட்டு கைகால் திசுக்கள்
வல்லமை பாய்கின்றதே
எலும்பு நரம்புகள் சிறுநீரகங்கள்
தலையெங்கும் பாய்கின்றதே

3. கர்ப்பப்பை கட்டி காயங்கள் புண்கள்
வல்லமை பாய்கின்றதே
முடக்குவாதங்கள் நுரையீரல்கள்
சுவாசம் எங்கும் பாய்கின்றதே

4. புதிய படைப்பு நானே
தேவ புத்திரன் ஆனேன்
இயேசுவே என் குடும்ப மருத்துவர் - அவர்
நாமத்தினால் இரத்தத்தினால் சுகமானேன்

## பாடல் - 1430
## (D-Maj/4/4/T-130)

**பயமில்லை பயமில்லையே**
ஜெயம் ஜெயம்தானே - எனக்கு

ஜெபத்திற்கு பதிலுண்டு
இயேசு நாமத்தில் ஜெயமுண்டு - என்

1. ஆபிரகாமின் தேவன் என்னோடே இருக்கின்றார்
ஆசீர்வதிக்கின்றார் பெருக செய்திடுவார் - 2

ஜெயம் எடுப்பேன் இயேசு நாமத்தில் - 2
தோல்வி எனக்கில்லையே
நான் தோற்றுப் போவதில்லையே
ஜெயமுண்டு இயேசு நாமத்திலே - 2

2. இதயம் விரும்புவதை எனக்குத் தந்திடுவார்
என் ஏக்கம் எல்லாமே எப்படியும் நிறைவேற்றுவார் -2

3. எதிராய் செயல்படுவோர் என் பக்கம் வருவார்கள்
என் இரட்சகர் எனக்குள்ளே இதை இவ்வுலகம் அறியும்



அட்டவணை

4. வேண்டுதல் விண்ணப்பங்கள் பிரியமாய் ஏற்றுக்கொண்டார்
நாம் செலுத்தும் துதிபலியை மறவாமல் நினைக்கின்றார்

5. அரண்களை தகர்த்தெரியும் ஆற்றல் எனக்குள்ளே
மலைகளை நொறுக்கிடுவேன் பதராக்கிப் பறக்கச் செய்வேன்

## பாடல் - 1431
## (F-Min/4/4/T-90)

**உம்மைத்தான் நான் பார்க்கின்றேன்**
பிரகாசமடைகின்றேன்

அவமானம் அடைவதில்லை - அப்பா
நான் உமது பிள்ளை - ஒரு நாளும்

1. கண்கள் நீதிமானை பார்க்கின்றன (உம்)
செவிகள் மன்றாட்டை கேட்கின்றன - உம்
இடுக்கண் நீக்கி விடுவிக்கின்றீர்
இறுதிவரை நீர் நடத்திச் செல்வீர் - அவமா

2. உடைந்த நொந்த உள்ளத்தோடு
கூடவே இருந்து பாதுகாக்கின்றீர்
அநேக துன்பங்கள் சேர்ந்து வந்தாலும்
அனைத்தினின்றும் நீர் விடுவிக்கின்றீர்

3. நல்லவர் இனியவர் என் ஆண்டவர்
நாளெல்லாம் சுவைத்து மகிழ்கின்றேன்
உண்மையாய்க் கர்த்தரைத் தேடும் எனக்கு
ஒரு நன்மையும் குறைவதில்லையே

4. துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன் எவ்வேளையும்
நன்றிக் கீதம் எந்நாவில் எந்நேரமும்
என் ஆத்துமா கர்த்தருக்குள்
அகமகிழ்வார்கள் துன்பப்படுவோர்

5. தேடினேன் கூப்பிட்டேன் பதில் தந்தீரே
பயங்கள் நீக்கிப் பாதுகாத்தீரே
எலும்புகள் நரம்புகள் முறிந்திடாமல்
யேகோவா தேவன் பார்த்துக் கொள்வீர்

### பாடல் - 1432
(E-Maj/2/4/T-120)

**இறைவனை (இயேசுவை) நம்பியிருக்கிறேன்**
எதற்கும் பயப்படேன்
இவ்வுலகம் எனக்கெதிராய்
என்ன செய்ய முடியும்

1. பயம் என்னை ஆட்கொண்டால்
பாடுவேன் அதிகமாய்
திருவசனம் தியானம் செய்து
ஜெயமெடுப்பேன் நிச்சயமாய்

அச்சம் மேற்கொள்ளாது
இறை அமைதி என்னை காக்கும்
இவ்வுலகம் எனக்கெதிராய்
என்ன செய்ய முடியும்

2. என் சார்பில் இருக்கின்றீர்
என்பதை நான் அறிந்து கொண்டேன்
எதிராக செயல்படுவோர்
திரும்புவார்கள் பின்னிட்டு - அச்சம்

3. சாவினின்று என் உயிரை
மீட்டீரே கிருபையினால்
உம்மோடு நடந்திடுவேன்
உயிர் வாழும் நாட்களெல்லாம்

4. துயரங்களின் எண்ணிக்கையை
கணக்கெடுக்கும் தகப்பன் நீர் - என்
கண்ணீரைத் தோற் பையில்
சேர்த்து வைத்து பதில் தருவீர்

5. மறக்கவில்லை என் பொருத்தனைகள்
செலுத்துகிறேன் நன்றி பலி
காலடிகள் இடறாமல்
காத்தீர் நன்றி ஐயா

### பாடல் - 1433
(F-Maj/4/4/T-90)

**எப்பொழுது உம் சந்நிதியில் வந்து நிற்பேன்**
தாகமாயிருக்கிறேன்



அட்டவணை

ஜீவனுள்ள தேவன்மேலே
தாகமாயிருக்கின்றேன்
அதிகமாய் துதிக்கின்றேன்
தாகமாய் இருக்கின்றேன் – எப்பொழுது

1. தண்ணீருக்காய் மானானது
தாகம் கொள்வதுபோல்
என் ஆன்மா உம்மைத்தானே
தேடித் தவிக்கிறது

இரட்சகரே உம் வருகையிலே
நிச்சயமாய் உம்முகம் காண்பேன்
தாகமாயிருக்கின்றேன்
அதிகமாய் துதிக்கின்றேன் – எப்பொழுது

2. ஆத்துமாவே நீ கலங்குவதேன்
சோர்ந்து போவது ஏன்
கர்த்தரையே நம்பியிரு
அவர் செயல்கள் நினைத்துத் துதி – இரட்சகரே

3. காலைதோறும் உம் பேரன்பைக்
கட்டளையிடுகிறீர்
இரவு பகல் உம் துதிப்பாடல்
என் நாவில் ஒலிக்கிறது

## பாடல் - 1434
## (D-Maj/2/4/T-120)

**என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழிகின்றது**
வழிந்து ஓடுகின்றது

எனக்குள்ளே ஜீவ ஊற்று
அது வற்றாது ஒரு நாளும் – என் பாத்திரம்

1. அபிஷேக நதி நானே
அகிலமெங்கும் பரவிடுவேன்
ஏராளமான மீன்கள் திரளான உயிரினங்கள்
நதி பாயும் இடமெல்லாம்
நான் போகும் இடமெல்லாம் – எனக்கு



அட்டவணை

2. ஆனந்த தைலம் நானே
புலம்பலுக்கு எதிரானேன்
துதி உடை போர்த்திடுவேன்
சாம்பல் நீக்கிடுவேன்
அலங்காரமாக்கிடுவேன் - சபையை

3. கனி கொடுக்கும் மரம் நானே
நாள்தோறும் (புதுக்) கனி கொடுப்பேன்
இலைகள் உதிர்வதில்லை
கனிகள் கெடுவதில்லை - என்
விருந்தும் மருந்தும் நானே - சபைக்கு

4. முழங்கிடுவேன் தினம் சுவிசேஷம்
ஒடுக்கப்பட்ட இந்த உலகத்திற்கு
காயங்கள் ஆற்றிடுவேன்
கட்டுக்கள் அவிழ்த்திடுவேன்
விடுதலை பறைசாற்றுவேன்

5. அயல்மொழிகள் தினம் பேசிடுவேன்
இறைவாக்கு உரைத்திடுவேன்
சாத்தானைத் துரத்திடுவேன்
கரம் நீட்டி சுகம் கூறுவேன்
அதிசயம் தினம் காண்பேன்

**பாடல் - 1435**
**(F-Min/2/4/T-115)**

**அசட்டை பண்ணாதே அவித்து விடாதே**
ஆவியானவர் உனக்குள்ளே

அனல்மூட்டு; எரிய விடு
கர்த்தர் மகிமை உன்மேல் உதித்தது
காரிருள் மத்தியில் நித்திய வெளிச்சம் நீ
எழுந்து ஒளிவீசு நித்திய வெளிச்சம் நீ

1. ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை
அனுதினம் நீ பேசினால்
வல்லமை வெளிப்படும் வரங்கள் செயல்படும்
அசட்டை பண்ணாதே அசதியாயிராதே


அட்டவணை

2. திருவசனம் நீ தினம் தினம் வாசி
சப்தமாய் அறிக்கையிடு
பெருகிடும் உன் ஊற்று
அது நதியாய் பாய்ந்திடும்

3. வெளிச்சம் தேடி அதிகாரக் கூட்டம்
வேகமாய் வருவார்கள் - உன்
(உன்) கண்கள் அதைக் காணும்
(உன்) இதயம் அகமகிழும் - எழுந்து ஒளி

4. நன்றிப் பாடல் ஸ்தோத்திர கீதம்
நாள்தோறும் நீ பாடினால்
கட்டுக்கள் உடைந்திடும்
கதவுகள் திறந்திடும்

5. கேதாரின் ஆடுகள் நெபாயோத்தின்
கடாக்கள் பலிபீடத்தில் ஏறும்
மகிமையின் தேவாலயம்
மகிமைப்படுத்துவேன்

6. சின்னவன் ஆயிரம் சிறியவன் பலத்த
தேசமாய் மாறிடுவான்
துரிதமாய் செய்திடுவார்
ஏற்ற காலத்திலே - கர்த்தர்

## பாடல் - 1436
## (E-Maj/4/4/T-95)

**பரலோக கார்மேகமே**
பரிசுத்த மெய் தீபமே
உயிராய் வந்தீரைய்யா
உணர்வே நீர்தானைய்யா - என்

ஆவியானவரே என் ஆற்றலானவரே -பரலோக

1. அறிவு புகட்டுகின்ற
நல் ஆவியாய் வந்தீரே
இறுதிவரை என்றென்றைக்கும்
எனக்குள்ளே வாழ்பவரே - ஆவியானவரே



அட்டவணை

2. மேன்மையாய் உயரத்தினீரே
இன்பமாய் பாடுகிறேன்
இறைவாக்கு என் நாவிலே
என் வழியாய் பேசுகிறீர் - ஆவியானவரே

3. மறுரூப மலை நீரே
மகிமையின் சிகரம் நீரே
உருமாற்றம் அடைக்கின்றேன்
உம்மேக நிழல்தனிலே - ஆவியானவரே

4. விண்ணக பனித்துளியாய்
மண்ணகம் வந்தீரே
புதிதாக்கும் பரிசுத்தரே
உருவாக்கும் உன்னதரே - ஆவியானவரே

5. தகப்பனை அறிந்துகொள்ள
வெளிப்பாடு தருகின்றீர்
அவர் விருப்பம் நிறைவேற்ற
ஞானம் தந்து நடத்துகின்றீர் - ஆவியானவரே

6. அக்கினி ஸ்தம்பமாக
மேக நிழலாக
தவறாமல் நடத்துகிறீர்
விலகாமல் முன் செல்கிறீர் - ஆவியானவரே

7. அப்பா பிதாவே என்று
கூப்பிடச் செய்தீரே
பிள்ளையானேன் உம் பிரசன்னத்தால்
பெலனடைந்தேன் உம் வரவால் - ஆவியானவரே

**பாடல் - 1437**
**(D-Min/4/4/T-104)**

**புதிய வாழ்வு தரும் புனித ஆவியே**
பரிசுத்த தெய்வமே பரலோக தீபமே

1. இருள் நிறைந்த உலகத்திலே
வெளிச்சமாய் வாருமையா
பாவ இருள் நீக்கி பரிசுத்தமாக்கும்
பரமனே வாருமையா

வரவேண்டும் வல்லவரே
வரவேண்டும் நல்லவரே

2. தடைகள் நீக்கும் தயாபரரே
உடையாய் வாருமையா
ஒடுங்கிப் போன எங்கள் ஆவியை விரட்டி
உற்சாகம் தாருமையா

3. எண்ணெய் அபிஷேகம் எங்கள் மேலே
நிரம்பி வழியணுமே
மண்ணான உடலை வெறுத்து வெறுத்து என்றும்
பண்பாடி மகிழணுமே - இந்த

4. உலகம் எங்கிலும் சுவைத்தரும்
வெண்ணிற உப்பாய் மாறணுமே
இலைகள் உதிராமல் கனிகள் தந்திடும்
மரமாய் வளரணுமே

## பாடல் - 1438
## (E-Maj/4/4/T-110)

**விண்ணக மேகம் இறங்கணும்**
வல்லமை மழையாய் பொழியணும்

குளங்கள் நிரம்பணும்
நதியாய்ப் பாயணும் - எல்லாக்

1. இடங்கொள்ளாமல் போகுமட்டும்
இறங்கி வரணும் பெருமழையாய்
எழுப்புதல் தேசத்தில் காண வேண்டும்
கண்கள் காண வேண்டும் - இராஜா

2. தூதர்கள் கூட்டம் இறங்கி ஏறணும்
பரலோக ஏணிப் படிகளிலே
யாக்கோபின் தேவன் சப்தம் கேட்கணும்
சபைகள் கேட்கணும் - இராஜா

3. ஆதி திருச்சபை அற்புதங்கள்
நடக்கணுமே எங்கள் சபைகளிலே
குருடர் பார்க்கணும் செவிடர் கேட்கணும்
முடவர் நடக்கணும் - இராஜா



அட்டவணை

### பாடல் - 1439
(D-Maj/3/4/T-100)

**ஆவியானவரே (என்) அன்பு நேசரே**
ஆட்கொண்டு நடத்துமையா

1. உந்தன் பாதைகள் அறிந்திடச் செய்யும்
உம் வழிகள் கற்றுத் தாரும்
உந்தன் வார்த்தையின் வெளிச்சத்திலே
தினந்தினம் நடத்துதையா

2. கண்ணின் மணி போல காத்தருளும்
கழுகு போல சுமந்தருளும்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
எந்நாளும் மூடிக் கொள்ளும்

3. வெயில் நேரத்தில் குளிர் நிழலே
புயல் காற்றில் புகலிடமே
கடுமழையில் காப்பகமே
நான் தங்கும் கூடாரமே

4. நியாயத் தீர்ப்பின் ஆவியானவரே
சுட்டெரிப்பின் ஆவியானவரே
பாவம் கழுவி துய்மையாக்கும்
பரிசுத்த ஆவியானவரே

### பாடல் - 1440
(E-Min/2/4/T-120)

**துதித்திடுவேன் முழு இதயத்தோடு**
புகழ்ந்திடுவேன் முழு உள்ளத்தோடு

உன்னதரே உம்மில் மகிழ்ந்து
களிகூர்கின்றேன் தினமும் – 2

1. ஒடுக்கப்படுவோர்க்கு அடைக்கலமே
நெருக்கடி வேளையில் புகலிடமே – 2
அடைக்கலமே புகலிடமே – 2

முழு இதயத்தோடு துதித்திடுவேன்
முழு உள்ளத்தோடு புகழ்ந்திடுவேன்

2. நாடித் தேடி வரும் மனிதர்களை
டாடி (Daddy) கைவிடுவதே இல்லை
ஒருபோதும் கைவிட மாட்டீர் – முழு

3. வறியவர்கள் மறக்கப்படுவதில்லை
எளியோர் நம்பிக்கை வீண்போவதில்லை – முழு

4. உமது திருநாமம் அறிந்தவர்கள்
உம்மை நம்பி தினம் துதிப்பார்கள்
களிகூர்ந்து மகிழ்வார்கள் – தினம்

**பாடல் - 1441**
**(D-Min/4/4/T-125)**

**வானங்களே மகிழ்ந்து பாடுங்கள்**
மண்ணுலகே, புகழ்ந்து துதிபாடு
சர்வ வல்லவர் நம் ஜனத்திற்கு
ஆறுதல் தருகிறார்
சிறுமைப்பட்ட தம் மக்கள் மீது
இரக்கம் காட்டுகிறார்

1. கைவிட்டாரே மறந்தாரே
என்று நீ சொல்வானேன்
பால்குடிக்கும் பாலகனை
தாய் மறப்பாளோ? மறந்து போவாளோ?
தாய் மறந்தாலும்
தகப்பன் உன்னை மறக்கவே மாட்டார்
உள்ளங்கையிலே அவர் உன்னை
பொறித்து வைத்துள்ளார்

2. கண்களை நீ ஏறெடுத்துப் பார்
சுற்றிலும் பார் மகளே (மகனே)
உன்னைப் பாழாக்கினவர்கள்
புறப்பட்டுப் போகிறார்கள்
தூரமாய்ப் போகிறார்கள்
பெருங்கூட்டம் சபையைத்
தேடி வருகின்றது பாடி மகிழ்கின்றது
பாழடைந்த இடங்களெல்லாம்
துதியால் நிரம்பிடுதே
அணிகலன் போல் நம் தேசத்தை
சபை நீ அணிந்து கொள்வாய்

## பாடல் - 1442
## (E-Maj/4/4/T-95)

**உதறித் தள்ளு தூக்கி எறிந்திடு**
அழுத்தும் சுமைகளை (தினம்)
பற்றும் பாரங்களை - உன்னை

பொறுமையுடன் நீ ஓடு (என்)
நேசரின் மேல் கண் வைத்து ஓடு

1. மேகம் போன்ற திரள் கூட்டம்
பரிசு பெற்று நிற்கின்றனர்
முகம் மலர்ந்து கை அசைத்து
வா வா வா என்கின்றனர்
(ஓடி வா என்கின்றனர்)

2. அவமானத்தை எண்ணாமல்
சுமந்தாரே சிலுவைதனை
அமர்ந்து விட்டார் அரியணையில்
அதிபதியாய் அரசனாய்

3. தமக்கு வந்த எதிர்ப்பெல்லாம்
தாங்கிக் கொண்ட இரட்சகரை
சிந்தையில் நாம் நிறுத்தினால்
சோர்ந்து நாம் போவதில்லை

## பாடல் - 1443
## (C-Maj/4/4/T-80)

**குற்றம் நீங்கக் கழுவினீரே**
சுற்றி வருவேன் உம்மையே
பற்றிக் கொண்டேன் உம் வசனம்
வெற்றி மேல் வெற்றி காண்பேன்

நீர்தானே யெஹோவா ராஃப்பா
சுகமானேன் கல்வாரி காயங்களால்

1. இரக்கம் கண்முன்னே
உம் வாக்கு என் நாவில்
நான் ஏன் கலங்கணும்
நன்றி கூறுவேன்

2. மகிமை மேகத்திற்குள்
மறைந்து நான் வாழ்கிறேன் - உம்
இரட்சகர் இயேசுதான்
எப்போதும் என் முன்னே

3. உம்மையே நம்பியுள்ளேன்
உம்மோடு தான் நடப்பேன்
தடுமாற்றம் எனக்கில்லை
தள்ளாடுவதும் இல்லை

4. உமது ஜனத்தின் மேல்
பிரியம் வைக்கின்றீர்
நீடிய ஆயுளால்
திருப்தியாக்குவீர்

5. உருமாற்றம் அடைகிறேன்
உம் மேக நிழலிலே
மனம் புதிதாகின்றது
மறுரூபம் ஆகின்றேன்

பாடல் - 1444
(D-Min/3/4/T-95)

**தாய் மடியில் தவழுகின்ற குழந்தையைப் போல**
தகப்பனே உம்மடியில் சாய்ந்துவிட்டேன் நான்

1. கவலையில்லையே கலக்கம் இல்லையே
கர்த்தர் கரம் பிடித்துக் கொண்டேன் - நான்
எதைக் குறித்தும் பயமில்லையே
என் நேசர் நடத்துகிறீர் தினம்

2. செய்த நன்மைகள் நினைக்கின்றேன்
நன்றியோடு துதிக்கின்றேன் - நான்
கைவிடாத என் ஆயனே
கல்வாரி நாயகனே - என்

3. துணையாளரே துணையாளரே
இணையில்லா மணவாளரே - என்
உணவாக வந்தீரையா
உயிரோடு கலந்தீரையா - என்

4. உம்மைத்தானே பற்றிக் கொண்டேன்
உம் தோளில் அமர்ந்துவிட்டேன் - நான்
உந்தன் சிறகுகள் நிழல்தனிலே
உலகத்தையே மறந்துவிட்டேன் - இந்த

5. அதிகாலமே தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிறேன் - நான்
உயிர்வாழும் நாட்களெல்லாம்
உம்நாமம் சொல்வேனையா - நான்

## பாடல் - 1445

**தாயின் மடியில் குழந்தை போல**
திருப்தியாய் உள்ளேன்
கலக்கம் எனக்கில்லையே
கவலை எனக்கில்லையே

நற்செயல்கள் செய்ய
தேவையானதெல்லாம்
மிகுதியாய்த் தந்திடுவார்

1. யேகோவா தேவன் தாயானார்
இன்றும் என்றும் பெலன் ஆனார்
பால் அருந்தும் குழந்தை போல
பேரமைதியாய் உள்ளேன்

கலக்கம் எனக்கில்லையே
கவலை எனக்கில்லையே

2. எந்த நிலையிலும் எப்போதும்
தேவையானதெல்லாம் தருவார்
ஊழியம் செய்ய போதுமான
செல்வம் தந்து நடத்திடுவார் - கலக்கம்

3. கீழ்மையாக விடமாட்டார்
மேன்மையாகவே வாழச் செய்வார்
கடன் வாங்காமல் வாழச் செய்வார்
கொடுத்துக் கொடுத்து பெருகச் செய்வார்

4. ஏற்ற காலத்தில் மழை பெய்யும்
கையின் கிரியைக்கு பலன் உண்டு
கர்த்தரே தனது கருவூலமாம்
பரலோகம் திறந்தார் எனக்காக



அட்டவணை

5. நீதிமான் பாதை நண்பகல் வரைக்கும்
அதிகதிகமாய் பிரகாசிக்கும்
சூரிய பிரகாசம் போலிருக்கும்
ஊழியம் வளரும் நிச்சயமாய்

## பாடல் - 1446
(E-Maj/3/4/T-140)

**என் உள்ளமே இளைப்பாறிடு**
இயேசப்பா உனக்கு நன்மை செய்தார்

1. கால்கள் இடராமல் காப்பாற்றினார்
சாவிலிருந்து விடுவித்தார்

2. நோயின் கட்டுகள் அவிழ்த்து விட்டார்
ஊழியன் என்னையும் உயர்த்தி விட்டார்

3. எளிய உள்ளத்தை பாதுகாத்தார்
தாழ்ந்த நெஞ்சத்தை மீட்டுக்கொண்டார்

4. மன்றாடும் போது செவி சாய்த்தார்
மறவாமல் உறவாடி மகிழச் செய்தார்

5. விண்ணப்பம் கேட்டார் அன்புகூர்வேன்
விடுதலை தந்தார் நன்றி சொல்வேன்

## பாடல் - 1447
(B-Min/4/4/T-100)

**காக்கும் தெய்வம் இயேசு இருக்க**
கலக்கம் ஏன் மனமே?
கண்ணீர் ஏன் மனமே?

1. இதுவரை உன்னை நடத்தின தேவன்
இனியும் நடத்திச் செல்வார்
எபிநேசர் அவர்தானே – (2)

2. சிலுவை சுமந்தால் சுபாவம் மாறும்
தெரிந்துகொள் மனமே
சீடன் அவன் தானே

3. பாடுகள் சகித்தால் பரமனின் வருகையில்
கூட சென்றிடலாம் பாடி மகிழ்ந்திடலாம்

4. காண்கின்ற உலகம் நமது இல்லை
காணாத பரலோகம்தான் நமது குடியிருப்பு

**பாடல் - 1448**
**(D-Maj/4/4/T-95)**

**எதை நினைத்தும் நீ கலங்காதே மகனே**
யேகோவா தேவன் உன்னை நடத்திச் செல்வார் – 2

1. இதுவரை உதவின எபிநேசர் உண்டு
இனியும் உதவி செய்வார் – 2

2. சுகம் தரும் தெய்வம் யேகோவா ரஃப்பா உண்டு
பூரண சுகம் தருவார்

3. புதுபெலன் அடைந்து சிறகுகளை விரித்து
உயர பறந்திடுவாய் மடிந்து போவதில்லை

4. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்
அன்பிலே பயமில்லை

5. கர்த்தரை நினைத்து மகிழ்ந்து களிகூர்ந்தால்
உனது விருப்பம் செய்வார்

6. வழிகளிளெல்லாம் அவரையே நம்பியிரு
உன் சார்பில் செயலாற்றுவார்

7. வலுவூட்டும் இயேசுகிறிஸ்துவின்
துணையால் எதையும் செய்திடுவாய்

**பாடல் - 1449**
**(C-Maj/3/4/T-80)**

**எதைக் குறித்தும் கலக்கம் இல்லப்பா**
எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுவேன்

யார் மேலும் கசப்பு இல்லப்பா
எல்லாருக்காகவும் மன்றாடுவேன்
எதைக் குறித்தும் கலக்கம் இல்லப்பா

1. இதுவரை உதவி செய்தீர்
இனிமேலும் உதவி செய்வீர்



அட்டவணை

2. கவலைகள் பெருகும்போது..
கர்த்தர் என்னைத் தேற்றுகிறீர்

3. எப்போதும் என் முன்னே
உம்மைத்தான் நிறுத்தியுள்ளேன்

4. வலப்பக்கத்தில் இருப்பதனால்
நான் அசைக்கப்படுவதில்லை – தகப்பன்

5. என் சமூகம் முன் செல்லும்
இளைப்பாறுதல் தருவேன் என்றீர்

பாடல் - 1450
(D-Maj/6/8/T-95)

**யார் பிரிக்கமுடியும் நாதா**
உந்தன் அன்பிலிருந்து தேவா

1. என் சார்பில் நீர் இருக்க
எனக்கெதிராய் யார் இருப்பார்
மகனையே நீர் தந்தீரய்யா
மற்ற அனைத்தும் தருவீர் ஐயா

2. தெரிந்துகொண்ட உம் மகன் (மகள்) நான்
குற்றம் சாட்ட யார் இயலும்
நீதிமானாய் ஆக்கிவிட்டீர்
தண்டனை தீர்ப்பு எனக்கில்லையே

3. நிகழ்வனவோ வருவனவோ
வாழ்வோ சாவோ பிரித்திடுமோ
அன்பு கூர்ந்த கிறிஸ்துவினால்
அனைத்திலும் நான் வெற்றி பெறுவேன்

4. வேதனையோ நெருக்கடியோ
சோதனையோ பிரித்திடுமோ
பகைமைகளோ பழிச்சொல்லோ
பொறாமைகளோ பிரித்திடுமோ

பாடல் - 1451
(D-Maj/4/4/T-120)

**நெருக்கடி வேளையில் பதிலளித்து**
பாதுகாத்து நடத்திடுவார்
உன்னோட இருந்து ஆதரித்து
தினமும் உதவிடுவார்

1. நீ செலுத்தும் காணிக்கைகள்
நினைவு கூர்ந்திடுவார்
நன்றி பலி அனைத்தையுமே
பிரியமாய் ஏற்றுக் கொள்வார்

2. உன் மனம் விரும்புவதை
உனக்குத் தந்திடுவார்
உனது திட்டங்களெல்லாம்
நிறைவேற்றி முடித்திடுவார்

3. உனக்கு வரும் வெற்றியைக் கண்டு
மகிழ்ச்சியில் ஆர்ப்பரிப்போம்
நம் தேவன் நாமத்திலே
வெற்றிக்கொடி நாட்டிடுவோம்

4. இரதங்களை நம்பும் மனிதர்
இடறி விழுந்தார்கள்
தேவனை நம்பும் நாமோ
நிமிர்ந்து நின்றிடுவோம்

**பாடல் - 1452**
**(D-Maj/3/4/T-95)**

**அனைத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவரே**
நீர் நினைத்தது ஒரு நாளும் தடைபடாதையா

1. நீர் முடிவெடுத்தால் யார்தான் மாற்ற முடியும்
எனக்கென முன்குறித்த எதையுமே
எப்படியும் நிறைவேற்றி முடித்திடுவீர்
உமக்கே ஆராதனை உயிருள்ள நாளெல்லாம்

2. நான் எம்மாத்திரம்
ஒரு பொருட்டாய் எண்ணுவதற்கு
காலைதோறும் கண்ணோக்கிப் பார்க்கிறீர்
நிமிடந்தோறும் விசாரித்து மகிழ்கிறீர்

3. என்னைப் புடமிட்டால் (நான்)
பொன்னாக துலங்கிடுவேன்
நான் போகும் பாதைகளை அறிந்தவரே
உந்தன் சொல்லை உணவு போலக் காத்துக்கொண்டேன்



அட்டவணை

4. நான் எண்ணி முடியா
அதிசயம் செய்பவரே
காயப்படுத்தி கட்டுப்போடும் கர்த்தரே - என்னை
அடித்தாலும் அணைக்கின்ற அன்பரே

5. என் மீட்பரே உயிரோடு இருப்பவரே
இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பதை
என் கண்கள்தானே அந்நாளில் காணுமே
எப்போது வருவீரையா என் உள்ளம் ஏங்குதையா

## பாடல் - 1453
## (F-Min/4/4/T-96)

**நல்லதையே நான் சொல்லவும் செய்யவும்**
உள்ளத்தை இன்று உறுதிப்படுத்தும் ஐயா

1. ஆதி முதல் என்னைத் தெரிந்துக் கொண்டீர்
அப்பாவை நம்பி மீட்படைய
ஆவியினாலே துய்மையாக்கி
ஆதிசயமாய் என்னை நடத்துகிறீர்
அப்பா... நன்றி... நன்றி - 2

2. பாவங்கள் செய்து மரித்துப் போயிருந்தேன்
கிறிஸ்துவோடே கூட உயிர்த்தெழச் செய்தீர்
கிருபையினாலே என்னை இரட்சித்தீர்
உன்னதங்களிலே உட்காரச் செய்தீர்

3. ஆண்டவர் கிறிஸ்துவின் மகிமையடைந்திட
ஆழைத்தீரே நன்றி ஐயா
ஆறுதல் தந்தீர் அன்பு கூர்ந்தீர்
பரலோகம் எதிர்நோக்கி வாழச் செய்தீர்

4. துதிக்கும் மகிமையக்கும் பாத்திரரே
பெருமையும் புகழ்ச்சியும் உமக்குத்தானே
ஞானமும் நன்றியும் வல்லமையும்
என்றென்றும் உமக்கே உரித்தாகட்டும்

5. ஆவியினாலே பெலப்படணும்
அன்பிலே வேரூன்றி திடம் பெறணும்
அப்பாவின் அன்பின் அகலம் ஆழம்
அறியும் ஆற்றல் நான் பெறணும்



அட்டவணை

6. எப்பொழுதும் நான் மகிழ்வுடன் இருந்து
இடைவிடாமல் ஜெபம் செய்யணும்
என்ன நேர்ந்தாலும் நன்றி சொல்லி
இயேசப்பா திருச்சித்தம் நிறைவேற்றணும்

பாடல் - 1454
(M-Maj/6/8/T-110)

**நான் உனக்கு போதித்து நடக்கும் பாதையை**
நாள் தோறும் காட்டுவேன் பயப்படாதே (காத்திரு மகனே)
உன்மேல் என் கண் வைத்து
ஆலோசனை சொல்லுவேன்
அறிவுரை நான் கூறுவேன் - உனக்கு

1. ஈசாக்கு விதை விதைத்து
நுறுமடங்கு அறுவடை செய்தான்
உன்னையும் ஆசிர்வதிப்பேன் - அது போல

2. ஏசேக்கு சித்னா
இன்றோடு முடிந்தது மகனே (மகளே)
ரெகோபோத் தொடங்கி விட்டது - உனக்கு

3. தேசத்தில் பலுகும்படி
உனக்கு இடம் உண்டாக்கினேன்
ரெகோபோத் உனக்கு உண்டு - மகனே

4. கர்த்தர் நிச்சயமாய்
உன்னோடு இருக்கிறார் என்று
அநேகர் அறிந்து கொள்வார்கள்
இது முதல் அநேகர் அறிக்கை செய்வார்கள்

5. கலங்காதே நான்
உன்னோடு இருக்கின்றேன் மகனே
பலுகிப் பெருகிடுவாய் - தேசத்தில்

6. உனக்கு எதிரானோர்
உன் சார்பில் வருவார்கள்
சமாதானம் செய்வார்கள் - உன்னோடு

## பாடல் - 1455
## (D-Maj/6/8/T-110)

**நமக்கொரு தகப்பன் உண்டு**
அவரே நம் தெய்வம்
எல்லாமே அவரிலிருந்து வந்தன
நாமோ அவருக்காக வாழ்ந்திடுவோம்

1. திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பன் இவர்
தேவைகளை அறிந்த நல்ல தந்தை இவர்
உணவு ஊட்டுகிறார் உடையும் உடுத்துகிறார்

அப்பா.. அப்பா.. தகப்பனே என்று
கூப்பிடுவோம்

2. ஆட்கொண்டு நடத்துகிறார் அதிசயமாய்
ஊருவாக்கி மகிழ்கின்றார்
ஒவ்வொரு நாளும்
கேட்பதை கொடுத்திடுவார்
தட்டும் போது திறந்திடுவார்

3. இரக்கம் நிறைந்த தந்தை அவர்
ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று அவர்
கணவனை இழந்தவர்க்கு
காப்பாளர் அவர்தானே

4. குழந்தையாய் இருக்கும்போதே நேசித்தவர்
எகிப்தில் இருந்து என்னை
அழைத்துக்கொண்டார்
கரங்கள் பிடித்துக் கொண்டு
நடக்கப் பழக்குகிறார்

5. அன்புக் கரங்களாலே
அணைத்துக் கொண்டார்
பரிவு என்னும் கயிறுகளால்
பிணைத்துக் கொண்டார்
நுகத்தை அகற்றிவிட்டார்
ஜெயத்தை தந்துவிட்டார்
(பின்வருமாறும் பாடலாம்)
எங்கள் தகப்பனே எங்கள் தந்தையே
எல்லாமே உம்மிடம் இருந்து வந்தன
எந்நாளும் உமக்குதானே ஆராதனை



அட்டவணை

1. இரக்கம் நிறைந்த தந்தை நீரே
ஆறுதல் அனைத்திற்கும் ஊற்று நீரே
கணவனை இழந்தவர்க்கு
காப்பாளர் நீர்தானைய்யா
அப்பா.. அப்பா.. தகப்பனே நன்றி ஐயா

## பாடல் - 1456
## (E-Min/6/8/T-115)

**மலைமேல் ஏறுவோம்**
மரங்களை வெட்டுவோம்
ஆலயம் கட்டுவோம்
அவர் பணி செய்திடுவோம்

நாடெங்கும் சென்றிடுவோம்
நற்செய்தி சொல்லிடுவோம்
சபைகளை நிரப்பிடுவோம்
சாட்சியாய் வாழ்ந்திடுவோம்

1. தேவனின் வீடு பாழாய்க் கிடக்குதே
நாமோ நமக்காய் வாழ்வது நியாயமா - 2

2. திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுப்பதேன்
வருகின்ற பணமெல்லாம் வீணாய்ப் போவதேன் - 2

3. மனம் தளராமல் பணியைத் தொடருங்கள்
படைத்தவர் நம்மோடு பயமே வேண்டாம்

4. தேவன் தந்த ஆரம்ப ஊழியத்தை
அற்பமாய் எண்ணாதே அசட்டை பண்ணாதே

5. ஜனங்கள் விரும்புகின்ற தலைவர் வந்திடுவார்
மகிமையால் நிரப்பிடுவார் மறுரூபமாக்கிடுவார்

## பாடல் - 1457
## (C-Min/3/4/T-145)

**உம்முன்னே எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு**
உம் அருகில் எப்போதும் நித்திய பேரின்பம் உண்டு

நிறைவான மகிழ்ச்சி நீரே
நித்திய பேரின்பமே

1. என்னை காக்கும் இறைவன் நீரே
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்
என்னையாளும் தலைவர் நீரே
உம்மையன்றி ஆசைவேறயில்லை

என்னைக் காக்கும் இறைவன் நீரே
அரசாளும் தலைவர் நீரே
ஆராதனை உமக்கே
நாளெல்லாம் ஆராதனை

2. எனக்குரிய பங்கும் நீரே
பரம்பரை சொத்தும் நீரே
ஆலோசனை தரும் தகப்பனே
இரவும் பகலும் பேசும் தெய்வமே

எனக்குரிய பங்கு நீரே
பரம்பரை சொத்து நீரே – ஆராதனை

3. எப்போதும் என் முன்னே
உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன்
வலப்பக்கத்தில் இருப்பதனால்
அசைவுற விடமாட்டீர்

எப்போதும் என் முன்னே
உம்மைத் தான் நிறுத்தியுள்ளேன் – ஆராதனை

4. என் இதயம் மகிழ்கின்றது
என் உடலும் இளைப்பாறுது
ஜீவமார்க்கம் எனக்குப் போதித்தீர்
ஜீவனே உம்மைப் பாடுவேன்

என் இதயம் மகிழ்கின்றது
என் உடலும் இளைப்பாறுது – ஆராதனை

## பாடல் - 1458
## (D-Maj/4/4/T-90)

**என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்**
உம்மோடு இருப்பது தான் – 2
இரவும் பகலும் உம்மோடுதான் இருப்பேன்
என்ன நேர்ந்தாலும் உம்மோடுதான் இருப்பேன்
எப்போதுமே நான் உம்மோடுதான் இருப்பேன்
அல்லேலுயா... (4)



அட்டவணை

1. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம் (உம்)
புகழ் பாடி மகிழ்வதுதான் - 2
இரவும் பகலும் புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
என்ன நேர்ந்தாலும் புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்
எப்போதுமே (உம்) புகழ்பாடி மகிழ்ந்திருப்பேன்

2. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம்மை நேசித்து வாழ்வதுதான் - 2
இரவும் பகலும் உம்மைத்தான் நான் நேசிப்பேன்
என்ன நேர்ந்தாலும் உம்மைத்தான் நான் நேசிப்பேன்
எப்போதுமே உம்மைத்தான் நான் நேசிப்பேன்

3. என் வாழ்வின் முழு ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதான்
இரவும் பகலும் உம் சித்தம் செய்திடுவேன்
என்ன நேர்ந்தாலும் உம் சித்தம் செய்திடுவேன்
எப்போதுமே உம் சித்தம் செய்திடுவேன்

## பாடல் - 1459
## (E-Maj/2/4/T-135)

**ஆண்டவர் ஆளுகை செய்கின்றார்**
அனைத்து உயிர்களே பாடுங்கள்

1. மகிழ்வுடனே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்
ஆனந்த சத்தத்தோடே திருமுன் வாருங்கள்

ராஜாதி ராஜா வாழ்க வாழ்க
கர்த்தாதி கர்த்தா வாழ்க வாழ்க
எப்போதும் இருப்பவர் வாழ்க வாழ்க
இனிமேலும் வருபவர் வாழ்க வாழ்க

2. எக்காள தொனி முழங்க இப்போது துதியுங்கள்
வீணையுடன் யாழ் இசைத்து வேந்தனை துதியுங்கள்

3. துதியோடும் புகழ்ச்சியோடும் வாசலில் நுழையுங்கள்
அவர் நாமம் உயர்த்திடுங்கள் ஸ்தோத்திர பலியிடுங்கள்

4. ஓசையுள்ள கைத்தாளத்தோடு நேசரை துதியுங்கள்
சுவாசமுள்ள யாவருமே இயேசுவை துதியுங்கள்

5. நம் கர்த்தரோ நல்லவரே கிருபை உள்ளவரே
நம்பத்தக்கவர் தலைமுறைக்கும் என்றென்றும் நம்பத்தக்கவர்



அட்டவணை

6. இயேசுவே நம் இரட்சகர் என்று முழங்கிடுங்கள்
அவர் நமக்காய் ஜீவன் தந்தார் அவரின் ஆடுகள் நாம்

7. நடனத்தோடும் தம்புரோடும் நாதனை துதியுங்கள்
மத்தளத்தோடும் குழல் ஊதி சப்தமாய் துதியுங்கள்

பாடல் - 1460
(C-Maj/4/4/T-90)

**உம்மைத் தான் பாடுவேன்**
உயிர் தந்த தெய்வமே
உமக்காய் ஓடுவேன் உயிருள்ள நாளெல்லாம்

ஆராதனை ஆராதனை
தகப்பனே உமக்குத் தான்

1. உமது சித்தத்தால் உலகமே வந்தது
உமது இரத்தத்தால் விலை கொடுத்து மீட்டீர்

2. நீரே சிருஷ்டித்தீர் காண்கின்ற அனைத்தையும்
நீர் படைத்தீர் வானம் பூமி அனைத்தும்

3. கர்த்தாவே உமக்கு அஞ்சாதவன் யார்?
உம் பெயரைப் புகழ்ந்து பாடாதவன் யார்?

4. ஜனங்கள் யாவரும் வணங்குவார் உம்மையே
தேசம் அனைத்தும் இயேசு நாமம் சொல்லும்

5. வல்லவர் சர்வவல்லவர் ஆளுகை செய்கின்றீர்
மகிழ்ந்து புகழ்ந்து உம்மையே உயர்த்துவேன்

6. உலகின் நாடுகள் உமக்கே உரியன
நீரே என்றென்றும் ஆளுகை செய்கின்றீர்

7. பெலனும் ஞானமும் உமக்கே உரியன
மாட்சிமை வல்லமை உமக்குத்தானே சொந்தம்

பாடல் - 1461
(E-Min/6/8/T-100)

**இப்போதும் எப்போதும் எல்லாவற்றிற்காகவும்**
தந்தையாம் கடவுளுக்கு துதிபலி செலுத்திடுவோம்

துதிபலி (அது) சுகந்த வாசனை
நன்றி பலி அது உகந்த காணிக்கை

1. எல்லா மனிதருக்கும் இரட்சிப்பு தருகின்ற
தேவனின் கிருபையே பிரசன்னமானீரே
துதிக்கிறேன் துயவரே போற்றுகிறேன் புண்ணியரே

2. தீய நாட்டங்கள் உலகுசார்ந்தவைகள்
வெறுக்கச் செய்தீரே வெற்றியும் தந்தீரே

3. நெறிகேடு அனைத்தினின்றும் மீட்பு தந்தீரய்யா
நற்செயல் செய்வதற்கு ஆர்வம் தந்தீரய்யா

4. தேவ பக்தியுடன் தெளிந்த புத்தியோடு
இம்மையில் வாழ்வதற்கு பயிற்சி தருகின்றீர்

5. சொந்த மகனாக துய்மையாக்கிடவே
உம்மையே பலியாக ஒப்படைத்தீர் சிலுவையிலே

6. மறுஜென்ம முழுக்கினாலும் புதிதாக்கும் ஆவியாலும்
இரட்சித்துக் கழுவினீரே மிகுந்த இரக்கத்தினால்

7. நீதிமான் ஆக்கினீரே உமது கிருபையினால்
நித்திய ஜீவன் தந்தீரே நிரந்தரப்பரிசாக

## பாடல் - 1462
## (E-Maj/4/4/T-105)

**உந்தன் வல்லமையால் மகிழ்ந்திருக்கின்றேன்**
உந்தன் தயவினால் அசைவுராதிருப்பேன்

நீர் போதுமே என் நேசரே
உம்மால் தானே மேன்மை வந்தது

1. கேட்டேன் வாய்விட்டு (நீர்) மறுக்கவில்லையே
உள்ளம் விரும்பினதை எனக்குத் தந்தீரே - என்

2. வெற்றி தந்ததால் (நான்) பெரியவனானேன் - நீர்
மேன்மை வந்ததால் என் ஏழ்மை மாறியது

3. வாழ ஓடி வந்தேன் சுகம் தேடி வந்தேன்
நீண்ட வாழ்வோடு நித்திய ஜீவன் தந்தீர்

4. பூரிப்படைகின்றேன் உந்தன் பேரன்பால்
பெலன் பெறுகின்றேன் உம்மை நம்புவதால் - நான்



அட்டவணை

## பாடல் - 1463
(F-Maj/6/8/T-115)

**அரியணையில் வீற்றிருப்பவரே**
உமக்கே ஆராதனை
ஆட்டுக்குட்டியானவரே உமக்கே ஆராதனை

உமக்கே ஆராதனை - 4

1. அடைக்கலமானவரே
பணடகளின் ஆண்டவரே
இடுக்கண் வேளையிலே
ஏற்ற துணை நீரே - உமக்கே

2. பக்கம் நின்று வலுவூட்டுகிறீர்
பாதுகாத்து பெலப்படுத்துகிறீர்
தீமை அணுகாமல் காத்து
சேர்த்திடுவீர் பரலோகம்

3. எரிகின்ற அக்கினிச் சூளை
எதுவும் என்னைத் தொடுவதில்லை
ஆராதிக்கும் எங்கள் தெய்வம்
எப்படியும் காப்பாற்றுவீர் - நாங்கள்

4. நீர் செய்ய நினைத்ததெல்லாம்
தடைபடாது என்றறிவேன்
சகலத்தையும் செய்ய வல்லவர்
அனைத்தையும் செய்து முடிப்பவர்

## பாடல் - 1464
(D-Min/3/4/T-127)

**அதினதின் காலத்தில் ஒவ்வொன்றையும்**
நேர்த்தியாய் செம்மையாய் செய்பவரே - 2
இயேசையா இயேசையா என் தெய்வம் நீர் தானையா - 2

1. (என்) நம்பிக்கை வீண்போகாது
நிச்சயமாய் முடிவு உண்டு
நற்செயல்கள் தொடங்கினீரே
எப்படியும் செய்து முடிப்பீர் - 2
உறுதியாய் நம்புகிறேன்
எப்படியும் செய்து முடிப்பீர்
உறுதியாய் நம்புகிறேன்
என் வழியாய் செய்து முடிப்பீர் - இயேசையா



அட்டவணை

2. திகிலூட்டும் செயல்கள் செய்வேன்
உன்னோடு இருப்பேன் என்றீர்
என் ஜனங்கள் மத்தியிலே
என்னை நீர் மேன்மைப்படுத்துவீர்
உறுதியாய் நம்புகிறேன்
என்னை நீர் மேன்மைப்படுத்துவீர்

3. இந்நாளில் இருப்பதைவிட
ஆயிரமாய் பெருகச் செய்வீர்
வானத்து விண்மீன்போல
உலகெங்கும் ஒளி வீசுவேன்
உறுதியாய் நம்புகிறேன்
உலகமெங்கும் ஒளி வீசுவேன்

## பாடல் - 1465
## (D-Maj/6/8/T-115)

**ஒருநாளும் வீணாகாது**
நீ ஓடும் ஓட்டம் நீ செய்யும் ஊழியம்
ஒரு நாளும் வீணாகாது

1. கர்த்தரே உனக்குள்ளே
செயலாற்றி மகிழ்கின்றார்
அவர் விருப்பம் நீ செய்திட
ஆற்றல் தருகின்றார் - தொடர்ந்து

தொடர்ந்து ஓடு விட்டு விடாதே
பணி செய்வதை நீ நிறுத்திவிடாதே

2. பிடித்துக் கொள் ஜீவ வசனம்
பிரகாசி கிறிஸ்து இயேசுவுக்காய்
நெறி கெட்ட சமுதாயத்தில்
நீதானே நட்சத்திரம் - தொடர்ந்து

3. அவமானம் நிந்தை எல்லாம்
அனுதின உணவு போல
பழிச் சொல் எதிர்ப்பு எல்லாம்
பெலன் தரும் ஊட்டச்சத்து - தொடர்ந்து

4. கண்களை பதித்து விடு
கர்த்தராம் இயேசுவின் மேல்
சிலுவை சுமந்ததனால்
சிங்காசனம் அமர்ந்து விட்டார் - தொடர்ந்து



அட்டவணை

## பாடல் - 1466

**ஆத்ம நேசரோடு அன்பின் ஆழம் சென்று**
அவரோடு நான் கெஞ்சி கேட்ட போது
அபிஷேக நதி என்னில் பாய்ந்து வந்தது
ஆனந்தத்தினால் என்னை அபிஷேகித்தார்

அன்பே நிரப்பும் உயிரே நிரப்பும்
பெலனே நிரப்பும் இனிதே நிரப்பும்

2. ஆத்ம நேசரோடு உன்னதங்கள் சென்று
மெய் மறந்து நான்
அவர் மார்பில் சாய்ந்த போது

மகிமையின் ஒளியை என் மேல் வீசச் செய்தார்
மகிழ்ச்சியினால் எந்தன் உள்ளம் பொங்குதே

3. ஆத்ம நேசரோடு அகமகிழ்வேனே
இக்காலத்து பாடுகள்
ஓய்ந்தொழிந்து போகும்
மகிமை மகத்துவம் என்னை மூடிக் கொள்ளும்
மறுரூபமாவேன் என் நேசர் சாயலாய்

4. தேவ ஜனத்தோடு நித்திய நித்தியமாக
ஆராதிப்பேனே என் நேசர் இயேசுவை
தூதர் பாடும் என் சொந்தமான தேசம்
கண்ணீர் இல்லையே இனி கவலை இல்லையே

## பாடல் - 1467

**வெண்கல கதவுகள் உடையுதே**
புதிய வாசல்கள் திறக்குதே
வெண் மேகம் புது வழி காட்டுதே
இனியதே மனம் மகிழுதே

அல்லேலூயா பாடி ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா பாடி அகமகிழ்வோம்

1. அந்தகார பொக்கிஷங்களும்
ஒளிப்பிடத்தின் புதையல்களும்
அன்பர் இயேசு தருகிறார்
இன்பமாக பெறுவோமே – நாம்



அட்டவணை

2. சத்துருக்குள் முன்பாய் எனக்கு
பந்தி ஒன்றை ஆயத்தம் செய்தார்
எந்தன் பாத்திரம் நிரம்புதே
நிரம்பியே வழியுதே - இப்போ

3. ஜீவனுள்ள நாட்களிலெல்லாம்
அருள் மாரி பொழிந்திடுமே
நன்மை கிருபை தொடருமே
என்னை என்றும் தொடருமே - இனி

4. இருள் நீங்கி ஒளி வீசுதே
கிறிஸ்து நாமம் உயர்ந்திடுதே
தடைகள் யாவும் தகர்ந்திடும்
கிறிஸ்து இயேசு நமக்குண்டு - ஜெய

## பாடல் - 1468

**பெருக்கத்தின் தேவன்**
அவர் இரக்கத்தின் தேவன்
மனதுருக்கத்தின்படி உன்னை
பலுகச் செய்வார் பெருகச் செய்வார்

1. ஆபிரகாமின் தேவன் உந்தன் தேவனல்லோ
பெருகவே பெருகச் செய்வார் நிச்சயமாய்
வானத்து விண்மீன்களை நோக்கியே பார்
ஆசீர்வதிப்பார் உன்னையும் ஆசீர்வதிப்பார்
ஆசீர்வதிப்பார் இன்றுமுதல் ஆசீர்வதிப்பார்

2. உன்னதத்து பெலத்தினாலே நிரப்பினாரே
பின்மாரி மழையை பொழியச் செய்தார்
வானத்து பலகனியை திறந்திடுவார்
இடங்கொள்ளாமற் போகு மட்டும் ஆசீர்வதிப்பார்

3. ஜெயங்கொண்டவர் உனக்கு ஜெயம் தருவார்
தோல்வி துக்கம் ஒரு போதும் தொடர்வதில்லை
இன்றுமுதல் உன் வீட்டை ஆசீர்வதிப்பார்
வறுமை இல்லையே உனக்கு வெறுமை இல்லையே

### பாடல் - 1469

**பரம அழைப்புக்கு பங்குள்ள பாத்திரமே**
பரமன் இயேசுவையே நோக்கி ஓடுவாயே
வசனம் வழிகாட்ட கிருபை காத்துக் கொள்ள
பதறாமல் ஓடுவாயே

ஆ... அல்லேலூயா ஓ... ஓசன்னா
மகிமை மகிழ்ச்சியே ஜெயமே கிறிஸ்துவிலே

1. வாழ்க்கையில் உன்னோடு
கூடவே வந்திடுவார்
ஓட்டம் ஜெயத்துடன் ஓடி முடித்திட
வல்லமை ஈந்திடுவார்

2. வெள்ளம் போல் நிந்தைகள் வந்தாலும்
கடலை அதட்டி காற்றை அமர்த்தி
மறுகரை சேர்த்திடுவார்

3. கரடிகள் ஓநாய்கள் சிங்கமே சூழ்ந்தாலும்
கோலோடு தடியும் என்னை தேற்றிடும்
நல் மேய்ப்பர் எனக்கு உண்டு

### பாடல் - 1470

**ஆச்சர்யமான அன்பினாலே என்னை சிநேகித்தீர்**
தோளினில் சுமந்தீர் ஜீவனைத் தந்தீர்
மார்பினில் சாய்திடுவேன்

அல்லேலூயா பாடுவேன்
அல்லேலூயா மகிழுவேன்
அல்லேலூயா 2 ஆர்ப்பரிப்பேன்

1. உந்தன் பார்வைக்கு அருமையாக
கிருபை பொழிந்திட்டீரே
கனப்படுத்தினீர் மேன்மைப்படுத்தினீர்
உமக்கு ஸ்தோத்திரம்

2. ஆவியினாலே அபிஷேகம் செய்தீர்
அக்கினி பொழிந்திட்டீரே
உன்னத பெலத்தால் ஆவியின் வரத்தால்
உள்ளத்தை மகிழச் செய்தீர்

3. இரட்சிப்பைக் காண கிருபை செய்தீர்
எல்லாம் உம் தயவல்லோ
ஏந்தினீரே தாங்கினீரே
சுமந்து கரை சேர்த்தீரே

**பாடல் - 1471**

**இருக்கிறவரும் இருந்தவரும் வருபவருமாமே**
முந்தினவரும் பிந்தினவரும்
வாக்குமாறாதவரே
உம்மை துதிக்கிறோம்
உம்மை போற்றுகிறோம்
உம்மை தொழுகிறோம்
உம்மில் மகிழ்கிறோம்

1. இவ்வளவாய் அன்பு கூர்ந்தீர் ஆத்ம நேசரே
என்ன ஈடு செய்திடுவேன் உந்தன் அன்பிற்கே
இஸ்ரவேலின் சேனை அதிபரே
எனக்காய் யாவும் செய்து முடிக்கும் கர்த்தரே

2. நேற்றும் இன்றும் என்றும் மாறா
அன்பின் ராஜனே
தடை உடைத்து வழி திறக்கும் வல்ல நாதனே
யூதா கோத்திர ராஜ சிங்கமே
நாங்கள் ஜெயம் எடுப்போம்
உந்தன் நாமத்தில் – உம்மை

3. அரவணைத்து ஆற்றி தேற்றும்
அன்பின் கரங்களில்
அர்ப்பணித்தோம் எம்மை முற்றும்
ஏற்றுக் கொள்ளுமே
கரம் பிடித்து நடத்திடுவீரே
புது வழிகளை திறந்திடுவீரே – உம்மை

**பாடல் - 1472**

**மகிமையின் மகத்துவம் மகிழச் செய்யும்**
மகிபனின் சமூகத்தில் களிகூறுவோம்

தேவனுக்கே மகிமை ராஜனுக்கே மகிமை

1. மகிமை மகிமை மகிமை மகிமை தேவ மகிமை
மகிமை இறங்கும் துதியால்
மகிழ்ந்து களிகூறுவோம் - தேவனுக்கே

2. வனாந்திரத்தில் மகிமை
வயல் வெளியாக்குமே
வறண்ட நிலத்தில் மகிமை
புஷ்பத்தை போல் செழிக்கும் - தேவனுக்கே

3. மகிமையின் நேரத்தில்
உன்னை மறுரூபமாக்குவார்
பழையவை ஒழிந்துபோம்
எல்லாம் புதிதாய் மாறுமே - தேவனுக்கே

## பாடல் - 1473

**முன் செல்லும் தேவ என் இயேசு ராஜா**
சேனையின் அதிபதியே
தடைகளை தகர்த்திடுமே
எதிர்ப்பினை நொறுக்கிடுமே
தூய்மை மேல் தூய்மை வெற்றி மேல் வெற்றி
இயேசுவின் நாமத்தினால்

ஜெயம் நமக்கென்றும் அல்லேலூயா
ஜெயம் நமக்கென்றும் ஆமென் ஆமென்

1. வருட முழுவதும் ஒவ்வொரு நாளும்
வழிகாட்டி சென்றிடுமே
வலக்கரம் பிடித்திடுமே
வழுவாது காத்திடுமே

2. ஸ்தம்பமாய் அக்கினி ஸ்தம்பமாய் மேகம்
ஒரு நாளும் விலகிடாதே
மனிதர் விலகிடலாம் மலைகளும் விலகிடலாம்
மாறாத கிருபை நீங்காத தயவு
என்றென்றும் எனக்குண்டே

3. உம் வாக்கை பிடித்து
முன்னேறி செல்லுவேன்
ஜெயமாய் நடத்துவீரே
வருகையில் வந்திடுவீர் கிரீடங்கள் தந்திடுவீர்
உம் மார்பில் மகிழ்ந்து நேசத்தை ருசித்து
வாழுவேன் நித்தியமாய்

## பாடல் - 1474

**கர்த்தர் தரும் புது நாமத்தால்**
அழைக்கப்படுவாய்
கர்த்தர் தரும் அபிஷேகம்
மேன்மைப்படுத்தும்

கீர்த்தியாக புகழ்ச்சியாக மேன்மையாக
உன்னை உயர்த்திடுவார்

1. உயிரோடு இருக்கும் நாளெல்லாம்
ஒருவனும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை
ஒரு வழியாய் வருவார்கள்
பலவழியாய் மறைவார்கள் - கீர்த்தி

2. மோசேயோடு இருந்தது போல்
உன்னோடு என்றும் இருந்திடுவார்
ஒருபோதும் விலகிட மாட்டார்
திடன் கொள்ளுவாய்
பெலன் கொள்ளுவாய்
வல்லமையாக எழும்பிடுவாய் - கீர்த்தி

3. தந்தையை போல் தாயைப் போல்
ஆற்றி தேற்றி சுமந்திடுவார்
உன்னை ஏந்திடுவார்
கிருபையினால் கரம் பிடித்து
காலமெல்லாம் நடத்திடுவீர் - கீர்த்தி

## பாடல் - 1475

**ராஜாதி ராஜாவுக்கு ஸ்தோத்திரம்**
தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்
கர்த்தாதி கர்த்தாவுக்கு ஸ்தோத்திரம்
என்றென்றும் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

1. வானம் பூமி யாவற்றையும்
படைத்தவரே ஸ்தோத்திரம்
ஜீவன் பெலன் சுகமும் தந்து
காப்பவரே ஸ்தோத்திரம்



அட்டவணை

2. ஆவி ஆத்மா சரீரத்தையும்
மீட்டவரே ஸ்தோத்திரம்
கறை திரைகள் நீக்கி காக்கும்
தூயவரே ஸ்தோத்திரம்

3. மீண்டும் உலகில் வருவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம்
விரைவில் உம்மை காண்பதினால்
கோடி கோடி ஸ்தோத்திரம்

**பாடல் - 1476**

**உயர்த்துவார் உயர்த்துவார்**
இயேசு உன்னை உயர்த்துவார்
உன்னை என்றும் காண்பவர்
உன் கண்ணீர் என்றும் துடைப்பவர்
உன்னை என்றும் நடத்துவார்
அல்லேலூயா - அல்லேலூயா (5)

1. உன்னதமானவர் மறைவிலே வாழ்கிறேன்
சிங்கத்தின் மேலே நடப்பேன்
சீறும் சர்ப்பத்தை மிதிப்பேன்
பெலனான தேவன் உண்டு...
அல்லேலூயா 4 ஓ...

2. மிதித்திடுவோம் மிதித்திடுவோம்
சர்ப்பங்களை தேற்களை மிதித்திடுவோம்
சமாதான தேவன் சீக்கிரம்
சாத்தானை நம் கால்களின் கீழ்
நசுக்குவார் நசுக்குவார் நசுக்குவார்...
அல்லேலூயா 4 ஓ...

3. உயர்த்திடுவோம் உயர்த்திடுவோம்
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
வானிலும் பூவிலும் உயர்ந்தவர்
சர்வ வல்லமை உடையவர்
பரிசுத்த தேவன் இவரே - அல்லேலூயா 4 ஓ...



அட்டவணை

## பாடல் - 1477

**அக்கினி காற்றே தேற்றரவாளனே**
பேரின்ப நதியில் தாகந் தீர்த்திடும் ஜீவநதியே
ஓ ஜீவ நதியே... ஓ ஜீவ நதியே
என்னில் பாய்ந்து செல்லுமே ஓ... ஜீவ நதியே

1. வறண்ட நிலத்தில் ஆறுகள் ஓடும்
பாலைவனங்கள் செழிப்பாய் மாறும்
கண்ணீரின் பள்ளத்தாக்குகள் எல்லாம்
களிப்பாய் நீரூற்றாய் மாறுமே
ஓ ஜீவ நதியே... ஓ ஜீவ நதியே

2. காடியை போல கசந்திடும் வாழ்க்கை
மதுரமாக மாற்றிடுவாரே (2)
துன்பத்தின் பாதையில் நடக்கின்ற போதும்
பாதையின் வெளிச்சம் அவரே அவரே
ஓ ஜீவ நதியே... என்னில் பாய்ந்து செல்லும்
ஓ ஜீவ நதியே... ஓ ஜீவ நதியே (3)

3. கரம் பிடித்தவர் கைவிடமாட்டார்
உன்னைக் காப்பவர் உறங்கிட மாட்டார்
உனது பாத்திரம் நிரம்பி வழியும்
சத்துரு முன்னே உயர்த்துவார் (2)
ஓ ஜீவ நதியே...

## பாடல் - 1478

**அப்பா உம் சமுகத்தில்**
எப்போதும் ஆராதனை
அப்பாவை துதிக்கையிலே
எங்க உள்ளமெல்லாம் பொங்குதையா

1. தாயைப்போல தேற்றுகிறீர்
தகப்பனைப்போல சுமக்கின்றீர்
சோதனை வருகின்ற நேரமெல்லாம்
தாங்கி எங்களை நடத்துகிறீர் – 2 – அப்பா

2. கூப்பிடும் காக்கை குஞ்சுகட்கும்
ஆகாரத்தை தருகின்றீர்
அவைகளைப் பார்க்கிலும் எங்களையே
மிகவும் நேசித்து நடத்துகிறீர் – 2 – அப்பா

3. எங்கள் மீது கண்ணை வைத்து
ஆலோசனை சொல்லுகின்றீர்
தீங்கு வருகின்ற நேரமெல்லாம்
கூடார மறைவில் மறைக்கின்றீர் – 2 – அப்பா

4. உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேன்
உம்மாலே மதிலையும் தாண்டிடுவேன்
தீயையும் தண்ணீரையும் கடந்திடுவேன்
செழிப்பான தேசத்தில் கொண்டு வைப்பீர் –அப்பா

## பாடல் - 1479

**பனி துளி போல் பொழிகிறதே**
தேவனின் அபிஷேகம்
பின் மாரியின் மழை பொழியும் காலம் வந்ததே

ஒரு மனதோடு ஊழியரெல்லாம்
ஒன்று கூடுங்கள் (சபையாரெல்லாம்)
கர்த்தர் பெரிய காரியம் செய்யும்
வேளை வந்ததே – (2)

1. தலை குனிந்து வாழ்ந்தது போதும் தலையை உயர்த்திடு
சிங்கத்தைப் போல் கெர்ச்சித்து எதிரியை துரத்திடு
எங்கும் தேவனை தொழுது கொள்ளும் காலம் வந்ததே
எழுப்புதல் அடைந்து இயேசுவின் நாமத்தை
என்றும் உயர்த்துவோம் (அல்லேலூயா 4)

2. கோலியாத்தின் சத்தம் கேட்டு பயந்து போகாதே
உனக்குள் இருக்கும் தேவனை நீ மறந்து போகாதே
விசுவாசமென்னும் கேடகத்தாலே ஜெயத்தை பெற்றிடு
சத்துருவை உன் காலின் கீழே மிதித்து போட்டிடு (அல்லேலூயா 4)

3. உலகத்தை கலக்கும் தேவமனிதராய் தெரிந்து கொண்டாரே
இருபுறமும் கருக்குள்ள பட்டயம் நமக்கு தந்தாரே
சிங்கத்தின் மேலும் பாம்பின் மேலும் நடந்து செல்லுவோம்
சத்துரு மேல் கொடியை ஏற்றி தேசத்தை சுதந்தரிப்போம் (அல்லேலூயா )

## பாடல் - 1480

**என் பெலனாகிய கர்த்தாவே**
நான் உம்மையே நம்பியுள்ளேன்
நான் கைவிடப்படுவதில்லை – (2)

1. என் கால்கள் சறுக்கும் போதெல்லாம்
தாங்குதைய்யா உம் கிருபை - நான்
அழுது புலம்பும் நேரமெல்லாம்
அணைக்குதைய்யா உம் கரமே - என்னை

2. மரண இருளில் நடந்தாலும்
பொல்லாப்புக்கு பயப்படேன் நான்
உங்க கோலும் தடியும் தேற்றுதைய்யா
அனுதினம் வெற்றிப் பாதை காட்டுமய்யா - எனக்கு - (2)

3. உம்மாலே ஒரு சேனைக்குள்ளே
பாய்ந்து நானும் சென்றிடுவேன்
உம்மாலே ஒரு மதிலையுமே
தாண்டி நானும் சென்றிடுவேன் - தினமும்

4. நான் போகின்ற பாதை எல்லாம்
உம் சமூகம் செல்லுதைய்யா
கோணலான வழிகளெல்லாம்
செவ்வையாக மாறுதைய்யா - எனக்கு

## பாடல் - 1481

**உன்னத தேவன் என்னோடிருக்க**
பயப்படவே மாட்டேன் (2)
காருண்ய தேவன் என்னோடிருக்க
கலங்கிடவே மாட்டேன் (2)

1. உம் கோலும் தடியும் தேற்றி நடத்துமே (2)
கண்ணீரை துடைத்திடுவார் - (2)
தாயைப்போல் தேற்றிடும் - (2)
உன்னத தேவன் இவரே கைவிடவே மாட்டார் - உன்னத

2. சோதனை சகிக்க பெலன் எனக்களிப்பார் 2
பெலப்படுத்தும் கிறிஸ்துவினால் - (2)
எல்லாம் செய்ய பெலன் எனக்களிப்பார்
இயேசு கைவிடவே மாட்டார் (2) - உன்னத

3. கர்த்தர் என் சார்பில் இருக்கும் போது 2
எனக்கெதிராய் நிற்பவன் யார்?
கர்த்தரே யுத்தம் செய்திடுவாரே - எனக்காய்
பயப்படவே மாட்டேன் (2) - உன்னத

## பாடல் - 1482

**துதிக்க துதிக்க இன்பம் பெருகுதே**
உம்மை துதிக்க துதிக்க கிருபை பெருகுதே
துதிக்க துதிக்க உயர்த்தப்படுகிறேன் - உம்மை
துதித்து துதித்து மதிலை துதித்து துதித்து
மதிலை தாண்டுவேன் - (2)

1. பவுலும் சீலாவும் இரவெல்லாம் துதிச்சாங்க
துதிச்சது இரண்டு பேர் விடுதலை பலபேர்க்கு
துதிக்க துதிக்க தான் விடுதலை உண்டு
உம்மை துதிக்க துதிக்கத்தான் இரட்சிப்பு உண்டு - துதிக்க

2. அசைவில்லா இராஜ்ஜியத்தை
பெறப்போகும் நாமெல்லோரும்
பயத்தோடும் பக்தியோடும்
ஆராதனை செய்யணும் - துதிக்க

3. சாம்பலுக்கு பதிலாக
சிங்காரம் தருவாரே
அழுகைக்குப் பதிலாக
களிப்பை தருவாரே - 2 - துதிக்க

## பாடல் - 1483

**யாக்கோபை போல நான் போராடுவேன்**
எலியாவை போல நான் ஜெபித்திடுவேன்
உம்மை விடமாட்டேன் விடமாட்டேன்
யாக்கோபை போல நான் விடவே மாட்டேன்

1. கர்மேல் பர்வதத்தில் நின்றிடுவேன்
அக்கினி இறங்கும் வரை ஜெபித்திடுவேன்
எலியாவின் தேவனே
இரங்கி வாரும் ஐயா - எங்கள் (2) - யாக்கோபை

2. அன்னாளை போல ஆலயத்தில்
அழுது நான் ஜெபித்திடுவேன்
என் துக்கம் சந்தோஷமாய்
மாறும் வரை ஜெபித்திடுவேன் (2) - யாக்கோபை

3. தாவீதப் போல அனுதினமும்
துதித்து நான் மகிழ்ந்திடுவேன்
கோலியாத்து வந்தாலும் - இயேசுவின்
நாமத்திலே முறியடிப்பேன் (2) - யாக்கோபை



அட்டவணை

## பாடல் - 1484

**பயப்படாதே பயப்படாதே கர்த்தர் நம்முடனே**
கலங்கிடாதே கலங்கிடாதே மீட்பர் நம்முடனே

வெற்றியுண்டு தோல்வி இல்லை
கர்த்தர் நம்முடனே மீட்பர் நம்முடனே

1. வனாந்திர பாதையிலே
ஆகார் அழுகுரல் கேட்டாரே
நீர் என்னைக் காண்கிற தேவன் என்று
பெயரிட்டு மகிழ்ந்தாளே – வெற்றி

2. உனக்கெதிரான ஆயுதங்கள்
வாய்காதே போகும்
யாக்கோபுக் கெதிரே மந்திரம் இல்லை
இஸ்ரவேலுக்கெதிரே
குறி சொல்லுதலில்லை – வெற்றி

3. அவர் உங்களை விசாரிக்க
பாரத்தை வைத்துவிடு
நீதிமானை அவர் தள்ளுவதில்லை
காக்கும் தேவன் அவர் தூங்குவதில்லை

## பாடல் - 1485

**இராஜாதி இராஜன் தேவாதி தேவன்**
அதிசயமானவரே – இயேசு
விடுவித்துக் காப்பவரே (அல்லேலூயா 3)
ஆமென் அல்லேலூயா (2)

1. செம்மறி ஆடு கூட்டம் நாங்க
இயேசுவின் பின்னே சென்றிடுவோம்
பலவித சோதனை வந்தாலும் – எதுவும்
எங்களை அசைப்பதில்லை (2) – இராஜாதி

2. என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
சாத்தானை மிதித்திடுவோம் (2) – இராஜாதி

3. ஆட்டுக்குட்டி இரத்தத்தாலே
தோய்க்கப்பட்டோம்
தோய்த்து நாங்கள் வெளுக்கப்பட்டோம்
கழுகு போல வெலனடைந்து
கர்த்தருக்காய் பறந்திடுவோம் (2) - இராஜாதி

## பாடல் - 1486

**எழுப்புதலை கொண்டு வாங்க**
பரிசுத்த ஆவியே எங்கள் பரிசுத்த ஆவியே

1. உமது ஜனங்கள் உம்மிலே
மகிழ்ந்திருக்க வேண்டுமய்யா
ஒவ்வொரு நாளும் உயிர் பெற்று
உமக்காக வாழணும்பா (3) - எழுப்புதலை

2. பாரத தேச எல்லைகளிலே
இருள்களெல்லாம் நீங்கணுமே
பரிசுத்தர் இயேசுவே
உங்க நாமம் உயரணுமே - எழுப்புதலை

3. நதியளவு கண்ணீர் விட்டு
கதறி நாங்கள் ஜெபிக்கணுமே
விசுவாச ஜெப ஆவி
எங்க மேலே ஊற்றிடுமே (3) - எழுப்புதலை

4. மேல் வீட்டு அறையினிலே
அபிஷேகத்தை ஊற்றினீரே
மாம்சமான யாவர் மேலும்
உங்க ஆவி ஊற்றிடுமே (3) - எழுப்புதலை

## பாடல் - 1487

**நீ எழும்பும் வரையிலும் கிராமங்கள்**
பாழாய் கிடக்குதே
எழும்பிடு வாலிபரே எழும்பிடு கன்னியரே
கர்த்தரின் வருகையோ மிகவும் சமீபமே
நியாயத்தீர்ப்போ நெருங்கி வருகுதே

இன்னும் காலத் தாமதமேனோ
எழும்பிடு வாலிபரே எழும்பிடு கன்னியரே

1. இமய முதல் குமரி வரை
ஜெப தூபம் ஏற்றிடுவோம்
நதியளவு கண்ணீர் விட்டு கதறி நாம்
ஜெபித்திடுவோம் (2) - இன்னும்

2. கோடி கோடி மாந்தர்களிங்கே
நரகத்தின் பாதையிலே - அவர்களின்
மீட்புக்காக யாரிங்கே போவது - இன்னும்

3. இந்தியாவின் எழுப்புதலை
காணும் வரை ஜெபித்திடுவோம் (2)
கர்த்தரே தெய்வம் என்று நாவு யாவும்
முழங்கணுமே (2) - இன்னும்
எழும்பு (3) வல்லமை தரித்து எழும்பு
எழும்பு நீ எழும்பு (2)

**பாடல் - 1488**

**மலைகள் விலகிப் போனாலும்**
பர்வதம் நிலையற்றுப் போனாலும்
தேவ கிருபையோ விலகாது

1. பூமியில் உம்மைத்தவிர யாருமில்லையே
பரலோகில் உம்மைத் தவிர யாருமில்லையே

நீரின்றி துணையேதைய்யா
நீரின்றி வழியேதைய்யா (2)

2. பூமியில் அந்நியனும் பரதேசி நான்
நீரென்னை காண்கின்ற தெய்வமல்லவோ
உலகத்தின் முடிவுரை நடத்திடும் தெய்வமே

3. யாரென்னை வெறுத்தாலும் வெறுக்காதவர்
அனுதினம் தாங்கிடும் கிருபை அல்லவோ
நிற்பதும் நிலைப்பதும் கிருபையில்தானே

4. தண்ணீரைக் கடக்கும் போதும் என்னோடுண்டு
ஆறுகளை கடக்கும் போதும் என்னோடுண்டு
அக்கினியில் நடந்தாலும் எரிந்து நான் போவதில்லை
நீரின்றி உமது சமூகம் வரும் போதெல்லாம்

## பாடல் - 1489

**எங்க கண்ணீரெல்லாம் மாறுகின்றது**
உமது சமூகத்தில் நித்திய மகிழ்ச்சி
உமது சமூகத்தில் பேரானந்தம்
ஒருநாளும் மாறாதைய்யா –
ஒரு நாளும் ஒரு போதும்
மாறாது மாறாது உம் சமூகமே! (2)

1. மேற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
அலைந்து நான் திரிந்தாலும்
விடுதலை இல்லையே (2)
நித்திய ஜீவனுள்ள வார்த்தைகள் உம்மிடமுண்டு
உமது வார்த்தையால் திருப்தி ஆகிறேன்

2. பன்னிரண்டு வருடமாய் பெரும்பாடுள்ள ஒரு பெண்
அநேக வைத்தியரால் கைவிடப்பட்டவளாய்
இயேசுவின் சமூகத்திற்கு ஓடோடி வந்தாளே
இயேசுவின் வஸ்திரத்தை தொட்டதால் சுகமானாள் (2) – உமது

3. இஸ்ரவேல் சேனைகட்குள்ளே கடந்திட்ட தேவ சமூகம்
ஒருவரும் பெலவீனராய் இருந்ததுமில்லையே (2)
இரவில் அக்கினி ஸ்தம்பம் பகலினில் மேக ஸ்தம்பம்
பாதுகாத்து நடத்தினீரே சேனைகளின் தெய்வமே (2) – உமது

4. உமது சமூகத்தில் வாசமாய் இருப்பவர்கள்
திருப்தியாய் சாப்பிடவும் நல்ல வஸ்திரம் தரிக்கவும் (2)
கையிட்டு செய்கின்ற வேலையெல்லாம் ஆசீர்வதிப்பார்
ஆசீர்வாத வாய்க்காலாய் எங்கள மாறச் செய்வீர் (2) – உமது

## பாடல் - 1490

**உலகமே போற்றுதைய்யா உந்தன் நாமத்தை**
ஓயாமல் பாடுவேன் உம் புகழை

1. ஆதியும் நீரே அந்தமும் நீரே
அல்பாவும் நீரே ஒமேகாவும் நீரே
வானமும் பூமியும் உண்டாக்கினவர்
சர்வத்தையும் ஆளுகின்றவரே ஸ்தோத்திரம்
உமக்கு ஸ்தோத்திரம் – உலகமே

2. முழங்கால் யாவும் முடங்கிடுமே
பேய்கள் யாவும் நடுங்கிடுமே
சேனையின் கர்த்தர் பரிசுத்தர்
பட்சிக்கிற அக்கினியே ஸ்தோத்திரம்
உமக்கு ஸ்தோத்திரம் - உலகமே

3. மனிதனை மீட்க மனிதவதாரம் எடுத்தார்
பூமியில் உள்ளவர்க்கு மீட்பை அளித்திட
பாவங்கள் சாபங்கள் யாவையும் நீக்கி
இளைப்பாறுதலை தந்தவரே
ஸ்தோத்திரம் உமக்கு ஸ்தோத்திரம் - உலகமே

4. நித்திய ஜீவன் மனிதருக்களிக்க
தன் ஜீவனையே தந்தீரே
மரணம் வென்றீர் சாத்தானை ஜெயித்தீர்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தீர்
ஸ்தோத்திரம் உமக்கு ஸ்தோத்திரம் - உலகமே

## பாடல் - 1491

**பேசுங்கப்பா எங்களோடு பேசுங்கப்பா**
நீங்க பேசினா எங்க வாழ்க்கை மாறும் (2)

துதிக்கணும்பா ஜெபிக்கணும்பா
உம் நாமம் உயர்த்தணும்பா (2)

1. பகல் முழுவதும் உங்க பாதபடியில்
என் கண்ணீர் வடிக்கணும்பா
இரா முழுவதும் தியானம் செய்த
பாக்கியவானாய் மாற்றுங்கப்பா – எங்கள - துதிக்கணும்பா

2. ஒவ்வொரு நாளும் பெலனடைந்து
ஆவியில் நிறையணும்பா (2)
பெலத்தின்மேல பெலனடைந்து
சீயோன் பார்க்கணும்பா (2) - துதிக்கணும்பா

3. பரிசுத்தத்தில் மகத்துவமுள்ள
தேவாதி தேவன் நீரே (2)
பரிசுத்தமாய் வாழ்ந்திடவே
உங்க கிருபையினால் நிரப்புங்கப்பா - துதிக்கணும்பா

4. உண்மையான ஊழயனாய்
அனுதினமும் விளங்கணும்பா
நன்மைகள் செய்யணும்
நாள்தோறும் உம்ம பாக்கணுமே (2) - துதிக்கணும்பா

## பாடல் - 1492

**ஆதிமுதலாய் இருந்தவரும்,**
இருப்பவரும் நீரே
முடிவில்லாத ராஜ்ஜியத்தை
ஆளுகை செய்பவரே
இருந்தவர் நீரே, இருப்பவர் நீரே
வருபவரும் நீரே
என் கண்ணீரை துடைக்க
தம்மோடு சேர்த்துக் கொள்ள
மீண்டும் வருபவரே

1. ஆயிரம் பேர்கள் ஆறுதல் சொன்னால்
ஆறுதல் ஆகுமா
இந்த உலகமே என்னை நேசித்தாலும்
உம் நேசம் ஈடாகுமா
உம்மைப் போல நேசிக்க
யாருண்டு உலகில்
என் பேச்சும் நீரே என் மூச்சும் நீரே
உயிரோடு கலந்தீரே

2. செத்தவனைப் போல் எல்லாராலும்
முழுமையாய் மறக்கப்பட்டேன்
உடைந்து போன பாத்திரம் போல்
என் வாழ்க்கை மாறியது
என் காலங்கள் உம் கையில்
அர்ப்பணம் செய்து விட்டேன்
என் தாயும் நீரே, தகப்பனும் நீரே
என் வாழ்வின் எல்லாம் நீரே

3. இக்காலத்துப் பாடுகள் எல்லாம்
ஒருநாள் மாறிவிடும்
வருங் காலத்தின் மகிமைக்குள்ளே
நம்மை சேர்த்து விடும்
பெலத்தின் மேல் பெலனடைந்து
சீயோனைக் காண்போம்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
தவிப்பும் சஞ்சலமும் ஓடிப் போகும்

## பாடல் - 1493

**உம்மைப் போல ஒரு தெய்வமில்லை ஐயா**
இயேசய்யா பாவிகளை இரட்சிக்க வந்தவரே
மன இரக்கமும் உருக்கமும்
நீடிய சாந்தமுள்ளவரே (2)

1. ஒருவரும் கெட்டுப்போவது
சித்தமில்லையென்று சொல்லி
பரலோக மேன்மையை விட்டு
பூமியில் வந்தீரைய்யா
நிந்தைகளும் பாடுகளும்
எங்களுக்காய் ஏற்றீரே
நித்திய ஜீவன் தந்தீர் ஐயா
உம்மைப்போல யாருமில்லை - உம்மை

2. குஷ்டரோகி மேல் மனதுருகி
கூசாமல் தொட்டீரைய்யா
கஷ்டப்படுவோர் பாரங்கள் நீக்கி
ஆறுதல் தந்தீரைய்யா
வானிலும் பூமியிலும் மேலான நாமமுள்ளவர்
பூமியில் இரத்தம் சிந்தி
மனுகுலத்தை மீட்டவரே - உம்மை

3. எப்பேர்பட்ட பாவியையும்
மன்னிக்கும் தேவனிவர்
பாவங்களை பாராமலே நேசகிகும் தேவனிவர்
மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவுதூரமோ
அத்தனை பாவங்களை அவர் மன்னித்து
வாழவைப்பார் - உம்மை

4. உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன்
என்றும் மனிதன் பிரிக்கிறான்
சிலர் பட்டம் பதவி செல்வங்களினால்
பெருமை கொள்கிறான்
ஜீவன் போனால் ஒன்றுமில்லை
கூட ஒன்றும் வருவதில்லை
இதை உணர்ந்து வா
என் இயேசுவை தவிர வழியில்லை - உம்மை



அட்டவணை

## பாடல் - 1494

**சேனைகளின் தேவனே உமது வாசஸ்தலம்**
எத்தனை நன்மையும்
எத்தனை இன்பமுமாய் இருக்கிறது
எங்கள் சேனைகளின் தேவனே (2)

1. பூமி நோக்கி நான் பார்த்தேன்
உம்மைப் போல ஒரு தெய்வம்
பூமியிலே கண்டதில்லை (2)
வானம் கொள்ளாதவர்
இயேசு பூமி கொள்ளாதவர் (2)
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று
வாழ்நாளெல்லாம் நான் பாடுவேன்

2. ஜோதிகளின் தேவனே
நன்மையான ஈவுகளை
நாள்தோறும் தருபவரே (2)
எனக்காக யாவையும் செய்து முடிப்பவரே (2)
தடைகளை உடைத்து கட்டுகளை அறுத்து
அனுதினம் என்னைக் காப்பவர்

3. பட்சிக்கிற அக்கினியே
தீமைகளைப் பாராத சுத்த தெய்வம் நீரய்யா
வானம் சிங்காசனம் பூமி பாதபடி (2)
அகிலமே போற்றுது போற்றுது
உன்னத தேவனே

## பாடல் - 1495

**அழைத்தவர் உன்னை**
நடத்திச் செல்வாரே கலங்காதே
நீ கலங்காதே நீ கலங்காதே
கலங்காதே மனம் திகையாதே

1. செங்கடலும் உன்னைக் கண்டு
அலை புரண்டு வந்தாலும்
யோர்தானும் உன்னைக் கண்டு
கரை புரண்டு வந்தாலும்
கலங்காதே மனம் திகையாதே

2. சிங்கத்தின் கெபிக்குள்ளே
உன்னைத் தூக்கிப் போட்டாலும்
எரிகிற சூளையில் உன்னைத்
தூக்கி எரிந்தாலும் கலங்காதே
மனம் திகையாதே அழைத்தவர்
உன்னை விடுவிப்பாரே - கலங்காதே

3. யேசபேலும் உன்னைக் கண்டு எதிர்த்து வந்தாலும்
ஆமானும் உன்னைக் கண்டு கலகம் தான் செய்தாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை
அழைத்தவவர் உன்னை
உயர்த்திடுவாரே - கலங்காதே

4. எரிகோவும் உன்னைக் கண்டு
எதிர்த்து நின்றாலும்
வெள்ளம் போல் சாத்தானும்
உன் எதிரே வந்தாலும் கலங்காதே
மனம் திகையாதே அழைத்தவர்
உனக்கு உதவி செய்வாரே - கலங்காதே

5. கேரீத்தும் உன்னைக் கண்டு
வற்றித்தான் போனாலும்
காகம் உனக்கு அப்பம் தான்
காகம் உனக்கு அப்பம் தான்
கொடாமல் போனாலும்
கலங்காதே மனம் திகையாதே
அழைத்தவர் உன்னை போஷிப்பார்

### பாடல் - 1496

**எங்களுக்கல்ல கர்த்தாவே எங்களுக்கல்ல**
உங்க நாமம் மகிமைப்பட வேண்டும்பா (4)

1. பூமியில் உயர்ந்தவர் சர்வ வல்லவர்
உமக்கு நிகரானவர் பூமியில் யாருமில்லை

2. ரதங்களை குறித்துமல்ல குதிரையை குறித்துமல்ல
உமது நாமத்தையே மேன்மை பாராட்டுவேன்

3. தாழ்மையில் நினைத்தவர் சிறுமையை கண்டவர்
உமது நாமத்தையே மேன்மை பாராட்டுவேன்

4. உளையான சேற்றிலும் பயங்கர குழியிலும் தூக்கி எடுத்தீரய்யா
கன்மலை மேல் நிறுத்தினீரே

5. பலத்தினாலுமல்லவே பராக்கிரமம் அல்லவே
உமது ஆவியினால் எல்லாம் ஆகும்

## பாடல் - 1497

**ஜெயித்தாரே ஜெயித்தாரே சாத்தானை ஜெயித்தாரே**
ஜெயத்தாரே ஜெயித்தாரே மரணத்தை ஜெயித்தாரே

வானகத்தோர் பூதலத்தோர்
எல்லா முழங்கால் முடங்கிடுமே
வானகத்தோர் பூதலத்தோர்
எல்லா நாவும் அறிக்கையிடும்

1. நமக்கு எதிராய் எழுதப்பட்ட
கையெழுத்தை குலைத்தாரே
சத்துருவின் கையிலிருந்து
நம்மை விடுதலையாக்கினாரே

2. எல்லா இடங்களிலம் நம்மைக் கொண்டு
வெற்றி சிறக்க பண்ணுகிறார்
மரண வாசலை எடுத்துவிட்டு
ஜீவ வாசலை கொடுத்துவிட்டார்

3. மரண பயத்தில் இருந்த நம்மை
முற்றிலும் விடுதலையாக்கினாரே
மரணத்தின் கூரை சிலுவையிலே
உடைத்து ஜெயித்து எழுந்தாரே

4. ஜீவனுள்ள கல்லாய் மாற்றி
மகிமையின் ஆலயம் கட்டுகிறார்
இந்த கல்லில் மோதுகிறவன்
நொறுங்கி நொறுங்கி போவானே

## பாடல் - 1498

**உனக்கெதிரான ஆயுதங்கள்**
வாய்க்காதே மகனே – 2 மகளே
நீ உயிரோடு இருக்கும் வரையிலும்
எதிர்ப்பவன் இல்லை – 2

1. ஏழு மடங்கு அக்கினியில்
சேதமில்லாமல் காத்திடுவார் – 2
ஒரு வழியாய் வந்தவர்கள்
ஏழு வழியாய் ஓடச் செய்வார் – 2
உன்னைக் கொண்டு செய்ய நினைத்ததை
தடை செய்ய யாருமில்லை

2. உன்னை நான் காப்பாற்றி
அடிக்கடி தண்ணீர் பாய்ச்சிடுவேன்
இரவினிலும் பகலினிலும்
சேதமில்லாமல் காத்திடுவார்
உன்னைக் கொண்டு மலைகளையும்
குன்றுகளை நான் தகர்த்திடுவேன் – 2

3. சிங்கத்தின் மேலே நீ நடத்திடுவாய்
சீறும் சர்ப்பத்தை மிதித்திடுவாய்
உனக்கெதிராய் எழுதப்படும் சட்டங்களை
நான் மாற்றிடுவேன்
உன்னைக் கொண்டு தேசத்திலே
என் நாமம் உயர்த்திடுவேன்

## பாடல் - 1499

**உங்க வசனம் மனமகிழ்ச்சியாய்**
இல்லாமல் போனால்
என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்
பாதைக்கு வெளிச்சமல்லோ
பேதைக்கு தீபமல்லோ – உங்க வசனம்

1. மரணம் இருளில் நடக்கின்ற போது
கோலும் தடியுமாக தேற்றுதய்யா உம் வசனம் – 2
துன்பத்தின் பாதையிலே நடக்கின்ற போது – 2
உயிர்ப்பித்து உயர்த்துதய்யா
உம் வசனம் தானய்யா – 2

2. உமது வேதத்தை இரவும் பகலும்
தியானம் செய்வதினால்
பாக்கியமாய் உயர்த்துதய்யா
பச்சையான மரமாக இலையுதிராமல்
காலமெல்லாம் கனிகொடுத்து
உயர்த்துதய்யா உம் வசனம் – 2

3. உமது வசனம் உட்கொள்ளும் போது
இதயம் அனலாக கொழுந்து விட்டு எரியுதய்யா – 2
உலர்ந்த எலும்பு எல்லாம்
உயிர்ப்பித்து எழும்புதய்யா – 2
சேனையாய் எழும்பி நின்று
சத்துருவை துரத்துதய்யா – 2

**பாடல் - 1500**

**நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை – 2**
நீர் கட்டினால் அதை இடிப்பவன் இல்லை

இல்லை இல்லை இல்லை என் வாசலை அடைப்பவன் இல்லை
இல்லை இல்லை இல்லை என்னை எதிர்ப்பவன் பூமியில் இல்லை

1. கர்த்தரை போல பரிசுத்தம் உள்ளவர்
பூமியில் இல்லையே
கர்த்தரை போல வல்லமை உள்ளவர்
பூமியில் இல்லையே
பலவானின் வில்லை
உடைத்து கீழே தள்ளுகிறார் – 2
தள்ளாடும் யாவரையும்
உயரத்தில் நிறுத்துகிறார் – 2

2. நாசியின் சுவாசத்தால் செங்கடலை
அவர் இரண்டாய் பிளந்தவராம்
பார்வோனின் சேனையை தப்பவிடாமல்
கடலின் அழித்தவராம்
மரண இருள் சூழ்ந்திடும் வேளையில்
பஸ்கா ஆட்டுக்குட்டி – 2
வாதை எங்கள் கூடாரத்தை என்றும் அணுகாது

3. தேவனை துதிக்கும் துதியாலே
எரிகோ விழுந்தது
பவுலும் சீலாவும் துதித்த போது
சிறையும் அதிர்ந்தது
துதியாலே சாத்தானை கீழே தள்ளிடுவோம் (2)
திறந்த வாசல் நம் முன்னே கொடியை
ஏற்றிடுவோம் (2)



அட்டவணை

## பாடல் - 1501

**துதி பலிய செலுத்த வந்தோம் இயேசய்யா**
உம்மை ஆராதிக்க கூடி வந்தோம் இயேசய்யா

நீர் உயர்ந்தவர் நீர் வல்லவர் - இந்த
உலகை ஆளும் தெய்வம் நீரே

1. என்னிலே ஒன்றுமில்லை
ஆனாலும் நேசித்தீரே
என்னிலே நன்மையில்லை
ஆனாலும் உயர்த்தினீரே
தகப்பனை போல என்னை சுமந்தீரையா
ஒரு தாயை போல என்னை தேற்றினீரே
சுமந்தீரய்யா தேற்றினீரே
சுமந்தீரய்யா ஏ்னனை தேற்றினீரே

ஆராதனை உமக்கே ஐயா எங்கள்
ஆராதனை உமக்கே ஐயா - ஆராதனை 10

2. பிறந்த நாள் முதலாய் தூக்கி எறியப்பட்டேன்
ஒரு கண்ணும் என் மேல்
இரக்கமாய் இருந்ததில்லை
பிழைத்திரு என்று என்னை தூக்கினீரே
உம் மகனாகவே ஏற்றுக் கொண்டீர்
பிழைக்க செய்தீர் ஏற்றுக் கொண்டீர்
பிழைக்க செய்தீர் என்னை ஏற்றுக் கொண்டீர்

3. உமது இரக்கத்திற்கு முடிவே இல்லையப்பா
உமது அன்பிற்கு அளவே இல்லையப்பா
உமது காருண்யம் என்னை பெரியவனாய்
உயரத்திலே நிறுத்தியதே
என்னை உயரத்திலே நிறுத்தியதே (ஆராதனை 10)

## பாடல் - 1502

**யாக்கோபு என்னும் சிறு பூச்சியே**
பயப்படாதே நான் துணை நிற்கிறேன் (2)

என் யாக்கோபே என் யாக்கோபே என் யாக்கோபே
பயப்படாதே நான் துணை நிற்கிறேன் (2)

1. உனது கூடாரம் அழகாய் மாற்றிடுவேன்
நீ பரவிப் போகின்ற ஆறாய் மாறிடுவாய்
உன்னை வாசனை வீசும்
சந்தன மரமாய் நாட்டுவேன் - என் யாக்கோபே

2. உனது முகம் இனி வெட்கம் ஆவதில்லை
உனது முகம் இனி செத்துப் போவதில்லை
நீ என்னால் என்றும் மறக்கப்படுவதில்லை

3. உனது வேரை பரவச் செய்திடுவேன்
நீ பூத்து காய்த்து பூமியை நிரப்பிடுவாய்
உன் தூளை எண்ணத்தக்கவர் யாருண்டு

4. உனக்கு எதிரான மந்திரம் இல்லையே
உனக்கு எதிரான குறியும் சொல்வதில்லை
நீ துஷ்ட சிங்கமாய் எழும்பி நிற்பாய்

## பாடல் - 1503

**என்னை ஜெனிப்பித்தவரும் நீர்தானே**
என்னை பெற்றெடுத்தவரும் நீர்தானே
எனக்கு பேரு வைத்தவரும் நீர்தானே
என்னை வளர்த்தவரும் நீர்தானே

கன்மலையே என் கன்மலையே - 2
உமக்கே ஆராதனை - 4

1. தாயின் அன்பிலும் மேலான அன்பு
அளவே இல்லாத உண்மையான அன்பு - 2
எனக்காக அடிக்கப்பட்டீர்
எனக்காக நொறுக்கப்பட்டீர்
நான் வாழ மரித்தீரே - 2
எனக்காக உயிர்த்தீரே - 4 - உமக்கே

2. என் மேல் கிருபை வைத்து
இரட்சிப்பை தந்தவரே
இதற்கு ஈடு இணை
பூமியிலே இல்லையப்பா - 2
என் மேல் அன்பு வைத்து
பரிகாரம் செய்தீரே
பாவமில்லை மரணமில்லை - 2
நித்திய ஜீவனை தந்தீரே - 4 - உமக்கே

3. உமக்கு நிகரான தெய்வம்
ஒன்றும் இல்லையப்பா
அகில உலகத்திற்கும்
ஆண்டவரும் நீர்தானே – 2
முடிவில்லா இராஜ்யத்தை
அரசாளும் தெய்வம் நீரே
கண்ணீரெல்லாம் துடைத்திடுவீர் – 2
நித்திய மகிழ்ச்சியே நீர்தானே – 2
உமக்கே ஆராதனை – 4

**பாடல் - 1504**

**என் மீட்பர் உயிரோடுண்டு ஓ... ஓ...**
என் மீட்பர் உயிரோடுண்டு

உயிரோடுண்டு உயிரோடுண்டு உயிரோடுண்டு
இயேசு உயிரோடுண்டு
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. ஆறுகளை நான் கடந்திடுவேன்
அக்கினியில் நான் நடந்திடுவேன்
சிங்க கெபியிலே போட்டாலும்
சேதமில்லாமல் காத்திடுவார் – என் மீட்பர்

2. துன்பத்தின் பாதையில் நடந்தாலும்
அவர் வசனத்தாலே உயிரடைவேன்
நன்மையும் கிருபையும் என்னை தொடரும்
என் ஜீவனுள்ள நாளெல்லாம் – என் மீட்பர்

3. வெள்ளம் போல சாத்தானும்
நம் எதிரே வந்தாலும்
ஆவியானவர் கொடி பிடித்து
யுத்தங்களை செய்திடுவார் – என் மீட்பர்

4. அவர் நாமத்தை நாம் அறிந்ததினால்
உயர்ந்த இடத்தில் வைத்திடுவார்
வெற்றி மேல் வெற்றி தந்து
தலையாய் என்னை உயர்த்திடுவார் – என் மீட்பர்

### பாடல் - 1505

**உன் சத்துரு விழுந்தானே**
உன் பாதங்களின் கீழே
புது எண்ணெயால் அபிஷேகம்
உன் பாத்திரம் நிரம்பும்
பெரும் பந்தியின் நடுவிலே
உன் தலையை உயர்த்துவார்
நீதியின் சால்வையாலே உன்னை மூடுவார்
நீ உயருவாய் நீ படருவாய்
உன் தேசம் வாய்க்குமே
நீ ஓங்கி வளருவாய் நீ பூமியை நிரப்புவாய்

2. யுத்தங்களை நடப்பிக்கும்
சர்வ வல்ல தேவன்
கூர்மையான பட்டயமாய்
உன்னை என்றும் மாற்றுவார்
கன்மலையின் வெடிப்பிலே
உன்னை மூடுவார்
பலவானின் கையில் உள்ள
அம்பாய் மாற்றுவார்
நீ மலையின் மேல் உள்ள
இனி மறைவதில்லையே
நீ உலகிற்கு
வெளிச்சமே, நீ உலகிற்கு சாட்சியே

### பாடல் - 1506

**மலைகளெல்லாம் வழிகளாக்குவார்**
உன் பாதையெல்லாம் செவ்வையாக்குவார்
கலங்காதே திகையாதே
நிச்சயமாகவே முடிவு உண்டு

ஆபிரகாமின் தேவன் – அவர் ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் – அவர் நம்முடைய தேவன்

1. பெரிய பர்வதமே எம் மாத்திரம்
செருபாபேல் முன்னே சமமாகுவாய் (2)
முத்திரை மோதிரமாய் தெரிந்து கொண்டாரே
இயேசுவின் நாமத்தாலே ஜெயம் பெறுவோம்

2. பூமி அனைத்திற்கும் ராஜாதி ராஜன்
உன்னதமானவரை
துதியாலே உயர்த்திடுவோம்
வெண்கல கதவெல்லாம் உடைத்திடுவாரே
இரும்புத் தாழ்வாளை முறித்திடுவாரே

3. தடைகளை உடைப்பவர் நம் முன்னே போவார்
ஓசன்னா ஜெயமென்று ஆர்ப்பரிப்போமே
வில்லை உடைத்திடுவார் ஈட்டியை முறித்திடுவார்
இரதங்களை அக்கினியால் சுட்டெரிப்பாரே

## பாடல் - 1507

**எல்ஷடாய் என்ற நாமம் உடையவர்**
எங்கள் மத்தியிலே அவர் வந்திருக்கிறார்
வானம் போற்றுது பூமியும் வாழ்த்துது
சகல ஜீவன்களும் வாழ்த்தி உம்மை பாடுது

சர்வ வல்லவர் நித்தியமானவர்
சகலத்தையும் செய்திடுவார்

1. ஒருவரும் சேராத ஒளியினிலே வாழ்பவரே
நீதியின் சூரியனே செட்டைகளின் ஆரோக்கியம்

2. வானாதி வானங்கள் போற்றுகின்ற தெய்வம் நீரே
அகில உலகத்தையும் ஆளுகின்ற தெய்வம் நீரே

3. யார் உம்மை மகிமைப்படுத்தாமல் இருக்கலாம்
தேவரீர் நீர் ஒருவரே பரிசுத்தர் பரிசுத்தர்

## பாடல் - 1508

**இயேசு நாமமே ஜெய நாமமே**
ஜெய நாமமே எங்கள் இயேசு நாமமே – 2
இயேசு நாமமே ஜெய நாமமே
ஜெய நாமமே இயேசு நாமமே

1. வானத்திலும் பூமியிலும் உயர்ந்த நாமமே
சர்வ பூமிக்கும் ஆண்டவரே
உன்னத நாமமே 2 – ஜெய நாமமே

2. மரணத்தின் கூரை உடைத்த நாமமே
பாதாளத்தின் வெற்றி சிறந்த இயேசு நாமமே

3. வெற்றி மேல் வெற்றி தருகின்ற இயேசு நாமமே
நன்மையும் கிருபையும் தொடரச் செய்யும் உன்னத நாமமே

4. நித்திய ஜீவனை தருகின்ற இயேசு நாமமே
வழியும் சத்தியம் ஜீவனுமான இயேசு நாமமே

## பாடல் - 1509

**விண்ணுக்கும் மண்ணுக்கும் சொந்தக்காரர் நீர்தானே**
உம்மையன்றி யாருமில்லையே இந்த உலகில் (2)

1. நான் பார்க்கும் சூரியனும்
நான் பார்க்கும் சந்திரனும்
உமது கரத்தின் கிரியைகள் தானே
எனக்கென்று பூமியிலே எதுவுமில்ல
சொந்தமென்று சொல்லிக் கொள்ள
உம்மையன்றி யாருமில்லை

2. என் தாயின் கருவினிலே உருவான நாள் முதலாய்
உமது சார்பாக பூமியிலே விழுந்தேனே
அன்று முதல் இன்று வரை
ஆதரித்த தெய்வமல்லோ
சொந்தமென்று சொல்லிக் கொள்ள
உம்மையன்றி யாருமில்லை

## பாடல் - 1510

**ஒரு கோடி ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்போமா**
பரிசுத்தரின் பாதத்தில் அர்ப்பணிப்போமா – 2

மனதார வாழவைப்பார் மகிமையின் தேவனவர்
பரலோகம் சேர்த்திடுவார் பரலோக ராஜனவர் – 2
துதியும் கனமும் மகிமை செலுத்தி பாடி கொண்டாடு – 2

1. மனுக்குல மீட்புக்காக வந்தவரும் இவரே
பாவங்கள் சாபங்கள் மன்னித்தவர் இவேரே – 2
பரலோக வாசலை திறந்தவர் இவரே
நித்திய ஜீவனை தந்தவரும் இவரே – 2

2. உலகத்தில் வந்துதித்த மெய்யான ஒளியே
நீதியின் சூரியனாய் வந்தவரும் இவரே – 2
பாவ இருளை நீக்கியவர் இவரே
பரிசுத்த வாழ்க்கை தந்தவரும் இவரே – 2

3. வானிலும் பூமியிலும் உயர்ந்தவர் இவரே
எல்லா நாமத்திலும் மேலான நாமமே – 2
பேய்களும் நோய்களும் நடுங்கியே ஓடுதே
வல்லமையுள்ள தேவனும் இவரே – 2

## பாடல் - 1511

**கிருபை மேல் கிருபை தாருமே**
நான் உண்மையாக வாழ்ந்திடவே
உங்க பெலத்தின் மேலே பெலன் தாருமே
நான் பரிசுத்தமாய் வாழ்ந்திடவே – 2

1. உமது வருகையின் நாள்
மிகவும் நெருங்குதய்யா
தேவனை சந்திக்கவே ஆயத்தமாகணுமே
இப்பொழுதோ எப்பொழுதோ
எந்நேரம் வந்திடலாம்
ஆயத்தமுள்ள கன்னிகை போல
எண்ணெயை நான் வைத்துக் கொள்வேன்

மணவாளன் பின்னே போல
மகிழ்ச்சியோடு சென்றிடுவேன்

2. பெருங்காற்று வந்து என்மேல்
மோதியடிக்குதைய்யா
பெருவெள்ளம் வந்து என் மேல்
மோதியடிக்குதைய்யா
ஆனாலும் விழவில்லை
கன்மலை மேல் நிற்கின்றேன்
புத்தியுள்ள வீட்டை நான் கன்மலை
மேல் கட்டிடுவேன்

3. பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஜெபிக்கணுமே
விசுவாசம் தளர்ந்திடாமல்
முன்னேறிச் செல்லணுமே
அசைவில்லா ராஜ்ஜியத்தை
தருகின்ற தெய்வமல்லோ
பயத்தோடும் பக்தியோடும்
ஆராதனை செய்திடுவேன் – மணவாளன்

## பாடல் - 1512

**உன்னத தேவனுக்கு மகிமை செலுத்துங்க**
வானிலும் பூமியிலும் உயர்ந்த ராஜனுக்கு

ஏலேலோ... ஏலில... ஏலோ ஏலோ...

1. உம் நாமம் பாட பாட உள்ளத்தில்
சந்தோஷம் பொங்குதய்யா
உம் நாமம் துதிக்க துதிக்க தடைகள்
எல்லாம் நீங்குதைய்யா... அல்லேலூயா

2. பூமியின் குடிகளெல்லாம்
பணிந்து துதித்து பாடிடுங்கள்
அதிசயமானவர் இவர்
வல்லமையுள்ள தேவனவர் - அல்லேலூயா

3. ஜீவனை கொடுத்தீரே
பரிசுத்தமுள்ள தெய்வமைய்யா
மனுகுலம் மீட்டவரே
மன்னவரே ஸ்தோத்திரம்

4. சேரக்கூடா ஒளியினிலே
வாசம் செய்யும் தேவனவர்
நீதியின் சூரியனவர் செட்டைகளின்
கீழ் ஆரோக்கியம் - அல்லேலூயா

## பாடல் - 1513

**பாவம் போக்கும் நதி ஜீவ தேவ நதி**
பாவங்கள் சாபங்கள் யாவையும் நீக்கி
சுத்திகரிக்கும் நதி

1. பாவத்திற்கு மரித்து நீதிக்கு
பிழைக்கச் செய்தீர்
பாரினில் வந்தீரைய்யா
எங்கள் பாவங்கள் போக்கிடவே

2. வறண்ட உம் இரத்தம்
எங்கள் பாவங்கள் போக்கிடுதே
நித்திய ஜீவன் பெற சுத்திகரிக்குதைய்யா

3. வறண்ட நிலத்திலே
ஆறுகள் உண்டாக்குவீர்
தாகமுள்ளவனுக்கு ஜீவத் தண்ணீர் கொடுப்பீர்

4. கன்மலையிலிருந்து
தண்ணீரை வரவழைத்தீர்
கசந்த மாராவை மதுரமாய் மாற்றிடுவீர்

## பாடல் - 1514

**பரலோக தந்தையே பரலோக தந்தையே**
பரிசுத்த தெய்வம் நீரே
பலகோடி தேவர்களில் உயர்ந்தவர்
உன்னதர் பரிசுத்த தெய்வம் நீரே
பூமிக்கெல்லாம் ஆண்டவரும் நீரே
பரலோகத்தில் உயர்ந்தவர் நீரே
ஒருமனதோடு கூடி வந்தோம்
உன்னத தேவனை தொழுதிடவே
ஓயாத புகழ்ச்சி ஓயாத கனமும்
நிறைந்த என் தேவனை தொழுதிடவே வந்தோம்

1. அப்பத்தக் கேட்டா கல்லை கொடுப்பானா
மீனக் கேட்டா பாம்பைக் கொடுப்பானா
முட்டைய கேட்டா தேளைக் கொடுப்பானா
பொல்லாத தகப்பனே
நல்ல ஈவை அறியும் போது
இம்மைக்கும் மறுமைக்கும்
பரமத் தகப்பன் நீர் தானே

2. பறந்து காக்கும் பட்சியைப் போலே
தேவன் தினமும் சுமந்திடுவாரே
தகப்பன் பிள்ளையை சுமப்பது போலே
தேவன் தினமும் சுமந்திடுவாரே
தாயைப் போல் தேற்றுவார்
தகப்பனைப் போல் சுமந்திடுவார்

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவாரே
அமர்ந்தத் தண்ணீரண்டை நடத்திடுவாரே
கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கின்ற போது
தாழ்ச்சி என்பது வாழ்வினில் இனி இல்லை
நன்மையும் கிருபையும்
வாழ்நாளெல்லாம் தொடரச் செய்வார்

## பாடல் - 1515

**ஜோரா கைய தட்டி பாடுங்கோ**
இஸ்ரவேலின் பரிசுத்தர பாடுங்கோ
துதிக்கு பாத்திரர், கனத்துக்கு பாத்திரர்
மகிமைக்கு பாத்திர நீர்தானையா

1. நீதிமான்கள் துதிக்கும் போது
வெற்றி கொண்டாட்டம் பெருதுங்க
நீதிமான்கள் பெருகும் போது
பட்டணமெல்லாம் களிகூருதே

உன்னதமான கர்த்தரையே
உயர்த்தி பாடிடுவோம் – 2
மகிழ்ந்து பாடி கொண்டாடுவோம் – 2

2. நமது தேவன் பெரியவரும்
ஸ்தோத்தரிக்கத் தக்கவரும்
தமது மகிமையின் பிரசன்னத்தால்
பர்வதம் மெழுகு போல் உருகிடுதே

3. நமது தேவன் எழுந்தருளி
சத்துருக்களை சிதறப் பண்ணி
சீயோனுக்கு தயை செய்து
சிறையிருப்பை திருப்பிடுவார்

## பாடல் - 1516

**உன்னத தேவகுமாரனே உம்மைத் துதிக்கிறோம்**
உன்னத தேவகுமாரனே உம்மைத் தொழுகிறோம்

நீர் இரத்தம் சிந்தி மீட்டீரே
புது ஜீவன் எனக்கு தந்தீரே
மரண வாசல்கள் அடைத்தீரே
புது ஆசீர்வாதங்கள் திறந்தீரே
திறந்த வாசலை வைத்தீரே என் தேவனே ...

1. பாவியான என் மீது கிருபை வைத்து
அன்பு கூர்ந்தீர்
நீதிமானாய் மாற்றி என்னை
உமது வீட்டில் சேர்த்தீரே
இடிந்த ஆசீர்வாதங்களெல்லாம்
திரும்ப எனக்கு தந்தீரே – என் தேவனே

2. தாயும் நீர் என் தந்தையும் நீரே
உலகம் தோன்று முன் முன் குறித்தீரே
பேரை சொல்லி அழைத்தவர் நீரே
எனது கருவை கண்டீரே
உமது சார்பாய் வாழ்கிறேன்

## பாடல் - 1517

**துதி துதி துதி கர்த்தரை துதி பாடு 3 தேவனை பாடு**

1. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றும் உள்ளது
அவர் மேல் நம்பிக்கை உள்ள மனுஷன் பாக்கியவான்

2. துதிகளின் மத்தியில் வாசம் செய்பவர்
இரட்சிக்கும் அவர் கரம் குறுகிப் போவதில்லை

3. ஒடுக்கப்பட்டவர்க்கு நியாயம் செய்கின்றார்
கட்டுண்ட மனிதரை விடுதலை ஆக்குகின்றார்

4. இக்கட்டு நாட்களில் மனித உதவி விருதா
கர்த்தரை நம்புவோர்க்கோ குறைவுகள் இல்லையே ஜெயித்தாரே

## பாடல் - 1518

**இயேசு ராஜாவோடு போக துணிந்து விட்டேன்**
பொய்யான வாழ்க்கை விட்டு
மெய்யான வாழ்வை காண
இந்த உலகத்தை மறந்து விட்டு
இயேசுவின் பின் செல்லுவேன்

1. மான் நீரோடையை
வாஞ்சித்து கதறுவது போல்
என் நேசரின் சமூகம்
இருப்பதையே நாடுவேன் (2)

2. மரணமே ஆனாலும்
ஜீவனே யானாலும்
இயேசுவுக்காக நான்
பாடுகள் அனுபவிப்பேன் (2)

3. நல்ல போராட்டத்தை
போராடி முடித்திடவே
அனுதினம் சிலுவைதனை
சுமந்து நான் சென்றிடுவேன் – இயேசு

## பாடல் - 1519

**ஒரு வார்த்தை சொல்லும் தேவா**
சுகமடைவேன் நான்
ஒரு வார்த்தை சொல்லும் தேவா
நலமடைவேன் நான்

வார்த்தையில் வல்லமை
வார்த்தையில் ஜீவன் உண்டறிவேன் நான்

1. மரித்துப் போன லாசருவை
வார்த்தையால் அழைத்தாரே
உலர்ந்த எலும்புகள் ஜீவிக்க துவங்கியதே

2. நூற்றுக்கதிபதி வேலைக்காரன்
வியாதியில் அகப்பட்டான் – நீர்
ஒரு வார்த்தை சொன்னீர் சுகமடைந்தான்

3. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை ஒழிவதில்லை
தலைமுறையாக உள்ள வார்த்தை இது

## பாடல் - 1520

**யூதா கோத்திர சிங்கமும் தாவீதின்**
வேருமானவர் வெற்றி சிறந்தாரே
அழவேண்டாம் இனி அழ வேண்டாம் – 4

1. மரணத்தை ஜெயமாக
விழுங்கியவர் அவர் தானே
பாதாளம் முழுவதுமாய்
ஜெயித்தவரும் அவர் தானே
அவர் சொல்ல ஆகுமே எல்லாமே நடக்குமே
உன் துக்கம் சந்தோஷமாய் மாறிடுமே – 2
நீ அழ வேண்டாம் இனி அழ வேண்டாம் – யூதா

2. பரிசுத்தவான்களின் புகலிடம் நீர் தானே
பரிசுத்தவான்களின் கண்ணீரை துடைப்பீரே
ஆட்டுக்குட்டி இரத்தத்தால்
சாட்சியின் வசனத்தால்
சாத்தானை முற்றிலுமாய்
ஜெயித்திடுவோம் ஜெயித்திடுவோம் – நீ
நீ அழவேண்டாம் இனி அழவேண்டாம் – யூதா

## பாடல் - 1521

**வாங்கப்பா ஆவியானவரே – நீங்க**
வந்தா தான் எங்களுக்கு விடுதலை
ஊற்றிடுமே உம் ஆவியை
ஊற்றிடுமே உம் வல்லமையை (2)

1. தாவீதின் மேலே இறங்கினீரே
கோலியாத்த முறியடித்தீர் (2)
எங்க மீது இறங்கிடுமே
சாத்தானை ஜெயித்திடவே (2)

2. சிம்சோனின் மேலே இறங்கினீரே
பலத்த காரியம் செய்தீரே – ஐயா (2)
எங்க மீது இறங்கிடுமே
போராட்டங்கள் ஜெயித்திடவே (2)

3. எளிமையும் சிறுமையுமானவர்கள்
எங்க மீது இறங்கிடுமே (2)
உம்மையல்லாமல் இவ்வுலகில்
வேறே துணையும் இல்ல நாதா (2)

4. மேல் வீட்டறையிலே இறங்கினீரே
சீஷர்கள் யாவரும் பெலனடைந்தார் (2)
எங்க மீது இறங்கிடுமே
சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்திடவே (2)

## பாடல் - 1522

**நீர் மாத்திரம் இல்லையென்றால்**
மண்ணாய் போயிருப்பேன்
நீர் மாத்திரம் இல்லையென்றால்
பெயரற்றுப் போயிருப்பேன்
என் மீது கிருபை வைத்ததினால்
உயிரோடு இருக்க செய்தீரே
என் மீது கிருபை வைத்ததினால்
உயரத்தில் ஏற செய்தீரே
என் தகப்பனே என் இயேசுவே
உம்மை தொழுகிறோம் உந்தன் நாமத்தை
இம்மைக்கும் மறுமைக்கும் தகப்பனே
என்றென்றும் கைவிடாத நேசரே

1. காணாமல் போன ஆட்டினைப் போல
திசை தெரியாமல் அலைந்தேனே
முட்களிலும் கற்களிலும் காயப்பட்டு போனேனே
என்னையும் தேடி வந்தீரய்யா
ஜீவனை கொடுத்து மீட்டீரைய்யா - என்

2. உடைந்து சிதைந்த பாத்திரம் போல
விரும்புவாரற்று கிடந்தேனே
சிதைந்த என்னையும் தூக்கினீரே
கன்மலை மேலே உயர்த்தினீரே - என்

## பாடல் - 1523

**இறைச்சலின் சத்தம் கேட்குதே (கேட்கணும்)**
இந்தியா தேசம் முழுவதும்
பின்மாரி மழை பொழியணும்
பாரத தேசம் முழுவதும்

சபைகளெல்லாம் ஜெபிக்கணுமே
மகிமைக்குள்ளாய் நிரம்பணுமே
கிருபையின் வாசல் இங்கே அடைபடுதே
நியாயத்தீர்ப்பின் நாளும் நெருங்கிடுதே

1. காலம் இனி செல்லாது
ஒளியுள்ள காலம் முடிகிறதே
கண்ணீரோடு ஜெபித்திடுவோம்
எழுப்புதலைக் கண்டிடுவோம் - கிருபை

2. இருதயம் கிழித்து ஜெபிக்ணுமே
தேசத்தின் சாபமெல்லாம் மாறிடவே
அழுகையோடும் புலம்பலோடும்
பெருமூச்சு விட்டு அழுவோம் - கிருபை

3. பரிசுத்தரின் சித்தமொன்றே
சபைகளில் பூரணமாய் நடக்கணுமே
பரிசுத்தவான்கள் ஒருமனமாய்
தேவ இராஜ்ஜியத்தை எழுப்பணுமே
கண்ணீரோடு நாமும் ஜெபித்திடுவோம் (2)

## பாடல் - 1524

**இந்தியா இந்தியா இந்திய தேசம்**
இயேசுவுக்காய் சொந்தமாக்கிடுவோம்
அறியாமை அகலட்டுமே
உலகன் ஒளியாம்
இயேசுவை ஜனங்கள் அறியட்டுமே
பாரத தேசமே இயேசுவை அறிந்துகொள்

1. திறப்பின் வாசலிலே
ஜெபித்திட செயல்படுவோம்
தேவனின் கோபம் வரு முன்னே
தேசத்தை காத்திடுவோம்

எழும்பிடு வாலிபரே எழும்பிடு கன்னியரே
சுவிசேஷ விதையை விதைத்திட
எழும்பிடு செயல்படு - இந்தியா

2. இமயம் முதல் தொடங்கி குமரி முடிவுவரை
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்
ஜனங்கள் முழங்கட்டுமே
தேசத்தை அசைத்திடவே
இயேசுவை உயர்த்திடுவோம்
இயேசுவின் பணியை செய்திட எழும்பிடு செயல்படு

## பாடல் - 1525

**தேசத்தை சுதந்தரிக்கப் புறப்படு மகனே (ளே)**
சேனையின் கர்த்தர் நம்ம முன்னே நடப்பார்
நிச்சயமா தேசங்களை சுதந்தரிப்போம்

பெராக்காவில் கூடுவோம்
கர்த்தரை உயர்த்துவோம்
(அல்லேலூயா 2) துதி (அல்லேலூயா 2)

1. கட்டாத பட்டணத்தை சுதந்தரிப்போம்
நடாத தோட்டங்களை சுதந்தரிப்போம்
சேனையின் கர்த்தர் நம்ம முன்னே நடப்பார்
சத்துருவ காலாலே மிதித்திடுவோம்

2. யுத்த வீரன் யோசுவாவின் சந்ததியல்லோ
நடந்து போய் தேசங்களை சுதந்தரிப்போம்
அரணான பட்டணத்தை சுதந்தரிப்போம்
சத்துருவ காலாலே மிதித்திடுவோம்

3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியல்லோ
உலகம் முழுவதையும் கலக்கிடுவோம்
பரலோக ராஜ்ஜியம் நம்மிடத்தில்
நிச்சயமாக இந்தியாவை சுதந்தரிப்போம்

### பாடல் - 1526

**பாரமில்லையா பாரமில்லையா தேசம் அழிகின்றதே**
யாரை அனுப்புவேன் யாரை அனுப்புவேன்
என்ற சத்தம் தொனிக்கின்றதே
கிருபை வாசல் அடைகிறதே
நியாயத் தீர்ப்பு நெருங்கிடுதே
இந்தநாளில் மௌனமாயிருந்தால்
அழிவு என்பது நிச்சயமே
சேனையாய் எடும்புவோம்
யுத்தகளத்தில் அழியும் கோடி மாந்தரை மீட்க
இன்றே புறப்படுவோம்
அழியும் கோடி மாந்தரை மீட்க
இன்றே ஜெபித்திடுவோம்
பாரதம் எங்கள் பாரதம்
இயேசுவின் பாரதம் – எங்கள்

1. திறப்பில் நின்று சுவரை அடைக்க
தேவன் தேடும் மனிதன் எங்கே
கண்ணீர் சிந்த ஆளில்லை
கதறி ஜெபிக்க ஆளில்லை
யாரை அனுப்புவேன் (2) என்ற சத்தம்
தொனிக்கின்றதே – சேனை ...

2. அறுவடையின் காலமல்லோ
முடங்கி கிடப்பது நியாயம் தானா
பாதங்கள் வெண்கலமாகும்
இடைவிடாமல் போராடி
வாயில் துதியும் கையில் பட்டயம்
எழுந்து நின்று போரடிப்போம் – சேனை...

### பாடல் - 1527

**என் தலை தண்ணீரும் என் கண்கள்**
கண்ணீருமாய் இருந்தால் நலமாகுமே

1. கெத்சமனே பூங்காவில் என் நேசர் ஜெபித்தாரே
இரத்தத்தின் பெருந் துளிகள் பூமியில் விழுந்ததே - என் தலை

2. கோடான கோடி அழிகின்ற ஜனங்களை
மீட்டிட கண்ணீர் நதி போல் பாயட்டுமே

3. இமயம் முதல் தொடங்கி குமரி வரை
கர்த்தரே தேவனென்று அறிக்கை செய்யணுமே - என் தலை

4. பாரத தேசத்தின் பாவ சாபங்கட்காய்
பெருமூச்சு விட்டு நான் கதறி ஜெபிக்கணும்

## பாடல் - 1528

**ஓயாமல் முத்தம் செய்கின்றேன் இயேசய்யா**
உம் பாதம் அமர்ந்திருந்து
என் துக்கம் மாறும் வரை
உம் பாதம் அமர்ந்திருப்பேன்

1. ஆனந்த கண்ணீரினால் உம் பாதம் கழுவிடுவேன்
ஆறுதல் அடையும்வரை முத்தமிடுவேன்

2. உம்மை போல் நேசிக்க பூமியில் யாருமில்லை
உம்மை போல் பாதுகாக்க பூமியில் யாருமில்லை

3. திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பன் நீர் தானே
கழுகை போல் என்னை சுமந்து காப்பவரே

## பாடல் - 1529

**உந்தன் பாதம் பணிகிறோம்**
சர்வ பூமியின் ஆண்டவரே
சகலமும் செய்ய வல்லவரே
நீர் செய்ய நினைத்தது ஒருபோதும்
தடையே என்றும் படுவதில்லை (2)

1. நீதியின் சூரியன் ஆனவரே
செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் - (2)
தீமையை பாரா சுத்தர் நீரே
பாவத்தை பாரா பரிசுத்தரே - உந்தன்

2. ஒருவரும் சேரா ஒளியினிலே
வாசம் செய்யும் தேவன் நீரே - (2)
கர்த்தரே மகா தேவன் நீரே
எல்லா தேவர்க்கும் ராஜா நீரே - உந்தன்

3. நித்திய மகிமை உடையவரே
நித்தியத்தின் இராஜாவே
நித்திய ஜீவன் அளிப்பவரே
நித்தமும் எங்களை காப்பவரே - உந்தன்

## பாடல் - 1530

**ஆராதனைக்குரியவரே**
தூய ஆவியானவரே
மகிமையின் தேவன் மாறாத நேசர்
நான் நம்பும் கன்மலையே
என்னைத் தேற்றும் தெய்வமே (2)

1. வெள்ளம் போல் சத்துரு வருகின்ற வேளையில்
கொடியை ஏற்றிடுவார்
எனக்காக யுத்தம் செய்வார் (2) - ஆராதனைக்குரியவரே

2. நீதியின் சூரியன் பரிசுத்த தெய்வம்
தீமையை பாராதவர் சுத்த ஜோதி ஐயா (2)

3. நித்தியமானவர் சத்திய தெய்வம்
சாவாமையுடையவரே நிரந்தரமானவரே (2)

## பாடல் - 1531

**அடைக்கலமே என் இயேசு தேவா**
அடிமை நானய்யா … ஆ

1. உம்மை பிரிந்து நான் எங்கே போவேன்
உலகம் மாயை ஐயா ஆ…
நித்திய வாழ்வை காணவே
உம்மிடம் நாடி வந்தேனய்யா

2. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரம்
என் பாவம் மன்னித்தீரே ஏ…ஏ
பாவத்தில் மரித்து நீதிக்கு பிழைக்க
கிருபை செய்தீரே

3. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை ஒழியாது
இருபுறமும் கருக்குள்ள பட்டயம்
நித்திய வழிகாட்டி

4. தகப்பன் பிள்ளைக்கு இரங்குவது போல்
என் மீது இரக்கம் செய்தீர்
தாய் தன் பிள்ளையை மறந்து போனாலும்
மறவாத தெய்வம் நீரே ...

## பாடல் - 1532

**ராஜாதி ராஜாவைப் பாடு! அல்லேலூயா**
தேவாதி தேவனைப் பாடு

1. தூதர்களே துதியுங்கள்
வல்லவரை துதியுங்கள்
சூரிய சந்திரனே துதியுங்கள்
பிரகாச நட்சத்திரமே துதியுங்கள் (2)

2. அக்கினியே துதியுங்கள்
கல்மழையே துதியுங்கள்
வானாதி வானங்களே துதியுங்கள்
கர்த்தரின் நாமத்தை பாடுங்கள் (2)

3. வாலிபரே துதியுங்கள்
கன்னியரே துதியுங்கள்
உலகில் கள்ளவரே துதியுங்கள்
கர்த்தரின் நாமத்தை பாடுங்கள் (2)

4. பரிசுத்தரே துதியுங்கள்
ராஜாக்களே துதியுங்கள்
சபையில் உள்ளவரே துதியுங்கள்
அல்லேலூயா (என்று) பாடுங்கள் (2)

## பாடல் - 1533

**கர்த்தருக்கு புதுப்பாட்டை பாடுங்க**
பூமியின் குடிகள் எல்லாம் கர்த்தரைப் பாடுங்கள்

1. கர்த்தரை பாடி - அவருடைய
நாமத்தை ஸ்தோத்தரித்து
நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பை
சுவிசேஷமாய் அறிவித்துப் பாடுங்கள்

2. ஜாதிகட்குள் அவருடைய
அதிசயங்களை சொல்லுங்கள்
கர்த்தர் பெரியவரும் வல்லவரும்
ஸ்தோத்தரித்து பாடுங்கள்

3. பரிசுத்த அலங்காரத்தோடு
கர்த்தரை துதியுங்கள்
உலகில் உள்ள யாவருமே
கர்த்தருக்கு நடுங்கிடுங்கள்

4. நாட்டிலுள்ள யாவருமே
களிகூர்ந்து பாடிடுவோம்
கர்த்தர் வருகின்றார் வருகின்றார்
நீதியோடு நியாயந்தீர்க்க வருகின்றார்

## பாடல் - 1534

**பரிசுத்த மணவாட்டியே**
மணவாளன் வருகின்றார் (ஆயத்தமா -2)

1. கற்புள்ள கன்னியாய் நீ மாற
சிப்பியை அழித்து முத்தாக்கினார்
எழும்பிடு! எழும்பிடு! உலகமெங்கும் சுடர்விடு

2. நீதிமான் மடிந்து போகிறான்
ஒருவரும் சிந்திப்பாரில்லையே
புத்திமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான்
தீங்கு நாள் வருமுன்னே

3. கர்த்தரின் பெரிய நாள்
தீவிரித்து வருகின்றதே
ஒளி உள்ள காலம் முடிகின்றதே
இராக்காலம் தொடர்கின்றதே

## பாடல் - 1535

**பெலன் வேண்டும் பெலன் வேண்டும்**
ஆவியில் ஆராதிக்க பெலன் வேண்டும்
உம் துதியைப் பாடிடவே
ஆவியால் நிரம்பிட நிரம்பிட நிரம்பிட

1. யாக்கோபைப் போல போராடி
ஜெபிக்க பெலன் வேண்டும்
சாத்தானை எதிர்த்து நிற்க
உன்னதர் பெலன் வேண்டும் வேண்டும்

2. உலகை மறந்து துதித்திடவே
ஆவியின் பெலன் வேண்டும்
சோதனையை சகித்திடவே
இயேசுவே பெலன் வேண்டும் வேண்டும்

3. உம் கரத்தில் நான் களிமண்
ஒவ்வொரு நாளும் வனைந்திடுமே
உம் சித்தம் போல் உருவாக்கும்
உம் பெலத்தால் நிரப்பிடும் நிரப்பிடும்

## பாடல் - 1536

**தாய் உன்னை மறந்தாரோ**
தந்தைஉன்னைத் வெறுத்தாரோ
உலகம் உன்னைத் தள்ளியதோ
உன்னைத் தள்ளாத தெய்வமுண்டு

1. தோள் மீது சுமந்த தாய்கூட
ஒரு நாள் மறந்து போவார்கள் (2)
உலகத்தின் முடிவு பரிந்தம் – இயேசு
உனக்காய் வாழ்பவரே (4) - தாய் உன்னை

2. உன் மேல வைத்த நேசத்தினிமித்தம்
தன்னையே தந்தாரே (2)
கிறிஸ்துவின் அன்பு ஆழம் அகலம்
விவரிக்க முடியாதைய்யா (4) - தாய் உன்னை

3. மரண பரியந்தம் நடத்திடும் தெய்வம்
இயேசு ஒருவரல்லோ (2)
நித்திய ஜீவனை பெற்றிடவே
கிருபை அளிப்பவரே (4) - தாய் உன்னை

4. கடல் அலை போல போராட்டம் வந்தாலும்
கலங்கிடத் தேவையில்லை (2)
கடலுக்குள் பாதையை காட்டிடுவாரே
நடத்திச் சென்றிடுவார் (2)
கானானில் சேர்த்திடுவார் (4) - தாய் உன்னை

## பாடல் - 1537

**என்னதான் ஆனாலென்ன**
என் மீட்பர் உயிரோடுண்டு
தொடர்ந்து பயணம் செய்வேன்
என் துணையாளர் முன் செல்கிறார் (2)

1. காடு மேடு கடந்து சென்றாலும்
கரம் பிடித்தென்னை நடத்துகின்றாரே
ஆறுகளை நான் கடக்கும் போது
மூழ்கி நானும் போவதில்லை
அக்கினியில் நடக்கும் போதும்
எரிந்து நானும் போவதில்லை (3) - என்னதான்

2. மரணமே ஆனாலுமென்ன
ஜீவனே ஆனாலுமென்ன
திரும்பி நானும் பார்க்க மாட்டேன்
ஒருவரும் பறிப்பதில்லை (3) - என்னதான்

3. கிறிஸ்து எனக்கு ஜீவன் தானே
சாவு எனக்கு ஆதாயமே
தேவனின் அன்பிலிருந்து
பிரிப்பவர்கள் யாருமில்லை
உமது பாதம் எனது தஞ்சம்
எனது கோட்டை நீர்தானே (2) - என்னதான்

## பாடல் - 1538

**என்னை நடத்திடும் தேவா**
ஒவ்வொரு நாளும் உம் கரத்தால் (2)

1. சிறகு உடைந்த பறவை போல்
தள்ளாடி தடுமாறி நடக்கின்றேன்
தாங்குமைய்யா உம் வல்லமையால்
தாங்குமைய்யா உம் கிருபையால் (2)

2. உம்மை பிரிந்த நான் எங்கே போவேன்
நித்திய ஜீவன் அளிப்பவரே
ஜீவனுள்ள வார்த்தைகள்
உம்மிடம் தானுண்டு (2)

3. உம்மை பிரிக்கும் பாவங்களை
தனிமையில்ல நீ தனிமையில்ல
தேவன் உன்னோடு இருக்கிறார்
மேற்கொள்ள தேவா பெலன்தாருமே
போராட்டமான உலகிலே போராடி ஜெயம் பெற

## பாடல் - 1539

**என் வாழ்வே நீர்தானய்யா – 2**

1. நீர் மாத்ரம் இல்லையென்றால்
மனிதர்கள் உயிரோடு விழுங்கியிருப்பார்கள்
நிற்பதுமே நிலைப்பதுமே
கிருபையினால் நான் வாழ்கின்றேன்

2. நான்கு திசையிலும் அலைந்து திரிந்தேன்
ஆறுதல் சொல்ல யாருமில்லை
உன்னதமானவர் மறைவினில் வந்தேன்
நிம்மதி நிம்மதி அடைகின்றேன்

3. மாறிப் போகும் உலகினிலே
மாறாத தெய்வம் நீர்தானய்யா
கிருபையின் மேல் கிருபையை தந்து
நிர்மூலமாகாமல் காத்தீரய்யா

## பாடல் - 1540

**தனிமையில் வாடி நின்ற ஆகாரைக் கண்டு**
காண்கின்ற தேவனாக ஆதரித்த தெய்வம் அவர்
தனிமையில் வாடுகின்ற உன்னையும் காண்கிறார்
நிச்சயமாய் உன்னை அவர் கைவிடமாட்டார்

2. தாயின் கருவினில் உருவாவாகும் முன்னே
பெயர் சொல்லி அழைத்தவர்
மறப்பாரோ உன்னை தனிமையில் சிறையினிலே
யோசேப்போடே இருந்தவர் எகிப்தின் அதிபதியாய்
உன்னதத்திலே அமர வைத்தார்

3. பெற்றெடுத்த தாய் தந்தை கைவிட்டு போனாலும்
பரம தகப்பன் உன்னை நிச்சயமாய் ஆதரிப்பார்
உள்ளங்கையிலே உன்னை வரைந்தவர்
ராஜமுடியாக கையிலே வைத்துக் கொள்வார்

## பாடல் - 1541

**தள்ளாடி போகின்றார்**
இயேசு தடுமாறி நடக்கின்றார்
மனுக்குல பாவ மீட்புக்காய் தள்ளாடி
போகின்றார் இயேசு தடுமாறி நடக்கின்றார்

1. புழுவைப் போல துடிக்கின்றார்
சிறகு உடைந்த பறவையைப் போல்
உம் பாவம் நீக்கிட இந்த பாடுகள்
உணர்ந்து கொள் மனமே

2. தவழ்ந்து தவழ்ந்து போகின்றார்
இரத்தத்தின் பெருவெள்ளம் பாய்கின்றதே
அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்த கேடுகள் உனக்காய்தானே
உணர்ந்து கொள் மனமே

## பாடல் - 1542

**எல்லாமே நீர்தானய்யா எனக்கு**
எல்லாமே நீர் தானய்யா
என் துவக்கமும் நீர் என் முடிவும் நீர்
எல்லாமே நீர் தானய்யா

1. இந்த பூமியில் உம்மையல்லாமல்
யாருமே இல்லை நாதர் - 2
பூமியில் வாழந்தாலும்
பரலோகம் நான் சென்றாலும் - 2
நீர் இன்றி யாருமில்லை (3) - எல்லாம்

2. என் ஜீவனை பார்க்கிலும் கிருபை
போதுமே இயேசுநாதா -2
பரிசுத்தமானவரே ஜீவனின் அதிபதியே -2
கிருபையை தாருமைய்யா (3) - எல்லாம்

3. இந்த பூமியும் சொந்தமில்லை
எனக்கு எல்லாம் நீரே - 2
எனக்கென்று எதுவுமில்லை கூடவும் வருவதில்லை - 2
கடைசிவரை நீரே (3) - எல்லாமே

## பாடல் - 1543

**உம்மைக் காணாமல் என் உள்ளம் வாடுதைய்யா**
எந்நாளும் என் ஆத்துமா உம்மையே வாஞ்சிக்குதே

1. மானைக் போல் நீரோடைகளை
வாஞ்சித்து கதறுமாப் போலவே
என் ஆத்துமா என் ஆத்துமா
பரலோக தேவனை வாஞ்சிக்குதே (2)

2. எப்பக்கம் போனாலும் உம் நினைவே
உமது சமூகத்தை வாஞ்சிக்கிறேன்
என் தேவனே என் தேவனே
என் ஆத்துமா உம்மை வாஞ்சிக்குதே

3. வறண்ட நிலம் போல் வாடுகிறேன்
ஜீவதண்ணீரை ஊற்றுமைய்யா
ஜீவநதி பாயட்டுமே
எந்நாளுமே உம்மில் வாழ்ந்திடவே (2)

## பாடல் - 1544

**ஞானம் தேவ ஞானம்**
தேவ பயமே என்றும் ஞானம்
தீமை நம்மை அகன்றோடி
தினம் தேடுவது தேவ ஞானம்

1. கர்த்தரே மகா ஞானமே
ஞானம் யாவருக்கும் தருபவரே
முன் குறித்து அழைத்து வந்து
நீதிமானாய் ஞானம் தருவார்

2. ஞானம் தரும் அழைப்பு
அதை அடைந்தால் உன் வாழ்வில் செழிப்பு
தினம் தேடு அதைப் பாடு
தருவார் மகிமையின் கிரீடம்

3. ஞானத்தை மேன்மைப்படுத்து
அது உன்னை மேன்மையில் நிறுத்தும்
ஞானத்தை தழுவி ஏற்றுக் கொண்டால்
வாழ்வில் கனமும் பெருவாய்

## பாடல் - 1545

**போராட்டம் போராட்டமே போராட்ட ஜீவியமே**
போர் முனையில் தாவீது போல்
போராட்ட ஜீவியமே

1. போராட்ட ஜீவியமே முடிவில்
பரலோக பாக்கியமே
அல்லேலூயா அல்லேலூ ஆனந்த ஆர்ப்பாட்டமே

2. விசுவாச போராட்டமே
நித்ய ஜீவனின் பாக்கியமே
அல்லேலூயா அல்லேலூயா
ஆண்டவரின் அழைப்பாகுமே

3. சுவிசேஷ பேராட்டமே
நிந்தை பாடுகள் அவமானமே
அல்லேலூயா அல்லேலூயா ஆத்தும ஆதாயமே

## பாடல் - 1546

**அந்தி சந்தி மத்தியான வேளையிலே**
என் ஆண்டவர் இயேசுவை
எந்நாளும் தொழுதிடுவோம்

1. தாழ்மையில் என்னை தெரிந்தெடுத்தீர்
தயாபரா உம்மை துதித்திடுவேன்
எளிமையும் சிறுமையும் நிறைந்த என்னை – 2
என்றென்றும் மாறாத கிருபை தந்தீர்

2. பரிசுத்த சந்நிதி முன்னிலையில்
பணிந்தும்மை எந்நாளும் தொழுதிடுவேன்
பரிசுத்த கிருபையும் நிறைந்த உம்மை – 2
சுதியோடும் பாட்டோடும் தொழுதிடுவேன்

3. நொறுங்குண்ட இதயத்தை புறக்கணியீர்
பணிந்த ஆவியில் நிறைத்திடுவீர்
கர்த்தரின் வீட்டினில் நிலைத்திடுவேன் (2)
சாட்சியாய் வாழ்ந்திட அருள்தருவீர்

## பாடல் - 1547

**கல்வாரி நாயகனே உமது கரங்கள் எமை காக்குமே**
தினம் உம்மை போற்றியே அருள் வரம் வேண்டினேன்
தாவீது குல ராஜனே

1. கடல் அலைபோல அமைதி இல்லாமல்
கண்டிடும் என் வாழ்வில் துணையாகினார்
அருள் வேதம் தந்து மறை ஞான ஒளியால்
இருள் நீக்கி என்னோடு உறவாகினார்
காற்றினை அதட்டிய வார்த்தை
இயேசு அமைதியை மீட்டிய நேசம் – தினம்

2. வறண்ட நிலம் போல் சேர்வடைந்தேன்
வற்றாத நதிதேடி தடுமாறினேன்
விழி மூடி விசுவாச ஜெபம் வேண்டினேன்
என் இயேசு ராஜாவின் உளம் நாடினேன்
மழையினை கண்ட பயிர் போல்
இயேசு கிருபை அருள்மாறி பொழிந்தார்

## பாடல் - 1548

**இந்த காலம் பொல்லாதது – உன்னை**
கர்த்தர் அழைக்கிறார் (2)
நீ வாழும் வாழ்க்கைதான்
அது வாடகை வீடு தான்

1. உன்னை இரட்சிக்க உன் கூடவே இருக்கிறேன்
என்று வாக்கு அளித்தவர்
இன்று காத்து வருகிறார்

2. வாலிப நாட்களில் உன் தேவனை தேடிவா
சாத்தான் களத்தில் போரிட
செயல் வீரராய் திகழவா

3. பாவத்தின் சம்பளம் எரிநகரம் தான் திண்ணமே
சத்திய தேவனின் கிருபையோ
நித்திய ஜீவனை அருளுமே

4. காலமோ முடியுதே தேவராஜ்ஜியம் நெருங்குதே
மனம் திரும்பி நீ வாழவே
மன்னன் இயேசு உன்னை அழைக்கிறார்

## பாடல் - 1549

**ஓடி முடிக்கும் ஓட்டமுண்டு**
**உ**ன்னை அழைத்திட்ட இயேசு உண்டு
விசுவாச ஓட்டம் ஓடிடுவாய்
விரைந்து சென்று செயல்படுவாய்
இலக்கை நோக்கி ஓடு 2 பந்தய பரிசு கிடைக்கும்
விடா முயற்சியில் வெற்றி நிச்சயம்
இயேசுவின் அழைப்பு நிச்சயம் (நிச்சயமம்)

1. ஓட்டத்தில் ஒரு போதும் சோர்ந்திடாதே
உன்னை அழைத்தவர் இயேசுவல்லோ
உன்மேல் அவர் அன்பு மாறிடாதே
உன்னத ஓட்டம் ஓடிடுவாய் - ஓடி

2. பந்தயப் பொருளை பெற்றிடவே
இச்சை அடக்கி வாழ்ந்திடுவாய்
பரிசுத்தர் இயேசுவின் சமூகத்திலே
அழிவில்லாத கிரீடம் பெற்றிடுவாய் - ஓடி

## பாடல் - 1550

**ஆசீர்வாத ஒளி வீசுவோம்**
ஆண்டவர் நாமத்தை உயர்த்திடுவோம்
ஆயத்தமுள்ள கன்னிகை போல்
ஆத்தும நேசரை சேர்ந்திடுவோம்

1. என்னையாம் பரிசுத்த ஆவியாலே
என்றென்றும் நிறைந்து ஒளி வீசுவோம்
எந்நாளும் இயேசுவின் பாதம் பணிந்து
என்றென்றும் அவருடன் வாழ்ந்திடுவோம்

2. எக்காள சப்தம் முழங்கிடுமே
எதிர்கொண்டு போக ஆர்ப்பரிப்போம்
மணவாளன் இயேசு வந்திடுவார்
மணவாட்டியாக பறந்திடுவோம்

## பாடல் - 1551

**சந்தோஷ உள்ளங்களே**
சங்கீதம் பாடுங்களே
மேன்மைகள் நமக்கு தந்தவரை
மேன்மை பாராட்டி வாழத்துங்களே

1. கர்த்தருக்குள் பலப்படுங்கள்
அவர் கரத்தினில் அடங்கிடுங்கள்
சத்தியத்தில் வளர்ந்திடுங்கள்
காலத்தோடு கனி கொடுங்கள் – 2

2. ஸ்தோத்திரத்தில் பெருகிடுங்கள்
துதிகளிலே மகிழ்ந்திடுங்கள்
வாக்குகளை பிடித்திடுங்கள்
வரங்களிலே நிறைந்திடுங்கள் – 2

## பாடல் - 1552

**வாழ்க்கை என்னும் ஓடத்திலே இயேசு இருக்கிறார்**
வாழ்ந்து காட்ட விசுவாச பாதை காட்டுவார்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. துன்பம் வரும் வேளையில்
நண்பர் ஆகுவார்
தாங்குகின்ற கரம் கொடுத்து
தடுத்து நிறுத்துவார் - வாழ்க்கை

2. வியாதி வரும் வேளையில்
வைத்தியர் ஆகுவார்
வியாகுலங்கள் மாற்றிடவே
விரைந்து வந்திடுவார் - வாழ்க்கை

3. தாய் போல மார்போடு
அணைத்துக் கொள்ளுவார்
தந்தை போல் தோள் மீது
சுமந்து செல்லுவார் - வாழ்க்கை

## பாடல் - 1553

**ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்**
நேசரை நோக்கிடுவாய்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தூதர்கள் ஏந்திடுவார்

1. வனாந்திரத்தில் மன்னா தந்தார்
மறைவாக காத்து வந்தார் - 2
இருள் நீக்கி வெளிச்சம் தந்தார்
நாளெல்லாம் நிழலானார் - 2

2. அலையலையாய் பகைவர்களும்
எழும்பியே வந்தாலும்
அதிகாரங்கள் உடையவர் தாம்
ஆண்டவர் நடத்தினாரே

3. நன்மையில் உன் வாழ்வை
இதுவரை நடத்தினாரே
ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்
இயேசுவில் நிலைத்திடுவாய்

## பாடல் - 1554

**புது பாடல் பாடிடுவேன்**
என் நேசர் தந்ததால்
அனுதினமும் அவரில் நான்
புதுஜீவன் பெற்றிடுவேன்

1. புதுவாழ்வு மலர்ந்ததால்
எந்தன் பாவம் மறைந்ததே
இயேசு ஜீவன் தேவனே
எந்தன் பாதையின் வெளிச்சமே

2. அதிகாலை நேரமே
புது கிருபையும் உதயமே
எந்தன் இதய தாகமே
உந்தன் கிருபையால் நிறையுமே

## பாடல் - 1555

**பயப்படாதே கலங்கிடாதே**
கண்மணி போல் உன்னை காத்திடுவார்
திகைத்திடாதே அவர் உன் தேவன்
பெலப்படுத்தி உன்னை நடத்திடுவார்

1. யாக்கோபை போல் வனாந்திரமா
யோசேப்பை போல் தனித்த வாழ்வா
வானத்தின் வாசல் திறந்திடுமே
ஆசீர்வாதம் பொழிந்திடுமே

2. பெயர் சொல்லி அழைத்த தேவன்
பிரித்தெடுத்து மீட்ட தேவன்
ரதம் குதிரை ராணுவங்கள்
எதிர் வந்தாலும் எதிர்க்கும் தேவன்

3. ஆயிரமோ பதினாயிரம்
பேர்கள் உன்முன் விழுந்தாலும்
கர்த்தரே உந்தன் அடைக்கலமே
காத்திடுவார் என்றென்றுமே

## பாடல் - 1556

**எண்ணில்லா நன்மைகளை**
எனக்காகச் செய்தவரை
என்றென்றும் பாடுவேன் எப்போதும் பாடுவேன்

1. இயேசு என் வாழ்வில்
என் சொந்தமானார்
எனக்காக யாவும் செய்து முடிப்பார்

2. வருத்தங்கள் துன்பங்கள்
அலை போல வந்தாலும்
கடல் மீதும் நடந்திட்ட கர்த்தர்
என்னை தாங்கினார்

3. தாயின் வயிற்றினில்
பிரித்தென்னை காத்தவர்
காலம் அவர் கரத்தினில்
கனிவோடு நடத்துவார்

### பாடல் - 1557

**முன் செல்லும் இயேசு நம்மோடு இருக்கின்றார்**
முன்னேற்ற பாதையில் எந்நாளும் நடத்திடுவார்

அல்லேலூயா அல்லேலூயா ஆனந்தமே – 4

1. நடந்திடும் வழியை போதிக்க வல்லவராம்
இரட்சிப்பின் பாதையில் நடந்திடும் அற்புதராம்
மனுஷரின் வழிகள் செழுமை காட்டினாலும்
மாறாத இயேசு மகிமையின் வழி திறப்பார்

2. வேதம் காட்டும் வழியில் நடந்திடுவோம்
வேதனை நீங்கி நன்மையை அடைந்திடுவோம்
தடைகளை நீக்கும் கர்த்தர் முன் செல்கிறார்
தளராத விசுவாச பாதையில் முன் நடப்போம்

### பாடல் - 1558

**என் அருமை இயேசுவுக்கு**
என் வாழ்க்கை அர்ப்பணம்
அன்றாடம் என்னை நடத்திடும்
அவர் பாதத்தில் அர்ப்பணம் (2)

1. சேரக் கூடாத ஒளியில்
அவர் வாசம் செய்பவர்
என்னோடு வாசம் செய்திடவே
மகிமை துறந்தவர்

2. துயரங்கள் வந்த நேரம்
என் நண்பராய் ஆனவர்
துன்பங்கள் சூழ்ந்த நாளில்
என் துணையாய் இருப்பவர்

3. கடைசி நாட்கள் வரையில்
கண்மணிப் போல் காப்பவர்
காலங்கள் மாறினாலும்
என்னோடு இருப்பவர்

### பாடல் - 1559

**நீர் என்னை காண்கின்ற தேவனே**
நான் உம்மை காண வாஞ்சையே
தேவாதி தேவனே... துதிக்கு பாத்திரரே
தூய மனதுடன்... மகிழ்ந்து பாடிடுவேன்

1. திக்கற்ற மக்களை கைவிடேன் என்றீர்
தேவா உமக்கு ஸ்தோத்திரம்
என்னோடென்றும் இருப்பதால்
ஸ்தோத்திரமே இயேசு நாதா

2. என்னையே நோக்கி கூப்பிடு என்றீர்
நாதா உமக்கு ஸ்தோத்திரம்
உம் பாதத்தை தேடி வந்தேன்
ஏற்றருளும் இயேசு நாதா

### பாடல் - 1560

**ஆனந்தமாய் ஆராதிப்பேன்**
ஆண்டவரை ஆராதிப்பேன்

1. கர்த்தர் இயேசு என்னை கண்டார் ஆராதனை
கனிவோடு அணைத்துக் கொண்டார் ஆராதனை
கரங்களை பிடித்துக் கொண்டார் ஆராதனை
கண்ணீரை துடைத்துவிட்டார் ஆராதனை

2. ஏழை என்னை ஏற்றுக்கொண்டார் ஆராதனை
ஏக்கங்களை மாற்றி விட்டார் ஆராதனை
ஏறெடுப்பேன் ஜெப தூபம் ஆராதனை
ஏற்றுவேன் துதி கீதம் ஆராதனை

3. பாவங்களை போக்கினாரே ஆராதனை
சாபங்களை மாற்றினாரே ஆராதனை
வியாதிகளை நீக்கினாரே ஆராதனை
சாத்தானை துரத்தினாரே ஆராதனை

## பாடல் - 1561

**கர்த்தாவே நீர் என்றென்றுமாய் உன்னதமானவரே**
(பரிசுத்தரே ஸ்தோத்திரம் 2)

1. கர்த்தாவே உமது செய்கைகளால்
என்னை மகிழ்ச்சியாக்கினீர்
உமது கரத்தின் கிரியைகளாலே
ஆனந்த சத்தமிடுவேன் - கர்த்தாவே

2. காண்டா மிருகத்தின் கொம்பை போல
எந்தன் கொம்பையும் உயர்த்தினீரே
புது எண்ணெயால் என்னை
அபிஷேகித்தீரே புகழ்ந்து பாடிடுவேன் - கர்த்தாவே

3. கர்த்தாவே உமது ஆலயத்தில்
நாட்டப்படுவோர் பாக்கியவான்
முதிர்ந்த வயதிலும் கனிகள் தந்து
கர்த்தரை துதித்திடுவார் - கர்த்தாவே

## பாடல் - 1562

**புது புது பாட்டு பாடுவேன்**
என் இயேசுவின் துதி பாடுவேன்

1. தேவனை போற்றி பாடுவேன்
நம் ராஜாவை போற்றி பாடுவேன்

2. மகிமையாய் வெற்றி சிறந்தார்
மகிழ்வோடு துதி பாடுவேன்

3. கர்த்தாவே உம்மை துதிப்பேன்
கருத்தோடு தேற்றுகிறீர்

4. நன்றியால் துதி பாடுவேன்
செய்த நன்மைகளை பாடுவேன்

5. கிருபைகளை பாடுவேன்
என்றும் கெம்பீரமாய் பாடுவேன்

## பாடல் - 1563

**நானும் என் வீட்டாருமோ**
கர்த்தரையே சேவிப்போம் அல்லேலூயா

1. உளையிலே அமிழும் போது
தூக்கிய தேவனை துதி செய்வேன்
வழியிலே அழிந்திடாமல்
காத்த தேவனை ஆராதிப்பேன்

2. கர்த்தர் எனக்கு நன்மை செய்தார்
களிகூர்ந்து நானும் பாடுவேன்
கிருபையை நம்பிடுவேன்
கிருபையின் தேவனை ஆராதிப்பேன்

3. உன்னத தேவன் ஊழியம் தந்தார்
உண்மையாய் செய்ய பெலனும் தருவார்
உள்ள நாள் முழுதும் உழைப்பேனே
உயிர் தந்த ஜீவ தேவனுக்கே

## பாடல் - 1564

**கர்த்தர் இயேசு என் மேய்ப்பர்**
கருத்தோடு ஆராதிப்பேன்
நன்றியுள்ள பலியோடு
நான் என்றும் ஆராதிப்பேன்

1. அவரே என் மேய்ப்பர்
தன் ஜீவனைத் தந்தவர்
அவராலே ஜீவிக்கின்றேன்
ஆராதனை செய்கிறேன்

2. ஆத்துமாவை தேற்றுகிறார்
ஆறுதல் தருகின்றார்
பரிசுத்த நாமத்திலே
நீதியில் நடத்துகிறார்

3. மரண இருள் வந்தாலும்
பொல்லாப்புக்கும் அஞ்சிடேன்
மன்னன் இயேசு என்னோடு
தேற்றிடும் கோலும் தடியுமே

## பாடல் - 1565

**என் மகனே கலங்கிடாதே**
என்றும் உன்னுடன் இருக்கின்றேன்
திகையாதே நானே உன் தேவன்

1. உன்னை நானே தெரிந்து கொண்டேன்
உன் பெயர் சொல்லி நான் அடைத்துள்ளேன்
எந்தன் நீதி வலக்கரத்தால்
என்றும் தாங்கிடுவேன்

2. சத்துரு உன்னை தொடரும் போது
சற்றும் கலங்கி தவித்திடாதே
பறந்து சென்று ஒதுங்கிடவே
நல் சிறகுகள் தந்திடுவேன்

3. அழிவுக்கு உன்னை விலக்கிடுவேன்
அளவில்லா கிருபையால் நிறைந்திடுவேன்
நன்மையால் திருப்தியாக்கிடுவேன்
நன்றியால் தினமும் பாடிடுவாய்

## பாடல் - 1566

**இயேசு தேவன் வருகிறார்**
ஆகாய மீதில் வருகிறார்

1. மன்னர் ஆனாலும் மா ஏழை ஆனாலும்
மா தேவன் பாதத்திலே வந்து சேருவார்
கர்த்தர் இயேசு இரத்தத்தாலே மீட்கப்பட்டோரே
கலங்கிடாமல் தூதரோடு பறந்து செல்வாரே

2. அநியாயம்மம செய்வோர் இன்னும் செய்திடட்டும்
அசுத்தமுள்ளவர் அதில் நிலைத்திடட்டுமே
நீதி செய்வோர் இன்னும் செய்திடட்டுமே
நீதி பரன் இயேசுவோடு சேர்ந்திடட்டுமே

3. சீக்கிரமாய் வந்திடுவேன் என்று சொன்னாரே
ஜீவனுள்ள தேவன் வாக்கு என்றும் மாறாதே
ஜீவ நீரை இலவசமாய் தந்த இயேசுவே
ஜீவ தேசம் சேர்க்க வேகம் வருகிறார்

4. ஆட்டு குட்டியானவரின் புத்தகத்திலே
எழுதப் பட்டோர் மாத்திரமே அவரை சேவிப்பார்
அஞ்சிடாதே திரு சபையே அஞ்சிடாதே
அன்பர் இயேசு உன்னை மார்பில் அணைத்துக் கொள்வாரே

## பாடல் - 1567

**பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால்**
பாத்திரம் நிரம்பி வழிந்தோடட்டும் (2)

அபிஷேகம் அபிஷேகம் அபிஷேகம் பரலோக அபிஷேகம்
அபிஷேகம் அபிஷேகம் அபிஷேகம் உன்னத அபிஷேகம்

1. அபிஷேகத்தால் நுகங்கள் முறிக்கப்படும்
அபிஷேகத்தால் முகங்கள் பிரகாசிக்கும் - அபிஷேகம்

2. அபிஷேகத்தால் அரணான அடைக்கலமுண்டு
அபிஷேகத்தால் சத்துரு நம்மை நெருக்குவதில்லை - அபிஷேகம்

## பாடல் - 1568

**அக்கினிமயமானவரே நீர் வருக**
அச்சாரமானவரே நீர் வருக
ஜீவ தண்ணீரின் ஊற்றே நீர் வருக
காற்றாய் வீசுபவரே நீர் வருக

எண்ணெய் அபிஷேகம் செய்பவரே நீர் வருக
முத்திரை அடையாளமானவரே நீர் வருக
புறாவை போல் இறங்குபவரே நீர் வருக

ஆவியானவரே நீர் வருக
எங்கள் மீது இறங்கி அருள் தருக
அல்லேலூயா அல்லேலூயா - 6

1. நீர் வரும் பொழுது சுத்திகரிப்பு எனக்கு உண்டாகும்
நீர் வரும் பொழுது சமாதானம் எனக்கு உண்டாகும்

2. நீர் வரும் பொழுது பரிசுத்தம் எனக்கு உண்டாகும்
நீர் வரும் பொழுது பாதுகாப்பு எனக்கு உண்டாகும்

## பாடல் - 1569

**பிதாவின் ஆவியானவரே என்னை**
நடத்தும் ஆவியானவரே

1. உந்தன் பிரசன்னத்திற்காய்
உள்ளம் ஏக்கத்தோடு காத்திருக்கிறேன்
என் தெய்வமே ஆவியானவரே

2. ஆவியானவரே உந்தன் மகிமைதனை
இன்று விளங்கச் செய்திடுமே
ஆவியானவரே - பிதாவின்

3. ஆவியானவரே எங்கள் உள்ளங்களை
ஆளுகை செய்திடுமே - ஆவியானவரே

## பாடல் - 1570

**கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரரே**
உம்மை துதித்துப் பாடுகிறோம்
கிருபை பெருகுதப்பா உங்க
மகிமை இறங்குதப்பா - ஆராதனை (4)

1. இரண்டு மூன்று பேர்கள்
ஒரு மனமாய்த் துதித்தால்
நான் இருப்பேன் என்றீரே
என்துதியில் வாழ்பவரே - ஆராதனை (4)

2. அநேகர் ஸ்தோத்திரத்தால்
உம் கிருபை பெருகுதப்பா
உம் கிருபை பெருகும் போது
உங்க மகிமை விளங்குதப்பா - ஆராதனை (4)

3. உம்மை மகிமைப் படுத்துகிற
எந்த ஸ்தானத்திலும் நீர்
இறங்கி வந்திடுவீர்
எங்களை ஆசீர்வதித்திடுவீர் - ஆராதனை (4)

## பாடல் - 1571

**என் தகப்பனே யெகோவா**
நீங்க காதாரணமானவர் அல்ல (2)
நீங்க உன்னதர், நீங்க பெரியவர்
இரக்கம் நிறைந்தவர் நீரே

1. கேருபீன் சேராபீன்கள்
நடுவில் வாழ்பவர் நீங்க
சாதாரணமானவர் அல்ல
என் தகப்பனே என் தகப்பனே
என் ரட்சகர் இயேசையா
நீங்க சாதாரணமானவர் அல்ல (2)

2. நீங்க நல்லவர் நீங்க பரிசுத்தர்
கிருபை நிறைந்தவர் நீரே (2)
மங்காத ஜோதியே மாறாத நேசரே (2)
நீங்க சாதாரணமானவர் அல்ல
என் ஆவியானவரே
நீங்க சாதாரணமானவர் அல்ல (2)

3. வல்லமை நிறைந்தவர்
மேன்மையானவர்
கூட இருப்பவர் நீரே (2)
என்றென்றும் வாழ்பவர்
என்னை நடத்தும் துணையாளர் (2) - நீங்க

## பாடல் - 1572

**பரிசுத்த ஆவியே இறங்கி வந்தீரே**
ஆவியானவரே எங்கள் ஆவியானவரே -4

1. இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்தும் - 2
ஆவியானவரே - ஆவியானவரே (4)

2. இயேசுவைக் குறித்து (2) சாட்சி கொடுக்கும்
பரிசுத்த ஆவியானவரே - ஆவியானவரே (4)

3. என்னை நிரப்பும் (2) பெலத்தினாலே ஆவியானவரே (4)
பரிசுத்த ஆவியானவரே - ஆவியானவரே (4)

## பாடல் - 1573

**கர்த்தாவே உம்மிடத்தில் ஒன்றைக் கேட்கிறேன்**
அதையே நாடுவேன், வாஞ்சிப்பேன் கர்த்தாவே

1. உமது கூடாரத்தில்
வாழ்நாளெல்லாம் வாழனுமே
உம் பரலோக மகிமையால்
இப்பொழுதே மூடிக்கொள்ளும் (2) - கர்த்தாவே

2. உம்மையே நேசிக்கனும்
ஒவ்வொரு நிமிடமும் (2)
உம் பரலோக மகிமையால்
இப்பொழுதே மூடிக் கொள்ளும் (2) - கர்த்தாவே

3. சுகத் தரும் பிரசன்னத்தை
என் மேல் ஊற்றிடும் துயவரே (2)
உம் பரலோக மகிமையால் இப்பொழுதே
மூடிக்கொள்ளும் (2) - கர்த்தாவே

## பாடல் - 1574

**அன்பு நிறைந்தவரே**
உம் கிருபை குறையவில்லை
என் உடலோடு வாழ்பவரே
என் உயிரோடு கலந்தவரே
உமதன்பு மாறவில்லை
உமதன்பு மறையவில்லை உயிரே, உயிரே

1. உமது கோபம் ஒரு நிமிடம்,
உமது அன்போ தலைமுறைக்கும்
உமதன்பு மாறவில்லை

2. மனதுருக்கம் நிறைந்தவரே - உம்
இரக்கத்திற்கு அளவே இல்லை - உமதன்பு

3. தம் ஒரே பேரான குமாரனைத் தந்து
இவ்வளவாக என்னில் அன்பு கூர்ந்தவரே - உமதன்பு

## பாடல் - 1575

**பிரசன்னரே அணைத்துக் கொள்ளும் பிரசன்னத்தால் - என்**
துதிகளைக் கேட்பவரே இறங்கி வாருமையா

ஆராதனை என் இயேசுவுக்கு,
ஆராதனை என் ராஜனுக்கே (2)

1. சீனாய் மலையிலே
மோசேயோடு பேசினீரே
என்னோடு நீர் பேசுமையா (2) - பிரசன்னரே

2. பத்மு தீவினிலே
யோவானுக்கு வெளிப்பட்டீரே (2)
என் கண்களைத் திறந்தருளும்
உம் முகத்தைப் பார்க்கணுமே - பிரசன்னரே

3. ஓரேப் பர்வதத்தில்
எலியாவைத் தேற்றினீரே
என்னையும் நீர் தேற்றுமையா - பிரசன்னரே

## பாடல் - 1576

**எல்ஷடாய் எல்ஷடாய் நீர் சர்வ வல்லவரே (2)**
உம்மால் எல்லாம் ஆகும் எல்ஷடாய்

1. மனிதனால் ஆகாதது உம்மால் ஆகும்
உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை - உம்

2. அகிலம் படைத்தவர் நீர்தானே
அகிலம் ஆள்பவர் நீர்தானே - உம்மால்

3. உமது சத்தத்தால் பூமி அதிரும்
உமது பிரசன்னத்தால் மலைகள் உருகும் - உம்மால்

## பாடல் - 1577

**ஆவியோடும் உண்மையோடும்**
ஆராதிப்பேன் இயேசுவே (2)

1. உடைந்த உள்ளங்களின்
துதியை நீர் விரும்புகிறீர் (2)

பிதாவே நீர் விரும்பும்
ஆராதனை இதுதான் (2)

2. இன்பத்திலும் துன்பத்திலும்
எங்களைத் துதிக்க வைக்கிறீர் - பிதாவே

3. உமது அன்பு கிருபையாக
என்மேல் இறங்கினதே - பிதாவே

## பாடல் - 1578

**யேகோவா ஷம்மா எங்களோடு**
இருப்பவரே (2) (யெகோவா ஷம்மா 5)

1. நீர் என்னோடு இருப்பதனால்
நான் இதுவரை ஜீவிக்கிறேன் - யெகோவா

2. என் குடும்பத்தை நீர் வேலியடைத்து
தினமும் காப்பவரே - யெகோவா

3. என் சபையில் நீர் வாசம் செய்கிறீர்
என் துதிகளை விரும்புகிறீர் - யெகோவா

## பாடல் - 1579

**நீர் ஒருவரே தெய்வம் யெகோவா**

1. என் தேவைகளை தினமும் சந்திப்பவர்
யெகோவாயீரே

2. வனாந்திரத்தில் நீர் ஊற்றை
உருவாக்கின எல்ரோயீ நீர்தானய்யா

3. என்னை பிரித்தெடுத்து
பரிசுத்தமாக்கின யெகோவா மெக்காதீஸ்

4. வியாதிகளை குணமாக்கும் வல்லவரே
யெகோவா ரஃபா

## பாடல் - 1580

**அப்பா உம்மை ஆராதிப்பேன்**
இயேசு அப்பா உம்மை ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் உம்மை ஆராதிப்பேன்
உம்மை தொட்டு தொட்டு ஆராதிப்பேன்
உம்மை முத்தமிட்டு ஆராதிப்பேன்
உம்மை சுத்தி சுத்தி ஆராதிப்பேன்
உமக்கு நடனமாடி ஆராதிப்பேன்

1. கல்லு மண்ணு இல்லை உண்மை தெய்வம் நீங்க
உம்மைத் தானே நாங்க ஆராதிக்க வந்தோம்

2. என்னைக் காண்கிற தெய்வம் நீங்கதான்
நீங்க இல்லாம வாழ முடியாது

3. சர்வ வல்ல தெய்வமே உம்மைப் போல யாரும்
இங்கு இல்லப்பா எங்கும் இல்லப்பா

## பாடல் - 1581

**ஆராதனைக்கு பாத்திரரே பாத்திரரே 2**
ஆராதனைக்கு நீரே பாத்திரர்

1. கண்ணீரை துடைத்து முத்திரை உடைத்த
யூத சிங்கமே இயேசுவே பாத்திரர் என்றும் நீர்தானே

2. ரத்தம் சிந்தி எங்களை மீட்டீரே
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியே
பாத்திரர் என்றும் நீர்தானே

3. எல்லா ஜாதியும் எல்லா ஜனங்களும்
உம்மையே துதிப்பார்கள்

## பாடல் - 1582

**ஜீவ நதியே ஜீவ நதியே**
ஜீவ தண்ணீருக்காய் ஏங்குகிறோம்
ஜீவ தண்ணீரை ஊற்றிடுமே

1. தாகமாக இருப்பவர்கள்
என்னிடத்தில் வாரும் என்றீரே
தாகத்தோடு ஓடி வந்தோம்
ஜீவ நதிகளை திறந்திடுமே

2. கணுக்கால் அளவு போதாதையா
முழங்கால் அளவும் போதாது
நீச்சல் ஆழத்தில் இழுத்துச் செல்லும்
உமது ஜீவ நதிக்குள்ளே

3. மாம்சமான யாவர் மேலும் உமது
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
ஆவியான உம் ஜீவ நதியை
எங்கள் மேலே ஊற்றிடுமே

## பாடல் - 1583

**யெசுவா துதி உமக்கே**

1. இருதயம் நொறுங்குண்ட எங்களை
எல்லாம் குணமாக்க வந்தவரே

2. சிறைப்பட்ட எங்களை
விடுதலையாக்கின விடுதலை நாயகனே

3. உம் துதியைச் சொல்லி வர உமக்கென்று
எங்களை உருவாக்கி வைத்தவரே

## பாடல் - 1584

### பெலனே என் தெய்வமே என் பெலன் அல்லேலூயா

1. எனது பெலத்தினாலுமல்ல
எனது வல்லமையாலுமல்ல
தேவ ஆவியினாலே ஆகும்

2. என் பெலனாகிய தேவனை
கெம்பீரித்து நாங்கள் பாடுகிறோம்
யாக்கோபின் தேவனை ஆர்ப்பரிப்போம்

3. என் பெலவீனத்தில் உமது பெலன்
பூரணமாய் விளங்கிடுதே
உமது கிருபை போதுமையா

4. தளர்ந்து போன கைகளை
தள்ளாடும் எங்கள் முழங்காலை
உமது பெலத்தால் நிரப்புகிறீர்

## பாடல் - 1585

**சிங்காசனத்தில் வீற்றிருக்கும்**
மாட்சிமை நிறைந்தவரே (உமக்கே 4) ஆராதனை

1. உயர்ந்தவரே சிறந்தவரே
உன்னதரே என் பிதாவே

உமக்கே துதி உமக்கே மகிமை
உமக்கே வல்லமையும்

2. கிருபையே இரக்கமே
என் அன்பே என் நேசரே உமக்கே

3. பரிசுத்தரே பரிசுத்தரே
என் தெய்வமே நீர் பரிசுத்தரே

4. அற்புதங்கள் செய்பவரே
மகத்துவத்தின் வல்லவரே

## பாடல் - 1586

**வாக்கு மாறாதவர் வார்த்தை மாறாதவர்**
சொன்ன வார்த்தை மாறாதவர்...

1. வானம் பூமி மாறிப் போகும்
உந்தன் வார்த்தை மாறாதய்யா
மாறாது மாறாதைய்யா
வார்த்தை மாறாதய்யா

2. இயேசுவே நீர் நேற்றும் இன்றும்
மாறாத உண்மை தெய்வம்
ஒரே தெய்வம் நீரே

3. வார்த்தை அனுப்பின
வார்த்தையான தெய்வம் நீரே
வார்த்தையாய் வந்தீரய்யா
சுகத்தை தந்தீரய்யா

4. எதிரியை நாங்கள் ஜெயிக்கவே
எங்களின் வாயில் துதியை வைத்தீர்
உமக்கு என்றும் நன்றி ஐயா

5. துதிக்க துதிக்க பெலன் வருதே
உம்மை பாட பாட பெலன் வருதே
உம்மை உயர்த்த பெலன் வருமே

## பாடல் - 1587

**உம் நாமமல்லாமல் வேறொரு**
நாமத்தில் ரட்சிப்பு இல்லை ரட்சகரே

1. உம்மை நோக்கி கூப்பிடும் யாவரும்
சுகமடைவார்கள் இயேசுவே

2. உமது நாமம் பரிசுத்த நாமம்
உமது நாமம் மகத்துவ நாமம்

3. எல்லா நாமத்திலும் மேலான நாமம்
உமது நாமம் இயேசுவே

## பாடல் - 1588

**உம்மண்டை ஓடி வந்தேன்**
உம்குரல் கேட்க வந்தேன் தூய ஆவியானவரே

1. நீர் பேசின ஒவ்வொரு வார்த்தை
என் வாழ்க்கையை மாற்றியதே
பேசும் பேசும் என்னோடு இன்று பேசும்

2. நீர் சொன்னதை செய்பவர்
அதை நிறைவேற்றி முடிப்பவர்
பேசும் பேசும் என்னோடு இன்று பேசும்

3. நீர் ஒரு வார்த்தை சொன்னாலே போதும்
என்னை எதிர்த்து வரும் புயல் அடங்கும்
பேசும் பேசும் என்னோடு இன்று பேசும்

4. உம்சித்தம் செய்யனுமே
அதனால் உம் சத்தம் கேட்கணுமே
பேசும் பேசும் என்னோடு இன்று பேசும்

**பாடல் - 1589**

**எப்படிப்பா நன்றி சொல்லுவேன்**
நீர் செய்த நன்மை எண்ணியே
நன்றி ஐயா என் இயேசய்யா

1. தடுமாறும் நீர் தாங்கினீரய்யா
தவித்து நின்ற போது நீர் உதவி செய்தீரே

2. கூப்பிட்ட போது நீர் பதில் தந்தீரே
குறைவுப்பட்ட போதும் நீர் நிறைவாக்கினீர்

3. சோர்ந்து போன நேரம் நீர் பெலன் தந்தீரே
பெலவீன நேரம் நீர் சுகம் தந்தீரே

**பாடல் - 1590**

**வெட்கத்துக்குப் பதிலாக**
ரெண்டத்தனை பலன் கொடுத்து
சாம்பலுக்கு பதிலாக சிங்காரம் தந்தீரய்யா

1. கண்ணீருக்குப் பதிலாக
களிப்பை தந்தீரய்யா
தாழ்மையில் இருந்த என்னை
கன்மலைமேல் வைத்தீரய்யா

2. துக்கத்துக்குப் பதிலாக
சந்தோஷம் தந்தீரய்யா
சத்துருக்கள் முன்பாக
என்னை அபிஷேகம் செய்தீரய்யா

3. புலம்பலுக்கு பதிலாக
புதுப்பாடல் தந்தீரய்யா
கிருபையால் என்னை நிரப்பி
நன்றி சொல்ல வைத்தீரய்யா

### பாடல் - 1591

**நான் ஆராதிக்கும் தேவன் நல்லவர்**
நான் ஆராதிக்கும் தேவன் பரிசுத்தர்
நான் ஆராதிக்கும் தேவன் நீதிபரர்

என்றும் நான் உம்மை துதிப்பேன்
என்றும் நான் உம்மை போற்றுவேன்

1. சேற்றிலிருந்து என்னை எடுத்து
கன்மலைமேல் என்னை உயர்த்தினீரே

2. ஆபத்து நேரத்தில் கூப்பிடுவேன்
அருகில் வந்து உதவி செய்வீர்

3. எதிராய் எழும்பும் ஆயுதங்கள்
வாய்த்திடாமல் விலகிப் போகும்

### பாடல் - 1592

**எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது**

1. நெறிந்த நாணலை முறியாமலும்
மங்கி எரியும் திரியை அணையாமலும்
உன்னை அழைத்தவரே
என்றென்றும் காத்திடுவார்

2. தூங்குகின்ற நீயும் இன்றே எழும்புவாயா
உன்னை அழைத்தவரோ
உபயோகப் படுத்திடுவார்

3. எழும்பு எழும்பு சீயோனே
உன் வல்லமையை தரித்துக் கொள்வாய்
உன்னை அழைத்தவரோ

### பாடல் - 1593

**விடுதலை தருபவரே**
விடுவிக்கும் என் தேவனே
விடுதலை தருபவரே
என் விண்ணப்பம் கேட்பவரே
சுகமாக்குவார் உன் பெலவீனத்தை

1. நெருக்கத்திலே கூப்பிட்டால்
விண்ணப்பம் கேட்பாரே
உன் கட்டுகளை முறித்து
விடுதலை தருபவரே

2. சோர்ந்து போகும் நேரமெல்லாம்
உதவி செய்பவரே
சோதனை ஜெயிப்பதற்கு
பெலனை தந்திடுவார்

3. பாவங்களை மன்னித்து
பரிசுத்த மாக்கிடுவார்
ஒரு தாய் தேற்றுவது போல்
உன் ஆத்துமாவை தேற்றிடுவார்

**பாடல் - 1594**

**ஆசீர்வதிப்பேன் நான் ஆசீர்வதிப்பேன்**
இன்று முதல் உன்னை நான் ஆசீர்வதிப்பேன்

1. உன்னோடு கூட இருந்து
நான் செய்யும் என் காரியம்
அது பயங்கரமாயிருக்கும்

2. உனக்கு முன் சென்று
கோணலை செவ்வையாக்குவேன்
அது அதிசயமாயிருக்கும்

3. சாம்பலுக்கு பதிலாக
சிங்காரம் தந்திடுவேன்
அது சந்தோஷமாயிருக்கும்

4. சத்துருக்கள் முன்பாக
உன்னை மேன்மைப்படுத்திடுவேன்
அது புகழ்ச்சியாக இருக்கும்

**பாடல் - 1595**

**மனுஷன் கதவை அடைத்தால்**
தேவன் கதவை திறப்பார்

1. எரிகோவின் வாசலை திறந்தார்
சத்துருக்கள் கோட்டையை தகர்த்தார்

2. செங்கடலில் வழியைத் திறந்தார்
இருப்பு ரதங்களை முறித்தார்

3. சிறைச்சாலை கதவை திறந்தார்
அடிமையின் விலங்கை தகர்த்தார்

4. கன்மலையின் நீரைக் கொடுத்தார்
ஆத்தும தாகத்தை தீர்த்தார்

## பாடல் - 1596

**ஆபிரகாம் தேவனே ஈசாக்கின் தேவனே**
யாக்கோபின் தேவனே
என்னை ஆசீர்வதியும்

1. மலைகள் விலகினாலும்
பர்வதம் பெயர்ந்தாலும்
உம் கிருபை விலகாதய்யா

2. வனாந்திரம் வயல்வெளியாய்
வெட்டாந்தரை நீரூற்றாய்
மாற்றினதும் நீரல்லவோ

3. இல்லாதவைகளை இருப்பது போலவே
செய்பவர் நீர்தானய்யா

## பாடல் - 1597

**உன்னதத்தின் ஆவியே**
உயிர்ப்பிக்கும் ஆவியே
வல்லமையாக என்னில் இறங்கி வாரும்
அல்லேலூயா

1. எலியாவின் அபிஷேகம்
இரட்டிப்பாய் தந்திடுமே
ஆவியின் வரங்களினால்
என்னை நிரப்பிடுமே

2. அக்கினியின் அபிஷேகம்
என்மேல் இறங்கட்டுமே
தேசத்தின் ஜனங்கள் மேல்
பற்றி எரியட்டுமே

## பாடல் - 1598

**என்னை ஜீவப்பலியாய்**
ஒப்புக் கொடுத்தேனய்யா

ஏற்றுக் கொள்ளும் ஏந்திக் கொள்ளும்
அலங்கரியும் என்னை உபயோகியும்

1. குயவனின் கையில் களிமண்ணான
என்னை உம் கரத்தால் உருவாக்குமே

2. உம்சித்தம் செய்ய என்னை நான்
என்றும் தத்தம் செய்தேனய்யா

3. உம்மைப் போல் மாற என்னையே தந்தேன்
உம் இரத்தத்தால் கழுவிடுமே

## பாடல் - 1599

**வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர்**
வாக்கு மாறா எங்கள் தேவனே

இயேசுவே நீர் நல்லவர்
இயேசுவே நீர் வல்லவர்

1. அதிசயங்கள் செய்பவர் ஜீவனுள்ளவர்
அற்புதங்கள் செய்பவர் வல்லமையுள்ளவர்
எனக்காக யாவையும் செய்து முடிப்பவர்
என்னில் இருப்பவர் என் இயேசு பெரியவர்

2. மரணத்தை ஜெயித்தவர் ஜீவனுள்ளவர்
சாத்தானை வென்றவர் வல்லமையுள்ளவர்
யுத்தத்தில் ஜெயத்தை எனக்குத் தந்தவர்
என்னில் இருப்பவர் என் இயேசு பெரியவர்

3. பாவங்களை மன்னிப்பவர் ஜீவனுள்ளவர்
சாபங்களை நீக்குபவர் வல்லமையுள்ளவர்
தம் ரத்தத்தால் என்னை மீட்டுக் கொண்டவர்
என்னில் இருப்பவர் என் இயேசு பெரியவர்

## பாடல் - 1600

**ஆராதனைக்கு உரியவரே – உம்மை**
ஆராதனை செய்கிறோம்
துதிகளுக்கு பாத்திரரே – உம்மை
ஆராதனை செய்கிறோம்

வாழ்க ராஜா இயேசு ராஜா

1. வானமும் பூமியும் படைத்த தேவன்
சர்வ வல்லவர் நீர்தானைய்யா
எல்லாவற்றிலும் மேலானவரே
மகிமைக்கு நீர் பாத்திரரே

2. கேருபீன் சேராபீன் தூதர்கள் கூட்டம்
வாழ்த்தி வணங்கும் தூயவரே
துதிகள் மத்தியில் வாசம் செய்யும்
துதிகளுக்கு பாத்திரரே

3. சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
பதினாயிரங்களில் சிறந்தவரே
அகிலம் அனைத்தையும் ஆளுகை செய்யும்
ராஜாதி ராஜாவே ஆராதிக்கிறோம்

## பாடல் - 1601

**கர்த்தரை கெம்பீரமாய் பாடி**
என்றென்றும் ஸ்தோத்தரிப்பேன்
அல்லேலூயா – 4

1. நீர் எனக்கு பாராட்டின அன்பு பெரியது
சத்துருவின் கண்ணிகளுக்கு என்றென்றும் தப்புவித்தார்

2. பாவங்களை பஞ்சைப் போல வெண்மையாய் மாற்றினீரே
பரலோகத்தின் நன்மையினால் திருப்தியாக்குகின்றீர்

3. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தீரே
என் கால்களை கன்மலைமேல் உறுதிப்படுத்தினீரே

## பாடல் - 1602

**தேவாதி தேவன் இயேசுவை**
தேவ சபையில் ஆராதிப்போம்

கன்மலையே ஆராதனை
ரட்சகரே ஆராதனை
அடைக்கலமே ஆராதனை

1. பரிசுத்த அலங்காரத் துதியுடனே
தேவனை ஆராதிப்போம்
பணிந்து குனிந்து அவர் நாமத்தை
எந்நாளும் போற்றிடுவோம்

2. மகிழ்ச்சியின் ஆனந்த துதியுடனே
தேவனை ஆராதிப்போம்
முழங்கால் படியிட்டு நம் தேவனை
முழங்கால் துதித்திடுவோம்

3. ஸ்தோத்திர பலிகளை செலுத்தியே
தேவனை ஆராதிப்போம்
கைத்தாளத்தோடு நம் மீட்பரை
எந்நாளும் பாடிடுவோம்

## பாடல் - 1603

**சிலுவையில் சிந்தின இரத்தம்**
உனக்காக எனக்காகத்தான்

1. பாவத்தின் சுமை அகற்றி
கடும் சாபத்தின் நுகம் உடைத்து
தரித்திரரான உன்னை
உயர்த்தியே வைத்திடுவார்

2. உன் வியாதியை குணமாக்கி
சுகமான வாழ்வைக் கொடுத்து
நித்திய ஜீவன் தந்து - உன்னை
நீதிமானாய் மாற்றிடுவார்

## பாடல் - 1604

**ராஜாதி ராஜாவே கர்த்தாதி கர்த்தாவே**
எப்போதும் இருப்பவரே
என்றென்றும் வாழ்பவரே
ஆமென் அல்லேலூயா

1. வழுவாது என்னை காத்திடுவார்
வலக்கரத்தால் என்னை ஏந்திடுவார்
பாதம் கல்லில் இடறாமலே
பாதுகாத்து நடத்திடுவார்



அட்டவணை

2. மரண இருளின் பள்ளத்தாக்கிலே
நடந்தாலும் நான் பயப்பட மாட்டேன்
என்னோடு கூட இருக்கின்றவர்
நடத்திடும் தேவனவர்

### பாடல் - 1605

**உந்தன் கிருபையால் மூடுகிறீர்**
உந்தன் மகிமையாய் நிரப்புகிறீர்

1. உந்தன் கிருபைகள் மாறவில்லை
உந்தன் மகிமையோ மறையவில்லை
உந்தன் செட்டையின் நிழல்தனிலே
நான் என்னை மறைத்துக் கொள்வேன்.

2. கடும் சோதனை வந்தாலும்
பல நெருக்கங்கள் சூழ்ந்தாலும்
நான் எதற்குமே அஞ்சிடேனே
உந்தன் மார்பில் சாய்ந்து கொள்வேன்

3. நண்பர்கள் விலகும் போதும்
சொந்தங்கள் மறைந்த போதும்
உந்தன் பாதத்தில் அமர்ந்து கொள்வேன்
உந்தன் முகம் மட்டும் பார்த்திடுவேன்

### பாடல் - 1606

**அற்புதர் இயேசு அற்புதர்**
அண்டினோர் யாவருக்கும் அற்புதர்

1. குருடரின் கண்களைத் திறந்தவர்
மனக்குறைகளை நீக்குவார் அற்புதர்
மரித்தோரை எழுப்பினார் அற்புதர்
மரணத்தை ஜெயித்தவர் அற்புதர்

2. கடலையும் காற்றையும் அதட்டினார்
உன் வியாதிகள் யாவையும் நீக்குவார்
ஜெபத்தை கேட்பவர் அற்புதர்
ஜெயத்தை தருபவர் அற்புதர்

## பாடல் - 1607

**யேகோவா தேவன் உன்னோடு இருப்பார்**
கலங்காதே நீ பயப்படாதே
பெரிய பர்வதம் நீ எம்மாத்திரம்
தேவ பிள்ளை முன் சம பூமியாவாய்
எரிகோ மதில்கள் எதிரே நின்றாலும்
துதியின் சத்தத்தால் தகர்ந்தே போகும்

1. கர்த்தர் செய்ய நினைத்தவைகள்
ஒருபோதும் இனி தடைபடாது
சாத்தானின் சதிகள் எதிரே நின்றாலும்
தேவ பலத்தால் முறிந்தே போகும்

2. யோர்தான் வெள்ளம் புரண்டு வந்தாலும்
செங்கடல் உன்னை வழி மறித்தாலும்
சேனை அதிபன் உனக்கு முன் நடப்பார்
சேதமின்றி உன்னை காத்திடுவார்

## பாடல் - 1608

**உயிருள்ள நாளெல்லாம்**
உம்மையே பாடுவேன்

என் உயிரே என் உறவே
நீர்தானே என் இயேசய்யா

1. கண்ணீரை துடைத்து கரத்தைப் பிடித்து
கலங்காதே என்று சொல்லி
என்னை அழைத்தீர்

2. வியாதியை நீக்கி சுகத்தை தந்து
பெலனைக் கொடுத்தீர்
நான் உம்மைப் பாடுவேன்

3. வரங்களைக் கொடுத்து கனிகளால் நிரப்பி
பயனுள்ள பாத்திரமாய் எனை மாற்றினீர்

## பாடல் - 1609

**என் இயேசு பெரியவரே**
அற்புதங்கள் செய்பவரே அல்லேலூயா

1. காற்றையும் காணமாட்டாய்
மழையையும் பார்க்க மாட்டாய்
வாய்க்கால்கள் நிரப்பப்படும்

2. இல்லாதவைகளையும்
இருப்பது போல் செய்பவரே
எல்லாமே செய்து முடிப்பார்

3. கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுவடை செய்வாய்
நிறைவான பலன் தருவார் – உனக்கு

4. தடைகளை உடைத்தெரிந்து
கோணலை செவ்வையாக்கி
வாசல்கள் திறக்கச் செய்வார்

## பாடல் - 1610

**என் உயிரானவர் இயேசு**
என் ஜீவன் என் பெலன்
என் கோட்டை என் அரண்

1. சேற்றினின்று தூக்கினாரே
கன்மலை மேல் நிறுத்தினாரே

2. கருவில் என்னை தெரிந்து கொண்டார்
தமக்கென்று பிரித்துக் கொண்டார்

3. உள்ளங் கையில் வரைந்தாரே
செட்டையின் கீழ் மறைத்தாரே

## பாடல் - 1611

**கல்வாரி அன்பை எண்ணும் போது**
கண்ணீர் ஆறாய் ஓடுதய்யா
விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
சுத்தமானேன் – நான் சுத்தமானேன்

1. கல்மனம் அங்கே உடையுதய்யா
கண்ணீர் கவலை நீங்குதய்யா

2. மாராவின் கசப்பை மாற்றினீரே
ஜீவ தண்ணீரால் தாகத்தை தீர்த்தீரய்யா

3. உம் கரம் என்னை தாங்கிடுதே
உம் வார்த்தை என்னை தேற்றிடுதே

## பாடல் - 1612

**நான் அனாதை என்று அழுதேன்**
நீ அனாதை இல்லை
எந்தன் சொந்தம் என்றீர் ஐயா

1. காணாமல் போன ஆடாய் அலைந்தேன்
கர்த்தாவே உந்தன் கண்கள் கண்டது
மார்போடு அணைத்தீர்
மந்தையில் சேர்த்தீர்
மகிமை செலுத்திடுவேன்

2. மாராவின் தண்ணீர் கொண்டவாழ்க்கை
அது மதுரமாய் மாறாதென்று மலைத்தேன்
மாராவின் தண்ணீரை மதுரமாய் மாற்றினீர்
மகிமை செலுத்திடுவேன்

3. கண்ணீரின் பள்ளத்தாக்கில் கிடந்தேன்
நான் கதறி முறையிட்டு அழுதேன்
கருத்தாய் விசாரித்தீர் கண்ணீரை மாற்றினீர்
மகிமை செலுத்திடுவேன்

## பாடல் - 1613

**இயேசு சாமி நல்லவரு**
எல்லோருக்கும் இரட்சகரு
பாவம் யாவும் மன்னித்தாரு
நம்ம சாபங்கள் எல்லாம் தள்ளிட்டாரு
நல்லவரு நல்லவரு நன்மைகளை செய்பவரு
வல்லவரு வல்லவரு வார்த்தையிலே வல்லவரு
அற்புதரு அற்புதரு அதிசயம் செய்பவரு

1. கட்டப்பட்ட மனிதர்களின்
கட்டவிழ்க்கும் கர்த்தரவர்
காயப்பட்ட பிள்ளைகளின்
காயங்களை ஆற்றுபவர்
கல்வாரி ரத்தத்தை ஊற்றிடுவார்
நம்ம கவலை கண்ணீர் எல்லாம்
மாற்றிடுவார்

2. சேனைகளின் கர்த்தர் பெரியவராம்
சேதமின்றி நம்மை காப்பவராம்
சிலுவையில் சாத்தானை ஜெயித்தவராம்
மரணத்தை ஜெயமாக்கி எழுந்தவராம்
யுத்தத்திலே இயேசு வல்லவராம்
எல்லா ஜனத்துக்கும் ரட்சகராம்

## பாடல் - 1614

**ஸ்வர்ண ராகங்கள் ஸ்வரம் பாடவே**
வெள்ளி மணி ஓசைகள் ஜதி போடவே
ராகங்கள் தாளங்கள் கைதாளங்கள்
தந்து உம்மை தினந்தோறும் நான் பாடுவேன்

1. பன்னிரண்டு வருடம் பாடுகள் பட்டவளாய்
பற்பல இடங்களை ஓடி அலைந்து திரிகிறாள்
பாவேந்தர் இயேசுவின் ஆடையை தொட்டாள்
அந்த க்ஷணமே சுகமடைந்தாள்

2. கானா ஊரிலே கல்யாண வீட்டிலே
திராட்சை ரசமில்லையே
இயேசுவை தேடியே வந்தனரே
ஜாடிகளில் தண்ணீரை நிரப்பச் சொன்னார்
தண்ணீரை ரசமாக்கினார்

## பாடல் - 1615

**மன்னிக்க தெரிந்தவரே**
மனதுருக்கம் நிறைந்தவரே
கண்ணுக்கு இமை போல் எம்மை
காக்கின்ற ரட்சகரே
வழிபார்த்து நிற்கின்றோம்
வாருங்கள் இயேசய்யா
விழி நோகப் பண்ணாமல்
விரைந்தே நீர் வாருமய்யா

இயேசு ராஜா என்னோடு பேசு ராஜா
பேசும் தெய்வம் நீர்தானே இயேசு ராஜா

1. கல்வாரி சிலுவையிலே
கர்த்தாவே ரத்தம் சிந்தி
கருணையோடு எம்மை காக்க
சிலுவையில் ஜீவன் தந்தீர்
வேண்டும் வரம் கேட்கின்றோம்
மீண்டும் வர பார்க்கின்றோம்
ஆண்டவரே வாரும் ஐயா
அன்புமுகம் காட்டும் ஐயா -இயேசு

2. கூப்பிட்ட குரல் கேட்டு குறை தீர்க்க வருபவரே
கொடுமையான வியாதியையும்
குணமாக்கும் வைத்தியரே
கண்ணீரின் பாதையிலே
கரம்பிடித்து நடப்பவரே
கண்ணோக்கிப் பாருமய்யா
கர்த்தாவே வாருமய்யா -இயேசு

## பாடல் - 1616

**கொஞ்சம் கிளி பேசுமே உந்தன் அன்பை**
கூவும் கிளி பாடுமே கல்வாரி அன்பை
எத்தனையோ மீறுதல் இயேசுவே ஆறுதல்

விந்தை கிறிஸ்துவே உம்மைக் காண
கண்கள் தேடுதே
தந்தையே உம் அன்பைப் பாட
எந்தன் நெஞ்சம் ஏங்குதே

1. வேடன் விரித்த வலையில் சிக்கி
பரிதவிக்கும் கலைமானைப் போல்
சாத்தானின் பிடியிலிருந்து
என்னை மீட்ட ரட்சகனே - விந்தை

2. சிறகொடிந்த பறவை போல
நம்பிக்கையை இழந்த போது
என்னைக் கரம் பிடித்தவரே
என்றும் தாங்கி நிற்பவரே - விந்தை

3. நாதியில்லை என்று சொல்லி
பாதியில் கைவிட்டது சொந்தம்
ஆதியில் உம் அநாதி சிநேகம்
அதுவே என் நித்திய பந்தம்
ஆண்டவரே நீர் என் சொந்தம் - விந்தை

## பாடல் - 1617

**தேசமே தேசமே பயப்படாதே**
உன் தேவனில் களிகூர்ந்து மகிழ்ந்திடுவாய்
கர்த்தர் உந்தன் வாழ்விலே
பெரிய காரியம் செய்திடுவாரே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. தீராத வியாதிகளை தீர்த்து வைப்பாரே
எதிர்பாராத ஆபத்திலும் தப்புவிப்பவரே
பாவங்கள் சாபங்கள் போக்கிடுவாரே
பெரிதான இரட்சிப்பை தந்திடுவாரே

2. சந்தோஷம் இல்லையென்று
சோர்ந்து விடாதே
சத்துருவின் தொல்லைகளால்
துவண்டு விடாதே
சாத்தானை கண்டு நீயும் பயந்து விடாதே
சத்திய தேவன் உண்டு மறந்து விடாதே

3. அப்பா பிதா என்று அழைத்திடுவாயே
உம் அருகினிலே அவர் வருவார்
மகிழ்ந்திடுவாயே
என்ன வேண்டும் என்று
இயேசு உன்னை கேட்பாரே
எதுவும் பேச முடியாமல்
திகைத்து நிற்பாயே

## பாடல் - 1618

**அன்பர் இயேசுவின் அன்பு**
அது அளவிட முடியாது
கடற்கரை மணலை கணக்கிடலாம்
அவர் அன்பிற்கீடேது

1. சிலுவை நாயகன் சிந்திய ரத்தம்
அன்பாய் வழிகிறது
சிறுமைப்பட்ட ஜனங்களை
மீட்க ரத்தம் போகின்றது

2. பாவம் பெருகின இடத்தில்
தேவகிருபை வெளிப்பட்டதே
மீறுதல் போக்க சிலுவையிலே
ரத்த வெள்ளம் பாய்ந்திடுதே

3. ஆணிகள் அடித்து தொடங்கிய போதும்
தனக்காய் அழவில்லை
கள்ளர்கள் நடுவில் கதறிடும் போதும்
உனக்காய் அழுகின்றார் - இயேசு

## பாடல் - 1619

**எங்கள் இயேசு வல்லவரு**
இஸ்ரவேலை ஆள்பவரு
நல்லவரு இயேசு நல்லவரு
அவர் வல்லவரு சர்வ வல்லவரு

1. தீயின் நடுவே நடந்தாலும்
எரிந்து போகமாட்டோமே
கடல் அலை மேல் நடந்தாலும்
மூழ்கிப் போக மாட்டோமே
எங்கள் தேவன் வல்லவரு
என்றும் எங்களை காப்பவரு

2. சிங்கத்தின் குகையில் போட்டாலும்
தீங்கு ஒன்றும் வராது
விஷப் பாம்பை மிதித்தாலும்
வாய் திறந்து கடிக்காது
எங்கள் தேவன் வல்லவரு
என்றும் எங்களை காப்பவரு

## பாடல் - 1620

**ஓசன்னா ஓசன்னா தாவிதின் குமாரனுக்கு ஓசன்னா**
ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா

இயேசுவுக்கு ஓசன்னா

1. கழுதை குட்டியாம் மரியின் மீது பவனி வரும்
கர்த்தாதி கர்த்தனாம் இயேசு
ராஜனுக்கு ஓசன்னா
ஓசன்னா பாடுங்கள் இயேசுவை தேடுங்கள்
பாசம் வைத்தவர் பவனி வருகிறார்

2. துன்பங்கள் வரலாம்
துயரங்கள் தரலாம்
தொல்லைகள் கஷ்டங்கள்
சூழ்ந்து உன்னை நெருக்கிடலாம்
தோல்விகள் வந்தாலும்
ஜெயமாய் வந்தாலும்
துவண்டு போகாதே தேவன் தேற்றுவார்

3. தூற்றுவோர் மத்தியில்
என்னை தேற்ற எவருமில்லை
என்று நீ திகையாதே
உன்னை தேற்றும் கிறிஸ்து உண்டு
நம்பி வா இயேசுவை நன்மைகள் பெறுவாய்
நல்ல சமயமே நாடிவா இயேசுவை

## பாடல் - 1621

**ஒரு தந்தையைப் போல நம்மை தூக்கி சுமப்பவர்**
நம்மை தாயினும் மேலாய் நம்மில் அன்பு வைத்தவர்
யார்? யார்? யார்? தெரியுமா அவர் யார்? யார்? யார்? தெரியுமா
பெத்தலையில் பிறந்தவராம்
சத்திரத்தில் கிடந்தவராம்
பாவிகளை இரட்சிக்க வந்தவராம்

யார்? யார்? யார்? தெரியுமா உங்களுக்கு
யார்? யார்? யார்? தெரியுமா

1. உண்மையான உன்னில் அன்பு வைத்தவர் அவரே
உலக தோற்ற முதல் தெரிந்து கொண்டவர் அவரே
உனக்காகப் பாடுகளை ஏற்றுக் கொண்டாரே – 2
உன்னை மீட்க தன்னுயிரை தந்து விட்டாரே
அவர்தான் அவர்தான் அவர்தான் இயேசு – ஒரு தந்தையைப்

2. மரித்து விட்டார் இயேசு என்று கவலைப்படாதே
மீண்டும் உயிர்த்து விட்டார் நீ வணங்கும் தெய்வம்
என்பதை நீ மறந்து விடாதே நீ வணங்கும் தெய்வம்
கல்லும் மண்ணுமில்லையே நீ அழைத்தால்
ஓடி வந்து பேசும் தெய்வம் அவர்தான் (3) – ஒரு தந்தையைப்

## பாடல் - 1622

**தேவனால் கூடாதது ஒன்றுமில்லையே**
என் இயேசுவால் ஆகாததில்லையே
என் கர்த்தர் நல்லவர் என் தேவன் வல்லவர்
என் இயேசு பெரியவர் அவர் மிகவும் உயர்ந்தவர்
வல்லமையுடையவர் என்றும் மகிமை நிறைந்தவர்

1. வற்றாத செங்கடலை பிளந்தவர் அவரே
தம் ஜனத்தை காக்க கடலில் வழி திறந்தவர் அவரே
வாழ வழி இல்லாதோரின் வறுமை நீக்கும் தெய்வமாம்
இல்லையென்று ஏங்குவோர்க்கு அள்ளித் தரும் வள்ளலாம்

2. விழி இழந்த குருடருக்கும் பார்வையைத் தந்தார்
பாவ இருளினாலே இருப்பவர்க்கும் ஒளியினை தந்தார்
வியாதியில் வாடுவோர்க்கு விடுதலை தரும் தேவனாம்
வெற்றி வேந்தன் இயேசுவாலே கூடாதது இல்லையாம்

3. உலர்ந்தது போன எலும்புகளில் உயிர்வாழச் செய்தார்
பாவ உணர்வின்றி கிடப்பவரை உயிர்பெறச் செய்தார்
பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தும் தேவனாம்
பக்தர்களின் பாதையில் தினம் அற்புதங்கள் செய்யும் தேவனாம்

## பாடல் - 1623

**பரலோக நதியே பரிசுத்த நதியே**
இறங்கி வரவேண்டும்

1. ஏதேனிலிருந்து நான்கு திசைக்கும்
நதிகள் பாயச் செய்தீரே
என்னிலிருந்து தேசமெங்கும்
நதிகள் பாயச் செய்யும்

2. எழுப்புதல் காண எங்கள் உள்ளம்
ஏங்கி தவிக்குதய்யா
பாலைவனத்தை சோலையாக்க
என்னை தந்தேனையா

3. மன்றாட்டு ஜெபத்தால் மலைகள் நொறுங்கி
அக்கினி இறங்க வேண்டும்
பின் வாங்கிப் போன மக்கள் எல்லாம்
உம்மிடம் திரும்ப வேண்டும்



அட்டவணை

## பாடல் - 1624

**மாறவே ஆசைப்படுகிறேன் - என்னை**
மாற்றி விடும் அருமை நேசரே

1. என் சிந்தை மாறணும்
என் செயல்கள் மாறணும்
என் பேச்சு மாறணும்
என் பெருமை மாறணும்

2. என் நடை மாறணும்
என் உடை மாறணும்
என் உள்ளம் மாறணும்
உம்மை போலவே ஐயா

3. என் ஜெபம் மாறணும்
என் துதி மாறணும்
சுயம் சாகணும்
ஐயா உந்தன் மேன்மைக்கே

4. நான் உம்மை பார்க்கனும்
நான் உம்மை ரசிக்கனும்
நான் உம்மோடு இருக்கனும்
நான் உமக்காய் வாழனும்

## பாடல் - 1625

**உம் அருகிலே இருக்கனும்**
அப்பா உம்மைத் துதிக்கனும்

1. காற்று வந்தாலும் கடல் அலை வந்தாலும்
கஷ்டம் வந்தாலும் கர்த்தர் இருக்கிறீர்
நஷ்டம் வந்தாலும் கர்த்தர் இருக்கின்றீர்

2. துன்பம் வந்தாலும் மனத் துயரம் வந்தாலும்
தூக்கி எடுக்கிறீர் என்னை
தோளில் சுமக்கிறீர்

3. இயேசு இருக்கிறீர் என்னில் இயேசு வாழ்கிறீர்
எனக்கு பயமில்லை
என்றும் பயமில்லை

4. உலக நேசமே என்னை விட்டு
ஒழிந்து பொகட்டும்
உந்தன் அன்பு ஒன்றே என்னில்
வளர்ந்து பெருகட்டும்

## பாடல் - 1626

**மகிமை மேலே மகிமையடையனும்**
மன்னவரே உம்மை காணணும் - ஓசன்னா - 4

1. பரவி பாயும் நதியாய் மாறனும் - நாம்
பாசத்தோடு எங்கும் செல்லணும் - நாம்

2. தனித்து வாசம் பண்ணணும் - நாம்
துதித்து துயரம் மறக்கணும் - நாம்

3. ஆவியில் என்றும் நிரப்பணும் - நாம்
அப்பாவோடு பேசிப் பழகணும் - நாம்

4. மனக் கண்கள் இன்று திறக்கணும் - நம்
மானைப் போல துள்ளி குதிக்கணும் - நாம்

## பாடல் - 1627

**தேவையெல்லாம் சந்திக்கும்**
தெய்வம் யெகோவாயீரே
வேண்டிக் கொள்வதற்கும்
நான் நினைப்பதற்கும்
அதிகமாய் கிரியை செய்ய வல்லவரே
என் கண்கள் அதைப் பார்க்க வில்லை
காதுகள் அதை கேட்கவில்லை
இதயத்தில் தோன்றவும் இல்லை
நீர் எனக்காய் செய்கிறதை - 2
யேகோவா தெய்வமே
தேவையெல்லாம் தருபவரே
யெகோவாயீரே எனக்காய் யாவும் செய்பவரே

## பாடல் - 1628

**சந்தோஷம் சந்தோஷமே**
நான் பாடுவேன் சங்கீதமே

1. இயேசுவை நம்பினால் சந்தோஷமே
இயேசுவை ஏற்றுக் கொண்டால் சந்தோஷமே
மனந்திரும்பு உனக்கு சந்தோஷமே
மறு பிறப்படைந்தால் சந்தோஷமே

2. பரிசுத்த ஆவியால் சந்தோஷமே
பலபாஷை பேசுவதால் சந்தோஷமே
வேதத்தை வாசிப்பதும் சந்தோஷமே
வாக்குகளை பெறுவதும் சந்தோஷமே

3. ஆலயம் செல்வதால் சந்தோஷமே
ஆவியில் ஆராதிக்க சந்தோஷமே
சாட்சி சொல்வதும் சந்தோஷமே
சாட்சியாய் வாழ்வதும் சந்தோஷமே

4. ஊக்கமுடன் ஜெபிப்பதும் சந்தோஷமே
ஊழியம் செய்வதும் சந்தோஷமே
காணிக்கை கொடுப்பதும் சந்தோஷமே
கர்த்தருக்கு காத்திருப்பதும் சந்தோஷமே

## பாடல் - 1629

**சரணம் சரணம் சரணம் பிதாவே**
சரணம் சரணம் சரணம் இயேசுவே
சரணம் சரணம் சரணம் ஆவியே
சரணம் சரணம் சரணம் திரியேக தேவனே

1. உந்தன் நாமத்துக்கு சரணம்
உந்தன் பாதத்துக்கு சரணம்
உந்தன் வசனத்துக்கு சரணம்
உந்தன் வல்லமைக்கு சரணம்

2. உந்தன் சமூகத்திற்கு சரணம்
உந்தன் ஆளுகைக்கு சரணம்
உந்தன் ஆலோசனைக்கு சரணம்
உந்தன் அற்புதத்துக்கு சரணம்

3. உந்தன் இரக்கத்துக்கு சரணம்
உந்தன் இரத்தத்துக்கு சரணம்
வந்து போன இயேசு சரணம்
வரப் போகும் ராஜா சரணம்

## பாடல் - 1630

**சாரோனின் ரோஜா இயேசு ராஜா**
சங்கீதம் பாடி நீயும் துடுப்பை போடு லேசா
சோர்ந்து நீயும் போகாதே
சோதனையில் ஆளாதே

சொந்தம் என்று உன்னைத் தேடி வந்தார்
சொந்தம் இரத்தம் சிந்தி உன்னை மீட்டார்

1. யாப்போக்கு நதியை கடந்து
யாக்கோபு வென்று விட்டான்
இத்தரை யாத்திரையில் வென்றிட நீயும் வா
எத்தன் என்று உன்னைத் தள்ள மாட்டார்
சுத்தனாக உன்னை ஏற்றுக் கொள்வார்

2. செங்கடலை பிளந்து விட்டார்
சேனைகளை அழித்து விட்டார்
கானானின் யாத்திரைக்கு எழுந்து நீயும் வா
கன்மலையில் தண்ணீரை நீ குடிப்பாய்
கற்பலகை கட்டளையில் நடப்பாய்

3. அக்கரைக்கு சென்றிடுவோம்
ஆசீர்வாதம் பெற்றிடுவோம்
முத்திரை ஆவி பெற்ற புத்திரராயிருப்போம்
பரலோகில் உம்மை அன்றி தஞ்சமில்லை
பூவுலகில் உம்மை அன்றி விருப்பமில்லை

## பாடல் - 1631

**இயேசு நல்லவர் என் இயேசு நல்லவர்**
இயேசு நல்லவர் நம் இயேசு வல்லவர்

1. சாத்தான் உன்னை தாக்கும் போது
தாங்கிக் கொள்ளுவார்
கேடகமாயிருப்பார் இயேசு
கேடகமாயிருப்பார்

2. வியாதி உன்னை விரட்டும் போது
சுகம் தருவார் பெலன் தருவார்
இயேசு பெலன் தருவார்

3. சோதனைகள் உன்னை சூழும் போது
ஜெயம் தருவார் மகிமைப்படுவார்
இயேசு மகிமைப்படுவார்

## பாடல் - 1632

**ஆராதனை ஆராதனை ஆவியில் ஆராதனை**

1. தெய்வத்தின் ஆராதனை
தேவனுக்கு ஆராதனை
தேன் போன்ற ஆராதனை
தெவிட்டாத ஆராதனை

2. பரலோக ஆராதனை
பரிசுத்த ஆராதனை
புத்தியுள்ள ஆராதனை
பக்தியுடன் ஆராதனை

3. சந்தோஷ ஆராதனை
சங்கீத ஆராதனை
சத்திய ஆராதனை
இது நித்திய ஆராதனை

## பாடல் - 1633

**கோர சிலுவை தோளில் சுமந்து**
போகிறார் இயேசு அங்கே
கண்டால் கல் கூட கனிந்து உருகும்
உருகாதோ உம் மனமே

1. தேவமைந்தன் தூய முகத்தில்
காரி உமிழ்ந்திட்டானே
கோர கரத்தால் பாவி ஒருவன்
ஓங்கி அறைந்திட்டானே
ஆதியில் உன்பால்தான் கொண்ட அன்பால்
ஆண்டவர் ஏற்றுக் கொண்டார்
தம் மந்தையில் சேர்த்துக் கொண்டார்

2. பாரில் பாவம் தீர்ப்பதற்காய்
தாழ்மையாகினார்
மகிமை யாவும்
துறந்தவராய் மனிதனாகினார்
உன்னை கண்டார் அன்பு கொண்டார்
நன்றி மறந்தாயே குருசில் அறைந்தாயே

## பாடல் - 1634

**உம்மை துதிக்கிறோம் இயேசுவே**
உந்தன் நாமத்தை துதிக்கிறோம் இயேசுவே
கர்த்தா உம்மை துதிக்கிறோம்
கருத்துடன் பாடி துதிக்கிறோம்

1. ஆதர வற்றவர்க்கு இயேசுவே
ஆறுதலளிப்பார் இயேசுவே
ஆபத்து நேரத்தில் இயேசுவே
அற்புதம் செய்வீர் இயேசுவே

2. என்னை மீட்டிட இயேசுவே
இந்த பாரினில் உதித்தீர் இயேசுவே
மரித்து உயிர்த்தீர் இயேசுவே
என்னை மீட்க மீண்டும் வருவீர் இயேசுவே

3. முடிவு பரிந்தம் இயேசுவே
எந்தனோடிருப்பேன் என்றீர் இயேசுவே
கைவிடாமல் இயேசுவே
கண்மணி போல் காப்பீர் இயேசுவே

## பாடல் - 1635

**வெற்றியுண்டு ஜெயமுண்டு**
இயேசுவின் நாமத்தினால்
யுத்தம் செய்ய புறப்படு
கர்த்தர் இயேசு முன் செல்லுவாரே

1. சர்வாயுதம் தரிப்போமே
சாத்தானை எதிர்கொள்ளுவோமே
வசனமாம் வாழேந்துவோமே
வஞ்சகனை வீழ்த்திடுவோமே

2. பெலன் தரும் கிறிஸ்துவினாலே
பெலன் கொண்டு எழுப்பிடுவோமே
பெலவானை வீழ்த்திடுவோமே
எளியோரை மீட்டிடுவோமே

3. இதயம் நொறுங்கிட ஜெபிப்போம்
இயேசுவே கர்த்தரென்று உரைப்போம்
இந்திய எங்கும் செல்வோம்
இயேசுவுக்காய் சுதந்தரிப்போம்

## பாடல் - 1636

**ஏழையின் ஜெபத்தை கேட்கிற தேவன்**
ஏழை என் ஜெபம் கேளுமே
என் விண்ணப்பங்கள் என் வேண்டுதல்கள்
உம் சமூகத்தில் சேர்வதாக

1. ஆகாரின் கண்ணீரைக் கண்டு
அழுகையை போக்கிய தேவன்
அழுதிடும் எந்தன் வேதனை நீங்க
அருள் மழை பொழிந்திடுமே

2. தானியேல் கூப்பிட்ட போது
தட்டாமல் பதில் அளித்தீரே
தம்மை நோக்கி கூப்பிடும் எனக்கு
தப்பாமல் பதில் தாருமே

3. இரங்குமென்ற பர்தியூ மேக்கு
இரங்கியே கண்களை திறந்தீர்
தீராத வியாதியால் வருந்திடும் எனக்கு
தீவிரமாய் இரங்கும்

## பாடல் - 1637

**கைவிட மாட்டர் இயேசு கைவிட மாட்டார்**
உன்னை மீட்ட நேசர் இயேசு கைவிட மாட்டார்

1. தாய் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறப்பதில்லை
தந்தை உன்னை வெறுத்தாலும்
அவர் உன்னை வெறுப்பதில்லை

2. நீ அவரை விட்டுவிட்டால்
அவர் உன்னை கைவிடுவார்
நீ அவரை தேடினால்
அவர் உனக்கு தென்படுவார்

3. ஆகாயத்து பட்சிகளை
ஆதரித்து போஷிப்பவர்
அனுதினமும் உங்களையே
அரவணைத்து காத்திடுவார்

## பாடல் - 1638

**துதியே துதியே துதித்திடுவேன்**
தூயாதி தூயவரே உம்மை
துதிக்கு பாத்திரர் நீரல்லோ
துதித்து புகழ்ந்து பாடிடுவேன்

1. வானாதி வானங்களும் கொள்ளா
வல்லமையுள்ள தேவன் நீரே
மகிமை நிறைந்த சொரூபியே
மகா தேவனும் நீரல்லோ

2. அற்புதம் செய்பவர் நீரல்லோ
அதிசயமானவர் நீரல்லோ
சேனைகளின் கர்த்தர் நீரல்லோ
ஜெயம் தரும் கிறிஸ்துவும் நீரல்லோ

3. ஏழைக்கு பெலன் நீரல்லோ
எளியோர்க்கு தேவன் நீரல்லோ
திக்கற்றவர்க்கு துணை நீரே
அனாதைகளுக்கு அடைக்கலமே

## பாடல் - 1639

**நான் உன்னை பெலப்படுத்தி**
சகாயம் பண்ணிடுவேன்
என் நீதியின் வலக்கரத்தால்
நித்தம் உன்னை தாங்கிடுவேன்

1. பெலவீனத்தில் என் பெலன்
பூரணமாய் விளங்கிடுமே
என் வல்லமை உன்னில் தங்குமே
என் கிருபை உனக்குப் போதுமே

2. பெலத்தினால் இடைகட்டி காப்பேன்
வழிகளை செவ்வை பண்ணுவேன்
மான் கால்கள் போல் ஆக்கிடுவேன்
உயர் ஸ்தலத்தினில் நிறுத்திடுவேன்

3. உனக்கு நான் செவி கொடுத்து
உதவி புரிந்திடுவேன்
இந்த பூமியை சீர்ப்படுத்துவேன்
அதை சுதந்திரமாய் தருவேன்

## பாடல் - 1640

**கோடி கோடி ஸ்தோத்திரம்**
கோடா கோடி ஸ்தோத்திரம்
ஆடிப்பாடி ஸ்தோத்திரம்
ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்



அட்டவணை

1. நல்லவர் இயேசுவே ஸ்தோத்திரம்
நன்மைகள் செய்ததாலே ஸ்தோத்திரம்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
வழுவாமல் காத்ததாலே ஸ்தோத்திரம்

2. அற்புதர் இயேசுவே ஸ்தோத்திரம்
அதிசயங்கள் செய்ததாலே ஸ்தோத்திரம்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
அழைத்தவர் இயேசுவே ஸ்தோத்திரம்
ஆத்துமாக்கள் தந்ததாலே ஸ்தோத்திரம்

### பாடல் - 1641

**தேவ சபையிலே ஆராதனை**
தேவாதி தேவனுக்கு ஆராதனை
தேவ மக்களின் ஆராதனை
தேவ கீதம் பாடி ஆராதனை

1. பரிசுத்தவான்களின் ஆராதனை
தேவாதி தேவனுக்கு ஆராதனை
தேவ மக்களின் ஆராதனை
தேவ கீதம் பாடி ஆராதனை

2. வல்லவர் பேசிடும் ஆராதனை
வல்லமை இறங்கிடும் ஆராதனை
வரங்களை வெளிப்படுத்தும் ஆராதனை
வருகையை உணர்த்தும் ஆராதனை

### பாடல் - 1642

**நீதிமான்களோ சிங்கத்தைப் போல**
தைரியமாய் இருக்கிறார்கள்

1. ஒன்றுக்கும் கவலைப்படாமல்
ஒன்றுக்கும் கலங்காமல்
ஒன்றுக்கும் பயப்படாமல்
ஒன்றுக்கும் பதறாமல்

2. ஒன்றுக்கும் தடுமாறாமல்
ஒன்றுக்கும் திகைக்காமல்
ஒன்றுக்கும் சோர்ந்து போகாமல்
ஒன்றுக்கும் கண்ணீர் விடாமல்

## பாடல் - 1643

**தூக்கி எடுத்து என்னை அழைத்த**
தூயரை நான் பாடுவேன்

1. உலகத்தின் பாதையிலே
நான் ஓடினேன் ஓட்டமாக
சிலுவை சுமந்தவர் என்னை
அழைத்ததும் திரும்பி வந்தேன்

2. உலகத்தை சார்ந்திருந்தேன்
என் உறவை நம்பியிருந்தேன்
அவர் குரல் கேட்டவுடன்
நான் எல்லாமே மறந்து விட்டேன்

3. இதுவரை காத்து வந்தீர்
என்னை இனி மேலும் நடத்திடுவீர்
செழிப்பாய் மாற்றிடுவார்
நான் களிகூர்ந்து துதித்திடுவேன்

## பாடல் - 1644

**ஜெபித்திட ஜெபித்திட ஜெகத்தினில் ஜெயம் வருமே**
துதித்திட துதித்திட துரிதமாய் பதில் வருமே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

1. தாவீது ஜெபித்தார் ஜெயம் வந்தது
சாலமோன் ஜெபித்தார் ஞானம் வந்தது
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென்
நாமும் ஜெபித்தால் அப்படியே ஆகும்

2. யாக்கோபு ஜெபித்தார் ஆசீரைப் பெற்றார்
யாபேசு ஜெபித்தார் கனமடைந்தார்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென்
நாமும் ஜெபித்தால் அப்படியே நடக்கும்

## பாடல் - 1645

**உயிருள்ள தேவன் உன்னோடு இருக்க**
கலங்காதே மகனே கலங்காதே மகளே

1. கண்ணீரெல்லாம் அவர் துடைத்திடுவார்
உன் கவலையெல்லாம் அவர் போக்கிடுவார்
கண்மணி போல் இயேசு காத்திடுவார்
காலமெல்லாம் உன்னை நடத்திடுவார்

2. கஷ்டமெல்லாம் அவர் மாற்றிடுவார்
உன் கடன்களெல்லாம் அவர் தீர்த்திடுவார்
கருத்தாய் இயேசு விசாரிக்கிறார்
கனிவோடு உன்னை பார்த்திடுவார்

3. ஜெபங்களெல்லாம் இயேசு கேட்டிடுவார்
ஜெயமே உனக்கு தந்திடுவார்
வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்வார்
வேகமாய் நீயும் முன்னேறுவாய்

## பாடல் - 1646

**ஆவியானவரே அன்பின் ஆவியானவரே**
ஆவியானவரே வல்ல ஆவியானவரே

1. ஜலத்தின் மேல் அசைவாடிடுமே ஆவியானவரே
இப்போ ஜனத்தின் மேல் அசைவாடிடுமே

2. மேல் வீட்டில் ஊற்றப்பட்ட ஆவியானவரே
இப்போ எங்கள் மேலும் வந்து இறங்கிடுமே

3. மாம்சமான யாவர் மேலும் ஆவியானவரே
இப்போ மகிமையாய் வந்து இறங்கிடுமே

## பாடல் - 1647

**ஒரு கூவுற கோழி உன் பாவம் போக்குமா**
ஒரு ஆட்டுக்கடா உன் பாவம் போக்குமா
பாவம் போக்கும் ஒரே வழி இயேசு தானம்மா
சாபம் போக்க ஒரே வழி இயேசு தானய்யா

1. பொங்கல் வைப்பதினால் உன் பாவம் போகுமா
பூஜை செய்வதினால் உன் பாவம் போகுமா

2. முடி கொடுப்பதினால் உன் பாவம் போகுமா
மொட்டை அடிப்பதினால் உன் பாவம் போகுமா
தீ மிதிப்பதினால் உன் பாவம் போகுமா – ஐயா

3. இயேசுவை நம்பி வந்தாலே
இயேசுவை நம்பி வாழ்ந்தாலே
மெய்யான சமாதானமாம்
இயேசு வேணுமா அம்மா ஓடி வாங்கம்மா
இயேசு வேணுமா ஐயா தேடி வாங்கய்யா
பரலோகத்துக்கு ஒரே வழி இயேசுதானய்யா
பரலோகத்துக்கு ஒரே வழி இயேசுதானம்மா

## பாடல் - 1648

**ஒவ்வொரு நாளும் தேடுவேன்**
ஒவ்வொரு நாளும் பாடுவேன்
ஒவ்வொன்றாய் சொல்லி சொல்லி துதிப்பேன்
ஒப்பற்ற இயேசுவை ஓயாமல் துதிப்பேன்

1. கண்ணின் மணிபோல காத்தார்
எண்ணில்லாத நன்மைகள் பல செய்தார்
கழுகைப் போல தூக்கி சுமந்தார்
கழுகைப் போல வால வயதாக்கினார்

2. அன்றன்று ஆகாரம் தந்தார்
என்றென்றும் வழுவாது காப்பார்
குருவிக்கு கூடு ஒன்று தந்தவர்
குடியிருக்க வீடு எனக்கு தந்தார்

3. சோதனை வேளையில் தூக்கினார்
சோர்ந்திடும் நேரத்தில் தாங்கினார்
சிங்கம் போல தைரியம் தந்தார்
காண்டா மிருக பெலனை எனக்கு தந்தார்

## பாடல் - 1649

**ஏசு தெய்வம் இதய தெய்வம் இயேசு இருக்கிறார்**
ஏன் கலங்குகிறாய் கதறுகிறாய்
என் மகனே மகளே ஏன் சோர்ந்து போகிறாய்

1. ஜெபங்களை கேட்கும் தேவனல்லவா
அவர் ஜெயத்தை கொடுக்கும் தேவனல்லவா
(உன்) தோல்விகளெல்லாம் ஜெயமாய் மாறும்
நிந்தைகளெல்லாம் புகழாய் மாறும்

2. வியாதியை நீக்கும் ஜீவனல்லவா
அவர் வறுமையை போக்கும் வள்ளல் அல்லவா
(உன்) பெலவீனமெல்லாம் பெலமாய் மாறும்
சுகவீனமெல்லாம் சுகமாய் மாறும்

3. வாக்குமாறா வல்லவர் அல்லவா
அவர் சொன்னதை செய்யும் தெய்வம் அல்லவா
இழந்ததை யெல்லாம் திரும்பத் தருவார்
இரட்டிப்பாய் தருவார் இன்றே தருவார்

## பாடல் - 1650

**சர்வ சிருஷ்டிகரே உமக்கு**
சகல துதிகன மகிமை யாவும் செலுத்தி
சாஷ்டாங்கம் செய்கிறோம்

1. வானம் பூமி யாவும் படைத்த தேவா
உம்மை வணங்கி தொழுகிறோம்

2. காற்றும் கடலும் பணி மழை தந்த தேவா
உம்மை கருத்தாய் புகழுகிறோம்

3. மனிதன் மிருகம் யாவும் படைத்த இறைவா
உம்மை மாறவாமல் ஆராதிக்கிறோம்

4. உணவு உடையும் இடமும் தருகின்ற தேவா
உம்மை உணர்ந்து துதிக்கிறோம்

## பாடல் - 1651

**கலங்காதே கண்ணீர் விடாதே**
கர்த்தர் உன்னை காண்கின்றாரே

1. கவலை பட்டு கண்ணீர் விட்டு கலங்காதே
காலமெல்லாம் கர்த்தர் உன்னை நடத்துவாரே

2. வியாதிகளை கண்டு நீ வருந்தாதே
வீரமுள்ள இயேசு சுகம் தருவாரே

3. பாவங்களை கண்டு நீ பதறாதே
பாசமுள்ள இயேசு மன்னிப்பாரே

4. சாபங்களை கண்டு நீ சஞ்சலப் படாதே
சர்வ வல்ல தேவன் அதை மாற்றுவாரே

## பாடல் - 1652

**நீ செய்யும் காரியம் யாவிலும்**
அவர் உன்னோடு இருக்கிறார்
இருக்கிறார் இயேசு இருக்கிறார்
இருக்கிறார் உன்னோடு இருக்கிறார்

1. நீ போகும் போது உன்னோடு இருக்கிறார்
நீ வரும் போது உன்னோடு இருக்கிறார்
உன் வேலையிலும் உன்னோடு இருக்கிறார்
உன் வெளியிலும் உன்னோடு இருக்கிறார்

2. நீ ஜெபிக்கும் போது உன்னோடு இருக்கிறார்
நீ துதிக்கும் போது உன்னோடு இருக்கிறார்
நீ பேசும் போது உன்னோடு இருக்கிறார்
நீ பாடும் போது உன்னோடு இருக்கிறார்

3. உன் வீட்டிலும் உன்னோடு இருக்கிறார்
உன் சபையிலும் உன்னோடு இருக்கிறார்
அவர் இன்றைக்கும் உன்னோடு இருக்கிறார்
அவர் என்றைக்கும் உன்னோடு இருக்கிறார்

## பாடல் - 1653

**வல்லமை உள்ளவர்க்கு ஸ்தோத்திரம்**
வாக்குமாறா தேவனுக்கு ஸ்தோத்திரம்
நித்திய தேவனுக்கு ஸ்தோத்திரம்
சத்தியர் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்

1. ஒன்றுக்கும் உதவாத என்னை
உம் சேவையை செய்ய தெரிந்தீரே
நான் உமக்கு அடிமை ஐயா
என்னை பயன்படுத்தும்

2. மானிடனை மீட்க வந்த மன்னவா
நீர் எங்களோடு வாசம் செய்யும் மன்னவா
நாங்க உந்தன் பிள்ளைகள் ஐயா
எந்நாளும் காத்து வழி நடத்தும்

3. பரிசுத்த மில்லாத எங்களை
பரிசுத்தமாக்கிடும் ஐயா
பாவத்தை மறைப்பவன் வாழ்வடையான்
அதை அறிக்கை செய்து
விட்டுவிட உதவி செய்யும்

## பாடல் - 1654

**கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்**
கர்த்தர் என்பது அவர் நாமம்

1. சேனைகளின் கர்த்தர் என்னும் நாமத்திலே
தாவீது ஜெயித்தான் கோலியாத்தை
நாமும் ஜெபிப்போம் ஜெயிப்போம்

2. யோகாவாயீரே என்னும் நாமத்தில்
ஆபிரகாம் தேவையை பெற்றுக் கொண்டான்
நாமும் தருவோம் பெறுவோம்

3. யோகோவாநிசி என்னும் நாமத்தில்
மோசே ஜெயத்தை பெற்றுக் கொண்டான்
நாமும் போராடுவோம் வெற்றி பெறுவோம்

4. யோகோவா ஷாலோம் என்னும் நாமத்தில்
கிதியோன் தரிசனம் பெற்றுக் கொண்டான்
நாமும் ஜெபிப்போம் ஜெயிப்போம்

5. இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தில்
பேதுரு எழுப்பினான் சப்பாணியை
நாமும் எழுப்புவோம் எழும்புவோம்

## பாடல் - 1655

**கர்த்தர் இயேசு ஆண்டவர் கர்த்தர் இயேசு ரட்சகர்**
கர்த்தர் இயேசு பெரியவர் கர்த்தர் இயேசு நல்லவர்

1. இயேசு கண்ணீரை துடைத்திடுவார்
கவலையை மாற்றிடுவார் நம்பி
வருவோரை வாழ வைத்திடுவார்
வாழ்வளிக்கும் இயேசு

2. அன்பர் இயேசு என்னோடு
எந்நாளும் இருக்கையில்
எந்த சூழ்நிலைகள் என்னை ஆழ்த்தினாலும்
எதற்கும் அஞ்சமாட்டேன்

3. காடு மலைகள் ஆனாலும்
கர்த்தரின் பின்னே நடப்பேன்
ஜீவ வார்த்தையை பிடித்து என்றுமே
ஜீவ பாதை அடைவேன்

## பாடல் - 1656

**உன் வாழ்க்கை படகில் இயேசு உண்டு**
என் நெஞ்சே பயம் வேண்டாம்
சோர்ந்து போகாமல் தளர்ந்து போகாமல்
பெலங்கொண்டு திடனாயிரு

1. பிதாவிடம் நின்று பரிந்து பேசும்
இயேசு உன் துணையே
வாக்குக் கடங்காத பெருமூச்சோடு
உனக்காக பரிந்து பேசுகின்றார்

2. இதோ நான் புதிதான காரியத்தை
இன்றே உன் வாழ்வில் செய்வேன்
கர்த்தர் மேல் நம்பிக்கை இருக்கும்படி
இன்றைக்கே அவைகளை தெரிவிப்பாரே
வாக்குக் கடங்காத பெருமூச்சோடு
வாக்குக் கடங்காத பெருமூச்சோடு
உனக்காக பரிந்து பேசுகின்றார்

3. இதோ நான் புதிதான காரியத்தை
இன்றே உன் வாழ்வில் செய்வேன்
கர்த்தர் மேல் நம்பிக்கை இருக்கும்படி
இன்றைக்கே அவைகளை தெரிவிப்பாரே

4. ஆகாரின் கண்ணீரை கண்ட தேவன்
உன் கண்ணீரையும் காண்பார்
கர்த்தர் மேல் பாரத்தை வைத்திடுவாய்
பதில் உண்டு நிச்சயம் சோர்ந்திடாதே

## பாடல் - 1657

**தேவனை துதிக்கும் புதுப்பாட்டை எந்தன்**
நாவினில் தினங் கொடுத்தார்
நான் அதைக் கண்டு பயந்து நடுங்கி
கர்த்தரை நிதம் நம்பினேன்

1. பயங்கர குழியிலும் உளையான சேற்றிலும்
என்னை தூக்கி எடுத்து
எந்தன் கால்களை கன்மலையின் மேல்
நிறுத்தி உறுதிப் படுத்தினாரே



அட்டவணை

2. கர்த்தரை தன் நம்பிக்கையாக
வைக்கும் மனிதன் தானே
அவனே பாக்கியவான் அவனே பாக்கியவான்
வேதம் உரைத்துள்ளதே

3. கர்த்தரோ என்மேல் நினைவாய் இருந்து
எந்தன் துணையானார்
அவரது கிருபையும் அவரது உண்மையும்
என்னைக் காக்கின்றதே

## பாடல் - 1658

**சீயோன் குமாரத்தியே**
கெம்பீரித்துப் பாடுங்கள்
இஸ்ரவேலரே ஆர்ப்பரியுங்கள்
நிந்தையை நீக்கியதால்

1. இஸ்ரவேலே உன் நடுவில் நடுவில்
பெரியவராய் இருக்கின்றாரே
பயப்பட வேண்டாம் திகைத்திட வேண்டாம்
கெம்பீரித்துப் பாடுங்கள்

2. துதிகளின் மத்தியிலே வாசம் செய்பவரே
துதிக்கும் போதே வெற்றி உண்டு
கெம்பீரித்துப் பாடுங்கள்

3. மரியாமைப் போல் பாடிடுங்கள்
வெற்றியின் ஜெய வேந்தரை
யுத்தத்திலே வல்லவரை
கெம்பீரித்துப் பாடுங்கள்

## பாடல் - 1659

**உயர்த்துவார் உயர்த்துவார் உன்னத தேவன் உயர்த்துவார்**
உயர்த்துவார் நிறுத்துவார்
கன்மலையின் மேல் நிறுத்துவார்
(ஆமென் ஆமென்) அல்லேலூயா

1. யாக்கோபின் தேவன் உந்தன் துணையே
பயப்படவேண்டாம் கலங்கிட வேண்டாம்
வாக்கு மாறா நல் தேவன்வர்
வெற்றியைத் தந்து உயர்த்துவார் – ஆமென்

2. கர்த்தர் தந்த ஜீவ வார்த்தை
ஆச்சரியமாய் நடத்திடுமே
வல்ல ஜீவ வாக்குகள்
ஆயிரம் மடங்கு உயர்த்திடுமே - ஆமென்

3. கர்த்தரை தேடும் யாவரும்
ஒருநாளும் வெட்கம் அடைவதில்லை
கர்த்தரைப் புகழ்ந்து ஆர்ப்பரிப்போம்
நம்பும் தேவன் உயர்த்திடுவார் - ஆமென்

### பாடல் - 1660

**என் கிருபை உனக்குப் போதும் – 2**
உன் பெலவீனத்தில் என் பெலனோ
பூரணமாய் விளங்கும்

1. பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினால்
எல்லாவற்றையும் நீ செய்திடுவாய்
உந்தன் கால்களை மான் காலாய்
கன்மலையின் மேல் நிறுத்துவார்

2. கழுகுக்குச் சமமாய் உன் வயதை
திரும்பவும் வால வயதாக்குவார்
தேவ வல்லமை உந்தன் மேல் உண்டு
உன்னத பெலனால் நிறைந்திடுவாய்

3. கர்த்தருக்கு காத்திருக்கும் தேவ ஜனங்கள்
கழுகைப் போல பறந்து விரைந்திடுவார்
நடந்தாலும் ஓடினாலுமே
ஒருநாளும் இளைத்துப் போவதில்லை

### பாடல் - 1661

**அழைத்த தேவன் உண்மையுள்ளவர்**
நடத்திடுவார் கலங்கிடாதே சோர்ந்திடாதே
அழைத்த தேவன் உண்மையுள்ளவர்

1. பெயர் சொல்லி அழைத்தவர் அவரே
தரிசனம் தந்தவர் அவரே
கரம் பற்றி நடத்தும் தேவன் அவரே
வாக்கு மாறா நல் தேவன் அவரே



அட்டவணை

2. உனக்குள் இருப்பவர் பெரியவரே
உலகில் உள்ளவனைக் காட்டிலும்
பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் நீ செய்திடுவாய்

3. தூற்றும் மாந்தரின் நடுவினிலே
தைரியமாய் நீ நின்றிடுவாய்
உன் சொந்த கண்கள் காணும் படியாய்
பெரிய காரியம் செய்திடுவார்

## பாடல் - 1662

**என் இயேசு பெரியவரே**
என்னை ஒருநாளும் கைவிடமாட்டார்

1. கடல் அலைகள் போலே
என்ன துன்பங்கள் வந்தாலுமே
நம்புவேன் என் இயேசுவை
எந்தன் வாழ்நாளெல்லாம் நம்புவேன்

2. வியாதி வருத்தம் வறுமையோ
என்னை நெருக்கி ஆழ்த்தினாலும்
அஞ்சிடேன் நான் என்றென்றுமே
அன்பர் இயேசு என்னோடு உண்டு

3. தாய் தகப்பனும் மறந்தாலும்
உற்றார் உறவினர் வெறுத்தாலும்
சோர்ந்திடேன் நான் என்றென்றுமே
அரவணைக்கும் என் இயேசு உண்டு

## பாடல் - 1663

**ஆயுததாரி, நான் ஆயுததாரி**
ராஜாவின் பக்கம் நிற்கும் ஆயுததாரி – 2

1. நிலையங்கி தரித்திருப்பார் – முகம்
சூரியனைப் போலிருக்கும் (அவர்)
சத்தம் பெருவெள்ள இரைச்சல் போல
அவர் பூலோகம்ம அரசாளுவார்



அட்டவணை

2. இராமுழுவதும் விழித்திருப்பேன்
கண்ணுறங்க மறந்திடுவேன் (நான்)
என் காவலிலே தரித்திருப்பேன்
என் கண்களையும் ஏறெடுப்பேன்

3. எக்காளம் ஊதிடுவேன் – நாளும்
எச்சரித்து செயல்படுவேன்
என்றும் சேனைகளை வென்றிடுவேன்
என் தேசத்தை சுதந்தரிப்பேன்

### பாடல் - 1664

**வான்புறாவே வான்புறாவே**
என் மேல் இறங்கிடும்
கபடமில்லா மனிதனாக
என்னை மாற்றிடும்

1. வானங்கள் திறந்திருக்க
வல்லமையாய் வந்தவரே
தேவ ஆவியின் பெலன் என்னில் இறங்கி
தேற்றி ஆற்றி பலப்படுத்தும்

2. அபிஷேக வல்லமையால்
நுகமெல்லாம் முறிந்திடுமே
அபிஷேக நாதன் நீரல்லவோ
ஆட்கொண்டு நிரப்பிடுமே

3. உன்னதத்தின் ஆவியினால்
உலகத்தை ஜெயித்திடவே
உண்மையான சாட்சியாய் வாழ்ந்திடுவேன்
உயிருள்ள நான் வரையில்

### பாடல் - 1665

**பளிங்கு நதியோரம் பரமனை தேடிடுவேன்**
கனிதரும் வாழ்க்கை என்னில் உண்டு
கர்த்தரை நாடிடுவேன்

1. ஜீவ விருட்சமாய் என்னை நோக்கினார்
ஜீவனிலே நான் செழித்தோங்க
பாவ வாழ்க்கையை மறக்கும் நாளில்
பாராளும் தேவன் என் பரவசமே



அட்டவணை

2. ஒளி வீச என்னை அழைத்த தேவன்
கலங்கரை விளக்காய் மாற்றிடுவார்
ஒளியின் கதிராய் பிரகாசிப்பேன் நான்
ஒளியின் காட்சியாய் வாழ்ந்திடுவேன்

3. மந்தையை மேய்த்திடும் அழைப்பு தந்தார்
மணவாட்டி சபையாய் மாறிடவே
மறந்திடுவேனோ தேவ அழைப்பை
மறுரூபமாகும் நாள் வரையில்

## பாடல் - 1666

**அழைப்பின் தொனி எந்நாளும்**
என்னில் கேட்குதே
அலை அலையாய்
இயேசு அன்பு என்னில் பாயுதே

1. அக்கரைக்கு அழைக்கும் நேசர் அன்பு நேசரே
அவரோடு நாமும் செல்ல ஆயத்தமாவோம்
அலைகடல் மேல் நடந்தவரின் அன்பு பெரியதே
கடும் புயலும் பெருங்காற்றும்
என்னைத் தொடாதே

2. மாறாத உம்முடைய கிருபை வரங்களும்
ஆவியாலும் தேகத்தாலும் ஆணியாகுதே
பொன் பொருளும்
மண்ணின் வாழ்வும் மாயையாகுதே
மணவாளன் இயேசுவை நான்
நினைத்துப் பார்க்கையில்

3. மோட்ச யாத்திரை செல்லுகின்ற
மேலோக வாசி
இப்புவியை நடந்து நானும்
அக்கரை சேர்வேன்
ஆரவார சத்தம் என்னில்
வானில் கேட்கும் நாள்
அவரோடு சேர்ந்து நான் விண்ணில் மகிழுவேன்

## பாடல் - 1667

**உம்மோடு இணைந்திட**
எந்தன் உள்ளம் எல்லாம் தவிக்கின்றதே
இணைந்திடுமே தேவா இணைந்திடுமே
எந்நாளும் உம்மோடு இணைந்திடுமே

1. அழுகையின் பள்ளத்தாக்கிலே என்னை
அணைத்திடும் அன்பு தெய்வமே

2. வல்லமையை ஊற்றும் வேளையில்
என்றும் வானங்கள் திறக்கட்டுமே

3. மரண இருளின் வேளையில்
என்னை மறவாமல் காக்கும் தெய்வமே

4. பரலோக காட்சிகளை
நானும் பல நாளும் காண வாஞ்சையே

## பாடல் - 1668

**நேசமலரே என் நேசமலரே**
வாசம் செய்ய வந்திட்ட என் நேச மலரே

1. மணம் வீசி கமழும் மல்லிகையாய்
மனதார துதிப்பேன் மணவாளனை

2. சாரோனின் ரோஜாவும லீலியுமாய்
உள்ளத்தில் மலர்ந்திடும் உன்னதரே

3. கல்வாரி சிலுவையில் காட்டிய அன்பு
கல்லான என்னையும் கரைத்திடுதே

## பாடல் - 1669

**தேவன் உன்னோடு இருப்பார் உன்னை காப்பார்**
உள்ளங்கையில் உன்னை வரைந்து வைத்தார்

1. அபிஷேக நாதர் அன்பர் அவரே
அளவில்லா கிருபை தந்தவர் அவர்

2. உன்னோடிருந்து உன்னை அணைப்பார்
ஏக்கங்கள் நேரத்தில் உன்னை சுமப்பார்

3. எங்கும் நிறைந்தவர் உன்னை காப்பார்
எல்லாம் அறிந்தவர் உயர்த்திடுவார்

4. யெகோவா ரஃபா பரிகாரி கர்த்தர்
யெகோவா நிசி உன் ஜெய தேவன்

## பாடல் - 1670

**உம் பாதங்களில் என் கண்ணீர் மஞ்சம்**
கதறும் நெஞ்சுக்கு நீர்தான் தஞ்சம்
கண்களில் கடலை அடைத்த தேவனே
கருவிழி அருவியால் நனைத்த தேவனே

தேவா ஸ்தோத்திரம் (3)
இயேசு தேவா ஸ்தோத்திரம்

1. உமது வழி நான் நடக்கும் தீபமாயிற்றே
உமது சத்தியம் நான் பேசும் வசனமாயிற்றே
உமது ஜீவன் வாழ்வளிக்கும் தேசமாயிற்றே - உமது துதி
திருப்தியாக்கும் உணவாயிற்றே

2. அர்பணித்த நேரத்தில் விடுவித்தீர் ஐயா
அருமையான தாயாக அணைத்தீர் ஐயா
பொன், வெள்ளி பேர் புகழ் ஈடாகாதே
உமதன்பால் எந்தன் உள்ளம் பொங்கி வழியுதே

3. சிலுவை வழியே சிறந்த வழி என்று காட்டினீர்
உள்ளங்களை கொள்ளை கொள்ளும் வல்ல தேவனே
இமயத்திலும் குமரியிலும் இயேசு வேண்டுமே
கர்த்தரே தெய்வம் என்று முழங்க வேண்டுமே

## பாடல் - 1671

**என்னோடு பேசுவார் என் நேசர்**
என்னோடு பேசுவார்

1. தனிமை என்னை வாட்டிய போது
தாயாக வந்து அணைத்திட்ட தேவன்

2. ஆகாரின் கண்ணீரை அறிந்திட்ட தேவன்
அற்புதமாக தாகம் தீர்த்தார்

3. திக்கற்ற பிள்ளையின் கண்ணீரை கண்டார்
பறந்து காக்கும் பட்சி போல் வந்தார்

4. என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
சீயோனில் என்னை சேர்த்து மகிழ்வார்

## பாடல் - 1672

**இயேசுவே உம்மைப் போலாக**
வாஞ்சிக்குதே என்னுள்ளம்
என் ஆவி ஆத்மா சரீரம்
முற்றும் படைத்து விட்டேன்
என்னை ஏற்றுக்கொள்ளும் ஐயனே

1. பாவம் அறியாது பாவமே செய்யாது
பாரினில் ஜீவித்தீரே
பரிசுத்தர் உம்மைப் போல் ஜீவிக்கவே
பெலமதை தாருமய்யா - உந்தன்
பெலமதை தாருமய்யா - 2

2. உபத்திரம் உண்டு உலகினிலே என்று
உலகத்தை வென்றெனென்று
உம்மைப் போல உலகினை ஜெயித்திடவே
பெலமதை தாருமய்யா - உந்தன்
பெலமதை தாருமய்யா - 2

3. சிலுவை சுமந்தென்றும் என் பின் வராதவன்
அல்ல என் சீஷன் என்றீர்
எந்தன் சிலுவையை நான் சுமக்க -2
பெலமதை தாரும் ஐயா - 2 - உந்தன்
பெலமதை தாருமய்யா - 2

## பாடல் - 1673

**ஓயாமல் துதிப்போம்**
காலமெல்லாம் பாடுவோம்
ராஜாதி ராஜாவாம் இயேசுவை

பாடு ஓசன்னா என்றும் ஓசன்னா

1. சத்துருவை மிதிப்பார் எதிரியை அடக்குவார்
இயேசுவே ஜெயிப்பார் ராஜரீகம் பண்ணுவார்

நீயோ கரங்களை தட்டி துதித்துக் கொண்டிரு

2. கட்டுகளை அறுப்பார் சாபங்களை முறிப்பார்
வேதனையை மாற்றுவார் புது பெலன் தருவார்

3. விண்ணப்பத்தை கேட்பார் கிருபையை பொழிவார்
வாக்குத்தத்தம் செய்தார் நிறைவேற்றி முடிப்பார்

## பாடல் - 1674

**மகிமை தேவன் எங்கள் மத்தியில்**
இறங்கி வந்திடும் ஆராதனை
துன்பங்கள் துயரங்கள் தொல்லைகள் யாவும்
நீங்கிப் போகும் ஆராதனை
மகிமையின் ஆராதனை எங்கள்
இயேசுவுக்கே ஆராதனை

1. தூதரோடு நாமும் சேர்ந்து
பாடி மகிழ்ந்திடும் ஆராதனை
பூலோகத்தில் பரலோகத்தை
அனுபவிக்கும் ஆராதனை
பரலோக ஆராதனை
பரிசுத்தருக்கு ஆராதனை

2. பாவங்கள் சாபங்கள் ரோகங்கள் யாவும்
நீங்கிப் போகும் ஆராதனை
உயிரோடெழுந்த இயேசுகிறிஸ்துவின்
உயிருள்ள ஆராதனை
ஜீவ தேவனுக்கு ஆராதனை

3. ஆண்டவரின் வருகைக்காக
ஆயத்தப்படுத்திடும் ஆராதனை
புத்தியுள்ள கன்னிகை போல
விழித்தெழும்பும் ஆராதனை
மறுரூப ஆராதனை
மன்னன் இயேசுவுக்கே ஆராதனை

## பாடல் - 1675

**உதவி வரும் ஒத்தாசை வரும்**
என் இயேசுவிடம் இருந்து ... (2)
ஒவ்வொரு நாளும் கிருபையினாலே
நன்மைகள் தொடர்ந்து வரும் ... (2)

1. சத்திய வேதம் காட்டிய வழியில்
சஞ்சலம் அகன்று விடும் ... (2)
சந்தோஷம் தான் பொங்கி வழிந்து
நிம்மதி தந்து விடும்... (2)

2. நேசரின் பாதம் நித்தம் அமர்ந்தால்
எல்லாம் கூடி வரும் ... (2)
நிலைமைகள் மாறும் உலகில் வாழும்
எல்லாம் தேடி வரும் ... (2)

3. மாசற்ற தேவனை மனதில்
நினைத்தால் மன்னிப்பு கிடைத்து விடும் 2
மாதேவன் இயேசுவின் மாறாத
கிருபையால் மகிமை கிடைத்துவிடும் ... 2

## பாடல் - 1676

**உம்மை துதிக்கும் போது கிடைக்கும் ஆனந்தம்**
வேறெந்த சூழ்நிலையிலுமில்லை
உம்மை பாடும் போது இருக்கும் சந்தோஷம்
வேறெந்த காரியத்திலுமில்லை

1. நீர் பேசும் போது இருக்கும் வல்லமை
யார் பேசும் போதும் கேட்டதில்லையே
நீர் என்னிடமாய் பேசும் போதெல்லாம்
உம் வார்த்தை என்னை நட்துகின்றது

2. நீர் சுமக்கும் போது கிடைக்கும் சுகம்
யார் சுமக்கும் போதும் கிடைப்பதில்லையே
உம் தோளில் என்னை சுமக்கும் போதெல்லாம்
புதுபெலன் எனக்கு கிடைக்கின்றது

3. நான் ஜெபிக்கும் போது கிடைக்கும் நம்பிக்கை
வேறெதிலும் எனக்கு கிடைப்பதேயில்லை
முழங்காலில் நின்று கேட்பதையெல்லாம்
தயங்காமல் எனக்கு தருகின்றீரே

## பாடல் - 1677

**சந்தோஷமாகப் பாடுவோம்**
இரட்சகர் இயேசு பாடலை
இன்னிசையோடு பாடுவோம்
உள்ளங்கள் மகிழ்ந்திடுமே

1. காத்திருந்து நாம் புது பெலனடைந்து
கருத்துடன் பாடிடுவோம்
சுவிசேஷம் கூறி இயேசுவைப் போற்றி
எந்நாளும் பாடிடுவோம்

2. உள்ளம் பொங்க உண்மையோடு
ஆவியில் பாடிடுவோம்
ஆண்டவர் இயேசுவின் அன்பின்
அழைப்பை எடுத்துக் கூறிடுவோம்

3. ஆயத்தமாக அனுதின வாழ்வில்
அவருக்காய் காத்திருப்போம்
வருகையின் நாளில் அவருடன் சேர்ந்து
விண்ணில் ஏறிடுவோம்

## பாடல் - 1678

**உமக்கொப்பானவர் யாருமில்லை**
உமக்கொப்பானவர் எவருமில்லை
உமக்கொப்பானவர் உலகில் இல்லை
உமக்கொப்பானவர் யார்? யார்? யார்?
உமக்கொப்பானவர் யார்? – உலகில்

1. மரித்த லாசருவை எழுப்பி
ஜீவனை கொடுத்தீரே
பாவத்தில் மரித்த என்னை
இழுத்து மீட்டுக்கொண்டீரே

2. சோதிக்க வந்தவனை
வார்த்தையால் விரட்டி அடித்தீரே
சோதனை பெருகினாலும்
சாதனை செய்து வாழ்ந்தீரே

3. பதினெட்டு வருஷமுள்ள கூனியை
நிமிரச் செய்தீரே
பார்க்க முடியாத குருடனை
பார்க்கச் செய்தீரே

## பாடல் - 1679

**ஒரு கோடி ராகங்கள் உருவாகும் கானங்கள்**
எல்லாமே உமக்காகத்தான் – என்
இயேசையா எல்லாமே உமக்காகத்தான்

உருவாகும் கானங்கள்
உம்மைப் போற்றும் கீதங்கள்
வழிந்தோடும் என் வாழ்வில் தான் – ஆறாக

1. இன்னிசை கீதங்கள் உமக்காகத் தான்
இணையில்லா நாமங்கள் உமக்காகத்தான்
புது பாடல் பாடி நான் புகழ்ந்திடும்
பாடல்கள் உமக்காகத் தான்

2. நாளொன்று பிறந்தாலும் உமக்காகத்தான்
நலம் ஒன்று வந்தாலும் உமக்காகத் தான்
என் வாழ்வின் நாட்களில்
நீர் செய்த நன்மைகள் அனைத்தையும்
படைக்கிறேன் உமக்காகத் தான்

3. என் ஜீவன் வாழ்வதும் உமக்காகத் தான்
ஜீவனின் பெலனெல்லாம் உமக்காகத் தான்
என் ஜீவ நாட்களில் நான் செய்யும் யாவிலும்
புகழ்ச்சியும் மகிமையும் உமக்காகத் தான்

## பாடல் - 1680

**நான் நன்றியோடு துதிப்பேன்**
என் வாழ்நாளெல்லாம் துதிப்பேன்
உம் பாதம் பணிந்து துதிப்பேன்
உம்மில் மகிழ்ந்து மகிழ்ந்து துதிப்பேன்

1. செய்த நன்மை கோடி
அதைச் சொல்லி முடியாதய்யா
அதை நினைத்து நினைத்து நெஞ்சம்
நன்றி சொல்லி மகிழுதைய்யா

2. அதிகாலை தோறும் என்னை
அப்பா தட்டி எழுப்பினீரே
தினம் புதிய கிருபை தந்து
உம்மில் மகிழச் செய்தீரய்யா

3. தாயின் வயிற்றில் என்னை
உருவாக்கு முன்னே அறிந்தீர்
பெயரைச் சொல்லி அழைத்தீர்
உம் பிள்ளையாக மாற்றினீர்

4. புதுப்பாடல் எனக்குத் தந்தீர்
உம் நாமம் பாடப் பாட
அபிஷேகம் எனக்கு தந்தீர்
சாத்தானை ஜெயித்து வாழ

## பாடல் - 1681

**நீங்க எனக்கு இருக்கும் போது**
கலங்கலப்பா - நான்
கரம் பிடித்து நடக்கும் போது
பயமில்லப்பா - எனக்கு
ஏற்ற நேரத்தில் எல்லாம் செய்வீரே
உம் பலத்த கரத்திலே அடங்கி இருப்பேனே

1. காகங்கள் ஒரு நாளும் கவலைப்படுவதில்லை
களஞ்சியத்தில் ஒரு நாளும் சேர்த்து வைப்பதில்லை
உம்மை நோக்கி கூவும் அதற்கு உணவு தருகிறீர்
என்னை நீர் மறந்து விடுவீரோ - 2.

2. தடைகளெல்லாம் தகர்த்து வழிகளைத் திறந்து
கோணலை நேராக்கி முன்னே நடக்கிறீர்
வாசலில் நுழைந்து நன்மை பெற்றிடுவேன்
நான் வெற்றி சிறந்த தேவன் நீரே - 2

3. துன்பங்கள் என்ன செய்யும் தொல்லைகள் மறைந்தோடும்
மலை போல் வருவதெல்லாம் பனிபோல் நீங்கிடும்
நீதியின் சூரியனே உம்மை நோக்கி பார்ப்பேன்
வெட்கமடைந்து போவதில்லையே

## பாடல் - 1682

**நீங்கத்தாம்பா பார்த்துக் கொள்ளனும்**
என்னால் ஒன்றும் முடியாதப்பா
என் பாரங்களை உம் மேலே சுமத்துகிறேன்
ஒரே ஒரு பார்வை வேண்டும் கெஞ்சுகிறேன்

1. பாவம் சூழ்ந்து கொள்கையில்
பரிசுத்தமாய் வாழ்ந்திட
உதவி செய்யும் எந்தன் இயேசுவே
தடுமாறும் வேளையில்
தனிமை சூழும் நேரத்தில்
தாங்கிக் கொள்ளும் இன்ப நேசரே

2. இழந்து போகும் வேளையில்
நிந்தையான நேரத்தில் உம் கரங்களாலே
அணைத்துக் கொள்ளுமே
காயங்கள் ஆற்றியே என் உள்ளம் தேற்றியே
கைவிடாமல் தூக்கி செல்லுமே

3. மாறிவிடும் உலகினில்
மனிதர்களும் பகைக்கையில்
உம் மார்பினிலே சாய்ந்து கொள்ளுவேன்
பாரங்கள் பெருகுகையில் மனம்
உடைந்து போகையில்
உம் பாதத்தில் விழுந்து கிடப்பேன்

### பாடல் - 1683

**கண்ணை உண்டாக்கினவர் காணாரோ**
காதை உண்டாக்கினவர் கேளாரோ

1. எனது கால்கள் சறுக்கிடும் போது
கிருபையால் என்னைத் தாங்கிடும் தேவன்
எனது அடைக்கலம் புகலிடம் தேவன்
நம்பியிருக்கும் கன்மலை தேவன்

2. உள்ளத்தில் வேதனை பெருகிடும் போது
ஆறுதலால் என்னைத் தேற்றிடும் தேவன்
எனது துணையும் பெலனும் என் தேவன்
என்னை கைவிடா கன்மலை தேவன்

3. எனது உள்ளம் கதறிடும் போது
நெருங்கி வந்து உதவிடும் தேவன்
எனது கண்ணீரைக் காண்கின்ற தேவன்
எனது ஜெபத்தை கேட்கின்ற தேவன்

### பாடல் - 1684

**தேவன் நல்லவரே இயேசு நல்லவரே**
ஒருவருக்கும் ஒரு தீமையும் செய்யாத
தேவன் நல்லவரே

ஒன்றும் சேர்ந்து உயர்த்திடுவோம் இயேசுவை
ஒன்று சேர்ந்து போற்றிடுவோம் இயேசுவை

1. அவர் ஜீவன் தந்ததாலே
நான் உயிர் வாழ்கிறேனே
அவர் எந்தன் கூட வருவார்
அதனால் பயமில்லையே



அட்டவணை

2. இரவெல்லாம் பாதுகாத்தார்
எந்த தீமையும் அணுகாமலே
பகலெல்லாம் கூட வருவார்
தேவன் நம்மோடே

3. இருளெல்லாம் போக்கி விடவே
உன்னில் ஒளியாய் வந்தாரே
சத்துருவை மேற்கொள்ளவே
வல்லமை தந்தாரே

## பாடல் - 1685

**உம்மையே நான் நேசிப்பேன்**
நான் பின் திரும்பேனே

உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
உம்மையே நான் ஆராதிப்பேன் – 3
நான் பின் திரும்பேனே

உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டாலும்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

## பாடல் - 1686

**புல்லுள்ள இடங்களில் மேய்க்கின்றார்**
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகின்றார்
அபிஷேகத்தால் என்னை நிரப்புகின்றார்
என் பாத்திரம் நிரம்பி வழியச் செய்தார்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. காற்றுக்கு ஒதுக்காய் இருக்கின்றார்
பெருவெள்ளத்துக்கு புகலிடமாய்
வறண்ட நிலத்துக்கு நீர்க் கால்களாய்
விடாய்த்த பூமிக்கு நிழலாய் உள்ளார்

2. ஏழைக்கு பெலனாய் இருக்கின்றார்
எளியோர்க்கு என்றும் திடனுமானார்
பெருவெள்ளத்துக்கு அடைக்கலமானார்
வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானார்

3. நெருக்கத்திலே எனக்கு தஞ்சமானார்
ஒடுக்கப்படும் வேளை அணைத்துக் கொண்டார்
முகத்தின் கண்ணீரை துடைக்கின்றார்
மரணத்தை ஜெயமாக விழுங்கிவிட்டார்

### பாடல் - 1687

**இதோ மனிதர்கள் மத்தியில் வாசம் செய்பவரே**
எங்கள் நடுவிலே வசித்திட விரும்பிடும் தெய்வமே
உமக்கு சிங்காசனம் அமைத்திட
உம்மை துதிக்கிறோம் இயேசுவே

பரிசுத்த அலங்காரத்துடனே
உம்மை தொழுகிறோம் இயேசுவே
எங்கள் மத்தியில் உலாவிடும்
எங்களோடென்றும் வாசம் செய்யும்
பரிசுத்த அலங்காரத்துடனே
உம்மை தொழுகிறோம் இயேசுவே
எங்கள் மத்தியில் உலாவிடும்
எங்களோடென்றும் வாசம் செய்யும்

### பாடல் - 1688

**உயரமும் உன்னதமுமான**
சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
சேனைகளின் கர்த்தராகிய
இராஜாவை என் கண்கள் காணட்டும்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்

1. ஒருவராய் சாவாமை உள்ளவர் இவர்
சேரக்கூடா ஒளிதனில் வாசம் செய்பவர்
அகிலத்தை வார்த்தையால் சிருஷ்டித்தவர்
இயேசுவே உம்மையே ஆராதிப்பேன்

2. ஆதியும் அந்தமுமானவர் இயேசு
அல்பாவும் இமேகாவுமானவர் இவர்
இருந்தவரும் இருப்பவரும்
சீக்கிரம் வரப்போகும் ராஜா இவர்

3. எல்லா நாமத்திலும் மேலானவர்
முழங்கால்கள் முடங்கிடும் இவருக்கு முன்
துதி கனம் மகிமைக்கு பாத்திரரே
தூயவர் இயேசுவை உயர்த்திடுவேன்

## பாடல் - 1689

**நான் என் நேசருடையவன்**
என் நேசர் என்னுடையவர்
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
இவரே என் நேசர் இவரே என் சிநேகிதர்
இவரே என் பிரியமானவர்

1. பாவியான என்னையும் அவர்தேடி வந்தாரே
மணவாளனும் என் தோழனும்
எனக்கெல்லாம் ஆனாரே
அவர் சேவை செய்வேன்
அவருக்காகவே வாழ்வேன்

2. தனிமையான நேரத்தில்
என் துணையாய் வந்தாரே
பெலவீனமான நேரத்தில்
தம் கிருபை தந்தாரே
அவர் நாமம் உயர்த்துவேன்
அவர் சாட்சியாய் வாழ்வேன்

3. எனக்காகவே யாவையும்
அவர் செய்து முடித்தாரே
ஏற்ற நேரத்தில் என் தேவைகள்
யாவும் சந்தித்தார்
உயிருள்ள நாளெல்லாம்
அவர் நாமம் பாடுவேன்

## பாடல் - 1690

**என் ஆத்துமா பாடும் என் இதயம் துடிக்கும்**
என் உதடுகள் போற்றும் இயேசு நல்லவர்

ஆ... அல்லேலூயா அல்லேலூயா

1. சேற்றிலிருந்த என்னை
கரத்தால் தூக்கி எடுத்தார்
நாற்றமெல்லாம் மாற்றினார்
இரத்தத்தாலே கழுவினார்

இயேசுவே என் ஆண்டவர் இயேசுவே என் ரட்சகர்
இயேசுவே என் மீட்பர் இயேசுவே என் ராஜா

2. தள்ளப்பட்ட என்னையும்
தலைக்கல்லாய் மாற்றினார்
மகிமையாய் நிரப்பினார்
பயன்படுத்தி வருகிறார்

3. கர்த்தர் என் மேய்ப்பர்
நான் தாழ்ச்சி அடையேன்
இதுவரையில் நடத்தினார்
இனிமேலும் நடத்துவார்

## பாடல் - 1691

**நான் வித்தியாசமானவன்**
இயேசு என்னை இரட்சித்தார்
என் பாவங்கலெல்லாம்
மன்னித்தார் இனி வாழ்வது நானல்ல
இயேசு எனக்குள் வாழ்கிறார்

1. ஜெபம் பண்ணாமல் இருக்க முடியாது
வேதம் வாசிக்காமல் இருக்க முடியாது
பாவம் செய்ய முடியாது
பொய் பேச முடியாது

2. இயேசுவை சொல்லாமல் இருக்க முடியாது
ஊழியம் செய்யாமல் இருக்க முடியாது
எனக்காக வாழ முடியாது
சும்மா இருக்கவும் முடியாது

3. பரிசுத்தமாய் நான் வாழ்ந்திடுவேன்
இயேசுவை உலகிற்கு நான் காட்டிடுவேன்
இயேசுவுக்காக வாழ்ந்திடுவேன்
இயேசுவை உயர்த்தி காட்டிடுவேன்

## பாடல் - 1692

**ஜீவனுள்ள தேவனே**
உம்மைத் தொழுகிறோம்
என் வாழ்வில் நீர் செய்த நன்மைகள்
அவை எண்ணி முடியாதவை

உம்மையே ஆராதிப்போம்
உண்மையாய் ஆராதிப்போம்
ஆவியோடும் உண்மையோடும்
என்றென்றும் ஆராதிப்போம்

1. பகலில் மேகஸ்தம்பமாய்
இரவில் அக்கினி ஸ்தம்பமாய்
பாதுகாத்து நடத்தி வந்தீர்
இனியும் நடத்திடுவீர்

2. உந்தனின் வலது கரத்தினினால்
என்னையும் தாங்கி நடத்தினீர்
உமது கிருபையை அனுதினமும்
தந்து நடத்திடுவீர்

3. நேசரே உந்தன் நேசத்தால்
என்னையும் இழுத்துக் கொண்டீரே
உம்மை விட்டு விலகிடேன் நான்
உமக்காய் வாழ்ந்திடுவேன்

## பாடல் - 1693

**ஆயிரம் பதினாயிரம் பேர்களிலும்**
சிறந்தவர் என் இயேசு
பூமி அனைத்திற்கும் இராஜாவே
கோடி கோடி ஸ்தோத்திரம்

1. இரக்கத்தில் ஐசுவர்யம் உள்ளவரே
உருக்கம் நிறைந்தவர் நீர்
இருக்கும் இடம் தேடி வந்தீரே
இரட்சிப்பு தந்தவர் நீர்

2. நித்திய ஜீவனை எனக்கு தர
ஜீவனை தந்தவர் நீர்
நிரந்தர அமைதியை நான் பெறவே
நொறுக்கப்பட்டவர் நீர்

3. அன்னாளின் கண்ணீர் துடைத்தவரே
ஆகாரின் துயர் துடைத்தீர்
என் வாழ்வில் இன்னல்கள் அகற்றியதால்
என்றென்றும் ஸ்தோத்திரம் ஐயா

## பாடல் - 1694

**எங்களுக்கல்ல எங்களுக்கல்ல**
உந்தன் நாமத்திற்கே மகிமை – 2
மகிமை மகிமை மகிமை மகிமை

1. அற்புதம் நடக்கும் போது
உந்தன் நாமத்திற்கே மகிமை
அதிசயம் காணும் போது
உந்தன் நாமத்திற்கே மகிமை -2
உம் அன்பினால் என் உள்ளத்தை
நிரம்ப செய்தீரே
உம் வார்த்தையால்
என் வாழ்க்கையை ஒளிர செய்தீரே

2. வியாதிகள் நீங்கும் போது
உந்தன் நாமத்திற்கே மகிமை
கட்டுகள் உடையும் போது
உந்தன் நாமத்திற்கே மகிமை - 2
பெலவீனன் பெலவான் என்பானே
தரித்திரன் செழிப்பான்
பூலோகம் எங்கும் சொல்வேனே
உம் நாமம் பெரியதே - எங்களுக்கல்ல

## பாடல் - 1695

**எக்காலமும் நான் துதிப்பேன்**
உள்ளளவும் நான் ஸ்தோத்தரிப்பேன்
இதயம் பாடும் ஹாலேலூயா

1. துதிகள் மத்தியில் வாசம் செய்பவர்
எங்கள் மத்தியில் வாருமே
தூதர் போற்றும் தூய தூயர்
பரிசுத்தத்தை தாருமே

கைகள் தட்டி ... சேர்ந்து பாடி ...
உந்தன் நாமம் உயர்த்தவே ... (2)
ஹாலேலூயா ... ஹாலேலூயா (4)

2. சென்ற நாட்களில் நன்மை செய்தவர்
இந்த நாளிலும் செய்வாரே
நேற்றும் இன்றும் மாறா நேசரே
அற்புதத்தை செய்வாரே - கைகள்

3. தோளில் என்னை தூக்கி சுமந்தீரே
தாழ்வில் என்னை தேற்றினீர்
தள்ளப்பட்ட கல்லை மாற்றியே
கன்மலை மேல் உயர்த்தினீர் - கைகள்

## பாடல் - 1696

**நன்றி நன்றி நன்றி ஐயா ... 8**

1. யேகோவா யீரே பார்த்துக் கொள்வீரே (2)
(எங்கள்) குறைவெல்லாம் நிறைவாக்குவீர்

2. யேகோவா ராஃப்பா சுகம் தரும் தெய்வம்
வியாதிகள் எனக்கில்லையே (2) இனி

3. யேகோவா ஷம்மா கூடவே இருப்பீர் (2)
தனியாக விடமாட்டீர் (2) என்னை

நன்றி சொல்வேனே என் இயேசுவே
நன்மை செய்தீரே என் வாழ்விலே

## பாடல் - 1697

**உன்னத தேவனுக்கு ஆராதனை**
மகத்துவ ராஜனுக்கு ஆராதனை
சர்வ வல்ல தேவனுக்கு ஆராதனை
எங்கள் ஆராதனை எங்கள் ஆராதனை

அல்லேலூயா பாடி துதிப்போம்
எங்கள் இயேசு ராஜனை
வாழ்த்திப் போற்றுவோம் – 2

1. பிதாவாம் தேவனுக்கு ஆராதனை
குமாரனாம் இயேசுவுக்கு ஆராதனை
ஆவியாம் கர்த்தருக்கு ஆராதனை
எங்கள் ஆராதனை எங்கள் ஆராதனை

2. அதிசயம் செய்தவரை ஆராதிப்போம்
அற்புதங்கள் செய்தவரை ஆராதிப்போம்
கரம் பற்றி நடத்தினீர் ஆராதிப்போம்
கன்மலை மேல் உயர்த்தினீர் ஆராதிப்போம் – அல்லேலூயா பாடி

3. பாவங்களை மன்னித்தாரே ஆராதிப்போம்
பரிசுத்தம் தந்திட்டாரே ஆராதிப்போம்
அக்கினியால் புடமிட்டாரே ஆராதிப்போம்
பொன்னாக மின்னச் செய்தார் ஆராதிப்போம்

4. வாக்குத்தத்தம் தந்தவரை ஆராதிப்போம்
வாக்குமாறா நல்லவரை ஆராதிப்போம்
விண்ணப்பத்தை கேட்டவரை ஆராதிப்போம்
விடுதலை தந்தவரை ஆராதிப்போம்

## பாடல் - 1698

**ஷாலோம் அலேகேம் சமாதான கர்த்தர்**
மறுபடி வாருமையா நீதியின் தேவன்
தூதர்களோடு எப்போது வருவீரைய்யா
உம் மகிமையை கண்டு மறுரூபமாகி
மகிமை மேல் மகிமை பெற
உம் திருமுகம் கண்டு உம் சாயலில் மாறி
பரலோகில் சேர்ந்திருக்க ஹல்லேலூயா (4)

2. சாலோம் அலேகேம் சாலேமின் ராஜா
எருசலேம் வாருமையா
இஸ்ரவேலுக்காக திறப்பிலே நின்றோம்
சமாதானம் தாருமையா

3. சிதறின ஜனங்கள் உம்மிடம் திரும்ப
சிந்தினோம் கண்ணீரையா
மேசியா இயேசு மறுபடி வாரும்
என்னும்மை அழைத்தோமையா ஹல்லேலூயா (4)

## பாடல் - 1699

**என் இருதயம் நல்ல விசேஷத்தினால்**
பொங்குகிறது ஆஹா ஓகோ ... ஓ...ஓ...ஓ
நான் இராஜாவைக் குறித்து பாடின
கவியை சொல்லுகிறேன்
என் நாவு விரைவாய்
எழுதுகிறவனுடைய எழுத்தாணி

1. எனக்காக யாவையுமே செய்து முடிப்பாரே
துவக்கத்தையும் முடிவையும் அவரே தருவாரே - என் இருதயம்

2. இருளான இரவினிலே கண்ணீர் விட்டேனே
பகல் உதிக்க காலையிலே நடனம் செய்தேனே

3. வார்த்தையினால் சத்துருவை இயேசு ஜெயித்தாரே
அவர் வார்த்தையினால் சாத்தானை
(இச்சைகளை) நானும் ஜெயிப்பேனே - என் இருதயம்

## பாடல் - 1700

**விண்ணப்பம் கேட்பவரே**
கண்ணீரைக் காண்பவரே

ஜெபம் கேளும் பதில் தாரும்

1. ஜெப ஆவி என் வாழ்வில் ஊற்றிடுமே
உமதாவி என்னுள்ளே இறங்கிடுமே 2
ஊற்ற வேண்டுமே கண்கள் எல்லாம்
கண்ணீர் ஊற்றாய் மாற வேண்டுமே - ஜெபம்

2. பலகோடி ஆத்துமாக்கள் அழிகின்றதே
அவர் பேரில் பரிதபிக்க யாரும் இல்லையே
ஜெப ஆவி எனதுள்ளே இறங்க வேண்டுமே
திறப்பில் நின்று ஜெபிப்பவனாய்
மாற்ற வேண்டுமே 2 - ஜெபம்

3. மழை வேண்டி பூமியெல்லாம் காத்திருக்குதே
நிலை மாற எனதுள்ளம் ஏங்கி நிற்குதே
பெரு மழையாய் வானம் திறந்து ஊற்ற வேண்டுமே
வறட்சி எல்லாம் செழிப்பாக மாற வேண்டுமே - 2 - ஜெபம்

## பாடல் - 1701

**ஊற்றுங்கையா ஊற்றுங்கையா பெருமழையாக**
நிரப்புங்கையா நிரப்புங்கையா எங்க வாழ்க்கையை

1. உம்மைப்போல் மழை உண்டாக்க தேவர்கள் உண்டோ
வானமும் தானாகவே மழையைப் கொடுக்குமோ

நீர் அல்லவோ நீர் அல்லவோ -2

2. வயல்களும் ஆறுகளும் வற்றிப் போயிருக்கும்
ஆவி ஊற்றப்பட்டால் வனாந்திரம் செழிக்கும்

நீர் அல்லவோ நீர் அல்லவோ -2

3. இராஜாவின் முகக் களையில் ஜீவன் இருக்கும்
உங்க தயவுக்குள்ளே பின்மாரி இருக்கும்

நீர் அல்லவோ நீர் அல்லவோ -2

## பாடல் - 1702

**இருந்தவர் இருப்பவர்**
இனிமேலும் வருபவர் நீரே

வாருமே மாரநாதா - 2

2. அல்பாவும் ஒமேகாவுமே
ஆதியும் அந்தமுமாமே - வாருமே

3. பரிசுத்தர் பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தர் நீரே - வாருமே

4. சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
ஆட்டுக்குட்டியானவரே – 2

துதியும் கனமும் மகிமை
வல்லமையும்… 2 உண்டாவதாக - வாருமே

## பாடல் - 1703

**துதிப்போம் ஜெபிப்போம்**
ஜெயம் எடுப்போம் ஜெயம் எடுப்போம்

துதி என்றாலே ஜெயம்தானே
ஜெபம் என்றாலும் ஜெயம்தானே – 2

எக்காளம் வாயிலே… பட்டயமோ கையிலே …

1. அந்தகார வல்லமைகள் எதிர் நின்றாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
அக்கினியின் அம்புகள் ஏவப்பட்டாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
மந்திர தகடும் செய்வினை ஏவலும்
எதுவும் எங்களை அணுகாது
இயேசுவின் இரத்தம் எங்கள் மேல் நித்தம்
ஆயுதம் எதுவும் வாய்க்காது - எக்காளம்

2. பெலிஸ்தியர் சேனை சூழ்ந்து கொண்டாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
கோலியாத் இராட்சதன் எதிர் நின்றாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
சிங்கமே வந்தாலும் கரடிகள் வந்தாலும்
கொஞ்சமும் எங்களுக்கு பயமில்லையே
பார்வோனின் இரதங்கள் பின்னாலே வந்தாலும்
செங்கடல் பிளந்திடும் அச்சமில்லையே - எக்காளம்

3. அத்திமர துளிர்கள் இல்லாவிட்டாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
திராட்சை செடி பலனை தராவிட்டாலும்
துதிப்போம் ஜெபிப்போம் ஜெயம் எடுப்போம்
கர்த்தருக்குள்ளே மகிழ்ச்சியாவேன்
யெகோவாயீரே பார்த்துக் கொள்வார்
பரலோக தேவன் பட்சத்தில் நிற்கையில்
பிள்ளைகள் எங்களுக்கு குறைவில்லையே - எக்காளம்

**பாடல் - 1704**
**(R-Saing Reggae T-100 Cm 2/4)**

**ஒரு குற்றம் கூட செய்யாத ஒரே ஒரு**
தெய்வம் - இயேசு மட்டும் தான் (2)
தன் எதிரிகளுக்காய் உயிரை கொடுத்த
ஒரே ஒரு தெய்வம் இயேசு மட்டும் தான் (2)

1. சிலுவையில் தன்னை அறைந்தவரை கூட
மன்னித்த பெரிய தெய்வம் (2)
மரித்த பின்பு உயிரோடு எழுந்த
ஒரே ஒரு தெய்வம்

2. எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த
எல்லாம் வல்ல தெய்வம் (2)
உலகத்தைப் படைத்தவர்
வணக்கத்திற்குரியவர் ஒரு ஒரு தெய்வம் 2

3. செத்துப் போன உடலுக்குள்ளே
உயிரை வைத்த தெய்வம் (2)
ஆகாரமில்லா அனாகைகட்கு
அடைக்கலமான தெய்வம் (2)

**பாடல் - 1705**

**ஆராதனைக்கு தகுதியான தெய்வம்**
இயேசு நீர் மாத்திரமே முழு
உலகத்திற்கும் பொதுவான தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே

1. அன்பு என்றால் என்ன என்றுசொல்லித்
தந்த தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
பெரும்பாவி மனம் மாற ஏங்குகின்ற
தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
தம்மை நம்பி வருபவர்கள்
எந்த மதத்து மனிதராயினும்
ஏற்றுக்கொள்ளும் பாசதெய்வமே (2)

2. பர்வதத்தை சுட்டிக்காட்டி கண்டித்துணர்த்தும்
தெய்வம் இயேசு நீர் மாத்திரமே
பாவத்தை மன்னிக்கும் பரிசுத்த தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே
பரலோகம் போவதற்கு வழிகாட்ட வந்த
தெய்வ அவதாரம் நீர் மாத்திரமே (2)

3. சொன்ன சொல் தவறாத நம்பிக்கைக்கு
உரியவர் இயேசு நீர் மாத்திரமே
பாரபட்சமில்லாத நேர்மையுள்ள தெய்வம்
இயேசு நீர் மாத்திரமே
பரலோகம் போவதற்கு வழிகாட்ட வந்த
தெய்வ அவதாரம் நீர் மாத்திரமே (2)

## பாடல் - 1706

**உயிரான தெய்வமே என் உயிரோடு கலந்தவரே**
என் உணர்வுகள் அறிந்தவரே
உம்மில் அன்பு கூறுவேன் – 2
ஆராதனை ஆராதனை ஆராதனை – 2

1. உம் சித்தம் அறிந்து நான்
உறவாட துடிக்கிறேன் – 2
உயிருள்ள நாளெல்லாம் – என்

2. என் வாயின் வார்த்தைகள்
என் இதயத்தின் எண்ணங்கள்
மகிழ்விக்க துடிக்கட்டும் – உம்மை

## பாடல் - 1707
(R-Blue Rock T-125 F6/8)

**வல்லமையை தந்திடும் ஆவியானவரே**
வரங்களை கொடுத்திடும் ஆவியானவரே
பரிசுத்த ஆவியை இப்போ ஊற்றுமே
பரலோக ஆவியை இங்கே ஊற்றுமே – 2

1. புதிய தரிசனம் புதிய சிந்தனை
புதிய ஆசைகள் இப்போ வேண்டுமே - 2

2. புதிய அபிஷேகம் புதிய வல்லமை
புதிய பாஷைகள் இப்போ வேண்டுமே - 2

3. புதிய நோக்கங்கள் புதிய தாகங்கள்
புதிய கிருபைகள் இப்போ வேண்டுமே - 2

4. புதிய ஜீவியம் புதிய ஊழியம்
புதிய சந்தோஷம் இப்போ வேண்டுமே - 2

## பாடல் - 1708

**அபிஷேக நாதரே ஆத்ம நேசரே 2**
ஆனந்த தைலத்தினால்
அபிஷேகிக்கும் நேசரே 2

1. ஒவ்வொரு நாளுமே உந்தன் சமூகத்தில் 2
காத்திருந்து ஜெபித்து கழுகைப் போல்
பெலனடைவேன் - அபிஷேக

2. உன்னத ராஜனே உத்தம நேசரே 2
உந்தனின் சமூகமே எந்தனின் பாக்கியமே

3. அதிகாலை நேரத்தில் ஆனந்த சத்தத்தோடே
ஆராதிப்பேன் நேசரே
அடிமையை நினைத்திடுமே 2 - அபி

## பாடல் - 1709

**அருள் நாதர் நாமமதில் ஒருமனமாய் உருகி**
தொழுகின்ற நேரமெல்லாம்
எழும்பிடுவார் நடுவில் - நாம்

1. இதயம் நொறுங்கினோரின்
ஆதரவும் அவரே - 2
கதறல்கள் கேட்டிடுவார் பதறாமல்
அணைத்திடுவார் - 2 - அருள் நாதர்

2. நோயினால் நொந்தவரை
தாயைப் போல் அணைப்பவரே - 2
பரிகாரி நானே என்பார்
பட்சமாய் தாங்கிடுவார் - 2 - அருள் நாதர்



அட்டவணை

3. மாயையில் மயங்கினோரை
தயை தந்து மாற்றுவாரே - 2
தூயாவி ஈந்திடுவார்
தூய்மையாய் மாற்றிடுவார் - 2 - அருள் நாதர்

4. கண்ணீரைத் துடைத்திடுவார்
கரம்பற்றி நடத்திடுவார் - 2
வாக்கு மாறாத தேவன் வார்த்தையில்
உண்மையானவர் - 2 - அருள் நாதர்

5. ஆத்தும நேசரவர்
ஆறுதல் உனக்களிப்பார்
ஆபத்தில் துணையவரே
அல்பா ஒமேகா அவர் - 2 - அருள் நாதர்

6. தாயைப் போல் தேற்றிடுவார்
தந்தை போல் சுமந்திடுவார் - 2
திகையாதே மகனே(ளே) என்றார்
தினம் காக்கும் தேவனவர் - 2 - அருள் நாதர்

7. ஒருபோதும் கைவிடாரே
ஒருநாளும் விலகிடாதே - 2
மார்போடணைத்துக் கொள்வார்
மகிமையிலே சேர்த்துக் கொள்வார் - 2 - அருள் நாதர்

## பாடல் - 1710
## (R-Waltz T-135 Fm 3/4)

**இது விதைக்கின்ற காலமல்லவா**
நாம் செயலாற்றும் நேரமல்லவா
உறங்காமல் நாமும் விரைந்தோடி எங்கும்
சுவிசேஷ விதை தூவுவோம்

1. ராக்காலம் வருகின்றதே
அதின் சாயல் தெரிகின்றதே
ஒளியுள்ள காலம் முடிவாகு முன்னே
உன் சேவை நிறைவேற்றிடு

2. திறப்பின் ஓர் வாசல் இங்கே
அதில் நிற்கும் மனிதர் எங்கே
கர்த்தரின் கண்கள் பூலோகமெங்கும்
அதைத் தேடி அலைகின்றதே



அட்டவணை

3. பின்மாரி பொழிகின்றதே
உன் வேளை வருகின்றதே
அழிகின்ற கூட்டம் உன்னைத்தான்
இன்று எதிர் நோக்கி நிற்கின்றதே

4. பாவத்தில் விழுந்தே இன்றே
தேசங்கள் அழகின்றதே
கர்த்தரின் கண்கள் இக்காட்சி கண்டு
கண்ணீரைச் சொரிகின்றதே

பாடல் - 1711
(R-Country Beat T-115 C2/4)

**செலவிடு உன் சம்பத்தெல்லாம்**
சுவிசேஷத்திற்காய் – என்றும்
செலவிடு உன் தாலந்தெல்லாம்
இயேசு கிறிஸ்துவுக்காய்

1. இவ்வுலக ஆஸ்தி உந்தன் ஜீவனே அல்ல
அவ்வுலக ஆஸ்தி அழியா ஆத்துமாக்களே – என்றும்

2. உந்தன் ஜீவன் புல்லுக்கு ஒப்பாயிருக்கின்றது
உண்மையாக நாளை உன்னுடைய நாளல்ல

3. உலகத்தினின்று நீ ஒன்றும் கொண்டு போவதில்லை
உண்ணவும் உடுக்கவும் உண்டானால் அது போதும்

4. பண ஆசை தீமையின் வேராயிருக்கின்றது
பலவித இச்சைக்கு நேராக இழுக்கின்றது

5. ஜீவனை வெறுத்துவிடு ஜீவனடைவாய்
ஜீவனுக்கீடாய் ஜனங்களைத் தருவார்

பாடல் - 1712
(R-Disco T-125 F2/4)

**போய் சுதந்தரிப்போம் – நாம்**
கர்த்தர் வாக்கு பண்ணின தேசம்
போய் சுதந்தரிப்போம்

1. கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு
திசைகள் எங்கும் சுற்றிடுவோம்
நன்மை செய்த இயேசு போல
நானிலம் எங்கும் சென்றிடுவோம்



அட்டவணை

2. சேனைகளின் கர்த்தர் தேவன்
நம்மோடென்றும் இருக்கின்றார்
சேதம் ஏதும் அணுகிடாமல்
தேசம் அடைய செய்திடுவார்

3. என்னை கேளும் ஜாதிகளை
சுதந்திரமாய் தருவேன் என்றார்
பூமியின் எல்லைகளையும்
சொந்தமாக கொடுத்திடுவார்

4. கால்கள் வைக்கும் தேசத்தையே
சுதந்திரமாய் தருவேன் என்றார்
ஆயத்தமாம் பாதரட்சை
அணிந்தே இன்றே புறப்படுவோம்

## பாடல் - 1713

**என் எண்ணங்கள் யாவும் உம்மிடமே**
என் தேவா! என் தேவா
என் செயல்கள் யாவும் உமக்காகவே
என் தேவா! என் தேவா!
என் என் ஆவி, ஆத்மா, சரீரம் யாவும்
உமக்குரியதே தேவா – என் தேவா (2)

1. தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே உம்மை தேடுகிறேன்
வறண்ட நிலத்தில் என் ஆத்துமா
உம் மேல் தாகமாய் இருக்கின்றது – என்

2. இராச்சாமங்களில் உம்மை தியானிக்கிறேன்
உம் வல்லமை மகிமை கண்டிடுவேன்
நீரே என் துணையாய் இருப்பதினால்
உம் செட்டையின் நிழலில் மகிழ்ந்திருப்பேன் – என்

3. என் உயிருள்ள நாளெல்லாம் உம்மை துதித்து
உம் நாமத்தை சொல்லி கையெடுப்பேன்
என் உதடுகள் உம்மை போற்றிடுமே
உம் நாமத்தை என்றும் உயர்த்திடுமே – 2 – என்

## பாடல் - 1714

**உம்மை உண்மையோடு ஒவ்வொரு**
நாளும் தேடிட அருள் செய்யுமே – 2

1. தஞ்சம் என்று வரும் அடியார்களை
தேற்றிடும் தெய்வம் நீரே – 2
காணும் திசை யாவும் உம் முகம் தானே
அர்ப்பணித்தேன் என்னையே – 2
தேவா சரணம் – (4)

2. யெகோவா ரஃப்பாவாய் எனக்கிருந்தீரே
சுகம் தரும் தெய்வம் நீரே – 2
பூமி மீதிலே ஆளுகை செய்யும்
சர்வ வல்ல தேவனே –2 தேவா சரணம் 4

3. பிரியமானவளே (னே) என்றழைத்தீரே
ஆத்தும நேசர் நீரே – 2
விருந்து சாலைக்குள்ளே அழைத்துச் சென்றீரே
பறந்ததும் கொடி நேசமே – 2 தேவா 4

## பாடல் - 1715

**உலகத்தை கலக்கிட எழும்பிடு நீ**
உணர்வடைந்து எழும்பிடு நீ
உழைப்பதற்கு எழும்பிடு நீ
ஊழியத்திற்கு எழும்பிடு நீ 4
எழும்பிடு – 8
கிறிஸ்துவின் ஸ்தானாபதியே எழும்பிடு
இப்போது நீ (2)

1. பவுலை போல எழும்பிடு நீ
கொள்ளை நோயாய் எழும்பிடு நீ – (2)
வாயாடி என்றாலும் வளைந்து
கொடுக்காதே (2) – எழும்பிடு (8)

2. சர்வாயுதவர்க்கத்தை தரித்திடு நீ
சாத்தானின் சேனையை முறித்திடு நீ
வசனமென்னும் பட்டயத்தால்
வெட்டி வீழ்த்திடு நீ – 2 – எழும்பிடு (8)

3. தோல்வி கண்டு திகையாதே
வெல்வேனோ என்று தயங்காதே
ஏழுதரம் விழுந்தாலும்
எழுந்திருப்பவன் நீ – (2) – எழும்பிடு (8)

## பாடல் - 1716

**கர்த்தாவே கர்த்தாவே போற்றுகிறோம்**
ராஜாதி ராஜாவே போற்றுகிறோம்
மாசில்லா தூயோனே போற்றுகிறோம்
பரலோக மன்னாவே போற்றுகிறோம்

1. மன்னாதி மன்னவா
அரசாளும் அருட் செல்வா
உம்மையே உயர்த்துகிறோம் ராஜா (2)
மைந்தனைத் தந்தீரே மாபெரும் கிருபையே
கிருபாகரனே உம்மை போற்றுகிறோம்

2. இரட்சிப்பின் மகுடமே இரட்சிப்பின் சிகரமே
உம்மையே துதிக்கின்றோம் ராஜா
தாபரமானீரே தாங்கி அணைத்தீரே
தயாபரரே உம்மைப் போற்றுகிறோம்

## பாடல் - 1717

**ஏன் இந்த வாழ்க்கை**
எனக்கிந்த வாழ்க்கை (2)
என்று நீயும் அழ வேண்டாம்

1. சாயங்காலம் அழுகை என்றால்
விடியற்காலம் களிப்பு வரும் (2)
உன் கவலைகள் தீர்ந்துவிடும்
களிகூரு என் மகளே (2) - ஏன் இந்த

2. காணல் நீராய் மறைந்தனரோ
உன் நேசத்தை மறந்தனரோ
உன்னை உள்ளங்கையில்
வரைந்த தேவன் மறவாரே என் மகளே - ஏன் இந்த

3. துக்கத்தால் துவண்டாயோ
துயரத்தால் தவிக்கின்றாயோ
உன் துக்கம் சந்தோஷமாகும்
கலங்காதே என் மகளே (2) - ஏன் இந்த

## பாடல் - 1718

**அப்பாவும் நீங்கதான் அம்மாவும் நீங்கதான்**
எல்லாமே நீங்கதானய்யா
நீங்க வந்தாலே போதும் சந்தோஷம்தான்
தினம் ஆடலும் பாடலும் தான் - 2

1. உம்மோடு உறவாடிட
என் மனசெல்லாம் மகிழுதையா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
ஆகா ஆனந்த சந்தோஷமே - அப்பாவும்

2. உம்மை நான் துதிக்கையிலே
என்னில் புது பெலன் நிரம்புதையா (2)
என்ன சுகம் அது என்ன சுகம்
ஆகா என்றென்றும் சுகம் தானே - அப்பாவும்

3. உம் சித்தம் செய்வதினால்
என் வாழ்க்கையெல்லாம் சிறக்குதையா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
ஆகா ஆனந்த சந்தோஷமே - அப்பாவும்

## பாடல் - 1719

**இயேசுவே அழகே ஆனந்தமே,**
நித்திய பேரின்பமே (2)

1. வெள்ளை நிலவே வெண் பால் வெளியே
தெளிந்த நல் அமுதே தெளிவிக்கும் அறிவே

2. குளிர்விடும் நிலையே கூந்தளிர் மடலே
சுவை தரும் கனியே
உம் திருவாய் மொழியே - இயேசுவே

3. பசும்புல் மணியே பவளக் கொடியே
கொடியிடை தங்கிடும் காலைக் கதிரே

4. ஜீவ நதியே, சிலிர்த்திடும் தென்றலே
சுபிட்சம் தந்திடும் அருள் நிறை மழையே

## பாடல் - 1720

**காலம் பொல்லாதது காத்துக் கிடக்காது**
இலக்கை விட்டு விட்டால் பரிசும் கிடைக்காது

திறப்பிலே நின்றிட யார் இங்கே
சுவரை அடைத்திட யார் இங்கே - 2

எழும்பிடு கிதியோனே நீ எழும்பிடு
விழித்தெழு தெபோராளே நீ விழித்தெழு - 2

1. கோதுமை மணியாய் உன்னை இன்று விதைத்திடு
கர்த்தருக்கு உந்தன் வாழ்வை கொடுத்திடு – 2 – திறப்பிலே

2. இரவும் பகலும் நதியளவு கண்ணீர்விடு
தேசத்திற்காய் தேவனை நோக்கிப் போராடு – 2 – திறப்பிலே

3. ஏசுவைப் போல நீயும் இன்று எழும்பிடு
யேசபேலின் ஆவிகளைத் துரத்திடு – 2 – திறப்பிலே

## பாடல் - 1721

**அன்பரே உம் பாதத்தில்**
எப்போதும் காத்திருப்பேன்
உம் சமூகத்தில் நான் மகிழ்ந்திருப்பேன்
உம் பாதத்தில் இளைப்பாறுதல்

1. யாக்கோபைப் போல் நான் பற்றிக் கொள்வேன்
என் முழு பெலத்தோடு போராடுவேன் – 2
நீர் ஆசீர்வதிக்காவிடில் விடமாட்டேன்
உம் பாதத்தை பற்றிக் கொண்டு விடமாட்டேன் – அன்பரே

2. எலிசா எலியாவைப் பற்றிக் கொள்வேன்
இரட்டிப்பான அபிஷேகம் பெற்றுக் கொண்டார்
உம் பாதத்தை நானும் பற்றிக் கொள்வேன்
இரட்டிப்பான அபிஷேகம் பெற்றுக் கொள்வேன் – அன்பரே

3. மரியாளை போல் நான் அமர்ந்திருப்பேன்
என் நல்ல பங்கை தெரிந்து கொள்வேன்
என் நல்ல பங்கு நீர்தானையா – உம்
பாதம் எனக்கு போதுமையா (2) – அன்பரே

## பாடல் - 1722

**கிறிஸ்துவுக்காய் எழும்பிடு சேனை வீரரே**
சேனைகளின் கர்த்தர் நம் முன்னே செல்கிறார்
அவர் ராஜாதி ராஜன், தேவாதி தேவன்
கர்த்தாதி கர்த்தன் அஞ்சிடாதே

1. பார்வோனின் படை கண்டு அஞ்சிடாதே
பரம தேவன் நம் துணை நிற்கிறார்
பாரதத்தை நாம் சுதந்தரிப்போம்
பரிசுத்தர் கொடி ஏற்றுவோம் (2)
(வெற்றி நமக்கே வெற்றி நமக்கே)

2. சகல ஜனத்திற்கும் சுவிசேஷத்தை
சாட்சியாய் நின்று பறை சாற்றுவோம்
சவாலுடன் ஊழியம் செய்திடுவோம்
சாத்தானை ஜெயித்திடுவோம் (2)
(வெற்றி நமக்கே வெற்றி நமக்கே)

3. ஆத்தும பாரம் கண்ணீரோடே
ஆவியில் நிரம்பி ஜெபித்திடுவோம்
ஆர்ப்பரித்து நாம் துதித்திடுவோம்
அலங்கத்தை இடித்திடுவோம் – நாம்
அல்லேலூயா பாடிடுவோம் உங்க

**பாடல் - 1723**

**கிருபை இல்லாம நான் வாழ முடியாது**
உங்க கிருபை இல்லாம ஒரு அணு அசையாது
நான் நிற்பதும் நான் நடப்பதும் உங்க கிருபையே
நான் உயிரோடு வாழ்வதும் உங்க கிருபையே

1. இரவினில் தூங்குவதும் உங்க கிருவையே
காலையில் எழுவதும் உங்க கிருபையே 2
வேலைக்கு போவதும் உங்க கிருபையே
வீட்டுக்கு திரும்புவதும் உங்க கிருபையே
நிம்மதி தருவதும் உங்க கிருபையே (2)

2. தாழ்வில் நினைத்தது உங்க கிருபையே
உயர்த்தி வைத்ததும் உங்க கிருபையே 2
உணவு தந்தது உங்க கிருபையே
ஆசீர்வாதம் தருவதும் உங்க கிருபையே 2

**பாடல் - 1724**

**இயேசுவே தேவனே உம் பாதம் வந்தேனே**
ஜெபம் கேளும் பதில் தாரும் (2)

1. எனக்கொரு வாழ்வு நீர் தர வேண்டும்
நீரில்லா வாழ்வு வாழ்வாகுமோ (2)
வரம் வேண்டி வந்தேன் வாழ்வு தாருமே

2. ஜெப ஆவி எனக்கு நீர் தர வேண்டும்
ஜெப ஆவியாலே நிரம்பிட வேண்டும் 2
ஜெபமின்றி வாழ்வில் ஜெயமில்லையே
ஜெபிக்கிற மனிதனாய் மாற வேண்டும் 2

3. சோதனை நேரம் பெலன் தர வேண்டும்
போதனை செய்து வழி காட்ட வேண்டும்

4. உமக்காக என்னை அர்ப்பணித்தேனே
ஊழியம் செய்ய கிருபை தாருமே (2)

## பாடல் - 1725

**வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்**
வாக்கை நிறைவேற்றிடுவார் இந்த நாளிலே

1. வாலாக்காமல் உன்னை தலையாக்குவார்
கீழாக்காமல் உன்னை மேலாக்குவார் 2

2. வாதை உன்னை அணுகாது
பொல்லாப்பு உனக்கு நேரிடாது (2)

3. நிச்சயமாய் முடிவு உண்டு
உன் நம்பிக்கை வீண் போகாது (2)

4. நமக்கு விரோதமாய் எழும்புகிற
ஆயுதங்கள் வாய்க்காதே (2)

## பாடல் - 1726

**யேகோவாயீரே உமக்கே ஆராதனை**
யேகோவாநிசியே உமக்கே ஆராதனை
ஆராதனை (4)

2. யேகோவாரஃபா உமக்கே ஆராதனை
யேகோவா ரூபா உமக்கே ஆராதனை

3. யேகோவா ஓசேனு உமக்கே ஆராத
யேகோவா சிட்கேனு உமக்கே ஆராதனை

4. யேகோவா சாலோம் உமக்கே ஆராதனை
யேகோவா சம்மா உமக்கே ஆராதனை

## பாடல் - 1727

**கர்த்தருக்கு பயந்து அவர்**
வழியில் நடப்பவன்
பாக்கியவானே! பாக்கியவானே!
உன் கையின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாயே!
உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்குமே!

1. பாரங்கள் அனைத்தையும்
கர்த்தர் மேல் வைத்து விடு
அவரே நம்மை ஆதரிப்பாரே
கலங்காதே திகையாதே
கர்த்தர் நம்மோடிருக்கிறார்

2. ஒன்றுக்கும் வருந்தாதே
எல்லாவற்றையும் ஸ்தோத்திரத்தோடு கூட
விண்ணப்பம் செய்திடு
கலங்காதே திகையாதே
கர்த்தர் நம்மோடிருக்கிறார்

3. சோதனை வேளையில் சோர்ந்து போகாதே
சோர்வை விலக்கி ஜெயம் தருவாரே
கலங்காதே திகையாதே
கர்த்தர் நம்மோடிருக்கிறார்

## பாடல் - 1728

**உம்மை உயர்த்தி உயர்த்தி துதிக்கின்றோம்**
உம்மையுள்ளவரே
உம்மை பாடி பாடி துதிக்கின்றோம்
பரிசுத்தமானவரே

1. தூதர்கள் போற்றும் தூயவரே
துதிகளின் மத்தியில் வாழ்பவரே
துதிக்கிறோம் தூயவரே
புகழ்கிறோம் புன்னியரை

2. மாந்தர்கள் போற்றிடும் மன்னவரே
மகிமை மாட்சிமை நிறைந்தவரே
உயர்த்துகிறோம் உன்னதரே
போற்றுகிறோம் – பரிசுத்தரை

3. அல்பாவும் ஒமேகாவுமானவரே
ஆதியும் அந்தமு மானவரே
ஆராதிப்போம் அற்புதரை
வாழ்த்துகிறோம் வல்லவரை

## பாடல் - 1729

**உம்மைப் போல மாறனும் இயேசையா**
உம்மை போல வாழனும் இயேசையா

இயேசையா கிருபை தாங்கையா (2)



அட்டவணை

1. உம்மை போல நானும் ஜெபிக்கனுமே
உம்மை போல நானும் ஜெயிக்கனுமே

2. உம்மை போல ஊழியத்தை செய்யனுமே
உம்மை போல ஆத்ம பாரம் வேண்டுமே

3. அபிஷேகத்தில் உம்மை போல நிறையனுமே
அற்புதங்கள் உம்மை போல செய்யனுமே

4. உம்மை போல தேவ சத்தம் கேட்கணுமே
உம்மை போல தேவ சித்தம் செய்யனுமே

5. சத்தியத்தை உம்மைப் போல போதிக்கணுமே
நித்தியத்தில் ஜனங்களை சேர்க்க வேண்டுமே

## பாடல் - 1730

**என் உயிரும் நீரே என் உறவும் நீரே**
என் பேச்சும் நீரே என் மூச்சும் நீரே
என் ஜீவனும் நீரே என் தேவனும் நீரே 2

1. தாயும் நீரே தந்தையும் நீரே
சொந்தம் நீரே பந்தமும் நீரே (2)
உம் நேசத்தாலே சோகமடைந்தேன்
நேசரின் அன்பினாலே என்னை மறந்தேன்
என் உயிரே உயிரே உம்மை துதிப்பேன் 2

2. ஆசை நீரே வாஞ்சையும் நீரே
நினைவும் நீரே கனவும் நீரே
உம்மோடு வாழ ஆவல் கொண்டேனே
உம்மை தவிர வேறு விருப்பம் இல்லையே
என் உயிரே உயிரே உம்மை துதிப்பேன் 2

3. வாழ்வில் நீரே உயர்விலும் நீரே
பாசம் நீரே நேசமும் நீரே (2)
உந்தன் சவுகத்தில் உம் நேசம் கண்டேனே
நீரில்லா வாழ்வை நினைக்க முடியவில்லை
என் உயிரே உயிரே உம்மை துதிப்பேன் 2

## பாடல் - 1731

**நீரே நல்லவரே நீரே பரிசுத்தரே**
வாழ்க, வாழ்க உம்மை
என்றென்றும் போற்றிடுவோம்

1. சத்திய தேவனே வாழ்க
நித்திய தேவனே வாழ்க – 2
ஒரு மனமாய் ஆராதிப்போம் – 2
சேர்ந்து உம்மை போற்றிடுவோம் – நீரே

2. ராஜாதி ராஜனே வாழ்க
கர்த்தாதி கர்த்தனே வாழ்க
ஒரு மனமாய் ஆராதிப்போம் – 2
சேர்ந்து உம்மை போற்றிடுவோம் – நீரே

3. அற்புத தேவனே வாழ்க
அதிசய தேவனே வாழ்க (2)
ஆனந்தமாக ஆராதிப்போம் (2)
ஆர்ப்பரித்து உம்மை வாழ்த்துவோம் – நீரே

## பாடல் - 1732

**உன் காரியங்கள் கை கூடுமே**
என் இயேசுவின் நாமத்தினால்

1. என் தேவன் தம்முடைய
மகிமை செல்வத்தினால்
குறைகளை எல்லாம் கிறிஸ்துவுக்குள்
நிறைவாக்கி நடத்திடுவார்

நெஞ்சமே கலங்காதே நெஞ்சமே திகையாதே

2. ஒன்றுக்கும் கலங்காமல்
எல்லாவற்றையும் குறித்து
விண்ணப்பத்தோடும் தோத்திரத்தோடும்
தேவனிடம் சொல்லிடுங்கள்

3. வரப் போகும் ரட்சகரை
எதிர்பார்த்து வாழ்ந்திடுவோம்
நம்முடைய குடியிருப்போ
பரலோகத்தில் உண்டு

4. ஆத்துமாவே கர்த்தரையே
ஸ்தோத்தரித்து போற்றிடு
அவர் செய்த நன்மைகளை
மறவாமல் புகழ்ந்து துதித்திடு
துதித்திடு நெஞ்சமே துதித்திடு

## பாடல் - 1733

**உயிரோடு உயிராக கலந்தவரு யாரு சொல்லு**
எங்க இயேசு (3) என்று சொல்லு
இதயத்திலே துடிதுடிப்பாய் வைத்தவரு யாரு சொல்லு
நம்ம இயேசு (3) நல்லா சொல்லு
தாயின் கருவில் தெரிஞ்சவரு
என் பேரை சொல்லி அழைச்சவரு – 2

எனக்காக (3) மரித்தீரே
எனக்காக (3) உயிர்த்தீரே

1. பூமியில் வந்தாரே அன்பை விதைத்தாரே
சந்தோஷம்தான் சந்தோஷம்தான் – 2
அன்று நடந்த அற்புதங்கள்
இன்று இங்கு நடக்கும் ஐயா – 2
குறைகள் எல்லாம் நிறைவாய் மாறும்
இயேசு மட்டும் எனக்கு போதும் – எனக்காக

2. கிருபை தருபவர் பெருக செய்பவர்
ஆராதிப்போம் ஆராதிப்போம்
யோசனை தந்து நடத்திடுவார்
பெரிய காரியம் செய்திடுவார் – 2
உலகத்தை ஜெயித்தார் சாத்தானை அழித்தார்
கண்ணீரைத் துடைத்து சுகம் கொடுப்பார் – எனக்காக

3. உன்னைப் படைத்தவர் என்னைப் படைத்தவர்
அழகானவர் அழகானவர்
என்னை (எங்களை) தூக்கி சுமந்தாரைய்யா
கண்மணி போல் காத்தாரைய்யா – 2
நீயும் நானும் அவரின் சொந்தம்
உலகத்தை நாமும் கலக்கிடுவோம் – எனக்காக

## பாடல் - 1734

**வல்ல ஆவியே தூய ஆவியே**
உமக்கே ஸ்தோத்திரம் ஐயா
கோடி நன்மைகள் எனக்கு செய்தீர்
நன்றி நன்றி ஐயா
கன்மலை மேல் நிறுத்தி வைத்தீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
துன்ப நேரத்தில் என் ஆறுதல் ஆனீர்
நன்றி நன்றி ஐயா

நன்றி ராஜா 4 நன்றி தகப்பனே

1. உம் கண் இமைக்குள் மூடி வைத்தீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
என் கண்ணீரை துடைத்து விட்டீர்
நன்றி நன்றி ராஜா
உம் உள்ளங் கையில் என்னை வவரைந்து வைத்தீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
உம் இதயத்தினுள் வாழ வைத்தீர்
நன்றி நன்றி ராஜா - நன்றி

2. மான் கால்களை எனக்கு தந்தீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
பெலவீனத்தில் பெலனானீர்
நன்றி நன்றி ஐயா
நான் இடறும் போது தாங்கினீரே
ஸ்தோத்தரம் ஸ்தோத்திரம் ஐயா
வியாதி நேரத்தில் குணம் தந்தீர்
நன்றி நன்றி ஐயா - நன்றி

3. உம் கரத்தில் அடைக்கலம் தந்தீர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
பரலோகத்தை திறந்து தந்தீர்
நன்றி நன்றி ஐயா
நான் கலங்கும் போது தாங்கினீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஐயா
ஜெப வேளையில் பதில் தந்தீரே
நன்றி நன்றி ஐயா - நன்றி

## பாடல் - 1735

**அபிஷேக நாதனுக்கு**
அனந்த சொருபனுக்கு - (2)
சரணம் சரணம் சரணம்

1. இன்ப நல்தேவனுக்கு இனிய நல் நாதனுக்கு - 2
துன்பம் போக்குவோனுக்கு துயரம் நீக்குவோனுக்கு - (2)

2. ராஜாதி ராஜனுக்கு தேவாதி தேவனுக்கு 2
கர்த்தாதி கர்த்தனுக்கு கருணை மணாளனுக்கு 3
சரணம் சரணம் சரணம்

3. நித்திய தேவனுக்கு உத்தம நல் ராஜனுக்கு 2
சத்திய போதனுக்கு சரித்திரம் தந்தோனுக்கு
சரணம் சரணம் சரணம்

4. பரலோக தேவனுக்கு பரம நல் ராஜனுக்கு 2
பாசம் காட்டிய நம்மை நேசிக்கும் தேவனுக்கும்-(2)
சரணம் சரணம் சரணம்

5. உன்னத தேவனுக்கு உயர்ந்த நல் ராஜனுக்கு 2
மண்ணிலே வாழ வைக்கும் மகிமை மணாளனுக்கு-(2)
சரணம் சரணம் சரணம்

## பாடல் - 1736

**இனிய இக்காலை விடிகின்ற வேளை**
இனிய குரலில் நான் இயேசுவைப் பாடி
இசையினால் துதித்து மகிழும் இவ்வேளை

1. தூதரும் நானும் சேர்ந்து
துதித்துப் பாடும் இந்த வேளை - (2)
நேயமாய் இயேசுவின் பாதம் - 2
அமர்ந்து நான் ஜெபிக்கும் வேளை - 2

புதுக்காலை புதுக்கிருபை
புது நன்மை கிடைக்கும் வேளை - இனிய

2. வான்காண் பறவை எல்லாம்
வாழ்த்திப் பாடும் இந்த வேளை
நீர் வாழ் உயிர்கள் எல்லாம் - 2
நீந்தி மகிழும் இவ்வேளை - புதுக்காலை

3. சிருஷ்டிகர் படைத்த எல்லாம்
சிரம் தாழ்த்திப் பணியும் இவ்வேளை 2
குடும்பமாய் அமர்ந்து உம் பாதம் 2
துதித்து நான் ஜெபிக்கும் வேளை - புதுக்காலை

## பாடல் - 1737

**உனக்கு விரோதமாய் எழும்பும் ஆயுதம்**
வாய்க்காதே வாய்க்காதே
ஒருவழியாய் வருவான் - எதிரி
ஏழு வழியாய் ஓடுவான் - 2
வெட்கப்பட்டு போவதில்லையே -
நீவெட்கப்பட்டு போவதில்லையே - 2 - உனக்கு

1. எப்பக்கம் நெருக்கினாலும்
ஒடுங்கி நீ போவதில்லை
கலக்கமடைந்தாலும்
மனமுறிவடைவதில்லை
துன்பப்படுவதினாலும்
கைவிடப்போவதில்லை
கீழே விழுந்தாலும் மடிந்து நான் போவதில்லை

ராஜா இயேசு நம்ம பக்கமே
அவர் சேனை என்றும் நம்ம பக்கமே 2
வெற்றி 5 வெற்றியே 2 - உனக்கு

2. எதிர்த்து வரும் எரிகோவை
தகர்த்தெரியும் வல்லமை
தடுத்து நிற்கும் சாத்தானை
முறித்தெரியும் வல்லமை
அக்கினியில் நடந்தாலும்
எரிந்திடாத வல்லமை
தண்ணீரிலே நடந்தாலும்
மூழ்கிடாத வல்லமை - ராஜா இயேசு

**பாடல் - 1738**

**உனக்குள் இருப்பது அது ராஜாவின் அபிஷேகம்**
எனக்குள் இருப்பது அது கர்த்தரின் அபிஷேகம்
நமக்குள் இருப்பது அது தெய்வீக அபிஷேகம்
நம்மை வாலாக்காமல் தலையாக்கும்
மேலான அபிஷேகம்
நம்மை கீழாக்காமல் மேலாக்கும்
தெய்வீக அபிஷேகம்
அபிஷேகம்... அபிஷேகம்...

1. ஆரானின் சிரசின் மேல் வடிந்த அபிஷேகம்
பார்வோனின் சேனைகளை விரட்டின அபிஷேகம்
மோசேயோடு கன்மலை மேல் இறங்கின அபிஷேகம் – இன்று
ஆசையோடு தரிசிக்க நான் விரும்பும் அபிஷேகம்

2. சாமுவேல் தலையின் மேல் இறங்கின அபிஷேகம்
தாவீதின் கூடாரத்தை நிரப்பின அபிஷேகம்
எலியாவின் சால்வையில் இருந்த அபிஷேகம்
எலிசாவை வல்லமையால் நிரப்பின அபிஷேகம்

3. பெந்தேகோஸ்தே நாளிலே இறங்கின அபிஷேகம்
அக்கினி மயமான நாவுகளாக அமர்ந்த அபிஷேகம்
பிரகாசிக்கும் சுடர்களாக மாற்றும் அபிஷேகம் – நம்
விசுவாசிக்கும் கானானுக்குள் சேர்க்கும் அபிஷேகம்

**பாடல் - 1739**

**என்னை வாழவைக்கும் அன்பு தெய்வமே**
என்னை தாங்கி நடத்தும் அன்பு இயேசுவே
நீங்க இல்லாத ஒரு நிமிஷம் கூட
என்னால நெனச்சு பார்க்க முடியல (2)

1. நான் போகும் இடமெல்லாம் நீங்க வரணும்
நான் அமரும் இடமெல்லாம் நீங்க அமரணும் (2) – நான்
பேசும் பேச்சிலெல்லாம் நீங்க இருக்கணும்
நீங்க இல்லாம நான் இல்லையே – 2

2. தனிமையிலே நான் நடந்து போது
தோளோடு தோள் கோர்த்த தேவனே – 2
தவறி நான் கீழே விழுந்த போது
தூக்கியே சுமந்து சென்ற தெய்வமே – 2

3. கண்ணீரில் நான் நடந்து போது
கண்ணீரை துடைத்தெறிந்த தேவனே – 2
கலங்கியே நின்ற எந்தன் வாழ்வில் – 2
ஒளியாக வந்துதித்த தெய்வமே – 2

**பாடல் - 1740**

**என் முடிவுக்கு விடிவு நீரே**
என் வாழ்வுக்கு உதயம் நீரே
என்னையா தெரிந்துக்கொண்டீர்? – 2
என்னையா அழைத்து விட்டீர்? –2 – அப்பா
தகுதி இல்லாத என்னை தகுதியாய் மாற்றி
கன்மலையில் நிறுத்தினீரே – 2 – என்

1. பூமியிலே நான் பரதேசி ஆனால்
உமக்கோ இப்பொழுது விசுவாசி – என்

2. புல்லைப்போல் உலர்ந்திடும் என் வாழ்க்கை
ஆனால் உம்மிடத்தில் எனக்கோர் இடம்தந்தீர் – என்



அட்டவணை

3. குயவன் கையில் களிமண் போல்
தேவனே என்னை வனைகின்றீர் - என்

4. சோதித்தப்பின் சுத்த பொன்னாக
இந்த மண்ணிலே என்னை வீளங்க செய்வீர் - என்

### பாடல் - 1741

**கனியிலும் அதிமதுரம் இயேசுவின் நாமம்**
மனிதரில் பேரின்பம்
அது நளத் தைலத்திலும் விலையுயர்ந்த
உடைந்திட்ட நறுமணம்
ஊற்றுண்ட பரிமளம் -2

1. மணம் வீசும் கமழ் கொண்ட வாசனை தைலம்
ஆசையுடன் முகர்ந்த பொற்பாதமே -2
நாசியில் சுவாசமுள்ள மனுஷர்கள் யாவரும்
நேசித்து சுவாசிக்கும் உயிர் மூச்சென் ஏசுவே
கந்த வர்க்கம் நளத் தைலம்
லீபனோனின் வாசனை வீசும்
வெள்ளை போளம் பரிமளமே
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
உள்ளத்தின் நேசர் என் அன்பு தேவன் - கனியிலும்

2. கன்னங்கள் கந்தவர்க்க பாத்திகள் போல
வாசனை வீசிடும் லீலி புஷ்பமே -2
கரங்கள் படிகப் பச்சை பதித்த பொன் போல - 2
அங்கமோ இந்திரநீல இரத்தினம் இழைத்த பிரகாசம் -2
கால்கள் பொன் ஆதார வெள்ளை கல் தூண்கள்
ரூபம் லீபனோனின் கேதுரு போல
பாலில் கழுவின அழகு கண்கள்
மதுரம் ஆனவர் இனிமை ஆனவர்
இவரே எந்தன் பிரியமானவர் - கனியிலும்

### பாடல் - 1742

**கிறஸ்துவுக்காக இயேசுவுக்காக**
ஜீவன் தந்த தேவனுக்காக - (2)
ஏதாவதொன்றை செய்ய
என் மனம் துடிக்குது - 2
கிறிஸ்துவுக்காக இயேசுவுக்காக - 2
ஏதாவதொன்றை செய்ய
என் மனம் துடிக்குது

1. அவர் கரத்தின் கிரியைகள் நினைக்கும் போது
ஏதாவதொன்றை செய்ய என் மனம் துடிக்குது - (2)
அவர் கரத்தின் செய்கைகள் நினைக்கும் போது - (2)
ஏதாவதொன்றை செய்ய என் மனம் துடிக்குது - (2) - கிறிஸ்துவுக்காக

2. ஒரு தகப்பனைப் போல் சுமந்ததை நினைத்தால்
ஏதாவதொன்றை செய்ய மனம் துடிக்குது - (2)
ஒரு தாயைப் போல அணைத்ததை நினைத்தால் - (2)
ஏதாவதொன்றை செய்ய மனம் துடிக்குது - (2) - கிறிஸ்துவுக்காக

3. என் ஜீவன் எனக்குள் இருக்கும் வரைக்கும்
ஏதாவதொன்றை செய்ய என் மனம் துடிக்குது - (2)
என் பலவீனத்தில் உயர்த்தி மகிழ்ந்ததால்
ஏதாவதொன்றை செய்ய என் மனம் துடிக்குது - 2 - கிறிஸ்துவுக்காக

## பாடல் - 1743

**சர்வ அங்க தகனபலி – எங்கள்**
சர்வ வல்ல தேவனுக்கு
உதடுகளின் ஸ்தோத்திர பலி – எங்கள்
உன்னத நல் ராஜனுக்கு – 2
ஸ்தோத்திர பலி – 3
நான் செலுத்தும் பலி – 2 - சர்வ அங்க

1. அசைவாட்டும் ஜீவபலி – எங்கள்
அசைவாடும் தேவனுக்கே
பிசைந்த மாவின் ஓர் மெல்லிய பலி
எங்கள் மெல்லிய நல் ராஜனுக்கே
ஸ்தோத்திரபலி – 3 - சர்வ அங்க

2. என் சமாதான ஜீவபலி – எங்கள்
சமாதான தேவனுக்கே
இடித்து பிழிந்த திராட்சை ரசத்தின் பலி
என்னை நடத்திடும் தேவனுக்கு ஸ்தோத்திர பலி

3. என் கைகளின் காணிக்கை பலி
என்னை வாழ வைக்கும் தேவனுக்கு
என் ஆவி ஆத்ம சரீர பலி
என்னை ஆளுகின்ற தேவனுக்கு ஸ்தோத்திர பலி – 3
நான் செலுத்தும் பலி – 2 - சர்வ அங்க

## பாடல் - 1744

**சுமைதாங்கி இயேசு சுமக்கின்ற போது**
சுமைகளை நீ ஏன் சுமந்திட வேண்டும்
இமை மூடாது உன்னை காக்கிற தேவன்
இருக்கையிலே நீ கலங்குவதேன்

1. வருந்தி பாரம் சுமக்கும் நீயும் அவரிடம் வந்திடு
திருந்தி நீயும் இயேசுவிடம் உன்னை தந்திடு
இதயத்தின் பாரம் யார் சொல்லலாகும்
யாரிடம் சொன்னால் எந்தன் பாரம் தீரும்
தோளின் மேல் சுமந்து செல்கின்ற நேசர் - 2
அருகினில் சென்றால் உந்தன் பாரம் தீரும் - 3 - வருந்தி

2. இக்கால பாடுகள் உன்னை என்ன செய்யும்
கர்த்தரின் கரமே உன்னை தாங்கி செல்லும் - 2
ஆலய வாசலின் அழுகின்ற சப்தம் - 2
ஆண்டவரின் சமூகத்தில் கேட்டிடும் என்றும் - வருந்தி

## பாடல் - 1745

**நரம்பு கூட இயேசுவுக்கு நன்றிசொல்லுது - என்**
என் எலும்பு கூட இயேசுவுக்காய் நிமிர்ந்து நிற்குது
வயிறுகூட இயேசுவுக்காய் பசியை தாங்குது
என் உயிரே இயேசுவே என்று சொல்லுது

1. கண்ணீரோடு கண்கள் அவரை நோக்கிப் பார்க்குது - என்றும்
நன்மை செய்த நல்லவருக்கு நன்றி சொல்லுது
என் முழங்கால்கள் மண்டியிட்டு தினமும் ஜெபிக்குது -2
கண்ணீர் ஜெபம் தேவன் கேட்பார் என்று நம்புது என் - நரம்பு கூட

2. என் ஆத்துமா கர்த்தருக்காய் காத்திருக்குது
தினம் நேர்த்தியாக ஸ்தோத்திரங்கள் சொல்லி மகிழுது
என் இருதயமோ இரவும் பகலும் விழித்திருக்குது
என் உறவே என் மறைவிடமே என்று சொல்லுது - நரம்பு கூட

3. ஜீவன் தந்த தேவனுக்கே நன்றி கூறுவேன்
என் ஆவி ஆத்மா சரீரம் முழுவதும் அர்ப்பணிக்கிறேன்
இலக்கை நோக்கி ஜீவ பயணம் தொடர்ந்து ஓடுவேன்
பரிசுத்தமாய் வாழ்ந்து தேவ ஊழியம் செய்வேன் - நரம்பு கூட

## பாடல் - 1746

**பரலோகில் வாழும் கூட்டம் என்ன கூட்டம்**
தேவ பரமனையே போற்றிப் பாடும் பக்தர் கூட்டம்
அல்லேலூயா அல்லேலூயா என்று ஆடியே பாடும் கூட்டம்
அப்பன் இயேசு பக்கத்திலே நின்றிடும் பக்தர் கூட்டம்

அல்லேலூயா அல்லேலூயா ஓசன்னா - ஆமென்
அல்லேலூயா அல்லேலூயா ஓசன்னா - 2

1. இருபத்து நான்கு மூப்பர் சூழ்ந்த கூட்டம்
என்றும் சிரம் தாழ்த்தி
தேவனையே பணியும் கூட்டம்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் என்று
ஓயாமல் சொல்லிப் பாடும் தூதர் கூட்டம் - அம்மா - பரலோகில்

2. ஆட்டுக் குட்டியானவரின் இரத்தத்தாலே
தம்மை தோய்த்து வெளுத்த பரிசுத்தர் கூட்டம்
குருத்தோலை தங்கள் கையில் ஏந்திக் கொண்டு
ஓசன்னா சொல்லிப் பாடும் பக்தர் கூட்டம் - இயேசுவுக்கு - பரலோகில்

3. மரித்தவர் முன்னோராக எழுந்திருக்க
பின்பு உயிரோடிருக்கும் நாமும் பறந்து செல்ல
தூதர் கணங்களோடு வானில் தோன்றி
நம்மை தம்மோடு சேர்க்கும் இயேசு ராஜா கூட்டம் - பரலோகில்

## பாடல் - 1747

**மனிதனிடம் தேவன் காட்டிய அன்பு - இந்த**
மண்ணிலே மனிதனாக உதித்தது

அன்பு... அன்பு... அன்பு... தேவ அன்பு

1. அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது
அன்புக்கு பொறாமையில்லை
அன்பு தன்னை புகழாது
இறுமாப்பாய் இராது
அயோக்கியத்தை செய்யாது
தற்பொழிவை நாடாது
கோபம் கொள்ளாது
அன்பு தீங்கு நினையாது - அன்பு

2. அன்பு சகலத்தையும் தாங்கும்
சகலத்தையும் சகிக்கும்
சகலத்தையும் விசுவாசிக்கும்
சகலத்தையும் நம்பும்
அன்புக்கு ஆழமில்லை
அன்புக்கு உயரமில்லை
அன்புக்கு ஈடில்லை இணையேதுமில்லை
அன்புக்கிணையேதும் இல்லை

3. தரிசனமானாலும் ஒழிந்துபோம்
அன்பு ஒழியாது
அந்நிய பாஷையானாலும் ஓய்ந்து போம்
அன்பு ஓயாது
விசுவாசம் நம்பிக்கை அன்பு
இம்மூன்றும் நிலைத்திருக்கும்
இவைகளில் எல்லாம் அன்பே பெரியது
அந்த அன்பை நாடுங்கள் - அன்பு
விசுவாசம் நம்பிக்கை அன்பு
இம்மூன்று நிலைத்திருக்கும்
இவைகளில் எல்லாம் அன்பே பெரியது
அந்த அன்பை நாடுங்கள் - அன்பு

## பாடல் - 1748

**மனிதனால் நிறுத்த முடியுமா**
இந்த அபிஷேகத்தை
மனிதனால் தடுக்க முடியுமா - (2)

முடியாது... முடியாது - 4 இந்த
அபிஷேகத்தை நிறுத்த முடியாது - 2

இந்த அபிஷேகத்தை
மனிதனால் நிறுத்த முடியுமா

1. அக்கினியின் அபிஷேகம்
அனல் மூட்டும் அபிஷேகம்
கொழுந்து விட்டு எரியும் அபிஷேகம்
எழுப்புதலின் அபிஷேகம் - 2 - முடியாது

2. ஆவியின் அபிஷேகம்
ஆண்டவரின் அபிஷேகம்
மகிமையின் அபிஷேகம்
மாறாத அபிஷேகம் - (2) - முடியாது

3. வல்லமையின் அபிஷேகம்
உன்னத அபிஷேகம்
வாக்குமாறா அபிஷேகம்
உருமாற்றும் அபிஷேகம் - முடியாது

## பாடல் - 1749

**ஜெபத்தின் நாயகனே**
எங்கள் தவத்திரு திருமகனே
அகிலம் போற்றும் மகிபன் உம்மை - 2
வாழ்த்தி வணங்குகிறோம்
உம்மை உம்மை - நாங்கள்

1. ஆவியின் அபிஷேகத்தால்
எங்களை நிரப்பி மகிழணுமே
அந்நியபாஷை பரலோக பாஷை - (2)
பாடி மகிழணுமே நாங்கள் - 2 - ஜெபத்தின்

2. பரிசுத்த ஸ்தலத்தினிலே
நாங்கள் துதித்து மகிழணுமே
பரலோக அக்கினி பலி பீடத்திலே - (2)
பரவசம் ஆகணுமே -2

3. ஆராதனை அபிஷேகம்
எங்கள் சபையில் இறங்கணுமே
ஏறெடுக்கும் எந்த தேவைகட்கும் - 2
நீர் பதில் தந்து மகிழணுமே - எங்களுக்கு 2

## பாடல் - 1750

**ஸ்தோத்திரம் பண்ண என் உபத்திரம் போச்சு**
துதிச்சுப் பாடினேன் என் தரித்திரம் போச்சு
அல்லேலூயா - 6 நான் ஆடிப்பாடுவேன்

1. அல்லேலூயா சொன்னதாலே அல்லல் நீங்கிப் போச்சு
உள்ளமெல்லாம் இன்பத்தாலே பொங்கி எழலாச்சி -2
ஆண்டவரை அழைச்சதாலே ஆபத்து நீங்கிப் போச்சு - 2
அவரை வேண்டி வேண்டி துதிச்சதாலே வேதனை நீங்கிப் போச்சு - 2

2. தேவனே என்றதாலே தேவை நிறைவாச்சு
கர்த்தாவே என்றதாலே கட்டுகள் உடைஞ்சிப் போச்சு - 2
வல்லவரே என்றதாலே வல்லமை கிடைக்கலாச்சு - 2
நல்லவரே என்றதாலே நன்மை கிடைக்கலாச்சு - 2

3. அன்பரே என்றதாலே அன்பு அதிகமாச்சு
நண்பரே என்றதாலே நட்பு நெருங்கிப் போச்சு - 2
இன்பரே என்றதாலே இதயம் பூரிப்பாச்சு - 2
உன்னதரே என்றதாலே உள்ளம் நிறைவாச்சு - 2 - ஸ்தோத்திரம்

## பாடல் - 1751

**கேரீத் ஆற்றங்கரையில்**
நீரூற்று வற்றிப் போனாலும் - 2
மேரிபாவின் ஊற்றண்டை கண்ட தேவன்
உன்னையும் கண்டிடுவார்

எலியா ஓ எலியா தேவன் உன் வாழ்வில் ஒளியா

1. தீர்க்கனின் பசி தீர்க்க
காகம் விரைந்தது அன்றோ - அன்று
உந்தனின் தாகம் தீர்க்க
தேவன் வருகின்றாரே - தேவன் - எலியா

2. சமாரியா கிணற்றண்டையில்
அந்த ஸ்திரியை கண்ட தேவன்
உன்னையும் கண்டிடுவார்
உன் தாகம் தீர்த்திடுவார்
சமாரியா ஓ சமாரியா - இயேசு உன்
வாழ்வில் நல்ல சமாரியன்

3. கடலில் வலை வீசி
வெறுமையாய் நிற்கின்றாயே
இயேசு வருகின்றார்
உன் படகை நிரப்பிடுவார்
பேதுரு ஓஹோ பேதுரு
இயேசு உன் வாழ்வில் கேதுரு

## பாடல் - 1752

**ஆராதனை செய்யும் நேரம்**
ஆத்துமாவின் சந்தோஷ நேரம்
ஆராதனை - 4

1. கண்களின் விருப்பமே ஆராதனை ஆராதனை
பலத்தின் முக்கியமே ஆராதனை ஆராதனை
அலங்கார மகிழ்ச்சியே ஆராதனை ஆராதனை
ஆத்தும வாஞ்சையே ஆராதனை ஆராதனை

2 ஆதார துருகமே ஆராதனை ஆராதனை
அடைக்கலப் பட்டணமே ஆராதனை ஆராதனை
ஆருயிர் தோழனே ஆராதனை ஆராதனை
அனுகூல துணையே ஆராதனை ஆராதனை

3 நேசத்தின் உச்சிதமே ஆராதனை ஆராதனை
பாசத்தின் பர்வதமே ஆராதனை ஆராதனை
உருக்கத்தின் சிகரமே ஆராதனை ஆராதனை
ஆசீர்வாத மழையே ஆராதனை ஆராதனை

4 ஏழையின் பெலனே ஆராதனை ஆராதனை
எளியோரின் திடனே ஆராதனை ஆராதனை
பெருவெள்ள அணையே ஆராதனை ஆராதனை
வெயிலுக்கு நிழலே ஆராதனை ஆராதனை

## பாடல் - 1753

**மாற்றுகிற இயேசு உன் மனசுக்குள்ள வந்தா**
மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் தானா வரும்
துக்கம் எல்லாம் மாறிப் போகும்
துயரம் எல்லாம் ஓடிப் போகும்
தொல்லை என்பது இல்லாமல் போகும்
தோல்வி எல்லாம் ஜெயமாய் மாறும்

1. பாவம் எல்லாம் பறந்தே போகும்
பரிசுத்தம் மட்டும் கூடவே வரும்
இருளான வாழ்க்கை இல்லாமல் போகும்
கட்டுகள் எல்லாம் காணாமல் போகும்

2. பழைய வாழ்க்கை பை பை சொல்லும்
புதிய வாழ்க்கை வெல்கம் பண்ணும்
நித்திய வாழ்க்கை தேடி வரும்
நிம்மதி அதுவும் தானா வரும்

### பாடல் - 1754

**மகிமைக்கும் கனத்திற்கும் பாத்திரரே**
மங்காத புகழை உடையவரே
நிரந்தர அதிகாரம் உள்ளவரே
நித்தியமாய் எங்களை ஆள்பபவரே

இராஜா இயேசு ராஜா – நீரே ராஜாதி ராஜா
ராஜாதி இயேசு ராஜா – நீரே
ராஜாதி ராஜா ராஜாதி ராஜா

2. பெருமைக்கும் புகழ்ச்சிக்கும் உரியவரே
பெரிய காரியங்கள் செய்பவரே
சகல அதிகாரம் உள்ளவரே
சர்வத்தையும் படைத்த சிருஷ்டிகரே

3. தொழுகைக்கும் துதிக்கும் அதிபதியே
மகத்துவம் மாட்சிமை உம் துதியே
கிருபையின் ஐசுவரிய சம்பன்னரே
மரணத்தை ஜெயித்த மன்னவரே

### பாடல் - 1755

**துதிப்பேன் உம்மை துதிப்பேன்**
மகிமை செலுத்தி துதிப்பேன்

துதியும் கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே

1. கிருபைகள் என்னில்
பெருகச் செய்தீரே ஸ்தோத்திரம்
உம் கரங்களால் என்னை
காத்துக் கொண்டீரே ஸ்தோத்திரம்

புகழும் கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே

2. சோதனை என்னை சூழ்ந்த
போதும் நீர் காத்தீர்
வேதனை என்னில் வந்த போதும்
கிருபை தந்தீர்

மகிமை கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே

3. கண்ணீர் என்னில் வந்த போதும்
நீர் துடைத்தீர்
என் ஏக்கங்கள் எல்லாம்
நீரே தீர்த்தீர்

துதியும் கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே

## பாடல் - 1756

**பரிசுத்தத்தின் பூரணரே**
இறங்கியே வாருமையா
பின்மாரியைத் தாருமையா
பெரும் அறுவடை தாருமையா

1. அன்பின் பூரணத்தால்
உம் அடியாரை நிரப்புமையா
கசப்பான வேர்கள் யாவும்
உம் கிருபையால் அகற்றுமய்யா
ஆத்தும பாரத்தால் தினம் எம்மை நிரப்பி
அழுதிட வரம் தாரும்

2. கிருபையின் ஆசிகளால்
எம் தேசத்தை நிரப்பி
வறண்ட எம் பாரதத்தை செழிப்பாக மாற்றி
ஆயிரம் ஆயிரம் ஜனங்களை மீட்டு
சபையதனில் சேருமையா

## பாடல் - 1757

**மகிழ்ச்சியின் தேவனே**
சந்தோஷத்தின் தேவனே
என்றும் மகிழ்ந்தே பாடுவோம்

1. எண்ணில்லா நம்மைகள்
அளவில்லா கிருபைகள் செய்த தேவனை
நன்றி சொல்லியே துதித்தே பாடுவோம்

நேற்றும் இன்றும் என்றும் மாறா
எங்கள் இயேசுவே
புது பாடல்களை பாடி
உம்மை ஆராதிக்கிறோம்

2. பாடுகள் நெருக்கங்கள்
கலங்கிடும் நேரங்கள் பாடிப் போற்றியே
கவலை மறப்போமே
மகிமை செலுத்துவோம்

3. வாலிப சேனையை எழும்பிடச் செய்திடும்
சேனை அதிபரை வீரமுழக்கமாய்
உயர்த்தி மகிழுவோம்

## பாடல் - 1758

**கொண்டாடு கொண்டாடு மனம் மகிழ்ந்து கொண்டாடு**
கர்த்தரின் ஜெயத்தை கொண்டாடு

கைகள் கொட்டியே தாளம் தட்டியே
கர்த்தர் நாமம் பாடிடு

1. பார்வோன் சேனையை கடலில் அழித்தவர்
கர்த்தர் ஜெயத்தை பாடிடு
சாத்தான் சேனையை - சிலுவையில்
ஜெயித்தவர் மீட்பர் ஜெயத்தை பாடிடு

2. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
போராட்டம் நமக்கு இல்லையே
வான மண்டல பொல்லாத ஆவிகள்
நம்மை ஜெயிப்பதில்லையே

3. தேவன் தந்திட்ட சர்வ ஆயுதம்
கையில் ஏந்திடுவோமே
பிசாசின் தந்திர வலையை அறுத்து
ஜெபத்தில் ஜெயித்திடுவோமே

## பாடல் - 1759

**பலவான் நீர் பலவான் நீர்**
உம் கையில் நாங்கள் அம்புகள்
உம் நாமத்தில் நாங்கள்
நிச்சயம் ஜெயிப்போம்
நீர் எங்கள் பக்கத்தில் இருந்தால்

1. எங்கள் முன் எரிகோ கோட்டைகள்
உயர்ந்தெழும்பி முன் நின்றால்
எங்கள் துதியினால் கெம்பீர சத்தத்தால்
வீழ்ந்திடும் அழிந்திடும்

2. கோலியாத் எதிர்த்து வந்தால்
வீரமாய் முழக்க மிட்டால்
சேனையில் கர்த்தரால்
யுத்தத்தில் வல்லவரால்
சென்றிடுவோம் வென்றிடுவோம்

3. சாத்தானின் சதி திட்டங்கள்
ஆமானின் ஆலோசனைகள்
எங்கள் ஜெபத்தினால்
முழங்காலின் வல்லமையால்
முறிந்திடும் உடைந்திடும்

## பாடல் - 1760

**ஆவியானவரே என்மேல் ஊற்றிடுமே**
தாகத்தோடும் பாரத்தோடும்
உந்தன் சமூகத்தில் வந்துள்ளோம்
நிரப்ப வேண்டும் நிரப்ப வேண்டும்
உந்தன் ஆவியை ஊற்றிடுமே

என் பாத்திரம் (நிரம்பி -5) வழியட்டும்

1. ஆதி நாட்களில் நடந்தது போல்
இக்காலத்திலும் எங்களை நடத்தும்
எழுப்புதல் பற்றி எரிய
எங்களை பயன்படுத்தும்

2. ஆவியின் வரங்கள் எங்களுக்குள்
அதிகமாக வளர வேண்டும்
எழுப்புதல் பற்றி எரிய
எங்களை பயன்படுத்தும்

3. ஜெபத்தின் ஆவி எங்களுக்குள்
அதிகமாக ஊற்றிடுமே
முழங்காலில் கதறி ஜெபிக்க
அபிஷேகம் தாரும்

## பாடல் - 1761

**இயேசுவை பிரகடனப் படுத்துவோம்**
அவர் நாமத்தை மகிமைப்படுத்துவோம்

அவர் நல்லவர் சர்வ வல்லவர்
நாமம் உயர்த்துவோம்

1. மலை மீது ஏறும் சுவிசேஷம் கூறும்
பாதம் என்றும் அழகானதே
இருளான பூமி ஒளியாக மாறும்
இயேசுவை சொன்னால் எல்லாமே மாறும்

2. அலை அலையாய் மாந்தர் அறியாமை இருளால்
அழிகின்ற நிலைதான் பரிதாபமே
திறப்பிலே நின்று கதறிட நீயும்
வருவாயா என்று கேட்கிறார் இயேசு

3. கிராமங்கள் தோறும் சாபத்தில் வாழும்
மாந்தர்கள் கூட்டம் ஏராளமே
அறுப்பு தான் மிகுதி ஆட்களோ கொஞ்சம்
அறிவிக்க உன்னை அழைக்கிறார் இயேசு

## பாடல் - 1762

**எந்தன் ஆத்துமா உம்மை தேடுதே**
உந்தன் கிருபையால் என்னை நடத்துமே

கிருபையே கிருபை தாருமே
நீரே கிருபையே கிருபை தாருமே

1. உம்மைப் போற்றுவேன்
உந்தன் அன்பை பாடுவேன்
உந்தன் சாட்சியாய்
என்றும் உமக்காய் வாழுவேன்

2. குயவனின் கையிலே
ஒரு களிமண்ணைப் போலவே
என்னை என்றும் தருகிறேன்
உந்தன் சித்தம் செய்யுமே

3. நம்பிக்கை தேவனே
என்னை கைவிடா கர்த்தரே
உந்தன் கையில் வரைந்தீரே
கண்மணிபோல் காத்தீரே

### பாடல் - 1763

**சிலுவை சுமந்தே பின் செல்லவே**
அர்ப்பணித்தேன்

1. சிலுவையின் உபதேசம் உலகத்திலே
கெட்டுப் போவோர்க்கென்றும் பைத்தியமாம்
வாலிப வயதில் உம்மை நான் பின்பற்ற
என் வாழ்வை அர்ப்பணிப்பேன்

2. உன்னத வாழ்வினை பெற்றிடவே
உடலை அடக்க கற்றிடவே
என் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும்
பலியாக அர்ப்பணித்தேன்

### பாடல் - 1764

**இயேசுவை சொல்லுவோம் தேசத்தை வெல்லுவோம்**
அவரின் நாமம் இரட்சகரே
அவரின் வழிகள் தூய்மையானதே
அவரை பறை சாற்றுவோம்

இயேசுவை பிரகடனப்படுத்துவோம்

1. உலக ரட்சகர் அவர்
அவரை உலகமெங்கும் சொல்லுவோம்
நேற்றும் இன்றும் மாறா
அவரை உலகம் காணச் செய்வோம்
நீதி செய்வாரே நித்தியம் தருவாரே
அவரை பறை சாற்றுவோம்

2. மனம் இரங்கும் தேவன்
மனுக்குலமே அறியச் செய்வோம்
காக்கும் தேவன் அவரை
கால் மிதிக்கும் எங்கும் செல்வோம்
மேன்மையானவர் மகிமையானவர்
அவரை பறை சாற்றுவோம்

3. இரக்கம் காட்டும் தேவன்
அவரை இளைஞர் அறியச் செய்வோம்
வல்ல தேவன் அவரை
இந்த தேசம் உணரச் செய்வோம்
உருக்கம் நிறைந்தவர் உலக ரட்சகர்
அவரை பறை சாற்றுவோம்

## பாடல் - 1765

**கிறிஸ்துவின் போர் வீரரே**
யுத்தத்தின் ஜெய வீரரே
சேனையின் அதிபர் எழுந்து விட்டார்

சுதந்தரிப்போம் இந்த தேசத்தை
இந்தியா ... இயேசுவின்
சொந்தமாய் ... மாறுமே

1. எரிகோவை கண்டு அஞ்சிடோம்
எதிரியின் பெலத்தால் கலங்கிடோம்
துதியின் ஆயுதம் பிடித்துள்ளோம்
தூயரால் கோட்டைகள் தகர்த்திடுவோம்

2. சத்துருவின் தந்திரம் சிதறிடும்
சத்திய கச்சையை கட்டுவோம்
அக்கினியாஸ்திரம் அவித்திடும்
விசுவாச கேடயம் பிடித்திடுவோம்

3. இந்தியா இயேசுவை ஏற்கவே
இரத்த சாட்சியாய் எழும்புவோம்
இறுதிவரை அவர் சேவையில்
தியாகமாய் அவருக்கே உழைத்திடுவோம்

## பாடல் - 1766

**ஜெயத்தை தருபவர் இயேசுதான்**
துதித்திடுவோம் துதித்திடுவோம்
ஜெபித்திடுவோம் ஜெபித்திடுவோம்
சுதந்தரிப்போம் சுதந்தரிப்போம் இயேசு நாமத்தில்

1. வாழ்க்கையிலே வந்திடும்
சின்ன தோல்விகள் பனி போல
உருகிப் போகும் இயேசு நாமத்தில்
தோல்விகளை வெற்றியாக
மாற்றிடும் தேவன்
நமக்குள் என்றும் இருப்பதால்
கலங்கிட வேண்டாம்

2. சூழ்நிலைகள் மாறி மாறி
எதிராய் வந்தாலும்
சுற்றும் முற்றும் பல தடைகள்
எதிர்த்து வந்தாலும்
அபிஷேக வல்லமை எனக்குள் உண்டு
எதுவும் என்னை எதுவும் செய்ய முடியாது

3. பாவத்திலே சிக்கி தவிக்கும்
மனிதர் கூட்டத்தை மீட்பதற்காக
படை போல எழும்பிடுவோம்
எரிகோவும் தாகோனும்
இல்லாமற் போகும்
எனக்குள் இருக்கும் வல்லவர்
எதையும் செய்யும் வல்லவர்

### பாடல் - 1767

**அன்பின் நாதா எனக்கென்று**
ஒன்றையும் நான் விரும்பவில்லை
தமக்கென்று ஒன்றுமின்றி
வந்தீரே நீர் ஏழைக்காக

1. பாரில் வாழ்ந்தேன் எனக்கென்றே
பாதி வாழ்க்கை கடந்ததய்யோ
மீதி வாழ்க்கை யாருக்காக
நீதி தேவா நின் மகிமைக்கல்லோ

2. நன்றி கெட்ட நீசன் என்னை
நம்பி தந்தீர் உந்தன் பணி
நாதா இனி எனக்கல்ல
உந்தனுக்கே பிழைத்திருப்பேன்

3. உந்தன் அன்பின் ஆழம் கண்டேன்
எந்தன் வாழ்வை அர்ப்பணித்தேன்
எந்தன் நேரம் எந்தன் எல்லாம்
உந்தன் பணி சேவைக்கல்லோ

### பாடல் - 1768

**நினைக்கும் தேவன் உண்டு**
நித்தமும் நடத்துவார்
அவர் கோலுமம்ம தடியுமே என்னை
தேற்றி நடத்துமே

1. மரண பாதையிலே நடந்த வேளையிலே
ஜீவ தேவன் ஜீவன் தந்தார்
பாடி மகிழந்திடுவேன்

2. ஊழிய பாதையிலே உடைந்த நேரத்திலே
உண்மை தேவன் உயிர்ப்பித்தாரே
உயர்த்தி போற்றிடுவேன்

### பாடல் - 1769

**தெய்வத்தின் சந்நிதானம்**
என் உள்ளத்தின் ஆனந்தமே
காருண்யமாம் அவர் சத்தம்
என் காதுகளுக்கு இன்பமே

1. கசந்த மனம் புதிதாக்கும் நல்அன்பு
கசந்த ஆத்துமாவினில் சக்தி தரும்
அவர் தந்த வாக்குத் தத்தங்கள்
உன்னை அனுதினம் வழி நடத்தும்

2. உலகத்தில் முன்னிலை நிர்ப்பந்தமே
நோக்கிடு கல்வாரி நாயகனை
இயேசுவில் பாதத்தில் வந்திடுவாய்
ஆறுதல் பெற்றிடுவாய்

### பாடல் - 1770

**நான் உம்மை தேடும் நேரம்**
நான் உம்மை பாடும் நேரம்
நான் உம்மை தியானிக்கும் நேரம்
நீர் வர வேண்டும்

1. நான் போற்றும் தேவனே
உம்பாதம் தஞ்சமே
கர்த்தர் கர்த்தாதி கர்த்தர் வாழ்க
உம் நாமம் வாழ்க

2. நான் நேசிக்கும் இயேசுவே
உம் அன்பு போதுமே
தேவா தேவாதி தேவா வாழ்க
உம் நாமம் வாழ்க

3. நான் வணங்கும் தெய்வம்
உம் நாமம் இன்பமே
ராஜா ராஜாதி ராஜா வாழ்க
உம் நாமம் வாழ்க

## பாடல் - 1771

**சேனைகளின் தேவன்**
நம்மோடு இருக்கின்றார்
நல்லவர் அவர் வல்லவர்
அடைக்கலமானவர்

1. எரிகோ போன்ற சோதனைகள்
எதிரிட்டு வந்தாலும்
தகர்த்திடுவார் நொறுக்கிடுவார்
ஜெயத்தை தந்திடுவார்

2. சேனையின் கர்த்தரை நம்பிடுவோம்
பாக்கியம் அடைந்திடுவோம்
உயர்த்திடுவார் தாங்கிடுவார்
நன்மையால் நிரப்பிடுவார்

3. தேவ வார்த்தைகள் ஜீவனாமே
என்றென்றும் அறிக்கை செய்வோம்
ஜெயம் தருவார் ஜெயித்திடுவோம்
ஜெயம் பெற்று வாழ்ந்திடுவோம்

## பாடல் - 1772

**நாம் ஆராதிக்கும் தேவன்**
அவர் ஜீவனுள்ள தேவன்
அவர் ஆபிரகாமின் தேவன்
ஈசாக்கின் தேவன்
யாக்கோபின் தேவன் நம் தேவன் – அவர்

1. ஆபிரகாம் விசுவாசித்தான்
நீதிமானின் ஆசிகள் பெற்றான்
விசுவாச மார்க்கத்தாலே
ஆபிரகாமின் பிள்ளைகளாய்
ஆசிகளை சுதந்தரிப்போம்

2. ஈசாக்கு விதை விதைத்தான்
நூறத்தனை ஆசிகள் பெற்றான்
பரலோக பலன்களை மகிமையாய் அடைந்திட
மகிழ்வுடன் பிழைத்திடுவோம்

3. யாக்கோபு வேண்டுதல் செய்தான்
உயிர் பிழைத்திட ஆசிகள் பெற்றான்
விசுவாச ஜெபத்தினால் உன்னதரின்
திருமுக ஆசிகளை அடைந்திடுவோம்

## பாடல் - 1773

**என் இயேசு ராஜன் வருவார்**
எண்ணில் அடங்கா தூதரோடு
என்னை மீட்ட இயேசு ராஜன்
என்னை ஆளவே வருவார்

1. அவர் வருகை எதிர்பார்க்கும் பக்தர்க்கு
அவர் வருகை மிகப் பெரும் மகிழ்ச்சி
அவர் வருகையை எதிர்பாரா மாந்தர்க்கு
அவர் வருகை மிகப்பெரும் அதிர்ச்சி

2. வானில் ஓர் பேரொளி தோன்றும்
விண்ணில் ஓர் விண்ணொளி தோன்றும்
மேற்கும் கிழக்கும் நடுங்க
மேகங்கள் மீதே வருவார்

3. உலகின் நடப்பவை எல்லாம் அவர்
வருகையின் உண்மையைக் கூறும்
அவர் வருகை மிகவும் சமீபம்
அவர் வருகையைச் சந்திக்க ஆயத்தமா

## பாடல் - 1774

**ஏழை எனக்கு அடைக்கலம் அவரே**
பெலமுள்ள கன்மலை வெளிச்சமுமே
கூப்பிடும் போது பதில் தந்திடும்
நல் பரிசுத்தராம் என் இயேசு தேவன்

1. வழி தப்பி நடந்த என் கால்களையும்
ஜீவ பாதையில் நடத்தினீரே
புதிதாக்கினீர் என் ரூபத்தையும்
புகழ்ந்து பாடுவேன் காலமெல்லாம்



அட்டவணை

2. கார் முகில் போல் துன்பம் வந்த நேரம்
காருண்ய கரத்தில் வரைந்த என்னை
காத்த உன் தயை நான் வர்ணிப்பேனே
கல்வாரி நாயகா காலமெல்லாம்

### பாடல் - 1775

**சீயோனே சீயோனே உன் வல்லமையை**
இன்று தரித்துக் கொள்
உன் நேசர் வருகிறார்

1. வருவேன் என்றவர் தாமதியாரே
வந்திடும் நேரம் நெருங்கிடுதே
கறைதிரை இல்லாத மணவாட்டியாய்
நிறைவாய் இயேசுவை சந்தித்திடுவோம்

2. நீதியின் சால்வையை தரித்திடுவோம்
நித்திய சேவையில் விரைந்திடுவோம்
இரட்சிப்பின் ஆடை அலங்காரமாய்
இயேசுவின் கரத்தில் திகழ்ந்திடுவோம்

3. அல்லேலூயா பாடிடும் பரமனின் சேனை
ஆர்ப்பரிப்போடு முன் சென்றிடும்
பரமனின் முகம் காணும் நாளதிலே
மகிமையின் சாயலை அடைந்திடுவோம்

### பாடல் - 1776

**இயேசுவுக்காய் தொண்டு செய்திடவே**
ஏகமாய் எழும்பிடுவீர் சபையே
நாசமிந் நானிலத்தில் வருதே

1. தமக்கு முன் வைத்த மகிமை எண்ணி
தளராமல் பாடுங்கள் சகித்தவரை
நோக்கியே நாம் ஓடிடுவோம்
தாங்கியே காப்பாரே கடைசி வரை

2. பாவத்தில் மா ஜனம் அழிகிறதே
லோகத்தின் இரட்சிப்பைக் கருதியே நாம்
நள்ளிரவோ நடுப்பகலோ
நருங்குண்ட ஆவியில் ஜெபித்திடுவோம்

3. பேதுரு பவுலும் ஸ்தேவானும் அன்று
பெரும் ரத்த சாட்சியாய் மரித்தது போல்
புறப்படுவோம் இயேசுவுக்காய்
போர் முனையில் ஜீவன் வைத்திடவே

4. ஒருவரும் கிரியை செய்ய இயலா
இருண்ட ராக்காலம் எதிர்படு முன்
ஏகோபித்து எழும்பிடுவோம்
இயேசுவின் சத்தியம் சாற்றிடவே

5. மேகத்தில் இயேசுதான் தோன்றிடும் நாள்
வேகத்தில் நெருங்கிடும் காலமிதில்
பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டே
பரமனுக்காய் கடும் சேவை செய்வோம்

## பாடல் - 1777

**கல்வாரி சிநேகம் கரைத்திடும் நெஞ்சை**
கல் மனம் மாற்றி கரைந்தோடச் செய்யும்

1. காலங்கள் தோறும் காவலில் உள்ளோர்
காணட்டும் உம்மை கனிவோடு என்றும்
குருசதின் இரத்தம் குரல் கொடுக்கட்டும்
கும்பிடுவோரை குணமாக்கும் தேவன்

2. இருளான வாழ்வு இன்னமும் வாழ்வோர்
இனியாவது உம் திரு முகம் காண
நாதா உம் சிநேகம் பெருகட்டும் என்னில்
என்னை காணுவோர் உம்மை காணட்டும்

3. அற்பமான வாழ்வு அற்புதமாய் மாற
அனைத்தையும் தந்தேன்
ஆட்கொள்ளும் தேவா நான் சிறுகவும் நீர் பெருகவும்
தீபத்தின் திரியாய் எடுத்தாட்கொள்ளும்

## பாடல் - 1778

**ஜெபிப்போம் செயல்படுவோம்**
இயேசுவின் நாமத்தை உயர்த்துவோம்
தேசத்தில் எழுப்புதல் அக்கினி இறங்க
தேவனை நோக்கி கதறிடுவோம்

1. உலகத்தை கலக்கும் மனிதன் எங்கே
அக்கினி இறக்கும் தாசன் எங்கே
கர்த்தரே தெய்வம் மெய்யான தெய்வம்
என்றுறைக்கும் நாட்கள் எங்கே

2. ஆதி அப்போஸ்தலர் நாட்களிலே
நடந்த அற்புதம் கண்டிடவே
சபைகளில் உயிர் மீட்சி பெற்றிடவே
ஒரு மனதோடு ஜெபித்திடுவோம்

3. ஜெபித்திடும் நேரம் செயல்படுவோர்
செயல்படும் நேரம் ஜெபித்திடுவோர்
கர்த்தருக்கென்றும் ஆகாதவர்
காலத்தை அறிந்தே செயல்படுவோம்
காலத்தை அறிந்தே ஜெபித்திடுவோம்

## பாடல் - 1779

**கர்த்தருக்குள் எப்பொழுதும்**
சந்தோஷமாயிருங்கள்
சந்தோஷமாயிருங்கள்
ஒன்றும் நீங்கள் கவலைப்படாமல்
தேவனுக்கு தெரிவியுங்கள்

1. இயேசு நல்லவர் அன்புள்ளவர்
மன உருக்க முடையவரே
எங்கள் ஜெபங்களை அவர் கேட்பவர்
பதில் நிச்சயம் தருவாரே

2. எல்லா புத்திக்கும் மேலான
தேவ சமாதானம் இருதயத்தை
இயேசு கிறிஸ்துவின் சிந்தையால்
நம்மை நிரப்பி காத்துக் கொள்ளும்

3. இயேசு வானவர் மகிமையின் நம்பிக்கை
நமக்குள்ளே அவர் இருப்பதால்
பயமில்லையே
தேவன் என் துணையே

## பாடல் - 1780

**கர்த்தர் நம்மோடு இருக்கின்றார்**
அச்சமில்லை பயமில்லை
தோல்வியில்லை
இஸ்ரவேலின் ராணுவத்தின்
தேவன் அவரே
நமக்காய் யுத்தம் செய்யும் அதிபதியே

1. சாத்தானை ஜெயம் கொண்ட எங்கள் இயேசு
சர்வ வல்லமை உடையவரே
வானத்திலும் பூமியிலும் அதிகாரங்கள்
நமக்காய் தந்தவர் அவரல்லவா
விசுவாசமென்னும் கேடயத்தை பிடிப்போம்
ஆவியின் பட்டயம் ஏந்தி
நாங்கள் ஜெப சேனையாய் எழும்புவோம்

2. எரிகோ மதில் எழும்பி நின்றாலென்ன
யூதாவின் துதியினால் இடிந்து விழும்
பார்வோனின் சேனைகள் சூழ்ந்தாலென்ன
செங்கடலை கடந்து முன்னேறுவோம்
அக்கினி ஸ்தம்பம் வரும் மேகஸ்தம்பம் வரும்
முன்னும் பின்னும் அவர் சமூகம்
நாங்கள் எக்காளம் ஊதி செல்லுவோம்

## பாடல் - 1781

**மணவாளன் வரும் நேரம்**
மணவாட்டி சபையே நீ
விழித்திருந்தால் பாக்கியமே
புத்தியுள்ள கன்னிகை போலாவாய்

1. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு
அழைக்கப்பட்டோர்கள் பாக்கியவான்கள்
நேசர் வந்து கதவைத் தட்டும்
நேரத்தில் விழித்திருப்போர் பாக்கியவான்கள் பாக்கியவதிகள்

2. ஏழு பொன் குத்து விளக்கின் மத்தியிலே உலாவும்
மனுஷகுமாரன் சீக்கிரம் தேவன்
நியாயம் செய்யும் தேவன் வாசலில் வந்து விட்டார்
விழித்திருப்போம் வானை நோக்கியே

## பாடல் - 1782

**சிங்காசனத்தில் வீற்றிருப்பார்**
தேவன் இயேசு கிறிஸ்து
துதி கனம் மகிமை எல்லாம்
அவருக்கே செலுத்திடுவோம்

1. ராஜாதி ராஜன்
கர்த்தாதி கர்த்தர்
உன்னத மானவரே உலகத்தின் ஒளிநீரே

2. தேவன் சபையில் வாசமாகி
நடுவிலே உலாவுகிறார்
அற்புத தேவன் நீரே அதிசயமானவரே

3. இயேசுவின் நாமத்தில் பிதாவே உம்மை
தொழுதிடுவோம் பணிந்திடுவோம்
சர்வ வல்லவரே பரிசுத்தமுள்ளவரே

## பாடல் - 1783

**மாற்றினார் என்னை மாற்றினார்**
மகா தேவனே
தன்னை போல் மாற்றினார்
தேவசாயல் ஆக்கினார்

1. மண்ணிலிருந்து என்னை எடுத்து
ஜீவ சுவாசம் தந்தாரே
ஜீவாத்துமா நான் ஆனேனே
புது ஜீவன் ஆனேனே

2. விண்ணிலிருந்து மண்ணில் இறங்கி
தேடி வந்த தெய்வமே
நித்திய ஜீவனை தந்தாரே
அன்பு இயேசு ராஜனே

3. கண்ணீர் ஜெபத்தில் என்னை நினைத்து
இரத்தம் சிந்திய இரட்சகரே
இரட்சிப்பின் அன்பை பாடுவேன்
பரிசுத்தமானவரே

## பாடல் - 1784

**யுத்தத்தில் வல்லவர் சேனையின் கர்த்தர்**
வல்லமையுடையவரே
துதிகளில் எல்லாம் பயப்படத்தக்கவர்
பரிசுத்தர் பரிசுத்தரே

1. ஜாதிகள் உண்மை சேவிப்பார்கள்
ஜனங்கள் உம்மிடம் வருவார்கள்
மாமிசமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றும் இரட்சகரே

2. அற்புத தேவன் அதிசய ராஜன்
மகத்துவமுடையவர் இயேசுவே
மகிமைகள் சூழும் அவர் சமூகத்தில்
மகிழ்ந்திருப்போம் நாம் ஜெயதொனியால்

3. சத்துரு வெள்ளம் போல் வந்தாலும்
கர்த்தரின் ஆவியே கொடி ஏற்றுவார்
அக்கினி ரதங்கள் அக்கினி குதிரைகள்
தூதர்கள் காற்றாய் நமக்குண்டு

## பாடல் - 1785

**நெஞ்சமெல்லாம் நீரே**
நிறைந்திருப்பீர் தேவா
எண்ணி மகிழ்வேனே உமதன்பை
என்றும் மறவேனே உமதன்பை

1. நீரோடை வாஞ்சிக்கும்
மான்களைப் போலவே
கர்த்தரின் சமூகத்தை தேடிடுவேன்
காலையும் மாலையும் தேவனின்
பிரசன்னம் என்னை நிரப்பும் மகிமையே

2. எண்ணிலடங்காத நன்மைகள் எனக்கு
செய்தவரே உம்மை துதித்திடுவேன்
இராமச்சாமத்திலும் விழிப்புடன் இருந்தே
நேசரின் வருகைக்காய் காத்திருப்பேன்

3. மன்னவரின் நேசம் நான் மலரடி சேர
என்னை வழி நடத்தும் உமது வேதம்
சொன்ன மொழி யாவும் என்னில் நிறைவேறும்
சத்திய வார்த்தைகள் நிச்சயமே



அட்டவணை

## பாடல் - 1786

**பரலோக சந்தோஷம் பாரினில் வந்து**
என்னை பரவசப் படுத்துகிறதே
பரமபிதா நீர் என்னை தந்தை
பாவி நான் உந்தன் பிள்ளை (ஆமென்)

1. புத்திர சுவிகார ஆவியினால்
நீர் என்னை பிரித்தெடுத்தீர்
புரியாத உணர்வாலே என்னை தேற்றுவீர்
அது உன்னத பெலன் அல்லவா

2. என் பிரிய இயேசு என் இனிய நேசர்
என்னோடு இருப்பார் என்றும்
ஜீவ ஒளியாக எந்தன் இருள் வாழ்வில்
வந்தார் தெய்வீகமான அன்பே

3. பரலோகம் எனக்குள் உருவாகுதே இங்கே
அந்த பரமனைக் கண்டு கொண்டேன்
அவர் திருவாய் மொழி எனக்கு அருமருந்தாகுமே
தினமும் பலகோடி துதி பாடுவேன்

## பாடல் - 1787

**இயேசுவின் நாமத்தை**
ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
என்ன வந்தாலும் அஞ்சிடேன் நான்
ஸ்தோத்தரிப்பேன்

1. தேவன் பாதம் அமர்ந்து
அவர் வார்த்தைகள் கேட்பேன்
தினமும் அவரின் முகத்தின்
தரிசனம் பெறுவேன்
இயேசு ராஜனே என் இதய தீபமே
நேசரின் அன்பை எந்நாளும் பாடுவேன்

2. தேவா உந்தன் கிருபை
அது எனக்கு போதுமே
என்னை வழி நடத்தும் உமது கரமே
உமது கண்ணில் நான்
இரக்கம் பெற்றேனே
என் ஆயுள் முழுவதும் சங்கீதம் பாடுவேன்

3. மனமோ தளராது
தேவ மகிமையைப் புகழ்வேன்
சந்தோசம் மகிழ்ச்சி அதனால் அடைவேன்
இயேசு தேவனே என்னில்
உயிர் வாழ்கிறார்
அவர் பிரசன்னத்தால் நானும் பிரகாசிப்பேன்

**பாடல் - 1788**

**இரத்தத்தால் என்னை மூடிக் கொள்ளும்**
இரத்தத்தால் என்னை மறைத்துக் கொள்ளும்
இயேசுவின் இரத்தம் எங்கள் பாதுகாப்பு
இயேசுவின் இரத்தம் ஜெயம் தருமே 2

1. கல்லூரி இரத்தம் என் மேலே உள்ளது
மின்னும் சூடரொளி பட்டயமே
சாத்தான் என்னை நெருங்காமல்
அக்கினி வேலி அடைத்துக் கொள்வேன்

2. எகிப்தில் சங்காரம் நடந்த போது
இஸ்ரவேல் ஜனங்களை மீட்ட ரத்தம்
உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த
தேவாட்டுக்குட்டி இயேசு ரத்தம்

3. பஸ்காவின் இரத்தம் பரிசுத்தமானது
வீடுகள் நிலைக் காலில் பூசிக் கொள்வோம்
எங்கள் குடும்பங்கள் சபைதனில்
தெளித்துக் கொள்வோம்
பாளையம் முழுவதும் காவல் செய்வோம்

**பாடல் - 1789**

**இயேசு என்னை இரட்சித்துக் கொண்டார்**
தூய ரத்தம் சிந்தி மீட்டெடுத்தார்
பரலோக தேவனின் பரிசுத்த நாமத்தை
சபையிலே தொழுது கொள்வோம்

1. பரிசுத்த ஆவி கண்காணியாக
தம் மந்தையில் சேர்த்துக் கொண்டார்
அவர் சொந்த ஜனமாய்
வெளிச்சத்தின் பிள்ளைகளாய்
பெயர் சொல்லி அழைத்தாரே
நம்மை மகிமைப் படுத்தினாரே

2. ராஜரீகமான ஆசாரிய கூட்டமாய்
கட்டப்பட்டு வருகின்றோம்
கிறிஸ்துவின் சபையில் அவயங்களாக
இசைவாக இணைந்திடுவோம்
ஆவிக்கேற்ற மாளிகையில் நாங்கள்
ஒளி வீசும் ஜீவ கற்களே

3. நீர்க் கால்கள் ஓரம் நடப்பட்ட மரம் போல
கனி கொடுத்து செழித்து வாழ்வோம்
ஜீவ வசனத்தை பிடித்து உலகத்தின் சுடராய்
ஒளியாய் பிரகாசிப்போம்
தேவ சித்தம் நிறைவேற்றுவோம்
தேவ ராஜ்ஜியத்தை அறிவிப்போம்

## பாடல் - 1790

**அன்பான இயேசுவின் அன்பு தான்**
உலகத்தின் மெய்யான அன்பு
தேடி வந்து என்னைக் கண்டு
மீட்ட இரட்சகர் அன்பு

1. அன்பு ஒருக்காலும் ஒழியாது
தேவ அன்பே நிலையானது
சகலமும் தாங்கும் சகலமும் சகிக்கும்
சகலமும் நம்பும் விசுவாசிக்கும்

2. நீடிய சாந்தம் தயவுள்ளது
தன்னை புகழாது பொறாமையில்லை
சினமடையாது தீங்கு நினையாது
சத்தியத்தால் அன்பு சந்தோஷப்படும்

3. அன்பு திரளான பாவம் மூடும்
பூரண அன்பே பயம் விலக்கும்
பரிசுத்த ஆவியால் தேவ அன்பை
எங்கள் உள்ளத்தில் இயேசு ஊற்றினாரே

## பாடல் - 1791

**சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்**
பரிசுத்தர் பரிசுத்தரே
சேராபீன்கள் கேரூபீன்கள் வாழ்த்தும்
பரிசுத்தர் பரிசுத்தரே
(அல்லேலூயா யேகோவா - 2)

1. பட்சிக்கும் அக்கினி பாவங்களை கண்டிக்கும்
பரிசுத்த தேவன் அவரே
அல்லேலூயா யேகோவா - 2

2. பயப்படுவோம் இயேசு நாமத்துக்கு
நாங்கள் நடுங்குவோம்
அவர் வசனத்துக்கு அல்லேலூயா யேகோவா - 2

3. தேவ மகிமை சூழட்டுமே
தேவ கிருபை தாங்கட்டுமே
(அல்லேலூயா யேகோவா - 2)

## பாடல் - 1792

**திக்கற்ற பிள்ளைகளின் தேவன் இயேசு**
அநாதைகளின் அடைக்கலம் இயேசு
உன்னை ஆற்றுவார் தேற்றுவார்
அவரணைப்பார் அன்பான இயேசு

1. ஏழைகளின் வழக்கை விசாரிப்பார்
எளியவரின் கூக்குரலை கேட்டிடுவார்
நீதியின் மேலே பசிதாகமுள்ளவரே
நீடிய சாந்தம் தயவுள்ளவர்

2. யாரும் உனக்கில்லை யென்று ஏங்குகின்றாயா?
நம்பினவர்கள் கை விட்டு வாழ்கின்றாயா
அன்னாளின் ஜெபங்களை கேட்ட கர்த்தர்
ஆகாரின் கண்ணீரை துடைத்தவரே

3. நல்ல சமாரியன் இயேசுவே
எண்ணெய் பூசி காயங்கள் கட்டுவார்
இரண்டு பணம் கொடுப்பார் போஷிப்பார்
உன்னை சபையிலே சேர்ப்பார் பராமரிப்பார்

## பாடல் - 1793

**நன்றி நன்றி நன்றி என் இயேசு தேவா நன்றி**
நீர் செய்த எல்லா நன்மைக்காய் நன்றி

1. நன்றி மறவாத இதயத்தை தாரும்
நாள்தோறும் உம்மை துதிக்க ஏங்குகிறேன்

2. இன்றும் நாங்கள் உம்மைத் தேடி வந்தோம் தேவா
நல்லாசி கூறி ஆசீர்வதியும்

3. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
எனக்காய் பரிந்து பேசும் ஆசாரியர் நீரே

### பாடல் - 1794

**இஸ்ரவேலின் துதிக்குள் வாசம் செய்யும்**
தேவன் எங்கள் நீர் பரிசுத்தரே
வாக்குகள் பல தந்து அழைத்து வந்தீர்
ஒரு தந்தை போல் எம்மை தூக்கி சுமந்தீர்

நீர் மாத்திரமே 3 எந்தன் சொந்தமானீர்
உம்மை ஆராதிப்போம் ஆர்ப்பரிப்போம்
உம் நாமத்தினால் என்றும் ஜெயம் எடுப்போம்

1. எதிர்காலம் இல்லாமல் ஏங்கி நின்றோம்
காலத்தை படைத்தவர் நடத்தி வந்தீர்
சிறையிருப்பை மாற்றி தந்தீர்
சிறுமையின் ஜனம் எம்மை உயர்த்தி வைத்தீர்

2. செங்கடலை கண்டு சோர்ந்து போனோம்
யோர்தானின் நிலை கண்டு அஞ்சி நின்றோம்
பயப்படாதே என்னை உரைத்தீர்
எம்மை நடத்தி வந்தீர்

3. எதிரி படை எம்மை சூழும் போது
ஓங்கிய புயம் கொண்டு யுத்தம் செய்தீர்
பாடச் செய்தீர் துதிக்கச் செய்தீர்
எரிகோவின் மதில்களை இடிக்கச் செய்தீர்

### பாடல் - 1795

**யேகோவாயீரே நீர் என் தேவனாம்**
இனி என் உள்ளில் கலக்கமில்லை

ஆராதனை நீர் எல்லாமே பார்த்துக் கொள்வீர்

2. யெகோவா ரப்பா நீர் என் தேவனாம்
நீர் என் நோய்கள் சுமந்து கொண்டீர்
நீர் எந்தன் அற்புதரே

3. யெகோவா ரூவா நீர் என் தேவனாம்
என் தேவைகள் நீர் அறிவீர்
நீர் எந்தன் நல் மேய்ப்பரே

## பாடல் - 1796

**இதுவரை நடத்தி குறைவின்றி காத்து**
மகிழ்வை தந்தீரே நன்றி ஐயா – 2

1. தண்ணீரை கடந்தேன் சோதனை ஜெயித்தேன்
மதிலை தாண்டினேன் உம் பெலத்தால்

நன்றி நன்றி ஐயா
உம்மை உயர்த்திடுவேன் – 2

1. ஆபத்து நாளில் அனுகூலமான துணையுமானீரே
நன்றி ஐயா – 2

2. உம் கரம் நீட்டி ஆசீர்வதித்து எல்லையை பெருக்கினீர்
நன்றி ஐயா – 2

3. அபிஷேகம் தந்து வரங்களை ஈந்து பயன்பட செய்தீரே
நன்றி ஐயா – 2

4. கிருபைகள் தந்து ஊழியம் தந்து உயர்த்தி வைத்தீரே
நன்றி ஐயா – 2

## பாடல் - 1797

**ஜீவன் தந்தீர் உம்மை ஆராதிக்க**
வாழ வைத்தீர் உம்மை ஆராதிக்க
தெரிந்து கொண்டீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

நீரே நிரந்தரமானவர்
நீரே கனத்துக்கு பாத்திரர்
நீரே மகிமை உடையவர்
உம்மை என்றும் ஆராதிப்பேன்

2. கிருபை தந்தீர் உம்மை ஆராதிக்க
பெலனை தந்தீர் உம்மை ஆராதிக்க
ஊழியம் தந்தீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

3. வரங்கள் தந்தீர் உம்மை ஆராதிக்க
தரிசனம் தந்தீர் உம்மை ஆராதிக்க
ஞானம் தந்தீர் உம்மை ஆராதிக்க
உம்மை எந்நாளும் ஆராதிப்பேன்

## பாடல் - 1798

**கலங்கின நேரங்களில் கைதூக்கி எடுப்பவரே**
கண்ணீரின் பள்ளத்தாக்கில் என்னோடு இருப்பவரே
உறவுகள் மறந்தாலும் நீர் என்னை மறப்பதில்லை
காலங்கள் மாறினாலும் நீர் மட்டும் மாறவில்லை

நீங்க தாம்பா என் நம்பிக்கை
உம்மையன்றி வேறு துணையில்லை

1. தேவைகள் ஆயிரம் இன்னும் இருப்பினும்
சோர்ந்துபோவதில்லை என்னோடு நீர் உண்டு
தேவையைக் காட்டிலும் பெரியவர் நீரல்லோ
நினைப்பதைப் பார்க்கிலும் செய்பவர் நீரல்லோ

2. மனிதனின் தூஷணையில் மனம் மடிவடைவதில்லை
நீர் எந்தன் பக்கமுண்டு தோல்விகள் எனக்கில்லை
நாவுகள் எனக்கெதிராய் சாட்சிகள் சொன்னாலும்
வாதாட நீர் உண்டு ஒருபோதும் கலக்கமில்லை

## பாடல் - 1799

**பெந்தேகொஸ்தே அனுபவம் தாருமே**
பின்மாரி ஆவியை பொழியுமே

மேலான வல்லமை மேலான தரிசனம்
மேலான வரங்களைத் தாருமே

என்னை நிரப்புமே (2)
என்னை நிரப்பியே அனுப்புமே
என் பாத்திரம் நிரம்பி வழிந்திட
உம் ஆவியை ஊற்றுமே

1. அனலான ஊழியம் தாருமே - என்னை
அக்கினி ஜுவாலையாய் மாற்றுமே

2. நிழல் பட்டு மரித்தோர்கள் எழும்பிட
அற்புதத்தின் அபிஷேகம் தாருமே

3. அக்கினி நாவுகள் தாருமே
எனக்கு அதிகார நாவுகள் தாருமே

பாடல் - 1800

**நான் ஆராதிக்கும் இயேசு**
இன்றும் ஜீவிக்கிறாரே – அவர்
தேவனாயினும் என்னோடு பேசுகின்றாரே

அவர் சிந்தின இரத்தம் மீட்பை தந்தது
அவர் கொண்ட காயங்கள் சுக வாழ்வை தந்தது

அவர் என்னோடு இருந்தால்
ஒரு சேனைக்குள் பாய்வேன்
அவர் என்னோடு இருந்தால்
ஒரு மதிலை தாண்டுவேன்

1. உடைந்துபோன என் வாழ்வை சீரமைச்சாரு
அரணான பட்டணம்போல் மாற்றி விட்டாரு
என் சத்துருக்கள் பின்னிட்டு ஓடச் செய்தாரு
என் எல்லையெங்கிலும் சமாதானம் தந்தாரு
அவர் செய்த நன்மையை நான் சொல்லிப் பாடுவேன்

2. இரட்சிப்பின் வஸ்திரத்த உடுத்துவித்தாரு
நீதியென்னும் மார்க்கவசம் எனக்கு தந்தாரு
கிருபையைத் தந்து என்னை உயர்த்தி வச்சாரு
என் நாவின் மேலே அதிகாரம் வச்சாரு
அவர் செய்த நன்மையை நான் சொல்லிப் பாடுவேன்

பாடல் - 1801

**தேவனே என்னைத் தருகிறேன்**
உம் பாதத்தில் என்னைப் படைக்கிறேன்

1. யாவையும் நீர் தந்ததால்
உம்மிடம் திருப்பித் தருகிறேன்

2. எந்தன் வாழ்வை மேன்மையெல்லாம்
உந்தனுக்கே தருகிறேன்

3. எங்கள் ஆராதனை உமக்கே
எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கே

ஊழியம் நீர் தந்தது
உயர்வுகள் நீர் தந்தது
மேன்மைகள் நீர் தந்தது
செல்வமும் நீர் தந்தது
தரிசனம் நீர் தந்தது
தாகமும் நீர் தந்தது
கிருபைகள் நீர் தந்தது
அபிஷேகம் நீர் தந்தது

## பாடல் - 1802

**நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்**
உம் காருண்யத்தை எண்ணி போற்ற வந்தோம்

வார்த்தையினால் நீர் சொன்னதெல்லாம்
கரங்களினால் இன்று நிறைவேற்றினீர்

நன்றி நன்றி சொல்வோம் உயிர் உள்ளவரை
ஒன்றும் குறையாமல் காத்திடும் நல்லவரை

1. காற்றும் இல்ல மழையும் இல்ல
ஆனாலும் வாய்க்காலை நிரப்பினீரே

2. உடன்படிக்கை செய்து நடத்தி வந்தீர்
மாறாமல் எப்போதும் காத்துக் கொண்டீர்

3. வெட்கப்பட்ட தேசத்திலே
கீர்த்தியும் புகழ்ச்சியுமாக்கினீரே

4. கைவிடாமல் விட்டு விலகிடாமல்
நெருங்கின பாதையிலும் கூட வந்தீர்

## பாடல் - 1803

**என்னை வல்லடிக்கு நீக்கி உம் கரங்களால் தூக்கி**
உன்னதத்தில் வைத்ததை மறப்பேனோ
நீர் சொன்னதினால் நான்
பிழைத்துக் கொண்டேன்
நீர் கண்டதினால் நான் ஜீவன் பெற்றேன்

எங்கள் ஆதரவே எங்கள் அடைக்கலமே
எங்கள் மறைவிடமே உம்மை ஆராதிப்பேன்

1. ஆழத்தில் இருந்தென்னை தூக்கி விட்டீர்
உயர்வான தளங்களில் நிறுத்தி வைத்தீர்
எதிரான யோசனை அதமாக்கினர்
உந்தனின் யோசனை நிறைவேற்றினீர்

2. ஆயிரம் என்னோடு போரிட்டாலும்
என்னை மேற்கொள்ளும் அதிகாரம் பெறவில்லையே
கிருபையினால் என்னை மூடிக்கொண்டீர்
நான் தள்ளுண்ட இடங்களில் உயர்த்தி வைத்தீர்

3. கரடான பாதையில் தூக்கிச் சென்றீர்
முள்ளுள்ள இடங்களில் சுமந்து கொண்டீர்
எனக்காக குறித்ததை எனக்கு தந்தீர்
நீர்தந்த தரிசனம் நிறைவேற்றினீர்

## பாடல் - 1804

**தாயினும் மேலாய் என் மேல் அன்பு வைத்தவர் நீரே**
ஒரு தந்தையை போல என்னையும் ஆற்றி தேற்றிடுவீரே

என் உயிரோடு கலந்தவரே
உம் உறவாலே மகிழ்ந்திடுவேன்
உம் மேலே அன்பு வைத்தேன்
நான் உமக்காக எதையும் செய்வேன்

1. கைவிடப்பட்ட நேரங்களெல்லாம்
உம் கரம் பிடிப்பேன்
என்னை காக்கும் கரமதை
நழுவ விடாமல் முத்தம் செய்வேன்

2. எந்தன் கால்கள் இடறும் போது
விழுந்திட மாட்டேன்
உம் தோளின் மீது ஏறிக் கொண்டு
பயணம் செய்வேன்

## பாடல் - 1805

**பரிசுத்தரே எங்கள் இயேசு தேவா**
நானிலத்தில் நீர் என்றும் ராஜா

உம்மைப் பாடுவதால் என்னில் தோல்வி இல்லை
உம்மைத் துதிப்பதினால் என்னில் குறைவே இல்லை
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

உம்மை உயர்த்துவதே எங்கள் நோக்கம் ஐயா
உம்மை பாடுவதே எங்கள் மேன்மை ஐயா

1. நான் கொண்ட திட்டங்கள் சிறிதாயினும் - ஐயா
எனக்காய் உம் திட்டங்கள் பெரிதல்லவோ
புழுதியிலிருந்தென்னை உயர்த்தினீரே
ராஜாக்களோடு அமர்த்தினீரே

உந்தன் கிருபைகளை எண்ணி நான் பாடுவேன்
உந்தன் மகிமைதனை தினம் நான் ருசிப்பேன்

2. ஊழிய எல்லைகள் பெரிதாக்கினீர்
அதில் இராஜாக்கள் உதிக்கவும் உதவிசெய்தீர்
அறியாத ஜாதியை வரவழைத்தீர்
நீர் தந்த வாக்கினை நிறைவேற்றினீர்

உந்தன் கிருபைகளை எண்ணி நான் பாடுவேன்
உந்தன் மகிமைதனை தினம் நான் ருசிப்பேன்

3. வருத்தங்கள் பசி தாகம் ஏற்பட்டாலும்
எங்கள் விசுவாச கேடகம் வீழ்ந்திடாதே
நம்பினோர் நட்டாற்றில் கைவிட்டாலும்
என்னை காப்பற்ற நீர் உண்டு பயமில்லையே

உந்தன் கிருபைகளை எண்ணி நான் பாடுவேன்
உந்தன் மகிமைதனை தினம் நான் ருசிப்பேன்

## பாடல் - 1806

**ஒருவரும் சேரா ஒளியினில்**
வாசம் செய்திடும் எங்கள்
தேவனே மனிதருள் யாரும் கண்டிரா
மகிமை உடையவர் எங்கள் தேவனே

நீரே உன்னதர் நீரே பரிசுத்தர்
நீரே மகத்துவர், உமை ஆராதிப்பேன்

1. ஏல் ஒலாம் நீரே உமக்கு ஆரம்பம் இல்லையே
ஏல் ஒலாம் நீரே, உமக்கு முடிவொன்றும் இல்லையே
உம்மை அறிந்தவர் இல்லையே,

2. உம்மை புரிந்தவர் இல்லையே
உம்மை கண்டவர் இல்லையே
உம்மை உருவங்கள் இல்லையே

## பாடல் - 1807

**இயேசுவே நீர் மேலானவர் மேலானவர் மேலானவர்**
துதிக்கு பாத்திரர் பாத்திரர் பாத்திரரே
நான் காண்கின்ற எல்லாமே உமக்காகவே
நான் காணாத எல்லாமே உமக்காக உண்டானதே

1. ஆதியில் நீரே யாவிலும் முந்தியவர்
மரித்து உயிர்த்து முதற்பேரானவர்
சாகாத பூரணம் உமக்குள் உள்ளதே
பரலோக பூரண படைப்பின் கர்த்தரே

2. எமக்கு எதிராய் இருந்த கையெழுத்தை
உடைத்து ஆணியால் சிலுவையில் அடித்தீர்
சாத்தானின் அதிகாரத்தை உரிந்து கொண்டு
கோர சிலுவையில் வெற்றி சிறந்தீர்

3. அதிசயமானவரே ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை தேவா நித்திய அப்பா
நீதியின் சூரியனே நித்திய கன்மலையே
தாகத்தை தீர்க்கும் ஜீவ தண்ணீரே

## பாடல் - 1808

**ஆத்துமாவே என் ஆத்துமாவே**
கர்த்தர் அற்புதர் கீதமானார் ஜீவனானார்
அவரை மறவாதே

நல்லவர் வல்லவர் இயேசுவே (என்) இரட்சகர்

1. ஆராய முடியாத காரியம் செய்கிறார்
எண்ணியே முடியாத அதிசயம் செய்கிறார்
பெலத்தினாலே அவர் பெரியவர்
ஞானத்தில் வல்லவர் – 2 - நல்லவர்

2. கர்த்தரின் காருண்யம் எத்தனை பெரியது
இன்றைக்கே தருகின்றார்
இரட்டிப்பாய் நன்மைகள்
இன்று முதல் நம் கர்த்தர்
ஆசீர்வதிக்கின்றார் ஆசீர்வதிக்கின்றார் - நல்லவர்

3. வெண்கல வாசல்களும்
கதவுகள் உடைக்கின்றார்
இருப்பு தாழ்ப்பாழ்களை
அவரே முறிக்கின்றார்
மறைவிடத்தில் இருக்கின்ற
பொக்கிஷம் தருகிறார் - நல்லவர்

### பாடல் - 1809

**எழும்புதலின் புதிய காலம் தொடங்கி விட்டது**
செழுமையான நாட்கள் இன்று மலர்ந்து விட்டது
வெற்றி வேந்தன் முன்னே வீர நாமம் பின்னே

கரம் பிடித்த கர்த்தரை
நாம் தொடர்ந்து செல்வோம்

1. அதிசயங்கள் காணப் போகும் ஆண்டு இதுதான்
சுகவாழ்வு துளிர்க்கும் வருசம்ம இதுதான்
துக்க காலம் முடிந்து போகும் நாளும் இதுதான்
தூய தேவன் ஆசீர் தரும் நேரம் இதுதான்

2. தண்ணீரை கடக்கும் போது தேவன் இருப்பார்
சோதனைகள் வரும் போது தப்புவிப்பார்
கர்த்தர் வெளிச்சம் மேல் உதித்து விட்டது
காரிளும் உன்னை கண்டு அஞ்சி ஓடுது

3. மக்கள் வெள்ளம் மந்தையை போல் பெருகப் போகுது
மன்னன் இயேசு நாமத்தை புகழப் போகுது
தேவ தூதர் எக்காளம் காதில் கேட்குது
தேவ ஜனம் கர்த்தரோடு செல்லப் போகுது

### பாடல் - 1810

**நன்றி என்று சொல்லுவோம்**
நல்ல தேவன் கிருபை செய்தார்
நன்மைகளை நினைத்துக் கொண்டு
நன்றியுள்ள துதியுடன்
நன்றி நன்றி நன்றி இயேசய்யா

1. உங்க ஜீவனை தந்தீர் உமக்கு நன்றி அப்பா
என் பாவத்தை சுமந்தீர் உமக்கு நன்றி அப்பா
சாப நோய்களை எல்லாம் முறியடித்தீரே
புது வாழ்க்கை தந்து
நல்ல சந்தோஷம் தந்தீர்



அட்டவணை

2. பெயர் சொல்லி அழைத்தீர் உமக்கு நன்றி அப்பா
உங்க அன்பை அள்ளி தந்தீர் உமக்கு நன்றி அப்பா
என்னை வாலாக்காமல் தலையாக்கினீர்
என்னை கீழாக்காமல் மேலாக்கினீர்

3. வெண்கல கதவுகள் உடைத்து விட்டீர்
இரும்பு தாழ்பாள்கள் முறித்து விட்டீர்
நல்ல பொக்கிஷங்களை நல்ல ஆசீர்வாதத்தை
எனக்கு தந்தீர் அநாதி பாசத்தால்

4. பரலோகத்தில் என்னை நீர் கொண்டு செல்லுவீர்
பிதாவின் மகிமையில் என்னை உட்கார வைத்தீர்
நோய்களும் இல்லை சாப பேயும் அங்கு இல்லை
பரிசுத்த ஆவி உன்னை வழித்திடுவார்

## பாடல் - 1811

### என் பேச்சு மூச்சு எல்லாம் என் இயேசு

1. நான் பாடும் போதெல்லாம்
நீர் மகிமைப்படுகிறீர்
நான் ஜெபிக்கும் போதெல்லாம்
என் ஜெபத்தை கேட்கிறீர்

2. நான் நடக்கும் போதெல்லாம்
நீர் கூட வருகிறீர்
நான் தூங்கும் போதெல்லாம்
நீர் கூட இருக்கிறீர்

3. நான் உயர்த்தும் போதெல்லாம்
நீர் உயர்த்தப்படுகிறீர்
நான் பேசும் போதெல்லாம்
என் பேச்சை கேட்கிறீர்

## பாடல் - 1812

**யெகோவா ரூபா என் நல்ல மேய்ப்பன்**
குறைவொன்றும் எனக்கில்லையே
யெகோவா தேவன் என் நல்ல ஆயன்
தாழ்ச்சி எனக்கில்லையே

ஆராதனை ஓ ஆராதனை ஓ ஆராதனை உமக்கே
ஆராதனை ஓ ஆராதனை துதி ஆராதனை உமக்கே

1. புல்லுள்ள இடங்களில் மேய்த்துச் சென்று
என்னை போஷிக்கின்றீர்
அமர்ந்த தண்ணீரண்டை
என்னை நடத்தி தாகம் தீர்க்கின்றீர்
உம் நாமத்தினிமித்தம்
நீதியின் பாதையில்
நாள்தோறும் நடத்துகின்றீர்

2. எதிரிகள் முன்னே எனக்கொரு பந்தியை
ஆயத்தப்படுத்துகின்றீர்
பாத்திரம் நிரம்பிட என்னெயினாலே
அபிஷேகம் செய்கின்றீர்
நாழ்நாட்களெல்லாம் நன்மையும்
கிருபையும் தொடர்ந்திடச் செய்திடுவீர்

3. கதறின நேரம் என்னவென்று கேட்க வந்தீர்
எனைக் காணும் எல்ரோயியே
கூப்பிட்ட நேரம் உதவிட வந்தீர்
எனைக் கேட்கும் எபிநேசரே
தனிமையில் நடந்தேன்
துணையாக வந்தீர் யெகோவா ஷம்மா நீரே

## பாடல் - 1813

**எனைக் கண்டவரே எனைக் காண்பவரே**
எனைக் காத்தவரே எனைக் காப்பவரே

அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா

1. பாவியாய் இருந்த என்னை கண்டு கொண்டீரே
பாசமாய் மார்போடு அணைத்து கொண்டீரே
நெருக்கத்தில் இருந்த என்னை தேடி வந்தீரே
நெருங்கி அன்பாக சேர்த்துக் கொண்டீரே

2. கடந்த காலம் எல்லாம் காத்து கொண்டீரே
வருகிற காலத்திலும் காத்து கொள்வீரே
கொடுத்த வாக்குத்தத்தம் பூர்த்தி செய்தீரே
புதிய வாக்குறுதி கொடுத்து விட்டீரே

3. தள்ளாடி நடந்த என்னை தேடி வந்தீரே
மதில்களை தாண்டும்படி தூக்கி விட்டீரே
நெரிந்த நாணலை போல் வாழ்ந்து வந்தேனே
எரியும் தீப்பிழம்பாய் மாற்றி விட்டீரே

### பாடல் - 1814

**மாறிடும் எல்லாம் மாறிடும்**
என் இயேசுவாலே எல்லாம் மாறிடும்

1. அவர் ஆடையைத் தொட்ட மாத்திரத்தில்
பெரும்பாடு நீங்கிற்றே
ஆதியும் அந்தமுமானவராலே
அந்தகாரம் நீங்கிற்றே
கட்டுகள் உடைந்ததே கவலைகள் நீங்கிற்றே

2. இரையாதே என்று சொன்னாரே
திரைகடல் அடங்கிற்றே
அமைதலாயிரு என்றாரே
அலைகளும் ஓய்ந்ததே
பயங்கள் பறந்ததே நம்பிக்கை பிறந்ததே

3. லாசருவே நீ எழுந்து வா
என்று சொன்னாரே
மரத்த லாசரு கல்லறை விட்டு
எழுந்து வந்தானே
அழுகுரல் நின்றதே ஆனந்தம் வந்ததே
மாறுதே எல்லாம் மாறுதே - என்
இயேசுவாலே எல்லாம் மாறுதே

மாறுதே துக்கம் மாறுதே
மாறுதே கஷ்டம் மாறுதே
மாறுதே கடன் மாறுதே
மாறுதே வியாதி மாறுதே
மாறிற்றே எல்லாம் மாறிற்றே - என்
இயேசுவாலே எல்லாம் மாறிற்றே

### பாடல் - 1815

**பேசு சபையே பேசு பேசு சபையே பேசு** - 2

இது உலர்ந்த எலும்புகள்
உயிர்பெற்று எழும்பிடும் நாட்கள்
இது தள்ளாடும் முழங்கால்கள்
புது பெலன் பெற்றுக்கொள்ளும் நாட்கள்

இது கோணல்கள் யாவும்
நேராக மாறிடும் நாட்கள்
இது கரடான பாதைகள்
செவ்வையாக மாறிடும் நாட்கள் - 2

1. நரம்புகள் உருவாகும் எலும்புகள் ஒன்று சேரும்
தசைகளும் புதிதாகத் தோன்றும்
ஆவியின் அசைவாலும்
கர்த்தரின் வார்த்தையாலும்
புதுஜீவன் உனக்குள்ளாய் தோன்றும்

2. மேகங்கள் சூழ்ந்திடவே
இரைச்சலும் பெருகிடவே
பெருமழை தேசத்தில் பெய்யும்
கல்வாரி இரத்தத்தாலே ஜாதிகள் மீட்கப்பட்டு
கர்த்தரை தெய்வமாக வாழ்த்தும் - அதனால்

3. ஜாதிகள் நடுங்கிடவும் தேசங்கள் வியந்திடவும்
கர்த்தரின் கிரியைகள் தோன்றும்
மரித்தோர் பள்ளத்தாக்கில்
துதிக்கின்ற சேனையொன்று
கர்த்தரின் ஜீவன் பெற்று எழும்பும்

ஜீவனை பேசு, இரட்சிப்பை பேசு
சுவாசத்தை பேசு, அற்புதத்தை பேசு - 3

சபையே நீ எழும்பிடு, காற்றே நீ வீசிடு
போற்று சபையே போற்று - 4

## பாடல் - 1816

**என் அன்பே என் அன்பே**
என் அன்பே என் அன்பே - 2

1. உந்தன் மகா பரிசுத்த ஸ்தலத்தில்
நான் உம்மைப் பார்க்கணும்
உந்தன் முகத்தை பார்த்து
நான் உம்மை ரசிக்கணும்



அட்டவணை

2. பாவியைப் போல தூரத்தில் நின்று
பார்த்திட விரும்பவில்லை
பிள்ளையைப் போல உம்மிடம்
வந்து பேசிட விரும்புகிறேன்

3. மகனாய் வந்து மடியில் தவழ்ந்து
நேசம் பகிர்ந்திடுவேன்
முத்தங்கள் தந்து பாசத்தை காட்டி
பரவசம்ம அடைந்திடுவேன்

4. வாரினால் அடிபட்டு முள்முடி சுமந்த
அன்பை எண்ணுகிறேன்
துரோகியாய் இருந்த என்னையும்
நேசித்த அன்பை பாடுகிறேன்

5. நீர் வெறுத்திடும் எல்லா காரியம் விட்டு
முற்றும் விலகிடுவேன்
அறைக்குள் வந்து அருகில் உம்மோடு
ரகசியம் பேசிடுவேன்

## பாடல் - 1817

**பெலனில்லா நேரத்தில் புது பெலன் தந்து**
என்னை நீர் தாங்கிடுமே
திடனில்லா நேரத்தில் திடமனம் தந்து
என்னை நீர் நடத்திடுமே
பெலன் தாருமே பெலன் தாருமே
உம் பெலத்தால் என்னை நடத்திடுமே

1. எலியாவைப் போல் வனாந்திரத்தில்
களைத்து போய் நிற்கின்றேனே
மன்னாவைத் தந்து
மறுபடி நடக்கச் செய்யுமே

2. போராட்டங்கள் சூழ்ந்ததாலே
சோர்ந்து போய் நிற்கின்றேனே
சோராமல் ஓட திட
மனம் அளித்திடுமே

3. மனிதர்கள் நிந்தையால்
மனம் நொந்து நிற்கின்றேனே
மன்னித்து மறக்க
உந்தனின் பெலன் தாருமே

4. மாம்ச எண்ணம் மேற்கொள்வதால்
அடிக்கடி தவறுகிறேன்
பரிசுத்த வாழ்வு வாழ
பெலன் தாருமே

### பாடல் - 1818

**பேர் சொல்லி அழைத்த உன் தேவன்**
அவர் உண்மையுள்ளவர் (2)
உன் தலையை உயர்த்துவார்
உன்னை மேன்மைப்படுத்துவார்

1. மலைகளெல்லாம் உன் வழிகளாகும்
உன் பாதைகள் உயர்த்தப்படும்
வாலாக்காமல் உன்னை தலைகாக்குவார்
கீழாக்காமல் உன்னை மேலாக்குவார்

2. கர்த்தரே உந்தன் மேய்ப்பராவார்
உன் கண்ணீரை துடைத்திடுவார்
புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்

3. கரம்பற்றி நடத்தும் கர்த்தரவர்
உன் கவலைகள் போக்கிடுவார்
தாயைப் போல் உன்னைத்
தேற்றிடுவார்

### பாடல் - 1819

**பல்லவி**

**இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்**
மௌனமாயிருக்காதே
நீ மௌனமாயிருக்காதே

**சரணங்கள்**

1. அறுவடை காலத்தில் மௌனமாயிருந்தால்
அறுவடை இழப்பாயே
ஆண்டவர் காலத்தில் மௌனமாயிருந்தால்
ஆத்துமா இழப்பாயே

2. இந்தியர் இயேசுவை அறிந்திடும் காலம்
இது தான் இதுதானே
இந்தக் காலத்தில் மௌனமாயிருந்தால்
இரட்சிப்புதான் வருமோ?

3. பகட்டு வாழ்வோ பரமனின் அன்போ
எது உன்னை இழுக்கிறது
கணக்குக் கேட்கும் கர்த்தர் வருவார்
வெறுங்கையாய் நிற்பாயோ?

**பாடல் - 1820**

**குயவனே உம் கையில் களிமண்ணாய்**
உடைத்து உருவாக்கும்
என் சித்தம் அல்ல உம் சித்தம் நாதா
என்னை (தருகிறேன் 2) உம் கரத்தில்
என்னை (படைக்கிறேன் 2) உம் பாதத்தில்
உருவாக்குமே என்னை உருவாக்குமே

1. உம் சேவைக்காய் என்னை தருகிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல் - 2
உம் சித்தம் செய்திடவே
உம் சத்தம் கேட்டிடவே

2. உமக்காகவே நான் வாழ்கிறேன்
வனைந்திடும் உம் சித்தம் போல்
எனக்காக வாழாமல்
உமக்காக வாழ்ந்திட

**பாடல் - 1821**

**இயேசு நாமம் தரும் இன்ப கீதம்**
நாம் போற்றிப் பாடும் புது தேவ சங்கீதம்
அமைதி பிறந்தது அன்பின் தேவனால்
அருளின் நாதரை போற்றிப் பாடு

ஏழை என்னையே தேடி வந்தார்
என்றும் உன் துணை நானே என்றார்
என்னிடம் வந்திடு என்றே அழைத்தார்



அட்டவணை

1. பாவக்கறை போக்க வந்த அன்பு தெய்வமே
பாவ பாரம் நீக்க வந்த ஜீவ ஜோதியே
வாக்கு மாறா வல்லமையின் சுடரே
வந்திடும் எமக்கு அடைக்கலம் அவரே
உம் வார்த்தை போதும் வாரும் ஜீவனே

2. அற்புதங்கள் நடத்திடும் தூய தீபமே
அதிசயம் புரிந்திடும் அன்புக் கரமே
வழி தப்பி அலைந்தேன் நல்ல மீட்பர் நீரே
பரலோகம் போற்றும் பரிசுத்தர் அவரே
உம் வார்த்தை போகும் வாரும் ஜீவனே

**பாடல் - 1822**

**அதிசயம் நிகழ்த்தும் இயேசு தேவன்**
அன்பின் பாதையிலே
அருள் வந்து சேரும் ஆனந்தம் பெருகும்
அவரின் அன்பினிலே
இயேசு ராஜாவே என் வாழ்வின் ஜோதியே
கிருபை பொழிந்திடுமே
எங்கள் நித்திய தேவனே

1. அகிலம் முழுவதும் அன்பே பொழியும்
அருளின் மேகமே
அன்பின் தீபமே
அல்லேலூயா பாடி
உம்மை நானும் போற்றுவேன்
அடைக்கலம் நீரே ஆனந்த கீதம்
என்றும் பாடுவேன்
என் இதய கானமே ஏழிசையின் ராகமே
என்றும் நீரே எந்தன் மீட்பர்
எனக்கினி கவலையில்லை

2. தாகம் கொண்ட மான் போல் நானும்
தவித்து அலைந்தேனே
தஞ்சம் என்று நெஞ்சம் தந்தேன்
நெகிழ்ந்து போனேனே
உந்தன் கிருபை ஒன்றே போதும்
உள்ளம் ஏங்குதே

எந்தன் ஆத்மா உம்மை சேரும்
வரமும் வேண்டுமே
நிலை மாறிடும் உலகிலே நேச கரம் நீட்டியே
என்னை அழைத்தீர் கண்ணீர் துடைத்தீர்
உம்மை நான் மறவேன்
பாரம் போக்கியே என்னில் ஜீவன் தாருமே
பாவி எந்தன் வாழ்வை மாற்றுமே

### பாடல் - 1823

**தோத்திரம் பாடுவோம்**
இயேசுவை போற்றுவோம்
எல்லாம் கிடைக்குமே
உலகில் எதுவும் நடக்குமே
வேதனை தீருது வெற்றி கிடைக்குது
ரட்சகர் பார்வையிலே
இயேசு ரட்சகர் பார்வையிலே
என்ன துன்பம் வந்தாலும்
கவலையில்லையே
என் தேவன் துணையிருக்க
கலக்கமில்லையே கர்த்தர்
கரமிருக்கையிலே

1. வேதனையும் சோதனையும் நீக்கிடுவாரே
வியாதியை போக்கிடுவாரே
இனிதான சந்தோஷம் தந்திடுவாரே
இயேசு செய்திடுவாரே
உன்னத பெலத்தால்
உள்ளமதை நிறைத்தார்
உண்மையிலே அவர் தான்
மரணத்தை ஜெயித்தார்

ஒளியானார் வழியானார்
நம் வாழ்வின் துணையானார்

2. உலகத்தின் செல்வமெல்லாம் நிலையாகுமா
அது உன்னைக் காக்குமா
உற்ற துணை இயேசுவைப் போல்
சுகமாகுமா நல் உறவாகுமோ

இஸ்ரவேலை காக்கும் இம்மானுவேல்
உறங்கவில்லை
இமைபோல் நம்மை காக்க
இயேசுவைப் போல் யாருமில்லை
இருள் நீக்கும் இதய தெய்வம்
இயேசுவையே நீ பாடு

3. தாவீதின் தேவன் நம்மை தாங்கிடுவாரே
வழி நடத்திடுவாரே
தந்தையைப் போல் தோள் மீது
சுமந்திடுவாரே பாவம் போக்கிடுவாரே
சிலுவை நாதர் நிழலில்
சிரமம் ஏதும் இனியில்லை
சீக்கிரமாய் வருவார் ஆயத்தம் ஆகிடுவோம்
அருள் நாதர் அன்பை எண்ணி
அல்லேலூயா பாடிடுவோம்

## பாடல் - 1824

**இயேசுவே உம்மையன்றி உலகேது**
என் உயிரே நீர் இன்றி துணையேது

1. பாவம் போக்கிடும் என் பரம தகப்பனே
புது பாதை காட்டிடும் நல் தூய மேய்ப்பனே
எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீரே
இயேசுவே நன்றியை எப்படி கூறுவேன்
பயத்தை நீக்கியே புது ஜெயத்தை தாருமே
பாவி எந்தன் வாழ்வை மாற்றுமே

2. இரக்கம் உள்ளவரே நல் இதயம் கொண்டவரே
இயேசு இரட்சகரே உம்மில்
நேசம் கொண்டேனே
எனக்காய் சிலுவை சுமந்த தேவனே
துதிப்பேன் உம்மை காலம் யாவுமே
உந்தன் பாதமே இனி எனது வேதமே
உலக மாயைகள் வெறும் போலி வேஷமே
வாழ்வே உந்தன் ஒரு வார்த்தை வேண்டுமே

3. கனவு பலிக்குமே என் கண்ணீர் மாறுமோ
கலங்கி தவிக்கின்றேன் மனகாயம் ஆறுமோ
ஆண்டுகள் ஆயிரம் வாழ்ந்தென்ன லாபம்
அழியும் உலகில் உம் அன்பு ஒன்றே போதும்
அன்னை தந்தையும் இங்கு சொந்தமில்லையே
அன்பின் தகப்பனே என்னை அணைத்திடுவாயே
அமைதி என்னில் அளித்திடுவாயே

## பாடல் - 1825

**தேவா உம்மைத் தேடும் நேரம்**
வசந்த காலம் என்னை வந்து சேரும்

1. என் மனம் உம் வசமானது
ஏழிசை ராகம் பிறந்தது
இதயத்தின் வாசல் திறந்தது
இயேசுவே உம் குரல் கேட்டது
உம் அன்பு கிடைத்தால் போதுமே
உயிரே நீரின்றி என் வாழ்வு வீணாகுமே

2. பொல்லாத உலகமதில் புது பாதை தந்தீரே
புதிதான உதயமதில் சுகராகம் இசைத்தீரே
தூயவர் உந்தன் துணையிருக்க
துயரம் என்னை என்ன செய்யும்
உலகின் ஒளியே உண்மை உறவே
உம் துணை போதும் வேறென்ன வேண்டும்

3. இருளான என் வாழ்வில்
ஒளி காட்டும் கதிரவன் நீர்
இனிதான உமதன்பில்
என்னை நான் மறந்தேனே
கடலில் மூழ்கும் படகினைப் போல்
கவலையில் தினமும் நான் துடித்தேன்
கலங்கரை விளக்கே காக்கும் கரமே
கன்மலையே என்னை காத்திடுவாயே

## பாடல் - 1826

**தேவன் அற்புதம் நாம் தேடும் அதிசயம்**
கவலையில்லை துயரமில்லை
கர்த்தர் நம் வசம் கர்த்தர் நம் வசம்
இருள் சூழ்ந்த இதயமதில்
இனிமை தந்தவர் என் இரக்கமுள்ளவர்

1. அவர் சொல்லே அருமருந்து
அன்பு செய்யும் திருவிருந்து
ஒளிமயமாய் நாம் வாழ வழி காட்டினார்
இயேசுவைப் பாடும் போது என்ன ஆனந்தம்
இதை விடவா உலகில் உண்டு பேரின்பம்

2. எதிர்காலம் இனிதாகும்
ஏழை கோலம் இனி மாறும்
வல்ல நாதர் அருள் இருந்தால்
மகிமை பெறுகுமே
வானம் பூமி படைத்தவரை போற்றி புகழுவோம்
வருங்காலம் வசந்தமாகும்
வாழ்த்தி பாடுவோம்

## பாடல் - 1827

**கர்த்தரை நோக்கி கரங்களை உயர்த்தி**
ஆர்ப்பரிப்போம் மகனே – (மகளே)

1. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்
உந்தன் வார்த்தை அழியாதே
சத்திய ஜீவனும் வழியுமானீரே
நித்திய ஜீவனை அளித்திடுவீரே

2. இத்தரை மீதே முத்திரை பதித்தீர்
இனிய நல் பாதை காட்டினீரே
பாவமும் போக்கும் பரமன் நீரே
பாதம் பணிந்தே பாடிடுவோமே

## பாடல் - 1828

**இயேசு உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார்**
இயேசு என்னை ஒருபோதும் மறக்க மாட்டார்

1. ஆலயமணி முழங்கிடவே ஜீவன் தந்தார்
அதிசயமே என்னில் அவர் நடத்துகிறார் – தேவன்

2. நோயாலே துடித்த போது சுகம் தந்தார்
(ஒரு) நொடிப் பொழுதில் தீமை யாவும் விலக செய்தார்

3. இருளான பாதையில் ஏ்ன ஒளி ஆனார்
(புது) சரித்திரமே நம் வாழ்வில் நிகழ்த்துகிறார்

4. கருவுக்குள் இருக்கும் போது தெரிந்து கொண்டார்
கன்மலையாம் இயேசு என்னை கைவிடமாட்டார்

## பாடல் - 1829

**மணி ஓசை ஒலிக்கின்றதே**
மகிழ்ச்சி பிறக்கின்றதே
ஆண்டவர் அழைக்கின்றாரே
ஆனந்தம் பொங்குகின்றதே

1. எதிர்காலம் ஒளிமயமே
என் தேவன் துணை பலமே நாளும் பலமே

2. பொல்லாத சாத்தானை
போராடி ஜெயித்தவரே மீட்பர் அவரே

3. தீராத வியாதிகளை குணமாக்கி
மகிழ்ந்தவரே மருத்துவர் அவரே

4. சத்திய நாதனையே துதிப்போம்
ஜெபத்தினிலே வருமே ஜெயமே

## பாடல் - 1830

**வாதை எந்தன் கூடாரத்தை அணுகாது**
பொல்லாப்பு நேராது
தொல்லைகளோ வந்திடாது
நேற்றும் இன்றும் மாறா இயேசுவினால்

1. வாலாகாமல் தலையாவேன்
கீழாகாமல் மேலாவேன்
வரவர விருத்தி நான் அடைவேன்
என் இயேசுவாலே

2. எந்தன் வீட்டின் நிலைக் காலில்
இயேசுவின் இரத்தம் இருப்பதினால்
சங்கார தூதன் அணுகாதே
என் இயேசுவாலே

3. கொண்டாட்டங்கள் குறையாது
திண்டாட்டங்கள் நெருங்காது
சந்தோஷமாய் ஆடிப்பாடிடுவேன்
என் இயேசுவாலே

4. தோல்வி எண்ணம் எனக்கில்லை
ஜெயம் தான் எந்தன் வாழ்க்கையிலே
ஸ்தோத்திரங்கள் சொல்லிப் பாடிடுவேன்
என் இயேசுவாலே

**பாடல் - 1831**

**இன்பம் இன்பம் இன்பம் இனி நமக்கு**
துன்பம் ஒன்றும் நம்மைக் கிட்டிச் சேராதே
சொந்தமான தேசம் தஞ்சமடைவோம்
ஆனந்தம் ஆனந்தம்
வானிலே ஓர்நாள் காகளம் கேட்டிடும்
ஆனந்தம் ஆனந்தம்

1. இகலோக வாழ்வு முடிந்திடுமே
பரலோகில் வாழ்வு தொடங்கிடுமே
எந்தன் இயேசுராஜா வேகம் வருவார்
ஆனந்தம் ஆனந்தம்

2. மகிமை மேல் மகிமை அடைந்திடுவோம்
மறுரூபமாகி பறந்திடுவோம்
மணவாளன் இயேசு வரும் நாளன்றோ
ஆனந்தம் ஆனந்தம்

**பாடல் - 1832**

**வரங்களைப் பெறுகின்ற நேரம்**
உந்தன் வல்லமையை நாடுகின்ற நேரம்
தினம் அதிகாலை இன்பமணி வேளை
தினம் தினம் எனக்கிது ஜெபவேளை

1. தேவனே நீர் என்னுடைய தேவன்
அதிகாலம் உம்மைத் தேடுவேன்
வறண்டதும் விடாய்த்ததும் நிலம் போல
என் ஆத்துமா உம்மிலே தாகம் கொள்ளுதே

2. எலிசாவைப் போல் இரு மடங்காக
வரங்களை வேண்டி நிற்கின்றேன்
வருவீரே என் இயேசுவே
தருவீரே இந்நேரமே
வல்லமை தாரும் இயேசுவே

3. துணையாளரே திருமுகம் காண
தினம் தினம் வேண்டி நிற்கின்றேன்
மோசேயுடன் பேச வந்த
பாசமுள்ள எங்கள் தேவா
என்னோட பேச வாருமே

## பாடல் - 1833

**உள்ளங்காலால் நடந்து**
உன்னதர் ஊழியம் செய்து
உச்சந் தலையில் கிரீடம்
சுமக்கப் போகிறேன்

1. சாத்தானோ, சதியோ என்னை மேற்கொள்ளாதே
சாபமோ சாவோ என்னை ஆட்கொள்ளாதே
மேலே வானத்திலும் கீழே பூமியிலும்
சகல அதிகாரம் பெற்றவரின்
வேலைக்காரன் நான்

2. பணமோ பொருளோ எங்கள் நோக்கம் அல்ல
உலகோ, புகழோ எங்கள் ஆசை அல்ல
ஒரே நோக்கம் தான் தினமும் ஏக்கம் தான்
அதுதான் பாதாளம் நோக்கிச்
செல்லும் ஆத்துமாக்களே

3. மனமே எதற்கும் நீ துயர் கொள்ளாதே
வருவார் ஒருநாள் உனை மீட்டுக் கொள்ள
ஒரே வாழ்க்கைதான் ஒரே ஓட்டம்தான்
என் இயேசு ராஜாவை
தேசம் காண வேண்டுமே

## பாடல் - 1834

**என் உள்ளம் தேவன் பால்**
பொங்கிப் பொங்குதே
என்னவென்று நான் பாடுவேன்

1. எந்நாளும் ஆனந்தம்
எங்குமில்லா பேரின்பம்
சந்தோஷம் தந்திடும்

வல்லவரே உம் சமூகம்
என் ஆசை தேவா
உம் பாசம் என்னில் பொங்கிடுதே
துதித்திடுவேன் மகிழ்ந்திடுவேன்
புகழ்ந்திடுவேன்

2. போராடும் வாழ்க்கையிலே
புதிய பெலன் தாருமையா
மலை போன்ற சோதனைகள்
தாண்டி வரச் செய்யுமைய்யா
புவி ஆளும் தேவா
என் மனதை ஆண்டிட வந்திடுமே
நிரம்பிடுவேன் வளர்ந்திடுவேன்
செழித்திடுவேன்

3. பரலோக ராஜ்ஜியத்தில்
உம்மையல்லால் யாருமில்லை
பூலோக வாழ்க்கையிலும்
உம்மையன்றி விருப்பம் இல்லை
வழிகாட்டும் தேவா உம் வரவால்
உள்ளம் பொங்கிடுதே
இமைப் பொழுது
மறுரூபமாய் பறந்திடுவேன்

## பாடல் - 1835

**வான்புறாவே வான்புறாவே எங்கள் மீதே வந்திறங்கும்**
உந்தன் வல்லமையுள்ள சிறகாலே
வந்திருக்கும் என்னை தொடுமைய்யா
நீர் தொட்டால்தான் என் வாழ்வில் சந்தோசம் ஐயா

1. உலர்ந்த எலும்புள்ள பள்ளத்தாக்கைப் போல
உம்மண்டை நான் நிற்கின்றேன்
உன்னத ஆவியே உயிர்ப்பிக்கும் ஆவியே
வல்லமை வரங்களோடு வந்திறங்குமய்யா

2. தளர்ந்த முழங்கால்கள் பெலனாக மாறும்
தந்தையே உம் ஆவியால்
விண்ணக ஆவியே விடுவிக்கும் ஆவியே
அக்கினி வரங்களோடு வந்திறங்குமய்யா

3. நான் கூட ஒரு நாளில் மறுரூபமாவேன்
நீர் தந்த அபிஷேகத்தால்
சாத்தானை ஜெயித்து நான்
உலகத்தை மறந்து நான்
மேகத்தில் பறந்திடும் நாள் நெருங்குதே

## பாடல் - 1836

**மலர் போன்ற பாதங்களில் மன்னவா**
என் மனதை நான் தொலைத்தேன்
அலங்கார மாளிகையாய்
உமக்கு ஆலயமாய் நான் இருப்பேன்

1. ஓடுகின்ற நீர்களும் பாடுகின்ற குயிலகளும்
உந்தனின் புகழ் பாடுதே
உந்தன் பாதம் அமர்ந்திருப்பேன்
உம்மோடு எந்நாளும் என் ஜீவாதிபதியே

2. கால்களுக்கு தீபமும் பாதைக்கு
வெளிச்சமும் நீர் தந்த திரு வேதமே
தினம் தினம் தியானித்திடுவேன்
உயிரோடு உயிராக நான்
உம்மோடு வாழ வேண்டும்

3. வாழ்வளிக்கும் வானமே
வழி கொடுக்கும் மேகமே
வரம் ஒன்றை நான் கேட்கின்றேன்
ஒரு போதும் உமை மறவா
மனதாலே நினைவாலே
நான் நாள்தோறும் பாட வேண்டும்

## பாடல் - 1837

**எந்தன் நிழலை என்னைவிட்டு பிரிக்க முடியாது**
அது போலத்தான் இயேசய்யா
உம்மையும் என்னையும் பிரிக்கவே முடியாது

பணத்தாலும் பொருளாலும் புகழாலும்
எவராலும் பிரிக்கவே முடியாது
உம்மையன்றி விருப்பம் இல்லை

1. நான் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு
நாதா உம் ஜீவன் தந்தீரே
இவ்வளவாய் என்னில் அன்பு கூர்ந்தீரே
எவ்வளாவாய் நானும் சொல்லி மகிழ்வேன்

2. என் மனவானிலே எங்கெங்கு நோக்கினும்
அன்பே உம் முகம் காண்கிறேன்
உந்தன் உள்ளம் அதை எண்ணும் போதெல்லாம்
எல்லையில்லா இன்பம் அள்ளித் தருதே

3. வான்புவி ஆண்டிடும் வானத்து அரசே
வாழ்க உம் திருநாமமே
வல்லவரே உம்மை ஆராதிக்கின்றேன்
நல்லவரே தலை வணங்குகின்றேன்

## பாடல் - 1838

**என்றைக்குந்தான் நான்**
மேகத்தில் ஏறிச் செல்லுவேன்
ஏக்கங்களாலே மத்திய வானைப் பார்க்கின்றேன்
ஆத்ம மணாளா சீக்கிரம் வாருமையா

1. கண்ணீர் கவலை மறைந்து போகும்
வேளை வந்திடுதே
கர்த்தாவே உம் பொன் முகம் காண
கண்கள் ஏங்கிடுதே

2. உம்மோடு நான் பாடு சகித்தால்
ஆளுகையும் செய்திடுவேன்
அந்நாளில் உம்மை நேரில் கண்டு
அணைத்துக் கொள்ளுவேன்

3. மேகங்கள் யாவும் வழியைத் தருகின்ற
வேளை நெருங்கிடுதே
மறுரூபமாகி தூதர்களோடு
வானம் சென்றிடுவேன்

4. சொர்க்கம் போகும் வாகனம் ஒன்று
புறப்படப் போகின்றதே
அஞ்சிடாமல் நானும் ஆயத்தமாக
பாடிப் பறந்திடுவேன்

## பாடல் - 1839

**பாலைவனம் சோலையாகும்**
பரமனே நீர் நடந்தால்
என் வாழ்வெல்லாம் வளமாகும்
வசந்தமே நீர் வந்தால்
என் ஆவல் எல்லாம் அரங்கேறும்
ஆண்டவரே நீர் வந்தால்

1. பூலோக வாழ்க்கையில் நீர் நடந்த
இடங்களை தியானித்து துதிக்கின்றேன்
என் தேவனே என் ராஜனே
இருள்தனை விரட்டிடும் ஞான ஒளியே

2. என் ஆத்துமாவே கலங்கிடாதே
கொண்டாட்டமாக துதித்தெழும்பு
துணையாளரே பங்காளரே
தினம் தினம் நலம் தரும் வான மருந்தே

3. இக்கால பாடுகள் எதிர் வந்தாலும்
எந்நாளும் என்னோடு இருக்கின்றீரே
உம் மார்பிலே நான் சாய்ந்திருப்பேன்
உலகினை மறந்து நான் பாடிக் களிப்பேன்

## பாடல் - 1840

**கண்ணின் மணியைப் போல**
என்னைக் காத்தவரே
ஏராளம் என் உள்ளம் பாட
உம்மை ஆராதிக்கின்றேன்

நல்லவரே நன்மை செய்தவரே
வல்லவரே வாழ வைத்தவரே

1. எனக்காக தூதர்கள் அனுப்பினீரே
என் பாதம் வழுவாமல் தாங்கினீரே
நன்றி ஐயா துணையாளரே
என்னை ஆளும் எஜமானரே

2. யாக்கோபை இஸ்ரவேலாய் மாற்றினீரே
என் வாழ்க்கையில் தீபம் ஏற்றினீரே
பாதை எல்லாம் ஒளியானீரே
வாழக்கையெல்லாம் சீரானதே

3. எப்போதும் காக்கின்ற இம்மானுவேல்
இனிமேலும் வழிகாட்டும் யெகோவாயீரே
நேற்றும் இன்றும் மாறாமலே
தேற்றி வந்தீர் தாயாகவே

## பாடல் - 1841

**தென்றலே தென்றலே பரிசுத்த ஆவி என்ற தென்றலே**
எங்கள் மேல் வீசிடு அக்கினியாய் மாற்றிடு
எழுப்புதலாய் வாழச் செய்திடு

1. ஆதியிலே ஜலத்தின் மேல்
அசைவாடின ஆவியே
அடிமை மேல் இறங்கிடுமே
வெறுமையான பூமியை நிரப்பினீரே
வரங்களாலே எங்களையும் நிரப்பிடுமே

2. உலர்ந்து போன எலும்பெல்லாம்
உயிர் பெற்று எழுந்ததே
ஒரு தரம் இறங்கி வாருமே
காலூன்றி சேனைகளாய் நின்றது போல்
சாட்சிகளாய் நாங்கள் கூட எழும்பணுமே

3. பெந்தெகொஸ்தே நாள்தனிலே
மேல் வீட்டு அறையினிலே
இறங்கின விண்ணக காற்றே
தென்றலாய் மாறி வா எங்கள் மேலே
இந்தியா வாழ வேண்டும் உந்தனாலே

## பாடல் - 1842

**எந்தன் ஆவல் நீர் ஐயா**
எந்தன் இயேசுவே
சொந்த பந்தம் யாவும் மாறினும்
நீர் மாறாதவரே

1. மீட்பரே உந்தன் உதிரத்தால்
மா பாவி நானும் சுத்தமானேன்
இனியும் உம்மோடு கிட்டிச் சேர
கனியுள்ள மரமாய் மாற்றிடும்
என் அன்பு இயேசுவே என் நல்ல நாதனே

2. மானானது நீரோடைகளை
வாஞ்சித்து கதறுமாப் போல
என் ஆத்துமாவின் தாகம் நீர்
இந்த மானின் வாஞ்சை நீரன்றோ
என் வல்ல இயேசுவே என் நல்ல நாதனே

### பாடல் - 1843

**பளிங்கு தெளிவுள்ள ஜீவநதியே**
சிங்காசனமிருந்து வருதே
எந்தன் வாஞ்சை அந்த நகரம்

1. நடு வீதியில் நதி ஓரத்தில்
ஆறிரண்டு கனி விருட்சம்
மாதந்தோறும் தரும் அதில் ஜீவகனி
ஆரோக்கியம் பெற இலையுண்டதிலே

2. சாபமில்லையே ஒருபோதும்
அவர் சிங்காசனம் அந்த நகர் தனிலே
அவர் ஊழியங்கள் அவரை சேவித்து
அவர் நாமத்தோடே

3. ராவு நேரமோ பகல் நேரமோ
விளக்கென்பதோ அங்கே இல்லையே
தேவனான கர்த்தர் வெளிச்சமானதால்
சதாகாலம் ஆட்சி அவர்களுடையதே

### பாடல் - 1844

**கரை சேர்ந்திட கப்பல் என்னிலே**
கர்த்தர் மாலுமியாய் வந்தார்
என்றும் பாடுவேன் எந்தன் ஜீவனுள்ள நாளெல்லாம்

1. பலத்த காற்று சுழன்று
அலைகள் படகில் வந்தாலும்
ஏழை எந்தன் படகில்
இறைவன் இயேசு உண்டு
காற்றையும் அதட்டுவார் கடலும் அமைதியாகும்

2. அந்தகாரத்தினின்று
ஆச்சர்யமான ஒளியில்
வரவழைத்த தேவன் வாக்கு மாறா நாதன்
சொந்தமாய் மாற்றினார்
சோர்ந்திடா பாடுவேன்



அட்டவணை

3. வெள்ளை அங்கிகளோடு
வானில் உலாவும் நேரம்
விடிவெள்ளியாய் ஜொலிப்பார்
தேவ மாந்தர் அங்கே
பூமியோ விலகுதே வானமோ நெருங்குதே

பாடல் - 1845

**எந்தன் இயேசு ராஜன்**
ஏழைக் கோலம் அணிந்து
சொந்தம் கொள்ள வந்தார்
தேவ மைந்தனாக
பாரினில் பரன் தோன்றினார்

1. உன்னதம் மகிமையால் பொங்க
பூமியும் சமாதானம் அடைய
வானத்தின் அடையாளத்தோடே
வந்தாரே தேவகுமாரன்

2. உலகினில் பாவத்தை போக்க
பாவமில்லா பரிசுத்தமாக
தாவீதின் வம்சத்தில் வந்தார்
தாரணி குதுகலம் கொள்ள

3. வானத்தின் மகிமையை விட்டு
ஞாலத்தில் மானிடனாக
தேவனின் அன்பினைக் காட்ட
தேடினார் பாவியாம் என்னை

பாடல் - 1846

**அதிசய நாயகன் அற்புதம் செய்கிறார்**
அண்டினோர் வாழ்வினிலே
ஆ... என்ன ஆனந்தம் ஆ... என்ன ஆனந்தம்

1. தண்ணீரைக் கடக்கும் போது என்னோடிருந்தாரே
அக்கினியில் நடக்கும் போது வேகாமல் காத்தாரே
இதுவரை நடத்தினார் இனியும் நடத்துவார்
நன்றியாலே நானும் பாடுவேன்

2. கோடி துதிகள் சொல்லி பாடு மனமே ஓசன்னா
எந்நாளும் காத்து ஏந்தி தாங்கி வந்த நேசரை
அடைக்கலம் தருபவர் அன்பால் அணைப்பவர்
ஆவியோடே அனுதினம் பாடுவேன்

3. கண்ணீரின் பள்ளத்தாக்கில் கடந்து வந்த நேரத்தில்
தாயாக நின்று எந்தன் இயேசு என்னை தேற்றினார்
பரவசம் கொள்கிறேன் மறுரூபமாகுவேன்
பாதி வானம் பறந்தே செல்கிறேன்

## பாடல் - 1847

**ஆனந்தம் ஆனந்தம் பேரின்பம் பேரின்பம்**
இரட்சிப்பின் ஆனந்தம் நித்தம் என் சங்கீதம்

கர்த்தாதி கர்த்தன் ராஜாதி ராஜன்
என்னை மீட்டதால்

1. உளையான சேற்றில் உழன்றிருந்தேனே
கனிவுடன் தூக்கினார் கன்மலையில் நிறுத்தினார்
துதிக்கவே புதுபாடலால்
நாவினை நிரப்பினார் நன்றி சொல்லுவேன்

2. எரிகோவின் வீதியில் என்னை இயேசு கண்டார்
காயங்கள் கழுவினார் பாவங்கள் போக்கினார்
பாடுவேன் இனி நாளெல்லாம்
ஓடுவேன் அவர் அன்பை எங்கும் கூறிட

3. வான லோக ராஜா வரும் நாளில் நானும்
பறந்தே செல்லுவேன் பாதியில் வானத்தில்
பாடுகள் என் பாரங்கள் யாவுமே
மாயமாய் மறைந்தே போகுமே

## பாடல் - 1848

**என் ராஜா என் தேவா உம் நாமம்**
என் வாழ்வில் ஆனந்த ராகம்
அது எந்நாளும் என் இன்ப கீதம்

1. ரட்சிப்பின் பாத்திரம் நான் எடுத்துக் கொண்டு
ரட்சகரே உந்தன் நாமம்
தொழுதுகொள்வேன்
சொல்லி முடியா ஈவுகள் தந்தீர் (2)
வல்லோனே நல்லோனே
நெஞ்சார போற்றுவேனே



அட்டவணை

2. உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த
உன்னதங்களிலிருந்து வந்த நாமம்
என் ஜீவன் பாடும் என் இயேசு நாமம் (2)
எந்நாளும் என் வாழ்வில்
சந்தோஷம் தந்திடும்

3. விசுவாச பிரயாணத்தில் பெலன் தருவார்
வெற்றிக்கொடி பிடித்து நான் வலம் வருவேன்
சேனாதிபதி என் இயேசு ராஜன் (2)
என் வாழ்வில் இருக்கும் போது
எந்நாளும் ஜெயமே

4. கர்த்தர் நாமம் நீதிமானின் துருகமன்றோ
நானும் அதற்கு உள்ளே ஓடி சுகம் பெறுவேன்
வானோர்கள் போற்றும் வல்லோனின் நாமம் (2)
பாதாளம் வேதாளம்
எல்லாமே வென்றிடும்

## பாடல் - 1849

**என் பெலனே என் கர்த்தாவே**
உம்மில் நான் அன்பு கூர்ந்திடுவேன்
தேவா உம் நாமம் வாழ்க
இன்றும் வாழ்க என்றும் வாழ்க

1. நீர் என்னை காண்கிற தேவன்
அன்பாய் விசாரிப்போரே
கவலைகள் பாரங்கள்
கர்த்தாவே எங்களுக்காக சுமந்தீர்

2. தேவையான நல்ல பங்கே
உம்பாதம் சரணமே
ஆராதிப்பேன் ஆனந்திப்பேன்
ஆவியோடும் உண்மையோடும் உந்தனை

3. ஆதி அந்தமற்ற தேவா
அல்பா ஓமேகாவும் நீர்
இருந்தோரே இருப்போரே
வரப்போகும் எங்கள் ராஜராஜனே

4. நன்மையான எந்த ஈவும்
பூரண வரங்களும்
ஜோதிகளின் என் பிதாவே
உம்மிடம் இப்போதிரங்கட்டும்

## பாடல் - 1850

**எழுப்புதல் தீ பரவட்டுமே**
எங்கள் உள்ளத்திலே - உந்தன்
மகிமையெல்லாம் இயேசுவுக்கே
நாங்கள் யாவரும் இயேசுவுக்கே - 2

வென்று தீருவோம் வென்று தீருவோம் வென்று தீருவோம்
சாத்தானை வென்று தீருவோம்

1. பெந்தெகொஸ்தே நாளின் போது வந்த தெய்வமே
இப்போ எங்கள் மீது வந்திறங்கும் வல்ல ஆவியே
தாருமே உம் ஆத்ம பாரத்தை
போகிறேன் என்னோடு கூட வாரும் வான்புறாவே

2. எல்லா வளம் சூழ்ந்த நாடு எங்கள் இந்தியா
ஆனால் இயேசு என்றால்
என்ன என்று கேட்போர் உண்டைய்யா
தேவனே என் நாட்டைப் பாருமே
மாற்றுமே உம் நாமம் போற்றும் நல்ல தேசமாக

3. இமயம் முதல் குமரி வரை எங்கள் எல்லையே
இந்த வாழ்வு முடிந்து போனால் அந்த வானம் எல்லையே
நேசரே இறங்கி வாருமே
பாசமாய் உம்மைப் பார்த்து
நாங்கள் வேண்டுகிறோம்

## பாடல் - 1851

**உள்ளத்தை கொள்ள கொண்ட நாதா**
உந்தன் பிள்ளை நான் உம்மைப் போல் மாற
இன்னுமாய் உந்தன் மகிமையால்
என்னை நிரப்பும் நிரப்பும் நிரப்பும்

1. மறுரூப மலையை தியானிக்கும் வேளை
மனம் அங்கு செல்லுதே நாதா
அந்த வெண் மேகம் என் மேலே
வந்திறங்க வேணுமே

2. வரங்கள் இல்லாத வாழ்வெனக்கு வேண்டாம்
தரம் உள்ள ஊழியம் செய்வேன்
அந்த மங்காத அபிஷேகம்
வந்திரங்க வேணுமே

3. மறுரூப மலையை தியானிக்கும் வேளை
மனம் அங்கு செல்லுதே நாதா
அந்த வெண் மேகம் என் மேலே
வந்திறங்க வேணுமே

## பாடல் - 1852

**இயேசுவின் நாமமே மேலானது**
வானிலும் பூவிலும் உயர்வானது
அது தேனிலும் இன்பமானது
அது தேனிலும் மதுரமானது

1. பாவங்கள் பயங்கள் போக்கும்
வல்ல நாமத்தை
பாடப் பாட உள்ளம் மகிழுதே
அருமையானது அன்பாலானது
பாசமுள்ள இயேசு நாமமே

2. கோடி கோடி துதிகள் சொல்லி
பாடி மகிழுவோம்
தேடி வந்த தெய்வ நாமத்தை
புனிதமானது மகிமையானது
போற்றிப் பாடும் இன்ப நாமமே

3. இந்த நாமத்தால் அநேகர்
என்னை வெறுத்தாலும்
தெம்பாக தினமும் பாடுவேன்
ஆத்ம நேசரே அருமை ரட்சகா
உந்தன் நாமம் என்றும் வாழ்கவே

## பாடல் - 1853

**கானான் நெருங்கும் நேரமிது**
யோர்தான் ரெண்டாய் ஒதுங்குது
களிப்போடு துள்ளி வாருங்களேன்
நல்ல செழிப்பான தேசம் பாருங்களேன்

1. இக்காலத்து பாடுகள்
எப்போதும் இனி இல்லையே
தற்காலிகம் தானே நண்பனே
நமக்கு எக்காளம் தான் கேட்கும் திண்ணமே

2. அப்பா உந்தன் சமூகத்தில்
ஆனந்தம் நான் காண்கிறேன்
அல்லேலூயா பாடி மகிழுவேன்
ராஜா ஆவியில் நான் நாடனமாடுவேன்

3. வனாந்திரம் செழிக்குது
வெட்டாந்தரை களிக்குது
வாயார துதித்துப் பாடுது
எனக்கு யாராலே வாழ்வு வந்தது
எனக்கு இயேசுவிலே வாழ்வு மலர்ந்தது

### பாடல் - 1854

**ஜெபமே ஜெயம் ஜெபமே ஜெயம்**
ஜெபிக்க முடியவில்லை என்ற எனக்கு
ஜெபிக்காமலிருக்க முடியவில்லையே
நன்றி நன்றி என்று உள்ளம் துள்ளுதய்யா
விண்ணப்பத்தினால் உள்ளம் நிரம்புதய்யா

1. காரியம் மாறுதலாய் முடியும்
எஸ்தர்கள் ஜெபங்களினால்
என் தேசமும் இயேசுவை அறிந்திடுமே
நாம் இங்கு ஜெபிப்பதினால்

2. சாபங்கள் தேசத்தில் மறைய வேண்டும்
பேதங்கள் மாற வேண்டும்
எல்லா நலம் யாவரும் பெறவேண்டும்
இயேசுவே உம் அருளால்

3. திறவுண்ட வாசல் அடைபடுதே
வரங்களினால் நிரப்பும்
என் தேவனே உமக்காய் நான் உழைக்க
எழுப்புதல் எனக்கருளும்

### பாடல் - 1855

**தேவனே நீர் உயர்ந்தவராயிருந்தும்**
தாழ்மையுள்ள என்னை
நோக்கிப் பார்க்கின்றீரே
முழு மனதோடு ஆராதிப்பேன்
ஆராதனை ரசிகரே

1. நல்லவரே வல்லவரே நலம் தரும் நாயகரே
கண்ணிமையாய் வந்தெமக்கு
அடைக்கலமானவரே
திருப்பாதம் வருகிறேன்
ஒரு பலியாய் தருகிறேன்

2. எல்லையில்லா கிருபைகளால்
எந்தனை சூழ்கிறீர்
தொல்லையெல்லாம் உம் அருளால்
நன்மையாய் மாற்றுகிறீர்
உந்தன் அன்பு பெரியது
உந்தன் இரக்கம் சிறந்தது

3. போற்றிடுவேன் புகழ்ந்திடுவேன்
உந்தனின் நாமத்தை
உயர்த்திடுவேன் உணர்ந்திடுவேன்
உந்தனின் நேசத்தை
உந்தன் நாமம் வாழ்கவே
உந்தன் ராஜ்ஜியம் வருகவே

## பாடல் - 1856

**நம்முடைய தாழ்வில் நம்மை**
நினைத்தோரை துதிக்கின்றோம்
நன்றியோடென்றும் ஆராதிப்போம்

1. உம்மைவிட்டு தூரம் போனேன்
நெஞ்சில் பாவம் கொண்டேன்
மீண்டும் உம்மிடம் சேர்த்தீரே
என் ரட்சகா என் தேவனே
என்னென்று நான் பாடுவேன்

2. என்றும் நல்லவரே இன்றும் வல்லவரே
தந்தை தாயெனக் கானவரே
ஆதாரமே நீர்தானய்யா
அன்பான என் இயேசுவே

## பாடல் - 1857

**முதலாவது தேவ ராஜ்ஜியத்தை**
உந்தன் நீதியை தேடுகிறேன்
என்னை ஆளாக்கின தேவன் நீரே
உம்மையே பணிந்து ஆராதிப்பேன்

1. அதிகாலை நேரம் கூப்பிடும் போது
ஆண்டவரே நீர் செவி கொடுப்பீரே
பனி போல இறங்கும் பலமான சத்தம்
அதுபோதும் தேவா உம் புகழ் பாடுவேன்

2. நீர் என்னை காணும் தேவனல்லோ
என் வாழ்வின் நிலைமை அறிந்தவர் நீரே
ஒரு போதும் மறவா எனதன்பு தேவா
திருப்பாதம் பணிந்து ஆராதிப்பேன்

3. அப்பா பிதாவே என்றும்மை சொல்ல
அதிகாரம் தந்தீர் அபிஷேகம் செய்தீர்
எப்போது வருவீர் எதிர்பார்த்து நிற்பேன்
வரும் பாதை நோக்கி தினம் பார்க்கிறேன்

## பாடல் - 1858

**எந்நாளும் ஸ்தோத்திரங்கள்**
என் நாதர் இயேசுவுக்கு
கொண்டாடி சாற்றிடுவேன்
உளையான சேற்றினின்று
என்னை மீட்ட ஆண்டவரை
அன்போடு ஆராதிப்பேன்

1. அழகானவர் அன்பானவர்
சமாதான நதியானவர்
என் வாழ்வில் நீங்காத நினைவானவர்
என் தாழ்வை நினைத்தாரவர்
திருப்பாதம் வணங்காமல் இருப்பேனோ நான்
துதியோடு ஆராதிப்பேன்

2. நிறைவானவர் உயர்வானவர்
எனக்கென்றும் போதுமானவர்
என் பாவம் போக்கவே பலியானவர்
ஈனச் சிலுவை ஏற்றவர்
ஒருநாளும் பாடாமல் இருப்பேனே நான்
ஓயாமல் ஆராதிப்பேன்

3. என் மீட்பரே என் இரட்சகா
எனைக் காக்கும் நல் தேவனே
உம் அன்பை தினந்தோறும்
நினைப்பேனைய்யா
ஒளியான என் தேவனே
புகழ் பாடி தேடாமல் இருப்பேனோ நான்
மகிழ்வோடு ஆராதிப்பேன்

## பாடல் - 1859

**பரணாவியே அன்பின் ஆவியே**
நித்தம் எந்நாளும் என்னோடு வாழ்பவரே
பலமாக என்னை நிரப்பும்

ஊற்றுமைய்யா ஊற்றுமைய்யா
பாத்திரம் நிரம்ப ஊற்றுமைய்யா
பரிசுத்தமடைய ஊற்றுமைய்யா

1. மாம்சத்தின் தீய செயல் சுட்டெரிக்க
வானத்து அக்கினியே வந்திரங்கும்
எலியாவின் தேவனே இறங்கியே வாருமே

2. ஆவிக்குள்ளாகி உம்மில் ஆனந்திக்க
வேதத்தின் ஆழம் கண்டு சந்தோஷிக்க
அநுக்கிரகம் வேண்டுமே அபிஷேகம் தாருமே

3. வல்லமை வரங்களை அள்ளித் தாரும்
வானத்தை நோக்குதய்யா எந்தன் உள்ளம்
எழுப்புதல் வேண்டுமே எனக்கின்று தாருமே

## பாடல் - 1860

**நம் தேவனைப் போற்றி ஆராதிப்போம்**
நம் தேவனைப் புகழ்ந்து ஆராதிப்போம்
நம் தேவன் நாம் பெரியவர்
மகத்துவர் மாறாதவர்

1. நம் பாவத்தினின்று மீட்டெடுத்தார்
நம் சாபத்தை எல்லாம் நீக்கிவிட்டார்
நோய்களை குருசில் சுமந்தார்
இயேசுவின் தழும்பால் சுகமாகிறோம்

2. நாம் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
நாம் மீட்பின் தொனியை தொனித்திடுவோம்
எக்காள சப்தமாய் சேர்ந்து பாடுவோம்
தேவனின் நாமத்தை உயர்த்திடுவோம்

3. நல் ஆவியோடும் உண்மையோடும்
நம் தேவாதி தேவனை தொழுதிடுவோம்
மகிழ்ச்சியுடனே தேவ சந்நிதியில்
மகிழ்ந்து புகழ்ந்து ஆராதிப்போம்

## பாடல் - 1861

**தூய தேவ ஆவியே மாசற்ற நல் ஆவியே**
உன்னதத்தின் ஆவியே
உம் சமூகம் தாருமே

வாரும் வாரும் வல்லமையாக
வந்தெம்மை நிரப்பிடும்

1. ஆவியின் வரங்களை
நாடி வந்து நிற்கின்றோம்
வான சேனைகளோடு
வந்து வரம் ஈவீரே

2. என்னில் காணும் பாவங்கள்
என்னை விட்டு அகற்றிட
அக்கினியால் என்னையும்
சுத்தம் செய்வீர் இப்போதே

3. என்னையே படைக்கிறேன்
பாத பலிபீடத்தில்
உந்தன் மாறா கிருபையால்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே

## பாடல் - 1862

**இயேசுவின் பொன் மொழிகள்**
கிறிஸ்தேசுவின் பொன் மொழிகள்
அனுதினம் கேட்போம் அதன்படி நடப்போம்
அருள் வாழ்வு அடைந்திடுவோம்

1. உலகம் முழுவதையும்
நீ ஆதாயப்படுத்தினாலும்
உந்தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால்
உனக்கு லாபம் என்ன?

2. வருந்தி பாரம் சுமப்போர்
வந்து இளைப்பாறுதல் பெறுவீர்
என்னிடம் வருவோர் எவரையுமே
நான் புறம்பே தள்ளுவதில்லை

3. கேளுங்கள் கொடுக்கப்படும்
நீங்கள் தேடுங்கள் கண்டடைவீர்கள்
தட்டுங்கள் அப்பொழுது திறக்கப்பட்டிடுமே
மாறாத வாக்கிதுவே

4. முழு இருதயம் ஆத்மா
மனம் பலத்தோடும் பரனை நீ நேசி
உன்னில் நீ அன்பு கூர்வது போல்
பிறனிலும் அன்பு கூர்வாய்

5. என்னில் நிலைத்திருங்கள்
நானும் உங்களில் நிலைத்திருப்பேன்
திராட்சை செடி நான்
நிலைத்திடும் கொடிகள் மிகுந்த கனி கொடுப்பீர்

6. சர்வ சிருஷ்டிகளுக்கும்
சுவிசேசத்தை பிரசங்கிப்பீர்
பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தில்
ஞானஸ்நானம் கொடுப்பீர்

7. அணையாது எரிந்திடவே
எண்ணெய் குறையாது இருந்திடட்டும்
நினையாத நேரம் மணவாளன் வருவார்
ஆயத்தமாயிருங்கள்

## பாடல் - 1863

**இயேசு வருகிறார் இயேசு வருகிறார் இயேசு வருகிறார்**
தேவன் வருகிறார் நம் இயேசு வருகிறார்
தேவ தேவன் வானம் திறந்து வேகம் வருகிறார்
தூயர் கூட்டம் விண்ணில் சேரும் நாள்
நெருங்குதே இயேசு வருகிறார்

1. மீட்பர் வருகிறார் தூயர் மகிழவே
பாரம் நீக்கியே பாரில் ஜீவிப்போம்
கண்ணீர் யாவுமே கர்த்தர் மாற்றுவார்
இனிய நாளில் புதிய கீதம்
இணைந்து பாடுவோம்

2. அன்பர் வருகிறார் ஆவல் பெருகுதே
நித்திய பாதையில் நின்றிலங்குவோம்
ஆமென் இயேசுவே வேகம் வாருமே 2
கரங்கள் நீட்டி அணைத்துக் கொள்ள அருகில் வாருமே

## பாடல் - 1864

**இயேசு நாமமே இன்ப நாமமே**
இன்னல்கள் போக்கிடும் இனிமை தந்திடும்

அற்புதம் செய்யும் அதிசயம் செய்யும்
ஈடு இணையில்லா நாமமே
தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
கர்த்தாதி கர்த்தன் நாமம் வாழ்கவே

1. மண்ணுலகில் தம்மை நம்புவோரை
என்றும் கண்மணி போல் காத்திடும் நாமம்
கண்ணீர்கள் துடைத்து நோய் பிணிகள் நீக்கி
நன்மையாய் நடத்தும் நாமம்

2. சாத்தானின் வல்லமை மேல்
ஜெயம் என்றும் தந்து
சாவு பயம் போக்கிடும் நாமம்
சோதனை நேரங்களில்
வேதனை வேளைகளில்
சோர்ந்திடாமல் காத்திடும் நாமம்

3. பாவ சாபம் நீக்கி பரிசுத்தராய் மாற்றி
பரலோகம் சேர்த்திடும் நாமம்
போக்கிலும் வரத்திலும் தீமைகள் அகற்றியே
பாதுகாத்தணைத்திடும் நாமம்

## பாடல் - 1865

**செல்லுவோம் விரைந்து செல்லுவோம்**
இயேசுவுக்காய் தொண்டு செய்குவோம்
வெல்லுவோம் சாத்தானின் கோட்டையை
வல்ல தேவன் இயேசு முன் செல்லுவார்

இயேசுவே மெய்யான தேவனே
அன்பே நிறைந்த மீட்பரே
பாவ சாபம் நீக்கவே பாரில் பலியானாரே
போற்றிப் பாடுவோம்

1. அற்புத செயல்கள் செய்திட
ஆத்துமாவில் பாரம் கொள்ளுவோம்
கர்த்தரின் வசனம் ஏந்தியே
வல்ல சாட்சி கூறி உயர்த்துவோம்

2. வல்லமை கிருபை வாக்கினால்
தேவ நீதி யாவும் கூறுவோம்
இயேசுவின் வருகை நோக்கியே
ஆவலோடு நாமும் காத்திருப்போம்

3. சாத்தானின் கோட்டைகள் வீழ்த்தியே
சத்தியத்தை எங்கும் சாற்றுவோம்
ஆவியில் நிறைந்து ஜெபித்தே
ஆண்டவரின் பாதம் பின்பற்றுவோம்

## பாடல் - 1866

**எண்ணில்லா நன்மைகள் செய்தவரை**
என்றென்றும் துதித்திடுவேன்
இந்நாள் வரை காத்தவரை
நன்றி செலுத்தி ஸ்தோத்தரிப்பேன்

1. தேவா உம் கிருபை மா பெரிதே
இயேசுவே உம் அன்பு சிறந்ததுவே
உம் அன்பின் ஆழம் அகலம் நீளம்
ஆராய்ந்து முடியாததே

2. கடந்த நாட்கள் எல்லாம்
கண்மணி போல் காத்த தேவன்
ஜீவன் சுகம் பெலன் யாவும் தந்து
ஜெயமாய் நடத்திடுவார்

## பாடல் - 1867

**அல்லேலூயா என் ஆத்துமாவே**
கர்த்தரை ஸ்தோத்தரி
என் முழு உள்ளமே அவருடைய
பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி
கர்த்தர் செய்த சகலமாம்
உபகாரங்களை நீ மறவாதே

1. நான் நிர்மூலமாகாதது
கர்த்தருடைய கிருபையே
கர்த்தர் எனக்கு பாராட்டின
கிருபை மிகவும் பெரியது

2. நான் உயிரோடு இருக்கு மட்டும்
கர்த்தரையே துதித்திடுவேன்
(நான்) உள்ளளவும் என் தேவனையே
கீர்த்தனம் பண்ணி மகிழ்ந்திடுவேன்

## பாடல் - 1868

**பொங்கி புகழ்ந்து துதிப்பேன் துதிப்பேன்**
பணிந்து தொழுது போற்றுவேன் போற்றுவேன்
இயேசுவின் மார்பில் மகிழுவேன் மகிழுவேன்
உச்சித அன்பை பாடுவேன் பாடுவேன்

1. எத்தனை அன்பு ஏழையென் மீது
எத்தனை தயவு தூசி வாழ்வினிலே
தந்தையைப் போல தோளினில் சுமந்தீர்
நேசித்தீர் போஷித்தீர் பாடுவேன் உமையே

2. காணாமல் போன ஆட்டினைப் போல
தூரமாய் விலகி பின் வாங்கிப் போனேன்
மேய்ப்பனைப் போல தேடியே வந்தீர்
தூக்கியே எடுத்து மந்தையில் சேர்த்தீர்

3. கண்ணீரின் வாழ்வில் மனம் நொந்த போது
கண்ணீரை துடைத்து தேறுதல் தந்தீர்
தாயினைப் போல ஆற்றியே தேற்றினீர்
அளவற்ற அன்பினை பாடுவேன் என்றுமே

## பாடல் - 1869

**கர்த்தாவே நீர் என் அடைக்கலமே**
ஆபத்துக் காலத்தில் அநுகூல துணையே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. தந்தையும் தாயும் மறந்தாலும்
என்னை தாங்கியே சுமப்பேன் என்றீர்
உள்ளங் கையில் என்னை
வரைந்து வைத்தீரே - உன்னதா
உம் அன்பை என்றென்றும் மறவேன்

2. கலங்காதே மகனே திகையாதே மகளே
உன்னோடு இருப்பேன் என்றீர்
வலக்கரத்தால் என்னை தாங்கியே நடத்தி
பலப்படுத்தி எனக்கு சகாயமும் செய்வீர்

3. தண்ணீரை கடந்தால் என்னோடு இருப்பார்
ஆறுகள் புரள்வதில்லை
நெருப்பின் நடுவில் நடந்திடும் போது
அக்கினி ஜுவாலையும் என்னைப் பற்றாது



அட்டவணை

### பாடல் - 1870

**கண்ணீரோடு விதைத்திடுவோம்**
கெம்பீரத்தோடு அறுத்திடுவோம்
நல் விதைகள் இன்றே
நல்ல மணிகளாய் விளைந்திடுமே

1. நடை பாதையில் நாம் விதையோம்
கொடும் முள்ளுள்ள இடத்தில் விதையோம்
நல்ல நிலம் தேடி விதைத்தால்
முப்பது அறுபது நூறாகுமே

2. மலைகள் காடுகள் செல்வோம்
மனம் தளர்வோர் துயர் துடைப்போம்
அறுவடை நாளுக்கெனவே
ஆயத்தமுடனே காத்திருப்போம்

3. குடிசைகள் கோடி உண்டே
எந்த கூலி இன்றி வேலை செய்ய
கூவி கூவி அழைத்திடுவோம்
பதில் கூலியும் பரத்தில் சேர்த்திடவே

### பாடல் - 1871

**ஆத்ம நேசர் இயேசு எனக்கெல்லாம் நீரே**
ஆயிரங்களில் நீர் சிறந்தவரே

1. பள்ளத்தாக்கின் லீலி காலை விடி வெள்ளி
ஆத்துமாவின் நேசர் நீரே
(என்) கவலைகள் தீர்ப்பவரே

2. பூலோக மேன்மை தேடாத நேசர்
பேர் புகழ் நாடாதவர்
(என்) ஆத்தும ரட்சகரே

3. மாயமாம் உலகம் மாய்ந்திடும் ஓர் நாள்
மாறிடா நேசர் இயேசு
(இயேசு) மாட்சிமை மிகுந்தவரே

### பாடல் - 1872

**ஸ்தோத்திரம் தேவா ஸ்தோத்திரம்**
இயேசு தேவா ஸ்தோத்திரம்

1. ஜீவன் தந்தீர் சுகம் தந்தீர்
தேவைகளை சந்தித்தீர்
அன்றன்றுள்ள அப்பம் தந்தீர்
அதிசயமாகவே நடத்தினீர் அல்லேலூயா...

2. கிருபையாலே ரட்சித்தீர்
ஆவியாலே அபிஷேகித்தீர்
அன்பினாலே ஆட்கொண்டீர்
உன்னத ஊழியம் தந்திட்டீர்

3. உலகத் தோற்றம் முன்னமே நீர்
முன்குறித்து அழைத்தீர்
இம்மட்டுமாய் காத்தவரே
இன்றும் இனியும் காப்பீரே

## பாடல் - 1873

**என் ஆத்ம நேசர் இயேசுவே**
உம் பாதம் பணிந்திடுவேன்
உம்மையே தொழுதிடுவேன்
தூரமாய் அலைந்து திரிந்த என்னை
தூக்கி அணைத்து உம் மந்தையில் சேர்த்தீர்

1. நிலையற்ற என்னை கண்டு அழைத்தீர்
நித்திய ஜீவன் தந்தீர்
விலையில்லா ரத்தம் எனக்காய் சிந்தி
விந்தையாய் மீட்டெடுத்தீர்
அல்லேலூயா பாடி ஆனந்திப்பேன்
அகமகிழ்ந்தும்மை ஆராதிப்பேன்

2. என்னையே முற்றுமாய் உம் பாதமே
படைக்கிறேன் இயேசு நாதா
பூலோக இன்பங்கள் வெறுத்திடுவேன்
உம்பாதம் சரணடைந்தேன்
இயேசுவே உம்மைப் போல் வேறு தெய்வம்
வானிலும் பூவிலும் யாருமில்லை

## பாடல் - 1874

**உனக்கு எதிராய் எழும்பும் ஆயுதம்**
வாய்த்திடாதே போகும் என்று
கர்த்தர் சொன்னாரே
இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதே
தேவாதி தேவனுக்கு பிரியமானதே

மந்திரவாதம் செல்லாது
குறி சொல்லுதல் நில்லாது
ஆவியான தேவனே கொடியேற்றுவார்

1. இஸ்ரவேலே நீ பாக்கியவானல்லோ
தேவாதி தேவன் உன்னை
தெரிந்து கொண்டாரே
இஸ்ரவேலுக்கு விரோதமான
மந்திரமோ தந்திரமோ ஒன்றுமேயில்லை

2. நீதிமானுக்கு எதிராக
ஒருபோதும் துஷ்டனே செயல்படாதே
தங்குமிடத்தை பாழாக்காதே
நீதிமான் விழுந்தாலும் எழுந்திருப்பான்

3. உன்னை தொடுபவன் என் கண்மணியை
தொடுகிறான் என்று கர்த்தர் சொன்னாரே
என் கையிலிருந்து உன்னைப் பறிக்க
ஒருவனாலும் எப்போதும் முடியாதே

## பாடல் - 1875

**தேவா நான் உம்மைப் பாடிட**
உள்ளம் தேனாக இனிக்கின்றதே
ஒழுகும் தேனிலுமே
அது இனிமையானதே

1. பாடல் ஒன்று பாடிட
அதை பரனே என்றும் கேட்டிட
பாடி உம்மை துதிப்பேன்
பரலோகம் என்றும் மகிழ

2. மடியில் நானும் தவழ்ந்திட
நல்ல கொடியாய் நானும் படர்ந்திட
மகிமை என்மேல் இறங்கிட
மகிழ்ந்து நானும் துதிப்பேன்

3. ஒளியாய் நீர் பிரகாசிக்க
உம் வழியில் நான் நடக்க
இருளைப் போக்கும் தேவா
என்னுள்ளம் கவர்ந்தீர் ஐயா

## பாடல் - 1876

**இரத்தம் சிந்தி பாவம் போக்கினார் இயேசு**
எந்தன் சாபங்களெல்லாம் நீக்கினார் இயேசு

இனி என்ன துக்கம் எனக்கு இனி என்ன கவலை
எல்லாமே சந்தோஷம் எனக்கு

1. நீதிமான் என்ற பட்டமளித்தார் இயேசு
வெற்றியே வாழ்க்கை என்றார் இயேசு
எந்தன் பிள்ளை நீதான் என்றார் இயேசு
நான் உன்னோடு இருப்பேன் என்றார் இயேசு

2. உலக எதிரி ஒழிந்தே போவான் அவரால்
உண்மை தெய்வம் உயர்த்தி வைப்பார் நம்மையே
எந்தன் சிலுவை தூக்கி நடப்பேன் நாளுமே
இம்மை மறுமை ஆசீர் உண்டு ஆமென்

3. இதய தெய்வம் இயேசு வருவார் சீக்கிரம்
இவரை ஏற்றோர் இணைந்திடுவோம் அக்கணம்
கோடி கோடி வருடம் வருஷம் வாழ்வோம் அவரோடு கூடி
நாங்கள் என்றும் வாழ்வோம் மகிழ்வோடு

## பாடல் - 1877

**நேசரின் இன்ப சத்தம்**
எந்தன் காதில் தொனிக்குதே

1. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கர்த்தரின் வல்ல பெலத்தினால்
சத்துருவை வென்று நான் ஜெயிக்க
நேசரின் சத்தம் கேட்குதே

2. வேதனை துன்பம் வெள்ளம் போல் வந்தாலும்
தேவனின் வல்ல ஆவியால்
நுகத்தினை முறித்து நான் ஜெயிக்க
நேசரின் சத்தம் கேட்குதே

3. கண்ணீர் கவலை கலக்கங்கள் வந்தாலும்
கர்த்தரின் நல்ல சமூகத்தில்
களிப்புடன் நின்று நான் துதிக்க
நேசரின் சத்தம் கேட்குதே



அட்டவணை

## பாடல் - 1878

**மாரநாதா ஆராதிக்கின்றேன்**
மன்னவனே ஆராதிக்கின்றேன்
என் ஜீவன் நீரே என் தேவன் நீரே
என்னுள்ளம் வாரும் அபிஷேக நாதா

1. துதிகீதம் பாடியே ஆராதிக்கின்றேன்
துதிக்கு நீர் பாத்திரர் ஆராதிக்கிறேன்

2. பாவங்கள் மன்னித்தீர் ஆராதிக்கின்றேன்
சாபங்கள் மாற்றினீர் ஆராதிக்கின்றேன்

3. எனை மீட்க ஜீவன் தந்தீரே தேவா
உம் அன்பை எண்ணி நான் ஆராதிக்கின்றேன்

## பாடல் - 1879

**தேவ கிருபை என்னை நடத்தும்**
ஜெயம் கொள்வேன் என் வாழ்விலே
வாதை துன்பங்கள் அனுகிடாமலே
கிருபையால் என்னை மூடுவார் – நான்
கிறிஸ்துவுக் கென்னை ஒப்புக் கொடுத்தேன்
என்றும் துதி பாடி முன் செல்லுவேன்

1. ஆத்துமந்தன்னை பெலப்படுத்த
அவர் அன்பாய் அழைத்தாரே
வேத வசன தீபமளித்து
அருள் மழை பொழிந்தாரே
நான் பரிசுத்த ஸ்தலத்தில் ஏகிடவே
கர்த்தாவை துதித்து ஆராதிப்பேன் (என்றும்)

2. இலை உதிரா மரம் போலவே
நிலைத்து நல் கனி தரவே
சுத்த இதயம் தயை புரிவார்
நல்ல போராட்டம் போராடி ஜெயித்திடுவேன்
நிலையான ஜீவனை
பற்றிக் கொள்வேன் – நான்

## பாடல் - 1880

**இயேசுவே நீர் பரிசுத்தர்**
இயேசுவே நீர் நல்லவர்
இயேசுவே நீர் சர்வ வல்லவர்



அட்டவணை

1. பள்ளத்தாக்கின் லீலி புஷ்பமே
நீர் என்றென்றும் என்னுடையவர்
உந்தன் மார்பில் சாய்திடுவேன் நான்
உம்மில் ஆடிப்பாடி என்றும் மகிழுவேன்

2. ஜீவ வாசல் திறந்த நேசர்
உம் கிருபை ஒன்றே போதுமே
ஜீவன் பெலன் தந்து காத்தீரே
உம்மை என்றென்றுமாய் போற்றிப் பாடுவோம்

3. ஆயிரங்களில் சிறந்தவர்
என் ஆத்துமாவின் நேசரானவர்
ஆபத்தில் என் தோழனானவர்
அவர் நேசத்தில் நான் களிகூறுவேன்

## பாடல் - 1881

**புதிய கீதம் பாடி பறந்து செல்வோம் வானில்**
புதிய பாடல் பாடி மறைந்து செல்வோம் வானில்
சேர்ந்திடுவோம் நம் நேசரிடம்
பெற்றிடுவோம் நம் கிரீடங்களை

1. மந்தை மேய்ப்பவருக்கு
மகிமையுள்ள வாடாத கிரீடம் சூட்டிடுவார்
முத்துக்கள் அதிலே பதிந்திருக்கும்
முகங்கள் மகிமையாய் ஜொலித்திடுமே

2. உண்மையுடனே சேவை செய்தால்
ஜீவ கிரீடம் தரித்திடுவார்
தேவனின் சமூகத்தை வாஞ்சித்தாலோ
நீதியின் கிரீடம் தரித்திடுவார்

3. ஆத்தும ஆதாயம் செய்பவர்க்கு
ஆனந்த கிரீடம் தரித்திடுவார்
ஆத்துமாவுக்கு ஈடாக
முத்துக்கள் அதிலே ஜொலித்திடுமே

## பாடல் - 1882

**இன்ப துன்ப நேரங்களின்**
துன்ப துயர் வேளைகளில்
உம் கரம் பற்றிடுவேன்
உம்மையே சார்ந்திடுவேன்



அட்டவணை

1. பாவத்தின் பாரத்தினால்
பாவி நான் சோர்ந்து போனேன்
பாவி என்னை மீட்டெடுத்து
ஆறுதல் தந்த தேவா
பாவத்தின் பாரந்தன்னை
நீரே ஏற்றுக்கொண்டீர் புதிய ஜீவன் தந்தீர்

2. புயல் போல் போராட்டங்கள்
வந்தாலும் கலங்கமாட்டேன்
பகைவர்கள் சூழ்ந்தாலும்
எதற்கும் திகைக்க மாட்டேன்
காற்றையும் அதட்டிடுவீர்
கடலையும் அமர்த்திடுவீர் அமைதி தந்திடுவீர்

3. கல்வாரி சிலுவையிலே குருதி சிந்தினீரே
எந்தனின் பாவங்களை
தோளினில் சுமந்து தீர்த்தீர்
உம் தூய இரத்தத்தினால்
என்னையும் கழுவினீரே
சுத்தனாய் மாற்றினீரே

## பாடல் - 1883

**என் இயேசு ராஜனே ஸ்தோத்திரம்**
என் இதய தேவனே ஸ்தோத்திரம்
இன்பத்தின் எல்லையே ஸ்தோத்திரம்
என்றென்றுமே தேவா ஸ்தோத்திரம்

1. கண் காணா தேசத்தில் உம்முடனே
கனிவுடன் வாழ்ந்திட தரிசனமே
தந்துமே தேற்றிடும் அன்பினையே
சொல்லிட நாவுகள் வேண்டுமே

2. மாயையில் மாண்டிடும் மாந்தரையும்
மாமிசம் வெறுத்திட மருந்ததுவாய்
மன்னனின் வசனமாம் வித்துக்களே
மாற்றுமே மனிதனை தேற்றுமே

3. காலங்கள் நெருங்கியே வந்திடுதே
காதலா வந்திடும் கன்னிகைக்காய்
தாமதம் செய்திடும் மனிதர்களோ
அழிவாரே அழிவாரே அக்கினியில்

## பாடல் - 1884

**இயேசுவைப் பாடு இயேசுவை நாடு**
இயேசுவைத் தேடு இயேசுவில் ஓடு
இலக்கை தொடர்ந்து பிடித்திடு
உனக்குள்ளதை பற்றிக்கொள்

1. பாவத்தை வெறுத்து உலகத்தை வெறுத்து
சத்துருவை ஜெயித்து
இயேசுவை நோக்கி நியமித்த ஓட்டம்
பொறுமையாய் நீ ஓடு

2. பந்தய சாலை ஓடுகிற நீ
பின்னிட்டு பார்க்காதே
லோகத்தின் மனைவியைப் பார்த்து
நீயும் எச்சரிப்பாய் ஓடு

3. போராட்டம் உன்னை சூழ்ந்திடும் போது
போராடி ஜெயித்திடு
நிச்சயத்தோடு நீயும் ஓடி
கிரீடத்தை பெற்றிடு

## பாடல் - 1885

**தேவனின் திருநாமம் திருநாமம் புகழ்ந்திடுவோம்**
மகிழ்வுடனே துதித்திடுவோம்
மாசற்ற வாழ்வினை ஈந்தவரை
வாழ்த்தியே பணிந்திடுவோம்

1. தாயினும் மேலாய் நேசித்தவர்
தயவாலே உயர்த்திடுவார்
மறவேன் உன்னை என்றுரைத்தார்
மகிமையின் தேவனவர்

2. காரிருள் பாவங்கள் நீக்கியவர்
கிருபையால் நிறைத்திடுவார்
பெலனளித்தே தாங்கிடுவார்
பரிசுத்த தேவனவர்

3. வானிலும் பூவிலும் மேலானவர்
வழுவாது நிறுத்திடுவார்
விசுவாசத்தின் ஆதாரமே
கிறிஸ்தேசு என்றுரைப்போம்

## பாடல் - 1886

**உன்னதத்தின் தேவனே அல்லேலூயா அல்லேலூயா**
உச்சிதத்தின் நேசமே அல்லேலூயா அல்லேலூயா
சமாதான கர்த்தரே அல்லேலூயா அல்லேலூயா
(எங்கள்) ராஜராஜன் இயேசு ராஜனே

1. சேனைகளின் கர்த்தராம் இயேசுவே
யூத ராஜ சிங்கமாம் இயேசுவே
ஆட்டுக்குட்டியானவர் கல்வாரியிலே
(இயேசு) தந்தாரே தம்மை முற்றுமாய்

2. அதிசயமானவர் இயேசுவே
ஆலோசனைக் கர்த்தராம் இயேசுவே
சமாதான பிரபுவாம் நித்திய பிதா
(அந்த) வல்லவர் தேவன் இயேசுவே

3. வானலோக சிருஷ்டிகர் இயேசுவே
வார்த்தையால் உண்டாக்கினார் யாவுமே
வானமீதில் வருவார் என்னை அழைக்க
ஓசன்னா பாடி மகிழ்வேன்

## பாடல் - 1887

**தேவ வல்லமை வேண்டுமே வரங்கள் தாருமே**
சாத்தானின் வல்லமைகளை ஜெயிக்க வேண்டுமே

ஆனந்தமே இது ஆனந்தமே
அற்புதமே என்றும் அற்புதமே

1. ஜெயம் எவன் கொள்கிறானோ
ஜீவ கிரீடத்தை பெறுவான்
யாரும் அறியா கூடா நாமத்தை
தேவனிடம் பெற்றுக் கொள்வானோ

2. ஜெயம் எவன் கொள்கிறானோ
வெண் வஸ்திரம் தரித்துக்கொள்வான்
ஜீவ புஸ்தகத்தில் அவன் பெயர்
நிரந்தரமாக எழுதப்படுமே

3. ஜெயம் எவன் கொள்கிறானோ
மறைவான மன்னா புசிப்பான்
பரலோக ராஜ்ஜிய வாழ்வை
பரிசாக பெற்றுக் கொள்வானே

4. ஜெயம் எவன் கொள்கிறானோ
ஆலயத்தின் தூணாவான்
தேவனுடைய சிங்காசனத்தில்
நிலைத்திருக்க வரம் பெறுவானே

## பாடல் - 1888

**துதித்துப் பாடி உம்மை ஆராதனை செய்வேன்**
ஆதி அந்தம் இல்லோனே அரூபனே ஸ்தோத்திரம்

மீட்பரே மேய்ப்பரே மாறிடா நல் இயேசுவே

1. துதிக்கு பாத்திரர் தூயாதி தூயரே
அன்பின் நேசர் இயேசுவே என்றும் ஸ்தோத்திரம்

2. கடந்த நாட்களில் கருத்தாய் காத்தீரே
பாவ சாபம் மாற்றினீர் என்றும் ஸ்தோத்திரம்

3. மகிமை சொரூபனே மா வல்ல தேவனே
மண்ணோர் பாவம் சுமந்தீரே என்றும் தோத்திரம்

## பாடல் - 1889

**அமுதிலும் இனிய ஆண்டவரே**
எந்த பொழுதிலும் உம்மை ஆராதிப்பேன்
கடலிலும் பெரிய அன்பு வைத்து
உந்தன் காருண்யத்தால் என்னை இழுத்தவரே
ஆராதனை உமக்கு ஆராதனை

1. இருப்பவராய் எம்மில் இருப்பவரே
எம் இதயத்தை முற்றிலும் கவர்ந்தவரே
கூப்பிடும் வேளை செவிதனை சாய்த்து
வேண்டிய உதவிகள் செய்பவரே

2. உள்ளத்தில் வாசம் செய்பவரே
என் உயிரினும் இனிய சகோதரரே
சொன்னதை நீரே செய்பவரே
உம் சொந்தமாய் என்னை தெரிந்தவரே

3. கண் கண்ட தெய்வம் நீர் தானே
கடவுளின் மைந்தன் நீர்தானே
ஊற்றுண்ட பரிமள தைலமும் நீரே
உன்னத தேவனும் நீர்தானே

## பாடல் - 1890

**இன்று உங்களுக்கு தாவீதின் ஊரில்**
தேவ மைந்தன் இயேசு பிறந்துள்ளார்

நற்செய்தி இது நற்செய்தி (2)
எல்லோருக்கும் சிறந்த நற்செய்தி (2)

1. பரிசுத்த ஆவியால் கன்னியின் வயிற்றிலே
கரு உருவாகியே கர்த்தர் பிறந்தார் (2)
காவிய நாயகன் பரம தேவன்
மானிடனானார் பாவியை மீட்க - நற்செய்தி

2. வானத்திலே தூதரும் பாடியே மகிழ்ந்திட
மந்தை மேய்ப்பரும் துதித்துப் போற்றிட
உன்னதமானவர் உலகில் உதித்தார் (2)
இம்மானுவேலர் நம்மோடிருப்பார் - நற்செய்தி

3. அந்தகார இருளுமே நம்மைவிட்டு அகன்றிடும்
ஆனந்தமான வாழ்வு வந்திடும்
அல்லேலூயா பாடி நாம் மகிழ் கொண்டாட
ஆர்ப்பரிப்போம் நாம் ஆனந்தமாக - நற்செய்தி

## பாடல் - 1891

**உந்தன் பாதம் இயேசுவே நம்பி வந்தேனே**
எந்தன் பாவங்கள் போக்கியே
உம் சமூகம் என் இன்பமே

1. எந்தன் வேண்டுதல் கேட்டீரே
என் கண்ணீரை துடைத்தீரே
எந்தன் பாவம் சுமந்துமே
என்னை மீட்டீரே உம் அன்பைப் பாடுவேன்
உந்தன் சேவை செய்திடுவேன்

2. கல்வாரியை காண்கையில்
என் கல் மனம் உருகுதே
எனக்காக யாவும் செய்தீர்
என்னை நேசித்தீர் என் சாபம் போக்கினீர்
உந்தன் ஆசி அளித்திட்டீர்

3. வானம் பூமியும் மாறிப்போம்
உம் வாக்குகள் மாறிடா
நீதி சூரியன் தோன்றிடும் நாள்
பக்தர் யாவரும் வானில் சேர்த்துமே
நித்திய ஜீவன் ஈந்திடுவீர்

## பாடல் - 1892

**என்றும் கைவிடாத ஓர் நேசர்**
இன்றும் என்னை காத்தாரே
எந்தன் உள்ளமதைக் கண்டு
இன்பம் தந்து தேற்றினாரே

1. அன்பே உம் அழகினைப் பாட
ஆயிரம் நாவுகள் போதுமோ
அருணோதயம் என்னில் உதிக்கும்
அருள் மழையால் உள்ளம் செழிக்கும்

2. புயலில் காத்திடும் கரமே
தயவாய் தேற்றிடும் தினமே
அடிமை நிலைத்திட அன்பை
அருவியென ஊற்ற வாரும்

3. கடலில் மிதக்கும் ஓர் ஓடம்
கரை சேர்த்திடும் உந்தன் கருணை
மனச்சுமை நீக்கும் பொன் நேசர்
மகிழவே கனி தருவேனே

## பாடல் - 1893

**வாக்குரைத்த வல்ல தேவா**
வந்திடுவீர் மத்தியிலே
வாஞ்சைகள் தீர்த்திடுவீர்
ஆவியில் நிறைத்திடுவீர்

1. யோர்தானைப் போல துன்பம்
எதிரிட்டு வந்த வேளை
யோசுவாவின் தேவன் என்னை காத்தீர்
சோர்ந்திடாமல் தாங்கி என்னை மீட்டீர்

2. கரை திரை கழுவி என்னை
குறைகள் யாவும் நீக்கி
பூரணமடைந்தவனாய் மாற்றும்
இயேசுவே நீர் உம்மைப் போல மாற்றும்

3. தண்ணீரைக் கடக்கும் போது
என்னோடு இருப்பேன் என்றீர்
ஆறுகள் புரள்வதில்லை என்மேல்
கரம் தாங்கி என்னை என்றும் காப்பீர்

### பாடல் - 1894

**கடைசி காலம் இதுவே**
கர்த்தர் இயேசு வரவே
ஜீவாதிபதி இயேசு ராஜன்
சீக்கிரம் வருகின்றார் எமக்காய்

1. இனி ஒன்றுமே நமக்கிங்கு இல்லை
நம் வாஞ்சையோ பரலோகமே
போராடியே ஓடிடுவோம்
ஜீவ கிரீடம் சூடி வாழ்வோம்

2. எக்காள தொனி வானில் முழங்க
இயேசு பக்தரை ஒன்றாய் சேர்ப்பார்
உலக ஆசை வெறுத்துமே தான்
பரிசுத்தமாய் இன்றும் வாழ்வோம்

3. மணவாளன் இயேசு வரும் நாள்
நாம் மறுரூபம் அடைந்திடுவோம்
விழிப்புடனே காத்திருப்போம்
வேகமே இயேசுவே வருவார்

### பாடல் - 1895

**இஸ்ரவேலின் தேவன் என் துணையே**
அவரே எங்கள் நித்திய கன்மலை
பரிசுத்தரும் பெலனுமானார்
அரணான அடைக்கலமே

1. பகலில் வெயிலோ இரவில் நிலவோ
சேதப்படுத்திடாதே
பரமன் நிழலதில் தங்கி தரித்தால்
பயங்கள் அகன்றுமே மகிழ்வோம்

2. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
ஒன்றும் வாய்த்திடாதே
உன்னதர் அளித்திடும் ஆவி பெலனால்
உயர்ந்த சுதந்திரமடைவோம்

3. துன்பம் பசியோ உயர்வோ தாழ்வோ
அன்பை தனித்திடாதே
அற்புதர் இயேசுவை நோக்கி அழைத்தால்
அற்புத நன்மைகளைப் பெறுவாய்

## பாடல் - 1896

**இஸ்ரவேலே நீ பாக்கியவான்**
அநாதி தேவன் உன் அடைக்கலமே
கர்த்தரால் மீட்கப்பட்ட ஜனமே
உனக்கு ஒப்பானவன் யார்?

பாக்கியவான் நீ பாக்கியவான்
இஸ்ரவேலே நீ பாக்கியவான்

1. சகாயம் செய்யும் கேடகம் நானே
மகிமை பொருந்திய பட்டயம் நானே
உன் சத்துருக்கள் இச்சகம் பேசி
உனக்கு என்றும் அடங்குவார்கள்

2. உயிருள்ளவரை உன் நாட்கள் யாவிலும்
ஒருவரும் உன்னை எதிர்த்து நிற்பதில்லை
(நான்) மோசேயோடு இருந்தது போல்
உன்னை என்றும் நடத்திடுவேன்

3. இரவும் பகலும் எந்தன் கட்டளையை
தியானம் செய்து அதன்படி நடந்திடு
கையிட்டு செய்யும் வேலைகள் யாவையும்
வாய்த்திட செய்திடுவேன்

## பாடல் - 1897

**விவரிக்க இயலா நன்மை எனக்குச் செய்தீர்**
விசுவாசிக்க கிருபை எனக்கு தந்தீர்
போற்றிப் பாட வரமும் வளமாய் ஈந்தீர்
நன்றி தேவா நன்றி சொல்லுவேன்
உமக்கு நன்றி தேவா நன்றி சொல்லுவேன்

ஆராதிக்கிறேன் அகமகிழ்கிறேன்
ஆராதனை ஆராதனையே
துதி ஆராதனை என்றும் உமக்கே

1. ஜீவன் பெலனும் ரட்சிப்பு வெளிச்சம் இயேசு
கன்மலை கோட்டை அரணான அடைக்கலம் இயேசு
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லி
என்னை போதித்து நித்தம் நடத்திடுவார்

2. திக்கற்றோரை ஆதரித்து தாங்கி
பசியுற்றோரை திரப்தியாக்கி நடத்தி
இதயம் நொறுங்கினோரை குணமாக்கி
நீரே காயங்களை கட்டும் ஆண்டவர்

3. உயிரோடிருக்கும் மட்டும் உம்மை துதிப்பேன்
உள்ளளவும் கீர்த்தனமே செய்வேன்
மகத்துவ மகிமை பிரதாபத்தை சொல்லி
உம் வல்ல செயல்கள் நித்தம் விவரிப்பேன்

## பாடல் - 1898

**தோத்திர பலிகள் தேவனுக்கே செலுத்திடுவோமே**
துதிக்குப் பாத்திரர் இயேசு ராஜனை
போற்றிப் புகழ்வோமே

1. தாய் மறந்தாலும் தேவன் என்றும் மறவாரே
உள்ளங் கையில் நம்மையும் வரைந்துள்ளாரே
பலத்தினாலல்ல பராக்கிரமம் அல்ல
ஆவியினாலே எல்லாமுமே ஆகும் என்றாரே

2. பாவ சாப ரோகம் போக்கும் பரிசுத்த தேவன்
குறை யாவும் நீக்கிடும் சம்பூரணர்
திக்கற்றோர்களுக்கு மா தயாபரர்
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்றாம் ஜீவாதிபதி

3. நீதியின் கரத்தால் நம்மை தாங்கி நடத்துவார்
நம்பினோரை என்றுமே கைவிடாரே
மேகத்தில் இயேசு மீண்டும் வருவாரே
ஆயத்தமாய் சந்திப்போமே சீயோன் ராஜனை

## பாடல் - 1899

**என்றைக்கும் விலகாத தேவ ஆவியே**
உம்மை அன்போடு அழைக்கின்றோம்
தேவ ஆவியே
மாறாத சந்தோசம் தருபவரே
உமக்கு நேராக எங்களை உயர்த்துகிறோம்

ஆராதனை ஆராதனை ஆராதனை உமக்கு ஆராதனை

1. ஆதியிலே அசைவாடியே தேவ ஆவியே
எங்கள் ஆலயத்தில் அசைவாடும் தேவ ஆவியே

2. ஷெக்கினா மகிமையை ஊற்ற வாருமே
செத்தவர்கள் எழும்பி நடக்க வாருமே

3. பாவமெல்லாம் உணர்த்திடும் தேவ ஆவியே
பொல்லா பயங்கள் யாவும் போக்கிடும் தேவ ஆவியே

4. உள்ளத்திலே வாசம் செய்யும் தேவ ஆவியே
எங்கள் எண்ணங்களை தூய்மையாக்கும் தேவ ஆவியே

## பாடல் - 1900

**உள்ளம் துள்ளும் இன்ப நேரம் ஆராதனை**
உணர்வும், மதியும் வாழ்த்தும் நேரம் ஆராதனை
ஆராதனை ஆராதனை தேவனுக்கு புகழாரம் ஆராதனை
ஆராதனை ஆராதனை தேவனுக்கு உயிர் பலியே ஆராதனை

1. தூயோர் கூட்டம் தேவன் பாதம் வீழ்ந்து வணங்குமே
துதி முழக்கம் விண்ணை முட்டும் விந்தையாகுமே
ஆவி தேகம் தேவன் பேரில் தாகம் கொள்ளுமே
எண்ணம் ஒன்றாய் தேவன் பேரில் குவிந்திருக்குமே

2. தூய்மை மனசாட்சி கூர்மை ஏற்றுமே
தேவ வார்த்தை அமுதத்தாலே சிந்தை நிரம்புமே
அன்பு வலிமை தேவ மகிமை நெஞ்சை அள்ளுமே
தேவ சித்தம் வாழ்வின் திட்டம் வெளிப்படுத்துமே

3. இல்லம் தொட்டு எல்லை எங்கும் அன்பு வெள்ளமே
பாலர் முதல் முதியோர் வரை கொள்ளை கொள்ளுமே
நீதி நேர்மை உத்தமத்தை நடத்தையாக்குமே
அகிலம் தேவ தாழ் பணிய வாஞ்சை யூட்டுமே

## பாடல் - 1901

**உம்மோடு உறவாடும் நேரம்**
என் வாழ்வின் உன்னத நேரம்
உமக்காக பணி செய்யும் நேரம்
உன்னதத்தில் பலன் சேர்க்கும்

1. அதிகாலை உம்மண்டை வந்திடும் நேரம்
அன்பான உம் சத்தம் கேட்டிடும் நேரம்
ஆவியின் பெல்தால் நிறைந்திடும் நேரம்
ஆனந்த களிப்புடன் மகிழ்ந்திடும் நேரம்

2. மரியாளைப் போல நான் அமர்ந்திடும் நேரம்
மௌனமாய் உம்மிடம் பேசிடும் நேரம்
அழிகின்ற என் ஜனம் உம்மண்டை வரவும்
அனுதினம் உம்மிடம் மன்றாடும் நேரம்

**பாடல் - 1902**

**இயேசுவே உம் வரவை நித்தம் எண்ணி வாழ்கிறேன்**
உமது அழகு வதனம் காண துடி துடிக்கிறேன்
மகிமையான உந்தன் வீட்டை வாஞ்சித்திருக்கிறேன்
தங்க பூமி அதில் நடக்க ஆசைப்படுகிறேன் – நான்

இயேசய்யா நீர் என் ஏக்கமய்யா
இயேசய்யா எனக்கு எல்லாமே நீர் தானய்யா

1. எனது பாவ சுமைகள் நீங்கி விடுதலை பெற்றேன்
மரித் துயிர்த்த வேனுக்காய் பிழைத்திருக்கிறேன்
சகலமானவர்க்கும் தேவ தூது சொல்கிறேன்
மரணம் வரை கீழ்ப்படிந்து வாழவிருக்கிறேன்

2. தேகபெலன் ஒடுங்கினாலும் சேர்வு நீங்கினேன்
ஆவி மனிதன் பெலன் பெறவே மகிழ்ந்திருக்கிறேன்
பரம வாசஸ்தலத்தை நாளும் ஏங்கித் தவிக்கிறேன்
மரண அச்சமின்றி நித்திய வாழ்வை தொடர்கிறேன் – நான்

3. உலகின் வாசம் கொஞ்ச காலம் அறிந்திருக்கிறேன்
தேவபிரியம் செய்வதே என் ஆவலாக்கினேன்
கணக்கு கேட்கும் கர்த்தர் முன்பு நிற்கும் நாளிலே
மகிழ்ச்சி பொங்க பரிசளிப்பார் மகிமைப்படுத்துவார்

**பாடல் - 1903**

**சுத்த ஆவியானவரே**
என் சித்தமெல்லாம் ஆள்பவரே

1. கல்லான இதயத்தை அகற்றி
புது சதையான இதயத்தை தாரும்
கனிவுள்ள வாழ்வை அடிமைக்கு தந்து
பணி செய்ய தூண்டி விடும்

2. ஆவியின் மழைதனை பொழியும்
பின் வறண்ட எம் சபைகள் செழிக்கும்
பரந்த இத்தேசம் பரமனைக் காணும்
சிலுவையே உயர்ந்து நிற்கும்

## பாடல் - 1904

**பரன் இயேசுவை காணாத உள்ளம்**
இந்த பாரினில் ஏராளம் உண்டு
பாரதம் இயேசுவைக் கண்டிடவே
உயர் பணிக்காய் என்னைக் கொடுத்தேனே

1. உம்பணி செய்ய ஆயத்தம் நான்
என்னை அனல் மூட்டி அனுப்பிடுமே
தாய் நாட்டுக்கு தத்தம் செய்தேன்
என்னை தகுதிப்படுத்தி பயன்படுத்தும்

உம் அழைப்பின் தொனி கேட்டேன்
உம் அன்பால் நிரப்பப்பட்டேன்

2. பாவ வழி செல்லும் மாந்தர் தன்னை
ஜீவ வழி காட்ட தந்தேனைய்யா
சாப இருள் நிறைந்த உள்ளமதில்
ஒளியேற்றவே வந்தேனய்யா
உம் அழைப்பின் குரல் கேட்டேன்
உம் அழைப்பிற்கு அடி பணிந்தேன்

## பாடல் - 1905

**வெற்றியுள்ள ஒரு வாழ்க்கை தந்து**
என்னை வாழ வைத்த இயேசுவே
உமது நாமத்தை தேசமெங்கிலும்
சுமந்து செல்லுவேன் சுவிசேஷம் கூறுவேன்
பாடுகள் சகிப்பேன் பரவசமடைவேன்

1. பாதை தவறி அலைந்திடும் ஜனங்களை
உமது மந்தைக்குள் அழைக்கவே வந்தீர்
மன்னிப்பு விடுதலை தேவனின் சாயலை
என் ஜனம் யாவும் அடைந்திடவே
என் ஜனம் அணிந்திடவே

2. மார்க்கம் அறியா திரிந்திடும் மனிதனை
நல் ஜீவ வழிக்குள் வரவேற்கவே
வாழ்ந்திடும் காலங்கள் பயன்பட வாழுவேன்
இயேசுவை தீபமாய் ஏற்றிடவே
இயேசுவே ஏற்றிடவே

**பாடல் - 1906**

**இயேசுவை சேவிப்போம் சீஷர்களாய் வாழுவோம்**
தேசமெங்கும் சிதறி செல்வோம்
சத்தியத்தின் தேவனுக்கு சாட்சிகளாய் வாழுவோம்
சிலுவையை சுமந்து செல்வோம்

1. ராஜாவின் வருகைக்கு பாதைகளை சீராக்கி
சிகப்பு கம்பளம் விரிப்போம்
ஒன்றாய் நாமும் தூய்மையின் உள்ளம் ஏற்போம்
ஜாதிகளை சீஷராக்குவோம்
ஒன்றாய் நாமும் தாழ்மையை அணிந்து கொள்வோம்
தியாகங்கள் ஏற்றிடுவோம்
ஒன்றாய் நாமும் சகோதர சிநேகம் வளர்ப்போம்

2. சபை வாழ்வு மலர்ந்திட லவுகீக மோகம் ஒழிய
எழுப்புதல் தோன்ற உழைப்போம்
ஒன்றாய் நாமும் மனந்திரும்பாதோர் யாரும்
சபைகளில் இல்லையென்ற கனவினை நனவாக்குவோம்
ஒன்றாய் நாமும் பேதங்கள் நீக்கி வாழ்வோம்

3. ஆவியில் நிறைந்திடுவோம் முழங்காலில் யுத்தம் செய்வோம்
அரண்களை கூடித் தகர்ப்போம்
ஒன்றாய் நாமும் எதிரியவன் கொட்டம் ஒழிப்போம்
ஒன்றாய் நாமும் இயேசுவின் ஆட்சி மலர
திசைஎங்கும் சபை எழும்ப
ஆத்தும ஆதாயம் மேற்கொள்வோம்
ஒன்றாய் நாமும் இயேசுவை ராஜாவாக்குவோம்

## பாடல் - 1907

**தேவை நிறைந்தவர்கள் ஏராளம் ஏராளம்**
தாகம் நிறைந்தவர்கள் ஏராளம் ஏராளம்
ஜெபித்திடுவோம் கொடுத்திடுவோம்
துரிதமாய் புறப்படுவோம்

1. பக்திக்கு இங்கே பஞ்சமில்லை–ஆனால்
பரலோகின் வழியைத்தான் அறியவில்லை
இயேசுவே வழியென கூறிடுவோம்
களங்களை தேடிச் செல்வோம்

2. சிலைகளின் பாதம் பணிந்திடும் மாந்தர்
பல பல ஆயிரம் இங்கு உண்டே
கர்த்தரே தெய்வமென உயர்த்திடுவோம்
ஜாதிகள் சுதந்தரிப்போம்

## பாடல் - 1908

**வைராக்கிய வாஞ்சையோடு செயல்படுவேன்**
என்று வானம் பூமி தந்த தேவன் வாக்களித்தாரே
வீணான திகில் கலக்கம் சோர்வு நீங்கி யாவரும்
உண்மையோடு தேவனை துதித்து பாடுவோம்

1. வேர் துளிர்க்கும் இளந் தளிர் போலே
தேவ ஜனம் நாமும் எழும்பிடுவோம்
வேர்கள் ஆழம் செல்ல மேலே வளர்ந்து நாமும்
கனி கொடுக்கும் மரங்கள் போலவே
அணி அணியாய் தேவ சேனை பெருகி
தேச மெங்கிலும் பணிபுரியும்
தேவ ராஜ்ஜியம் விரைந்து பெருகிடும்

2. கோலியாத்தை போல்
எதிரிகள் சூழ்ந்து வந்து நின்று
நிந்தைகள் செய்த போதிலும்
ஆமானைப் போல் சதிகள் செய்து
ஊழியத்தை வேறறுக்க முனைந்த போதிலும்
பதிலளிக்கும் தேவன் முன்னே
முழந்தாலிட்டு வேண்டுவோம்
எதிரிகளும் ஆண்டவரை
பணிவோர் காணுவோம்

3. திறந்த வாசல் இன்று உண்டு
தேவையுள்ள ஆத்துமாக்களை எங்கிலும் உண்டு
திறப்பின் முன்நின்று சிலுவை நோக்கி
தேசத்தை திருப்புவோம் சுதந்தரிப்போமே
கிரையமின்றி பாவ மீட்பை இந்தியர்கள் பெற்றிட
கிரையம் செலுத்தும் வீரராக எழும்புவோம் நாமே

## பாடல் - 1909

**உமது வைராக்கியம் தாரும் இயேசுவே**
உம்மில் வைராக்கியம் தந்திடும்
தாரும் உந்தன் வைராக்கியமே
தேவா இன்றே என் வாழ்விலே

1. உமக்காக வாழும் வைராக்கியம் தாரும்
உம்மை சாட்சியாய் அறிவிக்கும் வரம் தாருமே
ஊக்கமாய் ஜெபிக்கும் வைராக்கியம் தாரும்
உமக்காக உழைக்கும் வைராக்கியம் தாருமே

2. தியாகமாய் கொடுக்கும் வைராக்கியம் தாரும்
ஆத்தும ஆதாயம் செய்யவும் வரம் தாருமே
என்னையே தந்திடும் வைராக்கியம் தாரும்
தேசத்தை உமதாக்கும் வைராக்கியம் தாருமே

## பாடல் - 1910

**பாவி நான் கிருபை காட்டும்**
மீண்டும் ஓர் தருணம் தாரும்
சுயத்தை முற்றும் வெறுத்துவிட்டு
உண்மையாய் உந்தன் வழி நடக்க

1. பாதை தோறும் வேதம் ஏந்தி
பரிசுத்தன் என்று காட்டுகிறேன்
வேதம் காட்டும் பாதை செல்ல
உள்ளமே இன்றி வாழ்கின்றேன்

2. கள்ளர் அடித்து மடியும் மனிதன்
பாதை ஓரம் கிடக்கும் போது
என்னை காத்தால் போதும் என்று
ஒதுங்கி ஒதுங்கி ஓடுகிறேன்

3. ஆயிரம் ஆயிரம் ஜாதிகள் வாழும்
இந்திய தேசம் மீட்பை காண
நித்தம் உந்தன் சத்தம் கேட்கும்
பித்தன் போல வாழ்ந்து விட்டேன்

## பாடல் - 1911

**தேவா எழுப்புதல் தாரும்**
இன்றே உன் உள்ளத்தில் தாரும்
உயிரூட்டும் என் ஆத்துமாவை
உம் சித்தம் நிறைவேற்றவே

1. பரிசுத்த சிந்தை என்னில் தாரும்
பாவத்தின் மீது ஜெயத்தை தாரும்
பரிசுத்தர் வைராக்கியம் தாரும்
பரமன் இயேசுவைப் போலாகவே

2. ஆத்தும வாஞ்சை என்னில் தாரும்
அன்பின் தூதனாய் அனுப்பிடும்
திறப்பின் வாசலில் நிறுத்தும்
திரண்ட அழிவை தடுத்திடவே

3. பவுலின் வைராக்கியம் என்னில் தாரும்
சபைகள் பூத்து குலுங்கிடவே
பேதுருவின் தைரியம் தாரும்
பாரரதம் உம்மை பணிந்திடுமே

## பாடல் - 1912

**கோடான கோடி ஸ்தோத்திரம்**
நாம் பாடியே போற்றிடுவோம்
கர்த்தாதி கர்த்தர் இயேசுவை
வாழ்த்தி வணங்கிடுவோம்
துதி மலர்கள் தூவிடுவோம்

அல்லேலூயா கீதம் பாடியே
நம் தேவனை ஸ்தோத்தரிப்போம்
மகிமை கனமும் துதிகளையே
தினம் அவர் பாதம் சாற்றிடுவோம்

1. எரிகோவின் கோட்டைகள் தகர்ந்திடும்
எக்காளம் துதி முழங்க
எங்கும் தேவனின் இராஜ்ஜியம் வளர்ந்திட
நற்செய்தி எடுத்துரைப்போம்
நம் எல்லையை விரிவாக்குவோம்

2. எல்லா நாவும் அறிக்கை செய்திடும்
எல்லா ஜனமும் பணிந்திடும்
எல்லா ஜாதியும் ஏகமாய் போற்றிடும்
நித்திய ஜீவன் அடைந்திடும்
நம் இயேசுவின் அரசாட்சியில்

## பாடல் - 1913

**தேசத்தை சுதந்தரிப்போம்**
அதில் வெற்றியை கண்டிடுவோம்
ராஜாதி ராஜன் இயேசு
அவர் நம்முடன் இருப்பதினால்
என்றும் நம்முடன் இருப்பதினால் – இயேசு

சத்துருவின் கோட்டைகள் உடையும்
ஜெப மாந்தர்கள் ஜெபிக்க ஜெபிக்க
வல்லவர் நல்லவர் இயேசு
என்றும் வெற்றியை தந்திடுவார்

1. நாட்டை எட்டிப் பார்த்தால்
நிரம்ப வாய்ப்பு உண்டு
சுவிஷேசம் தீவிரம் செல்ல
இறங்கி செயல்படுவோம்
நாம் விரைந்து உழைத்திடுவொம்
நாம் ஊக்கமாய் ஜெபித்திடுவோம்

2. தீய சக்திகள் எல்லாம் திரண்டு செயல்படுதே
தேவனின் வல்ல கரங்கள்
அதை தடுத்து நிறுத்திடுதே
நாம் கண்ணீருடன் விதைப்போம்
கெம்பீரமாய் அறுப்போம்

3. கவலை கண்ணீர் எல்லாம்
இயேசுவின் பாதம் வைப்போம்
ஆவியின் பெலத்தினால்
உற்சாகம் கொண்டிடுவோம்
ஜெயம் தருவார் இயேசு வாக்கை
நிறைவேற்றுவார்

## பாடல் - 1914

**திறப்பில் உம்முகம் நின்றிடவும்**
சுவரை நான் அடைக்கவும் நான் சம்மதம்
அழைக்கும் எஜமானர் சன்னிதி
அடி பணிந்தேன் நான் சமர்ப்பணம்

ஜெபமே ஜெயம் அல்லேலூயா

1. ஒலிவ மலையில் கேட்ட ஓலம்
இதயம் நொறுங்கும் ஆத்ம தாகம்
இயேசுவை மாதிரி ஆக்கிடும்
ஜெபத்தை அனுபவமாக்கிடும்
ஜெப வரம் நீர் தந்திடும்

2. என் சொந்த ஜனத்தின் பாவத்தை
நெஞ்சில் ஏற்று நான் கெஞ்சவும்
தலைவன் மோசே நெகேமியா
தானியேல் போல் பரிந்துரைக்கும்
லேசான உள்ளம் தந்திடும்

3. எப்பொழுதும் கேட்கும் அப்பா பிதாவே
இப்போதென் வேண்டுதல் கேட்டருளும்
சுய லாப விண்ணப்பம் மறையவும்
பொது நல மன்றாட்டில் வேரூன்றவும்
உயர்ந்த மனதை தந்திடும்

## பாடல் - 1915

**தேவனுக்கு மகிமை செலுத்தி பாடுவேன்**
மனிதரோடு சீர் பொருந்தி வாழுவேன்
பூலோக அமைதி பெறும் வழிதனைக் கூறி
மேலோக ஆசை கொண்டு முன்னேறுவேன்

1. உள்ளத்துக் கசப்பினை வேரறுத்தே
எண்ணத்தில் தூய்மையை அணிந்தாலே
தேவனின் அன்பில் நிறைந்திடுவேன்
அதை நீதியின் கனிகளால் காட்டிடுவேன்

2. மன்னித்தும் மறந்தும் வாழ்ந்திடுவேன்
பகைமைக்கு வழியின்றி நடந்திடுவேன்
இயேசுவின் சிந்தையை அணிந்திடுவேன்
எல்லோரும் சரி நிகர் சமம் என்பேன்

3. இயேசுவை மனதாரப் பின் செல்லுவேன்
இக்கால மனிதருக்கு வழி சொல்லுவேன்
பிறர் மனம் கவர்ந்திட வாழ்ந்திடுவேன்
சமுதாயம் செழித்தோங்க உழைத்திடுவேன்

## பாடல் - 1916

**கீதங்கள் பாடியே போற்றிடுவோம்**
சங்கீதங்கள் பாடியே முழங்கிடுவோம்
கர்த்தர் பெரியவர் மகா உன்னதர்
அவர் தயவை எண்ணியே துதித்திடுவோம்

அற்புதங்கள் செய்பவர் பரிசுத்தமானவர்
மகிமைப்படுத்திடுவோம்
யுத்தத்தில் வல்லவர் இரட்சிப்புமானவர்
உயர்த்தி மகிழ்ந்திடுவோம் அல்லேலூயா - 8

1. இஸ்ரவேலே ஜனங்களை மீட்டு வந்தார்
கேடகமும் கிருபையும் பெலனுமானார்
மாராவை மதுரமாக்கினார்
மாறாத பரிகாரி அவரேயாவார் - அற்புதங்கள்

2. நீதியின் தேவனை உயர்த்திடுவோம்
நித்திய பாதையில் நடந்திடுவோம்
நிதம் மாறாத அவர் அன்பினை
நாம் சிதறி எங்குமே கூறிடுவோம் - அற்புதங்கள்

## பாடல் - 1917
## (R/Waktz/T-145 G3/4)

**கூடாரவாசியே நித்தியர் இருக்கையில்**
நீ ஏன் கலங்குகிறாய்
கடந்திடும் காலம் கலைந்திடும் வேஷம்
நீ ஏன் பதறுகிறாய்

நீ மேலானவைகளைத் தேடு
நித்தியர் இயேசுவை நாடு - 2

1. நீ வாழும் வாழ்க்கை மணல் வீடு தானே
புயல் வந்தால் சரிந்திடுமே
நிலையான நகரம் நமக்கிங்கு இல்லை
நித்திய வாழ்வில் தானே

2. செல்வம் சுகமோடும் பேர் புகழோடும்
சுகித்து நீ வாழ்கிறாயோ
சந்தேகம் இல்லை மரணம் ஒரு நாள்
உன்னையும் சந்திக்குமே

## பாடல் - 1918

**நீங்காத நித்திய கர்த்தத்துவம்**
என் தேவா உம் மகத்துவம்
ஜனம் எலலாம் அடி பணியும்
தினம் எல்லாம் சேவிக்கும்
அலை அலைாய் பணிந்தும்மை ஆராதிக்கும்
தம் மொழியாலே துதி பாடிடும்

1. தேவா உமது திரண்ட செயல்
எத்தனை ஆச்சரியமே
நித்தம் தேவனை நடத்துகின்ற
அற்புதம் விசித்திரமே
ஆகாய கங்கைதனில் உம் சௌந்தரியம்
அழகாக வெளிப்படுதே - நீங்காத

2. தேவா உமது வல்லமையால்
என்றென்றும் அரசாளுமே
உதடும் உள்ளமும் துதிக்கையிலே
உம் புயம் வெளிப்படுமே
ஆனந்த உறைவிடமே என் சொந்தமே
நித்திய கன்மலையே - நீங்காத
ஆனந்த உறைவிடமே என் சொந்தமே
நித்திய கன்மலையே - நீங்காத

3. மலைகள் தகர்த்து பெயர்ந்தாலும்
பர்வதம் விலகினாலும்
உமதருள் நிச்சயம் நீங்காததே
உம் ஒப்பந்தம் நிரந்தரமே
உம் தயவு காருண்யமே நித்தியமே
உம் வாக்கு சத்தியமே - நீங்காத

## பாடல் - 1919

**மீட்டெடுக்கப்பட்ட கூட்டமே விரைந்து செயல்படு**
மீட்பர் இயேசு வேலை செய்ய விரைந்து புறப்படு

நாட்கள் மிக விரையுதே
நாற்று நன்றாய் வளருதே 2
ஆட்கள் வேண்டும் அறுவடைக்கு
ஆம் அதிகம் பெருகுதே

1. தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்
நாம் உலகமெங்கிலும்
அனுப்பி வைக்கப்பட்டவர்கள்
நாம் உலக முழுவதும்
தேசங்கள் நாம் சொந்தமாம்
ஜாதிகள் நம் சுதந்திரம் – 2
நேசர் இயேசு அரசாங்கம்
அமைந்திடுமே சீக்கிரம் – 2

2. காலங்களை உணர்ந்திடுவோம்
கர்த்தரின் பணியிலே
கருத்துடனே செயல்புரிவோம்
ஜனங்கள் மத்தியிலே
ஞாலமெல்லாம் மீட்கவே
இயேசு நாமம் கேட்கவே 2
தீவிரமாய் செயல்படுவோம்
தீங்குவோரை – நேசிப்போம் – 2

## பாடல் - 1920

**இயேசு என் தலைவர் ஜீவனின் அதிபர்**
சந்தோஷம் சந்தோஷமே
இகத்தினில் அவர்போல் அன்பதாய்க் காப்பார்
யார் உண்டு சொல் மனமே! (2)

1. நாள் மட்டும் நடத்தினாரே
நன்மையால் சூட்டினாரே
கரம் நீட்டித் தூக்கினாரே
சுகம் சுகம் அவர் நிழலே
முகம் முகம் அவரைத் தரிசிக்கும் நாளே
எனக்கு ஓர் பொன்னாளே – (2) –இயேசு

2. மாறிடும் மனிதப் பண்பு விலகிடும் மனித அன்பு
போற்றுவார் தூற்றிடுவார்
இயேசுவோ அன்பில் மாறார்
மாறும் உலகில் மாறாத இயேசு
அவரையே நிதம் போற்று –இயேசு

3. ஓசன்னா சொன்னோர் எங்கே?
ஓடிடேன் என்றோன் எங்கே?
சிலுவையின் சுமை தணிக்க
பழகியோர் யாரும் இல்லை
இறுதிவரை நான் உம் சார்பில் நிற்க
அருள் ஈயும் இயேசு நாதா - (2) -இயேசு

## பாடல் - 1921
## (E-Maj/2/4/Tem-123)

**துதிக்குப் பாத்திரரே எந்தன் துணையாளரே**
ஆபத்து காலத்தில் அடைக்கலமே
ஆதரவே என் அனுகூலமே

உம்மை ஆராதனை செய்கிறேன் - 2
உன்னதரே உயர்ந்தவரே உம்மையே ஆராதிப்பேன்

1. யெகோவா ஷாலோம் நீரே
எந்தன் சமாதானமே
நித்திய மகிழ்ச்சி எனக்கு தந்தீர்
சஞ்சலம் தவிப்பு நீக்கி விட்டீர்

2. யெகோவா ஷம்மா நீரே
என்னோடு இருப்பவரே
என்ன வந்தாலும் கலங்கிடேனே
அப்பா நீர் என்னோடு இருப்பதனால்

3. யெகோவாநிசி நீரே
எந்தன் ஜெயக் கொடியே
மனம் மகிழ்ந்து பாடிடுவேன்
மகிமையாய் நீர் வெற்றி சிறந்தீர்

## பாடல் - 1922
## (E-Maj/3/4/Tem-140)

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்**
எனக்கென்றும் குறைவில்லை

1. புல்லுள்ள இடத்தில் என்னை மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை
அனுதினம் நடத்துவார்
அன்பின் தெய்வம் இயேசு ராஜா

2. ஆன்மாவை தினமும் தேற்றுகிறார்
ஆறுதல் அளிக்கின்றார்
நீதியின் பாதையில்
நித்தம் என்னை நடத்துவார்

3. மரண இருளின் பள்ளத்தாக்கில்
நடக்க நேர்ந்தாலும்
கொஞ்சமும் பயமில்லை
தேற்றும் தெய்வம் என் துணையே

## பாடல் - 1923
(G-Min/4/4/Tem-85)

**என் நேசர் நீர்தானையா**
நேசிக்கிறேன் உம்மைத்தானையா

1. எனது ஆன்மா உம்மை நினைத்து
எந்நாளும் ஏங்குதையா
எந்தன் படுக்கையிலும் உம்மை நினைக்கின்றேன்
நடுராவிலும் தியானிக்கின்றேன்

2. உம் ரத்தத்தால் என்னை மீட்டுகொண்டீர்
நன்றி இயேசைய்யா
உந்தன் அன்பாலே எந்தன் உள்ளம் கவர்ந்தீர்
இனி நானல்ல எல்லாம் நீரே

3. துன்பமோ துயரமோ வேதனையோ
உம்மை விட்டு பிரிப்பதில்லை
உயிருள்ளவரை உம்மைத் தான் நேசிப்பேன்
வேறெதற்கும் நான் அடிமைப்படேன்

## பாடல் - 1924
(F-Min/2/4/Tem-128)

**ஒன்றும் குறைவுபடாது**
கர்த்தர் இயேசு நம்மோடு இருப்பதனால்

1. அவர் சமூகம் நம் முன் சென்றிடும்
என்றும் இளைப்பாறுதல்
தடைகள் நீங்கி விடும்
கோட்டைகள் தகர்ந்து விடும்



அட்டவணை

2. தகப்பனைப் போல் சுமந்திடுவார்
கண்மணி போல் காப்பார்
வாதை அணுகாது
பொல்லாப்பு நேரிடாது

3. நன்மையால் நிரப்பிடுவார்
கிருபை பொழிந்திடுவார்
பசும்புல் மெய்ச்சலுண்டு
அமர்ந்த தண்ணீருண்டு

4. எக்காளம் நாம் ஊதிடுவோம்
எதிரியை வென்றிடுவோம்
சிலுவை கொடிப் பிடிப்போம்
அல்லேலூயா பாடுவோம்

## பாடல் - 1925
## (D-Maj/4/4/Tem-90)

**எந்தன் உயிரே கர்த்தரைத் துதி**
எந்தன் உள்ளமே கர்த்தரைத் துதி
அவர் செய்திட நன்மைகளுக்காய்
வாழ்நாளெல்லாம் கர்த்தரை துதி

1. பாவங்களை மன்னித்தார்
பரிசுத்த வாழ்வு தந்தார்

2. வியாதிகள் நேரத்திலே
பூரண சுகமளித்தார்

3. மனதை புதிதாக்கினார்
மறுரூப வாழ்வளித்தார்

4. நன்மையாம் ஈவுகளை
நாள்தோறும் உனக்குத் தந்தார்

5. கர்த்தர் செய்த உபகாரங்கள்
எண்ணி முடியாதவைகள்

## பாடல் - 1926
## (C-Min/4/4/Tem-90)

**காலங்கள் மாறிடலாம் கர்த்தர் மாறுவதில்லை**
மாந்தர்கள் மறந்திடலாம்
இயேசு மறப்பதில்லை

அழைத்தவர் உன்னை நடத்துவார்
படைத்தவர் உன்னை காத்திடுவார்

1. சோதனைகள் வந்தாலும் சோர்ந்து போகாதே
வேதனைகள் வந்தாலும் தளர்ந்து போகாதே
பெலன் தரும் தேவன் இருக்கிறார்
கிருபையால் உன்னை நிரப்பிடுவார்

2. மலை போன்ற தடைகளும் உன் முன்னே வந்தாலும்
கண்ணீரின் பாதைகளில் நீ நடக்க நேர்ந்தாலும்
தடைகளை தகர்த்திடும் கர்த்தர்
கன்மலை மேல் உன்னை நிறுத்திடுவார்

3. பெற்றோரும் உற்றோரும் உன்னை வெறுத்தாலும்
நண்பர்களும் சொந்தங்களும் உன்னை பிரிந்தாலும்
தாயின் கருவில் உன்னைக் கண்டவர்
உன்னை விட்டு விலகிடவே மாட்டார்

**பாடல் - 1927**
**(A-Maj/2/4/Tem-130)**

**இன்று காணும் எகிப்தியனை**
என்றென்றும் காண்பதில்லை
கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்வார்
கலங்கிட தேவையில்லை

நம் இயேசு நல்லவரே
நமக்காய் யாவும் செய்பவரே

1. தடைகள் வந்திட்டாலும்
உடைத்து முன் செல்லுவோம்
உன்னத தேவனுண்டு
உதவிடுவார் தினமே

2. வலக்கரம் பிடித்து விட்டார்
வாழ்நாளெல்லாம் காப்பார்
சொன்னதை செய்யும் வரை
கைவிடவே மாட்டார்

3. பரிசுத்த அலங்காரமே
ஜொலித்திடவே வாழ்வோம்
பரமன் இயேசுவுக்கே
சாட்சியாய் நின்றிடுவோம்



அட்டவணை

## பாடல் - 1928
(E-Maj/4/4/Tem-85)

**உந்தன் பாதம் அமர்கின்றேன்**
உம்மை துதிக்கின்றேன்
எந்தன் தாகம் ஏக்கமெல்லாம்
என் நேசர் நீர்தானையா

1. வழிநடத்தும் வல்லவரே
வழுவாமல் காப்பவரே

2. துன்பமெல்லாம் போக்கி விட்டீர்
உம் புகழைப் பாடச் செய்தீர்

3. உள்ளங்கையில் வரைந்தவரே
உறங்காமல் காப்பவரே

4. துதி ஸ்தோத்திரம் ஏறெடுப்பேன்
கன மகிமை செலுத்திடுவேன்

5. கரம் பிடித்த கன்மலையே
கைவிடாத தூயவரே

6. நீர் எந்தன் நிழலானீர்
நீர் எந்தன் பெலனானீர்

## பாடல் - 1929
(C-Min/2/4/Tem-120)

**நன்றி சொல்ல நான் மறப்பேனோ**
என் ராஜாவே உமக்கு நன்றி
தெய்வமே உமக்கு நன்றி
நன்றி இயேசைய்யா

1. பாவத்தின் சேற்றில் கிடந்த என்னை
தூக்கி எடுத்தீரே
உம் திரு ரத்தத்தினால்
என் பாவம் போக்கிவிட்டீர்

2. எனது மீறுதலால்
காயங்கள் ஏற்றுக்கொண்டீர்
உள்ளம் உருகுதையா
உம் அன்பை நினைக்கையிலே



அட்டவணை

3. சிலுவை சுமந்தவரே
சீயோனின் நாயகனே
சிலுவை கொடி ஏந்துவேன்
சாத்தானை ஜெயித்திடுவேன்

4. மீண்டும் வருபவரே
என் ஆத்ம நேசரே
உமக்காய் காத்திருப்பேன்
ஆயத்தமாகிடுவேன்

## பாடல் - 1930
## (G-Min/4/4/Tem-88)

**அண்டிக்கொள்ளும் தெய்வம் நீர்தானைய்யா**
என் ஆறுதல் நாயகன் நீர்தானைய்யா

1. கருவினில் கண்டவர் நீர்தானைய்யா
என்னை காலமெல்லாம் சுமப்பவர் நீர்தானைய்யா
தாய் மறந்தாலும் தந்தை வெறுத்தாலும்
தயவாக அணைப்பவர் நீர்தானைய்யா

2. கண்ணீரைத் துடைப்பவர் நீர்தானைய்யா
என் கவலைகள் தீர்ப்பவர் நீர்தானைய்யா
பெலவீன நேரம் சோர்ந்திட எனக்கு
பெலன் தந்து நடத்தியதும் நீர்தானைய்யா
கிருபையை ஈந்ததும் நீர்தானைய்யா

3. வழியாக வந்தவர் நீர்தானைய்யா
என்னை ஒளியாக மாற்றியவர் நீர்தானைய்யா
உலகத்தின் மாயைக்கு மயங்காதபடிக்கு
மறுரூபமாக்கியவர் நீர்தானைய்யா
என்னை மகிமையில் சேர்ப்பவர் நீர்தானைய்யா

## பாடல் - 1931
## (F-Maj/6/8/Tem-125)

**மோட்ச நாடு நோக்கியே பயணம் செல்கிறேன்**
மோசம் ஏதும் வந்திடாமல் நேசர் காப்பார்

1. பரம தேசம் வாஞ்சிக்கிறேன்
இலக்கை நோக்கி தொடர்கின்றேன்
பின்னோக்கி பார்ப்பதில்லை
முன்செல்வேன் எந்நாளுமே



அட்டவணை

அல்லேலூயா பாடுவேன்
மோட்ச நாடு சேருவேன்

2. அலைகள் மோதினாலும்
புயல் காற்று தடுத்திட்டாலும்
என் படகில் இயேசு உண்டு
என்ன பயம் எனக்கு உண்டு

அல்லேலூயா பாடுவேன்
அலைகளை தாண்டுவேன்

## பாடல் - 1932

(E-Min/6/8/Tem-130)

**ஆனந்த களிப்புடனே**
என் அப்பாவை போற்றிடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம்
இயேசு ராஜாவை உயர்த்திடுவேன்

பாடுவேன் இயேசு ராஜனை
போற்றுவேன் இயேசு ராஜாவை
என் வாழ்வின் இன்பம் இயேசு தான்
என் வாழ்க்கையின் தீபம் இயேசுதான்

1. சிலுவையில் இயேசு மரித்தார்
என் பாவம் போக்கிடவே
மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார்
என்னோடு வாழ்ந்திடவே

2. முழங்கால் யாவும் முடங்கும்
இயேசுவின் நாமத்தினால்
பாதாள சேனைகள் நடுங்கும்
இயேசுவின் நாமத்தினால்

3. நுகங்கள் முறிந்து போகும்
உன்னதரின் அபிஷேகத்தால்
ஆற்றலோ சக்தியோ அல்ல
ஆவியால் எல்லாம் ஆகும்

## பாடல் - 1933

(E-Min/4/4/Tem-80)

**நீர் செய்த நன்மைகள்**
நினைத்து நினைத்து நான்
நன்றி சொல்லி மகிழ்ந்திருப்பேன்

1. கொடிய என் குணம் மாற்றினீர்
கோடிக் கோடி நன்றி ஐயா
செடியே உம்மில் இணைந்த
கொடியாய் என்னை மாற்றினீர் - என் தேவா

2. கல்லான இதயத்தை
இல்லாமல் போகச் செய்தீர்
கனிவுள்ள இதயம் தந்தீர்
கர்த்தாவே உம்மை துதிப்பேன் - என்றென்றும்

3. என் பாவ தோஷமெல்லாம்
சிலுவையில் தீர்த்தீரையா
சந்தோஷம் பொங்குதையா
சங்கீதம் பிறந்ததையா - இந்நாளில்

4. ஒன்றுமில்லா ஏழை என்னை
கண்ணோக்கி பார்த்தீரையா
என்றும் மாறா உந்தன் அன்பால்
அணைத்துக் கொண்டீரையா - என் ராஜா

## பாடல் - 1934
(D-Min/3/4/Tem-135)

**பலிபீடத்தின் காணிக்கையாய்**
பரனேசுவே என்னைத் தந்தேன்

ஏற்றுக் கொள்ளும் ஜீவ பலியாகவே

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
உம் பிள்ளையாக என்னை மாற்றினீர்
பொன்னும் பொருளும் ஈடாகுமா
அப்பா உம் நேசத்திற்கே

2. உகந்த பலியாய் ஏற்றுக் கொள்ளும்
உடைத்து என்னை உருவாக்கிடும்
அர்ப்பணித்தேன் முற்றிலுமாய்
ஆட்கொண்டு நடத்திடும்

3. நான் செய்த நன்மை ஏதும் இல்லை
உம் அன்பினாலே தேடி வந்தீர்
உயிர் வாழ்ந்திடும் நாள் வரையில்
உம் அன்பை நான் மறவேன்

## பாடல் - 1935
(E-Maj/4/4/Tem-80)

**எந்தன் உள்ளம் கவர்ந்தவரே**
என் வாழ்வின் ஒளிவிளக்கே
ஆத்ம நேசரே அன்பு நிறைந்தவரே

உமக்கே என் ஆராதனை
உமக்கே என் ஆராதனை

1. மானானது நீரோடைக்காய்
ஏங்கித் தவிப்பது போல்
என் ஆன்மா ஏங்குதையா – உமக்காய்

2. நாள் முழுதும் என் தியானமெல்லாம்
உந்தன் நினைவல்லவோ
உம்மைப் போல் மாற்றிடுமே – என்னை

3. அனுதினம் உம்மை தேடணுமே
உம் முகம் பார்க்கணுமே
உம் குரல் கேட்கணுமே – நான்

4. அழகில் சிறந்தவரே
ஆறுதல் நாயகரே
அண்டி வந்தேன் உம்மை – நான் (2)

## பாடல் - 1936
(G-Min/2/4/Tem-125)

**இந்த மேகங்களை கடந்து**
மோட்ச நாடு சேர்ந்திடுவோம்
இயேசுவோடு வாழ்ந்திருப்போம்
இயேசுவோடு மகிழ்ந்திருப்போம்

மாரநாதா அல்லேலூயா – 4

1. நள்ளிரவோ அதிகாலையோ
மாலையோ நடுப்பகலோ
நினையாத நேரம் வந்திடுவார்
விழிப்புடன் காத்திருப்போம்

2. நம் மீட்பு மிக சமீபம்
தலைகளை உயர்த்திடுவோம்
மணவாளன் இயேசு வருகின்றார்
மகிமையில் சேர்ந்திடுவோம்

3. நோவாவின் நாட்களைப் போல்
இந்நாட்கள் மாறினதே
கறை திறையின்றி வாழ்ந்திடுவோம்
பரிசுத்த மணவாட்டியாய்

4. விசுவாசம் காத்துக் கொள்வோம்
ஓட்டத்தில் ஜெயம் பெறுவோம்
நீதியின் கிரீடம் தந்திடுவார்
நியாதிபதி இயேசு

## பாடல் - 1937
## (C-Min/4/4/Tem-83)

**எண்ணில்லா நன்மைகளை எந்தன் வாழ்வில் செய்தவரே**
என்ன சொல்லி நான் பாடுவேன் – உம் அன்பை

1. சேற்றில் இருந்து தூக்கி எடுத்தீர்
சேதமின்றி காத்துக் கொண்டீர்
நன்றி நாடல் எந்தன் நாவினில் தந்தீர்
நன்றி எந்தன் இயேசு ராஜனே

2. அமைதி நிறைந்த இதயம் தந்தீர்
அகமகிழ்ந்து உம்மை பாட வைத்தீர்
அப்பா உம் நேசம் எத்தனை பெரிது
அளவிட முடியா அலைகடல் போன்றது

3. ஏற்ற வேளை நன்மை செய்தீர்
போற்றி உம்மை புகழ்ந்திடுவேன்
வற்றாத ஊற்றாய் என்னுள்ளம் வந்தீர்
பற்றிக் கொள்வேன் என்றும் உம்மையே

## பாடல் - 1938
## (C-Min/2/4/Tem-120)

**தளர்ந்திடாமல் முன் செல்வோம்**
நம் இயேசு நம்மோடு உண்டு

1. தளர்ந்திட்ட கைகளே இன்றே திடன் கொள்ளுங்கள்
தள்ளாடும் கால்களே இன்றே பெலன் கொள்ளுங்கள்

2. கலங்கும் இதயங்களே அமைதி கொள்ளுங்கள்
இயேசு வருகிறார் விடுதலை தந்திடுவார்

3. பரிசுத்த வழி நடப்போம் பரலோகம் சேர்ந்திடுவோம்
ஆனந்த களிப்புடனே சீயோனைக் கண்டிடுவோம்

## பாடல் - 1939
(D-Min/6/8/Tem-115)

**எலியாவே எலியாவே சோர்ந்திடாதே சோர்ந்திடாதே**
சூழ்நிலைகள் கண்டு நீயும்
சூரைச் செடி கீழ் அமர்ந்தாயோ

அழைத்தவர் நடத்திடுவார்
அதிசயங்கள் காணச் செய்குவார்

1. காகம் கொண்டு போஷித்த
கர்த்தர் உனக்குண்டு
ஒருநாளும் உன்னைக் கைவிடார்
விதவையைக் கொண்டு ஆதரித்தவர்
ஒரு நாளும் உன்னை மறவார்

2. மாந்தர்களின் வார்த்தையால்
மனம் கலங்கி சோர்ந்து நீ போனாயோ
கலங்கிட வேண்டாம்
மனம் பதறிட வேண்டாம்
ஜீவ வார்த்தை உனக்கு உண்டு

3. ஜீவனுள்ள தேவன் இருக்கின்றார்
எந்நாளும் உன்னைக் காப்பார்
உன்கெதிராய் உருவாகிடும்
ஆயுதங்கள் வாய்க்காதே

4. பெலப்படுத்தும் நேசர் உன்னைக் காண்கிறார்
புது பெலன் உனக்கு தருகிறார்
திடன் கொண்டு தொடர்ந்து ஓடு
உன் பயணம் வெகு தூரமுண்டு

## பாடல் - 1940
(E-Min/4/4/Tem-80)

**என் கால்கள் சறுக்கும் நேரமெல்லாம்**
கர்த்தாவே உம் அன்பு தாங்குதையா
ஆறுதல் நீர்தானையா - என்
அடைக்கலம் நீர்தானையா

1. உள்ளம் கலங்கும் நேரமெல்லாம்
உந்தன் ஆறுதல் தேற்றுதையா
தாங்குகிறீர் தினம் நடத்துகிறீர்
தகப்பனே உம்மை துதிப்பேன்

2. மலைகள் குன்றுகள் விலகினாலும்
அப்பா உம் அன்பு மாறாதையா
உந்தன் கிருபை போதுமையா
எந்தன் பெலன் நீர்தானையா

3. ஜீவனை பார்க்கிலும் உம் அன்பு
மிகவும் மிகவும் உயர்ந்ததையா
காயங்கள் ஆற்றும் மருத்துவரே
கருணை நிறைந்தவரே

பாடல் - 1941
(G-Min/2/4/Tem-130)

**இயேசு நல்லவர் என்றும் நல்லவர் – அவர்**
நல்லவர் நல்லவர் என்றென்றும் நல்லவர்

1. இயேசு வல்லவர் என்றும் வல்லவர்
வல்லவர் வல்லவர் என்றென்றும் வல்லவர்

2. இயேசு பெரியவர் என்றும் பெரியவர்
பெரியவர் பெரியவர் என்றென்றும் பெரியவர்

3. இயேசு கைவிடார் என்றும் கைவிடார்
கைவிடார் கைவிடார் என்றென்றும் கைவிடார்

4. இயேசு உயர்ந்தவர் என்றும் உயர்ந்தவர்
உயர்ந்தவர் உயர்ந்தவர் என்றென்றும் உயர்ந்தவர்

பாடல் - 1942
(D-Min/6/8/Tem-90)

**என் வாழ்வின் ஆனந்தம் நீரே**
என்றென்றும் போதும் எனக்கு நீரே
உம்மையே கண் முன் வைத்தேன்
உலகை மறந்து போனேன்



அட்டவணை

1. பெற்றோரும் நீரே என் சொந்தங்களும் நீரே
மாறாத நம்பிக்கையும் நீரே
மாறிப் போய்விடும் இம் மானிடர் அன்பு
மாறிடாத இம்மானுவேல் நீரே

2. மனதின் பாரங்கள் நெருக்கும் வேளையில்
மன்னவா உம் பாதம் சேருவேன்
திருவாய் மொழிதனை கேட்கும் வேளையில்
மனத் துயரம் மறைந்து போகுதே

3. ஆனந்த தைலம் அனுதினமும் தந்தீர்
அதிசயமாய் தினம் நடத்துகிறீர்
மகிமையில் சேர்ந்திடும் நாள் வரையில்
மகிழ்வோடு நான் வாழுவேன்

பாடல் - 1943
(F-Min/6/8/Tem-100)

**பூர்வ நாட்களை நினைத்து பார்க்கின்றேன்**
செயல்கள் எல்லாம் தியானிக்கிறேன்
எத்தனையோ நன்மைகள் செய்தீரய்யா
நித்தம் நன்றி சொல்லியே துதிப்பேனையா

1. பாவியாக இருந்த என்னை தேடி வந்தீர்
உம் இரத்தத்தாலே என் பாவம் போக்கி விட்டீர்

கோடிக்கோடி நன்றிகள்
பாடிப் பாடி சொல்கிறேன்
நாடி உந்தன் பாதமே தேடி வருகிறேன்

2. கரம் பிடித்து உம் சொந்தமாக்கி கொண்டீர்
கவலை பயம் ஏதுமின்றி காத்துக்கொண்டீர்

3. உந்தன் துதி பாடல் எந்தன் நாவில் தந்தீர்
எந்த நாளும் உம் பாதம் அமரச் செய்தீர்

4. துன்பம் என்னை சூழ்ந்து கொண்ட வேளையிலே
இன்பம் தரும் உறைவிடமாய் வந்தீரே

5. நானும் எந்தன் வீட்டாரும் என்றென்றும்
உண்மையுடன் உந்தன் பணி செய்திடுவோம்

6. உயிருள்ள நாளெல்லாம் உம்மையே நேசிப்போம்
வாழ்வோ தாழ்வோ உம்மை தான் பின் செல்லுவோம்

## பாடல் - 1944
(E-Min/6/8/Tem-90)

**கண்ணீரெல்லாம் காண்பவரே**
கண்ணோக்கிப் பாருமையா
விண்ணப்பங்கள் கேட்பவரே
விடுதலை தாருமையா

என் ஜனங்கள் உம்மை காண வேண்டும்
ராஜா உம்மை அறிய வேண்டும்

1. கர்மேல் சிகரத்திற்கு ஏறி வந்தேன்
உள்ளங்கை மேகத்திற்காய் கதறுகிறேன்

மனமிரங்கும் ராஜா மனமிரங்கும்
என் மேல் மனமிரங்கும்

2. ராஜா உம் சமூகம் தேடி வந்தேன்
என் ஜனங்கள் மீட்புக்காய் வேண்டுகிறேன் - மனமிரங்கும்

3. எப்போதும் என் கைகள் உயரணும்
அந்தகார வல்லமையை ஜெயிக்கணுமே - மனமிரங்கும்

4. கல்வாரி அனுபவம் வேண்டும்
மன்னிக்கும் மனம் இன்று தாருமே - மனமிரங்கும்

## பாடல் - 1945
(D-Maj/4/4/Tem-100)

**சகாயம் செய்யும் கன்மலையே**
சரணடைந்தேன் உம் சந்நிதி
தேவா சரணம் சரணம்
இயேசு ராஜா சரணம் சரணம்

1. கை தூக்கி எடுத்தீரே
கானங்களால் புகழ்வேன்
சஞ்சலம் மாற்றினீர் சந்தோஷம் அளித்தீர்
சங்கீதங்கள் பாடுவேன்

2. எதைக் குறித்தும் கலக்கமில்லை
எபிநேசர் இருப்பதினால்
கருவில் கண்டவர் கைவிட மாட்டீர்
காலமெல்லாம் போதும் நீரே – நன்றி

3. வாழ்க்கை பயணத்திலே
துணையாக வருபவரே
காற்று வீசட்டும் கடலும் பொங்கட்டும்
கரை சேர்க்கும் தெய்வம் நீரே – நன்றி

பாடல் - 1946
(E-Maj/4/4/Tem-85)

**அப்பா உம் சித்தம் போல**
அன்றாடம் என்னை நடத்தும்
ஆட்கொள்ளும் ஆளுகை செய்யும்
ஆளுனரே சரணம்

1. வெண்பனி போல என்னை
தூய்மை ஆக்கிடுமே
ஆவி ஆன்மா சரீரமெல்லாம்
என்றும் உமக்கே சொந்தம்

2. சுயம் என்னில் மடிந்திடணும்
சிலுவை சுமந்திடணும்
உலக இன்ப மேன்மைகளை
உதறி தள்ளிடணும்

3. குயவனே உம் கையில்
களிமண்ணாய் வந்தேன்
உந்தன் சித்தம் போல் வனைந்து கொள்ளும்
உம் சித்தம் செய்திடுவேன்

பாடல் - 1947
(F-Maj/6/8/Tem-110)

**மலைகள் விலகிப் போனாலும் மகிழ்ந்து பாடுவேன்**
பர்வதங்கள் பெயர்ந்தாலும் துதித்து பாடுவேன்
எந்தன் இயேசு என்னை கைவிட மாட்டார்
இயேசு என்னை மறந்திட மாட்டார்

ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
என் அன்பரைத் துதித்துப் பாடுவேன்

1. தண்ணீர்களை கடந்தாலும் சோர்ந்திட மாட்டேன்
அக்கினியில் நடந்தாலும் அழுதிட மாட்டேன்
எந்தன் இயேசு என்னை சுமந்திடுவாரே
இயேசு என்னை ஆதரிப்பாரே

2. மரணமோ நாசமோ பயப்பட மாட்டேன்
துன்பமோ தொல்லையோ கலங்கிட மாட்டேன்
எந்தன் இயேசு என்னை காத்திடுவாரே
இயேசு என்னை நடத்திடுவாரே

3. செங்கடலோ யோர்தானோ முன்னே வந்தாலும்
எரிகோவின் கோட்டைகள் முன்னே வந்தாலும்
எந்தன் இயேசு எனக்கு ஜெயம் தருவாரே
இயேசு எல்லாம் பார்த்துக் கொள்வாரே

## பாடல் - 1948
(C-Min/2/4/Tem-128)

**சேனைகளின் ஆண்டவரே உமக்கே ஆராதனை**
சேதமின்றி காப்பவரே உமக்கே ஆராதனை

1. யுத்தங்களை எனக்காய் செய்தவரே
சத்துருவை வல்லமையாய் வென்றவரே
ஜெயத்தை தந்த ஜெய வீரரே
உமக்கே ஆராதனை

2. சேனைக்குள் பாய்ந்திட பெலனளித்தீர்
மதிலை தாண்டிட வல்லமை தந்தீர்
வெற்றியை தந்த ஜெய வீரரே
உமக்கே ஆராதனை

3. எதிரியின் மீது ஜெயம் அளித்தீர்
உம் புகழை தினம் பாட வைத்தீர்
விடுதலை தந்த ஜெய வீரரே
உமக்கே ஆராதனை

## பாடல் - 1949
(F-Min/4/4/Tem-85)

**சேனைகளின் ஆண்டவரே உம்**
சமூகம் எத்தனை இன்பம்

1. என் தேவனே என் ராஜனே
புகலிடம் நீர்தானையா
என் உள்ளத்தின் வாஞ்சை நீரே
இதய ஏக்கம் நீரே

2. உம் பீடத்தின் அருகினிலே
இடமொன்று கிடைத்ததினால்
குருவிகளும் தங்கிடுதே
களிகூர்ந்து மகிழ்ந்திடுதே

3. கண்ணீரெல்லாம் நீங்குதையா
கவலைகள் மறையுதையா
புதிய பெலன் புது கிருபை
பனி போல் இறங்குதையா

4. உம் இல்லத்தின் வாசலிலே
காவலன் போல் அமர்வேன்
வேறிடமோ நான் செல்வதில்லை
உம் பீடம் சுற்றி வருவேன்

பாடல் - 1950
(F-Min/3/4/Tem-140)

**திறப்பின் வாசல் நிற்கின்றேன்**
சுவரை அடைக்க வருகின்றேன்

1. அழிவின் வழியை நாடுவோர் ஆயிரம் ஆயிரமே
பரலோக பாதை செல்ல மறந்தோர் ஆயிரம் ஆயிரமே

2. சீயோனின் மந்தைகள் கள்ளர்களால் சிதறி போகின்றதே
நல் மேய்ப்பரே உம் மந்தைகளை நீர் தேடி மீட்டிடுமே

3. கோதுமை மணிகள் மத்தியிலும் களைகள் பெருகுதே
தங்கத்திற்கொப்பான சீயோன் குமாரர் களிமண் போலானார்கள்

4. சீயோனே இன்றே எழும்பிடு வல்லமை தரித்துக் கொள்
மேகங்கள் மீது மணவாளன் இயேசு வந்திடும் நாள் சமீபம்

5. இரவும் பகலும் கண்ணீர் சிந்தி கதறி ஜெபம் செய்வோம்
இந்நிலை கண்டும் தாமதம் கொண்டால் குற்றம் நம் மீதல்லோ

பாடல் - 1951
(D-Min/4/4/Tem-85)

**இராக்கால நேரம் ராஜா உம் பாதம்**
அமர்ந்து ஜெபிக்கின்றேன்
கண்ணீருக்கு பதில் தாருமென்று
ஏங்கி கதறுகிறேன்

1. என் ஜனம் அழிவதை எப்படி காண்பேன்
இரங்கும் என் இயேசய்யா
தாழ்த்துகிறேன் என்னை தரை மட்டுமாய்
திறப்பிலே நின்றிடுவேன்

2. நதியளவு தினம் கண்ணீர் சிந்திட
நாதா உம் பாரம் தாரும்
உடைத்து விடும் எந்தன் உள்ளத்தையே
அப்பா உம் ஏக்கத்தினால்

3. அணையாத ஜெப வாஞ்சை என்னில் தாரும்
ஜெபிக்கும் மனிதனாய் மாற்றும்
என் ஜனங்கள் உம்மைக் காணும் வரை
ஓய்வின்றி கதறச் செய்யும்

பாடல் - 1952
(E-Min/4/4/Tem-90)

**மனமெல்லாம் உம்மை தேடுதே – என்**
நினைவெல்லாம் உமதானதே
உயிரிலும் மேலாய் நேசிக்கிறேன்
இயேசுவே உம்மை நேசிக்கிறேன்

1. உள்ளத்தை உம்மிடம் கொடுத்து விட்டேன்
உள்ளதெல்லாம் நான் தந்து விட்டேன்
ஆசையெல்லாம் நீரே
ஏக்கமெல்லாம் நீரே

2. எனது இதயத் துடிப்புக்களோ
உமக்கு மாத்திரம் சொந்தமையா
ஜீவன் உள்ளவரை
உம்மை மறப்பதில்லை



அட்டவணை

## பாடல் - 1953
(E-Maj/4/4/Tem-85)

**நீர் செய்த உபகாரங்கள் எண்ணி முடியாதையா**
நித்தம் நன்றி சொல்லி மகிழ்வேன்
உம் நாமம் துதித்திடுவேன்

1. வழியோரம் கிடந்தேன் ஐயா
என்னைத் தேடி வந்தீரையா
பிழைத்திடு என்றீரையா - உம்
ஜீவனைத் தந்தீரையா

2. மீட்பென்னும் ஆடை தந்தீர்
எண்ணெயால் அபிஷேகித்தீர்
அப்பா உம் சமூகத்திலே - என்னை
எப்போதும் மகிழச் செய்தீர்

3. அநாதி சிநேகத்தினால்
அப்பா நீர் நேசித்தீரே
காருண்ய கரங்களினால் - என்
கண்ணீரை துடைத்தீரே

## பாடல் - 1954
(E-Maj/2/4/Tem-90)

**கால்கள் தள்ளாட விடமாட்டார்**
கன்மலையின் மேல் நிறுத்திடுவார்
துதித்திடுவேன் போற்றிடுவேன்
தூயவரை உயர்த்திடுவேன்

1. தண்ணீர்களை கடந்தாலும்
மூழ்கிப் போவதில்லை
தாங்கிடுவார் ஏந்திடுவார்
தோளில் சுமந்திடுவார்

2. அனுதினமும் நிரப்பிடுவார்
ஆனந்த தைலத்தினால்
அல்லேலூயா பாடிடுவேன்
அன்பர் இயேசுவுக்கே

3. பெலப்படுத்தும் இயேசுவினால்
எல்லாமே செய்திடுவேன்
சேனைக்குள்ளே பாய்ந்திடுவேன்
மதிலை தாண்டிடுவேன்

## பாடல் - 1955
(F-Maj/2/4/Tem-120)

**என்ன நேர்ந்தாலும் நன்றி ராஜா**
எது நடந்தாலும் நன்றி ராஜா

1. உலகோர் என்னை பகைத்தாலும்
உற்றோர்கள் என்னை வெறுத்தாலும்
நன்றி என்று சொல்லுவேன்
நாதா உம் புகழ் பாடுவேன்

2. உள்ளவை யாவும் இழந்தாலும்
கண் காண்பவை எல்லாம் மறைந்தாலும்
குறைகள் நிறைவாக்கிடும்
வல்ல தேவன் என் துணையே

3. ஒன்றையும் குறித்து கவலைப்படேன்
என் ஜீவனையும் நான் நேசித்திடேன்
இலக்கை நோக்கி தொடர்வேன்
இயேசு ராஜாவின் பின் செல்லுவேன்

## பாடல் - 1956
(F-Min/2/4/Tem-125)

**தாய் தன் பிள்ளையை மறந்தாலும்**
நீர் என்னை ஒருபோதும் மறப்பதில்லை
உலகமே என்னை கைவிட்டாலும்
நீர் என்னை ஒருபோதும் விடுவதில்லை

என்னை படைத்தவரே பாதுகாப்பவரே
நீர் என்றென்றும் என்னைத் தாங்குகிறீர்
அல்லேலூயா ஆராதனை

1. கால்கள் தள்ளாடும் நேரங்களில்
கிருபையால் என்னைத் தாங்குகிறீர்
மான்களின் கால்கள் எனக்கு தந்து
இரதங்களை வென்றிட பெலனளித்தீர்

எந்தன் நம்பிக்கையே எந்தன் நங்கூரமே
நீர் என்றென்றும் எனக்கு போதும்
அல்லேலூயா ஆராதனை

2. துன்பங்கள் சூழ்ந்திடும் வேளைகளில்
துதித்திடுவேன் உம்மை புகழ்ந்திடுவேன்
அழைத்தவர் என்னை நடத்திடுவீர்
அதிசயங்கள் தினம் காணச் செய்வீர்

எந்தன் அடைக்கலமே எந்தன் ஆதரவே
நீர் என்றென்றும் எனக்கு போதும்
அல்லேலூயா ஆராதனை

பாடல் - 1957
(F-Maj/4/4/Tem-90)

**கர்த்தாவே உம் பாதத்திலே**
காலமெல்லாம் அமர்ந்திருப்பேன்

1. உம் பாதம் என் தஞ்சமே
உம் சமூகம் என் வாஞ்சையே
உன்னதமானவரே உள்ளத்தில் வாழ்பவரே
மகிழ்வுடன் உம்மை துதிப்பேன்

2. பெலனான கர்த்தாவே
உம்மைத்தான் நேசிக்கின்றேன்
ஆட்கொண்ட என் தெய்வமே
அன்பின் மணவாளனே இதய ஏக்கம் நீரே

3. அன்பரே உம் இன்ப சத்தம்
நித்தம் எந்தன் வாஞ்சையல்லோ
வழிகாட்டும் தீபமே பாதைக்கு வெளிச்சமே
அன்றாட என் உணவே

பாடல் - 1958
(C-Min/3/4/Tem-140)

**கர்த்தாவே என் கன்மலையே**
காலமெல்லாம் என்னை சுமக்கின்றீர்
உம்மையே நம்பியுள்ளேன்
ஒருபோதும் நான் வெட்கம் அடையேன்

1. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
சாபங்கள் யாவும் நீக்கினீரே
புதிய கிருபை தந்தீரே
புண்ணியரே உம்மை போற்றிடுவேன்

2. என் பெலனே கேடகமே
உம்மையே நான் நம்பி நின்றேன்
உதவி தந்தீர் ஸ்தோத்திரம்
உன்னதரே உம்மை போற்றிடுவேன்

3. ஆயன் ஆட்டை சுமப்பது போல்
தகப்பன் பிள்ளையை சுமப்பதுபோல்
கடந்து வந்த பாதையெல்லாம்
என்னை சுமந்து வந்தீர் ஸ்தோத்திரம்

பாடல் - 1959
(F-Min/4/4/Tem-88)

**பசும் பொன் மங்கிப் போனதே**
தங்கங்கள் மண்ணானதே
எங்கள் தேவா மனமிரங்கும்
எங்கள் மீது மனமிரங்கும்

1. சிற்றின்ப மயக்கத்தினால்
சிலுவைப் பாதை மறந்தோம்
உலகத்தின் நேசத்தினால்
உன்னத பிரதிஷ்டை இழந்தோம்

2. ஆடம்பர ஆசையினால்
அர்ப்பண வாழ்வை மறந்தோம்
ஆதி அன்பு குறைந்ததையா
அனல் மூட்டி எழும்ப்புமையா

3. நெரிந்த நாணலையும்
முறிந்திடவே மாட்டீர்
மங்கி எரியும் திரியை
அணைத்திடவே மாட்டீர்

பாடல் - 1960
(A-Maj/3/4/Tem-140)

**ஓசன்னா கீதம் பாடிடுவேன்**
உன்னத தேவன் உந்தனுக்கே
துதிபலி ஸ்தோத்திரங்கள்
தூயவர் உமக்குத்தான்

1. வானம் பூமி படைத்தவரே
வாழ்த்தி உம்மை போற்றிடுவேன்
வல்லவரே வல்லவரே
ஆராதனை உமக்கே

2. ஜீவன் தந்து மீட்டவரே
ஜீவிக்கும் தெய்வம் நீர்தானையா
இரட்சகரே இயேசுநாதா
ஆராதனை உமக்கே

3. என்னைத் தேற்றும் நேசர் நீரே
எந்நாளும் என்னோடு இருப்பவரே
தாகம் தீர்க்கும் ஜீவ ஊற்றே
ஆராதனை உமக்கே

## பாடல் - 1961
(C-Min/2/4/Tem-120)

**பல்லவி**

**அகமகிழ்ந்தடி பணிவோமே நாம்**
தேவ பாலனை

**அனுபல்லவி**

தாவீதின் ஊரதில் ஜோதியாய் உதித்த – எம்
மேசியா இயேசுவைப் போற்றி

**சரணங்கள்**

1. ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம் பாடி
ஆர்ப்பரிப்போமின்று கூடி,
தீன பந்தா மெம் திவ்விய னேசுவை
தினமதில் துதிப்போம் கொண்டாடி - அக

2. தேவதிருச் சுதன் இயேசு நமக்காய்
ஈன வுருவ மெடுத்தார்
ஏவையின் பாவ வேரையறுத் தெமக்
கினிய இரட்சையுமளித்தார் - அக

3. பூவுலகோருக்குப் புண்ணியனிவரே!
மேலுலகோருக்கும் கோனே!
பாவிகள் மோட்சப் பதவியடைந்திட
தாவியிப் புவியில் வந்தாரே - அக



அட்டவணை

பாடல் - 1962
(G-Maj/6/8/Tem-128)

**ரொம்ப ரொம்ப நல்லவர் நம் இயேசு**
அற்புதங்கள் செய்பவர் நம் இயேசு
வார்த்தையில் வல்லவர் நம் இயேசு
வாழ வைக்கும் தெய்வம் நம் இயேசு

ஆராதிப்போம் நம் இயேசு ராஜனை
போற்றிடுவோம் நம் அன்பு நேசரை

1. அழகில் சிறந்தவர் இயேசு
அன்பு நிறைந்தவர் இயேசு

2. சந்தோஷம் தருபவர் இயேசு
சாத்தானை ஜெயித்தவர் இயேசு

3. விடுதலை கொடுப்பவர் இயேசு
வியாதிகள் நீக்குவார் இயேசு

4. அபிஷேக நாதராம் இயேசு
ஜெயம் தரும் தேவனாம் இயேசு

5. ராஜாதி ராஜனாம் இயேசு
கர்த்தாதி கர்த்தனாம் இயேசு

பாடல் - 1963
(E-Maj/2/4/Tem-120)

**இம்மட்டும் காத்த தேவன்**
இனியும் நடத்திடுவார்
அவரின் சிறகுகளால் உன்னை மூடி காத்திடுவார்

1. நித்திய மகிழ்ச்சி நேசர் தருவார்
நித்தமும் நடத்திடுவார்
தள்ளாட விடமாட்டார்

2. தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும்
கர்த்தர் உன்னை சேர்த்துக் கொள்வார்
திகையாதே கலங்காதே

3. துயரங்கள் கண்டு தளர்ந்து விடாதே
தூயவர் இயேசுவை பார்
விடுதலை தந்திடுவார்

## பாடல் - 1964
## (F-Min/6/8/Tem-125)

**உன்னதத்ததின் வல்லமை தாருமையா**
உம் தூய ஆவியை ஊற்றுமையா
ஊற்றிடும் உந்தன் ஆவியை (2)

1. மாம்சமான யாவர் மேலும்
உந்தன் ஆவியை ஊற்றுவேன் என்றீர்
ஆவலோடு காத்து நிற்கிறோம்
ஆவியால் அபிஷேகியும்

2. பெந்தெகொஸ்தே நாளைப் போல
இந்த நாளில் ஊற்ற வேண்டும்
ஆவியில் நிரம்ப வேண்டுமே
அயல் மொழியில் துதிக்க வேண்டுமே

3. ஜீவத்தண்ணீர் தேசம் எங்கிலும்
நதியாக பாய வேண்டும்
வறண்ட நிலம் செழிப்பாகணும்
கனிதரும் மரங்கள் எழும்பணும்

## பாடல் - 1965
## (D-Min/4/8/Tem-82)

**அப்பா உம் அன்பு ஒன்றே போதும்**
என் உயிருள்ள நாளெல்லாம்
ராஜா உம் பாசம் ஒன்றே போதும்
என் ஜீவிய நாளெல்லாம்

நீரே எனதெல்லாம்
உம்மையே நேசிப்பேன்
உம்மையே நேசிப்பேன்

1. கல்வாரி நேசத்தினால்
எந்தன் உள்ளம் மாறிற்றே
உம் தூய இரத்தத்தினால்
எந்தன் பாவம் நீங்கிற்றே - நீரே

2. தினம் உன் உள்ளமதை ஆளும்
என் தேவ ஆவியே
உம் தூய பாதையில் நடத்தும்
என் தேவ ஆவியே - நீரே

### பாடல் - 1966
### (F-Maj/6/8/Tem-95)

**மனம் திறந்து உம்மிடம் பேசினேன்**
மனக்கவலை மறைந்து போனதையா
உள்ளம் உடைந்து உம்மை நோக்கினேன்
நறுமணம் வாழ்வில் வந்ததையா

1. கறுப்பு நிறம் நானென்று சொன்னேன்
ரூபவதி நீ தான் என்றீர்
வறண்டு போன நிலம் நான் என்றேன்
ஜீவத்தண்ணீர் நானே என்றீர்

2. பெலவீனன் நான் என்று சொன்னேன்
என் கிருபை போதும் என்றீர்
காயப்பட்ட மனிதன் நான் என்றேன்
பரிகாரி நானே என்றீர்

3. துணை ஏதும் இல்லை என்று சொன்னேன்
நான் உனக்கு போதும் என்றீர்
இந்த பூமி சொந்தமல்ல என்றேன்
சொந்த தேசம் சேர்ப்பேன் என்றீர்

### பாடல் - 1967
### (F-Maj/2/4/Tem-122)

**அல்லேலூயா கீதம் பாடுவேன்**
என் ஆண்டவரைக் கொண்டாடுவேன்
தூக்கியெடுத்தார் சேற்றிலிருந்து
துதியின் கீதங்கள் நாவில் தந்தார்

ஆராதனை ஆராதனை என் இராஜாதி ராஜனுக்கே
ஆராதனை ஆராதனை என் தேவாதி தேவனுக்கே

1. துன்பமெல்லாம் போக்கி விட்டாரே
துதியின் ஆடை எனக்கு தந்தாரே
வாழ்த்திப் பாடுவேன் போற்றிப் பாடுவேன்
தாழ்வில் என்னை நினைத்தவரை

2. நன்றியால் உள்ளம் பொங்குதே
இயேசு ராஜாவை நெஞ்சம் தேடுதே
என்றும் பாடுவேன் எந்தன் இயேசுவை
எந்தன் வாழ்வில் எல்லாம் அவரே
கர்த்தர் செய்த நன்மைகளுக்காய்
காலமெல்லாம் துதித்திடுவேன்

## பாடல் - 1968
## (D-Min/4/4/Tem-82)

**உயிருள்ள நாளெல்லாம் உம்மைப் பாடுவேன்**
என் ஆசை நாயகா உம்மை நேசிப்பேன்
என்ன வந்தாலும் உம்மை துதிப்பேன்
எவ்வேளையும் நான் உம்மில் மகிழ்வேன்

1. பூமியிலே உயிர் வாழும் வரை
ஆசையுடன் உம்மை ஆராதிப்பேன்
விண்ணிலும் மண்ணிலும் என் செல்வம் நீரே
இழப்பேனோ உம்மை மறப்பேனோ

2. நினைவெல்லாம் உமதாகணும்
என் பேச்செல்லாம் உம் புகழாகணும்
உம்மை அல்லாமல் நிம்மதி ஏது
உம்மையன்றி வேறு மகிழ்வேது

## பாடல் - 1969
## (G-Min/2/4/Tem-123)

**படைத்தவர் உன்னை கைவிடமாட்டார்**
பதறாதே மனமே
அழைத்தவர் உன்னை நடத்திடுவாரே
அனுதின வாழ்க்கையிலே

நாம் ஆராதிக்கும் இயேசு நல்லவர்
நாம் போற்றிடும் இயேசு பெரியவர்

1. பெயர் சொல்லி அழைத்த உன்னத தேவன்
ஒருபோதும் உன்னை மறவார்
காரிருள் நீ நடந்திடும் வேளை
ஒளியாய் வந்திடுவார் - நாம் ஆராதிக்கும்

2. கடந்ததை நினைத்து அழுதிட வேண்டாம்
கலங்கிடவும் வேண்டாம்
தீமைகள் யாவும் நன்மையாய் மாறும்
நம் இயேசு ஜீவிப்பதால் - நாம் ஆராதிக்கும்

3. வறண்ட நிலங்கள் வயல்வெளியாகும்
பள்ளங்கள் நிரப்பப்படும்
தேவனால் கூடும் எல்லாம் கூடும்
கூடாததொன்றுமில்லையே - நாம் ஆராதிக்கும்



அட்டவணை

4. அகிலம் ஆளும் ராஜாதி ராஜா
நம் துணையானாரே
யெகோவாயீரே போதும் அவரே
என்றும் நம் வாழ்வினிலே - நாம் ஆராதிக்கும்

## பாடல் - 1970
## (D-Maj/3/4/Tem-137)

**பாவி என்னை நேசித்தீர்**
உம் அன்பு மாபெரிது
பாவங்களை மன்னித்தீர்
உம் அன்பு மாபெரிது

ஆராதிப்பேன் உம்மையே
உயர்த்துவேன் உம்மையே

1. மாசற்ற உம் இரத்தத்தால்
உம் மகனாக மாற்றினீரே
இணையில்லா உந்தன் அன்பால்
உம்மோடு இணைத்து விட்டீர்

2. உள்ளத்தில் மாற்றம் தந்தீர்
என் எண்ணத்தில் தூய்மை தந்தீர்
அளவில்லா உந்தன் அன்பு
போதும் என் ஆயுளெல்லாம்

3. காரிருள் நீங்கினதே
தீபமாய் நீர் வந்தால்
இயேசுவே உம் அன்பைப் போல்
எங்கும் நான் கணவில்லை

## பாடல் - 1971
## (F-Maj/6/8/Tem-95)

**ஆஸ்திகளெல்லாம் ஈடாகுமா**
என் அப்பா உந்தன் அன்பிற்கு இணையாகுமோ
உலக நேசங்கள் ஈடாகுமா
என் ராஜா உந்தன் அன்பிற்கு இணையாகுமோ

1. அன்பின் அக்கினி பற்றியெரியுதே
உள்ளமெல்லாம் உம்மை நாடித் தேடுதே
தண்ணீர்கள் தணிப்பதில்லையே
நேசரே உந்தன் அன்பினை

2. திராட்சை ரசத்திலும் உம் நேசம் பெரியது
உந்தன் நாமமோ இனிமையானது
ருசித்து விட்டேன் உந்தன் அன்பினை
அறிந்து கொண்டேன் உந்தன் பாசத்தை

3. தாயும் நீரே தந்தையும் நீரே
சொந்தமும் நீரே எனதெல்லாம் நீரே
ஆத்ம நேசர் எந்தன் நேசரே
ஆயுளெல்லாம் போதும் நீரே

4. வெண்மையானவர் நீர் ரூபமுள்ளவர்
இன்பமானவர் நீர் மதுரமானவர்
உன்னத பாடல் உமக்குத்தானய்யா
அன்பரே எந்தன் இயேசய்யா

## பாடல் - 1972
## (G-Maj/2/4/Tem-123)

**அதிசயமாய் நம்மை நடத்திடுவார்**
ஆனந்தமாய் துதி சாற்றிடுவோம்

தேசமே பயப்படாதே
தேவன் பெரிய காரியம் செய்வார்

1. இதயத்தை ஊற்றிடுவோம்
கர்த்தரின் சமூகத்திலே
மனமிரங்கும் நேசர்
பின்மாரி பொழிந்திடுவார்

2. கண்ணீரால் கழுவிடுவோம்
இயேசுவின் பாதத்தையே
நிந்தைகள் நீக்கிடுவார்
இழந்ததை தந்திடுவார்

3. சத்திய பாதையில்
நித்தமும் நடத்திடுவோம்
வெட்கப்பட்டுப் போகாமலே
வெற்றி மேல் வெற்றி பெறுவோம்

4. வனாந்திரம் செழிப்பாகும்
வாதைகள் மறைந்து விடும்
சந்தோஷம் என்றும் பொங்கும்
சம்பூரணம் அடைவோம்

5. சீயோனின் மாந்தர்களே
கெம்பீரமாய் பாடுங்கள்
சேனைகளின் கர்த்தர்
என்றென்றும் நம்முடனே

## பாடல் - 1973
(F-Min/6/8/Tem-93)

**துதிப்பேன் உம்மையே துதிப்பேன்**
நித்தம் உம்மை துதித்து கொண்டிருப்பேன்

1. இன்பமானாலும் துன்பமானாலும்
கஷ்டமானாலும் பெரும் நஷ்டமானாலும்

வாழ்வு தந்தவரே உம்மை வாழ்த்திப் பாடுவேன்
வல்ல தேவன் உம்மை போற்றி பாடுவேன்

2. கவலையானாலும் கலக்கமானாலும்
நெருக்கமானாலும் மிக ஒடுக்கமானாலும்

3. மரணமானாலும் ஜீவனானாலும்
பெலனானாலும் பெலவீனமானாலும்

4. வாழ்த்தினாலும் பிறர் தூற்றினாலும்
புகழ்ந்தாலும் என்னை இகழ்ந்தாலும்

## பாடல் - 1974
(D-Maj/4/4/Tem-87)

**எது நடந்தாலும் நன்றி சொல்லியே துதித்திடுவேன்**
எந்த நேரமும் எந்தன் இயேசுவில் மகிழ்ந்திருப்பேன்

1. சரீரம் செத்தவனென்று
உலகம் இகழ்ந்தாலும்
வாக்கு தந்த கர்த்தர் மாறிடவே மாட்டார்
சொன்னதை செய்வார் நன்மையே தருவார்

2. சொந்தம் பந்தங்களும்
என்னை பிரிந்தாலும்
தரிசனம் தந்தவரோ தனியே விட மாட்டார்
சொன்னதை செய்வார் என்னை நடத்துவார்

3. புயல்கள் வந்தாலும்
அலைகள் பெருகினாலும்
அழைத்த நேசரோ கைவிடவே மாட்டார்
சொன்னதை செய்வார் அக்கரை சேர்ப்பார்

## பாடல் - 1975
## (D-Maj/3/4/Tem-138)

**எனதெல்லாம் நீரே என் இயேசுவே**
உம்மையன்றி வாழ்வேதைய்யா

1. தள்ளாடி தவித்திட்ட வேளையிலும்
கால்கள் தளர்ந்திட்ட நேரத்திலும்
உதவி செய்ய நீர் தயங்கவில்லை
மன்னித்திட நீர் மறக்கவில்லை

2. கண்ணீரின் பாதையில் நடந்த போதும்
இருள் சூழ்ந்த பாதையை கடந்த போதும்
நீர் மாத்திரம் என்னோடிருந்தீர்
உம் வார்த்தையால் தினம் பெலனளித்தீர்

3. பாரங்கள் என்னை நெருக்கினாலும்
பதறிடேனே நீர் இருப்பதனால்
அழைத்தவரே நீர் நடத்திடுவீர்
வழுவாமலே தினம் காத்திடுவீர்

## பாடல் - 1976
## (D-Min/4/4/Tem-180)

**கழுகை போல எழும்பிடுவோம்**
கர்த்தருக்காக பறந்திடுவோம்
சிகதரங்களை நாம் கடந்திடுவோம்
இயேசுவுக்காக ஜொலித்திடுவோம்

வாழ்க்கை என்பது ஒன்றே ஒன்றுதான்
முற்றும் முழுவதும் நம் இயேசுவுக்காகத்தான்

1. கடந்ததை முற்றும் மறந்திடுவோம்
இலக்கை நோக்கி தொடர்ந்திடுவோம்
சாத்தான் சதிகளை தகர்த்திடுவோம்
சரித்திரம் படைக்கும் சாட்சியாவோம்

2. ஆவி ஆத்மா சரீரமெல்லாம்
அர்ப்பணம் செய்தே வாழ்ந்திடுவோம்
பாரில் ஜீவன் மடியும் வரை
பரிசுத்தம் என முழங்கிடுவோம்

3. உலகை கலக்கும் சீடர்களாய்
உன்னத சேவை செய்திடுவோம்
அகிலம் ஆளும் ஆண்டவரின்
அன்பை சொல்ல புறப்படுவோம்

## பாடல் - 1977
## (F-Min/2/4/Tem-120)

**மண்ணான மனிதன் என்னை**
கண்ணோக்கி பார்த்தீரய்யா
துதிப்பேன் உம்மை புகழ்வேன்
என் ஆயுள் நாளெல்லாம்

ஸ்தோத்திரம் இயேசுவே உம்மை
பாடுவேன் என்றுமே

1. காலை தோறும் புதுக் கிருபை
நாள் தோறும் தந்தீரய்யா
என்னையும் நினைத்திடும்
உம் பாசம் பெரியது

2. துன்பங்கள் மறந்திட செய்தீர்
கண்ணீரை களிப்பாக்கினீர்
என்னை நான் சொல்லுவேன்
உம் மாறிடா நேசத்தை

3. என் உள்ளம் உம்மில் மகிழும்
என்றென்றும் உம்மைப் போற்றும்
நல்லவர் நீர் வல்லவர்
என்றும் என்னை காண்பவர்

## பாடல் - 1978
## (D-Maj/3/4/Tem-135)

**சேதமின்றி காப்பவரே**
சேனைகளின் கர்த்தர் நீரே

ஆராதனை உமக்கே அன்பரே என் இயேசுவே

1. கண்ணின் மணி போலவே
காத்தீரே உம் தயவால்

ஆராதனை உமக்கே - 4

2. அக்கினி மதிலாக
சூழ்ந்து நிற்பவரே

3. செட்டைகளின் மறைவில்
பதறாமல் பாதுகாத்தீர்

4. ஊழியப் பயணத்திலே
ஜீவனைக் காத்தீரய்யா

5. நன்றியால் உள்ளமெல்லாம்
நாள்தோறும் துதித்திடுதே

**பாடல் - 1979**
**(F-Min/2/4/Tem-115)**

**புலம்பலை ஆனந்தக் களிப்பாக்கினீர்**
புதுப்பாடல்களை என் நாவில் தந்தீர்

என்றும் நன்றி சொல்லித் துதிப்பேன்
இயேசுவே உம் அன்பில் மகிழ்வேன்

1. கைதூக்கி எடுத்தீரே
கண்ணீரைத் துடைத்தீரே

2. அழுகையோடு அயர்ந்தேன்
மகிழ்வுடன் விழிக்கச் செய்தீர்

3. மாறாத உம் தயவால்
என்னையும் வாழ வைத்தீர்

4. பெலவீன நேரங்களில்
புதுப்பெலன் தந்தீரையா

5. கூப்பிட்ட நேரங்களில்
என் குரல் கேட்டீரையா

6. சந்தோஷ கீதங்களை
என் நாவில் தந்தீரையா

## பாடல் - 1980
## (G-Maj/4/4/Tem-180)

**எந்தன் இயேசு எந்தன் உள்ளம் வந்ததால்**
என் உள்ளம் துள்ளிப் பாடுதே
எந்தன் இயேசு எந்தன் வாழ்வை மாற்றியதால்
என் நெஞ்சம் போற்றிப் பாடுதே

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

1. பாவம் சாபம் யாவும் ஒழிந்த போனதே
எல்லாம் முற்றும் புதிதானதே
இரத்தத்தாலே இயேசு என்னை கழுவினார்
இரட்சண்ய பாடல்கள் தந்தார்

2. ஆவியாலே எந்தன் உள்ளம் நிரப்பினார்
அப்பா என்று கூப்பிட செய்தார்
கட்டுகள் யாவும் எந்தன் இயேசு உடைத்தார்
கண்ணீர் கவலை யாவும் போக்கினார்

3. சாத்தான் சேனை முற்றும் தோற்றுப் போனதே
இயேசு ராஜா வெற்றி பெற்றாரே
சிலுவைப்பாதை இன்றும் என்றும் ஜெயமே
தோல்வி இல்லை வெற்றி வெற்றியே

## பாடல் - 1981
## (D-Min/4/4/Tem-87)

**எந்த நன்மையும் என்னில் இல்லையே**
தேவா என்னையும் நீர் நேசிக்க
எந்த மேன்மையும் என்னில் இல்லையே
தேவா என்னையும் நீர் நினைக்க

1. அழகுமில்லை ஆஸ்தியுமில்லை
ஆனாலும் என்னை நீர் அழைத்தீர்
படிப்புமில்லை பட்டமுமில்லை
ஆனாலும் என்னை நீர் பிடித்துக் கொண்டீர்

உந்தன் அன்பு உயர்ந்ததையா
உந்தன் ஞானம் சிறந்ததையா



அட்டவணை

2. ஞானியுமல்ல மேதையுமல்ல
பேதையாம் என்னை தேடி வந்தீர்
பெலவான் அல்ல கனவானுமல்ல
பெலவீனன் என்னையும் தெரிந்து கொண்டீர்

உந்தன் அன்பு உயர்ந்ததைய்யா
உந்தன் ஞானம் சிறந்ததைய்யா

3. ஜீவனும் உமக்கே வாழ்வும் உமக்கே
அர்ப்பணம் செய்தேன் அனைத்தும் உமக்கே
வாழ்கின்ற வரையில் உம்புகழ் சொல்வேன்
இயேசுவே உம்மை என்றும் நேசிப்பேன்

உந்தன் அன்பை நான் மறவேன்
எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்

## பாடல் - 1982
## (G-Maj/2/4/Tem-125)

**நடப்பதெல்லாம் நன்மைக்குத் தான்**
நம்பிடுவோம் நம் தேவனையே
(இயேசுவையே)

1. தேவன் நம் சார்பில் இருக்கும்போது
நமக்கெதிராக நிற்பவன் யார்?
தேவனே நமது சகாயரே
யாருக்கும் நாம் அஞ்சிடோம்

அவர் உண்மையுள்ளவரே
நம்மை கைவிடாதவரே

2. நம்மை விட்டு ஒருபோதும் அவர்
நம்மை ஒருநாளும் அவர் மறவார்
இதுவரை நம்மை நடத்தி வந்தார்
இனிமேலும் நடத்திடுவார் - அவர்

3. நம் கர்த்தர் என்றும் நல்லவரே
ருசித்திடுவோம் அவர் அன்பினையே
தாழ்மையில் நம்மை நினைத்தாரே
வாழ்த்தியே பாடிடுவோம் - அவர்

4. இளவயதில் நம் நம்பிக்கையவர்
முதிர் வயதில் நம்மை ஆதரிப்பார்
முடிவிலே மகிமையில் அவருடனே
நம்மையும் சேர்த்திடுவார் - அவர்

## பாடல் - 1983
## (D-Min/2/4/Tem-120)

**இஸ்ரவேலின் தேவன் என்னை மறப்பதில்லை**
யாக்கோபின் தேவன் கைவிடுவதில்லை

1. ஆயிரம் துன்பங்கள் என் வாழ்வில்
சூழ்ந்தென்னை நெருக்கி தாக்கினாலும்
கலங்கிடேன் அஞ்சிடேன் என்றென்றுமே
இஸ்ரவேலின் தேவன் என்னை மறப்பதில்லை

2. தாங்கிடும் துணையும் நங்கூரமும்
தரணியில் எல்லாம் எனக்கவரே
தளர்ந்திட ஒருபோதும் விடமாட்டார்
தம் கரத்தால் என்னை ஆசீர்வதிப்பார்

3. கண்மணிப் போல் என்னை காத்திடுவார்
கழுகைப் போல் என்னை சுமந்திடுவார்
அவர் சமூகம் என்னை வழிநடத்தும்
அவர் கிருபை என் மேலிருக்கும்

4. மாறாத அன்பால் இறுதிவரை
மகிழ்வுடன் என்னை நடத்திடுவார்
மகிமையில் என்னை சேர்த்திடவே
தம் சாயலாய் என்னை உருவாக்குவார்

## பாடல் - 1984
## (F-Maj/6/4/Tem-90)

**என் ஆசையெல்லாம் நீர்தானே இயேசய்யா**
என் ஏக்கமெல்லாம் நீர்தானே இயேசய்யா
நினைவெல்லாம் நீர்தானே இயேசய்யா
என் நிம்மதியும் நீர்தானே இயேசய்யா

1. உள்ளமும் உடலும் உம்மைத்தானே
நாடித் தேடுதே தினம் வாஞ்சிக்குதே
நேசிக்கின்றேன் உம்மைத் தானய்யா
அன்பரே எந்தன் இயேசய்யா

2. இராப் பகல் எந்தன் நினைவெல்லாம்
உம்மையன்றி வேறு எதுவுமில்லையே
அளவில்லாத உந்தன் நேசத்தால்
அப்பா என்னை கவர்ந்து கொண்டீரே



அட்டவணை

3. ஜீவனுள்ள நாளெல்லாம் பாடுவேன்
நன்றியோடு உம்மை என்றும் பாடுவேன்
எல்ரோயீ நீர் தானய்யா
என்னையும் கண்டீரய்யா

4. எந்தன் வாழ்வை உம் கையில் தந்துவிட்டேன்
பண்படுத்துமே இன்னும் பயன்படுத்துமே
மகிமை எல்லாம் உமக்குத்தானய்யா
மாட்சிமையும் உமக்குத்தானைய்யா

## பாடல் - 1985
(F-Min/4/4/Tem-180)

**துதிபலி துதிபலி தூயவர் இயேசுவுக்கே**
நன்றிபலி நன்றிபலி நல்லவர் இயேசுவுக்கே

ஆராதனை தேவனுக்கே
ஆராதனை நம் ராஜனுக்கே

1. வாழ்ந்திடுவோம் வாழ்த்திடுவோம்
வல்லவர் இயேசுவையே
போற்றிடுவோம் போற்றிடுவோம்
பெரியவர் இயேசுவையே

2. பாடிடுவோம் பாடிடுவோம்
பரமன் இயேசுவையே
புகழ்ந்திடுவோம் புகழ்ந்திடுவோம்
புண்ணியர் இயேசுவையே

3. ஆராதிப்போம் ஆராதிப்போம்
அன்பர் இயேசுவையே
உயர்த்திடுவோம் உயர்த்திடுவோம்
உன்னதர் இயேசுவையே

## பாடல் - 1986

**உம் நாமம் எத்தனை இன்பம்**
அது மேன்மையும் கூட

பருக பருக தெவிட்டாத திராட்சை ரசம் போல
அன்பே ஆராதனை அழகே ஆராதனை

1. கிச்சிலி மரமே நேசத் தைலமே
மருதோன்றி பூங்கொத்தே ஆராதனை

2. எந்தன் பிரியமே ஆத்ம நேசரே
ஊற்றுண்ட பரிமளமே

3. இனிமையானவரே மிகவும் மதுரமானவரே
அழகில் சிறந்தவரே ஆராதனை

4. என்னை கவர்ந்த நேசர் அவர் என்னுடையவர்
இன்று கூட நானும் அவருடையவன்

## பாடல் - 1987

**எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்**
எனக்காக மீண்டும் வருவீர் - மேசியா

யூத ராஜ ராஜ சிங்கம் யுகயுகமாய்
வாழ்ந்திருக்கும் எங்கள் தெய்வம் யெகோவா
உயிரோடு எழுந்தவரே உலகெல்லாம் ஆள்பவரே

1. வெண்மையும் சிவப்பும் கலந்தவரே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே
சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே

2. சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே
கேரூபீன்கள் சேராபீன்கள்
போற்றத்தக்கவரே கர்த்தாதி கர்த்தாவே
பரலோக ராஜாவே

3. வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர்
முழங்கால்கள் முடங்கிடும்
அதிசயமானவரே ஜெபத்தை கேட்பவரே
ஜெயத்தை தருபவரே

## பாடல் - 1988

**ஆராதனை இயேசு ராஜா**
ஆராதனை ஏற்றுக்கொள்ளுமே
ஆவியான தெய்வமே
எங்கள் ஆராதனை உங்களுக்குத்தான்

எங்கள் கன்மலையே எங்கள் கோட்டையே
எங்கள் நம்பிக்கையே உம்மை ஆராதிப்போம்

1. கர்த்தர் மேல் எந்தன் பாரத்தை வைத்தேன்
அவரே என்னை ஆதரிப்பார்
எனக்காய் யாவையும் செய்து முடிப்பார்
எல்ஷடாய் எந்தன் அடைக்கலமே

2. கிருபையால் என்னை இரட்சித்தாரே
பாவத்தின் கறைகள் நீக்கினாரே
நெருக்கங்கள் யாவும் மாற்றினாரே
விசாலத்தில் என்னை வைத்திட்டாரே

3. தாயினும் மேலாய் நேசித்தாரே
தந்தையைப் போல் போஷித்தாரே
கால் சறுக்கிடும் வேளைகளில்
கரத்தை பிடித்து தூக்கினாரே

## பாடல் - 1989

**மேலே வானத்திலும்**
கீழே பூமியிலும்
உம்மையல்லால்
வேறு தெய்வம்
ஒன்றும் இல்லை - இயேசுவே

வாழ்க நீர் வாழ்க இயேசுவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க

1. ஆபிரகாம் தேவன் வாழ்க
ஈசாக்கின் தேவன் வாழ்க
யாக்கோபின் தேவன் வாழ்க
ஆபிரகாமின் தேவனே நீர் வாழ்க
ஈசாக்கின் தேவனே நீர் வாழ்க
யாக்கோபின் தேவனே நீர் வாழ்க

2. மோசேயின் தேவன் வாழ்க
யோசுவாவின் தேவன் வாழ்க
அற்புதத்தின் தேவனே நீர் வாழ்க
மோசேயின் தேவனே நீர் வாழ்க
யோசுவாவின் தேவனே நீர் வாழ்க

3. எலியாவின் தேவன் வாழ்க
எலிசாவின் தேவன் வாழ்க
அக்கினியின் தேவனே நீர் வாழ்க
எலியாவின் தேவனே நீர் வாழ்க
எலிசாவின் தேவனே நீர் வாழ்க
அக்கினியின் தேவனே நீர் வாழ்க

## பாடல் - 1990

**அல்லேலூயா பாடுவோம்**
ஆர்ப்பரித்து போற்றுவோம்
உயிரோடெழுந்த இயேசுவை
என்றென்றும் ஆராதிப்போம்

1. உயிர்த்தெழுந்த நம் இயேசு
மரணத்தை ஜெயித்தெழுந்தார்
இன்றும் உயிரோடிருக்கிறவர்
நம்மை என்றென்றும் நடத்துவார்

## பாடல் - 1991

**பிசாசானவன் தோற்றுப் போனவன்**
சிலுவையில் அவன் தலை நசுங்கினதே
வல்லமையும் அதிகாரமும் நம் கையிலே
சிலுவையிலே இயேசு நமக்குத் தந்தார்

1. பிசாசானவன் நம் காலின் கீழே
தேவபிள்ளை மேல் அவனுக்கு அதிகாரம் இல்லை
ஒன்று சேர்ந்து நாம் இயேசுவை துதிக்கும்போது
அவன் கிரியைகளை நாம் அழித்திடலாம்

2. பிசாசானவன் பொய்யன் தானே
அவனின் வார்த்தைகள் நம்ப வேண்டாம்
சத்திய ஆவி நமக்குள்ளே
சகலமும் போதித்து நடத்திடுவார்

3. ஆவியானவர் என்மேலே இருக்கிறார்
அனுதினமும் என்னை நடத்துகிறார்
பரிசுத்த அக்கினி எனக்குள்ளே
அணைத்திட யாராலும் முடியாது

## பாடல் - 1992

**பலமும் அல்ல பராக்கிரமம் அல்ல**
தம் ஆவியாலே ஆகும் என்றவர்
நம் போராயுதங்கள் உலகம் தந்ததல்ல
பலமுள்ளவை யாவிலும் பலமுள்ளவை

அவர் கிருபையின் வல்லமை அன்பின் வல்லமை
பலமுள்ளவை இயேசுவால்
நாம் ஒன்று சேர்ந்து இயேசுவை ஆராதிக்க
அவர் நாமத்தால் ஜெயம் வரும்
அவர் வார்த்தையால்

## பாடல் - 1993

**உந்தன் மகா பிரசுத்த ஸ்தலத்திற்குள்ளே**
என்னையும் அழைத்துச் செல்லும்

உம் பரிசுத்த ரதத்தினாலே
என்னை கழுவிடும் தூய்மையாக்கிடும்

உள்ளே அழைத்துச் செல்லும்
உம் பிரசன்னத்தால் நிரப்பிடும்
உம் மைகிமை காண்பித்திடும்
உம்மைப் போல் மாற்றிடும்

## பாடல் - 1994

**எல்லாவற்றிலும் மேலானவர்**
எல்லோரிலும் பெரியவர்
சகலவற்றையும் சிருஷ்டித்தவர்
சர்வத்தில் உயர்ந்தவர்

உம்மைப் போல வேற தேவனில்லை
நீர் நீர் மாத்ரமே பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்பவரே
நீரே பரிசுத்த தெய்வம்
நீரே நீர் மாத்ரமே பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

## பாடல் - 1995

**நானே உன்னை சுகமாக்கும் பரிகாரியான தெய்வம்**
உன்னை சுகமாக்குவேன் என் நாமத்தினால்

நீரே என்னை சுகமாக்கும் தெய்வம்
என்னை சுகமாக்கிடும் உம் தழும்புகளால்

என்னை சுகமாக்கிடும்
என்னை சுகமாக்கிடும்
என்னை சுகமாக்கிடும்
உம் வார்த்தையினால்

என்னை சுகமாக்கிடும் உம் நாமத்தினால்

## பாடல் - 1996

**துதிகளால் அவரை உயர உயர்த்துவேன்**
சாத்தானை காலின் கீழே மிதித்திட
எதற்கு நீ அவரை உயர்த்துவாய்
சாத்தானை காலின் கீழே மிதித்திட
எதற்கு நீ அவரை ஆராதிப்பாய்
சாத்தானை காலின் கீழே மிதித்திட

## பாடல் - 1997

**யார் வார்த்தையை நீ நம்புவாய்**
கர்த்தரின் வார்த்தையை நான் நம்புவேன்
சுகமானேன் நான் அவர் வார்த்தையால்
நிரப்பப்பட்டேன் அவர் வார்த்தையால்
விடுதலையானேன் அவர் வார்த்தையால்
வெற்றி எனக்கு அவர் வார்த்தையால்

## பாடல் - 1998

**நீரே எல்லாம் நீரே எல்லாம்**
நீரே எல்லாம் இயேசுவே
உயர்வோ தாழ்வோ மரணமோ ஜீவனோ
நீரே எல்லாம் இயேசுவே

1. ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் ஆராதிப்பேன் இயேசுவை
இன்பமோ துன்பமோ சுகமோ வியாதியோ
ஆராதிப்பேன் இயேசுவை



அட்டவணை

2. நேசிப்பேன் நேசிப்பேன்
நேசிப்பேன் நேசிப்பேன் இயேசுவை
நன்மையோ தீமையோ செல்வமோ
வறுமையோ நேசிப்பேன் இயேசுவை

3. பின் தொடர்வேன் பின் தொடர்வேன்
பின்தொடர்வேன் இயேசுவை
வெற்றியோ தோல்வியோ நிந்தையோ
புகழ்ச்சியோ பின் தொடர்வேன் இயேசுவை

## பாடல் - 1999

**நான் கண்டேன் நான் கண்டேன்**
சாத்தானின் வீழ்ச்சியை
மகிமை அவர்க்கே மகிமை இயேசுவுக்கே

என் வலப் பக்கத்தில் சாத்தான் வீழ்ந்தானே
என் இடப் பக்கத்தில் சாத்தான் வீழ்ந்தானே
முன் பக்கத்தில் சாத்தான் வீழ்ந்தானே
பின் பக்கதில் சாத்தான் வீழ்ந்தானே

நான் கண்டேன் நான் கண்டேன் இயேசுவின் வெற்றி
மகிமை அவர்க்கே மகிமை இயேசுவுக்கே
மகிமை அவர்க்கே மகிமை இயேசுவுக்கே

நான் கண்டேன் நான் கண்டேன் இயேசு ஜெயித்தாரே
என் வலப் பக்கத்தில் இயேசு ஜெயித்தாரே
என் இடப் பக்கத்தில் இயேசு ஜெயித்தாரே
அல்லேலூயா...

## பாடல் - 2000

**தேவ பிரசன்னம் தேவ பிரசன்னம் தேவ பிரசன்னம்**
ஏங்குதே கதறுதே என் உள்ளம் துடிக்குதே – 2

பிரசன்னம் பிரசன்னம் மகிமையின் பிரசன்னம்
மாறாத பிரசன்னம் தேவ பிரசன்னம்

1. மலை போன்ற சோதனை நேர்ந்தாலும்
இருள் போன்ற துன்பங்கள் சூழ்ந்தாலும்
சத்துருக்கள் என்னை எதிர்த்து வந்தாலும்
சவால்கள் என்னை கலங்கச் செய்தாலும் (2)
உம் பிரசன்னத்தால் ஜெயிப்பேன்
ஜெயித்து முன்னேறுவேன் (2)

2. கர்த்தரின் நாமம் பலத்த துருகமே
சுகமாயிருப்பான் நீதிமான் அதற்குள்
பர்வதங்கள் மெழுகு போல் உருகிடும்
உம் பிரசன்னத்தால் உருகிப்போய்விடும்

3. உம் சமூகம் எனக்கு முன்பாகச் சென்றிடும்
இளைப்பாறுதல் சுற்றிலும் தருகின்றீர்
உம் கண்களில் எனக்கு கிருபை கிடைத்ததே
நீர் என்னோடே என்றும் கூடவே வருவதால்

**பாடல் - 2001**

**நேசப் பாட்டு பாடப்போறேன் இயேசய்யா கூட**
ஆசை பாட்டு பாடப்போறேன் இயேசய்யா கூட

இயேசுவே என் இயேசுவே
என் அன்பே என் ஆருயிரே
உம்மில் நான் என்னை மறந்தேனே

1. என் கண்ணீரின் நேரத்தில்
உம் தோளில் சாயும் போதினில்
உம் செயல் நினைத்தால்
கண்ணீரும் ஆனந்தம்
உயிரின் உயிராய் என்னில் நீர் இருப்பதினால்
உலகம் வெறுத்தாலும் நீர் மட்டும் போதும்

2. உலகத்தின் ஆசைகள் என்னை
இழுக்கின்ற வேளையில்
உம் கண்ணீரின் விழிகள்
என்னை அழைக்குதே
திரும்பும் திசையெல்லாம்
உம் முகம் மட்டும் தெரிகிறதே-உந்தன்
நேசம் என் பெயர் மறக்கச் செய்கிறதே

3. உம் பெயர் சொல்லும் போது
கண்விழி மூடும் போது
என் இதயத்தில் உந்தன் சமூகம் ஆனந்தம்
மலைபோல் உயரும் உம் அன்பின் உயரம்
மலையைக் காட்டிலும் பெரிதல்லவோ

### பாடல் - 2002

**பாலைவனத்தை சோலைவனமாய்**
மாற்றிடும் நம் தேவன்
எதற்கும் பயம் இல்லை கலக்கம் நமக்கில்லை
கரம் பிடித்து நடத்திடுவார்

1. நீ தண்ணீர்களை கடக்கும் போது
அவர் உன்னோடு இருப்பாரே
நீ ஆறுகளைக் கடக்கும் போது
அவைகள் புரளாதே
அக்கினியில் நடக்கும் போது
ஜுவாலை பற்றாதே

2. தாக முள்ளவன் மேலே
தண்ணீரை ஊற்றுவார்
வறண்ட நிலத்தின் மேலே
ஆறுகளை ஊற்றுவார்
உன் சந்ததியின் மேலே என்றும்
தன் ஆவியை ஊற்றுவார்

3. நொறுங்குண்ட உந்தன் மனிதன்
காயங்கள் ஆற்றுவார்
சிறைப்பட்ட உந்தன் வாழ்வை
விடுதலை ஆக்குவார்
உனக்கு விரோதமாய் எழும்பும்
ஆயுதம் வாய்க்காதே

### பாடல் - 2003

**உமக்காகவே உயிர் வாழ்கிறேன்**
உமக்காகவே ஊழியம் செய்திட
அர்ப்பணித்தேன்

அர்ப்பணித்தேன் இயேசுவே
அர்ப்பணித்தேன்
உமக்காகவே நான் அர்ப்பணித்தேன்



அட்டவணை

1. அறுவடை அதிகம், ஆட்களோ கொஞ்சம்
உம் ஏக்கத்தை நான் அறிவேன்
பல கோடி மக்கள், பரலோகம் சேர்ந்திட
அயராது உழைத்திடுவேன்(2)
உம் நேசத்தால் சோகமானேன்
உம் சித்தத்தை செய்திடுவேன்

2. யாரை நான் அனுப்புவேன்,
நமது காரியமாய்
உம் சத்தத்தை நான் கேட்டேன்
இதோ அடியேன், இருக்கிறேன் தேவா
என்னையும் அனுப்பிடுமே (2)

3. கோதுமை மணி போல் மடிந்து பலன்தர
எப்போதும் விரும்புகிறேன்
இனி நான் அல்ல இயேசுவே என்னில்
என்றென்றும் வாழ்ந்திடுவீர்

## பாடல் - 2004

**என் வாழ்வின் மாற்றத்திற்குக் காரணம் அவரே**
என் வாழ்வின் மேன்மைக்கு இயேசு ஒருவரே

நீயும் அவரை நம்புவாயானால்
உன் வாழ்வை செழிப்பாக மாற்றுவார்
மாற்றுவார் மாற்றுவார் உன் வாழ்வை மாற்றுவார்
மாறிடும் மாறிடும் செழிப்பாக மாறிடும்

1. பிரயோஜமற்ற ஒநேசிமுவை
பிரயோஜனமாக்கினாரே
ஆகாதென்று தள்ளப்பட்ட அனைவரையும்
மூலைக் கல்லாக்கிடுவார்

2. ஆடுகளை மேய்த்த தாவீதையும்
அரசனாய் மாற்றினாரே
ஆரம்பம் அற்பமாக இருந்தாலும்
முடிவு சம்பூரணமே

3. மாராவின் கசந்த தண்ணீரையும்
மதுரமாய் மாற்றினாரே
முடியாதென்று உலகம் நினைக்கையிலே
முடித்து காட்டுவார்



அட்டவணை

4. இல்லை இல்லை ஒருபோதும் சொல்லிடாதே
உள்ளதை முதலில் கொடு
ஐந்தப்பம் இரண்டு மீன்களையும்
கூடைகளாய் மாற்றிடுவார்

## பாடல் - 2005

**பாவியான என்னையுமே**
தேடி வந்து மீட்டுக் கொண்டீர்
உம் அன்பின் ஆழம் அறியேன்
உம் ஜீவன் எனக்குத் தந்து
என்னையும் வாழச் செய்தீர்
உம் அன்பிற்கெல்லை இல்லையே
உம் அன்பின் தூய பிரசன்னம்
என் உள்ளம் வாஞ்சிக்குதே
என்றென்றும் உம்மில் நான் மகிழ
என்னையே அர்ப்பணித்தேன்

1. அன்பு தணியும் உலகினிலே
உமது அன்பு அணைத்திடுமே
மாறிடாத உமது நேசமே
நண்பன் போல நெருங்கி வந்து
என் உள்ளம் புரிந்து கொண்டீர்
உம் அன்பிற்கிணை இல்லையே

2. தாயின் அன்பு மாறினாலும்
உந்தன் அன்பு மாறிடாதே
என்றும் என்னை மறப்பதில்லையே
உம்மை விட்டு பிரிந்தபோதும்
எனக்காக (என்னை காண) ஏங்கினீரே
உம் அன்பு உயர்ந்ததே

## பாடல் - 2006

**ஊற்றும் ஊற்றும் உன்னத ஆவியால்**
உன்னத அனுபவம் நிறைவாய் தாருமே
உலர்ந்த என்னையும் உயிர்ப்பித்தருளும்
ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வாருமே

கணுக்கால் அளவு போதாதையா
முழங்கால் அளவு போதாதையா
இடுப்பு அளவு போதாதையா
நீச்சல் ஆழம் நிறைவாய் தாருமே (வேண்டுமே)

1. வானம் திறக்கணும், வல்லமை இறங்கணும்
வல்லவர் வல்லமையை நிரூபித்து காட்டணும்
வாக்கு கொடுத்தீரே வல்லமை தெய்வமே
வரங்களால் என்னை நிறைத்திடுமே

2. கன்மலை பிளக்கணும், தாகம் தீரனும்
கதறி அழுவோரின் கதறல் நீங்கனும்
கட்டுக்கள் உடையனும், கலக்கம் தீரனும்
கர்த்தர் தெய்வம் என்று ராஜாக்கல் அறியணும்

3. மேகம் இறங்கணும் பெருமழை பெய்யணும்
தேசத்தின் வறட்சியெல்லாம் செழிப்பாய் மாறனும்
துதியின் சேனைகள் எங்கும் எழும்பனும்
தேவனின் மகிமையால் தேசம் நிறையனும்

## பாடல் - 2007

**உனக்குள் எனக்குள் இருப்பவர் பெரியவரே**
எப்போதும் என்றென்றும் வாழ்கிறார்

பெரிய காரியம் பெரிய காரியம்
பெரிய காரியம் நமக்காய் செய்திடுவார்

1. பார்வோனின் சேனை என்னைத் தொடர்ந்தாலும்
தடைகள் என் கண் முன்னே தெரிந்தாலும்

2. சத்ருக்கள் என்னைப் பார்த்து சிரித்தாலும்
என் பெலனான இயேசுவால் நகைப்பேனே

3. சிநேகித்தவர்கள் என்னை வெறுத்தாலும்
என் சிநேகிதனான இயேசுவாலே மகிழ்வேனே

## பாடல் - 2008

**ஆராதிக்க வந்தோமுங்க**
நம் இயேசப்பாவ
என்றென்றும் கொண்டாடுவோங்க

கைத்தாளம் போட்டு, கைகளை உயர்த்தி
கர்த்தரின் நாமத்தை உயர்த்துவோங்க

வீட்டு வேலை, வாழ்வின் கவலை விட்டெறிந்து
அவர் நாமம் உயர்த்துவோங்க

தானே தானே தன்னா (2)
தாளம் போட்டு அவரை துதித்திடுங்க
ஆமென் அல்லேலூயா (2)
அல்லேலூயா என்று பாடிடுங்க

1. தாவீதின் Dance பார்த்து shock ஆகி
போன அவர் wife க்கு என்ன ஆச்சு தெரியுமா?
Rock show ல ஆடிடுவ ஆட்டம் பாட்டம்
தேவ பிரசனத்தில் ஆட மாட்டும்
வெட்கமா? வெட்கமா?
பாவம் செய்ய மட்டும் வெட்கப்படு
தேவனைத் துதிப்பதில் தவறிடாதே

2. துதியினால் முப்படைகள் between them
மோதி defeat ஆனது உனக்கு தெரியுமா?
அமலேக்கியர்களை எதிர்த்து நின்று
ஆயுதம் உயர்த்தி வைத்த கரங்கள்
எரிகோ கோட்டையை வீழ்த்தியது
இரும்பு கதவுகளை திறக்க செய்தது

3. Facebook ல Orkut ல Mobile ல வெட்டியான
Message Posting பண்ண தெரியுமா?
வேதத்தின் வசனங்கள் மற்றும்
வரலாற்றை Correct ஆக ஒப்புவிக்க தெரியுமா?
தேவனின் இராஜ்ஜியத்தை முதலில் நாடு
வேதத்தை வாசித்து முன்னேறிடு

## பாடல் - 2009

**இயேசுவே உம்மைபோல் யாருமில்லை**
இரத்தத்தை சிந்தி நீர் மீட்டுக்கொண்டீர் (2)

மெய்யான தெய்வம் நீர் தொழுதிடுவேன்
பரிசுத்தர் தெய்வம் நீர் பணிந்திடுவேன்

இயேசுவே ஒப்பற்றவர்
நீர் ஓயாமல் ஆராதிப்பேன்

ஆ... ஆ... அல்லேலூயா பரிசுத்தர் பரிசுத்தரே
ஆ... ஆ... ஆ அல்லேலூயா
ஓயாமல் ஆராதிப்பேன் (2) உம்மை

### பாடல் - 2010

**பெரியவர் என் இயேசு**
என் இயேசு பெரியவரே
எந்த சூழ்நிலைகள் மாறினாலும்
என் இயேசு பெரியவரே
பெரியவர் என் இயேசு,
என் இயேசு உயர்ந்தவரே
தொல்லை சோதனைகள் மாறினாலும்
எந்தன் இயேசு பெரியவரே

1. மரண இருளின் பள்ளத்தாக்கில்
நான் நடந்தாலும்
உலகில் இருப்பவனை பார்க்கிலும்
என்னில் வசிக்கும் என் இயேசு பெரியவரே
இதயம் கலங்கும் போதும்
என் இயேசு பெரியவரே
எந்த சூழ்நிலைகள் மாறினாலும்
என் இயேசு பெரியவரே

2. கோலியாத்தைப் போன்ற தடைகள் நீங்கிடும்
இயேசு நாமத்தால் யோர்தான்
பிளந்த வழி விலகிடும்
காரிருள் வேலைகள் என்னை சூழ்ந்தாலும்
எந்த சூழ்நிலைகள் மாறினாலும்
என் இயேசு பெரியவரே

### பாடல் - 2011

**உம்மைத்தான் பாடுவேன்**
உம்மைத்தான் போற்றுவேன்
உம்மைத்தான் உயர்த்துவேன் இயேசுவே

உமது வலதுகரம் என்னை தாங்குகின்றது
உமது கிருபை ஐயா என்னை நடத்துகின்றது

1. கண்ணின் மணிபோல் என்னை காக்கின்றீர்
கனிதரும் கொடியாய் சுத்தம் செய்கின்றீர்
உமது பேரன்பினால் என்னை நேசிக்கின்றீர்

2. கறை திறை பிழையெல்லாம் போக்குகின்றீர்
பரிசுத்தம் அடைந்திட அழைக்கின்றீர்
உமது வசனத்தினால் என்னை தேற்றுகின்றீர்

3. தமது கிருபைக்காக காத்திருப்பவர் மேல்
கர்த்தர் நீர் தான் பிரியம் வைக்கிறீர்
உம்மில் மகிழ்வதினால்
என் உடல் பெலன் கொள்ளுது

## பாடல் - 2012

**மாறாத கிருபை மேலான கிருபை**
இயேசுவின் கிருபை என்றென்றும் உயர்ந்தது

இன்னும் கொஞ்சம் தேவை உங்க கிருபை
இயேசுவே இயேசுவே உங்க கிருபை
உங்க கிருபை ரொம்ப மேலானது
உங்க கிருபை அது உயர்ந்தது

1. நான் நிற்பதும் நிர்மூலமாகாததும்
நிரந்தரமானதும் உங்க கிருபை

2. என் தாழ்மையில் தாங்கியதும் உங்க கிருபை
என்னை பரிசுத்தமாக்கினதும் உங்க கிருபை

3. நீர் தயவாய் அருளின் உங்க கிருபை
என்னை நீதிமானாய் மாற்றினதும் உங்க கிருபை

## பாடல் - 2013

**செயல்களிலே வல்லவரே**
தேற்றும் தெய்வம் நீரே
என் அடைக்கலமே என் கோட்டையே

ஆராதனை உமக்கே
ஆராதனை ஆராதனை ஆராதனை உமக்கே

1. தேவனே உமது கிருபையினாலே
அடைக்கலம் தாருமையா
ஆவியினால் பெலத்தால் ஆளுகை செய்ய
அனல் மூட்ட வாருமைய்யா

2. உயிருள்ள நாளெல்லாம் உம்மை
நான் பாட கிருபை தாருமைய்யா
உமக்காய் எழும்பி ஊழியம் செய்ய
தரிசனம் தாருமையா

3. தேவனே உமது இரக்கங்களாலே
பிரசன்னம் தாருமைய்யா
அநந்த ஞானத்தால் நிரம்பிட
அபிஷேகம் ஊற்றுமைய்யா

## பாடல் - 2014

**என் இயேசு ராஜா என் இயேசு ராஜா**
என் இயேசு ராஜா என் இயேசு ராஜாவே

1. நீதியின் வலக்கரத்தால்
என்னை தாங்கி நடத்துகின்றீர்
ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகும்
மகிமையால் நிரப்புகின்றீர்

2. நித்திய ஜீவனுக்காய்
என்னை நீதிமானாய் மாற்றி விட்டீர்
சாத்தானை ஜெயிக்க சாட்சியாய் வாழ
திராணி எனக்களித்தீர்

3. நீர் செய்த அதிசயமே
நான் விவரிக்க முடியாதைய்யா
தாயும் தகப்பனும் கைவிட்டாலும்
நீர் கைவிடாது தெய்வம் ஐயா

## பாடல் - 2015

**உம்மை நான் நேசிக்கின்றேன்**
உம்மையே நான் நேசிக்கின்றேன்
எவ்வேளையும் எந்நேரமும்
உம்மை நான் நேசிக்கின்றேன்

1. புல்லுள்ள இடங்களில் மேய்க்கின்றீர்
நன்மையினால் என்னை நிரப்புகின்றீர்
எண்ணிலடங்கா நான் துரோகி ஐயா
என்னையா தேடி வந்தீர்

2. ஸ்தோத்திர பலிகளில் பிரியம் கொண்டீர்
என் கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
சொல்லி முடியா நான் பாவி ஐயா
எனக்காய் இரங்குகின்றீர்

3. மரணத்தில் பள்ளத்தில் மீட்டுக் கொண்டீர்
உம் வசனத்தினால் என்னை உருமாற்றினீர்
யாரும் விரும்பா பாத்திரம் நான்
என்னையா நிரப்புகின்றீர்

## பாடல் - 2016

**நீர் என் தேவன் நான் உம்மை துதிப்பேன்**
நீர் என் தேவன் நான் உம்மை உயர்த்துவேன்

இயேசய்யா இயேசய்யா உம்மை நான் சேவிப்பேன்

1. இயேசுவே உம் வார்த்தையால்
நான் திடன் கொள்கின்றேன்
இயேசுவே உம் இரத்தத்தால்
நான் சுத்தமாகின்றேன்

2. உம்மை நான் நேசிப்பேன்
சமாதானம் கண்டேன்
உமக்காய் ஓடுவேன்
நான் வெட்கம் அடையேன்

3. எனக்காய் எப்போதும்
நீர் தூங்குவதில்லையே
இஸ்ரவேலைக் காக்கின்றீர்
உறங்கவில்லையே

## பாடல் - 2017

**மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஆராதனை**
உமக்கு ஆராதனை
ஆனந்த சத்தத்தோடு ஆராதனை
உமக்கு ஆராதனை
ஆராதனை உமக்கே ஆராதனை

1. துதியோடும் புகழ்ச்சியோடும் ஆராதனை
உமக்கு ஆராதனை
ஸ்தோத்திர பலியோடு ஆராதனை
உமக்கு ஆராதனை

2. கெம்பீர சத்தத்தோடு ஆராதனை
உமக்கு ஆராதனை
ஆரவார சத்தத்தோடு ஆராதனை
உமக்கு ஆராதனை

## பாடல் - 2018

**விசுவாசமே விசுவாசமே விலைமிக்க விசுவாசமே**
இயேசுவையே விசுவாசித்தால்
எல்லாம் கூடும் நமக்கெல்லாம் கூடும்

1. மலைகளை பெயர்த்திடும் விசுவாசமே
மாபெரும் காரியம் செய்திடுமே
தேவனின் மகிமையை நாம் காணவே
விசுவாசிப்போம் நாம் பதில் காணுவோம்

2. உலகினை ஜெயித்திடும் விசுவாசமே
நம்மிடம் இருந்தால் அது போதுமே
மாபெரும் அறுவடை நம் காணவே
விசுவாசிப்போம் நாம் ஜெயம் பெறுவோம்

3. நோய்களை விரட்டிடும் விசுவாசமே
பேய்களை வார்த்தையாய் துரத்திடுமே
சந்தோஷம் சுகவாழ்வை நாம் காணவே
விசுவாசிப்போம் நாம் நலம் காணுவோம்

## பாடல் - 2019

**இயேசு இரத்தமே இரத்தமே இரத்தமே**
விலையேறப்பெற்ற இரத்தமே
குற்றமில்லா பரிசுத்த இரத்தமே

1. மகா கொடூர பாவங்கள் கழுவிடும்
நம் இயேசுவின் இரத்தமே
மகா வியாகுல வேதனையால்
வேர்வை ரத்தமாய் வெளிவந்ததே

2. மனசாட்சியை சுத்திகரித்திடும்
நம் இயேசுவின் இரத்தமே
மன வேதனை நீக்கிடும்
சாபமெல்லாமே போக்கிடுமே

3. மகா பரிசுத்த ஸ்தலமதில் சேர்த்திடும்
நம் இயேசுவின் இரத்தமே
மகா பிரதான ஆசாரியராய்
நமக்கு முன் சென்ற பரிசுத்தரே

பாடல் - 2020

**தீங்கை காணாதிருப்பாய்**
இனி தீங்கை காணாதிருப்பாய்

1. தாயானவள் தன் பாலகனை
மறந்தாலும் நான் மறக்கமாட்டேன்
கண்ணை இமை காப்பது போல்
உன்னை தினம் காத்திடுவேன்

2. இஸ்ரவேலே நீ பயப்படாதே
பனியைப் போல் உன் மேலிருப்பேன்
லீலியைப் போல மலர்ந்திடுவாய்
லீபனோனைப்போல் வேரூன்றுவாய்

3. கோழி தன் குஞ்சுகளை
செட்டையின் கீழ் அணைப்பது போல்
சேர்த்துக் கொள்வேன்
நீ சோர்ந்திடாதே

பாடல் - 2021
(R-Piano Ballad T-90 EM 4/4)

**வெட்கப்பட்டுப் போவதில்லை என் மகனே**
நீ வெட்கப்பட்டுப் போவதில்லை-2

1. நஷ்டங்கள் வந்தாலும்
இழப்புகள் நேர்ந்தாலும்
நிந்தைகள் சூழ்ந்தாலும்
இழந்ததை திரும்பவும் தருவேன் நான்

2. குடும்பமே இகழ்ந்தாலும்
உறவுகள் பழித்தாலும்
உலகமே எதிர்த்தாலும்
உன்னோடு என்றுமே இருப்பேன் நான்

3. என் ஜனம் ஒரு போதும்
வெட்கப்பட்டு போவதில்லை
வெட்கத்திற்கு பதிலாக
இரட்டிப்பான நன்மைகளை தருவேன் நான்

## பாடல் - 2022

**கர்த்தர் உந்தன் முன்னே போவார்**
மனமே நீ கலங்காதே
இறுதி வரை காத்திடுவார்
மனமே நீ திகையாதே

ஓசன்னா ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
உன்னத தேவனுக்கு ஓசன்னா

1. கோணலானதை செவ்வையாக்குவார்
குதூகலமும் காணச் செய்வார்
வேண்டியதை தந்திடுவார்
வெட்கப்பட விடமாட்டார்
கர்த்தர் உந்தன் முன்னே போவார்

2. தடைகளெல்லாம் தகர்த்திடுவார்
காரியத்தை வாய்க்கச் செய்வார்
தேவைகளை தந்திடுவார்
குறைவுபட விடமாட்டார்
கர்த்தர் உந்தன் முன்னே போவார்

3. உனக்கு முன்னே சென்றிடுவார்
வழிகளெல்லாம் திறந்திடுவார்
சத்துருவை வென்றிடுவார்
தோற்று போக விடமாட்டார்
கர்த்தர் உந்தன் முன்னே போவார்

## பாடல் - 2023

**சர்வே வல்லவரை போற்றிப் பாடுவோம்**
நாம் போற்றிப் பாடுவோம்
நாம் இன்றும் என்றுமாய்
சென்ற நாள் எல்லாம் நம்மை காத்திட்டாரே
சர்வே வல்லவரை துதித்திடுவோம்

எல்லா கனமகிமையும் அவர்க்கே
(நாம் செலுத்திடுவோம் நாம் செலுத்திடுவோம்)
நாம் சேர்ந்து போற்றிடுவோம்

1. பாவ பாரத்தால் இளைத்திருந்த என்னை
பரன் தேடினீரோ என்னை தேற்றவே
பூவில் எங்கும் காணா பேரின்ப
இளைப்பாறுதலைப் பெற்றிடச் செய்தீர்

2. நிந்தை பரியாசம் பாடு சகித்தோராய்
பாளையம் புறம்பே தள்ளப்பட்டோராய்
தம் பிதாவின் சித்தம் செய்திடவே
இளைப்பாறுதல் நமக்கீந்தனரே

3. யோர்தானைப் போல துன்பம் எதிர்த்தாலும்
யோசுவாவின் தேவன் நம்மோடிருப்பதால்
யோர்தானின் கற்கள் நின்றது போல்
நிற்போம் இளைப்பாறி தைரியமாய்

## பாடல் - 2024

**துதி கனம் மகிமை உமக்கே ஓ... நீரே ராஜாவே**
துதி கனமகிமை உமக்கே ஓ... எல்லாமுமே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
மிக ஸ்தோத்திரம்

1. கடந்த நாட்கள் முழுதும் எம்மைக் காத்தீரே
கடந்த நாட்கள் முழுதும்
கண்மணிபோல் காத்தீரே

2. சுகமும் பெலனும் ஜீவனும் எமக்கு ஈந்தீரே
சுகமும் பெலனும் ஜீவனும்
நீர் தயவாய் ஈந்தீரே

## பாடல் - 2025

**இயேசு உம் சாயல் காண**
ஏங்குதே என் உள்ளமும்
என்று சேர்வேன் உந்தன் சமூகம்
அன்று தீருமே எந்தன் ஆவல்

1. தொல்லை மிகுந்த இவ்வுலகில்
நல்ல துணையும் நீரல்லவோ
இன்னும் நானும் அண்டை சேர
உன்னத பெலனை தாரும் ஐயனே

2. கானல் நீரை தேடி ஓடும்
மானைப் போல கதறுகின்றேன்
எந்தன் ஆத்மா உம்மைச் சேர
கிருபை செய்வீர் எந்தன் தேவனே

3. பாரில் எந்தன் ஓட்டம் முடித்தே
பரத்தில் வாசம் செய்திடுவேன்
உமது சமூகம் சீயோன் அடைய
உதவி செய்வீர் தேவ ஆவியே

### பாடல் - 2026

**கர்த்தாவே என் பெலனே**
உம்மில் அன்பு கூறுவேனே
உத்தமமானது உம் வழி தானே

1. என் கன்மலையும் என் கோட்டையும்
என் இரட்சகரும் என் தேவனும்
என் கேடகமும் இரட்சண்ய கொம்பும்
என் உயர்ந்த அடைக்கலமுமானவர்

2. உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன்
உம்மாலே ஒரு மதிலை தாண்டுவேன்
சத்துருவை நான் தொடர்ந்து பிடிப்பேன்
நிர்மூலமாகும் வரைக்கும் திரும்பேன்

3. சிறுமைப்பட்ட ஜனத்தை ரட்சிப்பீர்
மேட்டிமையான கண்களை தாழ்த்துவீர்
தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்
இருளை நீர் வெளிச்சமாக்குவீர்

### பாடல் - 2027

**அன்பர் அன்பை யாரால் கூறலாம்**
ஆ... ஆச்சரியம்
அன்பாகவே இருக்கும் என் நேசர்

அன்பின் உயரம் நீளம் அகலம்
ஆழம் அளக்க யாரால் கூடும்!
அன்பரின் பேரன்பை
இங்கு அழகாய் கூற யாரால் கூடும்! - அன்பர்

1. எல்லா ஜலமும் மையானாலுமே
அன்பை எழுதிட
எல்லா மரமும் பேனாவானாலுமே
ஆகாயத்தைத் தாளாக்கி
அதிலெல்லாம் எழுதினாலும்
அன்பின் அம்சம் எழதித் தீர்க்க
அன்பர் எங்குதானுண்டு - அன்பர்

2. மாந்தர் மேலே பாய்ந்த அன்புத்தான்
மாண்ட தூதரோ பார்ப்பதிலே
பணிந்து குனிகின்றார்
பாவி மேலே பாய்ந்த அன்பு
சாவின் கூரை ஒடித்து வென்றது
என்ன அன்பு என்ன நேசம்
அண்ணல் இயேசுவின் மகத்துவ நேசம் - அன்பர்

### பாடல் - 2028

**ஆராதனை ஆராதனை இயேசப்பா**
உம்மை ஆராதிக்க கூடிவந்தோம் இயேசப்பா

1. கிருபையின் வரங்களாலே நிரப்புங்கப்பா
உமக்காக கனி கொடுக்க வேண்டும் அப்பா

2. அக்கினியின் வல்லமையால் நிரப்புங்கப்பா
உமக்காக பற்றி எரிய வேண்டும் அப்பா

3. துதி கனம் மகிமை எல்லாம் உமக்கு அப்பா
என்றும் உம்மை நாங்கள் துதிக்க வேண்டும் அப்பா

### பாடல் - 2029

**என் இயேசுவே உம்மை நான் மறவேன் மறவேன்**
எந்நாளும் உம் அருளை நான் பாடி மகிழ்ந்திருப்பேன்

1. உம் நாமம் என் நாவில்
நல் தேனாய் இனிக்கின்றது
உம் வாழ்வு என் நெஞ்சில்
நல் செய்தியாய் தொனிக்கின்றது-உம்
அன்பை நாளும் எண்ணும் போது
ஆனந்தம் பிறக்கின்றது

2. உம் நெஞ்சின் கனவுகளை
நிறைவேற்ற நான் உழைப்பேன்
உறவாகும் பாலங்களை உலகெங்கும்
நான் அமைப்பேன்
இறை ஆட்சி மலரும் காலம் வரையில்
இனிதாய் எனை நடத்தும்

### பாடல் - 2030

**புது பாடல் எனக்கு தந்தீர்**
உம்மை புகழ்ந்து பாடிடவே
புது வாழ்வு எனக்கு தந்தீர்
உமக்காக வாழ்ந்திடவே

நன்றி இயேசுவே நன்றி சொல்லி பாடுவேன்
நாள் தோறும் போற்றுவேன்

1. பாவியாக இருந்த என்னை
பரிசுத்தமாய் மாற்றினீரே
துரோகியாக வாழ்ந்த என்னை
உம் பிள்ளையாக மாற்றினீரே

2. வியாதியாக இருந்த என்னை
சுகம் தந்து தாங்கினீரே
தோல்வியில் இருந்த என்னை
ஜெயம் தந்து நடத்தினீரே

### பாடல் - 2031

**நன்றி சொல்லி நான் பாடுவேன்**
நாதா நீர் செய்திட்ட நன்மைகளை நினைத்து

1. துன்பங்கள் என்னை சூழ்ந்திட்ட நேரம்
துணையாக வந்தீரய்யா
உம் அணையாத தீப நல்வசனத்தினால்
இணையில்லா இன்பம் தந்து காத்தீரய்யா

2. விழி மூட முடியாமல் வியாதியில் அழுதேன்
பரிகாரியாக வந்தீரய்யா
என்னில் வழிந்தோடும் கண்ணீரை
கணக்கில் வைத்து கரம் நீட்டி தொட்டு
சுகம் தந்தீரய்யா

3. வாழ்வு தந்த வல்லவரே வழிகாட்டும் தீபமே
வாயார உம்மைப் பாடுவேன்
நான் உயிரோடு வாழ்ந்திடும்
நாள் வரையில் உம்சித்தம் செய்து
நான் உம்மில் சேருவேன்

## பாடல் - 2032

**அசைவாடும் அசைவாடும்**
அசைவாடும் தேவா அசைவாடும் - 2
இடம் அசைய வலம் அசைய
இதயங்கள் கோடி தினம் அசைய
சபைகள் அசைய திசைகள் அசைய
உள்ளத்தின் ஆழத்தில் அசைவாடும் - 2

1. சீனாய் மலையிலே
சிறகு அசைத்தீர் அன்று
இமய மலையின் மேலே
இறங்கி வாரும் இன்று - 2

ஆராதனை ஆராதனை ஆராதனை
ஐயா ஆராதனை ஆராதனை
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லே-லூயா

2. ஆலயம் முழுவதும் நிரம்பி
அக்கினி வல்லமை தாரும் - 2
வல்லமை பெறவே இன்று வாஞ்சிக்கும்
எம்மை பாரும் - உம் - 2 - ஆராதனை

3. கடலில் அலையிலே அசைந்து
மகிழ்ந்தீர் அன்று
திறப்பின் வாசலில் நின்று தெய்வமே
அழைக்கிறோம் இன்று - (2) - ஆராதனை

## பாடல் - 2033

**நன்றி சொல்லி பாடிடுவேன்**
நாள்தோறும் துதித்திடுவேன்
கர்த்தர் செய்த நன்மைகள்
நினைத்து நினைத்து நான்

1. தாயின் வயிற்றிலே உருவாகுமுன்னே
தெரிந்தெடுத்தீர் என்னை பிரித்தெடுத்தீர்
உம்மோடு வாழ்வேன் உம்சித்தம் செய்வேன்
என்றென்றும் துதித்திடுவேன்

2. என் பாவங்களை நீக்கி பரிசுத்தனாக்கி
இரத்தம் சிந்தியே ஜீவன் தந்தீரே
உந்தனின் நேசம் உந்தனின் பாசம்
உலகில் எங்கும் இல்லையே

3. யேகோவாநிசி வெற்றி தந்த தெய்வம்
யெகோவா ராப்பா சுகம் தந்தீரே
யேகோவாயீரே எந்தன் தேவை
எல்லாம் நீர் பார்த்துக் கொள்வீர்

## பாடல் - 2034

**உங்கள் முன்பாக போகிறவர்**
நம் அன்பான கர்த்தர் அல்லவா

ஆற்றுவார் தேற்றுவார் அரவணைப்பார்
போஷிப்பார் புகலிடம் தந்திடுவார்

1. கர்த்தர் என்னை பாதுகாத்தார்
என்னை அனுதினம் நடத்தி வந்தார்
அவர் நடத்துதலை நான்
புற இனத்தாரும் அசந்து போவார்

2. நீங்க தந்த புது வருடம்
என் சிரசின் மணி மகுடம்
இந்த புது வருடம் எங்கள் ஏக்கமெல்லாம்
இன்று தீர்த்து வைத்து மகிழ்ச்சி தரும்

3. அவருடைய கண்மணி நான்
சேதமொன்றும் அனுகாது
அவரின் கண்மணியை
எவரும் தொட நினைத்தால்
அவன் நிலை பரிதாபமே

## பாடல் - 2035

**கன்மலை தேவனே கைவிடா தெய்வமே**
உம்மை நான் பாடுவேன்
உயிருள்ளநாளெல்லாம்
என் பாவம் நீக்கிவிட்ட கன்மலையே
எனக்காக அடிக்கப்பட்ட கன்மலையே

1. ஆகா என் கன்மலையே அற்புதமானவரே
ஆகாயம் மீதினிலே வீற்றிருப்பவரே
கன்மலையின் தண்ணீரால் தாகம் தீர்ப்பவரே
உம்மை போல்வேறே
தேவன் உலகில் இல்லையே

2. மாராவின் தண்ணீரை மதுரம் ஆக்கினீரே
ஏலீமின் நீருற்றை காணச் செய்தீரே
மேடுகளை பள்ளங்களை
கடந்திடுவோம் உம் பெயரால்
அந்த பாலும் தேனும் ஓடும் தேசம்
சேர்த்திடுவீர்

3. பாதை தவறிச் சென்ற கால்களை கண்டீரே
கன்மலையின் மேல் நிறுத்தி
விழாமல் காத்தீரே
ஜெனிப்பித்த கன்மலையே
உம்மை மறந்திடவும் மாட்டேனே
என் கன்மலையே உம்மில் நானும்
வாழ்வேன் அசைவதில்லை

## பாடல் - 2036

**நல்லவரு இயேசு வல்லவரு**
வல்லமை உள்ளவரு
நாடி வரும் தம் பிள்ளைகளுக்கு
அற்புதம் செய்பவரு

1. ஆவியினால் பிறந்தவரு
உயர் ஆவியை பெற்றவரு
ஆராதிக்க தினம் வருபவர்க்கு
ஆவியை ஊற்றுபவரு

2. கர்த்தரையே தினம் நம்புவோர்க்கு
நித்திய கன்மலையாய் இருப்பவரு
கவலையுடன் வருபவரின்
கண்ணீரை துடைப்பவரு

3. உள்ளங் கையில் வரைந்தவரு
உன்னை எப்போதும் காப்பவரு
உனக்கு முன்பாக செல்பவரு
உன்னை சொல்லி அழைப்பவரு

## பாடல் - 2037

**புதிய நாளை புதிய வாழ்வை**
இயேசு எனக்குத் தந்தார்
நான் ஆடிப்பாடி துதிப்பேன் அல்லேலூயா
அகமகிழ்ந்து பாடுவேன் அல்லேலூயா

1. இன்று கண்ட எகிப்தியனை
இனி உன் வாழ்நாளில் காண்பதில்லை

2. மனதின் ஆழம் அறிந்தவரே
மகனாய் மகளாய் அழைத்தவரே

3. சோதனை நேரம் பெலன் தந்தீர்
சோர்ந்து போகாமல் பாதுகாத்தீர்

## பாடல் - 2038

**அப்பா செய்த நன்மைகளை நினைச்சு பார்க்கிறேன்**
ஆர்வத்தோடு நன்றி சொல்லி துதித்து மகிழ்கிறேன்

நன்றி ராஜா இயேசு ராஜா

1. நான் செய்த பாவங்கள் மன்னித்தீரே
உம் மகனாய் என்னையும் ஏற்றுக் கொண்டீரே

2. வாதை என் கூடாரத்தை அணுகாது என்று
வாழ்நாளெல்லாம் காத்து வந்தீரையா

3. இல்லாததும் பொல்லாததும் சொல்லிய போது
மகிழ்ந்து களி கூர வைத்தீரையா

4. உச்சிதமான கோதுமையால் போஷித்தீரே
கன்மலையின் தேனினால் தாகம் தீர்த்தீரே

5. அறியாத புரியாத காரியங்களை
கூப்பிட்ட நேரங்களில் அறிவித்தீரையா

6. நோய்களாலே துவண்டு போன அந்த நேரத்தில்
சுகம் தந்து என்னையும் காத்தீரையா

## பாடல் - 2039

**நானும் என் வீட்டாரும்**
கர்த்தரை துதித்திடுவோம்
துதித்து துதித்து மகிழ்ந்திடுவோம்

1. கவலையை மறந்து கர்த்தரை நினைத்து
கருத்துடன் துதித்திடுவொம்

2. சுயத்தை வெறுத்து சுபாவம் மாறி
சுகமாய் துதித்திடுவோம்

3. புகழ்ச்சியை விரும்பாமல் பெருமையை கொள்ளாமல்
புகழ்ந்து துதித்திடுவோம்

4. பேச்சை நிறுத்தி பெலத்திலே வளர்ந்து
பலமாய் துதித்திடுவோம்

## பாடல் - 2040

**அனாதை ஆவதில்லை**
இயேசு என்னை தேடி வந்தார்
ஜீவன் தந்தார் சொந்தமாக ஏற்றுக் கொண்டார்

1. தாயின் வயிற்றில் தெரிந்து கொண்டீர்
தந்தை போல் என்னை சுமந்து வந்தீர்
தலைவனாகி தோழனுமானீர்
தனிமை எனக்கு இனி இல்லை

2. உலகம் என்னை தள்ளிடலாம்
உறவுகளும் வெறுத்திடலாம்
உன்னதர் நீர் எந்தன் உறைவிடமானீர்
உயிரில் கலந்தீர் இனிமை தந்தீர்

3. அகதியாய் நீ வாழ்ந்திடலாம்
ஆதரவின்றி தவித்திடலாம்
படைத்த தேவன் மறந்திடவில்லை
உண்மையாய் உன்னை உயர்த்திடுவார்
உந்தன் நிலை மாறும் உண்மை

## பாடல் - 2041

**உலகத்தை வென்று இயேசு உயிர்த்தார் ஆர்ப்பரி**
காலத்தை வென்று வெற்றி சிறந்தார் ஆர்ப்பரி
அலகினை வென்று அகிலம் சிறந்தார் ஆர்ப்பரி
இயேசுவே தேவன் என்று முழங்கி ஆர்ப்பரி

யேகோவா நிசி அல்லேலூயா
யேகோவா சபேயத் ஓசன்னா
அல்லேலூயா ஓசன்னா-2

1. வழி என்று சொன்னவர்
வழியாக வந்தவர் இயேசு ஒருவரே
அற்புதமாக அவனியில் வந்தவர் இயேசு ஒருவரே
பாவமே இல்லா பரிசுத்தரானவர் இயேசு ஒருவரே
அதிசய அற்புத நன்மைகள் செய்தவர்
இயேசு ஒருவரே

2. தனிப்புகழ் பெற்றவர் தனித்தன்மை
வாய்ந்தவர் இயேசு ஒருவரே
அழிந்திடா உண்மை சத்தியம்
சொன்னவர் இயேசு ஒருவரே
நீடித்த பெயரும் நிலையாக பெற்றவர்
இயேசு ஒருவரே
ஆத்மீக தாகம்
தீர்த்திட வல்லவர் இயேசு ஒருவரே

3. வசனங்கள் நிறைவேற
சரித்திரம் படைத்தவர் இயேசு ஒருவரே
மரணத்தை வென்று
ஜெயமாக நின்றவர் இயேசு ஒருவரே
சீக்கிரம் மீண்டும் வருவேன் என்றவர்
இயேசு ஒருவரே
இதயங்கள் மாற்றி
புதுவாழ்வு தந்தவர் இயேசு ஒருவரே

## பாடல் - 2042
## (RJive T-135 G 6/8)

**வழி சொன்னவர் வழியுமானவர்**
வழி சத்தியம் ஜீவனுமாய் வந்தவர்
வார்த்தை என்றவர் வார்த்தையானவர்
உலகினிலே ஒளியாக உதித்தவர் – இவரே

மண்ணோர் போற்றும் மன்னாதி மன்னன்
விண்ணோர் போற்றும் தேவாதி தேவன்
சான்றோர் போற்றும் தூயாதி தூயன்
ராஜாதி ராஜனவர் – இயேசு (4)

1. இயேசுவே தெய்வம்-ஒரே ஒரு தெய்வம்
இயேசுவே தேவன்-மெய்யான தேவன்
இயேசுவே தெய்வம்-தேடி வந்த தெய்வம்
இயேசுவே தேவன்-மீட்க வந்த தேவன்

இயேசுவே ராஜா-ராஜாதி ராஜா (3)

2. இயேசுவே இரட்சகர்-உயிர் தந்த இரட்சகர்
இயேசுவே ஆண்டவர்-உயிர்த்தெழுந்த ஆண்டவர்
இயேசுவே கர்த்தனாம்-கர்த்தாதி கர்த்தனாம்
இயேசுவே ராஜனாம்-ராஜாதி ராஜனாம்

இயேசுவே ராஜா-ராஜாதி ராஜா (3)

**பாடல் - 2043**
**(R-Bkue grass T-90 E4/4)**

**நான் இயேசுவின் படையில் யுத்த வீரன்**
யாருக்கும் அஞ்சமாட்டேன்
இவ்வுலகமே எதிர்ப்பினும்
சற்றும் பயமின்றி துணிந்தே செயல்படுவேன்
உள்ளத்தில் நிறைந்த உன்னதர்
இயேசுவை ஓயாமல் பாடிடுவேன்
வாக்கும் ஞானமும் வல்லவர் தருவதால்
எதிர்ப்போரை வீழ்த்திடுவேன்

1. எனக்கு பெலன் தரும் கிறிஸ்துவினாலே
எல்லாம் செய்திடுவேன்
என் தேவனால் கூடாத காரியம் இல்லை
உத்தமர் துணை அவரே

இக்கல்லில் மோதுபவன்-அவன்
நொறுங்கிப் போய்விடுவான்
இது எவன் மேல் விழுந்திடுமோ
அவன் நசுங்கி அழிந்திடுவான்

2. அவர் தரும் பெலத்தால் சேனைக்குள்
பாய்வேன் அதனை முறியடிப்பேன்
என் தேவனால் பெரிய மதிலை தாண்டுவேன்
தீங்கென்னைத் தொடராதே

3. இயேசு இரட்சகர் என்பக்கம் இருக்க
என்னை எதிர்ப்பவன் யார்
கிறிஸ்து என் ஜீவன் சாவு ஆதாயம்
என்றே கூறிடுவேன்

4. மான் கால்களாக என் கால்கள் மாற்றுவார்
உயர்ந்த ஸ்தலம் அளிப்பார்
யுத்தம் செய்ய என் கைகள் பழக்குவார்
வெற்றி எனதல்லவோ

### பாடல் - 2044
(R-Disco T-120 F2/4)

**கிறிஸ்துவின் சேனை வீரர்கள் நாம் என்றும்**
கிறிஸ்துவுக்காய் சேவை செய்திடுவோம்
உயர்விலும் தாழ்விலும் காட்டிலும், நாட்டிலும்
உன்னதர் படையில் பணிபுரிவோம்

இறைமகன் இயேசு வாழ்க, வாழ்க
அதிசயமானவர் வாழ்க வாழ்க
வல்லமையுள்ளவர் வாழ்க வாழ்க
மரித்துயிர்த் தெழுந்தாரே

2. சத்திய கச்சையை அரையினில் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரிப்போம்
ஆயத்த பாதரட்சையைத் தொடுத்தே
விசுவாச கேடகத்தை பிடிப்போம்

3. ரட்சண்ய தலைச்சீராவை அணிந்து
வசனத்தின் பட்டயத்தை எடுப்போம்
சர்வாயுதத்தை அணிந்த வீரர் நாம்
இயேசுவுக்காய் யுத்தம் செய்திடுவோம்

வாழ்க வாழ்க வாழ்க (2)
வாழ்க நீர் வாழ்க உன் நாமம் வாழ்க
உன் புகழ் வாழ்க, என்றென்றும் வாழ்க

### பாடல் - 2045

**எந்தன் ஆத்துமா உம்மை நாடுது**
எந்தன் ஜீவனும் உம்மைத் தேடுது
எந்தன் நினைவுகள் உம்மைப் பாடுது
எந்தன் இதயமும் வாஞ்சித்து கதறுது

1. நீரே வெளிச்சமும் இரட்சிப்புமானவர்
எந்தன் ஜீவனின் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சுவேன் யாருக்கும் பயப்படேன்

அடைக்கலம் நீரல்லவோ
யுத்தம் ஒன்று எழும்பினாலும்
பாளயம் ஒன்று எதிர் கொண்டாலும்
பகைவர் என்னை நெருக்கினாலம்
எதிர்த்தவர் இடறுவார்-என்னை (2)

2. உம்மிடத்தில் ஒன்றைக் கேட்டேன்
உன்னத மகிமை வேண்டி நின்றேன்
உமது வசனம் தேடி வந்தேன்
ஆலயம் நாடுவேன்
தீங்கு நாளில் கூடார மறைவில்
என்னை மறைத்துப் பாதுகாத்து
கன்மலைமேலே உயர்த்தி என்னை
என்றென்றும் காத்திடுவீர்-என்னை (2)

3. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
நீர் என்னை என்றும் சேர்த்துக் கொள்வீர்
உமது வழியில் நித்தம்
நடத்திப் பாதை காட்டிடுவீர்
கர்த்தருக்கே நீயும் காத்திரு
நம்பிக்கையுடனே திடமனதுடனே
உந்தன் இதயத்தை ஸ்திரப்படுத்திடுவார்
அவருக்கே காத்திரு-என்றும்

## பாடல் - 2046
## (R-Modern 6/8 T-95 Em 6/8)

**நீயே எனது ஒளி நீயே எனது வழி**
நீயே எனது வாழ்வு இயேசையா

1. நான்கு திசையும் பாதைகள்
சந்திக்கின்ற வேளைகள்
நன்மை என்ன தீமை என்ன
அழியாத கோலங்கள் - 2

நீயே எங்கள் வழியாவாய்
நீதியின் பாதையில் பொருளாவாய் - (2)

உமது பாதப்பதிவுகள்
எமது வாழ்வின் தெளிவுகள்
அவற்றில் நான் நடந்தால்
வெற்றியின் கனிகள் - நீயே

2. துன்ப துயர நிகழ்வுகள்
இருளின் ஆட்சிக் கோலங்கள்
தட்டுத் தடுமாறி விழத்
தகுமான சூழல்கள் - (2)

நீயே எங்கள் ஒளியாவாய்
நீதியின் பாதையின் சுடராவாய் - (2)

உம்மை நாங்கள் போற்றிட
பொய்மை எங்கும் போக்கிட
உண்மையின் இறைவா
உனதருள் தாரும் - நீயே

## பாடல் - 2047
## (R-Disco T-125 Em2/4)

**சேனைகளின் கர்த்தர் தேவன்**
நம்முடன் இருக்கின்றார்
சேனைகளின் கர்த்தர் இயேசு
நம் முன்னே செல்கின்றார்

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தரே வல்ல மீட்பர்
சேனைகளின் கர்த்தர் மகாராஜா
சேனைகளின் கர்த்தர் நம் தேவன்

1. கோலியாத் பெலிஸ்தியன்
வாளோடும் ஈட்டியோடும்
கேடகமும் தரித்தோனாய் வந்தான்
கற்களையும் கையிலேந்தி
இஸ்ரவேலின் படைக்காக சென்றான்
இஸ்ரவேலின் கர்த்தரின் யுத்தமது
தேவ மக்கள் ஜெயித்தனர்
எதிரிகள் முறிந்தனர்

2. உலகமும் மாமிசமும் பிசாசும் எதிர்த்து
வந்தும் வாகை சூடும் வீர சேனாபதி
வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்
கொண்ட இயேசுவே எம் அதிபதி
பாவத்திற்கு எதிர்த்து போராடியே
சாபத்தீட்டை உதறித் தள்ளுவோமே
யுத்தம் செய்யப் பழகுவோம்
இரத்தம் சிந்தப் பயப்படோம்

3. தீங்கு நாளில் அந்தகார
லோகாதிபதிகளோடும்
துரைத்தனம் அதிகாரத்தோடும்
வான லோகப் பொல்லாத
ஆவிகளின் சேனையோடும்
பூலோகத்தில் போராட்டங்கள் உண்டு
உலகத்தில் இருக்கும் சாத்தானிலும்
உன்னில் வாழும் தேவன் பெரியவர்
சாத்தான் எங்கள் காலின் கீழே
வெற்றிக்கொடி ஏறும் மேலே

## பாடல் - 2048
## (AM/CONTRY 2/4 / T-130)

**ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்**
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
இயேசு தேவா
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
துதி உமக்கே

1. கருவில் கண்டீர் ஸ்தோ்ததிரம் தேவா
தெரிந்து கொண்டீர் ஸ்தோத்திரம் தேவா
என்னை அழைத்தீர் ஸ்தோத்திரம் தேவா
உந்தனின் சேவை செய்ய

2. எனக்காய் வந்தீர் ஸ்தோத்திரம் தேவா
சிலுவையில் மரித்தீர் ஸ்தோத்திரம் தேவா
இரத்தம் சிந்தினீர் ஸ்தோத்திரம் தேவா
என்னை இரட்சிக்கவே தேவா

3. உயிர்த்தெழுந்தீர் ஸ்தோத்திரம் தேவா
பரலோகம் சென்றீர் ஸ்தோத்திரம் தேவா
வரங்களை அளித்தீர் ஸ்தோத்திரம் தேவா
உமக்கென்று வாழ்ந்திடவே தேவ

4. எக்காளத்தோடும் தொனிக்கும் ஸ்தோத்திரம் தேவா
தூதர்கள் சூழ ஸ்தோத்திரம் தேவா
மறுபடி வருவீர் ஸ்தோத்திரம் தேவா
பரலோகம் கொண்டு செல்ல – என்னை

## பாடல் - 2049
## (C/ CONTRY 2/4 / T-125)

**என் ஆத்துமா கவி பாடும்**
தேவாதி தேவனை துதித்து
என் உள்ளம் மகிழ்ந்தாடும்
கர்த்தாதி கர்த்தரை புகழ்ந்து

1. அக்கினி சோதனையோ
அயராது கடந்திடுவேன்
ஆண்டவர் இயேசுவோடு
அனுதினம் வாழ்ந்திடுவேன்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

2. தேவனின் நாமத்தையே
தினம் தினம் சார்ந்திடுவேன்
வியாதியோ வேதனையோ
சோர்வின்றி ஜெயம் எடுப்பேன் – அல்லே

3. இயேசுவின் நாமத்திலே
சாத்தானை முறியடிப்பேன்
வஞ்சகன் சூழ்ச்சிகளை
அஞ்சாமல் எதிர்த்திடுவேன் – அல்லே

4. கர்த்தரின் கரம் பிடித்தே
அக்கரை சேர்ந்திடுவேன்
கண்ணீரும் கசப்பும் இல்லை
கர்த்தரின் வீட்டினிலே – அல்லே

## பாடல் - 2050

**துதியில் வாழ்பவரே துதிக்குப் பாத்திரரே**
எனக்குள் வாழ்பவரே எந்தன் நல்மேய்ப்பரே

ஆராதனை வல்லமை மாட்சிமை

1. ஆயுள் உள்ளவரை ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்
சபையின் நடுவிலும் ஆராதிப்பேன்
சர்வ வல்லவர் நீர்தானய்யா



அட்டவணை

2. கோடான கோடி பரிசுத்தர்கள்
பாடல்கள் பாடி பணிகின்றனர்
வானாதி வானங்களும் போற்றும் உம்மை
அல்பா ஒமேகா நீர்தானய்யா

3. வெள்ளை சிங்காசனம் அமர்ந்தவரே
தூதர்கள் நடுவில் ஜொலிப்பவரே
அக்கினி ஆவியால் நிரப்புகின்ற
அபிஷேக நாதரும் நீர்தானய்யா

4. துதியும் கனமும் மகிமை எல்லாம்
தூயவர் உமக்கே செலுத்துகிறோம்
ராஜாதி ராஜாக்களும் நடுங்குகின்ற
அதிகாரம் வல்லமை நீர்தானய்யா

## பாடல் - 2051

**கைத்தாள தொனியுடனே**
தேவனுக்கு ஓசன்னா நீயும்பாடிடு (2)
அதிகாலையிலே தேவனையே நீ கூப்பிடு
உந்தன் உள்ளத்தில்
நாதனையே நீ போற்றிடு
தூய அன்பு வடிவானவரை கூடி வேண்டிடு (2)
தூய ஆவியாலே நிரப்பிடுவார்
தேவன் இயேசுவே

1. ஓடை நீரை நோக்கிடும் மான்கள் போலவே
ஜீவபாதை தேடிட வாஞ்சை தாருமே
கனி கொடுக்கும் மரங்கள் போல
மாற வேண்டுமே
மண்ணுடலை பெறுத்து
கீதம்பாட வேண்டுமே
யோபுவைப்போல திடமனதாய் வைப்பார்
நித்தம் நிழலாக உன்னோடு வாசம் செய்வார்
நெஞ்சில் ஊற்றாக நதியாகப் பாய்கின்றவர்
அந்த திருநாமம் தினம் போற்றி நீயும் பாடிடு

2. கன்மலையின் கழுகு போல் மாற
வேண்டுமே
கர்த்தர் இயேசு பாதத்தில் சேர
வேண்டுமே
சிலுவைப் பாடு நெஞ்சினிலே

நினைத்துப் பார்த்திடு
சித்தத்தோடு அவர் பணியை செய்து
மகிழ்ந்திடு
யோனாவைக் காத்தது போல்
உன்னைக் காப்பார்
உன்தன் ஒளியாக வழியாக முன்னே
செல்வார்
உள்ளம் மறவாதே அவர் செய்த
அற்புதமெல்லாம்
அந்த அற்புதரின்
திருநாமம் தினம் போற்றிடு

### பாடல் - 2052

**உயிரோடு எழுந்த இயேசுவே**
உமக்காக வாழுவேன்
நீர் ஒருவரே நல்லவர்
நீர் ஒருவரே இரட்சகர்

என்னை தூக்கி தூக்கி எடுத்தீரே
நீர் சர்வ வல்லவரே
என்னை தூக்கி தூக்கி எடுத்தீரே
நீர் சமாதான காரணரே

1. மரித்துப் போன லாசரை அன்று
தேடியே இயேசு வந்தீரே
உங்க வாயின் வார்த்தையால்
ஜீவன் வந்தது

2. சிலுவையின் அந்த போரிலே
இயேசு நீரே மரித்தீரே
ஆனால் உயிரோடு எழுந்தீரே
அந்த எதிரியை ஜெயித்தீரே

### பாடல் - 2053

**இல்ல இல்ல இல்ல இல்லப்பா**
நீங்க இல்லாம நானும் இல்லப்பா
உம்மை போல யாரும் இல்லப்பா
சர்வ வல்லவர் அவர் என்றும் நல்லவர்
உங்க வார்த்தைக்கு ஈடு இல்லையே – 2

1. உம் கிருபையால் இன்றும் நான் வாழ்கிறேன்
உம் இரக்கத்தால் நான் நிலை நிற்கிறேன்

2. என் பெலத்தினால் ஒன்றும் முடியலை
என் சுயத்தினால் வாழ முடியலை
உம்மை விட்டு வாழ முடியலை
இயேசப்பா உம்மை விட்டு வாழ முடியலை

3. இருளில் வாழ்ந்தேனே
பயத்தோடு இருந்தேனே
சோர்ந்து போனேனே
கலகத்தால் சூழ்ந்தேனே
பயமே இல்லாம வாழ செய்தீங்க
இல்ல இல்ல இல்ல
எனக்கு பயமே இல்லப்பா

## பாடல் - 2054

**இன்னும் நான் அழியல இன்னும் தோற்று போகல**
ஆனாலும் வாழ்கிறேனே - ஏன்? ஏன்? ஏன்?
போராட்டங்கள் முடியல பாடுகளும் தீரல
ஆனாலும் இருக்குறேனே - ஏன்? ஏன்? ஏன்?

கிருபை கிருபை கிருபை கிருபை
கிருபை கிருபை கிருபை கிருபை
கிருபை கிருபை கிருபை கிருபை - எல்லாம்
கிருபை கிருபை கிருபை கிருபை

நான் இல்ல என் பெலன் இல்ல
என் தாலந்தில்ல எல்லாம் கிருபை

2. படிக்கல உயரல பட்டத்தாரி ஆகல
ஆனாலும் வாழ்கிறேனே - ஏன்? ஏன்? ஏன்?
நிற்கிறேன் நிர்மூலமாகமலே இருக்கிறேன்
ஆனாலும் நிற்கிறேனே - ஏன்? ஏன்? ஏன்?

3. அற்புதங்கள் நடக்குது அதிசயங்கள் நடக்குது
வியாதியெல்லாம் மாறினது - ஏன்? ஏன்? ஏன்?
பாவமெல்லாம் மறைந்தது சாபமெல்லாம் உடைந்தது
பரிசுத்தமாய் மாறினது - ஏன்? ஏன்? ஏன்?

## பாடல் - 2055

**சர்வ சிருஷ்டிக்கும் எஜமான் நீரே**
உங்க வார்த்தைக்கு ஈடு இல்லையே-2

சத்தியம் ஜீவன் அவரே
நித்தம் நித்தம் அவரே-2

சத்திய தேவனே நித்திய ராஜனே
என்னோடும் வருபவரும் அவரே
அவரே அவரே அவரே
என்றும் என்றும் அவரே அவரே

1. ஒரு போதும் கைவிடாமல்
என்னையும் காத்தாரே
ஒரு நாளும் விலகிடாமல்
என்னையும் கண்டாரே-2
எத்தனை நன்மைகள் செய்தார்
எத்தனை இன்பங்கள் தந்தார்-2
தந்தாரே தந்தாரே தந்தாரே
சந்தோஷம் என் வாழ்விலே தந்தாரே (2)

2. ஒரே ஒரு வார்த்தையாலே
கடலையும் அதட்டினாரே
ஒரே ஒரு வார்த்தையாலே
மரணத்தை வென்றாரே-2
ஒரே ஒரு வார்த்தை சொன்னால் போதுமே
இன்றைக்கே உந்தன் வாழ்க்கை மாறுமே
மாறுமே மாறுமே மாறுமே
உந்தன் வாழ்வே மாறுமே

## பாடல் - 2056

**உம்மை நினைச்சாலே**
அழுகனுன்னு தோனுது
நீர் இருந்தாலே ஜெயிப்பேன் என்று தெரியுது

நன்றி நன்றி ஐயா உம் இரக்கத்துக்கு நன்றி ஐயா
நன்றி நன்றி ஐயா உம் அன்புக்கு நன்றி ஐயா

1. சரீரத்தின் வேதனையோ தாங்க முடியல
ஜனங்களின் வார்த்தைகளோ கேட்க முடியல
உள்ளமெல்லாம் காயமானதே
இயேசப்பா ஆற்ற வாங்கலேன்-2- நன்றி

2. மனுஷனின் திட்டங்களோ ஒன்னும் தெரியல
திட்டங்களின் நோக்கங்களோ
ஒன்னும் புரியல
உள்ளமெல்லாம் சிதைந்து போனதே
இயேசப்பா சேர்க்க வாங்கலேன் - 2

3. உலகத்தின் அன்புகளோ ஒன்னும் நிலைக்கல
நம்பிக்கையின் வார்த்தைகளோ
நிலைச்சி நிற்கல மனுஷரெல்லாம்
மாறிப் போனாலும்
நீங்க மட்டும் என்றும் மாறலே - 2

## பாடல் - 2057
## (D-Min / 8 beat / T-100)

**அடிமை நான் ஆண்டவரே - என்னை**
ஆட்கொள்ளும் என் தெய்வமே
தெய்வமே தெய்வமே
அடிமை நான் ஆட்கொள்ளும்

1. என் உடல் உமக்குச் சொந்தம் - இதில்
எந்நாளும் வாசம் செய்யும்

2. உலக இன்பமெல்லாம் - நான்
உதறித் தள்ளி விட்டேன்

3. பெருமை செல்வமெல்லாம் - இனி
வெறுமை என்றுணர்ந்தேன்

4. வாழ்வது நானல்ல - என்னில்
இயேசுவே வாழ்கின்றீர்

5. என் பாவம் மன்னித்தருளும் - உம்
இரத்தத்தால் கழுவிவிடும்

6. முள்முடி எனக்காக - ஐயா
கசையடி எனக்காக

7. என் பாவம் சுமந்து கொண்டீர் - என்
நோய்கள் ஏற்றுக் கொண்டீர்

## பாடல் - 2058
### (C-Maj / 8 beat / T-100)

**ஆண்டவரே உம் பாதம் சரணடைந்தேன்**
அடிமை நான் ஐயா
ஆயிரம் ஆயிரம் துன்பங்கள் வந்தாலும்
அகன்று போக மாட்டேன் - உம்மை விட்டு
அகன்று போக மாட்டேன்

1. ஒவ்வொரு நாளும் உம் குரல் கேட்டு
அதன்படி நடக்கின்றேன்
உலகினை மறந்து உம்மையே நோக்கி
ஓடி வருகின்றேன்

2. வேதத்திலுள்ள அதிசயம் அனைத்தும்
நன்கு புரியும்படி
தேவனே எனது கண்களையே
தினமும் திறந்தருளும்

3. வாலிபன் தனது வழிதனையே
எதனால் சுத்தம் பண்ணுவான்
தேவனே உமது வார்த்தையின்படியே
காத்துக் கொள்வதனால்

4. நான் நடப்பதற்கு பாதையைக் காட்டும்
தீபமே உம் வசனம்
செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே
தேவனே உம் வாக்கு

5. தேவனே உமக்கு எதிராய் நான்
பாவம் செய்யாதபடி
உமது வாக்கை என் இருதயத்தில்
பதித்து வைத்துள்ளேன்

## பாடல் - 2059

**அன்பே கல்வாரி அன்பே**
உம்மைப் பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதப்பா

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர்-எங்கள்
பரிகார பலியானீர் - அன்பே



அட்டவணை

2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே - அன்பே

3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா - அன்பே

4. நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா
மனிதர்கள் மூழ்கணுமே
மறுரூபம் ஆகணுமே - அன்பே

## பாடல் - 2060

**மனந்திரும்பும் பாவிக்கென்றும் புகலிடமே**
மனதுருகும் தேவன் எந்தன் மறைவிடமே

வந்தனம் அப்பா வந்தனமே-2

1. திருச்சபை நடுவில் உமது பெயரைச்
சொல்லியே பாடிடுவேன் - திருக்கரம்
செய்திட்ட நன்மை நினைக்கிறேன்
திருச்சபை நடுவில் உமது பெயரைச்
சொல்லியே - உம்முடைய செயல்களெல்லாம்
நினைக்கும் போது வியக்கிறேன்-2

2. இரதங்களும் குதிரைகளும் எங்களை
இரட்சிக்க முடியவில்லை - உம்மை
விட்டால் எங்களுக்கு வேறே வழியில்ல
இரதங்களும் குதிரைகளும் எங்களை
இரட்சிக்க முடியவில்லை - உம்மை நம்பி
வந்துவிட்டோமே வேறொரு நாமம் அறியவில்ல - 2

3. கர்த்தருக்குள் மகிழ்ந்திருக்கும்
பிள்ளைகளுக்கென்றும் நிம்மதியே
காத்திருந்தால் கிடைக்கும் அவரின் கிருபை
கர்த்தருக்குள் மகிழ்ந்திருக்கும்
பிள்ளைகளுக்கு என்றும் நிம்மதியே - என்னை
விட்டு எடுபடாத நல்ல பங்கு அவர் சந்நிதியே

## பாடல் - 2061

**யேகோவா தேவனுக்கு நமஸ்காரம்**
சேனைகளின் கர்த்தருக்கு நமஸ்காரம்
அல்லேலூயா – 16

1. யேகோவா ஏலோகிம் சிருஷ்டிப்பின் தேவன்
யேகோவா ஒசேனு உருவாக்கும் தேவன்

2. யேகோவா மெக்காதீஸ் பரிசுத்த மாக்கிடும்
யேகோவா சிட்கேனு நீதியின் அபிஸ்தானம்

3. யேகோவா ஷம்மா என்னோடு இருக்கின்றீர்
யேகோவா ஷாலோம் சமாதானம் தருகின்றீர்

4. யேகோவா எல்ரோயீ என்னை காண்பவரே
யேகோவா ஆருடா பரிசுத்த ஆத்மாவே

## பாடல் - 2062

**என்ன நான் செய்ய வேண்டும்**
சொல்லுங்கப்பா–2
நான் கீழ்ப்படிவேன் இன்றே
செயல்படுவேன் – 2
வாழ்ந்து காட்டுவேன் என்னை நம்புங்கப்பா – 4 இனி

1. முட்செடியில் பக்தன் மோசேக்கு
தரிசனம் தரவில்லையா
கன்மலையில் நின்ற எலியாவுக்கு
வல்லமை தரவில்லையா
களஞ்சியத்தில் வந்த கிதியோனுக்கு
வார்த்தை தரவில்லையா
காத்திருக்கும் உம் பக்தனுக்கு
பதில் ஒன்றும் இல்லையா

2. பள்ளத்தாக்கில் வீரன் யோசுவாவுக்கு
சூரியன் நிற்க வில்லையா
கூழாங் கல்லினால் சின்ன தாவீதுக்கு
கோலியாத் விழவில்லையா
காத்திருக்க வில்லையா
காத்திருக்கும் உம் பக்தனுக்கு
பதில் ஒன்றுமே இல்லையா
உம்மோடோன்றானேன்

## பாடல் - 2063

**என் உயிரே என் பெலனே**
என் உணர்வே என் இயேசுவே -2
எங்கெங்கும் எந்நாளும் (இருப்பவரே)
அக்கினி அபிஷேகம் (அளிப்பவரே) - 2

மகிமை தேவ மகிமை
கிருபை எங்கும் கிருபை - 2

1. கர்த்தர் உமக்கு நிகர் யாருமில்லை
உம் அன்புக்கு நிகர் ஏதுமில்லை - 2
நேசிக்கிறேன் நேசிக்கிறேன்
என் நேசரையே பாடிடுவேன்
பாடிடுவேன் என் இயேசுவையே - மகிமை

2. நேசரே எனக்கு சொந்தமானீர்
நீர் என்றும் எனக்கு துணையானீர் -2
வல்லவரே வல்லவரே நீர் உயர்ந்தவரே
நல்லவரே நீர் நல்லவரே என் சிநேகிதரே

3. சேனையின் கர்த்தர் நீர் தானே
மகிமையின் இராஜா நீர்தானே -2
வாழ்த்துகிறேன் (2) என் கர்த்தரையே
போற்றுகிறேன் (2) மீட்பரையே - மகிமை

## பாடல் - 2064
## (R-16 Beat T-105 C 4/4)

**கண்டேனென் கண்குளிர-கர்த்தனை யின்று**
கண்டேனென் கண்குளிர

கொண்டாடும் விண்ணோர்கள் கோமானைக் கையிலேந்திக்-கண்

1. பெத்தலேம்-சத்திர முன்னணையில்
உற்றோருக்-குயிர்தரும் உண்மையாம் என் ரட்சகனைக் - கண்

2. தேவாதி-தேவனை, தேவசேனை
ஓயாது-தோத்தரிக்கும் ஒப்புநிகர் அற்றவனைக் - கண்

3. பாவேந்தர்-தேடிவரும் பக்தர் பரனை,
ஆவேந்தர்-அடிதொழும் அன்பனை, என் இன்பனைநான் - கண்

4. முத்தொழிற்-கர்த்தாவாம் முன்னவனை,
இத்தரை-மீட்க எனை நத்தி வந்த மன்னவனைக் - கண்

5. மண்ணோர்-இருள்போக்கும் மாமணியை,
விண்ணோரும்-வேண்டிநிற்கும் விண்மணியைக், கண்மணியைக்- கண்

6. அண்டி னோர்க்-கன்புருவாம் ஆரணனை,
கண்டோர்கள்-கலிதீர்க்கும் காரணனை, பூரணனைக் - கண்

7. அன்னையாம்-கன்னியும் ஐயனுடன்
முன்னறி-யாப்பசுவின் புல்லணையில் உன்னழகைக் - கண்

## பாடல் - 2065

**ஆ! அம்பர உம்பர மும் புகழுந்திரு**
ஆதிபன் பிறந்தார்

ஆதிபன் பிறந்தார்,-அமலாதிபன் பிறந்தார். - ஆ!

1. அன்பான பரனே!-அருள் மேவுங் காரணனே!-நவ
அச்சய சச்சிதா-ரட்சகனாகிய
உச்சிதவரனே! - ஆ!

2. ஆதம் பவமற,-நீதம் நிறைவேற,-அன்று
அல்லிராவினில்-தொல்லையிடையினில்
புல்லணையிற் பிறந்தார். - ஆ!

3. ஞானியர் தேட,-வானவர் பாட,-மிக
நன்னய, உன்னத-பன்னரும் மேசையா
இந்நிலம் பிறந்தார். - ஆ!

4. கோனவர் நாட, தானவர் கொண்டாட-என்று
கோத்திரர் தோத்திரஞ்-சாற்றிட வே, யூத
கோத்திரன் பிறந்தார். - ஆ!

5. விண்ணுடு தோண,-மன்னவர் பேண,-ஏரோது,
மைந்தனின் சிந்தையழுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார். - ஆ!

## பாடல் - 2066

**ஆடுங்கள் கொண்டாடுங்கள்**
இது ஆயன் பிறந்த நாள்
பாடுங்கள் பண் பாடுங்கள்
தேவ பாலன் பிறந்த நாள்

Happy Christmas Merry Christmas (2)
Happy Happy Happy Happy Happy Christmas (2)
Merry Merry Merry Merry Merry Christmas (2)

1. மரியின் மடியில் மாடடை குடிலில்
இறைமகன் இயேசு பிறந்த நாள்-அந்த
திருமகன் தனக்கு அனைவரும் சமமென
எளியோர் நடுவில் மலர்ந்த நாள்

2. நலிந்தவர்க்கெல்லாம் நான் துணை என்ற
கர்த்தர் இயேசு பிறந்த நாள்-தேவ
நம்பிக்கை அன்பு அமைதியை அளிக்க
குழந்தையாய் இயேசு பிறந்த நாள்

## பாடல் - 2067

**உயர்த்துவோம் நாம் உயர்த்துவோம்**
ஜீவனுள்ள உன்னதர் நாமம் உயர்த்துவோம்

உயர்த்துவோம் நாம் உயர்த்துவோம்
இயேசு ராஜனை – 2
தேவனின் நாமம் எந்தன் கோட்டையே
தேவனின் நாமம் எந்தன் தஞ்சமே
தேவனின் நாமம் எந்தன் துருகமே
நான் பயப்படும் வேளையில்
அவர் நிழலில் தங்குவேன்

## பாடல் - 2068

**பாடல் பாடி போற்றிடுவோமே**
ஆண்டவரை துதித்திடுவோமே
கரங்களை தட்டி ஸ்தோத்திரம் செய்து
இயேசு நாமம் உயர்த்திடுவோமே

1. செங்கடலை கடந்தவர் அவர்
சேனைகளை அழித்தவர் அவர்
சர்வ வல்லவர் சாவை வென்றவர் – 2
அவரை நாம் உயர்த்திடுவோமே

2. வானம் பூமி படைத்தவர் அவர்
வாக்குமாறா தேவனுமவர்
வெண்மையானவர் வெற்றி தருபவர்
அவரை நாம் உயர்த்திடுவோமே

## பாடல் - 2069

**கிருபை வேண்டுமே**
இயேசுவின் கிருபை வேண்டுமே -2
ஒவ்வொரு காலையிலும்
புது கிருபை வேண்டுமே -2

1. துதித்திட ஜெபித்திட வேதத்தை வாசிக்க
கிருபையாய் இயேசுவே -2
எனக்குள்ளே வாருமே - கிருபை

2. வார்த்தையில் செயல்களில்
ஞானமாய் வாழ்ந்திட
கிருபையாய் இயேசுவே -2
என்னையுமே காத்திடுமே - கிருபை

3. நன்மையிலும் உண்மையிலும்
வல்லமையாய் வாழ்ந்திட
கிருபையாய் இயேசுவே -2
என்னையுமே நடத்திடுமே - கிருபை

## பாடல் - 2070

**நீ பயப்படாதே பயப்படாதே**
நான் உன்னுடனே இருக்கின்றேன் -2
திகையாதே திகையாதே நான் உன் தேவன்
நான் உன்னை பெலப்படுத்தி
சகாயம் பண்ணிடுவேன்

என் நீதியின் வலது கரத்தால் உன்னை
தாங்குவேன் நான் தாங்குவேன் - 2

1. உன் மேலே எரிச்சலாய் இருக்கிற யாவரும்
வெட்கி லச்சை அடைவார்கள்

உன்னோடே யுத்தம் பண்ணின யாவரும்
ஒன்றும் இல்லாமல் போவார்கள்
உன் மேலே மனதுருகும் கர்த்தரான நான் -2
உன் கையை பிடித்துக் கொண்டு
உனக்கென்றும் துணை நிற்கின்றேன் - என்

2. பூமியின் கடையாந்தரத்தில் இருந்து
உன்னை எனக்காய் தெரிந்து கொண்டேன்
உன் பெயரை நித்தம் மேன்மைப்படுத்திட
உன்னை நானே அழைத்தும் வந்தேன்
நீ என் தாசன் உன்னை
தெரிந்து கொண்டேன் நீ என் தாசன்
உன்னை அழைத்தும் வந்தேன்
உன்னை நான் விட்டு விலகுவதில்லை
உன்னை கைவிடுவதுமில்லை - என்

## பாடல் - 2071

**ஒருவராகிலும் இல்லை - 4**
என் இயேசுவை தவிர என் நேசரை தவிர 2

1. என் எண்ணங்கள் அறிந்திட
என் ஏக்கங்கள் புரிந்திட -2
என் மனபாரம் இறக்கிட ஒருவராகிலும் இல்லை
அன்பரே என் நண்பரே
நீர் போதுமே எந்தன் வாழ்விலே - ஒரு

2. என் ஆபத்தில் உதவிட
என் வியாதியை குணமாக்கிட -2
முழு அன்போடு நேசித்திட ஒருவராகிலும் இல்லை
அன்பரே என் நண்பரே
நீர் போதுமே எந்தன் வாழ்விலே - ஒரு

## பாடல் - 2072

**எந்தன் அன்பரே எனது மணவாளரே**
உம்மையல்லால் நான் யாரிடம்
செல்வேன் இயேசையா

1. உம்மிடம்தான் சமாதானமும்
மீட்பும் உண்டு இயேசையா

2. சர்வ வல்ல தேவன் நீரே
அகிலம் ஆளும் இயேசையா

3. துன்பத்திலே துணையாளரே
துதிக்குப் பாத்திரர் இயேசையா

4. இரக்கமும் உருக்கமும் நிறைந்தவரே
அன்பு நிறைந்த இயேசையா

## பாடல் - 2073

**தூதர்கள் துதித்து பாடுவதால்**
பரலோகில் வசிக்கிறீர்
துதிகள் எழும்பி வரும் இடத்தில்
இறங்கி வருகிறீர்

ஆராதிக்கிறோம் நாங்கள் ஆராதிக்கிறோம்
இங்கேயே தங்கியிரும்
நாங்கள் ஆராதிக்கிறோம்

1. இடைவிடாமல் ஆராதிக்கிறோம்
இங்கேயே தங்கியிரும்
மகிழ்ச்சியோடு ஆராதித்தால்
உமக்கு பிடிக்குமே

2. ஸ்தோத்திர பலிகள் செலுத்துகிறோம்
இங்கேயே தங்கியிரும்
சத்தமாக ஆராதித்தால்
உமக்கு பிடிக்குமே

3. ஆவியில் நிறைந்து ஆராதிக்கிறோம்
இங்கேயே தங்கியிரும்
கெம்பிரமாக ஆராதித்தால்
உமக்கு பிடிக்குமே

## பாடல் - 2074

**இயேசுவைக் காண்போம்** 2
வாழ்வும் வழியும் உண்மையுமான
இயேசுவைக் காண்போம்

1. அன்பு மிகுந்தவர் அமைதி நிறைந்தவர்
அன்பே கடவுள் அழைக்கிறார் உன்னை
அன்பு பணியில் அற நெறியில்
சீடர்கள் ஆகுவோம் வாழ்வைத் தொடருவோம்

2. நீதி நேர்மையில் இரக்கச் செயல்களில்
மனித மாண்பு மண்ணில் மலர
ஜாதி மதங்கள் இனவெறி மாறி
சீடர்கள் ஆகுவோம் வாழ்வைத் தொடருவோம்

3. வீழ்ந்த மனிதனை இயேசு தூக்கி எடுப்பவர்
பாவங்கள் போக்கி நோய்களை நீக்கி
தின்மைகள் மாறி நன்மைகள் செய்ய
சீடர்கள் ஆகுவோம் வாழ்வைத் தொடருவோம்

4. கண்ணீர் துடைப்பவர் இயேசு கவலை தீர்ப்பவர்
கண்மணி போல காப்பார் உன்னை
காலமெல்லாம் கனிகள் கொடுக்க
சீடர்கள் ஆகுவோம் வாழ்வைத் தொடருவோம்

5. இறையாட்சி மலர்ந்திட இயேசு சிலுவையில் பலியானார்
இறந்தும் வாழ்கிறார் இம்மானுவேலாக
ஒரே மேய்ப்பனும் மந்தையுமாகிட
சீடர்கள் ஆகுவோம் வாழ்வைத் தொடருவோம்

## பாடல் - 2075

**விடுதலை தருபவர் இயேசு**
நம்மை விடுவிப்பவர் நம் இயேசு
வெற்றியை தருபவர் இயேசு
புதுவாழ்வினைத் தருபவர் இயேசு

1. இயேசு விடுதலை தந்தால் தான்
மெய்யான விடுதலையே
இயேசுவை தவிர இரட்சிப்பில்லை
இதுதான் உண்மையே

2. சத்தியம் அறிந்து வாழும்போது
விடுதலை நிச்சயமே
ஆத்மாவின் மீட்பு வார்த்தையேதான்
இதுதான் உண்மையே

3. கடவுளின் ஆவி எங்குண்டோ
அங்கே விடுதலை
ஆவி தான் வாழ்வின் உயிர் மூச்சே
இதுதான் உண்மையே

4. பொன்னோ வெள்ளியோ பொருளினாலோ
பாவங்கள் மறைவதில்லை
இயேசுவின் இரத்தத்தால் விடுதலையே
இதுதான் உண்மையே

**பாடல் - 2076**

**புயல் காற்றை பூத்தென்றலாய்**
மாற்றும் என் தெய்வமே
கடல் அலை மாறி மகிழ்வுடனே
துறைமுகம் சேருமே

1. வழி தெரியாமல் தடுமாறும் வேளை
கலங்கரை விளக்காய் வாருமே
தின்மைகள் மாற்றி என் சுமைகளை அகற்றி
கரையிலே சேருமே-என்னை-(உம்)

2. பேய் புயல் வாழ்வில் வீசிடும் வேளை
அமைதியின் அன்பனாய் வாருமே
தேவரீர் என்னுள் இருப்பதினால்
என் தலை மயிர் ஒன்றுக்கும் சேதமில்லை

3. நொறுங்கிய நெஞ்சத்தை
சோர்ந்திட்ட வாழ்க்கையை
பெலன் தந்து மீண்டும் நடத்துமே
கோதுமை மணி போல் மடிந்த என்
வாழ்வை உயிர் பெற செய்யுமே - மீண்டும்

**பாடல் - 2077**

**ஆண்டவர் என் ஆயன்**
எனக்கேதும் குறையில்லையே

1. பசும்புல் மேய்ச்சலில் இளைப்பாறச் செய்பவர்
ஆண்டவர் என் ஆயன்
சமாதான நதிக்கு அழைத்துச் செய்பவர்
ஆண்டவர் என் ஆயன்

2. இருள் சூழ்ந்த பள்ளத்தில் நான்
நடந்தாலும் எதற்கும் பயமில்லையே
உம் கோலும் நெடுங்கழியும்
என்னை தேற்றும் ஆண்டவர் என் ஆயன்

3. எதிரிகள் முன்னே விருந்தினைச் செய்பவர்
ஆண்டவர் என் ஆயன்
என் தலையில் நறுமண தைலம்பூசி
என் பாத்திரம் நிரப்புகின்றீர்

4. என் வாழ்நாள் எல்லாம் உம்
அருளும் நலமும் பேரன்பும் புடைசூழும்
நான் ஆண்டவர் இல்லத்தில்
நெடுநாள் வாழ்வேன்
வாழ்ந்து மகிழ்ந்திருப்பேன்

## பாடல் - 2078

**அடைக்கலப் பாறையான இயேசுவே**
அரணும் கோட்டையும் ஆன இயேசுவே

நீரே எனது வலிமை
நீரே எனது பெருமை
நீரே எனது வாழ்வு இயேசைய்யா

1. தாயின் வயிற்றினிலே பாதுகாப்பு
நீயல்லோ ஆண்டவரே
பிறப்பிலும் வாழ்விலும் நீரே எனக்கு
ஆதாரம் நீயல்லவோ – எந்தன் (2)

2. போகும் வழியை விசாலமாக்கி
என் எல்லையை பெரிதாக்கினீர்
உயரமான இடத்திலே என்னை நிறுத்தி
மாண்புற செய்கின்றீரே – என்னை (2)

## பாடல் - 2079

**இறைவன் என்னைக் காக்கின்றார்**
குறை ஒன்றும் எனக்கு இல்லையே
மகிழ்ச்சியூட்டும் இடத்தில் வைத்து
சிறகுகள் நிழலில் காக்கின்றார்

1. புல்லும் மேய்ச்சலும் அருவியும் உள்ள
பாலும் தேனும் நிறைந்த கானான்
அழைத்துச் சென்று களைப்பை ஆற்றி
புத்துயிர் ஊட்டுகின்றார்

2. தீமை துன்பம் நெருங்க விடாமல்
அரணும் கோட்டையும் புகலிடமான
வார்த்தை கேடயம் கவசமாக
காத்து வருகின்றார்

3. இருளும் பள்ளமும் எதிரியுமான
எரிக்கோ யோர்தான் தடைகளை மாற்றி
வாழ்வின் வழியை எனக்குக் காட்டி
சீயோனில் சேர்க்கின்றார்

## பாடல் - 2080

**பயப்படாதே பயப்படாதே**
நான் இருக்கின்றேன்
உலகம் முடியும் காலம் வரை
உன்னோடு இருக்கின்றேன்

1. போகும் இடமெல்லாம் உன்னோடு
தடையை மாற்றி முன் செல்வேன் நான்
அஞ்சவேண்டாம் கலங்க வேண்டாம்
யுத்தம் செய்பவர் நாம்

2. மலைகள் பெயர்ந்து போனாலும்
குன்றும் அசைந்து மாறினாலும்
தாய் தன் பிள்ளையை மறந்துவிடினும்
எந்தன் அன்பு மாறாது

3. துன்ப துயர வேதனையில்
நோய்கள் கண்ணீர் நேரங்களில்
நாமே உன்னைத் தேற்றும் தேவன்
என்றும் வாழ்கின்றேன்

## பாடல் - 2081

**எல்லாம் உம்மால் கூடும் தேவா**
எல்லாம் உம்மால் கூடும் நாதா

1. கற்பாறையை நீர் குளமாக்க வல்ல தேவன் நீர்
கற்பாறையை நீரூற்றாக்க
வல்ல மீட்பரும் நீர்
பாறையினின்று நீரோடையை
வெளிப்பட செய்தவர் நீர்
ஆறுகளைப் போல் ஓடிடச் செய்தவர் நீர்

2. தம்மை நோக்கி கூவும்
காக்கை குஞ்சுக்கும் தீனி கொடுப்பவரே
தம்மை நோக்கி கூவும் ஏழைகளுக்கு
விடுதலை அளிப்பவரே
கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்கு
மக்களை எழுப்ப வல்லவர் நீர்
இறந்தவர்களை வாழ்விக்க வல்லவர் நீர்

## பாடல் - 2082

**மனமே தளராதே மனமே தளராதே**
மாரநாதன் அருகில் உண்டு மனமே தளராதே

1. அதிசீக்கிரத்தில் விலகிப் போகும்
லேசான உபத்திரவம்
அதிகமான கன மகிமை
விரைவிலே உண்டாகும்

2. உலகத்தில் இருக்கும் அவனை விட
நம் இயேசு பெரியவரே
சமாதான தேவன் சீக்கிரமாய்
சாத்தானை நசுக்கிடுவார்

3. உலகிலே உபத்திரவம் உனக்குண்டு
ஆனாலும் தைரியம் கொள்
நமக்கெதிரான கடன் பத்திரம்
சிலுவையில் தீர்த்து விட்டார்

4. மனவேதனையின் அனுபவங்கள்
மீட்பாக மாறட்டுமே
கடவுளின் திருவுள துயரங்கள்
மனமாற்றம் உண்டாகும்

5. விசாரிப்பாரற்ற சீயோனே
தள்ளுண்ட என் பிள்ளையே
நான் உனக்கு பெலன் தந்து
உன் காயங்கள் ஆற்றிடுவேன்

6. கண்ணீர் கவலை நெருக்கங்களால்
பின் வாங்கிப் போகாதே
பரிசுத்த ஆவியின் ஆற்றலினால்
தாழ்மையாய் ஊழியம் செய்

## பாடல் - 2083

**இயேசு ஆண்டவரை போற்றி பாடுவோம்**
அல்லேலூயா கீதம் பாடுவோம்
ஆர்ப்பரித்து நடனமாடுவோம்
இயேசு கிறிஸ்து ஆண்டவர் நமது இரட்சகர்
நேற்றும் இன்றும் மாறிடாதவர்

1. ஒருவராய் பெரிய அதிசயம் செய்பவரை
புகழ்ந்து பாடுவோம்
வேண்டும் போதும் விரும்பும் போதும்
அதிகம் செய்பவர்
நன்மையான எந்த ஈவும்
நிறைவான எந்த வரமும்
ஜோதியின் தேவனிடம் இருந்து வருகுது

2. மலைகளை நோக்கி கண்களை
உயர்த்தும் போது உதவி செய்பவர்
கரம் உயர்த்தி ஜெபிக்கும் போது
கர்த்தர் உயர்த்துவார்
பெலனுள்ளவனுக்கும் பெலனற்றவனுக்கும்
உதவிகள் செய்வது லேசான காரியம்

## பாடல் - 2084

**பாதம் அமர்ந்தேன் பந்தியில் இருந்தேன்**
பணிவிடை செய்தேன் இறைவா
பாவங்கள் மன்னித்து பாவியை மீட்ட
பாசத்தை தந்த என் தேவா

1. துயரத்தில் இருந்தேன் துயர் தீர்த்தீர்
கலக்கத்தில் இருந்தேன் கலக்கம் தீர்த்தீர்
அமைதியை இழந்தேன் அமைதி தந்தீர்
கண்ணீரில் இருந்தேன்
கண்ணீர் துடைத்தீர் – நான்

2. தனிமையில் இருந்தேன் துணையானீர்
தவறியே அலைந்தேன் வழியானீர்
தடுமாறும் வேளையில் உறுதி தந்தீர்
தேடினபோது அருகில் வந்தீர் – உம்மை

3. பாவம் பெருகின இடத்தினிலே
கிருபை அதிகமாய் பெருகினதே
தேவையானதும் எடுபடாத
நல்ல பங்கை எனக்கு தந்தீர் - ஐயா

## பாடல் - 2085

**முடிவில்லாத பேரன்பே தீராத இரக்கமே**
காலை தோறும் புதிதாய் இருக்கும்
கிருபைக்காய் நன்றி நன்றி

1. உமது அன்பால் எமது குறையை
பொறுத்து கொள்பவரே
நிறை அன்பாலே என் அச்சம் அகற்றி
ஆறுதல் தருபவரே

2. நொடிப்பொழுதே கைவிட்டாலும்
இரக்கத்தாலே மீட்பவரே
உறவை வளர்க்கும் அன்பை பொழிந்து
நண்பர்கள் ஆக்குகிறீர்

3. உயிரை தந்து அன்பை காட்டி
எனக்காய் பலியானீர்
அன்பே உங்கள் வாழ்வின் அடித்தளம்
ஆணிவேராகட்டும்

4. அன்பு கயிற்றால் பாசம் காட்டி
ஈர்த்து கொள்பவரே
நிலை சாயாத அன்பே காட்டி
எம்மில் வாழ்பவரே

5. உமது பெயரால் நாங்கள் காட்டும்
அன்பும் உழைப்பையும் மறக்காதவர்
நன்மையான அன்பு பணியில்
ஆவியானவர் துணையுள்ளார்

## பாடல் - 2086

**வாழ்க்கை பயணத்தில் இயேசு உண்டு**
பயம் வேண்டாம்-பயம் வேண்டாம்
பள்ளங்கள் மேடுகளில் கூடே உண்டு
ஆபத்து காலங்களில் துணையுமுண்டு
துணையுமுண்டு இயேசு கூடே உண்டு

1. என் தெய்வம் செய்ய நினைப்பதெல்லாம்
தடைபடாதே தடைபடாதே

2. உன் வழிகளிளெல்லாம் தூதரை அனுப்பி
காத்திடுவார் காத்திடுவார்

3. உன் எல்லைகள் யாவையும் பெரிதாக்கி
ஆசீர்வதிப்பார் ஆசீர்வதிப்பார்

4. உன் வாழ்நாள் எல்லாம் நன்மையும் கிருபையும்
பின்தொடரும் பின்தொடரும்

5. உனக்கெதிராய் வரும் ஆயுதங்கள்
வாய்க்காதே வாய்க்காதே

## பாடல் - 2087

**என்னை அறியும் என் தேவா**
உம்மை காணும் நேரத்தில்
என் வாழ்வில் சந்தோஷம்

1. காரிருள் என்னை சூழ்ந்த போது
வெளிச்சம் ஆனீரே
கவலைகள் மிகுந்து கலங்கும் போது
ஆறுதல் ஆனீரே

நான் ஆடுவேன் களிகூறுவேன்
அல்லேலூயா பாடுவேன்

2. மனிதர்கள் என்னை நெருக்கும் போது
மறுரூபம் ஆக்கினீரே
மனிதர்கள் என்னை தூற்றும் போது
மகிழ்ச்சி தந்தீரே – நான் ஆடுவேன்

3. தனிமையாய் தினமும் வாடும் போது
துணையாய் இருந்தீரே
ஆவியால் வார்த்தையால் திடமளித்து
மீண்டும் நடத்தினீரே – நான் ஆடுவேன்

4. வியாதிகள் என்னை தாக்கும் போது
துதிக்க செய்தீரே
முட்களின் நடுவில் பெலன் அளித்து
பூரணமாக்கினீரே – நான் ஆடுவேன்

5. வறுமையில் வாடின காலங்களில்
வளமாய் போஷித்தீரே
வாழ்க்கையே வெறுத்து வாழ்ந்த போது
சீயோனை காட்டினீரே – நான் ஆடுவேன்

பாடல் - 2088

**கர்த்தர் உன்னை நடத்திடுவார்**
புல்லுள்ள இடங்களிலே
வறட்சியான காலங்களில்
கருணையை காட்டிடுவார்

1. வற்றாத நீரூற்றைப் போல்
எப்போதும் நிறைந்திருப்பாய்
வளமிக்க தோட்டத்தைப் போல்
அனுதினம் கனி கொடுப்பாய்
ஆத்துமாவை திருப்தியாக்கிடுவார்
எலும்பை நிணமுள்ளதாக்கிடுவார்

2. காலமெல்லாம் உடனிருந்து
கண்மணி போல் காப்பார்
கழுகை போல சுமந்து உன்னை
உயரமாய் பறக்கச் செய்வார்
ஓடினாலும் களைப்படைய மாட்டாய்
நடந்தாலும் சோர்வடைய மாட்டாய்

3. சிறகுகளின் நிழல்தனிலே
மூடி மறைத்திடுவார்
எதிரிகளை துரத்தி விட்டு
மதில்களை தாண்டச் செய்வார்
கர்த்தரே உனக்கு பெலன் தருவார்
கர்த்தரே சமாதானம் அருள்வார்

பாடல் - 2089

**துதித்துப் பாடிடுவோம்**
தாவீதைப் போல நாமும்
வாழ்வை அலங்கரிப்போம்

1. எல்லா செயலிலும் பரிசுத்த தேவனுக்கு
தாவீது துதி செய்து நாளெல்லாம் மகிழ்ந்தார்

2. மகிமையின் வார்த்தையால்
இறைவனை புகழ்ந்தார்
முழு உள்ளத்தோடு உன்னதரைப் புகழ்ந்தார்

3. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
மகிமையின் ஆடையை முடியாக சூடுவோம்

## பாடல் - 2090

**பிதாவே உம் சித்தம் என் வாழ்வில்**
நிறைவேறட்டும்
என் விருப்பம் மறைந்து
தேவசித்தம் போல் ஆகட்டும்

1. குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் வனைந்திடுமே
என் உடலும் என் உள்ளமும்
என் ஆவியும் உம் ஆலயமே
வாழ்வது நானல்ல இயேசுவே வாழ்ந்திடுவீர்

நானோ குறைய வேண்டும்
நீரோ வளர வேண்டும்.

2. தெய்வமே நான் ஒன்றுமில்லை
எனக்கென ஒன்றுமில்லை
என் உடமை என் திறமை
என் ஆற்றல் உம் தானமே
வாழ்வதும் இருப்பதும் இயக்கமும்
உம்மாலே தான்

நானோ குறைய வேண்டும்
நீரோ வளர வேண்டும்

## பாடல் - 2091

**புதிய வானம் புதிய பூமி**
என்னில் தோன்றட்டுமே
பழைய வானமும் பழைய வையமும்
என்னில் மறையட்டுமே

புதியனவாக்கும் புதியனவாக்கும்
வல்லமை வார்த்தையால் புதியனவாக்கும்

1. ஏமாற்றம் பொய்கள் வஞ்சக கபடுகள்
என்னில் அகற்றி ஆசீர்வதியும்
இஸ்ரேயல் என்ற புதுபெயர் சூட்டி
புதிய வாழ்வினை நான் காண

2. குடிவெறி களியாட்டம்
சண்டைகள் பகைமைகள்
ஊனியல்புகள் மறைந்து போக
ஆவியின் கனிகள் கொடைகள் அருளி
புதிய பாதையை பின் தொடர

3. புது ரசம் புது உடை புது உடன்படிக்கை
புதிய படைப்பாக அனுதினம் வாழ
புது உள்ளம் புது உடல் புது ஆவி அருளி
புதிய கிருபையில் நான் வாழ

பாடல் - 2092

**இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும்**
என்றும் மாறாதவர்
மரித்தாலும் சதா காலங்களிலும் வாழ்கின்றார்
இயேசு வாழ்கின்றார்

1. மனிதர்கள் மாறினாலும்
மலையும் குற்றுகள் விலகினாலும்
பகலும் இரவும் குளிரும்
பனியும் நிழலும் வெயிலும் மறையும்
தேவ அன்போ தெய்வ வாக்கோ
மாறுவதில்லை மாயமுமில்லை

2. விண்ணும் ஒழிந்தாலும்
இம்மண்ணும் அழிந்தாலும்
நானும் வழியும் நானே உண்மையும்
நானே ஜீவனும் என்றார்
இயேசுராஜா உன்னைக் காப்பார்
கலங்கவும் வேண்டாம்
திகையவும் வேண்டாம்

3. தாகமாய் இருப்போரே என்னிடம் வாருங்கள்
பணமோ பொருளோ விலையோயின்றி
இலவசமாய் தருவார்
திராட்சை இரசமும் சுத்த பாலும்
சாப்பிடுங்கள் நிறைவும் பெறுங்கள்

4. மீண்டும் வருவேன் என்றார்
ஆயத்தமாகிடுவோம்
அழைத்துச் சென்று கூடவே இருத்தி
எப்போதும் மகிழச் செய்வார்
அங்கு நோவில்லை அங்கு சாவில்லை
கவலையுமில்லை கண்ணருமில்லை

பாடல் - 2093

**அதிகாலை நேரத்தில் இயேசுவின்**
சமூகத்தில் எழுந்து வருகின்றேன்
பாவத்தைப் போக்கும் பரிசுத்தமாக்கும்
பரமனின் அருளினாலே

ஆராதனை ஆராதனை ஆராதனை உமக்கே

காலை விடி வெள்ளி பெருஞ்சுடரே
துதிகள் உமக்கே செலுத்துகின்றேன்

1. காலையில் உமது கிருபை
இரவெல்லாம் உமது பிரமாணிக்கம்
பகல் முழுதும் உந்தன் வழி நடத்தல்
மேகத் தூணாய் இருப்பதாக

2. உம் சித்தம் என்னில் நடக்கட்டுமே
உம் விருப்பம் என்னில் நிறைவேறட்டும்
என் இதய சிந்தனையும் வாய் மொழியும்

3. காவற் படை போல் காப்பவரே
காவல் அரணாய் இருப்பவரே
ஆயனும் மந்தையும் செம்மறியாய்
அனுதினம் நீரண்டை நடத்திடுமே

## பாடல் - 2094

**என்ன நேரிடினும் நிலைகுலைய மாட்டேன்**
இயேசுகிறிஸ்து என் ஜீவன்
எது நடந்தாலும் துணிவை இழக்க மாட்டேன்
இயேசுக்கிறிஸ்து என் ஜீவன்

2. அத்தி மரம் பூக்கா விட்டாலும்
திராட்சைச் செடியில் பழமில்லாமல் போனாலும்
ஒலிவ மரங்களில் பலன் அற்றாலும்
என் மீட்பரான கிறிஸ்துவிலே
அகமகிழ்வேன் நான் அக்களிப்பேன்

3. வயல்களில் விளைச்சல் இல்லாவிட்டாலும்
கிடைகளில் ஆடுகள் இல்லாவிட்டாலும்
தொழுவத்தில் மாடுகள் இல்லாவிட்டாலும்
என் மீட்பரான கிறிஸ்துவிலே
அகமகிழ்வேன் நான் அக்களிப்பேன்

4. உலகம் என்னை கொன்று போட்டாலும்
என் வாழ்வில் சுவர்கள் எழும்பினாலும்
என் அன்பை பெற்றவர்கள் கைவிட்டாலும்
என் மீட்பரான இயேசுக்கிறிஸ்து
என்னோடு என்றும் இருக்கின்றார்

## பாடல் - 2095

**வறியவனைத் தரையிலிருந்து தூக்கி விடுகிறார்**
ஏழைகளை குப்பையிலிருந்து கை தூக்குகிறார்

மலடியை மக்களுக்கு தாயாக்குகிறார்
மகிழ்ச்சியுடன் வீட்டினிலே
விளங்கச் செய்கின்றார்

நம் தேவன் வல்லவரே
நம் தேவன் ஜீவிக்கின்றாரே

1. ஆடுகள் மேய்த்து வந்த சிறுவன் தாவீதை
எண்ணெய் கொண்டு அபிஷேகம் செய்தவரே
இஸ்ரயேலின் அரசனாய் அரியணை ஏற்றி
உமது புகழை தலைமுறைக்கும்
விளங்கச் செய்தீரே

2. தாழ்நிலை நின்ற அடிமையை
கடைக்கண் நோக்கினார்
எல்லாத் தலைமுறைகளும்
என்னை போற்றச் செய்தார்
வல்லமை மிக்கவர்
அரும் பெரும் செயல் பல புரிந்தார்
அவர் கிருபை தலைமுறைக்கும் உள்ளதாமே

3. நெஞ்சிலே செருக்குற்றோரை சிதறடித்தாரே
தாழ்ந்தோரை அரியணையில் உயரச் செய்தாரே
பசித்தோரை நலன்களால் வாழ வைத்தாரே
அவர் கிருபை தலைமுறைக்கும் உள்ளதாமே

பாடல் - 2096

**இயேசுவே நீர் எல்லாம் செய்ய வல்லவர்**
இயேசுவே நீர் எல்லாம் செய்ய வல்லவர்

1. இழந்து போனதை மீண்டும் கொடுப்பவர்
இல்லாததை இருக்கச் செய்பவர்

2. கானாவூர் திருமண வீட்டினிலே
தண்ணீரை இரசமாக மாற்றியவரே

3. ஐந்து அப்பம் இரண்டு மீனை ஆசீர்வதித்து
ஐயாயிரம் பேருக்கு கொடுத்தவரே

4. மருத்துவராலும் மருந்துகளாலும்
மாறாத வியாதிகளை மாற்றுவரே

5. மரித்து போன லாசரை உயிர்ப்பித்தவரே
மடிந்து போன வாழ்வையெல்லாம்
வாழ வைப்பவரே

பாடல் - 2097

**தடைகளை மாற்றி வழிகளைத் திறக்கும்**
இயேசுவுக்கே ஸ்தோத்திரம்
நேர்வழி வாட்டி வாழ்வுக்கு நடத்தும்
இயேசுவுக்கே ஸ்தோத்திரம்

இயேசுவுக்கே ஸ்தோத்திரம் (3)

1. பகலினில் மேகமாய் இரவினில் நெருப்பாய்
தம் மக்கள் முன் நடந்தார்-அன்று
கசந்த நீரூற்றை மதுரமாய் மாற்றி
நம் நோய்களை விலகச் செய்தார்

2. கற்பாறை பிளந்து நீரூற்றைத் தந்து
தம் மக்கள் தாகம் தீர்த்தார்
அன்று உணவாய் மன்னாவை
மாரி போல் பொழிந்து
பாலையில் வாழச் செய்தார்

3. மேல் கூரை பிரித்து இயேசு முன் இறக்கிய
மனிதனில் இரக்கம் கொண்டார்
அவர் பாவங்கள் மன்னித்து
நோய்களை நீக்கி நடந்து போகச் செய்தார்

## பாடல் - 2098

**மாரநாதா என் தெய்வமே**
அடிமை என்னில் எழுந்து வாரும்
கண்ணீரைத் துடைக்க கஷ்டங்கள் மாற்ற
கசந்த என் வாழ்வை மதுரமாக்க
கொடிய எகிப்தை அகல செய்ய
மாரநாதா மாரநாதா

1. ஆபிரகாம் மகனை பலியிட்ட வேளையில்
முட்செடியில் ஆடாய் வெளிப்பட்டீரே
என்னையே உமக்கு
பலியாக்கும் வேளையில்
என்னிலும் எழுந்து வாரும் ஐயா

2. மார்த்தாளும் மரியாளும்
கண்ணீர் விட்ட நேரத்தில்
இயேசுவே நீரும் கண்ணீர் விட்டீரே
கல்லறை சென்று கல்லையே நீக்கி
மரித்த லாசரை உயிர்ப்பித்தீரே

3. பவுலும் சீலாவும் துதி செய்த வேளையில்
சிறையின் கதவுகள் திறந்ததல்லோ
சங்கிலி அறுந்தது இடமே அதிர்ந்தது
காவலர் மீட்பை அடைந்தனரே

## பாடல் - 2099

**உலகத்தில் இருப்போனிலும்**
நம்மில் இருக்கும் தேவன் பெரியவர்
பெரியவர் வல்லவர் அவர் நல்லவர்

1. துன்பங்கள் பலதும் சூழ்ந்திடினும்
பழிகள் ஆயிரம் சுமத்திடினும்
இயேசுவை சிந்தையில் நிறுத்திடுவோம்
அகமகிழந்து களிகூறுவோம்

2. இன்னல்கள் எதிர்ப்புகள் ஏமாற்றங்கள்
எரிமலை போல் வெடிக்கட்டுமே
எல்லாம் வல்லவர் நம் தேவன்
இனிதாய் மாற்றி மகிழ வைப்பார்

3. உற்றார் உறவினர் வெறுத்திடினும்
நம்மை அழைத்தவர் உயிருள்ளவர்
உள்ளம் கலங்கும் நேரங்களில்
உயிர்த்த இயேசு நம்மோடுள்ளார்

## பாடல் - 2100

**காற்றைப் போல நீயும் முன்னேறுவாய்**
மேகம் போல நீயும் நாட்டை மூடுவாய்
வாக்களித்த நாட்டிலே நீ வளருவாய்
தேவன் தந்த அனைத்தையும்
நீ பயன்படுத்துவாய்

1. செய்கடலை கடந்து போக வழி திறக்குமே
எதிரிகள் மனந்திரும்ப கடல் உணர்த்துமே

யுத்தம் செய்து 2 நம்மை மீட்குவார்
யுத்தத்திலே வெற்றியும் நமக்கு தருவார்

2. எரிக்கோ மதிலை உடைத்து போட
வலம் வருவேன் நான்
எரிக்கோ மதிலை கடந்து போக
துதி எடுப்பேன் நான்-யுத்தம் செய்து

3. கோலியாத்தை முறியடிக்க
தேவன் நமக்குண்டு
சிங்கங்களை கிழித்து போட
பட்டயமுண்டு

4. பிரியமான பிள்ளைகளே
நீங்கள் வாழணும்
ஆன்ம நலமும் உடல் நலமும்
இனிதே நிகழணும்

## பாடல் - 2101

**நம் தேவன் அருளே நாள் தோறும் காக்கும்**
நம் தேவன் கரமே நாள் தோறும் தாங்கும்

1. நீரோடை அருகே அழைத்துச் சென்று
நம் தாகம் தீர்க்கின்றார்-அவர்
பசும்புல் மேய்ச்சலில் இளைப்பாறச் செய்து
களைப்பை ஆற்றுகின்றார்

2. கொடும் வெயில் நடுவே குளிர் நிழலாக
நம்மை தொடர்கின்றார்
அவர் கடும் புயல் நடுவே புகலிடமாக
நம்மை காக்கின்றார்

3. கழுகினைப் போல சிறகினில் வைத்து
சுமந்து காக்கின்றார்
நாம் காணாத ஆடாய் அலைந்திடும் வேளை
தேடி நம்மை அணைக்கின்றார்
தோள் மேல் சுமக்கின்றார்

## பாடல் - 2102

**நேரம் வருகின்றது வந்தே விட்டது**
மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும்

தேவனைத் தொழுவார்கள்-பரம
தேவனைத் தொழுவார்கள்

பாடுவோம் ஜெய் ஜெய்
ஆடுவோம் ஜெய் ஜெய்
நம் தெய்வம் இயேசு ஜீவிக்கிறார்

1. ஸ்தோத்திரப் பலிகளை ஏறெடுப்போம்
மகிமையை அவருக்கு செலுத்திடுவோம்
உயிருள்ள நாளெல்லாம் அவர் நாமம்
பாடிப் புகழ்ந்து ஸ்தோத்தரிப்போம்

2. தேவனைத் தொழுது நீ வந்தால்
உண்ணும் உணவையும் நீரையும்
ஆசீருடனே நோய் மாற்றி
வறட்சி நிலையினை மாற்றிடுவார்

3. இயேசுவின் வருகை நிச்சியமே
எரிகின்ற திரியாய் சுடர் விடுவோம்
ஆவி ஆத்துமா சரீரம் அனைத்தும்
சீர் குலையாமல் காத்துக் கொள்வோம்

## பாடல் - 2103

**என் அடைக்கலப்பாறையான இயேசு தேவா**
ஆனந்த நீரூற்றே இயேசு தேவா
ஆத்துமா உம்மையே வாஞ்சித்து கதறிடுதே

1. உம் திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை
உம் திரு முகத்தை காண விழைகிறேன்
உமது வல்லமை உமது மகிமை
பெற்றுக் கொள்ள என் உள்ளம் துடிக்கின்றது

2. ஜீவனைவிட உமது கிருபை
எத்தனையோ மேலானது
எனது நாவு உம்மைப் பாடி
என் உள்ளம் மகிழ்ச்சியில் நிறைவடையும்

3. படுக்கையிலும் உம்மை நினைப்பேன்
இராச்சாமத்தில் உம்மை தியானிப்பேன்
உமது வலக்கரம் எனக்கு ஆதரவு
உம் சிறகின் நிழலில் நான் அக்களிக்கிறேன்

## பாடல் - 2104

**நிரந்தரமானவரே நித்தியமானவரே**
சர்வ வல்லவரே சகல அதிபதியே

1. ஒன்றுக்கும் நாங்கள் சொந்தமல்ல
எல்லாவற்றிற்கும் சொந்தம் நீயே
நேற்றும் இன்றும் மாறாதவரே
இன்றும் என்றும் வாழ்பவரே
விண்ணும் மண்ணும் ஒழிந்தாலும்
உம் வார்த்தைகள் என்றும் மாறாதே

2. தேவன் தந்த தானங்கள் எல்லாம்
பொது நன்மைக்கே பயன்படுத்த
உலகமெல்லாம் ஆட்கொண்டாலும்
ஆன்மா இழந்தால் லாபம் என்ன
இயேசுவைப் பிரிந்து வாழ்வுமில்லை
இயேசுவை இழந்து மீட்புமில்லை

## பாடல் - 2105

**இயேசுவின் அன்பு எத்தனை பெரியது**
ஆழமும் அகலமும் கடந்த அன்பு

1. தாயின் அன்பு வற்றிப் போகுமோ
தனது குழந்தையை அவள் மறப்பதுண்டோ
தாய் தன் பிள்ளையை மறந்து விட்டாலும்
நான் உன்னை ஒருபோதும் மறப்பதில்லை

2. குருவின் அன்பு விலகிப் போனதே
லேவியன் அன்பும் மாறிப் போனதே
சமாரியன் அன்போ இரக்கத்தின் அன்பு
முடிவில்லா வாழ்வைக் கொடுத்த அன்பு

## பாடல் - 2106

**எனக்காய் கதறும் என் இயேசு நல்லவரே**
கஷ்டங்களில் எந்தன் துணை அவரே
கண்ணீரெல்லாம் துடைப்பார்

1. மரணத்தின் பாதையில் நடந்தாலும்
மாறாத வாக்கு எனக்குண்டு
இருள் சூழ்ந்த பாரங்கள் நெருக்கினாலும்
இமைப் பொழுதேனும் மறவாதவர்
இருக்கின்றவராக இருக்கின்றாரே
இன்றும் என் ஜெபம் கேட்பார்

2. வழி திறப்பாரவர்
ஆழியிலும் வலக்கைப் பிடித்தவர் நடத்திடுவார்
வாசல்கள் அனைத்தும் அடைத்திடினும்
வல்லவர் புது வழி திறந்திடுவார்

3. வியாதியால் சாரீம் வாடினாலும்
வல்லமை எம்மைத் தாங்கிடுதே
ஆவியின் பெயர் சொல்லி அழைத்தவரே
ஆற்றுவார் என்னை அன்பினாலே

## பாடல் - 2107

**கிருபையும் சத்தியமும் நிறைந்து**
விளங்கும் என் இயேசுவே
கிருபையாலும் சத்தியத்தாலும்
என்னையும் நிறையும் என் தெய்வமே

1. முள்முடி தலையில் தாங்கினீரே
முழுமையாய் எனக்காய் அளித்தவரே
முட்களும் முட்புதரும் என்னை நெருக்கையில்
முற்றிலும் உமக்காய் வாழுவேன்

2. ஆதியும் அந்தமும் ஆனவரே
எனக்கு ஆறுதல் தேறுதல் அளிப்பவரே
ஆபத்துக் காலத்தில் நீரே என் தஞ்சம்
அன்பரே நானும் உம் சொந்தம்

## பாடல் - 2108

**ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று**
சுவைத்து பாருங்கள்

1. ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்
அவரது புகழ் எப்போதும்
என் நாவில் ஒலிக்கும்
என் ஆன்மா ஆண்டவரில்
பெருமை கொள்ளும்
சிறுமையுற்றோர் இதை கேட்டு
அக்களிப்பார்கள்

2. அவரை நோக்குங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்
வெட்கத்தால் தலை குனிய மாட்டீர்கள்
இதோ திக்கற்றவன் கூவி அழைக்க
ஆண்டவர் அவன் குரலை கேட்டார்
எல்லாவித நெருக்கடியினின்றும்
அவரை விடுவித்தார்

3. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினி கிடக்கும்
ஆண்டவரை தேடுவோர்க்கோ
எதுவும் குறைவு படாது
ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று
சுவைத்து பாருங்கள்
அவரிடம் தஞ்சம் புகுவோர் பேறு பெற்றவர்

4. உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு
அருகிலே உள்ளார் ஆண்டவர்
மனம் நலிந்தவர்களை காக்கின்றார்
ஆண்டவரது கண்கள் நீதிமான்களை
நோக்குகின்றன
தம் ஊழியரின் ஆத்துமாக்களை
ஆண்டவர் மீட்கின்றார்

## பாடல் - 2109

**அப்பா பிதாவே ஆராதனை**
இயேசுவே இரட்சகா ஆராதனை
ஆவியே இறைவா ஆராதனை
மூவொரு இறைவா ஆராதனை

1. உயிரோடு இருப்பவரே ஆராதனை
உலகத்தின் மீட்பரே ஆராதனை
ஒப்பற்ற செல்வமே ஆராதனை
ஒப்புக் கொடுத்தவரே ஆராதனை

ஆராதனை ஆராதனை ஆராதனை ஆராதனை

2. பரிசுத்தரே உமக்கு ஆராதனை
பரலோகம் சேர்ப்பவரே ஆராதனை
நிம்மதி தருபவரே ஆராதனை
நிலைவாழ்வு தருபவரே ஆராதனை

3. குணமளிக்கும் ஆண்டவரே ஆராதனை
குறைவெல்லாம் மாற்றுவோரே ஆராதனை
கண்ணீரை துடைப்பவரே ஆராதனை
கவலைகளை தீர்ப்பவரே ஆராதனை

4. அற்பண ஜோதியே ஆராதனை
அதிசயம் செய்பவரே ஆராதனை
மனதுருகும் தெய்வமே ஆராதனை
மறுபடியும் வருபவரே ஆராதனை

## பாடல் - 2110

**உன்னத வல்லமையை இறைவா**
எனக்குத் தாரும்
பரலோக வல்லமையை இந்நேரம்
ஊற்றுமையா

1. உலர்ந்து போன எலும்புகளாய்
உலரப்பட்ட எங்களிலே
உயிர் தரும் ஆவியைத் தந்து
வீர சேனையாய் மாற்றிடுமே

2. வாக்களித்த வல்லமையை
பெந்தகோஸ்தே நாளினிலே
பொழிந்த இறைவா எங்களிலும்
நிரம்பி வழியச் செய்தருளும்

3. அடிமை விலங்குகள் தகர்ந்திடவே
அக்கினி ஆவியை ஈந்திடுமே
தடைகளும் களைகளும் எரிந்திடவே
மீட்பின் ஆவியை ஊற்றிடுமே

## பாடல் - 2111

**தூய ஆவியே துணையாய் வாருமே**
தூயவரின் பாதையில் என்னை நடத்துமே

1. காலை தோறும் தட்டி எழுப்பி
கற்றுத் தாருமே
களைப்பை மாற்றி புது பெலத்தால்
என்னை நிரப்பும்

2. தண்ணீரில் அசைவாடி
இருளை நீக்கினீர்
என்னகத்தின் இருளை மாற்றி
வெளிச்சமாக்குமே

3. பெந்தேகோஸ்தே அனுபவங்கள்
என்னில் வரணுமே
ஆதி கிறிஸ்தவ வாழ்க்கை வாழ
எழுந்து வாருமே

4. நன்மையான அனைத்திலும்
உதவி செய்யுமே
எதிர்த்து வரும் பிரச்சனையை
Solve செய்யுமே

5. தீமைகள் தீவிரங்கள்
ஒழிந்து போகணுமே
மாதானம் ஒற்றுமை
உலகில் வரணுமே

## பாடல் - 2112

**இரக்கத்தின் பிதாவே ஸ்தோத்திரம்**
மனதுருக்கத்தின் இயேசுவே ஸ்தோத்திரம்
ஆட்கொண்ட ஆவியே ஸ்தோத்திரம்
ஆயுள் முழுவதும் ஸ்தோத்திரம்

1. எத்தனை முறைகள் மறுதலித்தேன்
எத்தனை முறைகள் விலகிப் போனேன்
அத்தனை முறைகளும் தேடி வந்து
அளவில்லா கிருபையை சொரிந்தீரல்லோ

2. வலக்கை இடக்கை தெரியாமல்
மனக்கண் திறக்கவும் முடியாமல்
உலக மாயைகள் சூழ்ந்த போது
சிலுவையால் என்னை மீட்டுக்கொண்டீர்

3. எல்லாம் இழந்த நிலையினிலே
எல்லோரும் கைவிட்ட நிலைதனிலே
தீச்சூளை சிங்கக்குகை சிறை மத்தியில்
நாதா நீர் என்னை நினைவு கூர்ந்தீர்

## பாடல் - 2113

**உலகத்தின் பாவங்கள் போக்கும்**
இறைவனின் செம்மறியே
என்மேல் இரக்கமாயிரும்
உலகத்தின் பாவங்கள் போக்கும்
இறைவனின் செம்மறியே
எமக்கு சமாதானம் அருளும்

2. நான் செய்த குற்றம் ஒவ்வொன்றும்
என் கண்முன்னே நிற்குதைய்யா
ஈசோப்பினால் என்னைக் கழுவும்
தூய்மையாவேன் நான்

3. பரிசுத்த உள்ளத்தை என்னகத்தே
இன்றே உருவாக்கும்
உன் திரு முன்னில் என்னைத் தள்ளாமல்
உம்மோடு சேர்த்துக் கொள்ளும்

4. நொறுங்கிய உள்ளத்தால் வாழுகின்றேன்
நித்தம் மடிகின்றேன்
என் பலவீனத்தில்
உந்தன் பெலன் பூரணமாகட்டுமே

## பாடல் - 2114

**வாழ்வுக்கு செல்லும் வழியை இறைவா**
எனக்குக் காட்டும் ஐயா
வாழ்வும் நீயே வழியும் நீயே
வாழ்வு அளிப்பவர் நீயே

1. உம்மைப் பிரிந்து ஊதாரியாய்
உலகினில் வாழ்ந்த நாட்கள் எல்லாம்
அமைதி இழந்தேன் வாழ்விழந்தேன்
எல்லாம் இழந்து விட்டேன்
மன்னியும் தேவா மனமிரங்கும்
அப்பா என்னை ஏற்றுக் கொள்ளும்

2. திக்கற்ற பிள்ளைகளின் தந்தையும் நீரே
அனாதை மக்களின் ஆதரவே
தனிமை என்னை வாட்டுவதால்
மடிந்து போகின்றேன்
பெலப்படுத்தும் உம் ஆவியினால்
அப்பா எனக்கு வாழ்வு தாரும்

3. கர்த்தர் தாமே என் உரிமை சொத்து
எப்போதும் கண்முன்னே நிறுத்துகிறேன்
இதயம் மகிழும் உள்ளம் மகிழும்
உடலும் இளைப்பாறும்
காப்பாற்றும் தேவா பாதுகாப்பீர்
அப்பா என்னை வழி நடத்தும்

## பாடல் - 2115

**மடிந்து போகின்றேனே என்னைக் காப்பாற்றும்**
விழுந்து கிடக்கின்றேனே என்னைத் தூக்கிவிடும்

இயேசப்பா தூக்கிவிடும்
இயேசப்பா தாங்கிக் கொள்ளும்

1. சேற்றில் வீழ்ந்து நிலையிழந்தேனே
பலவீனம் மிகுந்து வாழ்விழந்தேனே
உலக இன்ப இச்சைகளால்
வாழ்வில் மடிந்து போகின்றேனே (2)

2. கடன் துயர நெருக்கங்களால்
நோய்கள் வறுமை வேதனையால்
நிழல் போல் தொடரும் சுமைகளினால்
வாழ்வில் மடிந்து போகின்றேனே (2)

3. பகைமை சுய நல வாழ்க்கையினால்
பாதை தவறிய பயணங்களால்
பரிவும் பாசமும் இழந்ததினால்
வாழ்வில் மடிந்து போகின்றேனே (2)

## பாடல் - 2116

**எங்கள் நலன்களின் ஊற்றே**
இயேசுவே நீர்தானே
எங்கள் அனைவரின் உறைவிடமே
இயேசுவே நீர்தானே

ஜீவ ஊற்று நீர்தானே
என் உறைவிடமும் நீர்தானே

1. உடைந்த உள்ளத்தில்
நலிந்த நெஞ்சத்தில் வாழ்பவர் நீர்தானே
சோர்ந்திடும் வேளையில்
கலங்கிடும் வேளையில்
ஊக்கமும் திடனும் நீர்தானே

2. அருகிலிருப்போருக்கும்
தொலைவிலுள்ளோருக்கும்
சமாதானம் நீர் தானே
அழுவோரின் உதடில் நன்றி பலி
என் பாடலும் மகிழ்ச்சியும் நீர் தானே

## பாடல் - 2117

**பச்சிலையோ மருந்துகளோ**
என் நோயை நீக்கவில்லை
ஜீவ வார்த்தைகளோ
என் நோயை நீக்கியது அல்லேலூயா...

1. பொன்னில்லை பொருளில்லை என்னிடத்தில்
என்னிடம் உள்ளது இயேசு ஒன்றே

2. எத்தனை வருடங்கள் காத்திருந்தேன்
ஒரு நொடி பொழுதினில் சுகம் தந்தீர்

3. இயேசுவின் இரத்தம் என் பாவங்களை
கல்வாரி பலியினால் மீட்டுக் கொண்டீர்

4. வானகத் தந்தை நடத நாற்றை
வேரோடு என்னிலே அகற்றிவிட்டார்

## பாடல் - 2118

**அர்ப்பண ஜோதியாம் இயேசுவே**
அர்ப்பண மாக்குகிறேன்

எந்தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும்
உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்

1. இறைவனின் திருசுதனே-உம்மை
ஆராதிக்கின்றேன்
பரிசுத்த ஜீவிதம் உமக்கே தான்
நான் இயேசுவுக்கே சொந்தம்

2. பாடுகள் சுமந்தவரே-உம்மை
ஆராதிக்கின்றேன்
பாடுகள் வழிதான் மகிமையே-என்
பாடுகள் உமக்கே சொந்தம்

3. உலகத்தின் இரட்சகரே-உம்மை
ஆராதிக்கிறேன்-நீர்
அரசுரிமையோடு வரும் போது
என்னையும் நனைவுகூரும்

## பாடல் - 2119

**விண்ணக அரசின் ஆசீரை**
கிறிஸ்துவே நம்மில் பொழிகின்றார்
தந்தையின் வலப் பக்கம் இருப்பவரே

அருட்பொழிவால் நம்மை நிரப்புகின்றார்
இறையாட்சி வருக இயேசுவின் ஆட்சி வருக

இயேசுவே நமது தலைவர்
இயேசுவே நமது மீட்பர்

1. புதிய நெறியில் ஊழியம் செய்ய
திருப்பொழிவென்னில் ஊற்றுகின்றார்
கொடைகளும் கனிகளும் அளவின்றி தந்து
திருத் தொண்டனாக மாற்றுகின்றார்

2. சோர்ந்திடும் வேளை வலிமையைத் தந்து
மகிழ்ச்சியின் ஆடையை உடத்துகின்றார்
கவலைகளை கோபங்கள் வெறுப்புகள்
பகைமைகள் அலகையின்
ஆட்சியை எரிக்கின்றார்

3. இயேசுவே நமது தலைவரும் மீட்பரும்
இறையாட்சி மலர்ந்திட மரித்துயிர்த்தார்
அன்பு, நீதி, உண்மை, அமைதி
அருள் தரும் ஆண்டை தருகின்றார்

## பாடல் - 2120

**ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி**
தேவ கரத்திலே அடங்கியிரு
அலைந்து ஓடாதே கலங்கி பதறாதே
தேவனின் பாதத்தில் அமர்ந்திரு
தேவ சமூகத்தில் ஒப்புக்கொடு

1. கவலைப்பட்டு கண்ணீர் வடித்து
மனதைக் குழப்பாதே
கலக்கம் நீக்கும்
கனிவு காட்டும் கர்த்தரை நோக்கு
அவரே உன்னைப் பார்க்கிறார்
அவரே உன்னை அறிகிறார்
அன்பு கரத்தால் அரவணைத்து
பலத்த கரத்தால் தாங்குவார்

2. பணிப் பெண் கண்கள் தலைவியின்
கரத்தை நோக்கி இருப்பது போல்
பணியாளன் கண்கள் தலைவனின்
கரத்தை நோக்கி இருப்பது போல்
தேவ சித்தம் அறிவாயே
தேவ மகிமை காண்பாயே
தேவன் செய்ய நினைப்பது எல்லாம்
தடைபடாமல் வந்து சேரும்

3. மந்திரவாதம் செய்வினைகள்
இவற்றை நம்பாதே
குறி சொல் கேட்டு
குறியும் போட்டு குறைகள் அடையாதே
யாக்கோப்பில் மந்திரவாதம் இல்லையே
இஸ்ரவேலில் குறி சொல் இல்லையே
இயேசு வழி தான் மீட்பு என்பதை
அகிலம் எல்லாம் அறியணும்

## பாடல் - 2121

**உண்மை நண்பனே என் உயிர் தோழனே**
அன்பின் சிநேகிதனே என்னை கவர்ந்தவரே

உயிரே உயிரே உயிரின் உயிரே
உறவே உறவே உறவின் உறவே

1. தனியமையில் தேற்றிடும்
தாங்கிடும் துணை நீரே
வேதனை நேரத்தில் சாய்ந்திட நீருண்டு
புகலிடம் நீரல்லோ -உயிரே

2. உள்ளம் உடைந்திடும் போது
உதவிட வருவாரே -2
சோர்ந்திடும் நேரத்தில்
காயங்கள் ஆற்றிடும்
வலக்கரம் எனக்குண்டு -உயிரே

3. உறவுகள் கைவிடும்
நேரத்தில் நீருண்டு
உலகமே வெறுத்திடும் வேளையில்
இயேசுவே மாறாத நேசரே -உயிரே

## பாடல் - 2122

**வாலிபம் கலையும் மேகமல்லவா**
வாழ்க்கையோ மறையும் வேஷமல்லவா

வருவாயா இன்று இயேசு அழைக்கிறார்
தருவாயா உன்னை அவரின் கைகளில்

1. உன்னை வெல்ல மண்ணில்
இன்று யாருமில்லையா
கண்கள் காணும் காட்சியில்
நீ காணும் இன்பமே (2)
மாயையல்லவா மாயையல்லவா
காண்பதெல்லவா மறையுமல்லவா - வாலிபம்

2. தீங்கு நாட்கள் வருவதற்கு முன்னதாகவே
மாயை என்று நீ உணர்ந்து இன்று வந்திடு
தேவையல்லவா தேவையல்லவா
இயேசு உனக்கு போதுமல்லவா - வாலிபம்

3. அர்த்தமுள்ள வாழ்க்கை நீ வாழ வேண்டுமா
இயேசுவின் பிள்ளையாய் நீ மாற வேண்டுமே
மேன்மையல்லவா மேன்மையல்லவா
வாழ்க்கை எல்லாம் மகிமையல்லவா - வாலிபம்

## பாடல் - 2123

**வேண்டாமே மனித காதலே**
பாழாக்கும் இதய போதையே

1. நல்ல நல்ல குடும்பமெல்லாம்
நரகமாய் ஆனதய்யா
கல்லறையே தஞ்சமென்று
தற்கொலையாய் மாறுதய்யா - வேண்டாமே

2. வாலிபத்தின் மோகத்திலே
வழி மாறி போனதைய்யா
துணிந்து செல்வதெல்லாம்
சரி என்று தோணுதய்யா
விழுந்த பின்னாலே மாயை என்று
புலம்புதைய்யா - வேண்டாமே

3. தியேட்டர் பீச் எல்லாம்
சுற்றி சுற்றி வந்தாலும்
சாத்தானின் வலையிலே
சிக்கிவிடும் வாழ்க்கையே
கனவுகள் பொய்யாகும்
வாழ்க்கை இருளாகும் - வேண்டாமே

4. காயப்பட்ட நெஞ்சங்களே
தஞ்சம் என்றும் வந்துவிடு
கல்வாரி நாயகனை கருத்தாய் தேடி விடு
அணைத்திடும் கரங்களிலே
கண்ணீர்கள் மறைந்து விடும் - வேண்டாமே

## பாடல் - 2124

**காதலில் விழுந்தேன் இயேசுவின் அன்பினால்**
உன்னையே மறந்தேன் நேசரின் அன்பினால்
உலகையே மறந்தேன் உன்னத அன்பினால்
தெய்வீக காதலே எல்லாம் என் இயேசுவே

1. மனமெல்லாம் மகிழுதே மன்னவன் அன்பிலே
இதயமே உருகுதே இனியவர் அன்பிலே
கவிதைகள் மலருதே
கனவிலே மிதக்குதே தெய்வீக காதலே

2. நாளெல்லாம் நினைவிலே
நிம்மதி வாழ்விலே நிலைத்திடும் மனதிலே
நாயகன் உறவிலே நித்தியம் சேர்த்திடும்
சத்தியம் போதிக்கும் பாதையில் ஜீவனே

3. அனுதினம் அன்பினால்
அகிலமும் அறியவே
ஆசையால் பேசுவேன் ஆண்டவர் இயேசுவை
அலை கடல் தாண்டியே
அத்தனை மேன்மையை
அறிந்திட வேண்டுமே

## பாடல் - 2125

**காதலனே காதலனே கருணை செய்வாய்**
உண்மை காதலை தேடி தேடி நான்
ஓடி ஓடி அலைந்தேன்
உள்ள காயமே உலகம் தந்தது
வாழ்க்கை வாடி நின்றேனே

1. ஒருவரும் என்னை தேற்றவில்லையே
தனிமையில் நான் வாடி நின்றேனே
இவ்வளவாய் அன்பு கூர்ந்தேன்
இரு கரங்களையும்
சிலுவையில் விரிந்து சொன்னார்
என் காதலனே உண்மை காதலனே
என் காதலனே இயேசு என் காதலனே

2. உண்மை காதலை கண்டுக் கொண்டேனே
இயேசுவின் அன்பில் மட்டுமே
உள்ளம் துள்ளுதே கவிதை பாடுதே
வாழ்க்கை வசந்தம் தானே
அன்பு உம் உயிரின் இலக்கணம்
அதை தேடிடும் இந்த உலகம் கண்ணும்
கண்டிடும் நேரம் வந்திடும்
கனவுகள் கவிதை பாடிடும்

## பாடல் - 2126

**சாரோனின் ரோஜா நீரே**
லீலிபுஷ்பம் நீரே
உள்ளத்தை கவர்ந்தவரே
இதய நாயகனே

1. மதுர கீதங்கள் பாடுவேன்
இனிய ராகங்கள் மீட்டுவேன்
சந்தன காற்றே சிச்சிலி மரமே
இயேசு என் காதலனே

2. உந்தன் அன்பு என்னை மூடுதே
இதயம் பூரித்து மகிழுதே
எத்தனை இன்பம் தேனிலும் மதுரம்
வாரும் என் மணவாளனே

## பாடல் - 2127

**இதைவிட பெரிய அன்பு இல்லை**
எந்த மனிதனிடத்திலும் காணவில்லை
அன்பே தூய அன்பே
அன்பே தேவ அன்பே

1. சிநேகிதனுக்காய் ஜீவனை கொடுக்கும்
அன்பிலும் பெரிய அன்பு ஒன்றுமில்லை
இயேசு எனக்காய் ஜீவன் கொடுத்தாரே
சிலுவை எனக்காய் தெரிந்து கொண்டாரே

2. உலகத்தின் அன்பு வேஷம் அணிந்திடும்
கைவிடும் வேளையில் வேதனைகள் கூடும்
உண்மை அன்பு இயேசுவிடம் உண்டே
இன்றே உணர்ந்து அறிந்திடுவாயே

3. சிலுவையில் எந்தன் பாவம் சுமந்தாரே
சரீரத்தில் எந்தன் நோயை சுமந்தாரே
குருசினில் எனக்காய் சாபம் ஆனாரே
மன்னிப்பை எனக்காய் பெற்று தந்தாரே

## பாடல் - 2128

**முத்தமிடுவாரென் இயேசுவே**
அள்ளி அணைப்பார் என் நேசரே – 2

பிரியமே மதுரமே ஆசையே என் இயேசுவே

1. தலையோ தங்கமயம்
தலை முடியோ கரு மேகம் – 2
கண்கள் புறா கண்கள்,
முற்றிலும் அழகுள்ளவர் இவரே என் நேசர்
சாரோனின் ரோஜா பள்ளத்தாக்கின் லீலி
சிறந்தவர் இவர் அல்லவோ

2. இதயத்தின் முத்திரையே
என் நேசத்தின் அக்கினியே
பாசத்தின் பெரு மழையே
பூரண அழகுள்ளவர்
ஆத்தும நேசரே
கவர்ந்திடும் வாசனையே
சன்மலை கலைமானே
பாடுவேன் உமை நானே

## பாடல் - 2129

**அந்தி சந்தி மதியம் உம்மை நான் துதிப்பேன்**
அப்பா இயேசு அப்பா

1. தானியேல் போல் மூன்று வேளையும்
தவறாமல் ஜெபிக்கனுமே
எஸ்தரை போல் உபவாசித்து
தேசத்திற்காய் ஜெபிக்கனுமே

2. பவுலை போல் சீலாவை போல்
சிறையிலே துதிக்கனுமே
கட்டுகள் உடையனுமே
அதிசயம் நடக்கனுமே

3. எலியாவைப் போல் கருத்தாக
ஜெபிக்கும் வரம் வேண்டுமே
எலிசாவை போல் இரட்டிப்பான
வரங்களைப்பெற வேண்டுமே

## பாடல் - 2130

**மகிமை கொடுத்த மன்னவனே ஸ்தோத்திரம்**
மனமகிழ்ச்சி தந்த மணாளனே ஸ்தோத்திரம்
காக்கின்ற இறைவா ஸ்தோத்திரம்
கருணை வைத்ததால் துதிக்கின்றேன் எந்நாளும்

1. நீதியின் தேவனே ஸ்தோத்திரம்
நிர்மல ராஜனே ஸ்தோத்திரம் - 2
நீதிமான்களாய் எங்களை மாற்ற
ஜீவன் கொடுத்தவரே ஸ்தோத்திரம் - 2

2. வல்லமை உள்ளவரே ஸ்தோத்திரம்
வழுவாமல் காப்பவரே ஸ்தோத்திரம்
வாதைக்கும் துன்பத்திற்கும் விலக்கி
மீட்ட அன்பான தேவனே ஸ்தோத்திரம்

3. பரலோக தேவனே ஸ்தோத்திரம்
பரிசுத்த ஆவியே ஸ்தோத்திரம்
பாவத்திற்கு எங்களை விலக்கி மீட்ட
ராஜாதி ராஜனே ஸ்தோத்திரம் அன்பே

## பாடல் - 2131

**வாஞ்சையுள்ள தேவனை நான்**
வாழ்த்தி பாடுவேன்
அவர் வலக்கரம்
தாங்கியதை சொல்லி மகிழ்வேன்
நித்தம் நம்மை வழி நடத்திடுவார்
அவர் தினமும் நம்மை காத்திடுவார்

1. பயப்படாதே நான் உன்னுடன் இருக்கிறேன்
கலங்கிடாதே உன்னை நித்தமும் காக்கிறேன்

2. செங்கடலை பிளந்தார் அற்புதம் செய்தார்
சீயோனின் தேவன் என் பக்க பலமானார்

3. பாசம் கொண்டவர் இயேசு பாவத்தை மன்னிப்பவர்
பரலோகத்தில் நம்மை கொண்டு சேர்ப்பவர்



அட்டவணை

## பாடல் - 2132

**பாடிடுவேன் பரமனையே**
பார்த்திபனாம் நம் இயேசுவே
கூடிடுவோம் அவர் சமூகமதில்
கும்பிட்டு வணங்குவோம் மகிமையிலே

1. என்னை நோக்கி கூப்பிடுங்கள்
நான் தருவேன் இளைப்பாறுதல்
உன்மேல் கண்ணை வைத்து
ஆலோசனை சொல்வேன்
என் கிருபையில் நீ பெலப்படு

2. வானமும் பூமியும் ஒழிந்திடினும்
அவர் வார்த்தைகளோ ஒன்றும் ஒழிவதில்லை
அவைகளை நீ நம்பி
நாள்தோறும் துதித்து வந்தால்
கிடைத்திடுமே உனக்கு நித்திய மீட்சி

3. பகைவர்கள் ஆயிரம் பேசட்டுமே
பயந்து போகாதே
பரமன் இயேசு துணையிருப்பாரே
எதற்கும் நீயும் கலங்காதே

## பாடல் - 2133

**எல்லோரும் இயேசுகிட்டே வாங்க**
உங்க இதயத்தை மறக்கமாம தாங்க
உங்க பணத்தை கேட்கலை
உங்க நகைய கேட்கலை
உங்க உடலை கேட்கலை
உங்க உள்ளத்தை கேட்கிறார்

1. உன்னைத் தேடி வந்தார் வாழ்வளிக்க
அவர் உன்னை மீட்டுக் கொண்டார்
சுகம் கொடுக்க
அவரை நம்பிடு கிருபைகள் பெருகும்
ஆசீர்வாதங்களோ அற்புதமாய் தங்கும்

2. வியாதியின் கொடுமையினால்
விளைவுகள் பல
சத்துருவின் சாகாசத்தால் சஞ்சலங்கள் சில
பாவத்தை மேற்கொள்ள
அண்டிடுவாய் தேவனை
அருள் உள்ளம் படைத்த அற்புத நாதனை



அட்டவணை

3. பரலோக இராஜ்ஜியம்
இயேசுவின் கையிலே
சத்தியத்தில் நடந்து கொண்டால்
சேர்த்திடுவார் உன்னையே
நீதியென்னும் வேதத்தின்படி
நிச்சயம் நடந்திடு
நம் தேவன் துணையிருப்பால்
எதிலும் ஜெயித்திடு

## பாடல் - 2134

**உன்னைத் தேடி வந்த இயேசுக்கு**
நீ நன்றி சொல்லு மகனே மகளே
நீ நன்றி சொல்லி வாழ்ந்து வந்தால்
நலம் கிடைக்கும் வாழ்விலே

1. மண்ணின் மீது பிறந்து வளர்ந்தாய்
பாவம் என்னும் சேற்றில் புரண்டாய்
உன்னை மீட்கவே பல பாடுகள் பட்டார்
உனக்காகவே அவர் ஜீவன் தந்தார்

2. உண்மையுள்ள நெஞ்சம் உடையவர்
உறுதியாய் உன்னை காப்பார்
வல்லமையில் வாக்களித்த
அவர் வசனத்தை நிறைவேற்றுவார்

3. நீதியென்னும் செய்கோலுடையவர்
நிச்சயம் நியாயம் தீர்ப்பார்
அந்த நாட்களில் நீதப்பித்துக்கொள்ள
அண்டிடுவாய் அவர் பாதத்தையே

## பாடல் - 2135

**என் மணவாளா இயேசு மகாராஜா**
எப்பொழுது உம்மை காண்பேன்
என்றைக்கு உம்மில் சேர்வேன்

1. ஏக்கம் கொண்டேன் உம்மைக் காண
தீவிரமாய் வாரும் என் மனதை தேற்றும்
எங்கள் குல தெய்வமே என் இயேசு நாதா
என் இயேசு நாதா

2. பொன் முகம் காணாமல் வாடுகிறேன் நான்
வார்த்தையாய் வெம்பி கதறுகிறேன் நான்
என் மீட்பர் வந்தாலே போதும்
உம் கிருபை என்னை என்றும் தாங்கும்

3. மகிமையின் ராஜனை மனமாற துதிப்பேன்
மன்னித்து விட்டவர்க்கு
மறு ஜென்மம் எடுப்பேன்
துதித்து ஆர்ப்பரிப்பேன்
தூயவரை போற்றுவேன்
தூயவரை போற்றுவேன்

## பாடல் - 2136

**தேடி வந்தவர் தெரிந்து கொண்டவர்**
தோளில் சுமப்பவர் தோழனாயிருப்பவர்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசப்பா ஸ்தோத்திரம்

அல்லேலூயா ஸ்தோத்திரம்
ஆண்டவர்க்கு ஸ்தோத்திரம்
என்றென்றும் ஸ்தோத்திரம்

1. நன்மை செய்பவர் நாளும் நடத்துவார்
என்னோடு இருந்து
கண்மணியாய் காப்பார்

2. பாவம் போக்குவார் பரிந்து பேசுவார்
அபிஷேகம் தந்து என்னை
பரலோகம் சேர்ப்பார்

3. பாட வைப்பவர் பலன் கொடுப்பவர்
பலவீனம் நீக்கி என்னை
பலவானாய் மாற்றுவார்

## பாடல் - 2137

**களிப்போடு பாடுவேன் நன்றி!**
கர்த்தர் இயேசுவை போற்றுவேன் நன்றி!
காலமெல்லாம் நான் பாடுவேன் நன்றி!

1. கூட வருவேன் என்றீரே நன்றி!
துணையாய் இருப்பேன் என்றீரே நன்றி!
கூப்பிடும் குரல் நீர் கேட்டதால் நன்றி!
ஆபத்து காலத்தில் காப்பதால் நன்றி!

2. காலங்கள் மாறிடும் மாறிடேன் என்றீர்
காத்து என்றென்றும் நடத்துவேன் என்றீர்
வாதைகள் விலகிடும் கைவிடேன் என்றீர்
மாறிடாத நேசத்தால் அணைத்துக் கொண்டீர் நன்றி

**பாடல் - 2138**

**களை எடுத்து போடுமைய்யா**
உம் கிருபை போதுமைய்யா
நீரேயன்றி ஒன்றுமில்லை
உம்மாலன்றி பெலனுமில்லை

1. புளித்த மாவை என்னில் விலக்குமய்யா
உம்மைப் போல் என்னை மாற்றுமைய்யா
எனக்காய் ஜீவன் தந்த என் உயிர் தேவா
ரத்தம் சிந்தி என்னை மீட்டீரே
உம் அன்பை மறப்பேனோ

2. திருடன் திருட வருவானே
கொல்லவும் அழிக்கவும் வருவானே
நீரே எந்தன் பாதுகாப்பு
உந்தன் மந்தையை காப்பீரே
நீரே கோட்டை அரண்

3. ஜீவனைப் பார்க்கிலும் உம் கிருபை
என்றென்றும் எனக்கு போதுமைய்யா
என்னை என்றும் வழி நடத்தும்
வழுவாது மகிமையில் சேர்த்துக் கொள்ளும்

**பாடல் - 2139**

**ஆயிரம் ஆயிரம் ஸ்தோத்திரமே இறைவா**
இம்மட்டும் செய்த பல நன்மைகட்காய்

1. மேற்கிற்கும் கிழக்கிற்கும் உள்ள தூரமாய்
பாவங்கள் நீக்கி விட்ட இயேசு தெய்வமே
அக்கிரமங்கள் எல்லாம் நீர் மன்னித்து விட்டீர்
நோய்களை எல்லாம் நீர் குணமாக்கினீர்

2. பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டிட்டீர்
கிருபையால் இரக்கத்தினால் முடிசூட்டினீர்
நன்மையால் என் வாயை திருப்தியாக்கினீர்
வயதை கழுகைப் போல் இளமையாக்கினீர்

3. தகப்பன் பிள்ளைகட்கு இரங்கும் வண்ணமாய்
தமக்கு பயந்தோர்க்கு இரக்கம் செய்கிறீர்
பூமிக்கும் வானுக்கும் உள்ள தூரமாய்
உமக்கு பயந்தோர்க்கு கிருபை செய்கிறீர்

## பாடல் - 2140

**ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே**
நான் சுகமாவேன் உண்மை கர்த்தாவே (2)

வார்த்தையிலே சுகமுண்டு
வார்த்தையிலே ஜீவனுண்டு (2)

1. மரித்து போன லாசருவை
உயிர்ப்பித்த வார்த்தை
மனதுருகி நோய்களை
சுகப்படுத்திய வார்த்தை
மாராவின் கசப்புகளை மாற்றிய வார்த்தை
இன்று என் வாழ்க்கையின் கண்ணீரை
மாற்ற வாராதோ – ஒரு வார்த்தை

2. அழிந்து போகும் அப்பத்தினால்
மட்டும் அல்லவே
உம் வாயின் வார்த்தை
ஒவ்வொன்றினால் பிழைத்திடுவேனே
வானம் பூமி ஒழிந்திட்டாலும் மாறா வசனங்கள்
அதை அனுப்பி என்னை குணமாக்கும்
அன்பின் தகப்பனே – ஒரு வார்த்தை

## பாடல் - 2141

**காலங்கள் உமது கரத்தில்**
என் காரியங்கள் எல்லாம் உம் சமூகத்தில்
மறைவானதொன்றுமில்லை தேவா
அநுதினமும் வழிநடத்தும் நாதா (2)

1. அழியாத பாதையில் நடத்தி எனக்கு
புரியாத வழிகளைக் காட்டி (2)
எட்டாத காரியங்களை கூறி என்னை
அதிசயமாய் வழி நடத்தும் தேவன்

2. நாட்களை எண்ணும் அறிவை தாரும்
என் வாழ்க்கையின் நோக்கம் எனக்கு கூறும்
விசுவாச ஓட்டத்தை முடித்து
ஜீவ கிரீடம் பெற கிருபை எனக்கு தாரும்

3. ஒரு நாளில் உம்மை சந்திப்பேனே
அன்று வெறும் கையில் நானும் வருவேனோ
காலத்தை பிரயோஜனம் பண்ணி
ஆத்துமாக்கள் சேர்க்க ஞானம் எனக்கு தாரும்

## பாடல் - 2142

**ஆராதனை உமக்கே**
நான் ஆராதிப்பேன் உம்மையே

1. எபிநேசர் என்று உம்மைநான் அழைப்பேனே
இம்மட்டும் உதவி செய்தீர் நன்றி சொல்கிறேன்
ஆபத்திலும் நெருக்கத்திலும் கைதூக்கினீர் 2
என் குரல் கேட்டு ஓடி வந்து உதவி செய்கிறீர் 2

நன்றி ஐயா நன்றி ஐயா
எல்ஷடாய் எல்ஷடாய்

2. இம்மானுவேல் என்று உம்மை அழைப்பேனே
என்னோடு இருக்கின்றீர்
நன்றி சொல்கின்றேன்
அக்கினியாய் மேகமாய் என்னோடு நடக்கின்றீர்
உந்தன் உள்ளங்கையில்
வரைந்து என்னை பாதுகாக்கின்றீர்

3. எல்ரோயீ என்று உம்மை நான் அழைப்பேனே
என்னை நோக்கிப் பார்த்தீரே
நன்றி சொல்கின்றேன்
தனிமையிலும் சிறுமையிலும்
கண்ணோக்கினீர்-என் அந்தரங்க
துணையானீர் நன்றி சொல்கிறேன்

## பாடல் - 2143

**உயிரில் கலந்தவரே உன்னதரே இயேசய்யா**
உயிருள்ள நாளெல்லாம்
உம்மையே ஸ்தோத்தரிப்பேன்

1. சின்ன குழந்தையைப் போல்
நான் உம்மையே சார்ந்து கொள்வேன்
அப்பாவின் மடியினில் சுகமுண்டு
ஆரோக்கியம் அடைக்கலம் எனக்கு உண்டு

2. நேச மணவாளன் உம் மார்பில்
சாய்ந்து கொள்வேன்
நேசம் எனக்குப் போதுமையா
என் வாழ்வை களிப்பாய் மாற்றுமைய்யா

3. உயர நடக்கச் செய்தீர்
என்னை உன்னதம் அமரச் செய்வீர்
நித்திய ஜீவனை வாக்களித்து
நித்தமும் போஷித்து நடத்துகிறீர்

### பாடல் - 2144

**காத்தீர் நடத்தினீர் தூக்கினீர்**
நன்றி தேவா (2) இயேசு தேவா

அப்பா உமக்கு ஸ்தோத்திரம் இயேசுவே

1. சிறுவயதினில் என்னை நீரே
தெரிந்து கொண்டீர்
சேதமின்றி யாவுமின்றி
என்னை நீரே காத்துவந்தீர்

2. உயர் ஸ்தலங்களில் என்னை
நீரே நிறுத்துகின்றீர்
குற்றங்குறைகள் யாவும் எனக்கு
நீரே மன்னிக்கின்றீர்

3. முதிர் வயதினில் என்னை
நீரே தாங்குகின்றீர்
முடிவு மட்டும் உந்தன் கிருபையை
நீர் விலக்கமாட்டீர்

### பாடல் - 2145

**எனக்காக பேசுவார் என்னோடு இருப்பவர்**
எந்தன் பாவம் போக்கினார்
எந்தன் இயேசு என் பெலனே
இயேசு இரட்சகர் இளைப்பாறுதல் தருபவர்

உண்மையான மேய்ப்பரே
எந்தன் நல்ல நம்பிக்கை

1. எந்தன் நல்ல பரிகாரி
சுகமாக்கி நடத்துவார்
நன்மை செய்து காப்பாரே
அன்பாய் என்னை சுமப்பாரே

2. இயேசு எந்தன் தலைவரே
வாழ்க்கை படகின் மாலுமி
என்னை போஷிக்கும் தேவனே
என்றும் உண்மை உள்ளவரே

## பாடல் - 2146

**மெய்யான திராட்சை செடி நீரே**
உம்மில் கொடியாக படர்ந்திடுவேன் நானே

1. உம் வார்த்தை என்னிலும்
என் வாழ்க்கை உம்மிலும்
நிலைத்திட பெலன் தாருமே
உம்மையே சார்ந்து நான்
உண்மையாய் ஜீவிக்க
உள்ளத்தில் பெலன் தாருமே

2. கிளைகள் நறுக்கி களைகள் பிடுங்கி
என்னை நீர் சுத்தம் பண்ணும்
வசனத்தால் போஷித்து ஆவியால் நிரப்பி
செழித்து வளரச் செய்யனும்

3. கனிகளை தேடி தோட்டத்து எஜமான்
வருகின்ற அந்நாளிலே
மிகுந்த பலன் கண்டு என்னிலே மகிழ்ந்து
அணைத்து முத்தம் செய்யனும்

## பாடல் - 2147

**பலத்தினாலுமல்ல பராக்கிரமல்ல**
ஆவியினாலே ஆகுமென்று சொன்னீர்
நன்றி... நன்றி நன்றி

1. குதிரையில் பலத்தில் பெருமை கொள்வார்கள்
ரதங்களை குறித்தும் மேன்மை சொல்வார்கள்
என் பெலன் நீரே கன்மலை தேவா
நம்பி வந்தேனே நடத்திடுமே

2. பலவான்களை நீர் தேடிச் செல்லவில்லை
ஞானிகளை நீர் தெரிந்து கொள்ளவில்லை
பலவீனமான பேதை என்னை நீர்
அழைத்தீரே இன்று அபிஷேகியும்

3. இயேசுவின் நாமம் என் பெலன் தானே
கோட்டையும் அரணும் துருகமும்தானே
நீதிமான் நானே மறைந்து கொள்வேனே
அடைக்கலம் நீரே ஆண்டவரே

## பாடல் - 2148

**ஜீவனுள்ள ஆவியான தேவனுக்கு ஸ்தோத்திரம்**
ஜீவன் தந்து மீட்டெடுத்த ரட்சகர்க்கு ஸ்தோத்திரம்

ஜீவனுள்ள நாளெல்லாமே
பாடிடுவேன் ஸ்தோத்திரம்

தேவா ஸ்தோத்திரம்
இயேசு தேவா ஸ்தோத்திரம்

1. தண்ணீரை கடக்கும் போது
வருவேன் என்றீரே ஸ்தோத்திரம்
கண்ணீரின் பாதையிலும்
கைவிடேனே என்றீரே
கடல் மீது நடந்தாலென்ன
கரம் தூக்கி விடுவீர் ஸ்தோத்திரம்
அலை மோதி அசைந்தாலென்ன
கப்பலில் இருப்பீர் ஸ்தோத்திரம்
எபினேசர் ஆனீர் ஸ்தோத்திரம்
இம்மானுவேலே ஸ்தோத்திரம்

2. மான்களின் கால்கள் போல
என் காலை மாற்றினீர் ஸ்தோத்திரம்
மதிலையும் தாண்டிச் செல்லும்
பலத்தையும் கொடுத்தீர் ஸ்தோத்திரம்
செங்கடல் வந்தாலென்ன
கடந்திடச் செய்தீர் ஸ்தோத்திரம்
எரிகோ மதிலாலென்ன
விழுந்திடச் செய்தீர் ஸ்தோத்திரம்

3. அக்கினி சூளையிலும்
உலாவியே காப்பீர் ஸ்தோத்திரம்
சிங்கத்தின் வாயினின்று
விலக்கியே மீட்டீர் ஸ்தோத்திரம்
வழிகளில் என்னை காக்க
தூதனை அனுப்புவீர் ஸ்தோத்திரம்
வெள்ளம் போல சத்துரு வந்தால்
கொடியேற்றி காப்பீர் ஸ்தோத்திரம்

### பாடல் - 2149

**பூரண அழகுள்ளவர்**
பார்வையில் அன்புள்ளவர்
சாரோனின் ரோஜா இவர்
யூதாவின் ராஜா இவர் (இயேசுவே 2)
என் உள்ளம் கொள்ளை கொண்டவர்
(இயேசுவே 2) உம் அன்பை என்ன சொல்லுவோம்

1. வல்லமை உள்ள மகத்துவ சத்தம்
கேதுரு மரங்களை முறித்திடும் நித்தம்
காடுகளை அது அழித்திடச் செய்யும்
மான்களையும் அது ஈந்திடப் பண்ணும்

2. பெருவெள்ளம் இரைச்சல் போல உம் சத்தம்
என்னில் நடத்திடும் தெய்வீக சித்தம்
அன்பரின் நேசரின் பரிமள தைலம்
முற்றிலும் அழகுள்ள நேசர் என் சொந்தம்

### பாடல் - 2150

**புதிய வானம் புதிய பூமி**
சந்தோஷமாயிருப்பேன்
கண்ணீர் இல்லை கவலையும் இல்லை
இயேசு என்னோடிருப்பார்
அந்த வானத்தில் பறந்திடுவேனே
அல்லேலூயா என்று ஆர்ப்பரிப்பேனே

1. சூரியன் சந்திரன் அங்கிருக்காது
தேவன் தாமே வெளிச்சமாவார்
வியாதியும் துக்கமும் அங்கிருக்காது
இலைகள் எல்லாம் ஆரோக்கியம்

2. ஓனாய் ஆடுடன் ஒன்றாய் மேயும்
தீங்கு நினைப்பார் யாருமில்லை
கர்த்தரை அறியும் அறிவால் பூமி
நிறைந்திருக்கும் பரிசுத்தம்

3. ஆட்டுக்குட்டி கல்யாண விருந்து
அழைக்கப்பட்டோர் பாக்கியவான்
நேசர் மார்பில் சாய்ந்து
அவரின் முகத்தை ரசிப்பேன் பேரின்பம்

### பாடல் - 2151

**நன்றி சொல்வேனே வார்த்தைகள் போதாதே**
நன்மை செய்த தேவா உம்மை பாடுவேனே

1. சேற்றில் இருந்து என்னை தூக்கியெடுத்தீர்
பாவங்கள் கழுவி சுத்தமாக்கினீர் (2)
பரிசுத்த வாழ்வு தந்தீர்
பரமனின் பேரும் தந்தீர்
முழு நிறைவோடு உம்மை துதிப்பேன் - நான்

2. கால்கள் சறுக்கும் முன்னே தாங்கி பிடித்தீர்
தோள்கள் தளரும் முன்னே
சேர்ந்த அணைத்தீர் (2)
வழிகளை நேராக்கி பாதைகள் விரிவாக்கி 2
வருடங்கள் தோறும் நன்மை
செய்யுவீர்-நான்-நன்றி

3. தாயின் கருவில் தெரிந்து கொண்டீர்
பேரிடும் முன்னாலே என்னை அழைத்தீர்
கண்ணின் மணி என்றீர்
கைகளில் வரைந்துள்ளீர் (2)
உம்மை பிரிந்தேது வாழ்வெனக்கு-நான்

### பாடல் - 2152

**இருக்கும் பெலத்தோடு போ என்கிறார்**
கலங்காதே துணை நான் என்றார்
யெகோவா ஷாலோம் அவர் நாமம்
வழியெல்லாம் தேவ சமாதானம்

1. கொஞ்சம் பெலன் என்று அஞ்சாதே
கிதியோனின் தேவன் முன் செல்வார் (2)
யுத்தம் செய்பவர் வல்லவர் - இருக்கும்

2. பயப்படாதே சிறுமந்தையே
யாக்கோபின் தேவன் துணை இருப்பார் (2)
அற்புதங்கள் செய்பவர்
அதிசயமாய் நடத்திடுவார் (2) – இருக்கும்

## பாடல் - 2153

**மண்ணின் சாயல் மாறுமே**
விண்ணின் சாயல் ஆகுமே
மறுரூபமாவேன் இயேசுவிலே – என்

1. பசி தாகம் எல்லாம் உலகமதில்
பஞ்சமும் துன்பமும் இல்லையங்கு (2)
வியாதியும் இல்லையே
வருத்தமும் இல்லையே
தேவனின் ராஜ்யம் இன்பத்தின் எல்லையே
என்று நான் காண்பேனோ பரலோகினை

2. சீக்கிரம் வருவேன் என்று சென்றவர்
நடுவானில் தோன்றிடும் நாள் நெருங்குதே
மணவாட்டி நானுமே ஆயத்தமாகுவேன்
நேசரைக் காணவே ஆவலும் பொங்குதே
என்று நான் காண்பேனோ என் இயேசுவை

## பாடல் - 2154

**வாரும் வாரும் தேவ ஆவியே**
வாஞ்சை தீர்க்கும் ஜீவநதியே
ஆராதனை ஆராதனை ஆராதனை ஆராதனை

1. சீனாய் மலையில் எழுந்தவர் நீரே
சீயோன் உச்சியில் இருப்பவரே (2) -வாரும்

2. முட்செடி நடுவே தோன்றினீரே
மோசே உடனே பேசினீரே (2) -வாரும்

3. பற்றி எரியும் அக்கினி நீரே
அபிஷேகமாய் என்னில் இறங்கிடுமே (2) -வாரும்

4. தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீரே
பரிசுத்தமாக்கும் மேகமே (2) -வாரும்

## பாடல் - 2155

**கன்மலை மேல் நிறுத்தி**
என் கால்களை உறுதிப்படுத்தி
கழுகைப் போல் எழும்பச் செய்து
கண்மணி போல் காக்கும் தேவன்
நீர் எந்தன் கோட்டை
நீர் எந்தன் அரணே
நீரே நான் நம்பும் தேவன்
என்று சொல்லுவேன்
அல்லேலூயா... அல்லேலூயா

1. ஆபிரகாமே ஆபிரகாமே எனக்கு கீழ்பபடிந்திருந்து
பேரைப் பெருமையாக்கி
ஜாதிகள் பெருகச் செய்து
உன்னை ஆசீர்வதிப்பேன்
என்று சொன்ன தேவன் உண்மையுள்ளவர்
வாக்கு மாறாமல் நன்மை செய்பவர்
யெகோவா யீரே எல்லாம் பார்த்துக் கொள்வார்
எனக்கு முன்பாக கடந்து செல்லுவார்

2. என் ஆத்துமா (2) மகிழ்ந்து களிகூர்ந்திடு
தேவன் உனக்காக பெரிய காரியங்கள்
செய்து முடித்து விட்டாரே
தேவன் நன்மையாலே பெருகச் செய்வார்
கையின் காரியங்கள் வாய்க்கச் செய்வார்
யெகோவா யீரே எல்லாம் பார்த்துக் கொள்வார்
எனக்கு முன்பாக கடந்து செல்லுவார்

## பாடல் - 2156

**கர்த்தாதி கர்த்தரின் நேசம் நேசம்**
நித்தமும் என்னையும் தேற்றும் தேற்றும்
காலை தோறும் கிருபைகள் தோன்றும்
அதுவே எனக்கு போதும் போதும் அது போதும்

1. பாவியாகவே நின்றேன்
இரட்சித்ததே தேவ அன்பு
பாதை மாறியே சென்றேன்
தேடி வந்ததும் அன்பு

2. சோர்வடைந்த நேரம்
சத்துவமாய் அது மாறும்
நோவடைந்த நேரம்
சுகத்தினாலே என்னை மூடும்

3. கால்கள் சருக்கிடும் வேளை
கிருபை என்னையும் தாங்கும்
கண்கள் மூடிடும் நாளில்
பரலோகம் என்னை சேர்க்கும்

## பாடல் - 2157

**ஒத்தாசை வரும் பர்வதம் நேராய்**
என் கண்களை ஏறெடுப்பேன்
வானமும் பூமியும் உண்டாக்கின
என் கர்த்தரை நோக்கிப் பார்ப்பேன்

1. கால்கண் தள்ளாட விடமாட்டார்
என்னை காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலை காத்திடும் தேவன்
உறங்கவில்லை தூங்குவதில்லை

2. கர்த்தர் உன்னை காக்கிறவர்
உன் பக்கத்தில் நிழலாய் இருக்கின்றவர்
பகலின் வெயிலும் இரவின் நிலவும்
சேதப்படுத்த முடிவதுமில்லை

3. ஆத்துமாவை காத்திடும் தேவன்
தீங்குக்கெல்லாம் விலக்கிடுவார்
போக்கையும் உன் வரத்தையும் தேவன்
இதுமுதல் என்றும் காத்திடுவார்

## பாடல் - 2158

**என்னைத் தொடும் கண்ணைத் தொடும்**
ஆலோசனை சொல்லும்
என்னைத் தொடும் நாவைத் தொடும்
அக்கினியாய் மாற்றும்

நீர் எந்தன் பக்கம் இருந்தால்
பயமே எனக்கு இல்லை
நான் முற்றும் உம்மை நம்பினதால்
அசைக்கப்படுவதில்லை

1. ஏசாயா உம்மைக் கண்டானே
அசுத்தன் நான் என்று சொன்னானே
அவனது நாவைத் தொட்டீரே
பரிசுத்தம் ஆனானே
கரை புரண்டோடும் வெள்ளம் போல
கன்மலையை உடைக்கும்
சம்மட்டியாக வார்த்தை வந்ததே

2. எரேமியாவை அழைத்தீரே
சிறுபிள்ளை நான் என்று சொன்னானே
அவனது நாவைத் தொட்டீரே
அவன் தீர்க்கன் ஆனானே
அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல
எலும்பினுள் அடைபட்ட
அக்கினியாக வார்த்தை வந்ததே

## பாடல் - 2159

**தேனாக தேனாக இனிக்குது என்பேனோ**
இயேசுவின் நாமம் என் வாழ்வை
மாற்றுது என்பேனோ

1. வானம் பூமி எங்கும் மேலான இயேசு நாமம்
வான சேனைகளும் தூதர் கூட்டங்களும்
போற்றும் நாமம் பெரிதான இயேசு நாமம்
பரலோகம் சேர்க்கும் நாமம்
நேற்றும் இன்றும் மாறா

2. பாவ சாபங்களை நீக்கி
மீட்கும் என் இயேசு நாமம்
நோய்கள் பேய்களும்
பயந்து ஓடிடும் இயேசு நாமம்
முழங்கால்கள் யாவும் முடங்கும்
நாவு யாவும் அறிக்கை பண்ணும்
நேற்றும் இன்றும் என்றும் மாறா

## பாடல் - 2160

**சொன்னது சொன்னது தான்**
இயேசப்பா சொன்னது சொன்னது தான்
இயேசப்பா சொன்னால் சொன்னது தான்
நித்தியமான தேவன் சத்தியமான வார்த்தை

1. பயப்படாதே நீ நான் உந்தன் தேவன்
எதிர்த்து நின்றால் ஓடிப் போவான் சத்துரு அவனே

2. நீ எந்தன் தாசன் மறப்பத்தில்லை நான்
விழுந்தாலும் எழுந்து ஓடு திரும்பிப் பாராதே

3. தாமதத்தாலும் நிச்சயம் செய்வார் தாவீது போல
துதித்திடு நீ மகிமைப்படுத்துவார்

## பாடல் - 2161

**நீதியின் சூரியனே என்னில் பிரகாசியும் நீரே**
இருள் அகன்றிடவே இயேசுவே என்னில் வாருமே

1. காலுக்கு தீபமும் வசனங்கள்
பாதைக்கு வெளிச்சமும் ஆனதே
ஜீவ தண்ணீருள்ள நதிகளும்
என்னில் பொங்கி செழிப்பாக்குதே

2. இயேசுவே நீர் எந்தன் நல்ல பங்கு
இயேசுவே நீர் எந்தன் நம்பிக்கை
ஞானமும் நீதியும் மீட்பும்
என் பரிசுத்தமும் இயேசுவே

## பாடல் - 2162

**எல்ரோயீ நீர் என்னை காண்கின்ற தேவன்**

1. வனாந்திரத்திலே அழுகுரல் கேட்டீரே
ஆகாரின் கண்ணீர் அதிசயம் செய்தீர்
என்னை கண்ணோக்குமய்யா

2. தேவாலயத்திலே தேவ சமூகத்திலே
மனங்கசந்தழுத அன்னாளைக் கண்டீர்
அற்புதம் செய்தீரய்யா

3. தாயின் வயிற்றில் எலும்புகள்
உருவாகு முன்னே அழைத்தீர்
ஏற்று நடத்துமய்யா



அட்டவணை

### பாடல் - 2163

**ஜெப ஆவி என்னில் ஊற்றும் தேவா**
ஜெப சிந்தை என்னில் தாரும் தேவா
உறங்காத கண்கள் வேண்டும்
உணர்வுள்ள நெஞ்சம் வேண்டும்
ஓயாத கண்ணீர் வேண்டும்
நீரே என்னை நடத்த வேண்டும்

1. அறைக்குள் கதவைப் பூட்டி
தரை மட்டும் என்னை தாழ்த்தி
இதயத்தை உம்மிடம் ஏந்தி
ஜெபிக்கின்ற வரமும் தாரும்

2. அதி காலை விழிப்பைத் தாரும்
ராக்கால தரிசனம் தாரும்
ஆத்தும பாரம் தாரும்
திறப்பினில் நிற்கவும் வேண்டும்

### பாடல் - 2164

**இம்மட்டும் எனக்கு உதவிகள் செய்த**
எபனேசா ஸ்தோத்திரம்
இனிமேலும் என்னோடு வருவீர்
மனுவேலே ஸ்தோத்திரம்

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
என்னை காக்கும் தேவன் உறங்க மாட்டார்
கண்ணுறங்காமல் கண்மணிபோல
காத்திடும் தேவன் என் துணையானார்

2. ஆபத்து நாளில் அழைத்திடும் வேளை
அருகினில் வந்து உதவிடுவார்
அழுகையின் பாதை தனிமையில் நடந்தால்
எல்ரோயீ தேவன் என் துணையாவார்
இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு

### பாடல் - 2165

**நீர் மாத்ரம் போதும் தேவ**
காலங்களும் மாறலாம்
காட்சிகளும் மாறலாம் மாறிடா நேசா

1. மார்பில் அணைத்த தாயும் என்னை
மறந்து விட கூடுமோ
தோளில் சுமந்த தந்தையும்
தள்ளி விடலாகுமோ
தாங்கி நடத்தும் தேவன்
என்னை தேற்றி அணைக்கும் இயேசு

2. உற்ற துணை என்று
கரம் பிடித்தவரும் மாறலாம்
பெற்றெடுத்த பிள்ளைகளும்
ஒதுங்கியே வாழலாம்
கண்மணி போல் காக்கும்
என்னை கைவிடாத இயேசு

3. உயிர் காக்கும் நண்பர்களும்
விலகியே போகலாம்
உடன் பிறந்த உறவும்
பிரிந்துமே செல்லலாம்
விலகிடாத இயேசு
விண்ணகம் என்னைச் சேர்த்தீர்

## பாடல் - 2166

**கானானை சேரப்போறோம் வாறீகளா**
ஐயா வாறீகளா அம்மா வாறீகளா...
பாலும் தேனும் ஓடும் நாடாம்
பரலோகம் அதுக்குப் பேராம்-2

1. செங்கடல் வழியில் வரும்
யோர்தானில் கரை புரளும்
விசுவாசம் இருந்தாலே
எளிதாக கடந்திடலாம்
எரிகோ எதிர்த்து நிற்கும்
எதிரிகளும் சூழ்ந்திடுவார்
யெகோவா நிசி இருக்க
பயம் ஏதும் தேவையில்ல

அல்லேலூயா பாடியே நாம்
ஆனந்தமாய் கடந்திடலாம்

2. வனாந்திர வழிகள் உண்டு
பயந்திட தேவையில்லை
அக்கினியாய் மேகமாய்
நம்மோடு வரும் தேவன் உண்டு
வானத்து மன்னாவால்
போஷித்திடும் தகப்பனவர்
கன்மலை பிளந்து
நம் தாகம் தீர்க்கும் தாயும் அவர்

அதிசயம் அவர் பெயராம்
ஆச்சரியம் அவர் செயலாம்

3. வானத்தில் எக்காளம்
ஊதிடும் ஓர் நாள் வருதே
மேகத்தில் தூதரோடு
இயேசு ராஜா வந்திடுவார்
நல்லதோர் போராட்டம்
போராடி ஜெயித்திடுவோம்
நித்திய ஜீவன் பெற்று
பரலோகம் சென்றிடுவோம்

அந்த நாள் நெருங்கிடுதே
ஆயத்தம் ஆகிடுவோம்

### பாடல் - 2167

**அக்கினி அபிஷேகம் தாருமே**
உந்தன் ஆவியை ஊற்றுமே
உம்மை போல மாற்றுமே
உந்தன் நாமம் சூட்டுமே

அல்லேலூயா அல்லேலூயா
வல்லமை தேவன் அல்லேலூயா
மகத்துவ ராஜன் அல்லேலூயா
இப்போ வாரும் இறங்கி வாரும்

1. மோசேயாக என்னை அழையும்
யோசுவாவாக என்னை மாற்றும்
காலேபாக எழும்பச் செய்யும்
இஸ்ரவேலாய் வழி நடத்துமே
என்னை இன்று நடத்துமே
உந்தன் ஆவியால் நிரப்புமே

2. அற்புதம் செய்ய பழக்குவித்தீரே
உந்தன் தாசன் மோசேயினையே
யுத்தம் செய்ய பழக்குவித்தீரே
உந்தன் தாசன் தாவீதினையே
என்னை இன்று பழக்குமே
உந்தன் ஆவியால் நிரப்புமே

3. செத்த மனுஷனை எழும்பச் செய்த
எலிசா எலும்பினுள் உம் அபிஷேகம்
பவுலின் உருமால் கச்சைதனிலே
சொஸ்தமாக்கும் உம் அபிஷேகம்
என்னையும் நீர் நிரப்புமே
உந்தன் ஆவியால் நடத்துமே

## பாடல் - 2168

**சின்ன சின்ன வார்த்தைகள்**
நெஞ்சில் விழும் ராகங்கள்
புத்தம் புது பாடல் கொண்டு
உம்மைத் துதிப்பேன்

இயேசுவே என் உள்ளம் கவர்ந்தவர் நீரே

1. நண்பன் போல பேசுவீர்
நேசராகி தேற்றுவீர்
தகப்பனாய் சுமக்கின்றீர்
தாயுமாய் தாலாட்டுகின்றீர்

2. தூங்கும் போது காக்கின்றீர்
நடக்கும் போது பார்க்கின்றீர்
தடுக்கும் போது தாங்குவீர்
முடிவில் என்னை சேர்த்துக் கொள்வீர்

3. ஆத்துமாவின் பெலன் நீரே
ஆண்டவர் என் துணை நீரே
அடைக்கலமே சுகம் நீரே
என் கீதங்களின் நாயகன் நீரே

## பாடல் - 2169

**கண்ணைத் திறவும் காட்சிகளைத் தாரும்**
காதைத் திறந்து உம் ரகசியங்கள் பேசும்

1. நீர் எந்தன் நேசம் நீர் எந்தன் நண்பர்
கஷ்டத்தின் மத்தியில் ஆறுதல் நீரே

துதித்திடுவேன் நான் புகழ்ந்திடுவேனே
உயர்த்திடுவேன் உம் நாமத்தினையே
என்றென்றும் உம் நாமத்தினையே

2. நீர் எந்தன் ஞானம் நீர் எந்தன் பக்கம்
இருக்கும் போது நான் அஞ்சிடமாட்டேன்

3. நீர் எந்தன் நீதி நீரே சகாயர்
விழுந்திடும் போது நீர் தூக்கிடுவீரே

பாடல் - 2170

**ஆலோசனை சொல்லும் தேவா**
அதிசயங்கள் செய்யும் ராஜா
வழி என்ன தெரியவில்லை
எது நன்மை புரியவில்லை

1. கண்களின் இச்சை என்னை
இழுத்துச் செல்லும் அழிவிற்கு
மனிதனின் ஆலோசனை
முடிந்து விடும் மரணத்தில்

2. காரிருள் சூழ்ந்ததினால்
கண்கள் மங்கிப் போனதே
பலவித யோசனையால்
தூக்கம் கலைந்து போகுதே
விடிந்திடும் நாள் எதுவோ
விடுதலை தான் வருமே

3. உன் ஆத்துமாவே நீ கலங்குவதும் ஏனோ?
உனக்குள் தியங்கி உருகுவதும் ஏனோ?
கர்த்தரை நோக்கியே தான்
காத்திருப்பேன் காத்திருப்பேன்
இரட்சிப்பின் தேவனையே
இன்னும் நான் துதிப்பேன்

பாடல் - 2171

**நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது**
நன்மை செய்தவரை துதிக்காத நாளேது
காலையும் மாலையும் கண்ணுறங்காமல்
காத்திடும் தேவனுக்கு இணையேது

1. கண்ணுக்குத் தெரியா கண்ணிகள்
நின்று காத்தீரே நன்றி
கண் எதிரே வந்த எதிரிகளை நீர்
முறியடித்தீர் நன்றி

2. ஆபத்து நாளில் அவசரமாய்
என் குரல் கேட்டு வந்தீர்
பதில் தெரியாமல் திகைத்திட்ட நாளிலும்
என்னுடன் தானிருந்தீர்

3. அக்கினி மதிலாய் சூழ்ந்தென்னைக்
காத்தீர் அதற்காயும் நன்றி
அழுகையும் வியாதியும் நேர்ந்திட்ட போது
வைத்தியனாய் வந்தீர்

**பாடல் - 2172**

**உன்னதமானவரின் மறைவில்**
இருப்பவன் பாக்கியவான்
நீர் என் அடைக்கலம் நீர் என் கோட்டை
நம்பிடும் தேவன் என்றிடுவேனே

1. இரவின் பயங்கரம் பகலின் அம்பு
எது வந்தாலும் பயப்படமாட்டேன்
ஆயிரம் பதினாயிரம் பேர் விழுந்தும்
அது என்னை அணுகாது காத்திடும் தேவன்

2. வழிகளிளெல்லாம் என்னைக் காக்க
தூதர்களுக்கு கட்டளையிடுவார்
பாதம் கல்லில் இடறாதபடிக்கு
கரங்களில் என்னை ஏந்திடச் செய்வார்

3. சிங்கத்தின் மீதும் பாம்பின் மீதும்
நடந்து பால சிங்கத்தை மதிப்பேன்
ஆபத்து நாளில் கூப்பிடும் வேளை
உதவிகள் செய்து உயர்த்திடும் தேவன்

**பாடல் - 2173**

**நித்தம் நித்தம் உந்தன் பாடல் பாட வேண்டும்**
புத்தம் புது வார்த்தை
என்னில் பெருக வேண்டும்

உம்மைப் போல யாருமில்லை
பாரிலெங்கும் காணவில்லை
பெரியவர் என்றென்றும் வல்லவர்
நல்லவர் நீர் என்றும் என்னவர்

1. நட்சத்திரங்கள் கையிலேந்தி
குத்து விளக்குகள் நடு உலாவும்
தேவனே எங்கள் இராஜாவே
மார்பருகே பொற்கச்சை கட்டி
முகமே வல்லமை சூரியனாக உள்ளவரே

2. கண்கள் அக்கினி ஜுவாலையாக
பாதம் உலைகள வெண்கலமாக
இருப்பவரே எங்கள் இராஜாவே
சத்தம் பெருவெள்ள இரைச்சல் போல
வாயில் கருக்குள்ள
பட்டயத்தோடு உள்ளவரே

3. மரித்தும் உயிர்த்தும் சதா காலமும்
உயிரோடிருந்து ஆளுகை செய்யும்
தேவனே எங்கள் இராஜாவே
மரணம் படு பாதாளம் என்று கையில்
உரிய திறவுகோல்கள் உள்ளவரே

## பாடல் - 2174

**கர்த்தர் என் ஜீவனும் பெலனுமானவர்**
யாருக்கும் அஞ்சிடேனே
கர்த்தர் என் வெளிச்சமும் ரட்சிப்புமானவர்
யாருக்கும் பயப்படேனே

1. எந்தன் பகைஞர்கள் என்னை
நெருக்குகையில் இடறி விழுந்தார்கள்
எனக்கு விரோதமாய் பாளையம்
இறங்கினாலும் இதயம் பயப்படாதே

2. தாயும் தந்தையும் என்னை தள்ளினும்
கர்த்தர் சேர்த்துக் கொள்வார்
தீங்கு நாளிலே கூடார மறைவினிலே
ஒளித்து காத்திடுவார்

3. கர்த்தரிடத்திலே ஒன்றைக் கேட்டேனே
அதையே நாடிடுவேன்
ஜீவ நாளெல்லாம் ஆலயம் தங்கியே
மகிமையை கண்டிடுவேன்

## பாடல் - 2175

**உம் சமூகம் பேரின்பமே**
உம் நினைவோ ஆனந்தமே
உம் வார்த்தைக்ள அதிமதுரமே
வந்தேன் தந்தேன் என்னையே

1. துன்ப வனாந்திர யாத்ரையாயினும்
இன்பராம் இயேசுவில் சாய்ந்து நான் நடப்பேன்
வறண்ட கானக பாதைகளெல்லாம்
வயல் வெளியாய் மாறியே போகும்

2. அலைகடல் தன்னில் அமிழ்ந்திட மாட்டேன்
அக்கினி பாதையில் அவிந்திட மாட்டேன்
அற்புதர் இயேசு என்னுடன் இருக்க
முன்சென்று எந்தன் பாதைகள் வகுக்க

3. செங்கடல் கண்டு கலங்கிட மாட்டேன்
எரிகோவின் பாதை நான்
சோர்ந்திடமாட்டேன்
மோசேயின் தேவன் என்னுடன் வருவார்
தடைகளை உடைத்து பாதைகள் தருவார்

## பாடல் - 2176

**வானங்களில் உயர்ந்தவராம்**
நம் வல்ல தேவன் இயேசுவைத் துதியுங்கள்

கைத்தாள ஓசை எழுப்பி
கர்த்தர் அவரது நாமத்தை புகழுங்கள்

1. வான தூதர் சேனைகளே
கர்த்தரை துதியுங்கள்
சூரிய சந்திர நட்சத்திரங்களே
அவரைத் துதியுங்கள்
என்றும் நம்மை ஆள்பவராம்
நம் இயேசுவைத் துதியுங்கள்



அட்டவணை

2. கல்மலையே அக்கினியே
கர்த்தரை துதியுங்கள்
உறைந்த மழையே மூடுபனியே
அவரைத் துதியுங்கள்
இயேசுவின் நாமம் என்றும் உயர்ந்தது
என்றே துதியுங்கள்

3. பூமியின் சகல ஜாதிகளே
கர்த்தரைத் துதியுங்கள்
வாலிபர் கன்னிகை பிள்ளைகளே
அவரைத் துதியுங்கள்
இயேசுவே என்றும் எங்கள் தெய்வம்
என்றே துதியுங்கள்

4. நடனத்தோடு இயேசுவின் நாமம்
போற்றிப் பாடுங்கள்
கின்னர ஓசை கீதம் எழுப்பி
கீர்த்தனம் பண்ணுங்கள்
வருக உமது ராஜ்ஜியம் என்றே
வாழ்த்திப் பாடுங்கள்

## பாடல் - 2177

**நல்ல நண்பன் இயேசு என்னுடன்**
என்றென்றும் வாழ்கிறார்
புல்லுள்ள இடங்களில்
என்னை மேய்க்கின்றார்

அமர்ந்த தண்ணீரண்டை தாகம் தீர்க்கின்றார்

1. தாய் மறந்தாலும் அவர் மறவார்
தந்தை வெறுத்தாலும் அரவணைப்பார்
கண்ணின்மணி போல் காத்துக் கொள்வார்
கடைசிவரை என்னை ஆசீர்வதிப்பார்

2. வானமும் பூமியும் ஒழிந்தே போகும்
வல்லவர் துணையோ நிலைத்து நிற்கும்
குன்றுகள் விலகி மறைந்து போகும்
அவர் கிருபை மட்டும் நிலைத்து நிற்கும்

3. எதிரிகள் கண்கள் முன் பந்தி அமைப்பார்
என் தலை உயர்த்தி அபிஷேகிப்பார்
வெள்ளம் போல் சொதனை சூழ்ந்திட்டாலும்
தோள்களில் என்னை அவர் தூக்கி சுமப்பார்

## பாடல் - 2178

**மகிமை உமது மகத்துவம் உமது**
கிருபையும் உமது புகழும் உமது
மாட்சிமை உமது வல்லமை உமது

நீர் நல்லவர் நீர் வல்லவர்
நீர் உன்னதர் நீர் உயர்ந்தவர்
துதிகள் நடுவில் வசிக்கும் தேவன்
தூயவர் தூயவர்

1. ஒளியை உடையாய் தரித்தவர்
ஒருவராய் அற்புதம் செய்பவர்
வலிமை நிறைந்த கரத்தினால்
பெரிய காரியம் செய்பவர்
நீர் பெரியவர் நீர் பரிசுத்தர்
என்றென்றும் வாழ்பவர்

2. மரண குழியில் இருந்தென்னை
மகிமை அடைய உயர்த்துவீர்
கருணை நிறைந்த கரங்களால்
தினமும் என்னை நடத்துவீர்
கனம் மகிமையை தினம் செலுத்துவேன்
கானங்கள் பாடுவேன்

3. காற்றினை ரதமாய் கொண்டவர்
காலங்களை கடந்தவர்
வானத்தில் சிங்காசனம் கொண்டு
பூமியில் பாதம் பதிப்பவர்
தூதர் பாடிடும் தூயவர் தூயவர்
என்றென்றும் வாழ்பவர்

## பாடல் - 2179

**இயேசு என்னும் நாமம் சொல்ல**
இனிமை பொங்குதே
என்னில் இனிமை பொங்குதே



அட்டவணை

1. மனதின் பாரம் துயரம் சூழ்ந்து
மருளும் நேரத்திலே
கரிய இருளை அகற்றும் தீபம்
இயேசு நாமமே இனிய இயேசு நாமமே

2. உமது நாமம் பாடும் நேரம்
எந்தன் உள்ளத்திலே
தூய்மை தோன்றி உந்தன் ரூபம்
என்னில் தோன்றுதே
தேவா என்னில் தோன்றுதே

3. கரிய சாத்தான் கூட்டம் சூழ்ந்து
மிரட்டும் நேரத்திலே
எந்தன் நாவில் தோன்றும் பட்டயம்
உமது நாமமே இயேசு
உமது நாமமே

## பாடல் - 2180

**இயேசுவின் நாமத்தினால்**
கூடிடும் சமயங்களில்
திவ்விய அவர் சமூகம்
நம் அருகினில் இருக்கிறது

கேளுங்கள் கொடுக்கப்படும்
தேடுங்கள் கண்டடைவீர்
மாறாத தேவன் மறைவாக்கு இதுவே
மாறாது எந்நாளிலும்

1. பாடுங்கள் பரவசமாய்
பரமன் இயேசு அன்பினையே
துதிக்கின்ற போது எழுகின்ற நெருப்பு
மகிமையைக் காணச்செய்யும்

2. கண்ணீர் துடைத்திடுவார்
கரங்கள் பற்றி நடத்திடுவார்
அழைக்கின்றவர்கள் குரலினைக் கேட்டு
ஆசீகள் அளித்திடுவார்

## பாடல் - 2181

**திரித்துவ தேவா ஸ்தோத்திரம்**
கிருபையால் என்னை நிறைத்தவா ஸ்தோத்திரம்

1. வாடிய பயிரென நான் நின்ற வேளை
அருள் மழையைப் பொழிந்தீர்
தேடியே என்னை மீட்டிட உமது
திரு உதிரம் சொரிந்தீர்

2. கருணையின் ஆழியின்
ஆழத்தை கொண்ட நீர்
கனிவுடன் என்னை அழைத்தீர்
பணிவுடன் உமது மலரடி தொழுது
படைக்கின்றேன் ஸ்தோத்திரம்

3. தந்தையைப் போல பாசமாய் என்னை
தோள்களில் நீர் சுமந்தீர்
உந்தனின் அன்பை நான் எண்ணி
நாளும் வந்தனைகள் புரிவேன்

## பாடல் - 2182

**வசனமே எங்கள் பட்டயம்**
இயேசு நாமமே எங்கள் அடைக்கலம்
அச்சமே இல்லையே எங்கள் உள்ளத்தில்
தோல்வியே இல்லையே எங்கள் வாழ்க்கையில்

1. சாத்தான் கூட்டம் எதிர்த்து வருகையில்
சாத்ராக் போல நிமிர்ந்து நிற்கிறோம்
எரியும் சூளை நெருப்பிலும்
எங்களுடன் உலாவிடும்
உயிர்த்தெழுந்த இயேசு இருப்பதால்

2. கொக்கரிக்கும் கோலியாத்தினை
கூலாங் கல்லை கொண்டு
மேற்கொள்ளுவோம்
இயேசு என்னும் நாமமே
எங்கள் உண்மை ஆயுதம்
தூய ஆவி எங்கள் பட்டயம்

3. கைகள் காலில் விலங்கு ஏறினும்
பவுலைப் போல துதித்துப் பாடுவோம்
அஸ்திபாரம் தகர்ந்திடும்
கர்த்தர் நமது வலப்புறம்
நிற்பதாலே எதையும் சந்திப்போம்

4. வானம் பூமி படைத்த தேவனே
எங்கள் வலப்புறத்தில் என்றும் நிற்கிறார்
சூழ நின்று காக்கிறார்
குறைகள் யாவும் போக்கினார்
என்றும் எங்கள் நிழலாய் நிற்கிறார்

## பாடல் - 2183

**போற்றியே வாழ்த்துங்கள்**
புதிய பாடல் முழங்கியே
ஆர்ப்பரித்து என்றும் பாடுங்கள்
ஆவியில் நிறைந்து நம்
ஆண்டவர் புகழ் சொல்லி அல்லேலூயா
என்று போற்றுங்கள் அல்லேலூயா - 8

1. கானங்கள் பாடியே
கர்த்தரை கொண்டாடுங்கள்
கரங்கள் தட்டி அவரைப் போற்றுங்கள்
மகிமையுள்ள தேவனாம்
மகத்துவமுள்ள ராஜனாம்
மன்னன் இயேசு நாமம் போற்றுங்கள்

2. மாறாத அன்பினாலே
நம்மை கட்டி இழுத்தவர்
மரணத்தாலே நம்மை மீட்டவர்
ஆவியை பொழிந்து நம்
பாவங்கள் ஒழித்திட்டார்
புதிய சாயலாக மாற்றினார்

3. சாத்தானின் அதிகாரத்தை
சிலுவையில் ஜெயித்தவர்
சாவை வென்று உயிர்த்தெழுந்தவர்
நித்திய வாழ்வை நாம் பெற
சத்திய பாதை காட்டியே
செட்டை கொண்டு நம்மை சுமப்பவர்

4. வானத்தை பூமியை
வார்த்தையால் படைத்தவர்
வல்ல தேவன் என்னில் வாழக்கிறார்
காலத்தை வென்றவர் ஞானமுடையவர்
கண்மணி போல் என்னை காக்கின்றார்

## பாடல் - 2184

**வழியான என் தேவனே**
துணையாக வருவார் என்றும்
பெலனானவர் என் அரணானவர்
என்றென்றும் என்னை விட்டு விலகாதவர்

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
பயம் எந்தன் வாழ்வில் இல்லை

1. கடல் தாண்டி நான்
பயணம் செய்யும் போது
மலை மீதில் என் கால்கள் நடக்கும் போதும்
துணையாக அவர் வருவார்
தூக்கி என்னை சுமப்பார்

2. நிழல்கூட என்னை பிரியும் நேரம் உண்டு
நிலையான மலை கூட விலகுவதுண்டு
அசையாது அவர் கிருபை
அழியாது அவர் மகிமை

3. கருவில் நான் உருவான நாள் முதலாய்
கருத்தாக என்னை காக்கும் கர்த்தரிவர்
இருள் என்னை சூழ்ந்த போதும்
ஒளியாகி துணையானவர்

4. முள்ளான பாதை நான் செல்லும் போதும்
கல்வாரி அனுபவம் நான் காணும் போதும்
என் இயேசு உடன் இருப்பார்
என் பாரம் அவர் சுமப்பார்

## பாடல் - 2185

**உன்னதர் நீர் உயர்ந்தவர்**
என் உள்ளத்தில் வாழ்பவர்
அன்புள்ளவர் என்னை ஆள்பவர்
ஜீவனை தந்து என்னை மீட்டவர்

1. நீர் எந்தன் உள்ளம் தன்னை பார்ப்பவர்
நீரே என் துன்பங்களை தீர்ப்பவர்
அமர்ந்த தண்ணீரண்டை
என்னை நடத்தும் ஆத்ம மேய்ப்பனானவர்

2. நீர் எந்தன் பாதைக்கு ஒளியானவர்
நீரே என் வாதைக்கு மருந்தானவர்
உம் கண்ணின் மணியைப் போல்
என்னை காப்பவர்
என் உயிரினும் உயிரானவர்

3. நீர் எந்தன் வாழ்க்கைக்கு வழியானவர்
நீரே என் ஆத்தும பெலனானவர்
ஆபத்துக் காலத்தில் என் மறைவானவர்
அடைக்கல அரணானவர்

### பாடல் - 2186

**நான் ஒரு ஆடு இயேசுவின் ஆடு**
என் பாதையில் இருள் ஏது
என்னை தடுக்கின்ற தடை ஏது
அவர் கரம் பற்றி நடப்பேன்
திரும்பிட மாட்டேன்
ஓட்டத்தில் ஜெயம் பெறுவேன்
நான் சாத்தானை முறியடிப்பேன்

1. சோதனைகள் என்னை சூழ்ந்திட்ட போதும்
தொடர்ந்தே ஜெயம் பெறுவேன்
என் பாதையில் சாத்தான் பதிவிருந்தாலும்
பயமின்றி நடந்திடுவேன்
என்னோடு இருக்கும் இயேசுவின் பெலத்தால்
எதனையும் ஜெயித்திடுவேன்

2. காட்டிலும் மேட்டிலும் பயணம் என்றாலும்
தயங்கிடாமல் நடப்பேன்
என் ஓட்டத்தில் தடைகள் இடையில் வந்தாலும்
சுலபமாய் தாண்டிடுவேன்
பெலன் தரும் தேவ ஆவியின் துணையால்
மதிலையும் தகர்த்திடுவேன்

3. காற்றுடன் புயலும் அலைகள் வந்தாலும்
பயமின்றி பயணம் செய்வேன்
சாத்தானின் சேனைகள் எதிர்த்து வந்தாலும்
மோதியே மிதித்திடுவேன்
என் இயேசுவின் பெலத்தால்
எதனையும் ஜெயித்து எக்காளம் ஊதிடுவேன்

4. அழிந்திடும் மனிதர் கைகளில் கிடக்கும்
விலங்கினை முறித்திடுவேன்
விடுதலை அடைந்த மனிதரை
தேவனின் படையில் சேர்த்திடுவேன்
தேடியே மனிதரை இயேசுவில் இணைப்பேன்
தேசத்தை சுதந்தரிப்பேன்

## பாடல் - 2187

**என்னை காண்பவரே ஸ்தோத்திரம்**
என்னைக் காப்பவரே ஸ்தோத்திரம்
பெலன் கொடுப்பவரே ஸ்தோத்திரம்
உடன் இருப்பவரே ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
துதி உமக்கே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
கனம் உமக்கே
ஆராதனை பலி உமக்கே
ஆண்டவர் இயேசுவுக்கே

1. என்னை படைத்தவரே ஸ்தோத்திரம்
என்னை வளர்ப்பவரே ஸ்தோத்திரம்
தூக்கி சுமப்பவரே ஸ்தோத்திரம்
வாக்கு அளித்தவரே ஸ்தோத்திரம்

2. சர்வ வல்லவரே ஸ்தோத்திரம்
சாவை வென்றவரே ஸ்தோத்திரம்
பாவம் போக்கினீரே ஸ்தோத்திரம்
ஜீவன் தந்தவரே ஸ்தோத்திரம்

3. எங்கள் வழி நீரே ஸ்தோத்திரம்
எங்கள் ஒளி நீரே ஸ்தோத்திரம்
சுகம் தந்தவரே ஸ்தோத்திரம்
காக்கும் அரண் நீரே ஸ்தோத்திரம்

## பாடல் - 2188

**ஓ எந்தன் உள்ளம் நீர் வந்தால்-என்**
வாழ்க்கையில் எல்லாம் நிறைந்திருப்பதால்

உம்மை துதிப்பேன்
நான் உம்மைத் துதிப்பேன் -2
இன்றும் என்றும் உம்மைப் போற்றி
பாடித் துதிப்பென்

1. கண்மணி போல காத்துக் கொள்வதால்
உம் கரங்களில் என்னை
சுமந்து செல்வதால் -2

2. பெயர் சொல்லி என்னை அழைத்திருப்பதால்
உம் கரங்களில் என்னை
வரைந்திருப்பதால் -2

3. ஆவியில் என்னை நிறைத்திருப்பதால்
ஆச்சரியமாக நடத்திச் செல்வதால் -2

## பாடல் - 2189

**என்னை கண்டார் இயேசு என்னை கண்டார்**
உள்ளங்கையில் என்னை
வரைந்து கொண்டார் -2
கண்ணுக்குள்ளே என்னை வைத்து
கடைசி வரைக்கும் காத்துக்கொள்வார்

இயேசு என் தேவன்
இயேசு என் ஜீவன்
இயேசுதான் எனக்கு எல்லாம் எல்லாம்

2. கட்டவிழ்த்தார் என்னை கட்டவிழ்த்தார்
சத்துருவை அவர் துரத்திவிட்டார் -2
சாபத்தையும் வியாதியையும்
சாவினால் வென்று ஜெயம் கொடுத்தார் -2

3. மீட்டுக்கொண்டார் என்னை மீட்டக்கொண்டார்
பாவத்திலிருந்து என்னை
மீட்டுக் கொண்டார் -2
சொந்த பிள்ளை என்று என்னை
உறுதிப்படுத்த தம் ஆவி தந்தார் -2

4. ஜெயம் தந்தார் இயேசு ஜெயம் தந்தார்
சத்துருவின் மேல் ஜெயம் தந்தார் -2
உலகத்தின் மேல் ஜெயம் எடுக்க
விசுவாசத்தின் வலிமை தந்தார் -2

### பாடல் - 2190

**நீர் எங்கள் மீட்பர் நீர் எங்கள் நேசர்**
நீர் எங்கள் மேய்ப்பர் பரிசுத்தர்
பரிசுத்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்

2. நீர் எங்கள் நம்பிக்கை
நீர் எங்கள் வல்லமை
நீர் எங்கள் மகிமை ஒப்பற்றவர்
ஒப்பற்றவர் ஒப்பற்றவர்
சேனைகளின் கர்த்தர் ஒப்பற்றவர்

3. நீர் எங்கள் அன்பர்
நீர் எங்கள் நண்பர்
நீர் எங்கள் இன்பர் அன்புள்ளவர்
அன்புள்ளவர் அன்புள்ளவர்
சேனைகளின் கர்த்தர் அன்புள்ளவர்

### பாடல் - 2191

**உம் நாம் போற்றி உம்மையே வாழ்த்தி**
என்றென்றும் ஆராதிப்போம் உம்மோடு செலவிடும்
ஒவ்வொரு நிமிடமும் வீணாக போகாதய்யா

1. எந்தன் பெலனும் நீரே துருகம் நீரே
நான் நம்பும் தெய்வம் நீரே
எந்தன் பெலனே எந்தன் துணையே
எந்தன் ஜீவனே எங்கள் நம்பிக்கையே

2. என்றும் உயர்ந்தவரே சிறந்தவரே
என்னோடு பேசும் தெய்வமே
வழுவாமல் காக்கும் தெய்வம் நீரே
உம்மைப் போல் வேறே தெய்வம் இல்லை

### பாடல் - 2192

**என் பெலனாகிய கர்த்தாவே**
உம்மில் அன்பு கூறுவேன்
என் கோட்டை என் அரனும் நீரே
நான் நம்பும் தெய்வம் நீரே
எந்தன் கன்மலை என் கேடகமே
என் பெலனும் என் சுகமும் நீரே
உம்மையே ஆராதிப்பேன்

1. என் நெருக்கத்தில் உம்மை கூப்பிட்டேன்
என் சத்தம் கேட்டு உதவினீரே
என் இருளை வெளிச்சமாக்கினீர்
என் விளக்கை எரியச் செய்தீர்

2. என் ஆபத்து நாட்களிலே
எனக்கு ஆதரவாய் வந்தவரே
என் தனிமை நேரத்திலும்
என்னோடு இருப்பவரே

## பாடல் - 2193

**ஆக்கிரமியும் என்னை முழுவதுமாய்**
ஆவியானவரே

1. என் இதயத்தை ஆக்ரமியும்
என் நினைவினை ஆக்ரமியும்
என் செயல்களை ஆக்ரமியும்
ஆவியானவரே

2. என் சரீரத்தை ஆக்ரமியும்
என் உணர்வினை ஆக்ரமியும்
என் நடக்கையை ஆக்ரமியும்
ஆவியானவரே

3. என் ஊழியத்தை ஆக்ரமியும்
என் பிரயாசத்தை ஆக்ரமியும்
என் வரங்களை ஆக்ரமியும்
ஆவியானவரே

## பாடல் - 2194

**உமக்காக காத்திருப்போம்**
உமக்காக காத்திருப்போம் 3
வருவேனென்று சொன்னவரே
சீக்கிரம் வாருமையா

1. பாவியான என்னை நேசித்தீரே
துரோகியான என்னை மன்னித்தீரே
நீர் விரும்பும் நல்ல பரிசுத்த வாழ்வு
வாழ்ந்திட அருள் தாருமே
கிருபையால் நிற்க்கச் செய்யுமே



அட்டவணை

2. இருளின் மந்தர்கள் மீட்படைய
உம்மையே எங்களுக்காய் தந்தவரே
உமக்காக நானும் வாழ்ந்திடவே
கரங்களில் என்னை அர்ப்பணிக்கின்றேன்

**பாடல் - 2195**

**தரிசனம் கண்டிடும் கண்கள்**
தடைகளை தகர்த்திடும் கைகள்
எதையும் தாங்கிடும் நெஞ்சம்
அலைந்திட சலித்திடா கால்கள்

இது ஆவியின் அபிஷேகம்
நமக்கு தந்திடும் அதிகாரம்
பின்மாரி மழையில் வாலிபர் நமக்கு
நன்மைகள் பொழிகின்றதே

1. பூலோகமெல்லாம் தேவனைக் காணும்
நாட்களும் வருகின்றதே
பாறைகளும் அன்று வாய்களை திறந்து
தேவனைத் துதித்திடுமே
வருகையைக் காண அபிஷேகத்தாலே
வாலிபர் நிரம்பிடுவார்
செயல்படும் நேரம் வந்தது என்று
போர் களம் புகுந்திடுவார்

2. எலியாவின் கால அபிஷேகத்தாலே
தேசங்கள் திகைத்திடுமே
வானங்கள் கூட வாலிபர் ஜெபத்தால்
பெருமழை சொரிந்திடுமே
வாக்குத்தத்தம் செய்த அபிஷேகத்தாலே
வாலிபர் நிரம்பிடுவார்
கர்த்தரின் வல்லமை இதுவென காட்டி
தேசத்தை சுதந்தரிப்பார்

3. உலகத்தின் கடைசி தேசங்கள் வரைக்கும்
சுவிசேஷம் பரவிடுமே
தரிசனத்தாலே மனிதரை நிரப்பும்
அபிஷேகம் பொழிந்திடுமே
கல்லும் மண்ணும் கடவுள் அல்ல
என்று அறிந்திடும் நாள் வருதே
கர்த்தரே தெய்வம் என்றே
உலகெங்கும் முழக்கங்கள் எழும்பிடுமே

## பாடல் - 2196

**கடைசி கால வாலிபன் நீ நீ நீ**
கர்த்தர் அழைக்கும் போர் வீரன் நீ நீ நீ
இயேசு என்னும் தளபதி முன்னே செல்ல
பின்பற்றி சத்துருவை ஜெயிக்கலாம் வா வா நீ

பின்மாரி ஆயுதம் நம் கையில் ஏந்தியே
முன்னேறி செல்லுவோம்
நம் இயேசு நாமத்தால்

1. கழுகின் செட்டை தோளில் ஏந்தி
வானில் பறக்கலாம்
காற்றைக் கூட வேகத்தாலே
நாமும் வெல்லலாம்
தேசமெங்கும் போகலாம்
இயேசு நாமம் சொல்லலாம்
சாட்சியாக நாமும் வாழலாம்

2. சிவிங்கி போல ஓட்டம் ஓடி
காலம் வெல்லலாம்
சிதறிப்போன மனிதர் வாழ்வை
மீட்டுக் கொள்ளலாம்
இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்
எங்கும் பரவச் செய்யலாம்
இரவும் பகலும் திறப்பில் நிற்க்கலாம்

3. அலைகள் போல சீறி எழுந்து
கரையை பிடிக்கலாம்
அலங்கம் யாவும் உடைத்தெரிந்து
தேசம் பிடிக்கலாம்
அர்மகதோன் போரிலே
சர்ப்பங்களை மதிக்கலாம்
பரலோகத்தை சுதந்தரிக்கலாம்

## பாடல் - 2197

**வாலிபர் நம்மை அபிஷேகம் தந்து**
அனுப்பிடும் தேவனை
வாழ்த்தியே பாடி வார்த்தையை ஏந்தி
புறப்படு நண்பனே



அட்டவணை

தடையொன்றும் இல்லையே
வானமே எல்லையே
தோல்வியே இல்லையே
ஜெயிப்பவர் நம்மிலே

1. உதடுகளின் பலி செலுத்தி
எரிகோவை தகர்த்திடலாம்
பாலும் தேனும் ஓடுகின்ற
வாழ்வினை பெற்றிடலாம்
கலங்கிடும் மானிடரின்
விலங்கினை ஒடித்திடலாம்
தேசத்தை சுற்றி வந்து
அதன் தேவையை சந்திக்கலாம்

2. முழங்காலை நிதம் முடக்கியே நாம்
பரமனை தரிசிக்கலாம்
வழியும் கண்ணீர் பலி செலுத்தி
அவர் துருத்தியை நிறைத்திடலாம்
திறப்பிலே நின்றிடலாம்
நம் தேசத்தை காத்திடலாம்
தீமையை வென்றிடலாம்
ஒளி தீபத்தை ஏற்றிடலாம்

3. சபைகள் நடுவே வல்லவரை
மகிழ்வுடன் துதித்திடலாம்
சாத்தானின் கோட்டை அலங்கங்களை
நம் துதியால் தகர்த்திடலாம்
அன்பின் வழி நடந்து
வரும் துன்பத்தை வென்றிடலாம்
சத்திய பாதையிலே சென்று
நித்தியம் அடைந்திடலாம்

## பாடல் - 2198

**கரம் பிடித்தென்னை வழி நடத்தும்**
கண்மணி போல காத்துக் கொள்ளும்
கரை திரையில்லா வாழ்வளித்து
பரிசுத்த பாதையில் நடத்திச் செல்லும்

1. மேய்ப்பனே உம் மந்தை ஆடு நானே
மேய்த்திடும் மேய்ப்பனின்
பின்னே செல்வேன்
புல்வெளி மேய்ச்சல் காணச் செய்து
அமர்ந்த தண்ணீரண்டை வழி நடத்தும்
உம் கோலினைக் கொண்டு
என் பாதை மாற்றும்

2. செட்டையில் உயர்த்தியே தூக்கிச் செல்லும்
கழுகினைப் போல என் பயங்கள் மாற்றும்
வானிலும் பூவிலும் நிலை நிறுத்தும்
வரங்களினாலே எனை நிரப்பும்
உம் வார்த்தையைக் கொண்டு
என் வாழ்வை மாற்றும்
ஜீவனை தந்து என் ஜீவன் மீட்டீர்

3. ஜீவிக்கும் நாளெல்லாம்
உம்மில் வாழ்வேன்
தோள்களில் என்னை சுமந்து செல்லும்
தோழரைப் போல அன்பு செய்யும்
உம் அணைத்திடும் கரம் கொண்டென்
கண்ணீர் மாற்றும்

## பாடல் - 2199

**வானிலும் பூவிலும் உம்மைப் போல்**
வேறொரு தேவனும் இல்லையே
வாழ்விலும் தாழ்விலும் எங்களை நேசிப்போர்
உம்மைப் போல் இல்லையே

உம் மகா அன்பிற்காய்
என்ன நான் செய்வதோ
ஸ்தோத்திர பலிதந்து உம்மையே
வாழ்த்தியே பாடுவேன் அல்லேலூயா
அல்லேலூயா...8

1. ரத்தமே சிந்தியே எங்களை
சுத்தமாய் மாற்றின தேவனே
சித்தமே செய்ய நான் என்னையே
தத்தமாய் படைக்கிறேன் ஏற்றிடும்

2. பாதைகள் மாறியே அலைந்த
என் வாழ்வினை மாற்றவே அழைத்தீரே
உம் உயிர்தந்து என் ஜீவனை
நித்திய ஜீவனாய் மாற்றினீர்

3. உன்னதம் ஏறியே உயர்ந்தீரே
என்னையும் உம்மைப் போல் மாற்றவே
தூதர்கள் சூழவே மீண்டுமாய்
வருவீரே என்னை நித்தியம் சேர்க்கவே

## பாடல் - 2200

**வாலிபரே கன்னியரே வாருங்கள்**
கர்த்தர் இயேசு சித்தம் செய்ய வாருங்கள்

காலம் இனி செல்லாது
காணும் இன்பம் நில்லாது
கர்த்தர் வரும் வேளை தப்பாது

1. இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்
அறிவிக்க வேணும்
இராப் பகலா கண்விழித்து
ஜெபித்திட வேணும்
இராக் காலம் வருமுன்னே
அவர் வேலை முடிக்கணும்
சத்தியத்தை உலகம் அறியனும்
அதுக்கு அவரிடம் உன்னைக் கொடுக்கனும்

2. தேசமெங்கும் நம் கால்கள்
அலைந்திட வேணும்
தேடித் தேடி மனிதர்களை மீட்டிட வேணும்
பொல்லாத சாத்தானின்
வல்லமையை ஒடுக்கனும்
நல்வாழ்வு மனிதர் அடையனும்
அதுக்கு அவரிடம் உன்னைக் கொடுக்கனும்

3. கடைசிகால அபிஷேகம் பெற்றிட வேணும்
வரங்களாலே வாழ்க்கையெல்லாம்
நிரம்பிட வேணும்
கர்த்தரே தேவன்
என்று உலகெங்கும் முழங்கனும்
சத்துருவை ஜெயித்து துரத்தனும்
அதுக்கு அவரிடம் உன்னைக் கொடுக்கனும்

## பாடல் - 2201

**எழும்பிடு எழும்பிடு வாலிபனே – உன்**
அறையைக் கட்டிக் கொண்டு எழும்பிடு
பின்மாரி அபிஷேகத்தால்
நிறைந்து நீயும் புறப்படு

1. கடைசிகால அபிஷேகம் பெற்றிட
உன்னைத் தெரிந்துகொண்டார்
பரலோக ராஜ்ஜியத்தை அறிவிக்க
உன்னை அழைக்கிறார் – இயேசு

2. கடைசி கால தரிசனம் பெற்றிட
உன்னைத் தெரிந்து கொண்டார்
அனுதினமும் அற்புதங்கள்
செய்திட அழைக்கிறார் – நீ

3. காலை தோறும் கிருபைகள் தந்திட
உன்னை எழுப்பிடுவார்
காத்திருந்து அவர் சமூகத்தை
கண்டிட அழைக்கிறார் – நீ

## பாடல் - 2202

**என் நினைவிலும் என் செயலிலும்**
நீர் நிறைந்திடும் என் இயேசுவே
உம் சாயலில் நான் வளர்ந்திட
உதவிடும் இயேசுவே

1. வாழ்விலும் தாழ்விலும் என்னுடன் நடந்திடும்
நான் தளர்ந்திடும் வேளையில்
கரம் கொண்டு தாங்கிடும்
உம் செட்டையின் மறைவின் நிழலில்
மறைத்தென்னைக் காத்திடும்

2. புல்வெளி மேய்ச்சலில் என்னை நீர் நடத்திடும்
சொல்லிலும் செயலிலும்
என்றும் நீர் நிறைந்திடும்
என் முகம் பார்ப்பவர்
அதில் உம்மைத்தான் பார்க்கணும்

3. உமக்கென வாழ்ந்திடும்
மனம் என்னில் தந்திடும்
மரிக்க நேரிணும் நான்
உமக்கென மரிக்கணும்
மரித்திடும் வேளையில்
உம் மார்பில் கண் மூடணும்

## பாடல் - 2203

**காலத்தை ஆதாயம் செய்திடு**
எதிர்காலத்தை ஆதாயம் செய்திடு
நேரத்தை உந்தன் நேரத்தை
அவர் மகிமைக்கே செலவிடு

1. கண்களில் காட்சியில் நீ நடந்தால்
துன்பங்கள் நித்தமும் சூழ்ந்து கொள்ளும்
இச்சைகள் மனதில் நிலைத்திருந்தால்
(உன்னை) நியாயத்தில் நிறுத்திடுவார்
கர்த்தரின் வருகை சமீபமே
இன்றே மனம் திரும்பு

2. உலகம் உன்னில் நிலைத்திருந்தால்
உன்னத கிருபை விலகிடுமே
இருளில் நீயும் நிலைத்திருந்தால்
(உன்னில்) வெளிச்சம் அகன்றிடுமே
கர்த்தரின் வருகை சமீபமே
இன்றே மனம் திரும்பு

3. சத்தியம் உன்னில் நிலைத்திருந்தால்
சத்துவம் நீயும் பெற்றிடுவாய்
நித்தமும் சத்துவம் பெற்றுக் கொண்டால்
(என்றும்) சத்துரு விலகிடுவான்
கர்த்தரின் வருகை சமீபமே
இன்றே மனம் திரும்பு

## பாடல் - 2204

**இயேசுராஜா வருகிறார்**
அவரை சந்திக்க ஆயத்தமா
ஆயத்தமா நீ ஆயத்தமா
வாலிபனே நீ ஆயத்தமா
கன்னிகையே நீ ஆயத்தமா

1. மேகங்கள் விலகும் மின்னல்கள் தோன்றும்
பூமி அதிர்ந்திடும் தூதர்கள் சூழ
மகிமையின் ராஜா வேகம் வருகிறார்
நீயும் பறந்திட அவருடன் இணைந்திட

2. சத்தியம் என்றும் கச்சையை
அரையில் அணிந்தே எழும்பிடு
ஆயத்தம் என்றும் பாதரட்சையை
தரித்தே புறப்படு சாத்தானை எதிர்த்திட
ஜெயித்தே பறந்திட

3. சோதனை காலத்தில் தப்பிட நீயும்
விழித்தே ஜெபித்திடு
கர்த்தரின் வருகையை எதிர்கொள்ள
நீயும் பரிசுத்தம் காத்திடு
பரிசுத்தர் சூழ்ந்திட அவருடன் பறந்திட

## பாடல் - 2205

**நீரே எந்தன் கன்மலை**
நான் உம்மை நம்புவேன்
நீரே எந்தன் மறைவிடம்
என்றும் உம்மில் தங்குவேன்

துன்பமான நேரமோ,
இன்பமான காலமோ
தோல்வியின் மத்தியில்
புகழ்ச்சியின் உச்சத்தில்
எல்லா சூழ்நிலையிலும் மாறாத தேவனே

1. மனுஷரை நம்பிடேன்
பிரபுக்களையும் நம்பிடேன்
பணம் பதவியை நம்பிடேன்
என் பெலனையும் நான் நம்பிடேன்
நான் உம்மை மறந்தாலும்
என்னை மறவா தேவனே
உம்மையே நம்புவேன்
உம்மை விசுவாசிப்பேன்
அசைக்கப்படுவதில்லை

2. எந்தன் வாழ்வில் ஒளியும் நீரே
வழியும் நீரே வழுவாமல் காப்பவரே
எந்தன் தாயும் தகப்பன் நீரே
எந்தன் நண்பன் நீரே எல்லாமுமானவரே

## பாடல் - 2206

**என் ஜீவன் நீர்தானே**
என் துதியும் நீர்தானே
எனக்காய் மரித்தீரே
உமக்காய் வாழ்வேனே

உம்மை நேசிக்கிறேன்

1. என் பாவங்கள் பாராமல்
உம் முகத்தை மறைத்தீரே
என் மீறுதல் எண்ணாமல் கிருபை அளித்தீரே
மன்னியும் என்றேனேமறந்தேன் என்றீரே

2. நான் கலங்கின நேரங்களில்
என் துணையாய் நின்றீரே
உலகம் கைவிட்டாலும்
நீர் என்னை அணைத்தீரே
ஜெபத்தை கேட்டீரே
கண்ணீர் துடைத்தீரே

## பாடல் - 2207

**தாங்கிடுங்க ஐயா**
நான் விழும் போது ஐயா
வலிக்கும் போது ஐயா
என்னை அணைச்சுக்குங்க ஐயா

ஒரே நாளில் பூத்து நான் உதிரும் பூ ஐயா
காற்று ஒன்று அடித்தால் நான்
தொலைந்து போவேன் ஐயா

1. கூப்பிடும் போது என் குரல் கேட்டு
கலங்கும் போது என் கண்ணீர் துடைத்து
நெருக்கத்தில் தஞ்சம் நீரே ஐயா
ஒதுக்கப்பட்டேன் சேர்த்துக்கொண்டீர் ஐயா
தேடி வந்து மீட்டீரே எந்தன் நல்ல மேய்ப்பரே

2. வெறுமையான என்னை உரிமையாக்கி
பாவி என்னை நீர் பயன்படுத்தி
இழந்த வாழ்வை மீட்டு தந்தீர் ஐயா
அளவில்லா கிருபை பொழிந்தீர் ஐயா
எந்தன் மாறா நேசரே தயை புரியும் தாசரே

## பாடல் - 2208

**வனாந்திரத்தில் திரிந்த என்னை**
மீட்டீரே நீர் உமக்கு நன்றி
சேற்றினிலே விழுந்த என்னை
தூக்கினீரே உமக்கு நன்றி
அக்கினியில் நான் விழுந்தாலும்
பெருவெள்ளம் என்னை சூழ்ந்தாலும்
மலைகள் விலகிப் போனாலும்
பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும்

உம் வல்லமை என்னை காத்ததற்கு நன்றி
உம் அன்பு என்னை மீட்டதற்கு நன்றி

1. பாவத்தை வெறுப்பவர் நீரே
பாவிகளை நேசிப்பவரும் நீரே
பட்சிக்கும் அக்கினி நீரே
கிருபையின் உருவமும் நீரே
என் குறைவை நிறைவாக்கினீர் நன்றி
பெலவீனத்தில் என் பெலனானீர் நன்றி

2. ஆதியும் அந்தமும் நீரே
சர்வ வல்லவரும் நீரே
சாரோனின் ரோஜா நீரே
பயம் பூரண அழகுள்ளவர் நீரே
இவ்வனைத்தையும் எனக்காக இழந்தீர்
சிலுவையில் உம் உதிரம் சிந்தி மரித்தீர்

## பாடல் - 2209

**என் இயேசு என் பக்கத்தில்**
நேசர் என் பக்கத்தில்
நாளையைக் குறித்து கவலை இல்லை
எதைக்குறித்த பயமும் இல்லை

1. என்னோடிருப்பேன்
என்று சொன்ன தேவன் அவர்
என்னை கைவிடாமல் இம்மட்டும்
காக்கும் தேவன் அவர்
இம்மானுவேல் என் பக்கத்தில்
எபிநேசர் என் பக்கத்தில்
தனிமை என் வாழ்வில் இல்லை
குறை ஒன்றும் வாழ்வில் இல்லை – 2

2. என்னை அழைத்த தேவன் என்றும்
உண்மை உள்ளவர்
வாக்குத்தத்தம் செய்ததை
நிறைவேற்றும் தேவன் அவர் – 2
உன்னதர் என் பக்கத்தில்
உத்தமர் என் பக்கத்தில்
தோல்வி எனக்கு இல்லையே
தன் ஏமாற்றம் என்றும் இல்லையே – 2

3. அவர் தழும்புகளாலே என்னை
குணமாக்குகின்றவர்
என் கால்களை அவர் கரங்களினால்
தாங்கும் தேவன் அவர்
எல்ஷடாய் என் பக்கத்தில்
எல்ரோயீ என் பக்கத்தில்
கண்கள் கலங்குவதில்லை
என் இதயம் கலங்குவதில்லை – 2

## பாடல் - 2210

**கூடும் எல்லாம் கூடும்**
என் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை
கூடும் எல்லாம் கூடும்
அவர் வார்த்தையால் கூடாதது ஒன்றுமில்லை
அவர் வார்த்தை என்றும் வெறுமையாக திரும்புவது இல்லை
இயலாதது என்பது அவர் அகராதியில் இல்லை

1. அவர் வார்தையினாலே உலகம் உண்டானது
அவர் வார்த்தையினாலே வெளிச்சம் உண்டானது
அவர் வார்த்தையினாலே குருடன் கண் திறந்தது
அவர் வார்த்தையினாலே செவிடர் காது கேட்டது

அவர் வார்த்தை ஒன்று போதும்
உன் நிலமையை மாற்ற
அவர் வார்த்தை ஒன்று போதும்
உன் துக்கத்தை போக்க கூடும்

2. அவர் வார்த்தையினாலே பாவத்தை மேற்கொள்வேன்
அவர் வார்த்தையினாலே சத்துருவை வெல்வேன்
அவர் வார்த்தையினாலே தோல்விகளை முறிப்பேன்
அவர் வார்த்தையினாலே வாழ்க்கையிலே ஜெயிப்பேன்
அவர் வார்த்தை ஒன்று போதும் என்னை விடுதலையாக்க
அவர் வார்த்தை ஒன்று போதும் என்னை பரலோகம் சேர்க்க – கூடும்

3. கடனா அதை அடைக்க கூடும்
கடினம் அதை முறிக்கக்கூடும்
வியாதிக்கு சுகம் அளிக்கக்கூடும்
கூடாதது ஒன்றுமில்லை சோர்வை தேற்றக்கூடும்
கண்ணீரை மாற்றக் கூடும்
பிரிவை சேர்க்கக் கூடும்

## பாடல் - 2211

**நன்றி ராஜனே நன்றி இயேசுவே**
நன்றி தேவனே நன்றி தகப்பனே

எல்லா நிலைமையிலும்
நன்றி சொல்லுவேன்
எந்நாட்களிலும் நன்றி சொல்லுவேன்
தேவன் கொடுத்தாலும் நன்றி சொல்லுவேன்
கொடுத்ததை எடுத்தாலும் நன்றி சொல்லுவேன்

1. அற்பமும் குப்பையுமான என்னை
நினைத்தீரே நன்றி ராஜா
பாவத்தில் மூழ்கிய பாவி என்னை
நேசித்தீரே நன்றி ராஜா
நானே என்னை விரும்பவில்லையே
ஆனால் என்னை விரும்பும் தேவனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
பாசம் நேசம் பொழியும் தேவா
பிள்ளை என்றீரே என்னை அணைத்துக் கொண்டீரே

2. மலை போன்ற சூழ்நிலைகளை
மண்ணோடு மண்ணாக்கினீர்
என்னை எதிர்த்து வந்த சத்துருக்களை
வேரோடு அழித்துவிட்டீர்
எனக்காக என்றும் யுத்தம் செய்கிறீர்
நித்தம் நித்தம் காத்து வருகிறீர்
பயமும் துக்கமும் என் வாழ்வில் இல்லை
என்னை காப்பவர் நீர் உறங்குவதில்லை

## பாடல் - 2212

**கலங்காதே நான் உன் தேவன் என்றீரே**
எதிரிகளை முறித்து வெற்றி சிறந்தீரே
கூப்பிடும் போது வருவேன் என்றீரே
நான் கூப்பிடும் முன்பாகவே
என்னோடிருந்தீரே
இயேசுவை நேசிக்கிறேன் – 5
இயேசுவை ஆராதிக்கிறேன்

1. நானே நான் என்றும் நீரே நீர்
உலக துவக்கத்திலும் நீரே நீர்
கடைசி பரியந்தமும் நீரே நீர்
என்னை நேசிக்கின்ற தேவனும் நீரே நீர்

2. வல்லவரே நல்லவரே
மாட்சிமை மிகுந்தவரே
மகிமை நிறைந்தவரே
துதிகளின் பாத்திரரே
உயிரே இயேசுவே உயிரே ராஜனே
என் உயிரின் உயிரானவரே

3. என்னை கரம் பிடித்த
என் இயேசு பக்கத்தில்
நான் எதைக் குறித்தும் அஞ்சேன்
என்னை வழி நடத்தும்
அவர் சமூகம் என்னோடு
நான் எதைக்குறித்தும் கலங்கேன்
துதிப்பேன் துதிப்பேன் அவரைத் துதிப்பேன்

4. இறுதி மூச்சு வரை துதிப்பேன்
அந்த மூச்சு நின்றாலும் என் துதி நிற்காது
பரலோகம் சென்று நான் துதிப்பேன்
ராப்பகல் காலம் நான் துதித்திடுவேன்
தேவ தேவனை நான் துதித்திடுவேன்
காலை மாலை வேளையிலும் நான் துதித்திடுவேன்
என் அப்பாவை நான் துதித்திடுவேன்

## பாடல் - 2213

**உயர்த்திடவே உயர்த்திடுவேன்**
உயர்த்திடவே உம்மை உயர்த்திடுவேன்
மாறாதவர் நீர் மாற்றாதவர்
உத்தமர் உம்மை உயர்த்திடுவேன்
வாக்குத்தத்தம் பண்ணினவர்
நீர் வாக்கு மாறா உண்மை தேவன்

கரங்கள் தட்டி நடனம் ஆடி
உந்தன் நாமத்தை உயர்த்திடுவேன்
எந்நாளும் எப்போதும்
ராஜராஜனை இயேசு ராஜனை



அட்டவணை

1. உம்மை உயர்த்திப் பாடும் போது
புது நம்பிக்கை பிறந்திடுதே
இனி பயமுமில்லை துக்கமில்லை
கலக்கமில்லை அழுகையில்லை
வாழ்வினில் சந்தோஷம் இயேசுவே
எக்காளம் முழங்கிட தம்புரு தொனித்திட
கின்னரம் ஒலித்திட
நான் உம்மை துதித்திடுவேன்

2. உம்மை உயர்த்திப் பாடும் போது
புது வல்லமை பிறந்திடுதே
எனக்கெதிரான ஆயுதம்
எதுவாக இருந்தாலும்
வாய்க்காமல் அழிந்திடுமே இயேசுவே
புயல் காற்று அடித்தாலும்
இருள் என்னை சூழ்ந்தாலும்
யார் என்னை தடுத்தாலும்
துதிப்பேனே ஜெயிப்பேனே

## பாடல் - 2214

**இயேசுவே இறங்குமே**
இயேசுவே என்னை நிரப்புமே

1. இல்லாதவைகளை உருவாக்குவீர்
பூட்டினவைகளை திறந்திடுவீர்
தடைகள் எல்லாம் தகர்த்திடுவீர்
நீர் முடியாத காரியம் முடித்திடுவீர்
உம்மால் ஆகும் எல்லாம் ஆகும்
உந்தன் ஆவியாலே எல்லாமே ஆகும்

2. எந்தன் பெலத்தாலும் முடியாதய்யா
பராக்ரமத்தினால் முடியாதய்யா
எந்தன் நினைவோ வீணானது
உந்தன் நினைவோ மேலானது
வாதங்களை தவிர்க்கவே
சாத்தான் கோட்டையை தகர்க்கவே
இயேசுவே கட்டுகளை முறிக்கவே
இரும்பு சங்கிலி அறுக்கவே

இயேசுவே இறங்குமே
இயேசுவே என்னை நிரப்புமே
என்னை மாற்ற உருவாக்க
விடுவிக்க பெலப்படுத்த இறங்குமய்யா 2
அக்கினி போல இறங்குமய்யா இறங்குமய்யா (2)
அனல் மூட்டிட இன்று இறங்குமய்யா

## பாடல் - 2215

**என்னை மீட்க உம்மை தந்தீரே**
பாவம் கழுவ காயப்பட்டீரே
பாரம் எல்லாம் சுமந்தீரே
சிங்காசனத்தை இழந்தீரே

என் நேசரே என் நேசரே நேசிக்கிறேன் நன்றி ஐயா

1. பாவி என்னை நேசித்தீரே
துரோகம் செய்த போதும்
என்னை நினைத்தீரே
உம் காயப்பட்ட கரத்தாலே
உம் மார்போடு என்னை அணைத்தீரே

2. திக்கற்று நான் திரிந்தேனே
தேற்றும் தந்தை தாயாக நீர் வந்தீரே
அரவணைக்கவும் ஆதரிக்கவும்
என் இயேசு என்னோடிருந்தீரே

## பாடல் - 2216

**மா பாவி நான் மா பாவி நான்**
மா பெரும் துரோகி பாவத்தில் மூழ்கி
உம் பிரசன்னத்தை இழந்தேன்
சகதியில் விழுந்தேன் ஏற்றுக் கொள்ளுவீரா

1. இருள் சூழ்ந்த நிலைமையில் வாழ்கின்றேனே
பரிசுத்த ஸ்தலத்திற்குள் அழைத்திடுமே
அழுகின நிலைமையில் வாழ்கின்றேனே
உயிர்ப்பிக்கும் கரங்களை நீட்டிடுமே

உம் மன்னிப்பு மாறாது
உம் அன்போ குறையாதது
உம்கிருபை அளவில்லாதது
உம் தயவோ பெரியது ஏற்றுக்கொள்வீரா

2. உம்மை மறந்தேனே நான்
வாழ்வை இழந்தேனே நான்
மறுவாழ்வு தந்தென்னை அணைத்திடுமே
நான் ஏமாற்றி ஏமாந்து பின்மாறினேன்
உத்தமனாய் என்னை மாற்றிடுமே

3. உம் இரத்தம் கொண்டு மீட்டீரே
உம் ஆவியால் நிறைத்தீரே
உம் பிள்ளை என்று அழைத்தீரே
உம் மார்போடென்னை அணைத்தீரே
உம்மோடு சேரவே உம்மோடு வாழவே
ஏற்றுக் கொண்டீரே

## பாடல் - 2217

**நீர் போதும் நீர் போதும் உம் அன்பு விநோதம்**
நீர் போதும் நீர் போதும் உம் அன்பு எப்போதும்
எக்காலமும் எந்நேரமும் மாறாத அன்பு
எந்நிலையிலும் சூழ்நிலையிலும்
குறையாத அன்பு

1. மாறாது மாறவில்லை அன்பு உமது
உம் அன்பே போதும்
என் மாறாத நேசரின் அன்பு உமது
உம் அன்பே போதும்
வேண்டாம் வேண்டாம் இந்த உலகம் வேண்டாம்
உம் அன்பே போதும்
ஏமாற்றிடும் எந்த மனுஷரும் வேண்டாம்
உம் அன்பே போதும்

2. என் நெருக்கத்தில்
துணை நின்ற நேசர் நீரே
உம்மை நம்பி வந்தேன்
என் கண்ணீரை துடைக்கின்ற தகப்பன் நீரே
உம்மை நம்பி வந்தேன்
என் துணையாளரே என் மணவாளரே
உம்மை நம்பி வந்தேன்
எந்தன் வாழ்வில் எனக்கு எல்லாம் நீரே
உம்மை நம்பி வந்தேன்

3. உம்மை நம்பி வந்தேன் இயேசுவே
உம்பாதம் ஒன்றே போதுமே
உம்மை நம்பி வந்தேன் இயேசுவே
இதில் மாற்றம் என்றும் இல்லையே

## பாடல் - 2218

**என் நேசர் இயேசுவே (என் நேசமே)**
உந்தன் முகம் நான் தேடுகிறேன்
உந்தன் அன்பால் இழுத்துக் கொள்ளும்
உந்தன் அன்பு ஒன்று போதுமய்யா
என் உறவே என் உயிரே என் இயேசு ராஜாவே

1. என் ஆத்ம நேசரே
உந்தன் நேசம் நான் நாடுகிறேன்
நீர் வெள்ளைப் போளச் செண்டு
லீலி புஸ்பமும் நீர்தானய்யா-என் உறவே

2. என் இன்ப இயேசுவே
உம் பிரியம் நான் தானய்யா
நீர் தேனிலும் மதுரமே
உந்தன் முத்தங்கள் போதுமய்யா
என் இன்பமே என் இயேசு ராஜாவே

3. இருந்தவரே இருப்பவரே
இனி மேலும் எனக்காய் வருபவரே
என் உறவே என் உயிரே என் இயேசு ராஜாவே

## பாடல் - 2219

**ஆராதனை துதி உமக்கே**
எந்நாளும் என் இயேசுவுக்கே
எல்லா மாட்சிமையும் வல்லமையும்
எந்நாளும் என் ராஜனுக்கே

நீரே ராஜா எங்கள் ராஜா
நீரே ராஜா ராஜாதி ராஜா
ஆராதனை உமக்கே
எந்நாளும் என் ராஜனுக்கே
இந்த ஆராதனை உமக்கே
நான் எந்நாளும் என் இயேசுவுக்கே

1. என்னை தீங்கிலிருந்து
பாதுகாத்துக் கொண்டீர்

2. கண்ணின் மணியைப் போல
மூடி மறைத்துக் கொண்டீர்

3. தகப்பன் தாயைப் போல
உம் தோளில் சுமந்து கொண்டீர்

4. எனக்காய் யாவும் இன்று
செய்யும் தெய்வம் நீரே

## பாடல் - 2220

**ஆவியானவரே ஆளுகை செய்யுமய்யா**
இன்றும் செய்யுமய்யா என்றும் செய்யுமய்யா
ஆளுகை செய்யும் என்னை அனல் மட்டும்

உந்தன் வல்லமை தாரும்
என்னை பெலப்படுத்தும்

1. தேற்றரவாளரே துணையாளரே
தாங்கிக் கொள்பவரே தோள் மேல் சுமப்பவரே

2. அற்புதமானவரே அதிசயமானவரே
அடைக்கலமானவரே ஆறுதலானவரே

3. வல்லமையானவரே விடுதலை
வரங்களில் மன்னவரே வாழவைப்பவரே

4. பரிசுத்தமானவரே பரிகாரியே
பாசமுள்ளவரே பரவசமானவரே

## பாடல் - 2221

**உம் பாதம் வந்தேனே**
உம் முகம் பார்க்க வந்தேனே
உம்மிடம் பேச வந்தேனே
உம் குரல் கேட்க வந்தேனே

1. உம் முகம் பார்த்து நான் தேடி வந்தேன்
உம் குரல் கேட்டு நான் ஓடி வந்தேன்
இயேசு ராஜா என்னை சேர்த்துக் கொண்டீர்
இயேசு ராஜா என்னை அணைத்துக் கொண்டீர்
சிலுவையே என் தஞ்சம்
சிலுவையே உறைவிடம்

2. உம் அன்பை பார்த்து நான்
சாய்ந்து கொண்டேன்
உம் நேசம் கிடைக்க நான் என்ன செய்வேன்
இயேசு ராஜா என்னை தாங்கிக் கொண்டீர்
இயேசு ராஜா என்னை ஏந்திக் கொண்டீர்
சிலுவையே என் பெலன்
சிலுவையே என் ஜீவன்

## பாடல் - 2222

**என்றும் அழியாதது பொய் சொல்லாதது**
நேற்றும் இன்றும் என்றும் மாறாது
உம் வார்த்தை என்றென்றும் அழியாதது

1. தேவன் சொன்ன வார்த்தை
அது என்றும் மாறாது
என் இயேசு சொன்ன வார்த்தை
அது என்றும் மாறாது

2. வானம் அழிந்து போகும்
உம் வார்த்தை அழியாது

3. பூமி ஒழிந்து போகும்
உம் வார்த்தை ஒழியாது

4. மலைகள் விலகினாலும்
உம் வார்த்தை விலகாது

5. இந்த உலக அன்பு மாறும்
உம் அன்பு மாறாது

## பாடல் - 2223

**அற்புதர் அற்புதரே என் இயேசு அற்புதரோ**
அவர் சொல்ல ஆகுமே அவராலே கூடுமே

அவரைப் போற்று புகழ்ந்து பாடு
நன்றி சொல்லு நன்றாய் பாடு

1. கானாவூர் கல்யாணத்தில்
இயேசு தண்ணீரை ரசமாக்கினார்
தவித்திடும் உன் வாழ்க்கையில்
இயேசு விடுதலை தந்திடுவார்

2. மரித்த வாலிபனை
தம் வார்த்தையின் வல்லமையால்
உயிரோடு எழுப்பினாரே
இயேசு உலகோரின் கண்கள் முன்னால்

3. பாவியாய் இருந்த என்னை
பரிசுத்தமாக்கினீரே
தோல்வியில் இருந்த என்னை
ஜெயம் பெறச் செய்தீரய்யா

### பாடல் - 2224

**உம்மை ஆராதிப்பேன்**
வாழ்த்திடுவேன் வணங்கிடுவேன்
உம்மை போற்றிடுவேன்

ஆ...ஹா ...... அல்லேலூயா பாடுவேன் ஓசன்னா

1. காண்கின்ற தேவன் காப்பாற்றும் தெய்வம்
எல்ரோயீ நீர்தானய்யா
நடத்திடும் தேவன்நான் நம்பும் தெய்வம்
எபினேசர் நீர் தானய்யா

2. வல்லமை தேவன் மாட்சிமை தெய்வம்
எல்ஷடாய் நீர்தானய்யா
வெற்றியின் தேவன் ஜெயத்தின் தெய்வம்
யெகோவாநிசி நீரய்யா

3. அதிசய தேவன் அற்புத தெய்வம்
பிரமிக்கத்தக்கவரே
கைவிடா தேவன் கருணையின் தெய்வம்
எல்லாமே நீர் தானய்யா

### பாடல் - 2225

**உயிரே உயிரே என் உயிரே**
என் உயிரோடு கலந்தவரே
உறவே உறவே என் இயேசுவே
என் உறவாய் இருப்பவரே

1. பாவியாம் என்னை தேடி வந்தீர்
மன்னித்து என்னை வாழ வைத்தீர்

2. கூப்பிடும் போது குரல் கேட்டீர்
ஆறுதல் தந்து அணைத்துக் கொண்டீர்

3. கலங்கினபோது என் கண்ணீர் துடைத்தீர்
கதறின போது என் அருகில் வந்தீர்

4. சோர்ந்திடும் போதுபெலன் கொடுத்தீர்
நோக்கிடும் போது பதிலளித்தீர்

## பாடல் - 2226

**எனக்காக நீர் எல்லாவற்றையும்**
செய்து முடிப்பீர்

நன்றி ராஜா நன்றி ராஜா நன்றி இயேசய்யா

1. நீர் ஒரு போதும் மறந்ததில்லை
மறந்து போவதில்லை
உம் உள்ளங்கையில் என்னை
வரைந்து தாங்கிக் கொள்கிறீர்

2. நீர் ஒரு போதும் கைவிட்டதில்லை
என்றும் விலகவில்லை
உம் கண்ணின் மணிபோல்
என்னை என்றுமே காத்துக் கொள்கிறீர்

3. நீர் ஒரு போதும் வெறுத்ததில்லை
என்னை வெறுக்கவில்லை
தாயைப் போல் அணைக்கின்றீர்
தந்தை போல் நடத்துகிறீர்

## பாடல் - 2227

**ஒப்பில்லாத இன்பம் எங்கள் அப்பா மடியிலே**
தப்பாமலே தருவார் எங்கள் ஆவியானவரே
எப்போதும் அவர் பாதம் அமர்ந்திருந்தாலே
அப்பா இயேசு அபிஷேகத்தால் நிரப்பிடுவாரு

1. ஓசையுள்ள கைத்தாளம் கொட்டிப் பாடிடு
ஆசையோடு அன்பரோட பாதம் சேர்ந்திடு
பாசம் உள்ளவரு வசதி நிறைந்தவரு
வானம் பூமி கடல் மலை
எல்லாவற்றுக்கும் சொந்தக்காரரு

2. எகிப்து தேச கசப்பு தண்ணீர் மாற்றிடுவாரு
ருசித்துப் பார்க்க ஜீவ தண்ணீர் தந்திடுவாரு
சொன்னா செய்திடுவாரு
மன்னா பெய்திடுவாரு
பாலும் தேனும் ஓடும்
பரம கானானுக்குள் நடத்துவாரு

3. நம்பாமலே நின்று விட்ட தோமாவாகாதே
நிற்க்காமலே ஓடிப் போன யோனாவாகாதே
பாதத்திலே மரியப் பாரு
பாடுபட்ட பவுலைப் பாரு
பாரிலே பரமனோடே
ஊழியத்தை செய்யப் பாரு

4. கர்த்தர் மேலே நம்பிக்கை
நீ வைத்துப் பாரும்மா
நம்பிக்கையும் வைத்த நீயும்
பாக்கியசாலிம்மா
வறட்சி வராதம்மா தாழ்ச்சி தங்காதம்மா
வானம் பூமி படைத்தவரு
வலக்கரத்தை பிடிக்கிறாரு

## பாடல் - 2228

**எத்தனை நன்மை எனக்குச் செய்தீர் நல்லவரே**
எப்படிப்பா உமக்கு நான் நன்றி சொல்வேன்
நன்றி நன்றி கோடி நன்றி

1. தடுமாறிப் போன நிலையில்
தாங்கினீர் ஐயா
தகப்பனைப்போல் பரிவு காட்டி
தூக்கினீர் ஐயா

2. ஆதி அன்பு எனக்குள்ளே
குறைந்த போனதே
ஆனாலும் எண்ணாது
நன்மை செய்திரே

3. மங்கி மங்கி எரிந்த போதும்
அணைக்காதிருந்தீர்
நெறிந்து போன நாணல் வாழ்வை
முறிக்காதிருந்தீர்

## பாடல் - 2229

**இயேசு ராஜா பெயரைச் சொன்னா**
சாத்தான் கூட்டம் நடு நடுங்கும்

1. பாவம் போக்க பாரினில் வந்தார்
உன்னை மீட்க சிலுவையில் மரித்தார்
மரித்த இயேசு உயிர்த்தெழுந்தார்
உயிர்த்த இயேசு மீண்டும் வருவார்
அவரே வழி சத்தியமுமானவர்

2. இயேசு நாமம் ரட்சிப்பின் நாமம்
கண்ணீர் கவலை துடைத்திடும் நாமம்
வானத்தின் கீழே பூமியின் மேலே
வேறொரு நாமம் மீட்க இல்லை
அவரே வழி சத்யம் ஜீவனுமானவர்

3. பாட்டு பாடு பாரங்கள் மறையும்
துதித்துப் பாடு துயரங்கள் நீங்கும்
விசுவாசம் உனக்கு இருந்தா போதும்
மலைகள் கூட பெயர்ந்து போகும்
என்று சொன்ன இயேசு இன்றும் வாழ்கின்றாரே

## பாடல் - 2230

**தாங்கிட பெலன் தாரும் தேவா**
தப்பிச் செல்ல வழி தாரும் நாதா
தேவா எந்தன் தேவா நாதா எந்தன் நாதா

1. பாடுகள் பெருகிடும் போது
ஆறுதல் கூடவே பெருகும்
அணைக்கும் தெய்வம் நீர் இருக்க
அன்போடு சகிப்பேனே நாதா

2. அலை மோதி அலைகின்ற படகில்
அருள் நாதர் என் இயேசு அருகில்
அழைத்தவர் அருகில் நான் இருக்க
புயல் காற்றால் திசை மாற மாட்டேன்

3. உலகம் வெறுத்திட்ட போதும்
உற்றார் மறந்திட்ட போதும்
உம் அன்பின் வார்த்தையினாலே
தேற்றி மகிழ்ந்தீரே தேவா

## பாடல் - 2231

**என் நேசர் மார்பினிலே**
எந்நாளும் சாய்ந்திடுவேன்
என் மனதின் பாரங்களை
உம் தோளில் சுமந்திடுவேன்

உம்மைப் போல் நேசிக்க யாரும் இல்லையே
உம் சமூகம் இல்லாத வாழ்வே வெறுமையே
இந்த வாழ்வே வெறுமையே

1. என் வாழ்வின் ஏக்கமெல்லாம்
உம்மைப் பார்க்கணும்
என் இதய நோக்கமெல்லாம்
உம் குரல் கேட்கணும்
உலகம் மாயை தேவா
உம் அன்பே போதும் நாதா

2. எனக்காக உங்க இதயம் ஏங்கித் தவிக்குதே
எந்நாளும் உந்தன் கண் முன்
என்னை நிறுத்தவே
வழி மேலே விழிகள் வைத்து
என் வரவை விரும்பும் தேவா

3. வாரும் என் நேசரே வயல் வெளியிலே
வரலாறு கண்டிடாத அன்பில் மூழ்கவே
நேசத்தால் சோகமானேன்
நான் என்னையே இழந்து போனேன்

## பாடல் - 2232

**கிருபை கிருபை தேவா**
எல்லாம் உம் தயவால் நாதா
நிற்பதும் நடப்பதும்
நான் உயிருடன் வாழ்வதும்

1. ஸ்தோத்திரம் சொல்ல சொல்ல
கிருபைகள் பெருகும்
தேவனை மகிழ்விக்க அது ஒன்றே போதும்
துதிகளின் நடுவில் மகிழ்ந்திடும் தேவா
துதிகனம் மகிமை செலுத்துவேன் நாதா



அட்டவணை

2. நெருக்கங்கள் என்னை சூழ்ந்திட்ட போதும்
அருகிலே வந்து ஆறுதல் தந்தீர்
குறைகளை நீக்கி கறைகளை போக்கி
நிறைவான வாழ்வுக்குள் நடத்திடும் தேவா

3. மிகுந்த இரக்கமும் உருக்கமும் நிறைந்த
எங்கள் நல்ல தெய்வம் நீரே
உமக்கு நிகராக யாருண்டு தேவா
உம்மைப் போல் நேசிக்க யாருண்டு நாதா

### பாடல் - 2233

**கங்கை யாற்றில் மூழ்கி எழும்**
லட்சோப லட்ச ஜனம்
பக்தி பெருக்கெடுத்து
அலை மோதும் தாக வெள்ளம்

2. கர்மம் யாவும் தொலைந்திட
சாபத்தீடு ஒழிந்திட
சிலுவை ஆற்றில் மூழ்கி எழ
தூய வாழ்வை பெற்றுக் கொள்ள
எங்களை எழுப்பும் ஐயா
சபைகளை வந்து உலுப்பும் ஐயா

### பாடல் - 2234

**இயேசு என்னோடிருப்பதால்**
எனக்கு பயமில்லை
என் கர்த்தர் என்னோடிருப்பதால்
கலக்கம் எனக்கு இல்லை
கலங்கல நான் கலங்கல
பயமில்லை எனக்கு பயமில்லை

1. கர்த்தரின் பாதத்தில் நித்தம் அமருவேன்
அன்பரின் மார்பில் சாய்ந்து மகிழுவேன்
துதிப்பேன் நான் துதிப்பேன்
மகிழ்வேன் துதித்து மகிழ்வேன்

2. இளமையிலே நான் இயேசுவை தேடுவேன்
உலக ஆசையை உதறித் தள்ளுவேன்
தள்ளுவேன் உதறி தள்ளுவேன்
வாழுவேன் உமக்காய் வாழுவேன்

3. பரிசுத்த வாழ்க்கை நாடி ஓடுவேன்
பிறர்க்கு சாட்சியாய் வாழ்ந்து காட்டுவேன்
காட்டுவேன் வாழ்ந்து காட்டுவேன்
ஜீவிப்பேன் சாட்சியாய் ஜீவிப்பேன்

## பாடல் - 2235

**உங்க அன்பு போதும் இயேசப்பா**
உங்க அன்பை எண்ணி
ஓயாமல் பாடுவேன் அப்பா

1. அன்பில்லா உலகத்தில்
அன்புக்காய் ஏங்கினேனே
ஆறுதல் சொல்லக் கூட
ஆளில்லாமல் தவித்தேனே

உங்க அன்புக்கென்றும் குறைவு இல்லப்பா
உங்க இரக்கத்துக்கு முடிவு இல்லப்பா

2. பட்டம் பதவியோ பணமோ எனக்கில்லை
பாவமான உலகினிலே
பாதை காட்ட யாருமில்லை

3. என்னாலே ஒன்றுமில்லை
எல்லாமே உம் கிருபை
நிற்பதும் நடப்பதெல்லாம்
ராஜா உங்க கிருபையே

## பாடல் - 2236

**மன்றாட வந்தேன் உம்பாதம்**
மறவாமல் ஜெபிப்பேன் எந்நாளும்
அதுவே என் தாகம் உமக்கே ஏற்றதாகும்

1. பாவத்தில் மூழ்கிப் போன
என் பாரத ஜனங்களுக்காய்
பரிதபிக்கிறேன் நான் பரிதபிக்கிறேன்
விடுவியும் ஐயா விடுவியும் ஐயா விடுவியும் ஐயா
எங்கள் பாரதத்தை எங்கள் பாரதத்தை

2. சாத்தானின் சதிகளுக்கும்
பாதாள கொடூரத்துக்கும்
என் ஜனங்கள் தப்பணும்
இரங்கும் ஐயா மனம் இரங்கும் ஐயா
இந்திய தேசம் இயேசுவைக் காண



அட்டவணை

3. ஆத்தும் பாரத்தினால்
என்னை அனுதினம் நிரம்புமைய்யா
கெஞ்சுகிறேன் நான்
வாரும் வாரும் இறங்கி வாரும்
தாரும் தாரும் ஆத்ம பாரம் தாரும்

## பாடல் - 2237

**நான் உமக்கு செல்ல பிள்ளை அல்லவோ**
நீர் எனக்கு நல்ல தந்தை அல்லவோ
உந்தன் மடியில் தவழ்ந்து
உந்தன் அன்பில் கலந்து
உம்மோடு உறவாடுவேன்
உமக்குள் நான் தினம் வாழுவேன்

1. அப்பா பிதாவே என்று
என்னை கூப்பிடச் செய்தீர் ஐயா
பரிசுத்த அலங்காரமாய்
உம்மை தொழுதிடச் செய்தீரய்யா

2. ரத்தத்தால் மீட்டுக் கொண்டீர்
உந்தன் ரட்சிப்பால் அலங்கரித்தீர்
என்னாலே ஒன்றுமில்லை
இது உந்தனின் ஈவு தானே

3. அடைக்கலம் நீர் தானய்யா
என் ஆறுதல் நீர் தானய்யா
நெருக்கடி நேரத்திலே
உற்ற துணையுமே நீர் தானய்யா

## பாடல் - 2238

**ஒன்றாக கூடிடுவோம்**
பண்டிகையை கொண்டாடுவோம்
நம் தேசம் எழுப்புதலை காணப் போகுதே
இந்தியா இயேசு மயமாகப் போகுதே

1. வெண்கல கதவுகள் உடைக்கப்படும்
அன்று இரும்பு தாள்பாள்கள் முறிக்கப்படும்
துதிக்கும் சபையைத் தேடி
ராஜாக்கள் நடந்து வருவார்கள்
கர்த்தர் தெய்வம் என்று
அவர்கள் அறிக்கை செய்வார்கள்
அதி சீக்கிரத்தில் நாம் காண்போம்
எழுப்புதல் நிச்சயமே

2. முடவர்கள் மான்கள் போல
துள்ளிக் குதிப்பார்கள்
ஊமையர் பாடிப் பாடி அகமகிழ்வார்கள்
வாலிபர்கள் கன்னியர்கள் அந்நாளில்
தரிசனம் காண்பார்கள்
இந்திய தேசத்தையே ஒருநாளில்
ஆளுகை செய்வார்கள்

3. ஆமான் திட்டங்கள் அழிந்து போகுமே
தாகோன் சிலை எல்லாம்
நொறுங்கிப் போகுமே
எலியா போல நாமும் எழும்பி
அக்கினி இறக்கிடுவோம்
கர்த்தரே தெய்வம் என்று
இந்நாளில் நிரூபித்து காட்டிடுவோம்

**பாடல் - 2239**

**பயப்படாதே உன்னோடு இருக்கிறேன்**
திகையாதே உன் தேவன் நானே
என்று சொன்ன ராஜா இயேசு
உனக்குள் வாழ்கிறார் உன்னோடு வருகிறார்

1. சுகவாழ்வு துளிர்த்திடுமே
சீக்கிரமாய் அது துளிர்த்திடுமே
பட்டுப் போனாலும் பசுமையாகுமே
வறண்டு போனாலும் வளமாகுமே

2. இருதயத்தின் மன விருப்பங்களை
உனக்காக அவர் செய்வார்
கலங்கிட வேண்டாம் நீ திகைத்திட வேண்டாம்
சோர்ந்திட வேண்டாம்
மனம் தளர்ந்திட வேண்டாம்

3. என் சமூகம் உன்முன் செல்லுமே
தடைகள் யாவும் தகர்த்திடுமே
மேக ஸ்தம்பமாய் அக்கினி ஸ்தம்பமாய்
வழிகளெல்லாம் உன்னை
நடத்திச் செல்வாரே

## பாடல் - 2240

**விசுவாச பாதையில் தினமும் நடந்திடுவேன்**
நியமித்த ஓட்டத்திலே தொடர்ந்து ஓடிடுவேன்

பாடுகள் என்ன செய்யும்
துன்பங்கள் என்ன செய்யும்
எதுவும் என்னை அசைப்பதில்லை
அன்பை விட்டு பிரிப்பதில்லை

1. வார்த்தை என்னும் மாத்திரையை
தினமும் சாப்பிடுவேன்
வாழ்நாளெல்லாம் சுகமாகவே
வாழ்ந்து பெலனடைவேன்
உம் தழும்புகளாலே சுகமானேன்
வார்த்தையினாலே பெலனானேன்.

2. கர்த்தருக்குள் எப்பொழுதும்
சந்தோஷமாயிருப்பேன்
கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து
கனிகள் கொடுத்திடுவேன்
நல்ல நிலத்தின் விதை போல
நூறு மடங்கு பலன் கொடுப்பேன்

3. விசுவாச கப்பலிலே பயணம் செய்கின்றேன்
போர் சேவகனாய் பணி செய்து
ஓட்டத்தை முடித்திடுவேன்
நீதியின் கிரீடம் எனக்கு உண்டு
நிரந்தர வாழ்வு எனக்கு உண்டு

## பாடல் - 2241

**எப்படிப்பா நன்றி சொல்லுவேன்**
தினம் என்னை நடத்தும் இயேசு தெய்வமே

1. பாவத்திலே நான் மூழ்கிப் போய் கிடந்தேன்
பரிசுத்த இரத்தத்தால் மீட்டுக் கொண்டீர்

2. ஆறுதல் இன்றி அலைந்து திரிந்தேன்
அன்பால் என்னை அணைத்துக்கொண்டீர்

3. கடந்ததெல்லாம் மறக்கச் செய்தீர்
கானான் நோக்கி நடக்கச் செய்தீர்

4. உண்மை உள்ளவன் என்று எண்ணி
உன்னத ஊழியத்தை எனக்குத் தந்தீர்

## பாடல் - 2242

**பூவைப் போன்ற வாழ்க்கை – இது**
புல்லை போன்ற வாழ்க்கை (2)
ஒருநாள் அழிந்திடும்
புகை போல் பறந்திடும்

1. நீயும் நானும் வாழ்வது
கானல் நீரின் ஓடம் போல்
காணும் இந்த காட்சிகள்
கலைந்து போன மேகங்கள்
இதை நீ அறிவாயா இயேசுவை ருசிப்பாயா

2. பூவைப் போல தோன்றியே
நிழலைப் போல மறைகிறான்
அவர் சேர்த்து வைத்த யாவையும்
விட்டு விட்டு போகிறான்
இதை நீ அறிவாயா இயேசுவை ருசிப்பாயா

3. உன்னை மீட்க தன்னையே
பலியாய் தந்தார் சிலுவையில்
ஜீவன் தந்த அவருக்காய்
உந்தன் வாழ்வை தருவாயா
இயேசு தான் நித்தியமே
இவ்வுலகமோ அநித்தியமே (2) – பூவை

## பாடல் - 2243

**பொன்னான நேரம் நீர் பேசும் நேரம்**
இன்பமான நேரம் உம்மில் உறவாடும் நேரம்

1. நீங்க பேசுங்க நான் கேட்கிறேன்
உம் குரலை கேட்க ஓடோடி வந்தேனய்யா
உம் வார்த்தை எனக்கு இன்பம் இன்பம் தானய்யா

2. உம் வார்த்தையிலே மனம் புதிதாகுது
மங்கிப் போன வாழ்வு மறுரூபமாகுது
மணவாளன் இயேசுவையே தினம் தேடுது

3. நீங்க பேசப் பேச ஆறுதல் வருது
உடைந்து போன உள்ளம்
சந்தோசத்தால் ஆடிப் பாடுது
உம் தழும்புகளால்
காயமெல்லாம் ஆறிப் போகுது

4. உந்தன் பாதத்தில் என் உள்ளம் மகிழுது
உலர்ந்து போன எலும்புகள் உறுதியாகுது
கடினமான என் இருதயம் கரைந்து போகுது

## பாடல் - 2244

**நேற்றும் இன்று நாளை என்றும் மாறாதவர்**
நம்பினோரை என்றும் அவர் கைவிடாதவர்

நம்பத்தக்கவர் உண்மையுள்ளவர்
சொன்னதைச் செய்பவர்

1. பொய் சொல்ல ஒரு மனுஷன் அல்ல
மனம் மாற மனுபுத்திரன் அல்ல

2. விசுவாசத்தை துவக்கினவர்
இறுதிவரை வழி நடத்தி செல்வார்

3. கரம் பிடித்தவர் என்னை கரம் பிடித்து
கரை சேர்த்து மகிழ்ந்திடுவார்

## பாடல் - 2245

(E-Min/pop Flamenco/T-135)

**இதுவே காலம் இதுவே காலம்**
இதுவே காலம் இதுவே காலம்
இயேசுவை சொல்ல எதிரியை வெல்ல
எழும்பி நாம் செல்லும் காலம்
கதறி ஜெபித்து களத்தில் இறங்கும் காலம்
கனிகள் கொடுத்து கர்த்தரை உயர்த்தும் காலம்

1. பாவத்தின் சோதனை நெருங்கிடும் போது
பரிசுத்தர் பாதம் பணிவோம்
பரமனை உயர்த்தி யோசேப்பு போல
பார்க்கின்றார் என்று சொல்லுவோம்

2. பாதாளம் விழுங்கும் பாரதத்தை மீட்கும்
பலமுள்ள தேவ சேனை நாம்
பட்டயமாம் வசனம் கரங்களில் ஏந்தி
பகைவனை வென்றிடுவோம்

3. காலமோ கொஞ்சம் வேலையோ அதிகம்
கடினமாக உழைப்போம்
கண்ணீர் துடைத்து பலனை கொடுத்து
கால் வைக்கும் தேசம் தருவார்

**பாடல் - 2246**

**ஆராதனை ஆராதனை ஆராதனை துதி ஆராதனை**
நன்றியினால் உள்ளம் நிறைந்து
அவர் ஆலயத்தில் மனம் மகிழ்ந்து
தோத்திர பலியுடனே எந்நாளும்
சந்நிதி முன் வருவேன்

1. வாழ்த்திடுவேன் உன்னதரை
தினமும் பணிந்திடுவேன் அற்புதரை
துதி கனம் மகிமையெல்லாம்
செலுத்தி தூயனை புகழ்ந்திடுவேன்
கருத்தாய் பாடிடுவேன்
ஜெபத்தால் உயர்ந்திடுவேன்

2. பரிசுத்தராம் நம் தேவன்
துதிகளின் நடுவில் எழுந்தருள்வார்
ஆவியான கர்த்தர் நமக்குள்
என்றும் வந்தசை வாடிடுவார்
வல்லமை ஊற்றிடுவார்
வரத்தால் நிறைத்திடுவார்

**பாடல் - 2247**

**துதிகளின் பாத்திரர் துதிப்பதற்கேற்றவர்**
தூயவர் இயேசுவே உம்
புகழ் பாட பாட துயர் ஓட ஓட
மகிமை மாட்சிமை அனைத்தையுமே
நான் உமக்கே செலுத்திடுவேன்

1. துதிகளில் வசித்திடும்
தூயதேவன் பெரியவரே
துதிப்பதால் கிடைக்குமே
புதிய கிருபை புது பெலனே
உடைந்து போன மண் பாத்திரம் போல
நொறுங்கியே கிடக்கிறேன் நான்
குயவனைப் போல எனை எடுத்து
உருவாக்கும் தேவன் நீரே
சத்தியமாய் உம்மை மறப்பதில்லை
நித்தியத்தில் சேர்க்கும் வரை
துதியின் மாலையை உமக்கு சாற்றியே
உம் பாதம் பணிந்திடுவேன்
உம்மை பணிந்தே தொழுதிடுவேன்

2. உண்மையுடன் வாஞ்சையாய்
தேவ சமூகத்தை தேடிடுவேன்
உத்தமரே உந்தன் கிருபையால்
புதிய நம்பிக்கை புது வாழ்வே
காணாமல் போன ஆட்டினைப் போல
வழி தப்பி திரிந்தேனே நான்
பாதை காட்டி பரிவுடனே
எனை தேடி வந்த நல் மேய்ப்பரே
உந்தன் உள்ளே என்றும் வாழ்ந்திடுவேன்
என் உயிர் உள்ள காலம் – துதி மாலை

**பாடல் - 2248**

**மகிமை மாட்சிமையும்**
எங்கள் பிதாவின் நாமத்திற்கே
ஸ்தோத்திர ஆராதனை
எங்கள் இயேசு ராஜாவுக்கே
ஸ்தோத்திர ஆராதனை ஆவியான தேவனுக்கே

வாருங்கள் வணங்கிடுவோம்
வாழ்வை உயரச் செய்தார்
நன்றி சொல்லி பாடிடுவோம்
நல்லவர் நன்மை செய்தார்

1. பாவத்தின் பிடியில் கிடந்தேனே
பலநாள் வியாதியால் தவித்தேனே
பாவத்தின் சம்பளம் மரணமே
பரிசுத்தர் உம்மால் விடுதலையே

2. உலகம் மாயை என்றறிந்தேனே
உம் கிருபை தேவை என்றுணர்ந்தேனே
நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள
நின் பாதம் விழுந்து முத்தமிட்டேன்

3. வேதமே வெளிச்சம் என் வாழ்வினிலே
வேண்டுகிறேன் ஜனம் உம்மை அறிய
சந்திப்பேன் நடுவானில் மீட்பரையே
சந்தோஷம் மோட்சத்தில் அவருடனே

**பாடல் - 2249**

**வாக்களித்த வள்ளலே வாழ்க வாழ்க**
வாக்கு மாறா தெய்வமே வாழ்க

வாழ்த்துகிறோம் அல்லேலூயா
வரவேற்கிறோம் அல்லேலூயா

1. விடுதலையின் நாயகரே
விடிவெள்ளியே வாழ்க
விண்ணவரும் மண்ணவரும்
போற்றுகிறோம் வாழ்க
திரியேக தேவனே வாழ்க
திருச்சபைகளின் தலைவரே நீர் வாழ்க

2. நித்தியரே வாழ்வின் நிம்மதியே வாழ்க
நிகரில்லாத நேசரே நின் நாமம் வாழ்க
நன்மை செய்யும் நாயகரே வாழ்க
நல்ல மேய்ப்பரானவரே வாழ்க

3. ஆறுதலே எங்கள் ஆதரவே வாழ்க
அற்புதங்கள் செய்ய வந்த அருமருந்தே வாழ்க
அதிபதியே அக்கினியே வாழ்க வாழ்க
அதிசயங்கள் செய்ய வந்த இயேசுவே வாழ்க

## பாடல் - 2250

**ஆராதிக்க கூடி வந்தோம்**
உம்மை ஆர்ப்பரித்து பாட வந்தோம்
ஆத்துமமே என் முழு உள்ளமே
அதிசயம் நடந்திடுமே நம் வாழ்வில்
அற்புதம் நிகழ்ந்திடுமே

1. சுகம் பெலன் ஜீவன் எனக்கு தந்தீர்
புது புது கிருபையால் முடி சூட்டினீர்
தாங்கிட முடியா பெலவீனத்தில்
உம் உன்னத பெலன் தந்து உயிர்ப்பித்தீர்
கோர சிலுவையில் உயிர் விட்டீர்
மீண்டும் உயிர்த்தீர் ஆச்சர்யமே
என்னை காத்திடும் தெய்வமே கருணை வடிவே
பொழுதும் எனக்கு நீரே எந்நாளும்

2. வனாந்திர பாதையில் வழி காட்டினீர்
வாதை நோயும் வந்த போது கரம் நீட்டினீர்
ஆயிரம் ஆயிரம் ஆலோசனை
அனுதினம் எனக்கு நீர் அளித்தவரே
என்னை மீட்டிட்ட வல்ல கர்த்தரே
என்னை அழைத்திட வந்திடுவாரே
எந்தன் ஜீவன் உள்ள காலம் வரை

சாட்சி சொல்லி உயர்த்துவேன்
உலகமெங்கும் உம்மையே எந்நாளும்

### பாடல் - 2251

**ஸ்தோத்திரம் சொல்லியே**
கர்த்தர் உம்மை போற்றுவோம்
அன்பின் தேவன் இயேசு என்று கூறுவோம்
அல்லேலூயா...

1. எங்களை காண்பவர் நீரே
தினமும் காப்பவர் நீரே
கிருபை தயவினால் வழி நடத்துகின்றீரே

2. எங்கள் ஆறுதல் நீரே
வாழ்வின் அடைக்கலம் நீரே
இரக்கம் உருக்கத்தால்
நன்மைகள் செய்கின்றீரே

3. தூய ஆவியும் நீரே
எங்கள் பெலனும் நீரே
வசன வார்த்தையால்
நம்பிக்கை தருகின்றீரே

### பாடல் - 2252

**என் வாழ்விலே நீர் செய்தது**
எத்தனை நன்மைகள் இயேசய்யா
ஒன்றல்ல இரண்டல்ல நீர் செய்தது

எண்ணி முடியாத நன்மைகளே
சொல்லில் அடங்காத நன்மைகளே

1. வியாதியினால் மனம் உடைந்த போது
உம் வார்த்தை அனுப்பி சுகமாக்கினீர்
நிம்மதி இழந்து நான் தவித்த போது
நிரந்தர அமைதியை அளித்தீரே

2. உறவுகளும் உம்மை அறிந்தோரும்
என் உருவத்தைப் பார்த்து வெறுத்த போது
உள்ளம் அறிந்து உண்மை நிலை புரிந்து
என் உயிர் காக்க துணையாய் இருந்தீரே

3. பாவி நான் தெரிந்திருந்தும்
பாசத்தோடு என்னை பின் தொடர்ந்தீரே
தீயவன் நான் என்று அறிந்திருந்தும்
என்னை நம்பி ஊழியம் தந்தீரே

### பாடல் - 2253

**கர்த்தர் கைவிட்டார் என்று நீயும் சொல்லாதே**
ஆண்டவர் மறந்தார் என நீயும் எண்ணாதே

தாய் மறந்தாலும் அவர் உன்னை மறவாரே
என் தேவன் உன்னை உள்ளங் கைகளில்
வரைந்து வைத்தாரே

1. உந்தன் மதில்களை ரட்சிப்பென்று
நீயும் சொல்லுவாய்
உன் வாசல்களை துதியென்று
சொல்லிப் பாடுவாய்
நீதிமானுக்கு வரும் துன்பம் அதிகம்தான்
நித்தம் கர்த்தர் அவனை
விடுவித்தென்றும் காப்பவர்

2. பார்வோன் சேனை பின்வரினும்
நீ பயப்பட வேண்டாமே
சேனையின் கர்த்தர் உன்னுடன் உண்டு
கலக்கம் வேண்டாமே
கடலின் ஜலமதுவே
உன்னை காக்கும் மதிலாகும்
(நீ மூழ்கி) ஞானஸ்நானம்
பெறுவதுதானே இதற்கு ஈடாகும்

3. வாழ்வில் உன்னை காத்துக் கொள்ள
வழிகள் பல தெரிந்தும்
வசதிகள் உனக்கு இருப்பதினாலே
பாதுகாத்திடுமோ
ஆவியானவரே தினம் அக்கினி மதிலானார்
அவராலன்றி உன்னை காக்கும்
அன்பர் வேறில்லை

### பாடல் - 2254

**பரமண்டலங்களில் இருக்கின்ற**
எங்கள் பரம பிதாவே
பரனே உம் நாமம் பரிசுத்த படுவதாக
உம் ராஜ்ஜியம் வருவதாக



அட்டவணை

1. உம்சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவதைப் போல்
பரனே இப் பூமியில் உந்தனின் சித்தம்
செய்யப்படுவதாக

2. அன்றன்று ஆகாரத்தை
இன்று எங்களுக்குத் தாரும்
எங்கள் கடனாளிகளுக்கு
நாங்கள் மன்னிப்பது போல்
எங்கள் கடன் மன்னியும்

3. சோதனைக்குட் படாமல்
தீமையினின்று எம்மை இரட்சித்திடும்
இராஜ்ஜியமும் வல்லமையும்
மகிமையும் என்றென்றும்
உம்முடையவைகளே

**பாடல் - 2255**

**ஜெபத்தை கேட்பவரே ஜெயத்தை அளிப்பீரே**
மாமிசமான யாவரும் உம்மிடம் வருவோமே
அல்லேலூயா ஸ்தோத்திரம் (அல்லேலூயா 3)

1. இரண்டு மூன்று பேர் இயேசுவின் நாமத்தினால்
இதயம் ஒருமித்தால் அங்கு இருப்பீரே

2. சோதனையானாலும் வேதனையானாலும்
சோர்ந்து போகாமல்
ஜெபிக்க பெலன் தாரும்

3. விழித்து ஜெபித்திட இரவின் ஜாமங்களில்
இயேசுவைப் போல நான்
ஜெபிக்க உதவி செய்யும்

**பாடல் - 2256**

**நீங்க அழைத்த அழைப்பும்**
கிருபை வரமும் மாறாதது
இந்த வானம் பூமி மாறினாலும் அழியாதது
தேவனே தேவனே தேவனே தேவனே
அதை மனதில் நினைத்துப் பார்க்கும் போது
என் அறிவுக்கு எட்டாது

1. உலகம் தோன்றும் முன்பு
என்னை முன் குறித்தது
தாயின் கருவில் என்னை
பெயர் சொல்லி அழைத்தது
கிருபையோடு இரட்சண்யம் தேடி வந்தது
மெய் கிறிஸ்துவோடு இணைந்தேன்
ஜீவன் மலர்ந்தது

2. பாதை மாறிப் போகும் போது
வேதம் தெரியுது
நான் பாவத்தோடு வாழும் போது
பாடம் புகட்டுது
தேவனே உம் அன்பு மட்டும்
சொந்தமானது
அதை தேடுகின்ற பொழுதினிலே
இன்பம் பிறக்குது

3. உன்னை அழைத்த தேவன்
என்றும் உண்மையுள்ளவர்
ஒரு போதும் கைவிடாது பாதுகாப்பவர்
உரைத்த வாக்கின்படியே
அவர் உன்னை நடத்துவார்
நீ கரை சேர ஒரு நாள்
பரலோகில் நிறுத்துவார்

## பாடல் - 2257

**எனக்காய் யாவையும் செய்து முடிப்பார்**
என் இயேசு நல்லவரே
அவர் செய்ய நினைத்ததை ஒருவராலும்
தடைசெய்ய முடியாதே

கர்த்தர் எனக்கு நன்மை செய்ததால்
அவரை நான் பாடுவேன்
கர்த்தர் எனக்கு கிருபை தந்ததால்
அவரை நான் போற்றுவேன்

1. அநாதி சிநேகத்தால் என்னை சிநேகித்தார்
அவரே என் நேசர்
காருண்யத்தால் இழுத்துக் கொண்டார்
அவரே என் இயேசு



அட்டவணை

2. முன்னே சென்று கோணலானதை
செவ்வை யாக்கிடுவார்
வழி இதுவே என்று சொல்லி
அனுதினம் நடத்திடுவார்

3. ஆராய்ந்து முடியா பெரிய காரியங்கள்
அவரே செய்திடுவார்
எண்ணி முடியா அதிசயங்கள்
நிச்சயம் செய்திடுவார்

## பாடல் - 2258

**ஓ... நிர்பந்தமான மனுஷன் நான்**
என் நிலைமை யார் அறிவார்

1. விரும்புவதை செய்யாமல்
நான் வெறுப்பதையே செய்கின்றேன்
சுய பெலத்தால் முயன்றேன்
சுயத்தால் முடியவில்லை
ஆ.... தேவ கிருபையே
என்னை என்றும் நடத்துமே

2. பாவத்தின் மிகுதியினால்
என் எலும்பிலே சுகமில்லை
சுகத்தை அருளிச் செய்யும்
நீர் நொறுக்கின எலும்புகள் களிகூறும்
தேவ மகிமையே என்னை
என்றும் நிரம்பும்

3. சிலுவையில் அறையுண்டேன்
இனி நான் அல்ல இயேசுவே
சிந்தையில் ஜெயம் பெற்றேன்
சிறப்புடன் வாழ்ந்திடுவேன்
தேவ சமூகம் வழி நடத்தும் என்றுமே
பாக்கியமான மனுஷன் நான்
என் பரிதாப நிலை கண்டார்
என்னை ரட்சித்து மகிழச் செய்தார்

## பாடல் - 2259

**அமர்ந்து காத்திருப்பேன்**
எந்தன் அப்பாவின் சமூகத்திலே
நான் பேச அவர் கேட்பார்
அதுதான் என் ஜெப நேரம்
அவர் பேச நான் கேட்பேன்
அதுதான் என் ஜெப நேரம்

1. அதிகாலையில் வாஞ்சையோடே
அவர் பாதம் அமர்ந்திருப்பேன்
துதித்திடுவேன் தூயனையே
துரிதமாய் வந்திடுவார்

2. அறிக்கை செய்வேன் அவரிடமே
அன்புடன் அணைப்பாரே
பாவங்களை மன்னிப்பாரே
பரிசுத்தம் செய்வாரே

3. ஊற்றிடுவேன் பாரங்களை
தேற்றிடும் இயேசுவிடம்
துடைத்திடுவார் கண்ணீரை
துயரை துதித்திடுவேன்

4. பரன் சித்தமே பூமியிலே
நாள்தோறும் செய்யணுமே
தேவ ராஜ்ஜியம் வளரனும்
தினம் அருள் தாரும் என்பேன்

## பாடல் - 2260

**யார் இந்த ராஜா அவர் மகிமையின்**
சேனைகளின் கர்த்தர் ஜெயம் கொடுக்கும் வீரர்
வல்லமையின் ராஜா எங்கள் இயேசு ராஜா

1. நித்தம் என்னில் வாழ்பவர்
நிம்மதியை தருபவர்
ஏழைகளின் தகப்பன் அவர்
தம்மைத் தேடும் மாந்தரின் சமீபத்தில் இருப்பவர்
துதிகளில் வாழ்பவர் தானே

2. திக்கற்றோரை காப்பவர் தேவ வடிவானவர்
பெலவீனருக்கும் பெலனானார்
சுகவீனருக்கும் சுகம் தருபவர் அவரே
தேவ கிருபை அளிப்பவர்

3. நல்லவரை நாடு நாவில் துதி பாடு
நம்பிக்கையின் பாத்திரரே
இரக்கமும் உருக்கமும் நீடிய பொறுமையும்
நிறைந்தவர் எங்கள் இயேசுவே

### பாடல் - 2261

**இயேசு ஒரு போதும் மாறாதவர்**
எவரையும் புறம்பே தள்ளாதவர்
இயேசு ஒருபோதும் மாறாதவர்
எவரையும் கைவிட விரும்பாதவர்
இயேசு சொன்னார் அதை செய்து முடிப்பவர்
அதை செய்யுமளவும் விட்டு விலகாதவர்

ஏன் அழுதாய் என் மனமே
இயேசு உண்டு சொல் மனமே
அருகில் இயேசு உண்டு சொல் மனமே

1. தேடினான் ஓடினான் சகேயு
தெருவில் நின்று கூப்பிட்டான் பர்த்திமேயு
இயேசு வந்தார் நின்றார் கண் பார்த்தார்
கேட்ட நன்மையை தந்து தானே சென்றார்

2. துடித்தேன் துவண்டேன் பிள்ளை நானே
நண்பனும் சொந்தமும் கைவிட்டதாலே
இயேசு வந்தார் உன் துணை நான் என்றார்
கைதூக்கி விட்டு என்னை பாடச் செய்தார்

### பாடல் - 2262

**உம் கிருபை எனக்கு போதும் போதும் போதும்**
வாழ்நாளெல்லாம் அதுவே போதும் போதும் போதும்
உம் கிருபை எனக்குப் போதும்

1. தேவன் சிறுமைப்படுத்திய நாட்களுக்கும்
நான் துன்பத்தை கண்ட
ஆண்டுகளுக்கும் சரியாய்
என்னை மகிழ்ச்சியாக்கும் கிருபை
நான் நம்பும் என் கர்த்தர்
நித்தம் நடத்துவார்.... ஆ... அல்லேலூயா

2. நான் சிறுமையும் எளிமையுமானவன்
நான் மனதில் துயரங்கள் நிறைந்தவன்
தேவா என்னை உயர்த்தும் மா கிருபை
நான் நிற்கும் கன்மலை கிறிஸ்தேசுவே
ஆ... அல்லேலூயா

3. அக்கினி சோதித்த பொன்னைப் போல
நீர் என்னை புடமிட்டு அறிந்து கொண்டீர்
நாதா என்னிலே அற்புதம் செய்யும் கிருபை
எந்நாளும் நான் வணங்கும் என் தேவன் நீரே

## பாடல் - 2263

**என் அன்பு நேசரே உமக்காய் காத்திருப்பேன்**
எப்போது நீர் வருவீர் - இயேசய்யா

1. சாரோனின் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே
அழகில் சிறந்தவரே
உந்தன் நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம்
வாசனை வீசிடுதே எனது மணவாளனே

2. எனது வழியும் எனது சத்யமும்
எனது ஜீவன் நீரே
எந்தன் வாழ்க்கையின்
எல்லா காலங்களிலும்
அனுகூல துணையானீரே
அதிசயமானவரே

3. கர்த்தாதி கர்த்தாவே ராஜாதி ராஜாவே
எந்தன் எஜமானரே
உந்தன் சமூகத்தில் நின்று மகிழ்ந்து பாடும்
வேளைக்காய் ஏங்குகிறேன்
சீயோன் நாயகரே

## பாடல் - 2264

**இயேசு மட்டும் போதும் இந்த உலகிலே**
வேறென்ன வேண்டும்
நமக்கு இந்த வாழ்விலே

வாழ்ந்தாலும் இயேசு தாழ்ந்தாலும் இயேசு
இன்பத்திலும் இயேசு துன்பத்திலும் இயேசு

1. கஷ்டமோ நஷ்டம் வந்தாலும்
துன்பமோ துயரம் வந்தாலும்

இயேசுவின் அன்பிலே உறுதியாய் நிலைப்பேன்
அன்பை விட்டு பிரிப்பவன் யார்

2. ஒரு தாயைப் போல தேற்றுகிறார்
தந்தையைப் போல சுமக்கின்றார்

3. மனிதரெல்லாம் மாறிப் போனாலும்
என் இயேசு என்றும் மாறவே மாட்டார்

**பாடல் - 2265**

**அவனியில் எழும்பிடும் அவலக் குரல்**
திக்கெங்கும் ஒலித்திடும் ஏக்க குரல்
இளைய சமுதாயமே இன்றே கேட்டிடுவாய்

திறப்பினில் நின்றிட நீ தேவை
சுவரை அடைப்பது மாபெரும் தேவை
தேசத்தின் அழிவினை தடுத்திடும்
ஜாமக்காரர்கள் இன்றைய தேவை

1. இயேசுவைக் காண விரும்புகிறோம்
என ஏங்கும் மக்களை சந்திக்க வா
வாழ்வழிக்கும் சிலுவை சுப செய்தி
செல்லாத இடங்களில் சொல்லிட வா

2. அழிந்திடும் ஆத்துமா பல கோடி
தேடுதே அவர் உள்ளம் உன்னை நாடி
சிதறுண்ட ஜனங்களை சேர்த்திடவே
இயேசுவின் அணியில் நீ இணைந்திட வா

3. யாரை நான் இன்று அனுப்பிடுவேன்
யார் என் காரியமாய் போவாரென
ஏங்குகிறார் வருந்தி அழைக்கின்றார்
நேசரின் தாகம் நீ தீர்த்திட வா

**பாடல் - 2266**

**தூரமாய் இருந்த என்னையுமே**
தூக்கி அணைத்தவரே
பாரமாய் இருந்த பாவங்களை
தோளில் சுமந்தவரே
உம் அன்புக்கு என்னையே
தத்தம் செய்தேன்
காலமெல்லாம் உம் சித்தம் செய்வேன்

1. கள்வரின் கைகளில் காயம் அடைந்தேன்
நம்பின யாவரும் கைவிட்ட போதிலும்
ஜீவன் தந்து மீட்டீரே

2. சத்திய வழியை அறிந்திருந்தாலும்
உம்மை மறந்தே வாழ்ந்திருந்தேன்
சிலுவை மரத்தை எனக்காய் சுமந்தீர்
தூய பாதை காட்டினீர்

**பாடல் - 2267**

**இயேசு நாதா எந்தன் நேசா**
கண்ணோக்கிப் பாருமே
என்னை காத்துக் கொள்ளுமே

கன்மலையும் கோட்டையும்
என் இரட்சகரும் நீர்
எந்தன் நம்பிக்கை நீர் தானே

1. எந்தன் பாகை செவ்வை செய்யும்
அன்பின் தேவனே
உந்தன் பெலத்தால் நிறையுமே

2. எந்தன் பாரம் உம்மில் வைக்க
உதவி செய்யுமே
உமது வல்லமை தாருமே

3. கண்ணீர் சிந்தி கதறி ஜெபிக்க
உதவி செய்யுமே
ஜெபத்தின் ஆவியால் நிரப்புமே

**பாடல் - 2268**

**கர்த்தாவே உம்மில் அன்பு கூறுவேன்**
என் கன்மலையானதால் அன்பு கூறுவேன்
என் கோட்டையுமானதால் அன்பு கூறுவேன்
உம் செட்டை அடைக்கலமானதால் அன்பு கூறுவேன்

1. மரணத்தின் வாசலில் நான் கதறினேன்
பாதாள கட்டுகளும் சூழ்ந்தது
மனமிரங்கும் என்று மன்றாடினேன்
கரம் நீட்டி தூக்கினீர் அல்லேலூயா

2. சாத்தானின் சூழ்ச்சி நீர் தகர்த்தீர்
எதிரி அவன் கைகளுக்கு தப்பினேன்
நித்தம் உம் பாதம் மன்றாடினேன்
விடுவித்து காத்தீரே அல்லேலூயா

3. துயரத்தின் பாதையில் நான் வருந்தினேன்
போராட்டம் தவிப்புகள் சூழ்ந்தது
போராடி ஜெபித்தே மன்றாடினேன்
பெலன் தந்து தூக்கினீர் அல்லேலூயா

## பாடல் - 2269

**தரிசனத்தின் தேவனே**
உம்மைத் துதிக்கின்றோம்
ஆத்ம பாரம் தந்தவரே
தான் உம்மில் மகிழ்கிறோம்
ஜெபம் கேட்கும் இரட்சகரே
நன்றி சொல்கிறோம்
இந்து தேசம் உந்தன் சொந்தம்
என்று சொல்கிறோம்

போற்றுவோம் (2) உம்மைப் போற்றுவோம்
பாடுவோம் உம்மைப் பாடுவோம்

1. பாரதத்தின் எல்லைகளை அணுகச் செய்தீர்
பாஷைகளை கற்றுக் கொள்ள ஞானம் தந்தீர்
பாதகங்கள் அணுகாது காத்துக் கொண்டீர்
பரவசம் உள்ளங்களில் பெருகச் செய்தீர்

2. அடைபட்ட கதவுகள் திறந்து தந்தீர்
ஆத்துமாக்கள் கொள்ளையாக எமக்குத் தந்தீர்
ஆலயங்கள் கிராமங்களில் எழும்பச் செய்தீர்
ஆராதித்து உம்மை நாங்கள் தொழுகச் செய்தீர்

3. அற்பமான ஆரம்பமே அன்று கண்டோம்
அற்புதங்கள் ஆயிரம் இன்றும் கண்டோம்
தற்பரனே உம் கரத்தின் வல்ல செயல்கள்
தரணியோர் அறிந்திட எடுத்துச் சொல்வோம்

## பாடல் - 2270

**இடைவிடாத ஜெபம் ஊக்கமான ஜெபம்**
விசுவாச ஜெபம் வாழ்வெல்லாம் ஜெயம்
ஜெய மருளும் ஜெபம் ஊழிய எல்லை எங்கும்
ஆமென் அல்லேலூயா

1. சீயோன் மலைக்கு வாருங்கள்
தேவனின் பாதம் காத்திருப்போம்
அவர் கரம் எழுதும் பிரமாணம்
இதயத்தில் பெற்று
தூய்மை வாழ்வினை ஏற்றிடுவோம்

2. மோரியா பர்வதம் சென்றிடுவோம்
பலிபீடம் நாமங்கு கட்டிடுவோம்
சுயம் யாவும் வெறுத்து சுட்டெரிப்போம்
தேவ சித்தம் செய்து
இயேசுவின் சாயலை அணிந்திருப்போம்

3. மிஸ்பாவில் கூடி ஜெபித்திடுவோம்
இதயத்தை ஊற்றி கதறிடுவோம்
ஊரெங்கும் சுவிசேஷம் அறிவிப்போம்
தேவனின் இராஜ்ஜியம்
பூமியில் நிலைத்திட உழைத்திடுவோம்

## பாடல் - 2271

**நட்சத்திர பூக்கள் நாங்கள்**
ஜொலித்து வாழ்ந்திடுவோம்
ஒளிக்கதிராய் இருள் அகற்றி
நீதியின் சூரியனை உயர்த்திடுவோம்

கிறிஸ்துவில் மலர்ந்தோம்
வேதத்தில் வளர்வோம்
ஜெபத்திலே மிளிர்வோம்
இயேசுவுக்காய் வாழ்வோம்

1. வண்ண வண்ண பறவைகள் நாங்கள்
உயர பறந்திடுவோம்
பாவத்தின் கட்டுகள் அறுந்ததால்
பரிசுத்தர் சாயலை அணிந்திருப்போம்

2. நல்ல நல்ல உள்ளங்கள் நாங்கள்
ஒளியில் நடந்திடுவோம்
சரித்திரம் படைத்தே சுடர்களாய்
தேவனின் சேனையாய் எழும்பிடுவோம்

3. தினம் தினம் நற்செய்தி சொல்வோம்
ராஜ தூதுவராவோம்
இந்திய நாட்டில் சீடர்களாய்
அணியாய் திரண்டு சென்றிடுவோம்

## பாடல் - 2272

**ஆராதிக்க கூடினோம்**
ஆர்ப்பரித்து பாடுவோம்
இயேசு நம்மில் ஜீவிக்கிறார்
ஆர்ப்பரித்து துதிப்போம்
சுவிசேஷம் கூறுவோம் உடன் பங்காளிகளாய்

1. தடைகளை தகர்க்கும் ராஜாதி ராஜன்
நம் முன்னே செல்கின்றாரே
எரிகோவும் யோர்தானும்
முன் நிற்க முடியாதே
செங்கடலும் பிளந்து பாதை விடுமே
சத்துருவின் சேனை அழிந்திடுமே
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

2. ஏழு மடங்காக்கிய கொடிய தீயும்
சேதப்படுத்திடாதே
தண்ணீரைக் கடக்கையில்
உன்னோடு வருவாரே
அக்கினியில் நம்மோடு நடக்கின்றாரே
சத்துருவின் அக்கினி அழிந்திடுமே

3. கெர்ச்சித்து எதிர்க்கின்ற சாத்தானை வெல்ல
இயேசு பெலன் ஈவாரே
சிங்கம் போல் விழுங்கவே எதிரி வந்தாலுமே
இயேசுவின் நாமத்தில் கட்டுவோமே
சத்துருவின் ஆட்டம் அடங்கிடுமே

## பாடல் - 2273

**ஸ்தோத்திர கீதம் பாடி நாமும் உயர்த்துவோம்**
கர்த்தரின் கிருபை பெரியதே
அவரின் செயல்கள் மகத்துவம்
அவர் நீதி நித்தியம்

யெகோவா ஷம்மா இருக்கிறீர்
யெகோவா ஷாலோம் சமாதானம்
யெகோவா யீரே காண்கிறீர்
யெகோவா ரப்பா சுகம் தந்தீர்

1. அகிலம் படைத்தவர் ஆட்சி செய்பவர்
அற்புத நாயகர்
எரிகோ கோட்டையை தகர்க்க
வல்ல நம் துதிக்கு பாத்திரர்
மரணத்தின் கூரை முறித்தவர்
ஜெய கிறிஸ்துவுமாக உயிர்த்தவர்

2. கருணையின் கடலே அன்பின் வடிவமே
ஐயனே போற்றுவோம்
பிதாவே என்று உம்மை நான்
அழைத்திட உரிமை தந்தீரே
சேனையின் அதிபன் நம்மை அழைக்கிறார்
ஒன்றாய் இணைவோம் உழைப்போம்

## பாடல் - 2274

**கர்த்தருக்கு பிரியமானவன்**
அவர் சித்தம் நிறைவேற்றுவான்
தேவ சித்தம் நாமும் செய்வோம்
சுவிசேஷ பங்காளியாக
என்றும் செயல்படுவோம்

1. கூர்மையான யந்திரமாவோம்
ஒன்றாக போரடித்து முன்னேறுவோம்
மலைகளை மிதித்து நொறுக்கி
சேனைக்குள் பாய்ந்து செல்லுவோம்
ஜெயக்கொடி ஏற்றிடுவோம் – நாமும்

2. வெண்கல அலங்கமாகுவோம்
தேவ சேணையாக எழுந்து நிற்போம்
ஆத்துமாக்கள் கொள்ளையிடுவோம்
அதை மந்தையிலே சேர்த்திடுவோம்
ஜெயக்கொடி ஏற்றிடுவோம்–நாமும்

3. முத்திரை மோதிரமாவோம்
கர்த்தர் அதிகாரம் கையில் எடுப்போம்
சாத்தானின் திட்டம் அழித்து
தேவ சித்தம் நிறைவேற்றுவோம்
ஜெயக்கொடி ஏற்றிடுவோம் – நாமும்

## பாடல் - 2275

**பரலோக மன்னா தினம் தாரும் தேவா**
இறைவா எந்தன் இயேசு நாதா

1. அதிகாலை பொழுதில் துதி பாடல் பாடி
காத்திருப்பேன் உந்தன் பிரசன்னம் நாடி
என் வேண்டல் கேட்டு பலர் வாழ்வு மாற
இயேசுவே உந்தன் கிருபை காட்டும்

2. உம் வேத வார்த்தை என் ஜீவ அப்பம்
தேனிலும் இனிதென்று தேடியே வந்தேன்
தேடும் என் வாஞ்சை தேவா அறிந்து
வார்த்தையின் வடிவில் தரிசனம் தாரும்

3. நின் தூய ரத்தம் அன்பின் பிரவாகம்
என் தாகம் தீர்க்க எழுந்தோடி வந்தேன்
என் பாவம் போக்கியே என்னை கழுவி
உம் அன்பின் சாட்சியாய்
என்னை நிறுத்தும்

## பாடல் - 2276

**போற்றித் துதிப்போம் தேவாதி தேவனை**
என்றென்றும் துதித்திடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா நம் இயேசு
என்றென்றும் மாறாதவர்

1. வல்லவர் நல்லவர் வாக்கு மாறாதவர்
எக்காளத்தோடும் கைத்தாளத்தோடும்
மனத் தாழ்மையோடும் ஆராதிப்போம்

2. யோசனையில் பெரியவர்
யோர்தானின் தடை மாற்றினார்
நம் வாழ்வின் தடைகளை இல்லாமல் அகற்றி
எந்நாளும் வழிகாட்டி நடத்திடுவார்

3. நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்திடுவார்
பாரெங்கும் சென்று அவர் நாமம் கூறி
இரட்சிப்பின் செய்தியை உரைத்திடுவோம்

## பாடல் - 2277

**ஆர்த்தெழும்பு ஆர்த்தெழும்பு தேவ ஜனங்களே**
ஆண்டவரின் வார்த்தைகளில் அக மகிழ்ந்திடு
விழித்தெழும்பு விழித்தெழும்பு விண்ணப்பம் பண்ணு
வாக்குத்தத்தம் சொந்தமாகும் நிச்சயம் நம்பு

1. விசுவாசம் ஆபிரகாமின் சுவாசமானது
தளர்ந்த அவன் உடலில் அது உயிரானது
விண் மீன்களைக் கண்ட போது விதையானது
மண்ணின் துகளிலும் அது மழலையானது

2. பாரெங்கும் செல்லுவோம்
சீடராக்குவோம் பரிசுத்தமான
ஜீவ பலியாகுவோம்
பாடுகளின் மத்தியிலும் பெருகும் மந்தையாம்
திருச்சபைகள் தேசமெங்கும் திரளாக்குவோம்

3. தேவ வார்த்தை ஊழியத்தின் மூலதனமாம்
விசுவாசம், கீழ்படிதல் ஜெபம் தேவையாம்
பரிசுத்தமான தியாக தீபங்களாக
எளிய வாழ்வை இறுதி வரை
காத்துக் கொள்ளுவோம்

## பாடல் - 2278

**இயேசுவின் நாமம் இணையில்லா ஔஷதம்**
களைத்த ஆத்துமாவின் அடைக்கலம்

காலமெல்லாம் பாவியின் புகலிடம்
ஞாலமெல்லாம் அவர் முன் பணியும்
இதயமாம் குவளை உடைத்திடுவோம்
துதிகளாம் நளதம் பரிமளக்கும்
சுரந்திடும் கண்ணீரால் செம்பாதம்
நித்தமும் கழுவி ஆராதிப்போம்

1. ஸ்தோத்திர பலிகள் இயேசுவுக்கு பிரியம்
துதியின் ஒலியால் கிருபை பெருகும்
வேதத்தின் ஒளியில் ஆத்துமா வளரும்
ஜெபத்தில் நிலைக்க வல்லமை நிறைக்கும்

2. அன்பரின் பாதம் அமர்ந்திடும் வேளை
விம்மும் நெஞ்சம் சிந்தும் கண்ணீர்
தேசத்தின் பாவத்தை களைந்திடச் செய்யும்
மனிதரின் வாழ்வினில் மறுரூபம் மலரும்

3. அன்பரின் பாதம் அமர்ந்திடும் வேளை
விம்மும் நெஞ்சம் சிந்தும் கண்ணீர்
தேசத்தின் பாவத்தை களைந்திடச் செய்யும்
மனிதரின் வாழ்வினில் மறுரூபம் மலரும்

**பாடல் - 2279**

**எலியா கால எழுப்புதல்**
எம்மில் வேண்டுமைய்யா
பலியாய் எம்மை படைக்கிறோம்
அக்கினி ஊற்றுமைய்யா

கையளவு முகில் சேர்ந்தால்
கடுமழை பெய்திடும்
தேவ ஜனம் கை கோர்த்தால்
தேசமே அசைந்திடும்
தேவ பாதம் வந்திடும்
ஜீவ பாதை அறிந்திடும்

1. தூய ஆவி தேவ வார்த்தை
இணைந்து நடத்தும் அற்புதம்
மாற மறுக்கும் மனங்கள் கூட
போது மனந்திரும்பும் அதிசயம்
அனுதினமும் நிகழ்ந்திடும்
இயேசு நாமம் உயர்ந்திடும்
தரணி எங்கும் திருச்சபைகள் திரளாக எழும்பிடும்

2. வானம் திறந்து பூமி மீது
அன்பு மழையும் பொழியட்டும்
மனித நேயம் விளைநிலமாக
மக்கள் மனங்கள் மாறட்டும்
வன்முறைகள் ஒயட்டும்
வாலிபர்கள் எழும்பட்டும்
சுவிசேஷம் சொல்லட்டும்
பரமன் பணி தொடரட்டும்

**பாடல் - 2280**

**கூடுவோம் ஒன்றாய் கூடுவோம்**
தேவ ராஜ்ஜியத்தை நோக்கி நாம் ஓடுவோம்
பாரிலே பாவம் போக்கவே வந்த
இயேசுவையே பாரதத்தில் கூறுவோம்

விசுவாச கேடகம் நாம் கையில் ஏந்துவோம்
சுவிசேஷ போர்க் களத்தில் வீரனாகுவோம்

1. விசுவாசம் என்னும் நல் வேதத்தின்
வார்த்தைக்கு வேறாயிருந்தானே ஆபிரகாம்
வாக்குத்தத்தம் அதை வாழ்வின் அர்த்தம் ஆக்கி
வாழ்ந்தானே அதுதான் நீதியாம்

2. விசுவாசம் இல்லாமல் தேவனில்
பிரியமாய் ஆவது கூடாத காரியம்
நற்கிரியை இல்லாமல் விசுவாசம் மட்டுமே
கொள்வதும் வீணாகப் போய் விடும்

3. தன்னலம் கருதாமல் தன்னை அர்ப்பணித்து
வடதேசம் செல்கின்றார் மிஷினெரி
தாராள மனதோடு திருச்சபையாகவே
தவறாமல் ஜெபித்து என்றும் ஆதரி

**பாடல் - 2281**

**ஆராதிக்கின்றோம் இயேசு உம் நாமத்தையே**
உயர்த்துகின்றோம் இயேசு உம் நாமத்தை

1. ஆராய்ந்து முடியாத காரியங்கள்
எண்ணி முடியாத அதிசயங்கள்
கிரகிக்க கூடாத அற்புதங்கள்
கிறிஸ்து இயேசு நமக்காய் செய்தாரே

2. வல்லமையுடைய தேவனே னே
மகிமைகள் நமக்கு செய்தாரே
ஆத்துமம் கர்த்தரை துதிக்கின்றது
ஆவியும் தேவனில் களிகூறுதே

3. சமூகம் முன் செல்ல வாக்குத்தத்தங்கள்
சகலமும் நிறைவேற்ற ஆவி தந்தார்
நடத்துவது எல்லாம் நன்மைக்கே
நன்றி சொல்லி உம்மை துதித்திடுவேன்

## பாடல் - 2282

**நாள்தோறும் செலுத்துவேன் நன்றி பலி**
நாளெல்லாம் பாடுவேன் துதி பாடல்
நன்றி நன்றி நன்றி நன்றிபலி

1. இதயத்திலே வாழ்பவரே
இதயமெல்லாம் நிறைவானவரே
கண்மணி போல் காப்பவரே
காலமெல்லாம் எந்தன் நிழலானவரே

2. உயிரினிலே கலந்தவரே
உறவாய் என்னோடு இருப்பவரே
காரிருளை நீக்கிடவே
ஜீவ ஒளியாய் வந்தவரே

3. நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாக என்றும் செய்பவரே
நினைவினிலே இருப்பவரே
நித்தியத்திலே என்னை சேர்ப்பவரே

## பாடல் - 2283

**உம்மை துதிப்பேன் நான்** 2
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம்
உம்மை துதிப்பேன் நான் 2
நீர் செய்த நன்மைக்காக
உம்மை துதிப்பேன் நான்

1. எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும்
நெருக்கல்லா விசாலத்தை எனக்கு தந்தவரே

2. நிந்தை அவமானம் பரிகாசங்களில்
நித்திய மகிழ்ச்சி
எந்தன் தலையில் வைத்தவரே

3. சத்துரு வெள்ளம் போல வந்த
போதெல்லாம் உம் ஆவியினால்
கொடியேற்றி ஜெயம் தந்தீரே

## பாடல் - 2284

**நீங்க நீங்க நீங்க தானப்பா**
எனக்கு எல்லாமே நீங்கதானப்பா



அட்டவணை

1. இந்த பாவியை இரட்சித்தது நீங்கதானப்பா
என்னை பரலோகம் சேர்ப்பதும் நீங்கதானப்பா

2. வியாதியிலே சுகம் தந்தது நீங்கதானப்பா
என் பெலனவீனத்திலே பெலன் தந்தது நீங்கதானப்பா

3. என் கண்ணீரை துடைப்பவரும் நீங்கதானப்பா
என் கவலைகளை ஏற்றுக் கொண்டது நீங்கதானப்பா

4. எனக்காக மரித்தவரும் நீங்கதானப்பா
எனக்காக உயிர்த்தவரும் நீங்கதானப்பா

5. வாலாக்காமல் தலையாக்குவது நீங்கதானப்பா
என்னை கீழாக்காமல் மேலாக்குவது நீங்கதானப்பா

## பாடல் - 2285

**யெகோவா ராப்பா உம்மை நம்புகிறேன்**
உதவி செய்வீர் என்று உம்மை நம்புகிறேன்

1. உம்மை பாடும் போது சுகம் தருவீர்
என்று நம்புகிறேன்

2. உம்மை பாடும் போது கூட இருப்பீர்
என்று நம்புகிறேன்

3. உம்மை பாடும் போது ஆசிர்வதிப்பீர்
என்று நம்புகிறேன்

## பாடல் - 2286

**காலையில் எழுந்து கர்த்தரைத் தேட**
கர்த்தரை பாடிடுவேன்
கருத்தோடு தொழுதிடுவேன்

உள்ளமே தேடுவேன்
உம்மைத்தான் பாடுவேன்

1. எக்காலமும் எந்நேரமும்
இயேசுவை பாடுவேன்

2. அழைத்தவரே கரம் பிடித்தவரே
உமக்காய் ஓடுவேன்

3. என் ஆயனே என் ஜீவனே
உம்மையே நம்பினேன்

4. அரியணையில் வீற்றிருந்து
அனைத்தையும் செய்கின்றீர்

## பாடல் - 2287

**இயேசு என்ற நாமத்தினால் எப்போதும்**
பிதாவுக்கு ஸ்தோத்திரம்

அல்லேலூயா பாடுவேன்
ஆனந்தமாய் ஆடுவேன்
அதிகாலை வேளையில்
ஆண்டவரை தேடுவேன்

1. சாத்தானை ஜெயித்த நல் நாமமே
சமாதானம் சந்தோஷம் தருமே

2. பாவங்கள் போக்கும் நல் நாமமே
பரிசுத்தம் தந்த நல் நாமமே

3. ஜெயத்தை தந்த நல் நாமமே
ஜெயகிறிஸ்து இயேசு நாமமே

4. அபிஷேகம் தந்த நல் நாமமே
அன்பர் இயேசுவின் நாமமே

## பாடல் - 2288

**கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே**
வாருங்கள் அவர் புகழ் பாடுங்கள்

வாருங்கள் சீயோனுக்கு வாருங்கள்
பாடுங்கள் அவர் புகழ் பாடுங்கள்
சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவீர்கள்
சஞ்சலமும் தவிப்பும் ஓடிப் போகும்

1. நீதியை சரி கட்ட தேவன் வருகிறார்
நியாயம் விசாரித்து பதில் தருகிறார்
உன்னை இரட்சிப்பார் உன்னை திடப்படுத்துவார்
உன் கால்கள் தள்ளாட விட மட்டார்

2. குருடன் கண்கள் பார்வையை பெறும்
செவிடன் காதுகள் கேட்க பெறும்
முடவன் குதிப்பான் ஊமையன் பேசுவான்
நீ கர்த்தரின் மகிமையைக் காண்பாய்

## பாடல் - 2289

**இயேசுவே உம் அருகினிலே**
ஆவலாய் வருகிறேன் எந்நேரமும்
எந்தன் சுவாசம் உம்மையே துதித்திடுமே
எந்நாளுமே எந்தன் வாழ்க்கை
உந்தன் மகிமையை பாடிடுமே
இயேசுவே... இயேசுவே... நீரே

## பாடல் - 2290

**பாத்திரர் நீரே பாத்திரர்**
என் துதிகளுக்கு நீரே பாத்திரர்
உம் சமுகத்தில் நின்று
உம்மை உயர்த்தியே தொழுவேன்
என் துதிகளுக்கு நீரே பாத்திரர்
நீரே பாத்திரர் உம்மை போற்றுவேன்
எனதெல்லாவற்றிலும் உம்மை
உயர்த்திடுவேன்

## பாடல் - 2291

**எல்லாவற்றிலும் நீர் மேலானவர்**
எல்லோரிலும் பெரியவர்
சகலவற்றையும் சிருஷ்டித்தவர்
சர்வத்தில் உயர்ந்தவர் உம்மை போல்
வேறொறு தெய்வமில்லை நீரே நீர் மாத்திரமே
பரிசுத்தர்... பரிசுத்தர்... பரிசுத்தர்...
நீரே நீர் மாத்திரமே நீரே நீர் மாத்திரமே

## பாடல் - 2291-A

**என் மேய்ப்பர் நீர் தானய்யா**
எனக்கென்றும் குறைவேயில்லை

நான் ஏன் கலங்கனும்
என் ஆயன் இருக்கையிலே



அட்டவணை

1. நீதியின் பாதையில் நடத்தி செல்கின்றீர்
உம் மகிமை விளங்கும்படி-நான் ஏன்

2. ஆத்துமா தேற்றுகிறீர் ஆவி பொழிகின்றீர்
புது உயிர் தருகின்றீர்

3. எதிரிகள் கண்முன்னே
வெற்றி தருகின்றீர் விருந்து படைக்கின்றீர்

4. நிச்சயமாகவே வாழ்நாள் முழுவதும்
உம் கிருபை பின் தொடரும்

5. இருள் சூழ் பள்ளத்தாக்கில்
நடக்க நேர்ந்தாலும்
பயமில்லையே பயமில்லையே
வசனமும் ஆவியும் தினமும் தேற்றுதய்யா

6. தலையை எண்ணையால்
அபிஷேகம் செய்கின்றீர்கள்

## பாடல் - 2292

**உன்னை புகழ்ச்சியாக வைத்திடுவார் இயேசு**
உந்தன் பேரை உலகில் உயர்த்திடுவார் இயேசு
சத்துருக்கள் கலங்க சாத்தானும் நடுங்க
உன்னை புகழ்ச்சியாக வைத்திடுவார் இயேசு

1. உன்னோடு கூட இருந்திடுவார் இயேசு
உன்னை உயர்த்தி மகிழ்ந்திடுவார்
சொந்தங்கள் பந்தங்கள் அதிசயிக்க
உன்னை புகழ்ச்சியாக வைத்திடுவார் இயேசு

2. உந்தனுக்காக யாவும் செய்திடுவார் இயேசு
உன்னை மேன்மையாக உயர்த்திடுவார்
இயேசுவின் நாமத்தில் மகிழ்ந்திருக்க
உன்னை புகழ்ச்சியாக வைத்திடுவார் இயேசு

3. இயேசுவின் இதயம் அறிந்திடுவாய் நீயும்
தேவ சித்தம் நீயும் செய்திடுவாயா
இயேசுவின் நாமத்தில் ஜெபித்திடுவாய்
உன்னை புகழ்ச்சியாக வைத்திடுவார் இயேசு

**பாடல் - 2293**

**இயேசு எனக்கு ஜீவன்**
அவர் நாமம் பலத்த துருகம்
என் ஜீவ காலம் அவரை பாடுவேன்

இயேசுவே எனக்கு தேவன்
இயேசுவே எனக்கு ஜீவன்
இயேசுவே எனக்கு மீட்பர்
இயேசுவே எனக்கு ராஜன்
என் ஜீவ காலம் அவரை பாடுவேன்

1. சர்வ வல்ல தேவன் புவிதனிலே வந்தீர்
சகலத்தையும் நீரே நலமாக்கி வைத்தீர்
சர்வ வல்ல தேவன் நீர் தானே
நீர் எனக்காக ஜுவன் தந்தீரே

2. மகிமை நிறைந்த தேவன் மனதினிலே வந்தீர்
மகிமையினால் என்னை
மகிழ்ச்சியாக மாற்றி விட்டீரே
பூரண அழகும் நீர் தானே
என்னை புதிதாக மாற்றி விட்டீரே

**பாடல் - 2294**

**துதி மகிமை கனம் வல்லமை**
என்றென்றும் தேவனுக்கே
எல்லா தேசமும் சர்வ சிருஷ்டியும்
பணிந்திடும் தேவனையே

1. சகல நாவுகள் போற்றும் தேவ மகிமையை
முழங்கால்கள் முடங்கிடும் அவரின் முன்னே
என்றுமே உயர்ந்திடுவீர் என் தேவா
உம் ராஜ்ஜியம் அழியாததே அனாதி தேவா

2. உம் ராஜ்ஜியம் பூமியெங்கும்
ஆளுமே அனாதி தேவா
வேறே தேவன் உமக்கிடாய் இல்லையே
துதிகள் அனாதி தேவா
ஓ... அனாதி தேவா... 4



அட்டவணை

## பாடல் - 2295

**ஆனந்தப் பாடல்கள் பாடிடுவேன்-எந்தன்**
ஆத்தும் நேசரை புகழ்ந்திடுவேன்
அலைச்சல்கள் யாவையும் அகலச் செய்தே
நம் மேய்ச்சலில் எந்தனை மகிழச் செய்தே

1. மேலோக நாடெந்தன் சொந்தமதே
இந்த பூலோக நாட்டமும் குறைகின்றதே
மாயையில் மனம் இனி வைத்திடாமல்
நேசர் காயமதை எண்ணி வாழ்ந்திடுவேன்

2. நம்பிக்கை அற்றோனாய் அலைந்த வேளை
இயேசு நாதன் என் பக்கமாய் வந்தனரே
பாவங்கள் பாரங்கள் பறக்கச் செய்தே
இந்த பாரதில் எனை
வெற்றிச் சிறக்கச் செய்தே

3. அற்புதமாம் அவர் நேசமது-எந்தன்
பொற்பரன் சேவை என் சோகமது
பற்பல கிருபைகள் பகருகின்றார்
ஏழை கற்புடன் அவர் பணி செய்திடவே

4. கானானின் கரையிதோ காண்கிறதே
எந்தன் காதலன் தொனி காதில் கேட்கின்றதே
காலம் இனி இல்லை உணர்ந்து கொண்டேன்
விரைவாக என் ஓட்டத்தை தொடர்ந்திடுவேன்

5. அழைத்தவரே அவர் உண்மையுள்ளோர்
தம் அழைப்பதில் விழிப்புடன்
நிறுத்த வல்லோர்
உழைத்திடுவேன் மிக ஊக்கமுடன்
அங்கு பிழைத்திடவே அன்பர் சமூகமதில்

6. ஜெபமதைக் கேட்டிடும் ஜீவனுள்ள தேவன்
என் பிதா ஆனதால் ஆனந்தமே
ஏறெடுப்போம் நம் இதயமதை-என்றும்
மாறாமல் பதில் தரும் மன்னனிடம்

## பாடல் - 2296

**இயேசுவின் நிந்தையை சுமப்போம்**
வாசலுக்குப் புறம்பே போவோம்

1. சன்பல்லாத் தொபியா சக்கந்தங்களிலும்
துன்புறுத்தும் தீயர் கேள்விகளிலும்
அன்பருடனே இன்பமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

2. ஸ்தேவான் மேல் விழுந்த கற்களை நினைத்து
சீஷர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து
மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

3. கள்ளச் சகோதரர் கைவிடுவார்கள்
சொல்லாதவைகளைச் சுமந்திடுவார்கள்
நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள்
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

4. கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும்
வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும்
நாளெல்லாம் நரரால் நசுக்கப்பட்டாலும்
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

5. வருத்தங்கள் வகை வகையாகவே வரும்
திருத்தங்கள் சிலரால் பொருத்தமாய்ச் சேரும்
செருக்கானவர்களால் நெருக்குதல் நேரும்
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

6. அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும்
விக்கினங்கள் வெகுவாய் சூழ்ந்தாலும்
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தே
புறப்பட்டுப் போகக்கடவோம் -இயேசு

## பாடல் - 2297

**ஏசு கிறிஸ்து நாதர்**
எல்லாருக்கும் ரட்சகர்.

1. மாசில்லாத மெய்த்தேவன்
மானிடரூ புடையார்;
யேசுகிறிஸ்துவென்ற
இனிய நாமமுடையார்; - ஏசு

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதகள்மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்கமுள்ளோர்; - ஏசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்!
பாவிமேல் கோபம் வையார்,
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆக நிற்பார்; - ஏசு

4. தன்னுயிர் தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்தே உயிர்த்த கர்த்தர்; - ஏசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர். - ஏசு

## பாடல் - 2298

**வா வா ஏசுபாதம் தருவா ராசீர்வாதம்**
வருவாய் ஓ இந்நேரம் உனக்கேன் தாமதம்
வாராய் தீவிரமாய்-வாசலண்டை
நிற்கும் நேசர் பாராய்.

1. ஓ காடு மேடாகவே சாடி ஓடும் ஆடே- உன்
கோனார் நாடி தேடி வாரார் உன் காலடி நில்,
நில் நீங்காமல் நில்-நாச பாதை
தனில் சென்றிடாமல் - வா வா

2. ஓ கால் கரம் கன்னம் குருதி பாயு தின்னம்
உருகுதவர் உள்ளம் உனக்கேன் கல்ம னம்
பார் பார் மார்பினில் பார் பாரிலுனக்காய்
தாம் பலியானார் - வா வா

3. ஓ பஞ்சைப் போல் தஞ்சம் உன்
நெஞ்சந்தனில் கொஞ்சம்
ஓ பஞ்சரித்து கெஞ்சும் குரல் கேள் இக்கணம்
கேள் கேள் நேசர் குரல்
வேகமாய் திறந்திடுவாய் வாசல் - வா வா

## பாடல் - 2299

**சாரோனின் ரோஜா இவர்**
பரிபூரண அழகுள்ளவர்
அன்புத் தோழனென்பேன்
ஆற்றும் துணைவனென்பேன்

இன்ப நேசரைக் கண்டேன்
காடானாலும் மேடானாலும்
கர்த்தரின் பின்னே போகத் துணிந்தேன்

1. சீயோன் வாசியே தளராதே
அழைத்தவர் என்றும் உண்மையுள்ளவர்
அன்பின் தேவன் மறக்கமாட்டார்
கரங்களால் அணைக்கின்றார்
ஆறுதல் கரங்களால் அணைக்கின்றார்

2. மலைகள் பெயர்ந்து போகலாம்
குன்றுகள் அசைந்து போகலாம்
மாறா தேவனின் புதுக் கிருபை
காலை தோறும் நமக்கு உண்டு

3. நேசரை அறியா தேசமுண்டு
பாசமாய் சொல்ல யார் தானுண்டு
தாகமாய் வாடிடும் கர்த்தருக்காய்
சிலுவை சுமந்து பின் செல்லுவோர் யார்?

## பாடல் - 2300

**ஜெபவேளை எமக்கானந்தம்**
என்றும் ஜெபமில்லா ஜெயமில்லை
ஜெபம் எங்கள் ஜெயமே

1. இருள் சூழந்த வனம் போன்ற
இருண்ட கெத்செமனேயில்
இறுதி வேளையில் ஜெபித்தீர்
இரத்த வேர்வையும் பெருமூச்சும் பெருகிடவே
அந்த இரவெல்லாம் ஜெபித்தீரையா-இந்த

2. மறுரூப மலைமீதில் தரிசனம் கொடுத்து
உம் மகிமையை அளித்தீரைய்யா
அன்று போல உம் தரிசனம் எமக்கருளும்
எங்கள் அருமை ஆண்டவர் இயேசையா

3. சரீரமோ பெலவீனம் ஆவியோ உயிர்ப்பிக்கும்
சலிப்பின்றி ஜெபித்திடுவோம்
அந்தி சந்தி மத்தியானத்தில் ஜெபித்திடவே
நல்ல அருள் ஆவிவரம் தாருமே

4. ஊர் ஆரோன் இருவரும் கரங்களை சுமந்திட
ஊக்கமாய் ஜெபம் செய்தாரே
பக்தன் மோசே போல் ஜெயம் பெற
ஜெபித்திடவே நித்திய பரனே கிருபை தாருமே

5. உயர் கர்மேல் மலைமீது ஜெபித்திடும்
எலியா போல் துயருற்ற மகள் அன்னாள் போல்
தாசன் தானியேல் எனும் பக்தர் பலர் ஜெபித்த
அந்த தனி ஜெப வரந் தாருமே

**பாடல் - 2301**

**தேவ ஜனமே பாவத்தில் விழுந்தே**
தேவ கிருபை பெலன் இழந்ததே
தேடி மீட்டிடுமே என் இயேசுவே

1. ஆதி அன்பெல்லாம் வாழ்வில் குறைந்தே
ஆடம்பரம் நிறைந்தே பின் மாறினார்
மங்கும் திரிகளெல்லாம் அணையுதே
மனதுருகிடுமே

2. தியாகம், எளிமை, தாழ்மை மறந்தே
சிநேகம், உலகினிலே செலுத்தினார்
ஆதி பிரதிஷ்டைகளும்
உடைந்ததே ஜோதி மங்கிடுதே

3. கள்ளங் கபட வேலையாட்கள்
கால்கள் அலைந்திடுதே கெடுத்திட
நித்ய சுவிசேஷ நன்மைக்குத்தான்
நிதமும் தூஷணமே

4. அந்தி கிறிஸ்து அற்புதங்களால்
மந்தையைக் கலக்கி வஞ்சிக்கவே
தேவன் தெரிந்தெடுத்த பேதைகளும்
தவறி செல்கின்றனர்

5. வல்லமை மிகும் இயேசு நாமம்
கொல்லும் சாத்தானையும் பெலமுடன்
கர்த்தர் கடிந்து கொள்வார்
பிசாசை காலின் கீழ் மிதிப்பீர்

6. நல் விசுவாசம் காணப்படுமோ
நேசர் வருகையிலே எப்படியும்
உந்தன் மணவாட்டி சபைதனை
உயிர்ப்பித்தே அழைப்பீர்

**பாடல் - 2302**

**எந்த நேரமும் எப்போதுமே**
இயேசு எனக்கு ஒத்தாசை
இயேசு ராஜனை ஸ்தோத்தரிப்பேன்
இந்த ஏழையின் ஜெபம் கேட்டார்

1. இக்கட்டில் மனிதர் உதவி
இல்லாமலே அற்றுப் போனாலும்
எனக்கொத்தாசையே தினம் தப்பாமலே
இயேசு நாமத்தில் கிடைத்திடுமே-2

2. சொல்லொண்ணா பாடுகள் சகிக்க
சென்ற காலம் பெலன் தந்தாரே
எந்தன் வாழ்நாளெல்லாம்
தேவ சித்தமெல்லாம்
என்னில் முற்றிலும் நிறைவேறுமே-2

3. சிறுமைப்பட்டோரின் நம்பிக்கை
ஒரு போதும் கெட்டுப் போகாதே
தம்மைத் தேடுவோரை கர்த்தர் கைவிடாரே
தேவன் நமக்கு அடைக்கலமே-2

4. ஒவ்வொரு ஆண்டு முழுவதும்
எவ்வளவோ அற்புதம் செய்தார்
வருங்காலத்திலும் வருகை வரையும்
வாக்குத்தத்தம் தந்து நடத்துவார்-2

**பாடல் - 2303**

**கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்;-எங்கள்**
குருவேசுநாதர் பதங் கும்பிடுகிறேன்.

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்;-எனை
ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;

2. நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன்;-பவ
நாசனைக் க்ருபாசனைக் கும்பிடுகிறேன்;

3. தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்;-நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;

4. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்;-ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்

5. திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்;-தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்;

6. குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்;-யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;

7. அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன்;-என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன்.

## பாடல் - 2304

**நித்திய ராஜா நிர்மல நாதா**
நின் பாதம் பணிந்தேன் இக் காலையிலே
நின் பாதம் பணிந்தேன் இவ்வேளையிலே

என் மன ராஜ்யத்தில்
என்றும் அரசாளுகின்ற
ராஜாதி ராஜாவுக்கே ஸ்தோத்திரம்
இயேசு மகா ராஜாவுக்கே ஸ்தோத்திரம்

1. கண்ணயர்ந்த வேளையிலும்
கண்ணிமைப் போல் காத்தவரே
கற்பகமே உமக்கு ஸ்தோத்திரம்
கண் விழித்த வேளையிலும்
கண் மேல் உம் கண் வைத்து
கருத்தாய் போதித்தவா ஸ்தோத்திரம்

2. இப் பகல் வேளையிலும்
எப்பக்கம் சூழ்ந்து நிற்கும்
இம்மானுவேலே ஸ்தோத்திரம்
உம்முடனே நான் இணைய
என்னுடனே நீர் பிணைய வாழ்ந்திடும்
வாழ்க்கைக்காய் ஸ்தோத்திரம்

## பாடல் - 2305

**ஜீவனின் ஊற்றாமே இயேசு பரன்**
தீர்த்திடுவார் உந்தன் தாகமதை
பாவங்கள் ரோகங்கள் சாபங்கள் போக்கிட
பரிவாய் அழைக்கிறார்

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே
இயேசு வல்லவரே அவர் நல்லவரே
உனக்காகவே ஜீவிக்கிறார்

2. ஆரு மற்றவனாய் நீ அலைந்தே
பாவ உளைதனிலே அமிழ்ந்தே
மாய்ந்திடாது உன்னை தூக்கி எடுத்தவர்
மந்தையில் சேர்த்திடுவார்

3. பரனின் அன்பதை அகமதிலே
சொரிந்து தன் திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப் போல்
தேவ சாயலாக்கி மகிமை சேர்த்திடுவார்

4. வானமும் பூமியும் மாறிப் போயினும்
வாக்கு மாறாதவர் வல்ல மீட்பர்
காப்பார் வழுவாது உள்ளங்கையில்
வைத்தே கலங்கிடதே நீ வா

## பாடல் - 2306

**தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,**
மெய் மனதானந்தமே!
செய்ய நின்செம்பாதம் சேவிக்க இவ் வேளை
ஐயா, நின் அடி பணிந்தேன்

2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்திக்கமலமாம் பூமாலை கோர்த்து நின்
பொற்பதம் பிடித்துக் கொள்வேன்.

3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
தேவே தவறிடினும்,
கூவி விளித்துந் தன் மார்போடணைத்தன்பாய்
யாவும் பொறுத்த நாதா!



அட்டவணை

4. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்
மோக ஏக்கம் யாவும்
தாக்கிடத் தடுமாறித் தயங்கிடும் வேளையில்,
தூக்கித் தற்காத்தருள்வாய்.

5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்
பூசைப் பீடம் படைப்பேன்;
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்.

6. மரணமோ, ஜீவனோ, மறுமையோ, பூமியோ,
மகிமையோ, வருங்காலமோ,
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை?

## பாடல் - 2307

**என்ன ஆனந்த நல் தெய்வச் செய்தி கூறுவேன்**
மெய் ஆனந்தம் பொங்கி புகழ் பாடுவேன்
என் உள்ளத்தில் இயேசு வந்த ஆனந்தம் – பேரானந்தம்

1. தீய வழியில் விரைந்தோடினேன்
மாய உலகை நம்பி வாடினேன்
தீய பாதையில் தேடி வந்தென்னை
நல்ல இயேசு இரட்சித்தாரே ஆக
ஆனந்தம் ஆனந்தம் - என்ன

2. கர்த்தரின் அன்பை அறியாமலே
எத்தன் போல் அலைந்தேன் இப்பாரிலே
பித்தன் போலவே எத்தன் என்னிலே
அன்புக் கூறி இரட்சித்தாரே
ஆ ஆனந்தம் ஆனந்தம் - என்ன

3. எத்தனையோ தெய்வத்தை நேசித்தேன்
நித்தம் பூஜை பலிகள் ஆசித்தேன்
கர்த்தர் இயேசு என் காரிருளிலே
காட்சி அளித்திட்டாரே ஆ
ஆனந்தம் ஆனந்தம் - என்ன

4. சேற்றிலிருந்து என்னை தூக்கினார்
கன்மலையின் மேல் நிறுத்தினார்
கர்த்தரை துதிக்கும் புதுப் பாட்டை
அவர் என் வாயில் கொடுத்தாரே ஆ
ஆனந்தம் ஆனந்தம் - என்ன

5. மாய சந்தோஷம் மாறிப் போனது
தூய சந்தோஷம் என்னில் பொங்குது
என்ன ஆனந்தம் என்ன பேரின்பம்
இயேசு என்னில் வந்தாரே ஆ
ஆனந்தம் ஆனந்தம் - என்ன

## பாடல் - 2308

### பல்லவி

**எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ**
எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்

### சரணங்கள்

1. எவன் அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணமாட்டாரோ
ஆவியில் கபடமில்லாதவன் பாக்கியவான்

2. நான் அடக்கி வைத்த மட்டும் என் எலும்புகள்
நித்தம் என் கதறுதலினால் உலர்ந்தது

3. இரவும் பகலும் என் மேல் உந்தன் கை
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்

4. என் அக்கிரமத்தை நான் மறைக்காமல்
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்

5. கர்த்தருக் கென் மீறுதலை அறிக்கை செய்தேன்
தேவரீர் என் பாவதோஷத்தை மன்னித்தீர்

6. இதற்காகச் சகாயம் கிடைக்குங் காலத்தில்
பக்தியுள்ளவன் உமக்கு விண்ணப்பஞ் செய்வான்

7. மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும்
அப்பொழுது அது அவனை அணுகாது

8. எனக்கு நீர் மறைவிடமாயிருக்கிறீர்
என்னை விலக்கிக் காரும் இக்கட்டுக்கு நீர்

## பாடல் - 2309

**நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்**
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
இயேசென்னை மீட்டாரே

என் நாவிலே புதுப் பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறு பிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்த மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணியதால்
சொந்தம் தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய்ச்
சிந்தி இரட்சித்தாரே - என்

3. கார்மேகம் போல் என் பாவங்கள்
கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமூத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே - என்

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்து விட்டாரே
மா பரமானந்தம் - என்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான
இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி
தஞ்சம் எனக்கீந்தார் - என்

6. மேற்குத் திசைக்கும் கிழக்குக்கும்
மா எண்ணிலா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினார் - என்

7. அங்கேயும் சீயோன் மலைமீதே
ஆனந்தக் கீதங்கள்
ஆயிரம் ஆயிரம் தூதர்கள் சூழ
அன்பரைப் பாடிடுவேன் - என்

## பாடல் - 2310

**ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!**
வாகு தங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா, நமோ நமோ, - அரூரூபா,

2. மாகமண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா, நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா, நமோ நமோ, - மனுவேலா,

3. நாகவிம்பம் உயர் கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ, - நரதேவா,

4. ஏக மந்த்ரமுறு பூமா, நமோ நமோ!
யூக தந்த்ரவதி சீமா, நமோ நமோ!
ஏசு வென்ற திருநாமா, நமோ நமோ, - இறையோனே!

## பாடல் - 2311

**ஆசை மணாளனே ஆமென் நீர் வாருமே**
ஆசை மணாளியும் அழைக்கும் ஓசையே

ஓ ஓ வேகம் வாருமே எம் கர்த்தரே நீர்
ஆ ஆ ஆவல் பெருகுதே அல்லேலூயா
கீதங்கள் பாடி விரைந்து செல்வோமே

1. பிதாவின் நாமமே நெற்றியில் ஏற்றவள்
புதிய பாட்டுடன் சீயோனில் நிற்கிறாள்

2. குற்றங்குறைகளும் மற்றும் கறைகளும்
அற்ற மகிமையை பெற்ற மணவாட்டியாய

3. சுத்த பிரகாசமாம் தாயரின் நீதியாம்
சித்திரத்தையலாம் தேசுடை அணிந்தாள்

4. எப்போ நான் காண்பேனோ
என் ஆசை யேறுதே - பொற்பரன்
இயேசுவைக் கண்டு களிக்கவே

5. பரிசுத்த ஆவியால் மறுரூபமாகியே
திரியேக தேவனை சேவிக்க நித்தியமாய்

6. இயேசுவின் நாமத்தை
பாரெங்கும் சாற்றியே தேசத்தில்
கல் க்ஷேமத்தை தேடி தருவோமே

## பாடல் - 2312

**ஆயிரம் வருட அரசாட்சியே**
பரிசுத்தவான்களின் ராஜ்ஜியமே
பரம பிதா வேத வாக்கிதே
பசுமை பொற்காலம் வருகின்றதே

1. பசுவும் கரடியும் கூடி மேயுமே
புலியும் வெள்ளாடும் படுத்திருக்கும்
ஒருமித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான்

2. இடுக்கண்கள் தீங்கு இழைப்பாரில்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும்
குழந்தையின் கரங்கள்
பாம்பின் மண் புதரில்
களங்கம் பயமின்றி விளையாடுமே

3. வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே
விருட்சங்கள் இனிய கனி தருமே
அமைதியும் நிலவும் சுக வாழ்வு துளிர்க்கும்
அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே

4. கிறிஸ்தேசு ராஜா புவி ஆளுவார்
கிடைக்கும் நல் நீதி எளியவர்க்கே
பரிபூர்ணமடைந்த மெய் தூய பக்தர்கள்
பரனோடு நீடுழி அரசாளவே

## பாடல் - 2313

**உம் சித்தம் செய்திடுவேனே**
உம்மில் மகிழ்ந்து களித்து உம் ஒளி வீசிடுவேன்

1. உம் சித்தம் செய்ய ஒப்புவிக்கிறேன்
என் சித்தம் மாற்றி எனதாசை அழித்து
என் கரம் பிடித்து என் முன்னே நடந்து
இன்னல் நீங்கி பொன்னகர் சேர

2. அனாதி தேவன் சமூகம் முன் சென்றால்
வனாந்தரத்தின் வழிகளை கடப்பேன்
சமுத்திர தண்ணீர் இரண்டாக பிளக்கும்
சாத்தானின் சேனையை பின்னாலே அழிக்கும்

3. நித்திய மகிழ்ச்சி தலை மேல் இருக்கும்
சந்தோஷ மகிழ்ச்சி வந்துமே பிடிக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடி மறையும்
தஞ்சம் உமக்குள் அஞ்சாமல் நிற்பேன்

4. தண்ணீரைக் கடந்தால் என்னோடு இருப்பீர்
அவைகள் என் மேல் புரளுவதில்லை
அக்கினியில் நான் வேகாதிருப்பேன்
அதன் ஜுவாலை பற்றாது ஜொலிப்பேன்

**பாடல் - 2314**

**நற்கனி தேடிடும் நல்லாண்டவா**
நானொரு பாழ் மரம் என்னைப் பாரும்
வாழ்நாளை வீணாளாய் கழித்திட்டேனே
வருந்தும் இப்பாவியைக் கண் நோக்கிடும்

2. மெய்யான திராட்சைச்செடி யேசுவே
கொடியாக இணைந்திட்ட என்னைப் பாரும்
எப்போதும் உம்மில் நான் நிலைத்திருக்க
தப்பாது கனிதர அருள் தந்திடும்

3. உம் பணி செய்திட கனிகொடுக்க
எம்மை நீர் அழைத்திப் தெரிந்து கொண்டீர்
உம் வாக்கை என்னில் நீர் நிறைவேற்றிடும்
உம் சித்தம் நிறைவேற உதவி செய்யும்

4. தினந்தோறும் வேதத்தை விரும்பிடவே
தியானித்து உம்மோடு உறவாடவே
திரளாக உமக்கென்று கனி கொடுக்க
தினந்தோறும் என்னை நீர் சுத்தம் செய்யும்

5. என்னை நான் படைத்திட்டேன் பலிபீடத்தில்
ஏற்று நீர் எடுத்தாண்டு வழி நடத்தும்
இறுதியில் உம் முகம் தரிசிக்கவே
ஏழையாம் எனக்கு நீர் அருள்தந்திடும்

**பாடல் - 2315**

**பாதை தெரியாத ஆட்டைப் போல**
அலைந்தேன் உலகிலே
நல்ல நேசராக வந்து
என்னை மீட்டீரே

1. கலங்கினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன் நீர் என்னைப் பார்த்தீர்
கல்வாரியின் அண்டை வந்தேன்
பாவம் தீர நான் அழுதேன்

2. என் காயம் பார்த்திடு என்றீர்
உன் காயம் ஆறிடும் என்றீர்
நம்பிக்கையோடே நீ வந்தால்
துணையாக இருப்பேனே என்றீர்

## பாடல் - 2316

**வா, வா, ஜெகதீசா-வரந்தரவே**
வா, வா, ஜெகதீசா-இது சமயம்
வா, வா, ஜெகதீசா-உன் மகிமையை
யார், யார், யார், அறிவார்?

1. காவிற் கனி புசித்த ஏழையின் மக்களுக்காய்
பூவில் கனி பாலுண்டவா, புகல் சொல்லாதே

2. இரண்டு மூன்று பேர் கூடித்
தொண்டு புரியும் வேளை
அண்டையில் வருவேன் என்றீரே
அட்டி சொல்லாதே - வா

3. பன்னிரு சீஷர்களும் பரிசுத்த ஆவி பெற்று
பற்பல பாஷை பேசினார், பிரசங்கம் செய்ய

4. கேளுங்கள் அப்பொழுது
கிருபையாகக் கொடுப்பேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றீரே, தாமதமென்ன

5. மோசே முதலாயுள்ள தீர்க்கர் முனிவருக்கும்
ஆசீர்வாதம் கொடுத்தவா, அருள் புரிய

## பாடல் - 2317

**கருணைக் கடலாம் - இயேசுவே**
கனிவுடனே இப்போ - இறங்கிடுமே - எங்கள்

1. வாரும் வல்லமையாய்த் தாரும் வரங்களை
வர்த்திக்க வேணும் விஸ்வா-சத்தை
புகழ்ந்திடவே திரு நா-மத்தை-எங்கள்

2. தாரக மற்ற தரணி யோரை
தாமத மின்றியே மீட்டிட
எழுந்திடுமே இந்நே-ரமே- எங்கள்

3. அப்போஸ்தலர் காலம் போல
அற்புதங்கள் அடையாளங்கள்
அதிசய நாமத்தில் ஓங்-கிட-எங்கள்

4. முடவர் குதிக்க ஊமை துதிக்க
செவிடர் குருடர் கூ-னரும்
சுகமடைந்து உமைப் பா-டிட - எங்கள்

5. கன்னியாகக் கறை களின்றி
மன்னன் தோன்றும் வே-ளையில்
பறந்திடவே சபை மே-கத்தில் - எங்கள்

6. தயா கரமே தஞ்சம் நீரே
தியாகமே மேன்மையாம் தா-சரே
அபிஷேகித்து உபயோ-கியும் - எங்கள்

## பாடல் - 2318

**கடல் கொந்தளித்துப் பொங்க**
கப்பல் ஆடிச் செல்கையில்
புயல் காற்று சீறி வீச
பாய் கிழிந்து போகையில்
இயே சு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்ற மைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்

2. கப்பலிலே போவோருக்கு
கடும் மோசம் வரினும்
இடி, மின் முழக்கம் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரஞ்சோதி
வெயிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி
சாவில் எங்கள் ஜீவனே

3. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்
இயேசு எங்களிடம் வந்து
கப்பலோட்டியாயிரும்
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்

### பாடல் - 2319

**அதிகாலை நேரம் ஆண்டவர் சமூகம்**
அமைதலாய்க் காத்திருப்பேன்
என் இயலாமை மௌனம் அறிவிக்க
அவரை போலாவேன்

2. வடதிசை வாழும் என் குடும்பம்
உடன் என் நினைவில் கலந்து விடும்
தேவனின் வலுக்கரம் என் கரம் அலட்ட
வல்லமை தேவன் வெளிப்படுவார்

3. இல்லாமையே நம் உண்மைநிலை
ஈவது ஒன்றும் தியாகமல்ல
அவர் செய்த உபகாரம் பிரதி உபகாரம்
பெற்றிட என்றும் அற்பமல்ல

4. இலட்சியத்தோடு அர்த்தமுள்ள
பொறுப்பை ஏற்று முனைந்த பின்னர்
அனைவரின் உள்ளமும் சங்கமமாகும்
ஒன்றியம் வழங்கும் தேவனே மகிழ்வார்

5. சாதனையாளர் நாட்டம் சிதறி
வேதனை வழி ஒரு போதும் செல்வதில்லை
நிரந்தர நிறைவும் நீடித்த அர்ப்பணமும்
வெற்றிக்கு நடத்தும் படி கட்டுகள்

6. தனக்கென வாழ நினைவிலும் மறந்து
மற்றவர் மீது நாட்டம் கொண்டால்
சுவிசேஷம் தானாய் சிதறியே வேகம்
சமூகத்தை சீக்கிரம் வசப்படுத்தும்

### பாடல் - 2320

**கண்டில்லையோ கவையில்லையோ**
ஆண்டவர் அழைக்கிறார் கேட்கலையோ
வையகமனைத்தும் அவர் சத்தம் பேச
உன்னையும் விரும்புகின்றார்

1. பிள்ளைகள் அப்பம் கேட்டு நின்றார்
வாலிபர் தெருவில் மூர்ச்சையானார்
வயோதிகர் வகை தெரியாது நின்றார் – இன்று
வழிகாட்டி கிறிஸ்தவரே – கண்டில்லையோ



அட்டவணை

2. அடியவர் தியாகத்தை அணிந்து கொண்டால்
அடியவர் தானாய்த் திருந்திடுவார்
அறியாமை உலகை மூடுவதேன் - என்
பொறுப்பை நான் அறியாததே - கண்டில்லையோ

3. உலகத்தில் வெளிச்சம் வீச வேண்டி
பரலோகத் தந்தை ஆணையிட்டார்
நினைப்பவர் யாரோ உழைப்பவர் எவரோ
உதவுவார் யார் யாரோ - கண்டில்லையோ

## பாடல் - 2321

**எனதுள்ளமே உகந்த வரைத்தேடு**
உதவி பெற நாடு உண்மையுடன்
மன்றாடு எனதுள்ளமே

1. வள்ளல் தாவீதின் குலத்தில் மாதிடமுதித்தவரிவர் எனதுள்ளமே
உள்ளவினை தீர்க்கவந்தவர், இவர் - எனதுள்ளமே

2. வானம் புவி யாவையும் வாரியும் வல்லுயிர்களையும்
ஞானமாய் படைத்தளித்தவர், இவர் - எனதுள்ளமே

3. கோத்திரப் பிதாக்கள் தொழும் கோதில்லா நாதனார்
சாஸ்திர முழுதும் சார்ந்தவர், இவர் - எனதுள்ளமே

4. வெல்லைமலை தன்னிலே புல்லணையில் மீதிலே
வேதபரனாக வந்தவர், இவர் - எனதுள்ளமே

5. சொந்தக்கலிலேயாவில் விந்தையுடனந்த மணப்
பந்தலில் ரசம் பொழிந்தவர் இவர் - எனதுள்ளமே

6. ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரம் பேர்களுக்கு
பந்தி போஜனம் அளித்தவர், இவர் - எனதுள்ளமே

7. காக்கையைக்கொண்டு மெளிய கைம்பெண்ணைக் கொண்டு மெலியா
ஏக்கமறப் பசி தீர்த்தவர், இவர் - எனதுள்ளமே

8. தக்க சிங்கப்பற்களுள்ள தானியேலை அன்புடனே
தற்காத்து ரட்சை செய்தவர், இவர் - எனதுள்ளமே

9. ஏராளமான பாவங்கள் தாராளமாய் நீங்குதற்கு
ஏரோது முன்சென்று வந்தவர், இவர் - எனதுள்ளமே

10. சாபத்தால் நிறைந்த உந்தன் பாவத்தை அகற்றுதற்கு
தாகந்தணிந்திரந்தவர், இவர் - எனதுள்ளமே

11. தேவகோபத்தீயினில் வெந்துருகும் போதினில்
ஆவி ஊற்றி ஆதரித்தவர், இவர் - எனதுள்ளமே

12. தூர தூரமாய் துரத்தப்பட்ட பாவிகளை
ஆறுதல் சொல்லி அழைத்தவர், அவர் - எனதுள்ளமே

## பாடல் - 2322

**பாவி ஓடிவா உன் பாவப்பாரம் தாங்க ஏசு**
பார்த்து நிற்கிறார் பரிதபித்து நிற்கிறார்

1. தாமதமென்ன, உன் சுவாமி ஏசு
நாதரழைக்கும் சத்தம் கேளாயோ
அவர் தஞ்சம் தேடாயோ

2. பின்னிடாதே நீ, உன் தன்மை
இன்னதென்று அவர் முன்னறிவாரே
தம் நன்மை ஈவாரே

3. காலம் போகுது, மாய் மாலம் செய்து
வஞ்சியாமல் மந்தை சேர்ந்துகொள்
கிறிஸ்தன்பை சார்ந்துகொள்

4. தேவபாலனாம், இம்மானுவேலரே
உன் காவல் தேவை வேறென்ன
உனதாவல் வேறென்ன

5. சுத்தஜோதியே தம் ரத்தத்தாலே
உன்னை மீட்க சித்தம் கொண்டிட்டார்
ஆ! சிலுவை தொங்கிட்டார்

6. நொந்த பாவியே, இவ்வந்தகார
லோகந்தனில் தொந்தரை மெய்யே
பல நிந்தைகள் மெய்யே

7. ஜீவ அப்பம் நான் நீ தின்று மகிழ்கொண்டு
ஜீவன் கண்டடை என்றார்
எனைவந்தடை யென்றார்

**பாடல் - 2323**

**உம்மைப் போல் யாருண்டு என்னை நேசிக்க**
உம்மைப் போல் யாருண்டு

1. அம்மையோ அப்பனோ
அண்ணனோ தம்பியோ
எம் முறையானோரோ ஏங்கிடும் மக்களோ

2. அல்லும் பகலுமாய் ஆண்டு முழுவதும்
தொல்லை துக்கத்திலும் தூக்கம் விழிப்பிலும்

3. தங்கமே தாதாவே துங்கவா தூயனே
மங்கா மணாளனே மானிலம் மீட்டோனே

4. பங்கக் குருசினில் பாவி என் மீட்புக்காய்
தொங்கி ஜீவன் விட்ட தேவ குமாரனே

5. லோக சினேகமோ ஏகமாய் சஞ்சலம்
சோகம் கொண்டேனும் மேல் ஏகனே ஏசையா

**பாடல் - 2324**

**அந்த அற்புதம் நடந்த கதை**
பாகம் மிக ஆச்சரியம் ஆச்சரியம்
அற்புதங்களில் எல்லாம் சிறந்த
ஆச்சரிய அற்புதமே

1. நடத்தியவர் தேவன்
நடந்ததென் உள்ளத்திலே
நம்பவும் முடியவில்லை
அனுபவம் புதுமையதால் - அந்த

2. தெய்வீக அன்பிது பேரின்பம் தந்தது
விவரிக்க முடியாத
விளையுகளைச் செய்தது - அந்த

3. கிறிஸ்துவின் ஆளுகை
கிருபையினால் வந்தது
அது கிரியை வழி பெற்றிட
மலிவுப் பொருள் அல்லவே - அந்த

4. சிந்தைதனில் தூய்மை
செயலாற்ற இலட்சியம்
சின்னவன் எந்தனுக்கும்
சிலுவையினால் வந்தது - அந்த

## பாடல் - 2325

**உன்னையன்றி வேறே கெதி**
ஒருவரில்லையெ ஸ்வாமீ!

அன்னை தந்தை உற்றார் கற்றார்-ஆருமுதவுவரோ?
அதிசய மனுவேலா!-ஆசை என் யேசு ஸ்வாமீ! - உன்

1. பண்ணின துரோகமெல்லாம்-எண்ணினா லெத்தனைகோடி,
பாதகத்துக் குண்டோ எல்லை,-பரிதவித்தேனே தேடி,
கண்ணினாலுன் திருவடிக்-காண நான் தகுமோதான்?
கடையனுக்கருள்புரி-மடியுமுன் யேசு ஸ்வாமீ! - உன்

2. அஞ்சியஞ்சித் தூர நின்றென-சஞ்சலங்களை நான் சொல்லி,
அலைகடல் துரும்புபோல்-மலைவு கொண்டே னானையோ!
கெஞ்சிக் கெஞ்சிக் கூவுமிந்த-வஞ்சகன் முகம்பாராய்க்
கிட்டி என்னிடம் சேர்ந்து-க்ருபைவை யேசு ஸ்வாமீ! - உன்

3. கள்ளனாம் கபடனென்னைத்-தள்ளிவிட்டா லாவதென்ன,
கல்லைப்போல் கடினங்கொண்ட-கர்ம சண்டாளன் பாழும்
உள்ளமுங்கரைந்தே உன்னறன்-உயர் சிலுவையினன்பால்
உலையிலிட்ட மெழுகாய்-உருகவை யேசு ஸ்வாமீ! - உன்

## பாடல் - 2326

**எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!**
எளியன்மேல் இரங்கையனே

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே;
நிலைவரம் எனில் இல்லை; நீ என் தாபரமே - எத்தனை

1. பந்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறுங் கரம்கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள், தூய சிநேகா! - எத்தனை

2. என்றன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே,
உன்றன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய், எனை ஆளும்! - எத்தனை



அட்டவணை

3. ஆயங் கொள்வோன்போல், பாவ ஸ்திரீபோல்,
அருகிலிருந்த கள்ளன்போல்,
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்;
நீ எனக்காகவே மரித்தனை, பரனே! - எத்தனை

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்,
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்;
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல னான்,
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே, அப்பனே! - எத்தனை

**பாடல் - 2327**

**ஆதி மெய்தேவனே உம் அன்பிற்கோர் எல்லையுண்டோ**
நீதியாம் ஜோதி அனாதி தேவனே - உம்
நீதிக்கோர் எல்லையுண்டோ - இயேசு

1. எத்தனையோ பாவங்கள் அத்தனே அகற்றினீர்
பத்திலோர் பங்கு போதா தென்றெண்ணி - நான்
தத்தம் செய்தேன் உமக்கே - ஆதி

2. எத்தன் எனக்காக - இன்னுயிர் கொடுத்தீரே
எதைச் செலுத்துவேன் இயேசுவின் அன்பிற்கு
இதயம் ஈடாகுமோ? - ஆதி

3. ஆழ்ந்த கடலில் அமிழ்ந்து போன என்னைத்
தூக்கி எடுத்த உம் அன்பை நினைக்க என்
என் துதிகள் தான் போதுமோ? - ஆதி

4. பாவத்தில் மாண்ட என்னைக் கோபத்தால் அழிக்காமல்
இரட்சித்த உந்தன் அன்பை நினைத்து - நான்
பட்சமாய் போற்றிடுவேன் - ஆதி

5. கெத்சமெனே பூங்காவில் பட்சமாய் வேண்டி நிற்கும்
இரத்த வியர்வையில் வேதனை தரும் உம்
சத்தம் தொனித்திடுதே - ஆதி

6. அலையும் புயலுமாய் அமிழ்த்தி வீழ்த்துகையில்
நான்தான் பயப்படாதிருங்கள் என்று உம்
அன்பின் தொனி கேட்குதே - ஆதி

7. எண்ணும் நன்மை எதுவும் எண்ணிலே இல்லை ஐயா
பின்னே ஏன் என்னை நேசித்தீரோ
என்னில் கொண்ட உம் அன்புதானோ - ஆதி

## பாடல் - 2328

**அழைப்பின் குரல் கேட்டேன் - என்**
ஆண்டவர் என உணர்ந்தேன்
அருகினில் தயங்கி நடை பயின்றேன்

பின்னே வா என முன் சென்றார் - 2

1. அறிவில் குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது
ஏன் என்றேன்
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே - பின்னே

2. வலிமை குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
வலியவர் கொடுக்கினை வதைத்திடவே - பின்னே

3. குறைகள் நிறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
கருவில் இருந்துன்னைத் தெரிந்தவன் நான் - பின்னே

## பாடல் - 2329

**பாதம் ஒன்றே வேண்டும்;-இந்தப்**
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

1. நாதனே, துங்க மெய்-வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய-தூதர் தொழுஞ் செய்ய - பாதம்

2. சீறும் புயலினால்-வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல்-நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமழ் கொண்ட-வாசனைத் தைலத்தை
ஆசையுடன்-மரி-பூசிப் பணிந்த பொற் - பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்-தூக்கி நடந்த நற் - பாதம்

5. நானிலத்தோர் உயர்-வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்-தானே கொடுத்த உன் - பாதம்

6. பாதம் அடைந்தவர்க்-காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு-நாதனே, என்றும் உன் - பாதம்



அட்டவணை

### பாடல் - 2330

**பார்ப்பேனே என் நேசரை நான்,**
ஆர்ப்பரிப்பேன் கூடி யந்நாள்.

தீர்த்தார் என் கண்ணீரையெல்லாம்
சாற்றுவேன் நான் துதியே, துதியே.

1. பாரில் என்தன் பாவம் தீர்த்தார்,
பரத்தில் என்தன் ஆவல் தீர்ப்பார்,
அகத்திலே சந்தோசமளித்தார்,
இகத்தி லென்றும் துதியே, துதியே,

2. ஆயிரங்களிற் சிறந்தோர்,
ஆத்துமாவின் நேசரவர்,
ஆபத்திலென் தோழனவர்,
நாமத்திற்கே துதியே, துதியே.

3. மண்ணின் சாயல் மாறி யானும்,
மகிமை யேறி மாசற்றோனாய்,
மன்னனோடு மணவறையில்,
மகிழ்வேன் என்றும் துதியே, துதியே.

### பாடல் - 2331

**கனி கொடுப்போம் கனி கொடுப்போம்**
இயேசுவுக்காய் நாம் கனி கொடுப்போம்
அல்லேலூயா (3)

1. இயேசுவே மெய்யான திராட்சச் செடி
நாமே கனிதரும் அவர் கொடிகள்
இயேசுவின் வசனம் நம்மைச் சுத்தி செய்யவே
மிகுந்த கினகளைக் கொடுத்திடுவோம்

2. அன்பு சந்தோஷம், சமாதானம்
நீடிய பொறுமை, நற்குணம் தயவு
விசுவாசம் சாந்தம் இச்சையடக்கமுமாம்
ஆவியின் நிறைவின் அடையாளமாம்

3. தனக்குத்தானே கனிகொடுத்து நின்ற
பயனற்ற இஸரவேல் பாழானதே
சுவர் மீது படர்ந்து பிறர்க்குக் கனிதரும்
யோசேப்பு போல நாம் துளிர்த்திடுவோம்

4. உதடுகளின் கனி ஸ்தோத்திரத்தை
உன்னத பலியாய்ச் செலுத்திடுவோம்
உள்ளமாம் வேரில் பரிசுத்தமிருந்தால்
உதடுகள் செயல்கள் பரிசுத்தமாம்

5. கனிதரும் சீடர் நாம் கனம் பெறுவோம்
கனிகளால் பிதாவைக் கனப்படுத்துவோம்
ஜீவ விருட்சத்தின் கனிகளைப் புசித்து
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்போம்

## பாடல் - 2332

**கண்கள் கலங்காதிரு,**
நெஞ்சம் திகையாதிரு
கண்ணின் இமை போல
உனைக் காப்பார் இயேசு

கர்த்தர் திருப் பாதம் தினம் தேடுவோம்
கர்த்தர் திரு நாமம் தினம் போற்றுவோம் 2
துன்பம் பறந்தோடுமே இன்பம் சேருமே
செல்வம் வந்து கூடுமே வறுமை ஓடுமே
வாழ்வெல்லாம் அவரை நினை
உந்தன் வாழ்வெல்லாம் அவரே துணை - கண்கள்

1. சோதனைகள் வேதனைகள்
சூழ்ந்த போதிலும்
சோர்ந்திராமல் காத்திடுவார்
இயேசு ராஜனே
இதயத்தை திறந்திடு
இயேசுவை அழைத்திடு - 2
வாழ்வெல்லாம் ஒளி வீசுமே - உந்தன்
வாழ்வெல்லாம் நீர் ஆகுமே - கண்கள்

2. வார்த்தையினால்
அற்புதங்கள் செய்த நாதனே
உன் வாழ்க்கையில்
அற்புதங்கள் காண செய்குவார் - 2
உன்னை உணர்ந்திடு
இயேசுவை அறிந்திடு
உலகெல்லாம் உன் சொந்தமே - அதில்
உயர்த்திடுவார் உனை என்றுமே - கண்கள்

## பாடல் - 2333

**நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம்**
இந்த பொய்யுலகை நம்ப வேண்டாம்
நேசம் காட்டித் துரோகம் செய்யும்
இந்தப் பாழுலகை நம்ப வேண்டாம்

2. உன்னைப் பெற்ற மாதா எங்கே?
போஷித்த உன் தந்தை எங்கே?
போய் விட்டாரோ போய் விட்டாரோ
உன்னை விட்டுப் போய் விட்டாரோ

3. அண்ணனெங்கே தம்பி எங்கே?
அக்காளெங்கே தங்கை எங்கே?
ஆசையாகத் தேடி வைத்த
ஆஸ்தி செல்வம் தானு மெங்கே?

4. திருடனைப் போல சாவு வரும்
திடுக்கிடுவாய் நீயுமப்போ
பாம்பின் வாயில் தவளைப் போல
பரிதவிப்பாய் பரிதவிப்பாய்

5. இயேசு நாதர் பாதம் தேடு
மீட்பை இன்றே பெற்றுக் கொள்வாய்
குருசில் தொங்கும் நேசர் பாரும்
குணமாக்குவார் இப்போ வாரும்

## பாடல் - 2334

**ஸ்தோத்திரப் பலிகளை செலுத்துவோம்**
ஆத்துமாவின் நேசரை புகழ்த்துவோம்
புனிமாய் புனிமாய் கனிவுடன் கரம் உயர்த்தி
கர்த்தரை உயர்த்துவோம்

1. உதட்டின் காளை உன்னதர்க்களிக்கிறோம்
உத்தம இருதயம் படைக்கிறோம்
முற்றுமே முற்றுமே குற்றமற்றதாக
எம்மை சுத்தமாக வைக்கிறோம்

2. பங்கமின்றி தாசரெம்மை காத்ததால்
துங்கனேசு தூய்மை நமக்கு ஈந்ததால்
மகிமையே மகிமையே நீங்கிடாதிருந்து
நம்மை தீங்கினின்று மீட்டதால்

3. பரிசுத்தம் செய்யும் பலி ஆயினார்
தரிசிக்க தம்மை வழி காட்டினார்
கனிவுடன் கனிவுடன் பாரிசத்திருந்தெமக்காய்
பரிந்து பேசுகின்றார்

4. சீயோனின் துதிகளை திரட்டுவோம்
தீயோனின் மதில்களை புரட்டுவோம்
ஸ்திரமுடன் ஸ்திரமுடன் லேகியோன் படைகளை
எதிர்த்து நின்று விரட்டுவோம்

5. ஓய்வில்லாத ஸ்தோத்திரங்கள் சாற்றியே
பேய் பிசாசின் அஸ்திரங்கள் அழித்துமே
தூயனை தூயனை தூய்மையுடன் போற்றி
சுவிசேஷமதை சாற்றுவோம்

## பாடல் - 2335

**பலியிலும் மேலாக தேவன் விரும்புவது**
கீழ்ப்படிதலாமே

ஏதேனில் யேகோவா ஏவாளிடம் கண்டது
இன்றும் நமக்கு இடறலாயிருப்பதாலே

1. கன்று கடாவோ முதற் கனியோ
இவை யாவும் ஒன்றுமே வேண்டாமாம்
நன்று புரிந்து நயமாக நாம் கீழ்ப்படிந்து
என்றும் நடப்பதே நம் இயேசு விரும்புவது

2. ஏக சுதனான ஈசாக்கை பலியிட
ஏகனான தகப்பன் பாலகனை
பலி பீடத்தின் மேலே வைத்து
கத்தியை ஓங்கும் வரை
கர்த்தனும் சோதித்தாரே – பலி

3. அரசனான சவுலும் ஆண்டவர்
வார்த்தை மீறி பொருளாசையால் ஓடி
தேவ திரு வார்த்தைக்கு
கீழ்ப்படியாமையினால்
தேவ சமூகம் நீங்கி திடனற்று அலைந்தானே

## பாடல் - 2336

**மா தயவே தேவ தயவே**
மானிலத்தில் தேவை எனக்கே

1. வாக்களித்த வானபரன்
வாக்கு மாறார் நம்பிடுவேன்
நம்பினோரைக் கைவிடாரே
நற் பாதமே சரணடைந்தேன் - மா

2. இயேசுவின் பொன் நாமத்தினால்
ஏதென்கிலும் கேட்டிடினும்
தம் சித்தம் போல் தந்திடுவார்
தந்தையவர் எந்தனுக்கே - மா

3. சத்துருக்கள் தூசித்தாலும்
சக்தியீந்தென் பட்சம் நிற்பார்
ஆதரவே அளித்திடுவார்
ஆறுதலாய் வாழ்ந்திடுவேன் - மா

4. என்னில் ஏதும் பெலனில்லையே
எந்தனுக்காய் இராப் பகலாய்
நீதியுள்ள நேசர் இயேசு
நிச்சயமாய் பரிந்துரைப்பார் - மா

5. தாய் வயிற்றில் இருந்தது முதல்
தமக்காய் என்னைத் தெரிந்தெடுத்தார்
என் அழைப்பும் நிறைவே
எப்படியும் கிருபை செய்வார் - மா

6. தம் வருகை தரணியிலே
தாமதமாய்க் கடந்தடினும்
சார்ந்தவரை அனுதினமும்
சோர்ந்திடாமல் ஜெபித்திடுவேன் - மா

## பாடல் - 2337

**நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்**
இராப்பகலை ஒழுங்காய் கடக்கிறேன்
என்றும் நடக்கிறேன் பின் திரும்பேனே
இயேசு ரட்சகர் பின்னே

**பல்லவி**

நடக்கிறேனே இரட்சகருடனே
கடக்கிறேனே கரம் பிடித்தே
விழிப்பாயிருந்து ஜெயங்காண்பேனே
ஒளியில் நடக்கிறேனே

2. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் காரிருள் மூடினும் பயப்படேன்
சீயோன் கீதம் பாடிச் செல்வேனே
ஆயன் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

3. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
வான் ஆசீர்வாதங்கள் அடைகிறேன்
வீண் பாரங்களை விடுகிறேனே
என் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

4. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
மேய்ப்பன் அவர் சத்தம் அறிகிறேன்
நோய் வாய்ப்பட்டாலும் நடப்பேனே
தூயன் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

5. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்
முன்னோடின அவரை நோக்குகிறேன்
என் சிலுவை எடுத்துச் செல்வேனே
என் இயேசுவின் பின்னே - நடக்கிறேனே

## பாடல் - 2338

**அன்பர் இயேசுவின் நாமத்திலே**
இன்று இன்பமாய் நாம் மகிழ்வோம்
பாவியை மீட்டார் பரம சுதன்
ஆவியை ஈந்தார் அருள் குமாரன்
காசினி மீதினில் கருணை பெற்றோமே
ஆவியில் மகிழ்ந்து நாம் அகமகிழ்வோம்

1. மாமிச சிந்தை மகா மரணம் - தூய
ஆவியின் சிந்தை ஜீவன் சமாதானம்
அச்சாரமாம் ஆவி அருளினாரே
உச்சித வரங்களும் உவந்தனரே
எச்சரித்துணர்ந்த சத்திய ஆவியை
இச்சணம் ஏற்றி நாம் ஆர்ப்பரிப்போம்

2. நம் பட்சத்தில் தேவன் இருந்தால்
நம்மை விரோதிப்பவன் யாரோ
சொந்த மைந்தனை அன்பாய் ஈந்த பரன்
எந்த நன்மை அன்பாய் ஈந்திடாரோ
துன்பம் பசி மோசம் பட்டயம் மரணம்
அன்பரை விட்டெம்மை பிரித்திடுமோ

3. மேகம் போல் சாட்சி சூழ்ந்து நிற்க
கெட்ட பாவப் பாரம் நெருங்குமோ
வேகமாய் இயேசுவண்டை ஓடிடுவோம்
தாகமாய் ஈசன் அன்பை நாடிடுவோம்
ஜெகமதில் மாந்தர் ஜெயம் பலம் பெற்றோம்
அகமகிழ்ந்தார்ப் பரிசுத்தானந்திப்போம்

## பாடல் - 2339

**பல்லவி**

**எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார் – இயேசு**

1. இயேசுவின் வருகை மிக சமீபமாகுதே – இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால் – பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும்போது! - வேகம்

2. பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்துப் பார்த்து லோகத்தை வெறு – இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே! - வேகம்

3. பாவங்கள் இருதயத்தில் ஏதேனுண்டோ – சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமோ – உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்தமாக்காயோ? - வேகம்

4. லௌகீகக் கவலையோடும் பெருந்தீனியும் – வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே – உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே! - வேகம்

5. மேகத்தில் இயேசு ராஜன் வேகம் வரவே பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் – அன்று
மேகமேறிட நீயும் ஆயத்தந்தானா? - வேகம்

6. ஆகாயத்தில் நடக்கும் கல்யாணத்திலே – சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து – அப்போ
அங்கிருப்பாயோ பூவில் ஓடி ஒளிப்பாயோ? - வேகம்

7. அந்தி கிறிஸ்து அரசாட்சி செய்யும் வேளையில் - கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் - நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக்கொள்வாயோ? - வேகம்

## பாடல் - 2340

**பலன் கொடுப்பீர் நல்ல பலன் கொடுப்பீர்**
பண்பட்ட நிலம் போல் பலன் கொடுப்பீர்

வழியோரமா? நான் கற்பாறையா?
முட்புதரா? நான் நல்ல நிலமா?

1. இறைவனின் வார்த்தை விதையாகும்
அறியா உள்ளம் வழியோரம்
பறவைகள் விரைந்தே தின்பது போல்
பகைவனாம் தீயோன் பறித்திடுவான் - பலன்

2. மண்ணில்லாப் பாறை நிலமாகும்
மனதில் நிலையற்ற மனிதர்களே
வேரற்ற வாழ்க்கை வாழ்வதனால்
வெய்யிலில் வார்த்தை கருகிவிடும் - பலன்

3. முட்செடி புதராம் மனுவுள்ளம்
முளைத்திடும் ஆசைகள் நெறித்திடவே
இறைவனின் வார்த்தைகள் வளரவில்லை
இறுகியே ஆசைகள் கொன்றதினால் - பலன்

4. இறைவனின் வார்த்தை உணர்ந்திடுவோர்
குறையில்லா பண்பட்ட நிலமாகும்
அறுபது முப்பது நூறு என்றே
அறுவடை எடுப்பார் தம் வாழ்விலே - பலன்

## பாடல் - 2341

**பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே**
மங்கிப்போன மனம் புது வாழ்வில் மலர்ந்திடுதே

1. தீயவர், திருடரும், கொடியவர் கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் - ஓடியே வா - பொங்கி

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினை
பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகா இராஜன் உன்னைத் தான் அழைக்கிறார்
நம்பி நீ ஓடியே வா - பொங்கி

3. கிருபையின் நாட்களைத் தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில் வருந்திட வேண்டாம் நீ
அழைக்கிறார் - ஓடியே வா - பொங்கி

**பாடல் - 2342**

**கனியே கர்த்தர் விரும்பும் மதுரக்**
கனியே காணவே அன்பால்
உன்னைத் தேடி வாராரே

1. பூத்து மலரும் பூவல்ல
பூவையர் விரும்பும் பூவல்ல
மாந்தர் விரும்பும் பூவல்ல
மகிமை இயேசு விரும்பும் அன்பு - கனி

2. ஜாதி விலகிடும் தோஷமல்ல
அது சாத்தானால் வரும் தோஷமல்ல
மக்களால் உண்டாகும் தோஷமல்ல
அது மகிபன் விரும்பும் சந்தோஷம் - கனி

3. சாத்திரம் காட்டும் தானமல்ல
அது சத்திரம் கட்டிடும் தானமல்ல
மாந்தர்கள் செய்திடும் தானமல்ல
நம் மகிபர் விரும்பும் சமாதானம் - கனி

4. புத்தகம் எழுதும் மையல்ல
அது பூவையர் தீட்டிடும் மையல்ல
மாந்தரை மயக்கும் மையல்ல
மா கோபத்தில் காட்டிடும் பொறுமை - கனி

5. இத்தரையோர் காட்டும் இரக்கமல்ல
ஏழைக்கு இரங்கும் இரக்கமல்ல
பெருமையில் காட்டும் இரக்கமல்ல
நம் பிரியர் விரும்பும் தயவு - கனி

6. நாவலர் பழகும் குணமல்ல
நல்லோராய் நடக்கும் குணமல்ல
சன்மார்க்கம் என்ற குணமல்ல
சத்தியத்தில் நிற்கும் நற்குணம் - கனி

7. பூக்களில் உண்டாகும் வாசமல்ல
புது சேர்க்கையில் உண்டாகும் வாசமல்ல
பன்னீரால் உண்டாகும் வாசமல்ல
பரன் இயேசுவில் வைக்கும் விசுவாசம் - கனி

8. சாவில் விளங்கும் சாந்தமல்ல பால்
சத்தத்தை அடக்கும் சாந்தமல்ல
சாந்த சொரூபி இயேசு நுகத்தில்
சாய்ந்து சுமக்கும் சாந்தம் - கனி

9. அமர்ந்திருப்பதடக்கமல்ல
அலகை வெறுப்பதடக்கமல்ல
உலக இச்சைக்கு ஓடி விலகி
உன்னதரை சேரும் இச்சை அடக்கம் -கனி

10. ஏமாற்றம் என்ற இலைகளோடு
இயேசு தேடும் கனி இல்லை
அந்தோ சாபம் இறங்குது
அத்திமரம் பட்டுப் போகுது - கனி

## பாடல் - 2343

**வளர்ந்தே பெருகுக என்றே - உளம்**
மகிழ்ந்தே புகழ்ந்திட வாரீர்
தளர்ந்தே சோர்வுறும் கால்களே - பலம்
அடைந்தே நடந்திட வாரீர்

பெருகுவோம் - வளர்ந்து பெருகுவோம்
தேவன் அருளும் ஆவியின் அருமையாம்
ஒளியில் - வளர்ந்தே பெருகுவோம்

2. பிரிவினை எழுந்திடும் நேரம் - நம்மை
கரிசனை யோடவர் இணைத்தார்
உரிமையாய் ஒருமையில் வளர - அவர்
பரிவுடன் தினம் நடத்திடுவார்

3. தூய்மையில் தவறிய வேளை - நம்மை
தூயவர் தூக்கியே எடுத்தார்
தூய்மையின் கரம் கொண்டு மேலும்
நம்மை தாங்கியே தினம் அணைத்திடுவார்

4. ஒளியென உலகினில் வந்தார் - நம்மை
ஒளியென விளங்கிட அழைத்தார்
ஒளிதரும் தீபங்களாக - என்றும்
ஒளிர்ந்திட ஓடியே வாரீர்

## பாடல் - 2344

**மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் பரன்**
மகிமை யுற்றுமே மகிழ்வோம்

மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிமையில் மகிழ - மகிழ்

1. வானில் யாவரும் மகிழ - இயேசு
வாருமே என்றுமே பகர
மாறுவோர்க்கொரு சிகரம் - மன
தாரத் தற்பனதருள
மகிமை, கனமும், மகிமையில் மிகவும் மகிழ - மகிழ்

2. சுத்த ஜீவனுடைய - தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய - மகா
கர்மங்கள் அகன்றகல
மகிழும் தினமும், மகிபரின் தினமும் வரவே - மகிழ்

3. அடிமையானவர் கூடி - பரன்
அளித்த பொன் முடி சூடி
ஆயிரமாண்டுகளாகக் கடன்
மாறியே அரசாள்
மயிலும், குயிலும் ஆடும் புலியுடன் வாழ - மகிழ்

4. வானம் பூமியுமகல - நவ
வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல - கடும்
ரோக மோடியே விலக
சுகமும், ஜெபமும், சகலரும் சகித்து மகிழ - மகிழ்

5. பொன்னால் வீதிகளுடைய - அரும்
சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர வொளியே - நரர்
கண்டு களித்திடு மகலே
கண்ணீர் கவலையும் நண்ணா நகரில் மகிழ - மகிழ்

6. பளிங்கு போல் ஜீவ நதியே - இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமில்லையே - அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம் இயேசுவில் நித்தியம் மகிழ - மகிழ்

7. சுத்த ஆவியும் சுதனும் - செய்த
மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும் அங்கு
உற்று உள்ளம் மகிழ
போற்றிப் புகழ்வோம், தூதர் செயலில் மகிழ - மகிழ்

## பாடல் - 2345

**ஒரு குடும்பம் ஒரு குடும்பம்**
உலகமெல்லாம் ஒரு குடும்பம்

இயேசு ராஜா நம் தந்தை
நாமெல்லாரும் அவர் பிள்ளைகள் - ஒரு குடும்பம்

1. நம்மில் நிறங்கள் வேறாயினும்
பேசும் மொழிகள் பலவாயினும் (2) - இயேசு

2. வாழும் இடங்கள் வேறாயினும்
வாழும் முறைகள் பலவாயினும் (2) - இயேசு

3. அன்பு என்ற ஒரு சொல்லிலே
அவனியெல்லாம் ஒன்றாகுமே (2) - இயேசு

4. இயேசு சென்ற வழி செல்லுவோம்
இன்ப வாழ்க்கை நாம் காணுவோம் (2) - இயேசு

## பாடல் - 2346

**கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால்**
அநேகத்திற் கதிகாரியாய்
மாற்றுவேன் என்ற என் நேசரே
நீர் என்னையும் மாற்றிடுமே

1. வாழ்வில் நேரும் போராட்டங்கள்
தாக்கும் பல துன்பங்கள் - 2
அத்தனையும் சகித்திட நீர் பெலன் தாருமே
உன்னத பெலன் தாருமே

2. சோர்பில்லாது ஜெபித்திட
பாம் சலிப்பில்லாது உழைத்திட - 2
உத்தமமாய் வாழ்ந்திட நீர் பெலன் தாருமே
உன்னத பெலன் தாருமே

3. மரணம் என்னை சந்திக்கும்
நாள் வரையும் உண்மையாய்
உத்தமமாய் ஜீவிக்க பெலனை
உன்னத கிருபை தாருமே

**பாடல் - 2347**

**ஆவியே என்னை நடத்தும்**
தூய்மையை என் வாழ்விலே அருளும்
வேதம் சொல்லும் பாதை செல்ல - 2
தேவ ஆவியை அருளும்

1. எந்தன் இருள் நீங்க
உந்தன் அருள் வேண்டும்
உம் சாயல் நான் காண வேண்டும்
பாவ எண்ணங்கள் கொண்ட உள்ளம்
பரிசுத்தமாய் மாற வேண்டும்
உம்மைக் காணும் கண்கள் வேண்டும்
உம்மோடு நான் வாழ வேண்டும்
உம் போல நான் மாற வேண்டும்

2. அந்தகார இருள் நோக்கி செல்லும்
மாந்தர்கள் உம்மைக் காண வேண்டும்
உந்தன் மீட்பை இந்த பூமி
எங்கெங்கும் நான் கூற வேண்டும்
உந்தன் திரு வார்த்தை சொல்லும் வரம் யாவும்
என் வாழ்வில் நான் காண வேண்டும்
மாறாத உம் அன்பும் வேண்டும்

**பாடல் - 2348**

**நீ உலகில் தனிமரம் உன் சோகம் நிரந்தரம்**
ஏற்ற துணை என்று நீ இயேசுவை பின்பற்று



அட்டவணை

1. செல்வம் சேர்கையில்
உன்னை சுற்றம் சூழுவார்
துன்பம் சூழ்கையில்
உன்னை குற்றம் காணுவார்
தனியாய் பிறந்தோம் தனியாய் மரிப்போம்
துணைகள் ஏணடா
பயனே வாழ்வில் குறியாய் கொண்ட
துணைகள் வீணடா

2. வாழும் நாளிலே உன்னை
வாழ்த்துவோர் கோடியே
வருந்தும் நாளிலே அவர் பிரிவார் ஓடியே
உலகில் காணும் துணைகள்
எல்லாம் மரணம் வரையிலே
மரணம் தழுவும் நேரம்
உடன் வருவோர் யாரிங்கே

3. இருளில் நடக்கையில்
உன் நிழலும் மறைந்திடும்
உருவம் தளர்கையில்
உன் உறவுகள் பறந்திடும்
பணத்தை அழகை விரும்பும்
மனித உறவை வெறுத்திடு
உறவாய் உயிராய் பிரியா துணை வரும்
இயேசுவில் நிலைத்திடு

## பாடல் - 2349

**இயேசுவின் சிநேகம் எத்தனை இன்பம்**
ஆனந்தம் அதை நாம் தியானிப்பது
அன்பின் நீளம் ஆழம் உயரம்
யாரறிவார் இந்த பூமியிலே

1. ஆதரவின்றி நான் அலைந்திட்ட வேளை
ஆறுதல் தந்தென்னை அணைத்திட்ட அன்பு
தூரமாய் நானும் சென்றிட்ட போதும்
நேயமாய் என்னை தேடிய அன்பு

2. மகிமையின் தேசம் துறந்து இப்பூவில்
மானிடனாய் எங்கும் அலைந்திட்ட அன்பு
தூய தன் ரத்தம் சிந்தி பாவ மனிதனை
மீட்ட இயேசுவின் அன்பு

3. பாரினில் எங்கும் காண்பதில்லை
பரமன் இயேசுவின் அன்பதைப் போல
அன்னை அன்பிலும் அதிகம் அன்றோ
தேவன் நம்மேல் கொண்ட அன்பின் ஆழம்

## பாடல் - 2350

**இன்று நீ மரித்தால் போவதெங்கே**
என்பதை உணர்வாய் நீ மனமே
மனிதன் வாழ்வோ சிறு பயணம்
முடிவாய் வருமே அவன் மரணம்

1. இரண்டு பாதைகள் உன் எதிரில்
மரணமோ ஜீவனோ உன் கரத்தில்
தேவனின் பாதையை தெரிந்து கொண்டால்
நித்திய வாழ்வை சுதந்தரிப்பாய்

2. ஒரு தரம் பிறப்பு ஒரு தரம் இறப்பு
இதுவே மனிதர்க்கு பொது விதிப்பு
மறுபடி பிறந்த மனிதன் மட்டும்
மரணத்தை மீண்டும் ருசிப்பதில்லை

3. புகையாய் மறையும் நம் வாழ்வு
விதி விலக்கு இதிலே கிடையாது
பரமன் இயேசுவை நோக்கிப்பார்
பரலோகில் உனக்கு இடமளிப்பார்

## பாடல் - 2351

**ஆராதனை ஆராதனை ஆராதனை**
ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை

1. அல்லேலூயா பாடுகின்ற ஆராதனை
ஆனந்த முழக்கமிடும் ஆராதனை
அனைவரும் விரும்புகின்ற ஆராதனை

2. ஆலோசனை தருகின்ற ஆராதனை
அழுகையை மாற்றிடும் ஆராதனை
அற்புதங்கள் நடப்பிக்கும் ஆராதனை

3. ஆத்துமாக்கள் ஒன்றுகூடும் ஆராதனை
ஆத்தும நேசரை உயர்த்துகின்ற ஆராதனை
அக்கினி இறங்கிடும் ஆராதனை
அனுக்கிரகம் பெற்றிடும் ஆராதனை

## பாடல் - 2352

**உன்னதரே உத்தமரே ஆராதனை உமக்கே**
மேசியாவே இயேசு ராஜா ஆராதிப்போம் உம்மையே

ஆராதனை ஆராதனை ஆராதனை என்றுமே
ஆராதனை ஆராதனை ஆராதனை உமக்கே

1. இக்கட்டு நாளில் அரணான கோட்டை
புகலிடம் ஆனீர் அன்றோ
உம் வல்ல கரம் மீட்டு காக்க
திகிலுக்கு தூரமானோம் - ஆராதனை

2. மேகஸ்தம்பமே நிழலானவரே
வழி நடத்தும் மேய்ப்பரே
அக்கின ஸ்தம்பமாய் நடக்கும்
பாதைக்கு தீபமானவரே - ஆராதனை

3. அல்பாவும் நீரே ஒமேகாவும் நீரே
மகிமையால் நிறைந்தவரே
அன்பானவரே ஆட்டுக் குட்டியே
கல்வாரி நாயகனே - ஆராதனை

## பாடல் - 2353

**பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்**
எனக்கு முன்பாக நீ சமபூமியாவாய்
தலைக் கல்லை நான் கொண்டு வருவேன்
கிருபை உண்டாக ஆர்ப்பரியுங்கள்

1. வியாதியின் பர்வதமே எம்மாத்திரம்
யேகோவா ராஃபா முன் சம பூமியாவாய்
ஆரோக்கியத்தோடு ஆர்ப்பரிப்பேன்
சவுக்கியத்தோடு ஸ்தோத்தரிப்பேன்

2. வறுமையின் பர்வதமுமே எம்மாத்திரம்
வாழ்வளிக்கும் வல்லவர் முன் சமபூமியாவாய்
வளமான வாழ்க்கை வாழ்ந்திருப்பேன்
வாழ்நாளெல்லாம் நான் மகிழ்ந்திருப்பேன்

## பாடல் - 2354

**துதிகனம் மகிமை என் ராஜாவுக்கே**
ஸ்தோத்திர கீதம் என் தேவனுக்கே
அல்லேலூயா ஆர்ப்பரிப்போம்
ஆனந்தமாய் நாம் ஆராதிப்போம்

1. மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மனதுருக்கம் உடையவரே
மங்கா வாழ்வு அளிப்பவரே
மனதார உம்மை ஸ்தோத்தரிப்பேன்

2. கிருபை இரக்கம் உடையவரே
கிராமங்கள் பட்டணங்கள் நடந்தவரே
கிரையம் தந்து மீட்டவரே
கிரீடம் சூட்டி உம்மை போற்றிடுவேன்

3. வல்லமை மேன்மை அணிந்தவரே
வலுசர்ப்பத்தை மிதித்தவரே
வாக்குத்தத்தம் கொடுத்தவரே
வாழ்நாளெல்லாம் உம்மை வாழ்த்திடுவேன்

## பாடல் - 2355

**அற்புதரே அற்புதரே உம்மை**
ஆராதனை செய்கிறேன்
அதிசயங்களை காண செய்தீரே
ஆர்ப்பரித்து என்றும் மகிழ்வேன்

1. கோடான கோடி ஸ்தோத்திரங்கள்
கோலும் தடியும் தேற்றியதால்
கோத்திரங்கள் உம்மை பாடட்டும்
கோஷத்துடனே முன் செல்லட்டும்

2. தூயாதி தூயனை துதித்திடுவேன்
துயரங்களை அவர் நீக்கினதால்
துரிதமாய் நான் செயல்படுவேன்
துளிர்க்கும் ஆசீர் கண்டிடுவேன்

3. மன்னாதி மன்னனை சந்திப்பேன்
மணவாட்டி ஸ்தானத்தில் நின்று நான்
மத்திய வானில் மகிழ்ச்சியுடன்
மங்களம் பாடி ஆடிடுவேன் – அற்புதரே

## பாடல் - 2356

**இயேசு எந்தன் நேசரே**
எந்நாளும் போற்றுவேன்
இரத்தம் சிந்தி மீட்டதால்
எப்போதும் வாழ்த்துவேன் - 2

1. பாவம் நிறைந்த பாவியாம் என்னை
ஜெகத்தின் மீது தேடியே வந்து
ஜீவனை ஈந்து என்னை இரட்சித்த
செல்லவ குமாரனே இயேசு ராஜா
செல்லவ குமாரனே - இயேசு

2. நானே வழியும் சத்தியம் ஜீவன்
என்னாலேயன்றி நித்திய ஜீவன்
இல்லையென்றீரே ஏக கர்த்தாவே
யெகோவா தேவனே இயேசுராஜா
யெகோவா தேவனே - இயேசு

## பாடல் - 2357

**மணவாளன் இயேசு மகிமையால் சபையை**
நிறைத்திடும் நேரமிதே
உந்தன் சபை உந்தன் மகிமையை காணட்டும்
என்றென்றுமாய் அதை காணச் செய்யும்

1. ஆசரிப்பு கூடாரத்தினில்
கோத்திரத்தாரின் மத்தியில் இறங்கி
மகிமையாய் வெளிப்பட்ட தேவன்
இந்த மணவாட்டி உம்மை காணச் செய்யும்

2. கன்மலையின் வெடிப்பில் நிறுத்தி
உந்தன் மகிமையை காண செய்தீர்
சிலுவையின் நிழலதில் நின்று
உந்தன் மகிமையை காணச் செய்யும்

3. மறுரூபமலையின் மேல் மகிமை கண்டு
மாறா ஆனந்தம் கொண்டோர் போல்
அன்பின் மகிமையை நான் காண
அன்பனே அருபனே இரங்கும்

## பாடல் - 2358

**என் ஆசை நீர்தானையா – நேசரே (2)**
என் ஆசை நீர்தானையா
என் நேசரே என் தெய்வமே – 2
என் ஆசை நீர்தானே – 2

1. சாரோனின் ரோஜா இவர்
பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமே (2)
காட்டு மரங்களுள் நேசர் கிச்சிலி மரமாம்
என் மேல் பறக்கும் நேசக் கொடியும் அவரே

2. என் நேசர் வெண்மையானவர்
அவர் பதினாயிரம் பேரில் சிறந்தவர் (2)
நேசரின் கண்கள் புறாக் கண்கள் – 2
அவை எனக்காய் கண்ணீர் சிந்திடும் கண்கள் – 2

3. நான் எந்தன் நேசருடையவள்
என் நேசர் என்னுடையவரே (2)
என் புறாவே என் உத்தமியே – 2
என்று சொல்லி என் நேசர்
அணைத்துக் கொள்வாரே – 2

## பாடல் - 2359

**என் ஆசையெல்லாம்**
அன்பர் இயேசுவாக மாறும் வேளையிலே
இன்பம் பொங்குதையா
என் பாச மலரே என் நேச உயிரே
என் ஆசையெல்லாம் நீர்தானே (2)

1. திராட்சை ரசத்திலும் மதுரம்
கிச்சிலி பழங்களிலும் இன்பம்
நேசத்தால் சோகமடைந்தேனே
ஆற்றிடும் தேற்றிடும் – நாதா
ஆற்றிடும் தேற்றிடுமே – என்

2. மாதளம் ரசத்திலும் இனிமை
தூதாயிம் பழங்களிலும் புதுமை
அக்கினி ஜுவாலை போன்ற அன்பு
வெள்ளங்கள் தணிக்க முடியாது
அன்பே வெள்ளங்கள் தணிக்க முடியாது – என்



அட்டவணை

3. பரிமள தைலத்திலும் வாசனை
முத்திரை மோதிரத்திலும் வலிமை
மாணம் போல் வலிய உந்தன் நேசம்
தண்ணீர்கள் அவிக்க முடியாது - நாதா
கண்ணீர்கள் அவிக்க முடியாது - என்

4. தேன் கூட்டு தேனைப் போலே சுவைப்பேன்
காயதான பாலைப் போலே பருகுவேன்
உந்தன் அன்பை பருகி மகிழ்வேனே
இதயத்தைக் கவர்ந்து கொண்டீரே
அன்பே இதயத்தைக் கவர்ந்து கொண்டீரே - என்

## பாடல் - 2360

**என் ஆசையெல்லாம் நீர்தானையா**
உம் ஆலயத்தில் தங்கியிருப்பேன்
ஜீவனுள்ள நாளெல்லாம்
உம் பாதம் அமர்ந்திருந்து
உந்தன் வழிதனைக் காண்பேன்
என் ஆசையெல்லாம் நீர்தானையா...

1. சூலமித்தி! சூலமித்தி! என்றழைக்கும் குரல் கேட்டு
என் உயிரே என் உயிரே
என்று என்னை அர்ப்பணித்தேன் நாதா
என் ஆசையெல்லாம் நீர்தானையா...

2. அக்கினி ஜுவாலையாகி எனக்குள் நிதம் இறங்கி
என்னை நீர் உருவாக்கி
பொற் பாத்திரமாக்கிக் கொண்டீரே
என் ஆசையெல்லாம் நீர்தானையா...

3. ரூபவதி! ரூபவதி! உன் நேசம் இன்பம் என்றீர்
மதுரமே! மதுரமே!
உம்மோடென்றும் தங்கியிருப்பேனே
என் ஆசையெல்லாம் நீர்தானையா...

4. சிறுமையின் பாதையிலெல்லாம்
என்னோடு கூட இருந்தீர்
தாழ்வில் என்னை நினைத்தவரே
என் கண்ணீரைத் துடைத்த இயேசுவே

## பாடல் - 2361

**என்ன அழகு இயேசுவின் கண்கள் - 2**
அக்கினி மயமான அழகுக் கண்கள்
என்னை உற்று நோக்கி
ஆழம் அறியும் கண்கள் - 2
என்ன அழகு இயேசுவின் கண்கள்...

1. என் பாவம் போக்கும் பரிசுத்த கண்கள்
என் ஜீவன் காக்கும் ஜீவக் கண்கள்
என் பாதை நோக்கும் தேவக் கண்கள்
என் அன்பரின் அழகுக் கண்கள் - 2

2. பூமியெங்கும் உலாவும் கண்கள்
அதின் குடிகளை ஆராயும் கண்கள்
உறங்காது என்னைக் காக்கும் கண்கள்
என் இனியரின் இனிய கண்கள் - 2

3. பாலினால் கழுவிய கண்கள்
நேர்த்தியாய்ப் பதித்த ஒப்பற்ற கண்கள்
நதி ஓரம் தங்கும் புறாக் கண்கள்
என் ராஜாவின் ராஜ கண்கள் (2)

4. நீதியையே பேசிடும் கண்கள்
அனுதினம் என்னோடு உறவாடும் கண்கள்
என் உயிரோடு கலந்த கண்கள்
என் உயிரான இயேசுவின் கண்கள் (2)

## பாடல் - 2362

**கேரூபீன்கள் சேராபீன்கள்**
போற்றிடும் தேவ சாயல் கண்டேன் (2)

1. சிங்காசனத்தின் சாயல் கண்டேன்
மரகதம் போன்ற பிரகாசம் கண்டேன்
இரத்தினக் கல் போன்ற அழகை கண்டேன்
யேகோவா தேவனின் வெளிச்சம் கண்டேன்

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே
பரிசுத்தர் அவர் பரிசுத்தரே

2. ஏழு ஆவிகளை அங்கு கண்டேன்
அக்கினி தீபங்கள் எரியக் கண்டேன்-2
பளிங்குக் கொப்பான கடலை கண்டேன்
கண்களால் நிறைந்த ஜீவனைக் கண்டேன்

3. பலிபீடமதில் நெறுப்பைக் கண்டேன்
சேராபீன்கள் அதை எடுக்கக் கண்டேன்
பூமியிலே அக்கினி போடக் கண்டேன்
மனுஷர் மத்தியலே எரியக் கண்டேன்

4. ஆலயம் மேகத்தினால் நிறையக் கண்டேன்
அக்கினி நதி அங்கு பாயக் கண்டேன்
கர்த்தரின் மகிமை எங்கும் ஒளிரக் கண்டேன்
ராஜாதி ராஜன் இயேசு வீற்றிருந்தார்

## பாடல் - 2363

**கேருபீன்களும் சேராபீன்களும்**
போற்றி, துதித்து பாட்டுப் பாடுவர் (2)
கேருபீன் மத்தியில் வீற்றிருப்பார்

உயிருள்ள சிங்காசனம் - கேருபீன்
உயிருள்ள சிங்காசனம்

கேருபீன்களும் சேராபீன்களும்
போற்றி, துதித்து பாட்டுப் பாடுவர்
போற்றி, துதித்து பாட்டுப் பாடுவர்

1. பொற் கச்சை அணிந்தவரை பாட்டுப் பாடு
நிலையங்கி தரித்தவரை புகழ்ந்து பாடு (2)
மனுஷ குமாரனுக்கு பாட்டுப் பாடு
உனக்குள் வாழ்பவரை
புகழ்ந்து பாடு - புகழ்ந்து பாடு

2. கர்த்தத்துவம் உடையவரை பாட்டுப் பாடு
நீண்ட ஆயுள் உடையவரை புகழ்ந்து பாடு (2)
மனுஷ குமாரனுக்கு பாட்டுப் பாடு
மகிமையின் ராஜாவை நீ
புகழ்ந்து பாடு - புகழ்ந்து பாடு

3. மின்னலின் நிறமுடையவரை பாட்டுப் பாடு
படிகப் பச்சை தோற்றத்தை நீ புகழ்ந்து பாடு (2)
மனுஷ குமாரனுக்கு பாட்டுப் பாடு
அக்கினி தெய்வத்தை நீ
புகழ்ந்து பாடு - புகழ்ந்து பாடு

4. ஆரவாரத்தோடு நீ பாட்டுப் பாடு
அழகுள்ள தெய்வத்தை நீ புகழ்ந்து பாடு
ஜீவன் தந்தவருக்கு பாட்டுப் பாடு
உயிருள்ள இயேசுவை நீ
புகழ்ந்து பாடு - புகழ்ந்து பாடு

**பாடல் - 2364**

**அன்பே என் ஆருயிரே என் கல்வாரி நாயகரே**
ஆசாரியனாய் நான் வந்தேனையா
பலி செலுத்த வந்தேனையா

சரணம் சரணம் ஐயா 3
உம் பாதம் சரணம் ஐயா

2. கல்வாரி சிலுவையாமே
வெண்கல பலிபீடமே
நேசரே ஆட்டுக்குட்டி அவர்
இரத்தத்தை தொழுதிடுவோம் - சரணம்

3. ஜீவ ஆவியானவரே
என்னைக் கழுவும் தண்ணீர் தொட்டி
என்னை ஆவியில் சுத்தமாக்கி
பரிசுத்த ஸ்தலத்தில் புகுவேன் - சரணம்

4. பரிசுத்த ஆவியானவர்
நீரே எரியும் குத்து விளக்கே
உம்மை வாழ்த்தி வரவேற்கிறேன்
என் இதய ஆசனத்தில் - சரணம்

5. உம் தேவ சமூகத்திலே
சூடான அப்பங்கள் உண்டே
உந்தன் அப்பமாம் வசனத்தாலே
என்னை திருப்தியாக்குமையா - சரணம்

6. தூப பலிபீடத்தின் முன்
நான் ஆவியில் தொழுதிடுவேன்
புதுப் பாடல்கள் பாடிடுவேன்
நடனமாடி ஸ்தோத்தரிப்பேன் - சரணம்

7. திரையும் விலகியதே
கிருபாசனத்தின் முன் நிற்கிறேன்
சாட்சி பெட்டியாம் கிறிஸ்து மூலம்
விண்ணப்பங்களை ஏறெடுப்பேன் - சரணம்

## பாடல் - 2365

**என் பிரியமே! என் ரூபவதி!**
என்ன வேணும் சொல்

இயேசு மணவாளனின் இன்ப மார்பு போதுமே
அதில் சாய்ந்துறவாடும் வாழ்வு வேண்டுமே

1. முள்ளுகளுக்குள் லீலி புஷ்பம் நீதான்
ஸ்திரிகளுக்குள்ளே பிரியமானவளும் நீதான்
என் நாமத்திற்காக நொறுக்கப்பட்டவளும் நீதான்
உன்னை என் மணவாளியாய் ஏற்றுக் கொண்டேனே - என்

2. பள்ளத்தாக்கின் லீலி புஷ்பம் இயேசுவே
குமாரருக்குள் பிரியமானவரும் இயேசுவே
என் பாவத்திற்காக நொறுக்கப்பட்டவரும் இயேசுவே
உம்மை என் மணவாளனாய் ஏற்றுக் கொண்டேனே - என்

3. ஆத்தும நேசரை தேடி அழைந்தவள் நீதான்
விடாது அவரை பற்றிக் கொண்டவளும் நீதான்
அவர் இருதயத்தை கவர்ந்து கொண்டவளும் நீதான்
உன்னை அவர் மணவாளியாய் ஏற்றுக் கொண்டாரே - என்

4. வெள்ளம தணியா நேசம் கொண்டவரும் இயேசுவே
வலக்கரத்தால் என்னை அணைத்துக் கொண்டவரும் இயேசுவே
முத்திரையாய் என்னை பதித்துக் கொண்டவரும் இயேசுவே
உம்மை என் மணவாளனாய் ஏற்றுக் கொண்டேனே - என்

## பாடல் - 2366

**பரிசுத்த ஆவி என்னோடிருக்கிறார்**
இருக்கிறார்... இருக்கிறார்....
ஜீவத்தண்ணீர் என்னிலே
பொங்கிப் பொங்கி வழியுதே
பொங்கிப்பொங்கி பொங்கிப்பொங்கி வழியுதே
வழியுதே... வழியுதே...

1. ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி
ஆலோசனையும் பெலனும் அருளும் ஆவி
அறிவையும் கர்த்தருக்குப் பயப்படும்
பயத்தையும் அருளும் ஆவி
என்னோடிருக்கிறார் (2) - பரிசுத்த

2. ஏழைக்கு சுவிசேஷம் சொல்லிடும் ஆவி
அபிஷேகம் பண்ணி என்னை ஆட்கொண்ட ஆவி (2)
இருதயம் நருங்குண்டு சிறைப்பட்ட மக்களை
விடுவிக்கும் ஆவி என்னோடிருக்கிறார்

3. நொறுங்குண்ட மக்களை குணமாக்கும் ஆவி
குருடரின் கண்களை திறந்திடும் ஆவி (2)
தாகமுள்ள மக்களுக்காய் வாக்களிக்கப்பட்ட ஆவி
தேற்றரவின் ஆவி என்னோடிருக்கிறார் - பரிசுத்த

4. உலகம் கண்டிராத சத்திய ஆவி
நமக்குள்ளே வாசம் பண்ணி ஜெயம் தரும் ஆவி
சத்திய வசனத்தை கருத்தாய் போதிக்கும்
பிதாவின் ஆவி என்னோடிருக்கிறார் - பரிசுத்த

## பாடல் - 2367

**உம்மை நம்பி சந்தோஷித்தேன் ஐயா**
உம்மை நம்பி கெம்பீரித்தேன் ஐயா
உம்மை நம்பி சந்தோஷித்தேன் ஐயா
என்னைக் காப்பாற்றும் என் தெய்வமே - 2

1. கர்த்தாவே உம்மை நம்பினேன்
ஒருபோதும் வெட்கம் அடையாமல்
உமது நீதியின் நிமித்தம்
என்னை விடுவித்தருளும் ஐயா - 2 - உம்மை

2. சிங்கக்குட்டி பட்டினியாய் இருந்து
தாழ்ச்சி அடைந்து போனாலும் கூட
கர்த்தரை தேடுவோர்க்கென்றும்
ஒன்றுமே குறைவதில்லை - 2 - உம்மை

3. கர்த்தர் எந்தன் மேய்ப்பராய் இருக்கிறார்
நான் தாழ்ந்து போகவே மாட்டேன்
புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்தும் - 2 - உம்மை

4. கருணை தெய்வத்தை நம்பினேன்
காருண்ய கர்த்தரை நம்பினேன்
காட்டுப் புஷ்பங்களை உடுத்தும் என் தெய்வமே
எனக்கு இரக்கம் செய்யும் ஐயா - 2 - உம்மை

## பாடல் - 2368

**யாருக்குமே கிடைத்திபா பாக்கியம் தந்தீரையா**
இந்த ஏழை மகளுக்கு...
ஏழை இதயம் கொண்டேனையா
உம்மை அனுதினம் தரிசிக்க (2)

1. துன்மார்க்க மனிதன் கர்வத்தினால்
அன்பு தேவனைத் தேட மாட்டான் (2)
நானோ உந்தன் முகத்தையே
ஓடி ஓடித் தேடினேன் - அப்பா
நீர் என்னைக் கைவிடமாட்டீர் இயேசையா - யாருக்குமே

2. இரட்சிக்க அவர் கரம் குறுகவில்லை
பொல்லாத மனிதரும் உணரவில்லை (2)
நானோ உந்தன் கைகளையே
முற்றிலும் நம்பி நின்றேன்
என்னை நீர் இரட்சித்து
அலங்கரித்தீர் இயேசையா - யாருக்குமே

3. உயிருள்ள தண்ணீரை தருவேன் என்றீர்
விசுவாசம் அற்றவன் நம்பவில்லை (2)
தாகத்தோடு உம்மிடம் நான்
கேட்டுப் பெற்றுக் கொண்டேனே
நித்திய ஜீவ நீரூற்றுக்களை இயேசையா - யாருக்குமே

4. ஆறுதல் இழந்து தவிக்கையில்
மனிதரை நம்பி ஏமாந்தனரே (2)
என் உள்ளத்திலே விசாரங்கள்
பொங்கிப் பெருகையிலே
உந்தனின் ஆறுதல் தேற்றிடுமே இயேசையா - யாருக்குமே

## பாடல் - 2369

**ஆசை நேசரே! என் அன்பு நேசரே!**
உச்சிதமான அன்பைச் சொரியும் நேசரே
ஆசை நேசரே...!



அட்டவணை

1. பரலோகத்திலே உம்மையல்லால் யாருண்டு
பூலோகத்திலே வேறு விருப்பம் இல்லையே
என் மாமிசமும், இருதயமும்
மாண்டு போனதே
தேவன் என்றென்றைக்கும் என் பங்கானார்
ஆசை நேசரே...!

2. அதிகாலையிலே ஐயா உம்மை தேடுவேன்
உம் நாமத்தின் மீதில் நான்
தாகமாயிருந்தேன் (2)
பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க
ஆசையாயிருந்தேன்
உந்தன் வல்லமையும், மகிமையும்
கண்டேன் ஆசை நேசரே...!

3. துக்கத்தினாலே என் கண்கள் தொய்ந்ததே
அனுதினம் நானே ஐயா
உம்மைக் கூப்பிட்டேன் (2)
மானானது நீரோடையை
வாஞ்சித்தது போல
எந்தன் ஆத்துமா உம்மை
வாஞ்சிக்குதே ஆசை நேசரே...!

4. எனக்காய் இழந்தீர் ஐயா
எனக்காய் இழந்தீர்
எல்லாவற்றையும் எனக்காய் இழந்தீரே (2)
உம் அன்புக்கீடாய் நன்றியோடு
என்னத்தைக் கொடுப்பேன் ஐயா
என்னையே உமக்காகக் கொடுத்தேன்

## பாடல் - 2370

**மகிமை மேகத்தில் நான் ஏறி வருவேன்**
மகிமை ராஜாவை நான் தரிசிப்பேனே (2)
தூதர் சேனையோடு என் ஜெபவேளையில் 2
ஆவியில் களிகூர்ந்து மறுரூபமாகி நான்
மகிபனை தரிசிப்பேனே - 2

1. முட்செடியின் மத்தியிலே
தோன்றிய மகிமை .... ஆ... ஆ...
இரட்சகனாய் மோசேயை அழைத்த மகிமை
மேக ஸ்தம்பமாய் அக்கினி ஸ்தம்பமாய்
பாதை காட்டின மகிமையே மகிமை - மகிமை

2. மேகமாக சீயாய் மலையில் தங்கிய
மகிமை... ஆ... ஆ...
தாசனோடு முகமுகமாய்ப் பேசின மகிமை
அக்கினிக் கரங்களால் தேவப் பிரமாணத்தை
எழுதிக் கொடுத்த மகிமையே மகிமை - மகிமை

3. ஆசரிப்புக் கூடாரத்தை மூடின
மகிமை... ஆ... ஆ....
கூடார வாசலிலே பேசின மகிமை
கிருபாசனம் மீதினில்
கேருபீன்கள் நடுவில் மோசேயோடு
உறவாடின மகிமையே மகிமை - மகிமை

4. இரட்சகரின் இரத்தத்தால் கழுவின
மகிமை... ஆ... ஆ...
ஆலயமாய் என்னையுமே மாற்றின மகிமை
பரலோகத் தகப்பனும் பரிசுத்த குமாரனும்
எனக்குள்ளே வாசம் செய்யும் மகிமையே மகிமை - மகிமை

## பாடல் - 2371

**காட்டுப் புறாவின் இதயமே**
என் ஆசை நேசருக்கே
ஆத்துமாக்களுக்காய் நான் கதறி அழுதிட
ஓர் இதயம் தாருமே உம் இதயத்தை தாருமே

1. காயம் பட்ட இதயம்
கல்வாரி நாயகா உம் இதயம் (2)
காயங்களோ உம் இதயத்தை
நீர் எனக்கு தந்தீரே
உம் இதயத்தை தந்தீரே எனக்கு தந்தீரே... 2

2. சித்தம் செய்யும் இதயம்
இயேசு ராஜனின் இதயம் (2)
பிதாவின் சித்தம் செய்திட
நீர் எனக்கு தந்தீரே
உம் இதயத்தை தந்தீரே எனக்கு தந்தீரே

3. மனது உருகும் இதயம்
மாசற்ற தேவா உம் இதயம் (2)
பரிந்து பேசி நான் ஜெபித்திட
நீர் எனக்கு தந்தீரே
உம் இதயத்தை தந்தீரே எனக்கு தந்தீரே

4. அன்பு சொரியும் இதயம்
அருள் நாதர் இயேசுவின் இதயம் (2)
அன்போடு நானும் உழைத்திட
நீர் எனக்கு தந்தீரே
உம் இதயத்தை தந்தீரே எனக்கு தந்தீரே

## பாடல் - 2372

**வல்லமை வல்லமை வல்லமை**
உயிர்த்தெழும்பும் ஆவியின் வல்லமை
உனக்குள்ளாய் பாயட்டும்
எனக்குள்ளே இறங்கட்டும்
அற்புதம் நடக்கட்டும்
அதிசயம் காணட்டும்
என் கண்கள்தான்

வல்லமை வல்லமை வல்லமை வல்லமை
வல்லமை வல்லமை வல்லமை

1. பள்ளத்தாக்கிலே இறங்கிய வல்லமை
கால்கள் எலும்புகளில் வீசிய வல்லமை (2)
அசைவு உண்டாக்கும் தேவ வல்லமை
காலூன்றி நிற்கச் செய்த ஆவி வல்லமை

2. இரவெல்லாம் காற்றாய் இறங்கிய வல்லமை
கடலை இரண்டாக பிரித்திட்ட வல்லமை (2)
பாதை காட்டின தேவ வல்லமை
வெற்றி சிறக்கச் செய்த ஆவி வல்லமை

3. பரலோக காற்றாய் இறங்கிய வல்லமை
குமுறல் உண்டாக்கும் ஆவியின் வல்லமை
அக்கினியாய் இறங்கும் தேவ வல்லமை
புதிய நாவை தந்த ஜீவ வல்லமை

4. மரித்த இயேசுவை எழுப்பிய வல்லமை
மறுரூபமாக்கிய தேவனின் வல்லமை (2)
உன்னில் வாசம் பண்ணும் ஆவி வல்லமை
சாவை வென்றுவிட்ட ஜீவ வல்லமை

## பாடல் - 2373

**என் இரத்தமெல்லாம் துடிக்குது**
இயேசு இயேசுன்னு சொல்லுது (2)



அட்டவணை

இதயமும் உம் நாமத்தை
ஓயாமல் கூப்பிடுதே – 2

1. உம் இரத்தத்தில் நான் பிறந்தேனே
உமக்கு நான் மகளானேனே (2)
இயேசையா... என் இயேசையா... 2
உந்தன் வித்து எனக்குள்ளே

2. உம் உடலல நான் புலித்தேனே
உம் சரீரத்தின் அவயமானேனே (2)
இயேசையா... என் இயேசையா ... 2
எலும்புக்கும், மாம்சத்திற்கும்
உரியவளானேனே – 2

3. கன்மலையின் பகுதியானேனே
உம்மை நான் தரித்துக் கொண்டேனே
இயேசையா... என் இயேசையா ...2
உமது அச்சடையாளம் ஏற்றுக்
கொண்டேனே –2

4. இயேசுவின் சாயலானேனே
ஆவியினால் கழுவப்பட்டேனே (2)
இயேசையா... என் இயேசையா ...2
ஆவியிலே இசைந்து நான்
உம்மோடொன்றானேன் – 2

## பாடல் - 2374

**வெள்ளைக் குதிரையின் மேல்**
ஏறி வருகிறார்
ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா
மகிமையின் தேவன் இயேசு (2)

எக்காளம் ஊதிய சேனைகள் தொடர்ந்திட
யுத்த வீரனாய் சாத்தானை அழிக்க
இயேசு வருகிறார் – வெள்ளைக்

1. அக்கின ஜூவாலை கண்கள்
என் ஆசை நேசர் வருகிறார் (2)
நீதியின் சூரியன் வருகிறார்
கிரீடங்கள் மேல் ஜெயகிரீடங்கள்
அணிந்து இயேசு வருகிறார் – வெள்ளை

2. இரத்தத்தில் தோய்த்த வஸ்திரம்
என் உயிரான இயேசு வருகிறார் (2)
சத்தியமுள்ளவர் வருகிறார்
கோடான கோடி குதிரைகள் சூழ
வார்த்தை வருகிறார் - வெள்ளைக்

3. வாயினால் கூர்மை பட்டயம்
என் ஆத்தும நேசர் வருகிறார் (2)
யுத்தத்தில் வல்லவர் வருகிறார்
அக்கினிக் கடலில் சாத்தானின்
சேனையை அழிக்க வருகிறார் - வெள்ளைக்

4. மகிமையின் வெள்ளை சிங்காசனத்தில்
அமர்ந்திருந்தவர் வருகிறார் (2)
ஜீவனுள்ளவர் வருகிறார்
ஜீவாதிபதியாய் நியாயந்தீர்த்திட
இயேசு வருகிறார் - வெள்ளைக்

## பாடல் - 2375

**அழாதே நீ அழாதே**
அழாதே என் செல்வமே
அழாதே என் செல்வமே

உனக்காக நான் இரத்தம் சிந்தி
உன்னையே மீட்டுக் கொண்டேனே
இரத்தத்தால் தூக்கி எடுத்தேனே

1. கடன்கள் உன்னைச் சூழ்ந்துகொண்டதோ
கையின் பிரயாசங்கள் வீணாய் போகுதோ
உன் மீட்பர் உயிரோடிருக்கிறார்
உன் கடனை மாற்றுவார்
உன்னை ஆசீர்வதிப்பார் - 2

2. உன் உள்ளமெல்லாம் உடைந்து போனதோ
வீண் பழிகலால் நீ சோர்ந்து போனாயோ
உன் கர்த்தர் உயிரோடிருக்கிறார்
ஆற்றித் தேற்றுவார் - உன்னை
அனைத்துக் கொள்ளுவார். - 2

3. இழப்புகளால் துவண்டு போனாயோ
உன் ஜீவனை வெறுத்து விட்டாயோ
உன் ராஜா உயிரோடிருக்கிறார்
வெற்றி தருவார்
உன்னை உயர்த்தித் தேற்றுவார் - 2

4. மனக் குழப்பங்களால் கலங்குகின்றாயோ
உடல் வியாதிகளால் தவித்து போனாயோ
உன் இயேசு உயிரோடிருக்கிறார்
உன் பயத்தை போக்குவார்
நல்ல சுகத்தை தருவார் – 2

## பாடல் - 2376

**பரலோகம் திறக்கட்டும் பரிசுத்தர் பாதத்தில்**
புறப்படும் ஜீவத்தண்ணீர்
நம்மை மகிழ்ச்சி ஆக்கட்டும் (2)
நான் பாடிப் பாடி மகிழ்வேன் –
ஆடி ஆடித் துதிப்பேன் – 2
அணை கட்ட முடியாத அன்பரின் அன்பிலே

1. தூதரோடு பாடுவேன்
சேனையோடு மகிழ்வேன் (2)
பரலோக பாஷை பேசியே
தேவாதி தேவனை ஆராதிப்பேனே

2. நடனமாடிப் புகழ்வேன்
மகிழ்ச்சியோடு தேடுவேன் (2)
சர்வ சங்க சபைதனிலே
பரிசுத்தவான்களோடு ஆராதிப்பேனே

3. சிருஷ்டிகரைப் பணிவேன்
ஸ்தோத்திரம் செலுத்தித் துதிப்பேன் (2)
சேராபீன்களோடு சேர்ந்து
மகிமை, கனம் செலுத்தி ஆராதிப்பேனே

4. இரட்சகரைப் போற்றுவேன்
நாயகரை வாழ்த்துவேன் (2)
சிங்காசனத்தின் தேவனை
தூத மகிமையோடு ஆராதிப்பேனே

## பாடல் - 2377

**மாயை, மாயை, எல்லாம் மாயை... (4)**
மனம் திரும்பு என் மகனே...

1. உழைத்து உழைத்து சோர்ந்திட்டாயோ
வருத்தப்பட்டு நீ சுமக்கிறாயோ? (2)
சுமந்து காக்கும் கன்மலையை
மறந்து நீயும் அலைகிறாயோ (2)

2. வான மன்னாவால் போஷிப்பேனே
ஜீவத் தண்ணீரால் நிரப்புவேனே (2)
காட்டுப் புஷ்பங்களை உடுத்தும் நான்
மகிமையாய் உன்னை உடுத்துவேனே

3. இரட்சிப்பின் நம்பிக்கை நமக்கு உண்டு
இயேசுவின் மூலமாய் நமக்கு உண்டு
ஏகமாய் நாமும் பிழைத்திருக்க
அவர் நமக்காய் மரித்தாரே (2)

## பாடல் - 2378

**மாரிக் காலம் சென்றது மழை பெய்து ஓய்ந்தது**
நேசர் வருகிறார் என் நேசர் வருகிறார் (2)

வசந்த காலம் வந்தது
என் நேசரின் வருகையால்
ஆடிப் பாடி மகிழுவேன்
என் நேசரோடு சேருவேன்

1. பூமியிலே புஷ்பங்கள் பூத்துக் குலுங்குது
காட்டுக் குருவி பாடல் பாடும் காலம் வந்தது
நேசரின் வாசனையை
நான் அறியும் வேளையிலே
என் வாழ்வில் வசந்த காலம் ஓடி வந்தது

2. அத்தி மரம் பூப்பூத்து காய் காய்த்தது
திராட்சைக் கொடி வாசனையால்
தேசம் நிறைந்தது (2)
நேசரின் நடைகளை
நான் அறியும் வேளையிலே
என் வாழ்வில் வசந்தகாலம் ஓடி வந்தது

3. கன்மலையின் வெடிப்புகளில்
சத்தம் கேட்குது
கானம் பாடும் பறவைகளின் குரல் கேட்குது
நேசரின் குரலதனை
நான் அறியும் வேளையிலே
என் வாழ்வில் வசந்த காலம் ஓடி வந்தது

4. வெள்ளைப் போள வாசனையால்
தோட்டம் நிறையுது
கந்தவர்க்க தூபத்தினால் மனம் மகிழுது
நேசரின் கரங்களை
பற்றிக் கொள்ளும் வேளையிலே
என் வாழ்வில் வசந்த காலம் ஓடி வந்தது - மாரிக்காலம்

## பாடல் - 2379

**இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய**
சர்வ வல்லமையுள்ள தேவன்
கர்த்தர் – பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்
அவர்– பரிசுத்தர், பரிசுத்த, பரிசுத்தர்

1. தூதர்களோடு நான் பாடுவேன்
மூப்பர்களின் சங்க சபையிலே (2)
சர்வ வல்ல தேவாதி தேவனை
வணங்குவேன்... வணங்குவேன்
சர்வலோக அதிபதியை நான்
போற்றுவேன்... போற்றுவேன் - இருந்த

2. அல்பா ஒமேகாவை பாடுவேன்
எக்காள சத்தத்தோடு துதிப்பேனே (2)
சூரியன் போன்ற பிரகாச முகத்தையே
நோக்குவேன்... நோக்குவேன்
வெண்கல பாதம் உடையவரை நான்
நம்புவேன்.... நம்புவேன் - இருந்த

3. யூத கோத்ர சிங்கத்தை நான் பாடுவேன்
மரணத்தை வென்றவரை துதிப்பேனே
வச்சிரக் கல்லுக்கு ஒப்பானவரை
நான் உயர்த்துவேன்... உயர்த்துவேன்
பதும ராகம் போன்றவரை நான்
புகழுவேன் ... புகழுவேன் - இருந்த

4. தாவீதின் வேரை நான் பாடுவேன்
பரிசுத்தவான்களின் நடுவிலே
சிருஷ்டி கர்த்தரில் எக்காளம் முழங்கி
மகிழ்ந்திடுவேன் ... மகிழ்ந்திடுவேன்
உயிரோடிருக்கும் ராஜாதி ராஜனை
சேவிப்பேனே... சேவிப்பேனே - இருந்த

## பாடல் - 2380

**என் வாழ்வு பாட்டுப் பாடுதே**
என் வாழ்வு இசையாய் மாறிற்றே
உம் அன்பை துதித்துப் பாடும்
தூயதொரு இசையாக என் வாழ்வு
மாறிப் போயிற்றே - என் இயேசுவே
என் வாழ்வு மாறிப் போயிற்றே

1. ஜீவ பலியாக என்னை
ஒப்புக் கொடுத்தேனே ஐயா
சர்வாங்க தகனபலியும் ஆனேனே
பரிசுத்த பலியாக ஏற்றுக் கொள்ளும்

2. நொறுங்குண்ட இதயம் தந்தீர்
நருங்குண்ட ஆவி தந்தீர்
தேவனின் வீடாக மாறி விட்டேன்
பிரியமுள்ள பலியாக ஏற்றுக் கொள்ளும்

3. பாவத்தால் நாற்றமானேன்
இரத்தத்தால் கழுவினீரே
ஜீவனுள்ள வாசனையாய் மாறி விட்டேன்
நறுமண பலியாக ஏற்றுக் கொள்ளும்
நறுமண பலியாக்கி ஏற்றுக் கொள்ளும்

4. புதியதோர் உள்ளம் தந்தீர்
தூயதோர் ஆவி தந்தீர்
கல்லான இருதயத்தை அகற்றி விட்டீர்
சதையான இருதயத்தை எனக்கு தந்தீர்

## பாடல் - 2381

**ராஜா என் ராஜா ராஜாதி ராஜா**
ராஜா என் ராஜா இயேசு மகாராஜன் (2)

1. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என் ராஜாதி ராஜா
இரத்தம் சிந்திய நேச மணவாளன்
ராஜா என் ராஜன்
துதியும் உமக்கு ராஜா - 2
கனமும் உமக்கு ராஜா -2 - ராஜா என்

2. இருபத்தி நான்கு மூப்பர்கள்
வணங்கும் ராஜாதி ராஜா
சதா காலமும் உயிரோடிருக்கும்
ராஜன் என் ராஜன் (2)
வல்லமை உமக்கு ராஜா - 2
ஐஸ்வர்யமும் உமக்கு ராஜா -ராஜா என்

3. யூத கோத்ரத்து சிங்கமானவர் ராஜாதி ராஜா
ஏழு கொம்புகள் உடைய ஆட்டுக்குட்டி
ராஜன் என் ராஜன் (2)
ஞானமும் உமக்கு ராஜா - 2
பெலமும் உமக்கு ராஜா - 2 - ராஜா என்

4. ஏழு முத்திரைகள் உடைத்து
ஜெயங்கொண்ட இயேசு என் ராஜன்
ஏழு கண்களை உடைய ஆட்டுக்குட்டி
ராஜன் என் ராஜன் (2)
மகிமை உமக்கு ராஜா – 2
ஸ்தோத்திரமும் உமக்கு ராஜா – 2 – ராஜா என்

## பாடல் - 2382

**என் கண்ணீரை உம் துருத்தியில் வைத்தீரையா**
உம் கணக்கில் உள்ளதையா (2)

என் பெருமூச்சை நீர் அறிவீர்
என் காலங்கள் உம் கரத்தில் உண்டு
கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்
என்பதை ஜாதிகள் அறிந்திடுமே (2)

1. உபத்திரவம் பிரிக்க முடியாது
வியாகுலம் பிரிக்க முடியாது (2)
துன்பமோ, பசியோ, நாச மோசமோ
நிர்வாணமோ பிரிக்க முடியாது – என்

2. தூதர்களும் பிரிக்க முடியாது
அதிகாரங்களும் பிரிக்க முடியாது (2)
மரணமோ, ஜீவனோ வருகின்ற காரியமோ
இயேசுவினின்று பிரிக்க முடியாது – என்

3. உயர்வும் பிரிக்க முடியாது
தாழ்வும் பிரிக்க முடியாது (2)
பட்டமோ, பதவியோ, வேறெந்த சிருஷ்டியோ
பட்டயமோ பிரிக்க முடியாது – என்

4. அவர் அன்பு என்னை உயர்த்திடும்
அவர் அன்பு வெற்றி கொடுத்திடும்
அவர் அன்பு உன்னை உயர்த்திடும்
அவர் அன்பு வெற்றி கொடுத்திடும்
எதிரிகள் முன்பாக செங்கடலை இரண்டாக்கி
கண்ணீரைத் துடைத்து
தலையை உயர்த்திடுவார் – என்

## பாடல் - 2383

**பிரியமெல்லாம் தந்தேன்**
எந்தன் பிரிய இயேசுவே - 2
உம்மில் வைத்த அன்பினால்
துன்பம் சகித்தேன்
உம்மை விட்டு தூரமாக மனதில்லையே
பிரியமெல்லாம் தந்தேன்
எந்தன் பிரிய இயேசுவே - 2

2. சொந்த வீட்டார் தூரமானார்கள்
எந்தன் இயேசுவே - 2
மூலைக்கு தலைக்கல்லாய்
மாற்றினீர் ஐயா

3. சத்துருக்கள் பின் தொடர்ந்தார்கள்
எந்தன் இயேசுவே - 2
சத்துருவின் கையில்
என்னை ஒப்புக்கொடாமல்
பாதங்களை விசாலத்தில் நிறுத்தினீரையா

4. எந்தன் பெலன் குறைந்ததே
எந்தன் இயேசுவே - 2
பரிகாரியாக மாறி காத்துக் கொண்டீரே
ஆச்சரியமாம் கிருபையிலே
மகிழ்ந்து களிகூர்ந்தேன்

5. நம்பினோர் கைவிட்டார்கள்
எந்தன் இயேசுவே - 2
நானோ கர்த்தாவே
உம்மை நம்பியிருந்தேன்
உமது வெளிச்சம் என்னை
மீட்டுக் கொண்டதே

## பாடல் - 2384

**ஒவ்வொரு அணுவும் கதறுதே**
என் சீயோனின் நாயகனுக்காய்
பரிசுத்த மலையில் வாசம் செய்யும்
பரிசுத்த நாயகனுக்காய் (2)
ஒவ்வொரு அணுவும்... இயேசுவுக்காய் - 2

1. சுத்தரை தரிசிக்க கதறுதே
பரிசுத்தத்தை அணிந்திட கதறுதே (2)
அழகில் சிறந்தவரை
சீயோனின் நாயகரை
அனுதினம் தரிசிக்க கதறுதே - ஒவ்வொரு

2. மகிபனைக் காணவே ஏங்குதே
மகிமையில் வாழவே ஏங்குதே (2)
உயிருள்ள நாளெல்லாம்
சீயோனின் நாயகனை
அணிந்து மகிழ்ந்திட ஏங்குதே - ஒவ்வொரு

3. அன்பரை தரிசிக்க தேடுதே - உள்ளம்
அன்பிலே மகிழ்ந்திட நாடுதே (2)
கருணைக் கடலோடு காருண்ய கர்த்தரோடு
ஆவியில் இசைந்திட நாடுதே - ஒவ்வொரு

4. வருகையைக் காணவே வாஞ்சிக்குதே
உள்ளம் மறுரூபமாகவே துடிக்கதே (2)
சீயோன் பர்வதத்தில் இயேசு இராஜாவோடு
என்றென்றும் மகிழ்ந்திட வாஞ்சிக்குதே - ஒவ்வொரு

## பாடல் - 2385

**பரலோகத்தில் ஒரு சத்தம் கேட்குது**
பரிந்து பேசிடும் தேவ சத்தம் கேட்குது (2)
தேவ குமாரன் இயேசு ராஜனின் சத்தம் கேட்குது
கதறி ஜெபித்திடும் சத்தம் கேட்குது...
சத்தம் கேட்குது - பரலோகத்தில்

1. என் பிதாவே என் பிதாவே மனம் இரங்கும்
என் இரத்தத்தின் குரல் கேட்டு
மனமிரங்கும்... மனமிரங்கும்

2. தகப்பனே என் தகப்பனே நீர் கருணை செய்யும்
சிலுவை பாடுகளை நினைத்தருளி
கருணை செய்யும்... கருணை செய்யும்

3. நீதி பிதாவே என் ஜனத்தை கைவிடாதிரும்
என் ஆத்தும பலியை எண்ணி
மீட்டுக்கொள்ளும்.... மீட்டுக்கொள்ளும்

4. அன்பு தகப்பனே என் ஜனத்தை சுகப்படுத்தும்
என் காயங்கள் கண்டு - நீரும்
சுகப்படுத்தும்... சுகப்படுத்தும்

**பாடல் - 2386**

**பொய் சொல்ல தேவன் மனுஷன் அல்லவே**
மனம் மாற மனுஷ புத்திரனும் அல்ல அல்லவே

அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ
வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ

1. அவர் உண்மையுள்ளவர்
அவர் உயர்ந்த அடைக்கலம் (2)
இரவும் பகலும் விழித்திருந்து
கண்மணி போல காப்பார் - பொய்

2. அவர் நீதியுள்ளவர்
உன்னில் நியாயம் செய்வாரே (2)
உள்ளங்கையில் உன்னை வரைந்து
மறைத்து காத்திடுவார் - பொய்

3. இயேசு இரக்கமுள்ளவர்
மனம் இரங்கி மீட்பாரே (2)
ஆபத்துக் காலத்தில் அரணான
கோட்டையும் கேடகம் துணையும் அவர் - பொய்

4. இயேசு அன்பு உள்ளவர்
அவர் ஆறுதல் நாயகன் (2)
கிருபையாக உடன்படிக்கையை
உன்னில் நிறைவேற்றுவார் - பொய்

**பாடல் - 2387**

**எருசலேம் – அது தேவனின் நகரம்**
எருசலேம் – அது சத்திய நகரம்
உனக்காக நான் வேண்டுதல்
செய்கிறேன் எருசலேம்
மேசியாவை நீ அறிய வேண்டுமே எருசலேம்

1. சீயோனிலிருந்து வேதம் புறப்படும்
எருசலேமும் வசனம் தரும் (2)
ராஜாதி ராஜன் மகாராஜன் இயேசு
ஆயிரம் வருஷம் அரசாளுவார் (2)

2. எருசலேமே கர்த்தரின் ஆலயம்
மலைகள் மேலாய் உயர்த்தப்படும் (2)
ஜாதிகள் உனைத்தேடி ஓடி வருவார்கள்
கர்த்தரின் வெளிச்சத்தில் நடந்திடுவார்

3. எருசலேமே சீயோனின் தேவன்
உனக்காய் வைராக்யம் கொண்டிருப்பார்
அக்கினி மதிலாக உனைச் சூழ்ந்து நின்று
உந்தனின் நடுவில் மகிமையாய் ஜொலிப்பார்

4. ஜீவத் தண்ணீர் நதிகள் பாயும்
உன்னிலிருந்து எருசலேமே (2)
கர்த்தரே பூமியின் மீதெங்கும் ராஜா
ஒப்பற்ற ராஜாங்கம் உண்டாகுமே (2)

## பாடல் - 2388

**இரத்தத்தை திரு இரத்தத்தை**
இரத்தத்தை இயேசு இரத்தத்தை

ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன்

1. பாவம் போக்கிடும், பரிசுத்தமாக்கிடும் - 2
தூய்மைப் படுத்தி துயரை நீக்கிடும் - 2
இரத்த ஆராதனை நம்மை பரிசுத்தப்படுத்திடுமே
திரு இரத்த ஆராதனை

2. சாபம் தீர்த்திடும், வாழ்வு தந்திடும் - 2
குறைவெல்லாம் நீக்கி பரிகாரம் செய்திடும்
இரத்த ஆராதனை நம்மை விடுதலையாக்கிடுமே
திரு இரத்த ஆராதனை

3. பயங்கள் நீக்கிடும், தைரியம் தந்திடும்
ஆசாரியனாக்கவே கிருபாசனம் தந்திடும்
இரத்த ஆராதனை நம்மை தைரியப்படுத்திடுமே
திரு இரத்த ஆராதனை

இரத்த ஆராதனை நம்மை கிருபாசனம் சேர்க்குமே
திரு இரத்த ஆராதனை

4. சமாதானம் செய்திடும், ஒப்புரவாக்கிடும்
பரிசுத்த பிதாவிடம் பரிந்து பேசிடும்
இரத்த ஆராதனை நம்மை ஒப்புரவாக்கிடுமே
திரு இரத்த ஆராதனை

இரத்த ஆராதனை நம்மை ஒப்புரவாக்கிடுமே
ஜீவ இரத்த ஆராதனை

## பாடல் - 2389

**கிருபையின் இரத்தத்தை ஆராதிக்கின்றேன்**
ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன்

கிருபை கிருபை என்று கிருபை கிருபை
எந்தன் உள்ளம் ஏங்குதே! கிருபை தாருமே
கிருபை தாருமே இயேசு ராஜனே!

1. கடந்த காலங்களில் கண்ணின்
மணிபோல் காத்தீர் - 2
வரும் நாட்களிலும் நாதா வாழ்வு அளிப்பீரே
கிருபையாய் வாழ்வு அளிப்பீரே - 2

2. கடினப் பாதைகளில் விந்தையாய்
என்னை நடத்தினீர் - 2
வரும் காலங்களில் நாதா வெற்றி தருவீரே
கிருபையாய் வெற்றி தருவீரே-2

3. வடித்த கண்ணீர்களை
அன்பு கூர்ந்து துடைத்தீர் - 2
வரும் மாதங்களில் நாதா மகிழ்ச்சி கொடுப்பீரே
கிருபையாய் மகிழ்ச்சி கொடுப்பீரே - 2

4. சிறுமை வேளைதனில்
ஆற்றி தேற்றி அணைத்தீர் - 2
வரும் ஆண்டினிலும் நாதா மகிமை ஈந்திடுவீர்
கிருபையாய் மகிமை ஈந்திடுவீர் - 2

## பாடல் - 2390

**பரலோக காற்றே அக்கினிக் காற்றே**
பரிசுத்த ஆவியென்னும் தூய தூய காற்றே
பரலோக காற்றே அக்கினிக் காற்றே
பரிசுத்த ஆவியென்னும் தூய தூய காற்றே

1. காடைகளைக் கொண்டு வந்த காற்று
செங்கடலைப் பிரித்து விட்ட காற்று -2
வல்லமை காற்று பரலோகக் காற்று - 2
பரிசுத்த ஆவியென்னும் தூய தூய காற்று

2. நாசியிலே சுவாசம் தந்த காற்று
நாவினிலே பாஷை தந்த காற்று -2
ஜீவன் தந்த காற்று பாஷை தந்த காற்று
பரிசுத்த ஆவியென்னும் தூய தூய காற்று

3. காய்ந்து போன எலும்பைத் தொட்ட காற்று
நம்பிக்கையை கொண்டு வந்த காற்று
வாழ்வு தந்த காற்று நிற்கச் செய்த காற்று
பரிசுத்த ஆவியென்னும் தூய தூய காற்று

## பாடல் - 2391

**நிகரில்லாத இயேசுவே! - எனக்காய்**
யுத்தம் செய்திட நீர் இறங்கி வாருமே - 2
நின்று பார் நோக்கிப் பார்
உன் தேவன் உனக்காய்
யுத்தம் செய்யும் அழகை நோக்கிப் பார்
நிகரில்லாத இயேசுவே!

1. என் கண்கள் உம்மை நோக்குதே
என் நாவும் உம்மைப் புகழுதே

எனக்காய் யுத்தம் செய்திட நீர்
இறங்கிவாருமே - 2

2. என் எண்ணம் உம்மை சுற்றுதே
என் உள்ளம் உம்மை நாடுதே - எனக்காய்

3. என் கால்கள் உமக்காய் ஓடுதே
என் கைகள் உம்மோடு இணையுமே - எனக்

## பாடல் - 2392

**யுத்தத்தில் நாம் ஜெயித்தோம்**
வெற்றி நமக்கே (அல்லேலூயா 2)
சாத்தான் தோற்றுப் போனானே
ஜெயம் எடுத்தார் இயேசு வெற்றி
சிறந்தார் - 2

1. இரத்தத்தாலே ஜெயித்தோம்
இரத்தம் நமக்கே (அல்லேலூயா 2)
இரத்தம் சிந்தி மீட்டாரே
இரத்தம் நமக்கே ஜெய இரத்தம் நமக்கே
இரத்தத்தாலே ஜெயித்தோம்
இரத்தம் நமக்கே (அல்லேலூயா 2)

2. வார்த்தையாலே ஜெயித்தோம்
வார்த்தை நமக்கே (அல்லேலூயா 2)
வார்த்தையான இயேசு நமக்கே
வார்த்தை நமக்கே தேவ வார்த்தை நமக்கே
வார்த்தை நமக்கே ஜீவ வார்த்தை நமக்கே

3. நாமத்தாலே ஜெயித்தோம்
நாமம் நமக்கே (அல்லேலூயா 2)
இயேசு ராஜன் நாமம் நமக்கே
நாமம் நமக்கே தேவ நாமம் நமக்கே
நாமம் நமக்கே ஜீவ நாமம் நமக்கே
நாமத்தாலே ஜெயித்தோம் நாமம் நமக்கே
அல்லேலூயா, அல்லேலூயா - 2
இயேசு நாமம் - அது வெற்றி நாமம்
இயேசு நாமம் - அது ஜெய நாமம் - 3

## பாடல் - 2393

**என் ஜீவனின் பெலனான இயேசு நாதர்**
பாவப் பரிகாரியே!
என் ஜீவனின் பெலனான இயேசு நாதர்
சாபப் பரிகாரியே!
பாவம் போக்க உலகில் வந்தீரையா
சாபம் நீக்க இரத்தத்தைத் தந்தீரையா - 2

1. மரியாளின் வயிற்றில் உதித்தீரே
பலியாக உம்மையே கொடுத்தீரே -2
சாபச் சிலுவையிலே என் இயேசுவே
ஏறி சுமந்தீரையா - பாவ சாபம்
ஏறி சுமந்தீரையா - என் ஜீவனின்

2. மனிதனின் வேதனை அறிந்திட
மனுஷன் போல் சோதிக்கப் பட்டீரையா-2
மரண அதிகாரியை என் இயேசுவே
மரித்து ஜெயித்தீரையா - நித்தியம்
ஜீவனைக் கொடுத்தீரையா - என்

3. காளைகளும் வெள்ளாட்டுக் கடாக்களும்
பாவங்களை நிவர்த்தி செய்யாதையா-2
மாம்ச சரீரத்தையே என் இயேசுவே
குருசில் அழித்தீரையா
உம் இரத்தத்தை சிந்தி தீர்த்தீரையா

## பாடல் - 2394

**சாபம் உடைந்தது, சங்கிலி அறுந்தது**
கட்டுகள் உடைந்தது, இயேசு ராஜா
என் ராஜா, என் ராஜாதி ராஜா
ஜெயம் எடுத்தீரே - 2

1. ஜெயக் கர்த்தர் வெற்றி சிறந்தார்
குருசினில் ஏறி ஜெயித்தார் - 2
குறைவெல்லாம் எடுத்து விட்டார்
பாத்திரத்தில் செழிப்பைத் தந்தார் - 2

2. அந்தகார இருளினின்று
ஆச்சரிய ஒளிக்கழைத்தார் - 2
ராஜரீக கூட்டமாக்கினார்
பரிசுத்த ஜாதியாக்கினார் 2 - சாபம்

3. விலைமதிப் பில்லா இரத்தத்தால்
தன் ஜனத்தை மீட்டுக் கொண்டார் - 2
தரித்திரனாய் மாறினார்
தரித்திரம் போக்கி விட்டார் - 2 - சாபம்

## பாடல் - 2395

**சாம்பலுக்கு சிங்காரம் தந்தீர்**
துதியின் ஆடையைத் தந்தீர்
பரிசுத்தரே, என் ஆட்டுக்குட்டியே
வந்தனம், வந்தனமே - உமக்கு
வந்தனம், வந்தனமே - 2

1. கண்ணீருக்குக் களிப்பையும் தந்தீர்
நொந்து போன உள்ளத்திலே வந்தீர் - 2
சந்தோஷம் தந்தீர், மகிழ்ச்சி தந்தீர் - 2
சமாதானம் தந்தீரையா - சாம்பலுக்கு

2. பயத்துக்குத் தைரியத்தைத் தந்தீர்
பரிசுத்த ஆவியாக வந்தீர் – 2
சத்துவம் தந்தீர், பெலனைத் தந்தீர் – 2
தெளிவையும் தந்தீரையா – சாம்பலுக்கு

3. இளைப்புக்கு ஆறுதலைத் தந்தீர்
ஆனந்தத்தின் தைலமாக வந்தீர் – 2
துதியை தந்தீர், கீத சத்தம் தந்தீர் – 2
ஆசீர்வாதம் தந்தீரையா- சாம்பலுக்கு

## பாடல் - 2396

**சர்வேஸ்வரன் என் இயேசு ராஜனே**
சர்வேஸ்வரா நீர் சிருஷ்டி கர்த்தரே

உலகையும் படைத்தீரே,
வார்த்தையால் படைத்தீரே
சர்வேஸ்வரன் என் இயேசு ராஜனே
சர்வேஸ்வரா நீர் சிருஷ்டி கர்த்தரே
சர்வேஸ்வரன் என் இயேசு ராஜனே
சர்வேஸ்வரா என் சிருஷ்டிகர்த்தரே

1. நட்சத்திரம் பாட்டுப் பாடுதே
வான மண்டலம் பாட்டுப் பாடுதே
சூரியனும் பாடுதே சந்திரனும் பாடுதே
சர்வேஸ்வரா உம்மைப் புகழ்ந்து பாடுதே
சர்வேஸ்வரன் என் ஜீவனானீரே
சர்வேஸ்வரன் எனக்கெல்லாமானீரே

2. தண்ணீர்களும் பாட்டுப் பாடுதே
அக்கினியும் பாட்டுப் பாடுதே
மூடு பனியும் பாடுதே
பெருங் காற்றும் பாடுதே
சர்வேஸ்வரா உம்மைப் புகழ்ந்து பாடுதே
சர்வேஸ்வரன் என் ஜீவனானீரே
சர்வேஸ்வரன் எனக்கெல்லாமானீரே

3. வாலிபரும் பாட்டுப் பாடுவர்
கன்னிகைகள் பாட்டுப் பாடுவர்
பிள்ளைகளும் பாடுவர்
முதியோர்களும் பாடுவர்
சர்வேஸ்வரா உம்மைப் புகழ்ந்து பாடுவர்
சர்வேஸ்வரன் என் ஜீவனானீரே
சர்வேஸ்வரன் எனக்கெல்லாமானீரே

## பாடல் - 2397

**எனக்கென்று குறித்ததை நிறைவேற்றி**
முடிப்பர் நல்லவர் - இயேசு நல்லவர்
எனக்காக யாவையும் செய்த முடிப்பவர்
வல்லவர் - சர்வ வல்லவர் - 2

1. சாத்தானின் எழுத்துக்களை என் இயேசு
கல்வாரி சிலுவையிலே என் இயேசு - 2
ஆணி அடித்து குலைத்துப் போட்டீர்
குலைத்துப் போட்டீரையா - 2 - எனக்

2. தன் சொந்த இரத்தத்தாலே என் இயேசு
என் வாழ்வை எழுதி வைத்து என் இயேசு - 2
பொற் கரத்தால் கையெழுத்திட்டீர்
கையெழுத்திட்டீரையா - 2 - எனக்

3. தண்ணீரைக் கடத்தி வந்தீர் என் இயேசு
நெருப்பில் சுமந்து வந்தீர் என் இயேசு - 2
நல்ல இடத்தில் நிறுத்தி வைத்தீர்
நிறுத்தி வைத்தீரையா - 2 - எனக்

4. வெற்றியைக் குறித்து வைத்து என் இயேசு
எனக்கு முன் சென்று என் இயேசு - 2
இரத்தத்தின் வல்லமையால்
ஜெயத்தைக் கொடுத்தீர்
ஜெயத்தைக் கொடுத்தீரையா - 2 - எனக்

## பாடல் - 2398

**அக்கினிமயமானவரே**
ஆட் கொண்டு நடத்திடுவீர்
உன்னத தேவனும் நீரே ராஜாதி ராஜனும் நீர்
செப்பனிட வாருமைய்யா
செம்மையாய் நடந்திடவே - 2

1. அபிஷேகியும் தேவா ஆவியின்
வல்லமையால் - 2
ஆவியின் வரங்களினால் எம்மை
அபிஷேகியும் தேவா - 2

2. தேற்றரவாளனும் நீர்
பரிசுத்த ஆவியும் நீர் - 2
சாட்சியாய் வாழ்ந்திடவே எம்மை
அபிஷேகியும் தேவா - 2

3. பரலோக அக்கினியே பலிபீட அக்கினியே
பரிசுத்தமாகிடவே
எம்மை அபிஷேகியம் தேவா
வாழ்வு வாழ பெலன் தாருமே

**பாடல் - 2399**

**தாயன்பிலும் மேலான அன்பு உண்டு**
உனைத்தாங்கிடும் அன்பு தேவ அன்பு - 2

1. குழந்தையின் வாழ்க்கையில் தாயன்பு மேல்
அந்த தாய் மறந்தாலும் மறவாத அன்பு
தனிமையான நேரங்களிலும்
தாங்கிடும் அன்பு
உனைத் தாங்கிடும் அன்பு தேவ அன்பு

2. உயிரினும் மேலான உன்னை நேசிப்போர் உண்டு
உனக்காக உயிரை ஈந்த
ஓர் தேவன் இயேசு உண்டு
கலங்கிடாமல் சோர்ந்திடாமல் அவரை நம்பிடு
உனைத் தாங்கிடுவார் தேற்றிடுவார்

**பாடல் - 2400**

**அதிகாலை வேளையிலே உம் பாதம்**
அனுதினம் காத்திருப்போம் - 2
காலை தோறும் உம் கிருபைகள் என்றும்
புதியவைகள் - 2 என்றும் புதியவைகள்

1. ஸ்தோத்திர பலியிடும் மனிதரெல்லாம்
கர்த்தரை மகிமைப்படுத்திடுவார் - 2
ஸ்தோத்திரங்கள் தினம் பெருகிடும் போது
கிருபையும் பெருகிடுமே
என்றும் கிருபையும் பெருகிடுமே

2. மாமிச தேகம் உள்ள யாவும்
கர்த்தரை மகிமைப்படுத்திடுமே – 2
மரித்தோரும் மௌனத்தில்
இறங்கினவர்களும் கர்த்தரைத் துதியார்கள்
என்றும் கர்த்தரை துதியார்கள்

## பாடல் - 2401

**உம்மையல்லாமல் வேறே தெய்வம்**
எனக்கு உண்டாக வேண்டாம் – 2
வானத்தில் பூமியில்
தாம் தண்ணீரின் ஆழங்களில் –2
யாதொரு சொரூபமும் எனக்கு உண்டாக வேண்டாம் – 2

1. எந்தன் தாயின் கருவினில் நான்
உருவாகிடும் முன்னே நீர் – 2
என்னை முன் கூட்டி அறிந்திருந்து
என் பெயர் சொல்லி அழைத்தவர் நீர் – 2
என்னைத் தாய் போல தேற்றினீரே – 2

2. எந்தன் வாலிப நாட்களிலே மனம் போல்
நான் நடந்தச் சென்றேன்
உம் அநாதி ஸ்நேகத்தினால் என்னை
இழுத்துக் கொண்டீரே
எந்தன் ஜீவனைக் காத்தீரே – 2

## பாடல் - 2402

**கடைசி காலமிது செயல்பட நீ ஆயத்தமா**
உன்னைக் கொண்டு பெரியவை
கர்த்தரும் செய்ய ஆயத்தம்

1. பாலைவனமும் சோலைவனமாய் ஆக
நீயும் ஜெபிக்கணுமே
சுவிசேஷம் வேகமாய்
தேசம் எங்கும் செல்லணுமே

2. காடு மலைகள் கடந்து எங்கும்
கர்த்தரின் வார்த்தை சொல்ல வேண்டும்
கடினமான இதயங்கள் கர்த்தரின்
அன்பை காண வேண்டும்

## பாடல் - 2403

**உம்மை மறவேன் நான்**
என இயேசைய்யா உம்மை மறவேன் நான்
என் தாழ்வினில் என்னை நினைத்தீரே
என் ஏசைய்யா உம்மை மறவேன் நான்

1. என் வாழ்வில் நீர் செய்த
எண்ணில்லா நன்மைகள்
ஆயிரம் பதினாயிரம் அதற்கும் மேலைய்யா

2. ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கன்மலையும் மீட்பரும் நீர்தானைய்யா

3. தனித்த வேளையில் தாய் போல தேற்றினீர்
தள்ளாடின முழங்கால்களைத் திடமாக்கினீர்

## பாடல் - 2404

**அநாதி ஸ்நேகம் அநாதி ஸ்நேகம் அநாதி ஸ்நேகம்**
எங்கள் இயேசுவின் ஸ்நேகம்
பரத்தை விட்டு இறங்கி வந்த ஸ்நேகம்
பரலோக மகிமை துறந்து வந்த ஸ்நேகம்
எல்லா ஸ்நேகத்திலும் மிக மேலான ஸ்நேகம்

1. மறுதலித்த பேதுருவை
மனம் திரும்ப செய்த ஸ்நேகம்
காட்டி கொடுத்த யூதாசை கன்னத்தில்
அறைந்திடாமல் ஸ்நேகிதனே
என்றழைத்த ஸ்நேகம் – அது மேலான
ஸ்நேகம் எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

2. கண் இழந்த சிம்சோனையும்
நினைத்த ஸ்நேகம்
நினிவேக்கு போகாமல் திசை மாறி ஓடிய
யோனாவை பயன்படுத்திய ஸ்நேகம்
அது மேலான ஸ்நேகம்
எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

## பாடல் - 2405

**கர்த்தரின் கரம் வல்லமையுள்ள கரம்**
சுத்தரின் கரம் சுகமாக்கிடும் கரம்
விடுதலை பெலன் சுகம் ஈந்திடும் கரம்
விதவித நோய்களை தீர்த்திடும் கரம்

1. அற்புதம் செய்திடும் அன்பரின் கரம்
தாழ்வினில் உயர்த்திடும் தற்பரன் கரம்
காயங்கள் ஆற்றிடும் கர்த்தரின் கரம்
கடும் ஜுரம் போக்கிடும் வலது கரம்

2. தேவைகள் சந்திக்கும் தேவனின் கரம்
தேடி வந்தோருக்கும் கொடுக்கும் கரம்
நாள்தோறும் நடத்திடும் நாதரின் கரம்
நாட்கள் போனாலும் உயிர் தந்திடும் கரம்

3. சிறுவரையும் ஆசீர்வதிக்கும் கரம்
சிறுமைப்படுபவரை உயர்த்தும் கரம்
அனாதையை அரவணைக்கும் கரம்
அடிமைகள் தேடும் எஜமானனின் கரம்

## பாடல் - 2406

**என் இயேசுவே நீரே என் சொந்தம்**
நீரே என் பட்சமே
நிலையற்ற வாழ்வில் நிம்மதி நீரின்றி
யாரும் இல்லை - 2

1. இருளாம் பாதையில் அணையாத தீபமாய்
கருணையாய் என்னை கரம் பிடித்து வந்தீர்
கால்கள் இடறாமல் சேதம் அடையாமல்
கரத்தால் தாங்கினீர் சிறகால் மூடினீர்

2. எத்தனையோ நன்மை
என் வாழ்வில் செய்து வரும் உத்தமர் இயேசு
உம்மை உலகிற்கு கூறிடுவேன்
தாயாய் தகப்பனாய்
அதற்கும் மேலாய் அன்பு காட்டினீர்
தேற்றி அணைத்திட்டீர்

## பாடல் - 2407

**மலைகள் விலகினாலும்**
பர்வதம் நிலை பெயர்ந்தாலும்
என் கிருபை உன்னை விட்டு என்றும் நீங்காது

1. தண்ணீரை கடக்கும் போது
உன்னோடு இருப்பேன் என்றீர்
ஆறுகளை கடக்கும் போது
அவைகள் உன் மேல் புரள்வதில்லை
அக்கினியில் நீ நடக்கும் போது
அக்கினி சேதப்படுத்தாது

2. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
உன் பெயர் சொல்லி நான் அழைத்தேன்
திகையாதே நான் உன் தேவன்
நீதியின் கரத்தால் தாங்கிடுவேன்
உன்னை என்றும் பலப்படுத்தி
உனக்கு சகாயம் செய்திடுவேன்

## பாடல் - 2408

**சுத்த ஆவியே ஜீவ நதியே எங்கள் மீதிலே**
பாய்ந்து வந்திடட்டுமே சுத்திகரியும் சுத்திகரியும்
(பரி) சுத்தவானாய் மாற்றி அலங்கரியும்

1. அசைவாடும் ஆவியே எம்மை
அனல் மூட்டி எழுப்புமைய்யா
தேற்றரவாளன் பரிசுத்த ஆவி
தேற்றிட வாருமைய்யா
அனல் மூட்டி எழுப்புமைய்யா
எம்மை தேற்றிட வாருமைய்யா

2. உன்னத ஆவியே உந்தன்
வல்லமையால் நிரப்புமைய்யா
பயங்களை நீக்கி சோர்வுகள் போக்கி
புது பெலன் தாருமைய்யா
வல்லமையால் நிரப்புமைய்யா
உந்தன் புது பெலன் தாருமைய்யா

3. சத்திய ஆவியே எம்மை போதித்து
நடத்துமைய்யா
கனிகளினாலும் வரங்களினாலும்
நிரம்பிடச் செய்யுமைய்யா
போதித்து நடத்துமைய்யா
எம்மை நிரம்பிடச் செய்யுமைய்யா

**பாடல் - 2409**

**ஆனந்தமே பரமானந்தமே - இயேசு**
அண்ணலை அண்டினேன் ஆனந்தமே
ஞான ரட்சகரன் பாவம் மன்னித்தால்
ஆனென் அவருக்குள் ஆனந்தமே - 2

1. வீணாக காலமும் நான் கழித்தேன்
வழி தோன்றாமல் நின்றுமே நான் விழித்தேன்
காணாத ஆடெனை கண்டு சுமந்த என்
காதலன் தோள் எனக்கானந்தமே

2. நாடியே பாவத்தை தேடியே புரிந்து
நைந்து கரைந்து மனம் மெலிந்து
வாடியே தவித்த ஏழை
என் பாவத்தை நாடியே
மன்னித்தார் நம் இறைவன்

3. இந்த நன்றியை நான் மறவேன் எந்தன்
யாவையும் பூசையாய் நான் படைத்தேன்
அந்தம் வரை ஏசு சுவாமிக்குத் தொண்டனாய்
ஆகவே தீர்மானம் ஆனந்தமே

**பாடல் - 2410**

**ஆதியே அந்தமே அல்பாவே ஓமேகாவே**
ஒருவராய் பெரிய அதிசயம் செய்யும்
உன்னத தேவனே நீர் ராஜா ராஜாதி
ராஜா நீர் ரோஜா ஷாரோனின் ரோஜா
ஆயிரம் பதினாயிரங்களில் சிறந்தவர்
பள்ளத்தாக்கின் லீலியே

1. ஜெபத்தை கேட்பரே எங்களுக்கு
ஜெயத்தை தருபவரே
விண்ணப்பத்தை கேட்பவரே
எங்களது கண்ணீரை காண்பவரே
நல்லவரே வல்லவரே உயர்ந்தவரே
பெரியவரே பூமியில் உயர்ந்தவரே
ஜாதிகளில் உயர்ந்தவரே

2. கூப்பிடும் வேளையில் எங்களுக்கு
பதிலைத் தருபவரே
ஆபத்துக் காலத்திலே எங்களது
அருகினில் வருபவரே
யெகோவாயீரே சகாயரே எஜமானனே
என் ஏசுவே கரம் பற்றி நடத்தவீரே
காருண்யத்தால் உயர்த்துவீரே

3. அன்றன்றுள்ள தேவைகளை
எங்களுக்கு அனுதினம் தருபவரே
ஆதரவாயிருந்து
எங்களது ஆத்துமாவை தேற்றுவீரே
கன்மலையே காண்பவரே
ஜீவந்தியே தேவ ஆவியே
புல் வெளியில் மேய்ப்பவரே
தாகத்தை தீர்ப்பவரே

## பாடல் - 2411

**என்னைத் தேடி வந்தவரே**
என்னைத் தாக்கி எடுத்தவரே - 2
என் கால்களுக்கு தீபமே
என் பாதைக்கு வெளிச்சம் நீரே - 2

1. அலைமேல் அலை வந்து அடியேன்
மேலே அனுதினமும் வந்து மோதுகையில்
கடல் மேல் நடந்த இயேசு நீர் வந்து
அமைதி தந்தீர் என் மனதில் - 2
நன்றி நன்றி நன்றி - 2

2. பெலவீன நேரம் பெலனைத் தந்து
தனிமையிலே என் துணையானீர்
நிந்தை சூழ்ந்த நேரத்திலும்
என் தந்தைக்கும் மேலாய் திடம் தந்தீர்
நன்றி நன்றி நன்றி - 2

3. வருசங்கள் மாறி வருசங்கள் வந்தும்
உம் அன்பு மாறவில்லை
அன்று எனது கரத்தை பிடித்தீர்
இன்றும் என் கையை விடவில்லை நன்றி



அட்டவணை

## பாடல் - 2412

**துதியும் கனமும் மகிமை புகழும்**
எல்லாம் என் இயேசுவுக்கே
நான் பாடுவேன் 2 பாவியென்னை மீட்டதால்

1. உழையான சேற்றில் நின்று
உயிரோடு காத்தவர் - உலகெங்கும்
உந்தன் அன்பை நான் பாடுவேன்
ஆதியும் நீரே அந்தமும் நீரே ஜோதியும்
நீரே என் சொந்தமே நான் பாடுவேன்
பாவியென்னை மீட்டதால் – 2

2. அலைந்தேன் இவ்வுலகினில்
ஆதரவு இல்லாமல்
அணைத்தீர் அன்பாக மார்போடு என்னை
பாவங்கள் செய்து துரோகியாய் வாழ்ந்த
நீசனாம் என்னை நீர் மன்னித்தீர்
நான் பாடுவேன் 2 பாவியென்னை மீட்டதால்

## பாடல் - 2413

**கூப்பிட்ட வேளையிலே ஓடி வந்தீரே**
குறைகளெல்லாம் தீர்த்து புது பெலன் தந்தீரே
நன்றியப்பா 2 இயேசப்பா நன்றியப்பா – 2

1. கானாவூர் கல்யாண வீட்டில் சீஷரோடு வந்தீரே
கற்சாடி தண்ணீரை கனி ரசமாய் மாற்றினீரே
நிந்தை அவமானம் நீக்கி விட்டீரே
சர்வ வல்ல தேவனே எங்கள் ஏசப்பா

2. மரியாள் மார்த்தாளின் கண்ணீரை கண்டவர்
மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினீர்
அநாதையாய் விடாமல் ஆதரவு கொடுத்தீரே
சர்வ வல்ல தேவனே எங்கள் ஏசப்பா

3. முப்பத்தெட்டு வருஷமாக
வியாதியிலே கிடந்தவனை
படுக்கையை எடுத்துக்கொண்டு நட
என்று சொன்னீரே
வியாதியை சிலுவையிலே
சுமந்து தீர்த்து முடித்தீரே
சர்வ வல்ல தேவனே எங்கள் இயேசப்பா



அட்டவணை

## பாடல் - 2414

**அபிஷேகம் இறங்கட்டும் அபிஷேகம் இறங்கட்டும்**
அபிஷேகம் அபிஷேகமே
நுகங்கள் முறிக்கட்டும் கட்டுகளை அறுக்கட்டும்
அபிஷேகம் அபிஷேகமே
ஆவியில் விடுதலை ஆத்மாவில் விடுதலை
சரீரத்தில் விடுதலையே
இப்போ முழுவதும் விடுதலையே

1. வீசட்டும் காற்று வீசட்டும்
உலர்ந்த எலும்புகளை உயிர்பிக்கட்டும்
வீசட்டும் காற்று வீசட்டும்
கர்த்தரின் சேனைகளாய் எழும்பிடட்டும்

2. அக்கினி தேவ அக்கினி
செத்தைகளை சுட்டெரிக்கும் அக்கினி
அக்கினி தேவ அக்கினி
சத்துருக்களை பட்சித்திடும் அக்கினி

3. வல்லமை ஆவியின் வல்லமை
சர்ப்பங்களை மிதித்திடும் வல்லமை
தேள்களையும் மிதித்திடும் வல்லமை
வல்லமை ஆவியின் வல்லமை
பிசாசை துரத்திடும் வல்லமை

## பாடல் - 2415

**கல்வாரி ஸ்நேகம் கரைத்திடும் என்றும்**
கல் மனதை மாற்றிடும் கரையில்லா ஸ்நேகம்
நாம் அவரை வெறுத்து தள்ளினோம்
ஆனாலும் நம்மை அணைத்த கல்வாரி ஸ்நேகம்

1. ஸ்நேகிதனுக்காய் தன் ஜீவனைக் கொடுப்பதிலும்
அதிகமான ஸ்நேகம் வேறில்லை எங்கும்
பாவியான நம்மை தேடியே வந்து
ஜீவனைக் கொடுத்த கல்வாரி ஸ்நேகம்

2. நமது மீறுதலுக்காய் அக்ரமங்களுக்காய்
அந்த கேடு அடைந்தார் சிலுவை மீதில்
நாம் பெற வேண்டிய தண்டனை யாவையும்
அவரே சுமந்து நமை மீட்ட ஸ்நேகம்

## பாடல் - 2416

**அநாதி தேவன் என் அடைக்கலம்**
அவர் நித்திய புயங்கள் என் ஆதாரம்
யாக்கோபின் தேவன் என்
உயர்ந்த அடைக்கலமே-2
பெலனும் அவரே துணையும் அவரே
பாதுகாக்கும் பரமன் அவரே

1. கொந்தளிக்கும் அலை புரண்டுவந்தாலும்
கோரப் புயல் என் மேல் வீசினாலும்
காற்றையும் கடலையும் அமர்த்திய இயேசு
கரத்தின் நிழலில் மூடிடுவார்

2. ஆபத்துக் காலத்தில் கூப்பிடும் போது
அருகில் வந்து கரம் பிடிப்பாரே
கண்ணீரின் பாதையில் நடந்திடும் போது
தோளில் சுமந்து தாங்கிடுவார்

3. சோதனை சோர்வுகள் சூழ்ந்து கொண்டாலும்
வேதனை பாரங்கள் நெருங்கி வந்தாலும்
உலகை ஜெயித்த இயேசுவை பார்ப்பேன்
சோர்வுகள் பாரங்கள் அகன்றிடுமே

## பாடல் - 2417

**நன்றி நன்றி நன்றி** - 2
நன்றி என்று சொல்லி உம்மை
நாள் தோறும் துதிப்பேன் - 2 -நீர் செய்த
நன்மைகள் என் வாழ்வில் ஏராளம் - 2

1. ஒரு வழி அடைந்த போது
புது வழியைத் திறந்தீரே நன்றி
எதிராய் வந்த ஆயுதங்களை
செயல் அற்றுப் போனதால் நன்றி

2. தேடி வந்த போது என்னை தேற்றி
அணைத்தீரே நன்றி
சேதம் ஒன்றும் அணுகாமல்
காத்துக் கொண்டீரே நன்றி

3. சோர்ந்த போன நேரம் எல்லாம்
தூக்கி எடுத்தீரே நன்றி
வார்த்தை என்னும் மன்னாவால்
போஷித்தீரே நன்றி



அட்டவணை

## பாடல் - 2418

**ராஜாவே ஏசு ராஜாவே ரோஜாவே**
ஷாரோன் ரோஜாவே
பள்ளத்தாக்கின் லீலியே ஆயிரம்
பதினாயிரங்களில் சிறந்தவரே

1. நான் எப்போதும் வந்தடையும் கன்மலையோ
என் புகலிடமே என் மறைவிடமே
என் ரட்சிப்பின் கன்மலையே - 2
கன்மலையே எந்தன் கன்மலையே
காண்பவரே என்னை காப்பவரே
உறுதியான அடித்தளமே என்றும்
அசையாத நித்திய கன்மலையே

2. என்னைப் புல்லுள்ள இடங்களிலே மேய்ப்பவரே
என் ஆத்மாவை அனுதினம் தேற்றி
என்னை நீதியின் பாதையில் நடத்துவீரே
மேய்ப்பரே... ஆ... ஆ...
மேய்ப்பரே எந்தன் மேய்ப்பரே
மேய்ப்பரே நல்ல மேய்ப்பரே
ஆடுகளுக்கு ஜீவனை கொடுத்திட
உலகினில் வந்தவரே என் மேய்ப்பரே

## பாடல் - 2419

**சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷம்**
இயேசு வந்த இடத்தினில் சந்தோஷம்
இயேசுவின் சமூகமதில் சந்தோஷம்
அவர் வார்த்தையால் வரும் சந்தோஷம்
அவர் வல்லமையினால் வரும் சந்தோஷம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா பாடுவோம்-2

1. வாழ்வு தரும் இயேசு வாதைகள் நீக்கிடுவார்
ஜீவன் தரும் இயேசு
மரணத்தை மாற்றிடுவார்-2
உலகம் தர முடியா மேலான வாழ்வு-2
அவர் உனக்கு தருவார்
நீ மேன்மை அடைந்திடுவாய்
அல்லேலூயா அல்லேலூயா-2

2. மாராவின் கசப்புகளை
மதுரமாய் மாற்றிடுவார்
ஏலீமின் நீரூற்றை உனக்கின்று
தந்திடுவார்-2
தடைகள் பல வந்தால் தளராதே நீயும்-2
அவர் ஜெயத்தை தருவார்
நீ தோல்வியை காண்பதில்லை

3. கற்சாடி தண்ணீரை கனி ரசம் ஆக்கிடுவார்
ஐந்தப்பம் இருமீனை
அநேகர்க்கு பகிர்ந்திடுவார்
வெறுமையாக உன்னை அனுப்பி விடமாட்டார்
அவர் கரமே என்றும்
உன்னை திருப்தியாக்கிடுமே

## பாடல் - 2420

**அபிஷேகம் ஊற்றும் அனலாக மாற்றும்**
ஆவியான தேவனே எங்கள் மீது வாரும்-2
அசைவாடும் அசைவாடும் ஆவியான தேவனே அசைவாடும்

1. வனாந்திரம் வயல் வெளியாய் மாறனும்
வயல் வெளியோ காடாக ஆகனும்
ஆவியான தேவனே அசைவாடும்-2

2. கோணல்கள் நேராக மாறணும்
கரடு முரடு சமமாக ஆகணும்-2
ஆவியான தேவனே அசைவாடும் - 2

3. உலர்ந்து போன எலும்புகள் உயிரடையணும்
காய்ந்து போன கோல்களெல்லாம் துளிர் விடணும் - 2
ஆவியான தேவனே அசைவாடும்-2

4. அந்தகார இருளெல்லாம் மாறனும்
உம் வெளிச்சம் உலகெங்கும் பரவணும் -2
ஆவியான தேவனே அசைவாடும்-2

## பாடல் - 2421

**தேன் இனிமையிலும் இனிமை**
என் தேவாதி தேவன் அருளிய வசனமே

1. துன்ப நேரத்தில் துணை வரும்
துக்கம் சூழ்ந்த நேரத்தில் தேற்றிடும்-2
தனிமையில் உனைத் தாங்கிடும்
மனக்காயம் அனைத்தையும் ஆற்றிடும்
எந்த மனிதனும் எந்த நிலையிலும்
படித்திட அது உகந்ததே-2

2. நல்ல பாதையில் நடந்திட
நல் குணங்களை உனில் வளர்த்திடும்
பரம பாதையை காட்டியே
பரலோக வாழ்வினை ஈந்திடும்
கால்கள் இடறி சேதம் அடைந்து
சோர்ந்திடாமல் தூக்கிடும்-2

## பாடல் - 2422

**கன்மலையானவர் துதிக்கப்படுவாராக**
மகிமையானவர் மகிமைப்படுவாராக
பூமியில் உயர்ந்தவர் ஜாதிகளில் உயர்ந்தவர்
உயர்ந்த ஸ்தலங்களில்
என்னை நிறுத்தி மகிமைப்படுபவர்-2

1. அநாதி ஸ்நேகத்தால் ஸ்நேகித்தார் அவர்
நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது
காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது
ஏற்ற காலத்தில் உயர்த்தினார்
அவர் நல்லவர் நல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளது-2

2. கால்களை கண்ணிக்கு விலக்கினார்
அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது
கண்களை கண்ணீருக்கு விலக்கினார்
அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது
கன்மலை மீதென்னை உயர்த்தினார்
அவர் நல்லவர் நல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளது-2

3. எண்ணில்லா நன்மைகள்
எனக்குச் செய்தார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது
எல்லையை விரிவுபடுத்தினார் அவர்
நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது
ஒரு நாளும் குறைவின்றி நடத்தினார்
அவர் நல்லவர் நல்லவரே
அவர் கிருபை என்றுமுள்ளது-2

### பாடல் - 2423

**கண்ணீரின் பள்ளத்தாக்கில்**
நான் நடந்து போனாலும்
என்னைக் காண்கிறவர் என்னோடு உண்டு
எனக்கொன்றும் பயமில்லையே

1. ஆகாரைப் போல் அலைந்திடினும்
ஆதரவு இல்லையென்றாலும்
ஆபிரகாமின் தேவன் என் தேவன்
நீரூற்றாக வந்திடுவார்-2

2. எங்கும் தீங்கு சூழ்ந்திடினும்
நெருக்கங்கள் தொடர்ந்திடினும்
யாபேசின் தேவன் என் தேவன்
இடங்கொண்டு பெருகச் செய்வார்-2

### பாடல் - 2424

**வேகமாய்ப் போகும் வாழ்க்கையே**
ஒரே ஒரு வாழ்க்கைதானைய்யா
உனக்கு வேறொரு வாழ்க்கை இல்லையே

1. வாலிபம் மாயைதான்
இளமையும் மாயைதான்
இவையெல்லாம் கடந்து போகும்
உலகத்தின் வேஷந்தான்
வாலிபனே உன் வாலிபப் பிராயத்தில்
சிருஷ்டிகர் இயேசுவை நினை-2

2. ஒரே முறை மரிப்பதும்
நியாயத்தீர்ப்பு அடைவதும்
மனிதனுக்கு கர்த்தர் அன்று
எழுதி வைத்த விதி அது
ஏழேழு ஜென்மம் என்று
ஏமாற்றுவோரும் உண்டு
ஏமாந்து போய்விடாதே நீ-2

### பாடல் - 2425

**வினை சூழ்ந்திடும் நேரம் என்னை**
விரைந்த வந்து காத்திடும் தெய்வம்
நீரின்றி யாருமில்லை
என்னை தாங்கும் தெய்வம் இயேசு



அட்டவணை

1. தனிமையில் நான் தயங்கும் போது
துணையாய் வந்தவர் இயேசு
ஏங்கிடும் போது தாங்கிடும் அன்பு
இயேசுவே நீரெந்தன் பங்கு
என் பாதையில் தீபமாய்
என் வாழ்வில் எந்நாளும் ஆனந்தமாய்-2
சொந்தம் பந்தம் எல்லாமே நீரே இயேசய்யா

2. சோதனை சோர்வுகள் சூழ்ந்திடும் போது
திடனாய் வந்தவர் இயேசு
வேதனை துன்பம் நெருக்கின போது
வாசல் திறந்தவர் இயேசு
சோர்ந்திடும் வேளைகளில்
தாங்கிடும் பெலன் தந்திடுவர்-2
சொந்தம் பந்தம் எல்லாமே நீரே இயேசய்யா

## பாடல் - 2426

**அப்பா உமக்கு ஸ்தோத்திரம்**
என் அன்பே உமக்கு ஸ்தோத்திரம்
அரணே உமக்கு ஸ்தோத்திரம்
என் பெலனே உமக்கு ஸ்தோத்திரம்-2

1. காலையிலே என்னைக் காத்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
மதியத்திலும் கண் பார்த்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்-2
இரவினிலும் நடுஜாமத்திலும்
என்னைக் காத்தீரே கண் பார்த்தீரே-2
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

2. போகையிலே என்னைக் காத்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
வருகையிலும் பாதுகாத்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்-2
நெருக்கத்திலும் பல ஆபத்திலும் எனைக்
காத்தீரே பாதுகாத்தீரே-2
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்



அட்டவணை

**பாடல் - 2427**

**இன்னும்கொஞ்சம் நேரம் தான்**
இன்னும் கொஞ்சம் காலந்தான்
அங்கு நாம் காணலாம் அழகான கானானை

1. துன்பங்களும் துயரங்களும்
உன் வாழ்வினையே திசை மாற்றிடலாம்
கண்ணீர்களும் கவலைகளும்
உன் வாழ்வினையே சோகமாக்கிடலாம்
சோர்ந்து போய்விடாதே நீ
உன்னோடு இயேசு வந்திடுவார்
உள்ளங்கையில் வரைந்து வைத்தவர்
ஒரு நாளும் மறந்து போவதில்லையே

2. நிந்தைகளும் அவமானங்களும்
விசுவாசத்தையே கவிழ்க்க நினைத்திடலாம்
கட்டுகளும் போராட்டங்களும்
ஜீவ ஓட்டத்துக்கு தடை போட்டிடலாம்
சோர்ந்து போய்விடாதே
நீ இயேசுவை நோக்கி ஓடிடு
நீதியின் கிரீடம் நமக்கு நிச்சயமாய்
இயேசு அன்று தந்திடுவார்

**பாடல் - 2428**

**இயேசுவின் ரத்தம் இயேசுவின் ரத்தம்**
ரத்தம் நம் பாவம் போக்கிடும்
இயேசுவின் ரத்தம் இயேசுவின் ரத்தம் ரத்தம்
நம் சாபம் நீக்கிடும் பாவங்கள் போக்கிடும்
சாபங்கள் நீக்கிடும் பரிசுத்தமாக்கிவிடும்

1. இயேசுவின் ரத்தத்தினால் நாம்
சமாதானமடைவோம்
சிலுவை ரத்தத்தினால் நாம்
பாவ மன்னிப்படைவோம்
எந்த மனிதனும் எந்த மனுஷியும்
தூய்மையாகிடுவோம்-2

2. இயேசுவின் ரத்தத்தினால்
நாம் நித்திய நீதிமானாகிடுவோம்
கல்வாரி ரத்தத்தினால் நாம்
நித்திய ஜீவன் பெறுவோம்
கறைகள் நீங்கி குறைகள் மாறி
கருவியாகிடுவோம்-2

**பாடல் - 2429**

**நீங்க இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வாகுமா**
உம்மைத் தேடாத நாளும் ஒரு நாளாகுமா
இயேசய்யா இயேசய்யா உம் பிள்ளை நானைய்யா-2

1. உம்மோடு நடந்தால் ஆனந்தம்
உம்மோடு இருந்தால் பேரின்பம்-2
நன்மையினால் என் வாயை நிரப்பும்
நல்லவரே என் ஏசைய்யா

2. உம் வசனம் எனக்கு ஆனந்தம்
உம் சமூகம் எனக்கு பேரின்பம்-2
வார்த்தையினால் என் வாழ்வு வளமாக்கும்
வல்லவரே என் ஏசைய்யா-2

3. உம் சத்தம் எனக்கு ஆனந்தம்
உம் சித்தம் எனக்கு பேரின்பம்-2
சித்தம் செய்த சீயோனில் சேர
சுத்தம் செய்யும் என் ஏசைய்யா-2

**பாடல் - 2430**

**வானத்திலும் பூமியிலும்**
சகல அதிகாரம் உள்ளவரே
மரணத்தை பாதாளத்தை ஜெயித்து
உயிரோடு எழுந்தவரே-2
உம் நாமம் வாழ்க-2 - உம் நாமம்
என்றென்றும் என்றென்றும் வாழ்க

1. உலகத்தின் முடிவு பரியந்தமும்
உங்களோடு இருப்பேன் என்று
வாக்கு கொடுத்தீரே-2
நீர் எந்தன் தேவன் நான் உந்தன் பிள்ளை
ஒன்றுக்கும் பயமில்லை-2

2. வாதை உந்தன் கூடாரத்தில்
என்றும் அணுகாமல் காப்பேன் என்று
வாக்கு கொடுத்தீரே-2 - நீர் எந்தன்

## பாடல் - 2431

**எபிநேசரே என் இயேசுவே**
ஆராதனைக்குரியவரே
எஜமானனே என் நேசரே மகிமைக்கு பாத்திரரே
கைகள் உயர்த்தி உம்மை ஆராதிப்போம்
கரங்கள் கொட்டி உம்மை துதித்திடுவோம்

1. ஆவியோடும் உண்மையோடும்
ஆராதனை செய்திட
ஆண்டவரே உந்தன் பாதம் கூடி
வந்துள்ளோம்
முழுமனதோடு ஆராதிக்கின்றோம்
முழு பெலத்தோடு துதித்திடுவோம்

2. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று உம்மை
பரலோக தூதர்களும் துதிக்கின்றாரே
பரிசுத்தரே உம்மை ஆராதிக்கின்றோம்
பரலோக தேவனே துதித்திடுவோம்

3. வல்லவரே நல்லவரே வரங்கள் தருபவரே
அனுதினம் காத்திடும் அல்பாவும் நீரே-2
அல்லேலூயா கீதம் பாடி ஆராதிக்கின்றோம்
ஆவியிலே நிறைந்து துதித்திடுவோம்-2

## பாடல் - 2432

**அல்லேலாயா பாடிப் பாடி**
அகமகிழ்ந்திடுவேன்

உம்மையே நான் பாடி பாடி
உள்ளம் மகிழ்ந்திடுவேன்
நல்லவரே வல்லவரே நாளெல்லாம்
என்னை காப்பவரே

1. நீரே என் நம்பிக்கை
நீரே என் அடைக்கலம்
நீர்தானே என்றென்றும் துணையானவர்-2

2. நீரே என் இரட்சிப்பு
நீரே என் விடுதலை
நீர் தானே என்றென்றும் பெலனானவர்

3. நீரே என் ஆறுதல்
நீரே என் தேறுதல்
நீர் தானே என்றென்றும் ஆதரவானீர்

**பாடல் - 2433**

**ஆராதனைக்கு பாத்திரரே**
ஆராதனை செய்கிறோம்
ஸ்தோத்திர பலிகளை செலுத்தி
உம்மை மகிமைப்படுத்துகிறோம்
இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசம்
செய்திடும் தேவனே
நீர் பரிசுத்தர் – 2 நீர் பரிசுத்தர் – 3

1. யெகோவாயீரே ஆராதனை
எல்லாம் நீரே பார்த்துக் கொள்வீர்
யெகோவா ஷாலோம் ஆராதனை
சமாதானம் என்றும் தருகிறீர்–2

2. யெகோவா நிசியே ஆராதனை
எந்நாளும் வெற்றி தந்திடுவீர்
யெகோவா ஷம்மா ஆராதனை
என்றென்றும் கூடவே இருக்கிறீர்–2

3. யெகோவா ரூவா ஆராதனை
எங்களை நடத்தும் நல் மேய்ப்பரே
யெகோவா ரப்பா ஆராதனை
சுகபெலன் என்றும் தருகிறீர்–2

**பாடல் - 2434**

**மாரநாதா அல்லேலூயா ஆமென்**
ஏசுவே வேகம் வாரும்
வானமீதினில் வந்திடும் நாளை காண
கண்கள் ஏங்குது–2

1. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடனே இருக்குது
வாரும் வாரும் என்று சொல்லி
ஏக்கத்துடனே தவிக்குது
ஏங்குது ஏங்குது மணவாளனைக் காண ஏங்குது
ஏங்குது ஏங்குது இன்ப ஏசுவைக் காண ஏங்குது

## பாடல் - 2435

**போதாது அளவு போதாது**
பேராசையுள்ள மனிதன் நானய்யா
போதாது அளவு போதாது
நிரம்பி வழிய வழிய ஊற்றுமே
கணுக்கால் போதாது முழங்கால் போதாது
இடுப்பும் போதாது நீந்தணுமே

1. ஆனந்த தைலம் அது அபிஷேக தைலம்
ஆரோனின் சிரசில் வடிந்த தைலம்
தலை முதல் பாதம் வரை வடிந்திட ஊற்றும்
ஆனந்த அபிஷேக தைலமே

2. பரிசுத்த தைலம் அது அபிஷேக தைலம்
முழுவதும் சுத்தமாக்கும் தைலம்
ஆசாரிய ஊழியத்தை அதிகாரத்தோடு செய்ய
பரிசுத்த அபிஷேக தைலம்

3. பரிமள தைலம் ராஜாக்களாக
மாற்றும் தைலம்
கர்த்தரின் ஆவி என்றும் கூடவே இருந்திடவே
பரிமள அபிஷேக தைலம்

## பாடல் - 2436

**ஆராதனை ஆராதனை அப்பாவுக்கு இயேசு அப்பாவுக்கே**
நல்லவரும் நன்மை செய்பவரும் அவரே
நம்பி வரும் அனைவரின் நம்பிக்கையும் அவரோ

1. என்னை தம் உள்ளங்கையில்
வரைந்தவர் அவரே
என் உருவம் இன்னதென்று
அறிந்தவர் அவரே
கண்ணை வைத்து ஆலோசனை
சொல்லுபவர் அவரே
கரம் பிடித்து நடத்திடும் கர்த்தரும் அவரே

2. வனாந்திரத்தில் என்னை
கண்டவரும் அவரே
வஸ்திரத்தினால் என்னை மூடினவர் அவரே
ரத்தம் கொண்டு என் பாவம்
போக்கினவர் அவரே
இரட்சிப்பின் சந்தோஷத்தினால்
அலங்கரித்தவர் அவரே

3. மறுபடி உலகினில் வருபவர் அவரே
தம் ஜனத்தை தம்முடனே
இணைப்பவர் அவரே
நித்தியமாய் வெற்றி தருபவர் அவரே
நித்தியமும் தம்முடனே வைத்திடுவார் அவரே

## பாடல் - 2437

**கர்த்தரை பாடிடுவேன்**
அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்
குதிரையையும் குதிரை வீரரையும்
அவர் கடலிலே தள்ளினார்

1. பார்வோனின் இரதங்களையும்
அவன் சேனை முழுவதையும்
சிவந்த சமுத்திரத்தில்
அதிபதிகளையும் தள்ளினார்
ஆழி அவர்களை மூடிக்கொண்டது
இனி எழுந்தவர் வருவதில்லை

2. கர்த்தரின் வலது கரம்
பகைஞரை நொறுக்கி விட்டது
கோபாக்கினையை அனுப்பி
தாளடியைப் போல் பட்சித்தாரே
அவர் நாசியின் சுவாசத்தினால்
ஜலம் உறைந்தது நடு கடலில்

3. அவர் வலது கரம் நீட்ட
பூமி எதிரியை விழுங்கியது
க்க கர்த்தர் தம் ஜனங்களையோ வென்றால்
கிருபையினால் மீட்டு வந்தார்
தம் பரிசுத்த வாசஸ்தலத்தில்
இஸ்ரவேலரை சேர்த்ததினால்

## பாடல் - 2438

**சூழ்நிலையை பார்க்காதே**
சூறாவளியைப் பார்க்காதே
உன் அருகில் நிற்கும் இயேசுவை நீ பார்
கடல் அலை பார்க்காதே
கொந்தளிப்பைப் பார்க்காதே

படகில் உறங்கும் இயேசுவை நீ பார்
அங்கும் இங்கும் பார்க்காதே
அங்கலாய்த்துப் போகாதே
அப்பா உன் இயேசுவை
அனுதினமும் நோக்கிப் பார்

1. எரிகோவைப் பார்க்காதே
எதிரியை நீ பார்க்காதே
துதியில் வசிக்கும் இயேசுவை நீ பார்
உன் துயரமெல்லாம் நீங்கிப் போகும் பார்

2. செங்கடலைப் பார்க்காதே
பார்வோனை நீ பார்க்காதே
யுத்தம் செய்யும் இயேசுவை நீ பார்
உன் தோல்வியெல்லாம் ஜெயமாகும்

3. ஆமானைப் பார்க்காதே
அகித்தோப்பேலைப் பார்க்காதே
யோசனையில் பெரியவரைப் பார்
அவர் ஆலோசனை ஜெயமாகும் பார்

## பாடல் - 2439

**நன்றி ராஜா இயேசு ராஜா**

1. தூக்கி எடுத்தீரே நன்றி ராஜா
துதிக்க வைத்தீரே நன்றி ராஜா

அல்லேலூயா ஆராதனை

2. சுகத்தை தந்தீரே நன்றி ராஜா
பெலத்தை தந்தீரே நன்றி ராஜா

3. ஜெபிக்க வைத்தீரே நன்றி ராஜா
ஜெயத்தை தந்தீரே நன்றி ராஜா

4. வல்லமை பொழிந்தீரே நன்றி ராஜா
வரங்கள் தந்தீரே நன்றி ராஜா

## பாடல் - 2440

**நல்லவரே நன்மைகள் செய்தவரே**
வல்லவரே என்னை வாழ வைத்தவரே
நன்றி ஐயா உங்களுக்கு நன்றி ஐயா
ஆராதனை

1. தாயின் கருவினிலே
என்னை தெரிந்து கொண்டீரே
தாங்கி தாங்கி நடத்தி வந்தீரே
தூக்கி தூக்கி சுமந்து வந்தீரே-தோள் மீது

2. துயரை மாற்றியே துதியின் உடை
சாம்பல் அகற்றி அழகு தந்தீரே
சஞ்சலங்கள் நீக்கி விட்டீரே
என்னை சந்தோஷத்தால் நிரப்பி விட்டீரே

3. சிங்கக் குட்டிகள் பட்டினியாயிருக்கலாம்
தேடும் என்னை போஷிக்கின்றீரே
நன்மை கிருபை தொடரச் செய்தீரே
தினம் நன்மையாலே முடிசூட்டினீரே

## பாடல் - 2441

**உருவாக்கும் கரங்களிலே**
என்னை நான் படைக்கின்றேன்
குயவன் கை களிமண் போல
உருவாக்கும் தேவனே உயிரூட்டும் தெய்வமே

1. சுயமென்னில் சாகனும்
நீர் என்னில் பெருக்கணும்
உள்ளான மனுஷனில்
தன் வல்லமையாய் மாறணும்

2. நீரின்றி என்னால் எதுவும்
செய்திட இயலாதய்யா
செய்வது எல்லாம் உந்தன்
ஆவியால் தானே ஐயா

3. உம்மை நான் அறிகின்ற
அறிவிலே வளர்ந்திடனும்
உமதன்பின் நீளம் உயரம்
ஆழம் அகலம் அறிந்திடனும்

## பாடல் - 2442

**யாருண்டு யாருண்டு உம்மைப் போல**
என்னையும் நேசித்திட இயேசு தேவா 2
என்னுள்ளம் பொங்கிடுதே
உம் அன்பை நினைக்கையிலே



அட்டவணை

1. அள்ளி அள்ளி அணைப்பதில் அன்னை நீங்க
துாக்கி என்னை சுமப்பதில் தந்தை நீங்க
வாரி வழங்குவதில் வள்ளல் நீங்க
என்னை வாழ வைப்பதில் மன்னன் நீங்க

2. அதிசயம் செய்வதில் உம்மைப் போல
அகிலத்தில் யாருண்டு என் தேவனே
தாலாட்டி மகிழ்வதில் உம்மைப் போல
தரணியில் யாருமில்லை என் நேசரே

3. பாவி என்னை பரலோகில் சேர்த்திடவே
பரமனே உம் ஜீவன் தந்தீரய்யா
பரிசுத்த இரத்தம் எனக்காய் சிந்தி
பரிசுத்தமாய் என்னை மாற்றினீரே

**பாடல் - 2443**

**கிருபை போதுமே எந்தன் தேவனே**
கிருபை பெருகுதே எந்தன் வாழ்விலே

1. பாடும் போதும் கிருபை
உம்மை தேடும் போதும் கிருபை
துதிக்கும் போதும் கிருபை
தினம் என்னில் தினம் பெருகுதே

2. போகையிலும் கிருபை
நான் வருகையிலும் கிருபை
தங்கும் போதும் கிருபை
தினம் என்னை தொடருதே

3. உண்ணும் போதும் கிருபை
நான் உறங்கும் போதும் கிருபை
உடுத்தும் போதும் கிருபை
தினம் என்னை மூடுதே

4. பேசும் போதும் கிருபை
நான் பார்க்கும் போதும் கிருபை
ஜெபிக்கும் போதும் கிருபை
தினம் என்னை தாங்குதே

## பாடல் - 2444

**உம்மோடு நானிருப்பேன்**
உம்மைப் போல் மாறிடுவேன் இயேசப்பா
உலக வாழ்வு நிரந்தரமில்லையே
உம்மோடு வாழ்வு நிரந்தரம் தானே

1. பாவி என் உள்ளத்தில் இறங்கி வந்தீரே
பரிசுத்த ஆவியை என் மேலும் பொழிந்தீரே
ஆவியின் கனி என்னில் பெருகவும் செய்தீரே
அதிசய தேவனே உமக்கே ஸ்தோத்திரம்

2. சத்துருவின் சூழ்ச்சிகள் தகர்ந்தே போனதே
சஞ்சலம் தவிப்பு என்னில் மறைந்து போனதே
ஆசீர்வாதங்கள் என் மேலே இறங்குதே
அற்புத தேவனே உமக்கே ஸ்தோத்திரம்

3. கண்ணீர் யாவும் மாறியே போகுதே
கவலைகள் யாவும் மறைந்தே போகுதே
துன்பங்கள் துயரங்கள் இல்லாமல் போகுதே
தூயவர் உம்மை நான் துதிக்கையிலே

4. மகிமையின் தேவன் உம்மை
சந்திக்கும் நாளிலே மறுரூபமடைவேன்
கண்ணிமைக்கும் நேரத்தில்
முகமுகமாக உம்மை நான் தரிசிப்பேன்
மகத்துவ ராஜனே உமக்கே ஸ்தோத்திரம்

## பாடல் - 2445

**தாய் போல தேற்றும் தேவன் நீரே**
தந்தை போல் ஆற்றும் தெய்வம் நீரே
உம் அன்பு பெரிதய்யா
அது ஒரு நாளும் குறையாதய்யா

1. கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
காயங்கள் ஆற்றுகிறீர் - எங்கள்

2. வினைகளெல்லாம் தீர்த்து விட்டீர்
விடுதலை தந்துவிட்டீர் - எனக்கு

3. குறைகளெல்லாம் நீக்குகிறீர்
நிறைவுக்குள் நடத்துகிறீர் - என்னை

## பாடல் - 2446

**மகிமையின் ஆலயமாய் என்னை மாற்றினீர்**
மகிமையால் என்னில் வந்து வாசம் செய்கிறீர் – நன்றி தேவனே...

1. புது பெலன் தருகிறீர்
புது எண்ணெய் பொழிகிறீர்
பரிசுத்தம் தருகிறீர்
பரிபூரணம் அடைகிறேன்-நன்றி தேவனே

2. ஆனந்தம் வாங்குதே ஆரோக்கியம் மூடுதே
விசுவாசம் பெருகுதே திருப்தி அடைகிறேன்

3. ஜெபிக்க வைக்கிறீர்
உம்மை துதிக்க வைக்கிறீர்
மன்றாட வைக்கிறீர் மகிமை அடைகிறேன்

## பாடல் - 2447

**உயிரே உயிரே உம்மை துதிப்பேன்**
உயிரோடு எழுந்தவரே உம்மை துதிப்பேன்
உயிரை தந்தவரே உம்மை துதிப்பேன்
உலகை ஜெயித்தவரே உம்மை துதிப்பேன்
உமக்கே மகிமை...

1. உயிரோடு உயிரானீரே
உணர்வோடு உணர்வானீரே
நரம்போடு நரம்பானீரே
என் இரத்தத்தோடு இரத்தமானீரே

2. பேச்சோடு பேச்சானீரே
மூச்சோடு மூச்சானீரே
எலும்போடு எலும்பானீரே
என் தசையோடு தசையானீரே

3. கனவோடு கனவானீரே
கண்மணி போல என்னைக் காத்தீரே
நினைவோடு நினைவானீரே
என் நிழல் போலே என்னைத் தொடர்ந்தீரே

## பாடல் - 2448

**இந்தியா இந்தியா இந்தியா நான் பிறந்த தேசமே இந்தியா**
இந்தியா இந்தியா இந்தியா என் சொந்த தேசமே இந்தியா
என் தேவனே இந்தியா மாற வேண்டும் தேவனே
இந்தியா இந்தியா இந்தியா என் சொந்த தேசமே இந்தியா
என் தேவனே இந்தியா மாற வேண்டும் தேவனே
தேவனே என் தேசம் மாற வேண்டும் தேவனே

1. மனந்திரும்ப வேண்டுமே இந்தியா
மீட்படைய வேண்டுமே இந்தியா
செழிப்படைய வேண்டுமே இந்தியா
வாழ்வடைய வேண்டுமே இந்தியா

2. பாவமெல்லாம் ஒழிய வேண்டும் இந்தியாவிலே
சாபமெல்லாம் தீர வேண்டும் இந்தியாவிலே
வறுமையெல்லாம் மாற வேண்டும் இந்தியா...
ஆசீர்வாதம் இறங்கவேண்டும் இந்தியா...

3. இனவெறிகள் ஒழிய வேண்டும் இந்தியா...
மத வெறிகள் ஒழிய வேண்டும் இந்தியாவிலே
மூடப்பழக்கம் மாற வேண்டும் இந்தியாவிலே
தேவ பயம் பெருக வேண்டும் இந்தியா...

## பாடல் - 2449

**அதிகாலை நேரமே அப்பா உம்பாதமே**
அமர்ந்து நான் ஆராதனை செய்கிறேன்
அன்பே ஆராதனை அழகே ஆராதனை

1. காலை தோறும் உமது கிருபை
புதியதல்லவோ
புதிய கிருபையால் என்னை நிரப்பி
ஆசீர்வதிப்பீரே

2. மலைகள் எல்லாம் விலகினாலும்
கிருபை விலகாதே
மனிதர் அன்பு மாறினாலும்
உம் அன்பு மாறாதே

3. பூமிக்கு வானம் உயரம் போல
கிருபை பெரிதல்லோ
பெரிய கிருபை தினமும் என்னை
சூழ்ந்து கொள்ளுதே

## பாடல் - 2450

**ஐயா நான் வெறும் மரம் தான்**
கனி மரமாய் மாற்றினீரே
கரையோரம் நடப்பட்ட மரங்கள் போல
குறைவின்றி கனிகளைத் தர வேண்டுமே

1. உம்மில் நான் நிலைத்திருந்து
ஏராளம் கனி தருவேன்
உம் நிழலில் காத்திருந்து
உம் சாயல் அடைந்திடுவேன்

2. நீரின்றி நான் எதுவும்
செய்திட இயலேன் ஐயா
நின் பாதம் அமர்ந்திருந்து
நிறைவாக கனி கொடுப்பேன்

3 எனக்குள் நீர் இருப்பதினால்
எப்போதும் கனி தருவேன்
வறட்சியின் காலத்திலும்
தப்பாமல் கனி கொடுப்பேன்

4. மலை போன்ற சோதனைகள்
அலை அலையாய் மோதினாலும்
அசையாது உம் பின்னே
ஆசையாய் தொடர்ந்திடுவேன்

## பாடல் - 2451

**பரிசுத்த தேவா பரிசுத்த தேவா**
உம் பரிசுத்த சந்நிதியில்
படைக்கிறேன் பலியாக
பாவமெல்லாம் நீக்கி பரிசுத்தமாக்கி
பயன்படுத்தும் தேவா - என்னை

1. பரிசுத்த ஆலயம் நானல்லவோ
என்னில் அசுத்தங்கள் வேண்டாமையா
அசுத்தங்கள் போக்கி பரிசுத்தமாக்கி
பயன்படுத்தும் தேவா - என்னை

2. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தந்து
பரிசுத்தமாக்கும் தேவா
வரங்கள், கனிகள், கிருபைகள் தந்து
பயன்படுத்தும் தேவா

## பாடல் - 2452

**இயேசு ராஜா உந்தன் அன்பே (2)**
மகிமை நிறைந்த மோட்சம் தானே (2)
ஜீவ ஊற்றே எங்கள் ராஜா
பசுமையான புல்வெளி நீரே (2) - இயேசு

1. நல் மேய்ப்பரே உம் மந்தையில்
வளமாய், என்னைக் கர்த்தவரே (2)
உம் வேதமே உணவானதால்
பசி தாகமே வாராதையா
மழை போல் ஆவி ஊற்றுமையா (2)
அபிஷேகத்தால் நிரப்புமையா (2) - இயேசு

2. பொன் வேண்டியே, பொருள் வேண்டியே
நலம் தேடியே அலையும் நெஞ்சே (2)
கண் முன்னமே அவை யாவுமே
அழிந்தோடுமே உன் வாழ்விலே
அழியாதவர் இயேசு ராஜா
அவர் பாதத்தில் மன்றாட வா? - இயேசு

## பாடல் - 2453

**ராஜாதி ராஜனை தேவாதி தேவனை**
கெம்பீர சத்தத்தோடு துதிப்போம்
கெம்பீர சப்தமாய் எக்காளம் ஊதுவோம்
யேகோவா கர்த்தரை
நாம் துதித்து கொண்டாடுவோம்

1. நித்தம் நித்தம் துதிப்போம்
நாம் நீதியின் தேவனை
சத்தம் உயர்த்தி துதிப்போம்
நம் சத்திய தேவனை
ஆராதனை வேந்தனை ஆராதனை செய்யவே
துதிப்போம் களிப்போம் புகழ்வோம்
நம் இயேசு ராஜனை

2. பெரிய காரியம் செய்வார்
இந்த பெரிய தேவனே
பயம் வேண்டாம் எதற்கும்
ஜெயம் என்றும் கிடைக்கும்
ஜெயம் தரும் தேவனே
சாவை வென்ற வேந்தனே
கிடைக்கும் ஜெயமே எனக்கும் எதிலும்
கிடைக்கும் ஜெயமே நம் இயேசு நாமத்தில்



அட்டவணை

3. தாவீதை போல் துதிப்போம்
நாம் நடனம் ஆடியே
இன்னிசை முழங்க துதிப்போம்
இந்த மகிமையின் தேவனை
தாவீதின் தேவனே துதிகளின் பாத்திரர்
தாவீதாய் மாறுவோம்
துதிப்போம் உயர்வோம் நம் தூய தேவனை

14. பாடிப் பாடி போற்றுவோம்
நம் பரிசுத்த தேவனை
ஆடிப் பாடி புகழ்வோம் நம் அற்புத தேவனை
அகிலம் எல்லாம் படைத்தவர்
அற்புதங்கள் செய்பவர்
படைத்தார் அனைத்தும் கொடுத்தார் உரிமை
நாம் ஆண்டு கொள்ளவே

## பாடல் - 2454

**நீர் இல்லாமல் வாழ்வேது**
நான் உம்மோடு தான் போல வாழ்வேன்
பல துன்பங்கள் வந்து சூழ்ந்தும்
நீர் என்னோடு இருந்து காத்தீர்

1. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீர் நன்றி ஐயா
பெலவீனன் என்று தள்ளி விடாமல்
பெலத்தாலே நிறைத்தீர் ஐயா - உம்

2. உலகோடு எனக்கு உறவு இல்லை
உம்மோடு தான் என் ஐக்கியமே
எதிர் காலம் எல்லாம் எனக்கு நீரே
எதிர் பார்ப்பு நிறைவேறுமே - என்

3. உறவுகள் என்னை வெறுத்த நேரம்
வார்த்தையால் என்னை தேற்றினீர்
எல்லோரும் என்னை கைவிட்ட நேரம்
நெஞ்சோடு அனைத்தீர் ஐயா - என்னை

4. அநாதி தேவன் அடைக்கலமானார்
அவரது புயங்கள் ஆதாரமே
யார் என்ன செய்தும் என்னென்ன நடந்தும்
நான் என்றும் அசைவதில்லை - ஐயா

5. எனக்காக யாவும் செய்து முடித்தீர்
அதற்காக உமக்கு நன்றி ஐயா – என்
நோய்கள் யாவையும் சுமந்து தீர்த்தீர்
என் துக்கம் ஏற்றீர் ஐயா

**பாடல் - 2455**

**அதியசயமானவர் இயேசு – இவர்**
நேற்றும் இன்றும் என்றும் மாறிடா தேவன்
அதிசயமானவர் இயேசு

1. அகிலம் அனைத்தையும் படைத்தவரே
உம்மை பாடாதிருப்பேனோ
உந்தன் நாமம் என்றும் அதிசயமே
அல்லேலூயா துதி உமக்கே – என்றும்

2. எரிகோ மதிலை தகர்த்தவரே
உம்மை போற்றாதிருப்பேனோ
எக்காள தொனியும் முழங்கிடவே
கர்த்தாவே ஜெயம் தந்தீரே – என்றும்

3. கானவூர் கல்யாண விருந்தினிலே
அன்று அதிசயம் செய்தவரே
தண்ணீரும் திராட்சை ரசமானதே
உந்தன் அற்புத மகிமையாலே – என்றும்

4. ஆகாரின் கண்ணீரை கண்டதினால்
ஓர் ஊற்றை திறந்தவரே
அன்னாளின் ஜெபத்திற்கு பதிலளித்து
சாமுவேலை தந்தவரே – என்றும்

5. துதியில் வாசம் செய்பவரே
உம்மை துதித்திடுவேன் என்றும்
தூயாதி தூயவர் உந்தனையே
தூதர் சேனை தொழுதிடுதே – என்றும்

**பாடல் - 2456**

**ஆவியானவரே ஆற்றல் தருபவரே – 2**
மணவாளரே துணையாளரே
மகிழ்ந்திட அசைவாடுவீர் மறுரூபமாக்கிடுவீர்

1. நீரின் மேல் நிலை நின்ற ஆவியே
நீர் தாமே என்னுள்ளம் அசைவாடுமே
வெறுமையை மாற்றிடவே
பரனே என்னில் தங்கிடுமே

2. ஜெப வேளை உம் பாதம் தேடியே
அபிஷேக பெலத்தோடு போராடுவேன்
உந்தனின் வல்லமையால்
நிறைந்தே நிதம் வாழ்த்திடுவேன்

3. பெலன் தாரும் திடன் தாரும் என் தேவனே
வளமான வாழ்வின் அடித்தளமே
மழை போல் பெய்திடுமே
கட்ட என் மேல் உம் நன்மைகளை

4. எலியாவை நிறைத்தீரே அபிஷேகத்தால்
எதிர்ப்போரை மேற்கொள்ள உம் பெலத்தால்
அக்கினி இறங்கினதோடு
அவரின் ஜெபம் கேட்டதுமே

5. வரம் தாரும் பரிசுத்த ஆவியே
தரமான ஜீவியம் நடத்திடவே
சாட்சியாய் நிறுத்திடுமே
சகலமும் படைத்தாள்பவரோ

## பாடல் - 2457

**தேவா உந்தன் சமுகமே**
தேவ சாயலாக்குமே
தேவா உம்மைகண்டு கண்டு
உம்மை போல மாறிடுவேன்

1. இரத்தத்தினாலே கழுவிடும்
இரட்சிப்பினாலே மூடிடும்
பாவங்கள் அறவே கழுவி கழுவி
பரிசுத்தர் போல ஆகுவேன்

2. பரிசுத்த ஆவியால் நிரப்பிடும்
பரவசமாகி மகிழ்ந்திட
தேவனின் சமுகத்தில் நிரம்பி நிரம்பி
தேவனைப் போல ஆகுவேன்

3. பரிசுத்தவான்களின் பட்டியலில்
பரமனே எனக்கோர் இடமளியும்
பணிந்து குனிந்து பாதம் சேர்ந்து
பரமனைப் போல ஆகுவேன்

4. வீழ்ந்த என்னை தூக்கிடும்
தாழ்ந்த என்னை உயர்த்திடும்
நெகிழ்ந்திடாது நித்தியம் சேர
நிர்மல நாதா அருள் செய்யும்

**பாடல் - 2458**

**அன்பே உம்மை ஆராதிக்கின்றேன்**
அன்பின் கரத்தில் அர்ப்பணிக்கின்றேன்
அமுதமும் நீரே அமிர்தமும் நீரே
சுகந்தமும் நீரே சுகிர்தமும் நீரே

1. அன்பில்லா நெஞ்சம் அனைத்திலும் பாழே
பண்பில்லா வாழ்க்கை எல்லாமும் வீணே
சகலமும் தாங்கும் சகலமும் சகிக்கும்
அகலமும் ஆழமும் நீளமுமற்றதே

2. கனிந்து கனிந்து கனி தரும் வாழ்வை
துணிந்து துணிந்து முன் செல்லச் செய்யும்
உவர் நீரில் வாழும் மீனினம் போல
தவறுலகில் என்னை செவ்வையாய் நடத்தும்

3. ஆவியின் வரங்கள் அனைத்தும் இருந்தும்
அன்பின் குணங்கள் சிறிதும் குறைந்தால்
பாவியின் குணங்கள் பரவிடச் செய்யும்
பரமனின் சாயல் விலகிடத் தொடங்கும்

4. அன்பே உம்மைப் போல் மாறிட நானும்
ஆவலாய் தினமும் ஏங்குகின்றேன்
உம்மைபோல் மன்னிக்க உம்மை போல் நேசிக்க
உம் பெலன் தாரும் என் இயேசு நாதா

5. அன்பில் நிறைந்து ஊழியம் செய்தால்
அவரின் நாளில் தைரியம் பெறலாம்
தூதர்கள் சூழகிரீடங்கள் சூடி
தூயவர் உன்னை அழைத்து செல்வார்



அட்டவணை

## பாடல் - 2459

**ஜீவனுள்ள தேவனே அப்பா பிதாவே**
அபிஷேகியும் என்னை அபிஷேகியும்

1. என் உள்ளம் நிரம்ப அபிஷேகியும்
என் தலையை எண்ணையால் அபிஷேகியும்

2. வல்லமை விளங்க அபிஷேகியும்
வாழ்நாள் முழுதும் அபிஷேகியும்

3. சாந்த குணத்தால் அபிஷேகியும்
சகலமும் சகிக்க அபிஷேகியும்

4. விழித்து ஜெபிக்க அபிஷேகியும்
எழுந்து ஜொலிக்க அபிஷேகியும்

5. ஞானத்தின் ஆவியால் அபிஷேகியும்
வாக்கு வன்மையால் அபிஷேகியும்

## பாடல் - 2460

**பிதாவே உம்மை ஆராதிப்பேன்**
இயேசுவே உம்மை ஆராதிப்பேன்
தேவனே உம்மை ஆராதிப்பேன்
ஆவியே உம்மை ஆராதிப்பேன்

1. நான் தள்ளாடி நடந்தேன் இடறவில்லை
என்னை தாயைப் போல் காத்தது கிருபையல்லோ

2. நான் வழி அறியாமல் திகைத்து நின்றேன்
நானே வழியும் சத்தியமும் ஜீவன் என்றீர்

3. நான் பயந்து சோர்ந்த நேரமெல்லாம்
உந்தன் கோலும் தடியும் என்னை தேற்றினதே

4. நான் தனிமையில் வாடி தவிக்கையிலே
நீர் என்னோடு இருப்பேன் என்று சொன்னீரே

5. நான் தேவனின் பரிசுத்த ஸ்தலமதிலே
அனுதினமும் மகிழ்ந்து துதித்திடுவேன்

## பாடல் - 2461

**தேவ சமுகம் பரம ஔஷதம்**
தேவ சமுகம் பரம ஆனந்தம்

1. அகந்தையை என்னில் அகற்றிடும்
ஆவியை நிறைவாய் பொழிந்திடும்
சுகந்தம் என்னில் வீசிட
சுயத்தை முற்றும் நீக்கிடும்

2. சர்வாயுதங்கள் தரிப்பேன்
சாத்தானின் கோட்டையை தகர்ப்பேனே
பர்வதம் அதிர்ந்து உருகிடும்
பரவசம் என்னில் பெருகிடும்

3. அக்கினி மேக ஸ்தம்பமாய்
அடியார் முன்னே நடந்திடும்
விக்கினமின்றி கடந்திட
வினைகளகற்றி நடத்திடும்

4. ஆற்றுவோறும் தேற்றுவோறும்
ஆற்று நீராய் வற்றினாலும்
ஊற்று நீராய் தேற்றிடுமே
உன்னதத்தின் சமுகத்தால்

## பாடல் - 2462

**கண்ணீரை காண்கின்ற தேவன்**
கரம் நீட்டி துடைத்திடுவார் - உன்
கலங்காதே கலங்காதே
கண்மணிப் போல் உன்னை காத்திடுவார்

1. ஆகாரின் கண்ணீரை கண்டதினால்
அன்றே கொடுத்தார் ஓர் ஊற்றை
நீ கோரும் காரியம் கண்ணீரானால்
நிறைவேற்றுவார் நிச்சயமாய்

2. நீ சிந்தும் கண்ணீருக்கு விலையுமுண்டு
நிறுத்து பார்த்து கணிப்பதுண்டு
கசிந்து உருகி எண்ணப்படும்
காலத்தே அவைகள் நிறைவேறும்

3. சுமக்கும் கழுதையின் பாங்கினைப் பார்
சோகத்தை யாரிடம் கூறிடும் கேள்
உமக்கு மேலே ஒருவனுண்டு
உன் பாரம் சுமக்க அவருமுண்டு

4. கண்ணீரோடு விதைத்தால் கனம் பெறுவாய்
கெம்பீரத்தோடு அரிகளை அள்ளி கட்டுவாய்
தண்ணீரும் நெருப்பும் தடை செய்யாதே
தாராளமாய் முன் செல்லுவாய்

5. வெட்டாத கிணற்றிலே நீர் அருந்தி
நட்டாத மரத்திலே கனி புசிப்பாய்
கட்டாத பட்டணத்தில் குடியிருந்து
கர்த்தரின் ஆசிகளை அனுபவிப்பாய்

## பாடல் - 2463

**பரிசுத்தமான பரவசமே**
தரிசிக்க செய்யும் திருமுகமே
பரிசுத்தம் பெற வந்தோம்
தரிசிக்க செய்யும் திருமுகமே

1. விரும்பாத பாவம் வேண்டாத சிந்தைகள்
துரும்பாக நுழைந்து இரும்பாக மாறும்
அரும்பாடுபட்ட பெரும் பாதை பயணம்
வீணாகவே என்றும் போய்விடும்

2. பாவியின் நட்பு தீயோரின் உறவு
எளியோரை என்றுமே அழித்திடும்
அகந்தை கொண்ட மானிடர் அன்பு
ஆண்டவர் உறவை முறித்திடும்

3. அகத்தினில் வாழும் பாவத்தால் உந்தன்
முகச்சாயல் மாறும் வேறுபடும்
தேவ சாயல் விலகிப் போகும்
தெய்வத்தின் மகிமை தூரமாகும்

4. நீ செல்லும் பாதை நேர்மை தானா
நீ சொல்லும் வார்த்தை உண்மை தானோ
வலப் பக்கத்தில் இயேசு நிற்கிறார்
அவரிடம் நீ உண்மையைச் சொல்லு

5. கர்த்தருக்கென்றும் பயந்திட்டால்
கரம் பிடித்தே உன்னை நடத்துவார்
உன்னை விட்டு விலக மாட்டார்
உன்னை என்றும் கைவிடமாட்டார்



அட்டவணை

## பாடல் - 2464

**நல்லவர் வல்லவர்**
நன்மைகள் செய்திடும் நல்லவர்
எனக்காய் யாவையும் செய்திடும்
இயேசு என்றும் நல்லவர்

1. வசனம் தந்த நல்லவர்
வாக்கு மாறா வல்லவர்
எனது கிருபை உனக்கு போதும்
என்று சொன்னவர் நல்லவர்

2. யாக்கோபின் தேவன் நல்லவர்
யாபேஸின் தேவன் வல்லவர்
எலியாவின் தேவன் எலிசாவின் தேவன்
இன்றும் என்றும் உயர்ந்தவர்

3. குருடர் கண்களை திறந்தவர்
செவிடர் கேட்டிட செய்தவர்
கல்வாரி சிலுவையில் தன் ஜீவன் தந்தவர்
காயங்களால் சுகம் ஆக்குவார்

4. மாராவின் கசப்பை மாற்றியவர்
மண்ணான என்னையும் நினைத்தவர்
இரட்சிப்பின் ஆடையும் துதியின் பாடலும்
இன்ப கானான் அளித்தவர்

5. உனக்கும் எனக்கும் நல்லவர்
உலகை படைத்த வல்லவர்
உனக்குள் இருப்பவர் உலகில் உள்ள
எல்லோரிலும் மிகப் பெரியவர்

## பாடல் - 2465

**எந்தனின் உள்ளம் உந்தனின் அன்பினால்**
நிரம்பி வழிகின்றதே
கரங்கள் தட்டியே
உம்மை உயர்த்தி என்றும் ஆராதிப்பேன்

1. கருவினில் கண்டவரே தெரிந்து கொண்டவரே
வாழ்த்தி வணங்கிடுவேன்
தாழ்வில் நினைத்தவரே வாழ்வினை தந்தவரே
உம்மை துதித்திடுவேன்

2. ஆபிரகாம் தேவன் நீரே ஈசாக்கின் தேவன் நீரே
யாக்கோபின் தேவன் நீரே
வாழ்வின் பாதையிலே எனக்கும் தேவன் நீரே
எதற்கும் பயமில்லையே

3. யெகோவா ஷம்மா நீரே என்னோடு இருப்பவரே
பிரசன்னம் தந்திடுவீர்
யெகோவா ஷாலோம் நீரே அமைதி தந்திடுவீர்
நித்ய கன்மலையே

4. கர்த்தாதி கர்த்தர் நீரே ராஜாதி ராஜன் நீரே
தேவாதி தேவன் நீரே
அகிலம் அனைத்தையும் ஆளும் பிரபு நீரே
ஆற்றல் நிறைந்தவரே

5. ஆவியின் வலத்தினால் வெற்றி பெற்றிடுவேன்
பாவ வாழ்க்கையிலே
ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் செய்தவரே
ஆடி பாடிடுவேன்

## பாடல் - 2466

**நான் கர்த்தரை பாடுவேன்**
என் மீட்பரை பாடுவேன்
இயேசுவை பாடுவேன்
என் நேசரை பாடுவேன்

1. என்னை மீட்டெடுத்த தேவ தேவனே
எந்நாளும் போற்றி போற்றி பாடுவேன்
பாவ சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாடி பாடி துதித்திடுவேன்

2. ஆவியின் பெலன் அளித்த அற்புதர் இவர்
ஆற்றி தேற்றிடும் நேசரும் இவர்
அன்பரின் பாதம் எந்தனின் வாஞ்சை
ஆவியில் பாடி களித்திடுவேன்

3. அரணும் கோட்டையும் கேடகம் இவர்
ஆபத்து நேரம் காப்பவர் இவர்
இயேசுவை நம்புவேன் இரட்சிப்பு நிச்சயம்
இன்றும் என்றும் வாழ்ந்திருப்பேன்

4. வாரும் எந்தன் ஆத்ம நேசரே
வயல் வெளிகளில் தங்கி இருப்போம்
காலை ஜெபத்தின் இன்ப சத்தத்தை
உமக்கு தருவேன் நேச மேன்மையை

### பாடல் - 2467

**வாருங்கள் போவோம் கொல்கொதா**
பாருங்கள் உள்ளம் கறையாதா
முள்முடி வேந்தன் நம் இயேசுவே
மூன்றாணியில் மாண்டனரே

1. உழுத நிலமாய் உத்தமர் இயேசு
உன் பாவ பலியாய் தன்னையே ஈந்தார்
அழவும் இல்லை சபிக்கவும் இல்லை
அந்தக் கேடடைந்தார் உந்தனுக்காய்

2. மூன்றாணியாலும் முள் முடியாலும்
மூர்க்கன் அடித்த கசையடியாலும்
தண்ணீராக வடிந்த இரத்தம்
தரணியோர் பாவம் கழுவியதே

3. நெருப்பில் வீழ்ந்த நீர் துளி போல
நீ செய்த பாவம் மறைந்திடுமே
வெறுத்து நீ விரும்பி வந்தால்
விண்தூதர் காவல் உனக்களிப்பார்

4. பச்சை மரத்திற்கே இந்த பாடானால்
பட்ட மரம் நீ என்ன ஆவாய்
இச்சை வெறுத்து உலகில் வாழ்ந்தால்
நிச்சயம் மோட்சம் உனக்களிப்பார்

5. பாரச் சிலாவை சுமந்ததாலே
பங்கமடைந்து பெலனிழந்தாரே
கோரமான துன்பத்திலும்
கொலைஞருக்காய் பரிதபித்தார்

### பாடல் - 2468

**இயேசுவே நான் உந்தன் சொந்தம்**
இயேசுவே நீர் எந்தன் சொந்தம்
உமக்காத்தான் உயிர் வாழ்கிறேன்
உம்மைதானே நேசிக்கிறேன்



அட்டவணை

அர்ப்பணித்தேன் சித்தம் செய்ய
ஒப்படைத்தேன் ஏற்றுக் கொள்ளும்

1. இரத்தம் சிந்தி என்னை மீட்டீர்
சுத்த ஆவியால் அபிஷேகித்தீர்
புது பெலத்தால் என்னை நிறைத்து
நவ மொழியால் பேசச் செய்தீர்

2. உந்தன் பாதத்தில் காத்திருந்து
உள்ளம் நொறுக்கி நான் ஜெபிப்பேன்
உணர்வுள்ள காற்றை வீசச் செய்யும்
உத்தம இதயம் காத்துக் கொள்வேன்

3. பலிபீடத்தில் படைக்கிறேன்
தூய்மையாக்கும் இயேசு நாதா
தேவ சித்தம் செய்ய வந்தேன்
கிருபை தாரும் எந்தன் தேவா

4. எந்தன் சித்தம் ஒன்றும் வேண்டாம்
போதுமைய்யா உந்தன் சித்தம்
தந்தை சித்தம் செய்தீரல்லோ
அந்த சித்தம் கற்றுத் தாரும்

5. சித்தம் செய்வதே என் உணவு
செய்து முடிப்பேன் சந்தோஷமாய்
ஓட்டம் முடித்து இளைப்பாறவே
மோட்ச வீட்டில் சேர்ந்திடுவேன்

## பாடல் - 2469

**ஆனந்தம் பொங்கி வழியுதே**
அல்லேலூயா துதி பாடுகையில்
வானம் திறந்து இறங்கிடுதே
வல்ல ஆவி எந்தன் உள்ளத்திலே

போற்றுவோம் புகழ்வோம் தேவனே
சாற்றுவோம் சரணம் ராஜனை

1. பரலோக ராஜாதி ராஜனை
பாவ பரிகார தேவனை
பரிசுத்த அன்பு ராஜனை
பரவசமாகவே துதிப்போமே

2. பாவமில்லா இரத்தம் சிந்தினாரே
பாவ பரிகாரி ஆனாரே
சாப ரோகம் நீக்கினாரே
சந்தோஷம் சமாதானம் அருளினாரே

3. எண்ணம் வார்த்தை ஆகு முன்னே
சிந்தை செயலாய் மாறு முன்னே
திண்ணமாய் எனக்கு செய்திடும்
தெய்வத்தைப் போற்றி புகழ்வோமே

4. ஏவல் செய் தூதர்கள் காத்திருக்க
ஏன் அதற்காய் அஞ்ச வேண்டும்
காவல் செய் கணங்கள் சூழ்ந்திருக்க
களிப்போம் களிப்போம் களித்திடுவோம்

## பாடல் - 2470

**எனக்கு ஒத்தாசை வரும் பர்வதம் நேராய்**
என் கண்களை ஏறெடுப்பேன்
வானம் பூமியும் யாவையும் உண்டாக்கின
கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்

1. சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாய் கிடந்தாலும்
கர்த்தரை தினமும் தேடுவோர்க்கென்றும்
குறைகள் வாழ்வினில் ஒன்றுமில்லை

2. என்னை காக்கின்ற தேவனவர்
என்னை என்றும் நடத்துவார்
இஸ்ரவேலை காக்கும் தேவன் என்றும்
உறங்குவதில்லை தூங்கவில்லை

3. தாய் உன்னை என்றும் மறந்தாலும்
உள்ளங்கையில் வரைந்தாரே
ஒரு போதும் உன்னை தள்ளிடாரே
என்றென்றும் தாங்கி நடத்துவாரே

## பாடல் - 2471

**மாறாதவர் என் தேவனே**
மகிமைக்கு பாத்திரர் கர்த்தரே
மகத்துவமான என் தேவனே
மாட்சிமை நிறைந்த கர்த்தரே



அட்டவணை

மகிமை மகிமை மாட்சிமை
மாறாதவர் என் தேவனுக்கே
மகிமை மகிமை மாட்சிமை
சர்வ வல்லவர் என் கர்த்தருக்கே

1. செங்கடல் வழியை திறந்தவர்
எரிகோ கோட்டையை தகர்த்தவர்
மலைகள் போன்ற சோதனையை
வழிகளாக்கிடும் வல்லவர்

2. மட்செடி தன்னில் தோன்றினவர்
முகமுகமாய் பேசினவர்
மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவர்
முற்றிலும் ஜெயமாய் நடத்துவார்

3. ஆகாரின் கண்ணீரை கண்டவர்
அன்னாளின் ஜெபத்தை கேட்டவர்
உந்தன் கண்ணீரை கண்டிடுவார்
உந்தன் ஜெபத்தை கேட்டிடுவார்

4. எலியாவின் ஜெபத்தை கேட்டவர்
அக்கினியால் பதில் கொடுத்தவர்
உனக்கு எதிராய் எழுப்பிடும்
ஆயுதம் ஒன்றும் வாய்க்காதே

## பாடல் - 2472

**கண்மணியே நீ கலங்காதே**
காண்கின்ற தேவனே காண்கின்றார்
பொன் அணிமேல் உன் கண் எதற்கு
பொற்பரன் இயேசுவை நோக்கிடுவாய்

1. பெற்றவர் உற்றவர் கைவிடுவார்
பெற்றுக் கொண்டவரும் மறந்திடுவார்
சுற்றமும் விலகி ஓடிவிடும்
குற்றமும் பார்த்து நழுவிவிடும்

2. வருத்தம் வியாதி வேதனையில்
நெருக்கம் துயரம் துன்பங்களில்
நீங்கிடா நிந்தை பரிகாசங்களில்
நம் ஏங்கி தவிக்கும் வேளைகளில்

3. துடுப்பில்லா படகில் இருக்கும் போதும்
உடுப்பில்லா நிலையே வரும் போதும்
பிழைத்திட வேலை கிடைக்காத போதும்
உழைத்திட பெலனோ இல்லாத போதும்

## பாடல் - 2473

**ஆவியை ஊற்றும் அக்கினி ஊற்றும்**
வல்லமை ஊற்றும் ஐயா
வரங்கள் தாரும் கிருபை தாரும்
அக்கினி ஊற்றும் ஐயா

1. வல்லமையுள்ள அபிஷேகத்தால்
எலியாவை நிறைத்தீர்
வார்த்தையாலே மழையை நிறுத்தி
வல்லமை காரியம் செய்திட்டீரே
அக்கினி இறக்கினீரே
அவபக்தியை அகற்றினீரே

2. இரு மடங்கு அபிஷேகத்தால்
எலிசாவை நிறைத்தீர்
பன் மடங்கு ஆவியின் வரத்தை
தேவ குமாரன் மேல் ஊற்றினீரே
என்னை நிரப்பும் தேவா
உந்தன் அபிஷேகத்தால்

3. ஆனந்தமான அபிஷேகத்தால்
தாவீவை நிறைத்தீர்
ஆடிப் பாடி நடனமாடி
ஆவியில் நிறைந்து போற்றினாரே
ஆவியால் நிரப்பும் ஐயா ஆடிப் பாடிடவே

## பாடல் - 2474

**நேசரே இயேசுவே ஆத்ம நேசரே**
வாருமே என் உள்ளத்தில் வந்து நீர் தங்கிடும்

வாருமே நீர் வாருமேதாருமே உம் சமுகமே

1. சாரோனின் ரோஜாவே லீலி புஷ்பமே
பாராளும் வேந்தனே பரிசுத்தரே
அன்பான நேசரே ஆருயிர் நண்பரே
என் ஜீவ நாளெல்லாம் உம்மை பாடுவேன்
என்னை மீட்டு என்னை காத்து
என்னை நடத்தி வருகிறீர்

2. ஆனந்த பாடல்கள் பாடி மகிழுவேன்
அற்புத செயல்களை எண்ணி துதிக்கிறேன்
உம்மைப் போல் யாருண்டு உன்னத நேசரே
உம் பாதம் ஒன்றையே நாடித் தேடுவேன்
உந்தன் சமூகம் என்ன இனிமை
அதை நாடி (தேடி) வருகிறேன்
(அங்கு ஓடி வருகிறேன்)

3. அதிகாலை நேரமே உம்மை தேடுவேன்
ஆசீர்வாதங்கள் பெற்று மகிழுவேன்
உம்முகம் தரிசிக்க உம்மை போல் மாறவே
உன்னத கிருபைகளை எனக்குத் தாருமே
உந்தன் கிருபை உந்தன் தயவு
எந்தன் வாழ்வின் மேன்மையே

## பாடல் - 2475

**கலங்காதே திகையாதே மனமே – உந்தன்**
கவலைகள் கண்ணீர்கள் தீர்ந்திடும் நேரம்
விரைவாக வருவார் உதவிகள் செய்வார்.
உனக்காக யாவையும் செய்து முடிப்பார்

1. தயவு உள்ளவர் கிருபை நிறைந்தவர்
தாயைப் போல் உன்னை காப்பார்
தந்தையைப் போல தோளில் சுமந்து
தேற்றி உன்னை அணைப்பார்

2. குடும்பத்தில் நிம்மதி வேலையில் உயர்வு
கொடுத்து உன்னை நினைப்பார்
போகும் பாதையில் கூட (இருப்பார்) வருவார்
யாக்கோபின் தேவன் துணையாய்

3. அநாதி சிநேகத்தால் நேசித்தவரே
அன்பால் உன்னை அழைத்தார்
ஆண்டவர் உனது ஜெபத்தை கேட்பார்
ஆசீர்வதிக்கவே செய்வார்

4. வல்லமையுள்ளவர் மகத்துவமானவர்
உனக்காய் யுத்தம் செய்வார்
எதிராய் எழும்பிடும் ஆயுதம் யாவும்
என்றும் வாய்க்காமல் போகும்.

5. சபையார் ஜெபித்ததால் தூதன் வந்தார்
அன்று பேதுருவை மீட்க
தாங்கும் அவனை தட்டி எழுப்ப
சிறையின் வெளியே வந்தான்

**பாடல் - 2476**

**இயேசுவின் நாமமே இனிதானதே**
அது நிகரில்லா நாமமே இப்பூவினில்

1. பலமுள்ள கோட்டையாம் இவர் நாமமே
அது பரிசுத்தர் வாழ்ந்திடும் திருநகரம்
சுகபெலன் ஜீவனும் அங்கே உண்டு - நாம்
அடைக்கலம் தேடுவோம் இவர் நாமத்தில்

2. கோலியாத் வீழ்ந்ததும் இவர் நாமத்தில்
அந்த தாவிதம் வென்றாரே விசுவாசத்தால்
விசுவாச வீரர்கள் தோற்றதில்லை
விசுவாசத்தாலே நாம் ஜெயித்திடுவோம்

3. வானிலும் புவியிலும் மேலானதே - இது
வானாதி வானவர் திருநாமமே
மூவுலகோர் முழங்கால் முடங்கிடுமே - இந்த
மூன்றிலே ஒன்றான நாமத்திற்கே

4. பேய்கள் நடுங்கிடும் இவர் நாமத்தில்
எல்லா நோய் பிணிகள் யாவும் நீங்கிடும்
குருடர்கள் செவிடர்கள் சுகமடைவார்
எந்த பாவிக்கும் விடுதலை தரும் நாமமே

5. பாடிடும் பக்தரின் குறை தீர்க்கவே
தினம் ஓடோடி வந்திடம் நேசரிவர்
ஏன் இந்த பாடுகள் என ஏங்கிடும் - இந்த
ஏழையின் ஜெபம் கேட்கும் நாமமிதே

**பாடல் - 2477**

**சிங்காசனத்தில் வீற்றிருக்கும்**
ராஜனே என் ராஜனே
உம் நாமம் வாழ்க வாழ்கவே
என்றென்றும் உமக்கே ஆராதனை
பரிசுத்தரே படைத்தவரே
எந்தன் எஜமானனே



அட்டவணை

1. அடைக்கலமான என் தேவனே
அநாதியாய் சிநேகித்தவர்
என் புகலிடம் எனக்கு நீர்தானைய்யா
புண்ணியரே உம் புகழ் பாடுவேன்

2. படைத்தீரையா என்னை உம் சாயலில்
படைப்புகள் மேல் அதிகாரத்தோடே
ஆளுகை தந்தீர் அனைத்தின் மேலும்
ஆண்டவா உமக்கே ஆராதனை

3. ஆதாரம் எனக்கு நீர்தானைய்யா
ஆதியும் அந்தமுமானவரே
திறந்த வாசலை என் முன் வைத்து
சிறந்த மேன்மையை தருபவரே

4. பரிசுத்த ஆவியால் நிரப்பி என்னை
பரவச பாஷையில் பேச வைத்தீர்
பாவத்தை உணர்த்தி பரிசுத்தமாக்கும்
பரமனே உமக்கே ஆராதனை

## பாடல் - 2478

**என்னை பரிசுத்தப்படுத்தும் தெய்வமே**
உம் திரு சித்தம் செய்ய விழைகிறேன்
மனமும் மாமிசம் போன போக்கில்
தினமும் போனேன் திகட்டிப் போனேன்

1. தெய்வத்தின் நெஞ்சத்தை கிள்ளிட்டேன்
தாய்மையின் உள்ளத்தை உதைத்திட்டேன்
தந்தையின் மனதில் கசந்திட்டேன்
நிந்தைகள் ஆயிரம் புரிந்திட்டேன்

2. எத்தனே நானென்று ஏற்றுக் கொண்டேன்
பித்தனே நானென்று ஒத்துக் கொண்டேன்
சத்திய வேதம் பற்றிக் கொண்டேன்
நித்திய அழிவை தவிர்த்துக் கொண்டேன்

3. என்னை நானே அறிந்திட்டேன்
என் பெலவீனம் தெரிந்திட்டேன்
உம்மை போல் ஆக விரும்பிட்டேன்
என்னையும் உம்மிடம் தந்திட்டேன்

## பாடல் - 2479

**அற்புத தேவன் நீரே ஆதி அந்தமும் நீரே**
ஜீவ பிரசன்னம் நீரே தேவ சமூகம் நீரே

ஓசன்னா பாடிடுவோம்
உன்னத தேவனுக்கே 4

1. வல்லமை தேவன் நீரே
வாக்கு மாறாதவரே - 2
செங்கடலில் வழி திறந்தீரே
எரிகோவை தகர்த்தவரே-2

2. கல்வாரி நாயகன் நீரே
காயங்கள் ஏற்றவரே-2
உம்மை நோக்கி பார்க்கின்றோமே
பாவம் போக்கும் கன்மலையே-2

3. ராஜாதி ராஜன் நீரே
ராஜரீகம் செய்பவரே - 2
ராஜாவின் சேனை நாங்கள்
ராஜா உம்மை சேவிப்போம் - 2

## பாடல் - 2480

**தேவன் எனது பெலனானார்**
அரணும் கோட்டையும் துருகமானார்
துதியும் பாடலும் கீதமுமானார்
நம்பும் தேவனும் இவரானார்

1. பாவமில்லை இனி சாபமில்லை
இயேசு சிலுவையில் சுமந்தாரே
வியாதி பெலவீனம் நீக்கினாரே
விடுதலையும் தந்தாரே
ஆடிப் பாடி துதித்திடுவோம்

2. துயரமில்லை இனி வருத்தமில்லை
துக்கமான முகமுமில்லை
எந்தன் ஜெபத்திற்கு பதில் தந்தாரே
எதற்குமே இனிமேல் கவலையில்லை
எழுந்து நாமும் ஜொலித்திடுவோம்

3. இந்த நாளை வாழ்வில் தந்த தேவன்
நம்மை என்றும் காப்பாரே
காணும் யாவரும் வியந்திடவே
அதிசயங்கள் செய்வாரே
ஆர்ப்பரித்து அகமகிழ்வோம்

4. மூலைக் கல்லாய் நம்மை மாற்றிடுவார்
ஜீவ சாட்சியாய் நிறுத்திடுவார்
இயேசு இரத்தத்தால் ஜெயம் பெறுவோம்
எதிர்ப்போர் எல்லாம் அழிந்திடுவார்
என்றும் நாமோ நிலைத்திருப்போம்

## பாடல் - 2481

**இயேசு ராஜனை வாழ்த்தி பாடிடுவோம்**
அவர் நாமத்தை போற்றிடுவோம்
அல்லேலூயா – 8

1. தேவ சபையினிலே தேவனை துதிப்போம்
தூய உள்ளத்தோடு
உம்மை பணிந்திடுவோம் -இயேசு

2. உந்தன் சமூகத்திலே என்ன ஆனந்தமே
என்னை மறந்திடுவேன்
பாடி துதிக்கையிலே -இயேசு

3. உந்தன் பாதத்திலே விழுந்து கதறிடுவேன்
அழுது ஜெபித்திடுவேன்
அழியும் மாந்தருக்காய் -இயேசு

4. காருண்ய கேடகமே காக்கும் கன்மலையே
மேகஸ்தம்பம் நீரே
அக்கினி ஸ்தம்பம் நீரே -இயேசு

5. இயேசுவின் நாமத்திலே எதையும் செய்திடுவேன்
சாத்தானை துரத்திடுவேன்
தேசத்தை சுதந்தரிப்பேன் -இயேசு

## பாடல் - 2482

**நீ நம்பும் தேவன் உன்னை**
நிழலாய் தொடருவார்
நீரை கடக்கும் போதும்
நீ நெருப்பை தாண்டும் போதும்

1. சிங்கத்தின் வாயை கட்டிடுவார்
சீற்றம் அடக்கி காத்திடுவார்
தங்கம் போல் புடமிட்டு
தரத்தில் உயர்த்தி உன்னை
தரணியில் மிளிரச் செய்வார்

2. நெருக்கத்திலிருந்து மீட்டிடுவார்
நீதிமானாய் மாற்றிடுவார்
திரும்பவும் வால வயது போலாக்கி
திருப்தியாக்கிடுவார் – உன்னை

3. கண்ணுக்கு தெரியா காவல் அவர்
கனலாய் உன்னை சூழ்ந்து கொள்வார்
முன்னும் பின்னும் அரணாய் நின்று
முற்றிலும் காத்திடுவார்

4. இல்லை என்று சொல்லிடாரே
என்றும் உன்னை தள்ளிடாரே
பிள்ளை என்று சொல்லி தோள்களில்
சுமந்து உன்னை தாங்கியே நடத்திடுவார்

## பாடல் - 2483

**இஸ்ரவேலே ஆசீர்வதிப்பதே**
தேவனுக்கு பிரியமல்லோ
ஆசீர்வதியும் தேவா ஆசீர்வதியும் தேவா
ஆசீர்வதிப்பதே உம் பிரியம் ஆசீர்வதியும் தேவா

1. ஆபிரகாமை ஆசீர்வதித்தீர்
அவனின் சந்ததியை பெருகச் செய்தீர்
அப்பா உம் ஆசிகளை – இப்போ
அடியார்க்கும் அருளிடுமே

2. யாபேஸின் எல்லையை விரிவாக்கினீர்
யாவும் அவனுக்காய் நிறைவேற்றினீர்
தீங்கொன்றும் அணுகாமல்
கரம் நீட்டி காத்தீரல்லோ

3. கையிட்டு செய்யும் எல்லா காரியமும்
கர்த்தாவே உந்தன் அனுக்கிரகத்தால்
எப்போதும் வாய்க்கச் செய்யும்–எம்மை
செழித்து ஓங்கச் செய்யும்

4. அப்பா என்னை இன்று கண்ணோக்கிடும்
குறைகள் யாவையும் நிறைவாக்கிடும்
என்னை நீர் ஆசீர்வதிக்காமல்
நாம் உம்மை விடுவதில்லை

**பாடல் - 2484**

**ஆதிதேவன் அருளைப் பெற்று அகிலம் வாழாதா**
ஜோதி தேவன் சித்தம் செய்து
சொர்க்கம் போகாதா

நீதி தேவனே இயேசு இராஜனே
நித்திய தேவனே என் ஆத்தும நேசரே

1. தீப்பிழம்பாய் ஆன பின்னே
தீக்குணந்தான் தெரியுமே
தெய்வத்தோடு சேர்ந்த பின்னே
பேய்க் குணங்கள் நீங்குமே

2. பிறர் மகிழ தான் மகிழும்
பார்த்து பார்த்து பரவசிக்கும்
கறைகள் இல்லா உறவு சேரும்
கஷ்ட நஷ்டம் ஏற்றுக் கொள்ளும்

3. தீது எண்ணப் போகாது
தீமை ஒன்றும் அணுகாது
வாது சூது அறியாது
வானவர் துணை விலகாது

**பாடல் - 2485**

**அழைக்கிறார் அழைக்கிறார்**
அன்போடு இயேசுன்னை அழைக்கிறார்
கனிவோடு கரம் நீட்டி அழைக்கிறார்

1. வருத்தங்கள் பாரங்கள் சோகங்களோ
வருவாய் இயேசுன்னை அழைக்கிறார்
வல்லவர் இயேசு உன் வாழ்விலே
வருத்தங்கள் நீக்கி நடத்திடுவார்

2. பாவங்கள் சாபங்கள் தோல்விகளோ
பாதம் சேருவாய் இயேசுவண்டை
பரமன் இயேசு உன் வாழ்விலே
பாவங்கள் நீக்கி ஜெயம் தருவார்

3. உலகினில் உனக்கென யாருமில்லையோ
உணர்ந்திடுவாய் இயேசு அன்பினையே
உத்தமர் இயேசு உன் வாழ்விலே
உன்னத அன்பினை தந்திடுவார்

**பாடல் - 2486**

**இயேசு செய்த எல்லா நன்மைக்கும்**
எப்படி நான் நன்றி சொல்வேன்
நன்றி சொல்ல முடியாதே
எண்ணி சொல்ல முடியாதே

1. பாவச் சேற்றினில் வாழ்ந்த என்னை
பரிவாக கரம் நீட்டி தூக்கினீரே
சாப நோய்கள் யாவும் போக்கி
சாவு பயங்கள் யாவும் நீக்கினிரே

2. கடந்து போன காலங்களில்
கண்மணி போல காத்திட்டீரே
கடந்து வந்த வழிகளிலெல்லாம்
நன்மைகளால் நிறைந்திட்டீரே

3. தனிமை என்னை வாட்டும் போதும்
தயவாய் எனக்கு துணை நின்றீர்
ஆறுதல் செய்து அரவணைத்த
அன்புக்கு நான் என்ன செய்வேன்

4. சோர்ந்து போன வேளைகளில்
சார்ந்து கொண்டேன் உம்மில் நானும்
கவலை பாரம் விலக செய்து
கனிவாய் என்னை தேற்றினீரே

**பாடல் - 2487**

**மனுக்குலம் மீட்க மனு உருவானார்மா தேவனே**
மகிழ்ந்திடுவோம் களித்திடுவோம்
அல்லேலூயா துதி அல்லேலூயா

1. மாதர் சிரோன்மணி கன்னி மரியாள்
மடியிலே உதித்து மகனாக பிறந்தார்
தூதர்கள் வானில் கீதங்கள்-பாடி
அல்லேலூயா அல்லேலூயா

2. தூதர்கள் இழந்த மேன்மையில் வைக்க
பாதக மனிதரை ஆயத்தப்படுத்த
தாழ்மையின் தவக்கோலம் அவர் தரித்தார்
ஏழ்மையின் சாயலாய் அவதரித்தார்

3. அரசருக்கு அரசர் அருந்தவ புதல்வர்
அரியனை துறந்து முன்னனை தெரிந்தார்
பாடுகளை அனுபவிக்க
மாட்டுத் தொழுவம் தெரிந்தெரித்தார்
அல்லேலூயா அல்லேலூயா

4. காரிருள் அகன்றது பேரொளி உதித்தது
பாரினில் பாவம் ஓடி மறைந்தது
சந்தோஷம் சமாதானம் உன் உள்ளத்தில்
நிரம்பி வழியுதே அல்லேலூயா

5. இயேசுவின் பின் செல்லும்-தேவ மக்களே
இயேசுவைப் போல் நீங்கள் செயல்படுங்கள்
அவர் சென்ற பாதையை பின்பற்றுங்கள்
அவரைப் போலவே மாறிடுங்கள்-அல்லே

## பாடல் - 2488

**இயேசுவை நோக்கி பார்க்கும் போது**
இன்பம் பொங்குதே உள்ளத்திலே
துன்பம் என்னை என்ன செய்திடும்
பாவமெல்லாம் பறந்தோடிடும்-இந்த

இயேசுவே என் மீட்பர் இயேசுவே என் மேய்ப்பர்
இயேசுவே என் இரட்சகர் இயேசுவே என் தேவன்

1. பாவம் என்னை சூழ்ந்து வந்தாலும்
பரமனேசு ஜெயம் தருவார்
பரிசுத்த வாழ்வை பெற்றுமே-நான்
பாடிடுவேன் இயேசு ராஜனை

2. தீயினூடே நான் நடந்தாலும்
தங்க ஒன்றும் சேதம் செய்யாதே
சத்ரு என்னை தொடர்ந்து வந்தாலும்
இயேசு காத்திடுவார் வலக்கரத்தாலே

3. அழிந்து போகும் உலக பொருளெல்லாம்
அன்புடன் அருளிடுவார்
அனுதினம் அவரைப் போற்றியே-நான்
ஆனந்தமாய் கொண்டாடுவேன்

4. இவ்வுலக பாடுகளெல்லாம்
இன்னும் கொஞ்ச கால மட்டுமே-நான்
அவ்வுலக இன்பம் கண்டுமே
அல்லேலூயா ஆர்ப்பரிப்பேனே

## பாடல் - 2489

**கர்த்தர் நாமம் பலத்த துருகம்**
நான் அதற்குள் வாழ்ந்திடுவேன்
சுகமும் பெலமும் எனக்கு உண்டு
வாழ்வும் செழிப்பும் அங்கே கண்டேன்

1. நீதிமானை ஒரு போதும்
கைவிடாமல் காக்கின்றீர்

2. சோதனைகள் வந்தாலும்
சோர்ந்திடாமல் நடத்துகின்றீர்

3. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் தாங்குகின்றீர்

4. கலங்கிடும் நேரம் காண்கின்றீர்
பெலனளித்து நிறுத்துகின்றீர்

## பாடல் - 2490

**இயேசப்பா இயேசப்பா எந்தனின் இயேசப்பா**
எந்நாளும் எனக்கு போதும் நீர் இயேசப்பா

1. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடும் இயேசப்பா
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடும் இயேசப்பா
ஆத்துமாவை தேற்றும் நேசரே இயேசப்பா
மரண பள்ளத்தாக்கில் காத்திடும் இயேசப்பா

2. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசப்பா
பரலோக வாசலும் நீர்தானே இயேசப்பா
பாவிக்கு புகலிடம் உம்மிடம் இயேசப்பா
பாதம் வந்திட்டால் தள்ளிட்டார் இயேசப்பா

3. துதியும் ஸ்தோத்திரம் உமக்கே இயேசப்பா
புகழும் கனமும் உமக்கே இயேசப்பா
வல்லமை ஞானமும் உமதே இயேசப்பா
வாழ்வும் சுகமும் நீர்தானே இயேசப்பா

## பாடல் - 2491

**என் ஜனமே பயப்படாதே**
என் கரமே உன்னை உயர்த்திடுமே
அற்புதம் செய்வேன் அதிசயம் நடக்கும்
அனுதினம் உன்னை காத்திடுவேன்

1. இரக்கத்தால் உன்னை முடி சூட்டி
கிருபைகளாலே நிறைத்திடுவேன்
நன்மைகளால் திருப்தியாக்கி
நாள்தோறும் உன்னை நடத்திடுவேன்

2. முன்னறிந்து நான் உன்னை அழைத்தேன்
எனக்காய் உன்னை தெரிந்தெடுத்தேன்
நம்பிக்கையோடு காத்திருந்தால்
நான் தருவேன் ஜெயம் உனக்கு

3. உனக்கு எதிராய் எழுப்பு வரும்
ஆயுதங்கள் ஒன்றும் வாய்த்திடாதே
எதிரிகளின் சூழ்ச்சிகளை
கண்டு நீயும் கலங்கிடாதே

4. மலைகள் யாவும் அகன்றாலும்
பர்வதங்கள் நிலை பெயர்த்தாலும்
உன்னை விட்டு விலக மாட்டேன்
கைவிடேனே உன்னை என்றும்

## பாடல் - 2492

**ஆயிரம் பேரில் சிறந்தவர் என் இயேசு ராஜன்**
அழகில் முற்றும் சிறந்தவர் இவர் எந்தன் நேசர்
என்னோடு என்றும் வாழ்பவர்

என் நேசர் என் நண்பர்
எந்நாளும் என்னை காப்பார்
தோளின் மேல் சுமந்திடுவார்



அட்டவணை

1. கண் துயிலும் நேரம்
என்னைத் தேடி ஓடி வந்தாரே
கை விரலை கதவில் விட்டாரே
உன் நேசம் இன்பம் அது மதுரம்
என்று சொன்னாரே
என் பிரியம் என்றுரைத்தாரே
வெள்ளைப் போளம் வாசம் வீசிடவே
தூப ஸ்தம்பம் போல வருகிறார்
உள்ளம் துள்ளிப் பாடும் மகிழ்ந்தாடும்
என்னில் எப்போதும்

2. கன்மலையின் ஓரம்
தங்கும் புறாவே என் உத்தமியே
கண்களால் என்னை வென்றாயே
துதி மலர் தொடுப்பேன் மாலையிடுவேன்
என் மன்னனுக்கே புதுப் பாடல் பாடிடுவேனே
கோடி யுகம் கூட வாழ்ந்திடுவேன்
பாடிப்பாடி மனம் மகிழுவேன் என் தாகம் நீரே
உம்மைப் பாட வரம் தந்தருளும்

3. கர்த்தர் அன்பைப் பாட புகழ் சூட
நாவு போதாதே ஈடு இணை ஏதும் இல்லையே
மாந்தர் மனம் மகிழ துயர் அகல
துணை வந்தாரே அரணில் காத்திடுவாரே
ஆவியினால் களி கூர்ந்திடுவேன்
நீதியினால் என்றும் வாழ்ந்திடுவேன்
என் நேசர் வருவார் என்னை அணைப்பார்
நான் என் சொல்லுவேன்
மாந்தர் மனம்மகிழதுயர் அகல
துணை வந்தாரே அரணில் காத்திடுவாரே
ஆவியினால் களி கூர்ந்திடுவேன்
நீதியினால் என்றும் வாழ்ந்திடுவேன்
என் நேசர் வருவார் என்னை அணைப்பார்
நான் என் சொல்லுவேன்

## பாடல் - 2493

**எந்தன் நேசரே உந்தன் மார்பினில்**
இளைப்பாறுவேன் நித்தமும் சாருவேன்
என்றும் நீரே எந்தன் தஞ்சம் துணையே
எந்தன் கன்மலை நீர்

1. கன்மலை தேனும் நீரே
எந்தன் பாதைக்கு தீபம் நீரே
மதுரமே பொழியுதே எந்தன் இனிமையே நீர்
என்றும் நீரே எந்தன் மதுரமே

2. கன்மலை சிகரம் நீரே
எந்தன் உயர்ந்த துதியும் நீரே
உயர்த்துவேன் புகழுவேன்
உந்தன் நாமத்தையே
என்றும் நீரே என் அரணுமானீர்

3. கன்மலை எண்ணையும் நீரே
எந்தன் ஜீவ ஊற்றும் நீரே
ஆவியே பொழியுதே எந்தன் ஆறுதல்
நீர் என்றும் நீரே அடைக்கலமே

## பாடல் - 2494

**இயேசுவைப் போல எனக்கொரு நேசர்**
உலகினில் வேறில்லை
நேசரின் நேசம் போல் தெவிட்டாத இன்பம்
இகமதில் வேறில்லை

1. மாறாத அன்பு நித்திய நேசம் மானிடர்க் கீந்தாரே
மறதியின் பூமியில் மறந்திடுவேனோ
மகிமையின் நேசத்தையே
மகிழ்வேன் உம் அன்பினிலே

2. அலைந்திட்டேன் பலநாள்
அமைதலும் இல்லையே அன்பினை அறியுமுன்னே
மந்தையின் காலடி தொடர்ந்த பின்னே
மகிமையே இறங்கியதே தேவ மகிமையை காண்கின்றேனே

3. நேசரில் எல்லாம் உன்னதர் நீரே
நேசிப்பேன் உத்தமமாய்
இடதுகை தலை கீழ் வலக்கரம் அணைக்கும்
நேசமே இன்பம் நீரே நேசத்தால் சோகமானேன்

4. மலைகள் மேல் குதித்தும் அரிய
குன்றின் மேல் துள்ளி வருகிறார் நேசர் இவர்
மலர்ந்திட்ட அவர் முகம் காண்பிக்கிறாரே
கல்வாரி நாயகனே களிப்பேன் உம் அன்பினிலே

## பாடல் - 2495

**பரலோக மகிமைதனை நான்**
பாடுவேன் கவிகளினால்
கண்களால் காணாத காதுகள் கேட்காத
கனவான்கள் தேசமதை

1. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
என தூதர் பாடியே துதிக்கின்றனர்
பாசமாய் பாட பாவியை மீட்டீர்
பாவி நான் உமதடிமை பாடுவேன் தூதருடன்

2. வல்லமை மகிமை துதியும் கனமும்
கிறிஸ்தேசு ராஜாவுக்கே
தூதர்கள் பணிந்திட மூப்பர்கள் தொழுதிட
மீட்பின் கீதம் பாடுவேன் மாட்சிமை தேசத்திலே

3. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
என்றுமே ஆயத்தப்படுத்தினாரே
கைகளால் கட்டிடா அஸ்திபாரமுள்ள
சிறப்புறு தேசமதை மகிமையின் நகரமதை

## பாடல் - 2496

**நீ என் தாசன் நான் மறப்பதில்லை**
தேவனின் வாக்கிதுவே
தாங்குவார் ஏந்துவார் என்னை
என்றென்றும் மறவாமல் காத்திடுவார்

1. உன்னோடு என்றென்றும் நான் இருப்பேன்
கலங்காமல் காத்திடுவேன்-2
அஞ்சாதே கைவிடேனே-2
என உரைக்கும் இயேசுவில் சரணடைந்தேன்

2. பெயர் சொல்லி உன்னை நான் அழைத்தேனே
நான் உன்னை நேசிக்கிறேன்
வா மகனே வருந்தாதே என்று அழைக்கும்
இயேசுவை நான் தொடர்ந்தேன்.

3. நெருப்பாற்றை கடக்கும் வேளையிலே
வேகாமல் காத்திடுவேன்
ஒளி தரும் நிழல் தருவேன் என்று உரைக்கும்
இயேசுவின் வழி தொடர்ந்தேன்.

4. ஈன்றவள் பிள்ளையை மறந்தாலும்
நான் உன்னை மறவேனே
கண்ணீரை துடைத்திடுவேன்
என்று உரைக்கும் இயேசுவைநான் பணிந்தேன்.

## பாடல் - 2497

**வழி நடத்தும் தினம் நடத்தும்**
என் இயேசு ராஜனே என்றும் நடத்தும்
உம் வழி நான் செல்ல என் முன்னே நீர் செல்ல
வாழ்க்கை பாதையில் இடறாமல் நடத்தும்

1. இகத்திலும் பரத்திலும் வாழ்விலும் தாழ்விலும்
உன் மேய்ப்பர் என்றும் இயேசுவே
என்னுள்ளே ஜீவ ஒளிதனை தந்து
பாங்காக நடத்தும் என்றும் நடத்தும்

2. தகாத வழிதனில் தனியனாய் சென்ற என்னை
தத்து எடுத்து நடத்தும் தேவனே
தாரணி மீதினில் தடம் பிறலாமல்
சீராக நடத்தும் என்றும் நடத்தும்

## பாடல் - 2498

**என் இயேசு ராஜா சாரோன் ரோஜா**
உம்மைப் பாட வரம் தாருமே

1. காட்டு மரங்களில் கிச்சில் மரமோ
கனி தரும் திராட்சை செடி நீர்
அழகான சென்டே மருதோன்றி பூவே
அழகிலே உம் ரூபமே ஆயிரம் பேரில் நீரே

2. அழகான அவர் கை என் தலை கீழேவைத்து
அணைப்பினாலே தினம் தேற்றி
மலைமேலே துள்ளிமான் போல குதித்து
மலர்ந்த உம் முகம் காட்டுமே
நேசத்தால் சோகமானேன்

3. கன்மலை வெடிப்பினில் தங்கும் வெண்புறாவே
உம்முக ரூபத்தை காண்பி
கலைமானின் அழகும் கலையாத தலையும்
வெண்மையும் சிவப்புமானீர்
நேசர் அதோ நிற்கிறார்

## பாடல் - 2499

**என் பாத்திரம் முடியும் வரை**
உம் கைகளில் நானிருக்க
யேகோவாயீரே வனைந்தவரே
உலகத்தில் தள்ளாதிரும்

1. விக்கினங்கள் தடுக்கும் வரை
வல்ல உம் செட்டையின் கீழ்
நல்ல நிழல் நான் தங்குவேன்
நாதா களி கூறுவேன்

2. ஆண்டாண்டு காலங்கள்
அருள் கூர்ந்திரே அன்பரே ஊழியத்தில்
ஆலோசனை தந்தவரே
யாரிடம் இனி செல்லுவேன்

3. சோதனைகள் சூழ்ந்த நேரம்
சத்துருவை வெல்லச் செய்தீர்
பாத்திரனாய் மாற்றிக் கொள்வீர்
பரனேசு பாதம் சேர்வேன்

## பாடல் - 2500

**கண்டேன் கல்வாரியின் காட்சி**
கண்ணில் உதிரம் சிந்துதே
அன்பான அண்ணல் நம் இயேசு
நமக்காய் பட்ட பாடுகள்

1. கல்வாரி மலை மீதிலே
கள்ளர்கள் மத்தியிலே
சிலுவையில் அறைந்தனரே
நமக்காய் ஜீவன் விட்டாரே

2. பாழும் உலகத்தின்
பாவ பலி போக்க
சிலுவை சுமந்து போகும் காட்சி
கண் முன் காணுதே

3. பாவ உலகத்தில்
ஜீவிக்கும் மானிடனே
பாரும் அவர் உனக்காய்
குருதி சிந்தும் காட்சி

## பாடல் - 2501

**சரணம் சரணம் சரணம் இயேசு ராஜர்க்கே சரணம்**
அன்பால் எம்மையே கர்த்தருக்காய் சரணம்

1. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் நன்றி துதி உமக்கே
வல்லமையால் எம்மை
வழி நடத்தினார் இறைவா இறைவா

2. மாசற்ற ஜோதியே வரும் நாளிலும்
எம்மை நோய் கடன் தீர்த்து
காத்து நடத்தும் இறைவா இறைவா

3. வாரும் என் இறைவா தாரும் நல் ஆசி
புதிய நாள் இது நிறைவாய்
ஆசி தாரும் தாரும்

## பாடல் - 2502

**ஆவியின் மழையை பொழியும் நேரம்**
என்ன பேரின்பம்
தூய தேவனின் சாயல் அடையும்
வேளை நெருங்கிடுதே அல்லேலூயா

1. ஆதி அந்தம் இல்லாத தேவா
உம்மைப் போற்றுகிறோம்
முன் குறித்தே முத்திரையிட்டீரே
எந்தன் துணை நீரே
நான் உந்தன் சொந்தம்

2. தூய ஆவி இறங்கிடும் வேளை
பாவம் விலகிடுமே
ஜீவிய பாதம் நேராக செல்ல
நல் வழி நடத்திடுமே

3. ஜெபத்தின் ஆவி இறங்கிடும் வேளை
ஜீவியம் மாறிடுமே
உள்ளம் உடைந்து உருகி ஜெபிக்க -2
தந்தேன் எந்தனையே உம்பாதம் வந்தேன்

## பாடல் - 2503

**அணைக்கும் கரங்கள் உண்டு**
ஆற்றும் நேசர் உண்டு
வேஷமான மனித உலகில்
தேற்றும் தேவன் உண்டு

1. அன்பின் பஞ்சத்தினால்
அலைந்து திரிந்தேனே
மிஞ்சும் சோகத்தினால் நெஞ்சம் துடித்தேனே
அன்பர் அன்புதுன்பம் நீக்க இன்பம் கண்டேனே

2. அள்ளி அணைத்திடுவார்
அணைத்து முத்தம் செய்வார்
துள்ளி தூக்கிடுவார் தோளில் சுமந்திடுவார்
இதய ஏக்கம் தீர்க்கும் தேவன் இயேசு நல்லவரே

3. ஆதி அன்புதனில் தினமும் திளைத்திடவே
ஆவி ஈந்தருளும் அனலை மூட்டிவிடும்
வெள்ளம் திரண்ட தண்ணீரும்
அன்பை அணைக்க முடியாதே

4. உண்மை அன்பு என்னை தேற்ற யாருமில்லை
சுற்றத்தாரின் அன்பு சூன்யமாகிடுதே
தவிக்கும் உள்ளம் தாகம் தீர உம்மில் மகிழ்ந்திடுவேன்

## பாடல் - 2504

**நன்றி சொல்லியே இயேசுவைப் பாடுவோம்**
நன்மைகள் செய்தாரே
ஏராளம் கிருபை பொழிந்தாரே
துரோகி என்னையே தூக்கி எடுத்து
தேற்றி அணைத்தாரே

1. தனித்த என்னையே அணைத்துக் கொண்டீரே
உம்மோடு இணைத்தீரே பேரன்பினால்
ஆனந்தம் தந்தீரே நன்றியால் பாடிடுவேன்

2. தாழ்ந்த என்னையே தாங்கி வந்தீரே ஆவியால் நிறைத்தீரே
ஓ கிருபையால் வரங்கள் ஈந்தீரே
நன்றியால் பாடிடுவேன்

3. வஞ்சக உலகில் நண்பனாய் வந்து நேசத்தை தந்தீரே
எந்நாளும் மாறாமல் இருப்பீரே
நன்றியால் பாடிடுவேன்

## பாடல் - 2505

**இயேசு எந்தன் சொந்தமல்லவோ**
அவரின் முகம் காணுவது இன்பமல்லவோ
ஒளி வீசும் சுடரொளியே
உந்தன் நாமமே எங்கள் ஆறுதல்
கைவிடாத என் அடைக்கலமே

1. நீரன்றி வாழ்வில்லையே
நின் துணையின்றி வழியில்லையே
என் தெய்வமே என் இயேசுவே
உம் கரம் பற்றி வாழ்ந்திடுவேன்

2. புது எண்ணெய் ஊற்றிடுமே
என்னில் புது பெலன் அளித்திடுமே
என் ராஜனே என் தேவனே
புது பாடல் நான் பாடிடுவேன்

3. வாழ்வது உமக்காக
என்னை வனைந்திடும் உம்மைப் போல
என் நேசரே உம் மார்பிலே
நிதம் சாய்ந்திளைப்பாறிடுவேன்

## பாடல் - 2506

**தேவசுதன் மீட்டெடுத்த சபையே**
என்றும் கர்த்தரின் புகழைப் பாடு
சொல்லுங்களேன் அவர் நாமத்தையே
போற்றுங்களேன் துதி சாற்றுங்களேன்
மனம் மகிழ்ந்து அவரை துதிப்போம்

1. வல்லமையாக இறங்கிடுவார்
தேவனின் ஆவி சத்திய பாதை நடத்திடுவார்
துணையாய் வருவார்
அவர் வல்லமை நம் மீது பொழியும்
உலகத்தை ஜெயிக்க உம்மையே சார்வோம்
தினம் ஜெயத்தை அடைய துதிப்போம்

2. தம்புரு வீணை நாதம் இசைக்க
பேராசையுள்ள கைத்தாளத்தின்
தொனி முழங்க ஆவியால் நிறைவோம்
புது பெலனை அடைந்து துதிப்போம்
உற்சாகத்தோடு பொற் பாதம் பணிவோம்
அவர் சமூகம் என்றென்றும் இன்பமே

3. தேவ ஜனங்கள் துதிப்பதினால்
தேவனின் உள்ளம்
பேரின்பத்தை அடைந்திடுமே பெலனே துதிதான்
தேவகிருபை நம் மீது பொழியும்
சத்துரு சேனை வெட்டியே வீழ்த்த
தேவ ஆவியில் நிறைந்து துதிப்போம்

## பாடல் - 2507

**நன்றி நன்றி என் இயேசு ராஜாவுக்கே**
தந்தேன் என்னை என் தேவனுக்கே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் தேவா ஸ்தோத்திரம்
பாத்திரர் உமக்கே ஸ்தோத்திரம்

1. உம் நாமம் என்றும் துதித்திடவே
எந்தனை படைத்திட்டீர்
சீயோனின் ராஜனே தேவனே
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

2. வேதனை வியாகுல நேரங்களில்
தேவா உம் ஆவியினால்
தேற்றினீர் என்னையே உம் அன்பினால்
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

3. சோதனை வேளையில் ஜெயமடைய
சாத்தானை முறியடிக்க
தந்தீரே வல்லமை கிருபையால்
நன்றி சொல்லி நான் துதிப்பேன்

## பாடல் - 2508

**முற்றிலும் அழகானவர்**
எல்லாறிலும் மா சிறந்தோர்
தேவாதி தேவனானவர் நேசர்
கல்வாரி நாயகா கல்வாரி நாயகா
என் உள்ளம் ஆட் கொண்டீர்
என்னை மீட்க மரித்தீர் கல்வாரி நாயகா

2. உம்மை மகிமை மயமாய்
கண்டு களிப்பேன் என்பதை
இவ்வுலகில் என் ஆறுதல்
ஒப்பற்ற கல்வாரி நாயகா

3. கண்ணாடி கடல் ஓரமாய்
சேர்ந்து நின் அன்பில் மூழ்கியே
உம்மைப் போல் என்றும் இருப்பேன்
மகிமை கல்வாரி நாயகா

4. நமக்காய் பெற்ற வரங்கள்
சுத்தங்கம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினார்
தயாள கல்வாரி நாயகா

**பாடல் - 2509**

**எந்தன் ஆத்ம நேசர் இயேசுவே**
பாவம் யாவும் விட்டு நிற்க்கின்றேன்.
இன்பமானாலும் துன்பமானாலும்
உந்தன் சிலுவை சுமந்து செல்வேனே

1. எனக்காக பாடுகள் பட்டீரே
எனக்காய் உம் உயிர் தந்தீரே
இந்த எழை பாவி நான் இதற்க்கீடாத
என்ன செய்வேன் இயேசுவே

2. என் சாவின் பின்னால் உம்மையே
என் கண்ணால் காண உதவும்
என் ஜீவன் போகும் நாள் என்று வருமோ
அன்று நான் உம்மை நான் காண்பேன்

**பாடல் - 2510**

**காக்கும் தெய்வம் தேற்றும் தெய்வம்**
எந்தன் இயேசு என்னோடு வருவார்
தண்ணீரில் நடந்தாலும்
மூழ்கி நான் போக மாட்டேன்
அக்கினியில் நடந்தாலும்
எரிந்து நான் போக மாட்டேன்

1. வானத்து பறவையை காக்கின்ற தேவன்
என்னையும் காத்து வழி நடத்திடுவார்
எனக்கு வேறே குறையும் இல்லை
எனக்கு ஒன்றும் கவலையும் இல்லை

2. எரிகோ கோட்டையை உடைத்த தேவன்
சாத்தானின் கோட்டையை உடைத்து தள்ளுவார்
அக்கினியின் தேவா அபிஷேக நாதா
எங்கள் ராஜா இயேசு மகாராஜா

## பாடல் - 2511

**எவ்வளவு நல்ல தெய்வம் இயேசப்பா**
கண்ணீரெல்லாம் துடைப்பாரு
கஷ்டத்தையெல்லாம் நீக்கிடுவாரு

1. பாவியில் பிராதான பாவி நான்
என் பாவத்தை நீர் மன்னித்தீரய்யா
இரத்தத்தினாலே கழுவினீரே
பரிசுத்தமாய் என்னை மாற்றினீரோ

2. சொந்தம் எல்லாம் மறந்து போனாலும்
என் நண்பர் எல்லாம் என்னை வெறுத்தாலும்
கைவிடா தெய்வம் நீரே
என்னை மறவா ராஜன் நீரே

## பாடல் - 2512

**ரொம்ப ரொம்ப நல்லவரு**
வார்த்தை என்றும் மாறாதவரு
உன்னையும் என்னையும் நேசிப்பாரு
நான் இயேசுவை ஆராதிக்கிறேன்-4

1. அழகை அவர் பார்க்க மாட்டார்
என் உள்ளத்தை அவர் பார்ப்பார்
ஏழையா பணக்காரனா அவர் கேட்க மாட்டார்
கீழ்சாதியாமேல்சாதியா என்று கேட்க மாட்டார்
உள்ளத்தையே அவர் கேட்பார்

2. நான் அவரை மறந்து போனாலும்
அவர் என்னை மறக்கவே மாட்டார்
நடந்தாலும் படுத்தாலும் என்னை சூழ்ந்து கொள்வார்
இரவெல்லாம் பகலெல்லாம் என்னோடு பேசுவார்
கண்மணி போல காப்பார்

## பாடல் - 2513

**உயிரே உயிரே உயிரே எந்தன் உயிர் நீரே**
ஐயா எந்தன் உயிர் நீரே
உலகத்துக்கு வெளிச்சம் நீர்தானய்யா
எந்தன் ஆசை நீர்தானய்யா

1. காத்துக்கொள்ளும் என்னை வழி நடத்தும்
மார்பினிலே என்னை மூடிக் கொள்ளும்
குழந்தையைப் போல் உந்தன் கூட வருவேன்
கரம் பிடித்து நடத்துவீர்

2. உயிர் கேட்கவே இங்கு அநேகர் உண்டு
உயிர் கொடுத்தவரும் நீர்தானய்யா
இரத்தம் சிந்தியவர் நீர்தானய்யா
என்னை மீட்டவரும் நீர்தானய்யா

## பாடல் - 2514

**உம்மை நேசிக்க கற்றுத் தாரும்**
உள்ளத்தால் முழு பெலத்தால்

1. உலகை மறந்து உம்மை நேசிக்க
என்னை மறந்து உம்மை நேசிக்க
சிலுவை சுமக்கையில் உம்மை நேசிக்க
மரணம் சாதிக்கையில் உம்மை நேசிக்க

2. துன்பமான நேரத்தில் நேசிக்க
இன்பமான நேரத்தில் நேசிக்க
கண்ணீரில் மத்தியிலும் நேசிக்க
தனிமையான நேரத்திலும் நேசிக்க

## பாடல் - 2515

**செல்வம் ஞானம் இது எல்லாம் நீர் தந்தது**
ஐசுவரியம் சௌந்தர்யம்
இது எல்லாமே நீர் தந்தது
தந்தவரே திருப்பித் தருகிறோம்
உம்மையே உயர்த்துகிறோம்

1. உம் இராஜ்ஜியம் கட்டவே செல்வம் தந்தீரே
அதை நான் அறிவேன் ஐயா
உம் வார்த்தை சொல்லவே ஞானம் தந்தீரே
அதை நான் அறிவேன் ஐயா
பரலோகம் நிரம்பணும்
பாவி மனம் திரும்பணும்
அதற்காக என்னையே தந்தேனைய்யா

2. எனக்குள்ளே நானல்ல நீர் தானே வாழுகிறீர்
அதை நான் அறிவேன் ஐயார்
நான் வாழும் சரீரம் நீர் தங்கும் ஆலயம்
அதை நான் மறவேன் ஐயா
பரிசுத்தமாய் வாழனும்
உங்க முகம் பார்க்கணம்
பரிசுத்தமே எந்தன் வாஞ்சை ஐயா

**பாடல் - 2516**

**உம்மை தேடுவேன் உம்மை நாடுவேன்**
என்றென்றும் உம்மைப் பாடுவேன்
என் மீட்பரே என் மேய்ப்பரே
உமக்காக உயிர் வாழுவேன்
என் உயிரே (3) என் ஆசை என் வாஞ்சை நீரே

1. மாணிக்கம் மண்ணானதே
பரிசுத்தம் பாவமானதே உண்மை பொய்யாதே
எனக்காய் உயிர் கொடுத்ததே

2. அழகான லீலி புஷ்பம்
காலாலே மிதிக்கப்பட்டதே
அவர் படைத்த கைகளே
படைத்தவரை அடித்ததே

**பாடல் - 2517**

**உம் கிருபை தானய்யா**
மரித்துப் போன எனக்கு உயிர் தந்த கிருபை
பாவியாயிருந்தவனை உயர்த்தி வைத்த கிருபை

1. சாம்பலாய் சிங்காரமாய்
மாற்றின அந்த கிருபை
தீமையாய் நன்மையாய்
மாற்றின இந்த கிருபை

2. பெலவீன நேரத்தில்
பெலன் தந்த கிருபை
சோர்ந்து போன நேரத்தில்
சூழ்ந்து கொண்ட கிருபை

## பாடல் - 2518

**தேசங்களை கேளு என்று சொன்னீரே**
தேசங்களை தருவேன் என்று சொன்னீரே
இதோ கேட்கிறோம் அப்பா
இந்தியாவை தாரும் அப்பா

1. உலகத்தின் மேலே ஆசை இல்லப்பா
ஆத்துமாக்கள் மீது ஆசை அப்பா
பணத்தை தேடி நாங்க ஓடவில்லப்பா
ஆத்துமாக்களை தேடி ஓடுகிறோம்பா

2. பாவமும் அநியாயமும் பெருகுதப்பா
தேசத்தில் சமாதானம் இல்லையப்பா
தேசத்தை காக்கும் தெய்வம் நீங்கதானப்பா
உங்களை விட்டா எங்களுக்கு யாருமில்லப்பா

## பாடல் - 2519

**துதித்தலே என் இன்பமானது – என்**
இயேசு நாமம் துதிக்க துதிக்க மதுரமானது
நன்றி சொல்லி பாடுவேன்
நாள் முழுக்க பாடுவேன் நல்லரை பாடுவேன்

1. அதியசமே அவர் நடத்துவார்
ஆனந்தமே பேரானந்தமே
அன்பினாலே உள்ளம் பொங்கிடுதே
ஆவியினாலே ஆத்மா நிரம்பிடுதே

2. ஆயிரம் தான் துன்பம் வந்திட்டாலும்
அணுகிடாது என்னை நெருங்கிடாது
விசுவாசத்தால் பட்டயம் நான் எடுத்துக் கொண்டு
கோலியத்தை நான் எதிர் கொள்வேன்

3. வளரும்படி நல்ல சபையை தந்தார்
வசனத்தாலே மனம் மகிழச் செய்தார்
வார்த்தையாலே குணம் ஆக்கினார்
வாக்கு தந்து என்னை வாழ வைத்தார்

## பாடல் - 2520

**நன்றி சொல்லி பாடுவேன்**
என் நல்ல தெய்வம் இயேசுவை
நான் உயர்த்தி போற்றுவேன்
என் உண்மை தெய்வம் இயேசுவை

ஆராதனை ஆராதனை இயேசு அப்பா ஆராதனை
ஆராதனை அல்லேலூயா இயேசு அப்பாக்கு

1. பானபலி ஆனவரை
நான் பரிசுத்தமாய் ஆராதிப்பேன்
என் ஜீவபலி ஆனவரை
என் ஜீவன் தந்து ஆராதிப்பேன்

2. வாழ்வு எனக்கு தந்தவரை
வாழ்த்தி என்றும் போற்றுவேன்
உயிர் எனக்கு நான் உள்ளளவும்
உயர்த்துவேன்

3. உலத்தை படைத்தவரை
முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
உன்னதத்தில் வாழ்பவரை
விண் தூதரோடு ஆராதிப்பேன்

## பாடல் - 2521

**நன்றி நன்றி நன்றி இயேசு ராஜா**
நன்றி நன்றி நன்றி இயேசு தேவா
உமக்கு நன்றி சொல்வதை தவிர
வேறே மேன்மை எனக்கு இல்லை

1. கண்ணின் மணி போல் என்னை காத்தீர்
காலமெல்லாம் நடத்துகின்றீர்
உமது அன்பால் நித்தமும் மகிழ்வேன்
உமது தயவால் தினமும் வாழ்வேன்

2. ஆபத்தில் என்னோடு இருப்பவர் நீரே
கேடகமாக என்னை காப்பவர் நீரே
உம்மாலே சேனைக்குள் பாய்ந்திடுவேனே
தம்மாலே மதிலையும் தாண்டிடுவேனே

3. அன்போடு என்னை அனைக்கின்றீரே
ஆறுதலாக பேசுகின்றீரே
தகப்பனைப் போல ஆற்றுகின்றீர்
தாயைப் போல தேற்றுகின்றீர்

## பாடல் - 2522

**யெகோவா தேவனுக்கு**
ஆயிரம் ஸ்தோத்திர பலிகளும்
இஸ்ரவேலின் தேவனுக்கு
ஆராதனை செய்வோம்
சீயானின் தேவனோ ஆராதனை பிரியரவர்
மகிழ்ச்சியோடு பாடிடுவோம்
இந்த நேரமதில் சீக்கிரம் வருகிறார்
நம்மை கொண்டு போவதற்கு
அதனால் சொல்லுவோம்
ஆமென் மாரநாதா-2

1. யெகோவா எலேஹிம்
எங்கும் நிறைந்த தேவனவர் (2)
யெகோவா எலோஹிம்

2. யெகோவா ராஃபா
சுகம் தரும் தேவனவர் (2)
யெகோவா ராஃபா

3. யெகோவா எபிநேசர்
உதவி செய்யும் தேவனவர் (2)
யெகோவா எபிநேசர்

4. யெகோவா நிசியே
வெற்றிகொடி ஏற்றுவீர் (2)
யெகோவா நிசியே

5. யெகோவா ரூவா
எங்கள் மேய்ப்பர் (2)
யெகோவா ரூவா

6. யெகோவா ஷம்மா
எப்போதும் கூட இருப்பார்
யெகோவா ஷம்மா

7. யெகோவா ஷாலோம்
சமாதான தேவனவர்
யெகோவா ஷாலோம்

8. யெகோவா மெக்காதீஸ்
பரிசுத்தமான தேவனவர் (2)
யெகோவா மெக்காதிஸ்

9. யெகோவா ஓசேனு
உருவாக்கும் தேவனவர்
யெகோவா ஓசேனு

## பாடல் - 2523

**ஆராதனை சுகம் தரும்**
ஆராதித்தால் பெலன் வரும்
நான் போற்றுவேன் நான் புகழுவேன்

கிருபையை எந்நாளும்
நினைத்து வாழ்ந்திடுவேன்

1. எனது வாஞ்சையும் நீரே
எனது ஆசையும் நீரே
உங்க சமுகமே எனக்கானந்தம்
உங்க பிரசன்னமே எனக்காறுதல்

2. எனது ஏக்கமும் நீரே
நோக்கமும் நீரே
எந்தன் பிரியமே எந்தன் நேசமே
எந்தன் ஜீவனே எந்தன் இயேசுவே

## பாடல் - 2524

**என்னாலே நீ மறக்கப்படுவதில்லை**
என் வார்த்தை மாறுவதேயில்லை

உன்னை கை விடுவதில்லை
உன்னை விடு விலகுவதில்லை

1. மனிதர் மறந்து போனாலும்
பகையாய் உன்னை பகைத்தாலும்
உறவுகள் வெறுத்து தள்ளினாலும்
வார்த்தைகளால் உன்னை வதைத்தாலும்

2. தோல்விகள் உன்னை சூழ்ந்தாலும்
நம்பிக்கை இழந்தாலும்
வியாதியால் சரீரம் வாடினாலும்
மரணமே அருகில் நெருங்கினாலும்

## பாடல் - 2525

**பயர் (Fire) என்றாலே அனல் பறக்கும்**
தேசத்தின் (இந்தியாவின்) எழுப்புதல் இன்று வெடிக்கும்

1. அக்கினி அனுப்பிடும் இந்த நாளினில்
எழுப்புதல் தந்திடும் இந்தியாவினில்
தேசத்தினில் Jesus Fire OH

2. அற்புதங்கள் அதிசயம் இன்று நடக்கும்
இயேசுவின் நாமத்தில் சுகம் கிடைக்கும்

3. சத்துருவின் கோட்டைகள் உடையும்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் கிடைக்கும்

## பாடல் - 2526

**ப்ளஸ் இந்தியா ஓ ஓ ப்ளஸ் இந்தியா**
ப்ளஸ் இந்தியா ஜீசஸ் ப்ளஸ் இந்தியா

1. நூறு கோடி ஜனங்கள் வாழும்
எங்கள் இந்தியா ஆசிர்வதியும் தேவா
ஏழு லட்சம் கிராமம் பட்டணங்கள்
ஆயிரம் ஆசிர்வதியும் தேவா
பல பல பாசை கலாசாரங்கள்
ஒன்றே எங்கள் மனம்
பல பல இனங்கள் வம்சா வழிகள்
ஒன்றே எங்கள் ஜெபம்
இந்தியாவின் மேலே கைகளை வைத்து
ஆசிர்வதித்திடுமே

2. இந்திய நதிகள் யாவும் ஒன்றாய்
இணைய வேண்டும் தேவா
பஞ்சம், பட்டினி, வெள்ளம், கொடுமை
நீங்க வேண்டும் தேவா
கொலை, களவுகள், தீவிரவாதங்கள்
ஒழிய வேண்டும் தேவா
ஒரு தாய் பிள்ளை இந்தியர் நாமென
உணர வேண்டும் தேவா - இந்தியா

3. மாநிலம் யாவும் ஒரு மனமாக
திகழ வேண்டும் தேவா
ஜாதி, மதங்கள், பேதங்கள் இன்றி
வாழ வேண்டும் தேவா
இந்திய வாலிபர் அகிலமெங்கிலும்
ஜொலிக்க வேண்டும் தேவா
இந்திய தேசத்தின் தலைவர்கள் எல்லாம்
இணைய வேண்டும் தேவா
இந்தியாவின் மேலே கைகளை வைத்து
ஆசிர்வதித்திடுமே I LOVE INDIA

## பாடல் - 2527

**சமாதானம் நெஞ்சிலே புயலின் நடுவிலே**
சிலுவை சுமந்தார் மரணம் தோல்வி அடைந்ததே
இயேசு எனக்காய் மரித்தாலே எழும்புவேன்

கழுகு போலே எழும்புவேன்
சிறகை அடித்து எழும்புவேன் – எழும்புவேன்

2. கனவும் கலைந்ததே கண்கள் தேடுதே
உண்மை அன்பை உள்ளம் இன்று உணர்ந்ததே
உள்ளம் கையில் வரைந்த உம்மை நாடுதே

3. சோர்வும் நீங்கிற்றே பெலனும் பெறுகிற்றே
கண்கள் நதியாய் கண்ணீர் சிந்தி அழுததே
கருவில் என்னை காத்த தயவை நினைத்தே

4. பாவம் சூழ்ந்ததே சாபம் வந்ததே
இதய வாசல் தேடி வந்து நின்றாரே
இரத்தத்தால் கழுவுகின்றேன் என்றீரே

## பாடல் - 2528

**உலகம் தந்திடும் அன்பு மாயையே**
இயேசு தந்திடும் அன்பு போதுமே

இயேசுவே வாருமே உம் வல்லமை தாருமே

2. பரிசுத்த ஸ்தலத்துக்குள் அழைத்து செல்லுமே
பரிசுத்த ஆவியால் நிரம்ப வேண்டுமே

3. மாம்சத்தின் கிரியைகள் அழிய வேண்டுமே
ஆவியின் பெலத்தினால் நிறைய வேண்டுமே

4. உமக்காய் வாழ்ந்திட கிருபை தாருமே
ஊழியம் செய்திட வரங்கள் வேண்டுமே

## பாடல் - 2529

**பாடுவேன் ஆடுவேன் மகிழ் கொண்டாடுவேன்**
நன்மைகள் செய்தாரே எந்நாளும் துதிப்பேன்
அச்சமில்லைமில்லை பயமுமில்லை
நேசருக்காய் ஆடிப் பாடுவேன் அல்லேலுயா அல்லேலுயா

1. இயேசுவின் நாமத்தில் சாத்தானை ஜெயிப்பேன்
கிறிஸ்துவின் இரத்தத்தால் நுகங்கள் முறிப்பேன்

2. இச்சையை ஜெபிப்பேன் எட்டி எட்டி உதைப்பேன்
கர்த்தரின் பெலத்தால் மோட்சம் சேருவேன்

## பாடல் - 2530

**தடுமாறும் கால்களை கண்டேன்**
கண்கள் குளமாகிப் போனேன்

என்னை யோசித்தீரே என்னை நேசித்தீரே
எனக்காக ஜீவன் தந்தீரே

1. பாரமான சிலுவையென்று
இறக்கி வைக்கவில்லை
கூர்மையான ஆணியென்று
புறக்கணிக்க வில்லை

2. குருதி சிந்தி பாடு பட்டும்
மறுதலிக்கவில்லை
மரணம் சூழ்ந்த நேரத்திலும்
விட்டுக் கொடுக்கவில்லை

## பாடல் - 2531

**அழகே என் இயேசுவே என் சுவாசமே**
உயிரே என் இயேசுவே

1. அமுதே உம்மை துதித்திடுவேன்
நான் தேனிலும் இனிமையே
தெவிட்டாமல் சுவை தருமே
தித்திக்கும் உம் நாமமே

2. சாதா காலமும் வாழ்பவரே
சகலத்தையும் நீர் படைத்தீர்
சர்வலோகையும் ஆள்பவரே
அடியேனை நேசித்தீரே

3. பதினாயிரம் பேரில் சிறந்தோர்
பாவமெல்லாம் நீர் சுமந்தீர்
பரலோகத்தில் பெயர் எழுத பரிகார பலியானீர்

4. எனக்காக அடிக்கப்பட்டீர்
அழகெல்லாம் நீர் துறந்தீர்க
என் பாவங்கள் யாவும் சுமந்தீர்
இரத்தம் சிந்தி நீர் மரித்தீர்

## பாடல் - 2532

### இடைவிடா துதிகளே இதயமே பாடுமே

1. மொழி களும் ஸ்வரங்களும் போதுமோ
உந்தன் கிருபையை வர்ணிக்கவே
வரிகள் எழுத்தினில் அடங்குமோ
உந்தன் ஞானத்தை விளக்கிடவே
பல ஆண்டுகள் பூமியில் வாழ்வதிலும்
ஒரு நாள் மடியில் தவழ்வேன்

2. அலைகளும் புயல்களும் எழும்பிடும்
உந்தன் கரங்களில் மறைந்திடுவேன்
வாதைகள் கொள்ளை நோய் பெருகிடும்
உந்தன் வார்தையில் பிழைத்திடுவேன்
என் நேசரின் மார்பினில் சாய்ந்திடுவேன்
இனி எனக்கு கவலை இல்லை

## பாடல் - 2533

### உம் கிருபைக்காக ஸ்தோத்திரம்

1. தோல்வி நடுவில் ஸ்தோத்திரம்
ஜெயத்தை தருவீர் ஸ்தோத்திரம்
கண்ணீர் மத்தியில் ஸ்தோத்திரம்
களிப்பை தருவீர் ஸ்தோத்திரம்

2. வியாதி மத்தியில் ஸ்தோத்திரம்
சுகத்தை தருவீர் ஸ்தோத்திரம்
குறைவின் மத்தியில் ஸ்தோத்திரம்
நிறைவை தருவீர் ஸ்தோத்திரம்

3. நெருக்கம் நடுவில் ஸ்தோத்திரம்
விசாலம் தருவீர் ஸ்தோத்திரம்
இழப்பிற்க்காக ஸ்தோத்திரம்
ஆறுதல் தருவீர் ஸ்தோத்திரம்

## பாடல் - 2534

**உம்பாதமே எனக்கு என்றும் என்றும் சொந்தம்**
உம் கிருபையில் என்றும் நான் நடக்கின்றேன்
பாவமதை நான் என்றும் வெறுக்கின்றேன்
பரிசுத்தத்தை நான் உம்மில் தேடுகின்றேன்

This is my soul this is my stlye yah yah
This is my song his is my stlye yah
Everybody in the house say Halleluya
Every body in the house say Hosanna

2. என் இளமையை நான்
ஒப்புக் கொடுக்கின்றேன்
உம் சித்தத்தில் நான் என்றும் வாழுகின்றேன்
மாய வாழ்வை நான் அருவருக்கின்றேன்
உம் சிலுவையை நான் ஏற்றுக் கொள்கின்றேன்

This is my song I am gonna get the music
This is my songI am gonna get it my way

## பாடல் - 2535

**மா பாவியாம் என்னையும்**
உம் அன்பால் அணைத்தீரே
என் இயேசு ராஜா நன்றி

தம் சித்தம் நிறைவேற உம் இரத்தம் தந்தீரே
என் இயேசு ராஜா நன்றி

1. குயவன் கையில் களிமண் போல
என்னை கொடுத்தேன்
பரிசுத்தமாய் என்னை வனையும்
ஆத்ம பாரம் தந்து என்னை நிரப்பும்

அனுப்பும் அனுப்பும் உம் சேவை செய்திடவே
அனுப்பும் அனுப்பும் என் தேசம் சந்திக்கவே

2. இருள் சூழ்ந்த இடம்
என்னை இன்றே அனுப்பும்
அழியும் மாந்தர் சந்திக்க
நரகாக்கினை நின்று ஜனத்தை இரட்சிக்க
அபிஷேகியும் தந்து என்னை அனுப்பும்

## பாடல் - 2536

**என் தேவன் எனக்காய் யாவையும் செய்வார்**
நான் எதைக் கண்டும் அஞ்சிடேன்
என் கர்த்தர் எனக்காய் யாவையும் செய்வார்
நான் எதைக் கண்டும் பயப்படேன்

நான் அஞ்சிடேன் நான் கலங்கிடேன்
நான் சோர்ந்திடேன் ஒரு போதும்

1. என்னென்ன துன்பங்கள் வந்தாலும்
எந்தன் இயேசு என்னை மறவார்
எந்த சொந்தங்கள் என்னை வெறுத்தாலும்
இயேசு என்னோடு என்றும் இருப்பார்
இயேசு நடத்துவார் என்னை பாதுகாப்பார்
என் மேல் அன்பு வைப்பார் என்றுமே

2. முள்ளின் மேல் என் கால்கள் நடந்தாலும்
என் வாழ்கை இயேசு கரத்தில்
பெரும் காரிருள் என் வாழ்வை சூழ்ந்தாலும்
தினம் வெளிச்சம் இயேசு எனக்கு
இயேசு நடத்துவார் என்னை பாதுகாப்பார்
என் மேல் அன்பு வைப்பார் என்றுமே

## பாடல் - 2537

**துதித்திடும் போதெல்லாம்**
தேவ கிருபை பெருகிடுதே
மகிழ்ந்திடும் போதெல்லாம்
தேவ மகிமை விளங்கிடுதே
ஸ்தோத்திரமே ஸ்தோத்திரமே துதி ஸ்தோத்திரமே
தேவாதி தேவனுக்கு துதி ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரமே

1. எரிகோ கோட்டை தகர்த்திட வேண்டும்
தடைகள் உடைந்திட வேண்டும்
பாலும் தேனும் ஓடும் தேசம்
சொந்தம் ஆகிட வேண்டும்

2. தேச மெங்கும் சுவிசேஷம்
சுடரொளி வீசிட வேண்டும்
வீட்டுக்கு வீடு விளக்கேற்றி வைத்து
ஓயாமல் ஜெபித்திட வேண்டும்

3. எல்லா இனமும் ஒன்றாக வேண்டும்
இயேசுவின் நாமத்தை உயர்த்திட வேண்டும்
ஆவியின் அன்பு உள்ளத்தில்
இன்று ஊற்றப்பட வேண்டும்

## பாடல் - 2538

**இரக்கம் வைக்கும் தேவனாலே**
எல்லாமே கைகூடும் - எனக்கு

1. விதைப்பனாலுமல்ல நீர் இரைப்பவனாலுமல்ல
விளையச் செய்யும் தேவனாலே
செழித்து நான் வாழ வாழ்வேன்- என்றும்

2. கட்டுவதாலுமல்ல காவல் காப்பதினாலுமல்ல
கருணையுள்ள தேவனாலே
கண்ணீரெல்லாம் நீங்கும் - என்

3. ஆற்றினாலுமல்ல பல சக்தியினாலுமல்ல
அசைவாடும் ஆவியாலே
அகிலத்தை நான் ஜெயிப்பேன்

4. ஓடுவதாலுமல்ல போராடுவதாலுமல்ல
அன்பு செய்யும் தேவனாலே
வெற்றி மேல் வெற்றி பெறுவேன் - நான்

## பாடல் - 2539

**கண்ணுமணி போல என்னை**
காக்கும் நல்ல இயேசுவே
உள்ளம் பொங்க உம்மை துதிப்பேன்
எந்நாளும் உள்ளம் பொங்க உம்மை துதிப்பேன்

1. ஆயிரம் பேர்களில் அழகுச் செல்வனே
பதினாயிரம் பேர்களில் அருமைச் செல்வனே
அன்பு இரக்கம் சமாதானமே
என்னை அள்ளி அணைக்கும் மனதுருக்கமே

2. பாவம் நோக்கி பாராத சுத்த கண்ணனே
இந்த பாவியை தேடி வந்த நல்ல நண்பனே
பாரசிலுவை உம் பாச நேசமே
பரம தஞ்சமே எனக்கு மோட்ச வாசலே

3. காணாமல் போன ஆடு வழி மறந்தேனே
காடு மேடு தேடி வந்த நல்ல ஆயனே
பச்சை பசும்புல் உம் வசனங்களே
அள்ளிப் பருக எனக்கு ஜீவ ஜலமே

## பாடல் - 2540

**இயேசு என் செல்வம் ஓப்பற்ற என் செல்வம்**
விலையேறப் பெற்ற திரு இரத்தம்
எனக்கு ஜீவன் சொத்து சுகம்

போடு தாளம் பாடு ராகம்
ஆடு நடனம் அல்லேலூயா

1. எல்லையில்லா அன்பு இயேசு
நம் குறையை நீக்குவார் இயேசு

2. தேடி வந்த தெய்வம் இயேசு
தேற்றும் நல்ல நண்பன் இயேசு

3. மன்னாதி மன்னன் இயேசு
மன்னித்து மறப்பார் இயேசு

4. காலைநேர உதயம் இயேசு
கண்ணீரெல்லாம் நீக்கும் இயேசு

## பாடல் - 2541

**விளக்கேற்றி வைத்தவரே வாசல் திறந்தவரே**
வாழ வைப்பவரே வணங்குகிறோம்
வணங்குகிறோம் வணங்குகிறோம் வணங்குகிறோம் – (3)



அட்டவணை

1. உம்முடைய வீட்டிலே வாசம் செய்யும்
எனக்கு ஆனந்தமே பேரானந்தமே

2. கல்லான இதயம் எடுத்துப் போட்டவரே
கனிவுள்ள இதயம் தந்தவரே

3. உள்ளங்கையில் என்னை சிங்காரமாய் வரைந்து
காலமெல்லாம் என்னை ரசிப்பவரே

4. கேட்ட தெல்லாம் கொடுப்பேன் என்று சொன்னவரே
உம்மையே நம்பி நான் வாழ்கின்றேன்

5. பரிசுத்த ஆவி பாவி என் உள்ளத்திலே
பரலோக அன்பை ஊற்றித் தந்தார்

## பாடல் - 2542

**வாரும் தூய ஆவியே**
வந்தென்னில் வாசம் செய்யும்
வல்லமையால் என்னை நிரப்பிடும்
இயேசுவின் பிள்ளையாய் வாழச் செய்யும்
ஆமென் அல்லேலூயா

1. கசப்பு வெறுப்பு வேதனைகள்
என் உள்ளத்தில் வேண்டாம் எடுத்திடும்
மனதார மன்னிக்க பெலன் தாரும்
மன்னித்து மறக்க கற்றுத் தாரும்

2. வஞ்சகம் நிறைந்த உலகிலே
வாஞ்சிக்கிறேன் உம் அன்புக்காய்
வற்றாத நீரூற்று நீர் தானய்யா
வந்திட்டேன் கலைமான் குட்டி ஐயா

3. துன்ப துயர நேரங்களில்
துணையாளரே நீர் போதும் ஐயா
தனிமை என்னை வாட்டுதய்யா
தாங்கிடும் நண்பனாய் வாருமய்யா

## பாடல் - 2543

**உளமார்ந்த நன்றி உமக்கே என் ராஜா**
உயிருள்ள நாளெல்லாம் - இந்த
நன்றி ஐயா நன்றி

1. அலைந்து திரிந்தேனே
நான் ஆகாதவன் ஆனேன்
ஆதரவே ஆருயிரே என் ஆத்ம போதகரே
நன்றி ஐயா நன்றி

2. கடினக்கல் இதயம் என்னில்
வேண்டாம் எடுத்தீர் ஐயா
பாவமில்லா பிஞ்சு உள்ளம்
எனக்குள்ளே நீர் வைக்கீர் ஐயா
நன்றி ஐயா நன்றி

3. வாழத் தெரியாமல் நான் வாடி
நின்றேன் ஐயா
வந்தீர் ஐயா தந்தீர் ஐயா
நித்திய ஜீவனைத் தந்தீர் ஐயா
நன்றி ஐயா நன்றி

## பாடல் - 2544

**உம் கிருபை என்னை தாங்குதய்யா**
உம் வசனம் என்னை தேற்றுதய்யா
கலக்கம் எனக்கில்லையே
கவலை எனக்கில்லையே
ஆமென் ஆமென் அல்லேலூயா

1. வெறும் கையேடு பிறந்தேனய்யா
வேகமாய் மறையும் நிழல் தானய்யா
கொடுத்தது எல்லாம் நீர் எடுத்தாலும்
கோடி ஸ்தோத்திரம் சொல்லுவேனய்யா

2. வேதத்தை பார்த்து நடவாமல்
வீணாய் அலைந்து திரிந்தேனய்யா
நினைக்கையிலே உள்ளம் குமுறுதய்யா
நீரோடையாய் கண் ஆகுது ஐயா

3. என் நம்பிக்கை வீண் போகாதய்யா
என் மீட்பர் உயிரோடிருக்கின்றீர்
என் கண்கள் உம்மைக் காண்கின்ற
வருகையின் திருநாள் சமீபமே

## பாடல் - 2545

**இயேசப்பா நாமத்தை**
சொல்லும் போதெல்லாம்
என்னுள்ளம் மகிழ்ந்து குளிருதே
எண்ணவே முடியாத நன்மைகள் செய்தீர்
எப்படி நன்றி நான் சொல்லுவேனோ
அப்பா இயேசப்பா ஸ்தோத்திரம்

1. பாவத்தில் வாழ்ந்தேன் பரிதாபமானேன்
பாசமாய் தேடி வந்தீர்
பரிசுத்த இரத்தம் எனக்காக சிந்தி
என்னை மீட்டுக் கொண்டீர்

2. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலன் தந்து வாழச் செய்தீர்
இரு கரம் நீட்டி என்னை அணைத்து
மார்போடு சேர்த்துக் கொண்டீர்

3. வேண்டுவதற்கும் நினைப்பதற்கும்
அதிகமாய் அன்பு செய்தீர்
அளவிட முடியா அருள்மாரி பொழிந்து
ஆசை முத்தம் தந்தீர்

## பாடல் - 2546

**உம்மையன்றி வாழ்வது எப்படி என் இயேசய்யா**
ஜீவனுள்ள வார்த்தை நீர்தானே
ஜீவனுக்கு பாதை நீர்தானே (இயேசய்யா-4)

1. செந்தூரம் போல் சிவந்த
என் பாவக்கறை நீக்கி
வெண்பனி போல் என்னை
தூய்மையாக்கினீர்

2. என்னில் உள்ள எல்லாமே
அழுக்கான கந்தை
ஆனாலும் என்னை நீர்
அபிஷேகித்தீர் இயேசப்பா

3. ஊதாரி மைந்தன் உலகெல்லாம்
அலைந்தேன்
நிம்மதி கண்டேன் அப்பா வீட்டிலே
இயேசய்யா

**பாடல் - 2547**

**கூப்பிட்ட நேரமெல்லாம்**
என் அருகில் இருப்பவரே

நீர் வாழ்க வாழ்கவே ஐயா வாழ்க வாழ்கவே

1. செழிப்புள்ள மேய்ச்சலைத் தந்தவரே
வாழ்க வாழ்கவே ஐயா வாழ்க வாழ்கவே

2. அமர்ந்த நீரண்டை நடத்தினீரே - வாழ்க

3. இருளான பள்ளத்தில் துணை நீரே-வாழ்க

**பாடல் - 2548**

**வந்துவிட்டேன் நான் தந்து விட்டேன்**
என்னையே இயேசுவுக்கு வாழ்வது நானல்ல
என்னில் இயேசு வாழ்கின்றார்

1. மனிதனை நம்பி வாழ்ந்த நாட்களிலே
வேதனை வேதனையே
இனி உம்மையே நம்பிடுவேன்
நான் உம் பின்னே வந்திடுவேன்

2. நிம்மதி இல்ல உலகத்தில்
எனக்கு நீரே நிம்மதியே
உம் அன்புக்காய் ஏங்குகிறேன்
என்னை மார்போடு அணைத்திடுமே

3. சிலுவையை சுமப்பேன்
சீடனாய் வருவேன்
எனக்கு இனி குறைவில்லையே
என் இயேசு ராஜாவே என் ஆத்ம நேசரே

**பாடல் - 2549**

**எந்தன் நல்ல இயேசு எனக்குள்ளே வந்தீர்**
நிலையில்லா உலகில் நிம்மதியே
உயிருக்கு உயிராய் நேசிக்கும் தேவா
உயிருள்ள நண்பன் நீரே என் இயேசுவே

1. ஊதாரி மகனாய்
உலகெல்லாம் அலைந்தேன்
உம்மை நான் மறந்து வாழ்ந்து வந்தேன்
மனந்திரும்பி நான் வந்து விட்டேன்
மார்போடு என்னை அணைத்துக் கொண்டீர்

2. சுயநலம் ஒன்றே பெரிதாக எண்ணி
பிறர் நலம் கெடுத்து வந்தேனய்யா
மகிமையின் ரூபம் நீர் எடுத்தீர்
பரலோக மேன்மை எனக்கு தந்தீர்

3. சிற்றின்ப மோகம் கேடான பாவம்
சீரழிந்தேன் நான் என் வாழ்விலே
சிரசிலே முள்முடி தாங்கினீரே
சிந்தையை முமையாய் ஆட்கொண்டீரே

## பாடல் - 2550

**அப்பா ஒரு வீட்டைக் கட்டினார்**
உனக்கும் சேர்த்துக் கட்டினார்
இயேசுவையே தேடு சொந்தமாகும் வீடு

1. கருங்கல் செங்கல்லு இல்ல
அட கார கலவை இல்ல
சிம்மட்டி கூட இல்ல
ஒரு மம்மிட்டி கூட இல்ல
மாணிக்கம் மரகதம் வைரமான கல்லுகளாலே

2. படிப்ப பார்க்க வில்ல
அட பணத்தை பார்க்கவில்ல
குலத்தை பார்க்கல
அட குணத்தை பார்க்கல
ஆவியிலே ஜலத்திலே பிறந்து விட்ட பிள்ளைகளுக்காய்

3. மாமனாரும் இல்ல
அட மச்சாமாரும் இல்ல
மாமியாரும் இல்ல
அட மருமகளும் இல்ல
தொண்டையிலே சண்டையிலே மண்டையிலே காயமில்லை

4. தாசில்தாருமில்ல
அட தகராரும் இல்ல
சொத்து சண்டையில்ல
எனது உனது இல்ல
எல்லாவே இலவசம் எல்லாருமே கிருபைதான்

5. இன்ஜினியரும் இல்ல
அட காண்ட்ராக்டரும் இல்ல
கொத்தனாரும் இல்ல
ஒரு தச்சனாரும் இல்ல
யாருமே கை போட்டு செய்யாத வீட்டையே

## பாடல் - 2551

**எனக்கொரு ஜனமுண்டு**
அது என்னை துதித்து துதித்து போற்றிடுமே

1. வியாதி வந்தாலும் வேதனை வந்தாலும்
என் ஜனம் என்னை துதித்திடுமே
மறவாமல் என்னை துதித்திடுமே

2. காலை நேரத்திலும் மாலை பொழுதினிலும்
என் ஜனம் என்னை துதித்திடுமே
மறவாமல் என்னை துதித்திடுமே

3. நித்தம் புது பாடல் பாடி மகிழ்ந்திடுமே
என் ஜனம் என்னை துதித்திடுமே
மறவாமல் என்னை துதித்திடுமே

## பாடல் - 2552

**எல்லாம் நன்மையாக**
என் இயேசு மாற்றிடுவார்
தாங்கொண்ணா துன்ப துயரங்கள்
தவிக்க வைக்கும் சூழ்நிலைகள்
ஆமென் அல்லேலூயா

1. உயிருக்கு உயிராக நேசித்தவர்
இங்கு இல்லையோ
உள்ளத்தில் வேதனையோ
தாங்கவே முடியல்லையோ

2. சொந்தங்களும், பந்தங்களும்
பார்த்துன்னை சிரித்தார்களோ
பதில் சொல்ல முடியலையோ
தலை குனிந்து நிற்கிறாயோ

**பாடல் - 2553**

**நினைவெல்லாம் நீர் தானய்யா**
என் இயேசய்யா இயேசய்யா

1. உம் நாமம் சொல்ல சொல்ல
என் வாழ்வு மலருதய்யா
உம் புகழ் பாட பாட
ஒரு பெலன் வந்ததய்யா

2. உம்மை நான் நோக்கி பார்த்தேன்
பிரகாச மடைந்தேனய்யா
உம்மிடம் தேடி வந்து
அடைக்கலம் கண்டேனய்யா

3. வற்றாத நீரூற்றைப் போல்
பாய்ந்து என்னில் வந்தீர் ஐயா
வறண்ட என் வாழ்வை
செழிக்கச் செய்தீர் ஐயா

4. அணையாத சுடரொளியே
என் இயேசு நீர் தானய்யா
என் வாழ்க்கை கப்பலுக்கு
கலங்கரை தீபமய்யா

**பாடல் - 2554**

**ஆராதனை செய்கிறோம்**
ஆவி ஆத்மா உடலும் சேர்ந்து
ஆராதனை செய்கிறோம் ஆராதனை-4

1. ஆயிரம் ஆயிரம் தூதர்களோடு
ஆவியில் உண்மையாய் ஆராதிப்போம்
அன்பரை ஆராதிப்போம்

2. பரிசுத்தர் பரிசுத்தர் என்று பாடி
பரலோகத்தாரோடு ஆராதிப்போம்
பரமனை ஆராதிப்போம்

3. இரண்டு மூன்றுபேர் கூடும் போது
நடுவில் வருவார் ஆராதிப்போம்
நாமெல்லாம் ஆராதிப்போம்

## பாடல் - 2555

**கரம் நீட்டி கர்த்தர் இயேசு**
கனிவோடு அழைக்கிறார்
ஆறுதல் தருகிறார் அணைக்க துடிக்கிறார்

1. நீதிமானை அழைக்க அல்ல
பாவியை தேடி வந்தார்
பாசமாய் அழைக்கிறார்
பரலோகம் தருகிறார்

2. பார சுமை சுமந்ததாலே
சோர்ந்து போனாயோ
நிழலாய் வந்து விட்டார்
இளைப்பாற அழைக்கிறார்

3. மனிதனை நம்பினதாலே
தலை குனிந்து நிற்கிறாயோ
தாங்கிட வந்து விட்டார்
தன்னையே தந்து விட்டார்

4. சிலுவையில் உனக்காக
தாகம் தாகம் என்றார்
பிளந்த மார்பிலே
அடைக்கலம் தருகிறார்

## பாடல் - 2556

**தயவு செய்து அசைவாடுங்க ஆவியானவரே**
அசைவாடுங்க ஆவி ஊற்றுங்க
அதிசயம் செய்யுங்க

1. ஒழுங்கில்லாமல் இருளடைந்து
வாழும் என்னில் இறங்கி வாங்க
என் மேல் சிறகடித்து அசைவாடுங்க
புது படைப்பாக என்னை மாற்றுங்க

2. பெலனில்லாமல் திடனில்லாமல்
உயிரற்ற ஊழியம் போதும் வேண்டாங்க
பெரும் காரியங்கள் உமக்காக
நான் செய்திடவே பெலன் தாருங்க

3. இந்தியாவின் எல்லை எங்கும்
இயேசுவின் இரத்தம் பாய வேண்டுங்க
இயேசு மெய்யான தெய்வம் என்று
எல்லா நாவுகளும் சொல்ல வேண்டுங்க

## பாடல் - 2557

**உம்மைப் போலவே நான் வாழ வேண்டுமே**
உம்மைப் போலவே நான்
ஊழியம் செய்ய வேண்டுமே
உம்மைப் போலவே எதிலும் எப்போதும்

1. இரவெல்லாம் ஜெபித்த ஜெப வீரனே
உம்மைப் போல ஜெபித்திட கற்றுத் தாருமே

2. பாவம் நோக்கி பாராத சுத்த கண்ணனே
பரிசுத்தம் வேண்டும் தந்திடுமே

3. அப்பாவின் சித்தம் என் ஆனந்தமே
உம் சித்தம் செய்திட உதவிடுமே

## பாடல் - 2558

**என் வாழ்க்கை படகிலே இயேசு கூட வருகிறார்**
பயமே இல்லை எனக்கு பயமே இல்லை
ஒய்யாரே ஒய்யாரே ஒய்யாரே ஒய்யாரே
ஆழ்கடலை தாண்டுவேன்
அக்கரையில் சேருவேன்

1. ஜீவனுள்ள வார்த்தையினால்
என்னோடு பேசுவார்-2
வழிகாட்டும் தீபமாய் (கூட வருவார்-2)

2. கூப்பிடும் போதெல்லாம் ஓடி வருவார்
அற்புதங்கள் ஆயிரம் (செய்து மகிழ்வார்-2)

3. பெரும் புயல் வீசட்டும் அலை மோதட்டும்
பேரமைதி தந்திட (இயேசு இருக்கிறார்-2)

## பாடல் - 2559

**இயேசு இயேசு இயேசு என்று நான் பாடுவேன்**
பாடி பாடி பாடி இன்று கொண்டாடுவேன்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. வாரும் ஐயா இங்கு என் உள்ளத்தில்

2. மாற்றும் ஐயா என்னை உம் பிள்ளையாய்

3. துடைத்திடுமே என் கண்ணீரெல்லாம்

4. இயேசு ராஜா நீர் எங்கள் ராஜா

## பாடல் - 2560

**நாங்கள் கூடி ஜெபிக்கும் போதெல்லாம்**
எங்கள் நடுவினில் வருபவரே
உம்மை என்ன சொல்லிட பாடுவோம்
ஆராதனை ஆராதனை உமக்கே

1. மனதுருகும் என் தெய்வமே
என்னை மன்னித்து காப்பவரே
துதி மகிமை துதி மகிமை துதி மகிமை உமக்கே

2. சித்தம் போல உம் வழிகளிலே
நான் சிறுபிள்ளை நடத்துமே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென் தாகம்

3. எல்லோரும் என்னை கைவிட்டாலும்
என் கைவிடாத தேவன் அன்றோ
ஆராதனை ஆராதனை ஆராதனை உமக்கே

## பாடல் - 2561

**அப்பா என்று அன்போடு அழைத்து**
ஆராதனை செய்கின்றேன்

1. அதிசயமானவர் நீரே
அற்புதமானவர் நீரே

2. ஆலோசனைக் காத்தர் நீரே
ஆறுதலின் தெய்வம் நீரே

3. வல்லமை உள்ளவர் நீரே
வாக்கு மாறாதவர் நீரே

## பாடல் - 2562

**ஆராதனை தேவா ஆராதனை**
ஆத்தும நேசரே ஆராதனை
ஆராதனை தேவா ஆராதனை
அன்பாலே பொங்குதே ஆராதனை

1. என்பார சுமையை சுமந்து தீர்த்தீர்
எனக்கு சுகம் தந்தீர்

2. இருள் சூழ்ந்த நேரம் கலங்குதென் உள்ளம்
கர்த்தாவே நீர் என்ஜோதி

3. வழி தப்பி போனேன் வஞ்சிக்கப் பட்டேன்
மறுவாழ்வு தந்தீரய்யா

4. மனதுருகும் தெய்வம் நீர்தானே ஐயா
மன்னித்து மறந்திடுவீர்

5. ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி ஸ்தோத்திரமே

## பாடல் - 2563

**தேவா உம் சமூகமே எல்லையில்லா இன்பமே**
இயேசுவே வாழ்க (2) இயேசுவே வாழ்கவே

1. உம்மை நினைத்து என்னுள்ளம்
ஏங்கி தவிக்குதய்யா

2. ஜீவனுள்ள வசனத்தினால்
அனுதினம் தேற்றுமய்யா

3. அபிஷேகம் செய்தீரய்யா
ஆனந்தம் பொங்குதய்யா

4. என் கால்கள் சறுக்கும் போது
கிருபையால் தாங்குகிறீர்

5. அடைக்கலமும் என் பெலனும்
ஆபத்தில் துணை நீரே

6. ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி ஸ்தோத்திரமே

### பாடல் - 2564

**மேளதாள நடனத்தோடு ஆடுவோம்**
நல்லா கைதட்டி பாட்டுப்பாடி மகிழுவோம்
இராஜாதி ராஜாவுக்கு ஜே ஜேஜே
என்று பாடி மகிழ்ந்திடுவோம்

பாடுங்க சந்தோஷமாய் நீங்க
ஆடுங்க பரவசமாய்

1. இயேசு என்ற நாமத்தை சொல்லுங்களேன்
எம்பி குதிச்சு ஓடிடுமே சாத்தான் இன்று – பாடுங்க

2. இயேசுவின் இரத்தத்தை பூசுங்களேன்
எல்லாவித வாதைகளும் நீங்கிடுமே

3. இயேசுவே மெய்யான தெய்வம் என்று
ஊரெல்லாம் சொல்லிடுவோம் வாருங்களேன் – பாடுங்க

### பாடல் - 2565

**எந்தன் இயேசு நாமம் ஆஹா நல்ல நாமம்**
எந்த ஜாதி ஜனத்திற்கும் வேண்டும் இந்த நாமம்

இயேசுவே சத்தியம் ஜீவனுக்கு மார்க்கம்

1. இயேசு இயேசு என்றாலே
தடைகள் நீங்கி போகுமே

2. துன்ப துயரம் வரட்டுமே
இயேசு நாமம் ஜெயிக்குமே

3. இருள் சூழ்ந்த வேளையில்
கலங்ரை தீபமே

### பாடல் - 2566

**நன்றி நிறைந்த உள்ளத்தோடு இயேசப்பா**
நாள்தோறும் பாடித் துதிப்பேன் இயேசப்பா
நீர் செய்த நன்மைகள் நீர் செய்த அதிசயங்கள்
ஒரு போதும் மறந்திட மாட்டேன்

1. கடந்து வந்த பாதைகள்
ஒவ்வொன்றிலும் கரம் பிடித்து
கண்மணி போல் காத்து வந்தீரே
கோணலான பாதையிலும்
குறுகலான வழிகளிலும்
தோள் மேலே என்னை சுமந்து வந்தீரே

2. சத்துருக்கள் வெள்ளம் போல் சூழ்ந்த நேரத்தில்
ஆவியானவர் என்னில் ஜெயம் தந்தீரே
மரண இருள் நேரத்திலும்
பள்ளத்தாக்கு வழிகளிலும்
மாப்போடு என்னை அணைத்துக் கொண்டீரே

3. பாதை காட்டும் தீபங்கள் அணைந்த நேரத்தில்
வாதை ஒன்றும் அணுகிடாமல்
மறைத்துக் கொண்டீரே
விசுவாசம் நம்பிக்கையும் குறைந்தே போகாமல்
வார்த்தையினால் தினமும் தேற்றினீரே

## பாடல் - 2567

**தேவாதி தேவனுக்கு ஆராதனை**
ஆண்டவர் இயேசுவுக்கு ஆராதனை
பரிசுத்த ஆவிக்கு ஆராதனை

ஆராதனை என்றும் ஆராதனை
ஆராதனை உமக்கு ஆராதனை

1. ஜீவனுள்ள தேவனுக்கு ஆராதனை
ஜீவன் தந்த நேசருக்கு ஆராதனை
ஜீவனின் அதிபதிக்கு ஆராதனை
ஜீவன் உள்ள நாளெல்லாம் ஆராதனை

2. இரத்தம் சிந்தி மீட்டவருக்கு ஆராதனை
இரட்சிப்பை தந்தவர்க்கு ஆராதனை
இதயத்திலே வாழ்பவர்க்கு ஆராதனை
இம்மானுவேலர்க்கு ஆராதனை

3. கல்வாரி நேசருக்கு ஆராதனை
கரை போக்கும் தூயவர்க்கு ஆராதனை
கர்த்தாதி கர்த்தருக்கு ஆராதனை
கண்மணி போல் காப்பவர்க்கு ஆராதனை

## பாடல் - 2568

**போற்றி துதிக்கின்றோம் உம்மை**
புகழ்ந்து மகிழ்கின்றோம்

1. அன்பிற்கு இலக்கணம் நீரே
அன்பெனும் நற்குணம் நீரே

2. வாழ்வு தரும் வள்ளல் நீரே
வழி நடத்தும் தெய்வம் நீரே

3. உலகத்தின் ஒளியும் நீரே
உத்தமர் துணையும் நீரே

4. கிருபையின் வாசலும் நீரே
கருணையின் தெய்வமும் நீங்கள்

5. வார்த்தையும் வெளிச்சமும் நீரே
உடலும் உயிரும் நீரே

6. மகிமையும் மாட்சிமை நீரே
மகத்துவ தேவனும் நீரே

7. உயர்ந்தவர் சிறந்தவர் நீரே
உயிருள்ள தெய்வமும் நீரே

## பாடல் - 2569

**பெரியவர் பெரியவர் பெரியவர்**
இயேசு பெரியவர் இயேசு பெரியவர் இயேசு பெரியவர்
யோனாவிலும் பெரியவர்
சாலமோனிலும் பெரியவர்
ஆலயத்திலும் பெரியவர்
என்னிலிருப்பவர் பெரியவர்

1. கானாவூரினிலே கல்யாண வீட்டினிலே
தண்ணீரை ரசமாக மாற்றிய தேவன்

2. நாலாம் ஜாமத்திலே நடுக்கடல் மீகினிலே
நடந்து வந்து சீஷரையே தேற்றின தேவன்

3. நாயீன் ஊரினிலே மரித்த வாலியனையே
எழுந்திரு என்று சொல்லி எழுப்பிய தேவன்

4. கல்லறையில் வைக்கப்பட்ட லாசரு என்ற வாலிபனை
நான்கு நாள்சென்ற பின்பு உயிர்ப்பித்த தேவன்

## பாடல் - 2570

**ஊற்றிடும் தேவா உம் அன்பின் ஆவியை**
மாற்றிடும் தேவா என் மனதின் எண்ணத்தை
தேற்றிடும் ஐயா எந்தன் உள்ளத்தை
மாற்றிடும் ஐயா என் இதய காயத்தை

1. தூய ஆவி என்னிலே தங்க வேண்டுமே
தூற்றித் திரியும் மாந்தரை
நேசிக்க வேண்டுமே
தேவ ஆவி என்னிலே தங்க வேண்டுமே
தேவனோடு அனுதினமும்
வாழ வேண்டுமே

2. பரிசுத்த ஆவி என்னில் தங்க வேண்டுமே
பெலவீனம் யாவும் என்னில்
நீங்க வேண்டுமே
கிருபையின் ஆவி என்னில் தங்க வேண்டுமே
கிறிஸ்துவின் சேனையாய் நிற்க வேண்டுமே

3. சத்திய ஆவி என்னில் தங்க வேண்டுமே
நித்திய ஜீவனிலே நிலைக்க வேண்டுமே
நல்ல ஆவி என்னிலே தங்க வேண்டுமே
நன்மை கிருபை நாளெல்லாம்
தொடர வேண்டுமே

## பாடல் - 2571

**வாரும் தூய ஆவியே**
தாரும் உமது கிருபையை
வல்லமையோடும் வரங்களோடும்
வந்து எம்மிலே தங்கி விடும்

1. ஒவ்வொரு நாளும் உமது மகளாய்
உத்தமனாக வாழ்ந்திடணும்

2. நீங்களே உலகின் வெளிச்சமென்றீர்
வெளிச்சமாக வாழ்ந்திடணும்

3. நீங்களே தேவ ஆலயம் என்றீர்
பரிசுத்தமாக வாழ்ந்திடணும்



அட்டவணை

4. நீங்களே எனக்கு சாட்சிகளென்றீர்
சாட்சியாக வாழ்ந்திடனும்

5. மலைமேல் இருக்கின்ற பட்டணம் என்றீர்
மறைந்திருக்காமல் வெளிப்படனும்

6. கனி தரும் மரமாய் கனிகள் தந்து
கர்த்தரின் நாமம் உயர்த்திடனும்

## பாடல் - 2572

**பரிசுத்த ஆவியை எங்கள் மீதிலே**
பரிசுத்த தேவனே பொழிந்தருளும்

1. இரண்டு மூன்று பேர் கூடும் இடத்தில்
இருக்கிறேன் என்று நீர் உரைத்தீர்
இயேசுவின் இன்ப வாக்கை நம்பி
இருக்கிறேன் இந்த வேளையிலே

2. அசுத்த உதடுள்ள மனிதன் நான்
அசுத்த ஜனம் நடுவில் வாசம் செய்பவன்
அக்கினி தழலினால் எந்தன் நாவை
அக்கிரமம் நீங்க சுத்திகரியும்

3. அன்னிய பாஷையில் நான் பேசி
ஆவியில் மகிழ்ந்திட கிருபை செய்யும்
ஆவியிலே மறுருபமாகி
ஆனந்தமாய் பறந்திட உதவி செய்யும்

## பாடல் - 2573

**நீங்க இல்லாமல் எதுவும் செய்ய முடியாது**
உங்க துணையில்லாமல்
என்னால் வாழ முடியாது இயேசப்பா

என் தலைவரும் நீரே என் முதல்வரும் நீரே
என் தேவனும் நீரே என் ஜீவனும் நீரே

1. பாசம் கொண்டவன் பகைவனாகிறான்
நேசமுள்ளவன் நெருப்பாய் மாறினான்
சத்தியத்தாலே நான் சத்துருவானேன்
நித்தியரே எப்போதும் என்னோடிரும்

2. சின்ன படகிலே பெரிய ஆண்டவர்
நித்திரையாக இருப்பதும் ஏனோ-இந்த
விழித்தெழுந்திடும் சர்வ வல்லவரே
வார்த்தையினால் அடங்கிடும் காற்றும் கடலுமே

3. கர்த்தர் தந்த தீபம் எந்தன் ஆவியே
காலமெல்லாம் உமக்காய் ஒளி கொடுப்பேன்
பிழைப்பதும் அசைவதும் உம்மில் தானைய்யா
உமக்காகத் தானே வாழ்கின்றேனய்யா

**பாடல் - 2574**

**பயப்படாதிருங்கள்**
தான் பரன் இயேசு பிறந்து விட்டார்
கவலைப்படாதிருங்கள்
கர்த்தர் இயேசு பிறந்து விட்டார்

1. முன்னணை மீதினில் விண் ஒளி வீசிட
இயேசு பிறந்தாரே
மன்னுயிர் பாவங்கள் சாபங்கள் நீக்கிட
இயேசு பிறந்தாரே

உதித்தார் உதித்தார் கெம்பீரமாய் -நாம்
மகிழ்வோம் மகிழ்வோம் சந்தோஷமாய்

2. கன்னிமரியின் மடியினில்
பாலன் இயேசு பிறந்தாரே
எண்ணில்லா தூதர்கள் இன்னிசை
பாடி இயேசு பிறந்தாரே

3. மந்தையின் மேய்ப்பர்கள் ஆனந்தம்
கொண்டிட இயேசு பிறந்தாரே
விண்ணையும் மண்ணையும் ஒன்றாக
இணைத்திட இயேசு பிறந்தாரே

4. அதிசய தேவன் அற்புத ராஜன்
இயேசு பிறந்தாரே
காரிருள் நீக்கிட பேரொளியாகவே
இயேசு பிறந்தாரே

## பாடல் - 2575

**பெலத்தினாலுமல்ல பராக்கிரமுமல்ல**
ஆவியினால் என்றும் ஜெயம் வந்திடும்

1. குதிரை என்பது யுத்த நாளுக்காய்
ஆயத்தமாக்கப்பட்டிருந்தாலும்
ஜெயத்தை தருபவர் இயேசுவல்லவா
அவரின் பாதத்தை முத்தம் செய்யுங்கள்

2. கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும்
நம்பும் திசையிலும் ஜெயம் வராது
ஜெயம் தருபவர் இயேசு வல்லவர்
அவரின் பாதையில் என்றும் நடப்போம்

3. மனுஷன் முகத்தை பார்த்து நடந்தால்
முடிவிலே உன்னை வெட்கப்படுத்தும்
ஜெயத்தை தருபவர் இயேசு வல்லவா
அவரின் ஒளியிலே என்றும் வாழ்வோம்

## பாடல் - 2576

**கடிகார முட்கள் நகருவது போல**
கர்த்தரின் கரத்தில் உன் காலங்களே
கண் உறங்காமல் காத்திடும் தேவன்
கடைசி வரை உன்னை கைவிடாரே

1. ஆயிரம் வருடங்களே
ஆண்டவர் பார்வையில் ஒருநாளே
ஒரு நாள் மனிதன் வாழ்ந்ததில்லை
வானமும் பூமியும் நிலைப்பதில்லை

2. பல நாள் கனவுகளே
சில நாள் தங்கிடும் நினைவுகளே
மின்னல்கள் தோன்றி மறைவது போல்
மனிதனின் வாழ்வு இங்கு நிலைப்பதில்லை

3. நிலையில்லா உலகத்திலே
நிரந்தர வாழ்வும் இங்கு இல்லை
வரப்போகும் இயேசு ராஜனை
வரவேற்க்க சபையினில் காத்திருப்போம்

**பாடல் - 2577**

**உலகமாம் பெருங்கடலில்**
உல்லாசமாய் என் படகு
இயேசு நாதருடன் இன்பமாக ஓடுது பார்

1. எத்தனை முறை புயல் வந்தது
அத்தனை முறையும் இருள் சூழ்ந்தது
கர்த்தர் இயேசு இருப்பதால்
கவிழ்ந்திடாமல் ஓடுது

2. சோதனைகள் பலமாய் வந்தது
வேதனையால் மனமும் தளர்ந்தது
போதனையால் தேற்றினார்
சாதனையாய் ஓடுது

3. துன்பமான வாழ்க்கை தனிலே
இன்பமாக செல்லுது பார்
மன்னன் இயேசு இருப்பதால்
மயங்கிடாமல் ஓடுது

4. அலைகள் வந்து மூழ்கப் பார்த்தது
மலை போல உயர்ந்து நின்றது
ஜெபத்தோடு சென்றதால்
ஜெயமாய் இன்னும் ஓடுது

**பாடல் - 2578**

**பையூரிலிருந்து பொய்யூரு வந்து**
குடியிருக்கும் மானிடரே
மெய்யூரு உண்டு தெரியுமா
அது போக வழி நீ அறிவாயா
இயேசு இயேசு இயேசு அந்த மெய்யூருக்கு வழி இயேசு

1. காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா
நாசி காற்று நின்று போனா
ஓசி காற்றை எங்கே அடைப்பாய்

2. மாடி வீடும் மறைந்திடுமே
கோடி பணமும் ஓடிடுமே
கூடு விட்டு ஆவி போனால்
கூட ஒன்றும் வந்திடாதே

3. இன்று உந்தன் கையில் நாடு
நாளை உந்தன் கையில் திரு ஓடு
எடுத்து சொன்னால் வெட்கக் கேடு
இயேசுவை நோக்கி ஓடு

4. உந்தன் பார்வையை நேராக்கு
தன் உந்தன் பாதையை சீராக்கும்
நித்திய ஜீவனை சொந்தமாக்கு
இயேசுவை உந்தன் நேசராக்கு

5. இளவயதும் வாலிபமும்
மாயை மாயை எல்லாம் மாயை
மரணம் உன்னை நெருங்கும் போது
உந்தன் வேஷங்கள் வெளிப்படுமே

## பாடல் - 2579

**என் தகப்பனும் தாயும் கைவிட்டாலும்**
கர்த்தர் என்னை சேர்த்துக் கொள்வார்

1. கர்த்தர் என் வெளிச்சமும் இரட்சிப்புமானதால்
யாருக்கு பயப்படுவேன்
கர்த்தர் என் ஜீவனின் பெலனுமானதால்
யாருக்கு நான் அஞ்சுவேன்

2. கூடார மறைவினில் என்னை மறைத்து
தீங்குக்கு காத்திடுவார்
கன்மலையின் மேல் என்னை உயர்த்தி
கண்மணி போல் காப்பார்

3. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்
அதையே நாடிடுவேன்
கர்த்தரின் மகிமையை பார்க்கும் படியாய்
ஆலயத்தில் தங்குவேன்

## பாடல் - 2580

**இராஜாவே இயேசு இராஜாவே**
உந்தன் நாமம் பாட வந்தேன் இராஜாவே
உம் புகழை சொல்ல வந்தேன் இராஜாவே



அட்டவணை

1. சாரோன் ரோஜா நீர் பள்ளத்தாக்கின் லீலி நீர்
வெண்மையும் சிவப்புமாய் என்னை கவர்ந்தவர்

2. பிரியமே ரூபவதி உன்னிலே பழுதில்லை
நேசரின் சத்தம் கேட்டு ஓடி வந்திடுவேன்

3. காட்டு மரங்களிலே கிச்சிலி மரம் நீரே
நிழலிலே வாஞ்சையாய் அமர்ந்தது பாடுவேன்

4. வெள்ளை போள செண்டு நீர்
மருதோன்றி பூங்கொத்து நீர்
பதினாயிரங்களில் என்றும் சிறந்தவர்

5. வாடையே எழும்பிடு தென்றலே வீசிடு
தோட்டத்திற்க்குள் ராஜா வந்து கனிகள் புசிப்பாரே

## பாடல் - 2581

**எனக்குள்ளே இருக்கின்ற இயேசு**
அவர் என்றும் பெரியவரே

1. கவலைகள் கண்ணீர் வந்தாலும்
கலங்கிடவே மாட்டேன்

காரணம் எனக்குள்ளே இருக்கின்ற
இயேசு அவர் என்றும் பெரியவரே

2. பாடுகள் பலவிதம் வந்தாலும்
பயந்திடவே மாட்டேன்

3. நிந்தனை போராட்டம் வந்தாலும்
நீங்கிடவே மாட்டேன்

4. காற்றும் புயலும் வீசினாலும்
கவிழ்ந்திடவே மாட்டேன்

5. சோதனை வேதனை வந்தாலும்
சோர்ந்திடவே மாட்டேன்

6. வருத்தங்கள் வியாதிகள் வந்தாலும்
வருந்திடவே மாட்டேன்

7. துன்பங்கள் துயரங்கள் வந்தாலும்
துவண்டிடவே மாட்டேன்

## பாடல் - 2582

**ஆளுகை செய்வேன் என் இயேசுவோடு**
ஆச்சரியமான வலது பக்கத்தில்
உன்னதத்தில் உயர்ஸ்தலதில்
அமர்ந்திருப்பேன் என் நேசருடனே
ஜெயங் கொண்டு வல்லமையாய்
ஆளுகை செய்வேன்

1. துரைத்தனங்கள் அதிகாரங்கள்
எந்தனின் கால்களில் கீழே
அந்தகார வல்லமைகள் முறியடிப் பேன்
என்றும் ஜெயித்திடுவேன்

2. கல்வாரி வெற்றி செயல்படுத்தி
சாத்தானை தோற்க்கடிப் பேன்
சர்ப்பங்களை சிங்கங்களை மிதித்திடுவேன்
இயேசுவின் நாமத்தினால் - என்

3. சேனை அதிபன் முன் செல்கிறார்
ஜெயமாக நடக்கிடுவார்
விசுவாச கேடகத்தை பிடித்து மே நாம்
முன் நோக்கியே முன் செல்வேன்

4. இவ்வுலகத்தின் பாடுகளெல்லாம்
சீக்கிரம் மறைந்திடும்
கவலையில்லை கண்ணீருமில்லையே
நேசரின் முகம் காணுவேன்

## பாடல் - 2583

**வானாதி வானம் கொள்ளா**
கர்த்தாதி கர்த்தர் நீரே

தேவாதி தேவன் அல்லோ என் இதயத்தின் ராஜா

அரசாளும் அரசாளும் அகிலமெல்லாம்
அதிகாரம் உள்ளவரே

1. எழுந்து வாரும் எம் மக்கியிலே
அள்ளித் தாரும் கிருபைகளை
மன்னாதி மன்னர் நீரே
பணிகின்றோம் பாதத்தில்



அட்டவணை

2. ஆயிரம் ஆயிரம் பேர்களிலிலே
அழகில் சிறந்தவர் நீர் மாத்திரமே
உள்ளத்தின் நேசமெல்லாம்
உமக்கே என்றென்றுமே

4. சேனை சேனை தூதரோடு
வாரும் வாரும் என் நேசரே
மகிமையின் ராஜாவாக
நீர் வரும் எதிர் நோக்குவோம்

## பாடல் - 2584

**எழுந்தருளும் என் தேவா எழுந்தருளும்**
எனக்காக எழுந்தருளும் என் ரட்சகா
இந்த வேளையிலே

1. நீரல்லால் எனக்கு யாருமில்லையே
யுத்தம் செய்ய எழுந்தருளும்
சத்துருக்கள் சிதறுண்டோட
எழுந்தருளும் என் இயேசுவே

2. சிங்க கெபியில் தானியேல் போல
நிற்கின்றேனே எழுந்தருளும்
சிங்கங்கள் தாக்கிடாமல்
வாய்களை கட்டிட எழுந்தருளும்

3. தேவ சமூகம் முன் செல்லவே
அக்கினி ஸ்தம்பமாய் எழுந்தருளும்
கானானின் சுதந்திரத்தை பெற்றிடவே
எழுந்தருளும்

4. இஸ்ரவேலின் கெம்பீரமே நீர்
வெற்றி தந்திட எழுந்தருளும்
உயிர்த்தெழுந்த வல்லமையோடும்
எழுந்தருளும் எழுந்தருளும்

## பாடல் - 2585

**கரம் பிடித்து வழி நடத்தும்**
கர்த்தரை நோக்கிப் பார்
வருடங்களை நன்மையினால் முடிசூட்டி
மகிழப் பண்ணுவார்

அல்லேலூயா எழும்பு எழும்பு சீயோனே
உன் ஒளி வந்தது
மகிமை உதித்தது எழும்பி பிரகாசி

1. தனிமையின் இழப்புகளோ
உன் வேதனை அவர் அறிவார்
துரோகங்களே, ஏமாற்றங்களே
இயேசு உன்னை தேற்றுவார்

2. தேவைகளோ, கடன் பாரமே
யெகோவாயீரே உண்டு
பெலவீனமோ, சோர்கவுளே
இயேசுவின் தழும்புகள் உண்டு

**பாடல் - 2586**

**ஆபிரகாம் தேவனே ஸ்தோத்திரம்**
ஈசாக்கின் தேவனே ஸ்தோத்திரம்
இஸ்ரவேலின் தேவனே ஸ்தோத்திரம்
சர்வ வல்ல தேவனே ஸ்தோத்திரம்

1. முற் பிதாக்களை நீர் நடத்திச் சென்றீரே
எங்களையும் கூட நீர் நடத்திச் செல்லுமே
எங்கள் ஓட்டம் வெற்றியோடு ஓடி முடிக்கவே
கிருபை தாருமே உந்தன் அருளை தாருமே

மகிமை மகிமை ஓ தேவனே
மகிமை மகிமை இயேசு ராஜனே

2. பொன் முகத்தின் சாயலை கண்டு களிக்க
ஏங்குகின்றேன் உம் சமூகம் தாருமே
நேசர் மார்பினில் உம் பேரழகினை
ரசித்து ருசித்து மகிழ்வேன் நித்ய நித்யமாய்

3. விண்ணின் தூதரோடு நான் மகிழ்ந்திருக்க
மண்ணில் வந்து நீர் ஜீவன் தந்திட்டீரல்லோ
ஜீவ புத்தத்திலே எந்தன் பேர் எழுதியே
பரலோக பாக்கியம் தந்திட்டீரல்லோ

**பாடல் - 2587**

**எந்தன் ஆத்துமாவே கர்த்தரை துதி**
கர்த்தரையே துதி
எந்தன் முழு உள்ளமே அவர் நாமத்தையே
என்றென்றும் ஸ்தோத்தரி

1. தூதரிலும் மேலாக உயர்த்தினீரே
உம் நன்மையை நினைத்து
நான் என்றும் துதிப்பேன்
ஆயிரம் நாவுகள் போதாதோ

2. நாட்கள் நகர்ந்திட்டாலும்
காலம் கடந்திட்டாலும்
கர்த்தரே நீர் என்றும் மாறாதவர்
உம் கிருபையை எண்ணி
நான் என்றும் துதிப்பேனே

3. அன்பின் கரத்தாலே தூக்கி எடுத்தீரே
கன்மலை மேல் என்னை நிறுத்தினீரே
உம்மை துதித்திடும் புது பாடல் தந்தீரே
ஆயிரம் நாவுகள் போதாதே

## பாடல் - 2588

**உம்மாலே தேவனே உம்மாலே எனக்கு**
விடுதலை எனக்கு நீர் போதும்

ஆமென் அல்லேலூயாஸ்தோத்திரம் மகிமை
உம்மில் மகிழ்ந்து களிகூறுவேன்

1. குருடனுக்கு உம்மாலே பார்வை
செவிடருக்கு உம்மாலே செவிகள்
மடவனை துள்ளப் பண்ணுவது
உமது அற்புதம் அல்லவோ

2. லாசருக்கு உம்மாலே ஜீவன்
தாசருக்கு உம்மாலே வரங்கள்
எனக்கோ நேசத்தின் உச்சிதம்
ருசித்து புசித்து மகிழ்வேன்

3. சொப்பனம் தரிசனம் தாருமே
வேதத்தின் மூலம் பேசுமே
ஆனாலும் உம் முகம் கண்டிடவே
ஏங்குதே எந்தனின் உள்ளமே

## பாடல் - 2589

**ஜோதிமயமானவராய் கூட வருவார்**
தடை யாவும் நீக்கி புது வழி திறப்பார்
பாதையில் சோர்ந்திடாமல் பெலன் தருவார்
ஜெயத்தோடு நிறைவேற்றுவார்

துள்ளி மகிழ்ந்திடு தேவபிள்ளையே
அள்ளி அணைப்பாரே ஆற்றியே தேற்றிடுவார்

1. துக்கத்தோடு நீ சென்றிட்டாலும்
மகிழ்ச்சி ஊற்று உண்டு
மாராவின் கசப்பை மாற்றிடுவார்
அதிசயம் செய்வார்

2. பசியினால் வாடும் போதும்
பரம மன்னா ஈந்திடுவார்
பாதம் கல்லில் இடறாமல்
ஏந்தி சுமந்திடுவார்

**பாடல் - 2590**

**ஆனந்தம் எனக்கு கிடைத்தது**
என் வாழ்க்கையே மாறியது
என் உள்ளத்தில் இயேசு வந்தார்
என் வாழ்க்கையின் ராஜாவானார்

1. கர்த்தரை ருசித்து அறிந்து கொண்டேன்
எவ்வளவு எவ்வளவு அன்பானவர்
உலகம் முழுவதிலும் கண்டதில்லை
இயேசுவின் அன்பினை போல

2. என் மகிழ்ச்சி கடலின் அலை போன்றது
இயேசுவை என்றும் தொடர்கின்றது
என்னை அழைத்து நன்மை செய்தார்
எந்நாளும் துதித்திடுவேன்

3. கர்த்தரை கெம்பீரமாய் பாடிடுவேன்
கன்மலையை சங்கீர்த்தனம் பண்ணிடுவேன்
எத்தனை மகிழ்ச்சி பெருகிடுதே
இயேசு என் மீட்பரானார்

**பாடல் - 2591**

**ஒரு நாளும் எனை மறவா தெய்வம் நீரே**
நன்றியோடு உம்மை துதிக்கின்றேன்

நன்றி இயேசுவே எந்நாளும் இயேசுவே

1. வருடங்கள் காலங்களாய்
என்னை வழுவாமல் காத்தீரைய்யா
உம் வல்லகரத்தால், நீர் என்னை தாங்கினீர்
உம் சிறகாலே மூடிகாத்திட்டீர்

2. வாக்குதத்தம் தந்தவரே
வாக்கில் உண்மை உள்ளவரே-நன்றி
யார் மறந்தாலும் நான் மறவேனே என்று
வாக்கு எனக்கு அளித்தவரே-நன்றி

3. எதிர் காலம் உம் கையிலே
எந்தன் பயம் யாவம் நீங்கியகே
நீர் என் பக்கத்தில் பயப்படேன்
என் துணையாக இருக்கின்றீரே-நன்றி

## பாடல் - 2592

**என்ன சொல்லி தேவன் அன்பை பாடி**
நன்றியோடு மகிழுவேன்
இன்னல் யாவும் அகன்ற புதுமை
மன்னவர் மகிமையே

பிறந்தார் இயேசு பிறந்தார்
உதித்தார் மனதில் உதித்தார்

1. மனிதன் வாழ உலகில் தேவன்
மகிமை யாவும் துறந்தார்
இனிதாய் நாமும் புதிதாய் வாழ்வு
பெறவே இயேசு பிறந்தார்
கனிவாய் நமது இதயம் தேடி
இதமாய் வந்து அமர்ந்தார்

2. கவலை என்னை அணுகும் போது
கனிவாய் தாமும் வருவார்
புயலாய் துயரம் வாழ்வில் வீசும்
அருகில் நின்று காப்பார்
இமைகள் கண்ணை காக்கும்
தேவன் அது போல் என்னைக் காப்பார்

## பாடல் - 2593

**ஆவியான தேவனே அன்புள்ள தேவனே**
என் மேலே இறங்கிடுமே என்னோடு இறங்கிடுமே

1. உம் இரத்தத்தால் பரிசுத்த இரத்தத்தால்
என்னையும் கழுவிடுமே
உம் ஈசோப்பினால் சுத்திகரித்திடுமே
உம் சாயலாக என்னை மாற்றி விடும்

2. உம் பிள்ளையாய் என்னை மாற்றுமய்யா
மறுரூபமாக என்னை ஆக்குமய்யா
மகிமையில் கொண்டு போய் சேர்க்கும் வரை
மறைவிடத்தில் காத்துக் கொள்ளுமய்யா

3. எப்போது மீண்டும் வருவீர் ஐயா
என்றே இதயம் ஏங்குதய்யா
வருகையின் நாளது வரும் வரையில்
உம் சாயலால் திருப்தியாகி வாழ்வேனய்யா

## பாடல் - 2594

**தாயினும் மேலாக என் மேல்**
அன்பு வைத்தவர் நீரே
ஒரு தந்தையைப் போல என்னையும்
ஆற்றி தேற்றிடுவீரே
என் உயிரோடு கலந்தவரே
உம் உறவிலே மகிழ்ந்திடுவேன்
உம் மேல் அன்பு வைத்தேன்
உமக்காய் எதையும் செய்வேன்

1. கைவிடப்பட்ட நேரங்களெல்லாம்
உம் கரம் பிடிப்பேன்
என்னை காக்கும் கரமதை
நழுவ விடாமல் முத்தம் செய்வேன்

2. எந்தன் கால்கள் இடறும் போது
விழுந்திடமாட்டேன்
உம் தோளின்
மீது ஏறிக் கொண்டு பயணம் செய்வேன்

## பாடல் - 2595

**ஓரு குறைவில்லாமல் காத்து வந்தீரே**
கோடி ஸ்தோத்திரமே
என்னை அதிசயமாக நடத்தி வந்தீரே
ஆயிரம் ஸ்தோத்திரமே
பதினாயிரம் ஸ்தோத்திரமே
ஆருயிரே ஆறுதலே ஆயுளெல்லாம் காப்பவரே



அட்டவணை

1. என் முன்னே சென்றீரே
பயணத்தை காத்தீரே
மகிமையால் மூடிக் கொண்டீரே
எங்கள் குடும்பத்தை காத்து வந்தீரே
ஆருயிரே ஆறுதலே ஆயுளெல்லாம் காப்பவரே

2. வருசத்தை நன்மையினால்
முடி சூட்டி மகிழ்ந்தீரே
பாதைகள் நெய்யாய் பொழிந்தீரே
எல்லா வாதைகள் நீக்கி மகிழ்ந்தீரே
ஆருயிரே ஆறுதலே ஆயுளெல்லாம் காப்பவரே

3. என் விளக்கை ஏற்றினீரே
என் இருளை அகற்றினீரே
எதிரியின் கண்கள் முன்பாக
என் தலையை நிமிரச் செய்தீரே
ஆருயிரே ஆறுதலே ஆயுளெல்லாம் காப்பவரே

4. உள்ளங்கையில் என்னை
வரைந்து வைத்தீரே
நீ என் தாசன் என்றீரே
உன்னை எப்படி மறப்பேன் என்றீரே
ஆருயிரே ஆறுதலே ஆயுளெல்லாம் காப்பவரே

## பாடல் - 2596

**அப்பா இயேசப்பா உங்க கிருபை போதுமப்பா**
கிருபை உங்க கிருபை...

1. ஆடுகள் மேய்த்தவனை அரசனாய் மாற்றினீரே
துதியின் சத்தம் கேட்டு பிரியம் வைத்தீரே

2. யுத்தம் பண்ணாமலே துதிக்க தொடங்கினாரே
எதிரிக்குள் குழப்பம் வந்தது பிரதங்கள் கீழே விழுந்தது

3. சிறைச்சாலை நடுவினிலே ஜெபம் பண்ணி துதித்தாரே
சிறைச்சாலை ஆட்டம் கண்டது கட்டுகள் அறுந்தே போனது

## பாடல் - 2597

**கர்த்தரை துதியுங்கள் அவர் நல்லவர்**
அவர் கிருபை மாறிடாதே

ஆராதனை துதி ஆராதனை
திரியேக தேவனுக்கு மகிமை

1. எத்தனையே நன்மை எனக்கு செய்து
இத்தனை காலமாய் நடத்தி வந்தார்
என்னத்தை ஈடாக செலுத்திடுவேன்
எந்நேரமும் எண்ணி துதித்திடுவேன்

2. சகலமும் நமக்காகப் படைத்திட்டவர்
சர்வத்திற்க்கும் மேலான தேவனவர்
பாவிகளை மீட்க பாரில் வந்தார்
பரலோக தேவனை துதித்திடுவேன்

3. துன்பத்தின் மேல் துன்பம் வந்தாலுமே
தாங்கிடவும் பெலன் எனக்களித்தார்
துன்பத்தில் பிறரையும் தேற்றிடவே
உள்ளத்தில் ஆறுதல் பெருக செய்தார்

4. மனம் போன போக்கில் நடந்து வந்தேன்
மனதிரங்கி என்னையும் கொண்டார்
என் பாவம் எதையும் நினையாதவர்
எண்ணில்லா மேன்மைகள் எனக்கு தந்தார்

## பாடல் - 2598

**நீரே என் ஆசை இயேசுவே**
நீரே என் ஆசை-3
நீரே என் ஆசை இயேசுவே

1. என் உள்ளம் உந்தன் சமூகம் தேடுதே
உம் வாஞ்சை எந்தன் ஏக்கம் ஆனதே

2. என் நெஞ்சம் உந்தன் அன்பால் பொங்குதே
எந்தன் நேசம் உந்தன் மீது பெருகுதே

3. என் ஆவி உம்மில் மகிழ்ந்து பாடுதே
உம் சமூகம் எண்ணி எண்ணி மகிழுதே

## பாடல் - 2599

**சொந்தம் என்று சொல்லிக் கொள்ள**
உம்மைவிட யாரும் இல்லை
சொத்து என்று அள்ளிக் கொள்ள
உம்மை விட ஏதும் இல்லை

இயேசுவே இயேசுவே எல்லாம் இயேசுவே

1. உம் தழும்புகளால்நான் சுகமானேன்
உம் வார்த்தையினால் நான் பெலனானேன்
நான் பெலனானேன் நான் பெலனானேன்

2. உம் கிருபையினால் நான் பிழைத்துக் கொண்டேன்
உம் பாசத்தினால் நான் திகைத்துப் போனேன்
நான் திகைத்துப் போனேன் நான் திகைத்துப் போனேன்

3. உம் ஆவியினால் நான் பிறந்து விட்டேன்
உம் ஊழியத்திற்காய் நான் உயிர் வாழ்வேன்
நான் உயிர் வாழ்வேன் நான் உயிர் வாழ்வேன்

## பாடல் - 2600

**ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்**
யாக்கோபின் தேவன்
உன்னை ஆசீர்வதிப்பார்

தகதிமி தகஜனு தகதிமி தகஜனு
தகதிமி தகஜனு தகதிமி தகஜனும்

1. கர்த்தருக்கு பயந்து வழிகளில்
நடக்கின்ற நீ பாக்கியவான் பாக்கியவான்
உழைப்பின் பலனை நீ
உண்பது நிச்சயமே நிச்சயமே

2. நன்மையும் பாக்கியமும்
உன் வாழ்வில் நீ காண்பாய்
செல்வமும் ஆஸ்தியும் தேடிவரும் தினமும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
செழிப்பை நீ காண்பாய் நீ காண்பாய்

3. இல்லத்தில் உன் மனைவி
கனி தரும் திராட்சை செடி
பிள்ளைகள் ஒலிவ மரக்கன்றுகள்
போல் வளர்வார்கள்
பிள்ளைகளின் பிள்ளைகளை
காண்பது நிச்சயம் நிச்சயமே

## பாடல் - 2601

**வாக்களித்த அனைத்தையும் (விரைவில்)**
என் வாழ்வில் நிறைவேற்றுவீர் – தகப்பன்

என் தேவையெல்லாம் நீர்தானையா
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
இயேசய்யா இயேசய்யா

1. எதிர்கால ஏக்கமெல்லாம்
உம்மிடம் ஒப்படைத்தேன் நான்
என் சார்பில் செயலாற்றுகிறீர்
எல்லாமே செய்து முடிப்பீர் – என் தேவை

2. பட்ட பகல் போல என் நீதியை
விளங்க செய்தீர்
நோக்கி அமர்ந்திருப்பேன்
உமக்காய் காத்திருப்பேன்-உம்மை

3. பாதத்தில் வைத்து விட்டேன்
என் பாரங்கள் கவலைகள் – உம்
தள்ளாட விடமாட்டீர்
தாங்கியே நடத்தி செல்வீர்-என்னை

4. கோபங்கள் எரிச்சல்கள்
அகற்றி எரிந்து விட்டேன்
நம்பியுள்ளேன் உம்மையே
நன்மைகள் செய்திடுவேன்

## பாடல் - 2602

**கர்த்தர் என் பெலனானார்**
அவரே என் கீதமானார்
மகிழ்ச்சி குரல் வெற்றியின் தொனி
எனது (நமது) கூடாரத்தில்
அல்லேலூயா (4)
அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு

1. கர்த்தர் என் பட்சத்தில்
இருப்பதால் பயப்படேன் பயம்
மனிதன் எனக்கு எதிராய்
என்ன செய்ய முடியும்

2. இந்த நாள் நல்ல நாள்
யேகாவா தந்த நாள்
களிகூர்ந்து மகிழ்ந்திடு
காரியம் வாய்க்கச் செய்வார் – நீ

3. ஈக்கள் (தேனீக்கள்) போல பாடுகள்
எனை சூழ்ந்து வந்தாலும்
நெருப்பிலிட்ட முட்கள் போல்
சாம்பலாய் போகின்றன

4. கர்த்தரின் வலக்கரம்
மிகவும் உயர்ந்துள்ளது
பராக்கிரமம் செய்கின்றார்
வெற்றி தருகின்றார்

5. விழும்படி தள்ளினார்கள்
என்னை வீழ்த்த முயன்றார்கள்
கர்த்தரோ தாங்கினார்
கரம் நீட்டி உதவினார்

**பாடல் - 2603**

**நெஞ்சே நீ ஏன் கலங்குகிறாய்**
தேவனை நோக்கி அமர்ந்திரு
நீ எதிர்பார்க்கும் நன்மைகள்
விரைவில் வருமே வந்திடுமே

1. உனக்குள் வாழ்பவர் உருவாக்கி மகிழ்பவர்
உன்னோடு பேசுகிறார்
பயப்படாதே மீட்டுக் கொண்டேன்
பெயர் சொல்லி நான் அழைத்தேன்
எனக்கே நீ சொந்தம்

2. எனது பார்வையில்
விலையேறப் பெற்றவன் நீ
மதிப்பிற்குரியவன் நீ
பேரன்பினால் இழுத்துக் கொண்டேன்
அன்பிற்கு எல்லை இல்லை
கிருபை தொடர்கின்றது

## பாடல் - 2604

**உன் ஜீவனுக்கீடாய் மக்களினங்கள்**
ஜனங்கள் தந்திடுவேன்
கிழக்கு மேற்கு திசைகளில் இருந்து
திரள் கூட்டம் வந்திடுமே
நீ எதிர்பார்க்கும் எழுப்புதல் தேசத்தில்
வருமே வந்திடுமே -நெஞ்சே

1. வடபுறம் நோக்கி விட்டு விடு
என்று கட்டளையிடு மகனே (மகளே)
தென்புறம் நோக்கி கொடு கொடு
என்று ஆணையிடு மகனே (மகளே)

2. என்னை கேளும் நாடுகளை
நான் சொந்தமாக்கிடுவேன்
பூவுலகும் அதன் எல்லைகள் எல்லாம்
உனது உடைமையாகும்

## பாடல் - 2605

**தகப்பனே தந்தையே**
தலை நிமிர செய்பவர் நீரே
கேடகம் நீரே மகிமையும் நீரே
தலை நிமிரச் செய்பவர் நீரே

1. எதிரிகள் எவ்வளவாய் பெருகிவிட்டனர்
எதிர்தெழுவோர் எத்தனை (எத்துனை)
மிகுந்து விட்டனர்

ஆனாலும் சோர்ந்து போவதில்லை
தளர்ந்து விடுவதில்லை
தகப்பன் நீர் தாங்குகிறீர்
என்னை தள்ளாட விடமாட்டீர்

2. படுத்துறங்கி மகிழ்வுடனே
விழித்தெழுவேன் ஏனெனில்
கர்த்தர் என்னை ஆதரிக்கின்றீர்

அச்சமில்லையே கலக்கமில்லையே
வெற்றி தரும் கர்த்தர் என்னோடு
தோல்வி என்றும் எனக்கில்லையே

3. ஒன்றுக்கும் நான் கலங்காமல்
ஸ்தோத்தரிப்பேன்
அறிவுக்கெட்டா பேர் அமைதி பாதுகாக்குதே

நீர் விரும்பத்தக்கவை,
தூய்மையானவை
அவைகளையே தியானம் செய்கிறேன்
தினம் அறிக்கை செய்து ஜெயம் எடுப்பேன்

**பாடல் - 2606**

**நான் மன்னிப்படைய நீர் தண்டிக்கப்பட்டீர்**
மீட்படைய நொறுக்கப்பட்டீர்-2
நீதிமானாக்க பலியானீர்
நித்திய ஜீவன் தந்தீர்

அன்பே பேரன்பே

1. காயப்பட்டீர் நான் சுகமாக
என் நோய்கள் நீங்கியதே
சுமந்து கொண்டீர் என் பாடுகள்
சுகமானேன் தழும்புகளால்

இம்மானுவேல் இயேசு ராஜா
இவ்வளவாய் அன்பு கூர்ந்தீர்

2. சாபமானீர் என் சாபம் நீங்க
மீட்டீரே சாபத்தினின்று
ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்
பெற்றுக் கொண்டேன் சிலுவையினால்

3. ஏழ்மையானீர் சிலுவையிலே
செல்வந்தனாய் நான் வாழ
பிதா என்னை ஏற்றுக் கொள்ள
புறக்கணிக்கப்பட்டீரைய்யா

4. மகிமையில் நான் பங்கு பெற
அவமானம் அடைந்தீரைய்யா
ஜீவன் பெற சாவை ஏற்றீர்
முடிவில்லா வாழ்வு தந்தீர்

## பாடல் - 2607

**எப்பொழுதும் எவ்வேளையும் நான்**
ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
இரவு பகல் எந்நேரமும்
உம் திருநாமம் உயர்த்திடுவேன்

உம்மை புகழ்வேன் பெலத்தோடு
உம்மை பாடுவேன் சுகத்தோடு

1. தடுக்கி விழுந்த யாவரையும்
தாங்கி நடத்தும் தகப்பன் நீரே
தாழ்த்தப்பட்ட அனைவரையும்
தூக்கி நிறுத்தும் துணையாளரே

2. நோக்கி கூப்பிடும் அனைவருக்கும்
தகப்பன் அருகில் இருக்கின்றீர்
அஞ்சி நடப்போர் விருப்பங்களை
பூர்த்தி செய்யும் பரிசுத்தரே

3. உணவுக்காக உயிரினங்கள்
பட்ட உம்மை நோக்கி பார்க்கின்றன
ஏற்ற வேளையில் உணவளித்து
ஏக்கமெல்லாம் நிறைவேற்றுவீர்

4. இரக்கம் கிருபை உடையவரே
கருணை அன்பு நிறைந்தவரே
நன்மை செய்யும் நாயகனே
நாவு அனைத்தும் உம்மை பாடுமே

## பாடல் - 2608
### E-Maj/4/4/T-113

**இரத்தத்தினாலே கழுவப்பட்டேன்**
பரிசுத்தமாக்கப்பட்டேன்
மீட்க்கப்பட்டேன் திரு இரத்தத்தால்
அலகையின் பிடியினின்று

இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஜெயம்

1. படைத்தவரே என்னை ஏற்றுக் கொண்டார்
சிந்தப்பட்ட திரு இரத்தத்தால்
பாவம் செய்யாத ஒரு மகனைப் போல
பார்க்கின்றார் பரமபிதா

2. என் சார்பில் தேவனை நோக்கி
தொடர்ந்து கூப்பிடும் இரத்தம்
அருள் நிறைந்த இறை அரியனையை
துணிவுடன் அணுகி செல்வோம்

3. போர் கவசம் தலை கவசம்
இயேசுவின் திரு இரத்தம்
தீய ஆவியும் அணுகாது
தீங்கிழைக்க முடியாது (எந்த)

4. சுத்திகரிக்கும் தூய்மையாகும்
வாழ்நாளெல்லாம் தினமும்
நன்மையான காரியங்கள்
நமக்காய் பரிந்து பேசும் இரத்தம்

5. சாவுக்கேதுவான கிரியை நீக்கி
பரிசுத்தமாக்கும் இரத்தம்
ஜீவனுள்ள தேவனுக்கு
ஊழியம் செய்வதற்கு

**பாடல் - 2609**
**F-Min/6/8/T-90**

**ஆவலாய் இருக்கின்றார் கருணை காட்ட**
அன்பு கரம் அசைத்து ஓடி வருகின்றார்
நீதி செய்பவர் இரக்கம் உள்ளவர்
மனதுருகும்படி காத்திருப்பவர்

1. சீயோன் மக்களே எருசலேம் குடிகளே
இனி ஒரு போதும் அழமாட்டீர்கள்
கூப்பிடும் குரலுக்கு செவிசாய்க்கின்றார்
கேட்ட உடனேயே பதில் தருகின்றார்-நீதி

2. இன்னல்கள் துன்பங்கள் மிகுந்த உலகிலே
உன்னதர் வாக்களித்த வார்த்தை உண்டு
எண்ணி முடியாத அதிசயங்கள்
கண்களால் காண்பீர்கள் அதி சீக்கிரத்தில்

3. வலப்புறம் இடப்புறம் சாய்ந்து போனாலும்
வழி தவறி நாம் நடந்து சென்றாலும்
இது தான் வழி இதிலே நடந்து செல்லுங்கள்
என்ற சப்தம் நம் இதயத்திலே ஒலிக்கும்-நீதி

**பாடல் - 2610**

**உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல**
உம் தயை என்னைக் கைவிடல
வெறும் கையாய் நான் கடந்து வந்தேன்
இரு பரிவாரங்கள் எனக்கு தந்தீர்

ஏல் ஏலோகேல்! ஏல் ஏலோகேல்!
ஏல் ஏலோகேல்! உம்மை துதிப்பேன்

1. காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காக இறங்கி வந்தீர்
உடன்படிக்கை என்னோடு செய்து
இழந்திட்ட யாவையும் திரும்ப தந்தீர் -ஏல்

2. வேண்டினோர் எல்லாம் விடைபெற்ற போதும்
வேண்டினதெல்லாம் நீர் எனக்கு தந்தீர்
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக எனக்கு தந்தீர் - ஏல்

3. வாடி நின்ற நேரம் தேற்ற யாருமில்லை
தேடி வந்த தெய்வம் கோடி நன்மை தந்தார்
அழுகையின் நாட்களை கடந்து செல்ல
அளவற்ற கிருபைகள் எனக்கு தந்தார் -ஏல்

**பாடல் - 2611**

**என் கை உயர்த்தி உம்மை துதித்திடுவேன்**
சத்தத்தை உயர்த்தி நான் உயர்த்திடுவேன்
துதித்திடுவேன் புகழ்ந்திடுவேன்

உம்மை துதித்திடுவேன்
உம்மை புகழ்ந்திடுவேன்
உம்மை உயர்த்திடுவேன்
உமக்காய் ஓடிடுவேன்

1. Jumping Dancing ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்
அப்பாவின் சமூகத்தில்
எத்தனையோ சந்தோசம்

2. சத்தமாய் துதிப்போம்
துதியால் மதிலை இடிப்போம்
எரிகோ தடைகளை
பாருங்க தூள் தூளாய் தகர்ப்போம்

3. ஒரு வழியாய் வந்த
சாத்தான் கூட்டம்
ஏழு வழியாய்
பிடிக்குதய்யா ஓட்டம்

## பாடல் - 2612

**நீரே போதும் நீரே போதும் நீரே போதும் இயேசுவே**

1. கழுகைப் போல என்னை எழும்பச் செய்வீர்
உயரங்களில் என்னை பறக்கச் செய்வீர்

2. சிங்கத்தின் பிள்ளையாய் என்னை மாற்றினீர்
சாத்தானை ஜெயித்திடும் பெலனளித்தீர்

3. பனையைப் போல என்னை செழிக்கச் செய்வீர்
கேதுரு போல என்னை வளரச் செய்வீர்

## பாடல் - 2613

**அல்லேலூயா துதி உமக்கே**
வாலாக்காமல் என்னை தலையாக்குவீர்
கீழாக்காமல் என்னை மேலாக்குவீர்

1. அரக்கன் கோலியாத்தை
அழிக்கும் வல்லமையை
சிறிய தாவீதுக்குள் வைத்தவரே
ஆடுகள் மேய்த்தவனை
ஜாதிகள் மத்தியிலே உயர்த்தி தூக்கினீரே
மேலே மேலே மேலே

2. கை நீட்டி தூக்கி விட்டீர்
உயரத்தில் என்னை வைத்தீர்
பிள்ளையாய் மாற்றி விட்டீர் நிரந்தரமாய்
தூசியை தட்டி விட்டீர்
சாம்பலை போக்கி விட்டீர்
சிங்காரம் தந்து விட்டீர் நிரந்தரமாய்

### பாடல் - 2614

**பாடிப் புகழ்வேன் நான் ஆடி மகிழ்வேன்**
அவர் செய்த நன்மைகளை
எங்கும் சொல்லுவேன்
அப்பா சமூகத்தில் ஆடிப் பாடி
மகிழ்ந்திருப்பேன்
அவர் இஸ்ரவேலின் வல்லவரே

1. எளியவனை நீர் உயர்த்திடுவீர்
ஆயிரமாக பெருகச் செய்வீர்

பாடுவேன் அல்லேலூயா
துதி அல்லேலூயா
கிருபையை புகழ்ந்திடுவேன்

2. கூப்பிட்ட நேரத்தில் பதில் அளித்து
குறைகள் தீர்க்க வருபவரே

3. பகைக்கும் ஜனங்களின் நடுவினிலே
பந்தியை கொடுத்து உயர்த்திடுவார்

### பாடல் - 2615

**உந்தன் ஆவியை நீர் ஊற்றும் ஊற்றுமே**
ஊற்றிட வேண்டுமே
என்னை நிரப்பிட வேண்டுமே
தந்திட வேண்டுமே உம் அக்கினி

வானம் திறந்து ஊற்றும்
உம் வல்லமையை நீர் ஊற்றும்
என் தேசத்தை நீர் மாற்றும் ஊற்றுமே

1. உந்தன் அக்கினி நீர் ஊற்றும் ஊற்றுமே
என்னை அக்கினி பிழம்பாய் நீர் மாற்றும்

## பாடல் - 2616

**எனக்கு உம்மை விட்டா யாருமில்லப்பா**
உங்க அன்பை விட்டா எதுவுமில்லப்பா

என் ஆசை நீங்கப்பா
என் தேவை நீங்கப்பா
என் சொந்தம் நீங்கப்பா
என் சொத்தும் நீங்கப்பா

1. காண்கிற எல்லாம் ஓர் நாள்
கறைந்து போகுமோ
தொடுகின்ற எல்லாம் ஓர் நாள்
தொலைந்து போகுமே

2. உலகத்தின் செல்வம் எல்லாம்
நிலையாய் நிற்குமோ காணாம்
அழியாத செல்வம் நீரே
போதும் இயேசுவே

## பாடல் - 2617

**சேராபீன் தூதர்கள் போற்றிடும் பரிசுத்தர்**
மகிமையை உடையாக
அணிந்துள்ள மகத்துவர்
பாத்திரர் நீரே பரிசுத்தர் நீரே
ஸ்தோத்திரம் பாடியே புகழ்வேன்

1. தழும்புள்ள கரங்களினாலே
காயங்கள் ஆற்றிடுவீரே கண்ணீரை
துருத்தியில் வைத்து
பதில் தரும் நல்லவரே

2. சுத்தர்கள் தொழுதிடும் நாமம்
பரலோக தகப்பனின் நாமம்
ராஜ்யம் வல்லமை கனமும்
உமக்கே சொந்தமாகும்

## பாடல் - 2618

**ஜெப ஆவி ஊற்றி ஜெபிக்க செய்யும்**
விண்ணப்பத்தின் ஆவி வந்திறங்கட்டும்
ஜெப ஆவி ஊற்றுமே
விண்ணப்பத்தின் ஆவி ஊற்றிடுமே

1. இரவுகள் எல்லாம் ஜெப நேரமாய் மாறனுமே
நான் ஜெபிக்கனுமே

2. எதிர்ப்பின் நடுவிலும் தானியேல் போல
நான் ஜெபிக்கனுமே

3. உணவை தவிர்த்து உபவாசித்து
தேசத்திற்க்காய் நான் கதறனுமே

**பாடல் - 2619**

**ஆதியில் வார்த்தையாய்**
இருந்த எங்கள் இயேசுவே
மனிதனை மீட்க நீரே மண்ணில் வந்தீரே
இருளில் ஒளியாய் வந்த எங்கள் வெளிச்சமே
வழியாய் வந்த இயேசுவே

இயேசுவே இம்மானுவேலே
மனிதனை மீட்க வந்த மகா பிரபுவே

1. பொன்னை கேட்கலை
உன் பொருளையும் கேட்கலை
உன்னை கேட்கிறார்
உள்ளத்தை கேட்கிறார்
மகனாய் உன்னை மாற்றுவார்

2. சாபத்தின் கட்டுகளை
உடைக்க வந்த இயேசுவே
எனக்காய் சாபமானீர் சிலுவையிலே
பாவத்தின் சம்பளத்தை
நான் சுமக்க தேவையில்லை
இயேசு செலுத்தி விட்டாரே

**பாடல் - 2620**

**ஆராதிப்பேன் நான் ஒரு பாடல் பாடி**
ஆட்டம் ஆடி இயேசப்பா புகழ் பாடி
என்னை மறந்தேன்
நான் நம்பும் நம்பிக்கையே
பாடுவேன் அல்லேலூயா
ஓசன்னா என்று சொல்லி ஆராதிப்பேன்



அட்டவணை

நீதியின் தேவனே வெற்றியின் தேவனே
நான் பாடிடும் தேவனே நான் தேடிடும்
தேவனே என் பட்சமாக யுத்தம் செய்தீரே
என் பாடலுக்கு சொந்தக்காரரே
பாடு அல்லேலூயா

1. குப்பையில் கிடந்தேன்
நான் தூசியாக இருந்தேன்
இயேசப்பா கரம் நீட்டி தூக்கி விட்டீரே

2. துக்கத்தில் இருந்த போது
கலக்கத்தோடு நடந்த போது
அப்பா உம் கைகள் என்னை தூக்கி வந்ததே

3. காலங்கள் கடந்து சென்று
நாட்கள் எல்லாம் மாறிட்டாலும்
நீர் செய்த நன்மையை
நான் என்றும் நினைப்பேன் காப்பகம்

## பாடல் - 2621

**நீர் நீரே பெரியவர் நீர் ஒருவர் நீரே பெரியவர்**
மிகவும் மிகவும் பெரியவர் நீர் மிகவும் பெரியவர்

கரங்களை உயர்த்தி துதி பலி செலுத்தி
புது ஒலி எழுப்பி ஆராதிக்கின்றோம்
பாட்டுகள் பாடி கூட்டங்கள் கூடி
உம்மை ஆராதிக்கின்றோம்

இயேசு புயல் காற்றை படைத்தவரே
எங்கள் துதிக்குள் இருப்பவரே
மொத்த உலகத்தை ஆள்பவரே
எங்கள் இதயத்தில் வாழ்பவரே

1. எல்ரோயீ என்னை காண்பவரே
எல்சடாய் சர்வ வல்லவரே
ஏலோகீம் எங்கும் உள்ளவரே
யெகுவா ஆட்டு குட்டியானவரே

2. மலைகளை பெயர்த்து தரையாக்குவீர்
பள்ளத்தை சமமாக்குவீர்
கரடுகள் முரடுகள் நேராக்குவீர்
செம்மையான பாதையில் நடத்துவீர்

## பாடல் - 2622

**அரியணையில் ராஜாவாக**
வாழ்பவரே யெசுவா

உலகை ஆளும் ராஜாவாக வாழ்பவரே யெசுவா
ராஜாதி ராஜா மகா ராஜா எங்கள் யெசுவா

யெசுவா யெசுவா உயிர்த்தெழுந்த யெசுவா
உம்மை போல் தெய்வம்
இந்த உலகில் இல்லை யெசுவா

1. இரண்டாம் ஆதாமாக
சாத்தானுக்கு சவாலாக
சத்துருவை ஜெயிக்க வந்த
யூத ராஜ சிங்கமாக
சிலுவையில் சாத்தானை நீர்
மொத்தமாக அழித்து விட்டீர்
துரைத்தனங்கள் அதிகாரங்கள்
அனைத்தையும் உரிந்து போட்டீர்

2. உயர வானத்திலும் கீழே பூமியிலும்
மேலான ஒரே நாமம்
யெசுவா என்ற ஒரே நாமம்
யெசுவா பெயரை சொன்னால்
பேய்கள் எல்லாம் நடு நடுங்குதய்யா
தீராத வியாதி எல்லாம் நொடி பொழுதில்
மறையுதய்யா

3. மலைகள் செம்மறி போல்
துள்ளி பாய்ந்து துதிக்குதாமே
நாங்களும் பாடுகிறோம்
சந்தோசமாய் ஆடுகிறோம்
பூமி மாத்திரமா யெசுவாவை போற்றுகிறது
சுற்றும் கோள்கள் எல்லாம்
அப்பாவைத் தான் பாடுகிறது

## பாடல் - 2623

**ஆவி தாங்கப்பா அக்கினி தாங்கப்பா**
வல்லமை தாங்கப்பா வரங்கள் தாங்கப்பா
ஜீவன் தாங்கப்பா ஜெயத்தை தாங்கப்பா
பெலனை தாங்கப்பா ஆவியே தூய ஆவியே

1. மேல் வீட்டறையில் வந்த ஆவியே
மேலான அபிஷேகம் தந்த ஆவியே

2. ஆதி சீசர் மேல் இறங்கின ஆவியே
எங்கள் மேல் இப்போ இறங்கியே வரட்டுமே

3. வல்லமையால் நிறைந்து அற்புதங்கள் செய்திட
அபிஷேகத்தில் நிறைந்து அக்கினியாய் செயல்பட

4. அக்கினி நாவுகள் என்னை நிரப்பட்டும்
எந்தன் நாவு உம்மை போற்றட்டும்

5. மரித்தோரை எழுப்பும் பவுல்கள் எழும்பட்டும்
வெளிப்பாடு பேசும் யோவான்கள் எழும்பட்டும்

## பாடல் - 2624

**எல்லாம் நீர் தான் இயேசு ராஜனே-என்**

1. தாகம் நீர்தானே தண்ணீர் நீர் தானே

உம்மை தானே நான் பாடிடுவேன்
உம்மை தானே நான் போற்றுவேன்

2. பசியும் நீர்தானே என் உணவும் நீர்தானே

3. எதிர்காலம் நீர் தானே காத்து
என் எதிர்பார்ப்பும் நீர் தானே

4. உதவி நீர் தானே ஒத்தாசை நீர் தானே

5. தாயும் நீர் தானே என் தந்தையும் நீர் தானே

6. என் ஆசை நீர் தானே என் அழகு நீர் தானே

## பாடல் - 2625

**அலையலையாய் வரும் ஆசீர்வாதம்**
அது தேவனின் ஆசீர்வாதம்
அழைத்தவரில் நீ நிலைத்திருந்தால்
என்றும் மாறாத ஆசீர்வாதம்
ஆசீர்வாதங்கள் –4

1. ஆபிரகாமை தேவன் அழைக்க
அவன் கீழ்ப்படிந்தானே
அசைவில்லாத விசுவாசம்
தன் வாழ்வில் அடைந்தானே
அதுவே அவனது ஆசீர்வாதம்
அது போல் உன்னை ஆசீர்வதிப்பார்

2. வானத்து நட்சத்திரங்கள் போல
ஆசீர்வாதம் அடைந்தான்
கடற்கரை மணலை போல ஜனம்
தரிசனம் கண்டானே
அது போல் உன்னை ஆசீர்வதிப்பார்

3. தேவன் சொன்ன வார்த்தைகளை
விசுவாசத்தால் காத்துக் கொண்டால்
கன்மலை மேல் உள்ள வீடாய்
உன்னை ஆசீர்வதிப்பாரே
கலங்காமல் என்றும் வாழ்வாய்

## பாடல் - 2626

**அல்லேலூயா கர்த்தரின் ஊழியரே**
துதியுங்கள்
ஜனங்களே இன்று முதல்
என்றென்றைக்கும் துதித்திடுவோம்

1. கர்த்தர் எல்லா ஜாதிகளின் மேல் உயர்ந்தவர்
அவரின் மகிமை வானங்களின் மேல் உயர்ந்தது

2. சிறியவனை புழுதியிலிருந்து தூக்குகிறார்
எளியவனை அவர் குப்பையிருந்து உயர்த்துகிறார்

3. கர்த்தர் உனக்கு பெரிய காரியம் செய்வார்
ஆறுதல் தந்து அதிசயமாய் உன்னை நடத்துவார்

## பாடல் - 2627

**இந்த காலையில் ஸ்தோத்திரப் பலிகளை**
உமக்கே தருகிறோம்
நன்றி நன்றி நல்ல தகப்பனே



அட்டவணை

1. ஒன்றல்ல இரண்டல்ல நீர் செய்த நன்மைகள்
ஒன்றல்ல இரண்டல்ல நீர் செய்த அதிசயம்
உள்ளத்தின் ஆழத்தில் உம்மை துதிப்பேன்
ஓய்வில்லாமல் உம்மை பாடுவேன்

2. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்கள்
எண்ணி முடியா அதிசயங்கள் செய்கிறீர்
ஆர்வத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து தொழுதிடுவேன்

3. இரக்கமுள்ளவர் உருக்கமும் உள்ளவரே
நீடிய சாந்தமும் கிருபை உள்ளவர்
தாயைப் போல காக்கின்றீர்
தகப்பன் போல சுமக்கின்றீர்

## பாடல் - 2628

**மரணத்தை ஜெயித்தவர் இயேசு**
பாதாள கட்டுகளை தகர்த்து எரிந்து
உயிரோடு எழுந்தவர் நம் இயேசு
அவர் மரணத்தை ஜெயித்ததினாலே
நாமும் மரணத்தை ஜெயித்திடுவோம்
அவர் விசுவாசம் வைக்கும் நாமும்
மரித்தாலும் பிழைத்திடுவோம்

1. மரணம் நேரிட்டாலும் அதற்கு தப்பும்படி
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் ஜெயம் எடுப்போம்
பரலோக தூதர்களே மண்ணின் மாந்தர்களே
ஜெயத்தை தந்தவரை பாடுங்கள்

2. நமது போராட்டங்கள் மாம்சத்தினாலல்ல
அந்தகார ஆவிகளை
ஜெபத்தினால் ஜெயம் எடுப்போம்
சகலமும் ஜெயித்திட்டவர் உதவி செய்திடுவார்
ஆவியின் பட்டயத்தை எடுப்போம்

3. மரணமானாலும் ஜீவனானாலும்
இயேசுவின் நாமத்தினால்
முற்றிலும் ஜெயம் எடுப்போம்
முடிவு பரியந்தம் நம்மை நடத்துவார்
கிறிஸ்து தான் வாழ்கிறார்

## பாடல் - 2629

**துதி செய்ய தொடங்கியதும்**
அக்கினி இறங்கியதே
அக்கினியை ஊற்றுங்கப்பா

ஊற்றிடுமே உம் அக்கினியை
ஆவியோடு உம்மை ஆராதிக்க

1. எலியாவின் ஜெபத்தை கேட்டவரே
பூமியிலே அக்கினியை அனுப்பி அதிசயம் செய்தவரே
எங்கள் மத்தியில் அக்கினியை அனுப்பிடுமே
எங்கள் நடுவிலும் அதிசயம் செய்திடுமே

2. ஒருமித்து பூரிகையை ஊதிடுவோம்
கர்த்தாவே ஏகமாய் துதித்து கொண்டாடி பாடுகிறோம்
திருச்சபையிலும் உந்தன் மகிமையை
தேவ ஆலயம் முழுவதும் நிரம்பிடுமே

3. எக்காள சத்தமாய் பாடுகிறோம்
எதிரியை முறியடித்து
அக்கினி நாவுகள் இறங்கட்டுமே
இயேசு நாமத்தில் அதிசயங்கள் செய்திடுமே

## பாடல் - 2630

**பூமியின் குடிகளே ஏகமாய்**
கைதட்டி பாடுங்கள் பரலோகம் பூலோகமே
இரட்சகர் இயேசு என்று போற்றுங்கள்

பாடுங்கள் அவரை பாடுங்கள்
இரட்சகர் இயேசு என்று போற்றுங்கள்

1. வாசல்களே உங்கள் தலைகளை
உயர்த்துங்கள் ராஜா வருகிறார்
அநாதி கதவுகளே உயருங்கள்
மகிமையின் ராஜா வருகின்றார்

2. வருகின்றார் நடுவானத்தில்
உயர்த்துங்கள் உங்கள் தலைகளை
ஜாதிகள் கண்டிடுவார் இயேசுவை
ராஜாக்கள் நடுங்கிடிடுவார்

3. ராஜாதி ராஜனாய் வருகின்றார்
தேசங்களை அவர் சந்திக்க
உலகத்தின் முடிவு அவர் கையில்
பணிந்து வணங்கிடுவோம்

## பாடல் - 2631

**நமஸ்காரம் செய்கின்றோம் நாதா**
எல்லா மகிமைக்கும் கனத்துக்கும் பாத்திரரே
நமஸ்காரமே நமஸ்காரமே
நன்றி நிறைந்த உள்ளத்தோடு

1. மாம்சத்தில் வெளிப்பட்ட இரட்சகரே
தங்க நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
என் பாவங்கள் கழுவி
உம் பிள்ளையாய் மாற்றினீரே

2. ஆதியில் வார்த்தையாய் இருந்தவரே
என்றும் ஆதியும் அந்தமும் நீரே
நீர் அல்பா ஓமேகாவும்
இருப்பவராய் இருப்பீர்

3. உலகம் தோன்று முன் பிதாவிடம்
உம் மகிமை பரத்தில் இருந்தது
மகிமை உம் சமூகத்தில்
இப்போதும் இறங்கச் செய்வீர்

## பாடல் - 2632

**என்தன் மேல் கரிசனையாய் இருப்பவரே**
நன்றி ஐயா
என்னை நினைத்தவரே நினைவில் வைத்தவரே
எனதுள்ளே வாழ்கின்றீர் நன்றி ஐயா

1. எதையும் குறித்து கவலை இல்லை
நான் உந்தன் கரத்தில் இருப்பதினால்
தேவைகளை தருபவரே
என் தலையை உயர்த்தினீரே
உம் மார்பில் சாய்ந்து மகிழ்ந்திருப்பேன்

2. சோதனை வேளைகளில் தவிக்கும் போது
சோதனையை சாதனையாய் மாற்றினீரே
உலகத்தை ஜெயித்தரே
சாத்தானை துரத்தினீரே
உயிருள்ள நாள் வரை ஜெயம் தருவீர்

3. வியாதி படுக்கையிலே கூடயிருந்து
பரம வைத்தியராய் குணமாக்கினீர்
வியாதிகளை சிலுவையிலே
சுமந்து தீர்த்தவரே
யேகோவா ராஃபா பரிகாரியே

## பாடல் - 2633

**எல்லா நாமத்திலும் நீர் மேலானவர்**
எல்லா தேவனிலும் பெரியவர்
சர்வ சிருஷ்டிகெல்லாம் நீர் அதிபதி
சர்வலோகத்திற்க்கும் ஆண்டவர்
நீரே தெய்வம் வேறே இல்லை
உம்மை போல யாருமில்லை

1. கர்த்தருக்காய் பொறுமையுடன்
காத்திருப்பேன் அவர் என்னிடமாய்
சாய்ந்து என் குரல் கேட்பார்
நான் தேவனுக்கு புது பாட்டை பாடிடுவேன்
நேசமதை கண்டு அவரை நம்பிடுவேன்
நேசமதை கண்டு அவரை துதித்திடுவேன்

2. சிறுமைபட்ட என் மேல் சிந்தை வைத்தார்
வறுமைகள் மாற்றி என்னை வாழ வைத்தார்
பாவங்கள் அனைத்தையும் கழுவி விட்டார்
மீறுதல்கள் அனைத்தினின்றும் மீட்டெடுத்தார்

3. தேவனே உம் விருப்பம் செய்ய விரும்புகிறேன்
மகிமையை காண தினம் ஏங்குகிறேன்
பரித்த ஸ்தலத்துக்குள்ளே அழைத்து செல்லும்
மகிமையின் சாயலுக்குள் மகிழச் செய்யும்
மகிமையிலே தினம் வாழச் செய்யும்

4. நீதியின் வலக் கரத்தால் தாங்குகிறீர்
நித்தமும் என்னை நீர் நடத்துகின்றீர்
ஏனோக்கை போல தினம் நடந்திடுவேன்
(என்னை) எடுத்துக் கொள்ளும் வரை சஞ்சரிப்பேன்

## பாடல் - 2634

**உம் நேச தனல் எனக்குள் எரிகிறது**
அது ஒரு நாளும் அணையாதைய்யா
அதை யாரும் அணைக்க முடியாதைய்யா

அணையாது அணைக்க முடியாது
உம் நேசம் விட்டு உலகம் பிரிக்காது

1. உம் நிமித்தம் நான் படும் பெலவீனமோ
உம் நிமித்தம் நான் படும் நிந்தனைகளோ
உம் நிமித்தம் நான் படும் நெருக்கங்களோ
உம் நிமித்தம் நான் படும் துன்பங்களோ
இவைகளில் நான் இன்று பிரியப்படுகிறேன்
உம்முடனே நெருங்கி வாழ தினமும் துடிக்கிறேன்

2. உலகத்தினால் வருகின்ற மரணமானாலும்
உலகத்தினால் வருகின்ற ஜீவனானாலும்
உலகத்தினால் வருகின்ற உயர்வானாலும்
உலகத்தினால் வருகின்ற தாழ்வானாலும்
உம் அன்பை விட்டு என்னை பிரிக்காதைய்யா
உம் சமூகம் எதுவும் என்னை மறைக்காதைய்யா

## பாடல் - 2635

**என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்**
மாறிடாதவர் மகிமையானவர்

1. என் நீதி உம் முன்னால் அழுக்கான கந்தை
நான் இது வரை நிற்பது மாறாத கிருபை தான்

2. எனக்காக யாவும் செய்து முடிக்கின்றவர்
என்னோடு இருக்கின்ற ஆவியானவர்

3. வாக்குதத்தம் செய்தவர் நீர் உண்மையுள்ளவர்
வார்த்தைப்படி செய்வதில் சர்வ வல்லவர்

4. சிறியவனை புழுதியிலிருந்து எடுத்தவரே
எளியவனை குப்பையிலிருந்து உயர்த்தினீரே

## பாடல் - 2636

**உங்க சத்தம் கேட்டு சித்தம் செய்ய**
விரும்புகிறேன்
உம் சித்தம் செய்ய
சத்தம் கேட்க விரும்புகிறேன்
நித்தம் நித்தம் சமூகம் வந்து நிற்கிறேன்
நித்திய ஆவியினால் என்னை நிரப்பும்
உங்க சத்தம் கேட்னுகம்
உங்க சித்தம் செய்யனும்
நித்தம் நித்தம் என்னோடு பேசுங்கப்பா

1. பிதாவின் சித்தத்தை நான் செய்து முடிக்க
இயேசுவை போல நானும் வாழ்ந்து ஜெயிக்க
தூயாவியாவனரே என்னை மூடுமே
துணையாக கூட நின்று சொல்லித் தாரும்

2. நீர் சொல்லா இடத்துக்கு போகக் கூடாது
நீர் செய்யாத எதையும் நான் செய்யக் கூடாது
நீர் நில்லா இடத்தில் நான் நிற்கக் கூடாது
நீங்க இல்லாம பூமியிலே வாழக் கூடாது

3. உம்மைவிட்டு முன்னே நானும் ஓடக் கூடாது
உம்மை முன்னே விட்டு
ரொம்ப பின்னே நடக்கக் கூடாது
உம்மோடு அனுதினம் நடந்திடனும்
உம் சிநேகிதனாய் இந்த வாழ்வில்
நான் வாழ்ந்திடனும்

## பாடல் - 2637

**உம் பிரசன்னத்தை வாஞ்சிக்கிறேன்**
பிரசன்னரே வாருமைய்யா
உம் பிரசன்னத்தை ஏங்குகிறேன்
பிரசன்னத்தால் மூடுமைய்யா ஆவியானவரே

1. ஆயிரம் முழமல்ல மூவாயிரம் முழமல்ல
மூழ்கும்படி என்னை அழைத்து செல்லும்
கணுக்கால் அளவல்ல இடுப்பு அளவல்ல
நீந்தும்படி என்னை இழுத்துக் கொள்ளும்

நான் உம்மோடு வாழ விரும்புகிறேன்
உம் சாயலாய் மாற ஏங்குகிறேன்

2. மேல் வீட்டு அறையல்ல மேகங்கள் நடுவல்ல
என்னிடத்தில் நீர் இறங்கி வாரும்
அதிகாலை நேரமல்ல அந்திமாலை பொழுதல்ல
எப்பொழுதும் என்னை சூழ்ந்து கொள்ளும்

3. மறைமுகமாக அல்ல மனுசர் மூலமல்ல
நீரே என்னிடத்தில் பேச வாரும்
சொப்பனம் மூலமல்ல தரிசனம் மூலமல்ல
முக முகமாகமாய் உம்மை காண வேண்டும்

## பாடல் - 2638

**உம் சமூகம் வந்து நிற்கின்றேன்**
உம் சாயலாக மாறாத்தான் ஐயா-இன்று
உந்தன் முன்பாய் வந்து நிற்க்கின்றேன்

1. மண்ணான என்னை நீர் குனிந்து எடுத்தீர்
விண்ணவர் உந்தன் சுவாசம் எனக்குள் வைத்தீர்
உம் சாயலாகத்தானே என்னை உண்டாக்கினீர்
உம் ரூபமாகத்தானே என்னை உருவாக்கினீர்

2. அனைத்தையும் ஆளுகை செய்ய என்னை படைத்தீர்
அன்பாய் ஒரு கனியை தொடாதே என்றீர்
உம் வார்த்தையை மீறி நானும் பாவம் செய்ததாலே
நான் சாபமாகிப் போனேன் தேவ சாயல் இழந்தேன் நானே

3. சாபமான என்னை நீர் பாவத்தில் விடவில்லை
பாவம் போக்க பரலோக தேவன் பூமிக்கு வந்தீர்
என் அக்கிரமத்தை ஏற்றீர் என் மீறுதலை சுமந்தீர்
என்னை சாயலாக மாற்ற உம் ஜீவனையும் தந்தீர்

4. குமாரனின் சாயலுக்கு ஒப்பாயிருக்க
முன் குறித்தீரே என்னை தெரிந்து கொண்டீரே
என்னை நீதிமானாக மாற்றுபவர் நீரே
உம் வருகையில் என்னை சேர்த்துக் கொள்ளுவீரே
உம் மகிமையில் என்னை வைத்துக் கொள்ளுவீரே

## பாடல் - 2639

**என்னை நீர் கழுவி விடும்**
உம் மகிமையால் மூடி விடும்
உம்மோடு நடப்பேன் உம்மோடு இருப்பேன்
உம் சாயலாகிடுவேன்
உம் மகிமையில் சேர்ந்திடுவேன்
கழுவும் என்னை கழுவும்
உம் இரத்தத்தால் என்னை கழுவும்

1. எனது குற்றத்தை நான் அறிந்திருக்கிறேன்
என் பாவம் என் கண் முன் நிற்கின்றது
உம் பரிசுத்தம் விளங்க இதைச் சொல்கிறேன்
உம் நீதி விளங்க இதை அறிக்கை செய்கிறேன்

2. கர்த்தாவே என்னை நீர் அறிந்துள்ளீர்
என் நடக்கை யாவும் தெரிந்துள்ளீர்
வாக்கு வேதனை உண்டாக்கும் வழி வேண்டாம்
நித்திய வழியில் என்னை நித்தமும் நடத்தும்

3. நொறுங்குண்ட ஆவியோடு நிற்கின்றேன்
நறுங்குண்ட இதயத்தோடு நிற்கின்றேன்
நிலை வரமான ஆவி தந்திடுமே
உற்சாகத்தின் ஆவியால் நிரப்பிடுமே

## பாடல் - 2640

**அல்லேலூயா பாடுவேன் ஆனந்தமாய்**
ஆடுவேன் அல்லேலூயா இயேசு ஆண்டவரே

1. தேடி வந்தாரே ஜீவன் தந்தாரே
இயேசு ஆண்டவரே

2. அதிசயமானவர் அற்புதம் செய்பவர்
இயேசு ஆண்டவரே

3. வல்லமைள்ளவர் வரங்களில் மன்னவர்
இயேசு ஆண்டவரே

4. மகிமைப் படுத்துவார் மாந்தர்கள் மத்தியில்
இயேசு ஆண்டவரே

## பாடல் - 2641

**மகிமை மாட்சிமை நிறைந்த தேவனே**
மனதில் நின்றவரே
மன்னாதி மன்னனாய் ராஜாதி ராஜனாய்
என்னில் நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே கிருபை நிறைந்த தேவா

1. அதிகாலை புது கிருபை
அள்ளி தந்த இயேசு தேவா
வாழும் காலமெல்லாம் உந்தன் புகழ் வேண்டும்
ஜீவன் தந்த இயேசுதேவா உந்தன் நாமம் வாழ்க

உம்மை உயர்த்தி நன்றி சொல்லி
வணங்குகிறேன் எந்நாளும்

மகிமை எல்லாம் துதிகள் எல்லாம்
உமக்கு சொந்தமய்யா
மன்னவரே என்னவரே உமக்கு சொந்தமய்யா

2. சோர்ந்துபோன நேரமெல்லாம் பெலன் தந்த தேவா
எந்தன் மறைவிடம் நீரே
உந்தன் மார்பில் சாய்வேன்
உந்தன் பாதம் வந்து நானும்
என்னை மறக்க வேண்டும்

## பாடல் - 2642

**வாரும் ஐயா, போதகரே,**
வந்தெம்மிடம் தங்கியிரும்;
சேரும் ஐயா பந்தியினில்,
சிறியவராம் எங்களிடம்.

2. ஒளிமங்கி இருளாச்சே,
உத்தமனே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம்,
காதலனே, கருணை செய்வாய்.

3. நான் இருப்பேன், நடுவில் என்றாய்,
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க,
தாமதமேன் தயை புரிய
தற்பரனே, நலம் தருவாய்.

4. உன்றன் மனை திருச்சபையை
உலக மெங்கும் வளர்த்திடுவாய்.
பந்தமறப் பரிகரித்தே
பாக்யம் அளித் தாண்டருள்வாய்.

**பாடல் - 2643**

**தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு**
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செயதிடுவார்

**சரணங்கள்**

1. பெலத்தினாலும் அல்லவே
பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே - தேசமே

2. கசந்த மாறா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார் - தேசமே

3. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்து என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அநுதினம் நிறைந்து
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் - தேசமே

**பாடல் - 2644**

**உம்மையே நோக்குகிறோம் இயேசப்பா**
தந்தையே நேசிக்கிறோம் இயேசப்பா
உம்மை நினைத்து என் உள்ளம் துடித்து
ஆராதனை செய்கிறோம்

கரங்கள் அசைத்து கண்ணீர் வடித்து
நன்றி ராஜா ராஜா இயேசு ராஜா

1. தூரமாய் இருந்த என்னை
சமீபமாய் அழைத்து வந்தீர்
உந்தன் திரு ரத்தத்தினால் பாவமற கழுவி விட்டீர்
எந்தன் மேல் அன்பு வைத்தீர்
இராஜாவாய் அமரச் செய்தீர்
எதிரியின் தலை நசுக்கும் அதிகாரம் தந்து விட்டீர்

2. வெறுமையாம் பாத்திரத்தை
ஆவியால் நிரப்பி விட்டீர்
பொங்கி அதில் வழிந்தோட
புது சிருஷ்டி ஆக்கி விட்டீர்
புது எண்ணெய் அபிஷேகம்
இன்று என்னில் பாய்கிறது
தெய்வீக சுகம் கொடுக்க
ஏவி என்னை நடத்துதைய்யா

### பாடல் - 2645

**உயிரே உயிரே உயிரே என் இயேசுவே**
ஆராதனை உமக்கே ஆராதனை

1. உம் முக வெளிச்சத்தில் இருளை கடப்பேன்
மதிலை தாண்டிடுவேன்
உம் மார்பில் சாய்ந்து உம் அன்பு மழையில்
தினமும் நனைந்திடுவேன்
உம்மில் இணைந்திடுவேன்-இயேசுவே
உயிரில் கலந்திடுவேன்

2. என் உடல் உந்தன் ஆலயமன்றோ
ஆவியில் நிறைந்திருப்பேன்
அப்பா பிதாவே என ஆவியில் அழைத்து
ஆனந்தம் கொண்டிருப்பேன்
பாதம் கட்டி அணைப்பேன்-இயேசுவே
பரிசுத்தமாய் தொழுவேன்

### பாடல் - 2646

**துதிப்போம் துதிப்போம் தூயவரே உம்மை துதிப்போம்**
உயர்ந்தவரே உன்னதரே
வாழ்நாளெல்லாம் உம்மை துதிப்போம்
துதிகளை அரியணையாக்கி
நிதம் உமக்கு தருகின்றோம்
ஆராதனைகளை கிரீடங்களாக்கி
உமக்கு சூட்டுகிறோம்

1. வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் இயேசு ராஜாவே
வல்லவரே நல்லவரே இயேசு ராஜாவே
இயேசு ராஜாவே எங்கள் இயேசு ராஜாவே

2. மரித்தவரே மரித்து உயிர்த்தவரே இயேசு ராஜாவே
மரணத்தின் அதிபதியை அழித்தவரே
இயேசு ராஜாவே எங்கள் இயேசுராஜாவே

3. துன்பங்களை சுமந்தவரே இயேசு ராஜாவே
துதிக்க எம்மை வைத்தவரே
இயேசுராஜாவே எங்கள் இயேசுராஜாவே

## பாடல் - 2647

**F-Maj/2/4/T-123**

**தேவாதி தேவன் என் சொந்தமானார்**
என்ன ஆனந்தமே
மன்னாதி மன்னன் என்னைத் தேடி வந்தார்
என்ன பேரின்பமே

சந்தோஷமே என் உள்ளத்தில் நதியாய் பாயுதே
சர்வ வல்லவர் இயேசுவே
என் வாழ்வின் சொந்தமே

2. ஆனந்த கீதம் என் நாவில் தந்தார்
என் இயேசு நல்லவரே
இரட்சண்ய கீதம் எந்நாளும் பாடி
என் மீட்பரைப் போற்றுவேன்

3. கட்டுகளையெல்லாம் உடைத்து விட்டாரே
களிகூர்ந்து பாடிடுவேன்
கிருபைகள் தந்தார் வல்லமை தந்தார்
எந்நாளும் நன்றி சொல்வேன்

4. என் ஆத்ம நேசர் என் இயேசு ராஜா
என்றென்றும் என் சொந்தமே
எல்லையில்லாத தம் அன்பினாலே
என்னையும் நேசித்தாரே

## பாடல் - 2648

**விண்ணிலும் மண்ணிலும்**
உம்மையல்லாமல் ஆசைகள் இல்லைய்யா
தண்ணீரை தேடும் மான்கள் போல
உம்மையே வாஞ்சிக்கிறேன்

ஆசையெல்லாம் நீர்தானே
வாஞ்சையெல்லாம் நீர்தானே

1. உலகத் தோற்ற முன்னே
என்னை தெரிந்தீர் ஐயா
உம் அன்பு ஆச்சர்யமே உம் அன்பு அதிசயமே
உம் அன்பு உயர்ந்ததய்யா

2. பிறந்த நாள் முதலாய் பாதுகாத்தீரய்யா
மறந்திடவில்லை கைவிடவில்லை
நீர் என்னை விட்டு விலகவில்லை

3. வாழும் காலமெல்லாம் இயேசுவே நீர் போதுமே
மண்ணில் வாழ்ந்திடும் நாட்களெல்லாம்
நீர் என்னை மறப்பதில்லை
நான் உம்மை பிரிவதில்லை

**பாடல் - 2649**
**D-Maj/6/8/T-120**

**ஆட்டுக் குட்டியானவர் இரத்தத்தால்**
மீட்கப்பட்டோம்
ஆடிப்பாடி போற்றுவோம்
அல்லேலூயா பாடுவோம்

புது பாடல் பாடுவோம்
தேவனை வாழ்த்திப் பாடுவோம்

1. கவலையில்லையே கண்ணீரில்லையே
துன்பமில்லையே துயரமில்லையே
யூத ராஜசிங்கம் நம் இயேசு ராஜா
வெற்றி மேல் வெற்றி பெற்றாரே

2. பிள்ளைகளாக மாற்றி விட்டாரே
தொல்லைகளெல்லாம் போக்கி விட்டாரே
சந்தோஷம் சந்தோஷம் ஆனந்தம் ஆனந்தம்
இயேசு நம்மை மீட்டுக் கொண்டாரே

3. சகல கோத்திரம் சகல பாஷையும்
போற்றி பாடிடும் இயேசு ராஜனை
அதிகாரம் வல்லமை இயேசுவின் சொந்தமே
ஆளுவார் நித்திய காலமாய்

**பாடல் - 2650**
**C-Min/2/4/T-115**

**நடப்பதெல்லாம் நன்மைக்குத்தான்**
நன்றி சொல்லி பாடிடுவேன்
கலக்கம் இல்லை கவலை இல்லை
களிகூர்ந்து பாடிடுவேன்

யெகோவாயீரே என் வாழ்வின் துணையானார்
எல்லாமே பார்த்துக் கொள்வார்

1. சகலத்தையும் செய்திடுவார்
அதினதின் காலத்திலே
காத்திருப்பேன் என் நேசருக்காய்
புதுபெலன் அடைந்திடுவேன்

2. கர்த்தர் எந்தன் நல்மேய்ப்பரே
குறை ஒன்றும் எனக்கில்லையே
காத்திடுவார் நடத்திடுவார்
அபிஷேகம் செய்திடுவார்

3. எந்நேரமம் எவ்வேளையும்
இயேசுவில் மகிழ்ந்திருப்பேன்
எதுவும் என்னை பிரிப்பதில்லை
என் இயேசுவின் அன்பில் இருந்து

**பாடல் - 2651**
**E-Maj/6/8/T-95**

**உம்மோடு தான் நான் இருப்பேன்**
உம்மையே நான் உயர்த்திடுவேன்
யெகோவாயீரே போதும் நீரே
எந்தன் வாழ்வினிலே

1. இதயம் மகிழுதே நன்றி சொல்லுதே
இயேசய்யா உம் பிரசன்னத்தில்
எப்போதும் என் கண்கள்
உம்மையே பார்க்குமய்யா
அசைக்கப்படுவதில்லை
அமைதி இழப்பதில்லை



அட்டவணை

2. வாழ்வின் வழிதனை எனக்கு காட்டினீர்
வாழ்நாளெல்லாம் துதித்திடுவேன்
ஒன்றையே நான் கேட்டேன்
அதையே நாடிடுவேன்
ஆயுள் முழுவதும் அப்பா நீர் போதுமே

3. தேனிலும் இனிமையே
என் வாழ்வின் மகிமையே
உமது சமூகமோ அருமையே
தனிமை நேரங்களில் துணையாய் வந்தீரே
கனிவுடன் என்னை அணைத்து கொண்டீரே

**பாடல் - 2652**
**G-Min/3/4/T-135**

**இதுவரை உதவின எபினேசரே**
இனிமேலும் நடத்தும் யெகோவாயீரே
நன்றியுடன் பாடிடுவேன்
வாழ்நாளெல்லாம் போற்றிடுவேன்
தலை முறை தலை முறையாய்
எங்கள் அடைக்கலமானவரே

1. செங்கடல் இரண்டாய் பிளந்தவரே
கோட்டைகள் எல்லாம் உடைத்தவரே
மேகமாக முன் சென்றீரே
அக்கினியாய் துணை நின்றீரே

2. மாராவின் தண்ணீரை கடக்க செய்தீர்
மதுரமாம் நீரூற்றை தந்துவிட்டீர்
தாக மெல்லாம் தீர்த்தீரய்யா
ஜீவ தண்ணீர் தந்தீரய்யா

3. வாக்களித்த தேசம் சேர்த்திடுவீர்
வழுவாமல் என்றும் காத்திடுவீர்
பற்றிக் கொள்வோம் உம்மை என்றும்
இயேசுவையே பின் பற்றுவோம்

**பாடல் - 2653**
**F-Min/4/4/T-140**

**தாயானவள் தன் பிள்ளைகளை**
மறந்தாலும் வெறுத்தாலும்
படைத்தவரோ நம்மை என்றும்
மறப்பதில்லை வெறுப்பதில்லை

அவர் அன்பின் தெய்வம்
நம்மை காக்கும் தெய்வம்
நம் இயேசுவே தெய்வம்

1. கருவினிலே தெரிந்து கொண்டார்
இறுதிவரை நம்மை நடத்திடுவார்
கிருபைகளை பொழிந்திடுவார்
மகிமையிலே நம்மை சேர்த்திடுவார்

2. இஸ்ரவேலே பயப்படாதே
கர்த்தரே நம் துணையானார்
வலக்கரத்தை பிடித்துக் கொண்டார்
வழுவாமல் காத்திடுவார்

3. வானங்களே மகிழ்ந்திடுங்கள்
நம் வல்லவரை வாழ்த்திடுங்கள்
திருச்சபையே முழங்கிடுங்கள்
நம் இயேசுவையே போற்றிடுங்கள்

**பாடல் - 2654**
**D-Min/4/4/T-85**

**கர்த்தாவே நீர் எத்தனை எத்தனை**
நல்லவர் என்பதை ருசித்தறிந்தேன்

1. தேடி வந்தீரய்யா தெரிந்து கொண்டீரய்யா
உமது ஊழியம் செய்ய வைத்தீர்
என்ன தகுதி என்னில் கண்டீர்
கிருபை கிருபையே எல்லாம் கிருபையே

2. உந்தன் துதி எந்தன் நாவில் தந்தீரய்யா
எளிமையான என்னை நினைத்தீர்
உமது கரத்தால் ஆசீர்வதித்தீர்

3. எந்தன் பெலவீனத்தில்
உந்தன் பெலன் தந்தீரய்யா
சோர்த்திடாமல் தூக்கி எடுத்தீர்
சாட்சியாக மாற்றி மகிழ்ந்தீர்

4. எத்தனை எத்தனை நன்மைகளோ
எனக்கு செய்தீரய்யா
என்ன சொல்வேன் எப்படி சொல்வேன்
இயேசய்யா உம் அன்பை துதிப்பேன்
நன்றி இயேசய்யா எந்தன் இயேசய்யா

## பாடல் - 2655

**ஜெபமே ஜீவன் பெலன் தந்து என்னை காக்கும்**
ஜெபமே தேவ சித்தம் செய்ய என்னை நடத்தும்

ஜெபமே ஜெயம் ஜெபமே பெலன்
ஜெபமே வழி ஜெபமே அரண்

1. ஜெபம் செய்பவன் பெலனாகிறான்
ஜெபம் செய்பவன் அவர் முகம் காண்கிறான்
காலைதோறும் புது கிருபை பெற்று
கழுகை போல உயரம் செல்வான்

2. தினந்தோறுமே அவர் பாதமே தேடும் மனிதன்
தூய்மை அடைவான்
ஜெப ஆவியும் துதி ஆவியும்
இரு செட்டையாய் தன் தோளில் அணிவான்

3. அவர் சாயலாய் நம்மை மாற்றிடும்
ஜெயம் தந்து நம் உயிர் காத்திடும்
விசுவாசத்தில் தளராமலே கனி ஈந்திட
நம் துணையாகிடும்

## பாடல் - 2656

**குறுகிப் போகவில்லை நீ குன்றிப் போகவில்லை**
சிறுமைப் படுவதில்லை
நீ தாழ்வு அடைவதில்லை
யேகோவா தேவன் உன்னோடு இருக்க
தாழ்ச்சி அடைவதில்லை
நீ தளர்ந்து போகவில்லை

1. கர்த்தரின் கைகள் குறுகவேயில்லை
கர்த்தரின் வாக்கு மாறவேயில்லை
உன்னை அழைத்த உண்மை தேவன்
பெருகச் செய்திடுவார்
உள்ளங்கையில் வரைந்த தேவன்
உன்னை உயர்த்திடுவார்

2. வாக்கு செய்த தேவன்
உன்னை என்றும் மறப்பதே இல்லை
தாயைப் போல தேற்றும் தேவன்
ஏந்தி நடத்திடுவார்
தந்தையைப் போல சுமக்கும் தேவன்
தாங்கி நடத்திடுவார்

3. நேற்றும் இன்றும் மாறா தேவன்
கிருபையால் உன்னை மூடி கொள்ளுவார்
ஆபிரகாமின் தேவன்
உன்னை ஆசீர்வதித்திடுவார்
இஸ்ரவேலின் தேவன் உன்னை என்றும் நடத்திடுவார்

## பாடல் - 2657

**வலது புறம் இடது புறம் பெருகிடுவோம்**
வாலாகாமல் இனி தலையாகுவோம்
யாக்கோப்பின் தேவன் நமக்கிருக்க
கீழாகாமல் என்றும் மேலாகுவோம்
கவலை இல்லை கண்ணீர் இல்லை
துன்பம் இல்லை ஒரு துயரம் இல்லை

1. போகும் இடமெல்லாம் உன்னோடு கூட இருப்பார்
செய்யும் செயல்களிலே செழிப்பை காண செய்வார்
மகிழ்ந்திடுவோம் துதித்திடுவோம்
உயர்த்திடுவோம் சர்வ வல்லவரை

2. உன்னை எதிர்ப்போரின் கண்கள் முன்பாக
பந்தியை ஏற்படுத்தி எண்ணையால் அபிஷேகிக்கார்
உயர்த்திடுவார் இன்னும் உயர்த்திடுவார்
அளவில்லாமல் இன்னும் உயர்த்திடுவார்

3. ஆவியின் வரங்களினால் உன்னை நிரப்பிடுவார்
ஆவியின் கனிகளினால் உன்னை அலங்கரிப்பார்
ஜெபித்திடுவோம் ஜெயித்திடுவோம்
உழைத்திடுவோம் அந்த உன்னதர்கே

# பல்லவிகள்

## பல்லவிகள் - 001

**ஜீவிக்கிறார் இயேசு கிறிஸ்து ஜீவிக்கிறார்**
என்னில் நான் உணர்கிறேன்
அவர் என்னில் வாழ்கிறார்
அவர் உன்னில் வாழ்கிறார்
அவர் நம்மில் வாழ்கிறார்
இதை எங்கும் கூறுவேன்
என்னில் நான் உணர்கிறேனே
ஆமென் ஆமென் ஆமென் ஆமென்
ஆமென் ஆமென் ஆமென் ஆமென்
ஜீவிக்கிறார் என்னில் நான் உணர்கிறேனே

2. தூக்கி எடுத்தீரே நன்றி ராஜா
God's not He still alive – 2
feel Him all over me
it I feel Him in my hnds,
I feel Him in my feet
I feel Him in my Church,
I feel Him in my street
I feel Him in the air,
I feel Him every where
I feel Him all over me
No I God's not dead (2)
He still alive
I feel Him all over

## பல்லவிகள் - 002

**வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை**
இயேசுவின் இரத்தத்தால்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்

There is power power
wonder working power
In the blood of the Lam
There is powe, power wonder
working power
In the precious blood of the Lamp

## பல்லவிகள் - 003

**துதிகளின் பலிகளையே**
கர்த்தரின் வீட்டினிலே
நாம் கொண்டு வருவோம்
ஸ்தோத்திர பலிகளையே
நாம் செலுத்திடுவோம்
துதியின் பலிதனையே

We bring sacrifice of praise
un to the house of the Lord
and we offer into you
the sacrifices of thanks giving
and we offer un to you
the sacrifices of praise

## பல்லவிகள் - 004

**தேவன் நமக்கு தந்தது**
பயமுள்ள ஆவியல்ல – 3
பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவி

## பல்லவிகள் - 005

**கொண்டாடுவோம் – 3**
கர்த்தரின் வெற்றியை – 2
இன்றும் இயேசு
பராக்கிரமம் செய்கிறார் – 3
கொண்டாடுவோம்
கர்த்தரின் வெற்றியை

Celebrate – 3 the victory of the Lord
He has done might things yet again 3
Celebrate the victory of the Lord

## பல்லவிகள் - 006

**களிகூர்ந்து எழும்பித் துதியுங்கள்**
நமது தேவன் நித்திய தேவன்
களிகூர்ந்து எழும்பித் துதியுங்கள்
சதா காலம் நமது தேவன்
அவர் திரு நாமம் புகழ்ப்படத்தக்கது
ஸ்தோத்திரம் துதிகளுக்கு மேலானது
அவர் திரு நாமம் புகழ்ப்படத்தக்கது
உயர்ந்த நாமம் உன்னத நாமம்

## பல்லவிகள் - 007

**கட்டும் கர்த்தாவே நீர் கட்டும் கர்த்தாவே**
அறுந்து போகாத கயிற்றால்
கட்டும் கர்த்தாவே (2)
நீர் கட்டும் கர்த்தாவே
எங்களை அன்பால்
தேவன் ஒருவராம் இராஜனும் ஒருவர்
சரீரம் ஒன்றுதானே பாடுவோம் அதனால்

## பல்லவிகள் - 008

**கர்த்தர் வீட்டில் கூடினோம்**
அவரின் நாமத்தில் ஆராதிப்போம்
ஆராதனை செய்வோம்
ஆண்டவர் இயேசுவை தொழுவோம்
நம்மை நாமே மறப்போம்
அவரை நோக்குவோம் – 2
தூய கையுயர்த்துவோம் – 2
துதி செலுத்துவோம் – 2
எந்தன் நீதி இயேசுவே அவரே பூரணர் – 2

## பல்லவிகள் - 009

**கனத்திற்குரியவர் மகிமைக்குரியவர்**
துதிக்குப் பாத்திரரே – 2
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தாலே
ஆவியில் விடுதலையே
கனத்துக்குரியவர் மகிமைக்குரியவர்

## பல்லவிகள் - 010

**தேவ சமூகத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமுமே**
பாடுவேன் அல்லேலூயா ஆமென் – 2
கர்த்தரைக் கொண்டாடுவோம் – 3
நடனத்துடன்
கர்த்தரைக் கொண்டாடுவோம் – 2
களிப்புடன் நடனத்துடன்

## பல்லவிகள் - 011

**துதி பாடுவோம் நாம் அல்லேலூயா**
துதி பாடுவோம் – 2
அல்லேலூயா – 3 துதி பாடுவோம்

## பல்லவிகள் - 012

**பிதாவே நீரே என் பரம பிதா**
இயேசுவே நீரே என் இரட்சகர்
ஆவியானவர் தேற்றரவாளனே
என் ஆத்துமா அதை அறியும்

Father you are my Father
Jesus you are my Saviour
Holy Sprit you are my Comforter
And my soul knows it well

## பல்லவிகள் - 013

**பிதாவே தொழுகின்றோம்**
எங்களைப் படைக்கின்றோம்
உம்மில் அன்பு கூறுவோம்
இயேசுவே தொழுகின்றோம்
எங்களை படைக்கிறோம்
ஆவியே தொழுகின்றோம்
எங்களை படைக்கிறோம்

## பல்லவிகள் - 014

**பிரவேசிப்பேன் அவர் பிரகாரங்களில்**
நான் பிரவேசிப்பேன் துதிகளுடன்
கர்த்தர் உண்டு பண்ணின தினம்
இதுவே என்பேன் அவர் என்னை
(சந்தோஷிக்கச் செய்தார் – 2)

## பல்லவிகள் - 015

**ஆற்றலுமல்ல சக்தியுமல்ல**
ஆவியினாலேயாகும் - தேவ

1. பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்
தேவ பிள்ளை முன் சம பூமியாவாய்
இயேசுவைக் கொண்டு வருகின்றேன்
கிருபை உண்டாவதாக - தேவ

2. சிறிய பிசாசே நீ எம்மாத்திரம்
தேவ பிள்ளை முன் நிர்மூலமாய்
இயேசுவை கொண்டு வருகின்றேன்

## பல்லவிகள் - 016

**மாட்டேன் விட மாட்டேன்**
இயேசுவை விட மாட்டேன்
மாட்டேன் மாட்டேன் மாட்டேன் மாட்டேன்
விடவே மாட்டேன்
இயேசுவை விடமாட்டேன்

## பல்லவிகள் - 017

**அகிலத்தையும் ஆகாயத்தையும்**
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவர் நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் நல்ல கரத்தினாலே
ஆகாதது ஒன்றுமில்லை - உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை -2
சர்வ வல்லவரே
கன மகிமைக்குப் பாத்திரரே
ஆகாதது என்று ஏதும் இல்லை - உம்மால்

## பல்லவிகள் - 018

**அவர் சமூகம் என் சந்தோஷமே**
அது நிறைவான சந்தோஷமே
என் பாத்திரம் நிரம்பி வழியுதே
ஆனந்தம் பேரானந்தமே

In His Presence there is
fullness of joy-2
My cup is over flowing more than
over flowing
fullness blessed fullness of joy



அட்டவணை

## பல்லவிகள் - 019

**அற்புத ஜீவியம் ஆஹா அற்புதம்**
ஆனந்தம் அற்புதம் எனக்கு
இயேசுவை சந்தித்தேன்
என்னை முற்றும் மாற்றினார்
அற்புத ஜீவியமே
இயேசு என் உள்ளத்தில் வந்த நாள் முதல்
சொல்லி முடியாத அன்பு
என்னில் பொங்குதே
நான் என் நேசருக்காய் ஜீவிப்பேன்
அற்புத ஜீவியமே

Life is wonderful oh so wonderfull
Life is wonderful now to me
I took Jesus in, He changed
everything
Life is wonderful now
since His blessings
came into my heart
joy unspeakable fills my every part
Now I want to live for my Lord
Life is wonderful now

## பல்லவிகள் - 020

**ஆராதிப்போம் இயேசு இராஜனை**
இராக்காலத்தில் நிற்கும் ஊழியரே
நம் கைகளை உயர்த்தி நேராய்
ஆராதிப்போம் இயேசு ராஜனை

1. ருசித்துப் பார் இயேசு நல்லவர் – 3
ஆராதிப்போம் இயேசு இராஜனை

2. தூக்கினாரே சேற்றினின்றே
நிறுத்தினாரே கன்மலை மேல்

3. புதுப்பாட்டை எந்தன் நாவில் தந்தார்
துதி பாடுவேன் துதி பாடுவேன்



அட்டவணை

Come bless the Lord
All ye servants of the Lord
who stand by night
In the House of the Lord
Lift up your hands
In the Holy place
Come bless the Lord (2)

1. Oh! taste and see
That the Lord is Good (3)
Come bless the Lord (2)

2. He lifted me up! From the miry clay
And see my feet On the rock to stay

3. He put a song In my mouth to sing
A song of praise (2)

## பல்லவிகள் - 021

**இயேசுவே அதிசயமானவர்**
அன்புள்ளவர் – தயவுள்ளவர்
விடி வெள்ளியைப் போல் பிரகாசிப்பவர்

## பல்லவிகள் - 022

**இயேசு மேலான நாமம்**
அற்புத இரட்சகர் மகிமை கர்த்தர்
இம்மானுவேல் தேவன் நம்மோடுண்டு
மாறாத மீட்பர் ஜீவ வார்த்தை

## பல்லவிகள் - 023

**இயேசுவுக்காக ஜீவிப்பேன் நான்**
என்ன வந்தாலும் அஞ்சிடேன் நான்
ஆவியின் சத்தம் கீழ்ப்படிவேன்
இயேசுவுக்காக ஜீவிப்பேன் நான்

## பல்லவிகள் - 024

**இயேசு என்னும் நாமத்தில் – 2**
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் – 2
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும் போது
யார் நமக்கெதிரே நிற்பாரே
இயேசு இயேசு நாமத்தில்
ஜெயம் நமக்குண்டு

## பல்லவிகள் - 025

**இயேசு என்னைக் கைவிட மாட்டார்**
கடும் புயல் வரினும்
பெரும் காற்று வீசினும்
அவர் என்னைக் கைவிடமாட்டார்

## பல்லவிகள் - 026

**இரத்தம் சிந்தி பாவம் போக்கும்**
ஆட்டுக்குட்டியே
கல்வாரி ஆட்டுக்குட்டியே
எந்தன் பாவம் யாவும் ஏற்ற
ஆட்டுக்குட்டியே – கல்வாரி
இயேசு கிறிஸ்து இரட்சகர் தாம்
ஆட்டுக்குட்டியே – கல்வாரி
எந்தன் வாஞ்சை யாவும் நீரே
ஆட்டுக்குட்டியே – கல்வாரி

## பல்லவிகள் - 027

**இயேசு நல்லவர் இயேசு நல்லவர் இயேசு நல்லவர்**
நல்லவர் எனக்கு

## பல்லவிகள் - 028

**இனி ஜீவிப்பது நான் அல்ல**
இயேசுவே என்னில் ஜீவிக்கிறார் – 2
அவரே அவரே
இயேசு என்னில் ஜீவிக்கிறார்

There is no longer that I liveth
But christ that liveth in me – 2
He lives – 2 Jesus is alive in me

**பல்லவிகள் - 029**

**இயேசு என்னை முற்றிலும் மீட்டார்**
சிலுவையில் மாண்டார் விடுதலை ஈந்தார்
இயேசு என்னை முற்றிலும் மீட்டார் அல்லேலூயா

நான் ஆடிப்பாடி மகிழ்வேன்
என் கர்த்தரை நான் போற்றுவேன்
பாவ மன்னிப்படைந்தேன்
மோட்ச பாதை செல்கிறேன்
நான் ஆடிப்பாடி மகிழ்வேன்

**பல்லவிகள் - 030**

**இயேசு கிறிஸ்து மாறாதவரே**
மாறாதவரே மாறாதவரே – ஆமென்
இயேசு கிறிஸ்து மாறாதவரே
நித்திய நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

**பல்லவிகள் - 031**

**கம்பம் இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்** 3
பின்னோக்கேன் நான் – 4
உலகம் என் பின்னே சிலுவை என் முன்னே – 3
பின்னோக்கேன் நான் – 4

**பல்லவிகள் - 032**

**இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தர்**
மகிமை அல்லேலாயா – 2
இயேசு சமாதான பிரபு மகிமை அல்லேலூயா
இயேசு நீர் அன்புள்ளவர் தயையுள்ளவர்
சுத்த இரக்கமுள்ளவர்
நட்சத்திரம் போல் பிரகாசிக்கின்றீர்
இயேசு நீர் அன்புள்ளவர்

## பல்லவிகள் - 033

**இயேசுவே ஆண்டவர்**
மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார்
கால்கள் யாவும் முடங்கும்
நாவு யாவும் போற்றிடும்
அந்த இயேசுவே ஆண்டவர்

## பல்லவிகள் - 034

**இரத்தத்தால் ஜெயம்** – 3
இயேசுவே அல்லேலூயா – 2
இரத்தத்தால் ஜெயம் இயேசுவே
இயேசு ஜெயித்தார் – 3 சாத்தானை
சாத்தான் தோற்றுப்போம் – 3
இரத்தத்தால் நாமும் ஜெயிப்போம்– 3

## பல்லவிகள் - 035

**இயேசு கிறிஸ்து வருகின்றார்**
மகிமையில் வருகின்றார் அல்லேலூயா – 4
வாசற்படியில் நிற்கின்றார்
உன் கதவை தட்டுகின்றார்
இடமுண்டோ இடமுண்டோ
உன் உள்ளத்தில் இடமுண்டோ

## பல்லவிகள் - 036

**இராஜா வருகின்றார் தலையுயர்த்துங்கள்**
பணிந்திடுங்கள் தொழுதிடுங்கள்
பாடுங்கள் தூய்மை பரிசுத்தம்
நிறை துதிகளால்
மாட்சிமையின் இராஜனையே
ஸ்தோத்தரியுங்கள்

## பல்லவிகள் - 037

**உள்ளத்தை தொட்டார்** – 2
உள்ளத்தை தொட்டாரோ
அவரை நோக்கி ஜெபிக்கும் போது
உள்ளத்தை தொட்டாரே



அட்டவணை

## பல்லவிகள் - 038

**உம்மைப் போலாக்கும்**
இயேசுவே உம்மைப் போலாக்கும்
உள்ளத்தை அன்பால் நிரப்பி
என்னை உம்மைப் போலாக்கும்

## பல்லவிகள் - 039

**உயர்த்தப்பட்டார் அவர்** – 2
உயர உயர்த்தப்பட்டார்
சிருஷ்டிகள் போற்றுவார்
பக்தர் வணங்குவார்
இராஜா உயர்த்தப்பட்டார்

## பல்லவிகள் - 040

**உந்தன் முன்பாய் பணிந்து**
வணங்கியே தொழுவோம்
துதியின் கீதம் இசைக்க
அல்லேலூயா என்றொலிக்க
அல்லேலூயா–3 ஆமென்

## பல்லவிகள் - 041

**உங்கள் மீது கண்கள் வைத்து**
கருத்தாய் விசாரிப்பவர்
இன்ப நல் மீட்பர் இயேசுவின் மீது
உங்கள் பாரத்தை வைத்திடுங்கள்
ஆர்ப்பரித்து விண்ணிலே உயர்த்துங்கள்
தோற்கடித்து சாத்தானை கீழ்ப்படுத்தி
வீழ்த்திடுங்கள் சாத்தானை வீழ்த்திடுங்கள்

Cast your burdens on to Jesus
For He cares for you
Higher –2 Lift Jesus higher higher – 2
Lower –2 Satan (lower–2)
Lower –2 Satan (lower –2)

## பல்லவிகள் - 042

**எனக்கெல்லாம் இயேசுவே**
எல்லாம் அவரே
சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவரே
புதிதான ஜீவியம் மாற்றுகின்றார்
எனக்கெல்லாம் இயேசுவே என்றென்றுமே

## பல்லவிகள் - 043

**எங்கள் ஆராதனை உம்மில் உயரட்டுமே** – 2
உந்தன் அன்பு மகிமைக்காய்
நன்றியுடனே
எங்கள் ஆராதனை உம்மிடம் உயரட்டுமே

## பல்லவிகள் - 044

**எந்தன் துக்கம் மாற்றி ஆடிப் பாடச் செய்தீர்**
நிந்தையின் வஸ்திரம் களைந்தீர்
எந்தன் துக்கம் மாற்றி ஆடிப் பாடச் செய்தீர்
சந்தோஷத்தால் இடை கட்டினீர்
உள்ளளவும் புகழ்ந்தும்மை
ஸ்தோத்தரிப்பேன்
அமர்ந்திரேன் அவனில் நானே
எந்தன் ஆண்டவரே
என்றென்றுமென்
துதிகளை ஏறெடுப்பேனோ

## பல்லவிகள் - 045

**எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே**
திராட்சை ரசத்தால்
என் உள்ளம் தேற்றியே
மரணத் தருவாயில் என்னை அவர்
கண்டார் அன்பால்
எரிகோ நகர் வீதிதனிலே
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார், கவர்ந்தார் –3
என்றென்றும் என் சிந்தை நிறைந்தார்

## பல்லவிகள் - 046

**எழுப்புதல் அனுப்பும் – 3**
எங்கள் உள்ளத்திலே அல்லேலூயா–2
எழுப்புதல் அனுப்பும்–2 சீக்கிரத்திலே
வியாதியை நீக்கும் பிசாசை துரத்தும்
இயேசுவின் நாமத்திலே அல்லேலூயா
பாவத்தை மன்னியும் ஆவியைத் தாரும்
இரட்சகரின் நாமத்திலே

## பல்லவிகள் - 047

**என் உள்ளம் தேவன் பால் பொங்கி வழியுதே**
இயேசு என்னை ரட்சித்தார்
நான் ஆடிப் பாடுவேன்
எவரும் அறியாரே என் உள்ளம் பொங்குதே
என் உள்ளம் (பொங்கி 4) வழியுதே

It's bubbling (2)
It bubbling in my soul
I am singing I am dancing
Since Jesus made me whole
The folks can't understand me
How can I keep it quiet
It's bubbling, bubbling, bubbling
Bubbling, bubbling day and night

## பல்லவிகள் - 048

**என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?**
என் இயேசுவால் ஆகாதது – 2
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ
என் இயேசுவால் ஆகாதொன்றில்லை
என் இயேசுவால் ஆகாதது – 2
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை
என் இயேசுவால் எல்லாம் ஆகும் – 2
என் இயேசுவால் எல்லாம் – 2
என் இயேசுவால் எல்லாம் ஆகும் – 2

## பல்லவிகள் - 049

**எதிர்த்து நில் பிசாசு ஓடிடுவான்-3**
அவன் தோற்றுப் போனவன் தானே
வசனத்தை சார்ந்த பின் மேல்
நின்றிடுவாய் - தேவ -3
அவன் தோற்றுப் போனவன் தானே

## பல்லவிகள் - 050

**என் அன்பராம் இன்பராம் இயேசு**
என் ஆறுதல் தேறுதல் இயேசு
என் நேசராம் மீட்பராம் இயேசு
என் இரட்சிப்பும் மோட்சமும் இயேசு
அவர் பள்ளத்தாக்கின் லீலி
லீலி புஷபம் அவரே அவர்
சாரோனின் ரோஜா
ரோஜா புஷ்பம் அவரே

## பல்லவிகள் - 051

**என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்**
எல்லாவற்றையும் நான் செய்திடுவேன்
ஜீவனுள்ள தேவனே
என்னில் வாழ்கின்றார் நான் கலங்கிடேன்

## பல்லவிகள் - 052

**ஒரு போதும் கைவிட மாட்டார்**
இயேசு ஒரு போதும் விலகி விட மாட்டார்
ஒரு போதும் அவரின் ஜனங்கள்
வெட்கமடைய விட மாட்டார்

## பல்லவிகள் - 053

**ஓ தேவனுக்கு மகிமை! தூக்கியெடுத்தார்**
என்னை தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ தேவனுக்கு மகிமை!

இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நான் நின்று அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

## பல்லவிகள் - 054

**ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா** – 2
உம்மை உயர்த்திடுவோம் துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
ஓசன்னா ராஜ ராஜனே
மகிமை மகிமை மகிமை இராஜ ராஜனே
உம்மை உயர்த்திடுவோம் துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
மகிமை இராஜ இராஜனே

*******

மின்நூலாக்கம்: +91 98437 55298
S.K. ராஜன், டக்கரம்மாள்புரம் skrajann@gmail.com